உலகத் தமிழியல் ஆய்வுகள்

உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2013, இலண்டன்
கட்டுரைகள் தொகுப்பு

1

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் அ. சண்முகதாஸ், திரு. சூ.யோ. பற்றிமாகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

உலகத்
தமிழியல் ஆய்வுகள்

உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு 2013, இலண்டன்
கட்டுரைகள் தொகுப்பு

①

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன், முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் அ. சண்முகதாஸ், திரு. சூ.யோ. பற்றிமாகரன்

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES
இரண்டாம் முதன்மைச் சாலை, மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை – 600 113

உ.த.நி. எண் 103294 நூலகம்
103294

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு : உலகத் தமிழியல் ஆய்வுகள், தொகுதி – 1

பதிப்பாசிரியர் : முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் அ. சண்முகதாஸ்
திரு. சூ.யோ. பற்றிமாகரன்

வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும் : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
இரண்டாம் முதன்மைச் சாலை
மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்
தரமணி, சென்னை 600 113
தொலைபேசி எண் 044/22542992

வெளியீட்டு எண் : 787

தரக்குறியீட்டுஎண்: (ISBN) 978–81–925359–0–6

மொழி : தமிழ்

பதிப்பு : முதற்பதிப்பு

பதிப்பு ஆண்டு : 2014

பயன்படுத்திய தாள் : 18.6 கிகி டி.என்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ

நூலின் அளவு : 1/8 டெம்மி

எழுத்தின் அளவு : 10 புள்ளி

பக்க எண்ணிக்கை : 16 + 484

அச்சுப்படிகளின் எண்ணிக்கை : 1000

விலை : ரூ. 450/– (ரூபாய் நானூற்றைம்பது மட்டும்)

அச்சகம் : ஸ்ரீசரவணா அச்சகத்தார்
144, தம்புத் தெரு
மண்ணடி, சென்னை 600 001

பாடம் : தமிழியல்

"அறிவுச் செல்வங்கள் அனைத்தையும்
தமிழுக்குக் கொண்டுவர வேண்டும்.
இனிவரும் நூற்றாண்டுகளுக்கும்
அருந்தமிழை ஆற்றல் படுத்த வேண்டும்"

- மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

புரட்சித் தலைவி

அம்மா அவர்கள்

முனைவர் கோ.விசயராகவன்
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை.

அணிந்துரை

'தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகைசெய்தல் வேண்டும்' எனும் கருதுகோளின் அடிப்படையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல்வேறு திட்டங்களை வகுத்தளித்துள்ளார். தமிழ் வளர்க்கும் பல்கலைக்கழகங்களுக்கும், தமிழாய்வு நிறுவனங்களுக்கும் தமிழ்ச் சங்கங்களுக்கும் தாய்மை உள்ளன்போடு ஆதரவுக் கரங்களை நீட்டி வருகின்றார்.

தமிழர்கள் வாழும் அனைத்து நாடுகளிலும் தமிழ்க்கல்வி சிறக்கவும் தமிழ்மொழி சிறக்கவும் தமிழாய்வுகளை மேம்படுத்தவும் நிதி நல்கையினையும் நல்வாழ்த்தினையும் அகிலம் போற்றும் வகையில் வழங்கி வருகின்றார். இலண்டனில் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் 2013 ஆகஸ்ட் திங்கள் 14 முதல் 18 வரை நடைபெற்ற உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டிற்குத் தமது நல்லாசியினையும் வழங்கியுள்ளார் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்.

தவத்திரு தனிநாயகம் அடிகளார் தமிழின் தொன்மை, பெருமை,சிறப்பு ஆகியவற்றை அயல்நாட்டினருக்கும் எடுத்துரைக்கும் வகையில் மலேசியாவில் முதன் முதலாக உலகத் தமிழ் மாநாட்டை நடத்தித் தமிழுக்குப் பெருமை சேர்த்தவர். அதன் விளைவாக இன்று உலகத் தமிழ் மாநாடுகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

இலண்டன் மாநகரிலிருந்து செயல்பட்டுவரும் உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டை மையப்படுத்தி இலண்டனில் உலகத் தமிழியல் ஆய்வு முதலாம் மாநாட்டை இவ்வாண்டு நடத்தத் திட்டமிட்டு அம்மாநாட்டின் கட்டுரைகளை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக வெளியிடவேண்டும் என்ற கோரிக்கையினை ஏற்று உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் வாயிலாக வெளியிடுவதில் பெருமை அடைகிறோம்.

உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் பல்வேறு நோக்கங்களைத் தன்னகத்தே கொண்டு உலகமெங்கும் தமிழ்மொழியையும் தமிழ்ப் பண்பாட்டினையும் தமிழர்களின் தனித்துவத்தையும் பேணும் வகையில் பல்வேறு முயற்சிகளை

மேற்கொண்டு வருகின்றது. அவ்வகையில் இந்நிறுவனத்தின் தலைவரும் நிறுவனருமான திரு. செல்லத்துரை செல்வராஜா அவர்களின் பங்களிப்பு உலகத் தமிழர்களின் மத்தியில் மகத்தானது. அவரின் தமிழ்ப் பணி மென்மேலும் மேன்மையடையவும் இதுபோன்ற மாநாடுகள் பல்வேறு நாடுகளில் நடத்திடவும் அவருக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பாக வாழ்த்தினைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும் இம்மாநாட்டினை நடத்துவதற்கு அல்லும் பகலும் அயராது தமது உழைப்பினைச் செலுத்திய இம்மாநாட்டின் ஒருங்கிணைப்பாளர் செந்நெறிச் செல்வர் சூ.யோ. பற்றிமாகரன் அவர்களுக்கும், இம்மாநாட்டின் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் தகைசார் வாழ்நாள் பேராசிரியர் முனைவர் அ. சண்முகதாஸ் அவர்களுக்கும் எமது பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள்கிறேன். அயலகத் தமிழர்களின் ஆய்வுகளை ஒருங்கிணைக்கும் பணியினை மேற்கொண்டுவரும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், அயல்நாட்டுத் தமிழர் புலத்தின் உதவிப் பேராசிரியரும், உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையத்தின் பொறுப்பாளரும், இம்மாநாட்டின் துணைத் தலைவருமான முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கும் மற்றும் இம்மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கும் மற்றும் உலக அளவில் தமிழ் வளர்க்கும் தமிழியல் ஆய்வு மையங்களுக்கும், தமிழ்ச்சங்கங்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் மாண்புமிகு பள்ளிக் கல்வி, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு.கே.சி. வீரமணி அவர்களுக்குத் தமிழுலகம் என்றும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

இந்நிறுவனச் செயல்பாட்டிற்கும், தமிழ் வளர்ச்சிப் பணிகளுக்கும் உறுதுணையாக இருந்துவரும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசுச் செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப. அவர்களுக்கும் நன்றி.

இந்நூலாக்கத்தில் செப்பம் செய்யும் பணியை மேற்கொண்ட முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும் என்னுடைய உளமார்ந்த நன்றி.

மிகக் குறுகிய காலத்தில் இந்நூலைக் கணியச்சுச் செய்து வழங்கிய செல்வி தீபிகா லட்சுமணன் அவர்களுக்கும் திருமதி எ.ம. இலட்சுமி அவர்களுக்கும், இதனைச் சிறப்பாக அச்சிட்டுத் தந்த ஸ்ரீ சரவணா அச்சகத்தாருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுகள்.

செல்லத்துரை செல்வராஜா
நிறுவனர்/தலைவர்
உலகத் தமிழியல் ஆய்வுநடுவம்
இலண்டன்

என்னுரை

என் அன்பான உலகத் தமிழ் உறவுகளுக்கு எனது பணிவான வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன்.

காலம் சில பணிகளைத் தோற்றுவிக்கும். மனித வாழ்வியல் தடம் புரளும் வேளையில் இத்தகைய தோற்றப்பாடு உணரப்படும். அதனை உணரும் போது அதற்கான ஓர்செயற்பாட்டை மேற்கொள்ளும் எண்ணம் தலைதூக்கும்.

முன்னோரது வாழ்வியலும் செயற்பாடுகளும் மீள நினைவுகூரப்படும். இத்தகையதொரு சூழ்நிலை எதிர்கொண்ட வேளையிது. தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டு அவரை மீள் பார்வை செய்யும் ஆண்டாக அமையும் அதே வேளையில் நமது மொழியின் இருப்பையும் மீள் பார்வை செய்யத் தூண்டியது.

உலகப் புகழ்பெற்ற மொழி நமது தாய்மொழியாம் தமிழ்மொழி பற்றிய செய்திகளை நமது இளைய தலைமுறையறிய வேண்டும். குறிப்பாகத் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழும் எமது தலைமுறை விரிவாக அறிய வேண்டும். அவர்கள் எதிர்காலத்தில் தமிழ் மொழிபற்றிய தேடல்களை மேற்கொள்ளும் போது அதற்கான களஞ்சியங்களை நாம் இப்போதே கட்டிவைக்க வேண்டும். இன்னும் பிறமொழியாளரும் தமிழ்மொழி பற்றியறிய வகை செய்ய வேண்டும். இவ்விரு எண்ணப்பொதிகளும் தோன்றியதன் விளைவே உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் ஒன்றை அமைக்கத் தூண்டிற்று. இறையருளும் துணைநின்றது. தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டில் தமிழியல் ஆய்வுநடுவம் உருவானது. அதன்மூலம் தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நாற்பத்தைந்து ஆண்டுகாலக் கனவு 2013ஆம் ஆண்டு இலண்டன் மாநகரில் நடந்த உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டுடன் நனவாகியது அந்தப் பெருமகனின் ஆன்மாவை இது அமைதி கொள்ள வைக்கும் என்பதில் ஐயமில்லை.

உலகத் தமிழியல் ஆய்வு நடுவத்தின் செயற்பாடுகளை உலகத் தமிழர் அனைவரும் அறியவேண்டும், அவர்களுடைய மேன்மையான கருத்துகள் உள்வாங்கப்படவேண்டும். அதன்மூலம் செம்மொழியான எமது தமிழ்மொழி உலகப் பொது மொழியாக உயர்வடைய வேண்டும் என்கின்ற உயர்ந்த

நோக்கத்துக்காகவே இன்றைய உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு கூட்டப் பட்டது. குறுகிய காலமேயாயினும் “ஆய்வு நடுவ அறிமுகம்” என்ற வகையில் ஏற்பாடுகள் தொடர்ந்தன. புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழரும் தாயகத்தமிழரும் இணைந்து தமிழ்மொழி பற்றிய கருத்துகளைக் கலந்துரையாட ஒரு களமாக இம்மாநாடு அமையும். பல்கலைக்கழகங்கள், தமிழாய்வு நிறுவனங்கள், தமிழ் கற்பிக்கும் நிறுவனங்கள் என்பன மாநாட்டில் பங்கேற்க விருப்புற்றுத் தம் கருத்துக்களைக் கட்டுரை வடிவில் அனுப்பி வைத்தன. உலகத் தமிழாய்வு மாநாடுகளில் பங்கு கொண்ட தமிழாய்வாளர் குழுவொன்றினால் அந்தக் கட்டுரைகள் தரம் பார்த்துத் தெரிவுசெய்யப்பட்டன. தெரிவு செய்யப்பட்ட கட்டுரைகளை இரு தொகுப்பு நூல்களாக உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் வெளியிடுவதற்கு முன் வந்துள்ளது. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனமும் உலகத் தமிழியல் ஆய்வு நடுவமும் ஒன்றோடு ஒன்று ஒத்திசைந்து செயற்படச் சம்மதித்திருப்பது எனக்குப் பாவேந்தர் பாரதிதாசனின் கவிதை வரிகளை நினைவுறுத்துகிறது. “எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே”. அவருடைய கனவும் இந்த மாநாட்டோடு நனவாகிவிட்டதாகவே நான் உணர்கின்றேன். உயிரினும் மேலான எம் தமிழ்மொழியின் உயர்வுக்காக நாம் எல்லோரும் ஒன்றாக இணைந்து செயற்படுவோம் என்கின்ற கோரிக்கையை முன்மொழிந்த உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் இயக்குனர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் உதவிப் பேராசிரியர் முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கும் தமிழ் கூறும் நல்லுலகம் என்றென்றும் நன்றிக் கடன்பட்டிருக்கும்.

இந்தப் பெருமையெல்லாம் பண்பின் திருவுருவம், பாசத்தின் பிறப்பிடம், தஞ்சமென வந்தோரைத் தாயாக அரவணைத்து, வஞ்சனை புரிவோரை வாள் கொண்டு போர் முடிக்கும் பாங்கான தமிழ்த்தாய் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையே சாரும்.

நாம் எடுத்திருக்கும் பணி மிகப்பெரியது. அதன் தேவைஅதைவிடப் பெரியது. செயற்குழு உறுப்பினர்களுடன் இணைந்து நடுவத்தின் எதிர்காலப் பணிகளைத் திட்டமிட்டுச் செயற்படுத்த வேண்டியுள்ளது. புலம்பெயர்ந்த நாடுகள் அனைத்திலும் தமிழருக்கான உயர்கல்வி மையம் ஒன்றை உருவாக்குவதன்மூலம் எமது இளைய தலைமுறையினர் தமிழ் கற்பதை ஊக்கப்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு எம்முன் விரிந்து கிடக்கின்றது. மொழி உயர்வடையும்போதுதான் இனம் பெருமை பெறும். பெருமை பெற்ற இனத்தைத்தான் இந்த உலகம் திரும்பிப் பார்க்கும். மொழியின் உயர்வுக்காகவும், இனத்தின் பெருமைக்காகவும் ஏற்றத் தாழ்வுகளை மறந்து ஒன்றிணைய இறையருள் துணைநிற்குமாக.

பேராசிரியர் அ. சண்முகதாஸ்
தகைசார்வாழ்நாள்பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
தலைவர், உலகத் தமிழியல் மாநாடு
இலண்டன் 2013

முன்னுரை

தமிழியல் ஆய்வுக்கும் ஐக்கிய இராச்சியத்துக்கும் நீண்டகாலத் தொடர்புண்டு. டாக்டர் ஜி.யு. போப், பேராசிரியர் தொமஸ் பரோ, பேராசிரியர் ரேணர், பேராசிரியர் ஜே.ஆர். மார், பேராசிரியர் ஆர்.இ. ஆஷர் போன்றவர்கள் தமிழாய்வுக்குச் சீரான பங்களிப்பினைச் செய்தவர்கள்.

1964ஆம் ஆண்டின் தொடக்கம் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் இயங்கத் தொடங்கியபோது பேராசிரியர் ஆர்.இ. ஆஷர் இணைச் செயலாளராகப் பணிசெய்து வந்தவர். 1968 ஆம் ஆண்டு சென்னையில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது. அதன் பின்னர் மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டினை இலண்டன் மாநகரிலே நடத்துவதுதான் பொருத்தமென அறிஞர் பலர் அபிப்பிராயப்பட்டனர். பேராசிரியர் ஆஷர் இது தொடர்பாக இலங்கையில் பேராசிரியர் சு. வித்தியானந்தனைச் சந்திப்பதற்காக வந்தபோது நானும் அவர்களுடன் இருக்கும் வாய்ப்பு கிடைத்தது. பல காரணங்களால் இலண்டனிலே மாநாடு நடக்கும் வாய்ப்பு இல்லாதபோதுதான் தனிநாயக அடிகளார் மூன்றாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைப் பாரிஸ் நகரிலே நடத்துவதற்கான ஒழுங்குகளை மேற்கொண்டார். இது தொடர்பாக அடிகளார் எடின்பறோப் பல்கலைக்கழகத்தில் பேராசிரியர் ஆஷரைச் சந்திக்க வந்தபோது அவர்களுடன் நானும் நிற்கும் வாய்ப்பு கிடைத்தது. அப்பொழுது நான் முனைவர் பட்டத்துக்காக அங்குப் படித்துக்கொண்டிருந்தேன்.

இலண்டனிலே நடைபெறவேண்டிய உலகத் தமிழாராய்ச்சி மாநாடு பின்னர் நடைபெறவேயில்லை. வரலாறு தன் தடத்தை மறப்பதில்லை. அது மீண்டும் வரும். 2013தான் அத்தகைய வாய்ப்புக்கான ஆண்டாகியது. உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டின் தந்தை எனக் கூறக்கூடிய தவத்திரு. தனிநாயக அடிகளாருடைய நூற்றாண்டாக இது அமைவதும் வரலாற்றுச் சிறப்புத்தான். அடிகளாரை நினைவுகூருவதற்குத் தமிழாய்வுமாநாட்டுக்கும் விருப்பம் வந்ததுபோலும்! அந்த விருப்பம் நிறைவேற இலண்டன் வாழ் பெருமக்கள் சிலர் முயற்சி செய்ய முன்வந்தனர். அவர்களை நாம் தமிழ் சார்பாகப் பணிகிறோம். இவர்களுள் தமிழுணர்வும் கொடையுணர்வும் கொண்ட இல்போர்ட் அருள்மிகு விநாயகர் ஆலயப் பொறுப்பாளர் திரு. செல்லத்துரை செல்வராஜா அவர்களை நாம் இங்குக் குறிப்பிட வேண்டும். அவர் தமிழாய்வை மதித்து இலண்டனிலுள்ள சட்டத்தரணி திரு. சி. சிதம்பரப் பிள்ளை, பட்டயக்கணக்காளர் திரு. எஸ். பாலசிங்கம், சட்டத்தரணி

திரு. சிறீஸ்கந்தராஜா, தமிழாய்வாளர் திரு.எஸ்.ஜே. பற்றிமாகரன் போன்றவர்களுடன் ஓர் உலகத் தமிழியல் ஆய்வு மையத்தினை இலண்டனிலே தொடங்கினார். ஒரு தொலைநோக்குள்ள செயற்பாடு இது என்பதை இப்பொழுது நாம் உணருகிறோம். இலண்டனிலே நடைபெற வேண்டிய ஓர் உலகத் தமிழியல் ஆய்வு மாநாடு நடைபெறுவதற்கு இந்த மையமே காரணமாக அமைகின்றது.

தமிழர் வாழ்வியலைப் பிரதிபலிக்கக்கூடிய வகையில் தமிழியலின் பல்கூறுகளையும் உள்ளடக்கக் கூடியதாக ஆய்வுக் கட்டுரைகள் தேர்ந்தெடுக்கப்பெற்று மாநாட்டில் படிப்பதற்கு அனுமதிக்கப்பட்டன. இந்தியா, இலங்கை, மலேசியா, ஐக்கிய இராச்சியம், கனடா, நியூசிலாந்து, சிங்கப்பூர், சுவீடன், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய பத்து நாடுகளிலிருந்து பேராளர்கள் இம்மாநாட்டுக்கு ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பித்துள்ளனர். தவத்திரு. தனிநாயகம் அடிகளாருடைய நினைவாக ஒரு சிறப்பு ஆய்வரங்கு இந்த மாநாட்டிலே நடத்துவது எனத் தீர்மானிக்கப்பட்டது. அதன்படி அவரைப்பற்றி எழுதப்பட்ட கட்டுரைகள் ஆய்வரங்கிலே வாசிக்கப்பட்டன.

இலண்டனிலே புதிதாக அமைந்துள்ள உலகத் தமிழியல் ஆய்வுமையம் ஓர் உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டை நடாத்தும்பொழுது ஒரு தொப்பூழ்க்கொடி உறவுடன் சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் உதவ முன்வந்திருப்பது வரலாற்றைப் புதிப்பிக்கும் நிகழ்வாகும். இந்நிறுவனத்தின் இயக்குநர் முனைவர் கோ. விசயராகவன் அவர்களுக்கும், இந்நிறுவனத்தின் அயல்நாட்டுத் தமிழர் புலத்தின் உதவிப்பேராசிரியரும் உலகத் தமிழர் பண்பாட்டு வரவேற்பு மற்றும் தகவல் மையத்தின் பொறுப்பாளரும் இம்மாநாட்டின் துணைத் தலைவருமான முனைவர் கு. சிதம்பரம் அவர்களுக்கும் இலண்டன் தமிழியலாய்வு மையத்தின் சார்பாக மட்டுமன்றி அனைத்துலகத் தமிழர் சார்பிலும் நன்றி கூறுகின்றோம். அவர்களுடைய பணி காலத்தினாற் செய்யப்பட்டதொன்றாகும்.

நமது இளம் தலைமுறையினர்க்கு நம்முடைய மொழியின் செழுமை யினையும் தமிழர் பண்பாட்டின் மென்மையான நாகரிகமான கூறுகளையும் எடுத்துக் கூறவும் அவர்களின் தமிழ்க் கற்கைநெறிக்கு ஏற்ற உதவிகளை நல்கவும் இலண்டன் உலகத் தமிழியல் நடுவம் தன்னாலான பணிகளை மேற்கொள்வதற்கு ஒரு முன்னோடி முயற்சியாக இந்த உலகத் தமிழியல் மாநாடு அமையவுள்ளது. இதனூடாகப் பல அனுபவங்களை நடுவம் பெறவுள்ளது. அவை அதனுடைய அடுத்த பாய்ச்சலுக்கு ஏற்ற வழி சமைக்கும்.

இலண்டன் உலகத்தமிழியல் ஆய்வு மையத்துக்குச் சென்னையில் அமைந்துள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனமும் தன்னுடைய ஆதரவினை வழங்குகின்றது. உலகத்தின் பல பல்கலைக் கழகங்களுடைய தொடர்புகள் ஆய்வு மையத்துக்குக் கிடைத்துள்ளன. மையத்தின் எதிர்கால ஆய்வு முயற்சிகளை இவர்களுடைய ஆதரவும் ஊக்குவிப்பும் நன்கு வழிநடத்துமென்பதில் ஐயமில்லை.

பதிப்புரை

ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத் திருள்கடியும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது
தன்னே ரிலா தமிழ்

உலகமெல்லாம் இன்று தமிழ் கோலோச்சி வருகின்றது. உலகில் தமிழர்கள் இன்று நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். உலக அளவில் பரந்துபட்டு வாழ்ந்து வரும் தமிழர்களையும் தமிழ் ஆய்வுகளையும் ஒருங்கிணைக்கும் நோக்கோடு இன்று பல்வேறு நாடுகளில் தமிழாய்வு மையங்களும் தமிழ்ச் சங்கங்களும் தமது பணிகளைச் செவ்வனே செய்துவருகின்றன.

தவத்திரு தனிநாயகம் அடிகளாரின் நூற்றாண்டை முன்னிட்டு இன்று உலக அளவில் சொற்பொழிவுகளும், கருத்தரங்குகளும், மாநாடுகளும் நடைபெற்று வருகின்றன. அடிகளாரின் நூற்றாண்டையொட்டி 2013 பிப்ரவரித் திங்கள் 14, 15 ஆகிய நாட்களில் அயல்நாட்டுத் தமிழ் இலக்கியங்கள் எனும் தலைப்பில் பன்னாட்டுக் கருத்தரங்கத்தினை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் நடத்தியது. இக்கருத்தரங்கில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தமிழறிஞர்கள் கலந்துகொண்டனர். ஜூன் திங்களில் தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டுச் சிறப்புச் சொற்பொழிவு **மானிடம் போற்றும் தனிநாயகம் அடிகள்** எனும் பொருண்மையில் திருமதி நீற்றா பற்றிமாகரன் அவர்களால் நிகழ்த்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து இலண்டன், உலகத் தமிழியல் ஆய்வு நடுவம் இலண்டன் மாநகரில் ஆகஸ்ட் திங்கள் 14ஆம் நாள் முதல் 18 ஆம் நாள் வரை நடத்திய உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டில் இந்தியா , இலங்கை, மலேசியா, ஐக்கிய இராச்சியம், கனடா, நியூசிலாந்து, சிங்கப்பூர், சுவீடன், டென்மார்க், பிரான்ஸ் ஆகிய பத்து நாடுகளின் இருந்து பேராளர்கள் நேரடியாக மாநாட்டில் கலந்துகொண்டனர்.

இந்தியாவிலிருந்து சென்னைப் பல்கலைக்கழகம், பாரதியார் பல்கலைக் கழகம், பாரதிதாசன் பல்கலைக்கழகம், அழகப்பா பல்கலைக்கழகம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், தில்லிப் பல்கலைக்கழகம், தமிழ்நாடு கல்வியியல் பல்கலைக்கழகம், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், செம்மொழித் தமிழாய்வு

மத்திய நிறுவனம், இலங்கையிலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், தென்கிழக்குப் பல்கலைக்கழகம், உவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், சபர கமுவ பல்கலைக்கழகம், மலேசியாவிலிருந்து மலாயாப் பல்கலைக்கழகம், மலாய சபா பல்கலைக்கழகம், கனடாவிலிருந்து டொராண்டோ பல்கலைக் கழகம் மற்றும் பிற நாட்டின் பல்கலைக்கழகங்களிலிருந்தும் பேராளர்கள் தங்களின் கட்டுரைகளைச் சமர்ப்பித்தனர்.

இக்கட்டுரைகள் தமிழ்மொழி, சங்க இலக்கியம், இக்கால இலக்கியம், அயலகத் தமிழ் இலக்கியம், கலை, பண்பாடு, அறிவியல் தமிழ், சட்டத்தமிழ், இனவரைவியல், தமிழர் உணவு முறை, தமிழர் நாட்டுப்புற மருத்துவவியல், நாட்டுப்புறவியல், தொல்லியல், சமூகவியல், ஓலைச்சுவடியியல், கல்வெட்டுகள், மொழிக் கற்பித்தல் எனப் பல்வேறு பிரிவுகளைப் பற்றிப் பேசுவதாக அமைந்துள்ளன.

இக்கட்டுரைகள் உலக அளவில் தமிழியல் ஆய்வுகளின் இன்றைய போக்கினையும், அயல்நாடுகளில் தமிழ், தமிழர் நிலை, தமிழிலக்கிய வளர்ச்சி பற்றி உலகத் தமிழர்கள் அனைவரும் அறிந்துகொள்ளும் வகையில் அமைந்துள்ளன. இக்கட்டுரைகள் தொகுக்கப்பட்டு இரண்டு தொகுதிகளாக வெளியிடப்பட்டுள்ளன.

இம்மாநாட்டினை மிகுந்த ஈடுபாட்டுடனும் நிதியையும் கொண்டு மிகச்சிறப்பாக நடத்த மூலகாரணமாக அமைந்த இலண்டன் உலகத் தமிழியல் ஆய்வு நடுவத்தின் தலைவர் செல்லத்துரை செல்வராஜா அவர்களுக்கும் இந்நூலை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் மூலம் வெளியிட இசைவு நல்கிய பள்ளிக்கல்வி, தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை அமைச்சர் திரு. கே.சி. வீரமணி அவர்களுக்கும், இந்நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருக்கும் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறையின் அரசுச்செயலாளர் முனைவர் மூ. இராசாராம் இ.ஆ.ப., அவர்களுக்கும், சிறந்த முறையில் மெய்ப்புத் திருத்தம் செய்த முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், கணியச்சுச் செய்து தந்த செல்வி தீபிகா லட்சுமணன் மற்றும் திருமதி எ.ம. லட்சுமி அவர்களுக்கும் உளமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

முனைவர் கோ. விசயராகவன்
முனைவர் கு. சிதம்பரம்
முனைவர் அ. சண்முகதாஸ்
திரு. சூ.யோ.பற்றிமாகரன்

பொருளடக்கம்

1. ஈழநாடும் சங்க இலக்கியமும் - 1
முனைவர் சிவலிங்கராஜா

2. சங்கத் தமிழர் கண்ட முறை மன்றங்கள் - 8
முனைவர் மு. முத்துவேலு

3. சங்க இலக்கியத்தில் பஞ்சு முதல் பட்டு வரை - 15
முனைவர் ஐ. பிரேமலதா

4. சங்க இலக்கியம், மலாய் பழைய இலக்கியப் பழமரபுக்கதைகளும் தொன்மையும் : ஓர் ஒப்பீடு - 23
முனைவர் அருள்செல்வன் ராஜூ

5. தமிழகத்தில் ஒலி ஒளி ஆவணப்படுத்தும் முயற்சிகள் - 32
முனைவர் மு. இளங்கோவன்

6. சங்கத்தமிழ்ச் சொற்களும் பொருண்மைகளும் - 38
முனைவர் வீ.ரேணுகாதேவி

7. எண்ணெழுத்து அடிப்படையில் எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே - 46
திரு.சு.சிவசந்திரகுமார்

8. சங்கக்காலத் தமிழர்களின் உணவு முறை - 53
திரு. வீ. அர்ச்சுணன்

9. ஆற்றுப்படை நூல்களில் இசைக் கலைஞர்கள் - 59
முனைவர் சௌ.ப. சாலாவாணிஸ்ரீ

10. சங்கக்காலப் போர் நெறியும் தமிழரின் வீழ்ச்சியும்: பண்பாட்டியல் ஆய்வு - 67
முனைவர் ஏ.எழில்வசந்தன்

11. தமிழ் இலக்கணக் கூற்றுக்கோட்பாடுகள் கட்டமைக்கும் பெண்சமூகம் - மீள்வாசிப்பு - 74
முனைவர் அ. இலட்சுமி தந்தை

12. சங்கநூல்கள் சாதியத்தின் ஊற்றுகாலா? - 82
திரு. முருகேசு பாக்கியநாதன்

13. திருமூலர் காட்டும் சமூகவியல் இலக்கணங்கள் - 92
முனைவர் இரா. சந்திரசேகரன்

14. தமிழில் போர் இலக்கியம் (ஈழத்துப் போர்ச் சூழலை மையப்படுத்திய ஒரு பார்வை) - 101
திரு தி. ஞானசேகரன்

15. பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச்சமூக அறிவுத் தோற்றவியல் உருவாக்கத்தில் சென்னை இலௌகிக சங்கத்தின் பங்கு - 112
முனைவர் வீ.அரசு

16. பாரி- லார்டுவின் வாய்மொழி வாய்பாட்டுக் கோட்பாட்டு அடிப்படையில் கம்பராமாயணத்தில் வாய்பாடுகள் - 123
திருமதி கோ.புஷ்பவள்ளி

17. சுவாமி விபுலானந்த அடிகளாரின் தமிழியல் குறித்த பன்முகப்பார்வை - 134
திரு. வேலுபிள்ளை சண்முகராஜா

18. சுந்தரின் உளப்பாங்கு - 139
முனைவர் ரெ. சொர்ணபிரபா

19. மு.வ. ஓர் ஆய்வுக்கருவூலம் - 148
திரு.வெ.ராம்ராஜ்

20. திருக்குறளில் சூது : சமூக நோக்கு - 154
திரு. இரா. கார்த்திகேயன்

21. மொழியியலும் இலக்கியமும் புலம்பெயர் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் : சமூக பண்பாட்டு அடுக்குகள் மீதான வாசிப்பு - 160
திரு. த. அஜந்தகுமார்

22. பரதவர்களின் பண்பாட்டு மரபுகள் (ஜோ டி குருஸின் படைப்புகளை முன்வைத்து - 171
திரு. ஆ. தர்மராஜன்

23. பண்டைத் தமிழாரின் தாயகங்களும் அயலகங்களும் - 179
முனைவர் ஜெ. அரங்கராஜ்

24. சுற்றுச்சூழல் பேணும் திருமுறைகள் - 193
முனைவர் சொ. சுடலி தியாகராஜன்

25. வாழ்வியல் கட்டமைப்பும் வீடு உருவாக்கமும் - 198
முனைவர் மூ. தமிழாரசி

26. தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் சில தேய்மானக்களும் சில இருப்புகளும் - 205
முனைவர் அ. அறிவுநம்பி

27. கிழக்கிலங்கைவாழ் இந்து மக்களின் மதம்சார் நம்பிக்கைகளும் நடைமுறைகளும் - 211
முனைவர் சிவலிங்கம் சிவநிர்த்தானந்தா

28. ஈழத்தமிழர் வாழ்வு - புலம்பெயர் சிறுகதைகளை முன்வைத்து - 218
முனைவர் செல்வக்குமரன்

29. பழந்தமிழ் இனக்குழுச் சமுதாயம் இற்றுத் தேய்ந்தமைக்கான காரணிகள் (இனவரைவியல்) ஆய்வு - 225
முனைவர் வாணி அறவாணன்

30. ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகள் 230
திருமதி கோமதி மகேஷ்வரன்

31. கல்வெட்டில் காணப்படும் சித்த ஆயுர்வேத மருத்துவம் - 241
மருத்துவர் கணேஷ் ஸ்ரீதரன், திருமதி சி. அன்புச்செல்வி

32. தொல்காப்பிய அகத்திணைக் கொள்கைகளும் கலித்தொகைப் பாடல்களும் - ஓர் ஒப்பாய்வு - 245
திருமதி த. எழிலரசி

33. காலக்கணிப்பு - தமிழ்மரபும் ஐரோப்பியமரபும் - 255
திருமதி க. நீலாம்பிகை

34. தமிழ்மொழியின் முதல் அச்சு நூல் : தம்பிரான் வணக்கம்- ஒரு நோக்கு - - 260
திருமதி றூபி வலன்ரீனா பிரான்சிஸ்

35. நாட்டுப்புற விளையாட்டுகளும் பண்பாடு - 268
முனைவர் ஆ. பாப்பா

36. வள்ளலார் உணர்த்தும் ஆன்மீக மருத்துவம் - 277
முனைவர் அரசு பரமேஸ்வரன்

37. ஒப்பீட்டு நோக்கில் தாண்டவமும், லஷ்யமும் - 283
திருமதி சோபனா தருமேந்திரா

38. முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பௌதிகவளம் மற்றும் ஆசிரியவளம் தொடர்பான ஆய்வு(யாழ் மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு) 290
திருமதி நிருபா அருந்தவம்

39. வடமராட்சியின் சிறப்பு மொழி வழக்காறுகள் - 299
முனைவர் சுபதினி ரமேஷ்

40. மலேசியத் தமிழர்களிடையே பிறமொழிக்கலப்பு - 310
திரு. இளங்குமரன்சிவநாதன்

41. ஈழத்து சாசனங்களும் மொழியும் - 314
முனைவர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்

42. பால்நிலையும் மொழியும் : ஒரு சமூகவியல் நோக்கு - 322
திருமதி கவிதா சிவபாளன்

43. உலகமொழிகளின் தாய் - தமிழே! - 331
முனைவர் கோ. விசயராகவன்

44. முகாமைத்துவமும் திருக்குறளும் - ஓர் ஒப்பீட்டாய்வு - 338
முனைவர் தி. வேல்நம்பி

45. புவியியல் சார்ந்த கணினிப் பதிவும் அதன் பயன்பாடுகளும் இலங்கை இந்தியா போன்ற கிழக்காசிய நாடுகளில்;அதன் வளர்ச்சியின் தேவையும் - 348
திரு.வி. ஜீவகுமரன்

46. தமிழ் மொழியில் காணப்படும் (சிறிய) சொல்லமைப்பும் அவற்றின் இசைமைக் கட்டமைப்பும் - 356
முனைவர் மோகன் தாஸ் ராமசாமி

47. பரத்தமை பிரன்மனை நயத்தல் அலி பிறப்பு - 367
முனைவர் மு. அருணாசலம்

48. தமிழ் மாநாடுகள் புலம்பெயர் நாடுகளில் ஏன் கூட்டப்பட வேண்டும்? - 374
திருமதி தனபாக்கியம் குணபாலசிங்பம்

49. கிழைதேய மொழிகளை மையப்படுத்திய ஒப்பியலாய்வு முயற்சிகள்-தேவையும் பயனும் - 379
திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்

50. மணிமேகலையில் பெயர்ச்சொற்கள் - 389
முதுமுனைவர் பி. மஞ்சுளா

51. மிகெய்ல்பக்தின் நோக்கில் தொல்காப்பிய மொழியியல் - 397
முனைவர் கே. பழனிவேலு

52. நீதிநூல்களுள் தலையானது திருக்குறள் - 406
முனைவர் வெ. திருவேணி

53. இலங்கையில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல் - 415
திருமதி கலாவல்லி சந்திரமோகன்

54. மரபும் மொழியும் - 426
திரு. வை. லோகநாதன்

55. பெண்ணின் உணர்வு வெளிப்பாடும் மரபு அழுத்தமும்: மருதத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஒருநோக்கு - 430
திருமதி விஜிதா சிவபாலன் திவாகரன்

56. சீகன் பால்கின் எழுத்திலக்கணப் பார்வை - 442
திரு. ப. ஜெயபால்

57. கைம்மை எனும் நோய் - 450
திருமதி ஜெ. பாரதி

58. புறநானூற்றில் கலையும் கலைக் கூறுகளும் - 458
திரு. சி. கங்காதரன்

59. மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் காட்டும் தமிழ்ச் சமூகம் . 466
முனைவர் கிருஷ்ணன் மணியம்

60. நாயக்கர் காலச் சிற்பக்கலையின் தனித்தன்மைகள் - சிறப்பாய்வு நோக்கில் மதுரை மீனாட்சி சுந்தரரேசுவரர் கோயிற் சிற்பங்கள் - 476
முனைவர் லோ. மணிவண்ணன்

ஈழநாடும் சங்க இலக்கியமும்

பேராசிரியர் சிவலிங்கராஜா
தமிழ்த் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம்
இலங்கை

கலாநிதி வண. தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டில் நடைபெறும் உலகத் தமிழியல் ஆய்வு மாநாட்டிற்கு, அடிகளார் ஈடுபாடு காட்டிய துறைகளிலொன்றான சங்க இலக்கியம் பற்றி நோக்குவது பொருத்தமானதாக இருக்கும் என நம்புகிறோம்.

ஈழநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்குமிடையே நீண்ட காலமாக அரசியல், சமூக, பொருளாதார, இலக்கிய, பண்பாட்டுத் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. சங்கப் புலவரான ஈழத்துப் பூதந்தேவனார் ஈழநாட்டைச் சேர்ந்தவர் என்று கூறப்படுகின்றது. அத்துடன் முரஞ்சியூர் முடிநாகராயர் என்ற புலவரும் ஈழநாட்டைச் சேர்ந்தவர் என்று ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை குறிப்பிடுவார். பட்டினப்பாலையிலே வரும் "ஈழத்து உணவும் காளகத்து ஆக்கமும்" என்ற தொடரும் ஈழநாட்டிற்கும் தமிழ்நாட்டிற்கும் இருந்த தொடர்பினைப் புலப்படுத்துவதாகவே காணப்படுகின்றது. எனவே ஈழநாட்டிற் சங்க இலக்கியப் பயில்வு எவ்வாறு இருந்ததென்பதை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஈழநாட்டில் மிகப் பழங்காலத்தில் இருந்தே தமிழ்மொழி, தமிழ் இலக்கியப்பயில்வு நடைபெற்றமைக்கான சான்றுகள் உள. ஈழத்து மரபுவழித் தமிழாசிரியர்கள் பழந்தமிழ் இலக்கிய இலக்கணங்களிலே நல்ல பயிற்சியும் தேர்ச்சியும் உடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். ஈழநாட்டிலே மரபுவழித் தமிழ்க்கல்வி அறாத் தொடர்ச்சியுடன் இருபதாம் நூற்றாண்டின் முதலிரு தசாப்தங்கள் வரை நிலவி வந்தமை குறிப்பிடத்தக்கது. ஆரியச் சக்கரவர்த்திகள் என அழைக்கப்பட்ட யாழ்ப்பாண மன்னர்கள் காலத்திற்கு முந்திய காலப்பகுதியிலேயே பரம்பரை பரம்பரையாகத் தமிழ்க்கல்வி மரபொன்று நிலவி வந்தது என்று பண்டிதமணி உள்ளிட்ட அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளமையை நாம் மனங்கொள்ள வேண்டும். (இலக்கிய வழி : திருத்திய புதியபதிப்பு முன்னுரை)

ஈழநாட்டிலே சங்க இலக்கியப்பயில்வு எவ்வாறு இருந்ததென்பதைப் பின்வருமாறு பகுத்து நோக்கலாம்.

- கல்வி
- உரையும் பதிப்பும்
- ஆய்வுகள்
- மொழிபெயர்ப்பு

கல்வி

ஈழநாட்டிலே நீண்ட நெடுங்காலமாக நிலவிவந்த மரபுவழித் தமிழ்க்கல்வியிலே சங்க இலக்கியங்களும் இடம்பெற்றிருக்க வேண்டும் என ஊகிக்கலாம். யாழ்ப்பாண மன்னர்கள் நிறுவிய தமிழ்ச்சங்கத்திலே சங்க இலக்கியப்பயில்வு இருந்திருத்தல் கூடும். யாழ்ப்பாண மன்னர்கள் நிறுவிய சரஸ்வதி பண்டாரம் எனும் நூல்நிலையத்திலே சங்க இலக்கிய ஏடுகளையும் பேணிப் பாதுகாத்திருப்பர் என நம்பலாம். போர்த்துக்கேயரால் தீக்கிரை யாக்கப்பட்ட சரஸ்வதி பண்டாரத்திலிருந்து 'தப்பி ஒட்டிய' ஏடுகள் சில யாழ்ப்பாணக் குடாநாட்டிலே இருந்தமை குறிப்பிடத்தக்கது. ஆனாலும் இதற்கான சான்றுகளை ஆதாரப்பூர்வமாகத் தருவது கடினமானது. எனினும் ஈழநாட்டிலே சங்க இலக்கியத்தைக் கற்றலும் கற்பித்தலும் 19ஆம் நூற்றாண்டிற் சிறப்பாக நிலவியமைக்கான சான்றுகள் உள.

19ஆம் நூற்றாண்டின் தமிழ்க்கல்வி மரபினை நுனித்து ஆராய்வோர் இங்குச் சங்க இலக்கியப்பயில்வு இருந்தமையைக் கண்டுகொள்ளுவர். பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ப் புலமையாளர்கள் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களைச் சங்க இலக்கியம் என்ற அடிப்படையிலேயே கற்றும் கற்பித்தும் வந்துள்ளனர். முச்சங்கம் பற்றிய கருத்து நிலை அவர்களிடம் இருந்தமையை உரை மரபினூடு கண்டுகொள்ளலாம். வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளை மகா வித்துவான் கணேசையருக்குக் கற்பித்த நூல்களிலே சங்க இலக்கியங்களும் இடம் பெற்றிருந்தமையை ஐயரவர்களின் தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்புக் களினூடும் அவரது இலக்கிய உரைகளினூடும் காணமுடிகின்றது. பத்தொன்பதாம் நூற்றாண்டுப் புலமையாளர்களான ஆறுமுகநாவலர், சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவர், உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், சி.வை.தாமோதரம் பிள்ளை, சபாபதிநாவலர், தும்பளை முத்துக்குமாரசுவாமிக் குருக்கள் முதலானோர் சங்க இலக்கியங்களிலே நல்ல பயிற்சியுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர். (இவர்களை விட இன்னும் பல தமிழ் அறிஞர்கள் சங்க இலக்கியப் பயிற்சியுடையவர்களாகத் திகழ்ந்துள்ளனர்.) விரிவஞ்சி அவர்களது பெயர்களை விடுத்தோம். சங்க இலக்கியப் பதிப்புக்களில் சி.வை.தா. ஈடுபட அவர் பெற்ற மரபுவழித் தமிழ்க்கல்வியும் உந்துவிசையாக அமைந்திருக்கும் என நம்பலாம்.

நீண்டகாலமாக மரபுவழிப்பட்ட முறையில் கற்பிக்கப்பட்ட சங்க இலக்கியங்கள் 19ஆம் நூற்றாண்டிலே நிறுவன மயப்பட்ட கற்பித்தல் முறைமைகளும் உள்வாங்கப்படுகின்றன. இலங்கை நிறுவனங்களினாலும் இந்திய நிறுவனங்களினாலும் நடத்தப்பட்ட பண்டிதர் பரீட்சைக்குரிய பாடத்திட்டங்களிலே சங்க இலக்கியங்களும் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகத் திருமுருகாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, ஐங்குறுநூறு, அகநானூறு, கலித்தொகை, பதிற்றுப்பத்து முதலிய சங்க இலக்கியங்கள் பண்டிதப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. மிசனரிமார் பயன்படுத்திய பாடத்திட்டங்களிலே திருக்குறள், நாலடியார், கந்தபுராணத்தின் சில பகுதிகள் இடம் பெறுகின்றனவேயன்றிச் சங்க இலக்கியங்கள் இடம்பெற்றதாகத் தெரியவில்லை. நிறுவனம் சாராத தனிப்பட்ட முறையிலே பண்டித வகுப்பு மாணவர்களுக்குக் கற்பித்த மரபுவழித் தமிழாசிரியர்களும் சங்க இலக்கியங்களைச் சிறப்பாகப் போதித்துள்ளனர். (உதாரணமாகக் கந்தமுருகேசனின் வகுப்புக்களைச் சுட்டிக்காட்டலாம்.)

ஈழத்து ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலே சங்க இலக்கியங்கள் சிறப்பாகப் போதிக்கப்பட்டமைக்கான சான்றுகள் உள. ஆசிரிய மாணவர்களுக்குக் கற்பித்தற் பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்பட்ட சங்க இலக்கியச் செய்யுள்கள் கற்பிக்கப்பட்டன. உதாரணமாக,'சுடர்த்தொடீ கேளாய்','யாதும் ஊரே', 'முளிதயிர் பிசைந்தகாந்தள்','ஆண்டு பலவாக நரையிலவாகுதல்' முதலான சங்கப் பாடல்கள் இரசனையோடு கற்பிக்கப்பட்டதாக அறிய முடிகின்றது. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை, பண்டிதர் கிருஷ்ணபிள்ளை, பண்டிதர் மகாலிங்கசிவம், நவநீதகிருஷ்ண பாரதியார் முதலான ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர்கள் முற்சுட்டிய பாடல்களையும் இன்னும் பிற பாடல்களையும் சிறப்பாகக் கற்பித்ததாக அவர்களது மாணாக்கர் பரம்பரையினர் கூறுகின்றனர். ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைவழி அக்காலத் தமிழாசிரியர்களால் சங்கச் செய்யுள்கள் மாணவர் மத்தியிலே பிரசித்தி பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியப்பயிற்சிக் கலாசாலைகளைத் தொடர்ந்து ஈழத்துப் பல்கலைக் கழகங்களிலே சங்க இலக்கியப்பயில்வு சிறப்பாக நடைபெற்றது. ஆசிரியப் பயிற்சிக் கலாசாலைகளிலே சங்க இலக்கியங்களைப் பயின்றமைக்கும் பல்கலைக் கழகங்களிலே சங்க இலக்கியங்களைப் பயின்றமைக்கும் இடையே நிறைய வேறுபாடுகள் உண்டு.

பல்கலைக்கழகங்கள் சங்க இலக்கியங்களைப் பாடநூலாகக் கற்பித்த அதேவேளை ஆய்வு நோக்குடனும் கற்பித்தன. சங்ககால அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுப் பின்னணியிலே சங்க இலக்கியங்கள் அணுகப்பட்டன. சங்க இலக்கியத்தின் தோற்றம், தோற்றத்திற்கான காரணங்கள், அவை காட்டும் தமிழர் வாழ்வியல் முதலான அமிசங்களோடு, சங்க இலக்கியங்களைத் தொகுத்தோன், தொகுப்பித்தோன் ஆகியோரின் அரசியல், சமூகப் பின்னணியும் ஆய்வு நோக்குடன் கற்பிக்கப்பட்டன. அத்துடன் சங்க காலத்திற்குரிய உலக இலக்கியங்களுடன் சங்க இலக்கியங்களை ஒப்புநோக்கிக் கற்பித்தலும் இடம்பெற்றது. ஈழநாட்டுத் தமிழறிஞர் பலர் சங்க இலக்கிய ஆய்விலே சாதனைபடைக்கப் பல்கலைக்கழகத் தமிழ்க்கல்வி உதவியதெனலாம். திறனாய்வு நோக்கிலே சமூகவியல், மானுடவியல், பண்பாட்டியல் பார்வையில் சங்க இலக்கியங்களை அணுகும் மரபொன்று ஈழத்திலே தோன்றியமை குறிப்பிடத்தக்கது. சங்க இலக்கிய ஆய்வுகள் பற்றி நோக்குமிடத்து இவைபற்றி விரிவாக நோக்குவோம்.

ஈழத்துப் பாடசாலைக் கல்விப் பாடத்திட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட சங்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பாடசாலைகளை அரசாங்கம் சுவீகரிப்பதற்கு முன்னர்ப் பாடப்புத்தக வெளியீட்டு நிறுவனங்கள் வெளியிட்ட பாடநூல்களிலும் உபவாசிப்பு நூல்களிலும் சங்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. குறிப்பாகக் குறுந்தொகை, கலித்தொகை, புறநானூறு முதலியவற்றில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட பாடல்கள் இடைநிலை, உயர்நிலை வகுப்புப் பாடநூல்களில் இடம்பெற்றன. அத்துடன் கல்வி வெளியீட்டுத் திணைக்களம், தேசியக் கல்வி நிறுவனம் வெளியிட்ட பாடநூல்களிலும் சங்கப் பாடல்கள் இடம்பெற்றுள்ளன. பரீட்சை நோக்கிலே இவற்றைப் பயின்ற போதிலும் மாணவர்களுக்குச் சங்க இலக்கியப் பரிச்சயம் ஏற்பட இப்பாடத்திட்டம் வழிவகுத்தது. குறிப்பாக, க.பொ.த. உயர்தர மாணவர்களுக்குரிய தமிழ்ப்

பாடத்திட்டத்திலே சங்க இலக்கியங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட சிறப்பான பாடல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடக்கூடிய அமிசமாகும்.

தனிப்பட்ட ஈடுபாடு காரணமாக அறிஞர் சிலர் கூடிச் சங்க இலக்கியங்களைப் பற்றிய கருத்தாடல்களையும் நிகழ்த்தியுள்ளனர் என அறிய முடிகின்றது. திருநெல்வேலி ஈரப்பலாவடிச் சங்கம், யாழ்ப்பாணம் காவிய பாடசாலை முதலியவற்றிலேயும் சங்க இலக்கியப்பயில்வு நடைபெற்றது என அறிய முடிகின்றது. ஈரப்பலாவடிச் சங்கத்திலே சங்கப் பாடல்களுக்குப் பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை இனிக்க இனிக்க நயம் கூறுவார் என வித்துவான் அடைக்கலமுத்து குறிப்பிட்டார். இக் கட்டுரை ஆசிரியரும் கரவெட்டி வாணி கலைக்கழகத்திலே சங்க இலக்கியம் பற்றிய கருத்தாடல்களைக் கேட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

உரையும் பதிப்பும்

ஈழத்திலே சங்க இலக்கியப்பயில்வு சிறப்பாக இருந்தது என்பதற்கு இங்குத் தோன்றிய சங்க இலக்கிய உரைகள் சான்றாகின்றன. இலக்கண, இதிகாச, புராணங்களுக்கு ஈழத்தவர்கள் எழுதிய உரைகளிலேயும் சங்க இலக்கியச் செய்யுள்கள் மேற்கோளாகக் காட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது. தொல்காப்பியத்திற்கு வித்துவசிரோமணி கணேசையர் எழுதிய உரைவிளக்கப் பதிப்புக்கள் தமிழ்கூறும் நல்லுலகால் விதந்து போற்றப்பட்டமையை யாவரும் அறிவர். தொல்காப்பிய உரைவிளக்கக் குறிப்புக்கள் பற்றி இச்சிறு கட்டுரையிலே விளக்குவது கடினமானது என்பதால் அவற்றை விடுத்தோம்.

சங்க இலக்கியங்கள் சிலவற்றிற்கு ஈழத்து அறிஞர்கள் சிறப்பான உரைகளை எழுதியுள்ளனர். இந்த வகையிலே திருமுருகாற்றுப்படை, ஐங்குறுநூறு, பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து, அகநானூறு முதலியவை விதந்து குறிப்பிடத்தக்கவை.

1851ஆம் ஆண்டு தமது இருபத்தொன்பதாவது வயதிலே திருமுருகாற்றுப் படைக்கு உரையெழுதிப் பதிப்பித்தார். பத்துப்பாட்டு பதிப்பிக்கப்படு முன்னரே நாவலரின் திருமுருகாற்றுப்படை உரை வெளிவந்தமை குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் நச்சினார்க்கினியர் உரையைத் தழுவியே நாவலர் இந்த உரையை எழுதியுள்ளார். நச்சினார்க்கினியரின் உரையை ஏட்டு வடிவிலேயே நாவலர் படித்திருப்பார். ஈழநாட்டிலே சங்க இலக்கியப்பயில்வு பரவியிருந்தமைக்கு நாவலரின் திருமுருகாற்றுப்படையுரையும் சான்றாகின்றது. சமய நோக்குடன் உரையெழுதிய நாவலர் பொருத்தமான குறியீடுகளைப் பயன்படுத்தியமை இந்த உரைக்கு உள்ள சிறப்பமிசங்களில் ஒன்றாகும்.

ஈழத்துத் தமிழ் அறிஞர்களில் ஒருவரான பண்டிதர் அருளம்பலவனார் திருமுருகாற்றுப்படைக்கு ஆராய்ச்சி உரை ஒன்று எழுதியுள்ளார். 1937ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஸ்ரீ சண்முகநாத அச்சியந்திர சாலையில் இந்நூல் அச்சிடப்பட்டுள்ளது. திருமுருகாற்றுப்படைக்கு அருளம்பலவனார் எழுதிய உரை விரிவான முறையிலே அமைந்துள்ளது. பொருட்பாகுபாடு, பொருள்நலம், பாவும் பாட்டின் நடையும், வழிபாட்டு முறை, விளக்கவுரைக் குறிப்புக்கள் என்ற வகையிலே இவ்வுரை அமைந்துள்ளமை உரையாசிரியரின் புலமை வளத்தைப் புலப்படுத்துவதாகக் காணப்படுகின்றது.

பண்டிதர் அருளம்பலவனார் பெரும்பாணாற்றுப்படை, பதிற்றுப்பத்து ஆகிய சங்க நூல்களுக்கும் விரிவான ஆராய்ச்சி உரைகள் எழுதியுள்ளார். பெரும்பாணாற்றுப்படை ஆராய்ச்சி உரையும் 1937ஆம் ஆண்டிலேயே வெளிவந்துள்ளது. இவ்வாராய்ச்சி உரைக்கு ந.மு.வேங்கடசாமி நாட்டார், எஸ்.சோமசுந்தரபாரதியார் ஆகியோர் மதிப்புரை வழங்கியுள்ளனர். பெரும்பாலும் திருமுருகாற்றுப்படையுரை அமைப்பிலேயே பெரும்பாணாற்றுப்படையாராய்ச்சி உரையும் அமைந்துள்ளது. பெருமளவு மேற்கோள்களைக் காட்டித் தம்மதம் நிறுவுகின்றார்.

பண்டிதர் அருளம்பலவனார் பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையும் எழுதியுள்ளார். சங்க இலக்கியங்களுக்கு ஈழத்து அறிஞர்கள் எழுதிய உரைகளிலே பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரை விதந்து குறிப்பிடப்படவேண்டியது. பதிற்றுப்பத்தின் இரண்டாம்பத்திற்கு 1956ஆம் ஆண்டு விரிவானதோர் உரையை எழுதினார். இவ் ஆராய்ச்சி உரை திருமயிலை செ.வே.ஜம்புலிங்கம் பிள்ளை அவர்களால் சென்னை கிறீன்கம்பனி அச்சுக் கூடத்திற் பதிப்பிக்கப்பட்டுள்ளது.

அருளம்பலவனாரின் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரை இரண்டு பாகங்களாக வெளிவந்துள்ளது. 1960ஆம் ஆண்டு முதலாம் பாகமும் 1963ஆம் ஆண்டு இரண்டாம் பாகமும் வெளிவந்துள்ளன. பதிற்றுப்பத்து ஆராய்ச்சியுரையை வ.சுப.மாணிக்கம், டாக்டர் மு.வரதராசன், அ.மு.பரமசிவானந்தம், அ.ச.ஞானசம்பந்தன், மா.இராசமாணிக்கனார் முதலான தமிழறிஞர்கள் விதந்து பாராட்டியுள்ளனர். இப்பாராட்டுரைகள் பதிற்றுப்பத்து ஆராய்ச்சி உரையின் முன்பக்கத்திலே இடம்பெற்றுள்ளன.

சங்கநூற்செல்வர் எனப் போற்றப்பட்ட பண்டிதர் அருளம்பலவனாரின் உரைகள், ஈழநாட்டிலே சங்க இலக்கியப்பயில்வு சிறப்பாக இருந்தது என்பதையே புலப்படுத்துகின்றன.

ஈழத்துத் தமிழ் அறிஞர் ஒருவர் ஐங்குறுநூறு முழுவதற்கும் விளக்கவுரை எழுதியுள்ளார். இவ்வுரையை முகாந்திரம் தி.சதாசிவஐயர் பதிப்பித்துள்ளார். யாழ்ப்பாணம் ஆரிய திராவிட விருத்திச் சங்கத்தின் மூன்றாவது வெளியீடாக 1943ஆம் ஆண்டு இந்நூல் வெளிவந்துள்ளது. இதன் உரையாசிரியரின் பெயர் தமக்குக் கிடைத்த கையெழுத்துப் பிரதியில் எவ்விடத்திலேனும் காணப்படவில்லை என்று பதிப்பாசிரியர் தமது பதிப்புரையிலே குறிப்பிட்டுள்ளார்.

> ஈழத்து உரையாசிரியர் எழுதிய ஐங்குறுநூறு உரையை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மீள்பதிப்புச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. இந்தப் பதிப்புக்கு இக்கட்டுரையாசிரியர் முன்னுரையெழுதி உதவியுள்ளார்.

அகநானூறு களிற்றுயானை நிரைக்கு வித்துவசிரோமணி கணேசையர் விரிவுரை எழுதியுள்ளார். ஐம்பதுகளில் ஈழகேசரிப் பத்திரிகையில் தொடர்ந்து களிற்றுயானை நிரைக்கு உரையெழுதியுள்ளார். இந்த உரை மிகவும் சிறப்பானது. கணேசையரின் புலமைவளம் தொல்காப்பியப் பதிப்புக்களுக்கு அடுத்தபடியாக அகநானூற்று உரை மூலம் வெளிப்படுகின்றது எனலாம். கணேசையரின் அகநானூற்று உரையை இக்கட்டுரை ஆசிரியர் 2005ஆம் ஆண்டு பதிப்பித்துள்ளார்.

ஈழத்திலே தோன்றிய சங்க இலக்கிய உரைகளை நோக்கும் பொழுது இங்குச் சங்க இலக்கியக் கல்விமரபு சிறப்பாக விளங்கியது எனத் துணியலாம்.

சங்க இலக்கியப்பதிப்புத் துறையிலே ஈடுபட்டவர்களில் சி.வை.தாவுக்குக் குறிப்பிடத்தக்கதோர் முக்கியத்துவம் உண்டு. தமிழ் நூற்பதிப்பு முன்னோடி என வருணிக்கப்படும் சி.வை.தா. 1897ஆம் ஆண்டு கலித்தொகையைப் பதிப்பித்தார். கலித்தொகைப் பதிப்புக்குச் சி.வை.தா. எழுதிய பதிப்புரை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. "என் சிறுபிராயத்தில் எனது தந்தையார் எனக்குக் கற்பித்த சில நூல்கள் இப்போது தமிழ்நாடெங்கும் தேடியும் அகப்படவில்லை" என்று கலித்தொகைப் பதிப்புரையிலே குறிப்பிட்டுள்ளார். சி.வை.தா. தமது இளமைப் பருவத்தில் சங்க இலக்கியங்களையும் பயின்றிருப்பார் என ஊகிப்பது தவறாகாது. புறநானூறு, மணிமிடை பவளம் ஆகியவற்றையும் சி.வை.தா. பரிசோதித்து வைத்திருந்தார் எனவும் அறிய முடிகின்றது. (தாமோதரம். சி.வை.தா. வரலாற்றுச் சுருக்கம் VM XII).

உ.வே.சாமிநாதையர், நாராயண ஐயங்கார் முதலானோர் சங்க இலக்கியங்களைப் பதிப்பிக்கும் போது ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் பலர் சங்க இலக்கிய ஏடுகளை உபகரித்துள்ளனர். ஈழத்திலே சங்க இலக்கியப்பயில்வு சிறப்பாக இருந்தமையாலேயே சங்க இலக்கிய ஏடுகள் இங்கு இருந்தன என்பதையும் மனங்கொள்ள வேண்டும்.

ஈழநாட்டிலே சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகள் மிகச் சிறப்பாகவே நடைபெற்றுள்ளன. தனியான தலைப்பிலே ஆராயப்பட வேண்டிய அளவுக்கு விடயப்பரப்பு விரிந்ததாகச் சங்க இலக்கிய ஆய்வுகள் நடைபெற்றுள்ளமை ஈழத்துத் தமிழருக்குப் பெருமை சேர்ப்பதாகும். அவைபற்றி நாம் அறிந்த சில தகவல்களை மட்டும் இங்குக் குறிப்பிடுகின்றோம்.

ஆய்வுகளும் மொழிபெயர்ப்புகளும்

ஈழநாட்டிலே நடைபெற்ற சங்க இலக்கிய ஆய்வு முயற்சிகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

ஆய்வேடுகள், ஆய்வுக்கட்டுரைகள் என அவற்றைப் பகுக்கலாம். இலங்கைப் பல்கலைக்கழகங்களின் சங்க இலக்கியப்பயில்வு பற்றி ஏலவே குறிப்பிட்டோம். பல்கலைக்கழகங்களிலே படித்துப் பட்டம் பெற்ற அறிஞர்கள் தங்கள் பட்டமேற்படிப்புக்காகச் செய்த சங்க இலக்கியம் பற்றிய ஆய்வேடுகள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த வகையிலே பேராசிரியர்கள் சு.வித்தியானந்தன், க.கைலாசபதி, கா.சிவத்தம்பி முதலியோர் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவர்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலே 'சங்க இலக்கியத்தில் இயற்கை' என்னும் தலைப்பிலே வண. தனிநாயகம் அடிகளார் செய்த ஆய்வு மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சங்க இலக்கியம் பற்றிப் பல்வேறு ஆய்வுக்கட்டுரைகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் அடிகளார் எழுதினார். உலகத்தமிழ் அறிஞர்களைச் சங்க இலக்கியத்தின் பால் ஈர்க்கவும், பழந்தமிழர் வாழ்வியலை அவர்கள் புரிந்துகொள்ளவும் அடிகளாரின் ஆய்வுகள் உதவின. இவர்களைத் தொடர்ந்து கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அம்மன்கிளி முருகதாஸ்,

பேராசிரியர் கி.விசாகரூபன் முதலியோரும் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுகளைத் தமது பட்டமேற்படிப்புக்காகச் செய்துள்ளனர். கைலாசபதி, சிவத்தம்பி, மனோன்மணி சண்முகதாஸ் முதலியோர் சங்க இலக்கியங்களை ஒப்பியல் நோக்கிலே ஆராய்ந்து ஈழத்துப் புலமை மரபுக்கு வலுச்சேர்த்துள்ளனர்.

ஈழநாட்டைச் சேர்ந்த தமிழ்ப் பேராசிரியர்கள் பலர் சங்க இலக்கியம் பற்றிய ஆய்வுக் கட்டுரைகளை அவ்வப்போது எழுதியுள்ளனர். பேராசிரியர் வி.செல்வநாயகம், பேராசிரியர் ஆ.வேலுப்பிள்ளை, பேராசிரியர் ஆ.சதாசிவம், பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலியோர் இந்த வகையிலே விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள். ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சங்க இலக்கிய ஆய்வுகளை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியமை குறிப்பிடத்தக்கது. ஈழத்துப் புலமையாளர்கள் எழுதிய தமிழ் இலக்கிய வரலாற்று நூல்களும் கட்டுரைகளும் சங்க இலக்கியத்திற்குப் புதிய ஒளி பாய்ச்சுவனவாக அமைந்துள்ளன. கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ், பேராசிரியர் அ.சண்முகதாஸ் முதலானோர் சங்க இலக்கியங்களை யப்பானிய மொழியுடன் ஒப்பிட்டுச் செய்த ஆய்வுகளும் மொழிபெயர்ப்புக்களும் எமது சங்க இலக்கியப் புலமை மரபுக்கு வலுச் சேர்ப்பனவாக உள்ளன.

சங்க இலக்கியம் பற்றிய ஆய்வரங்குகள் அவ்வப்போது நடத்தப்பெற்று அவை பின்னர் நூலுருவாகவும் வெளிவந்துள்ளன. இந்த வகையிலே இலங்கை இந்துசமயக் கலாசார அமைச்சு நடத்திய சங்க இலக்கிய ஆய்வரங்குகள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவை.

ஈழத்துத் தமிழ் அறிஞர்கள் சங்க இலக்கியச் செய்யுள்களை ஆங்கிலத்திலே மொழிபெயர்த்துள்ளனர். சிறப்பாகப் பத்துப்பாட்டு முழுவதையும் ஜே.வி.செல்லையா ஆங்கிலத்திலே 1946ஆம் ஆண்டு மொழிபெயர்த்துள்ளார். சங்க இலக்கியம் பற்றி மேலைப்புல அறிஞர்கள் அறிந்துகொள்ள இம் மொழிபெயர்ப்பு உதவியது எனத் திடமாக நம்பலாம். அப்பொழுது இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியராக விளங்கிய சுவாமி விபுலானந்தர் இம் மொழிபெயர்ப்புக்கு அணிந்துரை வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சங்க இலக்கியங்களைக் கருப்பொருளாகக் கொண்டு நாட்டிய நாடகங்களும், மேடை நாடகங்களும் ஓரளவுக்கு இங்கே நடைபெற்றுள்ளன. உதாரணமாக, யாழ்ப்பாணம் திருமறைக் கலாமன்றத்தினர் அரங்கேற்றிய 'புறநானூற்றுக் காட்சிகள்', 'அற்றைத் திங்கள்' முதலான நாடகங்களைக் குறிப்பிடலாம்.

ஈழத்திலே சங்க இலக்கியப்பயில்வு நீண்ட நெடுங்காலமாகவே நிலவி வந்துள்ளமையைக் கண்டுகொள்ள மேலே குறிப்பிட்ட விடயங்கள் உதவுகின்றன. விரிவான ஆய்வுக்குரியதான ஈழத்துச் சங்க இலக்கியப்பயில்வினைக் கட்டுரையின் அளவு நோக்கிச் சுருக்கமாகக் குறிப்பிட்டோம்.

சங்கத் தமிழர் கண்ட முறை மன்றங்கள்

முனைவர் மு.முத்துவேலு
பதிவாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

ஓர் இனத்தின் பண்பாட்டை வெளிப்படுத்தும் கூறுகளில் அவ்வின மக்களிடையே நிலவிய நீதி வழங்கும் திறமும் குறிப்பிடத் தக்கதாகும். தமிழர் நீதி வழங்கும் முறைமையில் நிகரற்றவராய்த் திகழ்ந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன.

ஒரு நாட்டில் நீதி வழுவா நெறிமுறை நிலவுகின்றது என்பதற்குச் சான்றுகளாக விளங்குபவை அந்நாட்டு நீதிமன்றங்கள் ஆகும். தங்கள் குறை நீங்க வருவோர்க்கும் முறைநாடி வருவோர்க்கும் வாயில்களாக இருப்பவை நீதிமன்றங்கள். மனிதகுல வரலாற்றில் 'அரசு' என்ற அமைப்பு உருவான நாள்முதல் அவ்வமைப்பின் இன்றியமையாக் கூறுகளாகத் திகழ்ந்து வருபவை நீதிமன்றங்கள். முடியாட்சி முறையிலும், குடியாட்சி முறையிலும் இவை மிகவும் முக்கியத்துவம் வகிக்கின்றன.

இன்று தமிழகம் உள்ளிட்ட இந்தியா முழுவதிலும் உள்ள நீதிமன்ற அமைப்பு முறை ஆங்கிலேயரால் ஏற்படுத்தப் பட்டதாகும். இங்கிலாந்து நாட்டுச் சட்ட விதிகளை அடிப்படையாகக் கொண்டும், அந்நாட்டுச் சட்ட நிறுவனங்களை முன்மாதிரியாகக் கொண்டும் ஆங்கிலேயர் அவற்றை அமைத்தனர்.

இவை இன்று மக்களாட்சி முறைக்கு ஏற்ப உருவாகி அமைந்துள்ளன. மூவேந்தர்கள் தமிழகத்தை ஆண்டு வந்த சங்க காலத்து முறைமன்றங்கள் முடியாட்சி முறைக்கு ஏற்ப அமைந்திருந்தன என்பது குறிப்பிடத்தக்கது.

அவையின் தோற்றம்

பண்டைத் தமிழரின் பண்பாட்டைப் பாரெங்கும் எடுத்துரைக்கும் நூல்களுள் தொல்காப்பியம் முதலிடம் வகிக்கின்றது. இது நீதி வழங்குவதற்குத் தமிழகத்தில் தொன்று தொட்டு 'அவை' என்னும் அமைப்பு இருந்தது என்பதற்குச் சான்று கூறுகின்றது. அது,

எட்டுவகை நுதலிய அவையத் தானும் (தொல்.பொருள்.75)

என்ற நூற்பாவின் மூலம் 'அவை' எட்டு வகைப்படும் என்பதைத் தெரிவிக்கிறது.

ஊர்ப்புற அவை

ஊர்ப்புறங்களில் இருந்த அறம் கூறும் இடங்கள் 'அவை' 'பொதியில்', 'அம்பலம்', 'மன்றம்' என்று பல பெயர்களில் அழைக்கப்பட்டன. அவை பல்வேறு பணிகளுடன் முறை செய்யும் பணியையும் சிறப்பாக ஏற்று நடத்தி வந்தன.

'அவை' என்னும் பெயரில் முறை மன்றங்கள் இருந்தமைக்கு எடுத்துக்காட்டுகள் உள்ளன.

நயனில் மாக்களொடு குழீஇ
பயனின்று அம்ம இவ்வேந்துடை அவையே

என்னும் நற்றிணைப் பாடலில், (90) வேந்தன் ஒருவனின் அவை குறிப்பிடப்பட்டுள்ளது.

முறையுடை அரசன் செங்கோல் அவையத்து

என்னும் அகநானூற்றுப் பாடலில், (93) முறை செய்வதற்கென்று எழுந்த அவை இருந்தமை சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஊர்மன்றம்

மன்றம் என்னும் சொல் 'மன்று' என்னும் வேர்ச்சொல்லில் இருந்து தோன்றியதாகும். 'மன்று' என்னும் சொல் 'ஊர்ப்பொது இடம்' என்னும் பொருளில் வழங்கி வந்துள்ளது.

கன்று அமர் விருப்பொடு மன்று நிறைபுகு

என்னும் கலித்தொகைப் பாடலிலும்(119)

மன்று இரும்பெண்ணை மடல்சேர் அன்றில்

என்னும் கலித்தொகைப் பாடலிலும் (129) வரும் 'மன்று' என்னும் சொல், ஊர்ப்பொது இடத்தைக் குறிக்கின்றது. எனவே ஊர்ப் பொது இடங்களில் கூடிய கூட்டத்திற்கு 'மன்றம்' என்னும் சொல் வழங்கலாயிற்று எனக் கொள்வதும் பொருந்தும்.

இத்தகைய 'மன்றம்' என்பது, ஊரின் நடுவே ஒரு மரத்தின் கீழ் அமைந்திருப்பதாகும். ஒரு மன்றம் எந்த மரத்தின் கீழ் அமைந்திருந்ததோ அம்மன்றம் அந்த மரத்தின் பெயராலேயே அழைக்கப் பெற்றுள்ளது. இதற்குச் சங்க இலக்கியங்களில் பல குறிப்புகள் உள்ளன. அம் மன்றங்கள், விளா, பலா, வேம்பு, வேங்கை, வன்னி முதலிய மரங்களின் கீழ் அமைந்திருந்தன. இத்தகைய மன்றங்களில்,

1. விளாமர மன்றம் இருந்தது என்பதை
'மன்ற விளைவின் மனைவீழ் வெள்ளிப்'

என்ற புறநானூற்றுப் பாடல் அடியும் (181)

2. பலாமர மன்றம் இருந்தது என்பதை
'மன்றப் பலவின் மாச்சினை மந்தி' (128:1)

என்ற புறநானூற்றுப் பாடல் அடியும்

3. வேம்புமர மன்றம் இருந்தது என்பதை
'மன்ற வேம்பின் மாச்சினை ஒண்தளிர்'

என்ற புறநானூற்றுப் பாடல் அடியும் (78:4)

4. வேங்கை மரமன்றம் இருந்தது என்பதை
'மன்ற வேங்கை மலர்சிலகொண்டு

என்ற ஐங்குறுநூற்றுப் பாடல் அடியும் (259:2)

5. வன்னிமர மன்றம் இருந்தது என்பதை
'வன்னி மன்றத்து விளங்கிய நாடே'

என்ற பதிற்றுப்பத்துப் பாடல் அடியும் (44:23) எடுத்துக்காட்டுகின்றன.

ஊர்ப் பொதியில்: அவை

பொதியில் என்னும் பெயரிலும் ஊர்ப்புறங்களில் அறங்கூறும் அமைப்பு இருந்து வந்துள்ளது. இதனை,

அவையிருந்த பெரும் பொதியில்

எனவரும் மதுரைக் காஞ்சி அடி (161) குறிப்பிடுகிறது.

முன்னூர்ப் பொதியில்

எனவரும் புறநானூற்றுப் பாடல் அடியும் (390)

வம்பலர் சேக்கும் தந்துடைப் பொதியில்

எனவரும் பட்டினப் பாலை அடியும் (249)சான்றுகளாக நின்று விளக்குகின்றன.

நகர்ப்புற நீதிமன்றங்கள்

மூவேந்தரின் நகரங்களில் இருந்த நீதிமன்றங்கள் 'அவையங்கள்' என்று அழைக்கப்பட்டன.

'அவை' என்பதில் இருந்து 'அவையம்' என்பது பெரியதோர் அமைப்பாகக் காணப்படுகிறது. ஊர்களில் இருந்த நீதி மன்றங்கள் 'அவை'என்றும், நகரங்களில் இருந்த நீதிமன்றங்கள் 'அவையம்' என்றும் அழைக்கப்பட்டிருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

மறக்கெழு சோழர் உறந்தை அவையத்து
அறம் நின்று நிலையிற்று

எனவரும் புறநானூற்றுப் பாடல் (39) வீரத்தில் சிறந்து விளங்கும் சோழர்களின் நகரான உறந்தையில் இருந்த அவையில் அறம் நின்று நிலவியதைப் பதிவு செய்துள்ளது.

மறங்கெழு சோழர் உறந்தை அவையத்து

எனவரும் புறநானூற்றுப் பாடல் சோழரின் நகரங்களுள் சிறந்ததான உறையூரில் அறமுரைக்கும் அவையம் இருந்தது என்பதைச் சிறப்பித்துக் கூறுகின்றது. இவை சோழரின் உறந்தை நகரில் அவையம் என்னும் 'அறங்கூறும்' அமைப்பு இருந்தது என்பதையும், அதனைப் புலவர்கள் சிறப்பித்துப் பாடியுள்ளனர் என்பதையும் உரைக்கின்றன.

தலைநகர் நீதிமன்றம்

நாட்டின் தலைநகரில் இருந்த அவை 'அறங்கூறவையம்' என்று அழைக்கப்பட்டது. சங்க காலத்தில் தமிழகத்தை ஆட்சி செய்த மூவேந்தர்களான சேர சோழ பாண்டியர்களின் தலைநகரங்களில் இத்தகைய அறங்கூறவைகள் இருந்துள்ளன.

பாண்டியரின் தலைநகரான மதுரையில் இருந்த முறை மன்றத்தை மதுரைக் காஞ்சி, *(472)*

சிறந்த கொள்கை அறங்கூறவையமும்

என்று குறிப்பிடுகிறது. சோழரின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தில் இருந்த அவையை,

அரைசுகோல் கோடினும் அறம்கூறும் அவையத்து
உரைநூல் கோடி ஒருதிறம் பற்றினும்

என்று சிலப்பதிகாரம் *(5:133-134)* குறிப்பிடுகின்றது. முடியுடை வேந்தர்களே இந்த அறங்கூறவைகளின் தலைமைப் பொறுப்பில் வீற்றிருந்தனர்.

அறங்கூறவையும் நீதிமன்றமும்

'அறங்கூறவையம்' என்பது நீதி வழங்கும் அவையே ஆகும். அறம் என்ற சொல் பண்டைக் காலத்தில் நீதி என்ற பொருளில் வழங்கப் பெற்றது என்பதால் அறங்கூறவையம் என்பது தலைமை நீதிமன்றம் என்னும் பொருளை உணர்த்தியுள்ளது.

சட்டம், நீதி வழங்குவதற்காக இயற்றப் பெறுகிறது. நீதி, சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பெறுகிறது. அதனால்தான், நீதிமன்றத்தை ஆங்கிலத்தில் "Court of Law" என்கிறோம். நீதிமுறையான ஆட்சியை "Rule of Law" என்று கூறுகிறோம். இதுபோன்றே அறம் என்ற சொல் அன்றைய தமிழ் இலக்கியங்களில் ஒழுக்க நெறியினையும் நீதி நெறியினையும் ஒருங்கே குறித்துநின்றது. நீதி வழங்கும் (முறை செய்யும்) அவையத்தினை "அறங்கூவையம்" என்று பழந்தமிழர் இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன என்று மா.சண்முக சுப்பிரமணியம் தரும் விளக்கம் ஏற்றுக் கொள்ளத்தக்கதாகும்.

மதுரையில் இருந்த அறங்கூறு அவையத்தின் உறுப்பினர்களின் பண்புகளை மதுரைக் காஞ்சி பின்வரும் அடிகளில் விளக்குகின்றது.

அச்சமும் அவலமும் ஆர்வமும் நீக்கி
செற்றமும் உவகையும் செய்யாது காத்து
நெமன்கோல் அன்ன செம்மாந்து ஆகி

எனவரும் அடிகள், அவர்கள் நடுவுநிலைமை தவறாதவர்கள் என்பதற்கான பண்புகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றன. அவை முறையே,

அவர்கள் எவருக்கும் அஞ்சமாட்டார்கள்
எது கருதியும் அவலம் கொள்ளமாட்டார்கள்
எது நோக்கியும் ஆர்வத்தை வளர்த்துக் கொள்ள மாட்டார்கள்;

உள்ளத்தில் சினமோ பகையோ இல்லாதவர்கள் என்பதாகும்.

'நவை நீங்க நடுவுகூறும்' இந்த அவை மாந்தர் இயல்புகளைப் புறப்பொருள் இலக்கணம் கூற வந்த புறப்பொருள் வெண்பாமாலை என்ற இலக்கண நூலும் அவையத்தாரின் இயல்புகளைச் சுருக்கமாகக் குறிப்பிடுகிறது. அவர்கள் தம்மை நாடி வருவோரின் துன்பத்தை நீக்குபவர்கள். அதே வேளையில் நடுவு நிலையில் நிற்கும் நற்பண்பை நாளும் போற்றுபவர்கள் என்பதை

நவை நீங்க நடுவு கூறும்
அவை மாந்தர் இயல்பு உரைத்தன்று

என்று விளக்குகின்றது.

இத்தகைய அறங்கூறவையின் உறுப்பினர்களும், அதன் தலைவரும் வயதில் முதிர்ந்து வாழ்க்கையில் பட்டறிவு பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்று மக்கள் விரும்பினர் என்பதைப் பழமொழி என்னும் அறநூல் எடுத்துரைக்கின்றது.

மிக இளம் வயதில் அரியணையில் அமர்ந்தவன் சோழன் கரிகால்வளவன். இதனால் அவனிடத்தில் தம் குறையைக் கூறுவதற்குக் குடிமக்கள் தயங்கினர். இதனைக் கண்ட அச்சோழன் முதியவர்போல் நரைமுடி தரித்து வந்து அறங்கூறவையில் அமர்ந்து அக்குடி மக்களின் குறைகளைக் கேட்டு நீதி வழங்கினான் என்னும் செய்தியை,

உரைமுடிவு காணான் இளமையோன் என்ற
நரைமுது மக்கள் உவப்ப - நரைமுடித்துச்
சொல்லால் முறைசெய்தான் சோழன்குல விச்சைக்
கல்லாமல் பாகம் படும்

என்னும் பழமொழிப் பாடல் விளக்குகின்றது. வயதும் வாழ்க்கைப்பட்டறிவும் பிறரது சொற்களில் இருந்து பிழைகளை நீக்கி உண்மையை உய்த்துணர உதவுவன என்றும் நம் பண்டைத் தமிழர் நம்பினர் போலும்.

அறங்கூறவை உறுப்பினர்கள்

அறங்கூறு அவையின் அவையத்தாரை மன்னனே அமர்த்தினான். அமர்த்தப் பெறும் அவையத்தார் ஒவ்வொருவரும் அவையின் மாண்பினைப் பேணிக் காப்பவர்களாக இருத்தல் வேண்டும். அவையின் பெருமையைக் காப்பது மன்னனின் கடமையாகும். எனவே அரசன் இத்தகைய உறுப்பினர்களை அமர்த்தும் இடத்து மிகுந்த கருத்துடன் இருந்தான்.

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டியனுக்கும் ஏனைச் சேரசோழ வேந்தர்க்கும் பகைமை உண்டாயிற்று. இவ்விருவர் மீது பாண்டியன் போருக்கு எழுந்தான். போருக்குப் புறப்படும் முன் அவன் 'வஞ்சினம்' கூறும் பாடல் ஒன்றைப் பாடியதாகப் புறநானூறு பதிவு செய்கிறது. இப்பாடலில் அவன் 'பகையரசர்களைப் புறங்காண்பேன் என்றும், அவ்வாறு அவர்களைப் புறக் காணவில்லை என்றால் அறத்தின் திறப்பாட்டை அறியா ஒருவனை அறங்கூறு அவையத்தில் அமைத்து முறை செய்வதில் இருந்து திரிந்து மெலிகோல் செய்தவன் ஆவேன்' என்றும் உரைக்கின்றான்.

அறநிலை திரியா அன்பின் அவையத்துத்
திறனில் ஒருவனை நாட்டி முறைதிரிந்து
மெலிகோல் செய்தேன் ஆகுக

என்பது அப்புறநானூற்றுப் பாடல் *(71)*.

இதனால் அறங்கூறவையத்து உறுப்பினர்களை அமர்த்தும் பொறுப்பு அரசனிடம் இருந்தது என்பதும், அறங்கூறவையத்தில் அறநெறி அறிந்த ஒருவரை அமர்த்துவது வழிவழி வந்த மரபு என்பதும் பெறப்படுகின்றன. மேலும் இச்சங்கப் பாடல் அம்மன்னன் அத்தகைய உறுப்பினர்களை அமர்த்துவதற்கு வழங்கியிருந்த சிறப்புத் தன்மையும் புலப்படுகிறது. அதே வேளையில் அறத்தின் திறப்பாட்டை அறியா ஒருவனை அமர்த்துவது மன்னனின் மாண்பிற்கு இழுக்கு என்பது வெளிப்படுகின்றது.

இருமுறைகள்

அறமன்ற உறுப்பினர்களை அரசன் நியமித்துள்ளான். சில சிற்றூர் மன்றங்களுக்கு உறுப்பினர்களை அரசமுறையும் அமர்த்தியுள்ளது. அவ்வாறின்றித் தேர்தல் முறையும் நடைபெற்றுள்ளது.

ஊர்மன்றங்களுக்கு உறுப்பினர்களைத் தேர்வு செய்யும்முறை குறித்துச் சங்கப்பாடல் விளக்கம் தருகிறது. அம்மன்றங்களில் உறுப்பினர்கள் ஊர்ப் பொது மக்களடங்கிய அவைக்குக் 'குடவோலை' என்னும் முறையில் தேர்ந்தெடுக்கப் பட்டனர் என்பதைப் பின்வரும் பாடல் வெளிப்படுத்துகின்றது.

கயிறுபிணிக் குழிசியோலை கொண்மர்
பொறி கண்டழிக்கும் ஆவண மாக்களின்

என்பது அகநானூறு. *(17)*

ஆங்கில நீதிமன்றங்களும் அன்றைய நாள் தமிழர் முறை மன்றங்களும்

ஆங்கிலேயரின் கிழக்கிந்தியக் கம்பெனி இந்தியாவை ஆட்சி செய்தபோது, இங்குத் தொன்றுதொட்டு இருந்து வந்த நீதி வழங்கும் அமைப்பு முறைகள் செயல் இழந்துவிட்டன. அவற்றிற்குப் பதிலாக ஆங்கிலேயர் நான்கு விதமான நீதிமன்றங்களை நிறுவினர். அவை முறையே:

1. சவுல்ட்டரி நீதிமன்றம்
2. மேயர் நீதிமன்றம்
3. கடலாண்மை நீதிமன்றம்
4. தலைவர் அல்லது ஆளுநர் நீதிமன்றம்

என்பன.

1. 'சவுல்ட்டரி நீதிமன்றம்' என்பது சிற்றூர்களில் அமைந்த நீதிமன்றம் ஆகும். இதன் அதிகார வரம்பு (Jurisdiction) மிகவும் குறுகியது. இதனைச் சங்க காலத்தில் இருந்து வந்த 'பொதியில், அம்பலம், அவை' என்னும் அமைப்புகளோடு ஒப்பிடலாம்.

2. 'மேயர் நீதிமன்றம்' என்பது பெருநகரங்களில் இருந்த நீதிமன்றம் ஆகும். இதை உறந்தை நகரில் இருந்த 'அவை'யத்தோடு ஒப்பிடலாம்.

3. 'கடலாண்மை நீதிமன்றம்' என்பதைப் பண்டைத் தமிழகத்தில் இருந்த அறங்கூறவையங்களோடு ஒப்பிடலாம். குறிப்பாகப் பட்டினப்பாலை கூறும் காவிரிப்பூம் பட்டினத்தில் இருந்த அறங்கூறவையம் இதற்குத் தக்கதோர் எடுத்துக்காட்டாகும்.

4. 'தலைவர் அல்லது ஆளுநர் நீதிமன்றம்' என்பதில் இந்திய ஆளுநர் இங்கிலாந்து அரசரின் பிரிதிநிதியாக விளங்கினார். எனவே, இதனை முடிசூடிய மன்னர்கள் முறைசெய்ய அறங்கூறவைக்குத் தாமே தலைமையேற்ற தன்மையோடு ஒப்பிடலாம்.

இந்த ஒப்புமை, சங்ககாலத் தமிழகத்தில் நீதி வழங்குவதற்கான அமைப்பு முறையானது மிகவும் மேம்பட்ட ஆங்கிலோ - சாக்ஸன் நீதிமன்ற அமைப்போடு ஒத்துச் செல்வதை எடுத்துக்காட்டுகின்றது. இது தமிழர்தம் பெருமையை உணர்த்துகிறது.

இந்திய விடுதலைக்குப் பின் தோன்றிய நீதிமன்றங்கள் வட்டம், மாவட்டம், மாநிலத் தலைநகர் என்னும் படிநிலை அமைப்பில் அமைந்துள்ளன. இவற்றையும் பழந்தமிழகத்தில் இருந்த நீதிமன்றங்களோடு ஒப்பிடலாம். அந்நாளில் நாடு சிற்றூர், நகரம், மாநகரம் என்று பிரிக்கப்பட்டு இருந்தது. அவற்றுக்கெனப் பொதியில், அம்பலம், அவை, அவையம், அறங்கூறவையம் என்றிருந்த நீதிமன்ற முறைநெறிகளோடு ஒப்பிடுகையில் அவை பொருந்தி நிற்கின்றன.

இன்றைய நாளில் "லோக் அதாலத்" என்று வழங்கப்படும் 'மக்கள் நீதிமன்றங்கள்' சிற்றூர்களில் அம்மக்களுக்கான நீதிமன்ற அமைப்புகளாக விளங்குகின்றன. இந்த 'மக்கள் நீதிமன்றங்கள்' செய்யும் பணிகளைப் பண்டைத் தமிழகத்தில் இருந்த அவைகள், மன்றங்கள், பொதியில் முதலியவை செய்து வந்தன என்பதும் தமிழர்களுக்குப் பெருமை சேர்ப்பதாகும்.

பண்டைத் தமிழகத்தில் நீதிமன்றங்கள் இருந்தன. அவை சிற்றூர்களில் அவை, மன்றம், அம்பலம், பொதியில் என்று அழைக்கப்பட்டன. நகரங்களில் அவையம் என்னும் பெயரிலும் தலைநகரங்களில், 'அறங்கூறவையம்' என்னும் பெயரிலும் நீதிமன்றங்கள் இருந்தன.

இந் நீதி மன்றங்களின் உறுப்பினர்கள் 'அவையத்தார்' என்று அழைக்கப்பட்டனர். 'அவையத்தாரை' அரசன் அமர்த்தினான். சிற்றூர் அவைகளுக்கு உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையும் இருந்தது. அவை உறுப்பினர்கள் அறநெறியில் நின்ற சான்றோர்களாக இருந்தனர்.

அவையத்தாரின் தகுதிகள் நன்கு வரையறுக்கப் பட்டிருந்தன. அரசனோடிருந்த அமைச்சர்கள் அரசன் நீதி வழங்குவதற்குத் துணைநின்றனர்.

முடியாட்சிக் காலத்தில் நாகரிகச் சமுதாயத்திற்குத் தேவையான முறைமன்ற அமைப்புமுறையைச் சங்கத் தமிழர் பெற்றிருந்தனர் என்பதை இக்கட்டுரை நிறுவ முற்பட்டது.

சங்க இலக்கியத்தில் பஞ்சு முதல் பட்டு வரை

முனைவர் ஜ.பிரேமலதா
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலைக் கல்லூரி, சேலம்
தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

ஒருவன் உணவின்றிச் சில வேளைகள் வாழலாம்; ஆனால் உடையின்றி அரைக் கணமும் வாழ இயலாது. அரசரின் மானத்தையும், ஆண்டியின் மானத்தையும் காக்கக் கூடியது உடை. துறவிகளும் துறக்காத சிறப்புடையது உடை. தீ மூட்டி வேள்வி செய்யும் அந்தணரின் தொழிலைவிட, தீ மூட்டி உணவு சமைக்கும் சமையல் தொழிலைவிட உயர்ந்தது என்பதால்தான் வள்ளுவரும், கம்பரும் நெசவுத் தொழில் மேற்கொண்டனர் என்பது வரலாறு கூறும் உண்மை. புலவராக இருந்த போதும் அறுவை வணிகன் இளவேட்டனார் ஆடை விற்பனை செய்ததால் 'அறுவை வணிகன்' என்ற சிறப்புப் பெயரைப் பெற்றிருக்கிறார். உண்பதற்குரிய உணவு உழவுத்தொழில் மூலம் கிடைப்பது போல, உடுப்பதற்குரிய உடையும் உழவுத் தொழிலிருந்தே கிடைக்கிறது என்பதால் உழவுத்தொழிலுக்கு அடுத்த நிலையில் வைத்துப் போற்றக்கூடிய சிறந்த தொழிலாக நெசவுத் தொழிலைக் குறிப்பிடலாம். நெசவுத்தொழிலுக்கு அடிப்படையானவை பருத்தி மற்றும் பட்டின் இழைகளாகும்.

பருத்தி

தமிழர்கள் தொழில் நுட்பத்தில் மேம்படுவதற்குப் பருத்தியும் ஒரு காரணமாகும். பருத்தி நூல் கண்டுபிடிப்பு ஒரு மாபெரும் புரட்சியாகும். பருத்திச் செடிகள் ஊருக்குப் புறத்தேயும் வீட்டிற்கு வெளியேயும் வளர்க்கப்பட்டன. போர்ச்சூழல் நிரம்பிய அக்காலத்தில், நாட்டின் மானம் காக்கவும், பெண்களின் மானம் காக்கவும் கைகொடுத்து உதவியது பருத்திச் செடியே. "பன்னல்வேலி இப்பணை நல்ஊரே" (புறம்.35:20) என்று பருத்தியை வேலியாக உடைய ஊர்களைப் புலவர்கள் பாராட்டியுள்ளனர். ஊருக்குப் புறத்தே பரந்து விரிந்துள்ள பருத்திச் செடிகள் ஊருக்கே வேலிபோல விளங்கியதை இப்பாடல் உணர்த்துகிறது.

"கல் சேர்பு இருந்த கதுவாய்க் குரம்பைத்
தாழி முதற் கலித்த கோழிலைப் பருத்தி" (அகம். 129 : 6-7)

என்ற அகப்பாடல் வீட்டிற்குப் புறத்தே கற்கள் சூழ்ந்த பகுதியில் விளைந்துள்ள கோழிலைப் பருத்தி பற்றிக் கூறுகிறது. பருத்திச் செடியிலிருந்து எடுக்கப்பட்ட கொட்டையை உணவிற்காகவும், கொட்டையைச் சுற்றி வளர்ந்துள்ள இழைப்

பகுதியை எடுத்து நூலாகவும் பயன்படுத்தியுள்ளனர். இந்நூலைக் கொண்டு கயிறு திரித்து, அக்கயிற்றினைப் பலவிதப் பயன்களுக்காகவும் பயன்படுத்தியுள்ளனர். இக்கட்டுரை பருத்தி இழையிலிருந்து எடுக்கப்பட்ட நூல் மற்றும் பட்டுப் புழுக்கூட்டிலிருந்து எடுக்கப்பட்ட நூல் இரண்டும் சங்கத்தமிழர் வாழ்வில் பெற்றிருந்த இடத்தை ஆராய்கிறது.

பருத்தியின் தொழிற்பயன்

சங்க காலத்தில் போரில் இறந்துபட்ட வீரர்களின் மனைவியர் தம் மானத்தைக் காக்கவும், சுற்றத்தைப் பேணவும் பருத்திச் செடிகளையே நம்பியிருந்தனர். பருத்தியைக் கொண்டு வாழ்கை நடத்தியவர்களைப் 'பருத்திப் பெண்டீர்' (புறம்.125 :1) என அழைத்துள்ளனர். பெரும்பாலும் கைம்பெண்டிரே இத்தொழில் ஈடுபட்டுள்ளனர். பருத்தியைக் "கோடைப்பருத்தி" (புறம்.393) என்றும் இதன் பூவை "பாரம்" (குறிஞ்சிப்பாட்டு 92) என்றும் சங்க இலக்கியம் கூறுகிறது. இப்பருத்திப்பூவைப் பறித்து, பெரிய மூட்டைகளில் கட்டி வீடு முழுதும் நிறைத்திருப்பர் (புறம்.393:12-13) என நல்லிறையனார் கூறுகிறார்.

கைம்பெண்கள், பருத்தி இழையிலிருந்து கொட்டையைப் பிரிந்தெடுக்க இரும்பினால் செய்யப்பட்ட தாள் மற்றும் வில் முதலான கருவிகளைப் பயன்படுத்தியுள்ளனர். "ஆள் இல் பெண்டிர் தாளின் செய்த நுணங்கு நுண் பனுவல் போல" (நற். 353: 1-2) "எஃகுறு பஞ்சிற்று ஆகி" (நற்.247:4) "வில்லெறு பஞ்சியின்" (அகம். 133: 6) போன்ற தொடர்கள் தாள், வில் போன்ற பஞ்சடிக்கும் இரும்பினால் செய்யப்பட்ட கருவிகளைப் பற்றிக் கூறுகிறது. இவ்வாறு இக்கருவிகளினால் பன்முறை அடிக்கப்பட்ட பருத்தி இழையானது மென்மையான பஞ்சாக மாறுகிறது. இப்பஞ்சு வேக வைக்கப்பட்ட இறைச்சி போலக் கடினத் தன்மையும் இழுமைத் தன்மையும் நீங்கி மிக மென்மையாக இருந்ததாக ஒரு புலவன் கூறுகிறான். (புறம். 125: 1)

பஞ்சு நூலாக மாற்றும் முறையைப் பிற்கால நூலாகிய நன்னூல் ஒரு நூற்பாவின் மூலம் கூறுகிறது. நூற்கும் பெண் தன் கைகளைப் பயன்படுத்தி, கதிர் என்னும் கருவியின் உதவியால் பஞ்சினை நூலாக மாற்றுவதைப் போல, ஒரு புலவன் சொற்களாகிய பஞ்சினைச் செய்யுளாக மாற்றுவதற்கு, அறிவு என்னும் கதிரைப் பயன்படுத்த வேண்டும் என்கிறது.சொற்கள் - பஞ்சு;செய்யுள்- இழை (நூலிழை); எழுதுபவன் - நூற்கும் பெண்; எழுதுபவனின் வாய்- நூற்கும் கை;அறிவு - கதிர் (நன். எழு. 24)"...கதிர்பொலவுறூஉம் ஏந்தல் கொடு நின்றோங்கும் ஏமக்கை" (திருக்கை.143). பெண்டிர் கதிர் என்னும் கருவி கொண்டு பஞ்சினை நூலாக மாற்றியுள்ளனர் எனத் திருக்கை வழக்க நூலும் கூறுகிறது.

இவ்வாறு கதிரினால் உருவாக்கப்பட்ட நூலிழைச் சிலந்தி வலைபோல மெல்லியதாக இருந்ததைச் சங்கப் பாடல் சுட்டுகிறது. பாலை நிலத்தில் இலை உதிர்ந்த வேல மரத்தின் விரிந்த கிளைகளில் சிலந்திகள் வலைபின்னியுள்ளன. இவ்வலையின் ஒரு மெல்லிய இழை 'சிலந்தி நூல்' என அழைக்கப்பட்டுள்ளது. "சிலம்பி நூலின் நுணங்குவன" (அகம். 224:7) கொடுமணலில் மேற்கொள்ளப்பட்ட

அகழாய்வுகளில் நூல் நூற்கும் தக்ளிகள் கிடைத்துள்ளன. இது 2300 ஆண்டுகளுக்கு முற்பட்டவை எனத் தொல்லியலாளர்கள் கூறுகின்றனர் (தினமலர், 1.6.2012). தற்காலத்தில் நாரிலிருந்து திரிக்கப்படுவது கயிறு என அழைக்கப்படுகிறது. ஆனால், பருத்தி இழையிலிருந்து பெற்ற நூலைக் கொண்டு திரித்த 'கயிற்றையே' பழந்தமிழர் கயிறு என வழங்கியுள்ளனர்.

பருத்தி நூல் கயிறு

பஞ்சி இழை, நூலாக மாற்றம் பெற்ற நிலையில், அந்நூல் தமிழர் என்னும் பட்டத்தை வானளாவ உயர்த்தியச் செய்தியைச் சங்க இலக்கியம் பல பாடல்களில் பதிவு செய்துள்ளது. மெல்லிய கயிறு - ஞாண் என்றும், வலிய கயிறு - கயிறு, புரிநூல் என்றும் அழைக்கப்பட்டுள்ளது.பருத்தியிலிருந்து உருவாக்கப்பட்ட நூலை ஒன்றோடொன்று சேர்த்து முறுக்கும் பொழுது, வலிமையான முறுக்குண்ட கயிறு கிடைக்கிறது. பயன்படுத்தும் பணிகளுக்கேற்பப் பல பெயர்களை வைத்துத் தமிழர் அழைத்துள்ளனர்.

பாசக்கயிறு

தயிர் கடைவதற்கென்றே நிறுவப்பட்ட தூணில் 'பாசம்' என்னும் கயிறைச் சுற்றி, அதை மத்தினோடு இணைத்து மாறிமாறி இழுப்பர். இதனால் மத்தனாது தேய்ந்துள்ளது என முல்லைக்கலி கூறுகிறது. மத்தோடு இணைக்கப்பட்ட கயிறை "மத்தம் பிணித்த கயிறு" (கலித். 110 : 10) என்கிறது முல்லைக்கலி. "குழிசிப் பாசம் தின்ற தேய்கால் மத்தம்" (நற். 12: 2) தயிர்ப்பானையில் மத்து பாசக்கயிறு கொண்டு கடையப்படுவதையும், இதனால் மத்தின் கால் தேய்ந்துள்ளதையும் இப்பாடல் சுட்டுகிறது. 'பாசம் தின்ற தேய்கால் மத்தம்' என்ற தொடரில் வரும் 'பாசம்' என்பது கயிற்றைக் குறிக்கிறது. கயிறு திரித்து விற்போரைச் சிலம்பு(17) 'பாசவர்' என்கிறது.

தாம்புக்கயிறு

மாடு கட்டுவதற்காக முல்லைநில மக்கள் பயன்படுத்தும் கயிறு 'தாம்பு' எனப்பட்டுள்ளது. "தீம்பால் கறந்த கலம் மாற்றி ; கன்று எல்லாம் தாம்பின் பிணித்து" (கலி.111:1-2) என்ற பாடல் கன்று, மாடு முதலானவற்றை தாம்புக்கயிற்றால் தூணில் கட்டுவர் என்கிறது. மற்றொரு பாடல், "...................... கன்றோடு செல்வேம்; எம்தாம்பின் ஒருதலை பற்றி" (கலி.116: 2)மேய்ச்சலுக்காக கன்று, மாடு போன்றவை அழைத்துச் செல்லப்படும் பொழுது, அவை வழிமாறிப் போய்விடாமலிருக்க அவற்றின் கழுத்தில் தாம்புக் கயிற்றைக் கட்டி மறு பகுதியைக் கையில் பிடித்து இழுத்துச் சென்றிடுவர் ஆயர் என்கிறது.

பெரிய வலைக்கயிறு

பரதவர்கள் கடலில் பெரிய மீன்களைப் பிடிப்பதற்கேற்ற வகையில், முறுக்கிய நூலினால் செய்யப்பட்ட வலிமையான கயிற்றைக் கொண்டு வலை தயாரித்துள்ளனர். இத்தகைய வலிமையான மெல்லிய கயிற்றை உருவாக்குவதற்கு 'வடிக்கதிர்' என்ற கருவியைப் பயன்படுத்தியுள்ளனர்.

"வடிக்கதிர் திரித்த வல் ஞாண் பெருவலை இடிக் குரற் புணரிப் பௌவத்து இடுமார்" (நற்.74). 'பண்' என்பது பாய்மரக்கயிறு என அழைக்கப்பட்டுள்ளது.

சிமிலிக்கயிறு

பல மெல்லிய நூல்களைக் கொண்டு முறுக்கப்பட்ட கயிறு 'புரிநூல்' என்று அழைக்கப்பட்டுள்ளது. இப்புரிநூல் சிறிய பொருட்களைக் கட்டி எடுத்துச் செல்வதற்கு உறியாகப் பயன்பட்டுள்ளது. முனிவர்கள் 'கரண்டை' எனப்படும் சிறிய பானையை நீர் எடுத்துச் செல்லப் பயன்படுத்தியுள்ளனர். பலவடமுடைய புரிநூலால் ஆன உறியானது 'சிமிலி' என அழைக்கப்பட்டுள்ளது. "கரண்டைப் பல்புரிச் சிமிலி நாற்ற நல்கி வர" (மதுரைக்காஞ்சி. 483-484). கரகம் என்பது கரண்டையாகும் (சிறிய பானை).

காப்புக் கயிறு

இறை வழிபாட்டிற்காகச் செல்பவர்கள் எடுத்துச் செல்லும் பூசைக்குரிய பொருட்களில் நூலும் இருந்தது. "கயிறும், மயிலும், குடாரியும்" (பரி. 8 : 97-100) எனப் பரிபாடல் வழிபடு பொருள்களில ஒன்றாக நூலும் இருந்துள்ளது எனக் கூறுகிறது.

"கைந்நூல் யாவாம்" (குறுந். 218. 2)

அணிக்கயிறு

தேரில் குதிரை மற்றும் யானைகளைக் கட்டுவதற்காகப் பயன்படுத்திய கயிறு 'அணிக்கயிறு' எனப்பட்டது. "யானை கயிற்று" (அகம். 128) "புரவி இழை அணி நெடுந்தேர்" (அகம். 254 : 12) இதைத் தற்காலத்தில் கடிவாளக் கயிறு என அழைக்கிறார்கள். "செல்க பாக! எல்லின்று பொழுதேவல்லோன் அடங்கு கயிறு அமைப்ப" (அகம். 224 : 2). குதிரையை அடக்கக் கூடிய வகையில் அதற்குக் கட்டப்படும் கடிவாளக் கயிற்றை 'மத்திகை' என்று பரிபாடல் கூறுகிறது

பூண்மணிக் கயிறு

ஆயர் தொழுவத்தில் வளர்க்கும் மாடுகளுக்குக் கழுத்தில் நூலினால் கோக்கப்பட்ட மணிகளை அணிவித்துள்ளனர். இதைப் 'பூண்மணிக்கயிறு' என அழைத்துள்ளனர். "புல்ஆர் கல்ஆன் பூண்மணி கொல்லோ?"(குறுந். 275: 4).

கழுத்தில் பூட்டப்பட்ட மணி 'பூண்மணி' என்றும் அதைக் கட்ட உதவும் கயிறு 'பூண்மணிக்கயிறு'எனவும் அழைக்கப்பட்டுள்ளது. ஒளிவீசக் கூடிய மணிகளைக் கொண்டு நூலினால் கோக்கப்பட்ட மாலைகளைக் கழுத்தில் தலைவன் அணிந்திருந்தான் எனக் "கதிர்விடு நுண்பூண் அம்பகட்டு மார்பின்" (புறம்.88:4)எனத் தலைவன் அணிந்த மாலை 'நுண்பூண்' எனக் குறிக்கப்பட்டுள்ளது.

ஊஞ்சல் கயிறு

ஊஞ்சல் பலகையானது, முறுக்குண்ட உறுதியான கயிற்றினால், மரக் கிளைகளில் கட்டப்பட்டுள்ளது. இக்கயிறு 'புரிக்கயிறு' எனப்பட்டுள்ளது. புரி

என்பது முறுக்கப்பட்ட கயிறு ஆகும். பல புரிகளைக் கொண்டு முறுக்கப்பட்ட பெரிய கயிறு ஊஞ்சல் கயிறாகப் பயன்பட்டுள்ளது. இதை 'முரற்சி' என்ற சொல் குறிக்கிறது. "வடுக் கொளப் பிணித்த விடுபுரி முரற்சிக் கை புனை சிறுநெறி வாங்கி" (நற். 270: 10).

பூங்கயிறு

ஐந்து வயதுக்குட்பட்ட சிறுவர், சிறுமியரே பொம்மை யானை, குதிரை, தேர் முதலானவற்றை இழுத்து விளையாடுவர். அவர்களின் மெல்லிய கைகளுக்கு ஏற்ற வகையில் உருவாக்கப்படுவதே 'பூங்கயிறு' ஆகும்.

"கவழம் அறியா நின் கைபுனை வேழம் புரிபுனை பூங்கயிற்றின் பைய வாங்கி" (கலி.80 : 7-8). சிறுவர், கவளச் சோற்றை அறியாத கையால் செய்யப்பட்ட மரயானையை முறுக்கப்பட்ட மெல்லிய பூங்கயிற்றினால் கட்டி அதை இழுத்து விளையாடி மகிழ்ந்தனர் எனக் கலித்தொகை கூறுகிறது.

கோர்க்கும் நூல்

முத்துமாலை, பொன்மாலை, பூமாலை போன்றவற்றைக் கோர்ப்பதற்கு நூலினாலாகிய சரடு பயன்பட்டுள்ளது. இச்சரடை 'அடர்ந்த நூல்' என அழைத்துள்ளனர். "நெகிழ் நூல் முத்தின்" (அகம். 289 : 11)-நூலறுந்து விழும் முத்துக்கள் போலத் தலைவியின் கண்ணிலிருந்து கண்ணீர் பெருகி வந்தது என்று புலவர் கூறுகிறார். மூன்று வடத்தினால் செய்யப்பட்ட முத்துமாலை பற்றிக் கலித்தொகை கூறுகிறது. "கயம் தலை மின்னும் கதிர்விடு முக்காழ்" (கலி. 80 : 2)

கிணற்றுக்கயிறு

கிணறுகளிலிருந்து நீர் இறைப்பதற்கு ஏற்றவகையில் கயிற்றினைப் பாத்திரத்தோடு கட்டிப் பயன்படுத்தியுள்ளனர். இதுவும் முறுக்குண்ட புரிநூலினால் ஆன கயிறு ஆகும். "சிரறு சில ஊறிய நீர் வாய்ப் பத்தல்கயிறு குறு முகவை" (ப.ப. 22 : 13-14).

கூத்துக்கயிறு

இரு மூங்கில் கழிகளுக்கு இடையே கட்டப்பட்ட கயிற்றில் ஆடுமகள் நடந்து காட்டும் கூத்தே ஆரியக் கூத்து ஆகும். பொதுமக்கள் கூடுமிடங்களில் இக்கூத்தினை நிகழ்த்தி ஆடுமகள் பிழைப்பு நடத்தியதைக் குறுந்தொகை பதிவு செய்துள்ளது. "ஆரியர் கயிறாடு பறையின்" (குறுந். 7 : 4)என்ற பாடல் கயிற்றால் ஆடுமகள் நடக்கும் பொழுது பறைக் கருவியில் இசையெழுப்பி வேடிக்கைக் காட்டுவர் எனக் கூறுகிறது. "......... ஆடுமகள் கயிறு ஊர் பாணியின்" (குறி. பா : 193-194).

வில்ஞாண்- இடைஞாண்

வில்லின் இருபுறமும் கட்டுவதற்குரிய கயிறு 'வில்ஞாண்' எனப்பட்டது. "கைபுனை வல்வில் ஞாண் உளர் நீயே" (கலி.7: 6) மெல்லிய வலிமையான ஞாணாகிய கயிற்றைக் கொண்டு தலைவன், தன் கையினால் வில்லின் இருபுறமும் இறுகக்

கட்டினான் என இப்பாடல் கூறுகிறது. இடையில் கட்டுவதற்கான மெல்லிய உறுதியான கயிற்றை இடைஞாண் என்றழைத்துள்ளனர். சிறுவர் இடையிலும் காலிலும் ஒலி எழுப்பும் கிண்கிணியை ஞாண் கொண்டு அணிந்திருந்தனர் எனக் "கிண்கிணி ஆர்ப்போவாஅடி" (குறுந். 148).

நுண்கயிறு

கட்டடக்கலை தொழில்நுட்பத்திலும் கயிறு பயன்படுத்தப்பட்டுள்ளது. அரசியின் அரண்மனையைக் கட்டும் கட்டடக் கலை நுணுக்கம் அறிந்த தச்சர்கள், மிக நுட்பமாக நூல் பிடித்துப் பார்த்து அளவினைக் குறித்துக் கட்டடம் கட்டியுள்ளனர். இதை நெடு நல்வாடை கூறுகிறது. "நூல்அறி புலவர் நுண்ணிதின் கயிறுஇட்டு...பெரும் பெயர் மன்னர்க்கு ஒப்ப மனை வகுத்து" (நெடுநல் : 76-78).

பட்டு

பருத்தி நூலிலிருந்து பல்வேறு தொழிலுக்குரிய கயிற்றையும், ஆடையையும் உருவாக்கிய தமிழர்கள் பட்டை மிகக் குறைவான அளவிலேயே பயன்படுத்தியுள்ளனர். கலித்தொகைப் பாடல் 'உலண்டு' எனப் பட்டுப் பூச்சியைக் குறிக்கிறது. உலண்டு என்ற பட்டுப்பூச்சியின் நிறத்தை ஒத்த ஏறு என்னும் காளை மாட்டின் கண்களுக்கு அஞ்சாமல், முல்லை நில இளைஞர்கள் பாய்ந்தனர் என்கிறது இப்பாடல். "உலவை" (கலி. 11 : 10).

மேற்பாட்டு "உலண்டின் திறன் ஒக்கும்" (கலி. 101 : 15). உலவை என்பது மரக்கொம்பு. இதில் கூடு கட்டுவதால், இப்புழுவிற்கு உலண்டு எனப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

உலண்டு எனும் புழு தன்மேலே கட்டிய கூட்டின் திறன் போலக் காளையின் கண்கள் இருந்ததாக இப்பாடல் கூறுவதால், இப்புழுவைப் பட்டுப்புழு எனக் கருதலாம். பட்டுப் பூச்சியிலிருந்து பட்டு எடுக்கும் முறை குறித்து வேறு குறிப்புகளில்லை. 'நூலாக் கலிங்கம்' என்று ஓர் ஆடை குறிப்பிடப்படுகிறது. கதிர் கருவியால் நூற்காத நூலிருந்து உருவாக்கப்பட்ட ஆடையை 'நூலாக்கலிங்கம்' என அழைத்திருக்கலாம்.பருத்தி இழையானது கதிர் கருவியால் நூலாக்கப்படும். ஆனால் பட்டுக் கூட்டிலிருந்து நூலை மிகப் பாதுகாப்பாக எடுக்க வேண்டும். மிக மெல்லிய ஒளிவிடும் பட்டு நூல் கருவி கொண்டு எடுப்பது எளிதல்ல. அதைக் கையாலே பழந்தமிழர் எடுத்திருக்க வேண்டும். எனவே தான் 'பட்டு ஆடையை' நூலாக் கலிங்கம் என அழைத்துள்ளனர். இக்கலிங்க ஆடை, பகன்றை போன்ற வெள்ளிய நாரால் வெள்ளிய நிறத்தினால் ஆனது எனக் "கழுவுறு கலிங்கம் கடுப்ப சூடி" (ப.ப. 76 : 13) என மன்னன் அணிந்த பட்டாடையைப் பதிற்றுப்பத்து கூறுகிறது.

"பொலம்புரி ஆடை" (பரிபாடல். 3 : 88), "பொன்னின் தோன்றிய புனை" (பரிபாடல். 4 : 59)போன்ற பரிபாடல் வரிகள் திருமால் பொன்னைப் போல் மின்னுகின்ற ஆடை அணிந்திருந்ததைச் சுட்டுகின்றன. பருத்தி ஆடை மின்னுவதில்லை. பட்டாடையே மின்னக்கூடியது. எனவே, 'மின்னுகின்ற ஆடை' என்பது பட்டாடையைக் குறிக்கிறது.

பட்டுப்பூச்சி மருத மரத்தின் இலைகளை உண்ணக்கூடியது. இம்மருதமரம் இந்தியாவிலும் நேபாளத்திலும் மிக அதிகமாகக் காணப்படுகிறது. இம்மரத்தைப் பற்றிய ஏராளமான தகவல்கள் சங்க இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

"செம்மருது" (பொருந.189), "செவ்வி மருதின் செம்மல்" (குறுந். 50) முதலான குறிப்புகள் மருத மரத்தைப் பற்றிய பல தகவல்களைத் தருகின்றன. நீர்க்கரையோரங்களில் செழித்து வளரும் இம்மரத்தின் இலைகளைப் பட்டுப் பூச்சிகள் உணவாக உட்கொள்ளக் கூடியவை என்பதால், பழந்தமிழகத்தில் பட்டுப் பூச்சிகள் கட்டும் கூட்டிலிருந்து நூலெடுத்துப் பழந்தமிழர் பட்டாடையைத் தயாரித்துள்ளனர்.

பருத்தி ஆடைகளைக் கஞ்சியில் போட்டுத் தோய்த்த பின்னரே உடுத்தமுடியும். ஆனால், பட்டு ஆடைகளைக் கஞ்சியில் போட்டுத் தோய்க்கத் தேவையில்லை. எனவே பட்டாடையைக் "கோபத்தன்ன தோயாப் பூங்கில்" (திருமுருகு. 15) என்று திருமுருகாற்றுப்படை கூறுகிறது. பட்டாடையிலும் சாயம் தோய்த்து அணிந்துள்ளனர். சிவந்த சாயம் தோய்த்த பட்டாடையை முருகன் அணிந்திருந்த செய்தியை இப்பாடல் கூறுகிறது. "கதிர்விடு நுண் பூண்" (புறம்.88 : 4) சூரியன் போல் மின்னுகின்ற நுண்ணிய நூல் என்பது இதன் பொருள்.

சீனா 'பட்டின் தாயகம்' என அழைக்கப்படுகிறது. கி.மு. 3000 ஆண்டுகளிலிருந்தே சீனா பட்டு ஆடைகளை உற்பத்தி செய்து வருவதாக வரலாறு கூறுகிறது. அவர்களுக்கு இணையாகத் தமிழரும் பட்டுப்பூச்சிக் கூட்டைச் சூடான நீரில் போட்டு, அக்கூடு நூலாக மாற்றம் பெறுவதை அறிந்து, அதிலிருந்து நூல் எடுத்துப் பட்டாடை நெய்து அணிந்துள்ளனர். வாணிகமும் செய்துள்ளனர். திருமணக் காலங்களில் திருமண உடையாகப் பெண்கள் பட்டாடையை உடுத்தியிருந்தனர் என, "காதல் கொள் வதுவை நாள் கலிங்குத்துள் ஒடுங்கி" (கலி. 69 : 3) கலித்தொகை கூறுகிறது.

தொகுப்புரை

சங்ககாலத் தமிழரின் காலம் கி.மு.3 ஆம் நூற்றாண்டு எனத் தொல்லியல், நாணயவியல், கல்வெட்டியல் அறிஞர்கள் கூறுகின்றனர். அக்காலக் கட்டத்திலேயே பருத்தியிலிருந்து நூல் எடுத்து, கயிறு திரித்து, ஆடை நெய்து பல தொழில்களில் தமிழர்கள் மேம்பட்டு விளக்கியுள்ளனர். கயிற்றினைப் பயன்படுத்திப் பல தொழில் நுட்பங்களைக் கண்டறிந்துள்ளனர். கப்பல் கட்டும் தொழில், கட்டடக்கலைத் தொழில், மீன்பிடி தொழில், உள்ளூர்த் தொழில்கள் போன்றவற்றிற்காகக் கயிற்றைப் பயன்படுத்தித் தொழில் நுட்பத்தில் மேம்பட்டுள்ளனர். பருத்தி இழையிலிருந்து நூலெடுத்துக் கயிறு திரித்தது போல, பட்டு நூலிலிருந்து கயிற்றை உருவாக்காமல் ஆடை ஒன்றையே உருவாக்கியுள்ளனர்.

தமிழ்நாட்டிலிருந்து முத்துமாலைகளும், கயிறு வகைகளும், ஆடை வகைகளும் பிற நாட்டிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. சீனர்கள் பட்டாடையைப் பயன்படுத்திய அதே காலக் கட்டத்திலேயே, பட்டுப் புழுவிலிருந்து நூல் எடுத்துத்தமிழர்களும் பட்டாடையை உடுத்தி மகிழ்ந்துள்ளனர்.

துணை நூல்கள்

1. ஆலிஸ், அ.,(உ.ஆ)- பதிற்றுப்பத்து,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.
2. இளவரசு, சோம.(உ.ஆ)-நன்னூல்,மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
3. சரவணசதாசிவம், (உ.ஆ)- செங்குந்தர் பிரபந்தத் திரட்டு, காஞ்சிபுரம்-3.
4. சுப்பிரமணியன், பெ., (உ.ஆ) - பரிபாடல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை
5. செயபால்.இரா.,(உ.ஆ)- அகநானூறு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.
6. தட்சிணாமூர்த்தி, அ.,(உ.ஆ)-ஐங்குறுநூறு,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
7. தமிழண்ணல், (உ.ஆ)- தொல்காப்பியம்,மீனாட்சி புத்தக நிலையம், மதுரை - 1.
8. நாகராசன்,வி.,(உ.ஆ)- குறுந்தொகை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்,சென்னை.
9. பாலசுப்பிரமணியன், கு.வெ., (உ.ஆ)- புறநானூறு, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்.
10. பாலசுப்பிரமணியன்.கு.வெ.,(உ.ஆ)-நற்றிணை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்
11. மோகன், இரா., (உ.ஆ)-பதிற்றுப்பத்து, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.
12. விசுவநாதன்,அ.,(உ.ஆ)- கலித்தொகை,நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.

இணையத் தளங்கள்

1. www.ars.grin.gov
2. www.wikipedia.com
3. http://www.projectmadurai.org

சங்க இலக்கியம், மலாய் பழைய இலக்கியப் பழமரபுக்கதைகளும் தொன்மையும்: ஓர் ஒப்பீடு

முனைவர் அருள்செல்வன் ராஜு
விரிவுரையாளர்
மலேயா சபா பல்கலைக்கழகம்
மலேசியா

1.0 முன்னுரை

சங்க இலக்கியம் தமிழ் இலக்கியங்களின் பொற்காலமாகும். இது தமிழ்ச் சமுதாயத்தின் வரலாற்றுப் பெட்டகமாகவும், அதன் பல்வேறு கூறுகளையும் ஆவணப்படுத்திய தொகுப்பாகவும் விளங்குகின்றது.தனித்தனிப் பாடல்களின் தொகுப்பான சங்க இலக்கியத்தில் வெளிப்புறத் தாக்கங்கள் எதுவுமில்லை.

மலாய் இலக்கியத்தின் (தொடக்கக் காலம் இவ்வட்டாரம் முழுமையையும் உள்ளடக்கும்) வரலாறோ ஏறக்குறைய 13 ஆம் நூற்றாண்டில் ஆரம்பிக்கின்றது. இதன் ஆரம்பக்கால இலக்கியங்கள் பெரும்பாலும் அரண்மனைச் சமுதாயத்தை மையமாகக் கொண்டு தொடங்கியதாகும். அவை 'அரண்மனை இலக்கியம்' (sastera istana) என்று வழங்கப்பட்டன.இவை இக்காயாத் (Hikayat) எனப் பெயரிடப்பட்டன. மற்றொரு வகை இலக்கியமோ 'பொதுமக்கள் இலக்கியம்' (sastera rakyat).இது வாய்மொழி இலக்கியமாக வளர்ந்தது.

2.0 ஆய்வின் வரம்பு

இக்கட்டுரையின் நோக்கம் சங்க இலக்கியத்திலும் மலாய் பழைய இலக்கியத்திலும் காணப்படும் பழமரபுக்கதைகளையும், தொன்மைகளையும் ஒப்பிடுவதாகும். இதில் மலாய் இலக்கியத்தின் செஜாரா மெலாயு (SM), இக்காயாத் ராஜா பாசாய் (HRP), இக்காயாத் மெரொங் மஹாவங்கசா (HMM)என்ற மூன்று நூல்கள் மட்டுமேஆய்வுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

3.0 வரையறை

ஆங்கிலத்தில் லெஜண்ட் (Legend), மிட் (Myth) என வழங்கப்படுவன தமிழில் முறையே பழமரபுக்கதைகள், தொன்மங்கள் எனச் சுட்டப்படுகின்றன. பழமரபுக்கதைகள் (லெஜண்ட்) என்பதற்கு விளக்கம் கூறும் ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி, 'பெரும்பாலோரால் வரலாறு சார்ந்ததாகக் கருதப்பட்டு வருவதும் பண்டைக் காலம் தொட்டு மரபாகக் காலந்தோறும் கையாளப்பட்டு வரப்படுவதுமான,நம்பகத்தன்மை இல்லாததும் வரலாறு சாராததுமான கதை' என்கிறது. தொன்மம் என்பதற்கோ 'இயற்கை அல்லது வரலாற்றுக்கூறு

தொடர்பான செய்திகளை உட்கொண்டதும் இயற்கையிறந்த நிகழ்ச்சி, செயல், மனிதர் பற்றியதுமான பொய்யான புனைந்துரை' (Oxford English Dictionary) என்று விளக்கம் தருகிறது. கம்பெல் என்ற அறிஞர்

> 'தொன்மங்கள் பொய்மைகளின் புகலிடங்கள் அல்ல; உண்மைகளின் இருப்பிடம்; கருத்துகளின் வாழ்விடம்; எண்ணங்களின் வரலாற்றுப் பெட்டகம்; நினைவுகளின் சுழிமுனை'

என்கிறார். எண்வகை வனப்புகளை விளக்குமிடத்தில் தொல்காப்பியர்,

> *'தொன்மைதானே உரையொடு புணர்ந்த பழமை மேற்றே'*

என்கிறார்.

நாட்டார் வழக்காறுகளை வகைப்படுத்தி ஆராய்ந்த தே.லூர்து, இவ்விரண்டைப் பற்றிக் கருத்துரைக்கையில்

> 'தெய்வங்களோடு தொடர்புடையன தொன்மங்கள் (புராணக் கதைகள்); போர்கள், வெற்றிகள், பழங்கால வீரர்கள், அரசர்கள் முதலியாரின் வீரச்செயல்கள், ஓர் அரச பரம்பரை எவ்வாறு உருவாயிற்று என்பவை பற்றியன பழமரபுக்கதைகள்' (நாட்டார் வழக்காற்றியல், *1986: 255-256*)

என்று கூறுகிறார்.

இக்கட்டுரையில் சங்க இலக்கியத்தில் காணப்படும் பல்வகையான கதைக் குறிப்புகளிலுள்ள மன்னர்களின் வீரம், கொடை தொடர்பான பழங்கதைகளும், மலாய் பழைய இலக்கியத்தில் உள்ள மன்னர்கள் தொடர்பான பழங்கதைகளும் ஒப்பீடு செய்யப்படுகின்றன.

4.0 பழமரபுக்கதைகளின் ஒப்பீடு

இவ்விரு இலக்கியங்களிலும் பழமரபுக்கதைகளில் முதன்மை இடத்தைப் பெறுபவர்கள் அரசர்களும் மன்னர்களும் ஆவர். ஆனால், இரண்டுக்கும் மிகுந்த வேறுபாடுண்டு. அதோடு, மலாய் இலக்கியத்தில் பழமரபுக்கதைகள் பெரும்பாலும் தொன்மையுடன் இணைந்தே இருப்பதைக் காணலாம்.

4.1 கொடைச் சிறப்புகள்

தமிழிலக்கியத்தில் அரசர்கள், குறுநில மன்னர்கள், வள்ளல்கள் முதலியோரைச் சார்ந்து இருந்த தமிழ்ப் புலவர்கள், அவர்களைப் பல வகைகளில் பாடியுள்ளனர். அவற்றுள் அவர்களின் ஆட்சிச் சிறப்பும் கொடை உள்ளமும் அதிகம் பாடப்பட்டுள்ளன. உதாரணமாகக் கடையெழு வள்ளல்களின் கொடை மாண்புகள் வெகுவாகப் பாடப்பட்டுள்ளன.

இவர்களின் கொடைச் செயல்களைப் பாடிய புலவர்கள் பல பாடல்களில் இயல்பு மீறிய நிலையில் புகழ்ந்திருப்பதைக் காணலாம். எடுத்துக்காட்டாகப் பாரியைக் கபிலர் மழையுடன் (புறம். 107:3-4) ஒப்பிட்டுப் பாடியிருப்பதைக் காட்டலாம்.

மற்றொரு பாடலில்,

'முந்நூறு ஊர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூறு ஊரும் பரிசிலர் பெற்றனர்' (புறம். 110:3-4)

எனப் பாரி தன் நாட்டின் ஊர்கள் அனைத்தையும் பரிசிலருக்குக் கொடையாக அளித்துவிட்டான் என்று மிகைப்படப் பாடியிருப்பதைச் சங்க இலக்கியம் சுட்டுகின்றது.

இவர்களின் கொடைச் செயல் மனிதர்களுடன் நின்றுவிடவில்லை. மாறாக, இவ்வாறு பாடப்படும் மிகைப்படுத்தப்பட்ட செயல்களின் உயரிய நிலையை விலங்குகளுக்கு அவர்கள் உதவியதில் காணலாம். உதாரணமாகப் பாரியைப் பற்றியும் பேகனைப் பற்றியும் பாடிய பாடல்களைச் சுட்டலாம். பாரியைப் பற்றிச் சுட்டவருமிடத்துப் புறநானூற்றில் கபிலர் முல்லைக்குத் தேரை அளித்தைக் குறிப்பிடுகிறார் (புறம். 201:2-4). இந்தச் செய்தியை,

'சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய
பிறங்கு வெள்அருவி வீழும் சாரல்
பறம்பின் கோமான் பாரியும்' (சிறுபாண். 88-90)

என்ற சிறுபாணாற்றுப்படை வரிகளிலும் காணலாம்.

இதற்கிடையில், பேகனின் இத்தகைய கொடை உள்ளத்தை மயிலுக்குப் போர்வை கொடுத்த செயலின் மூலம் பரணர் (புறம். 141:10-12; 145:1-3) சுட்டுகின்றார். இதனைச் சிறுபாணாற்றுப்படை,

'வானம் வாய்த்த வளமலைக் கவாஅன்
கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய
அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்
பெருங்கல் நாடன் பேகனும்' (சிறுபாண். 84-87)

என்கிறது.

இவ்விரண்டு சூழல்களும் இருவரும் கேளாதவர்களுக்கும் கொடை அளிக்கும் இயல்பினர் என்பதைச் சுட்டும் வகையில் பாடப்பட்டதாகும். இவை மனிதர்களுக்கு மட்டுமின்றி விலங்குகளுக்கும் உதவும் இயல்பினர் என்பதைக் காட்டும் வகையில் அமைந்துள்ளன. இவை மன்னர்களின் கொடைப் பண்பை மிகைப்படுத்திப் பாராட்டிய ஒன்றாகும். இவர்களைத் தவிர, காரி (சிறுபாண். 92-95; புறம்.122:9-10), ஆய் (புறம்.128:5), அதிகமான் (சிறுபாண்.96-99;புறம்.91) போன்றோரும் பாடப்பட்டுள்ளனர்.

இவர்களுள் அதியமான் நெடுமானஞ்சி தனித்து நிற்கிறான். இவன் கடையெழு வள்ளல்கள் வரிசையில் வருபவனல்ல. இவனைப் பற்றிய செய்திகள் எல்லாம் ஔவையோடு இணைந்தே குறிப்பிடப்படுகின்றன. அவற்றுள் கிடைப்பதற்கு அரிய நெல்லிக்கனியை ஔவைக்குத் தந்தது சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. மரணத்தையும் நீக்கவல்ல சிறப்பினைப் பெற்ற அரிய கனியைப் பெற்றும், அதைத் தான் உண்ணாதுஔவைக்குத் தருகிறான். இதன்வழி அவனது கொடை மாண்பு உயர்த்திக் கூறப்படுகிறது.

இதனை,

'பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட
சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா
தாத னின்னகத் தடக்கிச்
சாத னீங்க வெமக்கீத் தனையே' *(புறம். 91: 8-11)*

'கமழ்பூஞ் சாரற் கவினிய நெல்லி
யமிழ்து விளை தீங்கனி யெளவைக் கீந்த
வுரவுச் சினங் கனலு மொளிதிகழ் நெடுவே
லரவக் கடற் றானை யதிகன்' *(சிறுபாண்.100-103)*

பாடல் வரிகள் சுட்டி நிற்கின்றன.

ஆனால், இத்தகைய இயல்பினைக் கொண்ட பாடல்கள் எதுவும் மலாய் பழைய இலக்கியத்தில் இல்லை. அவ்விலக்கியங்கள் அரசர்களைப் பாடிய போதும், எதுவும் கொடைச் சிறப்பைச் சுட்டவில்லை.

4.2 அரசர்தம் பாரம்பரியச் சிறப்பு

மலாய் அரசர் பரம்பரையின் பாரம்பரியச் சிறப்பு தொடர்பான பழமரபுக்கதைகள் பெரும்பாலும் அனைத்துமலாய் இலக்கியத்திலும் இடம் பெற்றுள்ளன. இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொண்ட மூன்று நூல்களில் அவை எவ்வாறு அம்மைந்துள்ளன என்பதைக் காண்போம். இதில் சில தொன்மங்களும் இணைந்துள்ளன.

செஜாரா மெலாயு (SM) என்பது மலாய் மன்னர்களின் சரித்திரத்தை, குறிப்பாக மலாக்கா மன்னர்களைப் பற்றிக் குறிக்கின்றது. இதனைப் பலர் தொகுத்துள்ளனர். இவ்வாய்வுக்கு shellabear தொகுப்பும், Brown இன் மொழிபெயர்ப்பும் பயன்படுத்தப்பட்டன.

செஜாரா மெலாயு தம் மன்னர்களைக் குறிக்கும்போது அவர்கள் அலெக்ஸ்சாண்டர் (Alexander the Great) பரம்பரையைச் சார்ந்தவர்கள் என்று சுட்டுகின்றது (அத்தி. 1 & 2). இது அரச புதல்வர்களின் திருமணத்தின் மூலம் ஏற்பட்டதாகச் சொல்கிறது. உதாரணமாக, அலெக்ஸ்சாண்டர் பரம்பரையைச் சேர்ந்த ராஜா சூரன் (Raja Suran, SM) அல்லது ராஜாசூலன் (Raja Chulan, Brown) சீன நாட்டின் மேல் படையெடுக்கும் எண்ணத்தை மாற்றிக் கொண்டபின் (SM, *1981:12*), கடலுக்கு அடியிலுள்ள டிக்கா நாட்டிற்குச் செல்கிறான். அங்கு அந்நாட்டின் இளவரசி மத்தாபுள் பஹரியை மணம் புரிகிறான். அவர்களுக்கு நீலா உத்தமா (சங் சபூர்ப) (198:18), கிரிஷ்யணா பண்டிதா, நீலா பாலாவான் என மூன்று புதல்வர்கள் பிறக்கின்றனர் (Brown, *1970:11-12*). இவர்களுள் நீலா உத்தாமா பலெம்பாங் இளவரசி வான் செண்டாரியை மணக்கிறான். இவரே பலெம்பாங், தெமாசிக் (சிங்கையின் பழைய பெயர்) மன்னராக இருந்தவர். இவரின் பரம்பரையே மலாய் மன்னர்களாக விளங்குகின்றனர்.

இது சோழ, பல்லவ மன்னர்கள் பூமிக்கடியில் உள்ள இளவரசிகளை மணம் புரிந்தது தொடர்பான பழமரபுக்கதைகளுடன் தொடர்புடையதாக இருப்பதைக்

காணலாம். உதாரணமாக, சோழ மன்னன் பூமிக்கடியில் உள்ள இளவரசியை மணந்ததாகவும், பெரும்பாணாற்றுப்படையின் பாட்டுடைத் தலைவனான இளந்திரையன் அப்பரம்பரையைச் சேர்ந்தவன் என்றும் (பெரும். 37) இவ்வரிகளை விளக்கும் நச்சினார்க்கினியார் கூறுகிறார் (பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியார் உரையும், 1956:213-214). இதைத் தவிர, முதலாம் குலோத்துங்கனைக் குறிப்பிடுகையில் கலிங்கத்துப்பரணியும் (195) இது போன்ற கதையைச் சுட்டுகின்றது. இதைப் பற்றிக் கருத்துரைக்கும் சி.சிங்காரவேலு, 'செஜாரா மெலாயு ஆசிரியர் சோழர்களின் பாரம்பரியப் பழமரபுக்கதைகளை அறிந்துள்ளார்' (சிங்காரவேலு, 1987:200) என்கிறார்.

இதற்கிடையில் தம் அரசர்களின் பாரம்பரியத்தைக் கூறுமிடத்துப் பிஸிறி, அவர்களை மூங்கில் பரம்பரை இளவரசிக்கும் யானை வளர்த்த அரசனுக்கும் தொடர்புபடுத்துகிறது. தன் பரிவாரங்களுடன் காட்டுக்குச் செல்லும் இராஜா முகமது அங்கு மூங்கில் குருத்துகளிடையே இருந்து வெளிப்படும் சிறுமியைக் காண்கிறார். அச்சிறுமியை எடுத்து வளர்க்கிறார் (Rusell Jones, 1987:1). இதற்கிடையில் வேட்டைக்குச் செல்லும் அவரின் சகோதரர் இராஜா அமாட் யானைத் தலையில் அமர்ந்து வரும் சிறுவனை எடுத்து வளர்க்கிறார் (Rusell Jones, 1987:26). பெரியவர்களாகும் இவ்விருவரும் மணம் புரிய, அவர்களின் புதல்வர்களான மேரா சிலு, மேரா ஹசும் பாசாய் மன்னர்களின் பரம்பரை ஆகின்றனர் (SM,1981:70-71;Rusell Jones, 1987:1).

இக்காயாத் மெரொங் மஹாவங்கசா (HMM) என்ற புத்தகம் கெடா மாநிலத்தின் வரலாற்றைக் கூறும் படைப்பாகும். இதில் கெடா மாநில மன்னர்கள் உரோம் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்று சுட்டப்படுகின்றது. உரோமின் இராஜா மெரொங் மஹாவங்கசா சீன நாட்டு இளவரசியைத் தன் புதல்வனுக்கு மணமுடிக்க விரும்புகிறார். இதற்குத் தடையாகக் கருடன் என்ற பறவை வருகிறது. அஃது இளவரசியைக் கடத்திச் சிறைப்படுத்துகிறது. இருப்பினும், இறுதியில் கருடன் தோற்கத் திருமணம் திட்டமிட்டப்படி நடக்கிறது. இதன் பிறகு, இராஜா மெரொங் மஹாவங்கசா தம் புதல்வன் இராஜா மெரொங் மஹாபுடிசாட்டை லங்காசுக்காவின் (Langkasuka) மன்னராக அரியணையில் அமர்த்திவிட்டு, உரோம் திரும்புகிறார். இவர் பிறகு தம் நாட்டின் பெயரைக் கெடா என்று மாற்றுகிறார். இவரின் பரம்பரையே இம்மாநிலத்தைத் தொடர்ந்து ஆட்சி செய்கிறது (பிவிவி, 1970:1-5).

4.3 நாடு (அரசு) அமைதல், பெயரிடுதல்

மலாய் இலக்கியத்தில் அதிகம் காணும் பிற பழமரபுக்கதைகள் அரசு அமைத்தல், நாட்டுக்குப் பெயரிடுதல் கூறுகளுடன் தொடர்புடையதாகும். உதாரணமாக, மலாக்கா கண்டு பிடிப்பிலும் பெயரிடுதலிலும் இதைக் காணலாம். தெமாசிக்கிலிருந்து விரட்டப்பட்ட பரமேஸ்வரா (இஸ்கண்டார் ஷா), பெர்தாம் நதிக்கரையில் ஒரு மரத்தடியில் ஓய்வு எடுக்கிறார். அப்பொழுது தன்னை விரட்டிய அரசரின் நாயை ஒரு மான் எதிர்த்து வெற்றிக் கொள்கிறது. இது அரசரின் மனத்தைக் கவர, அவ்விடத்தில் தம் ஆட்சியை நிறுவத்தாம் ஓய்வெடுத்த மலாக்கா என்ற மரத்தின் பெயரையே சூட்டுகின்றார் (செஜாரா மெலாயு, 1981:53-54). இவண்

பரமேஸ்வரா என்ற மன்னரின் பெயரைச் சிவனுடனும், 'மலாக்கா' என்ற சொல் 'ஆமலக்க' (Amalaka) என்ற சமஸ்கிருதச் சொல்லிருந்து பிறந்தது என்றும் சி. சிங்காரவேலு *(1989:28)* கூறுகிறார்.

இதற்கிடையில் புயலால் தாக்கப்பட்டு ஒரு தீவில் கரை ஒதுங்கி ஓய்வெடுத்துக் கொண்டிருந்த நீல உத்தமா முன் பலம் பொருந்திய விலங்கான சிங்கம் தோன்றுகின்றது.அதனால் ஈர்க்கப்பட்ட அவர், அவ்விலங்கின் பெயரை அடிப்படையாக அத்தீவுக்குச் சிங்கப்பூர் எனப் பெயரிடுகிறார் (SM, *1970: 19-20)*.

தொடர்ந்து செமுடெரா (Semudera - பெரிய எறும்பு) என்ற இடத்தின் கதை மேரா சிலாவ் என்ற மன்னனுடன் தொடர்புபடுத்தப்படுகிறது.இங்கு இம்மன்னன் பூனையைப் போல் பெரிதான எறும்பைக் காண்கிறான். அவன் அதைப் பிடித்துச் சாப்பிடுகிறான்.தொடர்ந்து அவ்விடத்திற்குச் செமுடெரா என்று பெயரிடுகிறான் (HRP, *1987:12-13; 31-32)*.இது விசித்திரமான ஒன்று மட்டுமல்ல; மாறாக வளர்ச்சியையும் கொண்டு வரும் என்றும் மலாய் மக்கள் நம்பிக்கை கொண்டனர்.தொடர்ந்து, பாசாய் (Pasai) நாட்டைப் பற்றியது. இங்கு முற்றிலும் வித்தியாசமான வெண்சருகு மானைக் காண்கிறோம். இம்மான் மேரா சிலாவின் பாசாய் என்ற நாயைச் சாகடிக்கிறது. இதைக் கண்ணுற்ற மன்னன், அவ்விடத்திற்கு நாயின் பெயரையே சூட்டி, தன் புதல்வன் சுல்தான் மலிக்குள் தாஷிரிடம் ஒப்படைக்கிறார் (HRP,*1987:22-23)*. இச்சமூகத்தில் வெண்சருகுமான் தூய்மை, வளம் போன்றவற்றிற்கு அடையாளமாக, மான் நாயை வீழ்த்தியதை வீரத்திற்கும் தொடர்புபடுத்துகின்றனர். அவ்விடத்தில் அரசு அமைத்தல் நலம் என்ற நம்பிக்கையில் செயல்படுகின்றனர்.இதனை செஜாரா மெலாயு, இக்காயாத் இராஜா பாசாய் என்ற இரு படைப்புகளிலும் காண்கிறோம்.

உரோமிலிருந்து சீனாவிற்குச் செல்லும் இராஜா மெரொங் மஹாவங்சா படையினர் கருடனின் தாக்குதலுக்கு ஆளாக, பயணம் தடையாகிறது.இதைத் தொடர்ந்து, உரோம் அரச பரம்பரையைச் சேர்ந்த ராஜா மெரொங் மஹாவங்கசா லங்காசுக்கா என்ற இடத்தைத் திறக்கிறார்.இவ்விடம் பிறகு கெடா என்று இவரின் புதல்வரால் பெயரிடப்படுகிறது (HMM, Siti Hawa, *1991:32-36)*. இவ்விடத்தைத் தெரிவு செய்வதிலும் பெயரிடுவதிலும் பிற மலாய் இலக்கியங்களிலுள்ள இயல்பையே காண்கிறோம் (HMM,*1970:13-14)*.

4.4 மதம் தழுவுதல்

மலாய் இலக்கியத்திலுள்ள மற்றொரு கூறு அரசர்கள் இஸ்லாம் மதத்தைத் தழுவதுடன் தொடர்புடைய பழமரபுக்கதைகளாகும். இவர்களுள் சிலர் தொடக்கத்தில் இந்து மதத்தைச் சேர்ந்தவர்களாவர். உதாரணமாக, மலாக்கா மன்னன் பரமேஸ்வரா. இஸ்லாமிய வருகைக்குப் பிறகு இவர்கள் மதம் மாறுகின்றனர்.இங்கு அவர்கள் மதம் மாறிய விதம் மிகைப்படுத்தப்படுகிறது. இதன் மூலம் தங்களின் மன்னர் மற்றவர்களை விட அதி சிறப்புப் பெற்றவர் என்பதை உணர்த்த முயற்சிக்கின்றனர்.

மலாக்கா மன்னன் சுல்தான் முகமாட் ஷாவின் கனவில் தோன்றும் நபி முகமது அவரை மதமாற்றியதாகச் சுட்டப்படுகின்றது. அவருக்கு நபியே மதம் தொடர்பான அனைத்தும் கற்பித்து, விருத்தசேதனம் செய்து பெயரையும் மாற்றுகிறார் (SM, *1970:43*). மறுநாள் காலையில் எழும் மன்னன் தம்கனவு நிஜமானதை உணர்கிறார். இதற்கிடையில் பாசாய் மன்னரின் மதமாற்றத்திலும் கனவு சுட்டப்படுகின்றது. இங்குச் செமூடாரா மன்னன் ராஜா சிலாவ் கனவில் நபியைச் சந்திக்கிறார். அப்போது நபி தம் உமிழ் நீரை மன்னரின் வாயில் துப்புகிறார். இதன் காரணமாக அவர் குர்ஹானை யாரிடமும் கற்காமலேயே சிறப்பாக ஓதுகிறார் (HRP, *1987:14-15*). இதைத் தொடர்ந்து இவர் சுல்தான் மலிக்குள் சாலே என்று அழைக்கப்படுகிறார். கெடாவில் இராஜா பரா ஓங் மஹாவங்கசா முதலில் இஸ்லாம் மதத்தைத் தழுவியதாகவும், அதற்குப் பஹாகடாட்டில் (Baghdad) இருந்து வந்த ஷெக் அப்துல்லா காரணம் என்றும் குறிப்பிடப்படுகிறது. இவரே இராஜாவின் பெயரைச் சுல்தான் முஸாபர் ஷா என்று மாற்றுகிறார் (HMM, *1970:110-113*).

இவ்வகையான தொன்மங்கள் இணைந்த பழமரபுக்கதைகள் சங்க இலக்கியத்தில் இல்லை. இங்குத் தமிழ் மன்னர்கள் அனைவரும் இந்துக்கள் என்ற நிலையில், ஐந்நிலங்களுக்கேற்பக் கடவுள் வழிபாடு அமைவதைக் காண்கிறோம்.

4.5 போர்

சங்கப் பாடல்கள் அரசர்களின் கொடையை விடுத்து, போரில் அவர்கள் ஈடுபட்டதையும் பாடுகின்றது. இக்காலக்கட்டத்தில் பல போர்கள் நிகழ்ந்துள்ளன. அவற்றுள் போரில் பெருஞ்சோறு வழங்குதலும் இமயத்தில் இலச்சினையைப் பொறித்தலும் குறிப்பிடத்தக்கன.

பாரதப்போரில் உதியஞ்சேரலாதன் பெருஞ்சோறு வழங்கியதாக முரஞ்சியூர் முடிநாகராயரும் (புறம். *2:13-16*) மாமூலனாரும் (அகம். *233:6-12*) பாடியிருக்கின்றனர். இவர்களுள் முரஞ்சியூர் முடிநாகராயர் இம்மன்னன் பாரதப் போரில் உணவு வழங்கியதாகக் குறிப்பிட, மாமூலனாரோ முதியோர்க்குரிய அறக்கடமை செய்த காலத்தே அவன் பெருஞ்சோறு வழங்கியதாகப் பாடியுள்ளார். இதற்கிடையில் அகநானூறு *168* ஆவது பாடல் வறியவர்க்கு உணவளித்தாகச் சுட்டுகின்றது. ஆக, மூன்று பாடல்களும் பெருஞ்சோறு வழங்கியதை உண்மை என்கிறது.ஆனால், இதைப் பாரதப் போருடன் தொடர்படுத்திப் பாடியிருப்பது அவர்தம் வீர மாண்புகளைப் மிகைப்படப் பாராட்டப்பட்ட ஒன்றே எனலாம். தமிழ் மண்ணின் மூவேந்தர்களும் தங்களுக்கிடையே போரிட்டுக் கொண்ட நிலையில் எல்லை தாண்டிச் சென்றிருப்பாரா என்பதைச் சிந்திக்க வேண்டும்.

போருடன் தொடர்புடைய மற்றொரு குறிப்பு இமயத்தில் இலச்சினையைப் பொறித்தல் ஆகும். சங்க இலக்கியத்தில் இமயம் என்ற சொல் பல பாடல்களில் (புறம். *2:24; 34:21; 58:29-32; 132:7-9; 166:33-34;* அகம். *127:3-7; 265:3; 396:1-19;* கலி.*104:1-4;* பதிற்று. *11:23-25; 43:6-11;* சிறுபாண். *48,49*) குறிப்பிடப்பட்டுள்ளது. இங்குச் சேரமன்னர்களும்(அகம்.*127:3-7;396:1-19;*

சிறுபாண்.48,49), சோழ, பாண்டியர்களும் இணைந்து (புறம்.58:29-32; கலி.104:1-4) இலச்சினையைப் பொறித்தாகப் புகழ்ந்திருப்பதைக் காணலாம். இவண் தங்கள் வெற்றியின் அறிகுறியாக அரச இலச்சினையை அந்நாட்டு மலைகளில் பொறித்தலை வழக்கமாகக் கொண்டிருந்ததாகத் தெரிகிறது. இதை மிகைப்படுத்தி, இமயத்தில் பொறித்ததாகச் சொல்லியிருப்பது புகழ்மரபு காரணமாக எழுந்த பழமரபுக்கதையே எனலாம். ஏனெனில், சங்க இலக்கியத்தில் இமயப் படையெடுப்புக்கான சான்றுகள் எதுவுமில்லை.

ஆனால், மலாய் இலக்கியத்திலோ மாறுபட்ட நிலையைக் காண்கிறோம். இங்குப் போரில் வெற்றி பெறப் பொய்கூறி ஏமாற்றுவதைக் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, சமூடாரா நாட்டைக் கைப்பெற்றக் கருதிய மலாக்கா மன்னன் தனது படையை அவி டிச்சு என்ற தளபதியின் கீழ் அனுப்புகிறார். அவர் தம் அறிவுக் கூர்மையினால் ஏமாற்றிச் சமூடாரா நாட்டு மன்னரைச் சிறைப்பிடிக்கிறார். மற்றொரு சூழலில் சயாம் நாட்டின் தாக்குதலைச் சாதுரியமாக முறியடித்த பெண்டாஹாரா படுக்கா ராஜாவைப் பற்றிய குறிப்பாகும் (SM, 1970:5-62).

கருத்துரை

தமிழிலக்கியத்தில் தொன்மை இயல்பைப் போரில் மன்னனை மிகைப்படுத்திக் கூறுமிடத்தில் காண்கிறோம். மலாய் இலக்கியத்தில் அது பழமரபுக்கதையுடன் ஒருங்கிணைந்து வருகிறது. உதாரணமாக இக்காயாத் மெரொங் மஹாவங்கசாவில், சீனாவிற்குச் செல்லும் உரோம் புரிவாரங்களைத் தாக்குவதாக வருகின்றது. அதைக் குறிக்குமிடத்தில்,

> 'போர்முடிந்து இராமரும் அனுமானும் லங்காபுரியிலிருந்து வெளியான பிறகு, அத்தீவு அமைதியாகிறது. அப்பொழுது அங்குக் கருடன் வருகிறது. இது இராமருடன் போரில் ஈடுபட்ட சக்தியுள்ள பறவை.' (HMM:21-25)

இங்கு இராமாயணத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது. தொடர்ந்து அது நபி அல்லா சுலைமானிடம் தோற்றதாகக் காட்டி, இஸ்லாம் மதம் சிறப்பிக்கப்படுகிறது.

மேற்கண்ட மலாய் இலக்கியத்தில் பழமரபுக்கதைகள் அனைத்திலும் ஒவ்வொரு மன்னரும் பாரம்பரியம், பிறப்பு, இஸ்லாம் மதத்தைத் தழுவுதல் முதலியவற்றில் ஒருவரைவிட மற்றொருவர் சிறப்புமிக்கவர் என்பதை நிரூபிக்க முயல்வதைக் காண முடிகிறது. உதாரணமாக மதம் மாறுதலில் நபியைக் கனவில் காண்பதைக் குறிப்பிடலாம். இதைத் தவிர, இக்கூறுகளில் தமிழ் இலக்கியத்தின் தாக்கங்களையும் காண முடிகிறது. இதற்கு வரலாற்று ரீதியில் இப்பகுதிக்கும் (மலேசியா, இந்தோனிசியா) இந்தியாவிற்கும் இடையிலிருந்த வணிகம், அரசியல் முதலியவற்றின் தொடர்பும் காரணம் எனலாம். இதற்கு ஆரம்பக்கால மன்னர்களின் பெயர்களில் தமிழ், சமஸ்கிருத சொற்கள் கலந்திருப்பதைச் சான்றாகக் குறிப்பிடலாம்.

6.0 முடிவுரை

இது இவ்விரு இலக்கியங்களுக்கும் இடையிலுள்ள கூறுகளை ஒப்பிடும் ஒரு முதல் முயற்சியாகும். சில கட்டுப்பாடுகள், வரம்புகள் காரணமாக, இதில் மலாய் இலக்கியத்தின் மூன்று படைப்புகளிலுள்ள சில கூறுகள் மட்டுமே ஆய்வு செய்யப் பட்டுள்ளன. பொதுவாகப் பார்க்கும் போது, தொடக்கக்கால வரலாற்றுப் பின்னணி காரணமாக இவற்றில் தமிழிலக்கியத்தின் தாக்கங்களையும் கூறுகளையும் அதிகம் காணமுடிகிறது.இதன் தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட வேண்டும்.

துணை நூல்கள்

செவ்விலக்கியக் கருவூலம் (சங்க இலக்கியம்) எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, சென்னை.

தே.லூர்து, 1986.நாட்டார் வழக்காற்றியல், பாரிவேள் பதிப்பகம், திருநெல்வேலி.

Pattupattu (Ten Tamil Idylls), 1985.Tamil University, Thanjavur.

Sejarah Melayu, 1981. Cetakan ke-6. Diusahakan oleh W.G.Shellabear, Kuala Lumpur: Penerbit Fajar Bakti.

Sejarah Melayu, 1970. An Annotated Translation by C.C.Brown, Kuala Lumpur: Oxford University Press.

Hikayat Raja Pasai, 1987. Russel Jones (ed), Kuala Lumpur: Penerbit Fajar Bakti.

Hikayat Merong Mahawangsa, 1970. Diselenggarakan oleh Siti Hawa Saleh, Kuala Lumpur: Singapura: University of Malaya Press.

S.Singaravelu, 1987. Tradisi India dan Sastera Melayu, Sastera Melayu dan Tradisi Kosmopolitan, Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka & Kementerian Pendidikan Malaysia.

தமிழகத்தில் ஒலி ஒளி ஆவணப்படுத்தும் முயற்சிகள்

முனைவர் மு.இளங்கோவன்
உதவிப் பேராசிரியர்
பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரி
புதுச்சேரி, இந்தியா

பண்பட்ட மாந்த இனங்கள் தங்கள் மரபுகளை, பழக்கவழக்கங்களை, பண்பாடுகளை, அறிவுத்தொகுதிகளை ஒவ்வொரு வகையில் பாதுகாத்து வருகின்றன. அவ்வகையில் மிகத் தொன்மையான இனமான தமிழினமும் தன் பெருமைகளை அடையாளப்படுத்தும் வகையில் தொன்மரபுச் செல்வங்களையும் சமகால வரலாறுகளையும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற உந்துதலை எழுப்பும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

உலக மக்கள் நாகரிகத்தை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கும் அதே பொழுதில் தங்கள் வரலாற்றுச் சுவடுகளைப் பாதுகாத்து ஆவணப்படுத்தும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வகையில் பின்லாந்து நாட்டு மக்கள் தங்கள் மரபுகளைப் பேணிக்காப்பதில் முன்னோடியாக விளங்குகின்றனர்.

பின்லாந்து இலக்கியக் கழகம் The Finnish Literature Society என்னும் பெயரில் 1831 இல் தொடங்கப்பெற்றதுமுதல் அந்நாட்டின் இலக்கியப்பணிக்குத் தொடர்ந்து தொண்டாற்றி வருகின்றது. இலக்கியக் கழகத்தின் சார்பில் தனித்துவமாக இயங்கும் வகையில் நாட்டுப்புற வழக்காறுகளின் ஆவணக்காப்பகம் (The Folklore Archives) ஒன்றை 1934 இல் உருவாக்கினர். இதன் தோற்றத்திற்குப் பிறகு பின்லாந்தின் வாய்மொழிக்கூறுகள், பின்லாந்தின் மொழி, இலக்கிய வளர்ச்சிப்போக்கு இவற்றிற்கு இக்கழகம் பாடுபட்டு வருகின்றது.

பின்லாந்தின் நாட்டுப்புறவியல் கழகத்தின் ஆவணப் பகுதிக்கு (Folklore Archives) இணையத்தின் வழியாகச் சென்றால் அதில் அந்நாட்டின் பழமரபு உணர்த்தும் பல செய்திகள் தொகுத்துப் பாதுகாக்கப்பட்டுள்ளமையை அறியலாம் (http://www.finlit.fi/ english/kra/ collections. htm). இரண்டு நூற்றாண்டுகள் சார்ந்த செய்திகளைச் சற்றொப்ப முப்பதாயிரம் மக்கள் இணைந்து தொகுத்துள்ளனர். பதினாறாயிரம் மணி நேர ஒலிப்பதிவு(1905-2001), ஆயிரத்து நூற்றுப்பத்து மணி நேர ஒளிப்பதிவு(1976-2001) வைத்துள்ளனர். 1860 முதல் எடுக்கப்பெற்றுள்ள 2,50,000 புகைப்படங்களும் வைத்துள்ளனர். இவற்றுள் இருபதாம் நூற்றாண்டில் எடுக்கப்பெற்ற புகைப்படங்கள் மிகுதியாகும்.

The Folklore Society (FLS) என்ற அமைப்பு இலண்டனில் 1878 இல் மரபுவழிப் பண்பாட்டை அறியும் நோக்கில் தொடங்கப்பட்டு, செயல்பட்டு

வருகின்றது. பழைய பண்பாட்டு மரபுகளைத் தொகுத்துவருகின்றது. அமெரிக்க நாட்டுப்புறவியல் கழகம் 1928 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு நாட்டுப்புறவியல் ஆவணங்களையும் பிற ஆவணங்களையும் தொகுத்து வருகின்றது.

முன்னேறிய நாடுகள் செய்துள்ள இவை போன்ற ஆவணத் தொகுப்பு முயற்சிகளைத் தமிழில் செய்ய வேண்டிய நிலையில் உள்ளோம். தமிழகத்திலும் தமிழர்கள் வாழும் அயலகங்களிலும் அங்கொன்றும் இங்கொன்றுமாக நடைபெறும் இம்முயற்சிகளை ஒருகுடைக்கீழ்க் கொண்டுவந்து, உலகத் தமிழர்கள் இருந்த இடத்திலிருந்து அனைத்துத் தரவுகளையும் பெறும் வகையில் தமிழ் இலக்கிய, பண்பாட்டு ஆவணக்காப்பகம் ஒன்று தொடங்கப்பெற வேண்டும். இந்த ஆவணக் காப்பகம் மின்னியல் தரத்தில் இருக்க வேண்டும். இதில் தமிழர்களின் மொழி, இலக்கியம், அரசியல், கலை, பண்பாடு, நாட்டுப்புறவியல், கைவினை சார்ந்த அனைத்துக்கூறுகளும் திரட்டப்பட வேண்டும். அறிவியல் தொழில்நுட்ப அடிப்படையில் தரவுகளைத் தொகுத்துப் பாதுகாக்கவும் பயன்பாட்டுக்கு வைக்கவும் தமிழில் குறிப்பிடத்தக்க முயற்சிகள் விரிவாகத் தொடங்கப்பெறவேண்டும்.

தமிழில் ஒலி, ஒளி ஆவணப்படுத்தும் முயற்சி ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சமூகத்தில் பயன்பாட்டுக்குக் கிடைத்த கருவிகளைக் கொண்டு செய்யப்பட்டுள்ளது. வானொலி, நாடாப்பதிவு (Tape-Recorder), காணொளி (Video), குரல்பதிவு (Voice Recorder), கணினி, இணையம், செல்பேசி, ஐபேடு கருவிகளின் வருகையால் ஒலி - ஒளி ஆவணப்படுத்தும் முயற்சி தரப்படுத்தப் பட்டுள்ளது.

தமிழகத்தில் எண்ணற்ற பேச்சாளர்கள் வாழ்ந்துள்ளனர். எண்ணற்ற இசைக்கலைஞர்கள், தெருக்கூத்து முன்னோடிகள், இலக்கியவாணர்கள், சமயவறிஞர்கள், அரசியல் தலைவர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் படங்கள், பேச்சுகள், எழுத்துகள் முழுமையாகத் தொகுத்து யாண்டும் காக்கப்படவில்லை. தமிழகம் கடந்து இலங்கையில் வாழ்ந்த ஆறுமுகநாவலர், விபுலானந்தர், தனிநாயக அடிகளார் போன்ற பெருமக்களின் பேச்சுகள் நமக்குக் கிடைக்கவில்லை. சிங்கப்பூரில் வாழ்ந்த அறிஞர் சாரங்கபாணியார் போன்றோரின் பேச்சுகளும், மலேசியாவில் வாழ்ந்த தமிழ்ப் பெருமக்களின் உரைகளும் இன்று கிட்டவில்லை. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, இராஜாஜி, காமராசர் உள்ளிட்ட அண்மைக்காலத்தில் வாழ்ந்தவர்களின் அரிய பேச்சுகளையும் இழந்து நிற்கின்றோம். இவர்களின் பேச்சுகளும் உரைகளும் காற்றில் கலந்துவிட்டன. இவ்வாறு காலம் காலமாக வாழ்ந்த பெருமக்களின் அரிய பேச்சுகள், படங்களை இழந்த நாம் இனியும் காலம் தாழ்த்தாமல் இவற்றை அரசியல், மதம், சாதி, சமயம், கட்சி, நாடு கடந்து திரட்டிப் பாதுகாக்க வேண்டும்.

தமிழகத்தில் தொடங்கப்பட்ட வானொலி ஒலிபரப்புகளும், தொலைக்காட்சி ஒளிபரப்புகளும் ஒலி ஒளி ஆவணப்படுத்தலில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. திரைப்படப் பாடல்கள், திரைப்பட வசனங்கள், படக்காட்சிகள் யாவும் திரட்டித் தொகுக்கும் தரத்தில் இன்றும் உள்ளன.

அரசியல் தலைவர்களின் பேச்சுகள், இசைக்கலைஞர்கள், கூத்துக் கலைஞர்கள், நாட்டுப்புறக் கலைஞர்களின் படைப்புகள் திரட்டித் தொகுக்கும் முயற்சி குறைந்த அளவில்தான் உள்ளது. இம் முயற்சிகளில் ஈடுபட்டவர்கள் தன்னார்வலர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு திரட்டியவர்களிடமிருந்து உரிய விலைகொடுத்தோ, அன்பளிப்பாகவோ பெற்றுப் பொதுப் பயன்பாட்டிற்குக் கிடைக்கச் செய்யவேண்டும். அரசின் சொத்தாக மதிக்கும் இவற்றைத் தவறான செயல்களுக்கோ, வணிக நோக்கிற்கோ பயன்படுத்துக்கூடாது என்று அரசு சட்டம் இயற்றி ஆதரிக்க வேண்டும்.

சென்னையைச் சேர்ந்த திரு.அலிகான் அவர்கள் தமிழ்த்திரைப்படங்கள், பாடல்கள், இசைகள் குறித்த ஒலி ஆவணங்களைப் பாதுகாத்து வருகின்றார். இவரிடம் இன்றைய தொழில்நுட்பத்திற்குத் தக ஆவணங்கள் காக்கப்பட்டு வருகின்றன. பலவாண்டுகள் உழைத்துத் தொகுத்த இவ் ஆவணங்களை மதிப்புத்தொகை கொடுத்து அரசு பெற்றுத் தன் பொது மின்னியல் ஆவணக்காப்பகத்தில் பாதுகாக்க வேண்டும்.

பனப்பாக்கம் நற்றேவன் அவர்கள் தம் தென்மொழி இசையகம் என்னும் பெயரில் பாடல்பதிவகம் நடத்துகின்றார். அறிஞர்களின் பேச்சுகள், இலக்கிய உரைகள், தமிழ்த்தேசிய சிந்தனையாளர்களின் எழுச்சியுரைகள், பாடல்கள், ஈழத்து விடுதலைப்பாடல்கள், விடுதலைத் தலைவர்களின் உரைகள் குறித்த ஒலித்தொகுதிகளைப் பல்லாயிரம் மணிக்கணக்கில் கேட்கும் வகையில் ஆவணப்படுத்தி வைத்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் போராட்டம் குறித்த பாடல்கள், தேசியத்தலைவரின் பேச்சுகள், முதன்மையான தலைவர்களின் பேச்சுகள் யாவும் இவரிடம் உள்ளன. பெருஞ்சித்திரனார், ப.அருளி, தமிழ்மாறன், காசி ஆனந்தன், அப்துல் காதர், சிலம்பொலி செல்லப்பன், பெ.மணியரசன், புதுக்கோட்டை பாவாணன், தொல்.திருமாவளவன் உள்ளிட்டோரின் தமிழ்த் தேசியம் சார்ந்த பேச்சுகள் அடங்கிய குறுவட்டுகள் இவரிடம் உள்ளன. பாவேந்தரின் 100 பாடல்களை இவர் பதிவுசெய்து பாதுகாக்கின்றார். புலவர் நெறிமுடியார் அவர்களின் குரலிசையில் பாடிய பாவேந்தரின் பாடல்கள் இவரிடம் உள்ளன. தெலுங்கின் புரட்சிப்பாடகர் கத்தார் அவர்களின் பாடல்களும் குறுவட்டில் இவரிடம் உள்ளன. 1990 ஆம் ஆண்டுக்குப் பிந்தைய தமிழக வரலாற்றில் பதியத் தக்க பல பேச்சுகள், பாட்டுகள், உரைகள் இவரின் தொகுப்பில் உள்ளன. இவர்தம் உழைப்புக்கும் ஆர்வத்திற்கும் ஒப்புமை காட்டமுடியாதபடி இவரின் பணி பெரும்பணியாகும்.

அதுபோல் திருவண்ணாமலையில் வாழும் மனோகரன் அவர்கள் தொல்காப்பியம், சங்க இலக்கியம், சமய இலக்கியம் தொடர்பில் பல்லாயிரம் மணிநேரம் ஓடக்கூடிய ஒலிநாடாக்களை ஆவணப்படுத்தி வைத்துள்ளார். தொல்காப்பிய அறிஞர் கு.சுந்தரமூர்த்தி அவர்கள் பல ஊர்களில் ஆற்றிய இலக்கிய உரைகள் இவரிடம் பாதுகாக்கப்படுகின்றன. தொல்காப்பியம், தேவாரம், திருவாசகம், பெரியபுராணம், சாத்திர நூல்கள் குறித்த அறிஞர் கு.சுந்தரமூர்த்தியின் ஒலிவட்டுகள் தமிழுக்குக் கிடைத்துள்ள அரிய ஆவணங்களாகும். எளிய நாடாப்பதிவுக்கருவிகளில் பதிவு செய்யப்பட்டுள்ள இவ் உரைகள் அழிவதற்குள் மின்வடிவில் பாதுகாக்க வேண்டும்.

திருச்சியைச் சேர்ந்த திருவரங்கம் செண்பகத் தமிழ் அரங்கத்தின் உரிமையாளர் வழக்கறிஞர் இராசவேலு செண்பகவல்லி அவர்கள் தமிழறிஞர்களின் பல்லாயிரம் மணிநேரப் பேச்சுகளைப் பதிவுசெய்து ஒலி நாடாக்களில் பாதுகாத்து வருகின்றார். இவர்தம் தொகுப்பும் எளிய நாடாக்கருவிகளில் பதிவுசெய்யப் பெற்றுள்ளது. இலக்கியப் பேச்சுகள், சிறப்புப் பொழிவுகள், தனியுரைகள் என்று பலவகையில் உள்ள பேச்சுகளையும், பாடல்களையும் உரிய இசைவுபெற்று மின்வடிவப்படுத்த வேண்டும்.

திருநெல்வேலி தூய சவேரியார் கல்லூரியின் நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்தில் நாட்டுப்புறவியல் சார்ந்த கூத்துப்பாடல்கள், சமயச்சடங்குகள், நாட்டுப்புறப்பாடல்கள், பேச்சுவழக்குகள், நாட்டுப்புறக்கலைகள், கைவினைத் தொழில்கள் குறித்த ஒலி - ஒளி ஆவணங்கள் பாதுகாக்கப்படுகின்றன. தமிழகத்தின் பல்வேறு ஊர்களில் நடைபெற்ற திருவிழாக்கள், வழிபாட்டுச் சடங்குகள், விளையாட்டுகள் இந்த மையத்தில் ஒலி - ஒளிக்காட்சிகளாகப் பாதுகாக்கப் படுகின்றன. இந்த முயற்சி இன்னும் விரிவுபடுத்தப்பட்டு, மக்கள் பயன் பாட்டுக்கு வரவேண்டும்.

திருச்சிராப்பள்ளி, சென்னை, மதுரை, கோவை, திருநெல்வேலி, புதுவை, புதுதில்லி உள்ளிட்ட ஊர்களில் உள்ள வானொலி நிலையங்களிலும், இலண்டன் பி.பி.சி வானொலி, சீன வானொலி, வெரித்தாசு வானொலி, மாசுகோ வானொலி, சிங்கப்பூர் வானொலி, மலேசிய வானொலி உள்ளிட்ட வானொலி நிலையங்களிலும் உள்ள ஒலி ஆவணக் களஞ்சியங்களில் அரிய பாடல்கள், பேச்சுப்பதிவுகள், நாட்டுப்புறப்பாடல்கள், நிகழ்ச்சிகளின் ஒலிப்பதிவுகள் ஆவணங்களாகத் தொகுக்கப் பட்டுள்ளன. அதுபோல் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்திலும் அரிய பேச்சுகள், இசைநிகழ்வுகள் ஆவணங்களாகத் தொகுக்கப்பட்டுள்ளன. எளிய நாடாக்களில் உள்ள இந்த அரிய கலைச் செல்வங்களை மின்வடிவப்படுத்திப் பாதுகாக்கவும் ஆர்வமுடைய மக்கள் பயன்படுத்தவும் வழிகாண வேண்டும்.

திருமுதுகுன்றம் சார்ந்த மோகன் அவர்கள் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களின் பேச்சுகள், இலக்கியவாணர்களின் உரைகள், சொற்பொழிவுகளைக் குறுவட்டாக மாற்றி விற்பனை செய்துவருகின்றார். அவ்வகையில் இரண்டாயிரம் குறுவட்டுகள் இவரிடம் உள்ளன. வாழும் பேச்சாளர்கள் என்ற வரிசையில் சுகி சிவம், தமிழருவி மணியன் போன்றவர்களின் இலக்கிய உரைகள் குறுவட்டுகளில் ஒலி-ஒளி வடிவில் உள்ளன. வைகோ, நாஞ்சில் சம்பத்து போன்றவர்களின் உரைகள், நூல்வெளியீட்டு விழா, புத்தகக் கண்காட்சி உரைகள் யாவும் இவரின் தொகுப்பில் உள்ளன. பெரியார், அண்ணா, கலைஞர் உள்ளிட்ட அரசியல் தலைவர்களின் பேச்சுகளும் உள்ளன. திரைப்பாடல்கள், நாட்டுப்புறப்பாடல்கள், ஆன்மீகப் பாடல்கள் என்று இவரிடம் மிகச்சிறந்த தொகுப்புகள் உள்ளன.

மதுரை ராக்கி ஆடியோ நிறுவனத்தார் திண்டுக்கல் லியோனி போன்ற முன்னணிப் பட்டிமன்றப் பேச்சாளர்களின் பேச்சுகள், விசயலட்சுமி நவநீதகிருட்டினன், கொல்லங்குடி கருப்பாயி, பரவை முனியம்மா போன்றோரின்

ஒலிவட்டுகளை மிகச்சிறப்பாகப் பதிவு செய்து தொழில்முறையில் விற்று வருகின்றனர். தமிழகத்தின் மேடைப்பேச்சுகள் குறித்த வரலாற்றை முனைவர் பெர்னார்டுபேர்டு(அமெரிக்கா) அவர்கள் ஆராய்ந்து பல்வேறு அரிய தகவல்களைப் பதிவுசெய்துள்ளார். இவரிடம் பலரின் மேடைப்பேச்சுகள் குறித்த ஆவணங்கள் உள்ளன.

புஷ்பவனம் குப்புசாமி, தேக்கம்பட்டி சுந்தரராசன், பரவை முனியம்மா, கோட்டைச்சாமி ஆறுமுகம், கரிசல் கிருஷ்ணசாமி, கரு.அழ.குணசேகரன், பாவலர் ஓம் முத்துமாரி, தஞ்சாவூர் சின்னபொண்ணு, குளத்தூர் துளசிதாசன் மதுரை சந்திரன் போன்றோர் நாட்டுப்புறப் பாடல்களை ஒலிவட்டுகளாகவும், ஒலிநாடாக்களாகவும் விற்பனைக்குக் கொண்டுவந்துள்ளனர். இவ் ஒலிவட்டுகள் தமிழகத்தில் பல்லாயிரம் கோடி விற்பனைச் சந்தையை நிர்ணயிக்கும் தொழிலாக நடைபெற்று வருகின்றது. அதுபோல் கானாப்பாடல்கள் என்ற பெயரில் பல பாடல்கள் குறுவட்டுகளாக்கப்பட்டுப் பேருந்து நிறுத்தம், மக்கள் கூடும் இடங்களில் விற்பனை செய்யப்படுகின்றன. இலக்கிய வடிவங்கள் வேறு வேறு வகையில் மக்களிடம் சென்று சேர்கின்றமைக்கு இவை எடுத்துக்காட்டுகளாகும். ப.திருநாவுக்கரசு, மு.இளங்கோவன் உள்ளிட்ட ஆய்வாளர்கள் தமிழிசையின் செழுமையைக் காட்டும் ஆவணங்களைத் தொடர்ந்து தொகுத்து வருகின்றனர்.

இந்த வகையில் தமிழ்நாட்டில் வாழ்ந்த நாதசுவர இசைக்கலைஞர்கள், தவில்கலைஞர்களின் இசைத்தொகுப்புகளைத் தொகுக்க வேண்டும். அரசியல் தலைவர்களின் பேச்சுகளையும், இலக்கியவாணர்களின் சிறந்த சொற்பொழிவுகளையும் தொகுக்க வேண்டும். சென்னையில் உள்ள ஒலிக்குறுவட்டு நிறுவனங்கள் தங்கள் குறுவட்டுகளை இணையப்பதிப்பாக வெளியிட்டு ஆவணப் படுத்தலுக்குத் துணைநிற்கலாம்.

தமிழர்கள் நிறைந்து வாழும் இலங்கையிலும் நாட்டார் பாடல்கள், கூத்துகள் குறித்த ஒலி-ஒளி வட்டுகள் வந்துள்ளன. இறைவழிபாடு குறித்த காணொளிக் காட்சிகள் வந்துள்ளன. ஈழப்போர் குறித்த காணொளிகள், விடுதலைப்பாடல்கள் அடங்கிய குறுவட்டுகள் ஏராளமாக வந்துள்ளன. இவற்றையும், புலம் பெயர்ந்த தமிழர்கள் வாழும் பிற நாட்டு ஒலி, ஒளி ஆவணங்களையும் திரட்ட வேண்டும்.

ஒலிப்புத்தக முற்சிகள் தமிழகத்தில் இப்பொழுது தொடங்கியுள்ளன. புகழ்பெற்ற எழுத்தாளர்களின் சிறுகதை, புதினம்,கவிதை,ஆன்மிக உரைகள் இப்பொழுது ஒலிப்புத்தகங்களாக வெளிவருகின்றன. யுடீயுபைப் பயன்படுத்தித் தனிமனிதர்களின் விருப்ப ஒலி உரைகள் இப்பொழுது உலகிற்குக் கிடைக்கின்றன. பாடநூல்கள், கணினி, இணையச் செய்முறைப் பயிற்சிகள் இப்பொழுது காட்சி வடிவத்தில் வெளிவருகின்றன. அண்ணாமலைப் பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களின் அஞ்சல் வழிப் பாடத்திட்டங்களின் வினா விடைகள் இப்பொழுது ஒலிவட்டுகளில் கிடைக்கின்றன. தமிழகப் பல்கலைக்கழகங்கள் ஆய்வாளர்கள் தங்கள் ஆய்வேட்டின் அச்சுப்படியை வழங்கும்பொழுது மென்படி (softcopy) வழங்கும்படி அறிவுறுத்தப் படுகின்றனர்.

தமிழகத்தில் ஆவணப்படுத்தப்பட வேண்டிய தரவுகள் பல இருப்பினும் இன்று உடனடியாக மேற்கொள்ள வேண்டிய பணிகள் என்று சிலவற்றைச் சுட்டிக்காட்டலாம். உலகத் தமிழ்மாநாட்டு நிகழ்வுகள், அரசியல் தலைவர்களின் சட்டமன்ற உரைகள், அரசு சார்பில் நடைபெற்ற விழாக்கள், கண்காட்சிகள், பல்கலைக் கழகங்களில் நடைபெற்ற பட்டமளிப்பு விழாக்கள், நாடகம், திரைப்படம், மேடைப்பேச்சு, நாட்டுப்புறவியல், இறைவழிபாடு, இலக்கிய உரைகள், அரிய கையெழுத்துச் சுவடிகள், வரைபடங்கள், பத்திரங்கள், உறுதி மொழிகள், அழைப்பிதழ்கள், அச்சு எழுத்துகள், வானொலி, தொலைக்காட்சியின் அரிய உரைகள், நாட்டியம், நாகசுரம் உள்ளிட்ட கருவியிசைகள் யாவும் தமிழ்கூறும் நல்லுலகம் முழுவதும் உள்ளவை தொகுக்கப்பெற்றுத் தமிழகத்தில் ஓரிடத்தில் பாதுகாக்கவும், பயன்பாட்டுக்கு வைக்கவும் ஒரு திட்டமிடல் இன்று தேவையாக உள்ளது. அவ்வாறு செய்யும்பொழுது அறிஞர்களின் பேச்சு, பாட்டு, இசை, கலைநிகழ்வுகள், பழக்கவழக்கங்கள், மொழி அமைப்பு, பண்பாடு யாவற்றையும் அடுத்த தலைமுறைக்குப் பாதுகாத்து வழங்கியவர்களாவோம்.

சங்கத்தமிழ்ச் சொற்களும் பொருண்மையும்

முனைவர் வீ. ரேணுகா தேவி
பேராசிரியர், மொழியியல் துறை
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
மதுரை, தமிழ்நாடு, இந்தியா

ஒரு மொழியின் வளர்ச்சி என்பது அம்மொழியின் சொற்களஞ்சியத்தின் வளர்ச்சியைச் சார்ந்து அமைகின்றது. உலகத்தில் உள்ள வளரும் மொழிகள் அனைத்தும் வளர்சிதை மாற்றங்களுக்கு உள்ளாகின்றன. அவ்வாறு வளர்சிதை மாற்றங்களுக்கு உள்ளாகாத மொழிகள் இறந்த மொழிகள் (dead languages) என அழைக்கப்படுகின்றன. மொழி என்பது நிலையானது (static) அல்ல; மாற்றங்களுக்குட் பட்டது (Language is dynamic not static).

தமிழ் மொழி பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய மொழி. அதன் சொற்களில், சொற்களின் அமைப்பில், வாக்கியங்களில், வாக்கியங்களின் அமைப்பில் தொன்று தொட்டு இன்று வரை பல்வேறு மாற்றங்களைப் பெற்றுள்ளது.

ஒலியியல், ஒலியனியல், உருபனியல், தொடரியல், உருபொலியனியல், பொருண்மையியல் என்னும் ஐந்து கூறுகளால் ஆக்கப்பட்டதே மொழி ஆகும். இக்கூறுகள் பற்றிய ஆராய்ச்சி காலந்தோறும் நடந்து கொண்டுதான் இருக்கின்றது. எனினும் ஏனைய கூறுகளில் நடைபெற்றுள்ள ஆய்வுகளைப் போன்று பொருண்மையியல் பற்றிய ஆய்வுகள் அதிகம் நடைபெறவில்லை.

சங்க இலக்கிய ஆய்வுகளிலும் மொழி நடை, சொற் பொருண்மை பற்றிய ஆய்வுகள் அருகியே காணப்படுகின்றன. எனவே சங்கத் தமிழில் பயன்படுத்தப் பட்டுள்ள செற்களின் பொருண்மை பற்றிய ஆய்வாகச் "சங்கத் தமிழ்ச் சொற்ளும் பொருண்மையும்" என்னும் இக்கட்டுரை அமைகின்றது.

ஒரு மொழியில் பலவகையான சொற்புலங்கள் காணப்படுகின்றன. புலமும் புலச்சொற்களும் மொழிக்கு மொழி மாற்றம் பெற்றுக் காணப்படுகின்றன. சொற்கள் அகராதிகளில் காண்பது போன்று பொருளை மட்டும் தரும் குறியீடுகள் அல்ல. சொல் மொழியின் பொருள், இலக்கண அமைப்பு ஆகியவற்றை விளக்குகின்றது. ஒரு சொல்லின் கருத்தைப் புலப்படுத்துவது பொருண்மை. அது உருவமுடைய சொல் வாயிலாகப் புலப்படும். இதுவே,

சொன்மை தெரிதலும் பொருண்மை தெரிதலும்
சொல்லின மாகும் என்மனார் புலவர் (தொல். பொருள்.15)

சொற்கள் யாவும் உலகில் இயற்கையாகவும், செயற்கையாகவும் திகழும் பொருள்களை உணர்த்தவும், உணரவும், ஒலிக்கோவையாகவும் படைத்துக்கொள்ள

பெறுபவையாதலால் பொருள் இல்லாத சொற்களோ, பொருள் பயவாத சொற்களோ இல்லை எனலாம். எல்லாச் சொற்களும் பொருளுடையனவாகும். காட்டாக, ஆகாயப்பூ, குதிரைக்கொம்பு போன்ற சொற்கள் பொருளற்றவை எனில் இத்தகைய சொற்கள் வெளிப்படையான பொருளைத் தராமல் குறிப்புப் பொருளைத் தருவன ஆகும். அதாவது ஒரு கருத்தைக் கற்பனை செய்தோ, பொய்யாகவோ கூறுமிடத்து அக்கருத்து பொய்யானது என்று காட்ட இத்தகைய தொடர்களைப் பயன்படுத்தலின் அவை சொல்லின் பொருளை நேராக உணர்த்தாமல் தாம் கருதும் பொருளைக் குறிப்பால் உணர்த்துவதாகும். அவற்றை ஆகாயம் + பூ, குதிரை + கொம்பு எனப் பிரித்துத் தனித்தனியே கூறும் பொழுது அவை வெளிப்படையாகப் பொருளைத் தரும். ஆதலால் தனிச் சொற்கள் யாவும் பொருளுடையன என்பதைத் தொல்காப்பியர்,

எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே (தொல். சொல்.152)

என்னும் நூற்பாவால் உணர்த்துகிறார்.

சங்க இலக்கியங்களில் விலங்கினங்களைக் குறிக்கப் பல்வேறு சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

ஞமலி	*'நாய்'*	*(புறம். 74:3)*
கூகை	*'பேராந்தை'*	*(புறம். 153:1)*
களிறு	*'யானை'*	*(புறம். 4:10)*
கவரி	*'மான்'*	*(புறம். 132: 4)*
அரவு	*'பாம்பு'*	*(புறம். 211:2)*
அரா	*'பாம்பு'*	*(புறம். 369:6)*
ஆன்	*'பசு'*	*(புறம். 259:6)*
இரலை	*'மானின் பெண்பால் பெயர்'*	*(புறம். 394:2)*
இவுளி	*'குதிரை'*	*(புறம். 282:4)*
ஏறு	*'காளை'*	*(புறம். 1:3)*
	'ஆண் பருந்து'	*(புறம். 43:5)*
	'ஆண் நத்தை'	*(புறம். 266:4)*
	'ஆண் பன்றி'	*(புறம். 379:8)*
	'ஆண் மான்'	*(புறம். 157:10)*
கடமா	*'மான்'*	*(புறம். 202:2)*
கலை	*'குரங்கு'*	*(புறம். 320:7)*
கடுவன்	*'ஆண் குரங்கு'*	*(புறம். 158:23)*
குராஅல்	*'கோட்டான்'*	*(புறம். 280:5)*
பிணை	*'பெண்மான்'*	*(புறம். 23:19)*
முளவு	*'முள்ளம் பன்றி'*	*(புறம். 374:11)*
வேழம்	*'யானை'*	*(புறம். 394:12)*
போத்து	*'ஆண்புலி'*	*(புறம். 157:12)*
அரிமான்	*'சிங்கம்'*	*(புறம். 12:5)*
எருவை	*'கழுகு'*	*(புறம். 36:7)*
கலிமா	*'குதிரை'*	*(புறம். 38:7)*

மேலே கொடுக்கப்பட்டுள்ள சொற்களில் பெரும்பான்மையான சொற்களின் பொருண்மை மட்டுமே இன்றைய காலக்கட்டத்தில் பயன்படுத்தப்படுகின்றன. அதன் சங்கச்சொற்கள் இன்று பலராலும் அறியப்படாதவையாகவே உள்ளன.

புறநானூற்றில் அடுகலம், அடுகளம், அடுமகள் என்ற மூன்று சொற்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவை,

அடுகலம்	'சமையற்கலம்'	*(புறம். 32:1)*
அடுகளம்	'சமையலறை'	*(புறம். 26:11)*
	'போர்க்களம்'	*(புறம். 93:13)*
அடுமகள்	'சமையற்பணிப்பெண்'	*(புறம். 399:1)*

என்னும் பொருண்மையில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இம்மூன்று சொற்களும் இன்று பயன்பாட்டில் இல்லை. சமையலுக்குப் பயன்படுத்தும் பாத்திரங்களைக் குறிக்க இன்று பொரும்பாலும் 'Kitchen wears','cookeries', 'utensils' எனும் ஆங்கிலச் சொற்களே பயன்படுத்தப்படுகின்றன. சமையல் செய்யும் பெண் 'சர்வன்ட்' (servant) என்ற சொல்லால் உணர்த்தப்படுகின்றாள். இச்சொற்களின் அடிப்படையில் 'அடுமனை' என்னும் சொல் புதிதாக ஆக்கப்பட்டுப் பேக்கரி (Bakery) என்னும் ஆங்கிலப் பொருண்மையைச் சுட்டப் பயன்படுத்தப்படுகின்றது.

அடை (புறம்.90:2) என்னும் சொல் 'இலை' என்னும் பொருண்மையைச் சுட்டப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இச்சொல் இன்றைய காலக்கட்டத்தில் அடை என்னும் ஒரு வகை உணவினைக் குறிக்கப் பயன்படுகின்றது.

சங்க இலக்கியச் சொற்கள்	சங்க இலக்கியப் பொருண்மையும் பாடல் எண்ணும்	தற்காலப் பொருண்மை
அ	அழகு (புறம். 36:6)	உயிர் எழுத்து
அகலம்	மார்பு (புறம் 2:7)	அளவு
அடகு	இலைக்கறி (புறம். 62:14)	அடகு (வைத்தல்)
அணல்	தாடி (புறம். 83:1)	வெப்பம் அணை
	படுக்கை (புறம். 297:3)	அணைக்கட்டு
அம்பி	ஓடம் (புறம். 261:4)	தோணி (புறம். 343:2)
	தம்பியை அழைக்கப்	பயன்படும் பிராமண வழக்குச் சொல்
அமை	மூங்கில் (புறம். 129:2)	அமைத்தல், அமைதல்
அவல்	விளைநிலை (புறம்.6:14)	
	நெற்பொரி இடியல் (புறம். 63:13)	
	பள்ளம் (புறம். 102:3)	நெற்பொரி
அறை	பாறை (புறம். 118:1)	
	சுற்ற (புறம். 175:8)	
	பாத்தி (புறம். 384:1)	
	அறை (பெயர்ச்சொல்)	
	பசுக்கூட்டம் (புறம். 9:1)	உயிர் எழுத்து

சங்க இலக்கியச் சொற்கள்	சங்க இலக்கியப் பொருண்மையும் பாடல் எண்ணும்	தற்காலப் பொருண்மை
'இஞ்சி	மதில் (புறம். 341:5)	இஞ்சி
இணைதல்	வருந்துதல் (புறம். 144:6)	சேருதல்
உரி	தோல் (புறம். 260:20)	வினைச்சொல்
ஊறு	புண் (புறம். 167:6)	
	தடை (புறம். 185:3)	தீங்கு
எஃகு	வேல் (புறம். 26:5)	
	படைக்கருவி (புறம். 350:9)	ஒரு வகை இரும்பு
எரி	நெருப்பு (புறம். 16:17)	
	விண்மீன் (புறம். 395:34)	வினைச்சொல்
ஓதி	கூந்தல் (புறம். 70:14)	ஓதுதல் வினைச்சொல்
ஓடை	யானைப்பட்டம் (புறம். 3:7)	நீர்நிலை (பெயர்ச்சொல்)
கட்சி	காடு (புறம். 60:4)	(அரசியல்) கட்சி
கதுப்பு	கூந்தல் (புறம். 138:8)	கதுப்பு (நிலம்)
கந்தாரம்	ஒரு வகை மது (புறம். 258:2)	ஊர்ப்பெயர்
கலிங்கம்	ஆடை (புறம். 392:15)	ஊர்ப்பெயர்
கலை	மான் (புறம். 23:18)	முசு என்னும் குரங்கு பெயர்ச்சொல்
காம்பு	மூங்கில் (புறம். 383:7)	பால் சுரக்கும் காம்பு, (கத்திரிக்காயின்)காம்பு
காவு	சோலை (புறம். 23:9)	காவு (கொடுத்தல்)
கொள்ளை	விலை (புறம். 386:16)	கொள்ளை(யடித்தல்)
கொடு	வளைவு (புறம். 58:29)	கொடுத்தல்
குழவி	குழந்தை (புறம். 4:18)	(அம்மிக்) குழவி
குளவி	காட்டுமல்லிகை (புறம்.90:2)	ஒரு வகை வண்டு
கூம்பு	பாய்மரம் (புறம். 30:11)	முக்கோணம்
சிலை	வில் (புறம். 157:6)	சிலை
தோடு	இதழ்(புறம். 22:20)	
	இலை (புறம். 120:5)	
	தொகுதி (புறம். 35:9)	காதணி
	பனங் குரும்பையின் முகிழ் (புறம். 45:11)	
	தோகை (புறம். 344:1)	
பச்சை	தோல் (புறம். 164:11)	நிறம்
விடை	ஆட்டின் ஆண்பால் பெயர் (புறம். 33:21)	
	பூனையின் ஆண்பால் பெயர் (புறம். 324:1)	பதில்

சங்க இலக்கியச் சொற்கள்	சங்க இலக்கியப் பொருண்மையும் பாடல் எண்ணும்	தற்காலப் பொருண்மை
வலம்	வெற்றி (புறம். 4:11)	வலப்பக்கம்
வை	கூர்மை (புறம். 95:7)	வைத்தல்
வேகம்	சிமை (புறம். 37:2)	வேகம்
வரும்	இடி (புறம். 37:4)	வினைச்சொல்

மேலே காட்டப்பட்டுள்ள சங்கச் சொற்கள் இன்று பொருண்மை மாற்றம் (Semantic Change) பெற்று வழக்கில் உள்ளன. மேலும் சில சொற்கள் தற்காலப் பயன்பாட்டில் இல்லாமல் போய்விட்டன.

அகடு	வயிறு	*(புறம். 387:2)*
அங்கை	அகத்துக்கை	*(புறம். 380:11)*
அசும்பு	சோறு	*(புறம். 114:5)*
அடல்	கொல்லுதல்	*(புறம். 52:5)*
வெற்றி		*(புறம். 335:1)*
அடுக்கம்	அரைமலை	*(புறம். 2:20)*
மலைச்சாரல்		*(புறம். 168:2)*
அத்தம்	அரிய பாலை வழி	*(புறம். 370:4)*
அதர்	வழி	*(புறம். 138:1)*
வெற்றுச்சக்கை		*(புறம். 299:2)*
அம்பை	பெருஞ்சோற்றுத்திரள்	*(புறம். 33:14)*
அயறு	புண்ணிலிருந்து வடியும் ஊன் நீர்	*(புறம். 22:7)*
அயா	இளைப்பு	*(புறம். 261:7)*
அயிலும்	உண்ணும்	*(புறம். 143:5)*
அரலை	குற்றம்	*(புறம். 381:14)*
அரியல்	கள்	*(புறம். 209:4)*
அரிவை	பெண்	*(புறம். 122:9)*
அரில்	சிறு தூறுகள் கொண்ட கூடு	*(புறம். 177:12)*
அலமரல்	மனச் சுழற்சி	*(புறம். 43:1)*
அவிர்	விளங்குதல்	*(புறம். 25:13)*
அவைப்பு	குற்றுதல்	*(புறம். 215:1)*
அழற்குட்டம்	கார்த்திகை நாள்	*(புறம். 229:1)*
அழுங்கல்	இரங்கல்	*(புறம். 220:3)*
அள்	செறிவு	*(புறம். 252:3)*
அள்ளல்	சேறு	*(புறம். 379:5)*
அளை	முழை	*(புறம். 52:1)*
	மோர்	*(புறம். 119:3)*
அறல்	கருமணல்	*(புறம். 25:13)*

அறுவை	ஆடை	(புறம். 154:10)
அனந்தல்	கள் மயக்கம்	(புறம். 316:3)
ஆகம்	மார்பு	(புறம். 25:10)
ஆங்கண்	இடம்	(புறம். 22:19)
ஆசு	பற்றுக்கோடு	(புறம். 835:16)
ஆசினி	ஒரு வகைப் பலா	(புறம். 158:22)
ஆர்குவை	உண்பாய்	(புறம். 230:16)
ஆனி	பசு	(புறம். 5:2)
ஆன் உருக்கு	பசு நெய்	(புறம். 152:26)
ஆன் பயம்	பசும்பால்	(புறம். 386:6)
இகல்	மாறுபாடு	(புறம். 45:9)
இணர்	பூ, பூங்காத்து	(புறம். 24:8)
இம்பர்	இவ்விடம்,இவ்வுலகு	(புறம். 287:14)
இமிழ்தல்	ஒலித்தல்	(புறம். 15:4)
இயம்	இடைக்கருவி	(புறம். 153:11)
இழிசினன்	கீழ்மகன்	(புறம். 82:3)
இறும்பு	சிறுகாடு	(புறம். 126:7)
உயவல்	வருத்தம்	(புறம். 69:4)
உரவோர்	வலியோர்	(புறம். 18:4)
உரன்	வலிமை	(புறம். 60:9)
உழக்குதல்	கலக்குதல்	(புறம். 16:6)
	துகைத்தல்	(புறம். 98:5)
	வருந்துதல்	(புறம். 146:7)
	பொருதல்	(புறம். 342:14)
எல்லரி	இசைக்கருவி	(புறம். 152:16)
எல்லி	இரவு	(புறம். 305:3)
ஐயவி	வெண்சிறு கடுகு	(புறம். 98:15)
ஐவனம்	நெல்லின் வகை	(புறம். 159:17)
ஏனல்	தினைப்புனம்	(புறம். 28:9)
கருனை	பொரிக்கறி	(புறம். 398:24)
செயிர்	குற்றம்	(புறம். 3:6)
செறு	வயல்	(புறம். 61:3)
நனை	அரும்பு	(புறம். 390:21)
நறவு	மது	(புறம். 91:3)
நெளிதல்	குழிதல்	(புறம். 18:26)
நேமி	ஆணைச் சக்கரம்	(புறம். 3:4)
படம்	புடவை	(புறம். 260:28)
படிவம்	விரதம்	(புறம். 349:4)
பராரை	மரத்தின் பருத்த அடி	(புறம். 347:10)
பயம்பு	குழி	(புறம். 17:14)

பவர்	கொடி	(புறம். 76:5)
பழனம்	வயல்	(புறம். 13:10)
பிறங்கடை	வழித்தோன்றல்	(புறம். 392:21)
புரிசை	மதில்	(புறம். 17:27)
புற்கை	கஞ்சி, கூழ்	(புறம். 64:7)
புலத்தல்	வெறுத்தல்	(புறம். 159:2)
பூழ்	குறும்பூழ் பறவை	(புறம். 321:1)
போது	மலரும் பருவ அரும்பு	(புறம். 215:2)
பௌவம்	கடல்	(புறம். 6:4)
மங்குல்	இருள்	(புறம். 103:7)
மாந்தல்	உண்ணல்	(புறம். 225:2)
மிடல்	வலிமை	(புறம். 125:5)
முந்நீர்	கடல்	(புறம். 20:1)
முளரி	முள் உள்ள கள்ளி	(புறம். 278:2)
முறி	கருகுதல்	(புறம். 60:2)
உலர்தல்		(புறம். 247:1)
வலம்	வெற்றி	(புறம். 4:1)
விடர்	மலைப் பிளவு	(புறம். 37:4)
வேரி	மது	(புறம். 152:27)
வைப்பு	ஊர்	(புறம். 2:11)

புறநானூற்றில் பயன்படுத்தப்பட்டுள்ள மேலே காட்டப்பட்ட அனைத்துச் சொற்களும் இன்று பயன்பாட்டில் இல்லை. இச்சொற்களை மீட்டுருவாக்கம் செய்யலாம் அல்லது இன்று தமிழில் பயன்பாட்டில் உள்ள ஆங்கிலச் சொற்களுக்குப் பதிலாக இத்தமிழ்ச் சொற்களைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வரலாம்.

மான் என்ற சொல் சங்க இலக்கியத்தில் 'குதிரை' என்ற பொருண்மையைக் கொண்டிருந்தது. ஆனால், இன்று 'மான்' மற்றும் 'குதிரை' என்ற சொற்கள் இரு விலங்குகளைக் குறிக்கும் தனித்தனிச் சொற்களாக மாற்றமடைந்துள்ளன.

இறைச்சி என்ற சொல் நேயம் மற்றும் இன்பம் என்ற பொருண்மையிலிருந்து 'மாமிசம்' என்ற பொருண்மைக்கு மாற்றமடைந்துள்ளது. இதைப் போன்று 'கறி' என்ற சொல் 'மிளகு' என்னும் பொருண்மையிலிருந்து 'மாமிசம்' என்ற பொருண்மைக்கு மாற்றமடைந்துள்ளது.

ஈரம் என்ற சொல்லின் பொருண்மை அருள் என்பதனிலிருந்து ஈரத்தன்மையைக் குறிக்கும் சொல்லாக மாற்றமடைந்துள்ளது. கரி என்றவுடன் நம் நினைவிற்கு வருவது அடுப்புக்கரி. ஆனால் சங்க இலக்கியத்தில் இதன் பொருண்மை 'சாட்சி' என்பதாகும்.

இக்கட்டுரையில் சொற்களின் பொருண்மை பற்றிய ஆய்வின் ஒரு சிறு பகுதியாகச் சங்கச் சொற்களில் பொருண்மை மாற்றம் பெற்ற சொற்கள் மற்றும் முற்றிலும் வழக்கொழிந்த சொற்கள் மட்டுமே அட்டவணைப்படுத்தப்பட்டுள்ளன.

பொருண்மை பற்றிய ஆய்வின் நீட்சியாக ஒரு பொருள் குறித்த பல சொற்கள், பல பொருள் குறித்த ஒரு சொல், குறிப்புச் சொற்கள் போன்றவை பற்றியும் சொற்புலங்கள் பற்றியும் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டால் தமிழ் மொழியின் வளர்ச்சிக்குப் பெரிதும் பயன்படும்.

துணை நூல்கள்

1. ச.வே. சுப்பிரமணியன்,2010,தொல்காப்பியம் - தெளிவுரை, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.
2. வீ. ரேணுகா தேவி, 2013, சங்கத் தமிழ் (மொழி இலக்கிய வளம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.
3. பரிமணம், அ.மா., 2007, சங்க இலக்கியம் பாலசுப்பிரமணியன, கு.வெ.(ப.ஆ), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை.

எண்ணெழுத்து அடிப்படையில் எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே

திரு. சு. சிவசந்திரகுமார்
முனைவர் பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுவை

0.1 முன்னுரை

பல்வேறு சிந்தனைப் புலங்களின் (multiple dicipline) அறிவைக்கொண்டு சங்கக் கவிதைகளை வாசிக்கும் உத்திமுறையொன்று நடப்பிலுள்ளது. இவ்வுத்தி முறைகளில் எண்ணெழுத்துப் பெறுமிடம் எத்தகையது என்பதையும் ஔவையாரால் பாடப்பெற்ற புறம். 206 ஆம் பாடலில் இம்மரபு எப்படி கையாளப்பட்டிருக்கிறது என்பதையும் எடுத்துச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.1 எண்ணெழுத்து மரபு

தமிழில் எண்களை எழுத்தாலும் எழுத்துகளை எண்ணாலும் குறித்து எழுதும் மரபொன்று இருக்கின்றது. உரையாசிரியர்கள் காலம் தொடங்கித் தற்காலச் சோதனை முயற்சிப் புதினங்கள் வரை இவ்வுத்தி முறையினைக் காணலாம்.[1] இவ்வெழுத்து மரபினைக் குறிக்கப் பண்டைய மக்கள் பலவித முறைகளை உபயோகித்து வந்துள்ளனர். அவற்றுள் முக்கியமானவை 'அகூரப்பள்ளி', 'பூதசங்கியை', 'கடபயாபதி', 'பரக்கம்' (Barakhadi) முதலியவை யாகும்.[2] இம்மரபினை மூன்றாகப் பகுக்கலாம்.

அ. எழுத்தை எண்ணால் எழுதுவது
ஆ. எண்களை எழுத்தாக எழுதுவது
இ. இவ்விரண்டையும் குறியீட்டால் குறிப்பது

1.2 எண்ணு வண்ணமும் எண்ணெழுத்து மரபும்

தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலில் குறிப்பிடும் எண்ணு வண்ணத்திற்கும் சொல்லதிகார இடையியலில் இடம்பெறும் 283 ஆம் நூற்பாவிலுள்ள எண் ஏகாரத்திற்கும் ஏதேனும் தொடர்பு உள்ளதா? என்று ஆராய்வதன்மூலம் கவிதையின் ஊடே எழுதப்பெறும் தமிழ் எண்களை (௦, க, ங, ச, ரு, ட,ண,த,ந,ப) மனத்தில் கொண்டு இந்நூற்பா யாக்கப்பட்டிருக்கலாமோ என்ற ஐயப்பாடு தோன்றுகிறது.[3] எண் குறியீடுகளில் 'எ' கரக் குறியே எண்ணைக் குறிக்குமெனில் தொல்காப்பியரின் 'எகர ஒகரத்து இயற்கையும் அற்றே' என்ற சூத்திரத்தின்கண் கொண்டு இதனை நோக்க வேண்டும்.

1.3 சங்க இலக்கியமும் எண்ணெழுத்து மரபும்

எண்எழுத்துப் பாடல்கள் உரையாசிரியர் காலந்தொட்டுக் கிடைக்கின்றன. எனினும், இதற்கான தோற்றக் கூறுகளைத் தொல்காப்பியர் அடையாளப் படுத்துகிறார் என்ற அடிப்படையில் எண்எழுத்துமரபு சங்கப் பாடல்களில் பயின்றுள்ளதா என்ற திசை நோக்கிப் பயணித்தல் இன்றியமையாதது என்ற அடிப்படையில் சங்க இலக்கியப் பாடல்களை அணுகியபோது புறப்பாடல்கள் சில எந்த வரலாற்றுக் குறிப்பும் இல்லாமல் பொது உண்மைகளை விளக்குகின்றன. இக்கருத்திற்குச் சான்றாக ஔவையாரின் பாடலான புறநானூறு 206 ஆம் பாடலைச் சுட்டலாம். குறிப்பிட்ட நிகழ்ச்சியை வருணிக்கும் இப்பாடலின் இறுதியடியில் 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்ற அடி பயின்று வந்துள்ளது.

1.4 எகர வினாவும் எத்திசையும்

புறநானூறு 206 ஆம் பாடலின் இறுதியடி பொதுமை பேசுவதாகக் கொண்டால் இப்பாடலைப் பிந்திய தமிழ்ப் பாடலாகக் கருத வேண்டும். சங்கத் தமிழ் இலக்கியங்களை ஆராய்ந்த அகத்தியலிங்கம், சங்கப் பாடல்களில் அந்த, இந்த ஆகிய சுட்டுச்சொற்கள் சிலம்பிலும் மணிமேகலையிலும் வரக் காண்கிறோம். இவை இடைக்காலத் தமிழில் மிகுதியாக வரத்தொடங்கித் தற்காலத் தமிழில் நிலைபெற்றுவிட்டன என்பதனைக் குறிப்பிட்டுள்ளார்.[4] அத்திசை என்று குறிப்பிடுகையில் தொல்காப்பியர் அ, இ, உ அம்மூன்றும் சுட்டு என்பதனைக் குறிப்பிடுவார். ஆனால், எத்திசை என்று எடுத்துக் கொண்டால் எகர வினாச் சொற்கள் முன்பழந்தமிழ் நூல்களில் யாங்கு, யாங்கணும் (அகம். 7-3), யாங்கனம் (நற். 381-6), யாங்கு (நற். 29-6) போன்ற யா முதல் சொற்கள் மாத்திரமே காணப்பட, கலித்தொகை, குறள், சிலம்பு, மணிமேகலை முதலிய நூல்களில் இவற்றுள் 'எ'கரம் முதல் சொல்லாகிய எங்ஙனம், எங்கனம், எங்கு, எங்கும் போன்றவையும் அவற்றிலிருந்து உருவாகும் பிற சொற்களும் காணப்படுகின்றன.

தொல்காப்பியரும் வினா எழுத்துகளைப் பற்றிச் சொல்லும்போது ஆ, ஏ, ஓ அம்மூன்றும் வினா என்கிறார். 'யார், எவன்' என்பதாக வரும் கிளவியாக்கச் சூத்திரம் இவ்விடத்தும் பொருந்துவதாகத் தெரியவில்லையெனில் இப்பாடலில் (புறம். 206) இறுதியடியின் பொருண்மையாழம் என்னவென்று அறிதற்கில்லை.

1.5 உவமைப் பொருத்தம்

இப்பாடலின் (புறம். 206) இறுதியடியில் இடம்பெறும் உவமையானது,

"மரங்கொல் தச்சன் கைவல் சிறார்
மழுவுடைக் காட்டகத் தற்றே"

என்பதாக வந்துள்ளது. இங்கு மழுவுடைச் சிறார் என்ற பெயரடை பெயர்த்தொடரில் பெயர் முன்னிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என்றும் இத்தன்மை பேச்சு மொழியில் இயல்பாகக் காணப்படாத ஒன்றாகும் எனக் குறிப்பிடுவார் சண்முகம்.[5] இவ்வுவமைக்கான பொருளாகக் காட்டில் எத்தனை மரங்கள் உள்ளன;

அதைப் போல இறந்து வாழக்கூடிய பாணருக்கு மரங்கள் போல வள்ளல்கள் உள்ளனர் என்பதாக வருவது பதவுரைக் குறிப்பு. ஆயின் இவ்வுவமை ஏற்றுக் கொள்ளுமாறு இல்லை; இதற்குக் காரணம் ஔவையின் இதே பாடல்தான்; இப்பாடலின் தொடக்க வரிகளில் 'வள்ளியோர் செவிமுதல் வயங்குமொழி வித்தி' என்பதாகப் பாடலைத் தொடங்குகிறார்.

இதற்கான பொருள் வள்ளல்களின் அல்லது கொடுப்போரின் செவிகளில் நல்ல அறிவு சார்ந்த மொழிகளை விதைக்கும் விதைத்தல் தொழிலை மேற்கொள்ளக்கூடிய புலவரின் தொழிலானது மரங்கொல் தச்சனுக்கு உவமையாக்கப்பட்டிருக்கின்றது என்பது முரணாகின்றது. மரங்கொல் தச்சன் என்பதே இழிவுச் சிறப்பாகக் கருதப்படும் வேளையில் ஔவை இன்னும் ஒருபடி மேற்சென்று 'கைவல் சிறார்' என்பதனைக் குறிப்பிடுவார். நாடாளும் மன்னனை அதிலும் அதியமானைச் சிறுவன் என்று ஔவையார் குறிப்பிடவில்லை எனில் இப்பாடலை எப்படி பொருள் கொள்வது?

1.6 தன் அறியலன் கொல் என் அறியலன் கொல்

ஔவையார் அதியமான் நெடுமான் அஞ்சியைப் பற்றிக் குறிப்பிடும்போது 'தன் அறியலன் கொல் என் அறியலன் கொல்' என்பதாகக் குறிப்பிடுகின்றார். அதியனுக்கு அவனைத் தெரியாதா அல்லது என்னைத் தெரியாதா என்று ஔவை வினவுவதற்குப் பரிசில் பெற முதல்நாள் அதியமானிடம் சென்றதால் ஏற்பட்டதன்று. அப்படி இருக்கவும் முடியாது என்பதற்கு அவரே அகச் சான்று ஒன்றைத் தருகின்றார். அதன்படி அதியமான் ஒரு நாள் சென்றாலும், இருநாள் சென்றாலும், பலநாள் சென்றாலும் தலைநாள் போன்ற விருப்பினன் என்றால் ஏன் ஔவையாரை அலட்சியப் படுத்த வேண்டும். அதியமான் பாணர்களைக் காக்க வைப்பான் என்பதற்கும் இப்பாடல் சான்றாகின்றது. அதியன் 'பெறூஉம் காலம் நீட்டினும் நீட்டாதாயினும்' என்பதாகவும் இப்பாடலில் உள்ளது. இவ்விடத்தில் தலைநாள் விருப்பினன் அதியன் என்பதை ஔவை முதலில் மகிழ்வுடன் குறிப்பிட்டு, நீட்டினும் நீட்டாது ஆயினும் என்னும்போது அதை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற பக்குவத்தினும் பாடியுள்ளதாகத் தெரிகின்றது என்றால் ஏன் ஔவை அதியனை இடித்துரைத்துப் பாடியிருக்க வேண்டும்.

1.7 வாசிப்பும் வரலாறும்

அதியனிடம் பரிசில் பெறாமல் அங்கிருந்து நீங்குதற்கு ஔவையார் ஒரு காரணத்தைக் கூறுகிறார். இக்காரணம் உற்று நோக்குதற்குரியது. இதன்படி,

"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே, அதனால்"

தான் கலனைக் காவியதாகவும், கலப்பையைச் சுருக்கியதாகவும் குறிப்பிடுகின்றார். இப்பாடல் அடிகளில் இருந்து ஔவையார் குறிப்பிடும் அறிவும் புகழும் உடையோர் யார்? என்பது தெளிவாக இல்லை. அறிவும், புகழும் ஔவையாருக்கு உரியது எனில் 'ஒண் ஞாயிறு அன்னோன் புகழ் மாயலவே' என்று அதியனின் புகழை ஏன் ஔவையார் பாடியுள்ளார்?

இத்தகைய வினாக்களுக்குத் தீர்வு காண வேண்டுமெனில் புறம்.206 ஆம் பாடலைப் பின்வருமாறு பாகுபடுத்தி அணுக வேண்டும்.

அ) சங்க காலச் சூழலில் புறம். 206

ஆ) தொகுப்புக் காலத்தில் புறம். 206

1.7.1 அ. சங்க காலச் சூழலில் புறம். 206

சங்கப் பாடல்கள் பாணர்மரபு, புலவர் மரபால் கையாளப்படுத்தப்பட்ட காலத்தது என்பதான கருத்தொன்றுள்ளது. ஔவையார் தன்னை ஒரு விறலியாகவே பாவித்துப் பாடல்களை இயற்றியுள்ளார் எனினும் ஔவையாரை விறலியாகக் கொள்வதற்கான வாய்ப்புகள் அதிகமாக இல்லை. அதியனைப் பாடிய புலவர்களும் சாதாரணமானவர்கள் இல்லை என்பதைச் சங்க இலக்கியப் புலவரான அஞ்சியத்தை மகள் நாகையார் என்பவர் குறிப்பிடுவார். அகநானூறு 352 ஆம் பாடலைப் பாடிய இப்புலவர் அதியனைப் பற்றிய அரியதொரு கருத்தைப் பரிமாறியிருக்கின்றார்.

"கடும்பரிப் புரவி நெடுந்தேர் அஞ்சி
நல்இசை நிறுத்த நயம்வரு பனுவல்
தொல்இசை நிறீஇய உரைசால் பாண்மகன்,
எண்ணுமுறை நிறுத்த பண்ணி னுள்ளும்
புதுவது புனைந்த திறத்தினும்."

என்பதாக வரும் இப்பாடலில் வேகமுடைய குதிரைகள் பூண்ட நல்ல இசையை வரையறை செய்து இனிமை மிக்க நூலில் கூறியுள்ள எண்ணின் முறைப்படி இயற்றிய பண்ணைக் காட்டிலும் புதுமையாக இயற்றிய பண்களின் திறத்தைக் காட்டிலும் என்பதிலுள்ள புதுமை என்ன? அதியனின் பாண்மகன் யார்? அகப்பாடலில் உவமையாகப் பாடும் அளவிற்கு இந்நிகழ்வு சங்கச் சூழலில் ஏற்படுத்தியுள்ள மாற்றங்கள் தாம் என்னென்ன என்பது விடை தெரியாத வினாக்களாகும்.

1.7.2 ஆ. தொகுப்புக் காலச் சூழலில் புறம். 206

சங்க இலக்கியம் பாடப்பெற்ற காலம், தொகுத்த காலம், திணை, துறை, கூற்று வகுத்த காலம் எனப் பல்வேறு காலக்கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. புறம். 206 ஆம் பாடலுக்குத் திணை பாடாண், துறை பரிசில் துறை என்பதாகத் திணை, துறை வகுக்கப்பட்டுள்ளன.

பாடாண்திணை என்பது பாடப்படக்கூடிய ஆண்மகனுடைய வீரம், ஒழுக்கம், புகழ் போன்றவற்றைச் சிறப்பித்துச் சொல்வதாக அமைய வேண்டுமென்பர். ஆனால், உரைகாரர்கள் கூற்றுப்படி புறம். 206 அப்படிப்பட்ட பாடலன்று. இப்பாடல் பரிசில் துறையாகவும் இருக்க வாய்ப்பில்லை. இப்பாடலுக்குச் சரியானதொரு திணையைச் சொல்ல வேண்டுமென்றால் காஞ்சித்திணையைக் குறிப்பிடலாம். இக்கட்டுரையில் இடம்பெற்ற சங்க காலச் சூழலில் புறம். 206 என்ற பகுதியில் கூறியது போன்று இப்பாடல் அதியன் இறந்த

நிலையில் ஔவையாரால் உலக நிலையாமையைக் குறித்துப் பாடியதாகக் கொள்ளலாம்.

"பாங்கரும் சிறப்பின் பல்லாற் றானும்
நில்லா உலகம் புல்லிய நெறித்தே" (தொல். 24)

புறம். 206 ஆம் பாடலைக் காஞ்சித் திணையென்றால் உலக நிலையாமையைப் பாடியவர் ஏன் எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே என்று பாட வேண்டும்?

1.8 பாடல் இயற்றப்பட்ட சூழல்

புறம் . 206 ஆம் பாடலின் பொருளைக் கொண்டு அதியன் இறப்பதற்கு முன் இருவர் உறவிலும் விரிசல் ஏற்பட்ட நிலையில் இறுதி நிலையில் வாயிலோயே என்ற பாடலைப் பாடியிருக்கலாமோ என்று எண்ணத் தோன்றுகிறது என்று குறிப்பிடுவார் சண்முகம்.[5]

இப்பாடலின் பொருளைப் பார்க்கும்போது அதியன் இறந்தபின் ஔவையார் பெரு வேந்தனிடம் சென்று அவ்வேந்தனுக்குப் பதிலுரைப்பது போன்று புனையப்பட்டுள்ளது என்பதற்குப் பாடல் அடிகளே சான்றாகின்றன.

"அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென
வறுந்தலை உலகமும் அன்றே"

இவ்வடிகளில் 'அன்றே' என்னும் சொல்லின் இலக்கணத்தைக் குறிப்பிடும்போது குறிப்பொடு தோன்றும் என்கிறார் தொல்காப்பியர். இதன்படி அதியனின் இறப்பையே அறிவும் புகழும் உடையோர் மாய்ந்தென என்று குறிப்பிட்டுப் பின் உலகத்தையும் வெறுத்து மரங்கொல் தச்சன் கைவல் சிறார் = பெருவேந்தன் கையில் இருக்கும் செங்கோல்; இந்த உலகம் = காடு; என்றுரைப்பது போன்ற ஒரு தோற்றம் பாடலில் பயின்று வந்துள்ளமையைக் காணலாம். ஏன் ஔவை 'எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே' என்று கூறினார் என்பது மேலும் ஆராய்தற்குரியது. இவ்வினாக்களுக்கு விடையளிப்பதற்கு முன்னதாக ஔவையாரின் சமயம் பற்றி அறிதல் இன்றியமையாத தாகும். சங்கப் பாடல்களைச் சமூகவியல் கொண்டு அணுகுவதைப் போல் சமயவியலை மனத்தில் கொண்டும் அணுக வேண்டும்.

1.9 ஔவையாரின் சமயம்

ஔவையார் வைதீகச் சமயச் சார்புடையவர் என்பதற்குப் புறம். 367 ஆம் பாடல் ஒன்றே தக்க சான்றாகும். சங்க காலத்திலேயே மேலோர் உலகம் பற்றிய நம்பிக்கை தோன்றிவிட்டது என்பதற்குப் புறம்.204 ஆம் பாடல் சான்று பகர்கின்றது.

புறநானூற்றில் இருபதிற்கும் மேற்பட்ட பாடல்கள் மேலோர் உலகம் பற்றிப் பேசுகின்றன. இம்மேலுலகத்தை இருவேறு முறைகளில் அடைந்துள்ளனர்.

அ. வடக்கிருத்தல்

ஆ. புறம்.239 ஆம் பாடல் குறிப்பிடும் உயர்ந்த சமூக விழுமியங்கள்

வடக்கிருத்தல் என்பது சமணச் சார்புடையது என்பதாகக் குறிப்பிடுவர். பெருங்கற்கால நாகரிகப் பண்பாடுகளில் காணப்படும் உயிர், ஆவி பற்றிய கருத்தாக்கம் சங்கத் தமிழரிடையே இருந்துள்ளது என்பதை வலியுறுத்துகின்றது. வடக்கு நோக்கி உண்ண உணவின்றி இருப்பவர்கள் உயிர் துறந்து துறக்கம் செல்லலாம் என்பதை அறியலாம். இதன்படி வைதீக நெறியின் செல்வாக்கால் தமிழர் தம் வாழ்நாளில் எண்பெருந்திசைகளில் ஒன்றை விடுத்துள்ளனர் எனில் அது வடக்காகலாம். வாழ விருப்பம் இல்லாத ஒருவர் வடக்கிருந்து தன் உயிரை மாய்த்துக் கொள்ளலாம். எனவே எண்திசைகளில் ஒன்று விலக்கம் பெறுகின்றது.

1.10 பொருள் இடைவெளியும் எண்ணெழுத்தியலும்

கவிதைமொழி அமைப்பும் கருத்தாடல் அமைப்பும், படைப்பு அமைப்பும் உடையது. கருத்தாடலில் சில செய்திகள் விடுபடுவதைப் பொருள் இடைவெளி (Semantic Gap) என்பார்கள். இவ்விடுபடும் செய்தியினை வாசகர்தான் உலக அறிவால் விளங்கிக் கொள்ள வேண்டும். அது தான் பொருள் இடைவெளி. தொல்காப்பியம் கூறும் மொழிந்த பொருளோடு ஒன்று அவ்வயின் மொழியாதன முட்டிற்று முடித்தல் என்னும் உத்தியினைக் கொண்டு 'எண்எழுத்தியல்' மரபை மனத்தில் இறுத்தி ஔவையின் 206 ஆம் பாடலை வாசிக்க வேண்டும். அப்படி வாசிக்கும்போது,

"எ(7)த்திசை செலினும் அ(8)த்திசைச் சோறே"

என்பதாக இப்பாடல் உணர்த்தும் கருத்தை வாசகன் அடையலாம். புலவர் மரபு வடக்கிருக்காமலே மேலுலகு செல்லும் தகுதியை உடையவொன்று. ஆயின் மன்னர்களோ, வேந்தர்களோ அவ்வகைப் பட்டவர்களல்லர் என்பதை வலியுறுத்த ஔவையார் பயன்படுத்திய ஆயுதப் பயன்பாட்டில் ஒன்று எண்எழுத்து மரபாகும். இப்புதுமையே அகம்.352 ஆம் பாடல் பாடிய அஞ்சியத்தை எடுத்துக்கூறும் புதுமையாக இருக்கலாம். அஞ்சியத்தைக் கூறுவது பாண்மகன் என்றுள்ளது என்று வினவினால் பாடவேறுபாடு ஆண்களுக்குரியது என்ற பதில் கிடைக்கும்.

9.0 நிறைவுரை

சங்கக் கவிதைகளைப் பல்வேறு சிந்தனைப் புலங்களின் அறிவினைக் கொண்டு வாசித்தல் போலவே எண்எழுத்தியல் மரபையும் மனதில் கொண்டு வாசிக்கும் வேளையில் கூடுதலான ஒரு வாசிப்பு முறையினைப் பெறலாம்.

குறிப்புகள்

1. சு. சிவசந்திரகுமார் - 'தமிழின் கவிதையியலும் எண்எழுத்து மரபும் ஓர் அறிமுகம்', வெளிவராத கையெழுத்துப் பிரதி.
2. தி.நா. சுப்பிரமணியன் - 'பண்டைத் தமிழ் எழுத்துகள்', உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, மறுஅச்சு. 2011, ப. 94.

3. சு. சிவசந்திரகுமார் - 'தொல்காப்பியரின் வண்ணக் கோட்பாடு அடிப்படையில் எண்ணு வண்ணம் : வரையறைச் சிக்கல்கள்', வெளிவராத கையெழுத்துப் பிரதி.

4. ச. அகத்தியலிங்கம் - 'சங்கத் தமிழ் - I', உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், இரண்டாம் பதிப்பு. 2009, ப. 236.

5. செ.வை. சண்முகம், கவிதைக் கட்டமைப்பு', மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 2003, பக். 28-29.

துணை நூல்கள்

1. இளம்பூரணர், தொல்காப்பியம் சொல்லதிகாரம், பாவை பதிப்பகம், சென்னை, 2010.

2. இளம்பூரணர், தொல்காப்பியம் பொருளதிகாரம், கோ. இளவழகன் (பதி.), தமிழ்மண் பதிப்பகம், 2003.

3. நச்சினார்க்கினியம், தொல்காப்பியம் பொருளதிகாரம் - செய்யுளியல், கோ. இளவழகன் (பதி.), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.

4. பேராசிரியம் -2, தொல்காப்பியம் - பொருளதிகாரம், கோ. இளவழகன் (பதி.), தமிழ்மண் பதிப்பகம், சென்னை, 2003.

சங்ககாலத் தமிழர்களின் உணவு முறை

திரு. வீ.அர்ச்சுணன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, மாநிலக்கல்லூரி
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

சங்ககாலத் தமிழர்கள் இயற்கையோடு நகமும் சதையுமாக வாழ்ந்துள்ளனர். சங்க கால மக்கள் இயற்கை உணவினை உண்டு வாழ்ந்து வந்தனர். எந்த நோய் நொடி இல்லாமல் வாழ்ந்துள்ளனர். இயற்கை உணவு முறையின் காரணமாக நீண்ட ஆயுளுடனும், மன வலிமையுடனும் திகழ்ந்தனர்.

இன்றைய நவீனக் கால உணவு முறையில் இயற்கை உணவிற்கு எதிராகப் பலவகை மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. இதனால் மனித இனத்திற்கும், பிற உயிரினங்களுக்கும் பல வகையான நோய்கள் தோன்றிக் கொண்டே வருகின்றன. அதன் விளைவாக மனித ஆயுள் காலம் சராசரி வாழ்நாள் 14600 என ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது. இதற்குக் காரணம் இயற்கையான உணவில் இருந்து இன்றைய உணவு முறையில் ஏற்பட்ட மாற்றமே.

சங்ககாலத் தமிழர்கள் இயற்கையோடும், இயற்கையான உணவோடும், இயற்கை மருத்துவத்தோடும், உணவே மருந்தாகவும் உண்டு வாழ்ந்து வந்தார்கள் என்பது வரலாற்றுச் செய்தியாகும்.

பழங்கள்

பழங்கள் உடலுக்கு ஊட்டத்தையும், ஆற்றலையும் தருவன என்பது உலகச்சான்றோர் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்பட்ட உண்மையாகும். உலகில் வாழ்விற்கு மட்டுமின்றி ஆன்மீக நெறியில் செல்பவர்க்கும் பழங்கள் சிறந்த உணவாகும். புறநானூற்றில் 1.நெல்லிக்கனி, 2. பலாச்சுளை, 3. பனம் பழம், 4.நாவல்பழம், 5.களாப்பழம், 6.துடரிப்பழம் போன்ற பழவகைகள் காணப்படுகின்றன.

நெல்லிக்கனி

நெல்லிக்கனி வைட்டமின் 'சி' என்னும் உயிர்ச்சத்து மிக்கது என்றும் ஒரு நெல்லிக்கனி உண்பது ஐந்து ஆப்பிள் உண்பதற்குச் சமம் என்றும் உணவியல் வல்லுநர்கள் கூறுகின்றனர். நெல்லிக்கனியின் வகைகளை,

'சிறியிலை நெல்லித் தீங்கனி குறியாது' (புறம். 91:9)

என்னும் புறநானூற்று அடி சிறிய இலை கொண்ட பெரிய நெல்லிக்கனியைக் குறிப்பிடுன்றது.

பலாச்சுளை

நம் இலக்கியக் கலைஞர்கள் பலாச்சுளையை அந்நாட்டின் வளத்தைக் குறிப்பதற்காகப் பயன்படுத்தியுள்ளனர் என்பதை

'இரண்டே தீஞ்சுளைப் பலவின் பழம் ஊழ்க்கும்மே' (புறம். 109:5)

என்ற இவ்வடி விளக்குகின்றது.

நாவல்பழம், களாப்பழம், துடரிப்பழம்

'தீம்புளிக் களாவொடு துடரி முனையின்

...

கருங்கனி நாவல் இருந்து கொய்து உண்ணும்' (புறம் 117:9-11)

என்ற இவ்வடிகள் களாப்பழம் புளிப்புச்சுவை உடையது என்றும் நாவற்கனி கருப்பு நிறம் கொண்டது என்றும் சுட்டிக்காட்டியுள்ளன. பழங்களின் தன்மையும் நிறமும் குறிப்பிடப்பட்டுள்ளன. துடரிப்பழம் பற்றிய தன்மையும் நிறமும் சுட்டப்படவில்லை.

கீரை வகைகள்

உலகில் உணவு வகையில் கீரைகள் முதன்மை நிலையை வகிக்கின்றன. கீரைகள் இயற்கையாகக் கிடைப்பினும் அவற்றைப் பதப்படுத்திச் செயற்கை உணவாகத் தமிழர் பயன்படுத்தி வந்திருக்கின்றனர். தொடக்கக் காலத்தில் கீரைகளைப் பச்சையாக உண்ட செய்திகளும் சங்க இலக்கியத்தில் இடம் பெறுகின்றன. குறிப்பாக இலைக்கறி என்பதே கீரைக்கறி எனப் பிங்கல நிகண்டு குறிப்பிடுகிறது. கறிவேப்பிலை, சிறுகீரை, அரைக்கீரை, குப்பைக் கீரை, முருங்கைக்கீரை, வள்ளைக்கீரை, வேளைக்கீரை ஆகியவை கீரை வகைகள்.

கறிவேப்பிலை

இது சங்க காலத்தில் கஞ்சக நறுமுறி என்ற பெயரால் அழைக்கப்பட்டது. மணந்தருகின்ற இலைகளில் கறிவேப்பிலையும் ஒன்று. உணவிற்குச் சுவையும், மணமும் சேர்க்கும் பொருளாக இதனைத் தாளிதம் செய்து பயன் படுத்தியிருக்கின்றனர். இதன் அருமை கருதிக் 'கருவேப்பிலைக் கொழுந்து போல' என்று சிறப்புத்தன்மையைக் குறிப்பிடுவர். கருவேம்பின் இலையும் கறிவேப்பிலையும் ஒன்று எனத் தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகிறது. கருவேம்பினது இலையைச் சேர்ந்து நீண்ட மாமரத்தில் காய்ந்த பசுமையான காய்களுடன் வடுக்களுடன் கலந்து அதை ஊறு கறியாகக் கொண்டு உண்டனர் என்பதை

"கஞ்சக நறுமுறி அளைஇப்பைந்துணர்
நெடுமரக் கொக்கின் நறுவடி விதிர்த்த
தகைமாண் காடி "

என்ற பெரும்பாணாற்றுப்படை அடிகள் விளக்குகின்றன.

குப்பைக்கீரை

குள்ளத்தண்டுக்கீரை என்ற பெயரால் குப்பைக்கீரை இக்காலத்தில் அழைக்கப்படுகிறது. அரைக்கீரை அறுகீரை என்ற பெயர்களில் தமிழ்ப் பேரகராதியில் இடம் பெறுகிறது. ஆனால் சங்க காலத்தில் வறுமையில்வாடிய மக்கள் குப்பைக்கீரையைச் சமைத்து உணவாகப் பயன்படுத்தியிருக்கின்றனர்.

அரைக்கீரை

இக்காலத்தில் அரைக்கீரையைக் கடைந்தும், பொரித்தும் பயன் படுத்துகின்றனர். இதனை அரைக்கீரை என்றும் குறிப்பிடுவர். இதனை,

'அரைக்கீரை நல்வித்தும்'

என்று திருமந்திரம் குறிப்பிடுகிறது.

தண்டங்கீரை

இப்போது பெரும்பான்மையான வழக்கிலுள்ள இதன் இலைகள் அரைக்கீரையை விடப் பல மடங்கு பெரியதானவை. கீரையின் உபயோகம் மிகக்குறைவாகவும், தண்டின் உபயோகம் அதிகமாகவும் உள்ள கீரை வகையான இது கிராமப்புறங்களில் மட்டுமே மிகுதியாகக் காணப்படுகிறது.

முருங்கைக்கீரை

வழக்கிலுள்ள கீரைகளில் தற்போது அரைக்கீரைக்கு அடுத்த நிலையில் இக்கீரை பயன்படுத்தப்படுகிறது. இதன் காயின் உபயோகத்தைப் போலவே இலையும் மிகுந்த அளவு பயன்படுத்தப்படுகின்றது. பத்திய உணவாக உப்பில்லாமல் குழம்பு வைத்து முருங்கைக்கீரையை இட்டு உண்ணும் முறை இன்றைய தமிழகத்தில் வழக்கில் உள்ளது.

முஞ்ஞைக்கீரை

முஞ்ஞைக்கீரை எனக் குறிப்பிடப்படும் முன்னைக்கீரை இப்போது பெரும்பான்மையாக வழக்கில்லை. அது நறுமணமுடையது. குறுநில மன்னர்கள் ஆட்டுக்குட்டிகளைத் தின்றொழித்த பின் எஞ்சிநின்ற சில தளிர் இலைகளைப் முல்லை நிலத்தில் விளைந்த வரகுச்சோற்றுடன் உண்டனர்.

வள்ளைக்கீரை

கொடி வகையைச் சார்ந்த கீரை வகையான இது வயல்களில் வளர்ந்து காணப்படும். கசப்புமிக்க பாகற்காயையும் வள்ளைக் கீரையையும் அதனோடு பலகூட்டுகளையும் சேர்த்துப் பழஞ்சோற்றையும் தமிழ் மக்கள் உணவாக உண்கின்றனர்.

இதனை,

'செறுவின் வள்ளை சிறுகொடிப் பாகல்
பாதிரி ஊழ் முகை அவிழ் விடுத்தன்ன
மெய்களைந்து இன்னொடு விரைஇப்
பழஞ்சோறு அயிலும்'

என்ற புறநானூற்றுப் பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

வேளைக்கீரை

நாயக் கடுகுச் செடி என இதனைத் தமிழ்ப் பேரகராதி பெயரிட்டு அழைக்கிறது. குப்பை மேட்டிலே முளைத்திருக்கும். முன்பு பறிக்கப்பட்ட கீரைத்தண்டின் அடிப்பாகத்தில் புதிதாகத் துளிர்த்திருக்கும் இளந்தளிர்களைப்

பறித்துக் கொண்டு வந்து அவற்றையும் கூட உப்பில்லாமல் தண்ணீரில் போட்டு உலையில் ஏற்றிக் காய்ச்சி உணவாகக் உண்கின்றனர்.

இதைத்தான்

'ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்கல்....
இரும்பேர் ஒக்கலொ டொருங்குடன் மிசையும்'

என்ற சிறுபாணாற்றுப்படைப் பாடல் அடிகள் நவில்கின்றன.

கள் உணவு

மரக்கறியையும், புலாலையும் அவர்கள் விரும்பி உண்பது போலவே கள்ளையும் விரும்பி அருந்தினர். சோழ நாட்டு மன்னனான கரிகாலன் தன்னை நாடிவந்த பொருநனுக்கும் அவன் சுற்றத்தாருக்கும் முதலில் நடந்த களைப்பு தீரப்பருகிய வரை மயங்கச் செய்யும் கள்ளைப் பொற்கலங்களில் அரண்மனைப் பணிப் பெண்களைக் கொடுக்கச் செய்கின்றான்.

இதனை,

'இழை அணி வனப்பின் இன்னகை மகளிர்
போக்கு இல் பொலங்கலம் நிறையப் பல்கால்
....
ஆர உண்டுபேர் அஞர் போக்கிச்
செருக்கொடு நின்ற காலை' (பொருந. 85-89)

என்னும் பொருநர் ஆற்றுப்படைப் பாடல் அடிகள் மூலம் அறிய முடிகிறது.

கிழங்குகள்

கருணை என்பது பொரித்த கருணைக் கிழங்கினைக் குறிப்பதாகும். குறி என்னும் சொல்லும் கருணை என்னும் பொருளில் பங்கினை வகிக்கிறது. கருணைக்கிழங்கு பொரிக்கறியுடன் செந்நெல் சோற்றுக் திரளணையைத் தெய்வத்திற்கு இடுகின்ற போது அவற்றை உண்ண வந்த காக்கையினுள் பேடை நடுங்குகின்ற குஞ்சுகளைத் தன்சிறகால் தழுவிக் கொண்டு பின்னர்க் கருணைக் கிழங்கோடு சமைக்கப்பட்ட செந்நெல்லின் வெண்சோற்றை அவை உண்டன என்ற செய்தியை.

'கொடுங்கண் காக்கைக் கூர்வாய்ப்பேட்டை
நடுங்குசிறைப் பிள்ளை தழீஇக் கிளைபயிர்ந்து
கருங்கண் கருணைச் செந்நெல் வெண்சோறு
கூருடைப் பலியொடு கவரி'

என வரும் பாடல் விளக்கம் தருகின்றது.

அரிசி

மருதத்திணையில் உணவுக்குரிய அரிசியால் உண்டாக்கப்பட்ட சோற்றினை விரும்பி உண்டனர் என்பதனை,

'புகர்வை அரிசிப் பொம்மற் பெருஞ்சோறு' (நற்.60)

என்று தூங்கலோரியார் பாடிய பாடல் மூலமாக உணரலாம்.

தினை

நாம் உண்ணக்கூடிய உணவில் தினையும் ஒரு வகை உணவு. இவ்வுணவை நற்றிணையில்,

'ஏனல் காவலர் மாவீழ்த்துப் பறித்த'
'கொடிச்சி காக்கும் அடுக்கற் பைந்தினை'

என்ற பாடல் அடிகள் உணர்த்தும்.

அசைவ உணவு

அசைவ உணவு உண்ணும் வழக்கம் அக்காலத்தில் சிறப்பாக இருந்துள்ளமையைப் புறநானூற்றுப் பாடல் அடிகள் பதிவு செய்கின்றன.

'மட்டுவாய் திறப்பவு மைவிடை வீழ்ப்பவும்
அட்டான் றானாக் கொழுந்துவை யூன்சோறும்
பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி' (புறம்.113:1-3)

ஆட்டுக்கிடாயைச் சமைத்துச் சோற்றுடன் உண்ட செய்தியை இப்பாடல் அடிகள் குறிப்பிடுகின்றன.

சுறாமீன்

'மோட்டிரு வராஅற் கோட்டுமீன் கொழுங்குறை' (புறம்.399:5)

சுறாமீன் உண்ணும் வழக்கம் இருந்துள்ளமை அறியலாம். இறைச்சி, மீன் போன்றவற்றைச் சுட்டு உண்ணும் வழக்கம் பண்டைக் காலத்தில் இருந்துள்ளமையை.

'புலவு நாற்றத்த பைந்தடி
பூநாற் றத்த புகைகொளீஇ யூன்றுவை
கறிசோ றுண்டு வருந்துதொழி லல்லது' (புறம். 14:12-14)

என்றும்

'ஒழிமடல் விறகிற் கழிமீன் சுட்டு'

என்னும் பாடல் அடிகளின் மூலம் அறியலாம்.

ஆட்டிறைச்சி

'மையூன் மொசித்த ஒக்கலொடு' (புறம் .96:7)

என்னும் இப்பாடலடி ஆட்டிறைச்சியைச் சுற்றத்துடன் இணைந்து உண்ட செய்தியைப் பதிவு செய்கின்றது.

மான்கறி

பண்டைக்காலத்தில் மான்கறியை உண்ணும் வழக்கம் மக்களிடம் இருந்துள்ளமையை

'கானுறை வாழ்க்கைக் கதநாய் வேட்டுவன்
மான்றசை சொரிந்த வட்டியு மாய்மகள்' (புறம். 33:1-2)

என்னும் அடிகளின் மூலம் அறியலாம்.

ஆமைக்கறி

ஆமைக்கறியினை உண்ணும் வழக்கம் இருந்துள்ளமையை,

'களமர்க் கரித்த விளையல் வெங்கள்
யாமைப் புழுக்கிற் காமம் வீடவாரா' (புறம். 212:2-3)

என்னும் பாடல் அடிகளின் மூலம் அறியலாம்.

மது உண்ணும் வழக்கம்

புறநானூற்றுக் காலத்தில் மது உண்ணும் பழக்கம் குற்றமாகக் கூறப்படவில்லை. மதுவினை விரும்பிப் பண்டைத் தமிழர் உண்டனர்.

'யவனர், நன்கலந் தந்த தண்கமழ் தேறல்
பொன்செய் புனைகலத் தேந்தி நாளும்' (புறம் .56:18-19)

என்றும்

'தீஞ்செறி தசும்பி தொலைச்சினன்'

என்னும் பாடலடியும் மதுவை விரும்பி உண்டமையைக் குறிப்பிடுகின்றன.

முடிவுரை

சங்க காலத்தமிழர்கள் இயற்கையான உணவு வகைகளை அவற்றின் அளவு அறிந்து உண்டனர், அதனால் நோயற்ற வாழ்க்கையைப் பெற முடியும். இயற்கையான உணவு வகைகளையே பண்டைத் தமிழர் உண்டு உயிர் வாழ்ந்து வந்தனர். ஊன் உணவு அவர்களின் விருப்பமான உணவாக இருந்துள்ளது. கள் உண்பதையும் அவர்கள் பெருமையானதாகக் கருதினர். கொடையைப் பற்றிக் குறிப்பிடும் இடங்களில் கூட மதுவினைக் கொடையாக வழங்கும் வழக்கம் மக்களிடம் காணப்பட்டது.

ஆற்றுப்படை நூல்களில் இசைக் கலைஞர்கள்

முனைவர் சௌ.பா.சாலாவாணிஸ்ரீ
உதவிப்பேராசிரியர்
ஸ்ரீ கிருஷ்ணசாமி மகளிர் கல்லூரி
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

செவ்வியல் இலக்கியமாம் பத்துப்பாட்டில் மூவேந்தர்கள், குறுநில மன்னர்கள், கடையெழு வள்ளல்கள் போன்றவர்களின் வீர வரலாற்றுக்கு மத்தியில் தமிழ்ப் பண்பாட்டினையும், நாகரிகத்தினையும் தமிழர் தம் வாழ்வியல் விழுமியங்களையும் உலகிற்குப் பறைசாற்றிய, இசைக் கலைஞர்களைப் பற்றிய குறிப்புகளும் மிகுந்து காணப்படுகின்றன.

திருமுருகாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, பொருநராற்றுப்படை, மலைபடுகடாம் (கூத்தராற்றுப்படை) போன்ற ஆற்றுப் படை இலக்கியங்களில் இசை பற்றிய குறிப்புகளும் இசைக் கருவிகள், தமிழரின் பழம்பெரும் இசைக்கருவியான யாழ் பற்றிய வருணனைகளும், இசைத்துப்பாடும் தொழிலையுடைய பாணரின் வாழ்க்கை முறைகளும், பாணரின் பாட்டு வகைகளும் தெளிவாகக் கூறப்பெற்றுள்ளன.

ஆற்றுப்படை முறை குறித்துத் தொல்காப்பியம் புறத்திணையியலில் குறிப்பிடுகிறது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க் கறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்" (நூற்பா 36)

கூத்தர், பாணர் , பொருநர், விறலி என்னும் நால்வகைக் கலைஞர்களும் ஆற்றுப்படைக்குரியவர் எனத் தொல்காப்பியம் கூறுகின்றது. தொல்காப்பியர்க்கு முன்னரே நம்நாட்டில் பன்னெடுங்காலமாக இத்துறைப்பாடல்கள் (ஆற்றுப்படை) இருந்திருத்தல் வேண்டும் என்று கருத இவ்வடிகள் இடம் தருகின்றன.

இசையும் கலைஞர்களும்

இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழில் இடையே நடுநிலையோடு திகழும் தமிழர்களின் வாழ்வியலோடு அதாவது பிறப்பு முதல் இறப்பு வரை பின்னிப் பிணைந்த ஒன்றாகக் காணப்படுகின்றது எனலாம்.

செவிவழிப் புகுந்து இதயநாடிகளைத் தடவி உயிரினங்களை இசையவும், பொருந்தவும் வைக்கின்ற பொழுது இனிய ஒலிகள் இசை என்ற பெயரைப் பெறுகின்றன என்பது ச.வே.சுப்பிரமணியன் கூறும் கருத்தாகும்.

"வடிம்பலம்ப நின்றானும் அன்றொருகால்
ஏழிசை நூற்சங்கம் இருந்தாலும்"

என்ற பாடலை மேற்கோள்காட்டி, பாண்டிய மன்னன் வடிம்பலம் நின்ற நன்மாறன் ஏழிசைகளைப் பற்றி அறிந்தவன் என்றும் சங்கம் அமைத்து இசை ஆய்ந்தவன் என்றும் செந்துறைமுத்து தமிழ் இசையின் தொன்மையினை எடுத்துரைக்கிறார். மற்றொரு சான்றாக,

"முரசு முழங்குதானை மூவரும் கூடி
அரசவை இருந்த தோற்றம் போலப்
பாடல் பற்றிய பயனுடைய எழாஅல்
கோடியர் தலைவ கொண்ட தறிந'"

என்னும் பொருநராற்றுப்படையில் திருமாவளவனின் பெருமையைக் குறிப்பிடும் புலவர் மூடத்தாமக் கண்ணியார் அவனுடைய அவையில் இசைப்பாடல் பெருமையாகப் பாடப்பெற்றமையினைக் குறிப்பிடுகின்றார்.

தமிழிசையின் தொன்மையை உணர்த்தும் இசைத் தமிழ் நூலாகிய பெருநாரை பெருங்குருகும் பிறவும் தேவ விருடி நாரதன் செய்த பஞ்ச பாரதீய முதலாவுள்ள தொன்னூல்களும் இருந்தன என்னும் அடியார்க்கு நல்லார் கூற்றால், வடமொழி இசைநூல்களுக்கெல்லாம் தமிழ்நூல்களே முதனூலென அறிக என ஞா.தேவநேயப்பாவாணர் கூறுகின்றார்.

தமிழரது இசை மிகப் பழமையானது, முதன்மையானது. உலகில் முதன்மையான இசையைக் கண்ட தமிழர், தம் குரல் ஒலியாலும், இசைக் கருவிகளினாலும் இசையினை உருவாக்கினார்கள்.

அத்தகைய இசையினைப் பிறப்பிக்கச் செய்யும் கலைஞர்களான பாணர், கூத்தர், பொருநர், பாடினி, விறலியர், ஆகியவர்கள் மன்னன் அல்லது வள்ளல் ஒருவரிடம் தாம் பெற்ற பரிசிலைத், தம்மை எதிர்நோக்கி வந்த இரவலர்களுக்குக் கூறி ஆற்றுப்படுத்தியதாக வரும் பாடலில் இசைக் கலைஞர்கள் வறியவராக இருப்பினும் பிறரிடமும் வறுமை இருத்தல் கூடாது என்ற உயர்ந்த நோக்கம் பெற்றவர்களாக இருப்பதை ஆற்றப்படை இலக்கியம் வெளிப்படுத்தும் தமிழரின் மரபுச் செய்தி எனலாம். பொதுவாக வாய்ப்பாட்டாகப் பாடும் கலைஞர்களையோ, அல்லது இசைக்கருவிகளை இசைக்கக்கூடிய கலைஞர்களையோ நாம் இசை இளைஞர்கள் எனலாம்,

பண்டைய தமிழர்களின் மாண்பினைக் கூறும் ஆற்றுப்படை நூல்களில் காணலாகும் பாணர், பாடினியர்களை ஆய்வது இங்கு நோக்கமாக அமைகின்றது. சங்க இலக்கியத்தில் காணப்படும் இசைப் பாடல்கள் மூன்று நிலைகளில் அமைந்துள்ளன: அவை ஆண்களுக்குரியன, பெண்களுக்குரியன, இருபாலர்களுக் குரியன .

தொல்காப்பியமும் இசையும்

தொல்காப்பியரும் தம் நூற்பாவின் பல இடங்களில் இசை பற்றிய குறிப்பினை இட்டுச்செல்கின்றார். அன்பின் ஐந்திணையை வகுத்த தொல்காப்பியர்

அதில் திணை ஒழுக்கங்களைக் கூறுமிடத்துத் திணைக்கான இசைக் கருவிகளையும், பண்ணினையும், யாழினையும் குறிப்பிட்டுச் சென்றுள்ளார். மற்றும் பண், திறம், வண்ணம் ஆகியவை பற்றிய செய்திகளும் இடம்பெற்றுள்ளன,

பண்ணினைப் பண்ணுபவன் பாணன் எனப்பட்டான். அதன் பெண்மகளை பாடினி என மொழிந்தனர்.பண் என்பதற்கு அமைவு, இசைப்பாட்டு, தகுதி, நிந்தை, நரம்புள்ள வீணை எனப் பல பொருள்களைத் தமிழ் மொழி அகராதி கூறுகின்றது. இசையின் உறுப்பாகிய பண்ணே மனிதனை நெறிப்படுத்தக் கூடிய ஆற்றல் பெற்றது எனலாம்.

'பண் இனிமையான உணர்வுத் தன்மைகளைத் தன்னுள்ளே கொண்டது. பண் என்பது மனித மனத்தைக் கவரும் ஆற்றலுடையது என்று ஏ.என் பெருமாள் பண் பற்றி விளக்கம் தருகிறார். இசைக் கலைஞர்களாகத் தொல்காப்பியர் எழுவரைச் சுட்டுகிறார். வேலன், சூதர், கூத்தர், பாணர், பொருநர், விறலியர், பாடினி (தமிழ் நாடக வகையும் வரலாறும்).

இவ்வாறு வரும் எழுவரைச் சங்க நூல்கள் 20 இசைக் கலைஞர்களாக வரித்துக் காண்கின்றன. இக்கலைஞர்களின் முன்னோடிக் கலைஞர்கள் ஆதித் தமிழ்க்குடி மக்களுமான துடியர், பாணர், பறையர், கடம்பர் ஆகிய ஆதிக் கலைக்குடியினர் நால்வர் என முனைவர் வெ.மு. ஷாஜகான்கனி குறிப்பிடுகின்றார். இங்கு ஆய்வு சுருக்கம் கருதிப் பாணர், பாடினியின் செயல்கள் ஆராயப்பட உள்ளன.

ஆற்றுப்படையில் இசைக்கருவிகள்

பண்டைய தமிழர் கலைச் சிறப்புக்குச் சான்றாக அமைவது அவர்கள் உருவாக்கிய இசைக்கருவிகள் எனலாம்.இசையெழுப்பும் வாயில்களைக் கொண்டு நரம்புக்கருவி, துளைக் கருவி, கஞ்சக்கருவி எனப்பிரிக்கலாம்.

- சங்கு, முரசு, தொண்டகப்பறை - திருமுருகு 119-121,197
- தடாரி, தண்ணுமை, குழல், யாழ் - பெரும்பாண்144,179,182
- முழவு, ஆகுளி, கஞ்சதாளம், கொம்பு,நெடுவாங்கியம், குறுந்தூம்பு, குழல், கரடிகை, எல்லரி, பதலை - மலைபடு 2-12

இதில் பறை வகையைச் சார்ந்த கருவிகள் சல்லி, எல்லரி, கரடி, ஆகுளி ஆகும். மத்தளத்தைச் சார்ந்தவை தண்ணுமை, முழவு ஆகும். குறுந்தூம்பு நரம்பு வகைக் கருவியாகும். சங்க காலத் தமிழ்மக்கள் பலவிதமான பண்களைத் தங்கள் இசையறிவு நுட்பத்தில் உருவாக்கி அவற்றை வாயால் பாடுவதுடன் இசைக் கருவிகள் வாயிலாகவும் இசைத்து மகிழ்ந்துள்ளனர்.

பாணர்

பாணர் என்போர் தமிழிசையை முறையாகப் பயின்று. இசைபாடி வாழ்க்கையினை நடத்தி இசைத்தமிழைப் போற்றி வளர்த்தார்கள். இவர்கள் பண்டைய தமிழ்க் குடியினர் என்றும் அழைக்கப்பட்டனர்.

"ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயனெதிரச் சொன்ன பக்கமும்" (தொல். புறம்.36)

என தொல்காப்பியர் ஆற்றுப்படையின் இலக்கணம் வழி பாணர் குடியினரை வெளிப்படுத்துகிறார்.

"பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்" (தொல். கற்பு. 9)

"பாணன் கூத்தன் விறலி " (தொல் .செய். 188)

பாணர்களை இசைக் கலைஞர்களின் வரிசையில் கொண்டு சேர்க்கிறார்.

பாட்டு என்றும், யாழ் என்றும் இசை என்றும் பொருள்படும் பண் என்னும் சொல்லின் அடிப்படையில் பிறந்தது தான் பாண் என்ற சொல். இவர்களை இசைப் பாணர், யாழ்ப்பாணர், மண்டைப் பாணர் என மூவகைப்படுத்தினார் தொல்காப்பியர் எனப் பொருளதிகாரச் சூத்திர உரையில் நச்சினார்க்கினியர் கூறுகிறார். இசைப்பாணர் என்போர் இராகத்துடன் பாடக்கூடிய வாய்ப்பாட்டுக்காரர். யாழ்ப்பாணர் என்பவர் யாழினை இசைத்துப் பாடக்கூடியவர். மண்டைப் பாணர் என்போர் மண்டை என்னும் உண் கலத்தையுடையோர் என்பதாகப் புறநானூற்றுப் பாடல்களில் குறிப்புகள் காணப்படுகின்றன.

பாணரும் யாழும்

பாணர் இசைக்கருவியான யாழ் மற்றும் யாழோர் என்ற சொல்லாட்சிகள் தொல்காப்பியத்தில் வந்துள்ளன.

"செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ" (தொல்.அகம்.18)

"துறைமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே" (தொல்.களவு.1)

"முதலொடு புணர்த்த யாழோர் மேன" (தொல்.களவு.15)

என (தமிழ் நாடக வகையும் வரலாறும்) யாழ்ப்பாணர்கள் சிறுபாணர், பெரும் பாணர் என இருவகைப்படுவர். சிறிய யாழை இசைத்துப் பாடுவோர் சிறுபாணர் என்றும் பெரிய யாழினை இசைத்துப் படுவோர் பெரும் பாணர் என்றும் அழைக்கப்பட்டனர்.

"இன்குரல் சீறியாழ் இடவயின் தழீஇ" (சிறுபாண். 35)

என வரும் சிறுபாணாற்றுப்படை வரியும்

"இடனுடைப் பேரியாழ் முறையுளிக் கழிப்பி" (பெரும். 462)

என வரும் வரியும் சிறிய யாழ், பெரிய யாழ் எனக் குறிப்பிடுகின்றனர். இவற்றை ஒட்டியே அறிஞர்கள் இவ்வாறு வகுத்திருக்கலாம்.

யாழில் வல்ல பாணருக்குப் பரிசாக வழங்கப்பட்ட ஊரே யாழ்ப்பாணம் என்று இலங்கை வரலாறு கூறுவதாகக் கூறுவர் இரா. இளங்குமரன்.

பாணரும் வறுமையும்

பாணர்கள் இசையில் உயர்ந்தவர்களாக இருப்பினும் செல்வத்தில் மிகவும் வறியவர்களாகவே இலக்கியங்கள் சுட்டுகின்றன. தங்களது ஏழ்மை நிலையினை நீக்க யாழினைத் தோளில் அணிந்து கொண்டு மனைவியுடன் சுற்றம் சூழ மன்னர் அவைக்குச் சென்று பாடி மன்னர்களை மகிழ்வித்தனர்.

சிறுபாணாற்றுப்படை பாணன் யாழினை வாசித்து அரசனைப் புகழ்ந்து பாடுவதை விவரிக்கின்றது (221-235). மன்னன் கொடுக்கும் பரிசிலைக் கொண்டே தங்கள் வாழ்க்கையினை நடத்திவந்துள்ளனர்.

இவர்கள் பரிசில் பெறச் சொல்லும் மன்னனின் மாண்பு, ஊர் வளமை, கொடைச்சிறப்பு, போரில் பெற்ற வெற்றி போன்ற இன்ன பிற தகவல்களையும் தங்கள் பாடல்களில் பதிவு செய்வர். இத்தகைய சிறப்பினை வெளிப்படுத்துவதாலேயே புலவர் பெருமக்களும் ஆற்றுப்படை நூல்களை எழுதுவதில் நாட்டம் கொண்டனர்.

"பொன்வார்த் தன்ன புரிஅடங்கு நரம்பின்
தொடை அமை கேள்வி இடவயின் தழி" (பெரும். 15&16)

பாணர் மிக வறியவர்; தம் குழுவினரோடு கடும் பசியில் இருப்பது அவர்களின் வழக்கமாக இருந்துள்ளது.

"மடிவாய் தண்ணுமை நடுவண் சிலைப்ப" (பெரும். 144)

பாணர் யாழோடு தண்ணும்மை என்னும் இசைக் கருவிகளையும் வாசித்துள்ளனர்.

பாணர்கள் இசைக் கலைஞர்களாக இருந்த போதிலும் சமூகத்தில் அவர்களுக்கு நன் மதிப்பு காணப்பட்டது. இவர்கள் ஊர்விட்டு ஊர் பெயர்ந்து வாழும் வாழ்வியலைக் கொண்டவர்கள். உறவினர்களைப் போற்றிப் பேணும் தன்மையினை அறிந்தவர்கள்.

அகத்திணையில் பாணர்

அன்பின் ஐந்திணையில் இடம் பெறும் தலைமை மாந்தர்களின் வாழ்க்கையில் தொடர்புடையவர்களாகத் தொல்காப்பியர் பன்னிருவரைப் பட்டியலிடுகின்றார். அதில் பாணரும் பாடினியும் சிறப்பிடம் பெறுகின்றனர்.

தலைவன் தலைவியைப் பிரிந்துறையும் காலங்களில் தலைவியின் நிலையை எடுத்து கூறும் தூதுவனாகவும் ஊடலைத் தீர்ப்பவனாகவும் செயல்படுவான் என்பதைத் தொல்காப்பியர்

"நிலம் பெயர்ந்து உரைத்தல், அவள்நிலை உரைத்தல்
கூத்தர்க்கும் பாணர்க்கும் உரிய என்ப" (தொல். 1115)

என்னும் நூற்பா இதனைச் சுட்டுகின்றது.

உழவுத்தொழில்

பாணர்கள் தங்களுக்குப் பரிசிலாகக் கிடைத்த நிலத்தில் உழவுத் தொழிலும் செய்து வாழ்ந்துள்ளனர். இந்நிகழ்ச்சியினை மலைபடுகடாம் பாடல் பதிவு செய்துள்ளது.

"பராவரு மரபில் கடவுள் காணின்
தொழாதிர் கழியின் அல்லது வறிது
நும்இயம் தொடுதல் ஓம்புமின் " (மலைபடு. 230-232)

எனும் பாடல் வெளிப்படுத்துகிறது.

மீன் பிடித்தல்

பாணர்கள் மீன்பிடித் தொழிலிலும் ஈடுபட்ட செய்தியினை அறியமுடிகிறது.

"நெடுங்கழைத் தூண்டில் நடுங்கநாண் கொளீஇ" (பெருபாண். 285)

பாணர் மீன் பிடிக்கும் வழக்கமும் உடையவர்கள். எனவே, மீனைப் பிடித்தற்குரிய நெடிய தூண்டிற்கோலும், தூண்டிலில் மாட்டுவதற்காகத் தன் தோளில் ஏந்திய பையில் மீன் பிடிப்பதற்கான இரையினை வைத்தவன் என ஆற்றுப்படையில் செய்தி இடம்பெறுகின்றது.

பாணரும் பரிசும்

பாணர்கள் தம் வாழ்க்கையில் வறுமையுற்று இருந்தாலும், மன்னர்களிடம் பரிசாகப் பொன்னும், பொருளும் மட்டும் பெறவில்லை. அவர்கள் தங்கள் திறமைக்கு ஊர்களையும், நாட்டினையும் பரிசாகப் பெற்றது அறியப்படுகின்றது. புறநானூற்றுப் பாடல் ஒன்றில்,

"பூவா வஞ்சியும் தருகுவன்; ஒன்றோ?
...
மாடமதுரையும் தருகுவன்; எல்லாம்" (புறம். 32;2&5)

இரவலர்க்கு வஞ்சியும் மதுரையும் தருகுவன் என்பதாலும் பாணர் சிறப்பு அறியப்படுகின்றது. இதில் பரிசிலர் அரசன் புகழைப் பாடினால் ஊரையும் பரிசாகத் தருவதாகக் கூறும் நிலையில் இருந்து, சமூகத்தில் பாணருக்கும் இசைக்கும் உள்ள உயர் இடம் வெளிப்படுகின்றது. மற்றொரு பாடலில்,

"பேர்யாழ் முறையுளிக் கழிப்பி நீர்வாய்த்
தண்பணை தழீஇய தளரா இருக்கை
நன்பல் ஊர நாட்டொடு, நன்பல்
வெரூஉப் பறைநுவலும், பரூஉப்பெருந் தடக்கை"

சங்க அரசர் யாழ்ப்பாணர்க்குக் கொடுக்கும் முறைமைகளைத் தந்துவிட்டு, நீர் வளமிக்க மருத நிலம்சூழ்ந்த அசையாத குடியிருப்பினையுடைய நல்ல பல ஊர்களையுடைய நாடுகளுடன் பெரிய வளைந்த கையினையும் உடைய நல்ல பல யானைகளையும் பாணருக்குத் தந்துள்ளனர்.

பாடினி

பாணரின் குலமகளாகப் பாடினியைக் குறிப்பிடுவர். பாணனின் மனைவி பாடினி எனப்படுவாள். மன்னவன் அவையில் பாணர் பாடும் பொழுது பாடினி நடனமே செய்வாள். பாடினி யாழ் வாசிக்க மாட்டாள். நடனம் ஒன்றே அவள் புரியும் செயல் என இசையியல் நூல் கூறுகின்றது. பாடினி தொல்காப்பியத்தில் ஓர் இடத்தில் மட்டும் சுட்டப்படுவதைக் காணலாம்.

"தோழி தாயே பார்ப்பான் பாங்கர்
பாணன் பாடினி இளையர் விருந்தினர்
கூத்தர் விறலியர் அறிவர் கண்டோர்
யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப" (தொல். கற்பு. 52)

விறலியர் என்பார் பாடினி என்பாரிலிருந்து வேறுபட்டவர் என்கிறார் முனைவர் வெ.மு ஷாஜகான்கனி. வெ.ப.கரு.இராமநாதன் செட்டியார் விறலியைக் குறிக்கும் மற்றொரு பெயர் பாடினி என்று கூறுவர் என்பதனையும் தம் நூலில் பதிவு செய்துள்ளார்.

வறுமையில் இருந்தாலும் பெண்கள் தங்கள் குலத் தொழிலிலிருந்து திரியாது கற்பொழுக்கம் உடையவர்களாக விளங்கினர் என்பதற்குச் சான்றாக சிறுபாணாற்றுப்படையில்

"முல்லை சான்ற கற்பின் மெல்லியல்"

என்ற பாடல் வரி மேற்கூறிய கருத்தை உணர்த்துகின்றது. பாடினி பரிசில் பெறச் செல்லும் வழியில் காடுறை தெய்வத்திற்குத் தன் கடனைக் கழிக்கும் முகமாக வழிபாடு நடத்தியுள்ளாள்.

"பாடி பாணிக்கு ஏற்ப, நாள்தொறும்
களிறு வழங்கு அதர்க்கானத்து அல்கி
இலைஇல் மராஅத்த எவ்வம் தாங்கி" (பொரு. 48-50)

விறலியைப் போலவே பாடினியும் தன்னை ஒப்பனை செய்துள்ளாள் என்று பொருநராற்றுப்படை(47-49) கூறுகிறது.

மலைபடுகடாம் நூலில் பாணர்களுக்கு இணையாகப் பாடினி தேரும் யானையினையும் பரிசாகப் பெற்றுள்ளது வெளிப்படுகின்றது. மேலும் பாடினி தன்னைச் சிறந்த முறையில் ஒப்பனை செய்துள்ளதும் அறியப்படுகின்றது. பாணரின் வாழ்க்கையில் சரிபாதிப் பங்கினைப் பாடினியும் பெற்றுச் சிறக்கிறாள்.

தொகுப்புரை

பாணர்கள் யாழிசையுடன் பாடுவதுடன் இவர்கள் இறை பக்தியினைக் கொண்டவர்களாகவும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளனர். பயணம் மேற்கொள்ளும் போது வழியிடைத் தெய்வங்களை வழிபட்டது பதிவு செய்யப்பட்டுள்ளது. குழற்பாணர் என்ற பாணர் வகையும் இருந்தது வெளிப்படுகின்றது.

பாணர்கள் ஈகைப் பண்பு மிகுந்தவர்களாக இருந்துள்ளனர். சுற்றம் போற்றலைத் தங்கள் கடமையாகக் கருதினர். தாம் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம் என்னும் கொள்கையுடையவர். அவர்களின் தொழிலான இசைக் கருவிகளை இசைக்கக்கூடிய பான்மையினையும், இனிமையாகப் பாடக்கூடிய ஆற்றலையும் பாணர், பாடினி பெற்றிருந்தனர்.

முத்தமிழாகப் போற்றப்படும் தமிழ் மொழி மன்னர்களும், சமூகமும் இசையினை விரும்பி ஆதரித்தனர். அக நூல்களில் பாணர்கள் தலைவனுக்குத் தூதாகவும் சென்றுள்ளனர். இசைத் தொழில்களுடன் பிற தொழில்களையும் செய்தனர்.

பன்னிரண்டாம் நூற்றாண்டுவரை, இசைப்பாணரும் யாழ்ப் பாணரும் குழற்பாணரும் மண்டைப்பாணரும் நால்வகைப் பாணரே பெரும்பாலும் தமிழ்

நாட்டில் இசைவாணராயிருந்து தமிழிசையைப் போற்றி வந்தனர். பாண் சேரியில் பாட்டுப் பாடுகிறதா? என்னும் பழமொழியும், திருமுறைகண்ட சோழன் திருநீலகண்ட யாழ்ப்பாணர் மரபில் வந்த ஒரு பெண்ணைக் கொண்டு தேவாரத்திற்கு இசை வகுப்பித்தமையும், இதை வலியுறுத்தும். ஆரிய குலப்பிரிவினை ஏற்பட்டபின், பாணர் தீண்டாதவராகித் தம் தொல்வரவுப் பாண்தொழிலை இழந்தனர் எனப் பாணர்களின் இன்றைய நிலை குறித்து ஞா.தேவநேயப்பாவாணர் விவரிக்கின்றார்.

தமிழர்களின் வரலாற்றில் பாணர், பாடினி வாழ்க்கைக் குறிப்பிடத் தக்கதாகும். சங்க இலக்கியங்களில் வரும் இரவலர் கலைஞர்கள் யாவரினும் மிகுதியாகப் பல பாடல்களில் இடம்பெற்றவர் பாணர் ஆவர்.

துணை நூல்கள்

1. தமிழ் நாடக வகையும் வரலாறும் - முனைவர் வெ.மு.ஷாஜகான்கனி.
2. இசையியல் - வெற்றிச் செல்வன்.
3. பண்டைத் தமிழ் நாகரீகமும் பண்பாடும் - ஞா.தேவநேயப்பாவாணர்.

சங்ககாலப் போர் நெறியும் தமிழரின் வீழ்ச்சியும்: பண்பாட்டியல் ஆய்வு

முனைவர் ஏ.எழில்வசந்தன்
முனைவர்பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு நடுவண் நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

தொல் தமிழரின் போர் இலக்கணத்தைத் தொல்காப்பியம் வெட்சி, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை எனும் ஐந்து நிலைகளில் புலப்படுத்துகின்றது. பண்டைத் தமிழரின் போர்க்களச் செய்திகளைப் சங்க இலக்கியமான புறநானூறு பதிவு செய்துள்ளது. போர்க்களத்தில் புகழுக்காக உயிரைக் கொடுக்கும் பண்பு பண்டைத் தமிழரிடம் மேலோங்கி நின்றது. இதனால் வீரமும் காதலும் சங்கத் தமிழருடைய வாழ்க்கையில் முதன்மை இடம்பெற்றிருந்தன. அதனால் சங்க காலம் தமிழகத்தின் வீரயுகமாகப் போற்றப்படுகிறது. 'ஒருவனை ஒருவன் அடுதலும், அழித்தலும் புதுவது அன்று; இவ்வுலகத்து இயற்கை' என்பது பண்டைத் தமிழரின் நம்பிக்கையாகும். போரில் வீர மரணம் அடைந்தோர்க்கு நினைவுச் சின்னமாக நடுகல் நாட்டி வழிபாடு செய்வது பண்டைத் தமிழரின் வழக்கமாகும். எனினும் போரிடுவதற்குரிய நெறிமுறைகளை அவர்கள் நன்கு வரையறுத்து இருந்தனர். அத்தகைய நெறிமுறைகள் போர் அறங்களாகக் கருதப்பட்டன. அவர்கள் கடைப்பிடித்த போர் அறமே வழிவழியாக வந்த தமிழர்களுக்கும் பின்னடைவைத் தந்தது என்பது இவ்வாய்வாளரால் இக்கட்டுரையில் முன் மொழியப் பெறுகின்றது.

பண்டைத்தமிழ் மன்னர்களின் போர் எல்லையும் பெருமையும்

நீண்ட நெடுங் கடற்கரையை இயல்பாகப் பண்டைத் தமிழகம் பெற்றிருந்தது. இதனால் தமிழ்மக்கள் நெடுந்தொலைவில் உள்ள நாடுகளோடு வாணிகத் தொடர்பும், பண்பாட்டுத் தொடர்பும் கொண்ட கடல் மறவராய்ச் சிறப்புற்று விளங்கினர். இந்திய மக்களுள் தென்னாட்டவரே கிறித்துவ ஆண்டின் தொடக்கத்தில் மேற்கத்திய நாடுகளோடும், கிழக்காசிய நாடுகளோடும் நெருக்கமான வாணிகத் தொடர்பு கொண்டிருந்தனர் (A Survey of Indian History, p.73) என்று கே.எம்.பணிக்கர் மொழிந்துள்ளமை தமிழரின் கடலக வாழ்வின் சிறப்பினை வெளிப்படுத்துகிறது.

இன்று கீழை நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் சில பகுதிகளில் தமிழ்ப் பண்பாட்டின் சின்னங்கள் பல காணப்படுகின்றன. அவை கடலக வாழ்வின் மூலம் அந்நாடுகளோடு பண்டைத் தமிழர்கள் கொண்ட தொடர்பினால் அமைந்தவை ஆகும்.

பிற்காலச் சோழப் பேரரசர்கள் கிழக்குக் கடற்கரை முழுவதையும் தங்கள் ஆட்சிக்குள் கொண்டு வந்தனர். ஆற்றல் மிக்க கடல் மறவரைக் கொண்டு வலிமைமிக்க மரக்கலங்களை ஆயிரக் கணக்காக அக்கடலில் செலுத்திப் பர்மா, மலேயா, ஜாவா, சுமத்திரா போன்ற நாடுகளின் மீது படையெடுத்துச் சென்று அவர்கள் வாகை சூடினர். இந்திய நாட்டை ஆண்ட வேறெந்த அரச மரபினரும் கனவில் கூடக் கருதாத கடல் கடந்த பேரரசினைச் சோழர் குடியில் தோன்றிய மாபெரும் மன்னனான இராசேந்திரன் நிறுவ முயன்றான் என்னும் செய்தி வியத்தற்குரியது.

இவையாவும் தமிழர்கள் கடலக வாழ்வில் பெரிதும் நாட்டங் கொண்டிருந்தனர் என்பதையும் கிரேக்கரைப் போலப் பண்டை உலகின் கடலோடிகளாக அவர்கள் சிறப்புற்று இருந்தனர் என்பதையும் தெளிவுறுத்துகின்றன.

இவ்வாறாகப் போர் நிலைகளில் கடல்கடந்து வெற்றி கொண்ட தமிழர்கள் மிகப் பெரிய பேரரசாக உருவாக முடியாமைக்கான காரணமும் இன்றளவும் புறத்தாருக்குத் தலைவணங்கி ஊமையராய் உணர்வற்று இருக்கும் நிலையும் விளங்குதற்கியலவில்லை. பின்வரும் காரணங்கள் இதற்குக் காரணிகளாய் இருக்கும் நோக்கில் இக்கட்டுரை விவரிக்கிறது.

காரணம் ஒன்று: போர் என்பது அறமா? மறமா?

போரின் பல்வேறு நிலைகளை நுட்பமாகப் பாகுபடுத்தியுள்ளதைப் புறப்பொருள் இலக்கணத்தால் அறிகிறோம். இதைப் போன்றே போர்புரியும் காலத்திலும் போருக்குப் புறப்படும் பொழுதும் பண்டைத் தமிழர் சில நெறிமுறைகளைப் பின்பற்றியுள்ளனர். பொதுவாக நாட்டு மக்களுக்கு அல்லல் உண்டாகக் கூடாது எனும் நோக்குடையவராக அவர்கள் செயல்பட்டுள்ளனர். ஒரு நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போது அந்நாட்டு மக்களை முன் கூட்டியே தக்க பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விடுமாறு எச்சரிக்கை செய்துள்ளனர். அதனை நெட்டிமையாரின் புறநானூற்றுப் பாடல் விளக்கும்.

ஆவும் ஆனியற் பார்ப்பன மாக்களும்
பெண்டிரும் பிணியுடை யீரும் பேணித்
தென்புல வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும்
பொன்போல் புதல்வர்ப் பெறாஅ தீரும்
எம் அம்பு கடிவிடுதும் நும்அரண் சேர்மினே (புறம்.9)

எனும் இப்பாடல் பசுக்கூட்டங்களையும், அறவோர்களையும், பெண்டிரையும், திருமணம் ஆகிய நிலையில் பொன்போல் புதல்வரைப் பெறாதவர்களையும் "எங்கள் அம்புகள் தாக்கா வண்ணம் உங்களுக்குக் காவலான அரண்களை அடைக" என்று அறிவுறுத்துகிறது.

மேற்கண்ட பாடல் அற்றைத் தமிழரின் போர் அறத்தினைச் சுட்டுகிறது. இற்றைய நிலையிலும் இது தமிழனால் கடைப்பிடிக்கப் பெற்றிருக்கிறது (முள்ளிவாய்க்கால் போர்). ஆனால், வெற்றிக்குப் பதில் தோல்வியே பரிசாகக்

கிடைத்திருக்கிறது. போர் என்பது வெற்றி அல்லது தோல்வியை நிர்ணயிக்கக் கூடிய களமாக இருக்க வேண்டுமே தவிர அறவுரை சொல்லும் தலமாக இருக்கக் கூடாது. போரில் அறத்தை எதிர்பார்த்தால் இழப்பு நமக்கே. காலங்காலமாகத் தமிழ் மன்னர்கள் இத்தகைய போர் அறத்தினைக் கடைப்பிடித்திருந்தது அவர்களின் அரசு விரிவடையாமைக்கான பின்னடைவே. அம்மன்னர்களைப் பின்பற்றி வழிவழியாக வந்த தமிழ் மக்களிடையேயும் அந்நெறி ஊறிவிட்டது. தமிழர் பண்பாடுகளில் ஒன்றாகவும் ஆகிவிட்டது. தலைமுறை தலைமுறையாக, ஒரு தலைமுறையினரிடமிருந்து அடுத்த தலைமுறைக்கு மரபு வழியே இடம்பெயரும் நடத்தைக் கோவையைப் பண்பாடு என்பார்கள். அவ்வகையில் மேற்சுட்டிய பாடலில் இடம்பெறும் போர் அறம் தமிழ் மக்களின் வளர்ச்சிக்கும் தமிழர்கள் இன்றுவரை வேற்று இனத்தவர்க்கும் வேற்று மொழியினர்க்கும் அடிமையாய் இருப்பதற்குக் காரணமாய் அமைந்துள்ளது.

காரணம் இரண்டு: போர் நிமித்தங்கள்

தமிழ் மன்னர்கள் விரிவான பேரரசு அமைக்காமைக்கான காரணம் அவர்கள் கொண்டிருந்த போர் நிமித்தமாகும். இன்றளவும் தமிழ் மக்களிடம் ஒரு செயலைத் தொடங்கும் நிமித்தம் பார்த்தல் சகுனம் பார்த்தல் போன்ற செயல்பாடுகள் காணக்கிடக்கின்றன. போர் நிமித்தம் தொடர்பான செய்திகளைத் தொல்காப்பியம் பகருகின்றது.

படை இயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி
புடைகெடப் போகியசெலவே,
.... (தொல்.பொருள்.1004)

மேற்கண்ட தொல்காப்பியப் புறத்திணை நூற்பாவில் பாக்கத்து விரிச்சி என்பதனைப் பக்கத்துக் கேட்ட நற்சொல்லை ஆய்தல் என்பதாகும் என்று விவரிக்கிறது. போர் மேற்கொள்ளுதல் என முடிவு எடுத்த நிலையில் விரிச்சி கேட்டு அதன் பிறகு போர் மேற்கொள்ளல் என்பது எதிரி மன்னனுக்கு வெற்றி வாய்ப்பினைக் கூட்டித் தருமே ஒழிய விரிச்சி கேட்டு நல் விரிச்சி இல்லையெனில் வாளா இருப்பவனுக்கு வெற்றியைத் தராது என்பதை இங்கே கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். மேலும்,

குடையும் வாளும் நாள்கோள், அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும்..... (தொல்.பொருள்.1014)

இத் தொல்காப்பிய நூற்பா போர் புரியச் செல்லும் முன் வெண்கொற்றக் குடையை நல்ல நாளில் அனுப்புதல், வெற்றிபெறும் வாளை நன்னாளில் செலுத்துதல் போன்றவற்றினைக் குறிப்பிடுகிறது. இதனை நோக்கும் போது சங்ககால மன்னர்கள் போர் மேற்கொள்வதற்கு முன் நிமித்தங்களுக்கும், நல்ல நாள்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளனர் என்பதை விளங்கிக் கொள்ள முடிகிறது. ஆக, போரினை மேற்கொள்ளுதல் நாடு விரிவாக்கம் செய்வதற் கல்லாமல் தங்களின் மன எழுச்சிக்காகவும் புகழுக்காகவுமே செய்துள்ளனர்

என்பதனையே இது காட்டுகின்றது. தமிழர்களிடம் எளிதே உணர்ச்சி வயப்படும் நிலையும், தனி மானமும் உள்ளன. கூட்டமாகச் சமூகத்திற்காகப் பொங்கி எழும் இனமானம் இல்லை (க.ப.அறவாணன், தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள், ப.34) என்று கூறும் க.ப.அறவாணனின் கருத்து இங்குச் சிந்திக்கத் தக்கது. மேலும் 'மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்' என்பதற்கிணங்க அவன் வழிவந்த குடிகளும் உணர்ச்சி வயப்பட்ட தமிழர்களாய் நிமித்தம் பார்த்துச் செயல்படும் மக்களாய் இன்றுவரை இருந்து வருகிறோம் என்பதனையும் இதன்வழி உணரலாம்.

காரணம் மூன்று :புறப்புண்ணிற்கு நாணி வடக்கிருந்து உயிர் துறத்தல்

பண்டைத் தமிழர்களின் போர்க்கோட்பாடுகளுள் ஒன்று வடக்கிருந்து உயிர்துறத்தலாகும். அதாவது, போர் புரியும் போது மார்பிலே பட்ட அம்பு முதுகுவழியாக வெளிப்போந்தாலோ அல்லது முதுகிலே அம்பு தைத்து விட்டாலோ அதை அவமானமாகக் கருதி வடக்கு நோக்கி உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டு விடுவர். வடக்கிருந்து சேரன் உயிர் துறந்தமையை வெண்ணிக் குயத்தியார் பின்வருமாறு விளக்குகிறார்.

நளி இரு முந்நீர் நாவாய் ஓட்டி,
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால்வளவ!
சென்று, அமர்க் கடந்த நின் ஆற்றல் தோன்ற
வென்றோய்! நின்னினும் நல்லன் அன்றே
கலி கொள் யாணர் வெண்ணிப் பறந்தலை,
மிகப் புகழ் உலகம் எய்தி,
புறப் புண் நாணி, வடக்கிருந்தோனே? *(புறம்.66)*

நீர் செறிந்த பெரிய கடலின் கண்ணே மரக்கலத்தையோட்டிப் போர் செய்தற்குக் காற்றின்றி நாவாய் ஓடாதாக ஆண்டு வளிச் செல்வனை யழைத்து ஏவல்கொண்ட வலியோன் மரபினுள்ளானே! மதம் பொருந்திய யானையையுடைய கரிகால் வளவா! மேற்சென்று போரை எதிர் நின்று கொன்று நினது வலிதோற்ற வென்றவனே! நின்னினும் நல்லனல்லவே? தழைத்தலைக் கொண்ட புதுவருவாயையுடைய வெண்ணியென்னும் ஊர்ப்புறத்துப் போர்க்களத்தின்கண் மிகப் புகழை உலகத்துப் பொருந்திப் புறப் புண்ணிற்கு நாணி வடக்கிருந்தோன் என்கிறார்.

வடக்கிருந்து உயிர்துறக்கும் செயலைச் சேரன் செய்திருக்கிறான். இதுவும் தமிழ் மன்னர்கள் எதிரிகளை எதிர் கொள்ள இயலாது உணர்ச்சி வயப்பட்ட நிலையில் எடுத்த முடிவுக்குச் சான்றாகும். தமிழ்ச் சமுதாயப் பின்னடைவுக்குக் காரணமாகவும் இது அமைந்துள்ளது. இயல்பாக இம்மன்னன் என்ன செய்திருக்க வேண்டும். உணர்ச்சி வயப்படாமல் அடுத்து மேற்கொள்ள வேண்டிய அதாவது உயிர் பிழைத்தற்கு வேண்டிய செயல்பாடுகளைச் செய்து மேற்கொண்டு நாட்டு மக்களை வழி நடத்தி இருத்தல் வேண்டும். ஆனால், தன்மானத்திற்காகவும், புகழின் பொருட்டும் இவன் மேற்கொண்ட செயல் பின்னர் வந்த குடிகளும் போற்றத் தொடங்க வழி ஏற்படுத்திக் கொடுத்துவிட்டது.

காரணம் நான்கு: உடன் பிறந்தாருக்குள் போர் செய்து கொண்டமை

தமிழ் மன்னர்கள் தங்கள் உடன் பிறப்புக்குள் போரிட்டுக்கொண்டமையும், தமிழ் மன்னர்களுக்குள் போரிட்டுக் கொண்டமையும் தமிழரின் வீழ்ச்சிக்கான காரணங்களாக அமைந்தன.

மன்னா உலகத்து மன்னுதல் குறித்தார்
தம் புகழ் நிறீஇத் தாம் மாய்ந்தனரே
துன் அருஞ் சிறப்பின் உயர்ந்த செல்வர்,
இன்மையின் இரப்போர்க்கு ஈஇயாமையின்,
தொன்மை மாக்களின் தொடர்பு அறியலரே
தாள் தாழ் படு மணி இரட்டும், பூ நுதல்,
ஆடு இயல் யானை பாடுநர்க்கு அருகாக்
கேடு இல் நல் இசை வய மான் தோன்றலைப்
பாடி நின்றனெனாக, 'கொன்னே
பாடு பெறு பரிசிலன் வாடினன் பெயர்தல் என
நாடு இழந்ததனினும் நனி இன்னாது' என,
வாள் தந்தனனே, தலை எனக்கு ஈய,
தன்னின் சிறந்தது இது ஒன்று இன்மையின்;
ஆடு மலி உவகையொடு வருவல்,
ஓடாப் பூட்கை நின் கிழமையோற் கண்டே. (புறம்.164)

இப்பாடலில் தம்பியால் நாடு கொள்ளப் பெற்றுக் காடு பற்றியிருந்த குமணனைக் கண்டு பாடி வாளினைப் பரிசிலாகப் பெற்ற பெருந்தலைச் சாத்தனார் அதனை இளங் குமணனுக்குக் காட்டிப் பரிசில் வேண்டுகிறார். அதே வேளையில் குமணனின் நல் எண்ணத்தை இளங்குமணனுக்கு எடுத்தியம்புகிறார். இதன் வழி தமிழ் மன்னர் பரம்பரையினர் தங்களது எதிரிகளாகத் தங்கள் உடன் பிறப்புகளையே கருதியிருந்தமையும் அதில் முயன்று இருந்தமையாலேயே வேற்றுப்புல மன்னர்கள் படையெடுத்தபோது (களப்பிரர்) அதனை எதிர்க்காது இருந்தமையும் அறியலாம்.

காரணம் ஐந்து: பெண் தொடர்பாக நிகழ்ந்த போர்கள்

அரசரும் வேளிர் தலைவரும் தம் நாட்டுக்குறுநில மன்னர் குடும்பத்தில் பெண் எடுத்துத் திருமணம் செய்து கொள்ள விரும்புதல் உண்டு. அவ்வாறு பெண் கேட்டு வருபவர் அரசரே எனினும் பெற்ற தந்தை தம் பெண்ணைத் தர மறுப்பதுண்டு. பாரியின் பெண்மக்கள் இருவரையும் சேர, சோழ, பாண்டியர் என மூவரும் பெண் கேட்டனர். இருவரை மூவர் கேட்ட முறையின்மையை அறிந்த பாரி பெண்தர மறுத்தான். அதன் விளைவாகவே பாரி மன்னனுக்கும் மூவேந்தருக்குமிடையே போர் சூழ்ந்தது. விளைவாகப் பாரி கொல்லப்பட்டான். கபிலர் பாடிய புறநானூற்றுப் பாடல்களில் இச்செய்தி பதிவாகி இருக்கிறது. குறுநில மன்னரிடம் மன்னன் பெண் கேட்டுச் செல்வதும் அவர்கள் மறுப்பதும் மகட்பாற்காஞ்சி என்னும் துறையின் பாற்படும். ஒரு பெண்ணுக்காக அரசனும்,

குறுநிலமன்னரும் தமக்குள் பொருது கொள்வதைப் புறநானூற்றில் பல பாடல்கள் எடுத்துக்காட்டுகின்றன. 336, 341, 343, 348, 352, 354 (பரணர்), 337, 347 (கபிலர்), 338 (குன்னூர் கிழார் மகனார்), 339, 340 (பெயர்தெரியாப் புலவர்), 342 (அரிசில் கிழார்), 344, 345 (அண்டர் நடுங்கல்லினார்), 346 (அண்டர் மகன் குறுவழுதியார்),349 (மதுரை மருதன் இளநாகனார்),350 (மதுரை மேலைக் கடைக் கண்ணம் புகுத்தார் ஆயத்தனார்), 351 (மதுரைப் படை மங்க மன்னியார்),353 (காவிரிப் பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார்), 355 (கடுமான் கிள்ளி), 356 (தாயங் கண்ணனார்), 357 (பிரமனார்) (க.ப. அறவாணன், மேற்சுட்டிய நூல். ப.245). தமிழ் மன்னர்கள் பெண்கேட்டுக் கிடைக்கப் பெறா விடத்துத் தங்களுக்குள்ளே போர் செய்து கொண்டமையும் தமிழர்களின் வீழ்ச்சிக்கான காரணங்களுள் ஒன்றாகும்.

மேற்கண்ட ஐந்து காரணியங்களின் அடிப்படையில் பிற்காலத்தே ஆங்கிலேயர் நம்மை அடிமைப் படுத்தியபோது நாம் ஏற்றுக் கொண்டமையையு சீக்கியர் எதிர்த்து நின்று வெற்றி கொண்டமையுமான குறிப்பினை இங்கே சுட்டுதல பொருந்தும். அது வருமாறு;

1498இல் வாசுகோடகாமா என்ற போர்த்துக்கீசியன் கேரளத்து கள்ளிக்கோட்டை வந்திறங்கினான். 1608இல் முதல் ஆங்கிலேயன், ஜகாங்கீ அரண்மனையில் மன்னனைச் சந்தித்தான். பின்பு வணிக வரவு வஞ்சகமாக ஆதிக் வரலாறாக விரிந்தது. எனினும் எல்லா இந்திய நாடுகளும் ஆங்கிலேயருக்கு எளிதில் அடிமைப்படவில்லை. அவற்றுள் ஒன்று பஞ்சாப். இது வரலாறு. 1845 பிரிட்டிசு பேரரசின் கவர்னர் ஜெனரல் ஆர்டிஞ்ச், சர்.குகாகூப் ஆகிய இருவரு 20,000 சீக்கியப் படைவீர்ர்களை எதிர்கொள்ள முடியாது தவித்தனர், பொருதன முடிவு. ஆங்கிலேயர் பக்கம் எண்ண முடியாத சாவு, பெருந்தோல்வி. அந் நிகழ்ச்சியைக் காரல் மார்க்சு பின்வருமாறு தம் குறிப்புகளில் பொறித்துள்ளா "ஆங்கிலேயப் பெரு முட்டாள்கள், தென்னிந்திய மக்களை எளிதே அச்சுறுத் வெற்றி கொண்டது போலப் பஞ்சாபியரையும் அச்சுறுத்தி வெற்றி கொண்டுவி முடியும் என்று தப்புக் கணக்குப் போட்டு விட்டனர்" என்று குறிப்பிடுகிறா இதனை நம்முடைய சங்ககாலப் போர்நெறிக் கோட்பாட்டோடு ஒப்பிட்டு பார்க்கலாம்.

சங்க காலக்கட்டத்தில் சீனாவின் நிலையும்-தமிழ் நாட்டின் நிலையும் ஓர் ஒப்பீடு

உலக இன மக்களுள் தொல் பழங்காலம் தொட்டுப் பெருமைக்கு உரியவர்களாகச் சீனர்கள் இருந்து வருகின்றனர். ஐரோப்பிய நாகரிகத்திற்கு மூல ஊற்றாக இருந்த கிரேக்கர் காட்டு மிராண்டிகளாகத் திரிந்த காலத்திலேயே உயர்ந்த நாகரிகத்திற்கு உரியவர்களாகச் சீனர் விளங்கி வந்தனர். எனவேதான், சீனர் உலகிலுள்ள ஏனைய மக்களைவிடத் தம்மைப் பண்பாட்டிலும் நாகரிகத்திலும் சிறந்தோராகக் கருதினர். கி.பி.1860 வரை சீனர்கள் அயலார் அனைவரையும் 'காட்டுமிராண்டிகள்' என்றே தம் ஏடுகளில் குறித்து வந்தனர். கி.மு. 1225 முதல் 1122 வரை சௌத் மன்னர்கள் சீனாவை ஆண்டனர். புகழ்பெற்ற லாவோட்சும்,

கன்பூசியசும் தோன்றினர். கல்வி மக்களிடையே நன்கு பரவிற்று. 'சௌத்' வம்சம் சீர்குலைந்தபோது பல சிற்றரசர்கள் அங்கங்கே தோன்றித் தமக்குள் போரிட்டுக் கொண்டனர். 'சீ-உவாங்டீ' எனும் தளபதி அனைத்துச் சிற்றரசர்களையும் வென்று அரசைக் கைப்பற்றி ஒன்றுபடுத்தினான். அவன் 'சின்சின்' எனும் பகுதியைச் சேர்ந்தவர். அவருக்குப்பின் ஆட்சிசெய்த தலைமுறை 'சின்' தலைமுறை எனப்பட்டது. சீனா எனும் பெயர் இத்தலைமுறையையொட்டியே தோன்றியது. இத்தளபதி கி.மு. 550 முதல் 210 வரை சீனாவை ஆண்டான். அணைகள், கால்வாய்கள், சாலைகள் ஆகியவற்றை அமைத்ததுடன் ஒரே மொழி, ஒரே நாணயம், ஒரே சட்டம், ஒரே ஆட்சி முறை ஆகியவற்றை அறிமுகப்படுத்தினான். சீனாவை ஒன்றுபட்ட நாடாக்கினான். இவன் காலத்தில்தான் 2250 மைல் நீளமும் 15 முதல் 20 அடி உயரமும் உடைய சீன நெடும்சுவர் கட்டப்பட்டது. இதே காலக்கட்டத்தில் நமது தமிழக மன்னர்களின் ஆட்சியை ஒப்பிடும்போது நம் தமிழ் மன்னர்கள் தங்களுக்குள் போரிட்டுக் கொண்டிருந்தமையையே புறநானூற்றுப் பாடல்கள் பதிவு செய்து வைத்திருக்கின்றன. மேற் சுட்டிய ஐந்து காரணங்களும் அதற்குச் சான்றாக அமைகின்றன.

நிறைவாக,

1. மறத்தை மட்டுமே முன்னிலைப் படுத்த வேண்டிய போரில் அறத்தையும் கடைப்பிடித்தமை.
2. நிமித்தம், சகுனம் பார்த்துப் போர் மேற்கொண்டமை.
3. தமிழ் மன்னர்கள் தங்களுக்குள்ளும், தங்களின் இரத்த உறவுகளுக்குள்ளும் போர் மேற்கொண்டமை.
4. போரில் புறப்புண் பெறுதலை அவமானமாகக் கருதி உணர்ச்சி மேலிட்டமையால் இறந்தமை.
5. கடல்கடந்து வெற்றி பெற்றும் நிலையான அரசு அமைக்காமை.
6. பெண்களுக்குப் போர்நெறியைக் கற்றுக் கொடுக்காமை. பெண்களைப் போர்க்களத்திற்கு அழைத்துச் செல்லாமை.
7. வெற்றியையும், புகழையும் மையப்படுத்தியே போர் மேற்கொண்டமை. பேரரசு உருவாக்கம் செய்யும் எண்ணமும் எதிர்காலத் திட்டமும் இன்மை.

துணை நூல்கள்

1. சுப்பிரமணியன், ச.வே. 2003. தொல்காப்பியம் தெளிவுரை, சென்னை: மணிவாசகர் பதிப்பகம்.

2. அறவாணன், க.ப., 2002. தமிழர் அடிமையானது ஏன்? எவ்வாறு? புதுச்சேரி: தமிழ்க்கோட்டம்.

3. வாணி அறிவாளன், 2010. வீரம் விளைந்த நிலம், சென்னை: அருண்அகில் பதிப்பகம்.

தமிழ் இலக்கணக் கூற்றுக்கோட்பாடுகள் கட்டமைக்கும் பெண்சமூகம் - மீள்வாசிப்பு

முனைவர் அ.இலட்சுமி தத்தை
துணைப்பேராசிரியர்
புதுவைப் பல்கலைக்கழகச்
சமுதாயக் கல்லூரி, புதுச்சேரி

எழுத்தறிவு மனிதனின் அறிவியல் வளர்ச்சியை வெளிப்படுத்துவதோடு பண்பாட்டு வளர்ச்சியையும் வெளிப்படுத்தி நிற்பதாகும். எழுத்தறிவைப் பயன்படுத்தித் தன்னைச் சுற்றி நிகழும் அனைத்து நிகழ்வுகளையும் பல்வேறு முறைகளில் பதிவு செய்துள்ளான் மனிதன். கல்வெட்டு, பட்டயங்கள், ஓவியங்கள், ஓலைச்சுவடிகள், இலக்கியங்கள், பானைஓட்டுப் பதிவுகள் என அனைத்தும் அவ்வக்காலத் தமிழ்ச்சமூகத்தின் அறிவியல் வளர்ச்சியோடு, அவ்வக்காலச் சமூகவெளிப்பாடாவும் அமைகின்றன என்பது திண்ணம். குறிப்பாக இலக்கியங்கள் கற்பனைகளைத் தம்முள் தாங்கி நின்றாலும் சமூக மாற்றங்களையும் பதிவு செய்துள்ளன. தாய்வழித் தலைமையில் இருந்த தமிழ்ச் சமூகம் தந்தை வழித் தலைமைச் சமூகமாக மாற்றம் கொள்ள இச்சமூகம் பல படிநிலைகளை மேற்கொண்டுள்ளது. அவற்றுள் இலக்கியப் படைப்பும் ஒன்று.

சங்கப் பாடல் ஒவ்வொன்றும் மாந்தரின் நாடகக் கூற்றாகும். ஒவ்வொரு சங்கப் பாடலும் குறிப்பிட்ட சமூகச் சூழலைத் தன்னுள் வெளிப்படுத்துகின்றது. எனவே இலக்கியங்கள் வழியாக இலக்கிய காலச் சமூக வாழ்வியலை உணர்த்த வல்லன. அந்த அடிப்படையில் இலக்கணக் திணை, துறை, கூற்று, முப்பொருள், எனச் சிலவற்றைக் கூறலாம். நாடகத்திறத்தோடு அமைக்கப்பட்ட அகப்பாடலுக்குக் கூற்றுக் கோட்பாடு உயிர்நாடியாகத் திகழக்கூடியது. எல்லா இலக்கண ஆசிரியர்களாலும் அகக் கோட்பாட்டில் கூற்று முதன்மைத்துவத்தோடு விளக்கம் பெற்றுள்ளது.

அந்த வகையில் அக இலக்கணக் கோட்பாடுகளுள் ஒன்றான கூற்றுக் கோட்பாடுகளை மட்டும் முதன்மை ஆதாரங்களாகக் கொண்டு தாய்த்தலைமை ஒடுக்கப்பட்டதும் உரிமைகள் மறுக்கப்பட்டதும் பெண்களுக்கான கட்டுப்பாடுகள் மிகைப்படுத்தப்பட்டதும் முற்றிலும் மாறுபட்ட பெண்சமூகம் உருவாக்கப் பட்டதும் மீள்வாசிப்பின் மூலம் ஆய்வு செய்யலாம்.

பகுதி 1

செய்யுள் உறுப்புகள் முப்பத்து நான்கில் ஒன்றாகக் கூற்று வகையைத் தொல்காப்பியர் கூறுகின்றார். கூற்றுவகை என்பதைப் பொருள் வகை என்றும் பாடம் கொண்டு இளம்பூரணர் உரை கூறுவார். இக்கூற்றைக் களவின் கண் கூறுதற்கு

உரியர் என்றும், கற்பின் கண் கூறுதற்கு உரியர் என்றும் இருவகையாகப் பகுப்பார். பார்ப்பான், பாங்கன், தோழி, செவிலி, தலைவன், தலைவி ஆகிய அறுவகையோர், களவின் கண் கூற்றுக்குரியர். பார்ப்பான் முதலான அறுவகையோரும் பாணன், கூத்தன், விறலி, பரத்தை, அறிவர், கண்டோர் ஆகிய அறுவகையோருமாகப் பன்னிருவர், கற்பின் கண் கூறுதற்குரியர்.

தமிழில் அகம், புறம் என்ற வகைப்பாடல்கள் கூற்று அடிப்படையிலேயே அமைந்துள்ளன. அகப்பாடல்கள், பாத்திரங்கள் ஒருவரை நோக்கி ஒருவர் கூறுவன,தத்தமது நெஞ்சோடு கூறிக் கொள்வன, பறவை, விலங்கு போல்வன வற்றை அழைத்துக் கூறுவன என அமையும்.

இவ்வாய்விற்குத் தொல்காப்பியரின் அகத்திணைக்கூற்றுக் கோட்பாடுகள் மட்டும் அடிப்படை ஆதாரமாகக் கொள்ளப்படுகின்றன. அக இலக்கியங்கள் காதல் வாழ்க்கையைப் பேசுவதால் கூற்றுநிகழ்தலும்பாலியல், திருமணம் ஆகிய இரண்டின் பிரிவிலேயே அமைகின்றன. நாடக வழக்கிற்காக வடிவமைக்கப் பட்ட அகக்கோட்பாடுகள் உலகியல் வழக்கினையும் வெளிப்படுத்துகின்றன. நாடகப் பாங்கில் அமைந்துள்ள ஒரு பாடலில் கூற்று நிகழ்த்துவோரைச் சுற்றி ஓர் அமைப்பு செயல்படுவதை முதலில் உணர்தல் வேண்டும்.

கூற்று நிகழ்த்துவோரைச் சுற்றி நிகழும் இடம், கேட்போர், நிகழும் காலம், நிகழ்த்துவோரின் தேவை, நிகழ்த்தப் பயன்படும் சொற்கள் என்ற இறுக்கமான செயல் ஒன்று செயல்படுகின்றது. இந்த அமைப்பும் கூற்றுகளும் கூற்று நிகழ்த்துவோரைக் கட்டமைக்கின்றன. அஃதாவது தொல்காப்பியர் வரையறுக்கும் கூற்று, கூற்று நிகழ்த்துவோரின் சமூக இயங்கு தளத்தை வெளிப்படுத்துவதோடு இயங்கு தளத்தைக் கட்டமைக்கவும் செய்கின்றது.

இவ்வாய்வின் பக்க எல்லையைக் கருத்தில் கொண்டு, தொல்காப்பியக் களவியல், கற்பியலில் இடம்பெறும் தலைவன் தலைவி கூற்றுகள் மட்டும் ஆய்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

தலைவியின் களவியல், கற்பியல் கூற்றுகளையும் தலைவனின் களவியல், கற்பியல் கூற்றுகளையும் கீழ்க்கண்டவாறு தொகுத்துவிடலாம்.

களவியல் கூற்றுகள் கட்டமைக்கும் தலைவியின் பண்புகள்

1. பொருள் முயற்சியில் தலைவன் செல்லும் போது ஆற்றியிருத்தல் வேண்டும்.
2. வரைவு வேண்டுதல்.
3. தலைவன் பேசும் போது தான் பேசாதிருத்தல்.
4. அச்சமுடைமை.
5. மெய்யுறு புணர்வை மறுத்தல் / ஏற்றல்
6. களவு வெளிப்படாது காத்தல்.

களவியல் கூற்றுகள் கட்டமைக்கும் தலைவனின் பண்புகள்

1. மெய்யுறு புணர்ச்சியை விரும்புவதாக மட்டுமே தலைவன் கூற்றுகள் அமைகின்றன.

கற்பியல் கூற்றுகள் கட்டமைக்கும் தலைவியின் பண்புகள்

1. கற்பு வாழ்க்கையில் தலைவனோடு இணைந்து வாழ்தலை எண்ணுதல்.
2. தலைவனின் புறத்தொழுக்கத்தை மறுத்தல் / ஏற்றல்.
3. பிரிவின் காலத்துத் தலைவனை நினைத்து வருந்தி வாழுதல்.

கற்பியல் கூற்றுகள் கட்டமைக்கும் தலைவனின் பண்புகள்

1. களவில் நிகழ்ந்ததைக் கற்பில் நினைவுகூர்தல்.
2. புறத்தொழுக்கச் செயல்பாடுகளில் ஈடுபடுதல்.
3. பிரிதல் / மீளுதல்

மேற்கூறப்பட்ட தலைவன் தலைவி கூற்றுக் கோட்பாடுகளின் உள்ளடக்கத்தை ஒப்புநோக்கும் போது இக்கோட்பாடுகள் வெளிப்படுத்துபவை அல்லது கட்டமைப்பவை பற்றிய கேள்வி எழுகின்றது. இக்கேள்விக்கு விடையளிக்கக் கீழ்க்காணும் பகுதி முயற்சி செய்கின்றது.

பகுதி 2

அமைப்பியல் பற்றி ஆய்வு செய்த டெரிடாவின் கருத்துகள் சில, இந்த ஆய்வுக்குத் துணைமைச் சான்றாதாரங்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. கட்டவிழ்ப்புத் திறனாய்வு அணுகுமுறையின் தந்தையென்று டெரிடா அழைக்கப்படுகின்றார். அவருடைய பேச்சும் நிகழ்வும் (Speech and Phenomena), இலக்கண இயல் (Of Grammatology), எழுத்தும் வேறுபாடும் (Writing and Difference) என்ற நூல்கள் மொழியும் பொருண்மையும் செயல்படுவது பற்றிய புரட்சிகரமான செய்திகளைத் தருகின்றன. இதன் பிறகு ஒலி மைய வாதம் என்றொரு கருத்தியலையும் வெளியிட்டார்.

ஒலி மைய மரபிற்கு எதிராக முன்வைத்த கோட்பாடு அவரால் டிஃபெரன்ஸ் (Difference) என்றும் குறிக்கப்பட்டது. இச்சொல், வேறுபாடு + தள்ளிப்போடுதல் எனும் பொருள் தர அமைவது. ஒரு சொல்லின் பொருளை மற்றைய பொருள்களிலிருந்து பிரித்துக்காட்டுவதன் மூலம் பெற வேண்டியிருப்பதால் அது இறுதி வரை தள்ளிப்போடப்படுகின்றது என்பதை வலியுறுத்தவே இச்சொல்லைக் கையாண்டார். சொற்கள் நிரந்தரமான, நிலைத்த, குறித்த பொருள்களைத் தராமல் கட்டற்று யாருடைய கட்டுப்பாட்டிற்கும் அடங்காமல் செயல் படும் தன்மையவை என்பது அவர் எண்ணம். ஒரு சொல் ஒருகாலத்தில் தரும் பொருளுக்கு நேர் எதிரான பொருளை இன்னொரு காலத்தில் தரலாம். டெரிடா ஒரு நூல் வெளிப்படையாகச் சொல்லமுயலும் பொருளுக்கு எதிரான பொருளைத் தரும் என்பார். ஒரு நூலைப் படித்துச் சொல்லும்போது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அது கூறும் பொருள் பற்றிய தடுமாற்றங்கள், சிக்கல்கள், ஐயங்கள் ஏற்படலாம். இதனை அபோரியா என்றழைக்கின்றார்.

பகுதி 3

ஒரு தார மண முறையின் தோற்றம்

மண முறைகளின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றை ஒப்புநோக்கி ஆராய்ந்தால் சில விளக்கங்களைப் பெற இயலும். தமிழ் இலக்கணங்கள் தம் காலச் சமுதாயத்தின் எதிரொலிகளாக மட்டுமல்லாமல் தமக்கு முற்பட்ட காலத்து மக்களின் மொழி, வாழ்வியல் கோட்பாடுகளின் விளக்கங்களாகவும் அமைகின்றன. தொல்காப்பியச் சமுதாயம் தந்தை தலைமைச் சமுதாயம் என்று கொண்டால் அதற்கு முற்பட்ட காலத்துச் சமுதாயத்தைத் தாய்த் தலைமைச் சமுதாயம் என்று கொள்ள இடமுண்டு.

- மனித சமுகம் காட்டுமிராண்டி நிலை, அநாகரிக நிலை, நாகரிக நிலை எனும் நிலைகளைக் கடந்தே இன்று நிலைகொண்டுள்ளது.
- உணவு சேகரிப்பும் வேட்டையாடுதலும் ஆநிரை பழக்குதலும் வேளாண்மையும் வணிக நிலையும் மனிதனது பரிணாம வளர்ச்சியின் ஊடாகவே நிகழ்ந்த வளர்ச்சி மாற்றங்களாகும்.
- இந்தப் பரிணாம வளர்ச்சியில் குடும்பம், ஆண்-பெண் உறவு நிலை முதலியன பல்வேறு படிநிலைகளைத் தாண்டியே வந்துள்ளன. குழு மனம் என்றும் வரன்முறையற்ற புணர்ச்சி என்றும் தொல் மணவுறவைச் சுட்டுகிறார் ஏங்கல்ஸ்.
- பரிணாம வளர்ச்சியில் குழு மணத்திலிருந்து பெற்றோர்க்கும் பிள்ளைகளுக்குமான உறவு தவிர்க்கப் பட்டது முதல் கட்டம்.
- சகோதரனுக்கும் சகோதரிக்கும் ஆன உறவு தவிர்க்கப் பட்டது அடுத்த கட்டம்.
- இதனை அடுத்து, பல கணவ,பல மனைவி உறவு நிலை.
- படிப்படியாக விடுபட்டு ஒருத்திக்கு ஒருவன்,ஒருவனுக்கு ஒருத்தி என்ற நிலை உருப் பெற்றது.

வேளாண் சமூகத்தில் உற்பத்திப் பெருக்கம் தனியுடைமையைத் தோற்றுவித்தது. தனியுடைமை பெண் தலைமை வீழ்ச்சிக்கும் ஆண் தலைமை ஏற்றத்திற்கும் வழிகோலியது. இதனை ஏங்கல்ஸ்

> "செல்வங்கள் குடும்பங்களின் தனியுடைமையாகி வேகமாகப் பெருகத் தொடங்கியதுமே அவை தாயுரிமைக் குலத்தின் மீது நிறுவப்பட்டிருந்த சமுதாயத்திற்குப் பலமான அடியைக் கொடுத்தன. இணை மணமுறை என்பது குடும்பத்தில் ஒரு புதிய அம்சத்தைப் புகுத்தியது. இது பெண்ணை விட ஆணுக்கு முதன்மையைக் கொடுத்தது. பெண் இழி நிலைக்குத் தள்ளப்பட்டாள். ஆணின் உடலின்ப வேட்கைக்குக் கருவியானாள்"

என்கிறார். தாயுரிமை தூக்கியெறியப்பட்டதைத் தொடர்ந்து ஒருதார மணமுறை வேகமாக வளர்ந்தது. ஒருதார மணம் ஆணின் மேலாதிக்கத்தை அடிப்படையாகக்

கொண்டது. அதன் நோக்கம் விவாத்திற்கு இடமில்லாத வகையில் ஆணுக்கான வாரிசைப் பெற்றுத் தருவதுதான். இளம் பெண்கள் நூல் நூற்றல், நெசவுநெய்தல், துணி தைத்தல் ஆகியவற்றைக் கற்றார்கள். அவர்கள் முற்றிலும் தனிமையில் வைக்கப்பட்டிருந்தனர். பெண்கள் பெண்களுடன் மட்டுமே உறவாட முடியும். வீட்டில் பெண்கள் வசிக்கும் பகுதி தனியாக இருந்தது. அங்கே ஆண்கள் சுலபமாகப் போகமுடியாது. வீட்டில் அவர்கள் காவலில்தான் வைக்கப் பட்டிருந்தனர். ஆசிய நகரங்களில் பெண்களைக் காவல் செய்ய அலிகள் நியமிக்கப் பட்டிருந்தனர். இவ்வாறு பெண்கள் குறிப்பிட்ட வட்டத்திற்குள் அடக்கப்பட்டனர்.

மனைவியுடன் காதல் செய்வதற்குப் பதிலாகக் கணவன்மார்கள் பொதுமகளிருடன் காதலில் மூழ்கினர். இது பெண்ணினத்தைத் தாழ்வுபடுத்துவதாக அமைந்தது. இவ்வாறாகப் பண்டைக் காலத்தில் ஒருதார மணமுறை தோற்றம் கொண்டது. ஒருதார மண முறை என்பது ஓர் ஆணுடன் வாழும் பெண்ணைக் குறித்து நின்றதே தவிர ஒரு பெண்ணுடன் வாழும் ஆணைக் குறித்து நிற்கவில்லை. ஆணின் அதிகாரம் பல பெண்களை அவனுக்கு மனைவியாக்கியது மட்டுமல்லாது, பொது மகளிர் முறையைச் செழித்தோங்கச் செய்தது. பொதுமகளிர் மூலம் இன்ப வாழ்க்கை நடத்துகின்ற கணவனுக்குப் பக்கத்திலேயே, புறக்கணிக்கப்பட்ட மனைவியும் நிறுத்தப்பட்டாள்.

பகுதி 4

களவியல் கற்பியல் கூற்றுகளின் வெளிப்பாட்டுத் தன்மைகளைக் கீழ்க்கண்ட வரைபடங்கள் மூலம் மேலும் விளக்கலாம்.





தாய்த் தலைமையின் எச்ச வெளிப்பாடாகச் சில கூற்றுகள் இடம் பெற்றுள்ளமையும் தந்தை தலைமையின் முழுப் பரிணாம வளர்ச்சியினை வெளிப்படுத்துவதாகச் சில கூற்றுகள் இடம் பெற்றுள்ளமையும் நோக்கத்தக்கன. களவியலிலும் கற்பியலிலும் தலைவனின் கூற்றுகள், ஆண் மையச்சமுதாய உருவாக்கத்தின் தோற்றுவாயாக அமைவதோடு, தலைவியின் கூற்றுகள் தனியுடைமையான ஆண் மையச் சமூகத்தில் "பெண்களின் வாழ்வியல் எனும் அடிப்படையில் பெண் சமூகத்தை உருவாக்குவதாகவே அமைந்துள்ளன" என்பது திண்ணம். அக இலக்கணக் கூற்றுகள் தலைவியின் சமூக இயங்கு தளத்தினைத் தெளிவாகப் பதிவு செய்துள்ளன.

சங்க காலம், இனக்குழு வாழ்வுமுறைகள் மாறுதலுக்கு உட்பட்ட காலம். நிலவுடைமையாக மாறுகிற இக்காலக்கட்டத்தில் எழுத்து இலக்கிய மரபு உருவாகின்றது. அரசின் தோற்றுவாய்க் காலமான அக்காலத்தில் இலக்கிய உருவாக்கம் அரசு உருவாக்கத்தின் ஓர் அங்கமாக அமைகின்றது. (பெ.மாதையன். 2011)

தனியுடமை, பெண்தலைமை வீழ்ச்சிக்கும் ஆண்தலைமை ஏற்றத்திற்கும் வழிகோலியது என்ற கருத்திற்கு வலுசேர்ப்பதாக மேற்கண்ட மாதையன் கருத்து அமைகின்றது.

இருப்பதைப் பதிவு செய்வதிலிருந்து மாறி, எதிர்நோக்கும் அல்லது உருவாக்கவேண்டிய சமூகம் எப்படி இருக்க வேண்டும் என்பதில் மிகக் கவனமாகச் செயல்பட்டிருக்கின்றது தொல்காப்பியம். ஆண் மையஅரசு உருவாக்கத்தில் தொல்காப்பியக் கூற்றுக் கோட்பாடுகள் தொளிவானதொரு செயல்பாட்டினை நிகழ்த்தியுள்ளன.

> "இனக்குழுக்கள் ஒன்றிணைந்து புதுச் சமுதாயம் தோன்றும் போது புதிய சமுதாய உறவுகளால் அச்சமுதாயத்தில் சில புதுக்குணங்கள் தோன்றும்.... பழைய நம்பிக்கைகளும் சடங்காசாரங்களும் எச்சமாகப் பழஞ்சமுதாயத்தில் இருந்தது போலவே காணப்படும். சமுதாயத்தைப் போலவே நாடோடி இலக்கியம் எழுத்திலக்கியமாக மாறியபோதிலும் அதன் பழைய குணாம்சங்கள் எச்சமாகக் காணப்படும்" (பெ.மாதையன்.2011)

தந்தைவழிச் சமுதாயமான புதுச்சமுதாயத் தோற்றப் பிரதியாகத் தொல்காப்பியத்தைக் கொண்டால், பழஞ்சமுதாயத்தின் எச்சமாகக் களவியலில் இடம்பெற்றுள்ள தலைவியின் கூற்றுகள் சிலவற்றைக் கொள்ளலாம்.

கூற்றுகள் மீதான புரிதல்களை மேலும் வலுப்படுத்த டெரிடாவின் கருத்துகள் துணைபுரியும்.

ஒரு நூல் வெளிப்படையாகச் சொல்லமுயலும் பொருளுக்கு எதிரான பொருளைத் தரும் எனும் டெரிடாவின் கருத்தை இங்கு இணைத்துச் சிந்திக்கலாம். மேலும் சொற்கள் ஒருகாலத்தில் தரும் பொருளுக்கு நேர் எதிரான பொருளை இன்னொரு காலத்தில் தரலாம் என்ற கருத்தும் ஆய்வுக்குரிய ஒன்று.

- தாய்த்தலைமைச் சமூகத்தின் எச்சங்கள் தொல்காப்பியத்தில் விரவிக் காணப்படுகின்றன என்ற கூற்று ஒரு புறம் நிற்கட்டும்.
- அக்காலச்சமுதாயத்தைப் பிரதிபலிப்பதாகவும் மனித வாழ்வியலுக்கு இலக்கணம் கண்டதாகவும் தொல்காப்பியம் என்ற இலக்கண நூல் இன்று வரை பறைசாற்றப்பட்டு வருகின்றது.
- மேல் கூறப்பட்ட இரண்டு கூற்றுகளிலிருந்து முற்றிலும் மாறான ஒரு கருத்தினை மீள்வாசிப்பின் மூலம் இங்கு வருவிக்க இயலும்.
- தொல்காப்பியம், அது படைக்கப்பட்ட காலச் சமூகத்தை இலக்கியத்துள் பதிவுசெய்துள்ளதோ இல்லையோ, மாறாக இலக்கியக் காலச் சமூகம், அமைக்க விரும்பும் பெண் சமூகத்தைத் தன் படைப்பில் படைத்துக் காட்ட முயற்சி செய்துள்ளது.
- கற்பியல் கூற்றுகள் நிறுவன வயப்பட்ட ஆண் தலைமையிலான பெண் சமூகத்தையே கட்டமைக்கின்றன.

தொல்காப்பியரின் கூற்றுக்கோட்பாடுகளைச் சமூகவியலாரின் மணமுறைகளின் தோற்றம் குறித்த தரவுகளுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் போது கீழ்க்கண்ட வரைபடம் கிடைக்கின்றது.



ஆய்வு முடிபாக முன்வைக்கக் கூடியவை

- தொல்காப்பியக் கூற்றுக் கோட்பாடுகள் தாய்த்தலைமையின் எச்சங்களைக் கொண்டுள்ளன. நிறுவனப் படுத்தப்பட்ட தந்தை தலைமையும் கூற்றுகளும் வெளிப்பட்டு நிற்கின்றன.
- இலக்கியக்காலச் சமூகத்தின் பதிவுகளைவிட அமைக்கவிரும்பும் பெண்சமூகத்தின் கட்டமைப்பே பெரிதும் வெளிப்பட்டுநிற்கின்றது.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம் (பொருளதிகாரம் உரை);2003. தமிழண்ணல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம்.
2. தொல்காப்பியம் (உரை);1988, சொ.சிங்காரவேலன், ஞானவேல் பதிப்பகம், மயிலாடுதுறை.
3. அறிவு நம்பி,அ., 2009,செம்மொழி இலக்கியச் சிந்தனைகள்,சித்தரம் வெளியீடு, புதுச்சேரி.
4. அறிவுநம்பி,அ.(பதி.)2007,சங்க இலக்கியங்களும் கோட்பாடுகளும், புதுவைப் பல்கலைக்கழக வெளியிடு, புதுச்சேரி.
5. அறிவுடைநம்பி, ம.சா., 2012,செவ்வியல் இலக்கிய மணிமாலை,கருமணி பதிப்பகம், புதுச்சேரி.
6. திலகவதி,க., 2001, சங்க கால மகளிர் வாழ்வியல், இறையருள் பதிப்பகம், திருச்சிராப்பள்ளி.
7. பக்தவத்சல பாரதி, 2003, பண்பாட்டு மானிடவியல், மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம்.
8. மருதநாயகம்,ப.,2004,புதுப்பார்வையில் புறநானூறு,காவ்யா வெளியீடு, சென்னை.
9. மருதநாயகம்.ப.,(பதி.) 2004,குறுந்தொகை முதற்பாடல் பன்முக ஆய்வுகள், அன்னம் வெளியீடு, தஞ்சாவூர்.
10. மாணிக்கம், வ.சுப.,2002, தமிழ்க் காதல், மெய்யப்பன் தமிழாய்வகம், சிதம்பரம்.

சங்க நூல்கள்: சாதியத்தின் ஊற்றுக்காலா?

திரு. முருகேசு பாக்கியநாதன்
கனடா

சங்க நூல்கள் யாவை?

சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தோர், மூவேந்தர்களும் சங்கச் சான்றோராகிய புலவர்களுமாவர். மூன்று சங்கங்கள்: தமிழ்கூறு நல்லுலகில் இருந்ததாகவும் அவற்றை முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கம் என்ற மூன்று காலவகையில் அடக்கியிருந்தார்கள் என்றும் கூறுவர். முதற் சங்கத்தில் 4440 புலவர்களும் அது 4449 ஆண்டுகள் இருந்ததாகவும், இடைச்சங்கத்தில் 3700 புலவர்கள் வாழ்ந்ததாகவும் மூன்றாவது சங்கம் கி.மு.3ஆம் நூற்றாண்டென்றும், கி.மு.3ஆம் நூற்றாண்டில் எழுதப்பெற்ற தமிழ்க்கல்வெட்டுக்கள் பிராமி எழுத்துக்களாக உள்ளதனால் அவ்வெழுத்து வளரச் சில நூற்றாண்டுகள் சென்றிருக்கும் என்பதனால் கி.பி.1ஆம் நூற்றாண்டில் கடைச்சங்கம் இருந்திருக்கலாம் என்றும் நீலகண்ட சாஸ்திரிகள் கூறுவார். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை கி.பி. 5ஆம் நூற்றாண்டென்றும் வாதிடுவர். இங்கு எமது கட்டுரைக்குக் கால ஆராய்ச்சி என்பது முக்கியமன்று. முச்சங்கக் கருத்தினை ஏற்போராக உ.வே.சாமிநாதையர், கே.எஸ்.சீனிவாசகபிள்ளை, கா.சு.பிள்ளை, தேவநேயப்பாவாணர், மா.இராசமாணிக்கனார் ஆகியோர் இருந்துள்ளனர்.

சங்க நூல்கள் என்று நோக்கும் போது தொல்காப்பியமே தற்போது நமக்குக் கிடைக்கக்கூடிய முதல் நூலாகப் போற்றப்படுகின்றது. இதனை இடைச்சங்கத்து நூல் என்று வகைப்படுத்துவர். தற்போது கிடைக்கக்கூடிய ஏனைய சங்க நூல்களாக எட்டுத்தொகை நூல்களையும் பத்துப்பாட்டு நூல்களையும் குறிப்பிடலாம். சங்க நூல்களாகிய தொல்காப்பியத்திலிருந்தும், எட்டுத் தொகை நூல்களிலும் காணப்படும் சில கருத்துக்களும் சொற் பயன்பாடுகளும், அண்மைக் காலத்தில் தோன்றி இன்று வரை தலைவிரித்தாடும் சாதியத்திற்கு வித்திட்டவை என்பதனை நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சாதி என்பது யாது?

சாதி என்பதனை நோக்கினால் இது இந்து சமயத்தினால் வளர்த்தெடுக்கப்பட்ட ஒரு பாரிய விருட்சமாகும். இதனைத் தமிழினத்தின் தொழுநோய் என்றுகூடக் கூறலாம். மக்களில் ஒரு பகுதியினரை ஒதுக்கி வைத்து அவர்கள் சாதியில் குறைந்தவர்கள் என்றும் தீட்டு உள்ளவர்கள் என்றும் விலக்கி வைக்கப்பட வேண்டியவர்கள் என்றும் தீண்டத்தகாதவர்கள் என்றும் குறிப்பிட்டுள்ளனர். மற்றையோர் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தில் உள்ளவர்

களாகவும் வகுக்கப்பட்டுள்ளனர். தமிழனுக்கு சாதி என்பது தீராத வியாதி போன்றதாகும். சாதி என்பதனை அடிச்சொல்லாகக் கொண்டுச் சாதியம் என்ற சொற்பிரயோகம் தோன்றியது. சமுதாயத்தில் சாதியின் பிரிவினைகளை வெவ்வேறு தளங்களில் எடுத்துச் செல்வதற்கு ஒரு கொள்கை போன்று பயன்படுத்தப்பட்ட பெயரே சாதியம் எனலாம். அதனை ஆங்கிலத்தில் Caste and Castism என்ற வகையில் அர்த்தப்படுத்தலாம். உதாரணமாக இந்தியாவில் வேலைக்கான விண்ணப்பங்களிலும் பாடசாலை விண்ணப்பங்களிலும் சாதி பற்றிய வினா உள்ளதனைக் குறிப்பிடலாம். இதனைக் கேம்பிரிஜ் ஆங்கில-தமிழ் அகராதியில் நோக்கும் போது, சாதி என்கின்ற பதத்திற்கு Caste என்கின்ற சொல் ஆங்கிலத்தில் பயன்படுத்தப் படுகின்றது. ஆங்கிலத்தில் காஸ்ட் என்ற பதம் ஆங்கில அகராதியில் இடையிட்டு வந்த ஒரு சொற்பதமாகும். இச்சொல்லின் மூலம் போத்துக்கேய மொழியிலேயே முதலில் காணப்பட்டது. போத்துக்கேயரே முதன் முதலில் இந்தியாவிற்கு வருகை தந்தபோது இருந்த சமுதாய நிலை சாதியத்தை அடிப்படையாக வைத்து மக்களில் ஒரு பகுதியினரை மற்ற இன்னொரு பகுதியினர் அடக்கி ஒடுக்கி வாழுவதனைக் கண்டார்கள். இதனை அவர்கள் சாதிப்பிரிவு என்றும் அந்தந்தப் பிரிவினருக்குக் கொடுத்த பல சாதிப்பிரிவினரையும் அறிந்து கொணடதன் காரணமாக அவர்கள் எழுதிய அகராதியில் இச்சொல் இடம்பெற்றிருக்க வேண்டும் என்ற முடிவிற்கு வரலாம். சாதி என்பதன் விளக்கமானது கேம்ரிட்ஜ் அகராதியில் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது. A system of dividing Hindu society into classes, or any of these classes. சாதி என்கின்ற பதத்தினை வகை, வகுப்பு, தராதரம் என்ற பகுப்புக்குள் அடக்கலாம். ஆங்கிலத்தில் Kind, Sort, Class, Class of Quality என்ற வகையிலும் கூறலாம். ஆனால் அன்றாடம் நாம் பயன்படுத்தும் சாதி என்ற சொல் சமூகத்தின் தொழில் அடிப்படையிலும் அதனைத் தொடர்ந்து வரும் பொருளாதார அடிப்படையிலும் பாகுபாடான முறையில் வகுக்கப்பட்டு அறிமுகப்படுத்தப்பட்டதாகும். ஆரியர் சாதியப் பிரிவுகளைச் சத்திரியர், பிராமணர், வைசியர், சூத்திரர் என்ற நான்கு பிரிவுக்குள் அடக்கியிருந்தனர்.

தொல்காப்பியத்தில் குறிப்பிடப்படும் சமூகப் பிரிவினைகள்

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் கற்பியலிலும், மரபியலிலும் சமூகப் பிரிவுகள் பற்றிய கருத்துக்கள் முதன் முதலாகக் கூறப்பட்டுள்ளன. ஆனால் பலவிதமான அகப் புறக் காரணங்களின் அடிப்படையில் பொருளதிகாரத்தின் மரபியல் தொல்காப்பியத்தின் ஒரு பிற்சேர்க்கை என்றும் இப்பகுதி மூல நூலில் தொல்காப்பியரால் சேர்க்கப்படவில்லை என்றும் வாதிடுவோர் உலர். இதனைத் தொல்காப்பியத்திற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் பலர் பிராமணர்களாக இருந்ததனாலும் அவர்களுக்கு இருந்த மனுதர்ம சாஸ்திரச் செல்வாக்கினாலும் கி.பி. 10 - 12ஆம் நூற்றாண்டிலேயே பிராமண ஆதிக்கம் தமிழ் நாட்டில் ஏற்பட்ட பின்பே எழுதப்பட்டிருக்க வேண்டும் என்பது அவர்களது கருத்தாகும். இதில் குறிப்பிடப்படும் நான்கு சாதி அமைப்புக்கள் தொல்காப்பியத்தில் பிற்சேர்க்கை யென்று முனைவர் பா. இறையரசன் நிறுவுகிறார்.

தொல்காப்பியர் வாழ்ந்த காலம் ஆரியப் பண்பாட்டுத்தாக்கம் தமிழகத்தில் ஊடுருவிய காலமாகவிருந்தது. ஆரியரின் நால்வகை வருணப் பாகுபாடுகள் தமிழ்மண்ணில் நன்கு ஊன்றிவிட்ட காரணத்தினால் வாழ்வில் ஒன்றிச் சேர்ந்துவிட்ட நால்வகை வருண மரபானது தொல்காப்பியரால் தவிர்க்க முடியவில்லையென்றே கூறமுடியும்.

ஓர் இலக்கணக்காரனாக நின்று அவர் காட்டிய வருணப் பாகுபாடுகள் அந்தணர், அரசர், வணிகர், வேளாண் சமூகம் என்பனவாகும். அக்காலத்தில் இத்தகைய வைப்பு முறையினால் மேலோர், கிழோர் என்னும் பார்வை அவரால் முன்வைக்கப்பட்டது.

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்கு ஆகிய காலமும் உண்டே" (பொரு - கற்பியல் சூத். - 144)

உரையாசிரியர் கருத்துப்படி மேலோர்களாகிய அந்தணர், அரசர், வணிகர் ஆகிய மூவர்க்கும் சடங்குடன் கூடிய திருமண விழாவிற்கு உரித்துடையவர் என்றும் நான்காமவராகிய சூத்திரற்கு அவ்வாறான திருமண விழா எதுவும் இல்லை என்றும் அதற்கு வேறு காலம் உண்டு என்றும் கூறப்பட்டது. இங்குச் சூத்திரர் என்போர் கீழோர் எனப்படும் வேளாண் மாந்தர் என்று கொள்ளப்பட்டது. சூத்திரர் என்ற பிரிவிலேயே தற்போது இருக்கக்கூடிய ஏனைய சமூகப் பிரிவுகள் யாவும் இருந்தன என்றும் கூறமுடியும்.

இந்த இடத்தில் தொல்காப்பியரால் ஆரியர்களிடத்தில் இருந்த சமூகப் பகுப்பு முறையான மேலோர் என்றும் கீழோர் என்றும் பாகுபடுத்தப்பட்ட பிரிவானது முதலில் தமிழரது இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் பிரகாரம் இவ்வாறான சமூகப் பிரிவுகள் பற்றித் தமிழின் முதல் நூலான தொல்காப்பியத்தில் வேறு எங்கும் தமிழரது ஒரு சமூக நடைமுறையாகக் குறிப்பிடப் படவில்லை. இலக்கியத்திற்குக் கண்டதே இலக்கணமாகும். அதன் பிரகாரம் தொல்காப்பியத்திற்கு முந்திய எந்த இலங்கியங்களிலும் சாதியப் பிரிவுகள் பற்றிக் குறிப்பிடாததனாலேயே ஆரியர் குறிப்பிட்ட வருணப்பரிவுகள் தவிர்ந்த எந்தச் சமூகப்பிரிவுகள் பற்றியும் தொல்காப்பியர் கூறிவில்லை என்று அறுதியிட்டுக் கூறமுடியும். வைசியன், சூத்திரன் என்ற பிரிவுகள் சங்கத் தொகை, பத்துப்பாட்டு நூல்கள் எதிலும் காணாதது வியப்பாயுள்ளது.

"ஊரும் பெயரும் உடைத்தொழிற் கருவியும்
யாரும் சார்த்தி அவை அவை பெறுமே"

என்று சூத்திரம் 619 மரபியலில் கூறப்படுவதன் மூலம் ஊர், நகர், இயற்பெயர், சிறப்புப்பெயர் எனத் தத்தம் தொழிலுக்கேற்ற தொழிற் கருவி ஆகியன சகல பிரிவுகளுக்கும் பொருந்தும் என்பதனால் தொழிலுக்கேற்ற ஒரு சமூகப்பிரிவு இருந்ததற்கான சான்றாக அறிய முடிகின்றது. இதன் மூலம் பிராமணன், அரசன், வணிகன், சூத்திரன் (வேளாண் மாந்தன்) ஆகியோர் தவிர்ந்த வேறு தொழிற் பிரிவினரும் வாழ்ந்தார்கள்; அவர்கள் தனித்தனிப் பிரிவுகளாகவும் அவர்களுக்கு வேறு வேறு தனித் தொழில்களும் இதன் மூலம் அவர்களது ஏற்றத்தாழ்வுகளும்

குறிப்பிட்டுக் காட்டுவதே எதிர்காலத்தில் சாதிப் பிரிவுகளுக்கு வித்திட்ட தெனலாம்.

வணிகர்கள் ஒரு தனிச் சமூகப்பிரிவாக நோக்கப்பட்டார்கள். ஆரம்பக்காலத்தே இதனையும் ஒரு தனிச் சாதிப்பிரிவாகவே சமூகம் அங்கீகரித்தது. அடுத்து, சூத்திரர் என்பதனைச் சத்திரியர், பிராமணர், வைசியர் என்ற மூன்று பிரிவுகளுக்குள் அடங்காத பிரிவுக்குள் அடக்கினர். தொல்காப்பியத்திலோ சங்ககாலத் தொகை நூல்களில் குறிப்பிடும் சாதிப்பிரிவுகள் எதனையும் அங்குக் காணமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும். சூத்திரர் என்ற பகுப்பு, மேலோர் என்று குறிப்பிட்ட சாதிகள் தவிர்ந்த ஏனையோரையும் அடக்கியிருந்தது.

வேளாண் மாந்தர் இயல்பு பற்றித் தொல்காப்பியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

"வேளாண் மாந்தர்க்கு உழுதுண் அல்லது
இல்லென மொழிப பிறவகை நிகழ்ச்சி" (தொல் - பொரு - மரபியல் - ௸)

இங்குச் சூத்திரர் என்போரை வேளாண்மாந்தர் என்று அழைக்கின்றார். இதன் பிரகாரம் வேளாண்மை செய்வோர் நிலவுடைமைக்காரர் மட்டுமல்ல மருதநிலத்தில் வாழ்ந்த மக்கள் அனைவருமே வேளாண்மைத் தொழிலில் ஈடுபட்டவர்களாவர். இதன் காரணமாகவே அந்நிலத்தில் வாழ்ந்து வேளாண்மைக்கு உறுதுணை புரிந்த அத்தனை மக்களையும் தேவேந்திரகுல வேளாளர் என்னும் சிறப்புப் பெயர் கொண்டு அழைக்கலாயினார். இவர்களே பள்ளர் என்று இன்று அழைக்கப்படும் விவசாய உதவியாளர் சமூகமாகச் சங்ககாலத்திலிருந்தே இருந்துள்ளனர். ஆனால் அக்காலத்தே பள்ளர் என்ற பெயர் தொல்காப்பியத்திலோ, சங்க எட்டுத்தொகை, பத்துப்பாட்டு நூல்களிலோ எங்கும் காணப்படவில்லை. மருத நிலத்துத் தெய்வம் இந்திரனாவான். அங்கு வேளாண்மை செய்த இனம் தேவேந்திரனை அடியொற்றி வந்த இனமாகியதால் எதிர்காலத்தில் அவர்கள் தேவேந்திரகுல வேளாளர் எனத் தம்மை அழைத்துக் கொண்டனர். முன்பு ஒரே பிரிவினராக நோக்கப்பட்ட வேளாண் மாந்தர் 12ஆம் நூற்றாண்டின் பின்பு சோழ அரசர்களினால் வடக்கிலிருந்து கொண்டுவந்து குடியமர்த்தப்பட்ட் பிராமணர்களுக்கு நில புலன் கொடுப்பதற்காக இவர்களிடம் இருந்த நிலபுலன்கள் பறிக்கப்பட்டே பிரம்மதேயம் என்ற குடியிருப்புக்களைத் தோற்றுவித்தார்கள். இதன் காரணமாக அப்போது நில புலன்களுடன் விவசாயத் தொழிலில் ஈடுபட்டு வாழ்ந்த ஒரு பகுதி வேளாண் மாந்தரின் நிலபுலன் பறிக்கப்பட்டு விவசாயத்திற்கு உதவி செய்யும் ஒரு சமூகமாக ஆக்கப்பட்டதே இந்த தேவேந்திரகுல வேளாளர்களின் கதையாகும்.

மேற்படி பாடலின் பிரகாரம் வேளாண் மாந்தர்க்கு உழுதுண்ணும் வேளாண்மைத் தொழில் வாழ்க்கையே உண்டு. அத்தோடு பிறவகையான வாழ்க்கை இல்லை என்று கூறுகின்றார். இதில் இருந்து வேளாண்மைத் தொழிலும் இது தவிர்ந்த வேறு தொழில்களும் இருந்துள்ளன என்றும் அவற்றைச் செய்வதற்கு வேறு தொழிலாளர்கள் இருந்துள்ளனர் என்ற கருத்தும் இங்கிருந்து பெறப்படு

கின்றன. வேளாண் மாந்தர் என்ற தொல்காப்பியரின் பதமே எதிர்காலத்தில் வேளாளர் என்னும் சாதியப்பிரிவு தோன்ற அடிப்படையாய் அமைந்தது. ஆனால் ஆரிய இனத்தில் சூத்திரர் என்ற பிரிவில் வேளாளர் என்ற சாதியப் பிரிவு காணப்படவில்லை. இப்பிரிவானது தமிழனுக்கே முழுக்க முழுக்க உரித்தான ஒரு சாதியப்பிரிவாகத் தொல்காப்பியரை அடியொற்றி அமைக்கப்பட்டு விட்டது.

அரசருக்கும், அந்தணருக்கும், வணிகருக்கும் வேளாண் மாந்தரும் அரசரிடம் இருந்து பெறுவன என்பன 625, 626, 627, 628 ஆகிய சூத்திரத்திரங்களில் குறிப்பிட்டுள்ள தொல்காப்பியர் இவைபோல அவை எளியோற்கு இல்லை என்று கீழ்வரும் சூத்திரத்தில் குறிப்பிடுகின்றார்.

"அன்ன ராயினும் இழிந்தோர்க்கு இல்லை" (தொல் - மரபியல் - 629)

அவர் அத்தகைய மரபுடையோராகினும் இழிந்தநிலையில் உள்ளவர்களுக்கு அவையில்லை என்று தொல்காப்பியர் குறிப்பிடுவதன் மூலம் இழிந்தோர் என்ற சொற்பதம் பாவிக்கப் பட்டுள்ளதனை நோக்கவேண்டும். இதன் மூலம் அரசன், பிராமணன், வணிகர், வேளாண் மாந்தர் என்போர் உயர்ந்தோர்; ஏனையோர் இழிந்தோர் என்ற நிலைப்பாடே தொல்காப்பியர் காலத்தே இருந்ததனையே அவர் அங்குக் குறிப்பிட்டுக் காட்டியுள்ளார் எனலாம். இவை யாவற்றையும் வகைப்படுத்தி நோக்கும் போது மேலோர், கீழோர், இழிந்தோர் என்ற தொல்காப்பியர் குறிப்பிடுவது எதிர்காலத்தே இதனை அடியொற்றியே சாதிகள் பலவாகத் தோன்றிற்றெனலாம். இழிவு என்ற சொல்லடியில் இருந்தே இழிந்தோர், இழிபிறப்பாளன், இழிசனன், எழியன், எழியவன் என்று கீழ்ச்சாதியினரைக் குறிக்கும் சொற்கள் தோன்றியிருக்க வேண்டும் என்று கூறலாம்.

சங்கத் தொகை நூல்களில் புலையன், புலைத்தி

சங்க நூல்களில் "புலை" என்ற சொற்பதத்தினை நோக்கலாம். புலை என்னும் வேர்ச்சொல்லை அடியொற்றியே புலையன் என்ற சொல் வழக்கு வந்துள்ளது எனலாம். புலை என்பதற்குத் தமிழ் அகராதியில் முக்கியத்துவம் அற்ற, குரூரமான, அழுக்கான, சுத்தமற்ற என்று ஒத்த பதங்கள் கூறப்பட்டுள்ளன. புலை என்பதில் இருந்தே புலால், பிலால் என்ற சொற்களும் பிறந்ததாக உள்ளன. புலால் என்பது மீன், மாமிசம் என்பனவற்றிற்கும் வழங்கப்படுகின்றது. புலால் நாற்றம் என்பதனை மீன் நாற்றம், இறைச்சி நாற்றம் என்ற பாவனையும் உண்டு. புலால் உணவு என்பது மாமிச உணவைக் குறிக்கும். மீனோ அல்லது மாமிசமோ நாற்றமுடையதே. இதன் நாற்றத்தினை நுகரவே அதனை ஈ மொய்க்கின்றது. ஆகவே அதில் ஒரு வெறுப்புக்குரிய மணம், அசிங்கம், அழுக்கு ஆகியன தோன்றக் காரணமாகின்றன. புலால் உண்பவன் புலையன், புலையன் என்ற கருத்துப்பட அது வழங்கிவந்துள்ளது. புலை என்ற சொல் ஏனைய திராவிட மொழிகளிலும் இதே சாரப்படியான அர்த்தம் கொண்ட சொல்லாகவே பயன்படுத்தப்பட்டுள்ளது. கன்னட மொழியில் பொலே என்பது குழந்தைப் பேறினால் ஏற்படும் சுத்தமற்ற தன்மை, பெண்களின் மாதவிடாய் ஆசூசம் என்று குறிப்பிடப்படுகின்றது. கொடகு மொழியில் மாதவிடாய் ஆசூசம் அல்லது பிரசவத்தினால் ஏற்படும் ஆசூசம் அல்லது இறப்பினால் ஏற்படும் ஆசூசம் என்று கொள்ளப்படுகின்றது.

இவ்வாறாகத் திராவிட மொழிக் குடும்பங்கள் பலவற்றிலும் ஒரே விதமான அர்த்தம் கொண்ட சொல்லே வழங்கி வந்தமையால் ஓர் இழிந்த மனிதனை அழைக்கப் புலை என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு தெற்கத்தைய மொழிகள் யாவற்றிலும் புலையன் என்பது ஓர் இழிந்த சாதிக்குப் பயன்படுத்தும் ஒரு சொல்லாகும். புலையன் என்ற சொல்லே திரிபடைந்து பறையன் என்றாகவும் வந்திருக்க முடியும்.

சங்க நூல்களில் குறிப்பிடப்படும் இசைக் கலைஞர்களான பாணன், கிணையன் ஆகியனவும் தொழில் ரீதியாகப் பாணன் வீணை வாசித்து அரசர்களிடமும் செல்வந்தர்களிடமும் தங்கள் இசையினை அரங்கேற்றி அதனைத் தமது வாழ்வாதாரமாகக் கொண்டவர்களாகும். இவர்கள் செல்வந்தர்களின் தூதர்களாகவும் செயற்பட்டுள்ளார். எனினும் இவர்கள் ஏழ்மையின் எல்லையில் இருந்த காரணத்தினாலும் சமூகத்தின் பிற்படுத்தப்பட்டோராகவே கணிக்கப் பட்டனர். இவர்களின் மனைவிகள் விறலியர் என அழைக்கப்பட்டனர். இவர்களே பாணன் வாசிக்கும் வீணையின் இசைக்கு நடனம் ஆடுபவர்களாகவும் இருந்தனர். இவர்களை விடத் தாழ்ந்தவர்களே கிணையர் என்போராகும். இவர்கள் தொழில் சிறு பறை வாசிப்பதாகும். இத்தகைய சிறு பறையே கிணை எனப்படும். இவர்களே அரசர்களின் அறிவித்தல்களைப் பறை அறைந்து பொது மக்களுக்குத் தெரிவிப்பவர்களாவர். இவர்களின் வளர்ச்சியே இன்றைய பறையர்கள் எனப்படும் சாதியின் தொடர்ச்சியாகும். அடுத்ததாகச் சங்க நூல்களில் குறிப்பிடப்படுவோர் துடியர். இவர்கள் துடி எனப்படும் ஒரு வகைப் பறையை இசைப்பவர்களாவர். இவர்களே போர்ப்பறை முழங்குபவர்களாவர். இவர்கள் யாவரும் நாடு நாடாகவும் ஊர் ஊராகவும் திரிந்து தமது கலையினைச் சந்தைப் படுத்தியே தமது சீவியத்தைக் கொண்டு செல்ல வேண்டிய ஒரு நாடோடி வாழ்க்கை வாழ நிர்ப்பந்திக்கப் பட்டவர்களாவர். சங்ககால நூல்களில் குறிப்பிடப்படும் புலை என்பதனை அடியொற்றிப் பிறந்த புலால் என்பது மச்ச, மாமிசம் என்ற பொருளில் கி.மு.3 ஆம் நூற்றாண்டின் நூலாகிய திருக்குறள் என்னும் நீதி நூலில் "புலால் மறுத்தல்" என்னும் ஓர் அதிகாரமே வகுக்கப்பட்டிருப்பதனைக் காண்க. ஆனால் திருக்குறளில் சாதிப்பிரிவுகள் பற்றி எங்கும் குறிப்பிடப் படவேயில்லை. இதன் அடிப்படையிலும் ஏனைய நீதி நூல்கள் தோன்றிய காலம் சமண சமயம், புத்தசமயம் ஆகியன தமிழ்நாட்டில் நிலைபெற்ற காலமாகையால் திருக்குறள் என்னும் நீதி நூல் கி.பி.3 ஆம் நூற்றண்டில் தேன்றியதாலேயே சாதி பற்றிய எந்தக்குறிப்புக்களும் திருக்குறளில் இடம்பெறவில்லை என்று ஹாட் கூறுகின்றார்.

சாதிப்பிரிவு பற்றிய சங்க நூற் சான்றுகள்

"இந்நான் கல்லது உணாவும் இல்லை,
துடியன், பாணன், பறையன், கடம்பன் என்று
இந்நான்கல்லது குடியும் இல்லை"

புறநானூற்றுக் காலத்தே துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்கு குடிகளே இருந்ததாகவும் வேறு எந்தக் குடிகளும் இல்லை என்பதாகப் "புலவர் மாங்குடிகிழார்" குறிப்பிடுவது ஈண்டு நோக்கற்பாலது. பாணன் என்பதே

புலையன் என்று கலித்தொகை 85ஆம் மற்றும் 95ஆம் பாடலிலும் குறிப்பிடுவதனைக் கீழே பார்க்கலாம். துடி என்பது ஒருவகைப் பறையாகும். இதனை முழங்குபவன் துடியன் என்று அழைக்கப்பட்டிருக்க வேண்டும். துடியன் என்பதனை நற்றிணை பாடல் 77 வரி 1,2 இல் குறிப்பிடுவதனைக் கீழே நோக்கின் மலையமான் திருமுடிக்காரி புலையனது துடி முழங்கச் செல்லுகிறான் என்பதில் இங்குப் புலையன் பறை அடிப்பவனாகக் குறிப்பிடப்படுகின்றான். ஆகவே துடியன் என்பதுகூடக் காரணப் பெயராக வந்த சொல்லாகவிருக்கலாம். ஆகவே பாணன், துடியன், பறையன் என்பனவற்றைக் குறிக்கும் ஒரு சொல்லாகப் புலையன் என்னும் சொல் பயன்படுத்தப்பட்டுள்ளதனை நோக்கலாம்.

புலையன், புலைத்தி என்ற பதம் மேற்குறிப்பிட்ட பல குழுவினருக்கும் பாவிக்கப்பட்டுள்ளதனை நற்றிணை 90 வது பாடலின் 3வது அடியில் "வறன் புலைத்தி எல்லித் தோய்ந்த" என்றவாறாகப் புலைத்தி என்கின்ற பரத்தை என்ற வகையில் இங்குப் பாவிக்கப்பட்டுள்ளது. குறுந்தொகையின் 330 வது பாடலின் முதல் வாரியில் "நலத்தகைப் புலைத்தி பசைதோய்ந்து எடுத்து" இங்குப் புலைத்தி என்ற பதம் உரையாசிரியரால் வண்ணாத்தி என்று பாவிக்கப்படுவதனை நோக்குக. புறநானூற்றில் 311 பாடல் வரி 2 இல் "புலைத்தி கழீஇய தூவெள் அறுவை" என்றவாறாக இங்கும் தூமைச் சேலை துவைக்கும் வண்ணாத்தி என்ற கருத்திலேயே புலைத்தி என்று பாவிக்கப்பட்டது. நற்றிணை பாடல் 77 வரி 1,2 இல் "மலையன் மாஊர்ந்து போகிப் புலையன், பெருந்துடி கறங்கப் பிற புலம் புக்கு அவர்" என்ற வாறாக மலையமான் திருமுடிக்காரி தன் குதிரைமீது அமர்ந்து செல்லப் புலையனது துடி முழங்கச் செல்லுகிறான் என்பதில் இங்குப் புலையன் பறை அடிப்பவனாகக் குறிப்பிடப்படுகின்றான். அவனே துடியன் என்றும் அழைக்கப்பட்டான். இங்குப் புலையன் என்பதோ அல்லது புலைத்தி என்பதோ இழி தொழிலாகக் கருதப்பட்ட தொழில்களைச் செய்பவர்கள் என்ற ரீதியிலேயே மேற்குறிப்பிட்ட சங்க நூல்களில் கூறப்பட்டுள்ளதனைக் காண்க. தொடர்ந்து நற்றிணை செய்யுள் 347 வாரி 5 இல் "தண்ணுமை" என்னும் பறை புலையனால் போருக்கு வீர மறவர்களை அழைப்பற்காக அறையப்படுவதாகக் குறிப்பிடுகின்றது. மேலும் கலித்தொகைப் பாடல் 68 வரி 19 இல் "பொலிகொளப் புகுந்தநின் புலையனைக் கண்ட யாம்" என்றவாறாக நீ மணம் செய்கின்ற மனையாகக் கருதி எம்முடைய மனையிலே பொலிக பொலிக என்று கூறிப் புலைத் தொழிலையுடைய பாணன் என்று உரையிற் குறிப்பிடுன்றது. அதே கலித்தொகையில் மேலும் பாடல் 85 வரி 22இல் "பொய்போர்த்துப், பாண்தலை யிட்ட பலவல் புலையனை" என்று குறிப்பிடுவதும் பாடல் 95 வரி 10இல் "பிரியாக் கவிகைப் புலையன்றன் யாழின்" என்ற இரண்டு பாடலிலும் பாணனையே இங்குப் புலையன் என்று குறிப்பிடப்படுகின்றது.

புலையனது பார்வையினையே உதாரணமாகக் காட்டும் பாடல் ஒன்று கலித்தொகையில் செய்யுள் 55இல் வரி 19 இல் இது அவ்வாறாகக் கூறப்படுகின்றது. "புலையர் போலப் புன்க ணோக்கி" அதன் விளக்கம் சாயலிருந்தபடி மெத்தென நடக்கும் மயிலுமன்று, சொல்லச் சொல்லத் தளருமாயின் கிளியுமன்று, என்று அவ்விடத்து அத்தன்மையதாகிய உறுப்புக்கள் பலவற்றையும் பொய் பாராட்டி,

வலையர் அம்மாக்களின் சோர்வைப் பார்க்குமாறுபோல என் நெஞ்சழிந்த செவ்வியைப் பார்த்துப் புலையர் நோக்குமாறு போன்று வருத்தமுண்டாகுமாறு நோக்கித் தொழுதலைச் செய்தாய் என்பதாக உரையாசிரியரால் கூறப்படுவதனை நோக்குக. இது போன்ற கருத்தே புறநானூறு பாடல் 259 வரி 5 இலும் காணமுடியும். "முருகுமெய்ப் புலைத்தி போலத்" என்று வரும் பாடல் ஆநிரை கவர்ந்த மறவர், ஆநிரையோடு திரும்பிச் செல்லாது, அதனை மீட்க வருபவர்களை எதிர் கொண்டு மறைந்திருந்த வேளை வெறியாடும் புலைச்சிபோல் தாவித்திரியும் ஆநிரைகளை மீட்டுக்கெள்ளக் கருதி என்றவாகக் கூறப்படுவதிலிருந்து ஒருவருக்கு சுவாமி உருவேறி வெறியாட்டுச் செய்வது என்பது ஒரு புலைச்சி போன்ற ஒரு தாழ்ந்த சாதிப் பெண்ணுக்கே அப்படியான உருக்கொள்ளுதல் வரும் அவ்வாறு உருக்கொண்டு துள்ளுதல் ஆநிரை மீட்க வருபவர்களும் வெறிபிடித்தவர்கள் போல் வருவர் என்பதாகும்.

"இழி" என்ற சொற்பதம் கீழோர், தாழ்ந்தோர் என்ற வகையிலேயே சங்க நூல்களில் பிரயோகத்தில் இருந்துள்ளது. இழி என்ற அடிச்சொல்லிலிருந்தே "இளிசனம்", "இளிசனர்" சொற்கள் தோன்றின. கலித்தொகையில் பாடல் 94இல் வரி 28இல் இந்த வகையில் பாவிக்கப்பட்டுள்ளதனை நோக்க முடியும் "இழிந்ததே கூனின் பிறப்பு கழிந்தாங்கே" என்று வருவதை நோக்கவும். புறநானூற்றில் பாடல் 110 இல் "இவைநுமக்கு உரிய அல்ல, இழிந்த" என்ற வாரியிலும் அதேவிதமாகப் புறநானூற்றில் பாடல் 204 வரி 1, 2 களில் " ஈஎன இரத்தல் இழிந்தன்று, அதன் எதிர், ஈயேன் என்றால் அதனினும் இழிந்தன்று" என்றவாறாகவும் இழிவு என்பதற்கான விளக்கமாகவும் குறிப்பிடப் பட்டுள்ளதனை நோக்குக.

சங்ககாலத்தே மீன்பிடித் தொழில் செய்தவர்களும் கீழ்நிலைச் சாதியாராகவே கருதப்பட்டனர். உயர்ந்தோர்கள் புலால் உணவினை உண்பதில்லை என்றும் அதன் காரணமாகப் புலால் எனப்படும் மீனைப் பிடிப்பவர்களும் தாழ்ந்தோர் என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். அகநானூற்றில் பாடல் 110 வரி 1,2 "இவைநுமக்கு உரிய அல்ல இழிந்த, கொழுமீன் வல்சி என்றனம் இழுமென" என்றவாறாகவும் கலித்தொகையில் பாடல் 121 வரி 20 இல் "எறிதிரை தந்திட இழிந்தமீ னின்றுறை" என்ற இரண்டு பாடல்களிலும் மீனின் இழிவு குறிப்பிடப்பட்டுள்ளதனை அறிக. புறநானூற்றின் செய்யுள் 300 வரி 1 இல் "நாள்வலை முகந்த கோள்வல் பரதவர்" என்றவாறாக மீன்பிடிப்போரைப் பரதவர் என்ற பதப் பாவனை முதலில் அறியப்பட்டுள்ளது. இதுவே இறுதியில் பரவர் என்ற பெயராகத் திரிபடைந்து பிரயோகத்திற்கு வந்தது எனலாம்.

புறநானூறு பாடல் 82 இல் "சாறுதலைக் தொண்டென்ப பெண்ணீற் றுற்றெனெப், பட்ட மாரி ஞாயிறு ஞாயிற்றுக், கட்டில் நிணைக்கும் இழிசினன் கையது, போழ்தூண்டு ஊசியின் விரைந்தன்று மாதோ" என்ற பாடலில் தோல் தொழில் செய்பவன் பற்றிய கருத்து பின்வருமாறு: ஊரிலே விழா நடக்கின்றது அதற்குப் போக வேண்டும். மனைவிக்குப் பேறுகாலமாக உள்ளது. இழிசினனாகிய புலயன் ஊசியால் விரைந்து தோலால் செய்யப்பட்ட கட்டிலினை விரைவாகத் தைக்கின்றதனை இச்செய்யுள் விளக்குகின்றது.

புறநானூற்றின் பாடல் 170 வரி 4ரூ5 ஆகியனவற்றில் " வில்லுழுது உண்மார் நாப்பண் ஒல்லென, இழிபிறப் பாளன் கருங்கை சிவப்ப" என்று பாடுவது யானைத் தந்தத்தில் விளைந்த முத்தை விறலியருக்கும் கள்ளினைப் பாணருக்கும் கொடுத்த தலைவனது குடிகள் உழுதுண்டு வாழும் கருமை நிறமுடைய கைகளையுடை இழிப்பிறப்பாளன் கை சிவக்கும்படியாகத் தனது பறையை உலைக் களத்தில் உள்ள உலைக்கல் சிவப்பது போல் அவனது கை சிவந்துள்ளது என்று பாடப்படுவதனால் இழிசினனே பறை அடிப்பவன் என்று தெளிவாகக் கூறப்படுகின்றது.

ஏவலிழையர் என்பது இளையஏவலாளி என்ற சொல்லும் தண்ணுமை என்கின்ற ஒரு வகைப் பறையை இசைப்பவனை இளையர் என்றும் பதிற்றுப்பத்து 41 வது செய்யுளிலும் 51 வது செய்யுளிலும் குறிப்பிடப்படுகின்றது. பதிற்றுப்பத்து பாடல் 41 இல்

"புணர்புரி நரம்பின் தீந்தொடை பழுனிய
வணரமை நல்யாழ் இளையர் பொறுப்பப்
பண்ணமை முழவும் பதலையும் பிறவும்
கண்ணறுத் தியற்றிய தூம்பொடு சுருக்கி
காவில் தகைத்த துறைகூடு கலப்பயைர்"

இச்செய்யுளில் ஒரு பாணர் விறலியர் கூட்டம் பரிசில் பெற விரும்பித் தங்களது இசைக் கருவிகளுடன் அரசனை நாடிச் செல்லுவதனை விளக்குகின்றது. புணருதற்குரிய முறுக்கேறிய நரம்பினையுடைய இன்னிசையினைத் தரும் யாழ்களை ஏவலிழையர் சுமந்தபடி செல்லுகின்றனர். தண்ணுமை எனும் முழவும் (ஒரு வகைப் பறை), ஒரு பக்கம் மட்டும் அடிக்கும் ஒருகண் மாக்கிணை என்னும் பறையும் பிற இசைக்கருவிகளும், மூங்கிலை இடையிட்டு அறுத்துச் செய்த பெருவங்கியம் என்னும் கருவியோடு ஒருங்கே சேர்த்துக் காவடித் தண்டில் இரண்டுபக்கமும் ஆடற்றுறைக்குத் தேவையான உடைகள் மற்றும் கருவிகளுடன் தோழில் சுமந்த வண்ணம் கூட்டமாகப் பாணர், விறலியர், ஏவலிளையர், மறவர் கலப்பையர் என்னும் கூத்தர் ஆகியோர் செல்வதாகப் புலவர் குறிப்பிடுகின்றார்.

சிலப்பதிகாரத்தில் புறஞ்சோரி என்ற வகையில் ஓர் ஊர் அழைக்கப்படுகின்றது. புறஞ்சேரி என்பதற்கு ஊருக்குப் புறத்தே சமூகத்தில் தாழ்ந்தோர் வாழும் இடம் என்றே கருதப்படுகின்றது. அங்கேதான் பாணன், விறலியர், துடியன், தண்ணுமையன், பறையன், புலையன் ஆகியோர் வாழும் இடமாகவிருந்தது. மனுசாஸ்திரத்தின்படி பார்ப்பனன் நாட்டியம் ஆடக்கூடாது என்றும், இசைக்கருவி இசைக்கக்கூடாது என்றும் கூறப்பட்டிருந்தது. அதனைச் செய்பவர்கள் கீழ்ச்சாதியினர் என்றே குறித்துள்ளனர். இத்தகைய பகுப்பே பாணர்களையும், விறலியர்களையும், பறையரையும், தேவரடியார்களையும், துடியரையும் ஒதுக்கப்பட்டோர் என வகைப்படுத்தத் தூண்டியது எனலாம். பாணன், விறலியர், துடியன், தண்ணுமையன், பறையன் ஆகியோர் அரசர்களிடம் மிகுந்த மதிப்புக் கொண்டவர்களாகவும் அவர்களை அண்டிப் பிழைப்பு நடத்துபவர்களாகவும் இருந்துள்ளனர். ஒரு சில பாணர்கள் பின்னர்ச் சங்கச் சான்றோர்கள் என்று அழைக்கப்பட்ட புலவர்களாகவும் வந்துள்ளனர் என்று பிறையன் பெபன்பேகர் (Bryan Pfaffenberger) தனது நூலான "Caste in Tamil Culture: The Religious

Foundations of Sudra Domination in Tamil Srilanka" என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

முடிவுரை

தொல்காப்பியம் ஆரியர்கள் வகுத்த நான்கு வருணப்பிரிவுகள் தவிர வேறு எந்தச் சாதிப்பிரிவுகளையும் காட்டாததனால் தொல்காப்பியர் காலத்திற்கு முன்பு சாதியப் பிரிவுகள் எதுவும் தமிழ்ச் சமுதாயத்தில் இருக்கவில்லை என்ற முடிவுக்கு வரமுடிகிறது. எட்டுத்தொகை நூல்களில் காட்டப்பட்ட மேற்படி உதாரணங்களில் இருந்தும் ஆரியர் கொடுத்த வருணப் பிரிவுகளிலிருந்தும் இன்றைய சாதியப் பிரிவினைகளுக்கு அங்குக் காட்டப்பட்ட சமூகப் பிரிவுகளே மேலும் விரிவடைந்த ஒரு சாதிய இறுக்கம் கொண்ட சமுதாயமாக வளர்ச்சி பெற்றிருக்கின்றது என்ற முடிவுக்கு வருவதற்குக் கொடுக்கப்பட்ட சகல சான்றுகளும் உறுதுணை புரிகின்றன.

துணை நூல்கள்

1. தொல்காப்பியம் - பொருளதிகாரம் - பேராசிரியர் சண்முகம்பிள்ளை.
2. கலித்தொகை - சி.வை.தாமோதம்பிள்ளை பதிப்பு.
3. புறநானூறு - புலியூர்க் கேசிகன் தெளிவுரை .
4. அகநானூறு - புலியூர்க் கேசிகன் தெளிவுரை .
5. குறுந்தொகை - புலியூர்க் கேசிகன் தெளிவுரை.
6. நற்றிண - புலியூர்க் கேசிகன் தெளிவுரை.
7. பதிற்றுப்பத்து - புலியூர்க் கேசிகன் தெளிவுரை.
8. பரிபாடல் - புலியூர்க் கேசிகன் தெளிவுரை.
9. பண்டைய தென்இந்தியாவின் சாதிபற்றிய ஆதாரங்கள் - பேராசிரியர் ஜோர்ச்.எல்.ஹாட்.
10. தமிழ் இலக்கிய வரலாறு - முனைவர் பா. இறையரசன்.

திருமூலர் காட்டும் சமூகவியல் இலக்கணங்கள்

முனைவர் இரா. சந்திரசேகரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி
நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா

தமிழக வரலாற்றில் சமூகத்தைப் பற்றி ஆழமாகச் சிந்தித்தவர்களுள் திருமூலர் முன்னோடியாவார். திருமூலர், தனிமனிதன் மற்றும் சமூகம் என்னும் இரண்டு நிலைகளிலும் தனித்தனியான மற்றும் பொதுவான வாழ்வியல் சிந்தனைகளைத் திருமந்திரத்தில் வெளிப்படுத்தியுள்ளார். அவை இக்கால வாழ்வியலுக்கும் பொருந்துவனவாக உள்ளன. அவற்றை வகைப்படுத்தி விளக்கும் வகையில் இக்கட்டுரை அமைகின்றது.

சமுதாய நிலைகள்

மனிதகுலம் இதுவரை ஐந்து வகைச் சமுதாய நிலைகளைக் கடந்து வந்துள்ளது. அவை: 1.ஆதிப் பொதுவுடைமைச் சமூகம், 2.அடிமைச் சமூகம், 3.நிலவுடைமைச் சமூகம், 4.முதலாளித்துவ சமூகம், 5.சமத்துவ சமூகம் என்பனவாகும். இவ் ஐந்து நிலைகளுக்கும் பொருந்தும் சமுதாய இலக்கணங்களைத் திருமூலர் வகுத்தளித்துள்ளார்.

சமுதாயவியல் இலக்கணங்களுள் முதன்மையானது கல்வி. கல்வியில் சிறந்த சமுதாயமே எல்லாவகையிலும் செம்மையான வாழ்வினை வாழ்ந்து, காலத்தில் தன்னை இருத்திக்கொள்ளும். அவ்வகையில் கல்வியின் தனித்தன்மை குறித்துத் திருமூலர் குறிப்பிட்டுள்ளவற்றை இனிக்காண்போம்.

கல்வியின் இன்றியமையாமை

'கல்வி' என்பது அறிவு, நல்லொழுக்கம், நுட்பத் தகைமை என்பவற்றைக் கற்றலையும், கற்பித்தலையும் குறிக்கும். கல்வி மனிதருக்குப் பரந்துபட்ட அறிவை வழங்கிச் சிந்தனையைத் தூண்டும்.[1] கல்விச் செல்வம் ஒன்று மட்டுமே நிலையான புகழினைத் தரும். பண்டைய காலத்தில் கல்வி என்பது சமயச் சார்பானதாக இருந்தது.[2] சமயத்தினைத் தழுவிய அக்காலக் கல்வி வளர்க்கப்பட்டது. கல்வி கற்றலைத் திருமூலர் சமயத்துடன் இணைத்துக் கண்டுள்ளார். [3]

'கல்வி' என்பது, தத்துவத்தைப் புரிந்துகொள்ளுதல் என்ற நிலையில் இருந்தது. 'தத்துவம் புரிதல்' என்ற இந்த நிலையில் 'சிவ அனுபவத்தினைப் பெறுவதே கல்வி' என்ற கருத்தினை உடையவராகத் திருமூலர் உள்ளார்.

இறைவன் உயிர்களின் வினைக்கேற்பப் பிறப்பிக்கிறான். அவ்வாறு பிறந்த உயிர் தன் அருளை நாடி உய்ய நினைக்கின்றது. எனவே, உயிர்களின் உள்ளத்துள் நிலைத்து நிற்கும் கல்வியே உண்மையான கல்வி என்பதனை,

"குறிப்பறிந் தேன்உடலோடுயிர் கூடிச்
செறிப்பறிந் தேன்மிகு தேவர் பிரானை
மறிப்பறி யாதுவந் துள்ளம் புகுந்தான்
கறிப்பறி யாமிகுங் கல்விகற் றேனே." [4]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. இப்பாடலில், 'மாசில்லாத, உயர்ந்த கல்வியை யான் கற்றேன். அதனால் உயிர் உடலோடு கூடிநின்றேனாய், அறியத்தக்க பொருளை அறிந்தேன். அதன் பயனாக இறைவனை உள்ளத்திலே இருத்தத் தெரிந்தேன். அதனால், அவனும் மீண்டுபோகாதவனாய் என் உள்ளத்திலே வந்து புகுந்து நின்றான்' என்கிறார் திருமூலர்.

உடலில் உயிர் உள்ள போதே நிலையாமையை உணர்ந்து நிலையான ஞானத்தைப் பெறுவதற்கு முயற்சி செய்ய வேண்டும். பொருட்செல்வத்தினைத் தேடித் தருகின்ற கல்வி, அச் செல்வத்தினைத் தந்தபின் மேலும் கற்க வேண்டும் என்னும் ஆர்வத்தினை ஊட்டாது. ஆனால், உடலுக்கும் உயிருக்கும் மேன்மை தருகின்ற கல்வியானது ஊனில் கலந்து உயிரில் கலக்கும் கல்வி எல்லாக் காலத்திற்கும் பயன்படும் என்பதை வள்ளுவரும்,

"ஒருமைக்கண் தான் கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து" [5]

என்று குறிப்பிட்டுள்ளார்.

உயிர்களுக்குக் கண் இன்றியமையாதது. உயிரின் ஒளி கண் வழியே உலாவி உலக வாழ்வினை நடத்தி வருகின்றது. உயிரை விட உயர்வாக எண்ணி எவ்வழியும் எவரும் உரிமையுடன் புகழ்ந்து போற்றி வருகின்றனர். இது புறக்கண்ணால் மானுடர் அடையும் சிறப்பாகும். அகக்கண் பெறும்போது புறக்கண் மேன்மேலும் ஒளிபெறுகின்றது. அகக்கண்ணை அளிப்பது கல்வியாகும். இதனைத் திருமந்திரம்,

"கற்றறி வாளர் கருதிய காலத்துக்
கற்றறி வாளர் கருத்திலோர் கண்ணுண்டு
கற்றறி வாளர் கருதி உரைசெய்யுங்
கற்றறி காட்டக் கயலுள வாக்குமே" [6]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. இப்பாடலில், 'கல்வியைக் கற்ற அறிவினையுடையோர் அவ்வறிவால் கருதியுணருங் காலத்து, கல்வியைக் கற்ற அறிவினை உடையோர் பலரது உள்ளத்திலும் சிறப்பாக ஒரு கண் இருத்தல் புலனாகும். இனி அக் கற்ற அறிவினையுடையோர் ஆராய்ந்து சொல்லுகின்ற கல்வியறிவுரை, பாலை நிலத்திலே கயல்மீனைப் பிறழச் செய்தாற் போலும் நன்மையைப் பயக்கும்' என்கிறார் திருமூலர்.

கல்வியின் உண்மையைச் சிந்தித்து அறிவின் முதிர்ச்சி பெற்றவர்க்கு ஞானக்கண் ஒன்று தோற்றம் தரும். அவ்வாறு ஞானக்கண் பெற்றவர்கள் மற்றவர்களுக்குச் சிவ அனுபவத்தினைச் சொல்வதே கல்வி ஆகும். இந்தக் கருத்தினையே,

"கண் இரண்டே யாவர்க்கும்
கற்றோர்க்கு மூன்று விழி" [7]

என்று நீதிச்சாரத்தின் அடிகள் குறிப்பிட்டுள்ளன. கற்றவர்கள் ஞானக் கண்ணைப் பெறுகின்றனர். ஞானக்கண் பெற்றோர் தாமும் நுகர்ந்து, பிறரும் அனுபவிக்குமாறு செய்வர். இவர்கள் தமக்காக வாழாமல் பிறர் வாழ்க்கையையும் செம்மைப்படுத்துவர். கல்வி கற்றவர் கற்றவழி நின்று உண்மைப் பொருளினை அறிகின்றனர்.

முயற்சியின் பயனாகக் கிடைத்த கல்வியைவிட, கேள்வி ஞானத்தால் கிடைக்கின்ற பயன் சிறப்புடையது. எழுத்தறிவில்லாதவர்களுக்குக் கேள்வி மட்டுமே உரியது. அவர்கள் சான்றோர்களின் சொற்பொழிவினைக் கேட்டுக் கூரிய நுண்மாண் நுழைபுலம் பெற்றிருப்பர். இவர்கள் வாழ்க்கையில் எதையும் எழுதி வைக்காமல் அறிவால் அறிந்து சொல்லாடல் வழியாக வெளிப்படுத்துவர்.

திருமூலர் சிவனின் பெருமைகளை, தத்துவங்களைக் கேள்வி ஞானம் எனக் கூறினாலும் கற்பவருக்குக் கேள்வியறிவு இன்றியமையாதது என்று குறிப்பிட்டுள்ளார்.

கேள்விஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் தேவர்க்குச் சமமானவர்கள். இறைவனைப் பற்றிய ஞானம் பெற்றவர்களுக்கு மனிதனுக்கு உண்டாகும் பிறப்பு, இறப்பு நீங்கும்.

> "ஐம்புலன்கள் தரும் சிற்றின்பமே இந்தப் பிறப்பில் காணும் பேறு என்று வாழ்நாளை வீணாகக் கழிப்பர். அவர் தம்மையும் ஏய்த்துப் பிறரையும் ஏய்ப்பர். இறைவன் பேரின்ப வடிவானவன். பேரறிவுடையவன். அகத்தால் அறியப்படுபவனே அன்றிப் புறத்தால் காணப்படாதவன். இறைவனைப் புறத்தால் உணரவோ, அறியவோ, தெரியவோ முடியும் எனச் சொல்பவரின் செயல், மணல்வீடு கட்டி அது உண்மையான வீட்டிற்குச் சமம் என்று சொல்லும் சிறுபிள்ளையின் சொல்லுக்குச் சமம்." [8]

ஆன்மாக்கள் செய்த இருவினைக்கு ஈடாக இன்ப, துன்பங்களைத் தந்து ஆட்கொள்வான். அப்படிப்பட்ட இறைவனை வெறுப்பவர்கள் கல்லால் செய்யப்பட்ட பசுவில் பால்கறக்கும் முட்டாள்களுக்குச் சமம். பிறவி என்ற பெருங்கடலில் அகப்படாமல் இருப்பதே உயிர்களுக்குரிய முயற்சியாகும். இது இறைவனடி சேர்வதால் கிடைக்கப் பெறும். இறைவனின் திருவடிகளைப் பிடிப்பதற்குப் பிறப்பு என்பது அடித்தளம். இந்தப் பிறப்பில் உடம்புக்குத் துணை உயிராகும். அந்த உயிருக்குத் துணை கேள்வியால் விளைந்த சிவஞானமாகும். அதனால் ஆணவம், கன்மம், மாயை நீங்கும். கேள்விஞானத்தின் பயனை,

"உறுதுணை யாவது உயிரும் உடம்பும்
உறுதுணை யாவது உலகுறு கேள்வி
செறிதுணை யாவது சிவனடிச் சிந்தை
பெறுதுணை கேட்கிற் பிறப்பில்லை தானே" [9]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. சிவதத்துவத்தினைக் கேட்கும் நல்ல கேள்வியறிவு உயிர்க்கு உறுதுணையாகும்.

கல்வி மற்றும் கேள்வி வாயிலாக அறிந்துகொண்டாலும் உண்மை அனுபவத்தினைப் பெறாதவர்கள் கல்லாதவர்கள். கல்லாமையை இல்லாமை ஆக்கினால் மனித குலம் சிறக்கும். திருமூலர் சிவ அனுபவத்தினைக் கற்காமல் இருப்பதையே கல்லாமை என்கிறார். இறைவன் தந்துள்ள இயற்கை அறிவினால் மனிதர்களிடம் அன்பு செலுத்த முடியும். சிவஞானம் பெற்றவர் சிவநெறியை உண்மை நெறியென உணர்ந்து வாழ்வார். ஆனால், சிவஞானக் கல்வி இல்லாதவர்கள் மனத்தினைச் சிதறவிட்டு, அழிவைத் தேடிக்கொள்வர்.

திருமூலர் சிவன் மீது கொண்டுள்ள பற்றின் காரணமாகத் திருவைந்தெழுத்தையும் திருமுறைகளையும் கற்காதவர்களே கல்லாதவர்கள் என்றாலும் கல்வியறிவு பெறாதாருக்குரிய வாழ்வியல் இன்னல்களையும் சுட்டுகின்றார்.

இறைவன் வேறுபாடு இல்லாமல் வழிபாட்டினை ஏற்றுக்கொண்டாலும் கற்றவர் சிவனை அறிவால் உணர்ந்து மகிழ்வர். கல்லாதவர்கள் உலகியலறிவு பெற்றிருப்பினும் அறிவால் உணர்ந்து மகிழும் திருவடியின்பம் பெறமாட்டார்கள். இதனை,

"கல்லா தவரும் கருத்தறி காட்சியை
வல்லார் எனில்அருட் கண்ணான் மதித்துளோர்
கல்லாதார் உண்மைபற் றாநிற்பர் கற்றோரும்
கல்லாதார் இன்பம் காணுகி லாரே" [10]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. கல்லாதவர்கள் நிலையில்லாதவற்றை நிலையானது என எண்ணுவார்கள். இறைவழி நிற்கும் ஆற்றலைக் கல்லாதவர் துன்பத்திற்கு ஆளாவர். நிலையில்லா உயிரை நிலையானது என மனத்தில் நினைப்பவர் இறைவனை வணங்கும் முறையை அறியார்.

கற்றவர்கள் சிவஞானம் பெற்று உடலில் உயிர் நிலையாகத் தங்காது என்பதை உணர்ந்து அறமும் தவமும் செய்து முக்தியடைகின்றனர். கல்லாதவர்கள் வினை காரணமாகப் பிறவித் துன்பத்தில் வருந்துகின்றனர்.

அனுபவத்தால் பெறப்படும் கல்வி உயிருக்கு உறுதியளிக்கும். மேலும், அறிவினைத் தூண்டும். கற்று அனுபவம் இல்லாத மூடரைப் பார்க்கவும் கூடாது. அவர்கள் சொற்களைக் கேட்கவும் கூடாது. அனுபவம் இல்லாத மூடர்களைவிட, எழுத்தறிவில்லாதவர்கள் நல்லவர்கள் என்பதனை,

கல்லாத மூடரைக் காணவும் ஆகாது
கல்லாத மூடர்சொல் கேட்கக் கடன்அன்று
கல்லாத மூடர்க்குக் கல்லாதார் நல்லராம்
கல்லாத மூடர் கருத்தறி யாரே.[11]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. கல்வியறிவு இல்லாதவர் பிறர்க்கு அறிவு புகட்ட முயற்சி செய்வது, பெண்மையற்ற அலிகள் காதல் வேட்கை கொள்வது போல என்பதை,

"கல்லாதான் சொல்கா முறுதல் முலையிரண்டும்
இல்லாதாள் பெண்காமுற்று அற்று" [12]

என்ற திருக்குறள் குறட்பா குறிப்பிட்டுள்ளது.

"கல்வியைக் கற்று இறைவனை வணங்க, சுயசோதியான இறைவன் உள்ளத்தில் தோன்றுவான். உண்மைக் கல்வி கற்றவர் பாவங்களிலிருந்து நீங்குகின்றனர். அவர்கள் உடல் இரசவாதம் செய்யப்பெற்ற பொன்போல அழியாத் தன்மை பெறும். உண்மைக் கல்வி கற்றவர் பாவங்களில் இருந்து நீங்குகின்றனர்." [13] எனவே, கல்வியின் பயனைப் பற்றி,

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை" [14]

என்று குறட்பாவும்

"பற்றது பற்றில் பரமனைப் பற்றுமின்
முற்றது எல்லா முதல்வன் அருள்பெறில்
கிற்ற விரகிற் கிளரொளி வானவர்
கற்றவர் போன்பம் உற்றுநின் றாரே." [15]

என்று திருமந்திரப் பாடலும் குறிப்பிட்டுள்ளன. எனவே, வாழ்க்கை நன்னெறியில் செல்லக் கல்வி இன்றியமையாதது என்று திருமூலர் சுட்டியுள்ளார்.

நல்லொழுக்கம்

மனிதன் பின்பற்ற வேண்டிய நெறிகளுள் ஒன்று நடுநிலைமையுடன் நடந்து கொள்வது. மாறுபாடு இல்லாத மனமும் செம்மையாய் உடைய மனிதனும் சிறந்து விளங்குகின்றான். எல்லா நன்மைகளும் அவனிடம் வந்து சேர்கின்றன. உறவு, பகை என்று எதனையும் கருதாமல் நியாயமான வழியில் செல்பவனுக்கு நன்மைகள் வந்தடைகின்றன. உலகத்துப் பொருள்கள் மனிதனை எல்லா வகையிலும் கவர்ந்திழுத்துப் பிறவிக்குக் காரணமான வினைகளைச் செய்யத்தூண்டும். இதனை,

"நடுவுநின் றார்க்கு அன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே." [16]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன.

நடுவு நிலைமையில் நின்றவர்க்கு அல்லாமல் மற்றவர்க்கு ஞானம் கிட்டாது. நடுவுநிலையில் நிற்பவர்க்கு நரகமும் இல்லை. நல்ல தேவர்களாகவும் இருப்பார்கள். திருமூலர் நடுவு நிலையில் நின்றதாகக் கூறுகின்றார்.

"நேர்மையைக் கடைப்பிடிப்பது, நீதியை நிலைநாட்டுவது போன்றன நடுவு நிலைமையைக் குறிக்கும். மெய்க்கும் பொய்க்கும் இருத்தலுக்கும் இன்மைக்கும் நன்மைக்கும் தீமைக்கும் இடையே நடுவு நிலைமை இருக்க முடியாது." [17]

வள்ளுவர், நடுவு நிலைமையைக் கூறும்பொழுது எல்லாவற்றையும் பகுத்தறிவால் ஆராய்ந்து நல்லவற்றைத் தேர்ந்து மக்களின் தேவையறிந்து செயல்படவேண்டும் என்பதனை,

"தகுதி என ஒன்று நன்றே பகுதியால்
பாற்பட்டு எழுகப் பெறின்" [18]

என்ற குறட்பாவில் குறிப்பிட்டுள்ளார்.

கரிய மேகம் போன்ற நிறமுடைய திருமால் தான் காக்கும் தொழிலில் வேறுபாடு காட்டாமல், நடுவு நிலைமையோடு நின்று வருகிறார். நடுவுநிலைமை தவறாமல் இருப்பவர்கள் சிவனாக விளங்குவார்கள். இதனை,

"நடுவுநின் றான்நல்ல கார்முகில் வண்ணன்
நடுவுநின் றான்நல்ல நான்மறை யோதி
நடுவுநின் றார்ச்சிலர் ஞானிகள் ஆவோர்
நடுவுநின் றார்நல்ல நம்பனு மாமே." [19]

என்னும் பாடல் அடிகள் விளக்குகின்றன. நடுவுநிலை மனிதனுக்கு வேண்டிய உயர்ந்த நெறியாகும். வாழ்வில் நடுவுநிலையில் இருப்பவர்கள் ஞானியாக, தேவனாக மதிக்கப்படுகின்றனர். எனவே, வாழ்க்கையில் நடுவுநிலைமை வகுத்தல் தேவை என்பதைத் திருமூலர் வலியுறுத்துகின்றார்.

வாழ்க்கை செம்மையாக இருக்க மனிதன் மேற்கொள்ள வேண்டிய நெறிகளில் ஒன்று புறங்கூறாமை. திருமந்திரம் இறைவனின் தன்மையினைப் புறத்தில் பேசாமல், அவன் பெருமையினை அகத்தில் உணர்தலையே புறங்கூறாது இருத்தல் என்று கூறுகிறது.

எக்காரணத்தைக் கொண்டும் யாரையும் புறங்கூறாது இருத்தல் வேண்டும் என்னும் உயர்ந்த வாழ்வியல் நெறியினைத் திருமூலர் எடுத்துரைத்துள்ளார்.

அறியாமையால் வஞ்சகச் செயல்களைச் செய்துவிட்டு மனிதர்கள் பலர் துன்பப்படுகின்றனர். இந்தச் செயலையே திருமந்திரம் கூடா ஒழுக்கம் என்று கூறுகின்றது. வஞ்சகச் செயலினால் வரும் துன்பங்களை உணர்ந்து மனிதன் வாழ்க்கையை நன்னெறியில் செலுத்தவேண்டும்.

ஆசையே துன்பங்களுக்கு அடிப்படை எனவும் அதனை அகற்றினால் வாழ்வில் இன்பம் பெறும் என்றும் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர். இறைவன் மீது

கூட மிகுதியான ஆசை கூடாது எனத் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். ஈசனை நினைக்கலாம். இறைவனோடு ஒன்றலாம். ஆனால், ஆசை கூடாது. ஆசை உண்டாகும் பொழுது அது நிறைவேறவில்லை என்றால் துன்பம் உண்டாகும். ஈசன் எங்கும் நிறைந்து காணப்படுகின்றான். மனித உயிருள் உயிராக இருக்கின்றான். அந்த உண்மையை உணர்ந்தால் போதும். அவனிடம் மோட்சம் வேண்டும் என எதனையும் வேண்டாதே. அந்த ஆசையையும் விட்டுவிட்டால் ஆனந்தம் உண்டாகும் என்று திருமூலர் உரைத்துள்ளார்.

பிறரின் துணையுடன் மட்டுமே மனிதனால் வாழ முடியும். மனிதன் வாழும் நெறியினை வகைப்படுத்தி அமைப்பவர் பெரியோர். இத்தகைய பெரியோருடன் கூடி இருத்தல் பேரின்பமாகும். பெரியோரின் துணை வாழ்விற்கு இன்றியமையாதது ஆகும்.

அறிவிலும் பண்பிலும் மூத்த பெரியோரின் உறவினைத் தேடிப்பெறுதல் அரிய பேறு என்பதை,

> *"அரியவற்றுள் எல்லாம் அரிதே பெரியோரைப்*
> *பேணித் தமராக் கொளல்"*

என்று வள்ளுவர் சுட்டியுள்ளார்.

பெரியோரைத் துணையாகக் கொண்டு அவர் காட்டும் நன்னெறியில் சென்றால் சிவனின் திருவடிகளை அடைய இயலும். அதனால்தான் திருமூலர் பெரியோருடன் கூடிச் செயல்புரிவதைப் பேரின்பம் என்று குறிப்பிடுகின்றார்.

மனிதன் வாழ்வினை நன்னெறியில் செலுத்தி மானுடப் பிறவியின் பயனை அடையவேண்டும். தனியொருவனாக வாழ்ந்தவன் மணம் புரிந்து மனைவியுடன் இல்லறத்தில் வாழும் வாழ்க்கை முறையே இல்லற வாழ்வு எனப்படும். மானிடத்தின் ஒரு பாதியான ஆண்மை மற்றொரு சம பாதியான பெண்மையினை நாடுகின்றது. ஆணில் உள்ள சிவம் பெண்ணில் உள்ள சக்தியை நாடுகின்றது.

திருமந்திரத்தில் கற்பு மணம் பற்றி மட்டும் கூறப்பட்டுள்ளது. இல்வாழ்க்கையில் மணம்புரிந்து கொள்வதற்கு முன் மணமகனை உறுதி செய்துகொள்ளும் வழக்கம் திருமூலர் காலத்தில் இருந்துள்ளது.

பிறர் மனைவியை நாடாமல் இருப்பது இல்வாழ்க்கையின் ஒழுக்க நெறியாக உள்ளது. இல்வாழ்வில் பண்பில் ஒத்த ஆணும் பெண்ணும் அறநெறியில் நிற்க வேண்டும். தலைவன் சிறந்த பண்புகளுடன் விளங்கவேண்டும். மனைக்கு விளக்காக அமைபவள் மனையாள். இவள், கணவனுக்கு உற்ற அன்புத் துணையாக அறவழியில் நடக்க வேண்டும். கணவன், சிறந்த மக்கட் பேற்றைப் பெற்று மாண்புடையவராக விளங்கவேண்டும்.

காம இன்பம் உயிர்களின் இயல்பூக்கமாகவும் இனப்பெருக்கத்திற்குக் காரணமாகவும் இருக்கின்றது. விலங்கு, பறவை போன்ற உயிரினங்கள் கட்டுப்பாடுகளற்ற இன்பம் பெறுகின்றன. மனிதனின் காம இச்சையை

நெறிப்படுத்தச் சான்றோர் அமைத்த நெறியே இல்லறம் என்ற நல்லறமாகும். இந்தக் கட்டுப்பாட்டினால் பெண்மையின் கற்பும் ஆண்மையின் ஒழுக்கமும் நிலைநிறுத்தப்படுகின்றன.

ஆணின் மனம் கிளைக்குக் கிளை தாவும் குரங்காக மாறிப் பிற பெண்களை அடைய விரும்புகின்றது. திருமூலர் இந்த நிலையினைக் கடிந்துள்ளார். பிறரின் மனைவியை விரும்புதல் வாழ்வியல் நெறிக்கு மாறான செயலாகும். கணவனும் மனைவியும் அன்பு கொண்டு தமக்கும் பிறருக்கும் பயன் உடைய வாழ்க்கையினை வாழ வேண்டும். மனிதன் அறத்தோடு வாழ்வதோடு ஒழுக்கத்தோடும் வாழவேண்டும். பிறர் மனைவியை விரும்பாத பேராண்மையுடையவர் பெருமைக்குரியவர்.

இல்வாழ்க்கையின் பயன் சிறந்த மக்கட்பேறாகும். இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை பயக்கும் மக்கட் பேறினைப் பெறும் விதத்தைத் திருமூலர் சில பாடல்களில் விளக்கியுள்ளார்.

மனிதன் இந்த உலகில் வாழும் பொழுதே ஜீவன் முக்திநிலையை அடையவேண்டும். தவ வாழ்வினால் மனித மனத்திற்குள் மறைந்திருக்கும் ஆற்றலை வெளிப்படுத்துகின்றது. உடல் இருந்தாலும் அழிந்தாலும் அச்சம் கொள்ள வேண்டியதில்லை என்ற உயர்ந்த சமூகவியல் இலக்கணத்தைத் திருமூலர் வகுத்தளித்துள்ளார்.

தொகுப்புரை

ஒவ்வொரு தனிமனிதனும் சேர்ந்து ஒட்டுமொத்த அமைப்பாக மாறும் தன்மையே சமுதாயமாகும். இச் சமுதாயம் உயர்ந்தோரைப் பின்பற்றி வந்துள்ளது. பண்டைக் காலத்தில் கல்வி என்பது சமயச்சார்புடையதாக விளங்கி வந்தது. திருமூலர் உயிர்களின் உள்ளத்தில் நிலைத்து நிற்கும் கல்வியே உண்மையான கல்வி என்று உரைத்துள்ளார்.

உண்மையான ஞானம் என்பது கல்வியோடு கூடிய கேள்வி ஞானமாகும். கேள்வி ஞானத்தால் இறைவனை உணர்ந்தவர்கள் தேவர்களுக்குச் சமமாகக் கருதப்படுவர்.

சிவ அனுபவத்தினைக் கல்லாமல் இருப்பதையே கல்லாமை என்று திருமூலர் குறிப்பிட்டுள்ளார். சிவானுபவத்தில் கிட்டும் கல்வி உயிருக்கு உறுதியும் அறிவுக்கு உரமும் உண்டாக்கவல்லது.

மனிதன் நடுவுநிலைமையுடன் இல்லையெனில் ஞானம் கிட்டாது. அவர் நரகத்தில் இடப்பட்டு இடர்ப்படுவார் என்று திருமூலர் அறிவுறுத்தியுள்ளார்.

இறைவனின் தன்மையினைப் புறத்தில் பேசாது அவன் பெருமையினை அகத்தில் உணர்தலையே புறங்கூறாது இருத்தல் என்கிறார். ஆசையே துன்பத்திற்குக் காரணம். ஆசையைக் கட்டுப்படுத்தி, நீக்கவேண்டும். இறைவனிடத்திலும் ஆசை வைத்தல் கூடாது என்று திருமூலர் அறிவுறுத்தியுள்ளார்.

மனிதர்களை மனிதநிலையில் தக்கவைப்பது உறவு முறைகளேயாகும். சமயச் சான்றோர்கள் இறைவனையும் உறவுமுறையில் தன்னோடு இணக்கமாகக் கருதியது சிந்திக்கத்தக்கது.

பிறன்மனை நயவாமை முதலான ஒழுக்க நிலையுடையவர்கள் போற்றுதலுக்குரியவர்கள். குழந்தைப்பேறு குறித்துப் பல கருத்துகளைத் திருமூலர் குறிப்பிட்டுள்ளார். மனிதன் இந்த உலகில் வாழும் பொழுதே ஜீவன் முக்திநிலையை அடையவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்.

குறிப்புகள்

1. http://www.ta.wikipedia.Org/wiki/
2. ஆ. சிங்காரவேலு முதலியார், அபிதான சிந்தாமணி, ப. 638.
3. இரா. மாணிக்கவாசகம், திருமந்திர ஆராய்ச்சி, ப. 91.
4. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மேலது, ப.171.
5. கி. வா. ஜகந்நாதன் (ப.ஆ.), திருக்குறள் ஆராய்ச்சிப் பதிப்பு, ப. 351.
6. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மேலது, ப. 405.
7. க.ப. அறவாணன் (ப.ஆ.), அறநூற்களஞ்சியம், ப. 120.
8. க.ஆ. நடராசன், என்னை நன்றாக இறைவன் படைத்தான், ப. 87.
9. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மேலது, ப. 408.
10. மேலது, ப. 415.
11. மேலது, ப. 418.
12. கி. வா. ஜகந்நாதன் (ப.ஆ.), மேலது, ப. 351.
13. அ. மாணிக்கம் (உ.ஆ.), திருமந்திரம், ப.178.
14. ஜெ. நாராயணசாமி (உ.ஆ.), திருக்குறள், ப. 34.
15. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மேலது, ப. 397.
16. மேலது, ப.417.
17. அ. மாணிக்கம் (உ.ஆ.), திருமந்திரம், ப.188.
18. கி. வா. ஜகந்நாதன் (ப.ஆ.), மேலது, ப. 346.
19. சிவப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள் (ப.ஆ.), மேலது, ப. 418.

தமிழில் போர் இலக்கியம்
(ஈழத்துப் போர்ச்சூழலை மையப்படுத்திய ஒரு பார்வை)

திரு. தி.ஞானசேகரன்
இலங்கை

1.0 முன்னுரை

"தமிழ் இலக்கிய வரலாற்றில் சங்ககாலத்தை வீரயுகக் காலம்" என்பார் பேராசிரியர் க.கைலாசபதி. சங்க இலக்கியங்களில் போர் தொடர்பான பதிவுகள் புறத்திணை நூல்களிலே காணப்படுகின்றன. புறநானூற்றிலிருந்து பதிற்றுப்பத்து வரையான புறத்திணை நூல்கள் அக்கால மன்னர்கள், குறுநிலத் தலைவர்கள் மேற்கொண்ட போர் பற்றியும் மன்னராட்சிபற்றியும், அவர்களின் வீரம், கொடை என்பனவற்றையும் பேசுகின்றன. களவழி நாற்பது, கலம்பகம், பரணி போன்ற வகைசார் இலக்கியங்களிலும் போர் தொடர்பான பதிவுகள் இடம் பெற்றிருப்பதைக் காணமுடிகிறது. காவியங்கள், புராணங்கள் ஆகியவற்றிலும் போர் இடம் பெறுவதைக் காணலாம். காவியங்களில் யுத்த காண்டம் என்னும் பெயர்த் தன்மையுடைய பகுதி அமைந்திருப்பதைக் குறிப்பிடலாம். எனினும் மேற்குறிப்பிடப்பட்ட இலக்கியங்கள் யாவும் முற்று முழுதாகப் போரை மட்டும் பாடுபொருளாகக் கொண்டவை அல்ல. இவற்றில் போர்தொடர்பான விடயங்கள் ஒரு பகுதியாக மட்டுமே இடம்பெற்றுள்ளன.

சங்ககாலப் புறத்திணை இலக்கியங்களைப் 'போர் இலக்கியம்' என்று பெயர்சுட்டி வகைப்படுத்தும் இலக்கண முறைமை இருக்கவில்லை என்பதும் அக்காலத்தில் 'போர் இலக்கியம்' என்னும் சொற்றொடர் தமிழில் பொதுவழக்காக இருக்கவில்லை என்பதும் இங்குக் கவனத்துக்குரிய விடயங்கள் ஆகின்றன.

2.0 கட்டுரையின் வரையறை

போர் தொடர்பான வரலாற்றில் ஈழத்துப் போர்ச்சூழலை மையப்படுத்திய ஆய்வினைத் தனியாக வகைப்படுத்தித் 'தமிழில் போர் இலக்கியம்' என்ற வகைமையில் நோக்குவதற்குரிய பின்புலத்தையும் நியாயப்பாட்டையும் ஈழத்துத் தமிழ் இலக்கியம் ஏற்படுத்தியிருக்கிறது.

இந்தப் போர் இலக்கிய உள்ளடக்கமானது சங்ககாலப் புறத்திணை இலக்கியங்களில் காணப்படும் போர்தொடர்பான உள்ளடக்கங்களிலிருந்து வேறுபட்டது. சங்க கால இலக்கியங்களில் காணப்படும் போர்தொடர்பான விடயங்கள் பெரும்பாலும் மன்னர்களோடும் குறுநிலத் தலைவர்களோடும் தொடர்புடையனவாக அமைந்திருக்க, நவீனத் தமிழ்ப் போர் இலக்கியம் பெரும்பாலும் சாதாரண மக்கள் போரில் எதிர்கொண்ட துன்ப, துயரங்கள்,

இழப்புக்கள் பற்றிப்பேசுகிறது. உலகளாவிய ரீதியில் வேற்று மொழிகளில் மேற்கிளம்பிய போர் இலக்கியங்களும் பெரும்பாலும் மக்கள் எதிர்கொண்ட போர் தொடர்பான விடயங்களையே பேசுகின்றன. மனித அவலங்கள், மரணங்கள், சித்திரவதைகள், போர்க்கள நிலவரங்கள், அகதிமுகாம் வாழ்க்கை, பெண்கள் வல்லுறவுக்கு ஆளாகுதல், இடப்பெயர்வு, பெண்கள் போராளிகளாதல், எதிர்ப்பு இலக்கியம் போன்ற விடயங்கள் இவ்விலக்கியங்களில் இடம்பெறுகின்றன.

இந்தப் போர் இலக்கியம் சார்ந்த அறிமுகத்தையும் பண்புகளையும் அதன் பன்முகத்தன்மையையும் பதிவு செய்வதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

போர் இலக்கியத்தின் பண்புகளைக் குறிப்பிடுமிடத்து வசதிகருதிக் கவிதைகள் மட்டுமே இங்கு உதாரணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

3.0 போர் இலக்கியம் - அறிமுகம்

20ஆம் நூற்றாண்டில் இடம்பெற்ற உலக மகாயுத்தங்கள் போர் தொடர்பான இலக்கியங்களுக்கு ஒரு தனியான இடத்தைப் பெற்றுத் தந்தன. 'போர் இலக்கியம்' என்ற தனியான பகுப்புமுறை முதலாம் உலக மகாயுத்தத்திலிருந்தே ஆரம்பமாகியது எனலாம். முதலாம் உலகமகா யுத்தத்தில் ஈடுபட்ட அமெரிக்க, பிரித்தானியப் படைகளில் கடமை ஆற்றிய படை வீரர்கள் சிலர் தமது அனுபவங்களை இலக்கியங்கள் ஆக்கினர். இவை 'போர் இலக்கியம்' (War Literature) என்றே வழங்கப்படுகின்றன.

முதலாம் உலக மகாயுத்தத்தில் பங்குபற்றி அதில் காயமடைந்த ஏனஸ்ற் எமிங்வே என்பவர் 'போரே நீ போ' (Farewell to Arms) என்ற நாவலை எழுதினார். அதன் பின்னர் 'யாருக்காக மணி அடிக்கிறது?' (For Whom the Bell Tolls) என்ற உலகப் புகழ்பெற்ற இன்னுமொரு நாவலையும் இவர் எழுதினார். அமெரிக்க உலகின் புத்திரிவியான Norman Mailor என்பவர் 'மேற்குப் பகுதியில் எல்லாம் அமைதியாக உள்ளது. (All Quiet on the Western Front) என்ற நாவலை எழுதினார். இரண்டாம் உலகப் போரில் பங்குபற்றிய அனுபவங்களைக் கொண்டு உலகப் பிரசித்திபெற்ற The Naked and the Dead என்ற நாவலை Norman Mailer என்பவர் எழுதினார்.

பிரான்ஸ் தேசம் முழுமையாகக் கைப்பற்றப்பட்டதை Plague நோய்க்குக் குறியீடாக வைத்து Albert Camus என்பவர் ஓர் அற்புதமான நாவலை எழுதினார். அதேபோல ஷோன்போல் சாத்தர் என்பவர் Flies (ஈக்கள்) என்ற நாடகத்தை எழுதினார்.

முதலாம் உலக மகா யுத்தம், இரண்டாம் உலக மகாயுத்தம் ஆகியவற்றின் விளைவுகள் மட்டுமன்றி அதன் பின்னர் உலகெங்கிலும் நடைபெற்ற பல உரிமைப் போர்கள், புரட்சிகளின் போதெல்லாம் போர் இலக்கியங்கள் தோன்றின. இதே வேளை ஒரு நாட்டுக்குள் இன மத ரீதியான ஒடுக்கப்பட்ட மக்கள் தங்கள் உரிமைக்காக கிளர்ந்தெழுந்து போராடிய உள்நாட்டுப் போர்களிலிருந்தும் பல உன்னதப் போர் இலக்கியங்கள் தோன்றின. இந்த வகையில் ஐரிஷ், பாலஸ்தீனக் கவிதைகள் உலகப் புகழ்பெற்ற போர் இலக்கியங்களாகக் காணப்படுகின்றன.

போர் இலக்கியத்தின் முக்கியப் பரிமாணம் அதில் உட்பொதிந்துள்ள ஆவணத்தன்மையாகும். அவை போரின் சாட்சியங்களாக அமைந்துவிடுகின்றன.

4.0 ஈழத்துப் போரின் அரசியல் பின்னணி

ஈழத்தில் இடம்பெற்ற போரானது தமிழர்களின் உரிமைப் போராட்டமாகும். இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக இந்தப்போர் இடம்பெற்றது.

1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோதும் உடனடியான அரசியல் மாற்றம் எதுவும் ஏற்படவில்லை. இலங்கையின் சனத்தொகையில் 74 சதவீதத்தினர் சிங்களப் பௌத்தர்களாக இருப்பதும் அதன் காரணமாகப் பாராளுமன்றத்தில் அதிக எண்ணிக்கையான அங்கத்தவர்களை அவர்கள் கொண்டிருப்பதும் அவர்கள் தமக்குச் சாதகமான - இன ரீதியான சட்டங்களை இயற்றுவதற்கு வசதியாக இருந்தது. 1956இல் இனமுரண்பாடு உக்கிரம் அடைந்ததற்கான ஆரம்பப் புள்ளியாகத் தனிச்சிங்களச் சட்ட அமுலாக்கத்தைக் குறிப்பிடலாம். மொழி ரீதியான அடக்குமுறை தமிழர்களை வெகுவாகப் பாதித்தது. 56,57,58,77,83 களில் நடைபெற்ற சிறுபான்மையினருக்கு எதிரான கலவரங்களும் தமிழ் மக்களின் வாழ்வியல் உரிமைகளைப் பெரிதும் பாதித்தன. பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தலை மேற்கொண்டதன் மூலம் தமிழர்களின் அறிவாளுமையை நிறுவனக் கல்வி ரீதியாக ஒடுக்கும் முறையையும் மேற்கொள்ளப்பட்டது. இது மட்டுமன்றி அரசியல் மதமாகப் பௌத்தம் முதன்மை பெற்றதுடன் மத ரீதியான சமத்துவ நிலையும் பாதிப்புக்குள்ளாகியது.

இன மத மொழி பண்பாடுசார் உரிமைகள் புறக்கணிக்கப்பட்ட நிலையில் தமிழர்கள் தமக்குரிய அரசியலை உறுதிப்படுத்துவதும் உரிமைக்காகப் போராடுவதும் தவிர்க்க முடியாத வரலாற்றுத் தேவையாக அமைந்தது. இந்நிலையில் தமிழர்களால் பல சாத்வீக எதிர்ப்புப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. ஈற்றில் விடுதலை இயக்க அமைப்புகள் ஆயுதப் போரில் ஈடுபட்டன. ஏறத்தாழ மூன்று தசாப்தங்கள் நடைபெற்ற விடுதலைப் போர் ஆயுத ரீதியாக முள்ளிவாய்க்காலில் முற்றுப் பெற்றது.

5.0 ஈழத்துப் போர் இலக்கியம்

ஈழத்துப்போர் இடம்பெற்ற காலக்கட்டம் தமிழ் இலக்கிய வரலாற்றில் ஒரு திருப்பு முனையாக அமைந்தது. நவீனத்தமிழ் இலக்கியத்தில் வீச்சும் வேகமும் கொண்ட போர் சார்ந்த இலக்கியங்கள் இக்காலக்கட்டத்தில் தோன்றின. கவிதைகள், சிறுதைகள், நாவல்கள், நாடகங்கள், விடுதலைப் பாடல்கள், கவிதா நிகழ்வுகள், விவரணத் திரைப்படங்கள், ஓவியங்கள், புகைப்படக் காட்சிகள், சுவரொட்டிப் பாடல்கள் எனப் பலவேறு கலை இலக்கிய வடிவங்கள் தோற்றம்பெற்றன.

நவீனத் தமிழ் இலக்கியத்தில் 'போர் இலக்கியம்' என்றொரு தனியான ப்குப்பை உருவாக்கிய பெருமை ஈழத் தமிழ்ப் படைப்பாளிகளையே சாரும். இவ்விலக்கியங்கள் உலகெங்கும் தோன்றிய பெரும் போர் இலக்கியங்களுக்கு இணையானதாக மதிக்கப்படுகின்றன.

6.0 யுத்தத்தின் சாட்சியங்கள் - போரிலக்கியங்களின் முக்கியப் பரிமாணம்

போரிலக்கியங்களின் முக்கியப்பரிமாணம் அவை போரின் சாட்சியங்களாக அமைவதுதான். போர்க் காலத்தில் இடம்பெற்ற பெரும்பாலான விடயங்கள் போர் இலக்கியங்கள் மூலமே வெளிக்கொணரப்பட்டு ஆவணப்படுத்தப் படுகின்றன. அவை போர்க்கால நிலைமைகளை வெளியுலகிற்குத் தெரியப்படுத்துவதோடு எதிர்காலச் சந்ததியினருக்கும் கையளிப்பனவாய் அமைகின்றன. காலங்கடந்து நின்று மக்கள் துயரங்களையும் இழப்புகளையும் வெளிப்படுத்தி உலகின் மனச்சாட்சியைத் தட்டி எழுப்பிய வண்ணம் யுத்தத்தின் சாட்சியங்களாக அமைகின்றன.

6.1 ஆவணப்படுத்தல்

6.1.1 நிகழ்வுளை ஆவணப்படுத்தல்

யாழ்ப்பாண நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டது பண்பாட்டு அழிவின் பெருங்கொடுமையானது. கவிஞர் எம்.ஏ.நுஃமான் அதனைப் புத்தரின் படுகொலை என்ற தலைப்பில் பதிவு செய்துள்ளார்.

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
"எங்கள் பட்டியலில் இவர் பெயர் இல்லை
பின் ஏன் கொன்றீர்?"
என்று சினந்தனர்.

"இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக்கூடச்
சுடமுடியாது போயிற்று எம்மால்
ஆகையினால் தான்..."
என்றனர் அவர்கள்.

"சரிசரி
உடனே மறையுங்கள் பிணத்தை"

என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.

சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர்.

தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்
சிகாலோக வாத சூத்திரத்தினைக்★
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும்தான்★ சாம்பரானது

(★சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன பௌத்தமத அறநூல்கள்) (1981-அலை-18.)

6.1.2 போர்ச் சூழலை ஆவணப்படுத்தல்

போர் நடைபெற்ற காலக்கட்டத்தில் ஒவ்வொரு வீட்டிலும் பதுங்கு குழிகள் அமைக்கப்பட்டன. அவையும் உயிர்ப் பாதுகாப்புக்கு உத்தரவாதம் தரமாட்டா என்பதைப் போராளிக் கவிஞர் கருணாகரனின் கவிதை காட்டுகிறது.

......
நிலம் அதிர்கிறது
குருதியின் மணத்தையும்
மரணத்தின் அருகாமையையும்
உணர்கிறேன்
கந்த நெடில்
கபாலத்தைப் பிளக்கிறது
வீரர்கள் முழங்கிக்
கொண்டேயிருக்கிறார்கள்
அழியும் வாழ்வின் பிரகடனத்தை
ஒவ்வொரு துப்பாக்கியிலும்
ஒவ்வொரு பீரங்கியிலும்
....
இந்தப் பதுங்கு குழிக்கு
நம் எதிர்காலத்தைக் காப்பாற்றும்
கருணையும் வலிமையும் இருக்கிறதா
அல்லது
எதிரியிடம் பலியிடும்
ஒற்றனைப்போல் காத்திருக்கிறதா (- பலியாடு)

6.1.3 மனித அவலங்கள்

"ஒரு குடும்பத்தில் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்தால், அந்தக் குடும்பமே இராணுவத்தினரின் மிரட்டல்களுக்கும் சித்திரவதைகளுக்கும் ஆளாவது சாதாரண சம்பவமாகும். இதனால் குடும்பத்தினரின் அங்கத்தினர் ஒருவர் இயக்கத்தில் சேர்ந்திருந்தால் அதனை இரகசியமாக வைத்திருப்பதும் அப்படி ஒருவர் குடும்பத்தில் இல்லை என மறுப்பதும் பொதுவான ஒரு நடவடிக்கையாகும். குடும்ப

அங்கத்தவர்களின் பாதுகாப்புக்காக இவ்வாறு நடக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிடுகிறது. தாக்குதலில் ஈடுபட்டோ, அகப்பட்டோ மரணித்தால் மரணித்தவரைத் தமது புதல்வன் என்றோ புதல்வி என்றோ கூறாதிருப்பதும் நிகழ்ந்தது. மரணச் சடங்கு நடத்த முடியாமல் பொதுவைத்திய சாலைகளில் கொடுக்கப்பட்ட சடலங்களை உரிமை கோரவோ அடையாளம் காட்டவோ முடியாமல் ஊமைத்துயரத்தை அனுபவித்த குடும்பங்கள் ஏராளம்."

"தெருப் புழுதியில் உன் உடம்பு
முதுகெல்லாம் இரத்த வெள்ளம்
நீதானா எனக்குனிந்து பார்த்தேன்
"ஓம் ராசா நீயே தான்"
"ஏன் ஆச்சி அழுகிறாய்"
கூடி நிற்கும் சனம்கேட்க
"பொடியனைத் தெரியுமா உனக்கு?"
மிரட்டுகிறான் காக்கிச் சட்டை
அவன் கையில் துவக்கு வெய்யிலில் மின்னுகிறது
தெரியாது என்று தலையசைத்தேன்,
நான் பெற்ற முதல் முத்தை
★
குருக்ஷேத்திரத்தில் கர்ணன் விழ
ஐயோ மகனே என்று குந்தி
ஓடிச் சென்று அணைத்தாளே
ஐயோ ராசா நான் பாவி
என் பிள்ளை என்று சொல்ல
முடியாத பாவியாகினேன்

6.1.4 போர்க்களம்

ஆயுதப் போர் முள்ளிவாய்க்கால் சமருடன் முடிவுற்றது. போர்க்களம் சாம்பல் மேடாகியது. கவிஞர் சேரன் கீழ்க்கண்டவாறு அதனை ஆவணப்படுத்துகிறார்.

வெந்து தணியாத
காடற்றச் சென்றோம்
ஒரு குருவி கிடையாது
ஆள்காட்டி வெளிக்கு மேல்
ஆகாயம் இல்லை
கண்தொடமுடியாத எல்லைவரை
சாம்பல் வீசிக்கிடக்கின்ற நில மற்ற நிலத்தில்
எலும்புகளைத் தேட
ஒருவருக்கும் வழியில்லை

எனினும்

பாலூற்ற ஊற்றப் பெருகும்
எம் கண்ணீரைக் கேளிக்கையாக்கி
கொண்டாட்டத்தோடு

களிக்கூத்து ஆடும்
மற்றவர்களுக்கு
நம்மாற்று வழி என்ன?

இதயப்பெருந் தீயைக் குளிர்விக்க
இன்றைக்கு ஒன்றுமில்லை

காயாத குருதித் துளிக்கு
சாட்சியம் இல்லை

முற்றிற்று என்று சொல்லிக்
காற்றிலும் கடலிலும்
கரைத்துவிட்டுக்
கண்மூடக்
காற்று கிடையாது
கடலும் கிடையாது
காடாற்று எப்போதோ?

போர் முள்ளிவாய்க்கால் பேரவலத்துடன் 2009 மே மாதத்தில் முடிவுற்றது. அந்த ஊழியைச் சேரன் இன்னுமொரு கவிதையில் மகாவாக்கியம்போல் - ஒரு மந்திரவாக்கியம் போல் பதிவு செய்கிறார்.

நீரற்றது கடல்
நிலமற்றது தமிழ்
வேரற்றது உறவு

6.2. போர் இலக்கியத்தில் பெண் படைப்பாளிகள்

சங்ககால வீரமகளிர் போர்வீரர்களின் தாய்மார்களாக, மனைவியராக, சகோதரிகளாகக் காட்டி உரைக்கப்பட்டுள்ளனர். ஆனால் ஈழப்போரிலே பெண்களில் பலர் ஆயுதமேந்திய போராளிகளாகவும் அதேவேளை இலக்கியப் படைப்பாளிகளாகவும் இருந்து தமது போர்க்கள அனுபவங்களைப் பதிவு செய்துள்ளனர்.

களத்தில் நின்று போராடும் பெண்போராளிகளின் கவிதைகளில் மரணம் தரும் வலி மிக வேதனை தருவதாக அமையும். தம்குடும்பங்களைப்பிரிந்து உறவுகளைத் துறந்து போர்முனைகளில் வாழும் இவர்களுக்கு சகபோராளிகளே உறவுகளாக விளங்கினர். இவர்களுள் ஒருவர் இறந்து விட்டால், ஏற்படும் சோகம் சகபோராளிக் கவிஞரின் கவிதையில் துன்பியலாக இளையோடுவதைக் காணலாம். தற்கொலைப்போராளியான சகபோராளியின் மரணம்பற்றி இங்கு ஒரு போராளிக் கவிஞர் வேதனைப்படுவதைக் காணலாம்.

அன்பான தோழி
நீயும் இல்லை
உனக்குக் கல்லறையும் இல்லை
கண்ணீர் விட்டு அழமுடிந்தும்
பெயர் சொல்லி அழமுடியவில்லை

தோழி!
உன்சாதனை உன்னதம்
உயிரினும் மேலான உன் தோழிக்கும்
தெரியாமல் நீ சென்றாய்
உயிரைத்துறந்த அக்கணம்
உடல் சிதறிய அந்நேரம்
அறியேன் தோழி...

6.3 உளத்தாக்கங்களை வெளிப்படுத்தல்

போர் அனர்த்தங்களினால் ஏற்படுகின்ற உளவியற் பிரச்சினைகள்பற்றிப் பேராசிரியர் சபா ஜெயராசா பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

மனித மனங்களிலே போர் குரூரமான தாக்கங்களை விளைவிக்கவல்லது. அதிலும் இனத்துவ நிலையிலானபோர் மேலும் குரூரமான தாக்கங்களை ஏற்படுத்த வல்லது. நிர்க்கதி நிலையிலான குதிர்ப்பு அவலம் (Panic) போர்ச்சூழலில் எழுந்த வண்ணம் இருக்கும். தொடர்ச்சியான பதகளிப்பு, நடத்தை விலகல், இசைவாக்கற் பிரச்சினைகள் உள் அழுத்தம், தொடர்பாடல் ஒழுங்குக் குறைவு, தனியாள் இயல்புகளின் குலைவு, பிறழ்வுகளின் அழுத்தங்கள், கற்றலிலே ஈடுபடமுடியாத குலைவு நிலை, கண்முன்னே நிகழும் அவலங்களால் ஏற்படும் அதிர்ச்சி, இழப்புகளால் நிகழும் அதிர்ச்சி, பயத்தின் மேலாதிக்கம், தொடர்புபட்ட அச்சம், உடலும் உள்ளமும் இணைந்த அவலங்கள் என்றவாறு தோற்றம் பெறும் உளவியற் கோலங்கள் போர்க்கால இலக்கியங்களை அடையாளப்படுத்தும் உளவியற் பதிவுகளாக இருக்கும். *(போரும் இலக்கியமும் -பேராசிரியர் சபா ஜெயராசா - 'ஞானம்' ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ், நவம்பர்-2012 -பக். 15,16.)*

போர்க்காலத்தில் உளவியற் பாதிப்புக்குள்ளான பெண்ணொருத்தியின் அவலத்தைப் பா.அகிலன் என்ற கவிஞர் பின்வருமாறு சித்திரித்துள்ளார்.

காயமேதும் இல்லை
ஒற்றையாடையில் மலமும்
மாதவிடாய் இரத்தமும் ஊறிக்கிடக்க
மாற்றுடை மறுத்தாள்
ஊன் மறுத்தாள்
பகலையும் இரவையும் ஊடறுத்தலறினாள்

மகவே
மகவே
மாயமே

துரத்தி
விலங்கிட்டுக் கட்டியபின்
உள மருத்துவருக்குச் சிபார்சு செய்தோம்.

6.4 பாலியல் வன்முறைகள்

இந்திய அமைதிகாக்கும் படையினரால் வன்புணர்ச்சிக்கு உள்ளாக்கப்பட்ட பெண்ணின் உள்ளத்தையும் அவளது இருப்பையும் வெளிப்படுத்துகிறது கீழேயுள்ள கவிதை.

அமைதி காக்க வந்தவர்கள்
என்வாழ்வின் அமைதியைக் கெடுத்தனரே
புகுந்தனரே என்வீட்டினுள்
பதறியது என்தேகம்
பாய்ந்தனர் என்மீது
பதம் பார்த்தனர் என் உடலை
குரங்கின் கையில் அகப்பட்ட
மாலையாய் ஆனதோ என் உடல்
உடல் முழுக்க நோவு
உள்ளத்திலோ பாரம்
என் இருப்பு உறுதியானது.

6.5 அகதி வாழ்க்கை

போரினால் சகல உடமைகளையும் இழந்து வலிமை இழந்து அடிமையாய் அகதி முகாமில் வாழும் வாழ்வைப் பெண்கவிஞர் ஒருவர் பின் வருமாறு காட்சிப்படுத்துகிறார்.

அவள் அரசின் வன் செயலால்
அகதியாகிவிட்டாள்
தொற்று நோய்களின் இருப்பிடம்
நோய்க் காவிகளின் உறைவிடம்
வயிற்றுப் பசியின் வாழ்விடம்
இதுவே இவள் வதிவிடம்
அகதிகளின் நிவாரணம்
அரைவயிற்றுக்கு அடங்காமல் போனதால்
அரைவாசி அவிந்த மீனை
ஆவலுடன் புசிக்கின்றனர்
எரியும் வயிற்றுக்குள் புதைக்கின்றனர்.

6.6 இடப்பெயர்வு

போரிலக்கியத்தின் இன்னுமொரு தாக்கம் உற்றார், பெற்றார், உறவினர், பிறந்த மண் பற்றிய பிரிவுத்துயரமாகும். போர் மக்களின் வாழ்விடங்களைப்பறித்து இடப்பெயர்வு, புலப் பெயர்வு என மக்களைச் சிதறடித்தது. பிரிவுத்துயரம் அவர்களை வாட்டி எடுத்தது. கவிஞர் வ.ஐ.ச. ஜெயபாலன் அதனைப்பின்வருமாறு பதிவு செய்கிறார்.

....
யாழ் நகரில் என்பையன்
கொழும்பில் என் பெண்டாட்டி

வன்னியில் என் தந்தை
தள்ளாத வயதினிலே
தமிழ் நாட்டில் என்அம்மா
சுற்றம் பிராங்போட்டில்
ஒரு சகோதரியோ பிரான்ஸ் நாட்டில்
நானோ
வழிதவறி அலாஸ்கா வந்து விட்டஒட்டகம்போல்
ஒஸ்லோவில்
என்ன நம் குடும்பங்கள்
காற்றில் விதிக்குரங்கு
கிழித்தெறியும் பஞ்சுத் தலையணையா?

6.7 எதிர்ப்பு இலக்கியங்கள்

போர் இலக்கியத்தின் மற்றுமொரு பரிமாணம் 'எதிர்ப்பு இலக்கியம்' ஆகும். இந்த எதிர்ப்பு இலக்கியங்கள் போராட்டத்தில் ஈடுபட்ட ஆயுதம் ஏந்தியவர்களுக்கெதிரான கருத்தியலைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன. பயம் காரணமாக, எதிர்ப்படும் மதிற் சுவர்கள், தெருக்கள், அகப்படும் பொருட்களிலெல்லாம் இந்த எதிர்ப்பு இலக்கியங்கள் கரித்துண்டுகளினாலும், செங்கட்டிகளாலும் எழுதப்படும் சந்தர்ப்பங்களும் இருந்தன.

பல நூற்றாண்டுகளாக ஒற்றுமையாக வடபுலத்தில் வாழ்ந்த முஸ்லிம்களைப் பலவந்தமாக வெளியேற்றியபோதும் கிழக்கு மாகாணத்தில் பாரம்பரியமாக அமைதியாக வாழ்ந்த முஸ்லிம்கள் பலர் கொல்லப்பட்டபோதும் இந்த இலக்கியங்கள் அதிகளவில் தோன்றின.

அக்டோபர் முப்பதில்- நீங்கள்
அன்று வைத்த நெருப்பு இன்றும் எரிகிறது
எங்கள் தலைவிதியை
இருமணிநேரத்தில் மாற்றி எழுதிய
இரக்கமில்லாத எழுத்தாளர்களே
காட்டிக் கொடுத்தோமா?
கயமை புரிந்தோமா
கூடி இருந்து குழிபறித்தோமா
இதயத்தைத் தொலைத்த
என்னருமை நண்பர்களே
ஏன் இப்படி எம்வாழ்வில் தீவைத்தீர்?
வடக்கிலே பிறந்தது குற்றமா
வாஞ்சையுடன் வாழ்ந்தது குற்றமா?
இஸ்லாமியனாய் பிறந்தது குற்றமா
இனிய தமிழ் பேசியது குற்றமா?
தோள் கொடுத்தது குற்றமா

(யாழ் அஸீம் - மீஸான் கட்டைகளின் மீள எழும்பாடல்கள் தொகுதியிலிருந்து)

7.0 முடிவுரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் "போர் இலக்கியம்" என்று தனியாக வகைப்படுத்தி நோக்குவதற்குரிய பின்புலத்தையும் நியாயப்பாட்டையும் ஈழத்துப் போர் ஏற்படுத்தியுள்ளது என்பதை இந்தக் கட்டுரை எடுத்தியம்புகிறது.

இப்போரிலக்கியம் பல்பரிமாணத்தன்மை கொண்டது. அவற்றை ஒருசேர ஒரே தொகுப்பாக 600 பக்கங்களில் வெளிக்கொணரும் முயற்சியை ஈழத்தில் இருந்து வெளிவரும் 'ஞானம்' என்ற கலை இலக்கியச் சஞ்சிகை மேற்கொண்டுள்ளது. இச் சஞ்சிகையின் 150 ஆவது இதழ் 'ஈழத்துப்போர் இலக்கியச் சிறப்பிதழாக' (நவம்பர்-2012) வெளிவந்துள்ளது. இத்தகைய முயற்சிகள் பல்வேறு மட்டங்களில் முன்னெடுக்கப்படவேண்டும். எதிர்காலத்தில் ஆய்வுத் தேடல்களுக்கும் உலகளாவிய ரீதியில் மக்கள் அறிந்து கொள்வதற்கும் எதிர்காலத்தில் இவ்விலக்கியங்கள் அழிந்துபோகாமல் பாதுகாப்பதற்கும் இத்தகைய முயற்சிகள் வேண்டப்படுகின்றன.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச்சமூக அறிவுத் தோற்றவியல் உருவாக்கத்தில் சென்னை இலௌகிக சங்கத்தின் பங்கு

பேராசிரியர் முனைவர் வீ. அரசு
தலைவர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை

ஒவ்வொரு சமூகத்திலும் இயற்கை நிகழ்வுகளை அடிப்படையாகக் கொண்ட கருத்தாக்கங்கள் உருப்பெறுவது இயல்பு. தொல்காப்பியர் காலம் தொடங்கி, தமிழ்ச்சமூகத்தில் பல்வேறு கருத்தாக்கங்கள், இயற்கை மற்றும் மனித நடவடிக்கைகள் சார்ந்து உருவாயின. இவ்வகையில் உருவானவற்றைத் தமிழ்ச்சமூகம் கண்டறிந்த அறிவு தொடர்பான உரையாடல்கள் என்று கூறமுடியும். இவ்வுரையாடல்களைக் குறிப்பிட்ட சமூகத்தின் தத்துவ மரபு என்றும் கூறலாம். தத்துவ மரபின் வரலாறு பற்றிய தேடலே அறிவுத் தோற்றவியலாக அமைகிறது. இயற்கை மற்றும் மனித நடவடிக்கை சார்ந்து தமிழ்ச்சமூகத்தில் உருவான தத்துவ மரபுகளைப் பின்கண்ட வகையில் தொகுக்கலாம்.

- தொல்காப்பியம் மற்றும் சங்கப் பிரதிகள் (திருமுருகாற்றுப்படை போன்றவை நீங்கலாக) பேசும் செய்திகளை அடிப்படையாகக் கொண்ட மரபு. இம்மரபு இயற்கையோடு பெரிதும் இணைந்த ஒன்றாக அமைகிறது. இயற்கை நிகழ்வு சார்ந்த அறிவுத் தோற்றவியலாக இதனைக் கருதமுடியும்.

  சிலப்பதிகாரம், திருக்குறள் உள்ளிட்ட பிரதிகள் சார்ந்து வெளிப்படும் உலகாயதத்தை முதன்மைப்படுத்தும் தத்துவ மரபுகள்.

  நிகண்டுகள், ஆகம நூல்கள் வழி அறியப்படும் மரபுகள்; இவை பல்வேறு சமய உரையாடல்களின் உடன்விளைவாக உருப்பெற்றவை.

  உலகில் நிகழ்ந்த பல்வேறு புதிய விளைவுகள் வழி பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச்சமூகம் உள்வாங்கிக்கொண்ட மரபுகள்.

பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழகத்தில் பல்வேறு புதிய நிகழ்வுகள் நடந்தேறின. இதுவரை நிகழ்ந்து வந்த நிகழ்வுகள், புதிய நிகழ்வுகளால் பெரிதும் தாக்கமுற்றன. புதிய சிந்தனை முறைகள் உருவாயின. புதிய கல்விமுறை அறிமுகப்படுத்தப்பட்டது. புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்ட நவீனக் கருவிகள் நடைமுறைக்கு வந்தன. அச்சுக்கருவி போன்றவை புதிய சமூக நடைமுறைக்கு வழி கண்டன. இவ்வகையான தன்மைகளைக் கீழ்க்காணும் வகையில் தொகுக்கலாம்.

புதிய உற்பத்திக் கருவி மற்றும் புதிய உற்பத்திமுறை ஆகியவை உருப்பெற்றன. மனித உழைப்பு என்பது எந்திரங்களின் உதவியோடு நடைமுறைக்கு வந்தது.

காலம் காலமாகப் பின்பற்றப்பட்ட நம்பிக்கைகள் சார்ந்த நடவடிக்கைகள் கேள்விக்குள்ளாக்கப்பட்டன.

நடைமுறை வாழ்க்கையில் புதிய தன்மைகள் நடைமுறைக்கு வந்ததோடு, உலகியல் குறித்த புதிய தத்துவ உரையாடல்களும் உருப்பெற்றன.

கேள்விக்கு ஆளாகாமல் நடைமுறையில் இருந்த சமயங்கள் குறித்து, கேள்விகள் எழுப்பப்பட்டன. சமயத்தோடு சார்ந்த கடவுள் இருப்புக் குறித்தும் கேள்விகளும் சந்தேகங்களும் எழுந்தன.

மேற்குறித்த பின்புலத்தில் புதிய சிந்தனைமுறை உருவானது. தமிழ்ச்சமூகத்தின் அறிவுத் தோற்றவியலில் (Epistemology) புதிய தன்மைகள் உருப்பெற்ற காலமாகப் பத்தொன்பதாம் நூற்றாண்டைக் கூறமுடியும்.

மேற்குறித்த பின்புலத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் உருவான தமிழ்ச்சமூக அறிவுத் தோற்றவியல் குறித்த உரையாடல் மேற்கொள்வது இங்கு நோக்கமாக அமைகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டு நிகழ்வுகள் எந்தெந்த அடிப்படைகளில் நிகழ்ந்தன; அவற்றிற்குப் பின்புலமாக அமைந்தவை எவையெவை; பத்தொன்பதாம் நூற்றாண்டில் நிகழ்ந்தவைகளை எப்படி வரையறை செய்யலாம் எனப் பல்வேறு கேள்விகள் முன்னெழுகின்றன. இதனைப் புரிந்துகொள்ளக் கீழ்க்காணும் வகையில் சுருக்கமாகத் தொகுக்கலாம்.

தமிழ்ச்சமூகத்தில் கி.பி.ஏழாம் நூற்றாண்டு முதல் செல்வாக்குப் பெற்றுவந்த வைதீக சமய நடவடிக்கைகள் குறித்த புதிய கண்ணோட்டங்கள் உருவாயின. சமய மறுமலர்ச்சி, சமயச் சீர்திருத்தம், சமரச சன்மார்க்கம் ஆகிய பிற சொல்லாடல்கள் உருவாயின.

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் உருவான பல்வேறு புதிய சிந்தனை மரபுகள், காலனியமாக இங்கு வடிவம் பெற்றன. கல்வி, சமயம், நிறுவனங்கள் ஆகிய பிறவற்றில் காலனியம் புதிய புதிய செயல்பாடுகளை நடைமுறைப்படுத்தியது.

கல்கத்தா, பம்பாய், மதராஸ் என்னும் மூன்று முக்கிய நகர உருவாக்கங்கள், அவற்றைச் சார்ந்த பல்வேறு பண்பாட்டு நடவடிக்கைகள் ஆகிய பிறவற்றைக் காலனியம் உருவாக்கியது. மொழி மற்றும் இனக்குழுக்கள் புதிய புதிய அடையாளங்களைப் பெறத் தொடங்கின. வரலாறு எழுதுவதற்கான புதிய தரவுகள் கண்டறியப்பட்டன. பழைய பிரதிகள் புதிய கண்ணோட்டத்தில் பொதுவெளிக்கு அறிமுகமாயின.

மேற்குறித்த சூழலில் தமிழகத்தில் செயல்பட்ட சென்னை இலௌகிக சங்கம் (1878-1888) என்னும் அமைப்பு, தமிழ்ச் சமூகத்தின் அக்காலத்திய அறிவுத் தோற்றவியல் சார்ந்த வகிபாகம் குறித்துப் பதிவு செய்யும் முயற்சி மேற்கொள்ளப் படுகின்றது. இதனைக் கீழ்க்காணும் பொருண்மைகளில் விரிவாக விவாதிக்க இயலும்.

- சென்னை இலௌகிக சங்கம் என்னும் அமைப்பின் தத்துவார்த்த சார்பு நிலையை எவ்வகையில் வரையறை செய்வது;

  காலனிய நடவடிக்கைகளிலிருந்து, இவ்வமைப்பு எவ்வகையில் வேறுபட்டுச் செயல்பட்டது என்பதை எவ்விதம் பதிவு செய்வது

  ஐரோப்பிய மற்றும் இங்கிலாந்து, அமெரிக்கப் புத்தொளி மரபுகளை இவ்வமைப்பு எவ்விதம் எதிர்கொண்டது எனும் புரிதல்

  காலனிய இந்தியாவில், இவ்வமைப்பின் தனித்தன்மைகள் எவையெவை

  மேற்குறித்த பின்புலத்தில், தமிழ்ச்சமூக அறிவுத் தோற்றவியலுக்கு எவ்வகையான பங்களிப்பைச் செய்துள்ளது என்ற புரிதல்.

அகில உலகச் சுய சிந்தனையாளர்கள் அமைப்பு (International Congress of Free-thinkers), மேலைநாடுகளில் பதினாறாம் நூற்றாண்டு முதல் படிப்படியாக வளர்ந்து வந்தது. இவ்வமைப்பு உருவாக்கப் பின்புலம் கீழ்க்காணும் கூறுகளில் நடைபெற்றது.

கோப்பர் நிக்கஸ் (1473-1543) பூமி சூரியனைச் சுற்றிவருகிறது. உலகம் என்று கருதப்படும் பூமிப்பந்து தட்டையானது அன்று; அது பந்துவடிவ அமைப்புடையது; ஆகிய பிற கண்டுபிடிப்புகளைச் செய்தார். அதனை அவர் வெளி உலகுக்கு அறிவித்தால், தனது உயிருக்கு ஆபத்து என்பதை உணர்ந்திருந்தார். ஆனால் புரூனோ (1548-1600) இதனை உலகம் அறியும் வகையில் பல்வேறு இடங்களிலும் சொற்பொழிவுகள் செய்து வந்தார். கணித அறிஞரான புரூனோ, இங்கிலாந்து, ஐரோப்பா ஆகிய இடங்களில் உள்ள கல்வி நிலையங்களிலும் பிற இடங்களிலும் இக்கருத்தைப் பிரச்சாரம் செய்துவந்தார். கத்தோலிக்கக் கிறித்துவம் இதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இக் கருத்துகள் கிறித்தவ சமயத்திற்கு எதிரானவை என்பதை அவர்கள் உணர்ந்தனர். பைபிள் கூறும் கருத்துகளுக்கு நேரெதிரானவை யாகவும் இருப்பதை அறிந்தனர். கத்தோலிக்கரான புரூனோ இவ்வகையில் சொற்பொழிவுகள் செய்து வருவதை நிறுத்துமாறு அறிவுறுத்தினர். ஆனால் அவர் அதை ஏற்கவில்லை. இதனால் அவரைச் சிறையில் அடைத்துக் கொடுமைப்படுத்தினர். இறுதியில் 1600 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16ஆம் நாள், அவரை நெருப்பில் இட்டுக் கொளுத்திக் கொன்றனர். இந்நிகழ்வு உலகில் இருந்த சுயசிந்தனையாளர்களிடத்தில் பெரும் தாக்கத்தை உருவாக்கியது. இவர்கள் இணைந்தே அகில உலகச் சுயசிந்தனையாளர்கள் அமைப்பைப் பதினேழாம் நூற்றாண்டில் உருவாக்கினர். இவ்வமைப்பு, கிறித்தவ அதிகாரப் பீடங்களுக்கு எதிராகச் (Anti-Church Movement) செயல்படத்தொடங்கியது. வெவ்வேறு இடங்களில் வெவ்வெறு பெயர்களில் செயல்படத் தொடங்கினர். இவ்வமைப்பினர் முன்னெடுத்த கருத்து நிலைகள் பின்வரும் வகையில் அமையும்.

கிறித்தவ மடாலயங்களை எதிர்த்துப் போராடுவது.

பைபிள் கருத்துக்களை விமர்சனப் பூர்வமாக மறுப்பது.

கடவுள் எனும்கருத்து நிலையைக் கேள்விக்கு ஆளாக்குவது.

மதத்தை ஏற்றுக்கொள்ளாது மதச்சார்பற்ற சிந்தனை முறையை (Secular) முன்னெடுப்பது.

மேற்குறித்த அமைப்பின் ஒரு பிரிவாக இலண்டன் நகரில் 'சமயச் சார்பற்ற தேசிய அமைப்பு' (National Secular Society) உருவானது. கி.பி.1860இல் இவ்வமைப்பு உருவாகிவிட்டது. இவ்வமைப்பின் சென்னை நகரப் பிரிவாக 'சென்னை இலெளகிகசங்கம்' (Madras Secular Society) என்னும் பெயரில் தொடங்கப்பெற்ற இவ்வமைப்பு பின்னர் 1886 ஆம்ஆண்டு பிப்ரவரி 12ஆம் தேதி முதல் சென்னை இலெளகிக சங்கமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பதினாறாம் நூற்றாண்டு முதல் கிழக்கிந்தியக் கம்பெனியின் வணிகம் மூலம் உருவான காலனியம் என்பது, படிப்படியாக வளர்ந்து பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில், இந்தியா என்று சொல்லப்படும் முழு நிலப்பகுதியையும் ஆட்சி அதிகாரத்திற்குக் கொண்டுவந்தது. 1799இல் திப்புசுல்தான் வீழ்ச்சியோடு இத்தன்மை நடைமுறைக்கு வந்தது. காலனியச் செயல்பாடுகளைச் சுருக்கமாகப் பின்வரும் வகையில் தொகுக்கலாம்.

இந்தியா என்ற நிலப்பகுதியின் வளங்களைப் பல்வேறு ஐரோப்பிய வணிகக் குழுக்கள் தமதாக்கிக் கொள்வது. படிப்படியாகக் காலனிய அடிமைக்கு உள்வாங்கப்பட்டு, வளங்களை ஐரோப்பாவிற்குக் கொண்டு சேர்ப்பது; இத்தன்மை இறுதியில் அனைத்து வளங்களும் பிரித்தானிய மகாராணிக்கே உரியன எனும் சூழல் 1858 இல் உருவானது.

கிறித்தவ சமயப் பரப்பலை மேற்கொள்வதற்குப் பாதிரியார்களை வரவழைத்துச் செயல்படுவது; இதன் உடன் விளைவாகவே கல்வி நிறுவனங்களும் உருவாக்கப்பட்டன.

பிரித்தானிய அரசு, கிறித்தவ நிறுவனங்கள் என்ற இருகூறுகளில் காலனியம் செயல்பட்டது.

மேற்குறிப்பிட்ட காலனியச் செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்ட நடவடிக்கைகளைச் சென்னை இலெளகிக சங்கம் மேற்கொண்டது. இங்கிலாந்து போன்ற நிலப் பகுதியிலிருந்து, தமது செயல்பாட்டிற்கான கருத்து நிலைகளை உள்வாங்கிய போதும், இந்தியா எனும் நிலப்பகுதியில் சுயமாகச் செயல்படத் தொடங்கினார். காலனியச் செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ள வில்லை; காலனிய அரசைக் கடுமையாக விமர்சனம் செய்தனர். காலனியத்தின் ஒரு பிரிவான மதக்கருத்தாடல்களை முற்றுமுழுதாய்ப் புறக்கணித்தனர். இவ்வகையில் கிறித்தவ சமயத்தின் எதிர்நிலையில் இவர்களும் செயல்பட்டனர். இதன்மூலம் தமது தலைமை நிறுவனமான இலண்டன் சமயச் சார்பற்ற அமைப்போடு (London Secular Society) தம்மை அடையாளப்படுத்திக் கொண்டனர். இவ்வகையில் உலகம் தழுவிய கருத்துநிலை ஒன்றின் தமிழகப்

பிரிவாக இவர்கள் செயல்பட்டனர். அன்றைய இந்தியாவில் இவ்வகையான வேறு ஓர் அமைப்பைக் கூறமுடியாது.

இங்கிலாந்து, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உருவான தத்துவார்த்த சிந்தனை மரபுகளை இவர்கள் உள்வாங்கினர். பிரெஞ்சுப் புரட்சி, அமெரிக்க விடுதலைப்போர், இங்கிலாந்தின் சார்டிஸ்ட் தொழிலாளர் இயக்கச் செயல்பாடுகள் ஆகியவை சார்ந்து அந் நாள்களில் உருவான புத்தொளி மரபுகள் குறித்து நாம் அறிவோம். அதைப்போலவே அந்நாடுகளில் கண்டுபிடிக்கப்பட்ட புதிய கண்டுபிடிப்புகள் சார்ந்து உருவான தொழிற்புரட்சி குறித்தும் நாம் அறிவோம். இத்தன்மைகளைச் சென்னை இலௌகிக சங்கம் எவ்வகையில் தன்வயமாக்கிக் கொண்டது என்பதைச் சுருக்கமாகத் தொகுக்கலாம்.

> கோப்பர்நிக்கஸ் *(1473-1543)*, புரூனோ *(1548-1600)*, டார்வின் *(1809-1882)* ஆகியோர் உருவாக்கிய அறிவியல் கண்டுபிடிப்புகளைத் தமது அடையாளமாக ஏற்றுக் கொண்டனர்.
>
> மால்தூஸ் *(1766- 1834)* கண்டறிந்த பொருளியல் கோட்பாட்டை ஏற்றுக் கொண்டு செயல்பட்டனர்.
>
> ஸ்பீனோசா *(1632-1677)*, வால்டேர் *(1694-1778)*, டேவிட் ஹியூம் *(1711-1776)*, தாமஸ்பெயின் *(1737-1809)*, இங்கர்சால் *(1833-1899)*, பிராட்லா *(1833-1891)*, அன்னிபெசன்ட் *(1847-1933)* ஆகிய பிறர் முன்னெடுத்த தத்துவார்த்த உரையாடல்களை முன்னெடுத்தனர்.

சென்னை இலௌகிக சங்கம் மேற்குறித்த செயல்பாடுகளை முன்னெடுத்ததின் மூலம், பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தமிழ்ச்சமூகத்தின் அறிவுத் தோற்றவியலுக்குக் குறிப்பிடத்தக்க பங்களிப்பைச் செய்துள்ளது என்று கருதவியலும். இதனைக் கீழ்க்காணும் வகையில் உரையாடலுக்கு உட்படுத்த இயலும்.

சென்னை இலௌகிக சங்கம், தனது இயக்கத்தின் இதழான தத்துவ விவேசினியில் *(4:8:23.8.1885)* பூர்வீக சுயாக்கியானிகள் எனும் தலைப்பில் புரூனோ, வால்டேர், டேவிட் ஹியூம், ஸ்பீனோசா பெனிடிக்ட்ஸ், இங்கர்சால் ஆகிய பிறர் குறித்து விரிவாகப் பதிவு செய்துள்ளமை. புரூனோ குறித்த பதிவு பின்வரும் வகையில் அமைந்துள்ளது.

> "... இவர் அனேக அனேக உலகங்கள் இருக்கின்றன வென்றும், நட்சத்திரங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு சூரியனாகவும் அச்சூரியர்களைச் சுற்றிவரும் கோளங்கள் பலவென்றும் கூறினதற்காக இவரைஆறு வருஷ காலம் வரையிலும் சிறையில் போட்டு வைத்தார்கள். அக்காலங்களில், கணித சாஸ்திரத்தைப் போதித்து வந்தார். இவ்வாறு ஆறு வருஷ காலத்திற்குப்பின் இவரை விசாரணை செய்து முறையே தேசப் பிரஷ்டராக்கிக் கண்ட நிஷ்டூரங்களுக்குட்படுத்தி 1600 ஆம் வருஷம் பிப்ரவரி மாசம் 16ஆம் திகதி தினம் நெருப்பு ஸ்தம்பத்தில் கட்டிக் கொளுத்தி விட்டார்கள்.

> இவர் சித்துக்கெல்லாம் காரணமாயுள்ள பரமாத்மாவினால் உலகம் தொழிற்பட்டு வருகிறதென்றும், சத்துப் பொருளும் சித்துப் பொருளும் நித்திய பொருள்களெனவும், சித்துப் பொருள்களிலு முள்ளதென்றும், சத்துப் பொருளானது எல்லா ரூபங்களுக்கு முதற்காரணமாகவும் அணி பொருளாகவு மிருக்கின்ற தென்றும், சத்துப் பொருளும் சித்துப்பொருளும் ஒருங்கே கூடிப் பரமாத்மாவாகின்ற தென்றும் நம்பியிருந்தார். அஃதாவது இவர் ஏக. வஸ்துக்கியானியாக விருந்தார். அஃதுதானென்னவெனில் இப்பிரபஞ்சத்தைவிட வேறொன்றினும் நம்பிக்கை வையாத நிரீச்சுர வாதியாக விருந்தா ரென்பது திண்ணம். இவர் தனக்கு எது சரியாகத் தோன்றினதோ அதனை நம்பி அதற்காக இறக்க வேண்டிய காலம் வந்துழிப் பிந்திப் புறங்காட்ட நெஞ்சினையுடையவராக விருந்தார். இவரைக் கொலை புரிந்ததற்காகப் பழிவாங்க வேண்டுமாயின் கண்ணுள்ள ஒவ்வொரு குருமார்களையும் பலியிட்டுப் பாழடைந்து கிடக்கும் ரோமாபுரியின் கோயில்களை அஸ்திவாரமாகக் கொண்டு, இவ்விதச் சிரோன்மணிக்குத் தக்கவோர்பிரதமை யெழுப்பும் வரையிலும் அப்பழி அத்தேசத்தாரை விட்டகலாது..., (தத்துவ விவேசினி: 4: 8: 23.8.1885)

இவ்வகையில் உலக இயக்கம் குறித்த மதம் சார்ந்த கருத்து நிலைகளிலிருந்து மாறுபட்ட புரூனோவைத் தங்களது அடையாளமாகக் கொள்ளும் வகையில், அவர் கொலை செய்யப்பட்ட ஆண்டிலிருந்து ஆண்டைக் கணக்கிடும் மரபை உலகம் முழுதும் செயல்பட்ட சுயசிந்தனையாளர்கள் கைக்கொண்டனர். இதனைச் சென்னை இலௌகிக சங்கம் தனது இதழ்களில் நடைமுறைப்படுத்தியது. எடுத்துக்காட்டாக 1886 என்பதற்கு இணையாக கி.ஷி.286 என்று குறித்தனர். புரூனோ கொலை செய்யப்பட்டு 286ஆண்டுகள் ஆகியிருப்பதை நினைவுபடுத்தும் வகையில் அது அமைந்திருக்கிறது. கி.ஞி.286 என்பதற்குப் பதில் கி.ஷி.286 என்று எழுதினர். கி.ஷி. என்பது Anno-Scientiae என்னும் இலத்தீன் சொல். இதற்குக் காரணகாரியம் குறித்து அறிந்த காலம் (Age of Reason) என்பது சுயசிந்தனையாளர்களின் விளக்கம் ஆகும். இதனை மதச்சார்பற்ற காலக் கணக்கிடலாகக் (Secular Calendar) கருதினர். (The Thinker: 2:43, 20.4.1884) சென்னை இலௌகிக சங்கம், உலகம் தழுவிய சுயசிந்தனையாளர்கள் மரபைத் தமிழ்ச் சூழலுக்கு அறிமுகப்படுத்தியிருப்பதைக் காண்கிறோம். மதத்திற்கும் அறிவியல் கண்டுபிடிப்புகளுக்கும் சுயசிந்தனை மரபுகளுக்குமான தொடர்பை விளங்கிக்கொள்வது அவசியம். இத்தன்மை சார்ந்தே ஒவ்வொரு குறிப்பிட்ட இனம் மற்றும் அதன்வழி கட்டமைக்கப்படும் தேசம் சார்ந்த தத்துவ வரலாற்றைக் கட்டமைக்க இயலும். இவ்வகையில் தமிழ்ச்சூழலின் தத்துவ வரலாற்றுப் புரிதலை இப்பின்புலத்தில் கவனத்தில் கொள்ளும் தேவையுண்டு. புரூனோவைப் போலவே டார்வின் கோட்பாடுகளையும் சென்னை இலௌகிக சங்கத்தினர் போற்றிப் பேசினர். டார்வின் குறித்த அவர்களது பதிவு பின்வருமாறு அமைகிறது.

"ஒரு வகுப்பினர் மற்றொரு வகுப்பினர் மனையில் போஜனஞ் செய்யாதும், ஒருவருக்கொருவர் கொள்வினை கொடுப்பினை செய்யாதும், ஒருவரை யொருவர் பகைக்கின்றமையால், டார்வின் சொல்லிய பிரகாரம் மனிதர் தாழ்ந்த ஜீவஜெந்துக்களினின்றே படிப்படியாக உயர்ந்து மானிட உருத்தாங்கி மேற்பட்டிருக்க வேண்டுமேயன்றி, கடவுளால் சமைக்கப் பட்டார்களென்பதும், பிரம்ம தேகத்தின் பல இடங்களில் உதித்த இடபேதத்தினால் வருணபேதம் தோன்றியதென்பதும் வழுவான கோட்பாடென்று வெளியிடப்படுகிறது. (M.Masilamony Moodaliar: *தத்துவ விவேசினி: 1:25; 17.12.1882.)*

இதன்மூலம் டார்வின் கண்டுபிடித்த பரிணாமக் கோட்பாட்டை (Evolution Theory) இவர்கள் ஏற்றுச் செயல்பட்டிருப்பதைக் காண்கிறோம். இவ்வகையில் அறிவியல் கண்டுபிடிப்பு வழி உருவான மதச்சார்பற்ற கருத்தியலை, இலண்டன் மதச்சார்பற்ற இயக்கம் (London National Secular Society) நடைமுறைப்படுத்தியது. 'Secular' என்ற சொல்லாட்சியை இவ்வமைப்புதான் முதல் முதல் உருவாக்கியது. அதன் நேர்வாரிசாகச் சென்னை இலெளகிக சங்கமும் செயல்பட்டுத் தமிழ்ச்சூழலில் புதிய தத்துவக் கண்ணோட்டத்திற்கு வழி கண்டுள்ளனர் என்பதைப் புரிந்து கொள்வது அவசியம்.

தாமஸ் இராபர்ட் மால்தூஸ், 1798இல் "Essay on the Principle of population" எனும் கட்டுரையை எழுதினார். 1803 இல் மீண்டும் அக்கட்டுரை விரித்து எழுதி வெளியிடப்பட்டது. உணவு உற்பத்தி, 1,2,3,4,5 என்ற விகிதத்தில் வளர்ச்சி அடைகிறது. மக்கள் பெருக்கம் 1,2,4,8,16 எனும் விகிதத்தில் நடைபெறுகிறது. இதனால் உற்பத்திக்கும் நுகர்வுக்கும் மிகப்பெரும் இடைவெளி உருவாவதாக இவர் கணக்கிட்டார். இக்கோட்பாட்டைப் பின்னர்ப் பலர் ஏற்றுக் கொள்ளவில்லை. குறிப்பாக மார்க்சியக் கோட்பாட்டாளர்கள் மறுத்தனர். இக்கோட்பாட்டைப் பிராட்லாவும் அன்னிபெசண்ட் அம்மையாரும் ஏற்றுக் கொண்டனர். அவர்களது அமைப்பின் மூலம், மக்கள் பெருக்கத்தைக் குறைப்பதற்காகச் சிறு வெளியீடுகளை வெளியிட்டனர். இதனை ஏற்றுக்கொள்ளாத இங்கிலாந்து அரசு அவர்கள் இருவரையும் கைது செய்தது. வழக்காடி, பின்னர் வெளிவந்தனர்.

மால்தூஸியன் கோட்பாட்டைச் சென்னை இலெளகிக சங்கத்தினர் முழுமையாக ஏற்றுக் கொண்டனர். இதற்கெனத் *தரித்திர நாச சங்கம்* எனும் அமைப்பை உருவாக்கினர். இதற்குப் பி.எல்.நரசு அவர்களைக் காரியதரிசியாக நியமித்தனர். இவர் பிற்காலத்தில் பெளத்த அறிஞராக வாழ்ந்தவர். அன்னிபெசன்ட் அம்மையார், மக்கள் தொகைப் பெருக்கத்தைக் குறைப்பது தொடர்பாக எழுதிய நூலைத் தமிழில் மொழியாக்கம் செய்து, 'பிரஜாவிருத்திப் பிரமாணம்' எனும் தலைப்பில் 'தத்துவ விவேசினி' இதழில் தொடராக வெளியிட்டனர். இவ்வகையில் மேலை நாடுகளில் முன்னெடுக்கப்பட்ட வறுமை ஒழிப்பதற்கான செயல்பாடுகளைத் தமிழகத்திலும் நடைமுறைப்படுத்த

முயன்றனர். இவ்வகையில் புதிய பொருளாதாரக் கண்ணோட்டத்தையும் இவர்கள் முன்னெடுத்ததை அறிய முடிகிறது.

சென்னை இலௌகிக சங்கத்தினர் பொருள்முதல்வாதக் கோட்பாட்டை மூர்த்த பூதிய வாதம் (Materialism) என அழைத்தனர். இந்தத் தத்துவம் குறித்து அவர்களது பதிவு பின்வரும் வகையில் அமைகிறது.

> பூததத்துவம், பதார்த்த தத்துவம், மானத் தத்துவம் முதலிய தத்துவங்களை யுணராமல் வாயில் வரும்படி கடவுளென்றும், சுவர்க்கமென்றும், நரகமென்றும், பேயென்றும் பிசாசென்றும் சொற்சிருஷ்டிகள் செய்து அறியாமைக்கு ஆட்பட்டு, தெரியாமைக்குத் தொண்டு பூண்டு அந்தகாரத்திற்கு வந்தனஞ் செய்து, நாளவம் போக்கும் ஆஸ்திகர்காள்! எங்கள் மதிமயக்க மொழிய மருந்தொன்றுண்டு. அதைத் தேடிப் புசித்துண்ணுங்கள். உங்கள் மயக்கத்தைப் பரித்தியாகம் பண்ணுங்கள். அம்மாமருந்தோ தத்துவ சாத்திரமேயாம்" (தத்துவவிவேசினி: 4:8, 23.8.1885)

இவ்வகையில் இவர்கள் முன்னெடுத்த தத்துவ மரபு என்பதைப் பின்வரும் வகையில் தொகுத்துக் கொள்ள இயலும்.

> ஜுவிஸ் மற்றும் டச்சு இனக்குழுவைச் சேர்ந்த தத்துவ அறிஞரான ஸ்பீனோசா, 18ஆம் நூற்றாண்டின் தத்துவ மறுமலர்ச்சிக்கு முன்னோடியாகக் கருதப்படுகிறார். பைபிள் தொடர்பாகப் பகுத்தறிவுக் கண்ணோட்டத்தில் முதன்முதல் விமர்சனம் செய்தவர். இவரது செல்வாக்குக்குட்பட்டு, கவிஞர் ஷெல்லி எழுதிய கட்டுரைதான், "The Necessity of Atheism" ஆகும். இவரது கோட்பாடுகளைச் சென்னை இலௌகிக சங்கம் ஏற்றுக்கொண்டு, இவரைப் பூர்வீக சுயாக்கியானி என்று அறிமுகப்படுத்தினர். இவ்வகையில் 18ஆம் நூற்றாண்டில் உருவான பகுத்தறிவு தத்துவ மரபைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தினர் என்று கூறமுடியும்.
>
> பாரீஸ் நகரத்தில் வாழ்ந்த வால்டேர்தான் முதன்முதல் மதச்சுதந்திரம் (Freedom of Religion) வெளிபாட்டுச் சுதந்திரம் (Free of Expression) ஆகியவற்றை முன்னெடுத்த அறிஞர். பிரெஞ்சுப் புரட்சிக்கு வித்திட்டவர். ஆட்சி அதிகாரத்திலிருந்து கிறித்தவ மடாலயங்களைப் பிரிக்கவேண்டும் என்று குரல்கொடுத்தவர். இவ்வகையில் ஐரோப்பியப் பகுத்தறிவுச் சிந்தனை மரபின் மூலவராகக் கருதப்படுகிறார். இவரது கோட்பாடுகளைச் சென்னை இலௌகிக சங்கத்தினர் பிரச்சாரம் செய்து வந்தனர். அவரது வழியில் செயல்படுபவர்களாகத் தங்களைக் கூறிக் கொண்டனர்.
>
> ஸ்காட்லாந்து தத்துவ அறிஞரான டேவீட் ஹியூம் பகுத்தறிவு மரபு சார்ந்த பொருளாதார அறிஞர் ஆவார். 'A Treatise of Human Nature (1739), Dialogue Concerning National Religion (1777)' ஆகிய ஆக்கங்களின் மூலம்,

மதம்சார்ந்த கோட்பாடுகளுக்கு எதிராகச் செயல்பட்டவர். இவரது சிந்தனை மரபுகளை மேலைநாட்டின் சுயசிந்தனையாளர்கள் உள்வாங்கிச் செயல்பட்டனர். சென்னை இலௌகிக சங்கம், இவரது கோட்பாடுகளை ஏற்றுக்கொண்டு, தமது இதழ்களில் இவர் குறித்து எழுதி வந்தது.

இங்கிலாந்தில் பிறந்து, பிரெஞ்சு மற்றும் அமெரிக்க நாடுகளில் வாழ்ந்தவர் தாமஸ்செயின். அமெரிக்காவில் புரட்சிகரச் சிந்தனை மரபுகளை உருவாக்கிய பெஞ்சமின் பிராங்கிளின் (1706-1790) இவரது நெருக்கமான நண்பர். தாமஸ்செயின் பிரெஞ்சுப் புரட்சியின் தாக்கத்திற்கு உட்பட்டவர். தாமஸ் செயின் எழுதிய ' The Age of Reason' எனும் ஆக்கம், சுயசிந்தனை மரபை ஐரோப்பா மற்றும் அமெரிக்க நாடுகளில் வளப்படுத்தியது என்று கருதமுடியும். கிறித்தவ மதம் சார்ந்து நிறுவனங்களின் அதிகாரத்திற்கு எதிராகப் போராடியவர் இவர். கிறித்தவ மறுப்பாளரான இவரது இறுதி ஊர்வலத்தில் ஆறுபேர் மட்டுமே சென்றனர். அமெரிக்கப் புரட்சியின் தந்தை என்று கருதப்படும் இப்பகுத்தறிவாளர் கருத்துகளைச் சென்னை இலௌகிக சங்கத்தினர் பிரச்சாரம் செய்துவந்தனர்.

அமெரிக்கப் பகுத்தறிவாளரான இராபர்ட் ஜி.இங்கர்சாலைச் சென்னை இலௌகிக சங்கம் பெரிதும் ஏற்றிப் போற்றியது. 'The Future of Religion' எனும் அவரது நூலை இனிவரும் மதம் என்று மொழியாக்கம் செய்து 'தத்துவ விவேசினி' இதழில் தொடர்ந்து வெளியிட்டனர். மேலை நாடுகளில் பெரிதும் பேசப்பட்ட பகுத்தறிவாளர் இங்கர்சால், தமிழ்ச் சூழலில் சென்னை இலௌகிக சங்கம் முதல்முதல் அறிமுகப்படுத்தியது. பிற்காலத்தில் பெரியார் ஈ.வெ.ரா. இங்கர்சால் கருத்துக்களை விரிவாகப் பேசியதை நாம் அறிவோம்.

கி.பி.1860 இல் 'National Secular Society' என்னும் அமைப்பில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு இலண்டன் நகரில், கிறித்தவ மத அதிகாரத்திற்கு எதிராகச் செயல்பட்டவர் பிராட்லர். இவரோடு இணைந்து தமது இளமைக்காலத்தில் செயல்பட்டவர் அன்னிபெசன்ட் அம்மையார். 'The national Reformer', 'The Free Thinker', 'The Secular Review', 'The Malthusian', 'The Truth seeker', 'Secular thought', 'The Liberator' ஆகிய இதழ்கள் இலண்டனிலிருந்து வெளிவந்தன. இவை சுயசிந்தனை யாளர்களால் நடத்தப் பெற்றவை. இவற்றிற்கு மூலமாக இருந்தது இலண்டன் நகரில் செயல்பட்ட மதச்சார்பற்ற அமைப்பு (National Secular Society) ஆகும். இவ்வமைப்பை வளர்த்தெடுத்தவர் பிராட்லா. சென்னை இலௌகிக சங்கம் பிராட்லாவோடு நேரடித் தொடர்பு கொண்டு செயல்பட்டது. இதற்கான விரிவான தரவுகளை இவர்கள் நடத்திய இதழ்களில் காணமுடிகிறது.

மேற்குறித்த பல்வேறு விவரணங்கள் சார்ந்து காலனிய இந்தியாவில் இவர்களது செயல்பாட்டைப் பின்வரும் வகையில் மதிப்பீடு செய்ய இயலும்.

- 19ஆம் நூற்றாண்டுக் காலனிய இந்தியாவில் சமய மறுப்பாளராகச் செயல்பட்ட குழுவினர்களாக இவர்களை மட்டுமே கருதமுடிகிறது. சமயப் பிரச்சாரம் மேலோங்கிய சூழலில் சமய மறுப்பு இயக்கமாகச் செயல்பட்டிருப்பதைக் கணக்கில் கொள்வது அவசியமாகும்.
- மேலை நாடுகளில் உருவான புதிய சிந்தனை மரபுகளைத் தமிழ்ச் சூழலில் அறிமுகப்படுத்தியவர்களாக இவர்களைக் கருதமுடியும்.
- மேலை நாடுகளில் பேசப்பட்ட பொருளாதாரக் கோட்பாடுகளை, காலனிய இந்தியச் சூழலுக்குப் பொருத்திப் பார்க்க முயன்றவர்கள் இவர்கள் தாம் என்று கூறலாம்.
- தொழில் புரட்சி சார்ந்த அறிவியல் கருத்துக்களையும் பிரெஞ்சுப்புரட்சி சார்ந்த தத்துவக் கருத்துக்களையும் அமெரிக்க விடுதலை சார்ந்த கருத்துக்களையும் காலனிய இந்தியாவில் தமிழ்ச் சூழலில் பேசியவர்களாக இவர்களைக் கூறமுடியும்.

மேற்குறித்த பல்வேறு விவரணங்கள் சார்ந்து காலனிய இந்தியாவில் - குறிப்பாகத் தமிழ்ச்சூழலில் செயல்பட்ட இவ்வியக்கம், காலனிய இந்தியாவில் வேறு எங்கும் செயல்பட்ட அறிவுசார்ந்த செயல்பாடுகளிலிருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். சமய மரபில் சீர்திருத்தங்களை முன்வைத்த வங்காளச் சிந்தனை மரபுக்கு மாற்றாக, சமய மறுப்பு இயக்கமாகத் தமிழ்ச்சூழலில் செயல்பட்டனர் என்பதைப் பதிவு செய்யும் தேவை நம்முன் இருப்பதாகக் கருதலாம்.

தமிழ்ச்சூழல்சார்ந்த அறிவுத்தோற்றவியல் (Epistemology) குறித்த புரிதலும் அம்மரபு உருவான வரலாறும் நாம் கவனத்தில் கொள்ளவேண்டிய ஒன்றாகும். ஒவ்வொரு காலச் சூழலுக்கு ஏற்பப் புதிய புதிய தத்துவ உரையாடல்கள் உருப்பெறுவதை நாம் மறுப்பதற்கில்லை. பத்தொன்பதாம் நூற்றாண்டின் தத்துவ உரையாடலில் சென்னை இலெளகிக சங்கம் என்னும் அமைப்பு எவ்வகையில் செயல்பட்டது என்பதைத் தமிழ்ச்சமூக அறிவுத் தோற்றவியலில் ஒரு பகுதியாகக் கொள்ள முடியும். இத்தன்மை குறித்து இதுவரை அறியாத நிலை இருந்ததைத் தத்துவவிவேசினி, The Thinker ஆகிய இதழ்களில் காணப்படும் பதிவுகள் வழி இம்மரபை நாம் அறிகிறோம். தமிழ்ச்சமூகத்தின் வரலாறு எழுதுவோர் இதனை இனிக் கவனத்தில் கொள்வது அவசியம்.

தத்தவத்துறையின் ஒரு பிரிவாகக் கருதப்படும் அறிவுத் தோற்றவியல், மனித அறிவின் தோற்றச் சூழல்கள், வெளிப்படுத்து முறைகள், அதன் எல்லை ஆகிய பிறவற்றைக் கூறுவதாகக் கருதலாம். தமிழ்ச்சூழலின் தத்துவ உரையாடலில் இவ்வகையான தன்மைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் எவ்வகையில் செயல் பட்டன என்ற உரையாடலை மேலும் மேலும் முன்னெடுக்க மேல் கூறப்பட்ட விவரணங்கள் உதவும். இதனை உலகுக்கு அறிமுகப்படுத்தும் கடமை நமக்குண்டு.

சான்றாதார நூல்கள்

- அரசு, வீ., (பதிப்பு) சென்னை இலௌகிக சங்கம் (1878-1888) தத்துவவிவேசினி - The Thinker இதழ்கள்வழி பதிவுகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை, அக்டோபர் 2012.
- அரசு, வீ., (பதிப்பு), தத்துவவிவேசினி சென்னை இலௌகிக சங்கம் (தத்துவம் - கடவுள் - நாத்திகம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை, அக்டோபர் 2012.
- அரசு, வீ., (பதிப்பு), தத்துவவிவேசினி சென்னை இலௌகிக சங்கம் (சாதி - பெண்கள் - சமயம்), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்(பி) லிட்., சென்னை, அக்டோபர் 2012.
- அரசு, வீ., (பதிப்பு), தத்துவவிவேசினி சென்னை இலௌகிக சங்கம் (காலனியம் - விஞ்ஞானம் - மூடநம்பிக்கை), நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., சென்னை, அக்டோபர் 2012 .
- Arasu, V., (Ed.), The Thinker, Aatheism and theism - Madras Secular Society, Collected Articles from an atheist journal The Thinker(1882-1888), New Century Book House Pvt. Ltd., Chennai, December 2012.
- Arasu, V., (Ed.), The Thinker, Woman-culture and poverty, collected articles from an atheist journal The Thinker(1882-1888), New Century Book House Pvt. Ltd., Chennai, December 2012.

பாரி - லார்டுவின் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டு அடிப்படையில் கம்பராமாயணத்தில் வாய்ப்பாடுகள்

திருமதி கோ. புஷ்பவள்ளி
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

20-ஆம் நூற்றாண்டில் எதையுமே கேள்விக்கு உட்படுத்துவது என்ற விஞ்ஞானப் பூர்வமானபார்வை உலகம் முழுவதும் தோன்றியது. அதன் விளைவாக உலகில் தோன்றிய அனைத்துப் பொருள்களையும், வடிவங்களையும் நுணுகிப்பார்க்கும் போக்கு ஏற்பட்டது. இந்தப் போக்கு இலக்கியங்களின் மீதும் ஊடுருவியது. இதன் விளைவாகச் செவ்வியல் இலக்கியங்கள் மறுவாசிப்புக்கு உட்படுத்தப்பட்டன. அதன் பயனாக இலக்கிய ஆய்வு மேலும் பல கனபரிமாணங்களைப் பெற்றது எனலாம். உலகின் தொன்மையான இலியட் (Iliad), ஒடிசி (Odyseey) ஆகிய காவியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்தியதின் விளைவாக வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு (Oral Formulic Theory) பாரி - லார்டு ஆகியோரால் முன்மொழியப்பட்டது. இக்கோட்பாடு 1933-இல் அமெரிக்க ஹார்வேர்டு பல்கலைக்கழகத்தில் ஆங்கிலப் பேராசிரியராகப் பணியாற்றிய மில்மன் பாரியினால் (Milman parry) அறிமுகப்படுத்தப்பட்டு அவரது மாணக்கர் ஆல்பெர்ட் பெட்ஸ் லார்டுவினால் (A.B.Lord) முழுமைப்படுத்தப்பட்டது. இந்தக் கோட்பாடு இலியட், ஒடிசி ஆகியவை வாய்மொழிக் காப்பியங்களிலிருந்து கட்டமைக்கப்பட்டவை என்ற மையக் கருத்தை உலகிற்கு அறிமுகப்படுத்தியதுடன், உலகில் தோன்றிய அனைத்து வகையான இலக்கியங்களுக்கும் வாய்மொழி இலக்கியங்களே அடிப்படை என்பதையும் களப்பணி ஆதாரங்களிலிருந்து தெளிவுபடுத்தியது.

உருசியாவைச் சேர்ந்த டார்டர்ஸ்களின் (Tatars) வாய்மொழி இலக்கியங்களைச் சேகரித்த எஸ்.எம்.வி.சாட்விக் (S.M.Chatwick) என்.கே.வி.சாட்விக் (N.K.V.Chatwick) தம்பதியரும் ஜோசப் ரூசோ (Joseph Russo) போன்றோரும் வீரயுகக்கால இலக்கியமாகிய செவ்வியல் இலக்கியங்கள் பேச்சு வழக்கிலிருந்து எழுந்திருக்க வேண்டும் என்ற கருத்தாக்கத்தை முன் வைத்தனர். உலகின் தலைசிறந்த செவ்வியல் காவியங்களான இலியட், ஒடிசி ஆகியவற்றை ஆய்வுக்கு உட்படுத்திய செசில் மௌருசி பௌரா (Cecil Maurice Bowra) அவற்றின் வடிவங்கள் ஐரோப்பாவில் வழங்கிய கதைப்பாடல்களில் இருப்பதை ஒப்பிட்டு ஆராய்ந்து, இலியட், ஒடிசி ஆகியவை வாய்மொழி இலக்கியத்திலிருந்து காலப்போக்கில் ஏட்டிலக்கிய வடிவம் பெற்றிருக்கலாம்

என்ற கருத்தினை வலியுறுத்தினார். இப்படி உலகம் முழுவதும் இலக்கியங்களை மறுவாசிப்புக்கு உட்படுத்திப் பல புதிய செய்திகள் இக்கோட்பாட்டின் மூலம் வெளிக் கொணரப்பட்டுள்ளன. இக்கட்டுரையானது வாய்ப்பாட்டுக் கோட்பாட்டை விவரித்து அதைக் கம்பராமாயணத்தில் பொருத்திக் காண்பதாக அமைந்துள்ளது.

வாய்ப்பாடுகள்

ஹோமரின் காவியத்தில் இருந்த மறுதொடர்கள் (repetitions), பெயரடைகள் மற்றும் ஒரே விதமான சொற்றொடர்கள் (Sterio-typed phrases) போன்றவை யூக்கோஸ்லாவியாவில் தொகுக்கப்பட்ட வாய்மொழிக் காவியங்களில் காணப்பட்டதால் அவற்றோடு ஹோமரின் காவியங்கள் ஒப்பு நோக்கப்பட்டன. அவ்வாறு ஒப்பியல் நோக்கில் ஆராயும்போது அறிஞர்கள் சில கருத்தாக்கங்கள் துல்லியமாய் உருவாக்க வேண்டும் என்று கருதினர். அவ்வாறு உருவாக்கப்பட்ட பல கருத்தாக்கங்களில் ஒன்றுதான் 'வாய்ப்பாடு' ஆகும். இதனைப் பாரி, 'இன்றியமையாத கருத்தை வெளிப்படுத்துவதற்காக ஒரே விதமான யாப்பு அமைப்பினைக் கொண்டு மீண்டும், மீண்டும் பயன்படுத்தப்படும் சில சொற்களின் கூட்டம்' என்கிறார் (Formula is a group of words which is regularly employed under the same metrical conditions to express a given essential idea)(Parry 1960: p.30).

'வாய்ப்பாடு' நிகழ்த்து கலையை அடிப்படையாகக் கொண்டு பிறப்பதாக 'லார்டு' கூறுகிறார். எனவே, இளம்பாடகன் இசைநுட்ப அறிவு பெற்றவனாகவும், தனது முந்தைய மூதாதையாரிடம் இருந்து இயல்பாகவே அவன் பெற்றுள்ளதை அறிய முடிகிறது. எனவே, இப்படி சொல்லப் போனால் 'வாய்ப்பாடு' சிந்தனைக்கும் இசைத்த பாட்டுக்கும் பிறந்த குழந்தையாகும். பாடகன் சுதந்திரச் சிந்தனை மனப்பாங்கையும், பாட்டுக் கட்டும் போது கட்டுப்பாடுகளையும் கொள்வதன் மூலம் அவனுக்கு இசை மற்றும் யாப்பு பற்றிய வாய்ப்பாட்டை அறிய அறிவு கிடைக்கிறது எனலாம். சொற்றொடர்களின் அளவு, வாக்கியத்தின் நீளம், தொடர்ந்து மீண்டும் மீண்டும் வரும் கருத்துக்கள், தாளம் இவை சேர்ந்து இளம்பாடகனிடம் கதைக்கான வாய்ப்பாடுகள் உருவாகுகின்றதாகப் பாரி கூறுகிறார். அவர் வினைச்சொற்களின் தன்மைகளை எடுத்தாளும் போது அவை பாட்டில் எவ்வாறு மீண்டும், மீண்டும் வருகின்றன என்பதைச் சுட்டியுள்ளார்.

ஒலி அமைப்பு நிலை

இயல்பாகவே கதைக்கருக்கள், தொடர்கள், சொற்கள் எழுப்பும் ஒலிகளும் நிறைந்திருந்தன. பாடகளின் இயல்பூக்க நிலையால் (instinctive) மோனைகள் மற்றும் எதுகைகள் அவனைக் கவர்ந்தன. ஒரு சொல் அதன் ஒலியின் தன்மையால் இன்னொரு சொல்லைச் சுட்டுகிறது. இங்குக் கருத்தால் சுட்டப்படுவதை விட ஒலி அமைப்பால் சுட்டப்படுவதையும் கொண்டு இளம்பாடகன் ஓசை சார்ந்த, இசை சார்ந்த, யாப்பு சார்ந்த, வாக்கியம் சார்ந்த மாதிரிகளைக் கொள்வதோடு அவை வடிவம் பெற்று 'வாய்ப்பாடாய்' உருக்கொள்கின்றன எனலாம். பாரி 'வாய்ப்பாட்டு'க் கூறுகளை விளக்குவதற்கு அடைமொழிகளையும், அவற்றின்

ஆளுமைத் தன்மையையும் பிரதானமாக இயம்புகின்றார். மேலும், பதிலிச் சொற்கள், வகை மாதிரிகளின் (patterns) நிலைப்பாட்டினைக் கொண்டு வாய்ப்பாட்டினை விளக்குகிறார். பலதடவை பயிற்சிக்குப் பின்னரே இளம்பாடகனிடம் சொற்றொடர்கள் மீண்டும், மீண்டும் தோன்றி அமைப்பு முறைபெற்று வாய்ப்பாடாக உருக்கொள்கின்றன. பாரியைத் தொடர்ந்து 'வாய்ப்பாடு' பற்றிய கருத்தினைப் பல்வேறு அறிஞர்கள் விவாதத்திற்கு உட்புகுத்தினர்.

'சி.எம். பௌரா' என்ற உலகப்புகழ் பெற்ற வீரநிலைக் கால இலக்கிய ஆய்வாளர் 'வாய்ப்பாடு' என்பது எவ்வித மாற்றமும் இன்றி, ஒரு குறிப்பிட்ட சூழலில் தேவைப்படும் போதெல்லாம் உறுதுணையாக வந்து அமைகின்றது எனவும், பெயர் பெயரடையானது ஓர் ஆள் (அ) பொருளுடன் தொடர்புபடுத்தப் படுவதும், அவை அடையெடுத்த தொடர்கள் (fixed Epiethels) என்கிறார். இவை காரணமின்றித் திரும்ப,திரும்ப வரலாம் எனக் கூறுவதோடு சொல் கூட்டத்தினையும், கருத்துக் கூட்டத்தினையும் 'வாய்ப்பாடு' என விளக்கிச் செல்கிறார். பழங்கால ஆங்கில மொழி சார்ந்த ஆய்வுகளைச் செய்த கிரிடு (Creed) குறிப்பிட்ட கட்டுத்திட்டத்திற்கு உட்பட்டு யாப்பியல் தன்மைக்கு ஏற்ப ஒரு கொடுக்கப்பட்ட இன்றியமையாத கருத்தினை வெளிப்படுத்துவதற்கு ஏற்றத்தாய் ஒரு சொல்லோ (அ) குழுவோ முறையாகப் பயன்படுத்தும் போது அது 'வாய்ப்பாடு' ஆகின்றது. இவை மீண்டும் வரக்கூடிய தன்மைபெற்ற நீண்ட தொடராகவும் (அ) சிறுகூறுகள் கொண்ட மூன்று அசைபெற்ற தொடராகவும் இருக்கலாம் எனக் கூறுகிறார். வாய்மொழி வாய்ப்பாட்டுக் கட்டமைப்பினை விளக்கும்போது தொடர்ந்து சில காட்சிகளை (அ) நிகழ்வுகளை விவரிக்கப் பயன்படுத்தப்படும் தொகுப்புகளே 'வாய்ப்பாடு' என ரோசன்பர்க் (Rosenberg-Oral tradition1960) குறிப்பிடுகிறார். நெகளர் (Nagler) 'வாய்ப்பாட்டை' வாய்மொழிக் கவிதையின் பாரம்பரிய அடிக்கருத்துக்களினால் கட்டுப்படுத்தப் பட்ட ஒரு நிலைத்த சொல் தொடர் அமைதியாகும். யாப்பு என்பது வாய்ப்பாட்டின் வழி உருவாக்கப்பட்டதேயன்றி யாப்பினால் உருவாக்கப்படுவது அல்ல 'வாய்ப்பாடு' எனக் கூறுகிறார் ஆஸ்டன் (Austin). ஆய்வாளர்களின் கருத்தினை உற்றுநோக்கி 'வாய்ப்பாடு' என்பது ஒரு சொல் இரண்டு சொற்களைக் கொண்டது. அரைவரி (அ) முழுவரித் தொடராகவும் இரண்டு, நான்கு (அ) அதற்கு மேற்பட்ட அசைச்சொல்லைக் கொண்டது. இரண்டு (அ) பத்துமுறை மீண்டும், மீண்டும் வரக்கூடிய தன்மை பெற்றதாக விளக்கமளிக்கிறார் (Formulic Diction 2008: 12). டோனால்டு கே. பிரை (Donald K.Fry) 'வாய்ப்பாடு' என்பது ஒரு நேரடியான வாய்ப்பாட்டு முறை அமைப்பின் படைப்பாக வழங்கி வருகின்ற ஒரு வரியின் பாதி அளவினுக்கு நிரம்ப வருகின்ற சொற்களின் குழுமமே வாய்ப்பாடுகளாகின்றன என்கிறார். கீமியல் (Schiemel) வாய்ப்பாடுகளின் தேர்ச்சியினைப் பின்வரும் ஐந்து கருத்துக்களால் விளக்குகிறார்.

- பொருண்மை மற்றும் சூழல் அடிப்படையில் வருவன.
- வாக்கியத்தில் உள்ள குறிப்பிட்ட தொடர்மொழியோடு தொடர்பு கொண்டதாயிருக்கும் ஒரு வாய்ப்பாட்டின் அடிப்படையாய் வருவன.

- கவிஞனின் நினைவில் இருந்து தற்காலிகமாக நழுவிச் செல்லும் அதற்கு ஏற்றதான மாற்று அடைமொழியாலும் நேர்வது.
- கவிஞனானவனே கலைத்திறன் கொண்டு வாய்ப்பாடு இடையே ஒரு மாற்றினை வழங்க நேர்ந்து கொள்வது.
- ஒரு குறிப்பிட்ட பாத்திரத்திற்குத் தொடர்புடையதான ஒரு மாற்று ஆகிய தொடர்மொழி அமைவதாகக் குறிப்பிடுகிறார்.

ஹோமரின் இலக்கியத்தை ஆய்வு செய்த ரூசோ (Joseph A.Russo) பகுத்தாய்தல் முறையைக் கொண்டு 'வாய்ப்பாடு' கருத்தானது பாரி அவர்களால் அந்த அமைப்பினையும், வடிவத்தினையும் கொண்டு உண்மையான சொற்பொருள் விளக்கமாகக் கண்டுபிடிக்கப்பட்டது என்று இவற்றுக்குப் பாரியின் களப்பணி சான்றுகளே முதன்மையாகும் எனக் கட்டுரையான 'ஹோமரின் வாய்ப்பாட்டு அமைப்பு முறை' (Structural Formula in Homer) என்று குறிப்பிட்டுள்ளார் (Alex 1969: 569).

தமிழகச் சூழலில் கைலாசபதி ஓர் அனைத்துலக ஆய்வுமுறையைப் பின்பற்றி முதன்முதலில் சங்க இலக்கியத்தின் மீது அதனைப் பொருத்தி 'வாய்ப்பாடுகள்' (Formulas) பற்றிய ஆய்வை விரிவாக மேற்கொண்டவர் என்ற பெருமைக்குரியவர். இவர் ஒப்பியல் ஆய்வு முறைப்படி எழுதிய நூல் தமிழ் வீரநிலைக் கவிதை (Heroic Poetry) என்ற நூலாகும். இந்நூலில்தான் இன்று உலகளவில் பயன்படுத்தப்படும் வாய்மொழி வாய்ப்பாட்டுக் கோட்பாடு பயன்படுத்தப்பட்டது. இக்கோட்பாடு உலகளவில் பரவும் முன்னர்ப் பழைய கிரேக்க இலக்கிய ஆய்வில் கால்கொண்டிருந்த வீரநிலைக்கவிதை ஆய்வைச் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தினார். இவர் பாரியின் கோட்பாட்டினையும், 'கதைப் பாடகன்' நூலை மையமாகக் கொண்டு தனது ஆய்வினை நிகழ்த்தியுள்ளார். இதற்குப் பாரி கூறிய முறைப்படி வாய்ப்பாட்டு அமைப்பினை ஆராய 'முல்லைப்பாட்டை' எடுத்துக்கொண்டார். 'வாய்ப்பாடு' பற்றி வாய்மொழிப் புலவனுக்கு வசதியான படைப்பாக்கக் கூறுகளுள் தலைசிறந்தது வாய்ப்பாடாகும். ஆயத்தமின்றி உடனேப் பாடப்படும் வீரநிலைப்பாட்டு முழுமையும் அதனைச் சார்ந்திருப்பது. உண்மையில் எல்லா வாய்மொழிப் புலவர்க்கும் இது தவிர்க்க இயலாது. எழுத்தறிவுடைய கவிஞன் எழுதும் கவனமிக்க சொற்களுக்குப் போதிய காலமும், ஓரளவு அமைதியும் தேவைப்படும். ஆனால் வாய்மொழிப் புலவனுக்கு இவை தேவையில்லை. அவன் வீரநிலைக் கருத்தாக்கப் படைப்புக்களை விரைந்து பாட வேண்டும். ஆர்வமிக்க பொதுமக்களின் எழுச்சியின் நடுவே பாடல் சமைக்கவும் வேண்டும். அதே சமயம் அவன் தன் அவையினரை நிலையான ஈர்ப்பு நிலையில் வைத்திருக்க முடியாது. இந்த விந்தையான படைப்பாக்கச் சூழலில் பௌரா வாய்ப்பாடுகள் அவையினர், பாணர் என்ற இருவரிடமும் ஒரு செயல் மதிப்பு உள்ளவை என்கிறார். இவ் வாய்ப்பாடுகள் பல தலைமுறைப் புலவர்களைப் பயன்படுத்தப்படுகின்றன. அவர்கள் அவற்றைச் சோதனை செய்தனர். பலனுள்ளது எனக் கண்டனர். தம் தலைமுறையினருக்குச் செலுத்தினர். இவ்வாய்ப்பாடுகள் பாணர் தம் சேம வைப்பாக உருக்கொண்டன. அவர்கள் இடத்துக்குத் தக்கவாறு அவற்றைப்

பயன்படுத்தினர். இந்த வாய்ப்பாடு ஒரு கருத்தைத் தகுதியான சொற்களில் கூறுவதுடன் உரிய இடத்தை நிரப்புகிறது. முன்னும் பின்னும் அமைந்து தொடர்களோடு பொருத்திக் கொள்ள இசைந்து வாக்கியத்தை உருவாக்கின்றது. மொழி ஒப்புமை, கருத்துப் புலப்பாடு ஆகியவற்றைப் பயன்படுத்தி வாய்மொழிப் புலவன் மொழி ஒரு யாப்பு முறையுடையது என விளக்குகிறார். பாரி மற்றும் ஏ.பி.லார்டு ஆகியோர் சொற்கூட்டத்தை மட்டும் குறிக்க 'வாய்ப்பாடு' என்ற சொல்லைப் பயன்படுத்தியது அதிகத் தெளிவுடன் இருந்ததால் அறிஞர் உலகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இவை மறுவரல் தொடர்களைக் குறிக்காமல் சற்று ஆழமான பொருளை வலியுறுத்துவதால் பாரியின் 'வாய்ப்பாடு' விளக்கமானது ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பது உறுதியாகின்றது. ஒட்டுமொத்த அறிஞர்களின் கருத்துக்களை உள்ளடக்கி 'வாய்ப்பாடு' என்பதை இவ்வாறு கூறலாம்.

- பெயர்ச்சொல், வினைச்சொற்களின் செயல்பாடு
- அடைமொழிகளின் ஆளுமைகள்
- மாற்று வடிவங்கள், வகைமாதிரிகள் தன்மைகள்
- ஒரே தன்மைபெற்ற பல சொற்களின் தொகுதி
- பொதுவான ஒரு கருத்து + ஓர் அமைப்பு முறை + ஒன்றின் செயல்பாட்டின் தன்மையைக் கூறுவது.
- ஒருசொல் (அ) குழுவான சொற்கள் மீண்டும், மீண்டும் வந்து பொருள் தருதல் / தராமல் இருத்தல்.
- காரணமில்லாமல் தேவைப்படும் பொழுதுதெல்லாம் புலவனால் பயன்படுத்தப்படும் சொல் (அ) தொடர் (அ) சொற்களின் தொகுதியாகும்.

வாய்ப்பாட்டைக் கொண்டு ஆராயும்போது ஒரு நீண்ட வாய்மொழி மரபானது இனங்காணப்படுகிறது. பாரி வாய்ப்பாட்டுக் கோட்பாட்டை விளக்க முறையே இலியட்/ஒடிசி என்ற பெருங்காவியத்தில் முதல் '24' வரிகளை எடுத்து அவற்றின் ஒத்த வெளிப்பாடான 'மீண்டு வருதல்' அடைமொழி அமைப்பைக் காப்பியம் முழுவதும் வந்துள்ளதை நிறுவியுள்ளார். இவரைப் பின்பற்றி, தமிழில் கைலாசபதி சங்க இலக்கிய முல்லைப்பாட்டை மாதிரியாக எடுத்துக்கொண்டு முதல் (31) அடிகளைக் கொண்டு அதன் ஒத்த வெளிப்பாடானது சங்க இலக்கியம் முழுவதும் பயின்று வந்துள்ள முறையை நிறுவியுள்ளார். இதனை முறையே பின்பற்றிக் கம்பராமாயணத்தில் யுத்தகாண்டப்பகுதியில் இரு தொகுதியில் இடம் பெற்றுள்ள வாய்ப்பாடுகள் கட்டுரையின் அளவு காலச் சூழல் கருதி அமைக்கப்பெற்றுள்ளன.

சொல்நிலை வாய்ப்பாடு

'சொல்நிலை வாய்ப்பாடு' என்பது குறிப்பாகச் சொற்கள் வாய்ப்பாடுகளாக வரும் நிலை குறித்துப் பாரி - லார்டு கூறியுள்ள அடைமொழிகளான

1. அணிநய அடைமொழிகள் - (Ornamental Epithets)
2. தனிக் குறிப்பார்ந்த அடைமொழிகள் - (Particularised Epithets)

ஆகியவை விளக்கப்படுகின்றன. இவற்றில் முதல் அடைமொழி சூழலுக்கு எவ்விதத்திலும் தொடர்பில்லாமலும், பின்னைய அடைமொழி கதைப் போக்கிற்குத் தொடர்புடையதாகவும் இருக்கும். இந்த அணிநய அடைமொழிகளைப் பாரி - லார்டு

1. தனித் தன்மையான அடைமொழிகள் - (Distinctive Epithets)
2. பொதுமை நிலை அடைமொழிகள் - (Generic Epithets)

என மேலும் இரு வகையாகப் பிரிக்கின்றனர். இவற்றில் 'பொதுமை நிலை' அடைமொழியானது ஒரு வரியில் குறிப்பிட்ட இடத்தில் பொதுவாக வீரதீரப் பண்புக்கூறுகள் கொண்ட கடவுளுக்கோ/ வீரனுக்கோ பொருந்தி வருவதோடு அது சார்ந்த அனைத்து வர்ணனைச் செயல்பாடுகளுடன் சூழலுக்கு ஏற்ப யாப்பு, சந்த வடிவத்திற்கு ஏற்பப் பயன்படுகின்றது. தனித் தன்மையான அடைமொழிகளே பின்னர் அணிநய அடைமொழிகளாக ஆகின்றன. அவை யாப்பியல் அடிப்படையில் இனங்காணப்படும் போது ஒன்றை ஒன்று தழுவியவாறு பயன்படுத்தப்பட்டுள்ளன. (Edward,p.64) கம்பராமாயணத்தில் பெரும்பகுதி அடைமொழிகளே ஆளுமைக்கு உட்படுகின்றன. கம்பராமாயண யுத்த காண்டப் பாடல்களில் திரும்ப, திரும்ப வருகின்ற சொற்கள் அடை மொழியாகக் காணப்படுகின்றன. அவற்றைப் பொதுமை நிலை அடைமொழிகள், தனிக்குறிப்பார்ந்த அடைமொழிகள் என்ற வகையில் அடக்கி, பெயர், வினைச்சொற்கள் அடையாக வருவதை

1. ஓர் அடைமொழி பல பெயருக்கு வருதல்
2. ஒரு பெயர், வினைச்சொல்லுக்கு வரும் பல அடைமொழிகள்

எனப் பிரித்து இங்கு ஆய்வு செய்யப்படுகின்றன.

1. 'ஓர் அடைமொழி பல பெயருக்கு வருதல்' என்ற நிலையில் கம்பராமாயணமானது வாய்மொழி மரபினை அடியொற்றி அமைந்துள்ளது (oral poetry tradition). இவற்றுக்குக் கம்பராமாயணம் பல்வேறு நாட்டுப்புற வடிவங்களாக இருப்பதே காரணமாகும். இதில் ஓர் அடைமொழி, பல பெயர், வினைகளுக்கு வருதல் பரவலாகக் காணப்படுகின்றது. இத்தகைய 'பொதுமை நிலை' சொல்லாக்க அடைமொழியைப் பாரி (Genric) எனக் கூறுகிறார். இத்தகைய அடைமொழிகள் எல்லாக் காலங்களிலும் நிலைத்து நிலையான அடைமொழிகளாக ஓர் அமைப்புக்கு (Patterns) இடம்பெறுகின்றன எனலாம். இவை வாய்ப்பாட்டு அமைப்புக் கொண்டு ஒரு வடிவ நிலையையும், சொற்கூறுகளின் சிறப்பினையும் வெளிப்படுத்துகின்றன. உதாரணமாகக் கம்பராமாயணத்தில்

திரு
நெடு
மா

ஆகிய நிலையான பொதுமை நிலை அடைமொழிகள் பின்வரும் முறைகளில் அமைந்து வருவதைப் பார்க்கலாம்.

நெடுந்திரை - நெடிய கடல் (கம்ப.6063)
நெடுந்தோள் - நெடிய தோள் (கம்ப. 6065)
நெடுந்தவம் - நெடிய தவம் (கம்ப.6148)
திருமேனி - அழகிய மேனி (கம்ப.6064)
திருநாடு - அழகிய நாடு (கம்ப.6069)
திருநகர் - செல்வச்செழிப்புமிக்க நகர் (கம்ப.6074)
மாகடல் - பெரிய கடல் (கம்ப.9841)
மால்வரை - பெரிய மலை (கம்ப.9865)
மாமுகம் - கரிய முகம் (கம்ப.9895)

2. 'ஒரு சொல்லுக்கு வரும் பல அடைமொழிகள்' என்ற நிலையில் கம்பராமாயணத்தில் ஒரு பெயர்ச்சொல்லினைப் பல்வேறு அடையோடு கையாண்டுள்ள தன்மை வெளிப்படுகிறது. இதனை ஒரு வாய்ப்பாட்டுத் தன்மைபெற்ற வகைமாதிரியாகப் (Systemic Pattern) பயன்படுத்தப்பட்டுத் திரும்ப, திரும்ப இடம்பெறுகின்றன. அவை

பொன்தோள் - பொன் போன்றதோள் (கம்ப.6121)
திருநெடுந்தோள் - பெரிய நெடியதோள் (கம்ப.6121)
பெரியதோள் - பெரியதோள் (கம்ப.6288)
நூற்கடல் - வெண்மையான கடல் (கம்ப.6492)
பாற்கடல் - பரந்த கடல் (கம்ப.6493)
கார்க்கடல் - கருமையான கடல் (கம்ப.6494)

இத்தகைய அடைமொழிகள் பல்வேறு சூழல்களில் வர்ணனை வெளிப்பாடுகள், பாத்திரங்களின் தன்மை, நாடு, நகர்ச்சிறப்பு, வர்ணனை, படைச்சிறப்பு, விற்சிறப்பு போன்ற நிலைகளில் வெளிப்பட்டுள்ளன என்பது தெளிவுபடுத்தப் படுகின்றது.

தனிக்குறிப்பார்ந்த அடைமொழிகள்

ஒரு யாப்பில் ஒரே ஒரு நபர்க்கு மட்டுமே பயன்படுத்தப்பட்டு இருப்பின் அவை கவிஞனால் மட்டுமே உருவாக்கப்படாமல் அவை மரபு சார்ந்தவையாக இருப்பதைப் பாரி உரைக்கிறார். இத்தகைய தனித்தன்மையான அடைமொழிகள் கம்பராமாயணத்தில் பாத்திரங்களின் ஆளுமை, பொதுச் சிறப்பாகக் கையாளப் படுகின்றன. உதாரணமாக,

கணவனை இழந்த சூர்ப்பணகையைக் கம்பர் - விரிகுழல் உங்கை (சூர்ப்பணகை) என உரைக்கிறார். சீதையின் கற்புச் சிறப்பினை அவளுக்கே உரிய சிறப்புத்தன்மையை எடுத்து இயம்பும் போது அவை தனித்தன்மையான அடைமொழியாக வெளிப்படுகின்றன. அவை,

சீதை
- தெய்வக்கற்பினள்
- கற்பினள்
- சானகி கற்பினள்

வாய்ப்பாட்டுக் கூறுகளுள் 'மாற்று வடிவம்' என்பது 'பதிலீடு' ஆகும். ஹோமரின் காவியத்தை ஆய்வு செய்த பாரி பல மாற்று வடிவங்களைக் குறிப்பிட்டுள்ளார். இதனைப் பதிலீடு (அ) மாற்று அமைப்பாக்க முறை என விளக்குகிறார். ஒரு பெயர்ச் சொல்லானது யாப்பு, சந்த முறைகளுக்கு ஏற்பப் பல்வேறு வகையான வேற்றுமை நிலைகளில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இத்தகைய வாய்ப்பாட்டு அமைப்பினைக் கம்பராமாயணத்தில் காண முடிகின்றது. பின்வருவன வற்றைக் கூறலாம்.

அரக்கர்
- நிருதர்
- நிசாசரன்
- தீயவர்
- தானவர்
- அவுணர்

வில்
- தனு
- ஆவம்
- வாளிகள்

மலை
- உயர்கிரி
- கல்
- குவடு
- மால்வரை
- ஓங்கல்
- குன்றும்
- மிகுஷி

தொடர்நிலை வாய்ப்பாடு

'தொடர்நிலை வாய்ப்பாடு' என்ற பாரியின் அடைமொழி அமைப்பானது ஒரு பெயரடையோ (அ) வினையடையோ வாய்ப்பாடாகத் தொடர்களில் பாத்திரத்தின் பெயர்கள், முக்கியமான செயல்கள், இடம், காலம் மற்றும் அவை திரும்ப, திரும்ப இடம் பெற்றுக் கருத்தைப் புலப்படுத்துகின்றன. ஒரு தொடரில் அரையடி அமைப்பாக வாய்ப்பாடு இடம் பெறுகின்றது.

'வினோ பிஜே கிரால்ஜெவிச்சு மார்க்கோ'- (Vin pije Kraljevicu Marko)[1] இதில் கிரால்ஜெவிச்சு மார்க்கோ என்பது பாத்திரத்தின் பெயர் ஒரு முழுவரியில் (அ) தொடரில் பாதியைப் பெறுகின்றது. 'அரசனின் மகன் மார்க்கோ' என்ற பொருளைத் தருகின்றது. பாரி பாத்திரத்தின் பெயரடை அமைப்பினை

விளக்குகிறார். கிரடு (Creed) வாய்ப்பாடு என்பது மீண்டும், மீண்டும் வரக்கூடிய தன்மை பெற்ற நீண்ட தொடராக இருக்கலாம் (அ) சிறிய கூறுகள் கொண்ட மூன்று அசைபெற்ற தொடராகவும் இருக்கலாம்.[2] ஆஸ்டன் வாய்ப்பாடு என்பது ஒரு சொல், இரண்டு சொற்களைக் கொண்டது. அரைவரி (அ) முழுவரித் தொடராகவும் இரண்டு நான்கு (அ) அதற்கு மேற்பட்ட அசைச்சொல்லைக் கொண்டது. நீலக்கடல் (Blue Sea) கருப்புச்சாவு (Black Death) போன்ற தொடர்களில் பெயரடையும் காணலாம். இத்தகைய தொடர்கள் ஓர் ஆள் அல்லது ஒரு பொருளுடன் தொடர்புறுத்தப் படலாம். இதனை அடையடுத்த தொடர்கள் என்பர். இத்தொடர்கள் திரும்ப, திரும்பக் காரணமின்றி வரலாம் எனச் சி.எம்.பௌரா கூறுகிறார். வாய்ப்பாட்டுக் கூறுகளுள் ஒன்றான 'பதிலீடு' செய்தல் மாற்றமிக்கது. லார்டு, இளம்புலவன் ஒருவன் தன் பயிற்சிக் காலத்திலேயே முன்னமைந்த வாய்ப்பாடுகளின் துணையில் பாடல் இயற்றுவான் என்பார். அவன் முதிர்ச்சி அடையும் போது, அவன் வாய்ப்பாடுகளைக் கற்றுக் கொள்வது படிப்படியாகக் குறைந்து, முழு அளவில் ஒப்புமையுடைய தொடர்களைப் படிப்படியாகப் பதிலீடு செய்து கொள்கிறான். பதிலிச் சொற்களால் (அ) தொடரால் வாய்ப்பாடுகளைப் பயன்படுத்தி வரிகளை அமைத்து வாய்மொழிப் பாடல் பாடப்படுகின்றன.[3] ஒரு வாக்கியத்தின் முக்கியமான சொற்களை இன்னொரு சொல்லால் பதிலீடு செய்ய முடியும். இதனைப் பாரி ஒழுங்கு (System) எனக் கூறுகிறார். கம்பராமாயணத்தில் இத்தகைய தொடர்நிலை வாய்ப்பாட்டு வரிகள் காணப்படுகின்றன.

தலையில் கொண்ட தடக்கையினான் (கம்ப.6209)

தடமலர் கண்ணனைத் தடக்கை கம்மி (கம்ப.6420)

இத்தொடர்கள் 'இரணியன் வலிமையைச்' சுட்டுவதாகக் கம்பரால் கையாளப் பெறுகின்றன. மேலும்,

வடதிசை வயங்க ஒளி வாயில் வைகுவோர் (கம்ப.6535)

தென்திசை வாயிலின் வைகும் தீயவர் (கம்ப. 6537)

கீட்டிசை வாயிலின் வைகும் கிழவர் (கம்ப.6538)

இத்தொடர்கள் 'திசைகளிலுள்ள மக்களின் பண்புகளைச்' சுட்டி நிற்கின்றன. இங்குத் திசைகள் வேறுபட்டு இருப்பினும் சொல், தொடர், ஓசையமைப்பு யாப்பானது ஒன்றி வந்துள்ளது. இவை 'பதிலீடு' ஒழுங்கு முறையாகக் கம்பராமாயணத்தில் வெளிப்படுகின்றன.

கருத்துநிலை வாய்ப்பாடு

கதைப்பாடகன் என்ற நூலில் லார்டு அடிக்கருத்து என்பது மரபுசார்ந்த பாடல்களின் வாய்ப்பாட்டுப் பாணியில் சொல்லப் படுகின்ற கதையானது தவறாமல் ஒரு தொகுப்பான கருத்துகளைக் கொண்டுடிருக்கும். மேலும் இவை சொற்களைக் கொண்டு நிகழ்த்தப்படுவதாயினும் எந்த ஒரு நிலைத்த சொல் தொகுப்புகளைக் கொண்டே ஒருங்கமைக்கப்பட்டு ஒன்றிலிருந்து மற்றொரு கருத்திற்கு இயல்பாக இட்டுச் செல்கின்ற விதமாய்ப் பாடல்கள் அமைக்கப்

பட்டிருக்கும் என்கிறார். யூக்கோஸ்லோவியாவிலுள்ள தென்சால்விக் (South Salvic) பகுதியில் வழங்கப்பட்ட வாய்மொழிக் காப்பியங்களில் வருகின்ற குதிரைகள் அலங்கரிப்பு பற்றிய வர்ணிப்புகளோ, நாயகன் உடைதரித்தல் பற்றிய வர்ணிப்புகளோ (அ) படைக்கலன் சிறப்பு, பாக்தாத் பாடலில் திருமணம் பற்றிய கருத்துக்கள், இவை பொதுவான அடிக்கருத்தாக இருப்பதைக் கூறுகின்றார். எனவே அடிக்கருத்துகள் வாய்ப்பாட்டின் அடிப்படை மையக் கூறாக அமைந்து இருப்பதை உணரமுடிகிறது. **1949** - இல் லார்டு அவரது ஆய்வு நூலான கதைப்பாடகன் என்பதன் முன்னுரையில் வாய்மொழி அடிக்கருத்துகள் பற்றிய ஆய்வாகப் பழம் ஆங்கில வாய்மொழி இலக்கிய ஆய்வுகளைக் கைக்கொண்டு அடிக்கருத்திற்கு விளக்கம் தருகிறார். அவை அடிக்கருத்தானது நிலைநிறுத்தப் பட்டுள்ள சொற்களின் தொகுப்பால் அமையக் கூடியதுமன்று; தனிக் கருத்துக்களின் தொகுப்புக்களாக அமையக் கூடியதுமன்று; மாறாக ஒரு கருத்திலிருந்து மற்றொரு கருத்திற்கு இயல்பாக வழி நடத்திச்சென்று பாடகனின் மனதில் அமைந்துள்ள ஒரு முழுமை நிலையை நோக்கிய செயல்பாட்டிற்கு இட்டுச்செல்லும் பாடல்களின் தொகுதிகளாய் உள்ளன. மேலும் அவர் அடிக்கருத்தானது தன்னளவிலும், பிற கூறுகளோடு சேர்ந்து இணைந்து ஒரு முழுமைநிலைப்பட்ட பாடலின் தன்மையோடு வாய்மொழிக் கவிதைக்கு ஏற்ற ஒன்றாக முழுமையாகப் பாடகனால் நிகழ்த்தப்படுகின்ற பாடல் தொகுப்பாகும் எனக் கூறிச் செல்கிறார்.[4] ஹார்வேர்டு பல்கலைக்கழகப் பேராசிரியரான ஜான் மில்ஸ் போலே மீண்டும், மீண்டும் வந்து உரத்து ஓதப்படுகின்ற விவரணைகளின் கருத்துக்களும் அடிக்கருத்து எனவும், ஒரு குறிப்பிட்ட நிகழ்வுக்கு உரித்தானவையாய் இல்லாமல் சொல்லுக்குச் சொல் மீண்டும் வருவதாக அன்றிக் குறிப்பிட்ட வாய்ப்பாடுகள் ஒரு கதை நிகழ்ச்சிக்கு (அ) வர்ணிப்பிற்குக் கட்டமைப்பின் அடிநாதமாய் விளக்கக்கூடியதாய் வருகின்ற கூறுகளாவது அடிக்கருத்து என்கிறார். மேலும் அவர் வாய்மொழி மரபின் சொல் மரபு நிலைக்கு ஏற்ப வருகின்ற வரிகள், வரியின் பகுதியானது கொண்டு வாய்ப்பாடு வருமானால் அதன் அடிக்கருத்தானது கருத்துச்செறிவு நோக்கத்திற்கு ஏற்பக் கதைகளின் அளவிற்கோ (அ) கதையாடல் நிகழ்ச்சிக்கோ ஒத்திசைவாய் அமைந்து வருவதாகக் கூறுகிறார். [5] நெகளர் (Nagler) வாய்ப்பாட்டை வாய்மொழிக் கவிதையின் பாரம்பரிய அடிக்கருத்துக்களினால் கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நிலைத்த சொல் தொடர் அமைதியாகும்.[6] இதனால் மரபுவழி வாய்மொழிப் பாடல்களில் எடுத்துரைப் பதற்காக மீண்டும் மீண்டும் வரும் ஒரு கூறு அல்லது வருணனை என்பது தெரியலாம். தமிழ்ச் சமூகக் கதைப்பாடல்களில் காணப்படும் முப்பத்திரண்டு அடிக்கருத்துகள் 106 எனச் சு.சக்திவேல் தமது 'நாட்டுப்புறவியல் ஆய்வு' என்ற நூலில் வகைப்படுத்திக் கூறியுள்ளார்.[7] கைலாசபதி தமிழில் வீரநிலைப் பாடல்களை ஆராய்ந்து புலவர்கள் பாட்டின் தொடக்க அமைப்பு, இடையில் உள்ள தொடர்களின் ஆளுமைத் தன்மையானது அது பாடலில் மீண்டும் மீண்டும் குறிப்பிட்ட இடங்களில் வந்து புலப்படுத்தப் புலவனால் பயன்படுத்தப் படுகின்றன என உரைப்பதோடு தொடக்ககால அடிக்கருத்தாக உரிப்பொருள்களின் தன்மையை விளக்கியுள்ளார். பின்னர்த்துறை, பாட்டின் சூழல்களையும் அடிக்கருத்து என உரைக்கிறார். இதனால் ஒரு கருத்தை மீண்டும் மீண்டும் கூறும் போது

பின்பற்றப்படும் ஒரே மாதிரியான தொடர் அமைப்புக்கள் கருத்து நிலை வாய்ப்பாடுகளாக மாறும் எனலாம். இத்தகைய கருத்து நிலை வாய்ப்பாடுகளாகக் கம்பராமாயணத்தில் பல காணப்படுகின்றன. சான்றாக

வானரப் பெருஞ் சேனையை (கம்ப. 9436)
கனைக்கடல் பெருஞ் சேனையைக் கலந்தது காணா (கம்ப. 9437)
ஏவி அப்பெருஞ்சேனையைத் தானும் வேட்டு எழுந்தான் (கம்ப.9438)
அரக்கர் தம் தானை (கம்ப.9456)
வாழி மற்று அவன் மூல மாத்தானை முன் வருக (கம்ப. 9467)
கலக்கத்தால், கவியின் சேனை (கம்ப.9495)
இப்புறத்து இனைய சேனை (கம்ப. 9496)
பேருதிர் சேனை காக்க (கம்ப. 9497)

ஆகிய அரக்கர் சேனையின் தன்மையையும், வானரச் சேனையின் இயல்பினையும் சேனைத் தலைவர்களின் மாண்பினையும் இவற்றில் காணலாம். இதில் 'படைப்பல மாட்சி' என்ற கருத்தை வெளிப்படுத்துவதாக வாய்ப்பாட்டுத் தொடர்கள் வருகின்றன. மேலும் இராவணன், வீடணன், இலக்குவன் ஆகியோருக்கு இடையிலான போர் நிகழ்வினை உரைக்கும் போதும், அம்பு தொடுக்கும் போதும், 'மோகப்படைச் சிறப்பு' வெளிப்படுகிறது 'மோகம்' என்பது வடிவமின்றிச் செல்லும் மந்திரச் சக்தியாகும். இத்தகைய தன்மைகள் இங்கு வெளிப்படுகின்றன. எனவே கம்பராமாயணம் ஏட்டிலக்கியமாக வடிவம் பெற்றாலும் வாய்ப்பாட்டுக் கோட்பாட்டை அடியொற்றி வாய்மொழிக் கூறுகளைக் கொண்டது என்பதை உணரமுடிகிறது.

துணை நூல்கள்

1. Lord,B. Albert, The Singer of Tales, London, 1960, p.34.
2. Creed, Oral tradition, 'Old English Studies', The Making of an Anglo Saxon Poem, 1959, p.446, 447.
3. Lord, B. Albert, The Singer of Tales, London, 1960, p.38.
4. Lord, B, Albert, The Singer of Tales, London, 1960, p.65.
5. John Miles Foley. The Theory of Oral Composition History and Methodology, London, 1985, p.58.
6. Formulic Diction 2008.
7. சக்திவேல், சு., நாட்டுப்புற இயல் ஆய்வு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1983.

விபுலானந்த அடிகள் 19-07-1947 இல் இவ்வுலகை விட்டு மறைந்தார். 1948இல் வெளிவந்த ஈழமணிப் பத்திரிகையில் கவியோகி சுத்தானந்த பாரதியார் பின்வருமாறு அடிகளாரை நினைவுகூர்கிறார்.

"சங்கத் தமிழ் கேட்க வேண்டுமானால் இருவரிடம்
கேட்க வேண்டும். ஒருவர் பெரும் பேராசிரியர்
சாமிநாதையர். மற்றொருவர் விபுலானந்தர்"

அக்காலத்தில் தமிழகத்தில் எண்ணற்ற தமிழறிஞர்கள் இருந்தும் சங்கத் தமிழில் சிறந்தவர்கள் தமிழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் சாமிநாதையர் மற்றும் இலங்கையைச் சேர்ந்த விபுலானந்தர் மட்டுமே என்னும் புகழாரம் அடிகளாருக்கு மட்டுமல்ல, இலங்கைத் தமிழருக்கும் பெருமை தேடித்தந்தது.

இந்தச் சந்தர்ப்பத்தில் சுவாமி விவேகானந்தரைப் பற்றி 1893இல் அமெரிக்காவில் வாழ்ந்த தலை சிறந்த தத்துவஞானி ஜே. எச். ரைட் என்பவர் தெரிவித்த கருத்தை இங்குக் கூற விரும்புகிறேன்,

"அமெரிக்க நாட்டின் நல்லறிஞர்கள் அனைவருமே
ஒன்று திரண்டு நின்றாலும், கல்வியில் சுவாமி
விவேகானந்தருக்கு ஒப்பாக மாட்டார்கள்"

என அன்று அவர் புகழாரம் சூட்டினார்.

3. சமயப்பணி

இலங்கையில் தோன்றிய பல தமிழறிஞர்கள் தமிழகத்திற்குச் சென்று சைவ மடங்களிற் தங்கி, நூலறிவைத் துறைபோகப் பெற்றனர். மேலும் அவர்கள் பல நூல்களை இயற்றியும் அச்சிட்டும் வெளியிட்டனர். அவர்களில் சிவஞான சித்தியார்க்கு உரை எழுதிய ஞானப்பிரகாசர்: தமிழ் நூல்களைப் பிழையறப் பதிப்பித்த ஆறுமுகநாவலர்; தமிழ் இலக்கிய வரலாற்றை அறிய முதலில் வழிகாட்டிய சபாபதி நாவலர்; தமிழ் அகராதிக் கலைப்புலவர் கதிரவேற்பிள்ளை முதலியோர் சிறந்து விளங்கினர். இவர்கள் அனைவரையும் விட ஒரு படி மேலே செல்கிறார் யாழ் நூல் என்னும் அரிய இசைத் தமிழ் நூலையும், மதங்க சூளாமணி முதலிய நாடகத் தமிழ் நூலையும், மேலும் பல நூற்றுக்கணக்கான சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், கவிதைகளையும், தமிழ் உலகிற்குத் தந்த சுவாமி விபுலானந்தர்.

இராமகிருஷ்ண சங்கம் பல ஆன்மீக ஞானிகளை உலகிற்கு அளித்திருந்தாலும், வீரத் துறவி விவேகானந்தருக்கும் தமிழசைத் துறவி விபுலானந்தருக்கும் ஒப்பாரும் மிக்காரும் இலர் என்றே கூற வேண்டும்.

4. இசை ஆராய்ச்சி

"சிலப்பதிகாரம் வெளிவந்த அந்த ஆண்டிலே யானும் பிறந்ததினாலே பள்ளியிற் படிக்கும் காலத்திலே, மூத்தோர் கையிலே அந்நூற் பிரதியிருக்கக் காண்பதும், என் கையினாலே அதனைத் தீண்டுவதும் எனக்குப் பேருவகை கையினைத் தரும் செயல்களாக இருந்தன" என்று அடிகளே கூறுகிறார். (யாழ் நூல் ப.29)

> அஃதன்றியும் ஈழ நாட்டின் குணபாலிலே என் முன்னோர்க்கு உறைவிடமாகிய காரேறு தீவிலே கடல் சூழ் இலங்கைக் கயவாகு மன்னன் வழிவந்த மன்னர்களாலே நிறுவப்பட்ட பழைமையான கண்ணகியார் கோயில் ஒன்று உள்ளது. அதன் வழியாகவும் சிலப்பதிகாரத்தின் மீதுள்ள ஆர்வம் பெருகியது

என்கிறார் அடிகள் (யாழ் நூல் ப.29). தமிழகத்தில் புகுந்த பிற மொழிகளின் ஆதிக்கத்தால் தமிழ் இசை தேய்பிறையானது. அத்துடன் யாழ் கருவியும் தமிழகத்தில் இருந்து மறைந்து போயிற்று.

தமிழிசைக்கு ஏற்பட்ட இந்த அவலத்தை விபுலானந்த அடிகள் மிகவும் வேதனையோடு தமக்கே உரிய இனிய தமிழ் நடையில் யாழ் நூலில் பின்வருமாறு விளக்குகிறார்.

> "முன்னாளிலே பாணன் கையிலும் பாடினி கையிலும் இருந்த யாழ்க் கருவியானது, இளங்கோவடிகள் காலத்தில் இசையாசிரியர் கையிலும் நாடக மகள் கையிலும் போய்ச் சேர்ந்து விட்டது".
>
> அதற்கேற்ப அக்கருவியும், சித்திரப் படத்துட் புக்குச் செழுங்கோட்டின், மலர் புனைந்து, மைத்தடங்கண் மணமகளிர் கோலம் போல் வனப்பெய்தி விளங்கியது. ஆளுடைய பிள்ளையார் காலத்தில் தெய்வம் ஈந்த பொற்பலகை மீதேறி அன்பருள்ளத்தை உருக்கிய அருட்கவியாயிற்று.
>
> கொங்குவேளும் திருத்தக்கதேவரும் நூலெழுதிய காலத்தில் அரசிளங்குமரிகள் கையேறி அவர் விரும்பிய காதலரை அவருக்கு அளிக்கும் கருவியாயிற்று. பெருமை பொருந்திய யாழிசைக்கருவி மறைந்ததோடு அதன் வழி எழுந்த பண்மரபும் மறைந்து போயிற்று. யாழ் வாசித்த பாணனும் தன்தொழிலை இழந்துவிட்டான்

என மனம்மிக வருந்துகிறார் அடிகள். (யாழ் நூல் ப. 38)

எனவே தமிழ் இலக்கியத்தைப் பத்து ஆண்டுகளுக்கு மேலாகத் துறைபோக ஆய்ந்து அதில் பொதிந்து இருந்த கருத்துக்களின் அடிப்படையில் பண்டைய யாழ்பற்றிய விபரங்களை அடிகளே அரும்பாடுபட்டுத் தொகுத்தார். விபுலானந்த அடிகளின் பெருமுயற்சியால் யாழ் மீண்டும் தமிழரின் நினைவுக்கு வந்தது.

அடிகளாரின் நீண்ட நாளைய இசை ஆராய்ச்சிப் பணி 1947இல் (யாழ் நூல்) என உருப்பெற்றது. கரந்தைத் தமிழ்ச்சங்கத்தின் ஆதரவில் திருக்கொள்ளும் புதூர் ஆலயத்தில் 20-06-1947, 21-06-1947 ஆகிய இரு தினங்களிலும் யாழ் நூல் அரங்கேற்ற விழா நடந்தேறியது.

5. தமிழ்ப்பணி

மதுரைத் தமிழ்ச்சங்கப் பண்டிதர் தேர்விலும் வெற்றிபெற்று இலங்கையின் முதலாவது மதுரைச் தமிழ்ச்சங்கப் பண்டிதர் என்னும் பெருமை பெற்றார்.

1919இல் தமது சொந்த முயற்சியில் கற்று இலண்டன் பல்கலைக்கழகம் நடத்திய பிஎஸ்.சி. தேர்விலும் சித்தியடைந்தார். 1924இல் சென்னை சென்ற மயில்வாகனனார் இராமகிருஷ்ண சங்கத்தில் சேர்ந்து பிரபோத சைதன்யர் எனும் பிரமச்சரிய நாமம் பெற்றார். அதே ஆண்டு சித்திரைப் பௌர்ணமியில் துறவறம் மேற்கொண்டு சுவாமி விபுலானந்தர் என்னும் பெயர் பெற்றார்.

1925இல் இலங்கை திரும்பிய அடிகளார் கல்லடி உப்போடையில் சிவானந்த வித்தியாலயமும் காரை தீவில் சாரத மகளீர் கல்லூரியும் மற்றும் ஆதரவற்றோர் மாணவ, மாணவியர் இல்லங்களும் நிறுவி அளப்பரிய கல்வித்தொண்டு செய்தார். பின்பு யாழ்ப்பாண வைத்திஸ்வர வித்தியாலயத்தையும், திருகோணமலை இந்துக்கல்லூரியையும் இராமகிருஸ்ண சங்கத்தோடு இணைத்ததோடு நில்லாது மலையகத்திலும் பாடசாலைகள் அமைத்து சகலருக்கும் சிறந்த கல்வித் தொண்டாற்றினார்.

1931இல் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் 1943இல் இலங்கைப் பல்கலைக்கழகத்தில் முதல் தமிழ்ப் பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

6. வர்க்கஒடுக்குமுறைக்கு எதிராக நின்றவர்

விபுலானந்த அடிகளார் மனிதாபிமானம் மிக்கவர். ஆதித் தமிழ்க்குடியின் அறவழியில் வந்தவர். பாதியில் முளைத்தெழுந்த சாதிக்கொடுமைதனைச் சாடித்தகர்த்தெறிந்த சாதனைத் தமிழன் அவர். அன்னார் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்த காலத்தில் ஒடுக்கப்பட்ட ஆதி திராவிடர் வாழ்ந்த திருவேட்களம் என்னும் சேரிக்குச் சென்று பாலர் படிக்கப் பள்ளிகள் அமைத்தார். முதியோர் கல்விக்கூடங்களும் ஏற்படுத்தினார். இதையறிந்த உயர்சாதிப் பார்ப்பனர்கள் சுவாமி மீது ஆத்திரம் கொண்டனர். குடிப்பதற்குக் கூட நன்னீர் தர மறுத்தனர். இதனால் அடிகள் பல காலம் உவர்நீரையே குடித்து வாழ்ந்தார்.

7. கலைச்சொல்லாக்கம்

தமிழ்நாடு நடுவண் அரசின் உதவியுடன் முதன்முறையாகத் தொடங்கப்பட்ட கலைச்சொல்லாக்கக் குழுவில் ஓர் அங்கத்துவராக இருந்து அளப்பரிய சேவை செய்தவர் நம் சுவாமி விபுலானந்தர். கலைச்சொல்லாக்கத்தின் மூலமாகத் தமிழ்மொழியும் ஏனைய அறிவியல் துறைகளும் வளர்ச்சியடைவதற்கு வழிகோலின. குறிப்பாகத் தொழில்நுட்பப் பாடநெறிகளின் கற்றல் செயற்பாடு களுக்கும் கலைச்சொல்லாக்கம் பேர் உதவி புரிந்தது எனலாம்.

விபுலானந்த அடிகளுடைய கல்லறையில் அவரே இயற்றிய இனிய கவிதை பொரிக்கப்பட்டுள்ளது. மிகப்பொருத்தமாகும். இறைவனின்திருப்பாதங்களில் சூட்டப்பட வேண்டிய மலர்கள் பற்றி இக்கவிதையில் பாடுகிறார் அடிகள்.

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்ந்த மலர்எதுவோ
வெள்ளை நிறப் பூவும் அல்ல வேறெந்த மலரும் அல்ல
உள்ளக்கமலம் அடி உத்தமனார் வேண்டுவது

அடிகள் புகளுடம்பு மறைந்தாலும் அவர் முத்தமிழுக்கு ஆற்றிய பணிகள் இந்த வானகமும் வையகமும் வாழும்வரை வண்டமிழும் சிவமதமும் நிலைக்கும் வரை என்றும் நிலைத்திருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

துணை நூல்கள்.

- பொன் கனகரெத்தினம், *(2003)*, பேராசிரியர் சுவாமி விபுலானந்தர், *(2003)*, விபுலம், சுவாமி விபுலானந்த சங்கம்(கனடா).
- *பேராசிரியர், (1947), யாழ் நூல்.*
- *கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சு(1997), சுவாமி விபுலானந்தரின் ஆக்கங்கள், தொகுதி வடகிழக்கு மாவட்டம், திருக்கோணமலை.*
- குன்றக்குடி பெரியபெருமான் தரவிறக்கம். *http//:www.tripod.com/ kanaga_sritharan/ vipulanandar.htmý*
- Oeuvre of Swami Vipulananda (1892-1947) | Ilankai Tamil Sangam sangam.org/oeuvre-swami-vipulananda-1892-1947.
- *Swami Vipulananda - Wikipedia, the free encyclopedia en.wikipedia.org/ wiki/wami_Vipulananday.*

சுந்தரரின் உளப்பாங்கு

முனைவர் ரெ. சொர்ணபிரபா
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

களப்பிரர் காலத்திற்குப் பின்னே பக்தி இயக்கக் காலம் தோன்றியது. சமண, பௌத்த சமயங்கள் வலுத்திருந்த காலம். தமிழ்ச் சைவம் பின்தள்ளப்பட்ட நிலையில் இருந்த காலம். ஞானசம்பந்தரின் வரவுக்குப் பின்னே சைவ சமயம் புத்தாக்கம் பெற்றது. அவரைத் தொடர்ந்து 7ஆம் திருமுறை கண்ட சுந்தரர் சைவ சமய வளர்ச்சியில் ஆற்றியுள்ள பணி அளப்பரியது. ஆடல் வல்லானிடத்திலும், தமிழ்ச் சைவ சமயத்திடமும் அவர் கொண்டிருந்த பிடிப்பும் ஆழமானது.

இறைவனின் அருளை விளக்கித் தன்னேரில்லாத் தலைவனாகிய சிவனின் திருவடிகளின் கீழ் மக்களைச் சேர்த்து அவர்களுக்கு முத்தி அளிப்பதே கடமை என்ற வகையில் மூவர் முதலிகளில் ஒருவராகிய சுந்தரரும் எண்ணினார். அதன் வெளிப்பாடே அவருடைய தேவாரப் பாசுரங்கள். அத்தேவாரப் பாசுரங்கள் வழியாகச் சுந்தரரின் உளப்பாங்கை உணர்த்துவதே இக்கட்டுரையின் நோக்கமாக அமைகிறது.

இறைவனிடத்து ஆட்படும் இறை நேயர் அவரவர் அன்பிற்கேற்ப இறைவனை மானசீகமாகப் போற்றுவதென்பது பக்தி இயக்கத்தில் பொது மரபு. ஞானசம்பந்தர் இறைவனைத் தந்தையாகவும், சமயத் தலைவராகவும் கண்டார். நாவுக்கரசர் ஆடல் வல்லானைக் குருவாகவும், சைவ சமய முதற் கடவுளாகவும் கண்டார். இவர்களைப் போலச் சுந்தரர் இறைவனைத் தோழனாகவும், பிறவிப் பிணியகற்றும் பேராளனாகவும் கண்டார். சுந்தரர் தேவாரம் இசையோடு இசைக்கப்படுகிறது. நாதமும், கீதமும் இணைந்து சிவபரம்பொருளைப் போற்றும் தன்மையது. சுந்தரர் இறைவனை எத்தனையோ நிலைகளில் கண்ட போதும் கீழ்வரும் நிலைகளில் இறைவனை அவர் கண்டது முறையே அவரது உளப்பாங்கினை வெளிப்படுத்தும்.

(1) இறைவன் அருளாளன்
(2) இறைவன் அன்பானவன்
(3) இறைவனை உற்றவனாகக் கருதுதல்
(4) இறைவனை ஆசானாகக் கருதுதல்
(5) இறைவனை எல்லாம் கடந்தவனாகக் காணுதல்
(6) இறைவனைப் பெருங்கருணைப் பேராளனாகக் கருதுதல்
(7) இறைவனைப் பாதகத்தை ஒழிப்பவன் எனக் கருதுதல்

என்ற அமைப்பிலே சுந்தரர் உளப்பாங்கைக் காணுங்காலை அவர் சமயக் குரவராய் விளங்குவதற்கான பேற்றை அவர் பக்திப் பனுவல் தந்துள்ளதைக் காணலாம். அது குறித்து இனி விரித்துக் காணலாம்.

1. இறைவன் அருளாளன்

உலகில் மனிதன் தன்னையொத்த பிற மனிதரிடத்துக் காட்டப்படும் அன்பானது தந்தை மகனிடத்தும், மகன் பெற்றோரிடத்தும், கணவன் மனைவியிடத்தும், மனைவி குடும்பத்தாரிடத்தும் இவ்வாறாக ஒருவர் தொட்டு ஒருவர் செல்லும் வாய்ப்புடையது. அன்பு கலந்த நெஞ்சில் அழுக்காறு, அவா, இன்னா போன்ற தீய பண்புகள் இருக்கா. ஆனால் இந்த அன்பை ஒருவரிடத்து அதிகமாகக் காட்டும்போது அது பாசமாக மாறித் துன்பத்திற்கு வழிவகுக்கவும் கூடும். இதனையே மிக ஆழமாகக் காட்டினால் அன்பு - பாசம் - வெறி என்ற நிலையிலே மாறித் துன்பங்களுக்கெல்லாம் காரணமாகி விடுகிறது. இதனையே சைவ சமயம் மும்மலம் அல்லது முக்கட்டு எனக் குறிப்பிடுகிறது. ஒரு மனிதரிடத்தில் அமைந்துள்ள துன்பத்திற்குக் காரணமான அன்பை இறைவன் அவனது அன்பினால் ஆட்கொள்கிறான். துன்ப நிகழ்விலிருந்து, பற்றிலிருந்து விடுபட்டு இறைவன் காட்டும் அன்பானது அருள் எனப்படும். மேலும் மூன்று வினைகளையும் தீர்க்கக் கூடியவன் இறைவன் என்பதால் அவனை அருளாளன் என்கிறோம்.

சித்தன் சிவமாகப் பெற்ற மெய்யடியார்கள் செம்பொருளாகிய சிவத்தை இடைவிடாது சிந்திப்பதற்கும், உலகியல் பொருளை நாடாமல் அமைவதற்கும் இறைவனின் அருள் தக்க துணையாக நிற்கிறது. அடியவர் தம் உள்ளம், உரை, செயல்கள் யாவும் உலகியல் பொருந்தி நிற்கும் இடத்தும் இறைவன் திருவருள் வழியே இயங்கிப் பிற உயிர்களையும் நன்னெறிப்படுத்தும் இயல்பினதாக அமையும்.

ஆற்றின் வழியாகச் சென்று கடலில் கலந்து உவர்த்தன்மை பெற்ற நீரானது கடலோதத்தால் மீளவும் ஆற்று நீருடன் கலந்த பொழுது அந்நீரையும் உவர்ப்புச் சுவையுடையதாகச் செய்வது போன்று சித்தம் சிவமாகப் பெற்ற ஞானிகளது உணர்வு இறையருள் பெருக்கால் உலகியலிலே மீளவும், கலக்க நேரிட்டால் அக்கலப்பு பாசப்பிணைப்புடைய மக்களுடைய மன மாயை, கன்மங்களையும் நீக்கி நலஞ்செய்யும் ஆற்றல் உடையதாக அமைகிறது.[1]

மூவர் முதலிகளில் இறைவனை அருளாளர் என முதற் பாடலிலே அழைத்த பெருமை ஆரூரர்க்கு உண்டு. பித்தனாக இறைவனை விளித்தாலும் அதற்கு விளக்கம் சொல்லும் கி.வா.ஜ.வின் சிந்தனை இங்கு எண்ணற்பாலது.

இறைவன் அடியார்களை ஆளும் திறத்தில் பித்தாக நிற்பதும் அவர்கள் (அடியார்கள்) தம்மை மறந்தாலும் அவர்களை ஆட்கொள்வதற்கு உந்துவதும் இம்மை மறுமைப் பயன்களை ஈவதும் அடியார்களை, கருணையால் ஒறுத்துத் திருத்துவதும் ஆகிய கருணைச் செயல்கள் இறைவர்க்கே உரியதாகும்.[2]

நம்முடைய பக்தியின் வேகத்தைக் காட்டிலும் அடியார்கள் நம்மை ஆட்கொள்ள வேண்டும் என்று இறைவன் எண்ணுவார். அவனுடைய அவதாரங்களும் அவன் செய்கின்ற திருவிளையாடல்களும், உலக உயிர்களெல்லாம் உய்ய வேண்டும் என்ற கருணைதான். அது ஒரு பித்து. குணம் குறியில்லாத பரம் பொருள். எல்லாவிதமான காரியங்களையும், புகழ்களையும், இகழ்ச்சிகளையும் ஏற்றுக் கொள்கிறான். அதற்குக் காரணம் உலக உயிர்களை மீட்டு அருளினால் தமக்கு அடிமையாக்கிக் கொள்ள வேண்டும் என்ற பேரவாதான். அந்தக் கருணையின் வெளிப்பாட்டைத்தான், அந்த அருளின் வன்மையைத்தான் ஆரூரர் பித்தா என்ற சொல்லால் குறிக்கின்றார்.

இச்சொல் பற்றிக் கி.வா.ஜ. குறிப்பிடும்போது, பித்தா என்பது இரண்டற்ற ஒரு நிலை. வெகுளியும் ஆனது; வெகுளாமையும் ஆனது; பணிதலும் அன்று; பணித்தலும் அன்று; விரும்புவதும் அன்று; வெறுப்பதும் அன்று; செயலில் முரண்பாடு காணப்படினும் கருணைக்குரியது.[3]

நம்பினார்க் கருள் செய்யும் அந்தணர் (பா.எ. 137)

பெருந்தேவர் சிரந்தோள் பல்கரங்கண் பீடழியச்
செற்று மதிக் கலை சதையத் திருவிரலால் தேய்வித்து
அருள் பெருகு சிவபெருமான் (பா.எ. 210)

எனச் சுந்தரர் இறைவனைக் கருணைப் பேராளனாகச் சித்திரிப்பார். அப்படி சித்திரிக்கும்போது ஏகன், நிகரற்றவன், பேராளன் போன்ற பொருள்கள் விளங்க நம்பி என்ற சொல்லால் பல இடங்களில் பேசப்படுவதைக் காணலாம். 7ஆம் திருமுறையில் நம்பி என்ற சொல்லால் இறைவன் 77 இடங்களில் சுட்டப்படுகிறான். (எ.கா.)

பிறந்த அவ்வுயிர்க்கெல்லாம் அங்ஙன் நம்பி
அருள்மால் விசும்பாலும் அமரர் நம்பி
தவத்திற்கொரு நம்பி
பொழுதும் விண்ணும் முழுதும் பலவாகி இருந்த நம்பி
உயிர்க்கெல்லாம் அமுதமாய் ஊறும் நம்பி
உற்ற நம்பி
பரமானந்த வெள்ளம் பிணிக்கும் நம்பி

முன்ன நம்பி

உலகத்தில் பொதுவாக மக்கள் பிறப்பு ஒன்று இருந்தால் இறப்பு உண்டு என்பது தெரிந்திருந்தாலும் இறையாமையை முழுவதுமாக உணரவில்லை. இந்நிலையை மக்களுக்கு உணர்த்தவே சான்றோர்களும், முனிவர்களும், ஞானிகளும், சுந்தரர் போன்ற இறை நேயர்களும் தோன்றித் தங்களுடைய பாடல்கள் மூலமாக மக்களுக்கு எடுத்துரைத்தனர். உலக இன்பங்களில் பேரின்பமானது இறைவனது நீழலடி சேர்வதே ஆகும். அவ்வாறு சேர்வதற்கு அடியார்களுக்கு இறைவனிடத்தில் அன்பு வேண்டும். அந்த அன்பு சிறப்பாவதற்கு இறைவனின் அருள் தேவை. ஆதலால்தான் சுந்தரர் தம்முடைய தேவாரத்தில் இறைவனை அருளாளனாக, கருணைப் பேராளனாகக் காட்டுகிறார்.

2. இறைவன் அன்பானவன்

இவ்வுலக மக்கள் வாழ்வதற்குத் தமக்குத் தேவையான பொருளைத் தேடுவதிலும் அதற்குரிய முயற்சியிலும் தங்கள் காலத்தை வீணடிக்கின்றனர். மேலும் இப்பூவுலகில் நோயற்றும், பசிப் பிணியற்றும், வறுமை நீங்கியும், சிற்றின்பத்தில் ஈடுபட்டு வாழ்வதையே வாழ்க்கைப் பேரின்பம் எனக் கருதுவர்.

உடம்பு, உயிர் (ஆன்மா) என இரண்டும் இறைவனால் தரப்பட்டவை. உடம்பு அழியக்கூடியது. உயிர் அழிவில்லாதது. உடம்பைப் பிரிந்த உயிர் இவ்வுலக வாழ்க்கையில் (இச்சைகளில்) எந்த அளவிற்கு ஈடுபட்டதோ அந்த அளவிற்குப் பாவ புண்ணியத்தை ஏற்கும் என்பது சைவ சித்தாந்தக் கருத்து. அத்தகைய நிலையில் இருந்து விடுபட மக்கள் இறைவனிடம் அன்பு காட்ட வேண்டும். அப்படி இறைவனிடம் அன்பு காட்டினால் இறைவன் நம் பாவங்களையெல்லாம் நீக்கி முக்தி அடைய வழிவகுப்பான். இதனைச் சுந்தரரும் பின்வருமாறு கூறுகிறார்.

இறைவன் தன்னை நாடி வரும் பக்தருக்குத் தானே வந்து அவனது முன்வினை மற்றும் ஆணவம், கன்மம், மாயை ஆகிய முத்தளைகளையும் களைந்து அருள் பாலிப்பான். இதனை 7ஆம் திருமுறையில்,

அடைந்தவர்க்கு அமுதாயிடுவான்
அடையில் அன்புடையானை
உற்றவர்க்கு உதவும் பெருமான்
அன்பர் இட்டுகந்தார் மலர்ப்பூசை இச்சைக்கும் இறைவன்
இலையால் அன்பால் ஏத்தும் அவர்க்கு
நிலையா வாழ்வை நீத்தார்
தம்மைப் பற்றினார்கட்கு நல்லன்
பாடியாடும் பக்தருக்கு அன்புடையான்

இவ்வாறாக இறைவனிடம் அன்பு காட்டினால் இறைவன் தன் அன்பை வெளிப்படுத்துவான். அப்போது மனிதருடைய பல்வேறு வகையான துன்பங்கள் நீக்கப்படும் என்பதை மேலே உள்ள தேவார வரிகள் விளக்கும்.

மனிதர் ஒருவர்க்கொருவர் அன்பைப் பரிமாறிக் கொள்ளும்போது 'உறவு' என்ற ஒன்று மட்டுமே தெரியும். இந்த உலகியல் எதிர்பார்ப்புகளின் தன்மையைப் பொறுத்து அந்த உறவானது நீடிக்கும். அல்லது உறவை இழப்பர். ஆனால் இறைவனிடத்தில் அன்பைச் செலுத்தும்போது இறைவன் நம் உடம்பிலுள்ள அழுக்கை அகற்றுவார். இதனைக் கருத்தில் கொண்டுதான்,

பாடியாடும் பக்தனுக்கு அன்புடையான் எனவும்,
தொண்டரைப் பெரிதும் உகப்பான் எனவும்,
நினைப்பவர் மனம் நீங்க கில்லான் எனவும்,
அடியார்க்கடி யவர்

எனவும் சுந்தரர் பாராட்டுகிறார்.

3. இறைவனை உற்றவனாகக் கருதுதல்

பக்தி இலக்கியத்தில் இறைவனைப் பல்வேறு நிலைகளில் காண்பது என்பது சான்றோர் மரபு. இறைவனைத் தாய் தந்தையாகவும், நல்வழி காட்டுபவனாகவும், துயருற்றபோது இடுக்கண்களையும் நண்பனாகவும் விளங்குகிறார் என்பதைச் சுந்தரர் தம் வாழ்க்கை அனுபவத்தைக் கொண்டு 7ஆம் திருமுறையில் பதிவு செய்துள்ளார். சுந்தரர் இறைவனைப் பெருஞ்சுற்றமாகக் கருதுகிறார். இவ்வுலக இச்சையில் பெற்ற மக்கள், துணையாய் வந்த துணைவி, நிதி இவற்றோடு உறவுகள் அனைத்துமே இம்மண்ணுலகிற் பாற்பட்டவை. இவற்றின் துணை கொண்டு இறையடி நீழலை அடைதல் இயலாது. இப்புவி வாழ்க்கையில் ஒருவரைச் சுழன்று சுழன்று ஆட்படச் செய்து விடும். ஆகவே இவற்றைத் தவிர்த்து உற்றவனாக விளங்கும் இறைவனை எண்ணும்படியாக நெஞ்சுக்கு ஆணையிடுகிறார் சுந்தரர். பாடல் வருமாறு:

பதியும் சுற்றமும் பெற்ற மக்களும்
பண்டை யாரலர் பெண்டிரும்
நிதியில் இம்மனை வாழும் வாழ்க்கையும்
நினைப்பொழி மட நெஞ்சமே
மதியம் சேர்சடைக் கங்கையானிடம்
மகிழும் மல்லிகை செண்பகம்
புதிய பூ மலர்ந்து எல்லி நாறும்
புறம்ப யந்தொழப் போதுமே (பா.எ. 300)

புற இச்சைகளை விடுத்து (உலகியல் இன்பம்) இறைவனை உற்றவனாகக் கருதி அவனை ஏத்துவதே பெரும் பேறு என்ற வகையில் சுந்தரர் இறைவனைக் குறிப்பிடுகிறார். அடியவர்கள் உள்ளத்தே தேனும் புளித்துப் போகும் அளவிற்கு இன்சுவை கொண்ட அமிர்தமாக இறைவன் வீற்றிருப்பான் என்பதனைக் கீழ்வரும் பாடல் வரிகள் உணர்த்துகின்றன.

வானங் கைத்தவர்க்கும் அளப்பரிய
வள்ளலை அடியார்கள் தம் உள்ளத்
தேனுங் கைத்து அமுதாகியுள்ளூறும்
தேசனைத் திளைத்தற் கினியானை
மானங் கைத்தலத் தேந்த வல்லானை
வலி வலந்தனில் வந்து கண்டேனே (பா.எ. 94)

4. இறைவனை ஆசானாகக் கருதுதல்

சைவ சமயம் இறைவனுக்கு ஐந்தொழில் இருப்பதாக வர்ணிக்கிறது. ஆக்கல், அழித்தல், காத்தல், மறைத்தல், அருளல் என்பன ஐந்து ஆகும். பிறவியின் ஊடே வந்து சேரும் மும்மலத்தின் காரணமாக எழுகின்ற துயர்களையும், இடர்களையும், முன்வினை (அல்லது) பழவினையின் செயற்பாடுகளையும் களையும் ஆற்றல் மிக்கவனாக இறைவன் கருதப்படுகிறான். அத்தகைய இறைவனை மனம், மெய், வாய், கண், காது, மூக்கு ஆகியவற்றால் தொழுவதன் மூலம் பிறவிப் பிணி களைந்து வாழலாம் என்பது சுந்தரர் கருத்து.

அத்தா, தலைவா, எந்தாய், விரும்பா, வேடா, சிட்டா, நாதா, ஐயா, அண்ணா, தேவா என இறைவனைப் பல்வேறு நிலைகளில் விளிக்கிறார். இவ்வுலக வாழ்வில் காணும் சிற்றின்பப் படிகளில் இருந்து வெளிப்பட, அதற்கான ஞானம் பெறுவதற்குத் தவ நெறியை ஆசனாக இருந்து தரவேண்டும் என்கிறார் சுந்தரர். இவ்வாறு சுந்தரர் மறைபொருளிலே தவநெறி வேண்டும் என வேண்டுவது இங்குக் குறிப்பிடத்தக்கது. திருத்துறையூரில் எழுந்தருளியிருக்கும் இறைவனிடம் தவநெறி வேண்டும் என வேண்டுவதைக் காணலாம்.

மத்தம் மத யானையின் வெண் மருப்புந்தி
முத்தங் கொணர்ந்தெற்றியோர் பெண்ணை வடபால்
பத்தர் பயின்றேத்திப் பரவும் துறையூர்
அத்தா உனை வேண்டிக் கொள்வேன் தவநெறியே (பா.எ. 12)

இந்தப் பதிகத்தின் தனிச்சிறப்பு ஒவ்வொரு பாடலின் முதல் இரு வரிகள், தலம் அமைந்த இடத்தின் இயற்கைச் சிறப்பைக் கூறிப் பின்னிரு வரிகளில் அங்கே இறைவனை எழுந்தருளியிருக்கக் கூடிய தன்மையைச் சொல்வதாக அமைகிறது. இதன் உட்பொருள் பின்வருமாறு:

இறைவன் இயற்கையாக விளங்குகிறான். இயற்கை இறைவனின் உருவங்களாக உருவகப்படுத்தப்படுகிறது. இயற்கையை அறிந்து கொண்டால் இறைவனை அறிந்து கொள்ள முடியும். எங்கும் பரிபூரணமாய் வீற்றிருக்கும் இறைவன் ஒவ்வொருவர் மனத்திலும் அருளாளனாக, ஆசானாக இருந்து துன்பம் களைவான். அத்தகைய இறைவனிடம் தவநெறி வேண்டும் எனச் சுந்தரர் கேட்பதாக அமைகிறது.

5. இறைவனை எல்லாம் கடந்தவனாகக் காணுதல்

இறைவனைக் காண்பதற்கு அப்பாற்பட்டவனாகவும், எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாகக் கருதுவதும் உண்டு. இறைவனைப் பல்வேறு நிலைகளில் சுந்தரர் எண்ணிப் பார்க்கிறார்.

ஒத்துலகம் தானாய்

ஊர்வனவும், நிற்பனவும் ஊழிகளும் தானாய் (பா.எ. 384)

பொருமேவு கடலாகிப் பூதங்கள் ஐந்தாய்
புனைந்தவனைப் புண்ணியனைப் புரிசடையானை (பா.எ. 384)

மழை தரும் மேகமாகவும், அண்டங்கள், கோளங்கள், உலகங்கள் போன்றவற்றைப் படைத்தவனாகவும் இறைவன் விளங்குகிறான். இவ்வுலகத்தில் வாழ்கின்ற உயிரினங்களான ஊர்வனவும், நிற்பனவும் ஆகிய உயிர்களாகவும், அவற்றின் தோற்றத்திற்கும் முடிவிற்கும் காரணமாகிய பெருஊழிக் காலமாகவும், கடலாகவும், மலையாகவும், பஞ்ச பூதங்களாகவும் விளங்குபவன் இறைவன் எனச் சுந்தரர் இறைவனைப் பன்முகமாகப் பார்க்கிறார். பிறிதொரு இடத்தில்,

மூப்பதும் இல்லை பிறப்பதும் இல்லை இறப்பதில்லை (பா.எ. 405)

என இறைவனின் தன்மையைச் சுந்தரர் கூறுகிறார்.

6. இறைவனைப் பெருங்கருணைப் பேராளனாகக் கருதுதல்

இறைவனுடைய ஐந்தொழிலில் உன்னதமாகக் கருதப்படுவது அருளல் என்பதே ஆகும். சுந்தரர் இறைவனின் பெருங்குணத்தைப் பேசும்போது வன்மையான சொற்களால் முன்னர் அவரை ஏசிய போதும் அவற்றைக் கருத்தில் கொள்ளாமல் சுந்தரர் துன்புற்றபோது பொன், பொருள் தந்து பேருதவி செய்தார் இறைவன். அத்தகைய இறைவனின் அருட்குணத்தைப் பின்வரும் பாடல்வழி விளக்குகிறார்.

தன்மையினா லடியேனைத் தாம்
ஆட்கொண்ட நாட்சபைமுன்
வன்மைகள் பேசிட வன்தொண்டன்
என்பதோர் வாழ்வு தந்தார்
புன்மைகள் பேசவும் பொன்னைத் தந்து
என்னைப் போகம் புணர்த்த நன்மையினார்

இறைவனுடைய நினைவிலே வாழ்வோர்க்குப் பேரின்பமும், இந்நிலவுலகில் சோறும், கூறையும் அதாவது உணவும், இருப்பிடமும் தவறாது கிட்டும் என்பதனை,

இம்மையே தரும் சோறும் கூறையும்
ஏத்தலாம் இடர் கெடலுமாம் (103)

என்ற பாடல்வழி விளக்குகிறார்.

சாதலும் பிறத்தலும் தவிர்த்தெனை வகுத்துத்
தன்னருள் தந்த எம் தலைவன் (பா.எ. 42)

என இறைவனின் அருட்திறத்தை வியந்து பாராட்டுகிறார்.

இறைவனை எண்ணி வாழ்பவர்க்கு, அவனைச் சரணடைந்தவர்க்கு அன்றாடம் வாழ்க்கைத் துன்பம் நீங்கும்படி பொற்காசு தந்து போற்றும் எம்மான் என இறைவனைப் போற்றுகின்றார். பாடல் வருமாறு:

வகுத்தவனுக்கு நித்தற்படியும்

வரும் என்றொரு காசினை நின்ற நன்றிப்
புகழ்ந்துணை கைப்புகச் செய்துகந்தீர் (பா.எ. 173)

இறைவனைச் சிந்தையால் சிந்திக்க, சிந்திக்க மனம் இனிக்கும் என்பதைச் சுந்தரர் பின்வரும் பாடல்வழி பாராட்டுகிறார்.

எம்மானை மனத்தினால் நினைந்த போது
அவர் நமக்கு இனியவாறே (பா.எ. 350)

இறைவனை எண்ணுவதே பேரின்பம். அவனை நினைப்பதால் எழு பிறப்பின் வினையகன்று பேரின்பத்தைச் சேர்க்கும் எனக் கூறுகிறார் சுந்தரர்.

எங்கள் நம்பி என்னை ஆளுடை நம்பி
எழுபிறப்பும் எங்கள் நம்பி கண்டாயே (பா.எ. 331)

7. இறைவனைப் பாதகத்தை ஒழிப்பவன் எனக் கருதுதல்

மனிதப் பிறவி என்பது இம்மண்ணுலகில் முத்தளைக் கட்டாகிய ஆணவம், கன்மம், மாயை என்பதற்கு உட்பட்டது. பழவினை காரணமாகவும், பற்றின் காரணமாகவும் ஒருவருக்குப் பாவங்கள் சேர்தல் இயல்பு. மண், பெண், பொன் என்ற மூன்று ஆசைகளின் காரணமாகவும் பாவத்தின் வலிமை கூடும்.

மனித உயிர்கள் செய்யும் பாவ, புண்ணியத்தைக் கூற்றுவன் (எமன்) கணக்கிட்டு அதற்குத் தகுந்தாற் போலத் தண்டனை கொடுப்பான் எனச் சமயக் கருத்துகள் கூறுகின்றன.

பாவ, புண்ணியங்கள் ஒருவரை அணுகாது இருப்பதற்கும், பழவினையின் காரணமாக ஒருவர் துன்பத்தை அடையாமல் இருப்பதற்கும் உயிர்களிடத்து இறைவன் விரைந்து வந்து துணை செய்வான் என்பர். இதனைச் சுந்தரர் தம் 7ஆம் திருமுறையில் பல இடங்களில் சுட்டிச் செல்கின்றார்.

பற்றுவான் துணை எனக்கெளிவந்த பாவநாசன் *(525)*

இங்கே இறைவன் பாவத்தை அழிப்பவனாகச் சொல்லப்படுகிறான். இறைவனைத் துதிப்பதில் தன்னுடைய மெய், பொருள், ஆவியைக் கொடுப்பவர்க்கு இறைவன் தன் திருவடி நீழலைத் தந்து அடிமையாக்கிக் கொள்வான் என்றும், அத்தகையோர் நெஞ்சத்தில் வஞ்சம் எதுவும் சேராது என்றும் கூறுகிறார் சுந்தரர். இதனை,

வைத்தனன் தனக்கே தலையும் என் நாவும்
நெஞ்சமும் வஞ்சம் ஒன்று இன்றி
உய்த்தனன் தனக்கே திருவடிக்கு அடிமை (பா.எ. 246)

என்ற பாடல்வழி அறியலாம்.

சுந்தரர் பழவினையும், இப்பிறவியில் சேரும் தீவினைகளும் சேரும்போது வல்வினையாகி அது அந்த ஆன்மாவை நல்வழிக்குச் செல்ல இயலாது அமைந்துவிடும். அத்தகைய நிலை தனக்கு ஏற்படாமல் இருக்க,

அகலும் வல்வினைக்கு அஞ்சி வந்தடைந்தேன் (181)

என இறைவனிடம் தஞ்சம் கேட்கின்றார்.

மனித உயிர்க்குத் தீங்கு செய்பவை அவனோடு ஒட்டிப் பிறந்த ஐம்பொறிகளே ஆகும். இப்பொறிகள் மனித மனத்தைத் தம்வசப்படுத்தித் துன்பத்தில் கொண்டுபோய்த் தள்ளும். காலம் முடிந்தவுடன் உயிரை விட்டு மறையும். இந்நிலை ஏற்படாமல் வாழ்க்கையைச் சீரழிக்கும். பல்வேறு வகையான பாவங்களுக்கு வழிவகுக்கும். அத்தகைய நிலை ஏற்படாதிருக்க வேண்டேன் மானுட வாழ்க்கை என இறைவனிடம் வேண்டுகிறார். பாடல் வருமாறு:

அழிப்பர் ஐவர் புரவுடையார்கள்
ஐவரும் புரவாசற ஆண்டு
கழித்துக் காற்பெய்து போயின பின்னைக்
கடைமுறை உனக்கே பொறையானேன்

விழித்துக் காண்டனன் மெய்ப்பொருள்தன்னை
வேண்டேன் மானுட வாழ்க்கை ஈதாகில்
இழிந்தேன் என்றனக் குய்வகை அருளாய்
இடைமருதுறை எந்தை பிரானே (பா.எ. 188)

நிறைவாக

பொதுவாக மக்கள் எல்லாம் உலக வாழ்க்கையிலே சுழன்று கொண்டிருப்பவர்கள். ஆனால் ஞானிகள் இவ்வுலக வாழ்க்கைச் சூழலில் இருந்து தங்களை விடுவித்துக் கொள்ள விரும்பினர். அதற்காக உலக வாழ்க்கை, புகழ், பதவி இவற்றையெல்லாம் துறந்தனர்.

எல்லாவற்றிற்கும் மேலாக இறைவனையே நினைந்து, இறைவன் திருவருளே நமக்குக் கிடைத்த பெரும் பேறு என நினைத்துக் கொண்டனர். எப்பொழுதும் இறைவனுக்காக உழைப்பது தாம் பெற்றிருக்கும் பேறு என நினைந்து அருள் தொண்டு ஆற்றியிருக்கிறார்கள். இந்த ஞானிகள் உலகத்தையெல்லாம் ஒன்று என நோக்குவர். தன்னலம் மறப்பர். தொண்டினை உயிர் மூச்சாகக் கொள்வர். மற்றவர்கள் வாழ, மற்றவர்களை வாழ்விக்கத் தங்களால் இயன்றதைச் செய்வர். தங்களுடைய தேகத்தைப் பக்குவப்படுத்திக் கொள்வர். தங்களுடைய தேகத்தில் இருக்கும் ஈசனை உணர்ந்து கொள்வர். அந்த ஈசன் இயக்கத்தால் தாங்கள் இயங்குவதாக நினைத்துத் தங்களைப் பொதுநலத் தொண்டிற்கு அர்ப்பணித்துக் கொள்வர். இவ்வாறு அர்ப்பணித்துக் கொள்வது ஞானிகளின் பொது உளப்பாங்காக அமைகிறது. அவ்வகையில் சுந்தரரின் உளப்பாங்கினை அவரது ஏழாம் திருமுறையில் காணப்படும் பாடல்கள்வழி மேற்கூறியுள்ளவாறு அறியலாம்.

குறிப்புகள்

1. தோழரும் தோழர் தம்பிரானும் (ப. 15), சேலம் எஸ். ஜெயலட்சுமி.
2. அருளாளன் (திருமுறை மலர்கள்), ப. 37, கி.வா. ஜகந்நாதன்.
3. மேலது, ப. 38.

துணை நூல்கள்

1. தோழரும் தோழர் தம்பிரானும், சேலம் எஸ். ஜெயலட்சுமி, பதிப்பாசிரியர் கி.வா. ஜகந்நாதன், 48, ராமகிருஷ்ண நகர், சென்னை, முதற்பதிப்பு ஜனவரி, 1962.
2. அருளாளன் (திருமுறை மலர்கள்), கி.வா. ஜகந்நாதன், அமுத நிலையம், சென்னை, முதற்பதிப்பு 1954.
3. 7ஆம் திருமுறை - சுந்தர மூர்த்தி சுவாமிகள் தேவாரம், வரலாற்று முறையில் மூலமும் உரையும், உரையாசிரியர் புலவர் பி.ரா. நடராசன், உமா பதிப்பகம், மண்ணடி, சென்னை 600 001, முதற்பதிப்பு டிசம்பர் 2000.

மு.வ. ஓர் 'ஆய்வுக்கருவூலம்'

திரு. வெ. ராம்ராஜ்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் மொழித் துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

பேராசிரியர் மு.வரதராசனாரின் நூல்கள் ஆய்வுக் கண்ணோட்டத்தோடு, எளிமை, செறிவு, நுட்பம் ஆகியவற்றைக் கொண்டிருப்பதால் அவை மக்களிடம் சென்று சேர்கின்றன. அவருடைய நூல்கள் பழமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவை. எனவே பெரும்பான்மையானவர்களால் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இருக்கின்றன.

ஆய்வாளர் எப்படி செயல்பட வேண்டும். எவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வைச் செய்ய வேண்டும் என்பதை நன்குணர்ந்து வேண்டியதை அவர்கள் விரும்பியவாறு அளித்ததே பேராசிரியர் மு. வ. அவர்களின் வெற்றிக்குக் காரணம்.

சூழலையும், அச்சூழலில் வாழும் மனிதனின் நிலையையும் படம்பிடித்துக் காட்டுவதாக இலக்கண இலக்கியங்கள் அமைகின்றன. இவ்வமைப்பை மையமாகக் கொண்டே பேராசிரியர் மு.வ.அவர்களின் ஆய்வுகள் அமைந்துள்ளன.

சூழலாய்வு, சமூக ஆய்வு, இலக்கண இலக்கிய ஆய்வு ஆகிய மூன்றும் முக்கிய மையங்களாக இருந்து பேராசிரியர் மு. வ. அவர்களை எவ்வாறு 'ஓர் ஆய்வுக் கருவூலமாக' ஆக்கியன என்பதைப் புலப்படுத்துவதாக இக்கட்டுரை அமைகிறது.

1. சூழல் ஆய்வாளர்

இயற்கை மனித வாழ்வில் பெறுமிடம், இயற்கையோடு இயைந்த வாழ்வின் சிறப்பு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டே பேராசிரியர் மு. வ. அவர்களின் சூழலாய்வு அமைந்துள்ளது.

இயல்பாகவே இயற்கையில் ஈடுபாடு மிக்கவர் பேராசிரியர் மு. வ. அவருடைய முனைவர் பட்ட ஆய்வேடான 'பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை' எனும் ஆய்வேடே அதற்குச் சான்று.

இறந்தகாலம், நிகழ்காலம் ஆகிய இவ்விரண்டையும் நன்றாகப் புரிந்து கொண்டவரால்தான் எதிர்காலத்தைச் சரியாகக் கணிக்க முடியும். அதுபோலவே தம்மைச் சுற்றியுள்ள சூழல் தம் காலத்திற்கு முன் எப்படி இருந்தது; தற்போது

எப்படி இருக்கின்றது என்பதை உணர்ந்த பேராசிரியர் மு. வ. அவர்கள் 'கி. பி. 2000' என்ற எதிர்காலக் கணிப்பு நூலை எழுதினார். இதிலிருந்து சூழல் தொடர்பாக அவருக்கிருந்த புலமை, ஆழமும் தெளிவும் தொலைநோக்குப் பார்வையும் மிக்கது என்பது தெரிகின்றது.

'கொங்குதேர் வாழ்க்கை' எனும் நூலில் சங்க காலத்தின் அழகிய சூழலை எடுத்துக் காட்டியுள்ளார். 'இலக்கியக் காட்சிகள்' எனும் நூல் பேராசிரியர் மு. வ. அவர்களின் பண்பட்ட உள்ளத்தைக் காட்டி நிற்பது. ஏனெனில் உலகில் காணும் காட்சிகளை ஆய்வு நோக்கோடு அழகியலைக் கலந்து காணப்பண்பட்ட உள்ளம் உடையோராய் இருக்க வேண்டும். அவ்வுள்ளம் இந்நூலில் வெளிப்பட்டுள்ளது.

'முல்லைத் திணை' எனும் நூலில் முல்லைநில வர்ணனையும் கார்காலமும் எடுத்துக் காட்டப் பெற்று, பிறமொழி இலக்கியங்களில் இக்காட்சிகள் புனையப் பெற்றிருக்கும் பாங்கையும் விளக்கியிருப்பதிலிருந்து அந்நிலச் சூழலைப் பேராசிரியர் மு. வ. ஈடுபாட்டுடன் அணுகியிருப்பது விளங்கும்.

ஓர் அகப்பாடலைப் பாடும் போது அதற்குரிய நிலம், பொழுது, பறவை, விலங்கு, மரம், பூ ஆகிய சூழலை அமைத்துப் பாடுவது மரபு. இயற்கையையே பாடுவதாக எண்ணுமளவிற்குச் சில பாடல்கள் தோன்றினும், இயற்கையை மட்டுமே பாடுவதல்ல அவர்களின் நோக்கம். மனிதரின் காதலைப் பாடுவது. அவ்வியற்கைப் பின்னணியில் தம் மனதைப் பரிகொடுத்த பேராசிரியர் மு.வ. அவர்கள் அவற்றை ஆய்ந்து அவ்வுணர்வுகளைப் பாமரரும் உணரும் வண்ணம் மணல்வீடு, நடைவண்டி, நெடுந்தொகைச் செல்வம், ஓவச்செய்தி, நற்றிணை விருந்து, நற்றிணைச் செல்வம், குறுந்தொகைச் செல்வம் முதலான நூல்களைப் படைத்தளித்தார்.

வரலாற்றுக் குறிப்புகளை அதிகமாகக் கொண்ட புறப்பாடல்களின் இலக்கியச் செழுமை சிறிதும் குன்றாத அளவிற்கு எளிய வாக்கிய அமைப்புகளைத் தம் ஆய்வு நூல்களில் கையாண்டு இருப்பார். அந்தப் பாடல்களின் உணர்ச்சிகளை அப்படியே அறிய அது உதவும். இதை அவருடைய 'வீர மரபு' எனும் ஆய்வுக் கட்டுரையால் அறியலாம்.

எல்லாப் படைப்புகளும் ஏற்கெனவே சொல்லப்பட்ட கருத்துகளின் பிரதிபலிப்புதாம். அவற்றைச் சொல்லும் முறையே வேறுபட்டது என்பதை அறிந்திருந்தும், பேராசிரியர் மு.வ. அவர்கள் தாம் படிக்கும் போது தமக்கேற்பட்ட உணர்வுக்குத், தோன்றிய கருத்துகளுக்கு நூல் வடிவம் தந்தார். அதன் மூலம் அறிஞர்களுக்கானதாகக் கருதப்பட்ட படைப்புகள் யாவையும் அனைவருக்கு மானதாகவும் மாற்றம் பெற்றன.

நெறியோடு எளிமையாக வாழ்பவர்கள் சூழலுக்கு ஏற்பத் தங்களைத் தகவமைத்துக் கொள்வதன் மூலம் வெற்றி பெற முடியும் என்பதைத் 'தமிழர்கள் நல்லவர்களாக இருந்தால் மட்டும் போதாது வல்லவர்களாகவும் இருக்க வேண்டும்' என்ற பொன்மொழியின் மூலம் புலப்படுத்துகிறார். எனவே வெற்றிபெற விரும்புவோர் 'சூழலைப் புரிந்து கொள்வது' தலையாயது என்பது சூழலாய்வாளராகப் பேராசிரியர் மு. வ. கண்ட முடிபாகும்.

2.சமூக ஆய்வாளர்

மனிதன் வாழ்நாள் முழுவதும் கற்றுக் கொண்டே இருக்கிறான். தெளிந்த மனமுடைய மனிதன் சமூகத்திடமிருந்து சிறந்த வாழ்வுக்குத் தேவையான நெறிமுறைகளை எளிதாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

சமூகத்தின் மீது அக்கறையுள்ள படைப்பாளர்கள், காணும் அனைவரிடமிருந்தும் தம் படைப்புக்குத் தேவையானவற்றை எடுத்துக் கொள்வர். உண்மையான படைப்பாளர்கள் தேடி அலைவதை விட்டு இயல்பாகத் தாம் காணுகின்றவற்றிலேயே விடையைக் கண்டுபிடித்து விடுவர்.

சமூகத்தின் மீது அக்கறை உள்ளவராகவும், உண்மைப் படைப்பாளராகவும் விளங்கிய பேராசிரியர் மு.வ. தாம் கண்ட காட்சிகளையும், நிகழ்வுகளையும் பெரும்பாலும் புதினங்களிலும், சிறுகதைகளிலும் பதிவு செய்துள்ளார்.

அவருடைய புதினங்களிலும் சிறுகதைகளிலும் காட்டப்படாத நிகழ்வுகளும் காட்சிகளும் இல்லை எனும் அளவிற்குச் சமூகத்தில் பல்வேறு தளங்களில் உள்ளவர்களையும் அறிந்து, ஆய்ந்து தம் படைப்புகளில் பயன்படுத்தியுள்ளார்.

பேராசிரியர் மு. வ. அவர்கள் தம்மிடம் பயின்ற மாணவர்களின் குடும்பச் சூழலையும் அறிந்தவராயிருந்தார். பொருளாதார நிலை குன்றியுள்ள மாணவர்களுக்கு உதவும் உள்ளம் கொண்டவராக விளங்கினார். குறைந்தது (நூற்றைம்பது) மாணவர்களாவது அவரின் பொருளுதவியால் கல்வி கற்றிருப்பார்கள் என்று பேராசிரியர் மின்னூர் சீனிவாசன் அவர்கள் சென்னைப் பல்கலைக்கழக மு.வ.நூற்றாண்டு அறக்கட்டளைச் சொற்பொழிவில் குறிப்பிட்டார். பேராசிரியர் மு. வ. அவர்களின் இச்செயல்பாடு அவரின் சமூக அக்கறையையும், சரியானவரைத் தெரிவு செய்து உதவும் சமூக புரிதலையும் காட்டுகின்றது.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தில் தமிழ்ச் சமூகமே ஒன்று திரண்டு நின்ற காலக்கட்டத்தில் நடுவண் அரசு அவருக்குத் ‘தாமரைத்திரு’ (பத்மஸ்ரீ) விருதினை வழங்கியது. தம் தாய்மொழியின் குரல்வளையை நெரிக்கும் விதமாக நடந்துகொண்ட நடுவண்அரசு தம்மைக் கவுரவிப்பதை விரும்பாது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக அவ்விருதினை ஏற்க மறுத்தார்.

பெரும்பான்மையானவர்கள் தம் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சிக்கல்களும் தீர்வுகளும் பேராசிரியர் மு. வ. அவர்களின் படைப்புகளில் எடுத்தாளப்பட்டிருக்கும். இச்சமூகப் புரிதல் நிலையே அவருடைய படைப்புகள் பெருவரவேற்புப் பெற உதவின.

‘அன்பளிப்பு’ என்றாலே அது பேராசிரியர் மு. வ. அவர்களின் நூலைத் தான் வழங்க வேண்டும் என்ற மனநிலை மக்கள் மத்தியில் இருந்தது. அந்த அளவிற்கு வாழ்வியல் உண்மைகளைக் கொண்டதாக அப்படைப்புகள் விளங்கின.

‘எளிய வாழ்வு நடத்துவோர் துறவிகளுக்கு நிகரானவர்கள்’

'குடும்பத்திலுள்ள உறுப்பினர் ஒவ்வொருவரும் உழைக்க வேண்டும் அது தான் நல்ல குடும்பம்' என்று 'நல்வாழ்வு' என்ற நூலிலும்,

'இல்வாழ்க்கை ஓர் 'அறம்' என்று சிறப்பித்து 'இல்லறம்' என்றார்கள்' எனத் 'தங்கைக்கு' என்ற கடித இலக்கிய நூலிலும்,

'வெளியார் தலையிடுவதால்தான் குடும்ப வாழ்க்கை குலைகின்றது' எனக் 'கள்ளோ காவியமோ' என்ற புதினத்திலும்,

'அன்பு ஒன்று தான் மனத்தை மாற்றக் கூடியது அறிவால் மாற்ற முடியாது' என 'வாடாமலர்' என்ற புதினத்திலும்,

'உலகத்துக்கே பொதுவான குறைகள் இரண்டு உள்ளன. மூடநம்பிக்கை ஒன்று, ஆடம்பரம் மற்றொன்று' என 'மண் குடிசை' என்ற புதின்த்திலும்,

'உயிர் பிறர்க்கு உதவியாக வாழ்வது ஒருவகை இன்பம்' என 'அந்த நாள்' என்ற புதினத்திலும்,

'எல்லா உயிர்களையும் கடவுளின் வடிவங்களாக மதித்து வழிபட வேண்டும் என்பதுதான் என்னுடைய சமயம்' எனக் 'கயமை' எனும் புதினத்திலும்,

'இடர்ப்பாடுகளை வெல்வதற்கும் வளர்ச்சி பெறுவதற்கும் கல்வி வேண்டும்' என்று 'கல்வி' என்ற நூலிலும் குறிப்பிட்டுள்ளார்.

'பொதுவுடைமை அரசாங்கம் ஏற்பட வேண்டும்' என 'விடுதலையா? ' என்ற சிறுகதையிலும்,

'உழவன் வாழ்க்கை வியாபாரிக்கு இரையாகும் வாழ்க்கையாக உள்ளது என 'நண்பர்க்கு' என்ற கடித இலக்கிய நூலிலும்,

'தமிழர் ஒன்றுபட்டுச் செயலாற்றினால் உட்பகை தானே புழுங்கிச் சாகும்' என்று 'நாட்டுப்பற்று' என்ற நூலிலும் சுட்டிக் காட்டியுள்ளார்.

மொத்தத்தில் பேராசிரியர் மு. வ. அவர்கள் தனிமனிதன், குடும்பம், சமுதாயம் ஆகிய முப்பெரும் அங்கங்களும் செய்தது என்ன? செய்வது என்ன? செய்ய வேண்டியது என்ன? என்று அனைத்தையும் பகுப்பாய்வு செய்துள்ளார்.

ஒரு சமுதாயம் அறிவையும் பண்பாட்டையும் ஒருசேரப் பெற்று உயர வேண்டும் என்கிற உயரிய நோக்கத்தோடு, சமூக அக்கறையோடு அவருடைய சமூக ஆய்வு அமைந்துள்ளது என்பது மேற்சொன்ன கருத்துகளால் உறுதிப்படுகின்றது.

3. இலக்கண இலக்கிய ஆய்வாளர்

பேராசிரியர் மு.வ.அவர்கள் சூழல் சார்ந்த புரிதல்களையும், சமுதாயம் தொடர்பான அறிவையும் பெற்றவர். அதற்குக் காரணம் இலக்கண இலக்கியங்கள் அவர் மனதைப் பண்படுத்தியதே ஆகும். தான் சார்ந்துள்ள துறையில் நுண்மாண் நுழைபுலம் மிக்கவராகச் சிறப்பதற்கும் இது துணை செய்தது.

சிறுவர் இலக்கியம், படைப்பிலக்கியம், இலக்கண ஆய்வு, இலக்கிய ஆய்வு, வாழ்வியல் சிந்தனை நூல்கள், தமிழ், ஆங்கில ஆய்வுக் கட்டுரைகள் என அவருடைய ஆய்வுப் பரப்பு விரிந்துள்ளது.

பேராசிரியர் மு. வ. அவர்களின் மொழியின் கதை, எழுத்தின் கதை, சொல்லின் கதை ஆகிய மூன்று சிறு நூல்களும் படிக்கத் தெரிந்த எவருக்கும் மொழி அறிவை வழங்கவல்லன. மொழிநூல், மொழி வரலாறு, மொழியியற் கட்டுரைகள் என்ற நூல்கள், அவர் பாடம் நடத்துவதற்காக எடுத்த குறிப்புகளையும், மொழி சார்ந்த கூடுதலான ஆய்வுக் கருத்துகளையும் கொண்டுள்ளன. இந்நூல்கள் யாவும் பேராசிரியர் மு. வ. அவர்களின் மொழியாய்வு அணுகுமுறையையும், எளிமையாக விளங்க வைக்கும் தன்மையையும் காட்டுவன.

ஆய்வு செய்யும் படைப்பின், உண்மையான வெளிப்பாட்டைப் பிரதிபலிப்பவராக ஆய்வாளர் இருக்க வேண்டும். அப்படிப் பட்டவர்களே ஆய்வுலகில் நிலைபெற முடியும். படைப்பின் உண்மை வெளிப்பாட்டாளராக இருந்து தமிழிலக்கியத்தின் எல்லாத் தளங்களிலும் தம் ஆய்வுச்சிறகை விரித்தவர். வெற்றியும் பெற்றவர் பேராசிரியர் மு. வ.

சங்க இலக்கியம், காப்பியங்கள் தொடர்பான இருபத்துமூன்று நூல்களைப் படைத்துள்ளார். குறிப்பாக, பக்தி இலக்கியத்தின் உண்மைநிலையை ஆய்வுக் கட்டுரைகள் வாயிலாகவும் சுட்டிக்காட்டியுள்ளார். மாணிக்கவாசகர், தாயுமானவர், வள்ளலார் போன்றோரின் பாடல்களை அவர்களின் மனநிலைக்கே சென்று விளக்குபவர்.

சமயம், இசை, நாடகம் ஆகியவை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் பேராசிரியர் மு. வ. அவர்களின் புதுமுகத்தை உலகிற்குக் காட்டும் நுட்பம் வாய்ந்தவை. சமயம் சார்ந்த பதிமூன்று ஆய்வுக் கட்டுரைகளும், இசை, நாடகம் தொடர்பான இருபது ஆய்வுக் கட்டுரைகளும் அவரால் எழுதப்பட்டுள்ளன.

'தமிழ் இசையின் வளர்ச்சி' என்ற ஆய்வுக் கட்டுரையில் சங்ககாலப் பண்கள், பக்தி இயக்கக்காலம், இசை மும்மூர்த்திகள் காலம் எனத் தமிழிசை வரலாற்றையே, சுருக்கமாக விளக்கியுள்ளார். பேராசிரியர் மு. வ. அவர்களின் நுட்பமும் திட்பமும் இவ்வாய்வுக் கட்டுரைகளில் கூடுதலாக மிளிர்கின்றன.

இவருடைய ஆய்வுக் கட்டுரைகள், மொழி, சங்க இலக்கியம், திருக்குறள், சிலப்பதிகாரம், சான்றோர், சமயம், இசை, நாடகம், கவிதை, சிறுகதை, வாழ்வியல் எனத் தொல்காப்பியம் தொடங்கித் தற்காலக் கவிதை வரை இருநூற்று நாற்பத்து இரண்டு) 'ஆய்வுக் கருவூலங்களாக' எல்லாத் தமிழிலக்கியப் படைப்புகளையும் தொட்டுச் செல்கின்றன.

பதிமூன்று ஆய்வுக் கட்டுரைகள் ஆங்கிலத்திலும் படைத்துள்ளார். தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி முதலிய மொழிகளைக் கற்றுப் பன்மொழிப் புலமையாளராகவும் இருந்தார்.

பேராசிரியர் மு. வ. அவர்களின் இலக்கண இலக்கியங்கள் தொடர்பான ஆய்வு அணுகுமுறை, அவற்றின் வளர்ச்சியில் பெரும் பங்கு ஆற்றி உள்ளன. அவரிடம் ஆய்வுக் கண்ணோட்டம் 'விளங்கி' இருந்தது என்பதற்கு அவர் படைப்புகள் பெற்ற அங்கீகாரமே சான்றாகும்.

எத்துறையைச் சார்ந்தவராக இருப்பினும் வழியைக் காட்டுபவர்கள் வாழ்ந்து காட்டுபவர்களாக இருக்க வேண்டும். பேராசிரியர் மு. வ. அவர்கள் 'ஆய்வுக் கருவூலமாக'ச் சிறந்து விளங்குவதற்கான வழியையும் காட்டி, வாழ்ந்தும் காட்டிச் சென்றுள்ளார்.

நிறைவாக

சூழல் ஆய்வாளராக, சமூக ஆய்வாளராக, இலக்கண இலக்கிய ஆய்வாளராகத் தம்மை நிலை நிறுத்திக் கொண்டு, ஆய்வுலகில் தம்கென நிலையான இடத்தினைப் பெற்றிருப்பவர் பேராசிரியர் மு. வரதராசனார்.

ஆய்வறிஞர், படைப்பிலக்கியவாதி, கட்டுரையாளர், இலக்கியவாதி, பேராசிரியர், துணைவேந்தர் எனப் பல்வேறு பட்டங்களையும் பொறுப்புகளையும் பெற்று விளங்கிய பேராசிரியர் மு. வ. அவர்கள் 'ஓர் ஆய்வுக் கருவூலமாக'த் திகழ்ந்தார் என்பதை இக்கட்டுரை நிறுவி உள்ளது.

துணை நூல்கள்

1. மு.வ.கட்டுரைக்களஞ்சியம் (இரண்டுதொகுதிகள் - நூலாக்கம் பெறாதவை) பதிப்பாசிரியர் - ச. சு. இராமர் இளங்கோ, பாரிநிலையம்.
2. பெருந்தகை மு.வ. சி.பாலசுப்பிரமணியன், பாரிநிலையம்.
3. மு.வ.ஆய்வடங்கல்-சு.வேங்கடராமன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
4. மு.வ.கருத்தரங்கக் கட்டுரைகள், பதிப்பாசிரியர் சு. வேங்கடராமன், மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.
5. மு.வ.களஞ்சியம் - பேராசிரியர், இரா. மோகன், மணிவாசகர் நூலகம்.
6. மு.வ.எங்கள் ஆசிரியர் - மின்னூர் சீனிவாசன், பாரிநிலையம்.
7. மு.வ.படைப்புகளில் வாழ்வியல் கோட்பாடு- தி.கெஜலட்சுமி, செம்மொழிக்கழகம்.

திருக்குறளில் சூது: சமூக நோக்கு

திரு. இரா. கார்த்திகேயன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ் மொழித்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

தொன்மைப் பனுவல்களில் சூது

எந்த ஒன்றும் நம் மரபுக்கு உரியது தானா? என்பதை அறிவதற்கு நமக்கு உற்ற துணையாக அமைவது நம் தொன்மைப் பனுவல்களே. அந்த வகையில் தொல்காப்பியத்தில் சூது என்ற சொல் எங்கும் சுட்டப்பெறவில்லை. சூதர் என்ற சொல் ஆளப்பெற்றுள்ளது. பொருளதிகாரப் புறத்திணையின் பாடாண் திணைகளுக் குரிய துறைகளைக் கூறும் தொல்காப்பியர்,

'தாவில் நல்லிசை கருதியக் கிடந்தோர்க்குச்
சூதர் ஏத்திய துயிலெடை நிலையும்'

என்று குறிப்பிடுகிறார். 'குற்றமற்ற நற்புகழுடன் தூங்கும் அரசரைத் துயில் எழுப்புவதற்காகப் புகழ் பாடுவோர் வாழ்த்து' என்பது இதன் பொருள். இப்புகழ் பாடுவோர்க்கு உரிய பெயர் சூதர். தொல்காப்பியம் குறிப்பிடும் இந்த இலக்கணத்திற்கு இலக்கியமாக,

'சூதர் வாழ்த்த மாகதர் நுவல
வேதாளிக ரோடு நாழிகை இசைப்ப'

எனும் மதுரைக்காஞ்சியின் பாடல் வரிகள் அமைகின்றன. இங்கும் சூதர் எனும் சொல் வாழ்த்துப் பாடுவோர் எனும் பொருளிலேயே பயின்றுள்ளது. வைகறைப் பொழுதில் மன்னனைத் துயில் எழுப்பப் பாடும் இவ்வாழ்த்துப் பாடல் துறைதான் பின்னாளில் பக்திஇலக்கியக் காலத்தில் திருப்பள்ளியெழுச்சி எனும் வகைமையாக உருப்பெற்றது.

மாறாகச் சூதர் எனும் சொல்லுக்கு முதற்பொருளாகச் சூதாடுபவர், சூழ்ச்சியை உடையவர் எனும் பொருளையே நம் அகராதிகள் தருகின்றன.

சங்க இலக்கியத்தில் பார்ப்போமானால் சூது என்ற சொல் ஓர் இடத்தில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. ஐங்குறுநூற்றில் மருதத் திணையில் அமைந்த எழுபத்தோராம் பாடலில் (71:1) பரத்தையைக் குறிப்பிடுகையில் தலைவி, 'சூதுஆர் குறுந்தொடி' என்கிறாள். இதற்கு முதன்மைப் பொருளாக 'உள்துளைப் பொருந்திய குறுந்தொடி' என்றே பழைய உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். பிற்கால உரையாசிரியர்கள் 'வஞ்சம் பொருந்திய பரத்தை' என்பதையும் பொருளாகக் கொள்ளலாம் என்கின்றனர்.

திருக்குறளில் சூது

மேற்கண்டவாறு தொல்காப்பியத்திலும் சங்க இலக்கியத்திலும் சூதாட்டம் குறித்த செய்திகளோ, சூழ்ச்சியைக் குறிக்கும் சூது எனும் சொல்லாடலோ இடம்பெறவில்லை. ஆனால் சூது என்னும் ஓர் அதிகாரமே அமைத்துப் பத்துக் குறள்களில் அதனைக் கண்டித்துக் கூறியுள்ளார் வள்ளுவர்.

சூதின் முறைமை

சூதாடுவோர் சூதர் என்றழைக்கப்பெற்றனர். இவர்கள் சூதாடுவதற்கு ஓரிடத்தில் கூடுவர். இவ்விடம் கழகம் எனப்பெற்றது. சூதாட்டத்தில் பயன்படுத்தப்பெற்ற கருவி கவறு எனப்பெறும். கவற்றைக் கையால் உருட்டுவர். உருட்டுகையில் ஏதேனும் ஓர் எண்ணைச் சொல்லியோ, வண்ணத்தைச் சொல்லியோ அல்லது ஒரு குறியையோ குறிப்பிடுவர். கவற்றை உருட்டும் கையில்தான் வெற்றி தோல்வி இருக்கின்றன என்று சூதர்களிடையே நம்பிக்கை இருந்தது. பொருளைப் பணயமாக வைத்துச் சூதாடினர். ஒருமுறை வெற்றி தந்து பன்முறை தோல்வி தருவது இச்சூது. இவ்வாறெல்லாம் சூதாட்ட முறைமை குறித்துத் திருவள்ளுவர் கூறியுள்ளார்.

சூதின் தீமை

வெற்றிபெறும் ஆற்றல் இருப்பினும் சூதாடக்கூடாது. சூதாடினால் நல்வாழ்வு அமையாது. சூதாடுபவன் செல்வம் யாவும் அவனை விட்டு நீங்கும். சூதாட்டத்தைப் போல் வறுமை தருவது வேறொன்றுமில்லை. உடையவர்களாக இருந்து சூதாட்டத்தால் இல்லாமல் போனவர் பலர். சூதாடுபவர் வீட்டில் மூதேவிதான் குடியிருப்பாள். சூதர்கள் வயிறார உண்பதற்கும் உணவில்லாமல் போய்த் துன்பத்தில் உழல்வர். சூதாட்டம் பொய்கூற வைக்கும், செல்வத்தையும் அருளுள்ளத்தையும் கெடுக்கும், துன்பம் கொடுக்கும் எனச் சூதை வன்மையாக இடித்துரைக்கின்றார் வள்ளுவர்.

இவ்வாறெல்லாம் சூதைக் கண்டித்துரைக்க வேண்டும் என வள்ளுவர் எதனால் கருதினார், யாரை நோக்கிச் சூதாடக் கூடாது என்று வள்ளுவர் கூறினார் என்பதில் தமிழ் மரபுரை வழங்கிய பாவாணரிடையேயும் வடமொழி மரபைப் பின்பற்றி உரைவழங்கிய பரிமேலழகரிடையேயும் முரணுள்ளது.

கவறும் கழகமும் கையும் தருக்கி
இவறியார் இல்லாகி யார் **935**

சூதாட்டத்தை விடாதிருப்பவர் இல்லாதவர் ஆகிவிடுவார் என்பது இக்குறளின் சாறு. இங்கு வள்ளுவர் சுட்டியுள்ள இல்லாகியார் என்பதற்குச் சான்றாக, அவ் இவறுதலால் பாண்டவர் தம் அரசுவிட்டு வனத்திடைப்போய் ஆண்டு மறைந்தொழுகினர் என அனுபவம் காட்டியவாறு என மகாபாரதப் பாண்டவர் கதையைச் சுட்டுகிறார். அதாவது சூதாட்டத்தால் அரசிழந்து, நாடிழந்து, மானம் இழந்து, உடன்பிறப்புகளையிழந்து, மனைவியையும் இழக்க நேரிட்ட பாண்டவரை எல்லாமிருந்தும் சூதாட்டத்தினால் அனைத்தையும் இழந்து இல்லாமல் போனவர் என்று குறிப்பிட்டுள்ளார்.

இக்கருத்தை ஏற்பதில் பாவாணருக்குத் தடையுள்ளது. பரிமேலழகர் சான்று காட்டியது போல் வள்ளுவர் பாண்டவரைக் கொண்டுதான் இக்கருத்தைக் கூறினார் எனக்கொண்டால் இது வடமரபை நோக்கியதாக அமைந்துவிடும். எனவே, பரிமேலழகர் உரை பொருந்தாதென்க என்றுரைக்கின்றார். அதேவேளையில் பாவாணரின் மறுப்புரை வலுவில்லாததாகவே தோன்றுகிறது. அற இலக்கியக் காலத்தில் எழுந்த பிற பனுவல்களை ஒப்பிட்டுப் பார்க்கையில் இதற்கான உண்மை கிடைக்கிறது. அற இலக்கியங்களுள் திருக்குறள், பழமொழி நானூறு, ஏலாதி, திரிகடுகம், ஆசாரக்கோவை ஆகியன சூதின் தீமையை உணர்த்தியுள்ளன. இவற்றுள் பழமொழி நானூறு பின்வருமாறு உரைக்கும்.

பாரதத் துள்ளும் பணையம்தம் தாயமா(க)
ஈரைம் பதின்மரும் போரெதிர்ந் தைவரோ(டு)
ஏதில ராகி இடைவிண்டார் - ஆதலால்
காதலோ டாடார் கவறு *பழமொழி. 52*

அன்புடையாரோடும் விளையாட்டாகக்கூடச் சூதாடக் கூடாது என்ற கருத்தை வலியுறுத்த வந்த முன்றுறையரையனார் பாண்டவர்- கௌவரவர் சூதுப்போரினைப் பாடலுள்ளேயே அகச்சான்று காட்டிக் கூறியுள்ளார். எனவே பாரதக் கதையையும் கருத்தில் கொண்டுதான் என உம்மைத் தொகையிட்டு வள்ளுவர் இக்கருத்தை அமைத்துள்ளார் என அமைதி கூறலாம்.

யாரை நோக்கிக் கூறியது

இரண்டாவது, இது யாரை நோக்கிக் கூறியது என்ற முடிச்சு. தொல்காப்பியம் முதலான இலக்கண நூல்களுக்கும் திருக்குறள், திருமந்திரம் ஆகிய இலக்கிய நூல்களுக்கும் அதிகாரப் பகுப்பு, இயல் பகுப்பு ஆகியன இன்றியமையாதன. இவற்றுள் எந்தவொரு கருத்திற்கும் முழுமையான விளக்கம் அறியக் குறிப்பிட்ட கருத்து எப் பகுப்பில் எத்தலைப்பின்கீழ் வருகிறது என்பதைக் காணவேண்டும். அந்த வகையில் திருக்குறளில் சூது அதிகாரம் பொருட்பாலில் அரசியலுக்குரிய உறுப்பியலில் இடம்பெற்றுள்ளது. பொருட்பால் அரசரை நோக்கியது. இறைமாட்சியெனத் தொடங்குவது. நாடு, அமைச்சு, படைச்செருக்கு, அரண், ஒற்று என்றெல்லாம் வேந்தனுக்குரியதை மொழிவது. இப்பகுப்பினுள் ஒன்றாக வருவது சூது. எனவே, இவ்வதிகாரத்தில் கூறப்பெற்ற கருத்துகள் அரசனுக்குரியதாகக் கொண்டால் எந்நாட்டு அரசனை நோக்கியது என்று ஐயம் எழுகிறது.

கவறும் கழகமும் என மேற்குறிப்பிட்ட குறளுக்கு உரை எழுதியோரில் பரிப்பெருமாள், பரிமேலழகர், பழைய உரையாசிரியர் ஆகிய மூவரும் இக்குறள் அரசரை நோக்கிக் கூறியதாக உரை தந்துள்ளனர். பாவாணரும் தம் உரையில், இது பண்டு சூதாடித் தம் பொருள் முற்றுமிழந்த அரசரையும் செல்வத்தையும் நோக்கிப் பொதுப்படக் கூறிதாகும் என்கிறார். ஆனால், எந்த அரசர் என்று பரிமேலழகர் தவிர்ந்த பரிப்பெருமாள், பழைய உரையாசிரியர், பாவாணர் ஆகிய மூவரும் குறிப்பிடவில்லை.

யாவரும் அறிந்த வகையில் சூதாடி அனைத்தையும் இழந்த அரச மரபினர் பாண்டவர்கள். சூதாட்டத்தில் வல்லவனாக அறியத் தக்கவன் சகுனி. சூதாடி

யாவற்றையும் இழந்த மற்றொரு அரசன் நளன். நளனின் வாழ்க்கைதான் தளர்ந்து வந்த தருமருக்குத் தெம்பூட்டும் வகையிலும் ஊழின் உண்மைப் பொருளையும் வலிமையையும் உணர்த்தும் வகையிலும் கூறப்பட்டது. சகுனியைப் போல் நளன் கதையில் சூதாட்டத்தில் வல்லவன் புட்கரன். நளன் வடபுலத்தில் உள்ள ஒரு நாட்டின் அரசன். பாண்டவர் பேரரசினர். இவ்வடபுல வேந்தர்களே சூதாடி நாட்டை இழந்ததாக அறியக் கிடக்கிறது. மேலும், சூது என்பது ஒரு போராகவும் கருதப்பட்டதைச் சூதுப் போர்ச் சருக்கம் என்பது தெளிவுறுத்தும். மேலும், சூதுப் போர் என்பது வடபுல அரச மரபுகளுள் ஒன்றாகக் கூறப்படுகிறது. மன்னன் ஒருவன் மற்றொரு மன்னனுக்குச் சூதாட அழைப்புவிடுத்தால் அதனைத் தட்டாமல் சூதாட வரவேண்டும் என்பது அம்மரபு. அவ்வாறு விடுக்கப்பெற்று அழைப்பால் சென்று தோற்றவர்கள்தான் பாண்டவரும், நளனும்.

தமிழ் மரபில் மூவேந்தர்களுள் யாரும் சூதுப் போர் நிகழ்த்தியதாக இலக்கிய, வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. பழந்தமிழரின் போர் மரபினைப் பாடிய தொல்காப்பியப் புறத்திணையிலும் சூதுப்போர் என்பது பற்றி எந்தவொரு குறிப்பும் இல்லை. தமிழ்க்காப்பியமான சிலப்பதிகாரத்தில் பெருஞ்செல்வ மாசாத்துவன் மகன் கோவலன் தன் பொருட்களை முற்றும் இழந்து வெறுங்கையோடு வருகிறான். இவ்விடத்திலும் அவன் சூதாடிப் பொன், பொருட்களை இழந்ததாக இளங்கோவடிகள் கூறவில்லை. எனவே தமிழ் அரச மரபினருக்குரியதன்று இச்சூதுப்போர். இதிகாசங்களைத் தழுவிக் காப்பியம் படைக்கக் கருதிய புலமை வல்லாளனான கம்பன் தமிழ் மரபிற்கு ஒவ்வாத சூதுப்போரினைப் பாடுவதில் இடர் ஏற்படும் என்பதால் மகாபாரதத்தை விடுத்து இராமாயணத்தைக் கைக்கொண்டார் எனக் கருத இடமளிக்கிறது.

பிற்காலப் புறப்பொருள் இலக்கணியான ஐயனாரிதனார் தொல்காப்பியத்தில் இல்லாத புத்துறைகள் பலவற்றை மொழிகிறார். அவற்றுள் ஒன்று சூதுவென்றி. இதற்குக் கொளு இல்லாமல் பின்வருமாறு எடுத்துக்காட்டுப் பாடல் மட்டும் கொடுக்கப்பெற்றுள்ளது.

கழகத் தியலுங் கவற்றி னிலையும்
அழகத் திருநுதலா ளாய்ந்து - புழகத்து
பாய வகையாற் பணிதம் பலவென்றாள்
ஆய வகையு மறித்து

சூதின் இயல்பையும் கவற்றினுடைய நிலையையும் ஆராய்ந்து மனையிடத்து உபாயவகையால் சூது பலவும் வென்றாள், ஆதாயத்தின் கூறுபாட்டையுமறிந்து பாடுவது என்பது இதன் குறிப்பு. இங்கும் அரச மரபின் சூதுப்போர் குறித்துக் கூறவில்லை. மகளிர்மனையிருந்து ஆடும் பொழுதுபோக்கான விளையாட்டையே குறித்துள்ளது.

இதுகாறும் கூறியவற்றால் தமிழ் மன்னர் மரபில் இல்லாதது சூதுப்போர் என்பது அறியக் கிடக்கிது. எனின் திருக்குறள் சூது அதிகாரத்திற்கு எவ்வாறு அமைதி கூறுவது என்ற கேள்வி எழுகிறது. இத்தடைக்குப் பின்வருமாறு விடை கூறலாம்.

பரிமேலழகரோ அல்லது உரையாசிரியர்கள் பிறரோ குறிப்பிடுமாறு பொதுப்படையாகவோ அல்லது குறிப்பிட்டோ எந்தவொரு அரசரையும் இனம்

காண்பதற்குச் சூது அதிகாரத்தின் பத்துப் பாடல்களிலும் அகச் சான்றுகள் இல்லை. இவ்வொரு அதிகாரத்திற்கு மட்டுமின்றித் திருக்குறள் முழுமையிலும் யாவர் ஒருவரையும் சுட்டி இனம் காணமுடியாது; சுட்டியொருவர் பெயர்கொள்ளப் பெறாஅர் என்பது உயர்ந்த இலக்கியங்களின் பொதுமைப்பண்பும் தமிழரின் சிறப்புப் பண்புமாக அமைகின்றன.

நிறைவாகப் பரிமேலழகரின் கூற்று இக்கருத்திற்கு அரண் சேர்த்து அமையும். எல்லா நூல்களிலும் நல்லன எடுத்து எல்லார்க்கும் பொதுப்படக் கூறுதல் இவர்க்கு இயல்பு ஆகலின் (குறள் 322) என்று வள்ளுவர் குறித்துப் பரிமேலழகர் தம் முடிவிலிறுத்துள்ளார். அவ்வாறே இதனையும் கொள்ளுதல் இதற்கு அமைதி நல்கும்.

முடிவுகள்

மானுட மனத்தின் பன்முக இயல்புகளுள் சூழ்ச்சி என்பதும் பொதுவானது. அதன் வெளிப்பாடுகளுள் ஒன்று சூது.

தொல்காப்பியர் காலத்திலும் பாட்டுத் தொகைக் காலத்திலும் சூது என்ற சொல் சூதங்காய், உட்துளை எனும் பொருளிலேயே ஆளப்பெற்றுள்ளது. பிறகு சூதங்காயைக் கொண்டு ஆடப்பெறுவதால் இச்சொல் சூதாட்டத்திற்கானது. சூதாட்டத்திற்குரிய சூழ்ச்சி வஞ்சகம் ஆகியவற்றையும் சூது என்ற சொல் குறிக்கத் தொடங்கியது.

வடபுலப்பண்பாட்டில் உள்ள வழக்கை எடுத்துக்கொண்டு வள்ளுவர் அறவுரை கூறியுள்ளார் என்பதற்காகத் திருக்குறள் தமிழ்ப் பண்பாட்டிற்கு உரிமையுடைத்தன்றாகப் போய்விடுமோ எனப் பாவாணர் போன்றோர் அஞ்சத்தேவையில்லை. வடப்புலப் பண்பாட்டை மறுதலிக்கவே - மறுதலித்தே கூறியுள்ளார். சூதாட்ட அரச மரபை உடன்பட்டோ ஏற்புடைத்தாகவோ வள்ளுவர் மொழியவில்லை.

திருவள்ளுவர் காலத்திலோ - சற்று முன்னரோ பாரதத் துணைக்கண்டத்தில் ஒருகுடை ஆட்சியாகப் பேரரசு உருக்கொண்டிருக்க வேண்டும். அதன் வாயிலாகக் கருத்துப்பரவல் ஏற்பட்டிருக்கக் கூடும்.

புறப்பொருள் வெண்பாமாலை 'சூதுவென்றி' என்றொரு துறையையே பெருந்திணையின் ஒழிபியலில் அமைத்தது. இது வடபுல அரசமரபான சூதுப்போரின் தாக்கத்தாலேயாகும். ஏனெனில் புறப்பொருள் வெண்பாமாலைக் காலத்திலும் தமிழ் மன்னர்கள் யாவரும் சூதுப்போர் செய்ததாக வரலாற்று - இலக்கணச் சான்றுகள் இல்லை.

இது அரசர்க்குரியது, இது பொதுமக்களுக்குரியது என்று பிரித்துக் காண்பதற்குப் பாடல்களில் அகச்சான்றுகள் இல்லாதவாறு சூது அதிகாரத்தைப் பொதுப்படவே மொழிந்துள்ளார் திருவள்ளுவர்.

எந்தப் பண்பாட்டிலும் நல்லவை இருந்தாலும் அதனை ஏற்றும் தீயவை இருப்பின் அதனைக் களைந்தும் கண்டித்தும் உரைப்பது வள்ளுவரின் புலமைப்பண்புகளுள் ஒன்று. அவ்வாறு கண்டித்து உரைக்கப்பெற்றதுதான் சூது.

வள்ளுவம் தமிழ் இலக்கியம் என்பதினும் தமிழன் இயற்றிய உலக இலக்கியம் என்பது பெருமையுடைத்தாக அமையும்.

துணை நூல்கள்

முதன்மைச் சான்றுகள்

1. திருக்குறள் பரிமேலழகர் உரை, 2005, சாரதா பதிப்பகம், சென்னை.
2. தண்டபாணி தேசிகர், ச., திருக்குறள் உரைக்களஞ்சியம், பொருட்பால் - அங்கவியல், பகுதி இரண்டு, 1999, மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.
3. தேவநேயன் (உ.ஆ.),திருக்குறள் தமிழ் மரபுரை,...இந்து பப்ளிகேஷன்ஸ்,

துணைமைச் சான்றுகள்

1. அறவாணன், க.பா., அறஇலக்கியக் களஞ்சியம், 2009, தமிழ்க்கோட்டம், சென்னை.
2. ஆசிரியர் குழு, கலைக்களஞ்சியம், தொகுதி மூன்று, 1961, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை.
3. கணேசையர் (ப.ஆ.),தொல்காப்பியம் பொருளதிகாரம் முன்னான்கியல்களும் நச்சினார்க்கினியர் உரையும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
4. கதிரைவேற் பிள்ளை, தமிழ்மொழி அகராதி, 1981, ஏசியன் எஜுகேசனல் சர்வீசஸ், புதுதில்லி. (மறுஅச்சு)
5. கந்தையா, ந.சி., செந்தமிழ் அகராதி, 2009, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. கோபாலையர், தி.வே., தமிழ் இலக்கணப் பேரகராதி - பொருள் - புறம், 2005, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.
7. சோமசுந்தரனார், பொ. வே., (உ.ஆ.), ஐயனாரிதனார் இயற்றிய புறப்பொருள் வெண்பாமாலை, 1955, திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.
8. சோமசுந்தரனார், பொ. வே., (உ.ஆ), பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்கினியர் உரையும், 1956, திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை.

மொழியியலும் இலக்கியமும்
புலம்பெயர் பெண் படைப்பாளிகளின் சிறுகதைகள் : சமூகப் பண்பாட்டு அடுக்குகள் மீதான வாசிப்பு

திரு. த. அஜந்தகுமார்
தமிழ் முதுதத்துவமாணி ஆய்வு மாணவன்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

அறிமுகம்

ஈழத்து நவீன இலக்கிய வளர்ச்சியில் பெண்களின் இடம் மிக முக்கியமானது. ஆரம்பக்காலம் தொட்டே பெண்களின் பங்களிப்பு பல்வேறு வடிவங்களில் இருந்து வந்த போதிலும், 1980 களுக்குப் பிறகு வந்து சேர்ந்த பெண்ணியச் சிந்தனைகள் இலக்கியப் போக்கில் புதிய மாற்றங்களையும் புதிய பாதைகளையும் உருவாக்கின. 1980 களில் பெண்ணியச் சிந்தனையின் வரவும் போரின் எழுச்சியும் சிறுகதைத் துறையிலும் பெண்களின் பங்களிப்பை ஆழமாக்கின. 1990 களின் பின்னர் ஈழச்சிறுகதைகள் இன்னொரு பரந்த தளத்தை எட்டியது. பொருளாதார ரீதியான புலப்பெயர்வு, நாட்டின் அவலங்களிலிருந்து தப்புவதற்கான வெளியேற்றம் ஆகியன புலம்பெயர் இலக்கியங்கள் தோன்ற வழிசெய்திற்று. புலம்பெயர் இலக்கியங்களில் பெண்களின் பங்களிப்பு புதிய சூழலை இலக்கியத்தில் ஏற்படுத்தியது. கவிதை, சிறுகதை, நாவல், குறும்படம், புனைவுசாரா எழுத்துக்கள், இதழியல், இணையத்தள செயற்பாடுகள், பெண்கள் சந்திப்புக்கள் என்று நீளும் முயற்சிகளில் சிறுகதைத் துறையில் அவர்களின் பங்களிப்பை, சிந்தனையின் நீட்சிகளை இவ்வாய்வுக்கட்டுரை மூலம் வெளிப்படுத்த விழைகின்றேன்.

"முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை" என்று தொல்காப்பியம் கூறினாலும் ஈழத்துப் பெண்களின் வாழ்வும், பொருளாதார நிலையும், அவலமும் அவர்களை புலம்பெயர்ந்து செல்லச் செய்தது. புலம்பெயர்ந்த பெண்களுக்கு அடிமை அனுபவங்கள் தொடர்கின்றன. சுதந்திரத்தருணங்களும் சில நேரங்களில் வாய்க்கவே செய்கின்றன. எனவே தமது வாழ்வை புதிய சூழலில் அனுபவிக்கும் பெண்களின் "ஆறாம்திணை" அனுபவங்கள் சமூக பண்பாட்டு அடுக்குகள் ஊடாக சிறுகதைகளில் எவ்வாறு வெளிப்பட்டிருக்கின்றன என்பதை நோக்குவோம்.

1.0. புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள்

புலம்பெயர்ந்து வாழும் பெண்களின் சிறுகதைகள் அங்கு வெளிவரும் இதழ்களிலும், இணையத்தளங்களிலும், சந்திப்புமலர்களிலும், கூட்டுத் தொகுதிகளிலும் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஆயினும் இக்கட்டுரை கூட்டுத் தொகுதியாகவும் தனித்தொகுதிகளாகவும் வெளிவந்தவற்றை

அடிப்படையாகக் கொண்டே எழுதப்படுகிறது. அந்த வகையில் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாளைக்கு இன்னொருத்தன் (1997), அம்மா என்றொரு பெண், அரைகுறை அடிமைகள் (1998), இலையுதிர்காலத்தில் ஒரு மாலை நேரம் (2002), சுமதிரூபனின் யாதுமாகிநின்றாள் (2003), உறையும் பனிப் பெண்கள் (2010), லதா உதயனின் ஒரு நதியின் தேடல் (2001), நிரூபாவின் ... சுணைக்குது (2005), சந்திரா ரவீந்திரனின் நிலவுக்குத் தெரியும் (2012), அருண் விஜயராணியின் கன்னிகாதானங்கள் (1990), விக்னா பாக்கியநாதனின் இதயச்சிறை (2000), சந்திரவதனா செல்வக்குமாரனின் மன ஓசை (2007) ஆகியவை குறிப்பிடத்தக்கவை. இதைத்தவிர 24 புலம்பெயர் பெண்களின் சிறுகதைகளை உள்ளடக்கிய "புதுவசந்தம் எமை நோக்கி" என்றதொகுதி 1999இல் வெளிவந்திருந்தது. இத்தொகுதியில் உள்ள சிறுகதைகள் ஜெர்மனி, நார்வே, இங்கிலாந்து, சுவிஸ், கனடா ஆகிய நாடுகளில் வாழும் பெண்களால் எழுதப்பட்டிருந்தன. புலம்பெயர் பெண்களின் இந்தச்சிறுகதைகள் வெளிப்படுத்தும் பொருண்மைகளும் அவற்றால் வெளிப்படும் சமூகப் பண்பாட்டு அடுக்குகளில் பெண்நிலை அனுபவங்களும் அவர்கள் முடிவுகளும் சிந்தனைகளும் ஆய்வுப் பொருளாகின்றன.

2.0.புலம்பெயர் பெண்களது சிறுகதைகளின் உள்ளடக்கம்

பெண்களை இரண்டாம் நிலைக்குத் தள்ளும் ஒரு சமூகத்தில் பெண் எழுத்தின் ஆளுமை என்பது அச்சமூகத்திற்கு எதிரான நடவடிக்கையாகவும், சுத்திகரிப்புச் செயலாகவும் அமைகிறது. கிணற்றுத் தவளையாகவும், அடுக்களை அரசியாகவும் இருந்த பெண்கள் சர்வதேசத்தைத் தழுவி எழும் தம் அனுபவங்களையும் அங்குச் சந்திக்கும் வலிகளையும் பால்நிலையில் ஏற்பட்டிருக்கக் கூடிய சில சுதந்திரங்களையும் புலம்பெயர் தேசங்களில் பதிவு செய்து வருகிறார்கள்.

பெண் என்ற பால்நிலையின் மீதான ஒடுக்கு முறைகளையும், அவள் சுயத்துடன் தெரிவு செய்யும் ஒருபால் உறவு உள்ளிட்ட பாலியல் சுதந்திரத்தையும், ஆணின் அதிகாரத்தின் மீது கேள்வி எழுப்புவளாகவும், அதில் நசிபடுபவளாகவும், பண்பாட்டுப் பெறுமானங்களை அவாவுகின்ற அதே வேளையில் பண்பாட்டின் மீது மறுவாசிப்பைக் கோருபவளாகவும், மேற்கத்தைய கலாச்சாரத்துடனான இணைவையும், அதனால் வரும் சாதகபாதகங்களை ஆராய்பவளாகவும், தனது நாட்டில் ஏற்பட்ட போர் ஏற்படுத்திய அவலங்களையும், தனது உணர்வையும் துயரையும், தீர்க்கமான அரசியல் எண்ணங்களையும், புலம்பெயர்ந்து வந்த பெண்கள் சந்தித்து வரும் ஏமாற்றங்களையும் என்று இவர்கள் கதைகள் ஏராளமான விடயங்களைப் பேசுகின்றன. இவற்றைப்பற்றிய ஆய்வென்பது பெண்ணிய ஆய்வாகவும் சமூகவியல் ஆய்வாகவும் ஏன் மானிடவியலாய்வாகக்கூட பரிணாமம் கொள்வதைக் காணலாம்.

2.1 பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள்

புலம்பெயர் நாட்டுப் பெண்களின் சிறுகதைகளில் பெண்களின் பிரச்சினைகள் வெளிப்படுவதைக் காணலாம். 1980களில் நுழைந்து கொண்ட

பெண்ணியச் சிந்தனைகள் 1990களில் எழுச்சி கொண்ட வேளையில்தான் புலம்பெயர் நாடுகளிலிருந்தும் பெண்களால் சிறுகதைகள் படைக்கப்படத் தொடங்கின. இந்த இணைவும் எழுச்சியும் முக்கியமானதாகும்.

எவ்வளவு காலம் சென்றாலும் ஆண் - பெண் பாகுபாட்டில் ஓரவஞ்சனை தொடர்வது, ஆணுக்கான தயார் படுத்தலுக்காகவே பெண் தன்னைத் தகவமைத்துக் கொள்ள வேண்டிய சூழல், பாலியல் தொந்தரவைக் கணவனாலும் ஏனையவர்களாலும் எதிர்கொள்ளுதல், புரிதலற்ற கணவனுடனான வாழ்வுதரும் சிக்கல்கள், கானல்நீராய்த் தம் எதிர்பார்ப்புகள் கண்ணுக்கு முன்னாலேயே பொய்த்துப் போகும் அவலங்கள், தனது கணவன் எதிர்பார்த்ததற்கு மாறாக இருந்தபோது ராஜகுமாரனை நினைத்தேங்கும் கனவுலக வாழ்க்கை, மகிழ்ச்சிக்கும் துயருக்குமிடையில் நிரந்தர மின்மைகளில் குறுகியிருக்கும் வாழ்வு, பெண்களைத் தவறு செய்யப் பிறந்தவர்கள் எனக்கருதும் சமூகத்தால் வரும் பிரச்சினைகள், போலி முகங்களுடன் பெண்ணை அணுகும் ஆண்களின் குரூரமுகங்கள், வேலைக்குப் போகமுடியாமல் இயந்திரங்களாக ஆண்களால் முடக்கப்பட்ட பெண்கள், விதவைப் பெண்கள், முதிர்கன்னிகளின் உணர்ச்சிகள், கணவன் கொடுமைக்கு ஆளாகுதலையும் அதனால் தற்கொலை செய்பவர்களாகவும், மனநோயாளிகளாகவும் மாறுகின்ற பெண்களையும் என்று புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள் பல பிரச்சினைகளை உக்கிரத்துடன் பேசுகின்றன.

பெண் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளுக்கான பிரதானமான காரணமாக விளங்குவது ஆணின் அதிகாரப் போக்கே ஆகும். காமத்துக்குரியவளாக அவளை எண்ணுதல், தனது தவறுகளை நியாயப்படுத்தல், தனக்குத் தகுதி இல்லாவிடினும் அதனைப் பெண்ணிடம் எதிர்பார்த்தல், தமக்கொரு நியாயம் பெண்ணுக்கொரு நியாயம் என எதிர்பார்த்தல், குடி, சந்தேகம், அடி, தாம் தவறான வழியில் சென்று கொண்டு மனைவியும் அவ்வாறு இருப்பாளோ என நினைத்தல், எல்லாச் சுமைகளையும் பெண்களே சுமக்க வேண்டும் என்றும் சுகங்களை தாம் அனுபவிக்க வேண்டும் என நினைக்கும் ஆண்கள் என்று இவர்களின் அதிகாரக்கரங்கள் நீண்டு விரிவதைச் சிறுகதைகள் பிரதிபலிக்கின்றன. இதனூடாக பெண்களின் பிரச்சினைகள் வெளிக்கிளம்புவதை சில எடுத்துக்காட்டுகளினூடாகப் புரிந்துகொள்ளலாம்.

ஆணுக்கான தயார்படுத்தலுக்காகவே பெண் இருக்கிறாள் என்பதை நந்தினியின் "மூளைக்குள் ஓர் சமையலறை" என்ற கதை பேசி நிற்கின்றது. இங்கு இத்தலைப்பே எம் கவனத்தை ஈர்த்துவிடுகின்றது. சுருதியின் "ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீளமுடியும்" என்ற சிறுகதை தனது பிள்ளையுடன் தண்டவாளத்தில் விழுந்து தற்கொலை செய்து கொண்ட பெண்ணை நினைத்துத் தண்டவாளம் எழுப்பும் கேள்விகள் பெண்கள் சந்திக்கும் பிரச்சினைகளுக்கான மூலவேர்களை இனங்காட்டுகின்றன.

"என்ன அவலமான சாவு? ஏன்? அவளைச் சிதைத்தவர்கள் யார்?
நோகடிச்சு இந்த முடிவெடுக்கப் பண்ணி வதைத்தது எந்த மிருகம்?

> உன் உணர்வுகளைக் கொத்தி, சிதைத்து, குழியில் போட்டதுன் கணவனா? குடும்ப உறவுகளா? சமூகமா? ஏன்? அவளை விரும்பிய பாதையில் போகவிடாமல் தடுத்தது அவளது கலாசாரமா? அல்லது பெண்களையே தாயிலும் கீழாக இரண்டாம்தரப் பிரஜையாக உணர்வுகள் அற்றவளாக புருசனிலும் பிள்ளையிலும் தங்கி வாழப்பண்ணி சேவகம்செய்யப் பண்ணும் மதமா"

கணவனால் எவ்வகையான துன்பங்களை எல்லாம் உடலியல் ரீதியாக இவர்கள் அனுபவித்தார்கள் என்பதை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் கற்புடைய விபச்சாரி என்ற கதை கூறி நிற்கின்றது.

> "அவன் உதைத்த தாக்கத்தில் அவள் மயங்கி விழுந்து எழுந்தபோது அவள் கால்களுக்கிடையில் இரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது . ரொயிலெற்றில் தொப் என்று விழுந்தது வெறும் இரத்தக்கட்டியல்ல. தான் சுமந்த குழந்தை என்றதும் அவள் துடித்துப் போய்விட்டாள்"

தனது பொருளாதார மேம்பாட்டிற்காக உழைக்கப்போய்க் குழந்தைகளைக் கவனிக்க முடியாமல் அவர்களின் நோய்களுக்கும், எதிர்காலச் சிதைவிற்கும் காரணமாக இருக்கும் பெண்ணின் உணர்வை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "வளர்மதியும் வாசிங்மிசினும்" என்ற கதை காட்டுகிறது.

> "இந்த மிசினுக்கு ஆசைப்பட்டு லீவில்லாமல் வேலை செய்யாமல் குழந்தையின் வருத்தத்தை உடனே கண்டு பிடித்திருந்தால் இப்போது வளர்மதி இப்படி இருக்க வேண்டி வந்திருக்குமா?"

இங்கிருந்து செல்லும் பெண்கள் புலம்பெயர் சூழலில் கணவனால் நோயாளிகளாகவும் மனநோயாளிகளாவும் ஆகிவரும் சூழலைப் பல கதைகள் பேசுகின்றன. சந்திரவதனா (ஜெர்மனி) என்பவர் தனது கட்டுரை ஒன்றில்,

> "புலம்பெயர்ந்திருக்கும் ஆசிய தமிழ்ப் பெண்களில் நூற்றுக்குத் தொண்ணூறு வீதமானவர்கள் ஏதோ ஒருவித மன அழுத்தத்திற்கு ஆளாகியிருக்கிறார்கள்"

என்று குறிப்பிடுவது முக்கியமானது இதையே ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "மஞ்சுளா" என்ற கதை பேசுகிறது.

> "லண்டனில் ஏராளமான ஆசியப்பெண்களுக்குப் பைத்தியம் வருகிறது அவர்களுள் மஞ்சுளாவும் ஒருத்தி என்று சொல்லப்படலாம்"

விதவைப் பெண்களின் துன்பம் இலங்கையில் மட்டுமல்ல பண்பாட்டு அழுத்தத்துடன் கனடாவிலும் தொடர்வதைச் சுமதிரூபனின் "மூளி" என்ற கதை பேசுகிறது. முதிர்கன்னிகள் படும் துன்பத்தை அவர்களில் ஊற்றெடுக்கும் உணர்ச்சிக் கொந்தளிப்புகளைப் புரிந்து கொள்ளாத சமூகத்தை, சுமதிரூபனின்

"உறையும் பனிப்பெண்கள்" என்ற சிறுகதை பேசுகிறது. தன்னுடைய தம்பியை நோக்கி வனஜா என்ற பாத்திரம் எழுப்பும் மனக்கேள்விகள் கவனத்திற்குரியவை.

> "உன்னால சாப்பாடு போட முடியும். உடுப்பு வாங்கித்தரமுடியும். அதுக்கு மேலால் எனக்கொரு தேவை இருக்கிறது என்பது எப்படி உனக்குத் தெரியாமல் போனது ராஜன்? இரவில் உன் அறையில் கட்டிலின் சத்தம் என்னை ஒன்றும் செய்யாது என்று எப்படி நம்பினாய் "அப்பா அம்மா கூட இப்பவும் ...ச்சீ எதையல்லாம் என் மனசு நினைக்கிறது "[6]

பிள்ளைகள் இல்லாத பெண்களுக்கு நிகழும் சமூக ஒதுக்கத்தை எனக்கும் ஒரு வரம் கொடு? என்ற சுமதிரூபனின் கதை பேசுகிறது. தன் கணவன் எதிர்பார்த்ததற்கு மாறாக அமைந்திருக்கும்போது வேறொரு ராஜகுமாரனை நினைத்தேங்கும் கனவுலக வாழ்க்கை புலம்பெயர் பெண்களிடம் காணப்பட்டதைச் சுமதிரூபனின் "ராஜகுமாரனும் நானும்" என்ற சிறுகதையும், ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "நாளைக்கு இன்னொருத்தன்" என்ற சிறுகதையும் பேசிநிற்கின்றன.

பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் மிகவும் பிரதானமானதாக பாலியல் ரீதியில் சுரண்டல் விளங்குகிறது. பெண்ணைப் பாலியல் இயந்திரமாகப் பார்த்தல் இதனைத் தீர்மானிக்கின்றது. சிறு பெண்பிள்ளைகள் முதல் இதற்குப் பலியாகின்ற கொடூரத்தை இவர்களின் கதைகள் பேசுகின்றன. முதுமை என்ற வேசத்திலும் உறவு என்ற போர்வையிலும் காட்டு மிருகமாய் வேட்டையாடுதல் (ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் மஞ்சுளா, சொக்லேட் மாமா, சுமதி ரூபனின் வடு) வெளிநாட்டுக்கு அழைத்துச் செல்லும் போது ஏஜென்சிக்காரர்கள் தெரியாத இடங்களுக்குப் பெண்களைக் கூட்டிச் சென்று வெருட்டி வன்புணர்வுக்கு ஆளாக்குதல் (நிருபாவின் தஞ்சம் தாருங்கோ, சுமதி ரூபனின் யாதுமாகி நின்றாள்) வேலைக்குச் செல்லுமிடங்களில் அவள் மீதான துஷ்பிரயோகங்கள் (தேவாவின் சுரண்டலின் சொடுக்குகள், உதயபானுவின் வேலைக்காரிகள் (ஒரு பெண்ணைப் புகழ்ந்து சபலமுற வைப்பது அவளை அடையநினைக்கும் வக்கிரம் (காவேரியின் நீயும் ஒரு சிமோன் தி போவுவா போல) தனது அக்காவின் கணவனால் சுரண்டப்படல்(சுமதி ரூபனின் அமானுஸ்ய சாட்சியங்கள்), பொது வெளியில் பாலியல் பண்டமாக அவளை நோக்குதல் என்று வரிசைப்படுத்திச் செல்லலாம்.

நிரூபாவின் -சுணைக்குது என்ற தொகுதியில் உள்ள கதைகள் முற்று முழுதாகச் சிறுவர்கள் மீதுள்ள பாலியல் துஷ்பிரயோகங்களைப் பேசுவது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு பொருளாதாரச் சூழலாலும் போலிப்பண்பாட்டுப் பெறுமானங்களாலும் பாலியல் சுரண்டலாலும் மேற்கத்தைய கலாச்சாரத்தாலும் குடும்ப அமைப்பினாலும் நாளும் நாளும் வேதனையை அனுபவிக்கும் பெண்களின் பிரச்சினைகள் அனுமான் வாலாய் நீண்டு செல்கின்றன. இப்பிரச்சினைகளைப் பெண்களின் சிறுகதைகள் ஒருவகையான சீற்றத்துடனும், ஆற்றாமையுடனும், அவலத்துடனும் வெளிப்படுத்தியுள்ளன.

2.2 பண்பாட்டுள் கட்டுப்படும் பெண்

எமது கலாச்சாரத்தை, பண்பாட்டை எமக்கான பாதுகாப்பு வேலியாகக் கருதுகிறோம். அது பல நேரங்களில் பெண்ணை அடக்குவதற்கான கருவியாகவும் அமைந்துவிடும் அபத்தம் நிகழ்ந்து விடுகின்றது.

நல்ல கணவனுக்காக அடக்கத்துடன் காத்திருக்கும் பெண்களை, அடுப்படிக்குரியவளாய், பெண்ணை நினைக்கும் சமூகத்தை, ஆண்கள் எப்படியும் இருக்கலாம் பெண்தான் அடங்கி வாழ வேண்டும் என்ற அதிகாரத்தை, கணவன் விருப்பத்திற்கு ஏற்ப நடக்க வேண்டும் என்று ஏற்படுத்தப்படும் சூழலை, புருசன் துன்பப்படுத்தினாலும் அவனோடு வாழ வேண்டும் என்று விதிக்கும் நிலையை, இத்தகைய தளைகள் மேற்கத்தைய பெண்களிடமிருந்து குறைந்த ஆற்றலுடையவர்களாய் இவர்களை ஆக்கியிருக்கும் தன்மையைப் புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள் பதிவு செய்துள்ளன. ராஜேஸ்வரி பாலசுப்பிர மணியத்தின் "மஞ்சுளா" என்ற சிறுகதையில் மஞ்சுளா என்ற பாத்திரம் இவ்வாறு தான் உருவாக்கப்பட்டிருக்கிறது.

> "அந்தக் காலத்தில் மஞ்சுளா அக்கா மிகவும் அடக்கமான பெண்ணாக வீணை பழகி, கோயிலுக்குப் போய் விரதங்கள் பிடித்து சீதனம் சேர்த்து, ஒரு நல்ல மாப்பிள்ளைக்குக் காத்துக் கொண்டிருந்தாள்"

பண்பாட்டு இறுக்கத்தால் அடுப்படிக்குரியவளாகவே பெண் மாறிப் போன அவலத்தை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் "நாளைக்கு இன்னொருத்தன்" சிறுகதையிலும் "மூளைக்குள் ஓர் சமையலறை" என்ற நந்தினியின் சிறுகதையிலும் காணலாம். நாம் உருவாக்கி வைத்திருக்கும் பண்பாட்டுப் பெறுமானங்களும் குடும்ப அமைப்பும் பெண்ணை அவளது சுதந்திரத்திலிருந்தும் உரிமையிலிருந்தும் பிரித்து விடுவதைக் காண்கிறோம். இலங்கையில் இருந்து சென்ற பெண்களுக்கும் அங்கேயே பிறந்து வளர்ந்த இதர பெண்களுக்குமான வேறுபாட்டைக் "கற்புடைய விபச்சாரி" "நாலாம் உலகம்" என்ற கதைகளில் ராஜேஸ்வரி காட்டுகின்றார்.

இவ்வாறு பண்பாடும் குடும்ப அமைப்பும் ஒழுங்கையும் பெருமையையும் எமக்களித்து வந்தாலும் பெண்ணிலை நின்று பார்க்கின்ற போது மறுவாசிப்புக்கான கோருதலை எமது பண்பாடு கொண்டிருக்கிறது.

2.3 புலம்பெயர் சூழலில் தமிழர் பண்பாடு எதிர்நோக்கும் சிக்கல்கள்

புலம்பெயர்ந்து சென்றவர்கள் மேற்கத்தைய கலாச்சாரச் சூழலில் வாழ முற்படுகின்ற போது ஏற்படும் பண்பாடு சார்ந்த சிக்கல்கள் கவனத்திற்குரியவை. எமது கலைகளும், பண்பாட்டுப் பெறுமானங்களும் அழிந்து போதலும், மாற்றமுறுதலும், குடும்ப அமைப்புகளின் குலைவுகளும், மேற்கத்தைய பண்பாடுகளுடன் எமது தமிழ்ப்பெண்கள் சேருகின்ற நிலைமையும், சடங்குகளையும் கலாச்சாரங்களையும் பெண்களை அடக்குவதற்காக ஆண்கள் கையாளுகின்றபோது அவற்றின் மீது கேள்வியெழுப்பியபடி அவற்றில்

தம்மளவிலான ஏற்படுத்தியபடி பெண்கள் பயணிக்கும் சூழலை இவர்களது சிறுகதைகள் காட்டி நிற்கின்றன.

புலம்பெயர் சூழலில் கலைகளுக்கு ஏற்பட்ட இழிவினை ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் "எய்தவர் யார்?" என்ற கதையில் காட்டுகிறார்.

"கலைக்கும் காசுக்கும் என்ன தொடர்பு என்பது லண்டனுக்கு வந்த பின்னர் தான் விஸ்வரூபமாகத் தெரிந்தது. கலையின் தெய்வீகத் தன்மை காசின் காலடியில் சதிராடுகிறது. பரதத்தின் முத்திரைகள் பணத்தின் பிரதிபலிப்பாகின்றன "[8]

பெண்ணைத் தமிழ்ப் பண்பாட்டைக் காப்பவளாகவும் தன்னை மேலைநாட்டுக் கலாசாரத்தின் சேவகனாகவும் கருதும் ஆண்களால் உருவாக்கப்படும் பண்பாட்டு இடைவெளிகளை லதா உதயனின் "ஒருநதியின் தேடல்" விக்னா பாக்கியநாதனின் "மாறியதுநெஞ்சம்" ஆகிய கதைகளில் காணமுடிகிறது.

"நான் சாதாரணமாக ஆரோடையும் சும்மா கதைச்சாலே சந்தேகப்படுகிற அவன் தன்னோட வேலை செய்யும் நட்பைப் படுக்கை வரையும் கொண்டு போயிருக்கிறான் நான் கேட்க இஞ்சத்தைய கலாசாரம் நான் ஆம்பிள என்று துணிவாய் விசர்க்கதை கதைக்கிறான் என்னை எங்கடை பண்பாட்டைச் சொல்லி எல்லா விதத்தையிலும் அடக்கி வைச்ச அவன் தான் மட்டும் எப்படி எல்லாத்தையும் மீறலாம்."[9] (ஒரு நதியின் தேடல்)

இவ்வாறான சூழலில் தான் திருமணம், கற்பு ஏன் ஒட்டுமொத்த கலாசாரம் மீது பெண்கள் கேள்வியெழுப்ப வேண்டிய நிலை ஏற்படுகின்றது. இதனை ராஜினி தனது அத்துமீறல் என்ற கதையில் பின்வருமாறு கூறுகிறார்.

"நிலம் பார்த்து நடக்கின்ற பண்டைய தமிழ்ப் பெண்களின் கேடுகெட்ட கதையைக் கூறிக்கூறியே இன்றைய காலத்துப் பெண்ணை ஆணுக்குப் பலியாக்கப் பார்க்கிறது யதார்த்தத்தைப் புரிந்து கொள்ளமால் அப்பழுக்கற்ற ஒழுக்கமுடைய ஒரு சமூகத்தைக் தன்னைக் கற்பனை செய்து கொள்வதில் திருப்தி அடைகிறது. அது மாத்திரமல்ல அந்த கற்பனையில் சஞ்சரித்தபடி ஏனைய சமூகங்களின் கலாச்சாரப் பழக்கவழக்கங்களுக்குக் கண்ணாடி மாளிகையிலிருந்து கல்லெறியவும் செய்கிறது. என்று தான் இந்தக் கண்ணாடி மாளிகை நொறுங்கப் போகிறதோ பாவம் கற்புடைய தமிழ்ச்சமூகம்"[10]

ராஜேஸ்வரியின் "இன்னும் சில அரங்கேற்றங்கள்" கதையும் பண்பாட்டை விமர்சிக்கின்றது. தமிழ்ப் பண்பாடு புலம்பெயர் சூழலில் அழிந்து போகும் அவலத்தை மூத்த தலைமுறையினரின் குரலாய்ப் பதிவு செய்தலை அருண் விஜயராணியின் "கன்னிகா தானங்கள்" என்ற கதையில் காணலாம்.

"கன்னி கழிந்த தன் மகள்மீண்டும் கன்னிகாதானம் செய்யப்படுவதைக் கண் கலங்கப் பார்த்துக் கொண்டிருந்தார் இராமநாதன்" [11]

அதே நேரத்தில் இலங்கையிலுள்ள சடங்குகள் புலம்பெயர் தேசத்தில் அடையும் மாற்றத்தைச் சுமதிரூபனின் "மூளி" என்ற கதைபேசுகிறது.

மேலும் காமம், பொழுதுபோக்குக்காக வெள்ளைக் காரியையும் குடும்ப அமைப்பிற்காகத் தமிழ்ப் பெண்களையும் தெரிவு செய்யும் ஆண்களின் இரண்டக நிலையையும் இதனால் திருமணம் தேவையா? ஏன்ற கேள்வியுடன் புறப்படும் பெண்களையும் காணமுடிகிறது. இதனைச் சுகந்தி, கலியாணச் சீரழிவுகள் என்ற கதையில் பின்வருமாறு கூறுகிறார்.

> "தனது குடும்பத்திற் கென்றே உழைப்பது என்ற அவளது மனதில் இப்போது எந்தவிதச் லனமும் இல்லை கலியாணம் செய்வது ஒரு பெண்ணுக்கு இன்பமான ஒரு பொய் என உணர்ந்தாள்."[12]

தமிழ்ப்பெண்கள் மேற்கத்தைய பண்பாட்டிற்குள் உள்வாங்கப்பட்டுச் சீரழிந்து போகும் சூழலைச் சுமதிரூபனின் பவர்கட், சூன்யம் ஆகிய கதைகள் பேசுகின்றன.

சாதி,இனம், வர்க்கம் ஆகியவற்றால் பாதிக்கப்பட்ட தமிழர்கள் நிறப்பாகுபாட்டினால் அனுபவித்த துன்பங்களை இவர்கள் பேசுகின்றார்கள். நாங்கள் கறுப்பர்கள் தானே என்று தமிழர்களின் தாழ்வுணர்ச்சியும் கலப்பு நிறமான மனிதர்களை வேட்டையாடும் பொலிஸ், ஆசியர்களை நோய் பரப்ப வந்தவர்களாகவும் தமது காசையும் வேலையையும் சுரண்ட வந்தவர்களாகப் பார்ப்பதையும் காணலாம். இதனை ராஜேஸ்வரியின் எய்தவர் யார்?, வளர்மதியும் வாசிங்மெசினும், உஷா ஓடிவிட்டாள் ஆகிய கதைகளில் காணலாம்.

> "இன்னும் ஐம்பது வருடத்தில் இங்கிலாந்தில் வெள்ளைக்காரனுக்கு இருக்க இடமில்லாமல் போகப்போகுது. இவர்கள் பன்றிக்குட்டிகள் மாதிரி பத்தும் பதினைந்தும் பெத்துப் போட்டு அவர்களை வளர்க்க வீடும் காசும் கொடுக்க வேண்டும்.. இந்த நாய்களை எல்லாம் நாட்டை விட்டே வெளியேற்ற வேண்டும்."[13] (எய்தவர் யார்)

இவ்வாறாகப் புலம்பெயர் சூழலில் ஏற்பட்ட பண்பாட்டு மாற்றத்தை, அழிவை, கேள்விகளை இவர்கள் கதைகள் ஆழமாகப் பேசி நிற்கின்றன.

2.4 பெண் விடுதலையுணர்வு

புலம்பெயர் சூழல் பெண் தனக்கெதிரான அடக்குமுறையில் இருந்து விழித்துக் கொள்வதற்கும், தனது பாதையைத் தனித்துவத்துடன் அமைப்பதற்கும், அதிகாரத்திற்கு எதிராகக் குரல் கொடுப்பதற்கும், குடும்ப அமைப்பில் இருந்து வெளியேறுவதற்கும், ஆணின் துணையைக்கூட நிராகரிப்பதற்கும் வழி வகைகளைச் செய்திருக்கிறது. தனது கலாச்சாரத்தின் தேவையற்ற பக்கங்களை உதறியெழும் பெண்களை இவர்களது கதைகள் காட்டுகின்றன.

குடும்பம் என்ற வட்டத்துள் அடங்கிவிடாமல் ஆண் - பெண் உறவைத் தொடருகின்ற பெண்களின் புதிய சூழலைச் சுமதிரூபனின் பெண்கள்: நான் கணிக்கின்றேன், 40 வசந்திராஜாவின் வடிகால் ஆகிய கதைகளில் காணலாம். "நான் நினைக்கேல்ல நான் கலியாணம் கட்டுவன் என்று லிவிங் டு கெதர் இஸ் ஓக்கே வித் மீ"[14]

பெண்கள் தமது பாலியல் சுரண்டலுக்கு எதிராகக் குரல் கொடுத்து நிற்பதனை ராஜேஸ்வரியின் "இப்படியும் கப்பங்கள்" என்ற கதையில் காணுகின்றோம்.

> "பெண்களுக்கு விடிவு பெண்மையின் சீற்றத்தில்தான் விடியும். பொறுமைக்கும் ஓர் அளவுண்டு. லலிதாவின் கைகள் பொலிசின் கைகளைச் சுழட்டுகிறது கண்ணகிகள் இன்னும் சாகவில்லை."[15]

குடும்பம் என்ற அமைப்பை விட்டுச் சுதந்திரமாகப் புறப்படும் பெண்ணை, லதா உதயனின் ஒரு நதியின் தேடல், சுகந்தியின் கானல் நீர் ஆகிய கதைகளில் காண்கின்றோம். ஆணின் துணை கலை வளர்ச்சிக்குத் தேவையில்லை என்றும் சில சிறுகதைகள் உணர்த்துகின்றன. அது மட்டுமல்ல புலம்பெயர் சூழலில் சட்டங்கள் பெண்விடுதலையாகத் துணை செய்கின்றன. இதற்கு இலங்கையில் வாய்ப்பு இல்லை என்பதை இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் நாடகங்கள் தொடரும் என்ற கதையில் காட்டுகின்றார்.

> "இலங்கையில் அரசாங்கம் காசு கொடுத்தா எத்தனையோ பொம்பிளையள் தப்பித்தோம் பிழைத்தோம் என ஓடித்தான் போவினம்."[16]

இவ்வாறாகப் புலம்பெயர் பெண்படைப்பாளிகளின் சிறுகதைகள் சமூகப் பண்பாட்டு அடுக்குகள் ஊடாகப் பெண்ணின் பிரச்சினைகளை, பண்பாட்டுச் சிக்கல்களை, பெண்ணியச் சிந்தனைகளை அங்குள்ள சூழலின் ஊடாக வெளிப்படுத்தியுள்ளதைக் காணலாம்.

3.0 வெளிப்பாடுகளும் தனித்துவங்களும்

பண்பாட்டின் அடையாள நெருக்கடிகளையும், பண்பாட்டு மாதிரிகளாகச் செயற்பட வேண்டிய அவலங்களையும், தமிழர் பண்பாட்டோடு மேற்கத்தைய பண்பாட்டுச் சூழலில் வாழ வேண்டிய இரட்டைப் பண்பாட்டுச் சுமை அனுபவங்களையும், இதிலெல்லாம் சமூக விளிம்புநிலைக் குழுவாக வன்முறையும் ஒடுக்கு முறையையும் சந்திக்கும் பெண்களின் வாழ்க்கையையும் அவர்களின் கதைகள் தீவிரமாகப் பேசி இருப்பதைக் கண்டோம். இக் கதைகள் தனியே விமர்சனங்களாகவோ அனுபவங்களாகவோ விவரணங்களாகவோ மாத்திரம் குறுகிவிடாமல் புதிய வெளிப்பாடுகளின் ஊடாகத் தம்மைச் செம்மைப் படுத்தியுள்ளன. புலம்பெயர் பெண் எழுத்தாளர்களில் சுமதிரூபன், நிரூபா, ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் தொகுதியாக வெளிவராவிட்டாலும் பிரதீபா தில்லைநாதன் ஆகியோர் கவனத்திற்குரியவர்கள்.

சுமதிரூபன் குறும்பட இயக்குனர் என்பதால் மிகவும் நுண்மையான முறையில் பெண்ணிலை அனுபவங்களை வெளிப்படுத்தியுள்ளார். அவரது அனுபவமும் மொழியும் இணைந்து கொள்ளும் விதம் கவிதையைப் போன்றது. நிரூபாவின் கதைகள் பால்ய வயதில் இடம்பெறும் வன்முறைகளைச் சிறுவர்களின் உளவியலோடு சேர்ந்து சொல்லுகின்ற தனித்துவமான கதைகள். அதில் வெளிப்படும் உளவியலும் அனுபவமும் குழந்தை மொழியும் மிக உச்சமானவை. நாற்பது வருடங்களுக்கு மேலாக இலண்டனில் வாழ்கின்ற இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியத்தின் கதைகள் இங்கிருந்து செல்லும் பெண்கள் அனுபவிக்கும் துன்பங்களை, விளிம்பு நிலைப் பாத்திரமாய்த் தவிக்கும் நிலையைப் பல்வேறு கோணங்களில் வெளிப்படுத்துகின்றன. இவரிடம் அரசியல் ரீதியான தீர்க்கமான எண்ணமும் இருக்கின்றது. மருத்துவத்துறை சார்ந்த அனுபவங்களையும் இவர் கதைகள் கொண்டிருப்பது முக்கியமானது. பிரதீபா தில்லை நாதனின் கதைகள் மொழியின் புதிய சாத்தியப்பாட்டை உருவாக்கிப் பெண்ணின் அனுபவங்களை முன்னிறுத்துபவை.

முடிவுரை

புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள் அவர்களின் மனவுணர்வுகளையும் கலாச்சாரக் காவிகளாக சிக்கித் தவிப்பதிலுள்ள துர்அனுபவங்களையும், புலம்பெயர் நாடுகளில் அவர்கள் அனுபவிக்கும் துன்பங்களையும், இவற்றிலிருந்து விடுபட நினைக்கும் துடிப்பையும் பெண்விடுதலை பற்றிய உணர்வையும் பெண்ணிலைவாதச் சிந்தனைகளின் வெளிப்பாடுகளையும் கொண்டிருக்கின்றன. சமூகத்தில் காலம் காலமாக நிலைத்துப் போன மரபுவழி நிறுவனங்களையும், மதிப்பீடுகளையும் பெரிய மாறுதல்களுக்கு உட்படுத்தாமல் அதேவேளையில் பெண்ணின் நிலையிலும் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்பதை நோக்கமாகக் கொண்ட மிதவாதப் பெண்ணியம், பாலின அடிப்படையில் நிலவும் சமத்துவமற்ற போக்கு மாற்றமுறும் வரை பெண் ஒரு மனிதப் பிறவியாக ஈர்க்கப்படுதல் கடினம் என்பதைச் சுட்டிக் காட்டும் சமதர்மப் பெண்ணியம், திருமணம், குடும்ப அமைப்பு, தந்தை வழிச் சமூகக் கட்டுமானம் என்பவற்றை வெறுத்து மேற்கிளம்பும் தீவிரப் பெண்ணியம் ஆகிய மூன்றும் இப்பெண்களின் கதைகளில் வெளிப்படுவது கவனத்திற்குரியது.

மேற்கத்தைய பண்பாட்டுடன் நேரடிப் பரீட்சயம் கொள்ள இவர்களுக்கு ஏற்பட்ட வாய்ப்பு தமது பண்பாட்டின் மீதான மறுவாசிப்புக்கான அவசியத்தை வலியுறுத்தியது. இதனால்தான் புலம்பெயர் பெண் எழுத்தாளர்களின் சிறுகதைகள் எல்லாம் பண்பாட்டு மாதிரியாகத் தான் உள்ள அவலத்தையும் பண்பாட்டு மீறலை நிகழ்த்துவனவாகவும் விடுதலை நோக்கிய குரல்களை உடையனவாகவும் விளங்கியிருக்கின்றன. இவை பெண் எழுத்தாளர்களின் அடிநாதமாக உள்ளமை கவனத்திற்குரியது. இவ்வாறு புலம்பெயர் பெண்களின் சிறுகதைகள் புதிய அனுபவங்களையும் சிந்தனைகளையும் கோட்பாடுகளையும் உள்ளீர்த்து தம்மைச் சரியான முறையில் வழிப்படுத்தி ஈழத்துப் பெண்களின் சிந்தனை வளர்ச்சியைப் அழகியல் உணர்வைப் பெண்மொழியின் சாத்தியப்பாட்டைப் பிரதிபலித்துக் காட்டுகிறார்கள்.

குறிப்புகள்

1. புது உலகம் எமை நோக்கி : பக். 129, சக்தி வெளியீடு, நோர்வே, 1999.
2. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், நாளைக்கு இன்னொருத்தன், பக்.24, குமரன் பப்ளிசர்ஸ், சென்னை, 1997.
3. மேலது பக்.17.
4. சந்திரவதனா (http://www.yarl. com/ node/16)
5. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், மேலது,பக்.38.
6. சுமதி ரூபன், உறையும் பனிப்பெண்கள்,பக்.94, கருப்புப் பிரதிகள், சென்னை, 2010.
7. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், மேலது,பக்.32.
8. புது உலகம் எமை நோக்கி, பக். 58.
9. லதா உதயன், ஒரு நதியின் தேடல், பக்.140, மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 2001.
10. புது உலகம் எமை நோக்கி, பக். 136.
11. அருண் விஜயராணி, கன்னிகாதானங்கள், பக்.19, தமிழ்ப் புத்தகாலயம், மெட்ராஸ், 1990.
12. புது உலகம் எமை நோக்கி, பக். 80.
13. மேலது பக். 63.
14. சுமதி ரூபன், மேலது, பக்.74.
15. ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம், பக்.96.
16. மேலது, பக்.107.

பரதவர்களின் பண்பாட்டு மரபுகள் (ஜோ டி குருஸின் படைப்புகளை முன் வைத்து)

திரு. ஆ. தர்மராஜன்
முனைவர்பட்ட ஆய்வாளர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவைப் பல்கலைக்கழகம், புதுச்சேரி

தமிழ்ப் பெருநிலம் திணை சார்ந்தது. ஒவ்வொரு திணையும் ஒவ்வோர் இனக்குழு மக்களைத் தன்னகத்தே கொண்டுள்ளது. பண்டைய காலம் முதல் திணைசார் மக்கள் 'தொல்குடிகள்' என்றழைக்கப்படுகின்றனர். சங்ககாலம் முதல் தற்காலம் வரை இப்பரதவர்களால் பின்பற்றப்படும் பண்பாடுகள் பல- அவற்றோடு கலக்கும் பிற பண்பாட்டு ஊடாட்டங்கள் காரணமாக அவை புதிய பரிமாற்றங்களைப் பெற்று மிளிர்ந்து வருகின்றன. சங்க இலக்கியம் சுட்டும் 'தென் பரதவர்கள்' கன்னியாகுமரி முதல் மணப்பாடு வரை கடல் சார்ந்து வாழ்ந்து வரும் பரதவர்கள் என இனக்குழுவை அடையாளப்படுத்துகின்றார் தொ. பரமசிவன் (நேர்காணல் 10/02/2012). சங்க காலம் தொட்டுத் தற்காலம் வரை பரதவர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், தாய்த்தெய்வம் உள்ளிட்ட வழிபாட்டு முறைகள், தொழில் முறைப்பாடல்கள் குறித்த களங்களை ஆராய வேண்டிய தேவையாகிறது. ஜோடி குருஸின் படைப்புகளை மானிடவியல் அணுகு முறையில் நோக்குவோமானால் பொருள்சார் பண்பாடு, பொருள்சாராப் பண்பாடு என இரு நிலைகளில் அணுகலாம்.

'பண்பாடு' என்பதற்குக் குறிப்பிட்ட நாடு, இடம் போன்றவற்றைச் சேர்ந்த மக்களின் பழக்க வழக்கங்கள், நம்பிக்கைகள், மதம், மொழி, கலைகள், சிந்தனை வெளிப்பாடு, வாழ்க்கையுடன் தொடர்புகொண்டிருக்கும் பொருள்கள் போன்றவற்றின் மொத்தம் எனக் க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி இதனை மொழிகின்றது. பண்பாட்டின் அமைப்புப் பற்றிப் பல்வேறு அறிஞர்கள் பல கோணங்களில் ஆராய்ந்து முடிபுகளைக் கூறுகின்றனர். பண்பாட்டின் அமைப்பினை மானிடவியல் அறிஞர் பக்தவத்சல பாரதி இரு பிரிவுகளாகப் பிரிக்கின்றார். அவை:

அ. பொருள்சார் பண்பாடு (Material Culture)
ஆ. பொருள்சாராப் பண்பாடு (Non Material Culture)

அ. பொருள்சார் பண்பாடு அவர்களின் தேவைகளுக்காய்ச் செய்து கொள்ளும் அனைத்து வகையான பொருட்களும் இப்பண்பாட்டில் அடங்கும். மக்களால் செய்யப்பட்ட செய்பொருள்கள் மட்டுமே இங்கே இடம் பெற்றிருப்பதால் அவை மானிடவியல் வழக்கில் கலை வடிவங்கள்

அல்லது பொருள் வடிவங்கள் (Arti Facts) என்று கூறப்பெறும். சான்று : இயந்திரங்கள், கருவிகள், மரச்சாமான்கள்.

ஆ. பொருள்சாராப் பண்பாட்டில் பொருள் வடிவம் பெறாத அனைத்துக் கூறுகளும் இடம்பெறும். இவை மனத்தளவில் மட்டுமே உணரக் கூடியனவாகவும், புரிந்து கொள்ளக் கூடியனவாகவும் உள்ளதால் அவை மானிட வழக்கில் மன வடிவங்கள் (Mentifacts) என்று கூறப்பெறும் (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானிடவியல், பக்.160-165). சான்று: பழக்க வழக்கங்கள், மந்திரங்கள், வழிபாட்டு முறைகள், நம்பிக்கைகள்.

நம்பிக்கைகள்

நம்பிக்கைகள் மனித வாழ்வோடு பிரிக்க இயலாதவை. நம்பிக்கைகள் குறித்து க்ரியா தற்காலத் தமிழ் அகராதி, 'தனக்கும் மற்றவர்களுக்கும் நன்மை தரும் என்பதால் குறிப்பிட்ட சிந்தனை, கருத்து, நோக்கம் போன்றவற்றில் ஒருவர் கொண்டிருக்கும் பிடிப்பு' என்று கூறுகிறது. 'சிலவற்றை மறுக்க முடியாத உண்மை என்று கருதி ஏற்றுக் கொள்வதே நம்பிக்கை' எனத் தே. லூர்தும், (நாட்டார் வழக்காற்றியல்: சில அடிப்படைகள் ப.237). 'ஒரு சமூகம் தனது சொந்தக் குலத்தை இழக்கும்போது அல்லது மாற்றும்போது அதற்கு முன்பு இருந்த நடைமுறைகள் நம்பிக்கைகளாக எஞ்சுகின்றன' எனத் தமிழவனும், (ஆ. திருநாகலிங்கம், மீனவர் சமுதாய நாட்டுப்புறப் பாடல்கள் ஆய்வும் பதிப்பும், ப.37) காரண காரியத் தொடர்புகளுக்கு உட்பட்டுச் சான்றுகளின் வாயிலாக நிறுவ முடிவதை நம்பிக்கை (Belief) என்றும் சான்றுகள் அடிப்படையிலோ காரண காரியத் தொடர்பின் வாயிலாகவோ விளக்க முடியாதவற்றை மூடநம்பிக்கை (Superstition) (சு.சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு. ப.189) என்று சு. சக்திவேலும் வகைப்படுத்துவர்.

சமயம் தொடர்பான நம்பிக்கைகள்

பரதவர்கள் தொல்குடிச் சமூகத்தினைச் சார்ந்தவர்கள் என அடையாளப் படுத்தப்படுவது இந் நம்பிக்கை. கி.பி.16-ஆம் நூற்றாண்டில் இப்பரதவர்கள் கிறித்துவ மதத்தினைத் தழுவினர். பரதவர்களின் தாய்த் தெய்வவழிபாட்டின் பண்பாட்டு அடையாளங்களை அழிக்க இயலாமற் மிஷினரிமார்கள் தோற்றனர். பல தடைகளைக் கடந்து தமிழனின்-பரதவனின் அடையாளத்தினை 'ஆழிசூழ்உலகு, கொற்கை' ஆகிய புதினங்களின் வழி பறைசாற்றுகிறார் ஜோ.டி.குருஸ். கடற்மேல் செல்லும் பரதவர்கள் பல்வேறு விதமான அல்லற்பாடுகளைச் சந்தித்து மீள்கின்றனர். கடல் வாழ் உயிரினங்களான கொம்பன், வரிப்புலியன், உழுவை போன்ற சுறா மீன்களாலும் 'புயல் மழை நீரோட்டம்' போன்ற இயற்கைச் சீற்றங்களினாலும் ஏற்படும் ஆபத்துக்களைக் களையும் முகமாக இந்நம்பிக்கைகள் பின்பற்றப்படுகின்றன. புதினத்தில் தொம்மந்திரை, கோத்ரா, போஸ்கோ போன்றோர் சுறா வேட்டைக்குச் செல்கின்றனர். அப்போது கடல் அன்னை, குமரி அன்னை குறித்துத் தாய்த் தெய்வங்களின் இன்றியமையா நம்பிக்கையினை விளக்கும் நிலையில் தொம்மந்திரையின் கூற்று அமைகிறது. 'வலிய மீன்களை அடக்கி மக்களைக் காப்பவள் குமரி ஆத்தா என்று மீனவர்கள் எண்ணுகின்றனர்.

கடலை ஆத்தாளுக்குச் சமமாகவும் சிறாப்பாறுகளில் மீனவர்களுக்குக் காவல் தெய்வமாகவும் கடற்கரை முழுவதையும் காப்பவளாகவும் வலிய மீன்கள் குமரி அம்மனின் கட்டளைக்கும் சத்தியத்திற்கும் கட்டுப்பட்டவை. (ஜோ டி. குருஸ் ஆழிசூழ்உலகு ப.37)

மேலும் கடற்பயணத்தை மேற்கொள்ளும் பரதவர்கள், கட்டுமரம் மட்டுமன்றித் தோணிகளில் நடை செய்யும் பொருட்டுக் குமரிமுனை வந்தவுடன் தேங்காய்உடைப்பதும் திருச்செந்தூர் முருகன் கோபுரத்தைப் பார்த்ததும் மச்சானுக்கு ஒரு தேங்காய் என்பர். அதாவது கடலரசனின் மகள் தெய்வயானையை முருகன் மணம் புரிந்த நிலையில் பரதவர்களுடனான உறவு ஏற்பட்டுள்ளதைப் படைப்பாசிரியர் தம் படைப்புகளில் சுட்டிக் காட்டத் தவறவில்லை. ஆழிசூழ் உலகு புதினத்தின் கதைக்களம் ஆமந்துறை. இத்துறை சார்ந்த மக்கள் பண்டைக் காலம் முதல் முத்தாரம்மனை வழிபட்டு வந்துள்ளனர். தற்போது கிறித்துவ மதம் தழுவிய பிறகு அவ்வாலயத்திற்குக் கட்டுப்பட்டு ஒரு சிலர் தாய்த் தெய்வங்களை வணங்குவதில்லை. 'காலரா, அம்மை' போன்ற நோய்கள் தாக்குமிடத்து இம் மக்கள் தாய்த்தெய்வங்களை வழிபட்டு வருவதை ஜோ வின் இரு படைப்புகளும் பதிவு செய்கின்றன. அம்மை நோய் காணும் போது மதத்தைப் பார்க்காமல் அம்மனை வழிபடுகின்றனர். மீனவர்களில் எவரேனும் ஒருவர் முத்தாரம்மன் சப்பரத்தில் அம்மனை எடுத்து வைத்தால் தான் சப்பரம் நகர்ந்து கொடுக்கும். (மேலது, ப.75) தவிர, கொற்கைப் புதினத்தின் தோணித் தண்டலாக வலம் வரும் லொஞ்சனின் கூற்றாகப்பின்வரும் நம்பிக்கையினைப் பதிவு செய்கிறார் ஜோ.

> "ஏலேய் நம்ம சந்தன மாரியுஞ்சரி, கொமரி ஆத்தாளுஞ் சரி லேசுப்பட்டவயில்ல, இவரண்டியருந்தாம் கடல்ல நமக்கு இன்னைக்கும் பாதுகாப்பு" (ப.29)

அடுத்து மிஷினரிமார்களின் மதமாற்றம் பரதவர்கள் தங்களது தாய்த்தெய்வங்கள் வழிபடத் தடைகளாய் அமைகிறது. இந்நிலையில் தனியொரு மனிதனாக இருந்து சந்தன மாரியின் ஆலயத்திற்குக் கிலுக்குத் தண்டல் குடமுழுக்கு நடத்தி வருவதைப் படைப்பாசிரியர் சுட்டிச் செல்கிறார்.

> "அனைத்துப் பரதவர்களும் கத்தோலிக்க மதத்தின் கட்டுப்பாட்டில் இருந்தாலும் கிலுக்குத் தண்டல் தனியொரு மனிதனாக பங்குக்குருவை எதிர்த்து சந்தனமாரிக்கு வருடாந்திரக் குடமுழுக்கு செய்து வருகிறார்." (கொற்கை ப.81)

தவிர, இயற்கைச் சீற்றத்தால் பருமல் முறிந்து பாய்கிழிந்து கிலுக்குத் தண்டல் தோணி வருகிறது. இவர்களுக்கு முன் வந்த நூர்வாப்பா தோணி தரை தட்டி விடுகிறது. இந்நிலையில் கிலுக்குத் தண்டலுக்கு மட்டுமின்றிக் கடல் தொழிலாளர் அனைவருக்கும் நம்பிக்கை அளிக்கும் விதமாகப் பின்வரும் நம்பிக்கை அமையக் காணலாம். "ரத்னகிரி முக்கு தானே பயம். அதாங்கடந்திற்றியள. இனும் இதவுட்டா கன்னியாகுமரி மொனதான கொமரி ஆத்தாள நம்பிப் போங்க'. (மேலது ப.161). "சமயம் என்பது புனிதமான ஒன்றைப் (Sacred thing) பற்றிய நம்பிக்கைகளும் செயல் முறைகளும் அடங்கிய

ஓர் ஒழுங்கமைந்த முறையாகும். (பக்தவத்சல பாரதி, பண்பாட்டு மானுடவியல் ப.489) என்னும் எமிலி தர்கைம்மின் கூற்று மேற்கண்ட பரதவர்களின் சமய நம்பிக்கைக்கு வலுச் சேர்க்கக் காணலாம்.

மந்திரம்

மனிதன் தனது உண்மையான உழைப்பின் வழி இயற்கையின் பலனைப் பெற்றான். இயற்கை நிகழ்த்தும் அச்சத்தால் வெருண்டு மருங்கினான். இதனைக் கட்டுப்படுத்தும் நோக்கில் தன் அச்சத்திற்குக் காரணமான ஆவியை வழிபடத் தொடங்கினான். இயற்கைச் சக்திகளைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள ஆவிகளைப் பயன்படுத்திக் கொண்டான்.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த மறைமொழி

தானே மந்திரம் என்ப" (தொல். பொருள். செய். நூ.178)

எனும் நூற்பாவின்வழி கட்டளையிடும் தன்மையிலும் மறைமொழியாகவும் மந்திரம் அமைந்திருக்கும் என்கிறார் தொல்காப்பியர். தற்காலத்தில் இயற்கைச் சக்திகளை நோக்கி ஆணையிடும் வகையில் சில பாடல்கள் அமைவதைக் காணமுடிகிறது. மேகம் திரண்டு வானம் இருண்டு கதிரவன் ஒளி இல்லாத நிலை தொடர்ச்சியாக இருக்கும் நிலையில் ஆகாயத்தை நோக்கிப் பாடல் பாடப்படுகிறது. இப்பாடல் இயற்கைக்குக் கட்டளை பிறப்பிக்கும் நோக்கில் 'ஒட்டப்பிடாரம்' என்னும் பகுதியில் வழக்கத்திலிருப்பதாக ஆ. சிவசுப்பிரமணியன் பதிவு செய்கின்றார்.

"சுக்கு முக்கு தட்டித் தாரேன் / சூடான வெயிலு போடு

ஒட்டப்பானை தட்டித் தாரேன் / ஓடி ஓடி வெயிலு போடு"
(ஆ.சிவசுப்பிரமணியன். ஆ.மந்திரமும் சடங்குகளும், ப.1)

ஜேம்ஸ் ஃபிரேசர் என்னும் மானுடவியல் அறிஞர் மாந்திரீகத்தை இருவகைகளாகப் பிரிக்கின்றார். பாவனை மந்திரம் (Homeopathic or Imitative Magic), தொற்று மந்திரம் (Contagious Magic) இயற்கை நிகழ்வுகளைப் போன்ற பாவனையான நிகழ்வுகளை நிகழ்த்தும்போது, இயற்கை நிகழ்வுகளை மனித இடையீட்டுடன் நிகழ்த்த முடியும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலானது பாவனை மந்திரம் மனிதர்களின் பயன்பாட்டில் இருக்கும்/இருந்த பொருள்களின் உதவியால் குறிப்பிட்ட அந்த மனிதர்கள் வாழ்வில்/செயல்களில் இடையீடு செய்ய முடியும் என்பது தொடர்பு மாந்திரீகம். இந்தத் தொடர்பு மாந்திரீகமும் இரு வகைகளாக ஃபிரேசரால் விளக்கப்படும். ஒன்று நன்மை அளிக்கும் மாந்திரீகம் (White Magic) மற்றது தீமை அளிக்கும் மாந்திரீகம் (Black Magic) ஃபிரேசர் குறிப்பிடும் மாந்திரீகத்தின் வகைகளை ஆழிசூழ்உலகு, கொற்கை போன்ற புதினங்களில் இனங்காணமுடிகிறது. (வடதையா கான்ஸ்தந்தின் கொந்தளிக்கும் கடல்,ப.100). ஆ. சிவசுப்பிரமணியத்தின் மேற்கண்ட கருத்து ஃபிரேசரின் பாவனை மந்திரத்தோடு ஒப்பு நோக்கத்தக்கதாக அமைந்துள்ளது.

'மந்திரம்' அறியாமை பற்றி இருந்தாலும் அது மனிதனின் அன்றாடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் அமைகிறது. உதாரணமாக அவனது

வேட்டைத் தொழிலில் விலங்குகளைக் கொல்லும் முறைகளைக் கற்பனை செய்து பார்த்த பிறகே வேட்டையாட முற்படுகிறான். அவற்றில் வெற்றிகிட்டவே உயிரினங்களைத் தன் ஆவிகளுக்குப் பலி கொடுத்துத் தன்னிலையை மேம்படுத்திக் கொள்வதைக் காண இயலும்.

> "இயற்கையைக் கட்டுப்படுத்துவது போன்று கற்பனை செய்துகொள்வதன் மூலமாக இயற்கையை உறுதியாகத் தன்னுடைய கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்னும் அடிப்படையைக் கொண்டதுதான் மந்திரம்"

என அறிஞர் தாம்சன் கூறுகின்றார் (ஆ.தனஞ்செயன், குலக்குறியியலும் மீனவர் வழக்காறுகளும், ப.209).

> "ஆவியுலகக் கருத்தோட்டங்கள் செல்வாக்குச் செலுத்துமிடங்களில் மந்திரம் தோன்றுகிறது" என்று 'பெய்சன்' என்ற பிரெஞ்சு நாட்டு அறிஞர் மொழிகின்றார்.
>
> (ஆ. சிவசுப்பிரமணியன், மந்திரமும் சடங்குகளும், ப.231).

ஆழிசூழ் உலகு புதினத்தில் மந்திரம் செய்வதில் வல்லோனாக 'இருட்டியார்' எனும் பாத்திரம் வலம் வருகிறது. இவர் தனக்குக் கிடைக்காத பொருளை வேறு எவர்க்கும் கிடைக்காமல் செய்வதில் திறமைசாலி. இவர் பில்லி, சூனியம் மற்றும் மழையைக்கூடத் தன் மந்திரச் சக்தியால் கட்டுப்படுத்தும் வல்லமை பெற்றவராகக் காணப்படுகிறார். இந்நிலை தற்காலத்தில் அறிவியல் நிலையோடு ஒப்புநோக்கத் தக்கதாக அமைகிறது. எனவே மடுத்தீனுக்குச் சூனியம் வைத்து இறக்கச் செய்யும் நிகழ்வினைக் 'கருத்தா' எனும் பாத்திரத்தின் வழி அறியமுடிகிறது. 'இருட்டிகிட்ட போறதுக்கு எனக்கு இஷ்டம் இல்ல. ஒருவேள அவனே இத செஞ்சிருப்பானோன்னு எனக்கு வெப்ரான உண்டு" (ஆழிசூழ்உலகு, பக்.31-32). அடுத்ததாகப் பாம்பு கடித்தவர்கள், திருக்கைமுள் குத்தித் தன்னை நாடி வருபவர்கள் என அனைவரின் துயரத்தினையும் போக்க வல்லவர். மேலும், தன்னை நோக்கிக் குரைத்த நாயின் வாயினைக் கட்டும் ஆற்றல் உடையவர். (மேலது.ப.100). மேலும், 'கறிக்கு மீன் இருந்தாக் கொடு' என மீன் பிடித்துக்கொண்டிருந்த தன் மச்சானிடம் கேட்க, அவர் பிடித்து வைத்திருந்த மதனக்குட்டியை மறைத்து இல்லை என்று கூறவே 'அப்படியா' என்று கூறிவிட்டு வந்துவிடுகிறார். இருட்டியாரின் வீட்டில் மீன் குழம்பு வைத்துத் தன் மச்சானுக்கு வேண்டுமென்றே மதனக் குட்டியின் தலையைக் குழம்பில் போட்டு அனுப்பி வைத்தார். அன்று முதல் அவர் மச்சான் இருட்டியாரிடம் பேசுவதே இல்லை (மேலது, ப. 100). இது தவிர, ஊரில் பாவைக் கூத்து நடக்கும் போது மழை விழுந்தால் அந்தக் கூத்து முடியும் வரை மழையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் மிக்கவர். அவர் கடலில் ஓடும் நீவாடுகளைப் பிடித்து மாற்றி விடுவதன் மூலம் பலவற்றைச் செய்வதாகப் பேசிக்கொள்வார்கள். (மேலது, ப.100). மேற்கண்ட இந்நிகழ்வு அறிவியல் தன்மை வாய்ந்தது என்பர் சிலர். இதுவே மந்திரம் என்பதனை உணர அறிஞர் ஜோசப் நீதாம் என்ற பிரிட்டிஷ் அறிஞரின் கூற்று உதவும்.

"அறிவியலும் மந்திரமும் தொடக்கத்தில் பிரித்தறிய முடியாதிருந்தன". இக்கருத்துக்களின் அடிப்படையில் மந்திரத்தைத் தொல் அறிவியல் (Proto-

Science) என்று கூறுவதில் தவறில்லை என்று கூறுவதைக் காணமுடிகிறது. (மந்திரமும் சடங்குகளும், ப.33).

தவிர, புதினத்தின் இரண்டாம் தலைமுறைப் பாத்திரமான சூசையாரும் தன் வலையில் மீன் விழாதது குறித்து மந்திரவாதியை அணுகுவதைக் காணமுடிகிறது. பிறகு அவரது மனைவி மேரி அந்தோணியார் கோவிலில் ஜெபித்து எடுத்து வந்த நீரைக் குடித்த பிறகும் மந்திரவாதியை நாடிச் செல்வதைக் காணமுடிகிறது. (பக்.242-244). மேலும் கொற்கைப் புதினத்தில் மாந்திரீகம் தொடர்பான செய்திகள் இடம்பெற்றுள்ளன. புதினத்தில் வரும் ரஞ்சிதம் பிலிப்பின் மீது கொண்ட பாலியல் வேட்கை நிறைவேறாத நிலையில், அவரது குடும்பத்திற்கு மாந்திரீகம் செய்விக்கிறாள். இவை மட்டுமல்லாது தொழில் சார்ந்த நிலைகளில் இம்மாந்திரீகத்தின் விளைவு நிகழக் காணலாம். மந்திரவாதியால் செய்யப்படுகின்ற செய்வினை செய்தல், ஏவல் செய்தல் ஆகிய சடங்குகளின் ஒரு பகுதி பாவனைச் செயல்களாகவே விளங்குகிறது. 'ஏவல் செய்தல்' என்பது எந்த மனிதனுக்குத் தீங்கு விளைவிக்க வேண்டுமோ அந்த மனிதனைப் போன்று மந்திரவாதி துணியால் ஒரு பொம்மை செய்து அதன் உடலுறுப்புகளைச் சிதைத்தல் என்றும் 'செய்வினை செய்தல்' என்பது அந்த மனிதனின் உருவத்தை ஒரு செப்புத் தகட்டில் வரைந்து அவ்வுருவத்தின் உடலுறுப்புகளை ஈட்டி போன்ற கருவிகளால் குத்திச் சிதைத்தல் என்றும் 'மந்திரங்கள்' எனும் கட்டுரையில் ஒ. முத்தையா பதிவு செய்கிறார். (பக்தவத்சல பாரதி, (தொ.ஆ.) பண்டைத் தமிழர் சமய மரபுகள் ப.35).

தொழிற்பாடல்களும் எள்ளல் பாடல்களும்

நாட்டுப்புறப்பாடல்களில் பல்வேறு வகைப் பாடல்கள் காணப்படுகின்றன. அவற்றில், தொழிற்பாடல்களும் ஒன்று. இயற்கையைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் செயல் பழங்காலத்தில் தொழில் எனக் கருதப்பட்டது. 'வினையே ஆடவர்க்கு உயிர்', 'செய்யும் தொழிலே தெய்வம்' என்றும் நம்புகின்றனர். பொதுவாகத் தொழில் புரியும் போது பாடும் பாடல்களைத் தொழிற்பாடல்கள் என்கிறோம். தொழிலின் சுமையும் உழைப்பின் களைப்பும் தெரியாமல் இருக்கப் பாடுகின்றனர். (சு. சக்திவேல், நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.52) என்பர். தற்காலத்தில் நாட்டாரின் பழம்பாடல்கள் அழிவு நோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றன. இந்நிலையில் மண் சார்ந்த படைப்பாளிகளின் பங்களிப்புப் பணிகள் அளப்பரியன. அந்த வகையில் மண் சார்ந்த படைப்பாசிரியர்கள் தத்தம் படைப்புகளில் பழம்பாடல்களைப் பதிவு செய்யத் தவறவில்லை. ஜோ. டி. குருஸின் புதினங்களில் நெய்தலின் மண் மணம் தவழும் தொழிற் பாடல்களைக் காட்சிப்படுத்துகிறார். 'ஆழிசூழ் உலகு' புதினத்தில் வெட்டி முடித்திருந்த புதுக்கட்டு மரமொன்றைக் கரையிலிருந்து கடலை நோக்கித் தள்ளுகின்றனர். அந்த நிலையில் தங்களது வேலைப் பளுவை மறப்பதற்காக அவர்கள் பாடிய பாடல் காற்றோடு கலந்து வருகின்றது.

"ஏல ஏலோ அய்யா எல ஏலோ / தாந்தத்தினா
எலல எலோ தாந்த்தினா / கப்பலாளி அங்க தெரியுதடா" (பக். 159-60)

இவை மட்டுமல்லாமல் பெலவேந்தர் பங்குக் கோவிலில் ஞாயிற்றுக் கிழமைகளில் ஆடம்பரப் பூசையில் பங்குக்குருவான காகுசாமியார் பாட அவரைத் தொடர்ந்து பாடகர்குழு பாடும் பாடலைப் பக்.127-இல் காணமுடிகிறது.

தொம்மந்திரையின் மேற்பார்வையில் அணியத்துப் பலகையின் தொழில் நுட்பத்துடன் கோத்ராவின் மரம் வெட்டு ஆரம்பமாகிறது. கட்டு மரத்திற்கு உகந்த 'ஆல்பீஸா' மரங்களை எடுத்து வருகின்றனர். விக்டர் பாட அதனைத் தொடர்ந்து அனைவரும் பின்தொடர்ந்து பாடுவதாகப் பின்வரும் இப்பாடல் அமைகிறது.

"அடவாங்கடா தோழா / வளந்தாத் தருவேன் / வளந்தாத் தருவேன்." (பக்.91-92)

'கொற்கை' புதினத்தில் அம்பாப்பாடல்கள் பல்வேறு இடங்களில் எடுத்தாளப் பெற்றுள்ளன. ஆறு ஜோடி மாட்டு வண்டிகள் சேர்த்து இழுத்து வரும் கனரக இயந்திரத்தினை மிக இலகுவாக; தொழில் நுட்பத்தினைப் பயன்படுத்தி ஆலை கொணர்ந்து சேர்க்கும் பரதவர்களின் தொழில் நுட்பத்திற்கு அவர்கள் பாடும் அம்பாப் பாடலே அடிப்படையாக அமைவதைப் படைப்பாசிரியர் பதிவு செய்கிறார்.

"லாப்பேஞ். / எழாமா எழஞ்/ அந்தோணியார் அய்யா அடியார்க்
கிரங்கும் / இரக்கத்தைப் பாரூம் / வழக்கத்தைத் தீரும்"
(பக்.59-60)

மேலும் தோணிகளில் ஜெபப் பாடல்கள் பாடுவதையும் பிரார்த்தனைகள் செய்வதையும் ஜோ. பதிவு செய்கிறார். மேலும் புதினத்தில் தொழிற்சார்ந்த பாடல்கள் மட்டுமின்றிச் சிறுவர்கள் பாடும் பாடல்களும் எள்ளல் தன்மையோடு இடம்பெற்றுள்ளன. அந்த வகையில் ஜோவின் படைப்புகளில் நெய்தல் நிலம் சார்ந்த சிறுவர்கள் தமது சிறுவயது முதல் அறிவார்ந்த செயல்களில் ஈடுபடுவதும் எள்ளல், கேளிக்கை போன்றவற்றில் திளைப்பதுமாக இருந்து வருவதைப் படைப்பாசிரியர்.

"மண்ணால் மந்திரம் பிள்ளையை உண்டாக்கி/ அவருக்கு
உறுதுணையாய்
ஒத்தாசையை உண்டாக்கி/ அவர்கள் கையால்
வடைகள் பல உருண்டு வர/ திருவுளமான என் தயாபர
யேசுவே தயபாயிரும்" (ப.358)

என லூர்து எனும் சிறுமியின் வழி வெளிப்படுத்துகின்றார். அதுமட்டுமின்றிச் சிறுவர்கள் விளையாட்டு நோக்கில் ஒவ்வொரு நிகழ்வு பற்றிப் பேசுவதும் அவற்றைத் தங்கள் விளையாட்டில் செயல்படுத்துவதையும் காண முடிகின்றது. தவிர, புதினத்தில் இடம்பெறும் நொண்டி விளையாட்டுப் பாடலானது, நாட்டுப் புறங்களில் தெய்வம் ஏறி ஆடிடும் நிகழ்வினை எள்ளல் தன்மையோடு சுட்டிக்காட்டுவதாக அமைகிறது.

"சக்கு சக்கர சாமி வந்து / சிங்கு சிங்கென ஆடுமாம்" (ப.411)

தன் தமையன் சில்வேரா தனக்கு இழைத்த நம்பிக்கைத் துரோகத்தினைத் தாளாத நிலையில் குடிபோதையில் தன்மனத்தாங்கலைப் பாடலாக வெளிப்படுத்துகின்றார், அடுத்து இலக்கண அடிப்படையில் நோக்கும் பொருட்டு இப்பாடல் எதுகை மோனைகளைக் கொண்டமைகிறது. கோத்ராவின் வறுமை நிலையினையும் தூய அன்பினையும் படைப்பாசிரியர் "எல பாடு பறகிறாம் கோத்யிரா -அதன்ஞ் (ப. 378) எனும் பாடலின் வழி விளக்குகிறார்.

தொகுப்புரை

பரதவர்களின் பண்பாட்டினை அர்த்தப்படுத்தும் நம்பிக்கைகளில் தாய்த்தெய்வ வழிபாட்டின் முக்கிய அடையாளங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன. மந்திரத்தின் நன்மை தீமைகளை எடுத்துக்காட்டுவதாக இருட்டியார், இரஞ்சிதம் போன்றோரின் செயல்பாடுகள் எடுத்தாளப்பெற்றுள்ளன. பரதவர்களின் தொழில் சார்ந்த அமைப்புகளில் பரதவர்களின் உழைப்பினைப் பறைசாற்றும் அம்பாப்பாடல்கள் தனித்தன்மை பெற்றுள்ளன. சிறுவர் பாடல்கள் கருத்தாழம் மிக்கதாகவும், எள்ளல் தன்மை மிகுந்தும் காணப்படுகின்றன.

பண்டைத் தமிழரின் தாயகங்களும் அயலகங்களும்

முனைவர் ஜெ. அரங்கராஜ்
ஆகோள் ஆய்வுமையம்
யாழ்ப்பாணம், இலங்கை

தமிழகம்

பண்டுதொட்டுத் தமிழர்கள் மரபுவழிப்பட்டு வாழ்ந்துவரும் நாடு தமிழகம். இன்றைய குமரிமுனைக்குத் தெற்கில் பல நாடுகளைக் கொண்ட மிகப்பெரும் நிலப்பரப்புடைய குமரிக்கண்டமாக அது விளங்கியது. அக்குமரிக்கண்டம் கடல் வாய்ப்பட்டதன் விளைவால் அந்நாடுகளும் மூழ்கி அழிந்தன. பின் அதில் ஒரு நாடாகிய தெங்க ஏழகம் எனும் இலங்கையும் இன்றைய தமிழகப் பகுதியுமே மிஞ்சின. இத் தமிழகம் குறித்துச் சிலப்பதிகாரம்,

"நெடியோன் குன்றமும் தொடியோள் பௌவமும்
தமிழ்வரம் பறுத்த தண்புன லன்னாட்டு"

எனக் கூறுகிறது. இதற்கு உரை செய்த அடியார்க்கு நல்லார் பின்வருமாறு கூறுகின்றார். நெடியோன் குன்றம் வேங்கடமலை, தொடியோள் - பெண்பாற் பெயராற் குமரியென்பதாயிற்று. ஆகவே நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்னாது பௌவடமுமென்றது என்னயெனின், முதலூழியிறுதிக்கண் தென்மதுரையகத்துத் தலைச்சங்கத்து அகத்தியனாரும் இறையனாரும் குமரவேளும், முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும், முதுகுருகும் களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினார், காய்சினவழுதி முதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத் தொன்பதின்மர்; அவருட் கவியரங்கேறினார் எழுவர். பாண்டியருள் ஒருவன் சயமாகீர்த்தியானாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன்.

தொல்காப்பியம் புலப்படுத்தும் இரீயினான் அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் தென்பாற் கண்ணதோர் ஆற்றிற்குப் பெயராம். ஆனால், குமரியென்னு மாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவதவாறும் இவற்றின் நீர்மலிவானென மலிந்த ஏழ்தெங்கநாடும் ஏழ்மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ்பின்பாலை நாடும், ஏழ்குன்றநாடும், ஏழ்குணகநாரைநாடும், ஏழ்குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன்பது நாடும் குமரி, கொல்ல முதலிய பன்மலைநாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி வடபெருங்கோட்டின்காறும் கடல் கொண்டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றாரென்றுணர்க.

மேலும், "வடதிசைக்கண் வடுகொழிந்த திரிபுடைமொழி பலவுளவாகலான் மலையெல்லை கூறினாரெனினும் அமையும்" என அடியார்க்கு நல்லார் கூறுகின்றார். மேற்கண்டவற்றால் வடக்கே வேங்கடமலைக்கும் தெற்கே குமரிக்கடலுக்கும் இடைப்பட்ட பகுதி தமிழகம் என அறியலாம்.[2]

மேற்கண்ட அடியார்க்கு நல்லாரின் உரை குறித்துப் பாவலரேறு ச.பாலசுந்தரனார் பின்வருமாறு கூறுகிறார்.

> "அடியார்க்கு நல்லாரின் இவ்வுரைப் பகுதியிலிருந்து நாம் உய்த்துணர வேண்டியது இன்றையத் தமிழகத்திற்குத் தெற்கே ஏழு, ஏழு உட்பிரிவுகளைக் கொண்ட ஏழு நாடுகள் இருந்தன என்பதுவேயாகும். சிங்களம் (தெங்க ஏழகம்) என்னும் இலங்கையும் இலங்கையின் தென்கோடி மாநிலம் மாத்ரா என்னும் பெயர் தாங்கி உள்ளமையும் இன்றைய மலையாளமும் (மலை ஏழகம்) கொல்லமுமாம்"[3]

மேற்கண்ட கூற்றுக்களால் கடல் கொள்ளப்பட்ட பழந்தமிழகம் போக எஞ்சியிருக்கும் வட வேங்கடம் தென்குமரியாகிய தமிழ் நிலமே சங்ககாலத் தமிழகமாகும்.

கடைச்சங்க காலத்திற்கு முன் இடைச்சங்க காலத்தில் தமிழகத்தின் எல்லை தெற்கே குமரியாறே என்பதினைத் தொல்காப்பியத்திற்குச் சிறப்புப்பாயிரம் செய்த பனம்பாரனார் கூற்றால் அறியலாம்.

> *"வடவேங்கடந் தென்குமரி யாயிடைத்*
> *தமிழ்கூறு நல்லுலகத்து"*[4]

எனவும்

> *"வேங்கடங்குமரி தீம் புனற் பௌவமென்*
> *றின்னான் கெல்லை தமிழது வழக்கே"*

எனச் சிகண்டியாரும்,

> *"குமரி வேங்கடங் குணகுட கடலா*
> *மண்டிணி மருங்கினிற் றண்டமிழ் வரைப்பில்"*

என இளங்கோவடிகளும் தமிழகத்தின் பண்டைய எல்லைகளைக் குறிப்பிடுகின்றனர். இச்சான்றுகளால் தமிழகத்தின் தென்னெல்லை குமரியாறென்றும் அது கடல் கொள்ளப்பட்டு இடைச்சங்க காலம் முதல் இக்காலக் குமரி முனை ஆயிற்றென்றும் கொள்ளலாம். தென்னெல்லை பற்றிய செய்தியில் இன்றைய குமரிமுனை இறுதியாய் அமைந்தமையைக் கண்டோம்.

தொல்காப்பியர் காலம் முதல் தமிழகத்தின் வடவெல்லையாக வேங்கடமலையிருந்து வந்துள்ளது என்பதையும் மேற்கண்ட சான்றுகளால் அறியலாம். ந.சி.கந்தையா ஒரு போது விந்தியமலை தமிழ்நாட்டின் வடவெல்லையாயிருந்த தென்று கூறுகிறார்.[5] மற்றும் உ.வே.சா., "பண்டைக்

காலத்தில் தமிழ்நாட்டின் வடவெல்லை கிருஷ்ணாநதியென்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறதென்று கேட்டிருக்கின்றேன்" என்று கூறுகின்றார்.[6]

இவ்வாறான கூற்றுக்களின் வழி நாட்டின் எல்லையைப் பல்வகைகளாகப் பிரித்துக் கொள்வதே பொருத்தமானதாக இருக்கும் என்பதை நாம் அறியலாம். ஏனெனில் ஒரு நாட்டின் அரசியல் எல்லை என்பது வேறு; அதன் மொழியெல்லை என்பது வேறு. அதைப் போலவே அவற்றின் நிலவியல் எல்லைகளும் பண்பாட்டு எல்லைகளும் இனவியல் எல்லைகளும் ஒன்றிலிருந்து ஒன்று மாறுபட்டு அமையும்.

ந.சி. கந்தையாவின் கூற்றுக்களின் வழி விந்தியமலை எல்லையாக அமைவதை இனவியல் அடிப்படையில் அமைந்த எல்லையாகக் கொள்ளலாம். இதனை வால்மீகி இராமாயணக் கூற்றுக்களில் இருந்து மு.இராகவையங்கார் பின்வருமாறு கூறுகின்றார்.

> "தண்டகாரணியமென்பது முற்காலத்தில் சேர, சோழ, பாண்டிய நாடுகளை அடுத்திருந்ததென்பதும் அந்நாடுகளுக்கும் விந்தியத்திற்குமிடையில் வேறு தேசங்களைக் குறியாது விந்தியத்தின் தெற்கே ஆயிரம் யோசனையளவும் வெறும் காடாய்க் கிடந்தது எனவும் வால்மீகி கூறுதலால் விளங்கும்."[7]

இராமாயணக் காலத்தில் ஆரிய வர்க்கத்திற்குத் தெற்கே காணப்படும் விந்தியமலையும் அதற்கு அப்பாலுள்ள நாடுகளும் ஒரே நாடாகக் கருதப்பட்டமையே இவ்வெல்லைப் போக்கிற்குக் காரணம். இன்றும் பாரசீக வளைகுடாவில் பல நாடுகள் காணப்பட்டாலும் உலகோரால் வளைகுடா நாடுகள் என்றும் அரபுநாடுகள் என்றும் இனவியல் அடிப்படையில் ஒரே பெயரால் சுட்டப்படுகின்றமையை அறியலாம்.

ஒரு மொழியின் எல்லை அரசியல் எல்லைகளுக்குக் கட்டுப்படாததாகும். தொல்காப்பியர் காலத்தில் வேங்கடத்திற்கு வடக்கே தமிழ்மொழி வழங்கியிருக்கலாம். ஆயினும், அதன் கூடுதல் திரிபின் காரணமாய் அதற்கு இவ்விலக்கணம் பொருந்தாமல் போக இது வேங்கடமலைக்கு உட்பட்ட பகுதிக்குரிய இலக்கணமாயிருக்கலாம். இன்றைய சூழலிலும் இங்கிலாந்தில் ஆங்கிலமொழிக்குரிய இலக்கணம் அதன் இனவியல் தாயக எல்லைக்கப்பால் உள்ள ஐக்கிய அமெரிக்க நாட்டில் வழங்கும் ஆங்கில மொழிக்குப் பொருத்தமற்றுப் போவது நாம் அனைவரும் அறிந்தமையே.

மேற்கண்டது போலவே ஒரு நாட்டின் கலையெல்லை என்பது வேறு. இன்றும் மாயன் செய்த தமிழ் சிற்பக் கலையின் எல்லை கிருஷ்ணா நதியே. இவ்வெல்லை வரையில் தமிழ்ச் சிற்ப நெறிமுறைகள் தவறாமல் கடைபிடிக்கப்பட்டன. தமிழரின் மனையியலும் (வாஸ்து)இவ்வெல்லை வரையிலுமே செல்லும். இதனைக் கொண்டே பண்டைக் காலத்தின் வடவெல்லை கிருஷ்ணா நதியென அறிந்ததாக உ. வே. சா. குறிப்பிட்டுள்ளார் என அறியலாம்.

இவ்வாறான பல்வேறுவகைச் சான்றுகளின் வழி பண்டைத் தமிழகத்தின் வடவெல்லை வேங்கடம் என்றும் தென்னெல்லை குமரிக்கடல் என்றும் அதன்

மேற்கிலும் கிழக்கிலும் கடலெல்லை உடையதென்பதனையும் அறியலாம். இது பாரதத் துணைக் கண்டத்தில் அமைந்த தமிழரின் தாயகம் என்பதையும் இது மூன்று மன்னர்களால் ஆளப்பட்டது என்பதையும் அயலார் குறிப்புகள் வழியும், தமிழ் இலக்கியங்கள் வ்ழியும், சமஸ்கிருத, பாலி மொழி இலக்கியங்களின் வழியும் அறியலாம்.

'வாண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு'[8] எனச் சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்ட தமிழரின் நிலத்தைத் தமிழ்நாடெனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. இத்தமிழகம் இந்தியத் துணைக் கண்டத்தில் அமைந்திருந்த தமிழர் தாயக நாடு என்பதினை மணிமேகலை, 'சம்புத் தீவினுள் தமிழக மருங்கில்'[9] எனக் குறிப்பிடுகிறது.

மேற்கண்டவாறு குறிப்பிடப்படும் இத்தமிழகமானது செந்தமிழ்நாடு, கொடுந்தமிழ்நாடு என இரு பிரிவுகளாக இருந்ததாகச் சிலர் கூறுவர். அரசஞ்சண்முகனாரும் கொடுந்தமிழ் என்று தொல்காப்பியர் காலத்தில் இல்லையெனவும் செந்தமிழ் சேர்ந்த பன்னிருநிலம் என்றது செந்தமிழ் வழங்கிய பன்னிரெண்டு நிலமெனக் கூறுவார் என்றும் ந.சி. கந்தையா கூறுவதாவது:

> "கொடுந்தமிழ் நிலம் பன்னிரண்டுள வெனவு மத்தமிழே திசைச் சொல்லாமெனவும் பெறப்படலானே தமிழிருவகை யெனலு மவை யிரண்டிற்கும் பொது வெல்லை வேங்கடங்குமரி யெனலுஞ், செந்தமிழெல்லை வேறு கூறலுமமையுமெனினாசிரியர் பன்னிருநிலமென்றதன்றிப் பன்னிரு கொடுந்தமிழ் நிலமெனக் கூறாமையானும் பிராண்டுங் கொடுந்தமிழ் எனல் காணப்படாமையானும் செந்தமிழ் சேர்ந்த பன்னிரு நில மென்றமையானது செந்தமிழ் வழங்கிய பன்னிரு தமிழ்நாடெனப் பொருள் படுமின்றிச் செந்தமிழ் நிலத்தைச் சேர்ந்த பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலமெனப் பொருள் படாமையானுஞ், செந்தமிழினின்றுஞ் சிதைந்து வழங்கு மொழியே கொடுந்தமிழெனி னஃதிழிந்தோர் வழக்காகலிற் கொள்ளப்படாமையானு மத்தமிழினின்றும் பிறந்த பிறிதொரு மொழியெனினது துளுக், கன்னடந், தெலுங்கு, மலையாளம் என்றாற்போல் வேறு பெயர் பெறலன்றிக் கொடுந்தமிழெனல் கூடாமையானு மாண்டுச் செந்தமிழ் நிலமென்றது செந்தமிழியற்கையுந் திரிபுஞ் சேர்ந்த பன்னிரு நாடாகலானு மவ்வுரை பொருந்தாதென்ப"10

மேற்கண்ட கூற்றின் வழி அந்நாளில் செந்தமிழ்நாடு என்ற பாகுபாடில்லாமல் தமிழகம் மூன்று மன்னர்களின் நாடாயிருந்தமையை அறியலாம்.

மேற்கண்ட கருத்தினையொட்டியே மு.இராகவையங்காரும் தமிழரின் எல்லையை சுட்டுகிறார். மேற்சொன்னதன்வழி பன்னிரு நிலங்கள் யாவை என்பதனையும் அறியலாம்.

"தென்பாண்டி குட்டங் குடங்காற்கா வேண்பூழி
பன்றி யருவா அதன் வடக்கு - நன்றாய
சீத மலாடு புனனாடு செந்தமிழ்சேர்
ஏதமில் பன்னிருநாட் டென்"

மேற்கண்ட பன்னிரு இடங்களையும் தமிழ் வழங்கும் தமிழர் தாயகமாய்க் கொண்டு அதற்கு வடக்கேயுள்ள பகுதிகளை வேறாகத் தொல்காப்பியர் காலம் முதல் கொண்டமையை மு. இராகவையங்கார் பின்வருமாறு கூறுகிறார்.

> "இப்பொழுது வழங்கும் தமிழ் நூல்களுள்ளே தொல்காப்பியமே பழமையும் பெருமையும் உடையதென்பது யாவரும் அறிவர். அந்நூல் தமிழ் வழங்கும் நிலத்தைப் பன்னிரண்டு பகுதியாக்கி அப்பன்னிரண்டுக்கும் புறம்பாகிய வடுகு முதலிய நாடுகளில் இருந்து தமிழில் வழங்கும் பதங்களைத் திசைச்சொற்கள் என்று பகுக்கிறது. தொல்காப்பியர் காலத்தவராகிய பனம்பாரனாரும் வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து எனத் தமிழ் வழங்கும் நிலத்தை வேங்கடமலைக்கு அப்புறம் நிறுத்தினாரில்லை.
>
> காக்கைப்பாடினியார் என்ற பழம்பெரும் புலவரும் வடதிசை மருங்கின் வடுகுவரம்பாக என்ற ஆந்திர பாஷை வழங்கிய நிலமே தமிழின் வடவெல்லையாகக் கொண்டார். இவற்றால் தொல்காப்பியனார் முதலிய முன்னோர்க்கு நெடுங்காலத்திற்கு முன்னே தமிழும் வடுகுந் தனியே வேறுபட்டிருந்த பாஷைகள் என்பது தெளியப்படும்"[11]

மேற்கண்ட கூற்றின் வழி பன்னிரு நிலமும் தமிழாகவும் அது வேங்கடமலை வரையுடையதும் அதற்கு வடக்கே வடுகுமொழி திரிந்திருந்தமையையும் அறியலாம்.

தமிழகம் மும்மன்னர்களால் ஆளப்பட்டாலும் அவர்கள் மூன்று குடியில் இருந்தாலும் தமிழர்கள் எனும் போக்கில் ஒன்றாயினர். தமிழகம் எனும் தாயக, தேசிய மனப்போக்கு பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே அவர்களிடம் வளர்ந்திருந்தமையைச் சங்க இலக்கியங்கள் வழி அறியலாம்.

தமிழகம் எனும் சொல் முதலாவதாகப் புறநானூற்றில் பதிவாகின்றது.

"வையக வரைப்பிற் றமிழகங் கேட்பப்"[12]

என்பதில் உலகில் தமிழகம் எனத் தங்கள் நாட்டினை, தாயகத்தைத் தமிழர்கள் சுட்டினமையை அறியலாம்.

01. *"மண்டிணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர்*
முரசுமுழங்கு தானை மூவ ருள்ளும்"[13]

02. *"தண்டமிழ் பொதுவெனப் பொறாஅன் போரெதிர்ந்து"*[14]

03. “அமைவர லருவி யிமையம் விற்பொறித்
திமிழ்கடல் வேலித் தமிழகம் விளங்கத்”[15]

04. “இமிழ்கடல் வரைப்பிற் றமிழக மறியத்
தமிழ்முழு தறிந்த தன்மைய னாகி”[16]

05. “இமிழ்கடல் வேலியைத் தமிழ்நா டாக்கிய
இது நீ கருதினை யாயி னேற்பவர்”[17]

06. “தென்றமிழ் நன்னாட்டுத் தீதுதீர் மதுரைக்”[18]

மேற்கண்ட அடிகளால் தமிழ், தமிழக மக்கள் அனைவருக்கும் பொதுவாக விளங்கினமையும் தமிழகம் கடலையே வேலியாகவுடையது என்பதும் தமிழகம் மூன்று பகுதிகளையும் ஒருங்கிணைப்பதாக அமைந்தமையும் தெரிகின்றது. மதுரை தமிழ்நாட்டு நகர் என்று சுட்டப்படுவதால் தமிழகம்மூன்று பகுதியாக விளங்கினும் தமிழ்நாடு எனும் ஒருங்கிணைந்த தாயகத் தன்மையுடனும் விளங்கியது என அறியலாம். தமிழ் மும்மன்னர் இல்லாத பிறர், அயலார் என்று சுட்டப்பட்டனர் என்பதனையும் அறியலாம்.

தமிழக வடக்கு எல்லை

தமிழகத்தின் வடக்கு எல்லைப் பகுதியில் பல சிற்றரசுகள் இருந்தன. இவை தமிழகத்திற்குள் அந்நியப் படைகள் புகுந்து விடாவண்ணம் மிகுந்த காவல் அரண்களாக விளங்கின எனக் கொள்ளலாம். இவர்களில் பங்களர், கட்டி, நன்னன், கங்கர், புல்லி ஆகியோர் இன்றியமையாத சிற்றரசர்களாவர். இது குறித்து மயிலை சீனி. வேங்கடசாமி பின்வருமாறு கூறுகின்றார்:

> “பங்களர் என்பவர் பங்கள நாட்டை ஆண்டனர். பங்கள நாடு இப்போதைய சித்தூர். வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்தது. இது வங்களநாடு என்னும் வங்கநாடு அன்று. சிலப்பதிகாரம் காட்சிக் காதை 157-இல் அடியில் பங்களர், கங்கர், பல்வேற் கட்டியர் என்று பங்களரையும் கூறுகிறது. பங்களரும் தமிழகத்தின் வடவெல்லையில் இருந்தனர். பங்களர், கங்கர், கட்டியர் ஆகிய இவர்கள் தமிழ்நாட்டின் வடவெல்லையில் இருந்தனர் என்பதற்குச் சாசனச் சான்றுகள் உள்ளன.”[19]

மேற்கண்ட கூற்றுக்களால் தமிழகத்தின் வடவெல்லையில் இருந்த சிற்றரசர்களை அறியலாம்.

“குவை யிமிழ் விடைய வேற்ற ஒய்யும்
கனை யிருஞ் சுருணைக் கனிகாழ் நெடுவேல்
விழவ யர்ந்தன்ன கொழும்பல் திற்றி
எழாஅப் பாணன் நன்நாட்டு டும்பர்”[20]

மேற்கண்ட அடிகளால் பாணன் (வாணாதிராயர்) தமிழகத்தின் வடவெல்லைக்கு அப்பால் சென்று ஆநிரைகளைக் கவர்ந்து வந்தமையை அறியலாம்.

"மாஅல் யானை மறப்போர்ப் புல்லி
காம்புடை நெடுவரை வேங்கடத்து உம்பர்
அறையிரந் தகன்றனர்"[21]

எனும் அடிகளால் வேங்கடமலையை ஒட்டிய தமிழ் எல்லையைப் புல்லி என்ற சிற்றரசன் ஆண்டமையை அறியலாம்.

புல்லிக் குன்றமாகிய வேங்கடமலைக்கப்பால் தமிழின் திரிந்த மொழியாகிய வடுகைப்பேசிய வடுகர் தேயம் இருந்ததென்பதனையும் அது மொழிபெயர்தேயம் என வழங்கப்பட்டமையும் பின்வரும் அடிகளால் அறியலாம்.

"புடையலங் கழற்கான் புல்லி குன்றத்து
நடையருங் கானம் விலங்கி நோன்சிலைத்
தொடையமை பகழித் துவன்றுநிலை வடுகர்
பிழியார் மகிழர் கலிசிறந் தார்க்கும்
மொழிபெயர் தேஎம் இறந்தனர் ஆயினும்"[22]

தமிழக வடவெல்லைக்கப்பால் வாழ்ந்த வடுகர்கள் எல்லைப்புறம் முழுவதும் (வடகிழக்கு, வடமேற்கு) விரவியிருந்தனர். அவர்களை வேறுபடுத்தப் புல்லியின் வேங்கடமலைக்கு அப்பால் இருந்தோரை வடவடுகர் என்றனர். இதனை

"வடவடுகர் வாளோட்டிய
தொடையமை கண்ணித் திருந்து வேற் றடக்கை"[23]

எனும் அடிகளால் அறியலாம்.

கட்டி எனும் மன்னர் பரம்பரையினர் சங்ககாலந்தொட்டுப் பிற்காலம் வரை தமிழகத்தின் வடவெல்லையில் இருந்து ஆண்டுள்ளனர். அவர்கள் இன்றைய சேலம் மாவட்டத்திலுள்ள அமரகுந்தியைத் தலைநகராகக் கொண்டு இன்றைய ஓமலூர், தாரமங்கலம் பகுதியையும் மைசூரின் தென்பாகத்தையும் ஆண்டனர். இவர்களது நாட்டிற்கப்பால் வடுகர்நாடு இருந்தது. இதனை,

"குல்லைக் கண்ணி வடுகர் முனையது
வல்வேற் கட்டி நன்னாட்டு டும்பர்
மொழிபெயர் தேஎத்த ராயினும்"[24]

எனும் அடிகளால் அறியலாம்.

தமிழகத்தின் வடவெல்லையில் மேற்கண்ட சிற்றரசுகள் அமைந்து தமிழகத்திற்குள் அயலார் படையெடுப்பைத் தடுக்கும் அரணாக விளங்கின எனக் கொள்ளலாம். காரவேலனின் ஹாதிகும்பா கல்வெட்டு குறிப்பிடும் தமிழர்களில் 104 ஆண்டுகாலக் கூட்டணிப்படை மூவேந்தர்களாலும் உருவாக்கப்பட்டு இவர்களது பொறுப்பில் இருத்தப்பட்டதாகவும் இருக்கலாம். இவர்கள் தமிழகத்தின் வடவெல்லையைப் பாதுகாத்தமையைப் புலவர் குழந்தை பின்வருமாறு கூறுகின்றார்:

"பொன்முடிக் கணவாயைத் தகடூரிலிருந்து அதியமான் மரபினரும், தொப்பூர், காவேரிபுரம் கணவாய்களை அமரகுந்தியிலிருந்து கட்டி மரபினரும் காத்து வந்தது போலவே தலைமைக் கணவாயைப் பாரி மரபினர் காத்து வந்தனர் என்கின்றார்கள். இது ஆராய்ச்சிக்குரியதொன்றாகும்."[25]

மேற்கண்டவற்றால் தமிழக மைய மற்றும் வடகிழக்கு எல்லைப் பகுதிகளை அறியலாம்.

தமிழகத்தின் வடகிழக்கில் வேங்கடமலை எல்லையாகவும் மையப் பகுதியில் கட்டிநாடு எல்லையாகவும் விளங்கினமை போலவே வடமேற்குப் பகுதியில் எல்லையாக விளங்கியது நன்னன் நாட்டு ஏழில் குன்றமேயாகும். நன்னன் ஆண்ட ஏழில் குன்றம் பின்வரும் அடிகளால் சுட்டப்படுகின்றது.

"பாரத்துத் தலைவன் ஆர நன்னன்
ஏழில் நெடுவரைப் பாழிச் சிலம்பில்"

"நுணங்குநுண் பனுவற் புலவன் பாடிய
இனமழை தவழும் ஏழிற் குன்றத்து"[26]
"சூழாது சுரக்கும் நன்னன் நல்நாட்டு
எழில் குன்றத்துக் கவா அன் கேழ்கென"

மேற்கண்ட அடிகளால் தமிழகத்தில் வடமேற்கெல்லையில் ஏழிற்குன்றம் அமைந்திருந்தமையையும் அதனை நன்னன் பாதுகாத்தமையையும் அதற்கு அப்பால் மொழிபெயர்தேயம் இருந்தமையையும் அறியலாம். இதனை மயிலை சீனி.வேங்கடசாமி கூற்றாலும் அறியலாம்.[27]

இந்த ஏழிற்குன்றம் குடக்கடற் பக்கமாக மேற்குத் தொடர்ச்சி மலையைச் சேர்ந்த கொங்கண நாடாகிய துளுவ நாட்டில் உள்ளது. ஏழில் மலை இப்போது மலபார் மாவட்டத்தில் உள்ள கண்ணனூருக்கு வடக்கே 18 மைலுக்கப்பால் இருக்கின்றது. இங்கு எழில்மலை என்னும் இரயில் நிலையமும் உண்டு. எழில்மலை என்று உச்சரிக்கத் தெரியாதவர்கள் அதனை எலிமலை என்று வழங்கினர்.

பிற்காலத்தில் அந்த எலிமலையை மூசிகமலை என்று மொழிபெயர்த்துக் கொண்டனர். அந்த மலைப் பகுதியை ஆண்ட அரச வம்சம் பற்றி மூஷிக வம்சம் என்னும் வடமொழி நூலையும் எழுதிவிட்டனர். பிற்காலத்துப் போர்ச்சுக்கீசியர் இந்த மலையை மவுன்ட் டி.எல்லி என்று கூறினர். தமிழ் நாடாக இருந்த சேரநாடு பிற்காலத்தில் மலையாள பாஷை பேசும் நாடாக மாறி விட்ட பிறகு எழில்மலை தமிழகத்தின் வடவெல்லையைக் குறிக்காமல் போயிற்று. ஆனால் சங்க காலத்தில் வடவெல்லையாக இருந்தது எழில்மலை என்பது நன்கு தெரிகிறது. மேற்கண்டவற்றால் தமிழர்களின் வடமேற்கு எல்லை எழில் குன்று என்பதை அறியலாம்.

தமிழகப் பிரிவுகள்

தமிழகம் எல்லையிலும் உட்பிரிவுகளிலும் பல சிறு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருப்பினும் பொதுவில் ஐந்து மண்டலங்களைக் கொண்டதாக விளங்குகின்றது.

01.பாண்டிநாடு

இது காவிரிக்குத் தெற்கே பழைய இராமநாதபுரம், திருநெல்வேலி, மதுரை இம் மூன்று மாவட்டங்களையும் கொண்ட பகுதியையுடைய நாடு என்றும் இது வெள்ளாற்றுக்குத் தெற்கே கன்னியாகுமரிக்கு வடக்கே பெருவெளிக்குக் கிழக்கே கடற்கரைக்கு மேற்கிலுள்ள நாடு எனச் சுட்டப்படுவதாக ந.சி.கந்தையா கூறுவார்.[28] இதனை,

"வெள்ளாறது வடக்கா மேற்குப் பெருவெளியாந்
தெள்ளாம் புனற்கன்னி தெற்கும் - உள்ளார
ஆண்ட கடல்கிழக்கா மைம்பத் தறுகாதம்
பாண்டிநாட் டெல்லைப் பதி"

எனும் பழம் பாடலால் அறியலாம். இதன் தலைநகரம் மதுரையாகும். தாமிரபரணியின் (பொருநை) முகத்துவாரத்தில் துறைமுகப்பட்டினமாகிய கொற்கை நகரம் சில காலம் இதன் தலைநகரமாயிருந்தது.

02.சோழ நாடு

கோட்டைக் கரைக்குக் கிழக்கு, கடற்கரைக்கு மேற்கு, வெள்ளாற்றின் வடக்கு ஆகிய எல்லைக்குட்பட்ட இருபத்து நான்கு காதம் நிலப்பரப்புள்ள நாடு சோழநாடென ஒரு பாடலறிவிக்கின்றது.

"கடல்கிழக்குத் தெற்குக் கரைபொரு வெள்ளாறு
குடதிசையிற் கோட்டைக் கரையாம் - வடதிசையில்
ஏனாட்டுப் பன்னை யிருபது நாற்காதஞ்
சோனாட்டுக் கெல்லையெனச் சொல்"

இதன் தலைநகரம் உறையூரும் காவிரிப்பூம்பட்டினமுமாகும்.

03.சேரநாடு

பண்டைய சேரநாடு என்பது பழனிக்குத் தெற்கும் தென்காசிக்கு மேற்கும் கோழிக்கோட்டிற்குக் கிழக்கும் கடற்கரைக்கு வடக்கும் ஆகிய இந்த எல்லைக்குட்பட்ட எண்பது காதம் நிலப்பரப்பு எனப் பின்வரும் பாடலைக் காட்டிக் கூறுகிறார் ந.சி.கந்தையா.[29]

"வடக்குத் திசைபழனி வான்கீழ் தென் காசி
குடக்குத் திசைகோழிக் கோடாம் - கடற்கரையின்
ஓரமே தெற்காகு முள்ளொன் பதின்காதம்
சேரநாட் டெல்லையெனச் செப்பு"

இதன் தலைநகர் வஞ்சிமா நகரமாகும். சேரநாடு பெரும்பகுதியும் மலையும் மலை சார்ந்த குறிஞ்சி நிலமுமாகும்.

04.தொண்டைநாடு

இது மேற்கே பவளமலையையும் வடக்கே வேங்கட மலையையும் கிழக்கே உவரித்துறைமுகத்தைக் கொண்ட கடலையும் தெற்கே சோனாபடையும் கொண்ட இருபது காதம் நிலப்பரப்பினைக் கொண்ட பகுதியாகும். இதனை,

"மேற்குப் பவளமலை வேங்கடநேர் வடக்கா
மார்க்கு முவரி யணிகிழக்கு - பார்க்குளுயர்
தெற்குப் பினாகி திகழிருபதின் காதம்
நற்றொண்டை நாடெனவே நாட்டு"

என்ற பாடல் காட்டும். இத் தொண்டைமண்டலத்தின் தலைநகரம் காஞ்சியாகும். இது பெரும்பாலும் மருதம் மற்றும் நெய்தலைக் கொண்ட நிலப்பகுதியாகும்.

05. கொங்குநாடு

இது வடக்கில் தலை மலையையும் (இது மைசூருக்கும் சத்தியமங்கலத்திற்கும் இடையில் உள்ளது) தெற்கு வைகாவூர் (பழனி), மேற்கு வெள்ளியங்கிரி மலை, கிழக்கு காவிரி நீர் பாயும் குளித்தலை ஆகியவற்றை எல்லைகளாகக் கொண்டது.

"வடக்குத்தலை மலையாம் வையாவூர் தெற்கு
குடக்கு வெள் ளிப் பொருப்புக் குன்று - கிழக்கு
கழித்தண்டலை சூழும் காவிரிநன் னாடாம்
குழித்தண் டலையளவுங் கொங்கு"

இக் கொங்குநாடு பெரும்பகுதியும் காடும் காடு சார்ந்த முல்லைநிலப் பகுதியுமாகும். மேற்கண்டவற்றால் தமிழகத்தின் நிலவியல் பிரிவுகளையும் அவற்றின் ஆட்சியின் எல்லைகளையும் அறியலாம்.

இலங்கைத் தமிழகம்

இந்தியத் துணைக் கண்டத்தில் தமிழகம் தமிழர்களில் தாயகமாகவும், ஆட்சியியலகமாகவும் விளங்கினமை போலவே இலங்கைத் தீவிலும் வடக்கு மற்றும் கிழக்குப்பகுதி தமிழர்களின் மரபுவழிப் பட்ட தாயகமாக விளங்கி வருகின்றது.

இலங்கைக்கு விஜயன் எனும் முதல் சிங்கள மன்னன் வருவதற்கு முன் நாகர்களும், இயக்கர்களுமே இலங்கைத் தீவின் முதல் குடிகளாக விளங்கினர் என்று அந் நாட்டின் பாலி மொழி இலக்கிய நூலான மகாவம்சம் கூறுகின்றது. இக் கருத்தினை இலங்கைக்கு வந்த சீனப் பயணியான பாஹியான் பின்வருமாறு கூறுகிறார்.

"தொடக்கத்தில் சிங்களத்தில் மக்கள் வாழவில்லை. தேவதைகளும் நாகர்களும் மட்டும் அங்கிருந்தார்கள். அவர்களோடுதான் பல நாடுகளையும் சேர்ந்த வணிகர்கள் தங்களுடைய வணிகத்தை நடத்தினார்கள்."[30]

மேற்கண்ட கூற்றாலும் நாகர்கள் பண்டைய இலங்கைத் தீவின் தொல்குடிகள் என்பதினை அறியலாம்.

நாகர்கள் பண்டைய இலங்கையில் ஆட்சி செய்தமையை நாக என்ற பெயரைப் பின்னொட்டுச் சொல்லாகக் கொண்டிருந்தமையால் அறியலாம். இதற்குக் கல்வெட்டுக்களிலும் பாலி இலக்கியங்களிலும் பல சான்றுகள் காணப்படுவதாகப் பரமு.புஷ்பரட்டணம் கூறுகின்றார்.[31]

தமிழகம் முழுமையிலும் நாக வழிபாட்டுத் தமிழர்கள் வாழ்ந்தமைக்கான சான்றுகள் உள்ளன. அரவர் என்போர் தமிழரே என்று அகராதி கூறுகின்றது. நாகர்களாகிய தமிழர்களால் வட இலங்கையும் கிழக்கிலங்கையும் ஆளப்பட்டமையை அறியலாம். நாகர்கள் தமிழ் இனமாகக் கருதப்பட்டமையையும் இலங்கையின் மற்றொரு இனமாகிய இயக்கர்கள் சிங்களவர்களுடன் கலந்தமையையும் பின்வருமாறு சு.இராசரத்தினம் கூறுகிறார்.

> "கி.மு 5ஆம் நூற்றாண்டளவில் வட இந்தியாவிலிருந்து இந்தோ - ஆரிய இனத்தைச் சேர்ந்த பாலி மொழி பேசும் விஜயன் எனப்படும்அரச குமாரனும் அவனது தோழர்களும் ஈழத்தை வந்தடைந்தனர் என்றும் அதில் விஜயன் என்பவன் குவேனி எனப்படும் அரசியை மணம் முடித்து அரசனானான் என்றும் அதனைத் தொடர்ந்து ஆரியர் பலர் கூட்டம் கூட்டமாக வந்து குடியேறினார்கள் என்றும் மகாவம்சம் கூறுகின்றது."[32]

மேலும் பல்வகைக் காரணங்களால் ஈழத்தில் இயக்கர் இனம் (இந்தோ ஆரிய) சிங்களக் கலப்படைய, நாகர் இனம் தனித் தமிழ் இனமாக வாழ்ந்து வந்தது எனக் கூறுகின்றார். இத் தமிழ் நாக இனம் நாக நாடென்னும் வடபுலத்திலும் கீழ்க்கரையிலும் வாழ்ந்தமையைப் பண்டைய தமிழ் மற்றும் பாலி இலக்கியங்கள் வழி அறியலாம். இந் நிலையில் இலங்கையில் தமிழர் தாயகத்தில் தமிழ் அரசு உருவாக்கத்தைப் பின்வருமாறு பரமு.புஷ்பரட்டணம் கூறுகின்றார்.

> "கி.மு 3ஆம் நூற்றாண்டிலிருந்து அனுராதபுரம் பலம் மிக்க அரசியல் மையமாக விளங்கியபோது அதற்குத் தெற்கிலும் வடக்கிலும் இனக்குழு நிலையிலிருந்து அரசு தோன்றுவதற்கு இடைக்கட்டமாகக் குரிசில்கள், நிலக் குழுத் தலைவர்கள், குறுநில மன்னர்கள், சிற்றரசர்கள் என்போரது ஆட்சி நடைபெற்றதைச் சமகாலப் பாலி இலக்கியங்கள், பிராமிக் கல்வெட்டுக்கள், நாணயங்கள் என்பன உறுதிப்படுத்துகின்றன.
>
> இதில் சங்க காலத்திற்குச் சமமான காலத்தில் இலங்கைத் தமிழரிடையே அரச மரபு தோன்றியதைக் கி.மு. 3ஆம் நூற்றாண்டிலிருந்து பயன்பாட்டிற்கு வந்த பிராமிக் கல்வெட்டுக்களில் வரும் வேள், ஆள், பெருமகன் (பருமன், பருமகள், படுமக) போன்ற பட்டப் பெயர்கள் உறுதி செய்கின்றன.
>
> வடமொழியில் 'ராஜா' என்ற பட்டம் கொண்டிருந்த கருத்தைத் தமிழ் மொழிக்குரிய வேள் என்ற பட்டமும் கொண்டிருந்ததாக ரோமிலாதாப்பர் குறிப்பிடுகிறார்.[33]

இலங்கையின் வடகிழக்குப் பகுதி தமிழரின் தாயகம் என்பதினைக் கே.கே.பிள்ளை பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

> "யாழ்ப்பாணத்திலும் தமிழகத்திலும் வழங்கிய மொழியும் பண்பாடும் திரிபின்றி ஒரேவிதமாக இருந்து வந்தன என்று கருத

வேண்டியுள்ளது. ஈழத்துப் பூதன் தேவனார் என்பவர் யாழ்ப்பாணத்தைச் சார்ந்தவர் என்று அவருடைய பெயரே அறிவிக்கின்றது. அவர் பாடிய பாடல்கள் அகநானூற்றிலும் குறுந்தொகையிலும் நற்றிணையிலும் சேர்க்கப்பட்டுள்ளன."[34] என்று கூறுகிறார்.

மேலும் இலங்கையின் நிலைத்த தமிழரசையும் அதன் தமிழகத் தொடர்பையும் பின்வருமாறு அறியலாம்.

"கி.மு. 2ஆம் நூற்றாண்டிற்குரிய பிராமிக் கல்வெட்டு ஒன்று (வேங்கடசாமி - 1983 - 53) ஈழத்தில் ஆட்சி புரிந்த தமிழ் மன்னனான ஈழத்து வாவிராயன் தமிழகம் வந்து அங்குள்ள சமணத் துறவிகளுக்குத் தானம் அளித்ததாகக் கூறுகிறது."

மேலும் இத்தமிழரசுகள் தமிழர் தாயகத்தைச் சிங்களப் படையெடுப்பாளர்களிடமிருந்து பாதுகாக்கும் போராட்டத்தையே பெரிதும் மேற்கொண்டிருந்தன. இதனைப் பின்வருமாறு பரமு.புஷ்பரட்டணம் கூறுவார்.

"ஒரு சில அரசியல் உறவுகள் பற்றி இந்நூல்கள் கூறியிருந்தாலும் அவை நாக நாட்டிலிருந்து அநுராதபுர அரசிற்கு எதிராக ஏற்பட்ட படையெடுப்புக்கள், கிளர்ச்சிகள் பற்றியனவாகவே உள்ளன. இச் சான்றுகள் அநுராதபுரத்தின்அரசியல் வட்டத்துக்குள் உட்படாத வகையில் நாக நாட்டில் தமிழ் அரச மரபு தோன்றி வளர்ந்திருக்கலாம் என எண்ணத் தூண்டுகின்றது."[35]

எனத் தமிழர் தாயகத்தின் தனித் தன்மையைக் கூறுகிறார்.

மேலும், தொல்காப்பியர் காலத்து இலக்கண வழக்குகள் தமிழகத்தில் வழக்கொழிந்தாலும் யாழ்குடா நாட்டில் வழங்குகின்ற பழமையை அறியலாம். திருஞானசம்பந்தர் பாடிய தேவாரத்தில் ஈழத்துத் தலங்களாக வடக்கில் மாதோட்டமும் கிழக்கில் கோணமலையும் போற்றப்படுவதை உணரலாம். இது ஆறாம் நூற்றாண்டு என்றாலும் அதற்குச் சில நூறாண்டுகளுக்கு முன்பே தமிழ்க் கோயில் வழிபாடு தமிழர் தாயகத்தில் நிகழ்ந்திருக்க வேண்டும். இவ்வாறான பல்வேறு காரணங்களால் தமிழர்கள் வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட தொல் பழங்காலத்திலிருந்து இலங்கைத் தீவைத் தாயகமாகக் கொண்டவர்கள் என்றும் பின் வரலாற்றுக் காலத்தில் சிங்களவர்களின் குடியேற்றத்தால் இலங்கையில் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியை மரபு வழிப்பட்ட தாயகமாகக் கொண்டு அரசுரிமை பெற்று வந்தனர் என்பதனையும் அறியலாம். இதனை அயல்நாட்டார் குறிப்புகளாலும் பின்வந்த மேற்கத்திய ஆட்சியாளர்களின் குறிப்புகளாலும் அறியலாம்.

"காஸ்மாஸ் எனும் பயணி இலங்கையில் அமைந்த இரு நாடுகளைப் பற்றிப் பின்வருமாறு கூறுகிறார். அந்தத் தீவில் ஒருவரோடொருவர் பகைத்துக் கொண்டிருக்கின்ற இரண்டு

அரசர்கள் இருக்கிறார்கள். ஹயாசின்த் கிடைக்கின்ற பகுதி அவர்களுள் ஒருவருடைய ஆட்சியிலும் துறைமுகமும் வணிக மையமும் இருக்கின்ற பகுதி இன்னொருவருடைய ஆட்சியிலும் இருக்கின்றன."[36] என்கிறார்.

காஸ்மாஸ் குறிப்பிடும் வணிக மையம் திருகோணமலையே என்று கிபன் எனும் அறிஞர் கருதுவதாகக் கே.கே.நீலகண்ட சாஸ்திரியார் குறிப்பிடுகிறார். திருகோணமலை கிழக்கில் தமிழரின் தாயகப் பகுதிக்குள் இருக்கின்ற துறைமுகம் என்பதால் அந்த மன்னர்களில் ஒருவன் தமிழ் மன்னன் என்பதை அறியலாம். மேலும் யாழ் என்பது ஏழ் என்பதன் திரிபு. ஏழகம் என்பதே ஈழம் எனத் திரிந்தது எனப் பாவலரேறு பாலசுந்தரம் கூறுகிறார்.[37] இவற்றால் இலங்கையும் இலங்கையின் வடகிழக்குப் பகுதியும் தமிழர்களின் மரபு வழிப்பட்ட தாயகம் என்பதை அறியலாம்.

குறிப்புகள்

1. சிலப்பதிகாரம், 8, 1 - 3.
2. சிலப்பதிகாரம், அடியார்க்கு நல்லார் உரை, உ.வே.சா.பதிப்புIII, ப.228.
3. ச.பாலசுந்தரம், மொழி இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள், ப. 12.
4. பனம்பாரனார், தொல்காப்பியச் சிறப்புப்பாயிரம், 1 - 2.
5. ந.சி.கந்தையாபிள்ளை, தமிழகம், ப. 66.
6. உ.வே.சாமிநாதையர், சங்கத் தமிழும் பிற்காலத் தமிழும், ப. 11.
7. மு.இராகவையங்கார், ஆராய்ச்சித் தொகுதி, ப. 4.
8. தொல்காப்பியம், செய்யுளியல் - 75.
9. மணிமேகலை, 17, 62.
10. ந.சி.கந்தையாபிள்ளை, மேலது, பக். 72 - 73.
11. மு.இராகவையங்கார், தமிழரும் ஆந்திரரும், ப. 23.
12. புறநானூறு, 168, 6182.
13. மேலது, 35, 3 - 4 .
14. மேலது,51,5.
15. பதிற்றுப்பத்து, 20ஆம் பாட்டுப் பதிகம், 4-5.
16. சிலப்பதிகாரம், 3, 37-38.
17. மேலது, 25, 165-160.
18. மேலது, 28, 58.
19. மயிலை சீனி.வேங்கடசாமி, சமயங்கள் வளர்த்த தமிழ், ப, 80.

20. அகநானூறு, 113, 14-7.
21. மேலது, 209, 8-10.
22. மேலது, 295, 11-15.
23. புறநானூறு, 378,2-3.
24. குறுந்தொகை, 11, 5-7.
25. புலவர் குழந்தை, கொங்குநாடும் தமிழும், ப. 47.
26. அகநானூறு,345, 6-7.
27. மயிலே சீனி, வேங்கடசாமி, ஆய்வுக்கட்டுரைகள், தொகுதி-மிப. 297.
28. ந.சி.கந்தையா, தமிழகம், ப. 73.
29. மேலது, ப. 74.
30. கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றிய அயல்நாட்டார் குறிப்புகள், ப. 112.
31. பரமு, புஷ்பரட்டணம், இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரச மரபும், ப. 7.
32. சு.இராசரத்தினம், தமிழீழமும் நாடும் அரசம், ப. 25.
33. பரமு, புஷ்பரட்டணம், இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரச மரபும், ப. 9.
34. கே.கே.பிள்ளை, தமிழக வரலாறு- மக்களும் பண்பாடும், ப. 25.
35. பரமு, புஷ்பரட்டணம், இலங்கைத் தமிழரும் நாகநாட்டு அரச மரபும், ப.3-4.
36. கே.ஏ.நீலகண்டசாஸ்திரி, தென்னிந்தியாவைப் பற்றிய அயல்நாட்டார் குறிப்புகள், ப. 143.
37. ச.பாலசுந்தரம், மொழி இலக்கண வரலாற்றுச் சிந்தனைகள், ப.4.

சுற்றுச்சூழல் பேணும் திருமுறைகள்

முனைவர் சொ. சுடலி தியாகராஜன்,
மேனாள் இணைப் பேராசிரியர்,
பச்சையப்பன் கல்லூரி, சென்னை

கி.பி.575 முதல் 800 வரை உள்ள காலங்களில் தோன்றிய தோத்திர நூல்கள் சைவ சமயத் தத்துவங்களை விளக்கிச் சமயத்தைப் பரப்புவதையே குறிக்கோளாகக் கொண்டிருந்தன. அக்காலத்தில், இன்று போல் சுற்றுச் சூழலில் அதிக பாதிப்பு இல்லை. மக்கள் தொகைப் பெருக்கமும், இயற்கை வளச் சீரழிவும் இன்றுள்ளது போல் அன்று இல்லை. ஆயினும் திருமுறை கண்ட அருளாளர்கள், இயற்கையையும், சுற்றுச் சூழலையும் பாதுகாத்துப் பேணும் உணர்வைப் பெற்றிருந்தனர் என்பதைத் திருமுறைகள் வழி விளக்குவதாக இக்கட்டுரை அமைகின்றது. இதன்வழி, அருளாளர்களின் தொலைநோக்குச் சிந்தனை வியந்து போற்றுவதற்குரியது என்பதை உணரலாம்.

தமிழர்களின் இயற்கை ஈடுபாடு

தமிழர், இயற்கையோடு இயைந்து உறவாடும் வாழ்வு வாழ்ந்தவர். மரம், செடி, கொடிகளையும் மகளாக, உடன் பிறந்தார்களாக வளர்த்தனர். நாரை, அலை, மேகம் போன்றவற்றைத் தூது அனுப்பினர். ஒழுக்கத்தையும் திணை, நிலம் என்ற இயற்கைப் பொருள்களின் அடிப்படையில் வகுத்தனர். உள்ளுறை, இறைச்சி என்ற செய்யுள் மறைபொருள்களையும் இயற்கைப் பொருள்களின் வருணனை அடிப்படையில் அமைத்தனர். இயற்கை வருணனைகளை இலக்கிய விளக்க உத்தியாகவும், குறியீடுகளாகவும், மறைபொருள் கூற்றாகவும், இறைவனோடு தொடர்புபடுத்திச் சித்தாந்த விளக்கங்களைக் கூறுவதற்காகவும் அமைத்தனர்.

" மழைவளருலகில் எங்கும் மன்னிய சைவம் ஓங்க"

என்கிறது பெரியபுராணம்.

தமிழர், பருவம் தவறா மழை, மாதம் மும்மாரி மழையை அரசனோடும், மக்களின் ஒழுக்கத்தோடும், இறைவனோடும் தொடர்புபடுத்தினர்.

நெல்லும் உயிரன்றே நீரும் உயிரன்றே
மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம் (புறநானூறு)

கோல்நிலை திரியின் கோள்நிலை திரியும்
கோள்நிலை திரியின் மாரி வறங்கூறும்
மாரி வறங்கூறின் மன்னுயிர் இல்லை
மன்னுயிர் எல்லாம் மண்ணாள் வேந்தன்

தன்னுயி ராகும் தகுதி யதன்றோ (மணிமேகலை)

முறைகோடி மன்னவன் செய்யின் உரைகோடி
ஒவ்வாது வானம் செயல் (திருக்குறள். 422)

இன்றைய சுற்றுச் சூழல்

தொழிற்சாலை, வாகனங்கள், அனல் மின்சாரம், காடு எரிப்பு, அணு உலை, அணு ஆயுத சோதனை, எரிமலை, காட்டுத்தீ, அமிலமழை, நிலத்தடி நீர் மாசு, வீட்டு உபயோகப் பொருள்களின் ப்ளோரோ கார்பன், மக்காத குப்பை, மின்காந்த அலைகளின் தாக்கம் போன்றவை அன்று அதிகம் இல்லை. ஆனால், இன்று பஞ்சபூத மாசால், ஓசோன் பாதிப்பும், சூரிய ஒளிக்கதிரின் ஊடுருவல் வேக அதிகரிப்பும் ஏற்பட்டு, ஆர்ட்டிக்கா, அண்டார்ட்டிக்காவில் உள்ள பனிப்பாறை உருகிக் கடல் மட்டம் அதிகமாகிறது. இதனால் விளைநிலப் பாதிப்பு, நிலப்பிளவு, மழையின்மை, பருவநிலை மாற்றம் மற்றும் சீற்றம், கடும் வறட்சி, கடும் பஞ்சம், கொடிய நோய் போன்றவை ஏற்படும் நிலை உருவாகியுள்ளது.

சுற்றுச் சூழலின் மூன்று நிலைகள்

மனிதனின் வாழக்கையைப் போலவே, சுற்றுச் சூழலும் மூன்று கூறுகளை உள்ளடக்கியது.

மனிதனின் வாழ்க்கை

சுற்றுப்புறத்தால் அமையும் வாழ்க்கைப் பகுதி	உடம்பால் அமையும் வாழ்க்கைப் பகுதி	மனத்தால் அமையும் வாழ்க்கைப் பகுதி

சுற்றுச்சூழல்

இயற்கையைச் சார்ந்த சூழல் (நிலம், நீர், தீ, சூரிய மண்டலம் போன்றவை)	உயிரினங்களைச் சார்ந்த சூழல் (மனிதன், விலங்கு, காற்று, ஆகாயம், தாவரம், வைரஸ், பாக்டீரியா போன்றவை)	சமூகத்தைச் சார்ந்த சூழல் (மக்கள், கலாசாரம், சமயம், அரசியல் , பொருளாதாரம் போன்றவை)

மனிதன் வாழ்க்கையில், சுற்றுப்புறத்தால் அமையும் பகுதியும், சமூகத்தால் அமையும் பகுதியும் மனிதன் கையில் இல்லை. ஏனெனில், மனித சக்தியை விடக் காற்று, மழை, புயல், வெள்ளம், எரிமலை, பூகம்பம், சுனாமி, காட்டுத்தீ போன்ற கூறுகளின் சீற்ற ஆற்றல் பெரிது. மேலும், நோய்க்கிருமி, சாதி மதக் கட்சிப் பூசல், மூடநம்பிக்கைகளிலிருந்து உலகைத் திருத்துவது அரிது.

உடம்பைப் பாதுகாப்பதும் ஓரளவுதான் மனிதனுடைய கையில் உள்ளது. உணவு, நல்ல பழக்கம், உடற்பயிற்சி, புலனடக்கம், தக்க மருத்துவம் போன்றவற்றால் ஓரளவு பாதுகாக்கலாம். புற்றுநோய் போன்ற கொடிய நோய்கள், இயற்கையின் தட்ப வெப்பம், தூசி, புகை, நச்சு நீர், காற்றில் பரவும் நோய்க்கிருமி, கருவில் வளரும்போது வரும் பாதிப்பு போன்றவற்றில் இருந்து முற்றிலும் பாதுகாப்பது என்பது மனிதன் கையில் இல்லை.

ஆனால், மனதைத் திருத்தினால் முழு வெற்றி பெறமுடியும். அந்த மனம், மனிதன் கையில் இல்லை. அகங்காரத்தின் கையில் அல்லவா இருக்கிறது. அகங்காரத்தில் இருந்து விடுபட்டால் மட்டுமே மனதைத் திருத்தி நம் வசப்படுத்த முடியும். விடாமுயற்சியுடன் மனதை விரும்பியபடி, சோம்பலற்ற, நம்பிக்கை யுடைய, ஒழுக்கமிக்க, தியாகமுடைய, தன்னலமற்ற தூய மனமாக ஆக்க முடியும். உலகையும், உடம்பையும் திருத்த நினைப்பதை விட மனதைத் திருத்த முயற்சி செய்தால் அனைத்தும் தானாகவே செம்மையாகும். இதற்கு மனவலிமை வேண்டும். அன்றாடப் பயிற்சியும், படிப்படியான வளர்ச்சியும் பெற வேண்டும். ஒவ்வொரு தனி மனிதனின் மனமும் தூய்மையானால் சுற்றுப்புறம் தாமாகவே தூய்மையாகும். இம்மனத் தூய்மையால், மனம் பக்குவப்பட்டு இயற்கை இறைவனாகத் தோன்றும்.

சிவனது ஆணையால், இயற்கைப் பொருளாகிய மாயையில் இருந்து தோன்றிய ஆக்கப் பொருளே உலகம் என்கிறது சைவ சித்தாந்தம். சிவனது ஆணையே உலக இயற்கைப் பொருள் என்கிறது சாத்திரமாகிய திருமுறைகள்.

சைவம் என்பது சிவத்தோடு தொடர்புடையது என்கிறார் திருமூலர். 'சி' என்பது செம்மை, கடந்து நிற்கும் இயல்பு. 'வ' என்பது கலந்து நிற்கும் இயல்பு. இறைவன் கடந்தும், கலந்தும் நிற்கும் நிலையில் அனைத்தினுள்ளும், ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பவன். எனவே, இயற்கையில் கலந்து இருக்கும் இறைவனையும், இயற்கையையும் போற்றுங்கள் என்று அருளாளர்கள் அறிவுறுத்தினர்.

அருளாளர்கள் இயற்கையைப் போற்றியமை

அருளாளர்கள் இயற்கையைப் போற்றியதன் வழி, சுற்றுச்சூழலைப் பேணினர் என்பதைத் திருமுறைகள் வழி அறியலாம்.

1.தலங்கள் தோறும் சென்று இறைவனைப் பாடும் பொழுது இயற்கையையும் சிறப்பித்துப் பாடினர். ஒரு பாடலில் முதல் இரண்டடியில் இறைவனின் புறத்தோற்றம், அருள்நிலை, புராணச் செய்திகளைக் கூறி அடுத்த இரண்டடிகளில் தல வருணனைகளைக் கூறும் பாடல்களும், முழுமையான இயற்கை வருணனை உடைய பாடல்களும், வாய்ப்பேற்படும் போதெல்லாம் இயற்கையைச் சிறப்பித்துப் பாடும் பாடல்களும் மிகுதியாக உள.

"குன்றெலாம் குயில் கூவக் கொழும்பிரச
மலர் பாய்ந்து வாசமல்கு
தென்றலார் அடிவருட செங்கரும்பு
கண்வளரும் திருவையாறே " **(திருஞான சம்பந்தர்)**

நீல மா மஞ்ஞையேங்க நிரைக்கொடிப் புறவம் பாடக்
கோலவெண் முகையேர் முளைக் கோபவாய் முறுவல் காட்ட
ஆலுமின்னிடை சூழ்மாலைப் பயோதரமசைய வந்தாள்
ஞாலநீடு அரங்கிலாடக் காரேனும் பருவ நல்லாள் **(பெரியபுராணம் 944)**

ஆனிரைகூட அகன்புறவில் சென்றேறிக்
கானுறை தீய விலங்குறு நோய்கள் கடிந்து எங்கும்
தூநறு மென்புல் அருந்தி விரும்பிய தூ நீருண்டு
ஊனமில் ஆயம் உலப்பில பல்க அளித்துள்ளார். (பெரியபுராணம் 935)

2. இயற்கை என்பது பஞ்ச பூதங்களின் சேர்க்கை. எனவே, இறைவன் பூதங்களில் மட்டுமின்றி எல்லா அணுக்களிலும் ஒன்றாய், வேறாய், உடனாய் இருப்பவன் என்று வலியுறுத்தினர்.

புவிமுதல் ஐம்பூதமாய் புலன் ஐந்தாய்
நிலன் ஐந்தாய் கரண நான்காய்
அவையவை சேர் பயனுருவாய் அல்லவுரு
வாய் நின்றான் அமருங் கோயில்
தவமுயல்வோர் மலர் பறிப்ப தாழ விடு
கொம்பு தைப்பக் கொக்கின் காய்கள்
கவண் எறிகல் போல் சுனையில் கரை சேரப்
புள்ளிரியும் கழுமலமே (திருஞான சம்பந்தர் 1389)

பாரிடை ஐந்தாய் பறந்தாய் போற்றி
நீரிடை நான்காய் திகழ்ந்தாய் போற்றி
தீயிடை மூன்றாய் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
(போற்றித் திருவகவல் திருவாசகம்)

அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு
மதியில் தண்மை வைத்தோன் திண்திறல்
தீயில் வெம்மை செய்தோன் பொய்தீர்
வானில் கலப்பு வைத்தோன் மேதகு
காலின் ஊக்கம் கண்டோன் நிழல்திகழ்
நீரில் இன்சுவை திகழ்ந்தோன் வெளிப்பட
மண்ணில் திண்மை வைத்தோன் என்றென்று
எனைப் பலகோடி எனைப் பலபிறவும்
அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன் (திருவாசகம்)

அவனே இருசுடர் தீ ஆகாசம் ஆவான்
அவனே புவி புனல் காற்று ஆவான் - அவனே
இயமானனாய் அட்ட மூர்த்தியாய் ஞான
மயனாகி நின்றானும் வந்து. (அற்புதத் திருவந்தாதி 19)

3. மூர்த்தி, தலம், தீர்த்தம் என்ற மூன்றினையும் சிறப்பித்துப் பாடினர். மூன்றின் சிறப்புகளையும் ஒரே பாடலில்,

பேயடையாப் பிரிவெய்தும் பிள்ளையினோடு உள்ள நினை
வாயினவே வரம்பெறுவர் ஐயுற வேண்டா ஒன்றும்
வேயனதோள் உமைபங்கன் வெண்காடு முக்குள நீர்
தோய்வினையார்அவர்தம்மைத் தோயாவாம் தீவினையே

(திருஞான சம்பந்தர்)

என்று சம்பந்தர் குறிப்பிடுவதன் வழி, நிலம், நீர் வளங்களைப் பேணல் என்பன சுட்டப்படுகின்றன.

4.அண்டங்களின் தத்துவமும், அணுவின் தத்துவமும், தில்லைத் திருநடனத் தத்துவத்தில் அம்பலவாணனின் ஆனந்தக் கூத்தில் வைத்து விளக்கியுள்ளனர்.

அரன் துடி தோற்றம் அமைத்தல் திதியாம்
அரன் அங்கி தன்னில் அறையின் சங்காரம்
அரனுற்று அணைப்பில் அமரும் திரோதாயி
அரனடி யென்றும் அனுக்கிரகம்மே (திருமந்திரம் - 2753)

5.உழவாரப்பணி செய்து கோவிலையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக வைக்க அறிவுறுத்தினர். அப்பர் இத்தொண்டில் சிறந்து விளங்கினார். கா வளர்த்தல், குளங்களைத் தூய்மை செய்து ஆழப்படுத்துதல், தண்ணீர்ப் பந்தல் அமைத்தல் போன்ற தொண்டுகளை வலியுறுத்தினர். சரியைத் தொண்டு புறத் தூய்மையினை வலியுறுத்துவதாக உள்ளது.

6.அனைத்துப் பொருள்களிலும் இறைவனைக் கண்டு அவற்றைப் பேணினர்.

சென்றணைந்த ஆனாயர் செய்த விரைத்தாமம் என
மன்றன் மலர்த்துணர் தூக்கி மருங்கு தாழ் சடையார்போல்
நின்றதொரு கொன்றையினை நேர் நோக்கி நின்றுருகி
ஒன்றிய சிந்தையிலன்பை உடையவர்பால் மடைதிறந்தார்

(ஆனாய நாயனார் புராணம்)

பக்குவப்பட்ட உயிர்களுக்கு இயற்கை சிவமாகத் தோன்றியது.

7.உலகில் உள்ளதைப் போன்றே மனித உடலிலும் நானிலப் பகுப்பை உணர்ந்தனர்.

முன்தலைப் பகுதி	-	குறிஞ்சி
பின் தலைப்பகுதி	-	முல்லை
நெஞ்சுப்பகுதி	-	மருதம்
அடிவயிற்றுப் பகுதி	-	நெய்தல்

இவற்றுள் எது அதன் இயல்பில் இருந்து திரிந்தாலும் அது பாலை.

பிடரி நரம்புக் காடுகள் இரண்டு வகையில் உதவுகின்றன. உணர்வுகளைக் கீழ்நோக்கி உலகியலிலும் செலுத்துகின்றன. வினை நீங்கியதும், இறைவன்பால் செலுத்தி, உணர்வு நரம்புகளை நம் முன்தலை நோக்கிச் செலுத்தி உயிரின ஆற்றலையும், இறைமைப் பண்பினையும் பெருக்கத் துணை செய்கின்றன. மேலும், தீர்த்தத் தலங்களாக, உடம்பில் புருவ நாடு காசி, இதயம் பிரயாகை, மூலாதாரம் கமலாலயம் என்றெல்லாம் குறிப்பிடும் நிலையும் உள்ளது.

அருளாளர்களாகிய திருமுறை ஆசிரியர்கள் தொலை நோக்கு ஞானியர். எனவே, இயற்கையைப் பேணும் இன்றியமையாமையையும், அதற்கு ஒருமுகப்படுத்தப்பட்ட சிந்தை வேண்டும் என்பதையும், அகங்காரம் நீங்கினால் இதற்குரிய மன உறுதியைப் பெறலாம் என்பதையும் வலியுறுத்தினர்.

வாழ்வியல் கட்டமைப்பும் வீடு உருவாக்கமும்

முனைவர் மூ. தமிழரசி
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை
லேடி டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

உறைவிடம் என்பது தனிமனிதனின் தவிர்க்க இயலாத தேவைகளுள் ஒன்றாகும். குகைகளிலும், புதர்மறைவிடங்களிலும் வாழத் தொடங்கிய மனிதன், விவசாயம் செய்யும் படிநிலை மாற்றத்திற்குட்பட்ட பொழுது நிலையான உறைவிடம் அவனுக்குத் தேவைப்பட்டது. மரக்கிளைகளாலும், இலைகளாலும், மரப்பட்டைகளாலும் வீடு உருவாக்கம் பெற்றது. இவ்வமைப்பானது தேவைக்கேற்பவும், விருப்பத்திற்கேற்பவும், வாழ்வியல் சூழலுக்கேற்பவும் வடிவமைப்பில் உருமாற்றம் பெறலாயிற்று. மனித நாகாரிக வளர்ச்சியில் உறைவிட உருவாக்கம் என்பது மனிதனின் வாழ்வியல் தரத்தைத் தீர்மானிக்கும் முக்கியக் காரணியாக விளங்கத் தொடங்கியது. கால மாற்றத்தில் சாதியக் கட்டமைப்புக்குட்பட்ட தமிழ்ச் சமூகத்தில் வீட்டமைப்பானது சாதியக் குறியீடாக விளங்கி வருகின்றமை நோக்கத்தக்கது. வீட்டமைப்பினைக் கொண்டே சாதியைக் கணிக்கும் போக்கு தமிழ்ச்சமூகத்தில் காலங்காலமாக இருந்து வருகிறது. மனிதன் குழுக்களாக வாழ முற்பட்ட போது பல்வேறுபட்ட வாழ்வியல் அமைப்புகளைக் கொண்ட மக்கள் தனித்தனி உறைவிடங்களை ஒரே குழுவில் உருவாக்கத் தலைப்பட்டனர். இவை சிற்றூர்களாக வளர்ச்சி அடைந்தன.

இம்மரபியல் மாற்றத்தில் உருவாக்கம் பெற்றதே 'கருப்பாயூரணி' என்னும் சிற்றூராகும். இச்சிற்றூரில் வாழும் மக்களின் வாழ்வியல் அமைப்பை அடிப்படையாகக் கொண்ட வீட்டமைப்பை இக்கட்டுரை விளக்க முற்படுகிறது.

ஊர்ப் பெயர்க் காரணம்

'கருப்பாயூரணி' என்பது தமிழரின் பாரம்பாரியத்தைப் பறைசாற்றும் பழம் பெரும் சிற்றூராகும். கருப்பாயி + ஊருணி என்ற இரு சொற்களின் இணைவே கருப்பாயூரணி. 'கருப்பு' என்ற சொல்லிற்குச் சினை, அடிப்படை, கருப்பம், மேடு,மேன்மை என்னும் பல பொருள்களைத் தமிழகராதி கூறுகின்றது. எனவே 'ஊருணி' (குளம்) இச்சிற்றூர் உருவாக்கத்திற்கு அடிப்படையாக (சினை, கருப்பம்) இருந்திருக்கலாம் எனக் கணிக்க முடிகிறது. ஆனால் இச்சிற்றூர் மக்களோ இப்பெயர் உருவாக்கத்திற்குக் தொன்மக்கதை ஒன்றைப் பதிவு செய்கின்றனர் "ஊரில் தண்ணீர்ப் பஞ்சம் ஏற்பட்ட வேளையில் தெய்வீக ஆற்றல் உள்ளதாக நம்பப்பட்ட 'கருப்பாயி' என்ற மூதாட்டியை அழைத்து ஊரின் நடுவே குழி ஒன்றைத் தோண்ட செய்தனர். ஊராரின் விருப்பத்திற்கேற்ப அம்மூதாட்டி

குழியைத் தோண்ட நீருற்று பெருக்கெடுத்தது. அதனைக் கண்ட மக்கள் அம்மூதாட்டியை வணங்கி அவ்விடத்திற்கு 'கருப்பாயூரணி' எனப் பெயாரிட்டு அழைக்கத் தொடங்கினர்". இன்று வரை எவ்வித மாற்றமுமின்றி அப்பெயரே வழங்கப்பட்டு வருகின்றது.

ஊரின் அமைப்பும் மக்கள் தொகையும்

தமிழ்நாட்டிலுள்ள மதுரையிலிருந்து ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் கருப்பாயூரணி என்னும் ஊர் அமைந்துள்ளது. ஊரின் தொடக்கப் பகுதியில் அம்பலக்காரர் என அழைக்கப்படும். 'கள்ளர்' இன மக்கள் வாழ்கின்றனர். அவர்களுக்கு அடுத்த பகுதியில் வலையர், நாயக்கர் இன மக்கள் வாழ்கின்றனர். ஊரின் நடுப்பகுதியில் 'ஊருணி' அமைந்துள்ளது. ஊருணியின் கிழக்குப்பகுதியில் தாழ்த்தப்பட்ட மக்களான பறையர், பள்ளர், சக்கலியர், இன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். ஊருணியானது தாழ்த்தப்பட்ட மக்களையும் பிற இன மக்களையும் பிரிப்பது போன்று நடுவே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தாழ்த்தப்பட்ட மக்கள் மேல்சாதி மக்கள் வசிக்கும் இடங்களுக்கு வேலை நிமித்தமாக மட்டுமே வந்து செல்வது ஊரின் நெடுங்கால வழக்கமாகக் காணப்படுகிறது. இம் மக்கள் பிற தேவைகளுக்காக வெளி இடங்களுக்குச் செல்ல அவர்களுக்கென ஒதுக்கப்பட்ட ஊரின் ஒதுக்குப்புறத்தில் அமைந்துள்ள வழித்தடங்களையே பயன்படுத்துகின்றனர்.

இச்சிற்றூரில் மொத்தம் ஆயிரம் குடும்பங்கள் வாழ்கின்றன. இதில் ஐநூறு குடும்பங்கள் கள்ளர் இனத்தைச் சார்ந்தவர்கள். மூந்நூறு குடும்பங்கள் நாயக்கர்; வலையர் இனத்தைச் சார்ந்தவர்கள். மீதமுள்ள இருநூறு குடும்பங்கள் பள்ளர், பறையர் மற்றும் சக்கிலியர் முதலானோர்.

இச்சிற்றூர் மக்களின் தெய்வமாகப் 'பாண்டிமுனி' விளங்குகிறது. இவ்வூர் மக்களை நோய் நொடியிலிருந்தும் பிறசக்திகளின் தாக்குதலிலிருந்தும் இத்தெய்வம் காப்பதாகக் காலங்காலமாக நம்புகின்றனர். இக்காவல் தெய்வத்தின் கோயில் ஊரின் தொடக்க எல்லையில் அமைந்துள்ளமை கருதத்தக்கது. இரவு வேளைகளில் இத்தெய்வம் ஊரைச் சுற்றி வந்து ஊரைக் காப்பதாகவும், அதன் வழித்தடத்தில் குறுக்கீடுகள் அமைக்கப் பெற்றால் அது அழிந்துபடும் எனவும் மக்கள் இன்றளவும் நம்புகின்றனர். இதற்கான பல காரணிகளையும் எடுத்துக்காட்டுகளையும் இம்மக்கள் கூறுகின்றனர்.

இவ்வூரைச் சுற்றி விளை நிலங்களே காணப்படுகின்றன. இவர்களின் முக்கியத்தொழில் விவசாயம். விளைநிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் மேல் சாதியினரான கள்ளர் இனமக்களே. தாழ்த்தப்பட்ட மக்கள் இவ்விளை நிலங்களில் கூலிவேலை செய்து வாழ்க்கை நடத்துகின்றனர். இவர்கள் காலங்காலமாக விளைநிலமற்ற ஏழைகளாகவே உள்ளனர்.

வீட்டமைப்பும் வாழ்க்கைத்தரமும்

வீட்டமைப்பினைக் கொண்டே இம்மக்களின் வாழ்க்கைத் தரத்தை உணரமுடிகிறது. வீடனாது வாழ்வியல் படிநிலை வளர்ச்சியின் பிரதிபலிப்பாக

விளங்குகின்றது. இச்சிற்றூரின் தொடக்கத்திலமைந்த மேல் சாதியினரின் வீடுகள் காரை வீடுகளாகவே (சுண்ணாம்பு, மணல்கலவை) உள்ளன. இக்காரை வீடுகள் மாடிவீடுகள் என்று அழைக்கப்படுகின்றன. இவ்வீடுகள் சிமெண்ட் மற்றும் சுண்ணாம்புக் கலவை கொண்டு கட்டப்பட்டுள்ளன. சுவரின் உட்புறமும், வெளிப்புறமும் வண்ணப்பூச்சுகள் காணப்படுகின்றன. தளங்கள் சிமெண்ட் கலவையால் அமைக்கப்படடுள்ளமையால் வீட்டின் உட்பகுதி காற்றோட்டமின்றி வெப்பம் மிகுந்துள்ளது. தற்காலத்தில் அனைத்து வீடுகளிலும் வெப்பத்தைத் தணிக்க இவர்கள் மின்விசிறிகளைப் பயன்படுத்துகின்றனர். சிறு வீடுகளாக இருப்பினும் இவற்றுள் பல சிறு சிறு அறைகளும் உள்ளன. பெரும்பாலான வீடுகள் நான்கு சுற்று வீடு என அழைக்கப்படும் உள் முற்றம் கொண்ட வீடுகளாகவே உள்ளன. இதில் நடுப்பகுதி திறந்த வெளியாக இருக்கும். இப்பகுதி உள் முற்றம் என அழைக்கப் பெறும். இவ் உள் முற்றத்தைச் சுற்றி அறைகள் அமைந்திருக்கும். இவ் வடிவமைப்பில் அமைந்த வீடுகள் காற்றோட்ட வசதியுடன் அமைந்துள்ளன.

காரை வீடுகளை அடுத்து அமைந்த வலையர், நாயக்கர் இனமக்களின் வீடுகளனைத்தும் ஓட்டு வீடுகளாக இருப்பதைக் காணமுடிகிறது. இவ்வோட்டுவீடுகளின் சுவர்கள் செங்கலும், மணலும் கலந்த கலவையால் கட்டப்பட்டு, சிமெண்டால் மேல் பூச்சு பூசப்பட்டுள்ளது. இவ்வீட்டின் தளம் சிமெண்டால் அமைக்கப்பட்டுள்ளது. வீட்டின் கூரை மண் ஓடுகளால் வேயப்பட்டிருக்கிறது. இதனால் வெயில் காலங்களில் மிகுந்த வெப்பமாகவும் குளிர்காலங்களில் மிகுந்த குளிராகவும் இருப்பதாகவும் அவ்வின மக்கள் கூறுகின்றனர். இவ்வீட்டில் சமைப்பதற்கும் உறங்குவதற்கும் எனத் தனித்தனி அறைகள் உள்ளன.

ஊருணியின் கிழக்குப் பகுதியில் அமைந்துள்ள தாழ்த்தப்பட்ட இனமக்களின் (பள்ளர், பறையர், சக்கிலியர்) வீடுகள் பனை ஓலைகளால் வேயப்பட்ட குடிசை வீடுகளாகவே இருப்பது நோக்கத்தக்கது. இப்பகுதி சேரி என அழைக்கப்படுகிறது. இக்குடிசை வீடுகள் கல்லும் செம்மண்ணும் கலந்த கலவையால் கட்டப்பட்டுள்ளன. வீட்டின் தளமும் மண்ணால் பூசப்பட்டுள்ளது. இவ்வீடுகள் என்றென்றும் குளிர்ச்சியும் காற்றோட்டமும் நிறைந்து காணப்படுவதாக அவ்வீடுகளில் வசிக்கும் மக்கள் கூறுவதை அறிய முடிகிறது. இவ்வூரைச் சுற்றிப் பனை மரங்கள் அதிகமாகக் காணப்படுவதால் இவ்வின மக்கள் அம்மரத்தின் ஓலைகளைச் சேகாரித்துத் தங்கள் வீட்டின் மேற்கூரைகளை அமைத்துக் கொண்டுள்ளனர். இதனால் இவ்வீடு கட்டுவதற்கு உடல் உழைப்பு மட்டும் தேவைப்படுகிறதே தவிரப் பொருட்செலவு இல்லை என்பது தெரியவருகிறது. குடிசை வீடானது தனித்தனி அறைகள் இல்லாது ஒரே அறையைக் கொண்ட வீடாக அமைந்துள்ளது. எனவே இவ்வினமக்கள் சமைப்பதற்கு வீட்டின் முன்புறம் உள்ள இடத்தைப் பயன்படுத்துகின்றனர். ஒரே அறையைக் கொண்டதாக இவ்வீடு அமைந்து இருப்பதால் தூய்மைப்படுத்துவதும் பாதுகாப்பதும் எளிதாக இருக்கிறது. வீட்டின் தளத்தை வாரம் இருமுறை

(செவ்வாய், வெள்ளி கிழமைகள்) மாட்டுச்சாணம் கொண்டு மெழுகுகின்றனர். இதனால் கிருமிகளும் தீயசக்திகளும் வீட்டினுள் நுழையாது என்பது இவர்களின் நம்பிக்கையாக உள்ளது. பிற இனமக்களால் தரம் குறைத்து மதிப்பிடப்பட்டாலும் இக்குடிசை வீடுகள் தன்னகத்தே பல்வேறு நன்மைகளைக் கொண்டு விளங்குகின்றன.

இச்சிற்றூரில் வாழும் பிற மக்கள் கள்ளர் இன மக்களைக் காரை வீட்டுக்காரர்கள் என்றே அழைக்கின்றனர். இது இவர்களது பொருளாதார உயர்வை வெளிக்காட்டுகின்றது. சாதியமைப்பிலும், பொருளாதார வசதியிலும் உயர்ந்தவர்களாகக் கருதப்படும் கள்ளர் இனமக்களுக்கு அடங்கியே பிறஇன மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இச்சிற்றூரில் அனைத்து வீடுகளின் நுழைவாயில்களும் தாழ்வாகவே காணப்படுவது குறிப்பிடத்தக்கது. வீட்டினுள் நுழையும் எவரும் 'தான் என்ற அகந்தையோடு' நுழையாது, தன்னடக்கத்துடன் குனிந்து வரவேண்டும் என்பதற்காக இவ்வாறு அமைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடுகின்றனர்.

கள்ளர் இன மக்களைத் தவிர்த்த பிற இனமக்கள் காரைவீடு கட்டுவதற்கு முற்காலங்களில் அனுமதி மறுக்கப்பட்டிருந்ததாக நேரடிப் பேட்டியின் போது அறிய முடிந்தது. வலையர், நாயக்கர் இனமக்களின் ஓட்டு வீடுகளும் தாழ்த்தப்பட்ட இன மக்களின் கூரை வீடுகளும் இன்றளவும் இதற்குச் சான்றுகளாக உள்ளன. வலையர், நாயக்கர் இனமக்கள் அனறாடக் கூலி வேலை செய்து வாழ்க்கை நடத்த வேண்டியசூழலில் உள்ளமையால் அவர்களின் பொருளாதார நிலை காரை வீடு கட்டுவதற்கு ஏற்றதாக இல்லை என்பதும் உணரத்தக்கது.

பள்ளர், பறையர் இனமக்கள் கள்ளர்களின் விவசாய நிலங்களில் நாற்று நடுதல், களை எடுத்தல், அறுவடை செய்தல், வரப்பு வெட்டுதல், உழுதல் போன்ற விவசாயம் சார்ந்த கூலித்தொழில்களையே செய்து வருவதால் இவர்கள் பொருளாதார நிலையில் மிகவும் பின்தங்கியுள்ளனர். சக்கிலிய இனமக்களைப் பள்ளர், பறையர் இனமக்கள் தங்களை விடத் தாழ்ந்தவர்களாகவே எண்ணுகின்றனர். ஏனெனில் இவர்கள் பிணம் எரித்தல், இறந்த ஆடு, மாடுகளின் மாமிசத்தை உண்ணுதல், கழிவறைகள், ஊர்ச்சாக்கடைகளைத் துய்மைப்படுத்துதல் போன்ற தொழில்களில் ஈடுபடுவதால் இவர்கள் கடைநிலையில் வைத்துக் கருதப்படுகின்றனர்.

பழக்கவழக்கங்கள்

'மக்களினம் தோற்றம் பெற்ற காலநடதொட்டே சில பழக்கங்கள் அவர்களால் தொடர்ந்து பின்பற்றப்பட்டு அவை மாற்ற இயலாது வாழ்வியலோடு பிணைந்த ஒன்றாக விளங்கும் போது அது பழக்கவழக்கம் என அழைக்கப்படுகிறது. இப்பழக்க வழக்கங்கள் உணவு, உடை, சடங்குமுறைகள், வழிபாட்டு முறைகள் இவற்றில் தொடர்ந்து பின்பற்றப்படுகின்றன. கால ஓட்டமோ, நாகாரிக வளர்ச்சியோ, கல்வியறிவோ, அறிவியல் வளர்ச்சியோ இப்பழக்க வழக்கங்களில் மாற்றங்கள் ஏற்படுத்துவதைப் பொதுவாகவே தமிழ்ச்

சமூகம் விரும்புவதில்லை. அதற்கு இச்சிற்றூரும் விதி விலக்கன்று. இம் மக்கள் தங்களது தொன்மையான பழக்க வழக்கங்களை இன்றளவும் மாற்றங்களுக்குட்படுத்தாது கட்டிக் காத்து வருகின்றமை போற்றுதற்குரியது.

கள்ளர் இனமக்கள் விளைநிலங்களுக்குச் சொந்தக்காரர்களாக இருப்பதால் பெரும்பாலும் அரிசிச் சோற்றினை உணவாகக் கொள்கின்றனர். காலை வேளைகளில் மட்டும் அரிசியினால் சமைக்கப்பட்ட இட்லி தோசையை உணவாக உண்ணுகின்றனர். இவர்கள் தங்கள் வீடுகளில் சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெறும்போது ஆடு, கோழி போன்றவற்றை வெட்டி அதன் மாமிசத்தைச் சமைத்து உணவாகக் கொள்கின்றனர். இன்றுவரை அசைவ உணவு உண்ணும் பழக்கத்தைத் தங்கள் இனத்திற்கே உரிய பெருமையாகக் கருதுகின்றனர். வலையர் மற்றும் நாயக்கர் இன மக்களின் பாரம்பாரிய உணவாகச் சோறு மற்றும் கூழ் உள்ளது. கூழ் என்பது தானியங்களை இடித்த மாவினால் தயாரிக்கப்படும் நீர் சேர்ந்த உணவாகும்.

இவ்வினமக்கள் பொழுது விடியும் முன் வேலைக்குச் சென்று, பொழுது சாய்ந்த பின் வீடுகளுக்குத் திரும்புவதால், மாலை வேளைகளில் மட்டுமே சோறு சமைக்கின்றனர். காலையும், மதியமும் மாலையில் ஆக்கிய பழைய சோற்றினையே உண்ணுகின்றனர். பள்ளர், பறையர், சக்கிலியர் இன மக்களின் உணவு குறைந்த அளவு சோறாகவும் பெரும்பான்மை கூழாகவும் உள்ளது. வேலை செய்து கிடைக்கும் சொற்ப வருமானத்தில் தங்கள் பசியை ஆற்றிக் கொள்ள இவ்வுணவே போதுமானதாக இருக்கிறது. இவ்வின மக்கள் பண்டிகை நாள்களில் கள்ளர் இன மக்களின் வீடுகளுக்குச் சென்று, வீட்டினுள் நுழையாது வீட்டின் வெளிப்புறம் நின்று தங்கள் கைகளில் கொண்டு சென்றுள்ள பாத்திரங்களில் உணவுகளைப் பெற்றுச் செல்வார்கள். பிற ஊர்களுக்குச் சென்று அவர்கள் இவ்வாறு உணவுகளைப் பெறும் வழக்கம் இல்லை.

கள்ளர், நாயக்கர், வலையர், பள்ளர், பறையர், சக்கிலியர் போன்ற அனைத்து இன மக்களுக்கும் உடை என்பது பெரும்பாலும் ஒரே மாதிரியாக உள்ளதை அறிய முடிகிறது. அதாவது பெண்களுக்குச் சேலை இரவிக்கையும், ஆண்களுக்கு வேட்டி சட்டையும் பாரம்பரிய உடையாக உள்ளன. கள்ளர் இனப்பெண்கள் காது வளர்த்து, சவுடி என்னும் காதணியையும், கழுத்துப்பதக்கம் என்னும் அணிகலனையும் அணிந்து பிற பெண்களினின்றும் வேறுபடுகின்றனர். சேலை உடுத்துவதிலும் (பின்பகுதியில் மடிப்பு வைத்து) தனித்தன்மை உடையவர்களாக உள்ளனர். இவர்களது அணிகலனும், உடையும் இவர்களது சாதிய அடையாளங்களாக உள்ளன. கள்ளர் இனத்தில் பெண்கள் திருமணத்திற்கு முன்னும் பின்னும் கலர் இரவிக்கையை அணிவதைத் தங்களின் இனப்பழக்கமாகக் கொண்டுள்ளனர்.

தாழ்த்தப்பட்ட இனமக்கள் பெரும்பாலும் இரவிக்கை அணியாமல் சேலையை மட்டுமே ஆடையாக உடுத்தியுள்ளனர். கணவனை இழந்த பெண்கள் வெள்ளைவண்ண இரவிக்கையை அணிகின்றனர். இவ்வெள்ளை வண்ணம் அப்பெண் கணவனை இழந்தவர் என்பதைக் குறிக்கும் குறியீடாக உள்ளது.

வழிபாடும் சடங்குமுறைகளும்

இச்சிற்றூரில் குலதெய்வ வழிபாடும், ஊர்த்தெய்வ வழிபாடும் காலம் காலமாக இருந்து வருகின்றன. கள்ளர் இனமக்கள் வாழும் இடத்திற்கு அருகில் ஊர்த்தெய்வக் கோவில் அமைந்திருப்பது குறிப்பிடத்தக்கது. ஊர் மக்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து ஊர்த்தெய்வத்தை வழிபடும்போது கள்ளர் இனமக்கள் மட்டுமே கோவிலுக்குள் சென்று வழிபட்டு அதற்குரிய முதல்மரியாதையைப் பெற்றுக்கொள்வர். அதற்கடுத்த நிலையில் நாயக்கரும், வலையரும், ஊர்த்தெய்வத்தை வழிபடுவர். பள்ளர், பறையர், சக்கிலியர் போன்ற இனமக்கள் கோவிலுக்கு வெளியே நின்றுதான் தெய்வத்தை வழிபடுகின்றனர். இவ்வழிபாட்டு முறை காலங்காலமாக இச்சிற்றூர் மக்களால் கடைபிடிக்கப்பட்டு வருகிறது. குலதெய்வ வழிபாடு என்பது அவரவர் குலத்தைப் பொறுத்து வேறுபடுவதாக உள்ளது.

பிறப்பு முதல் இறப்புவரை இச்சிற்றூர் மக்கள் இனவாரியாகப் பல்வேறு சடங்குகளைப் பின்பற்றி வருகின்றனர். குழந்தை பிறந்தவுடன் சீனித்தண்ணீரைக் குழந்தையின் நாவில் தொட்டுவைக்கினறனர். பிறந்த தங்கள் குழந்தைகளுக்குக் குலதெய்வத்தின் பெயரையே பெயராகச் சூட்டுகின்றனர். கள்ளர் இனமக்கள் மட்டும் இந்நிகழ்வைப் 'பெயரிடுதல்' என்று விழாவாகக் கொண்டாடுகின்றனர். அனைத்து இனமக்களும் 'காது குத்தல்' என்பதனைக் 'காதணிவிழா' என்று சிறப்பாகக் கொண்டாடுகின்றனர்.

தங்கள் குலதெய்வங்கள் அமைந்திருக்கும் ஊர்களுக்குச் சென்று குழந்தைக்கு மொட்டை போட்டுத் தாய்மாமன் மடியில் குழந்தையை வைத்துத் தங்கத்தால் செய்யப்பட்ட காதணியைக் கொண்டு காதுகுத்துகிறார்கள்.

கள்ளர் இனமக்கள் திருமணச்சடங்குகளையும், பண்டிகைகளையும் பொருளாதார வசதிக்கேற்ப ஆடம்பரமாகக் கொண்டாடுகின்றனர். இவ்வின மக்களின் திருமணச்சடங்குகள் தொடர்ந்து இரண்டு நாள்கள் நடைபெறும். முதல் நாள் பெண் வீட்டிலும், அடுத்தநாள் மாப்பிள்ளை வீட்டிலும் தங்கள் இனத்தின் பாரம்பாரியத்தைப் பறைசாற்றும் வகையில் நிகழ்ச்சிகளை நடத்துவார்கள். பிற இனமக்கள் தங்கள் வீடுகளில் நடைபெறும் சிறப்பு நிகழ்ச்சிகளுக்கும், சடங்குகளுக்கும் கள்ளர் இனமக்களை அழைத்து முதல்மாரியாதை கொடுத்து உபசாரிப்பர்.

கல்விநிலை

கள்ளர் இன மக்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்களாக உள்ளனர். பொருளாதார வசதி படைத்தவர்களாக இம்மக்கள் இருப்பதால் கல்வியறிவையும் இவர்கள் பெற்றுள்ளனர். ஆனால் நடுத்தர இன மக்களும், தாழ்ந்த இன மக்களும் கல்வியறிவு பெறாதவர்களாகத்தான் இருக்கிறார்கள். வலையர், நாயக்கர் இனமக்களில் பொருளாதார வசதி படைத்தவர்கள் மட்டுமே தங்கள் பிள்ளைகளைப் பள்ளிகளுக்கு அனுப்புகின்றனர். மற்றவர்கள் குழந்தைகளைத் தங்களுடன் கூலிவேலைக்கு அழைத்துச்சென்று விடுகின்றனர். வேறு சிலர்

தங்களுடைய சிறுகுழந்தைகளைப் பராமரிப்பதற்கும், வீட்டினைப் பாதுகாப்பதற்கும், பெரிய குழந்தைகளை வீட்டிலேயே விட்டுச் செல்கின்றனர். குழந்தைகளைப் பள்ளிகளுக்கு அனுப்ப இவர்கள் அனுமதிப்பதில்லை. இதற்குக் காரணம் இச்சிற்றூரைக் அடுத்து கல்வி நிலையங்கள் இல்லாமையேயாகும்.

தற்பொழுது இச்சிற்றூரில் கள்ளர் இன மக்களில் பொருளாதார வசதி படைத்தவராகவும், குணத்தில் சிறந்தவராகவும் கருதப்படுகின்ற உயர்திரு. மூக்கனம்பலம் என்பவரால் 'அப்பர் உயர்நிலைப் பள்ளி' என்ற கல்விநிலையம் நிறுவப்பட்டுள்ளது. உயர்திரு. மூக்கனம்பலம் அவர்கள் கள்ளரினத்தவர் என்றாலும், வலையர், நாயக்கர் போன்ற நடுத்தர இனமக்களும், பள்ளர், பறையர், சக்கிலியர் போன்ற இனமக்களும் கல்வி அறிவைப் பெறவேண்டும் என்ற உயரிய நோக்கத்துடனேயே இப்பள்ளியை உருவாக்கினார். ஆனால் இப்பள்ளி எந்த நோக்கத்திற்காக உருவாக்கப்பட்டதோ அது இன்னும் முழுமை பெறவில்லை என்னும் சூழலே காணப்படுகிறது. எனினும் பல சிறுவர்கள் இப்பள்ளிக்கு வந்து செல்வது மனநிறைவைத் தருகிறது.

பேட்டிகள்

1. மகமாயி, வயது 68, கருப்பாயூரணி நேரடிப்பேட்டி - 01.06.2013.
2. பாண்டீஸ்வாரி, வயது 40, கருப்பாயூரணி நேரடிப்பேட்டி - 01.06.2013.
3. மந்தையன், வயது 55, கருப்பாயூரணி நேரடிப்பேட்டி - 02.06.2013.
4. கருப்பணன், வயது 80, கருப்பாயூரணி நேரடிப்பேட்டி - 02.06.2013.

தமிழ்ச் சிற்றிலக்கியங்கள்
சில தேய்மானங்களும் சில இருப்புகளும்

முனைவர் அ.அறிவுநம்பி
பேராசிரியர்
சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்
புதுவை மையப் பல்கலைக்கழகம்
புதுச்சேரி, இந்தியா

தமிழ் இலக்கியவுலகில் 'சிற்றிலக்கியங்கள்' என்பவை தனிவகை இலக்கியங்கள். பரந்துபட்ட அகலநீளங்களைத் தமிழ்ச் சிற்றிலக்கியங்கள் கொண்டிருக்கின்றன. 'தொண்ணூற்றாறு வகைச் சிற்றிலக்கியங்கள்' எனப்பெறும் பொதுமரபு பின்தள்ளப்பெற்று இன்று ஏறத்தாழ நானூற்றுப் பத்திற்கும் மேலாகச் சிற்றிலக்கியங்கள் பட்டியலிடப் பெறுகின்றன. சிற்றிலக்கியம் என்ற சொல்லுக்கான துல்லியமான பொருள்விளக்கம் தெரியுமாறில்லை. 'சிறிய அளவினது' என்பது மரபு விளக்கம். அறம் முதலாய நான்கில் ஒன்று குறைவுற்று அமையின் அதனைச் சிற்றிலக்கியமெனலாம் என்பது பிறிதொரு விளக்கம். வடமொழியின் 'பிரபந்தம்' என்ற சொல்லுக்கு நிகரான சொல்லே சிற்றிலக்கியமாகும் என்றொரு கருத்தும் உளது. எவ்வாறாயினும் தமிழ் இலக்கியப் பரப்பில் பெரியதோர் இடத்தை இவை பெற்றுள்ளன என்பது வெள்ளிடைமலை. அன்று பரவலாக மலர்ந்திருந்த இவை காலப்போக்கில் குறைந்தமையை எண்ணுதல் தகுவது. முற்றாக இவை அழிவுறாதிருப்பதற்கான காரணத்தையும் உடன் எண்ணுதல் தேவையாகிறது.

தொல்காப்பியத்திலேயே சிற்றிலக்கியங்களுக்கான வித்துக்கள் தென்படுவதாகக் கூறுவதும் அவற்றுக்கான நூற்பாக்களை எடுத்து மொழிவதும் இலக்கிய வாதிகளின் வழக்கமாகும். தொல்காப்பியம் ஆற்றுப்படைக்கான திசையைக் காட்டியதாகக் கூறுவர். ஆனால் சங்ககாலப் பத்துப்பாட்டின் செம்பாதியான ஐந்து ஆற்றுப்படைகளும் தனித்தனிப் பனுவல்களே. அவற்றை எவரும் சிற்றிலக்கியங்கள் என்பதில்லை. பாட்டியல் நூல்களுக்குப் பின்னர் வெளிப்போந்த ஆற்றுப்படைகளே சிற்றிலக்கியங்களாகக் கருதப்பெற்றன. அவற்றைப் போலச் சங்க அகப்பாடல்களில் பத்துப் பத்துப் பாக்களில் உருவாக்கப் பெற்றுள்ள - வேழப்பத்து, தோழி உரைத்த பத்து - போன்றவற்றையும் சிற்றிலக்கியம் என்பதில்லை. பதிற்றுப்பத்து, பக்தி இயக்கம் தந்த பதிகம், குறளின் அதிகாரங்கள் கொண்ட பத்துக் குறள்கள் இவற்றை அலசினர் சிலர். அவ் ஆய்வாளர்கள் தசாங்கப் பத்து, வண்மைப் பத்து போன்ற சிற்றிலக்கியங்களின் உருவாக்கத்திற்கான படிநிலைகளாக இவற்றைக் கருதினர். ஆனால், இதற்கான இலக்கணம் பிற்காலத்தெழுந்தது என்பதையும் இவண் கணக்கில் கொள்ள வேண்டும்.

சிற்றிலக்கியத் தோற்றப் பின்புலம்

தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்கள் சங்ககாலம், அறநெறிக் காலம், காப்பிய காலம், இடைக்காலம் என்றெல்லாம் பிரிப்பதைப் போலச் சிற்றிலக்கியக் காலம் என ஒன்றையும் குறிப்பர். ஏறத்தாழப் பதினாறாம் நூற்றாண்டு முதல் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையிலான காலத்தைச் சிற்றிலக்கியக் காலமென அடையாளப்படுத்துவர். பதினாறாம் நூற்றாண்டு இலக்கிய வரலாற்றை நெய்யும் மு.அருணாசலம், "உலாக்கள் முன்னமே சில எழுந்திருந்தன. சேரமான் பெருமாள் பாடிய ஆதியுலா (கி.பி.700) ஒட்டக்கூத்தர் உலாக்கள் (12ஆம் நூற்றாண்டு) இரட்டையர், காளமேகம் உலாக்கள் (14-15) போன்றன குறிப்பிடத்தக்கவை. எனினும், இந்நூற்றாண்டில்தான் (பதினாறாம் நூற்றாண்டு) உலா ஒரு பழைய நெறியாயிருந்தபோதிலும், திட்டமான வடிவம் பெற்றுப் பின்வந்தோருக்கு முன்மாதிரியாயமைந்து பாதை வகுத்துத் தருகிறது" (மூன்றாம் தொகுதி, 1976, ப. xxvii) என்பார். எனவே, சிற்றிலக்கியங்கட்கான மூலம் பழந்தமிழ் இலக்கண, இலக்கியங்களில் தென்பட்டபோதும் முறைப்படுத்தப் பெற்ற, இலக்கண முறைமை கொண்ட கோலங்களில் அவை தோற்றங்காட்டிய காலத்தை ஓரளவு ஓரமுடிகிறது.

காலத்தின் தேவைப்பாடு

சங்க காலத்தில் மன்னரைப் புகழ்ந்து பாடிப் பரிசுகள் பெற்ற 'பரிசில் வாழ்க்கை' பின்னரும் தொடர்ந்தது. பழங்காலத்தில் போர், படை, கொடை, மறம், வஞ்சினம், வீரம் போன்றவை அரசாள்வார் பக்கத்தின் முத்திரைகளாயிருந்தன. எனவே, இவைபோன்ற கூறுகளின் அடிப்படையில் உலா, தூது, பரணி, படைவீட்டுப் பதிகம், மறம் போன்ற சிற்றிலக்கியங்கள் தோன்றின. மன்னரை வைகறை தொடங்கி இரவுவரை மகிழ்விக்கப் பள்ளி எழுச்சி, துயிலெடைநிலை, காதல் தூது, பள்ளிச் சேர்க்கைப் பாக்கள் புறப்பட்டன. இதே காலக்கட்டத்தில் சமயம் வளர்க்க அமைந்த திருமடங்கள் தங்கள் பங்களிப்பை வெளிக்காட்ட ஆதினப் புலவர்கள் மூலம் சிற்றிலக்கியங்களைச் செதுக்க ஆவன செய்தன. சிற்றிலக்கியங்களின் பட்டியலைக் கூர்ந்து நோக்கின் முதல் நூல்கள் பலவும் கடவுளையோ மன்னரையோ பாடியவையாகவே அமைந்திருக்கக் காணலாம். இவண், "திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டேனே" என்ற பயில்மொழி நினைவுக்கு வரலாம். மன்னர், கடவுள் இருவருக்கும் குடையுண்டு, உலா உண்டு, பவனி உண்டு, பள்ளி எழுச்சிப் பாடலுண்டு, திருமுடி உண்டு. இருவரும் உறையுமிடங்கள் 'கோயில்' என்ற பொதுச் சொல்லால் உணர்த்தப் பட்டமை இதன் அடர்த்தியான பொருண்மையைப் புலப்படுத்தும். சிலவகை இலக்கியங்கள் ஆண்டவனிடம் மலர்ந்து அரண்மனைக்குப் பயணித்தன. வேறுசில அரண்மனையில் கருக்கொண்டு பிறகு, ஆலயத்துக்கும் உருக்கொண்டன. புலவலர்களை மனமகிழ்ச்சிக்குள்ளாக்கவே இத்தகு புனைவுப் பனுவல்கள் போந்தன என்பார் கூற்றும் கவனத்துக்குரியது.

புலமைக் காய்ச்சல் ஒருபுறம்; ஆதினங்களுக்கு இடையிலான போட்டி மனப்பான்மை மறுபுறம்; மன்னராட்சியின் நீட்சியில் மரபுகளின் இருப்பைப் புலப்படுத்த வேண்டிய தேவை இன்னொரு புறம். இப்படித்தான் பல

சிற்றிலக்கியங்களின் ஊர்வலம் அமைந்தது. இந்தப் பனுவல்களில் ஆண்டவன் பாட்டுடைத் தலைவனாக எழுந்தருளுவான் அல்லது ஆள்பவன் பாட்டுடைத் தலைவனாகக் கொலுவீற்றிருப்பான். தொடக்கத்தில் இவ்வாறாக அணிவகுத்த நூல்களில் பிற்பாடு புதிய சேர்க்கைகள் நுழைந்தன. எழுதுவாரின் எண்ணிக்கையும், எழுதப்பணிப்பாரின் தொகையும், படிப்பாரின் அளவும் கணிசமாக இருந்ததால் ஏராளமான நூல்கள் தோன்றின. அதனால்தான் சிற்றிலக்கியக் காலமென இக்காலக்கட்டம் சுட்டப்பெற்றது.

சூழல், அரசியல், சமயம் போன்ற காரணிகளால் புதிய வடிவுகளும், திறமைகாட்டலும், பழம் புலமை வெளிப்பாடும் தோற்றங்காட்டின. வெண்பாஅந்தாதி, சிலேடை வெண்பா, நிரோட்டக யமகம், பல்சந்தமாலை, இருசொல் அலங்காரம், வினாவிடையமைவு போன்றவை இதற்கான பதச்சோறுகள். ஒரே எழுத்து வருக்கம் வருமாறு பாக்கள் புனையும் போக்கு எழுதுபவனின் ஆற்றலை முன்நிறுத்தியது. வித்தகங்களுக்கேற்பப் பரிசுகளின் அளவுகள் மாற்றங்கண்டன. புதியன படைக்கப்பெறும்போது மகிழ்கின்ற மக்களின் உவகையும் உடன்சேர்ந்தது. இதிலே சில ஏற்றத் தாழ்வுகளும் ஆங்காங்கே தடம்பதித்தன. எவ்வாறாயினும் பேரிலக்கியங்களை விடவும் சிற்றிலக்கியங்கள் தனித்த இடத்தைப் பெறுகின்ற பாங்கினை இந்த நூற்றாண்டின் தனிப்பெருங்குணநலனாகக் கொள்ளலாம். இப்படி நாள்தோறும் நிறைவான எண்ணிக்கையில் இயற்றப் பெற்றுவந்த சிற்றிலக்கியங்கள் காலப்போக்கில் நலிவடைந்தமையை உற்று நோக்குதல் தேவையாகிறது. சில சிற்றிலக்கியங்களின் 'இருத்தலுக்'கான பின்புலங்களையும் அடுக்கிக் காணவேண்டியதும் பொருத்தமான பணியாகும்.

தேய்மானங்களும் காரணங்களும்

1. பெரும்பான்மையான புலவர்களின் கரங்களில் இலக்கியக் கருவியாகச் சிற்றிலக்கியங்கள் கோலோச்சிய கட்டம் ஒன்றிருந்தது. குறிப்பிட்ட (தொண்ணூற்றாறு என்ற) எண்ணிக்கையைப் பன்மடங்காக உயர்த்திக்காட்டிய சிற்றிலக்கியக் களம் பற்பல காரணங்களால் பொலிவிழக்கத் தொடங்கியது. மன்னர் மரபினர் வாரி வழங்கும் பரிசுகளின் 'கனபரிமாணம்' குறைவுற்றது. மறம், பரணி, படைக்களம், போர்க்காட்சி, பாதீடு இவற்றுக்கெல்லாம் வேலையில்லாமல் போனது. 'கொடைமடம்' என்பது மாற்றம் பெற்று 'வரிசையறிதல்' முறையானதும் பிறகு பாவலர்களைக் காணத் தயங்குவது மன்னர் பாதையானதும் நடந்த நிகழ்வுகள். இதற்கு அரணாக, "கி.பி. 16, 17, 18ஆம் நூற்றாண்டுகளில் தமிழகம் நிலவுடைமைப் பொருளாதாரத் தேக்கநிலை, ஆளும் வர்க்கம் வாரிசு உரிமைக்குத் தங்களுக்குள் பூசலிட்டமை, அவ்வப்போது ஏற்பட்ட பஞ்சங்கள், தமிழகம் தழுவிய பேரரசு எதுவுமில்லாமை எனப் பல காரணங்கள். இவற்றின் விளைவாக உள்ளூர்த் தலைவர்களையும் வட்டாரச் சூழல்களையும் பாடவேண்டிய நிலை புலவர்களுக்கு ஏற்பட்டது. ஆகவேதான் அறிஞர் பெருமக்கள் சிற்றிலக்கியங்களை வட்டார இலக்கியம் என்று முத்திரை குத்தி அழைக்கின்றனர்" (ந.சொக்கலிங்கம், சொற்சித்திரங்கள், 1998, ப.73) எனவரும் குறிப்பினைக் காட்டலாம்.

2. தேவைகருதி ஏற்படுத்தப்பெற்ற மாற்றங்களைச் சமூகம் அவ்வளவு இலகுவாக ஏற்றுக்கொள்ளவில்லை. சான்றிற்காகத் 'தூது' எனப்பெயரிய

சிற்றிலக்கியத்தை முன் வைக்கலாம். சங்கப் புறப் பாடல்களில் ஒருமன்னன் தன் பகைமன்னனிடம் தூது அனுப்பும் படலம்அமைகிறது. அகப்பாடல்களில் தலைவன், தலைவி இருவரும் தத்தம் தரப்பிலிருந்து தூதனுப்பலும் பதிவாகியுள்ளது. பக்திக் காலத்தில் இறையடியார்கள் தம்மை நாயகியாகப் பாவித்துக் கொண்டு கடவுளை நாயகனாக உருவகித்துப் பாடும் முறை அரும்பியது. 'தூது' எனப்பெறும் சிற்றிலக்கியத்தின் முகிழ்ப்பு இவ்வண்ணமே அமைந்தது. தூதாக எவற்றையெல்லாம் அனுப்பலாமென விதிவகுக்கும் வண்ணம் தூதிலக்கியங்கள் பல்கிப் பெருகின. "கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கமாக" உருக்கொண்ட இலக்கியமாகத் 'தூது' இருந்தவரை பிழையில்லை. இதன்பிறகு ஏற்பட்ட சரிவுகளை மு.அருணாசலம் பின்வருமாறு மொழிகுவார்:

"தெய்வத்தினிடத்தில் அருளை வேண்டித் தூதனுப்பும்நிலைமாறி விசய நகர ஆட்சிக் காலத்திலும் அதன் பின்னரும் அரசியல் தலைவனிடத்தில் காதலைச் சொல்லி வருமாறு தூதனுப்புவதாகும். இது முந்தியதனினும் சற்றே தாழ்ந்த நிலையென்று சொல்லலாம்........ இதனினும் கீழானது, வசவும் பழிப்பும் அமைத்துப் புலவர் தமது பகைவனிடத்துக் கீழான பொருள்களான கழுதை, செருப்பு முதலியவற்றைத் தூது சொல்லி வருமாறு பாடலமைப்பது. இந்த அமைப்பில், சமீப காலத்தில் சில பிரபந்தங்கள் எழுந்துள்ளன" (முற்சுட்டிய நூல், ப.xxx-xxxi) இவற்றை மக்கள் வெறுக்கலாயினர்.

3.பயில்தொறும் நயம்பல காட்டும் வண்ணம் பல்வகைச் சதுரப்பாடுகளை உடைய பனுவல் சமைப்பார் வெகுவாகக் குறைந்தனர். அம்புலி பாடுவதன் கடினப்பாடு அழுத்தமானதால் தம் புலமைப்பாடு தோன்றப் பிள்ளைத் தமிழைப் பாட முன்வருவார் எவருமில்லாது போயினர். பதினெட்டு உறுப்புகளுக்காகத் 'தவம்' செய்யப் பாவலர்கள் அணியமாகாததால் 'கலம்பகம்' காணாமற் போனது. நிரோட்டகம் போன்ற வித்தை நிறை நூல்களை மக்கள் வரவேற்கவில்லை. எழுதுவாரின் எழுதுகோல்கள் இதுபோன்ற எழுத்துரைகளைத் தீட்டத் தயாராக இல்லை. பயனாளிகள் இல்லாமையும், விழையாமையும் படைப்பாளிகளை மடைமாற்றின. இன்றைக்குப் பல விழாக்களில் 'கவியரங்கம்' நீக்கப்பட்டமை இதற்குமற்றொரு வலுவான சான்றாகும். திருமடங்களின் கவனமும் வேறானது. யாருக்காக எழுதுவது என்ற வினாவிற்கு யாருக்கும் விடைதெரியாமற் போனது. ஆதினங்கள் மிகப் பழைய தொகுப்புகளை மட்டும் புதிய பதிப்புக்களாக நல்கினவே தவிரப் புதிய இலக்கியங்களுக்குத் திருக்கதவம் திறக்க முன்வரவில்லை.

இருத்தலுக்கான கரணியங்கள்

முற்றிலுமாகச் சிற்றிலக்கியங்கள் அற்றுப் போகாமைக்குச் சில காரணங்களை எண்ணிப் பார்க்க இயலும். அவற்றுள் சில: 1.மரபிலிருந்து மீளமுடியாத பழைய புலமையாளர்கள் 2.புதிய செய்திகளைப் பழைய உருவுகளில் தரக்கூடிய புதுமை வேட்டல் 3.சமயஞ்சார்ந்தோரின் விடா முயல்வுகள்.

(அ)மக்களுக்குப் பழகிப்போன பா வடிவுகளில் நடப்புச் செய்திகளைப் பதிவு செய்வதில் 'பழமைவாதிகள்' முயற்சிகள் அமைந்தன. காலத்துக்கேற்ற பாடுபொருள்கள் உள்ளீடாயின. ஆத்திசூடி என்னும் பெயரே சிவனைக் குறிப்பது. ஔவையாரைப் பின்பற்றி எழுந்த ஒற்றைத் தொடர் அடுக்குமுறை பலராலும்

தொடர்ந்தது. ஆனால், பாவேந்தர் போன்றோர் பகுத்தறிவு, அவர்காலச் சமூகம் போன்றவற்றை இணைத்தமையைக் கருத வேண்டும். பிள்ளைத் தமிழ் பற்றிப் பன்னிரு பாட்டியல் (184) மொழியும்போது திருமால் உட்படப் பல கடவுளரை முன்நிறுத்தும். பாட்டுடைத் தலைவர்கட்கேற்ப இந்தக் 'காப்புக் கடவுள்'கள் மாறிப்போயினர். 'அண்ணா பிள்ளைத் தமிழில் மறைமலையடிகளும், காமராசர் பிள்ளைத்தமிழில் காந்தியண்ணலும், கருணாநிதி பிள்ளைத் தமிழில் அண்ணாவும், பெரியார் பிள்ளைத்தமிழில் தமிழ்த்தாயும், வீரமாமுனிவர் பிள்ளைத் தமிழில் இயற்கை, புத்தன், நபிகள் நாயகம், வள்ளுவர் போன்றோரும், மறைமலையடிகள் பிள்ளைத் தமிழில் தமிழ்த்தாய், ஆங்கிலச் செவிலித்தாய், திருவள்ளுவர் போன்றோரும் இடம் பெறுவர்' (சிலம்பு நா.செல்வராசு, இருபதாம் நூற்றாண்டுச் சிற்றிலக்கியங்கள், 1995, 141-143). மூலவடிவின் முனை முறியாமல் உள்ளடக்கப் பொருளை மாற்றும் போக்கு இது. மரபின் பிடி உறுதியாக இருந்தது என்பதை இஃது உணர்த்தும்.

(ஆ)ஐக்கூ, சப்பானியர்கள் தந்த வடிவு. தமிழில் புதுக்கவிதைக் காரர்களின் அடுத்தகட்ட முயல்வு இது. எனினும் பாக்களின் அடிகளை வாய்ப்பாகக் கொண்டு 'ஐக்கூ அந்தாதி' இயற்றப்பட்டது. சோதனை முயல்வுகள் சில குறிக்கத்தக்கன. தன் மனத்துக்கினிய அரசியல் தலைவரைப் புகழப் பழைய வடிவுகளால் ஆன இரண்டு அல்லது மூன்று பனுவல்களை ஒருங்கிணைத்தலைப் படைப்பாளி ஒருவர் மேற்கொண்டமையை இவண் சான்றாக்கலாம்.

"கலைஞரின் வாகையும் மார்கழிப் பாவையும்" என்ற நூலில் வாகை, பாவை, மடல் என்ற மூன்றிலக்கியங்களையும் காணலாம். ஒவ்வொரு நாளுக்கு ஒரு மடல் அமைதல், பாக்கள் எல்லாம் எம்பாவாய் என முடிதல், பாடுபொருளாக ஓர் அரசியல் தலைவரின் வெற்றிகள் கூறப்பெறல் என்றவாறு இந்நூல் இலங்கும். இந்நூற் செய்திகளை விவரிக்கும் "இருபதாம் நூற்றாண்டு சிற்றிலக்கியங்கள்" என்ற (மேற்சுட்டப் பெற்ற) நூல்" இம் மூன்றும் சேர்ந்து ஓர் இலக்கிய வகைமை ஆகுமா அல்லது தனித்தனி இலக்கிய வகைமையாகக் கணக்கிடல் வேண்டுமா என்பது ஈண்டு எழும் வினாவாகும்" (பக்.138) எனவும் இயம்பும். 2002ஆம் ஆண்டு இலங்கையில் நடந்த உலக இசுலாமியத் தமிழிலக்கிய மாநாட்டைப் பற்றி அகமது மரைக்காயர் விளக்கிட அவருக்குக் கைகொடுத்தது ஆற்றுப்படை என்ற வகையே (அறிஞராற்றுப்படை, 2002). அச்சக ஆற்றுப்படை என்றொரு நூல் (மு.இளங்கோவன், 1992) இலக்கைத் தலைப்பில் கொண்டதாக வந்துளது. அரசருக்குப் பதில் அரசியல் தலைவர்கள் பாட்டுடைத் தலைவர்கள் ஆயினர்.

(இ)இறையை பாட புதிய கவிதைகள் தளம் அமைத்துத் தர இயலா. மாலை, போற்றி, சதகம், தேவபாணி, கோவை, அந்தாதி எனப் பழைய உருவுகளே இன்றும் கைகொடுக்கக் காணலாம். அதனாலேதான் "மேனாட்டுப் பாதிரிமார் பல செய்யுள் நூல்களும் இயற்றியுள்ளார்கள். செய்யுள் இலக்கியம் இயற்றியவருள் குறிப்பிடத்தக்கவர் வீரமாமுனிவர். இவரது தேம்பாவணி என்னும் காவியம் பலராலும் போற்றப் படுகின்றது. திருக்காவலூர்க் கலம்பகம், கித்தேரியம்மாள் அம்மானை, அன்னையழுங்கல் அந்தாதி முதலிய சிற்றிலக்கியங் களும் இவர் இயற்றியவை" எனக் குறிப்பிடுவார் சு. வித்தியானந்தன் (இலக்கியத் தென்றல், 1953 (முதற் பதிப்பு) 2008, ப.27). இதனைப் போன்று கண்ணி, கலம்பகம்,

அம்மானை, மாலை, ஆற்றுப்படை போன்ற வடிவுகளில் ஏராளமான இசுலாமியர்கள் எழுதியுள்ளனர்.

புறக் கூறுகள் அதிகம் மாறினாலும், புதுப்புதுத் தெய்வ உருக்கள் (மேல் மருவத்தூர் அம்மன், சீரடி சாயிபாபா, இராகவேந்திரர், புட்டபர்த்தி சாய்பாபா, சந்தோஷி மாதா போன்றோர்) வழிபாட்டுப் பகுதிக்குள் இடம் பெற்றாலும், பழைமையான சிற்றிலக்கிய வடிவை மீறமுடியாச் சூழல் இறுக்கமாக இருப்பதை இவண் அவதானிக்க வேண்டும்.

எல்லா இலக்கிய வகைகளும் காலத்துக்கேற்ற மாற்றங்களைப் பெற்றன என்பது பொதுச் செய்தி. ஆனால், யாப்பு மாற்றங்கள் சில உண்மைகளைத் தரும். வஞ்சிப்பா வழக்கில் இல்லை. கலிப்பா, பரிபாடல் ஆகியவை ஒரு காலக் கட்டத்திற்குப் பின் வழக்கொழிந்தன. விருத்தம், சிந்து, புதுக்கவிதைகளின் உலாக்கள் உற்று நோக்கப்பெற வேண்டியவை. கவிதை நாடகங்கள் பெருவாரியாக எழுதப்படவில்லை. எழுதுவாரின்மையும், படிப்பாரின்மையும் காரணங்களாகலாம். காப்பியங்களுக்கு இன்று வணிகத் தளமுமில்லை; கற்பார் தளமுமில்லை. உரைநடையின் மிகுவேக வளர்ச்சி ஒருபுறமும், புதுக்கவிதை, சென்ட்ரியூ, லிமரிக் போன்ற புதுவகைக் கவிமுயல்வுகளின் மிடுக்கு மறுபுறமும் பழங்கவிதை வேர்களை ஆழமாகக் காலூன்றவிடவில்லை. இந்தக் கருத்தாக்கம் சிற்றிலக்கியங்களுக்கு முழுமையாகப் பொருந்திவரும்.

சிற்றிலக்கியங்கள் தமிழுக்கு உரமும் நலமும் நல்கின; நல்கி வருகின்றன என்பதில் இரண்டாங் கருத்தில்லை. ஒருகாலத்தில் பெரும் ஆட்சி செலுத்திய இவை காலப்போக்கில் மாறுதல்களை உள்வாங்கின. சில கரைந்து போயின. வேறுசில முழுமையாக மாறிப்போயின. சில மட்டும் 'உள்ளது உள்ளபடியே' தொடர்ந்து உயிர்ப்புடன் காணப்பெறுகின்றன. இத்தகைய போக்கிற்குப் புதுவது முயலும்போக்கு, சமயச்சூழல், பழைமைப்பிடிப்பு, காலச்சூழலின் கோலப்புனைவு, பயனீட்டாளரின் எதிர்பார்ப்பு போன்றவை பின்புலங்களாய் இருப்பது தெரியவருகிறது. ஒவ்வொரு பகுதியாக எடுத்து ஆழங்காற்பட்ட நிலையில் நுண்ணிய பார்வை கொண்டு அலசுங்கால் மேன்மேலும் புதுப்புது வெளிச்சங்கள் கிடைக்கலாம்; கிட்டும்.

கிழக்கிலங்கைவாழ் இந்து மக்களின் மதம்சார்நம்பிக்கைகளும் நடைமுறைகளும்

முனைவர் சிவலிங்கம் சிவநிர்த்தானந்தா
பிரதிக் கல்வி இயக்குனர்
மாகாணக் கல்வித் திணைக்களம்
திருக்கோணமலை, இலங்கை

கிழக்கிலங்கைவாழ் இந்து மக்களின் சமயச்சார்பான நம்பிக்கைகளையும் சடங்கு நடைமுறைகளையும் பற்றியதாக இந்த ஆய்வு அமைகிறது. இலங்கையிலே கிழக்கிலங்கையில் மாத்திரமன்றி, பொதுவாக மக்கள் சமூகத்தின் பெரும்பாலான நம்பிக்கைகளும் சடங்கு நடைமுறைகளும் ஏதோ ஓர் அளவில், ஏதோ ஒரு வகையில் சமயப் பின்புலத்தைத் தளமாகக் கொண்டிருப்பதை அவதானிக்கலாம். காலங்காலமாக மக்களின் வாழ்வியலில் ஊறிப்போன நம்பிக்கைளும் சடங்குகளும் சமயத்தோடு ஒட்டிய சமூகப் பரிமாணத்தைக் கொண்டிருந்தன எனலாம். நம்பிக்கைகளிலிருந்து சமயமும், சமயத்திலிருந்து நம்பிக்கைகளும் பரஸ்பரம் ஒன்றுபட்டு வளர்ந்து வந்துள்ளதை ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். குறிப்பிட்ட ஒரு மக்கள் கூட்டத்தின் பண்பாடு இருகிளைப் பட்டதாய் இருப்பதைச் சமூகவியல் மானுடவியல் ஆய்வாளர்கள் பலரும் சுட்டிக் காட்டியுள்ளனர். பண்பாடு என்பது தேங்கிநிற்கும் ஒரு குட்டையைப்போல் அல்லாமல் ஓடிக்கொண்டிருக்கும் ஒரு நதியைப் போன்றது எனலாம். பண்பாட்டினைப் பொருள்சார் பண்பாடு என்றும், பொருள்சாராப் பண்பாடு என்றும் சமூகவியலாளர்கள் வகுத்துள்ளனர். நாம் இங்குப் பொருள் சாராப் பண்பாட்டின் பிரதான கூறான நம்பிக்கைகளையும் சடங்கு முறைகளையும் பற்றி ஆராய உள்ளோம்.

இலங்கைத் தமிழ் மக்கள் மத்தியில் சமயச் சார்பான பல நம்பிக்கைகளும் சமய நடைமுறைகளும் உள்ளன. தமிழர்கள் வாழும் பிரதேசங்களுக்கிடையே பல்வேறு வேறுபாடுகளுடன் இவை வழங்கிவருகின்றன. உதாரணமாகத் தமிழர்கள் செறிந்து வாழும் யாழ்ப்பாணப் பிரதேசத்திலுள்ள நம்பிக்கைகள் சடங்குகள் என்பவற்றிற்கும், வன்னிப் பிரதேச மக்களின் நடைமுறைகளுக்கும், கிழக்கிலங்கை, மலையக மக்களின் சடங்கு, நம்பிக்கைகள், நடைமுறைகளுக்கு மிடையே பல்வேறு வேறுபாடுகள் இருப்பதை யாவரும் அறிவர். முற்குறிப்பிட்ட பிரதேசங்களின் சமூகம், பொருளாதாரம், பண்பாடு, சமயம் என்பவற்றின் பின்னணியிலேயே இவை வேறுபட்டுக் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த வகையிலே கிழக்கிலங்கை மக்களின் சமூக, பொருளாதார, பண்பாட்டு அடிப்படையில் சமயச் சார்பான நம்பிக்கைகளிலும், சடங்குகளிலும் பெரும்பாலானவை தனித்துவமுடையனவாகக் காணப்படுவது குறிப்பிடக்கூடிய அம்சமாகும்.

இங்குக் கிழக்கிலங்கை எனக் குறிப்பிடப்படுவது திருக்கோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை எனும் மூன்று மாவட்டங்களைத் தன்னகத்தே கொண்ட பகுதியாகும். ஆய்வின் விரிவஞ்சி இங்கு மட்டக்களப்பு மாவட்டம் முதன்மைப்படுத்தப்பட்டுள்ளது. இங்கே நிலவி வருகின்ற எல்லா வகையான நம்பிக்கைகளையும், சடங்கு நடைமுறைகளையும் விபரமாகக் குறிப்பிடுவது எமது நோக்கமன்று. மற்றைய பிரதேசங்களில் நடைமுறையில் இல்லாத தனித்துவமான சில நம்பிக்கைகளையும், நடைமுறைகளையும் விபரமாக ஆராய்வோம்.

தனித்துவமான சடங்குகள் நம்பிக்கைகள்

கிழக்கிலங்கையின் இந்துப் பண்பாட்டு மரபில் சடங்கு மரபுகளுக்கும், சமுதாய வழமைகளுக்கும் முக்கியத்துவம் உண்டு. இலங்கையில் இந்துக்களிடையே பயில் நிலையிலுள்ள வழிபாட்டுப் பாரம்பரிய நம்பிக்கைகள் பல. அவற்றுள் ஆகம சிற்ப சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடுகள், ஆகம வரையறைக்குள் அடங்காத பக்தி வழிபாடுகள், பாரம்பரிய நம்பிக்கைகளையும் சமுதாய வழமைகளையும் இணைத்துக் கொண்டு இயற்றப்படும் வழிபாடுகள் என்பன பிரதானமானவை. இவ்வகை வழிபாடுகளில் செல்வாக்குள்ள வழிபாடாகக் கருதப்படுவது ஆகம சிற்ப சாத்திரங்களை அடிப்படையாகக் கொண்ட வழிபாடுகள் ஆகும். ஏனைய வழிபாடுகளின் பிரசித்தம் ஏனைய இடங்களில் சற்றுக் குறைவானபோதும், மட்டக்களப்புப் பிரதேசத்தைப் பொறுத்தவரையில் இந்நிலை சற்று வித்தியாசமானது. ஆகம விதிக்குட்படாத பக்தி வழிபாடுகளே இங்குப் பிரசித்தமானவை. தமிழ் நாட்டில் வழிபடும் ஆகமம் சாராத வழிபாட்டுக்குரிய தெய்வங்களின் தொகையுடன் மட்டக்களப்பில் வழிபடப்படும் இத்தெய்வங்களை ஒப்பிட்டு நோக்குகின்ற வேளையில் மட்டக்களப்பில் வழிபடப்படும் தெய்வங்களின் எண்ணிக்கை குறைவு. எனினும் இலங்கையில் வேறு எந்தப் பிரதேசங்களிலும் இல்லாத அளவு இத்தெய்வங்களுக்கு இங்கு முக்கியத்துவம் கொடுக்கப்படுகின்றமை மனங்கொள்ளத்தக்கது.

மட்டக்களப்புப் பிரதேச மக்களின் இந்துப் பண்பாட்டு வழமைகளில் மரபுசார்வழிபாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இப்பிரதேசத்தில் மரபுசார்பக்தி வழிபாடுகளைச் சடங்கு எனக் கூறுவது மரபு. இங்குச் சடங்கு என்பது மதத்தோடு அல்லது மந்திரத்தோடு சம்பத்தப்பட்டதாகும். இவை மரபினால் தீர்மானிக்கப்பட்ட நிகழ்வுகள் செயற்பாடுகளின் தொகுதி என்று கொள்ளலாம். மட்டக்களப்புப் பிரதேச மரபுசார்வழிபாடுகள் சமூக, பொருளாதார, கலை மரபுகள் ஆகிய தளங்களைச் சார்ந்திருப்பதுடன் மீளச் செய்தல் என்ற சுழற்சியின் அடிப்படையில் அமைந்துள்ளன.

மட்டக்களப்புப் பிரதேசத்துத் தமிழரின் இந்துப்பண்பாடு சமய வாழ்வில் புவியியல் பின்னணி, சமுதாய அமைப்பு, வழிபடுதெய்வங்கள் ஆகிய மூன்று தனிப்பட்ட தளங்கள் ஒரு கருத்தியல் சட்டகத்தில் இணைவுபெறுகின்றன. இங்குள்ள ஒவ்வொரு சாதியினரும் பல குலங்களாகப் பிரிகின்றனர். இந்நிலையில் மட்டக்களப்புச் சமூக உருவாக்கம் என்பது குடும்பம், குலம், சாதி என்னும் வரிசையில் விரிந்துசெல்கிறது. ஒரு குடும்பத்தின் உறுப்பினர் இணைந்து தமக்கு வாலாயமான தெய்வங்களை வழிபட இரத்த உறவால் தொடர்புடைய பங்காளிகள் இணைந்து குலதெய்வத்தை வழிபட, பல கூட்டங்கள் இணைந்து ஒரு பொதுத்

தெய்வத்தை வழிபட இந்த வரிசை முழுமை பெற்றுச் சமூக உருவாக்கத்தில் தாக்கம் செலுத்துகின்றது. சமுதாய அமைப்பில் சில தெய்வங்கள் அவரவர் வாழும் குடியிருப்புக்களுடன் இணைவுபெறுகின்றன. மட்டக்களப்புப் பிரதேசத்தில் நடைமுறையிலுள்ள இத்தெய்வ வழிபாடுகளை நெறிப்படுத்தும் ஆவணங்கள் இரண்டு உள்ளன. அவற்றில் ஒன்று சடங்குப் பாடல்கள். மற்றையது பத்ததி.

மட்டக்களப்புப் பிரதேசத்தில் வழிபாட்டோடு தொடர்பான சடங்கு முறைகள் மட்டுமல்ல சமுதாய நடவடிக்கை நடைமுறைகளில் ஏதோ ஒரு தெய்வீகப் பின்னணி அமைந்திருக்கக் காணலாம். மந்திர நடவடிக்கைகளில் இவை முதன்மை பெறுகின்றன. பல்வேறு வகையான தீய சக்தி படைத்த பல தெய்வங்களைப் பல்வேறு தேவையின் நிமித்தம் வழிபடுகின்றார்கள். வகை மாதிரிக்கு, "எட்டட்ட வைரவன், எழுவுறும் பறையன், இருதலை மாடன், கெங்கவைரவன், கெங்க காளி, சுடலை வைரவன், சுடலைக் காளி, வட்டையாக்கன், தொட்டையாக்கன், பேச்சி, பெச்சி, பிணந்தின்னி, காடேறி" போன்ற சிறுதெய்வ வழிபாடுகள் அவற்றோடு தொடர்புடைய சடங்குகளும், சில தெய்வங்களுக்கான கோயில்களும் இன்றும் இப்பிரதேசத்தின் சில இடங்களில் உள்ளன. ஆனால் இவ்வாறான தெய்வ வழிபாடுகளை இலங்கையின் வேறெந்தப் பிரதேசங்களிலும் காணுதற்கரிது.

இன்றைய விஞ்ஞானத் தொழில்நுட்ப உலகம் இருபத்தோராம் நூற்றாண்டில் காலடிவைத்த பொழுதும்கூட இன்றைய சில மதம்சார்நம்பிக்கைகளும் நடைமுறைகளும், விஞ்ஞான உலகுக்கே சவால்விடுவன போல அமைந்துள்ளன. மட்டக்களப்புப் பிரதேச மக்களுடைய மதம்சார்சடங்குகளிலும், நடை முறைகளிலும் காவடி, தீக்குளித்தல், தெய்வமாடுதல், கொம்பு முறித்தல் என்பவற்றையே முதன்மைப்படுத்திக் காட்ட விரும்புகின்றேன். இலங்கையில் பல பிரதேசங்களிலும் இச்சடங்குமுறைகள் இடம் பெற்றிருந்தாலும், இப்பிரதேசத்தில் இவை தனித்துவமானவை. ஒரு சிறு முள்ளோ, ஊசியோ குத்தினாலும்கூட வைத்தியசாலையை நாடும் மக்கள், உடம்பு முழுவதும் ஐம்பதுக்கு மேற்பட்ட செடில்களைக் குத்தியபோதும் வைத்தியசாலைப் பக்கமே தலைவைப்பதில்லை. ஏன்? விஞ்ஞான உலகம் இவ்வினாவுக்குக் கொடுக்கும் விடை யாது? ஒரு சிறு தணல் பட்டால்கூடக் கொப்பளம் தோன்றிவிடும். அத்தோடு தோலும் உரிந்துவிடும். ஆனால் கொதிக்கும் தணலினூடாக மூன்று முறையோ பலமுறையோ நடந்து சென்றாலும் ஒரு கொப்பளம்கூடத் தோன்றுவதில்லை ஏன்? இவ்வினாவுக்கு விஞ்ஞான உலகம் விடை கூறுமா? தெய்வமாடுதல் என்று ஒரு சடங்கு உண்டு. மனிதர்களில் தெய்வங்கள் ஏறி உருக்கொண்டாடுதல். பல்வேறு தெய்வங்கள் மனித உடலில் உருக்கொள்வதாக நம்பிக்கை. இவ்வாறு உருக்கொண்டாடும்போது அடியார்களுக்குச் சில எதிர்வுகூறல் கூறுவதுண்டு. பெரும்பாலும் அவை சித்திக்கும். இது எவ்வாறு சாத்தியமாகிறது?

இலங்கையில் பல்வேறு இடங்களிலும் இவ்வாறான சடங்கு, சம்பிரதாயங்கள் இருந்தாலும், எல்லா வழிபாட்டு இடங்களிலும் ஒரேவிதமான வழிபாட்டு முறைகள் இருக்கின்றதெனக் கூறமுடியாது. இடத்திற்கிடம், சமூகத்திற்குச் சமூகம் இவ்வழிபாட்டு முறைகள் மாறுபட்டுக் காணப்படுவது அவதானத்துக்குரியது.

ஆனாலும் கிழக்கிலங்கை மக்களின் சமயம் சார்ந்த வழிபாட்டு மரபுகளில் பெருமளவிற்குப் பொதுத்தன்மை உடையனவற்றையே இங்குச் சுட்டிக் காட்டுகின்றேன். சிற்சில நுண்ணிய வேறுபாடுகள் இருக்கக்கூடும். அவைபற்றித் தெளிவாக ஆராய்வது நடைமுறைச் சாத்தியமற்றது எனலாம். உதாரணமாக எல்லோரும் காவடி எடுப்பது, தீக்குளிப்பது, தெய்வமாடுவது பொதுவான அம்சம். ஆனால் அவற்றில் நுண்ணிய வேறுபாடு காணப்படுகின்றபோதிலும் பிரதேச ரீதியில் பொதுத் தன்மையும் உண்டு. இவ்வாறான விடைகாணமுடியாத சடங்குகளும் நடைமுறைகளும் இன்றும், இப்பொழுதும் இடம் பெற்றுக்கொண்டே இருக்கின்றன.

தீக்குளித்தல்

ஆரம்பக் காலங்களில் அம்மன் ஆலயங்களிலேயே தீக்குளித்தல் அதிகமாக இடம்பெறும். ஆனால் இன்று பல தெய்வ ஆலயங்களிலும் தீக்குளித்தல் இடம்பெறுகின்றது. தீக்குளித்தல் என்ற தொடரே அதிகம் இடம்பெறுவது மனங்கொள்ளத்தக்கதாகும். தீக்காய்தல் என்பதே மரபானாலும், இங்கு தீக்குளித்தல் என்றே அழைக்கப்படுகிறது.

தீக்குளித்தல் பற்றிய சில விளக்கங்கள்.

தீக்கட்டை வெட்டுதல், தீக்கிடங்கு வெட்டுதல், தீ மூட்டுதல், தீப்பாய்தல் என்னும் ஒழுங்கில் மேற்கொள்ளப்படும்.

தீக்கட்டையாக வேப்ப மரக்கட்டைகளே அதிகம் பயன்படும். இம்மரத்தின் வேர், பட்டை, இலை, பூ, காய், பழம் முதலியன நோய் தீர்க்கும் ஔடதமாகும். பண்டைக்காலம் தொட்டு இன்றுவரை தொற்றுநோய்த் தடுப்பாக வேம்பு பயன்படுத்தப்பட்டு வருகிறது. இம்மரக்கட்டைகளை எரிக்கும்போது அதிலிருந்து வெளிவரும் தீ, புகை என்பன அடியார்களுக்குப் பரவச உணர்வினை ஏற்படுத்துவன. அத்தோடு பல்வேறு நோய்க்காரணிகளிலிருந்து விடுபட உதவுகின்றன. அம்மனின் சோதியாக அடியார்கள் அத்தீயினை நோக்குவர். விறகினை எரிக்க வெட்டப்படும் கிடங்கு யாகக்குண்டமாகக் கருதப்படும். இத்தீக் கட்டைகள் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களைக் குறிப்பதாகக் கருதப்படுகின்றன.

தீக்கிடங்கு அம்மனின் தலைவாசலை நோக்கியே வெட்டப்படும். நேரடி நோக்கு, நேரடிப் பார்வை, நேரடித் தரிசனம் என்பதே இதன் அர்த்தம். தீக்கிடங்கிற்குப் தேசிக்காய், நீத்துப்பூசணிக்காய் என்பவற்றை வெட்டிப் பலி பூசைக்ள் இடம்பெற்றதும் தீ மூட்டப்படும். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் இவைகளை ஒறுத்தல், அல்லது அழித்தல் என்றும் இதற்குப் பொருள்கொள்வர். இத் தீக்கிடங்கிற்கு மனித தீமைகள் அழிக்கப்படுவது, மும்மலங்கள் அகற்றப்படுவது, உண்மை ஆகிய ஒளியை அறிவது அல்லது உணர்வது எனப் பொருள் விரியும்.

மண்ணிலிருந்து வளர்ந்த மரம் நல்ல கனிகளைத்தான் தரவேண்டும். மண்ணிலிருந்து பிரிந்த மரம் நல்ல பயனைத்தான் தரவேண்டும். மனிதப்பிறவி எடுத்த மனிதன் நல்லவனாகவே வாழவேண்டும். மனிதப்பிறவி எடுத்த மனிதன்

இறக்கும் பொழுதும் நல்லவனாகவே இறக்கவேண்டும். இறை அனுகூலம் வியாபிக்கும் காட்சியின் சொரூப வடிவமே தீமூட்டல் என்பதாம்

தீப்பாய்தல் இது குருவுடைமையாதல் எனப்படும். "நானும் இறைவனை அறியும் பாக்கியம் பெற்றேன்" என அடியார் உணர்வார். நான் என்னும் அகந்தை அழித்தலையும் இது குறிக்கும். ஆசாபாசங்களை ஒறுத்தல் என்னும் பொருள்படுவதாகவும் கொள்ளலாம். என் உடம்பு உன் அக்கினிக்கே அன்றி வேறோர் தீமைக்கும் ஆகாது எனப் பொருள் விரியும்.

இத்தீக்குளித்தல் என்னும் சடங்குமுறையானது, சில காரணங்களுக்காக நேர்த்திவைத்துத் தங்களை அக்கினியில் (வேள்வித் தீயில்) இட்டு அதனை நிறைவேற்றிக் கொள்கின்றார்கள். இப்பிரதேசத்தில் நாளுக்கு நாள் இத் தீக்குளித்தல் நேர்த்தியானது அதிகரித்துக்கொண்டே செல்கிறது.

தெய்வமாடுதல்

கிழக்கிலங்கையின் மட்டக்களப்புப் பிரதேசத்தில் ஆகமம் சாராத பெண்தெய்வ, சிறுதெய்வ வழிபாட்டில் தெய்வமாடுதல் என்பது முதன்மையான தாகவும் முக்கியமானதாகவும் கொள்ளப்படுகின்றது. கலையாடுதல், தெய்வமாடுதல், பேயாடுதல், சாமியாடுதல் என்றெல்லாம் இதனை அழைப்பது மரபு. இம்மரபு சங்ககால இலக்கியங்களிலே இடம்பெறும் வெறியாட்டுடன் ஓரளவு தொடர்புபடுவதனை அவதானிக்க முடிகிறது. ஆனால் சங்ககால வெறியாட்டு என்பது வேலனுடன் தொடர்புபட்டிருக்க, தெய்வமாடுதல் பெண் தெய்வங்களுடன் தொடர்புபடுவதைக் காணலாம். இங்குத் தெய்வமேறி ஆடுபவர்களைத் தெய்வமாடிகள், பேயாடிகள், தேவாதிகள், பூமரங்கள், பரிகலங்கள் என்றெல்லாம் அழைப்பர். தெய்வமாடுதல் ஆட்டம் சில சந்தர்ப்பங்களில் வீடுகளிலும் இடம்பெறுகிறது. சிறு கோவில்களிலும் இடம் பெறுகின்றன. தெய்வமாடுதல் எனும்பொழுது தெய்வமாடுபவரது உடலில் தெய்வம் நின்று ஆடுவதாக மக்கள் நம்புகிறார்கள். தெய்வமாடுதலுக்கு உரியவர்கள் முதலில் ஆடையை மாற்றிக் கொண்டு நீராடிக் கோயிலின் மண்டபத்திற்கு வந்து குறிப்பிட்ட இடத்தில் நிற்பர். பூசாரியார் ஏற்பாடுகளைச் செய்வார். பலவாறாக அலங்கரிக்கப்படுவர். வேப்பம் இலைக் கட்டுகளைக் கையில் கொடுத்துப் பூசாரியார் மந்திரம் உச்சரிக்க உருவேறி ஆடுவர். ஆய் கூய் என மிகையாகக் கூக்குரலிடுவார்கள். தலைமைப் பூசாரியைத் தொடர்ந்து கோயிலின் அருகே உள்ள பந்தலுக்குச் சென்று வாக்குக் கூறுவார்கள். பின்னர் பூசாரியார் தாம் உருவேறப்பெற்ற தெய்வமாக ஆடுவார். ஒவ்வொரு தெய்வமாடியும் ஆடும்போது அவர்களுள் ஏறிநிற்கும் கடவுளரது தோற்றத்தின் சாயலைக் கொண்டிருப்பது சிறப்பம்சமாகும். காளித் தெய்வம் உள்நுழையப் பெற்றவர் காளித் தெய்வம் போல் நாக்கினை தொங்கப் போட்டபடி கண்களை அகலமாக விரித்துநின்று அகோரமாக ஆடுவதனைக் காணலாம். நாககன்னித் தெய்வம் உள்நுழையப் பெற்றவர்கள் நாகம் எப்படி வளைந்து நெளிந்து ஆடுமோ அவ்வாறு ஆடுவதைக் காணலாம். தெய்வமாடும் நிகழ்வு இடம்பெறும்போது அங்கு அடிக்கப்படும் பறைமேளமும், ஊதுகுழல் ஒலியும், பெண்களின் குரவை ஒலியும் ஒன்றுசேரும் பொழுது பலஅடியார்கள் உருக்கொண்டாடுவது வழமை. ஆட்டத்தினை நிறுத்துவதற்கான பரிகாரத்தைப் பூசாரி மேற்கொள்வார். பெருஃம்பாலான கோயில்களில் காவல்

தெய்வம் என்றொரு தெய்வமும் ஆடுவதுண்டு. தெய்வம் ஆடுபவர்கள் அணிவகுத்துச் செல்லும்பொழுது காவல்தெய்வமே முன்னணியில் செல்லும். இத்தெய்வமும் இன்னும்சில ஆண் தெய்வங்களும் உருக்கொண்டு ஆடுகின்ற வேளையில் கையில் ஒரு சாட்டையை வைத்திருப்பதுண்டு. சில சந்தர்ப்பங்களில் தெய்வமாடுபவர் ஒருவரிடம் கொடுத்து கையினை நீட்டி, அல்லது முதுகினைக் காட்டி சாட்டைஅடி தருமாறு வேண்டுவார். அப்பொழுது சாட்டையைப் பெற்றுக்கொண்டவர் பலங்கொண்டமட்டும் சாட்டையடி கொடுப்பார். அடி பலிக்காவிடின், மீண்டும் மீண்டும் நீட்டிக்கொண்டிருக்கும். சில வேளைகளில் அடி திருப்தி கொடுத்தால் கட்டியணைத்து முத்தமிட்டுச் செல்லும். இங்குப் பிரதம குருவே உருவெடுத்து ஆடுவதும் உண்டு. சில இடங்களில் அவர் இயக்க வேறு சிலர் ஆடுவது வழக்கம்.

தெய்வமாடுபவர் கையில் வேப்பிலைக் கட்டுகளையும், கழுத்தில் பல வர்ணமாலைகளையும் காணமுடியும். அதுமட்டுமன்றி அவருள் நின்றாடும் தெய்வங்களுக்குரிய ஆயுதங்களான வாள், அரிவாள், வாங்கரிவாள், சிறுபிரம்பு, பூண்பூட்டிய தடிக்கம்பு சாட்டை, கண்டன்கோடரி, கருங்காலிப்பொல் என்பவற்றுள் ஏதாவது ஒன்றையோ பலவற்றையோ வைத்திருப்பார்.

பொதுவாகத் தெய்வமாடுபவர்மீது இரண்டு அல்லது மூன்று தெய்வங்கள் வாலாயமாகும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஒரேநேரத்தில் பலதெய்வங்கள் தோன்றும். தெய்வம் மாறமாற அதற்கேற்ப முகபாவம், தோற்றம் என்பவற்றிலும் மாற்றம் உண்டாகும். தெய்வம் ஆடுபவர் காளி, கண்ணகை, பேச்சி போன்ற தெய்வமாக நின்று பக்தர்களுடன் உரையாடும் சந்தர்ப்பங்களும் உண்டு. சில எதிர்வுகூறல்கள், சில பிரச்சினைகளுக்கான காரணங்கள், அவற்றுக்கான தீர்வுகள் என்பன கூறப்படுவதுண்டு. இச்சந்தர்ப்பத்தில் பக்தர்கள் அம்மா, ஆச்சி, தாயே என நெருங்கிய உறவினர்போலப் பக்தி உணர்வோடு தெய்வமாடுவோருடன் உரையாடுவது சிறப்பம்சமாகும்.

இவ்வாறு தெய்வமாடிக் கொண்டிருக்கையில் தெய்வமாடுபவர் அடியவர்களுக்குக் கட்டுச்சொல்லுகின்ற நிகழ்வு பிரதானமானது. தானாகவே சிலசில விடயங்களைச் சொல்லுவதும், மக்களின் சில குறைகளைத் தான் கேட்டறிந்து கொள்வதும், அதற்குப் பிராயச்சித்தம் சொல்லுவதும் அது நிறைவேறியதும் அதற்காகச் செய்யவேண்டிய பிராயச்சித்தம் என்ன என்பது பற்றியுமான கூற்று மிச் சிறப்பானது. பக்தர்கள் நினைத்த காரியம் நிறைவேறும்போது அல்லது குறை தீரும்போது ஏதாவது காணிக்கை செலுத்துவதாக உறுதியளிப்பர். இந்தக் கட்டுச் சொல்லும் நிகழ்வில் இந்துக்கள் அல்லாதவர்களும்கூட ஆசீர்வாதம் பெற வருவதனை அவதானிக்கலாம்.

தெய்வமாடுகின்ற வேளையில் அதனுடன் தொடர்பான மந்திர ஆற்றல் உள்ளவர்கள் பலப்பரீட்சையில் இறங்குவதும் உண்டு. தங்கள் மந்திர பலத்தைக் கொண்டு தெய்வங்களைக் கட்டி வீழ்த்தும் நிகழ்வுகளும் இடம்பெறுவதுண்டு. இதனைப் படுகளம் போடுதல் என்று அழைப்பர். இத்தெய்வமாடுதல் என்ற சடங்கில் மந்திர உச்சாடனங்கள் அட்சரக் கோடுகள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. தெய்வமேறி ஆடுபவரை மந்திரத்தால் ஆடவைத்தல், கட்டுதல், வீழ்த்துதல் கட்டினை

வெட்டுதல், எழுப்புதல் என்பன தெய்வமாடுதலின் முக்கிய அம்சங்களாகும். இத்தகைய உயிர்த்துடிப்புமிக்கதும், பெரும்பான்மை இந்துக்களைக் குறிப்பாக மட்டக்களப்புப் பிரதேச இந்துமக்களை ஈர்த்து நிற்பதுமான அன்பு மார்க்கத்தை அடையாளப்படுத்திநிற்கும் அற்புதச்சடங்கு இத்தெய்வமாடுதல் ஆகும்.

காவடி

காவடி என்பது பக்தியின் ஓர் உச்சகட்டம் எனலாம். இது நேர்த்தி வைத்து விரதமிருந்து புனிதமாகச் செய்யப்படும் ஒரு பக்தி ஆட்டக்கலையாகும். இவற்றிலே கடினமானதும் உண்டு. முள்ளுக்காவடி, தூக்குக் காவடி (பறவைக்காவடி) என்பன மிகவும் கடினமானவை. இன்பமும் துன்பமும் மனித வாழ்க்கையின் இயல்பு. இதனையே இது வெளிக்காட்டுகின்றது. என்னைப் படைத்தவன் நீ! இது உன்னுடம்பே! நீயின்றி வேறில்லை என்று உள்ளமதிற் தோன்றும் வெளிப்பாடே காவடி எடுத்தலின் உட்பொருள் எனக் கருதப்படுகிறது.

இறைவனும் ஆடுபவர். இறைவியும் ஆடுபவர். ஆதலால் நானும் ஆடுகின்றேன். எனக்கேது துயர். வலி யாதுமே இல்லை. இதுபோன்ற உணர்வுகளே அடியாரை விஞ்சி நிற்கும். இதனையே வைராக்கிய பக்தி என்பர். வீரம், மனஉறுதி என்பவை இருப்பின் மேலெழுவது அஞ்சாமை. அஞ்சாமை என்பது. இறையருளின் மேலான வல்லமை எனலாம். இறையருளால் ஆயிரம் செடில்கள் உடலில் பாச்சினாலும் அவையாவும் மலரம்பே என்பர் காவடி ஆடும் கூத்தர். இவ்வாட்டத்தின்போது பாடல்களும் இடம்பெறும். பல்வேறு இசைக்கருவிகளின் ஒலிகளும் இடம்பெறும். ஆடலும் பாடலும் கலந்ததாகக் காவடியாட்டம் அமைந்திருப்பது இதன் சிறப்பாகும்.

நிறைவாக நாளுக்குநாள், வினாடிக்கு வினாடி இடம்பெறும் விஞ்ஞான வளர்ச்சி அசுரவேகத்தில் வளர்ந்துவரும் இக்காலக்கட்டத்தில் விஞ்ஞான விளக்கத்திற்கும் அப்பாற்பட்ட நிலையில் விடைகாணமுடியாத ஒரு புதிராக அமைந்திருப்பது கிழக்கிலங்கைவாழ் மக்களின் மதம்சார்நம்பிக்கைகளும் நடைமுறைகளும் என்றால் அது மிகையாகாது. ஏனைய பிரதேசங்களிலும் இச்சடங்குமுறை இடம் பெற்றாலும் மட்டக் களப்புப்பிரதேசத்து இச்சடங்கு முறைகளுக்கு பல தனித்துவத் தன்மைகள் உண்டு என்பதை மறுக்கவியலாது.

ஈழத்தமிழர் வாழ்வு - புலம்பெயர் சிறுகதைகளை முன்வைத்து

முனைவர் செல்வகுமரன்
உதவிப் பேராசிரியர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
சிதம்பரம், தமிழ்நாடு, இந்தியா

"எங்கள் பெண்களும் குழந்தைகளும்
அப்பாவி இளைஞரும் துப்பாக்கிகள் மீதும்
அதிகாரங்கள் மீதும் வெறி கொண்டவர்களால் மட்டுமே
சூழப்பட்டுள்ளனர்" - தர்மினி

தமிழ் இலக்கியம் புலம்பெயர் இலக்கியம் எனும் புத்திலக்கிய வகைமையை இன்று கண்டுள்ளது. ஈழத்தில் சமீபகாலமாக நடைமுறையில் உள்ள சமூக, அரசியல், வாழ்வியல் நெருக்கடிகளாலும், தமிழ் இன அழித்தொழிப்பாலும் தம் உயிரைப் பாதுகாத்துக்கொள்ளுகின்ற விதமாக உலகெங்கும் புலம் பெயர்ந்துள்ள ஈழத்தமிழர்களால் இவை படைக்கப்பட்டு வருகின்றன. இவை கவிதை, சிறுகதை, குறும்புதினம், புதினம், நாடகம், கட்டுரைகள் என்பதோடு ஓவியம், குறும்படம் என நீள்கின்றன. இவற்றில் புலம்பெயர் தமிழ்ச் சிறுகதைகள் குறித்த (Expatriate Tamil Short Story) ஆய்வாக இது அமைகின்றது.

புலப்பெயர்வு என்பது ஒரு மொழிப்புலத்தில் இருந்து இன்னொரு மொழிப் புலத்திற்குப் புலம் பெயர்ந்தவர்கள் என்ற நிலையிலும், அதி தீவிர நெருக்கடியினால் தாம் சொந்த மண்ணில் வாழ இயலாது அந்நிய மொழி பண்பாட்டுக் கூறுகளைக் கொண்ட ஒரு பிரதேசத்திற்குப் புகலிடம் தேடிப் புலம் பெயர்ந்து செல்வது என்ற நிலையிலும் புலப்பெயர்வு எனும் பதம் இங்குப் பொருள் கொள்ளப்படுகின்றது. இவர்கள் படைக்கின்ற இலக்கியங்களை புலம்பெயர் இலக்கியம், புலம்பல் இலக்கியம், அகதி இலக்கியம், புகலிட இலக்கியம் (Exil Literature) பேரழிவு இலக்கியம் (Holo Caust Literature) என்றும் குறிப்பிடுகின்றனர்.

கலா மோகனின் - ஜெயந்தீசன் கதைகள், நிஷ்டை, சக்கரவர்த்தியின் - யுத்தத்தின் இரண்டாம் பாகம், சோபாசக்தியின் - தேசத்துரோகி, எம்.ஜீ.ஆர். கொலை வழக்கு, பொ.கருணாகர மூர்த்தியின் - அவர்களுக்கென்று ஒரு குடில், கிழக்கு நோக்கிச் சில மேகங்கள், கீ.பீ. அரவிந்தனின் - பாரிஸ் கதைகள், (தொ. ரவி, தயாநிதி, ரஞ்சியின் - புது உலகம் எமை நோக்கி (தொ.) ஆகிய சிறுகதை நூல்களை முன்வைத்து இக் கட்டுரை அமைக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் சிறுகதைகள் தமிழ்ச் சிறுகதை மரபுகளுக்கு அப்பாற்பட்ட புதிய வடிவங்களையும், நாம் அறியாத செய்திகளையும் கொண்டவையாக

அமைகின்றன. "V9674D2687430743VD58483675", CROSS FIRE; கு இயக்கம், திரு.முடுலிங்க, கலாமோகனின் கதைத்தலைப்புகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

புலம் பெயர் சிறுகதைகளின் மையம் என்பது பன்முகம் கொண்டவையாக உள்ளன. பிரான்ஸ், ஆஸ்திரேலியா, கனடா, ஜெர்மனி, அயர்லாந்து என உலகின் வெவ்வேறு நாடுகளில் அகதிகளாகத் தூக்கி வீசப்பட்டவர்களில் கதையாளர்களான சிலர் தம் கதைகளில் தாம் அந்நிய நாடுகளுக்குத் தூக்கி வீசப்பட்டதுக்குக் காரணமான ஈழப்போர் பற்றியும், சிங்கள இராணுவம் மற்றும் சிங்கள அரசின் வன்முறைகள் குறித்தும், தமிழீழ விடுதலை இயக்கங்கள் குறித்த விமர்சனங்களாகவும், தாயகத்தில் தாம் அனுபவித்த பசுமையான நினைவினை பகிர்ந்து கொள்வனவாகவும் கதை சொல்லுகின்றனர். மேலும் புலம்பெயர் பயணங்களில் தாம் சந்திக்கின்ற மொழி, பண்பாட்டு, சமூகச் சிக்கல்கள், தாம் அந்நியப்படுத்தப்படுகின்ற அவலம், மொழி, நிறம் சார்ந்த ஒடுக்குமுறைகள், பெண்கள் சந்திக்கின்ற துயரங்கள், வன்முறைகள் எனவும் இவற்றை நாம் வகைப்படுத்திப் பார்க்கலாம்.

கருணாகர மூர்த்தியின் - அவர்களுக்கென்று ஒரு குடில், சோபாசக்தியின் - தேசத்துரோகி, தெரிந்தவன், கடவுளும் காஞ்சனாவும், Cross Fire, கு இயக்கம், குண்டுடயானா, கலாமோகனின் ஆ.ஆஸ்தான கவிஞர், பாஸ், தலையாட்டி சக்கரவர்த்தியின் - அதன் இரண்டாம் பாகமும் பிசாசுகளின் வாக்குமூலம் முற்றிலும் ஈழம் சார்ந்ததாக, குறிப்பாக விடுதலை இயக்கங்கள் சார்ந்த விமர்சனங்களாக, இயக்கங்களின் உள்முரண்களை அவை தமிழ் மக்கள் மீது திணித்துள்ள வன்மங்களை வெளிப்படுத்துவனவாக அமைகின்றன.

குறிப்பாக சோபா சக்தியின் குண்டு டயானா *(1992 - 2007)* கதை, போரின் குண்டுவீச்சுகள் எப்படி ஒரு மனிதனை மனப் பிறழ்வுக்கு உள்ளாக்குகின்றன. என்பதனையும் அச்சத்தினால் ஒரு மனிதன் எவ்வாறு இயல்பான உணர்வுகளிலிருந்து எப்படி வேறுபட்ட ஒரு கொடூரமான அல்லது கழிவிரக்கம் கொள்ளத்தக்க மனநிலைக்கு மாறிப் போய்விடுகின்றான் என்பதை இக்கதை தெளிவாக சித்தாரிக்கின்றது.

கதையின் நாயகியான குண்டுடயானா மருத்துவமனையில் பிறந்து அரை மணி நேரத்தில், மருத்துவமனையின் மீது இலங்கை விமானம் குண்டு வீசியதில் தாதி ஒருத்தியின் கவனிப்பில் மருத்துவமனையில் இருந்து மீட்கப்பட்டவள். குண்டு வீசப்பட்ட அந்தப் பேரதிர்வு டயானாவை மிகவும் பாதித்து விடுகின்றது. விளைவு தொடர்ந்து ஈழத்தில் போர் விமானங்களின் இரைச்சல், அல்லது குண்டு வீசப்படுதல் அல்லது ஏதேனும் வன்முறை நிகழ்வுகள் அவள் அருகில் நடைபெறுகின்ற போது அவள் காதுகள் அடைத்துக் கொள்வதோடு, பின்பு வாயைக் கிழித்து இரண்டு மூன்று கொட்டாவிகள் விடுவதும், உடல் மரத்து அப்படியே சிலையாக நின்று விடுவதும், சாப்பிட்டுக் கொண்டிருந்தால் சோற்றுப் பாத்திரத்திற்குள் கை வைத்தவாறு அப்படியே மரத்துப் போய் விடுவதும், பின்னர் 3, 4 நிமிடங்கள் கழித்தே அவள் தன்னுணர்வுக்கு வருகிறவளாக நமக்குக் காட்டப்படுகின்றாள். இதனால் போர், வன்மங்கள் நடைபெறுகிற போதும், பலரும் தம்மைப் பாதுகாத்துக் கொள்ள ஓடும் போதும், இவள் குறிப்பிட்ட

இடத்தை விட்டு அசைய முடியாதவளாக இருப்பதுமான நிகழ்வுகள் நம்மை டயானா மீது கழிவிரக்கம் கொள்ளச் செய்வதோடு, ஈழத்தின் போர்ப் பரப்பில் குடியிருக்கின்ற மக்களின் மீதும் கழிவிரக்கம் கொள்ளச் செய்கின்றன.

மேலும் இந்தக் கதையில் உயிருக்குப் பயந்து டயானா தன் தந்தையிடம் தமது வீட்டில் ஒரு பதுங்கு குழி அமைத்துக் கேட்பதும் அதன் படியே தந்தை செல்வத்தின் உதவியுடன் வீட்டின் பின்புறம் ஒரு பதுங்கு குழியினை ஏற்படுத்துவதும் குறிப்பிடத்தக்கதாகும். தொடர்ந்து டயானா செல்வத்துடன் தொடர்பு ஏற்பட்டு, அவனது மனைவியாகி அவன் வீட்டில் வசிக்கின்ற போது விமானம் பேரிரைச்சலுடன் வீட்டின் மேலாகச் செல்வதும் அச்சத்துக்குள்ளான குண்டுடயானா அங்கிருந்து தன் வீட்டின் பின்புறம் உள்ள பதுங்கு குழியை நோக்கி ஓடுகிறாள். வானூர்தியின் இரைச்சல் இன்னும் அதிகமாகவே அவளால் கால் அசைத்து ஓட முடியாமல் குந்துகிறாள். அவளது வாய் கிழிந்து கொட்டாவி எழுகிறது. என்பதாகத் தொடரும் கதையில், கதையின் தொடக்கமே குண்டுடயானாவின் மரணம் குறித்த ஒரு விசாரணையாக அமைவதால் அவளின் இறப்பு உறுதி செய்யப்படுவதன் மூலம் ஈழத்தில் பதுங்குகுழி எப்போதுமே உயிர்களை முற்றிலும் பாதுகாத்து விடுவதில்லை என்பதை உறுதிப்படுத்துவதாய் உள்ளது.

மேலும் கதையில் இயக்கம் ஒரு மனிதனை இராணுவத்திற்கு ஆதரவாளனாகச் செயல்பட்டதாகச் சந்தேகப்பட்டு அவனைப் பிடித்துச் சாலையோர மரத்தில் கட்டி அவனிடம் இருந்த குண்டை அவன் மார்பிலேயே கட்டி வெடிக்கச் செய்வதும், டயானா படித்த பள்ளியில் சென்று மாணவிகளைப் பத்தாம் வகுப்புக்கு மேல் படிப்பவர்கள் வார விடுமுறைகளில் இயக்கத்தால் நடத்தப்படவிருக்கும் முதலுதவிப் பயிற்சி முகாமில் கலந்து கொள்ள வற்புறுத்துவதும், கலந்து கொள்ளாதவர்கள் இறுதிப் பரிட்சை எழுத அனுமதிக்கப்படுவதில்லை என்றும் மிரட்டும் போக்கும், மட்டுமின்றி வீட்டுக்கொரு ஆணோ, பெண்ணோ இயக்கத்தில் சேர வேண்டும் என்று அதிகாலை வேளையிலே வீடுகளுக்குச் சென்று சிறுவர்களை இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் தட்டி எழுப்புவதான சித்திரிப்புகளும், பீதியடைந்து ஒரே குழந்தையான குண்டுடயானா ஒரு பெட்டிக்குள் தம்மை மறைத்துக் கொள்வதும், குண்டுடயானாவின் பக்கத்து வீட்டில் வசிக்கின்ற பழனி இயக்கத்தில் சேர மறுத்துப் பாலைமரத்தில் ஏறிவிடுவதும், பழனியை இயக்க நபர்கள் கல்லெடுத்து எறிந்து தாக்குவதும் கீழே குதித்த பழனி கோடாரியால் இயக்கத்தைச் சேர்ந்த ஒருவரை வெட்டிவிடுவதும், தொடர்ந்து இயக்கத்தைச் சார்ந்தவர்களால் பழனி மற்றும் பழனியின் தந்தையை தெருவில் இழுத்து வருவதுமான நிகழ்வுகள் ஈழவிடுதலை அமைப்புகளின் அதிகாரத்தையும் அதன் வன்மத்தையும் வெளிப்படுத்துவன வாகவும் உள்ளதைச் சுட்டி இயக்கங்களின் இலக்கைக் கேள்விக் குள்ளாக்குவதும் குறிப்பிடத் தக்கவையாகும் என்று குறிப்பிட்டிருப்பதும் நாம் கவனத்தில் கொள்ள வேண்டியதாகின்றது.

மேற்சுட்டிய நிலையில் இயக்கங்கள் பாமர மக்கள் மீது காட்டுகின்ற அடாவடித்தனங்களையும், அதனால் மக்கள் இயக்கங்கள் மீது வைக்கும்

விமர்சனங்களையும் சோபாசக்தி, சக்கரவர்த்தி, கலாமோகன் போன்ற கதையாளர்கள் திரும்பத் திரும்ப அதனையே பதிவு செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். குறிப்பாக இசுலாமியர்கள் மீது திணிக்கப்படுகின்ற வன்மம், தாழ்த்தப்பட்ட மக்கள் மீது ஏவப்படுகின்ற வன்மம், எழுத்தாளர்கள் மீது காட்டப்படுகின்ற வன்மம், பாலியல் நிகழ்வுகளில் ஈடுபடும் மனிதர்கள் மீது நிகழ்த்தப்படுகின்ற வன்மம், பொது நிலையில் மக்கள் மீது காட்டப்படுகின்ற வன்மம் என அவற்றை நாம் சுட்டலாம். சான்றாகச் சிலவற்றைப் பார்க்கலாம்.

> "உவனுக்குக் கவிதைகள் மட்டுமே எழுதத் தெரியும். அமைப்புக்கும் ஆயுதப் போராட்டத்துக்கும் எதிரானவன். உவனைத் தட்ட வேண்டும்"
>
> "இங்கே தட்டுவதைக் காட்டிலும் அங்கே தட்டுதல் நல்லது" (கலாமோகன் - நிரோடை, பக் - *78*)
>
> "நீங்கள் பொரிய அறிவாளி. கவிதையெல்லாம் எழுதிறனியள். எங்கடை இயக்கத்துக்கு நீங்கள் எழுதித் தந்த கவிதையிலை 25க்கு மேற்பட்டதை அங்கை பாட்டாக்கி யிருக்கினம். எங்களுக்கெண்டா நீங்கள் அவங்கூடக் கூட்டத்திலை போய்ப் பேசினது துண்டாப் பிடிக்கேல்ல" (கலாமோகன் - ஜெயந்தீசன் கதைகள், பக் - *109*)
>
> *"போரின் பகைப்புலம் அறியாது*
>
> *பேர்ப் பரணி பாடும் பாட்டுக்காரர்கள்*
>
> *எவரோ அவரே ஈழம் இன்னமும்*
>
> *எரிந்து கொண்டிருக்க முதற்காரணி என்பேன்"*
>
> (சக்கரவர்த்தி - யுத்தத்தின் இரண்டாம் பாகம், பக் - *101*)

போன்றனவும் சிந்தனைக் குரியதாகின்றன.

கருணாகர மூர்த்தியின் - போதிமரம், வண்ணத்துப் பூச்சியுடன் வாழமுற்படுதல், வீடுமாறுதல், சோபாசக்தியின் - பத்துக்கட்டளைகள், ரவுடிரதி, காய்தல், சக்கரவர்த்தியின் மனசு, முதிர் கன்னிக் கதைகள், கலாமோகனின் - காவடி, காதல், யுக்தி, காயம் போன்ற கதைகள் புலம்பெயர் பயணத்திலும் புகலிடத்திலுமாய் ஈழத்தமிழன் ஒருவன் சந்திக்கின்ற வேறுபட்ட பிரச்சினைகளை எடுத்துரைக்கின்றன. குறிப்பாக அந்நிய நாடுகளில் ஒருவன் குடியுரிமை, அகதி கார்டு பெறுவதிலான சிக்கல்கள், அவ்வாறு கிடைத்துவிட்டால் அறைகள் வாடகைக்குக் கிடைப்பதிலான சிரமங்கள், தொழில் செய்கின்ற போது ஏற்படுகின்ற அதிக நெருக்கடிகள், போதிய ஊதியமின்மை, எல்லா நிலைகளிலும் தங்களை அந்நியப்படுத்துகின்ற அவலங்கள், மொழி, பண்பாட்டு பிரச்சினைகளையும் மிக நுட்பமாக இவர்கள் தமது கதைகளில் வெளிக்காட்டுகின்றனர்.

கழிவிரக்கத்துக்குரிய இந்தப் புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்களின் வரலாற்றைப் பற்றிக் குறிப்பிடும் சார்லஸ் குணநாயகம் :

> *"எல்லை கடக்கும் போது உள்ள பல சோக முடிவுகளைக் கதை கதையாக கேட்டுவைத்திருந்தோம். ஆற்று நீர் இழுத்துச் சாகடித்ததும், பனியில் விறைத்துச் செத்துக் கிடந்ததும், கொன்ரையினர்களுக்குள் மூச்சடைத்து இறந்ததும், கடலோடு அடிபட்டுப் போனதும், இலங்கையில் தொடங்கி உலகின் நிலப்பரப்பு எங்கும் அகதியாய் ஓடிவந்து பாதை முழுவதும் புதையுண்ட எம்மவாரின் வரலாறு என்னோடும் தொடர்கிறது." (பத்மநாப ஐயர் - இன்னுமொரு காலடி, பக் - 146)*

என்று குறிப்பிடுகிறார். இந்த வலியை இன்னொரு விதமாக விழுதாகி வேருமாகி நூலில் பதிவு செய்யும் ஆசிரியர்.

> *"தூக்கமற்ற இரவுகள், மழைக்காலங்களில் நனைந்தவாறும் நீர் நிறைந்த பதுங்கு குழிகளோடும் கழிந்த நாட்கள், வெய்யில் காலங்களில் நாவறண்டு மர இலைகளில் வழியும் பனிநீரையும் விடாது பொலித்தீன் பைகளில் சேகரித்துக் குடித்த நாட்கள் இராணுவம் நகரும் திசைகளில் எல்லாம் பதுங்கு குழிகளை அமைத்தவாறே நகர்ந்த நாட்கள் நீண்ட தொலைதூரச் சுமை தாங்கிய நடைபயணங்கள்ஞ்." (மாற்று வெளி ஆய்விதழ் 8, பக் - 133)*

என்பதாகப் பதிவு செய்துள்ளார்.

கருணாகர மூர்த்தியின் வீடுமாறுதல் கதை ஐரோப்பாவின் ஏனைய நகரங்களைப் போலவே பெர்லினில் வெளிநாட்டவர்கள் அதிலும் அகதி ஒருவர் வீடு எடுப்பதிலான சிக்கல்களைச் சித்திரித்துக் காட்டுகின்றது. அது போலவே 'பகையே ஆயினும்' கதை புகலிட வீட்டுப் பிரச்சினை தொடர்பான இன்னொரு தாக்கத்தை நமக்கு உணர்த்துகின்றது. இக்கதை பக்கத்து வீட்டில் வசிக்கும் துருக்கியைச் சார்ந்த அகதி ஒருவரின் அதிகாரத்தை நமக்குப் புலப்படுத்துகின்றது.

'காதல்' கதை புகலிடத்துப் பெண்களின் அகதிக்கார்டு மற்றும் நேஷனாலிற்றி பெற்ற பெண்களின் முக்கியத்துவத்தை வாசுகி, நளினி மூலமாக எடுத்துரைப்பதோடு நேஷனாலிற்றி பெற்ற பெண்களைக் காதலிக்க, திருமணம் செய்ய முயற்சிக்கும் ஈழத்து ஆண்களைப் பற்றியதான கதையாக அமைகின்றது.

புகலிடத்துயரங்களை 'எனது தேசம்' கதையில் குறிப்பிடும் கலாமோகன்

> "நான் தேசமில்லாதவன். போகுமிடங்கள் அனைத்தையும் தேசங்களாக வாரித்துக் கொள்ளும் உரிமை எனக்கு மறுக்கப் பட்டுள்ளது. எங்குப் போகின்றேனோ, அங்கெல்லாம் விரும்பப் படாத விருந்தாளியாகவே பூதக்கண்ணாடி வைத்துப் பார்க்கப் படுகின்றேன். பரிசோதிக்கப்படுகின்றேன். ஜெர்மனியில் வாழ்ந்த போது வவுச்சர்கள் தரப்பட்டு லாஹர்கள் எனப்படும் முகாம்களில்

> *அடைக்கப்பட்டேன். லாஹர் வாழ்க்கையிலே ஜெர்மனியை மறக்கலாம், சிலோனை மறக்கலாம் ஏன் உலகையே மறக்கலாம். அது நாங்கள் வாங்கும் பியர் கேஸ்களின் தொகையைப் பொறுத்தது" (கலாமோகன் - நிரோடை, பக் - 61)*

எனச் சுட்டுவதும் புகலிடத்தின் துயரத்தை நம்மால் உணர்ந்து கொள்ளச் செய்வதாகும்.

'ரவுடி ரதி' கதை புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் இரண்டாம் மூன்றாம் தலைமுறை சார்ந்த இளம் வயதினரை மேலைநாட்டுத் தாக்கம் எவ்வாறு தமதாக்கிக் கொள்கிறது என்பதனையும், அதனால் தமிழ்ப்பண்பாடு எவ்வாறு சிதைவுறுகின்றது என்பதையும் எடுத்தியம்புகின்றது. கதையில் வரும் ரதி பற்றிக் குறிப்பிடும் அவளின் சிற்றப்பா:

> *"ரதி இரவு பத்துக்கும் வீட்ட வாறாள், பன்னீரெண்டுக்கும் வீட்டவருவாள். விடியவும் வருவாள் என்னைக் கண்டால் பொன்சு செவ் எண்டு கட்டிப் பிடிச்சுக் கொள்வாள். நல்லா சிகரெட்ட பத்தப் பழகிற்றாள் எண்டு அவள் என்ன கொஞ்சயிக்கத் தெரியாது*

என்பதும் தொடர்ந்து ரதி குறித்து ரதியின் தாய் குறிப்பிடுவதும் கவனத்தில் கொள்ள வேண்டியதாகின்றது.

ரதிக்கு வயத்தில பிள்ளை தங்கி அழிச்சதாம். ஆரோ அவளோட படிக்கிற வெள்ளைத் தோலோட தொடுப்பாகி, பிள்ளைய வாங்கியிற்றாளாம். அவன் ஸ்கூட்டர வாங்கிக் கொண்டு ரண்டு நாளா பள்ளம் புட்டியான இடங்களில் ஸ்கூட்டர் ஓட்டித் திரிஞ்சும் அவளால பிள்ளையை கரைச்சேராமல் போய், பிறகு கிளினிக்கலப்போய் பிள்ளைய அழிச்சதெண்டு எல்லாம் முடியத்தான் ரதி தாய்க்காரிகிட்ட சொல்லியிருக்கிறாள்.

> *'அந்த பொடியன கலியாணம் செய்யிற தெண்டால் செய் எண்டு அண்ணரும் அண்ணியும் சொல்லியிருக்கினம்'. அதுக்கு ரதி அவனொரு அலுப்பத்தட்டுற சோம்பேறி எண்டு சொல்லிப் போட்டாளாம்" (ஷோபா சக்தி - தேசத்துரோகி, பக் - 140)*

எனும் பேச்சுகள் தமிழ்ப் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள மாற்றத்தை அல்லது சிதைவை இக்கதைகள் தெளிவாக உணர்த்துகின்றன. ஈழப்போரும் புலப்பெயர்வும் தமிழ்ப் பெண்களின் வாழ்வில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்மாற்றங்கள் குறித்தான பதிவுகளும் நிரம்பவே புலம்பெயர் சிறுகதைகளில் காணமுடிகின்றது. குறிப்பாகப் பெண் வாழ்வைக் கட்டுப்படுத்தும் குடும்பம், ஆணாதிக்கம், பண்பாடு, கற்பு, பாலியல் சேர்ந்த கேள்விகளை இவை எழுப்புகின்றன. சோபாசக்தியின் - குருவணக்கம், பைலாப்பாட்டு, தேவாவின் - சுரண்டலின் கொடுக்குகள் , சுருதியின் - ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீளமுடியும், சுகந்தியின் - கானல்நீர் , கலாமோகனின் - பண்டம், கோடி, ரஞ்சியின் - அக்கரைப் பச்சை, உமாவின் - முகம் , விக்னா பாக்யநாதனின் - மாறியது நெஞ்சம் கதைகள் குறிப்பிடத்தக்கனவாகும்.

சோபாசக்தியின் 'குருவணக்கம்' புகலிடத்தில் தமிழ்ப் பெண்களின் உழைப்பு உறிஞ்சப்படுவதோடு உடலுறுப்பு சார்ந்தும், கொச்சை மொழிகளில் பேசுவதை ஒரு ரெஸ்ரோரெண்டு நிகழ்வின் மூலமும் கட்டுகின்றார். அதுபோலவே 'ஒத்தைத் தண்டவாளமும் ஒரு கறுப்பு நீள முடியும்' கதை ஒரு பெண் தன் குழந்தையோடு ஓடும் இரயிலின் குறுக்காக விழுந்து உயிர்விட்டதை மையப்படுத்திப் பெண் வாழ்வு, பெண்மனம் சார்ந்து உளவியல் நோக்கில் வெவ்வேறு கேள்விகளை எழுப்புகின்றன. குறிப்பாக, கணவன், குடும்பம், சமூகம், கலாச்சாரம் சார்ந்தும், கடன்சுமை, தான்பட்ட கஷ்டம் தான் குழந்தை படக்கூடாது பேன்ற நிலையிலான கேள்விகளாக அவை அமைகின்றன.

சுகந்தியின் கானல்நீர் புகலிடத்து வரதட்சிணையைப் புலப்படுத்துகின்றது. ஈழத்துப் போர்ச் சூழலால் புலம் பெயர்ந்து ஜெர்மனியில் ஓட்டலில் வேலை செய்யும் ஜுவாவுக்கு ஈழத்தில் வாழ்கின்ற மாலதியை நிரம்ப நகைகள் ஒரு பரப்புக் காணி, இரண்டு இலட்சம் ரூபாய், பெண்வீட்டுச் செலவில் ஜெர்மனிக்கு அனுப்பி வைக்க முடிவு செய்யப்படுகிறது. அதனைக் காட்சிப்படுத்தும் சுகந்தி:

> "அப்ப எல்லாம் சரியெண்டால் வாற மூண்டாந்தியதி நல்ல நாள் அண்டைக்குப் பொம்பளையை அனுப்புவதும் அதுக்கிடையில் மற்ற சம்பிரதாயங்களைச் செய்து முடிப்பம் என்று சொல்லி விட்டு மாப்பிள்ளை வீட்டார் புறப்பட்டார்கள்.
>
> "வெளியேறுவற்கு முன் மாப்பிள்ளையின் தகப்பன் மகனுடைய படத்தை அவர்களிடம் கொடுத்தார். மானியத்தாரும் கனகமும் பார்த்து விட்டு மாலதிக்கும் பார்க்கக் கொடுத்தார்கள். பின்னர் தம்பி, தங்கை என்று அது கைமாறிக் கொண்டிருந்தது" (ரவி - புது உலகம் எமை நோக்கி, பக். 98)

இத்தகைய ஒரு புகைப்படக் காட்சியோடு மாலதி ஜெர்மனிக்கு அனுப்பி வைக்கப்படுவதன் மூலம் பெண்ணைத் தொற்றிக் கிடக்கும் அவலம் உணர்த்தப்படுகின்றது. தொடர்ந்து அக்கதையும், கலாமோகனின் பண்டம் கதையும் புகலிடத்தில் நிறைந்திருக்கும் வரதட்சிணைக் கொடுமையின் அவலத்தை உணர்த்துவதாய் உள்ளன.

ஆக மேற்சுட்டிய நிலைகளில் ஈழத்தமிழர்கள் தாய் மண்ணிலும், புலம்பெயர் பயணம், புகலிடச்சூழலிலும் படும் துயரம் புலம்பெயர் சிறுகதைகளின்வழி அறிய முடிகின்றது.

பழந்தமிழ் இனக்குழுச் சமுதாயம் இற்றுத் தேய்ந்தமைக்கான காரணிகள் (இனவரைவியல் ஆய்வு)

முனைவர் வாணி அறவாணன்
முனைவர் பட்ட மேலாய்வாளர்
செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

'வேட்டையாடும் இனக்குழு வாழ்க்கையும், ஆடு மேய்க்கும் இனக்குழு வாழ்க்கைய்ம் அழிந்து தனிச் சொத்துரிமையும் அரசும் தோன்றிய வரலாற்றுக்காலமே சங்ககாலம்'

என்பார் அறிஞர் நா.வானமாமலை. ஆனால் புறநானூற்றுப் பாக்களைக் கற்கும்போது இனக்குழுச் சமுதாயத்தினரான சீறூர் மன்னர், 'வலம்படு தானை வேந்தற்கு உலந்துழி உலக்கும் நெஞ்சறி துணையாகத்' திகழ்ந்தமை பல புறநானூற்றுப் பாக்களில் புலப்படுத்தப்பெற்றுள்ளது. சமகாலத்தில் பழந்தமிழ்ச் சமூகங்களிடையே அரசியலிலும், பொருளாதாரத்திலும், மேம்பாடுற்றிருந்த உடைமைச் சமுதாயங்களின் தலைமையாக விளங்கிய வேந்தரைவிடப் பொதுமைச் சமுதாயத்தின் தலைவர்களாகிய சீறூர் மன்னரே பண்பாடுகளில் மேம்பட்டவராக விளங்கியமையைப் புலவர்,

சீறூர் மன்னர் ஆயினும் எம்வயின்
பாடறிந்து ஒழுகும் பண்பி னாரே. புறம்.197:13,14

என வேந்தரிடம் நேரிலேயே இடித்துரைக்கும் அளவிற்குச் சீறூர் மன்னர் மற உணர்வில் மட்டுமல்லாது பண்புணர்வுகளிலும் சிறந்தவராகத் திகழ்ந்தனர். அரசுகள் எழுச்சி பெற்றிருந்த காலத்தும் புகழுக்குரியவராகவே வாழ்ந்த பழந்தமிழ் இனக்குழுச் சமுதாயம் இற்றுத் தேய்ந்தமைக்கான காரணிகளும் புறப்பாக்களில் பாடுபொருட்கூறுகளாகப் பொதிந்து கிடக்கின்றன. பழந்தமிழகத்தில் தொல்குடிச் சமுதாயம் இற்றுத் தேய்ந்த வரலாற்றை இலக்கியங்கள்வழி தெளிவுறுத்துவதன் மூலம் ஓர் இனத்தின் வீழ்ச்சிக்குக் காரணமான காரணிகளைப் பட்டியலிடுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

புறநானூற்றுச் சீறூர் மறவரை அடையாளப்படுத்துவதில் ஆய்வாளர் களிடையே சில தவறுகளும் மயக்கங்களும் நிலவி வருகின்றன. அவற்றைச் சுட்டிக்காட்டிச் சீறூர் மறவரைத் தெளிவாக அடையாளப்படுத்துதல் இங்கு முதலில் இன்றியமையாததாகிறது.

'பழங்காலத்தில் உலகமெங்கும் மக்கள்தொகை மிகவும் நெருக்கமில்லாதிருந்தது. இனக்குழு வசித்த இடத்தில்தான் மக்கள் அடர்த்தியாக இருந்தார்கள். அந்த இடம் பரந்த

> வேட்டைக்காடுகளால் சூழப்பட்டிருந்தது. இவற்றிற்கப்பால் மற்ற இனக்குழுக்களிலிருந்து அதைப் பிரித்துப் பாதுகாப்பு அளிக்கின்ற நடுநிலைக்காடு இருந்தது'.

எனத் தொல்குடி இனங்களின் வாழ்விடங்களைப் பற்றி எங்கெல்ஸ் தம் நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர் தெரிவித்தவாறே, பழந்தமிழகத்திலும் இனக்குழுச் சமுதாயத்தினர், தனித்தனி இனக்குழுக்களாகத் தனித்தனிக் காடுகளில் வசித்து வந்தனர். ஒவ்வொரு இனக்குழுவினரின் வாழ்விடக் காடுகளுக்கிடையேயும் இருந்த பெருங்காடுகளை நீளிடை என இலக்கியங்கள் பரக்கக் குறிப்பிட்டுள்ளன[6]. வேட்டைச் சமூகத்தினரான இத்தொல்குடி ஆடவரிடமும் பெண்டிரிடமும் மறப்பண்பு மேலோங்கி இருந்தது. சங்ககாலப் புலவர்கள் தொல்குடி ஆடவரை 'வில் ஏர் உழவர்' என்ற சொல்லாட்சியால் குறித்துச் சிறப்பித்துள்ளனர்(நற்.3:5). பழந்தமிழகத்தின் முப்பெரும் பிரிவுகளாக விளங்கிய சேர, சோழ, பாண்டிய நாடுகளை ஆண்ட வேந்தர் தண்ணடை நிலங்களையே தம் ஆட்சிக்குரிய பகுதிகளாகக் கொண்டிருந்தனர். தண்ணடை நிலங்களைச் சுற்றி அமைந்திருந்த இக்காடுகள் வேந்தர்களின் கோட்டைகளுக்கு இயற்கையான முதன்மை அரண்களாக விளங்கின. பகைநாட்டார் எளிதில் உட்புகாவண்ணம் தடுக்கும் பொருட்டுப் பாதுகாப்பிற்காக இக்காடுகளைக் கதிரவனின் கதிர்கள்கூட நுழையாதவாறு அடர்த்தியான காடுகளாக வளரச் செய்தனர். இக்காடுகளை மிளை என அழைத்தனர். இனக்குழுவினர் தாம் வசித்த காட்டங்களின் புறத்தே இருந்த இக்காட்டெயிலை ஒட்டி வசித்தமையால் பகைப்படையினர் நாட்டினுள் புகாவண்ணம் தடுக்கும் பொறுப்பு இவர்களுக்கே உரியதாயிற்று. பகைவரிடமிருந்து காக்கும் பொறுப்பிற்குரியவராயினர். எயிலைக் காத்தமையால் எயினர், எயிற்றியர் என்றும் அழைக்கப்பெற்றனர். அரண்களாக விளங்கிய மலைகளுடன் கூடிய இக்காடுகள் குறும்பு எனவும் அழைக்கப் பெற்றமையால் இத்தொல்குடியினர் குறும்பர் என்றும் வழங்கப்பெற்றனர். உலகமெங்குமே பூர்வீகக் குடியினர் எப்போதும் தமக்குரிய பண்பாடு, கலாச்சாரங்களிலிருந்து மாறுவதில்லை. அவ்வாறு இனக்குழுச் சமுதாயத்தினரும் மாறாச் சிறப்பியல்புகளைக் கொண்டு விளங்கியதைக் 'குரவமலர், தளவமலர், குருந்தமலர், முல்லைமலர் என்ற இந்நான்கல்லது பூவும் இல்லை. வரகு, தினை, கொள்ளு, அவரை என்ற இந்நான்கல்லாத உணவும் இல்லை. துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற இந்நான்கல்லது குடியும் இல்லை. களிறெறிந்து வீழ்ந்துபட்ட மறவரின் நடுகல்லைத் தவிர நெல்லுகுத்துப் பரவும் கடவுளும் இல்லை.' என மாங்குடி கிழார் தெரிவித்துள்ளார்(புறம்.335). இப்பாடலில் புலவர், குடிகளைக் கூறுமிடத்துத் துடியன், பாணன், பறையன், கடம்பன் என்ற நான்கு குடிகளைத் தொல்குடியினராகக் கூறியுள்ளார். இக்குடிகளுள் முதல் மூன்று குடியினரும் தொழிலால் பெயரிடப்பெற்றவர்கள்; இலக்கியம் கற்போருக்கு நன்கு அறிமுகமானவர்கள். ஆனால் கடம்பர் என்ற குடியைக் குறிக்கும் இச்சொல்லாட்சி சங்க இலக்கியங்களில் இப்பாடலில் மட்டுமே இடம்பெற்றுள்ளது. எனவே இக்குடியினரைப் பற்றிய புரிதலில் ஆய்வாளர்களிடையே குழப்பமுண்டு. கடம்ப மரங்களைக் காவல் மரமாகக் கொண்டவரே கடம்பர் என்பர் சிலர். ஆனால் நா.

கதிரைவேற்பிள்ளை அகராதியில் கடம்பர் என்ற சொல்லிற்குக் குறும்பர் எனப் பொருள் தந்துள்ளார். இப்பொருளே ஏற்புடையது. ஏனெனில் கடம்பரின் அடிச்சொல் கடம்பு அன்று. கடம் என்பதாகும். முல்லைக் காடுகளுடன்கூடிய பாலை நிலமே கடம் எனப்பெற்றது(அகம்.29, 179, 399, ஐங்.334, நற். 48, 186). (வெம்மை நிறைந்த மலைக்காடுகள் நிறைந்த பகுதியை வேங்கடம் எனப்பெயரிட்டுள்ளமையை எண்ணுக). இப்பகுதிகளில் வசித்தமையால் தொல்குடியினரைக் கடம்பர் என மாங்குடி கிழார் குறிப்பிட்டுள்ளார். (இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் கடற்கடம்பைத் தடிந்த நிகழ்வைக் கூறும்போது கடற்கடம்பரை வென்றானெனத் தவறாகக் கூறுவர். வாகையைக் காவல் மரமாகக் கொண்ட மறவர்குடியினர் வாகையரா?) மிளைக்காவலராக மட்டுமின்றிப் பெரும்போர்களிலும் வேந்தர்க்குப் பெருந்துணை புரிந்தவர் இத்தொல்குடி மறவரே. இம்முனைப்புல மறவரையே ‘வேந்துவிடு முனைஞர்’ எனத் தொல்காப்பியர், புறத்திணையியலில் முதல் நூற்பாவிலேயே குறிப்பிட்டுள்ளார். வன்புலங்களில் வாழ்ந்த இனக்குழுவினர் கால்நடைகளையே செல்வமாகக் கருதினர். இம்முதுகுடி முனைஞரே வெட்சிப்பூசல்களில் இறந்துபட்ட மறவர்க்கு நடுகல் எடுத்து, அந்நடுகல்லையே தெய்வமாக வழிபடும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். ஆனால் கால்நடைச் செல்வத்தைக் காப்பாற்றுவதிலும் பெருக்குவதிலும் வேளிரே தலைமை தாங்கினர் என்று இரா. பூங்குன்றன் கருதுகிறார். உடைமைச் சமுதாயங்களும் அரசுகளும் தோற்றம் பெறும் முன்னரேயே இனக்குழுவினரிடையே வெட்சிப் பூசல்கள் வழக்கிலிருந்தன. அதனால்தான் புறத்திணைகளை வரிசைப் படுத்துமிடத்துத் தொன்மை கருதி வெட்சித்திணையைத் தொல்காப்பியர் முதன்மைப்படுத்தியுள்ளார். வேளிர்கள் வெட்சிச் செயலில் ஈடுபட்ட காலம் சங்ககாலமன்று. மிகமிகப் பிற்காலமான பல்லவர் காலக் கல்வெட்டுகளில்தான் வேளிர் வெட்சிப்போர்கள் புரிந்த நிகழ்வுகள் பதிவாகி உள்ளன. வேளிர் யானைகளை நிரம்பப் பெற்றவராகவே சங்க இலக்கியங்களில் காட்டப்பெற்றுள்ளனர். வேளிர் வெட்சிப்போர் புரிந்தமைக்கான சான்றுகள் சங்க இலக்கியங்களில் ஒன்று கூட இல்லை. பண்டை வேளிர் தமிழ்நாட்டில் குடியேறிய காலம் கி.மு. 10 ஆம் நூற்றாண்டாகக் கொள்ளுதல் வேண்டும் என்று அவர்கள் கண்ணன் வழிவந்த யாதவர் என்றும் மு. இராகவையங்கார் கருத்துரைத்துள்ளார்.

இனக்குழுச் சமுதாயத்தினரான சீறூர் மறவரைக் குறித்த பாக்களில் அம்மறவரின் பெயரோ அல்லது சீறூர் மன்னரின் பெயரோ குறிப்பிடப்பெறவில்லை என்பர் ஆய்வாளர். சங்க இலக்கியத்தைப் பொறுத்தவரை, காலமே கணித்துக் கூறமுடியாத அளவிலான தொன்மையான பாக்களும் உண்டு. சீறூர் மறவர் பற்றிய புறப் பாக்களும் அத்தகைய பாக்களே. அகப்பாக்களில் இயற்பெயர் சுட்டாமை மரபாக இருந்தது போன்று காலத்தால் முந்தைய புறப்பாக்களும் இயற்பெயரின்றியே படைக்கப் பெற்றிருக்கக்கூடும். ஆனால் காலத்தால் பிந்தைய பாக்களில் இனக்குழுச் சமுதாயத்தின் தலைவரும் மறவரும் பெயர் குறிக்கப்பெற்றுள்ளமையைக் காணமுடிகிறது. பேகன் ஒரு சீறூர் மன்னனே. வையாவிக் கோப்பெரும்பேகனைக் கபிலர் பாடும்போது,

நளியிரும் சிலம்பில் சீறூர் ஆங்கண்
வாயில் தோன்றி வாழ்த்தி நின்று
நின்னும்நின் மலையும் பாட புறம். 143:10-12

எனக் குறிப்பிட்டுள்ளதைக் காணலாம். சங்க இலக்கியங்களில் சீறூர் எனும் சொல்லாட்சி மலைப்பகுதியுடன்கூடிய முனைப்புலக் காடுகளையே குறிக்கிறது. அரிதாக இரு இடங்களில் மட்டுமே நெய்தல் நிலச் சீறூரைக் குறிக்கப் பயன்படுத்தப்பெற்றுள்ளது. அதியன், மலையமான், கொண்கானங்கிழான், குமணன், நன்னன், கங்கன், கட்டி, பாணன் முதலான பல மன்னர்கள் இனக்குழுச் சமுதாயத்தினரே. வேந்தரும் வேளிரும் இயற்பெயருடன் பாடப்பெற்ற பிற்காலத்தைச் சார்ந்த சீறூர் மன்னர் என்பதால் இவர்களையும் இயற்பெயர் சுட்டிப் புலவர் பாடினர்போலும். கடையெழு வள்ளல்களில் பாரி முதலான வேளிருடன் அதியமான் முதலானோரும் குறிப்பிடப் பெற்றுமையை நினைவுகூர்க. வேளிர், வேள் என்ற அடைமொழியுடன் இணைத்தே வழங்கப்பெற்றுள்ளனர். மலைப் பகுதிகளை ஆட்சிபுரிந்தவராகக் குறிப்பு இருந்தாலே அம்மன்னரை வேளிர் என்றே அறிஞர்கள் கருதுகின்றனர். அது தவறான கருத்தே. ஆனால் இவ்வேளிரின் எழுச்சியே இனக்குழுச் சமுதாயத்தினரின் வீழ்ச்சிக்குப் பெருங்காரணமாயிற்று. எவ்வாறெனில்,

1. சீறூர் மறவர் காலத்திற்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளாமல் பொதுமை உணர்வுடன் பொருள் சேமிக்கும் பழக்கமற்றவராக இருந்தமையால் பொருளாதார நிலையில் தாழ்ந்தவராகவே இருந்தனர். பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லை என வள்ளுவம் கூறுவதைப்போன்று மறம் ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டு வாழ்ந்த இனக்குழுவினர், பொருளாதார நிலையில் தம்மை மேம்படுத்திக்கொள்ளாமையால் போர்களில் மட்டுமே ஈடுபடுத்தப் பெற்றனர்; வேந்தர் தண்ணடை நிலங்களைச் சீறூர் மன்னர்க்குத் தருவதில் விருப்பம் காட்டவில்லை; மறுக்கப் பெற்றன(285,287). எனவே பொதுமை உணர்வும் எளிமையும் கொண்ட இனக்குழுவினர், அரசியலில் சிறந்த இடத்தைப் பெற்றமைக்கான சான்றுகள் இல்லை.

வேளிரிடம் பொருள் சேமிக்கும் பழக்கமிருந்தது (அகம்.372:4,5). மலைப்பகுதிகளில் கோட்டையை அமைத்துக் கொண்டாலும் தண்ணடை நிலங்களையும் கொண்ட நாடுகளாக அமைத்துக்கொண்டனர். வேளிர்தம் நாடுகளை இங்கு எண்ணிப்பார்த்தல் தகும். பொருளாதாரத்தில் தம்மை உயர்த்திக் கொண்ட வேளிர் வேந்தருக்கு இணையாகச் சிறப்பித்துக் கூறுமளவு அரசியலில் முதன்மை பெற்று விளங்கினர் (பதி.30, 49, 88, அகம். 246, மது.55).

2. வேந்தரே பெண் கேட்டு வந்தாலும், மறுத்து, மறக்குடியினருடன் மட்டுமே மண உறவு கொள்வதில் உறுதியாயிருந்தனர். அதனால் விளைந்தவையே பெரும்பாலான மகட்பாற்காஞ்சிப் போர்கள்.

ஆனால், வேளிரோ வேந்தருடன் மண உறவு கொள்வதில் விருப்புடையவராயிருந்தனர் (பதி. பதி.2,4,6,8,9).

3. வேந்தரும் வேளிருமே ஆதிக்கம் செலுத்திய நிலையில் நாட்டிற்குப் பெரும் வெற்றிகட்கும் பாதுகாப்பிற்கும் காரணிகளாக இருந்த, மறம் ஒன்றையே பற்றுக்கோடாகக் கொண்டிருந்த இனக்குழுவினர்க்கும் வேந்தருக்கும் இடையே நல்லுறவு தேய்ந்து இற்றுப்போனது. வேந்தர் வேளிரைக் கொண்டே குறும்பர்களை அழிக்கச் செய்தனர் (அகம்.125).

குறும்பரான இனக்குழுவினருக்கும் கரிகாலனுக்கும் இடையே இருந்த பகையுணர்வினைத் தேவாரத்தில் அப்பர் விளக்கியுள்ளார். அக்குறும்பர்களை வென்று, அடக்கித் தன் கட்டுப்பாட்டின்கீழ்க் கொண்டு வந்து அப்பகுதிகளில் வேளிர் இன மக்களைக் குடியமர்த்தினான்.

முடிவுரை

பொருளாதாரத்தில் தம்மை மேம்படுத்திக் கொள்ளாமையாலும் காலப்போக்கிற்கேற்பத் தம்மை மாற்றிக் கொள்ளாமல் மற்ற சமுதாயங்களிலிருந்து ஒதுங்கித் தனித்தே வாழ்ந்தமையாலும், அரசியலிலும் பங்கீடு எதுவுமின்றி ஆன நிலையில் எளிதாக அழிக்கப்பெற்றனர். வேந்தருக்கு உற்ற துணையாக விளங்கிய இனக்குழுச் சமுதாயத்தினர், வேளிர்களின் எழுச்சியால் இற்றுத் தேய்ந்து, பின் வேந்தரால் வேளிர்களைக் கொண்டே முற்றிலும் ஒழிக்கப்பெற்றனர். தண்ணடை நிலங்களே பெரிதும் வளம் தருபவை என்பதால் அவ்வகை நிலங்களைக் கேட்டுப்பெற்றனர்.

ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகள்

திருமதி. கோமதி மகேஷ்வரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
இலங்கை விலங்கு பரிபாலன கல்லூரி
இலங்கை

அறிமுகம்

தமிழர் நாட்டுப்புற விளையாட்டுகள், நாட்டுப்புறச் சடங்குகள், நாட்டுப்புற வாய்மொழிப்பாடல்கள், நாட்டுப்புற வாய்மொழிக் கதைகள், நாட்டுப்புற விடுகதைகள், நாட்டுப்புறத் தெய்வ வழிபாடுகள், நாட்டுப்புறக் கலைகள் எனக் காலம் காலமாக நடைமுறையிலிருந்து வந்துள்ளன.

விளையாட்டினால் ஒருவருக்கு மனமகிழ்ச்சியும், உடல்வளர்ச்சியும், உடலுக்குப் புத்துணர்வும் ஏற்படுகின்றன. மனிதனுக்கு உழைப்பும், உறக்கமும் போலவே விளையாட்டு, திளைப்பு, மகிழ்ச்சி, என்பனவும் முக்கியமனதாகும். மனிதர்கள் மட்டுமன்றிச் சகல உயிர்களும் விளையாட்டுகளில் ஈடுபடுகின்றன. விலங்குகளும் பறவைகளும் கூட விளையாடுவதைக் காண்கிறோம். உலகில் கிரேக்க ஒலிம்பிக் 776 இல் ஆரம்பமானது. நவீன ஒலிம்பிக் 1896 இல் ஆரம்பமானது. ஆனால் தமிழ் இலக்கியத்தில், பழந்தமிழ் மன்னர்கள் காலந்தொட்டு வீரவிளையாட்டுகள் இருந்து வந்துள்ளதைக் காணக்கூடியதாக உள்ளது. தற்காலத்தில் பிரபலமான பல விளையாட்டுக்கள் இடம்பெறும் ஒலிம்பிக் போட்டிகள் ஆரம்பமாகப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, தமிழ் இலக்கியத்தில், சிலப்பதிகாரத்தில் கண்ணகிக்குச் சிலை எடுப்பதற்குச் சேரன் செங்குட்டுவன் இமயமலைக்குச் சென்றதை "உருளுகின்ற மணி வட்டைக் குணில் கொண்டு தூத்தாற் போல்'' என்று கூறப்படுகின்றது. இங்குக் "குணில்" என்பது வளைந்த தடி என்பது பொருள்[1]. இது தற்கால ஹொக்கி விளையாட்டின் ஆரம்பமாகும்.

தற்காலத்தில், சட்டதிட்டங்கள் உடன் விளையாடப்படும் விளையாட்டுகள் கூட ஆரம்பக்காலத்தில் நாட்டுப்புற விளையாட்டுகளாவே இருந்தே வளர்ச்சியடைந்தன. பின்னர் இன்று வரைக்கும் காலத்துக்காலம் காலத்துக்கேற்ப விதிமுறைகள் அமைக்கப்பட்டு தற்போது, விளையாடப்பட்டு வருகின்றன. இவ்வாறான விளையாட்டுக்களில் ஈழத்தமிழர்களின் விளையாட்டுகளே இவ்ஆய்வில் ஆவணப்படுத்தி வகைப்படுத்தி விபரிக்கப்படுகின்றன.

இத் தமிழர் நாட்டுப்புற விளையாட்டுகள் பற்றிப் பல்வேறு ஆய்வுகள் கட்டுரைகள் காணப்பட்டாலும், ஈழத்தமிழர்களின் நாட்டுப்புறவிளையாட்டுகள் எனத் தனியாகப் போதியளவில் ஆய்வுக்கு உட்படுத்தப்படவில்லை. எனவே

களநிலையில் மேற்கொள்ளப் பட்ட ஆய்விலும், இரண்டாம் நிலை ஆவணங்களில் பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு ஈழத்தமிழர்களின் நாட்டுப்புற விளையாட்டுகளைப் பின்வருமாறு வகைப்படுத்தி ஆராயலாம்.

1. ஆண்கள் விளையாட்டுகள்
2. பெண்கள் விளையாட்டுகள்
3. இருபாலாரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகள் மற்றும்
4. பருவத்துக்குரிய விளையாட்டுகள்.
4.1 குழந்தைப்பருவம்
4.2 சிறுவர் விளையாட்டு
4.3 இளைஞர் பருவ விளையாட்டு
4.3.1. வீர விளையாட்டுகள்
4.3.2. பொதுவான விளையாட்டுகள்
5. பிரதேச ரீதியிலான விளையாட்டுகள்
5.1 யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்புப் பிரதேச விளையாட்டுகள்
5.2 மலையக பிரதேச விளையாட்டுகள்
6. கூடத்து ஆட்டம் மற்றும் வெளிப்புற ஆட்டம்
6.1 வெளிப்புற ஆட்டம்
6.2 கூடத்து ஆட்டம்
6.3 கூடத்திலும், வெளிப்புறத்திலும் ஆடும் ஆட்டம் எனப் பல பிரிவுகளாகும்.

ஆண்கள் விளையாட்டுகள்

ஆண்கள் விளையாட்டுகளாகக் கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி விளையாட்டு, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வாளும் கேடயமும், வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல், டாம் விளையாட்டுகள், போன்றனவும் ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, ஆகியன அமையும்.

பெண்கள் விளையாட்டுகள்

பெண்கள் விளையாட்டுகளாக கோலம் போடுதல், சமைத்து விளையாடல், பாண்டியாடுதல், வீடு கட்டி விளையாடல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல், நொண்டிக்கோடு, பாண்டியாடுதல், குளம்-கரை, காயா-பழமா, கீச்சுக்கீச்சுத்தம்பாளம் போன்ற விளையாட்டுகளும் விளையாடப்படுகின்றன.

இருபாலாரும் சேர்ந்து விளையாடும் விளையாட்டுகள்

இருபாலருக்குமா பொதுவான விளையாட்டுகளான குதித்தல் (ஸ்கிப்பிங்), ஆடுபுலி ஆட்டம், கண்ணைக்கட்டி நொண்டித்தொடுதல், கயிறு இழுத்தல், கள்வரும் பொலிசாரும், தாயக்கட்டையில் பல்வேறு விளையாட்டுகள், தொட்டால் விரட்டி, பந்தால் ஆள் அடித்தல், கண்கட்டி தேடல், நிழலை மிதித்தல்,

நொண்டித்தொடுதல், பழம் பொறுக்குதல் போட்டி, சேவல் சண்டையிடவிட்டு குதூகலித்தல், பம்பரம் சுற்றுதல், குளம்-கரை, காயா-பழமா, பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், சிறுவீடு கட்டுதல், கண்ணாம்மூச்சி, ஓடிப்பிடித்து விளையாட்டு, சதுரங்கம் (டக்டிக் டொஸ்), தாயம் விளையாடுதல், நொண்டி விளையாட்டு, உப்பு விளையாட்டு, காற்றாடி விடல், கப்பல் விடல், மண்வண்டி விளையாட்டு, காவடி விளையாட்டு, மாட்டுவண்டி ஓட்டுதல் போன்றன இடம்பெறுகின்றன..

பருவத்துக்குரிய விளையாட்டுகள்

1. குழந்தைப்பருவம்

2. சிறுவர் விளையாட்டுகள்.

சிறுவீடு கட்டி விளையாடுதல், மண்வண்டி விளையாட்டு - மண்ணினால் வண்டியையும், பொருட்களையும் செய்து விளையாடும் விளையாட்டு. அதே போல் சமைத்துண்ணும் விளையாட்டில் வீட்டில் சமைப்பது போல் மணல் கரைத்து மண்ணில் தண்ணீர் விட்டுக் குழைத்துச் சமையல் செய்து விளையாடும் விளையாட்டு. இதில் இலைகளை வெட்டிக் கறி சமைத்து விளையாடுவர். அதுமட்டுமல்லாது காய்கள் இலைகளை வெட்டிச் சமைத்து விளையாடல், நெருப்பு இன்றி சமைத்து விளையாடலே, இதில் முக்கியப் பண்பாகும். இது சமைத்து விளையாடல் எனப்படும். அடுப்போடு சிறு வீடு கட்டடல், வீடு வேறாகவும் வீட்டிற்கு வெளியே அடுப்பும் கட்டி விளையாடல், செங்கல் அடுப்பு அமைத்துச் சமைத்து, பொங்கல் சமைத்து விளையாடல், கோலி விளையாட்டு, சங்கு விளையாட்டு, பம்பரம் சுற்றுதல், குளம்-கரை, கரை- குளம் எனும் சொல் விளையாட்டு, காயா-பழமா விளையாட்டு, கண்ணாமூச்சி, கண்ணாம்பொத்தி விளையாட்டு எனச் சிறுவர்கள் விளையாடுவர்.

இளைஞர் பருவ விளையாட்டுகள்

1. வீர விளையாட்டுகள்

ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும்கேடயமும் ஆகியன ஆண்களின் வீரவிளையாட்டுக்களாகவும் குறிப்பிடுவர். ஏறு தழுவுதலில், ஏறு என்பது காளை. காளையை அடக்கக் காளையின் கழுத்தினை இறுகத்தழுவிக் கழுத்துடன் இணைந்து ஏறுகளின் கொம்புகளைப் பிடித்து அதன் குட்டேறு முறியும்படித் தமது முழுப்பலத்தினையும் பிரயோகித்துக் காளையை அடக்குதல். இதன் போது காளை கொம்புகளால் முட்டுவதும் ஏறு பிடிப்பவரைச் சாய்த்துக் கீழே விழுத்தியும் போராடும். சிலவேளை, தழுவியவரைச் சாகும்படி குத்தி உயிர் நீக்கும் சந்தர்ப்பமும் உண்டு.

வாளும் கேடயமும் எனப்படும் விளையாட்டின்போது, வாள்சுழற்றி வீசப்படும். கேடயம் அதைத்தடுக்கும். ஒருவர் வெற்றி பெறும் வரை விளையாடப்படும்.

வெட்டுக்கத்தி விளையாட்டும், வாள்வீச்சுப் போல, ஒரு கையால் வெட்டுக்கத்தி வீச்சும் மறுகையினால் தடுக்கும் முறையும் கலந்த விளையாட்டு. இதனைச் சிலம்பாட்டத்துடன் இணைத்தே விளையாடுவார்கள். மல்யுத்தம்,

சிலம்படி விளையாட்டு போன்றனவும் வீரவிளையாட்டுகளில் உள்ளடக்கப் படுகின்றன.

2. பொதுவான விளையாட்டுகள்

குண்டாட்டம், தேங்காய்ப்போர், மரக்குரங்கு, தாயக் கட்டம், சோழி, சதுரங்கம், பாண்டிப்பலகை, தும்பி, கொம்பு முறித்தல், சொக்கட்டான், பாண்டி, என்பன பொதுவான விளையாட்டுகள் ஆகும்.

பிரதேச ரீதியிலான விளையாட்டுக்கள்

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்புப் பிரதேச விளையாட்டுகள்

யாழ்ப்பாணம் மற்றும் மட்டக்களப்புக் கடற்கரைப் பிரதேசங்களில் வாழ்ந்த தமிழர்கள் சிப்பி மற்றும் சோகிகளைக் கொண்டு தாயம் விளையாடுவதைப் போலவே பட்டம் ஏற்றுதல், பட்டம் ஏற்றும் போட்டி நடத்துதல், பனை, பூவரசு ஆகியவற்றிலிருந்து விண் கட்டல், பூவரசு இலையிலிருந்து குழல் செய்து இசைத்தல், பனையோலையிலிருந்து விசிறி செய்தல், கட்டுமரம் செலுத்துதல், ஓடம் விடுதல், துடுப்பு வலித்தல், நீந்துதல், கிணறு பாய்தல், கிணற்றில் பாய்ந்து நீந்துதல், கடலில் மணலில் குழிதோண்டுதல், கடலில் மணலில் வீடுகட்டுதல், மற்றும் சொல்விளையாட்டுகள் போன்ற விளையாட்டுகளை விளையாடினார்கள்.

மலையகப் பிரதேச விளையாட்டுகள்

மலையகத்தில் ஆரம்பக்காலந்தொட்டுத் தமிழர்கள் வாழ்ந்து வந்துள்ளனர். பின்னர் ஆங்கிலேயர் காலத்தில் இந்தியாவிலிருந்தும் கூட்டிவரப்பட்டுள்ளனர். இம் மலையகத் தமிழர்கள் இரப்பர் விதைகளில் பம்பரம் விடுதல், மற்றும் இந்தியாவின் தமிழகத்தில் காணப்படும் விளையாட்டுகளைப் பின்பற்றிய விளையாட்டுகள் , மற்றும் சூழலுக்கேற்ற மலைகளில் சறுக்குதல், பாறைகளில் சறுக்குதல், சொல்விளையாட்டுகள் போன்ற விளையாட்டுகளையும் விளையாடினார்கள். இவை சமூகத்தினரிடையே வெவ்வேறு பெயர்களால் குறிப்பிடப்படுகின்றன.

கூடத்து ஆட்டம் மற்றும் வெளிப்புற ஆட்டம்

வெளிப்புற ஆட்டங்கள்

குண்டாட்டம், தேங்காய்ப்போர், மரக்குரங்கு, தும்பி, கொம்பு முறித்தல், கிட்டிப்புள், பிள்ளையார் பந்து, கோலி, கிளித்தட்டு, சடுகுடு, வெட்டுக்கத்தி, வாளும் கேடயமும், வழுக்குமரம் ஏறுதல், பட்டம் விடுதல், போன்றனவும் ஏறு தழுவுதல், மல்யுத்தம், சிலம்படி விளையாட்டு, வாளும் கேடயம் சேவல் சண்டையிடவிட்டுக் குதூகலித்தல், கப்பல் விடல், மண்வண்டி விளையாட்டு, மாட்டுவண்டி ஓட்டுதல், கொம்பு முறித்தல் ஆகியன ஆண்களின் வெளிப்புற விளையாட்டுக்கள் ஆகும்.

கோலம்போடுதல், சமைத்து விளையாடல், நொண்டிக் கோடு, பாண்டியாடுதல், வீடு கட்டி விளையாடல், கோலாட்டம், கும்மியடித்தல், கொக்கான் வெட்டுதல் ஆகியன பெண்களின் வெளிப்புற விளையாட்டுகள் ஆகும்.

கூடத்து ஆட்டங்கள்

தாயக்கட்டை, சோழி, சதுரங்கம், பாண்டிப்பலகை, சோழி, சொக்கட்டான், பம்பரம், குளம்கரை என இரு பக்கம் பாய்தல், காயா பழமா, கீச்சுக் கீச்சுத்தம்பாளம், பண்ணாங்குழி, சங்கிலிபுங்கிலி, முந்திரிக்காயும் நரியும், சிறுவீடு கட்டுதல், கண்ணாம்மூச்சி, ஓடிப்பிடித்து விளையாட்டு, சதுரங்கம் (டக்டிக் டொஸ்), தாயம் விளையாடுதல், நொண்டி விளையாட்டு, உப்பு விளையாட்டு, காற்றாடி, காவடி விளையாட்டு என்பன கூடத்து ஆட்டங்கள் ஆகும்.

சில விளையாட்டுகளை விரிவாக நோக்கின்

கிட்டிப்புள்

கிட்டிப்புள், என்பதனை கில்லிதாண்டி எனவும் அழைத்தனர். கில்லி என்பது புள். தாண்டு என்பது கிட்டிக் குழியின் மேல் நீட்டுப்போக்காக வைக்கப்படும் சிறுகுச்சியினை வைத்துக் கோலால் (தடி, கம்பு) தட்டி எழுப்பி அடித்தல், குச்சியினை அடித்த பின்னர், அதனை எடுத்தவர் குழிக்கு அருகில் செல்லுமாறு எறிவர். கிட்டிப்புள் அசைந்தால் அடிக்கலாம். கிடையாக விழுந்து கிடப்பின் அதனை அடித்தல் கூடாது.

சடுகுடு (கபடி)

இது பலப்பரீட்சை செய்யும் விளையாட்டு. சிறுவர்கள் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து அல்லது இரண்டு கிராமங்களைச் சேர்ந்த சிறுவர்கள் இரண்டு வெவ்வேறு அணியாக விளையாவர். இருகட்சிகளின் பிராந்தியங்களைப் பிரிக்கும் எல்லைக்கோடுகள் ஒன்று உண்டு. ஒரு தடைவையில் ஒருவர் எல்லையிலிருந்து பாடியவாறு எதிரணியினரின் பிராந்தியத்தினுள் சென்று எதிரணியில் ஒருவரைத் தொட்டுவிட்டுத் தமதெல்லைக்குள் "பாட்டம்" கொண்டுவர வேண்டும். எதிரணியினர் சிக்காது ஓடி விடுவர். பாடிவந்தவர் எல்லையைத் தாண்டியதும் துரத்தித் தொடுவர். எந்த அணி எதிரணியிலுள்ள சகலரையும் தொடுகிறதோ அந்த அணி வெற்றி பெற்றதாகக் கருதப்படும். கபடி விளையாட்டு இது போலவே சிறுமாற்றங்களுடன் விளையாடப்படுகிறது. சடுகுடுவில் வரும் நாட்டார்பாடல் ஒன்றில் "காளை காளை வருகுது பார், கறுப்புக்காளை வருகுது பார், சூரியனுக்கு வேண்டிவிட்ட துள்ளக் காளை வருகுது பார்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. துள்ளக் காளை என்பது அடக்கமுடியாத காளை என்பதாகும்.

பிள்ளையார் பந்து

பிள்ளையாரைக் குறிக்கும் ஒரு கல்லின் மேல் பந்தை எறிந்தாடும் விளையாட்டு இது. ஒரு செங்கல்லினைப் பிள்ளையாராக வைத்து மணலைக் குவித்து அதனை நட்டுக் குறிப்பிட்ட தூரத்திலிருந்து பிள்ளையாரைச் சாய்க்க ஒவ்வொருவராகப் பந்தால் அடிப்பர். மற்றைய எதிர் அணியினர் பிள்ளையாருக்கு இருபக்கமும் நின்று பந்தைப் பிடிப்பர். பிள்ளையார் மீது பட்ட பந்து எதிரணியினால் பிடிக்கப்பட்டால் கோஷ்டியில் அடுத்தவர் பந்தை அடிப்பார். அனைவரும் அடித்து தீர்த்தத் பின் எதிரணியினர் பந்தை அடிப்பர். அடித்த கோஷ்டி பிடிக்கும் கோஷ்டியாக மாற வேண்டும். பிள்ளையாரைச் சாய்த்த பந்து பிடிக்கப்படாவிடின், பந்தினை அடிக்கும் அணியினர் எடுத்துச் சற்றுத்

தொலைவிற்கு சென்று சகலரும் ஒன்று கூடி அவர்களுள் ஒருவர் பந்தைத் தனது அடிவயிற்றுப் பகுதியில் ஒளிக்க மற்றவர்கள் தாங்களும் ஒளித்து வைத்துள்ளது போல் நடிப்பர். எதிரணியினர் யாராவது ஒருவர் மீது, உண்மையில் பந்து வைத்திருப்பவர் திடீரென எறிவார். எறிந்த பந்து படின் ஆட்டம் முடியும். பந்தாகத் துணியாலும் கயிற்றாலும் இறுக்க கட்டப்பட்ட உருண்டை வடிவான ஒன்றைப் பயன்படுத்துவர்.

பிள்ளையார் கட்டை

ஆண்கள் விளையாடும் விளையாட்டு. இரண்டு சம குழுக்கள். இக்குழுவின் நடுவில் பிள்ளையார் கட்டை வைக்கப்படும். வேறு கட்டைகள் அடுக்கி வைக்கப்படும். பந்தினால் பிள்ளையார் கட்டையை நோக்கிக் குறிபார்த்து ஒரு தரப்பினர் அடிப்பர் அல்லது எறிவர். கட்டைகள் சிதறும். மற்ற தரப்புக் கட்டைகளை ஒழுங்காக அடுக்க வேண்டும். அடுக்குபவர்கள் மீது பந்தை எறிவர். பந்து பட்டவருக்கு நோ தாங்க முடியாதிருக்கும். இரு அணியும் மாறிமாறி விளையாடும்.

வழுக்குமரம் ஏறுதல்

கமுகு மரத்தினைச் சீவி அதில் "கிறீஸ்" பூசி அதன் மேல் வெற்றிக்கொடி நாட்டப்பட்டு நிறுத்திவைக்கப்படும். இவ்வாறு நிறுத்திவைக்கப்பட்ட பின் வெற்றிக்கொடியை எடுக்க மரம் ஏறுவர். இது புதுவருட, தீபாவளி விளையாட்டின் போது நடத்தப் படுவதுடன் இரண்டு கிராமங்களுக்கிடையேயும் நடத்தப்படும்.

மாட்டுவண்டி சவாரி

மாடுகளை வண்டியில் கட்டிப் போட்டிக்குத் தயாராக வைத்திருப்பர். ஒரே நேரத்தில் மாட்டு வண்டிகள் புறப்பட்டு குறித்த முடிவுப்புள்ளியை அடையவேண்டும். இது வண்டிச்சவாரி எனப்படும். தைப்பொங்கலுக்கு அடுத்துவரும் நாள்களில் இப்போட்டிகள் நடைபெறும்.

சதுரங்கம் (டக்டிக் டொஸ், டாம்)

சதுரங்கம் இரண்டு வகைப்படும். வகுப்பறையிலும் வீட்டிலும் திண்ணையிலும் ஒன்பது பெட்டியிட்டு விளையாடப்படும் ஒருவகைச் சதுரங்கமாகும். இருவர் மட்டுமே விளையாடலாம். ஒருவருக்கு மூன்றுகாய்கள் படி ஆறுகாய்கள் இருக்கும். இக்காய்களை ஒரேஒரு பெட்டி மட்டும் தகர்த்துத் தன் மூன்றுகாய்களையும் நேராகச் சரி நேராகச் சமாந்தரமாகச் சாய்வுக் கோணத்திற்கு நேராகக் கொண்டு வருவதே இந்த விளையாட்டாகும். ஒரு பக்கம் வெள்ளைக்காய்களும் மறுபுறம் கறுப்புக்காய்களும் வைத்து விளையாடப்படும். இவ்விளையாட்டுப் போட்டிகளாக நடத்தப்பட்டுப் பரிசில்களும் வழங்கப்படும். இவ்விளையாட்டினைச் சூதாட்டமாகவும் பணத்திற்காகவும் விளையாடுவர். இருவர் விளையாடும் போது மற்றவர்கள் யார் வெற்றி பெறுவார் எனப் பணம் வைத்து பந்தயம் கட்டுவதும் உண்டு. மற்றையது, சதுரப் பெட்டிகளுக்குள் நிறக்காய்களை நகர்த்திக் காய்களை வெட்டி விளையாடுவர்.

தாயம் விளையாடுதல்

சோகி அல்லது தாயக்கட்டைகளைக் கொண்டு தாயம் விளையாடப்படும். தாயவிளையாட்டிலும் பலவகை விளையாட்டுகள் உண்டு. எவ்வித வயது வித்தியாசமுமின்றித் தாயம் விளையாடப்படும்.

ஓடிப்பிடித்து விளையாடுதல்

ஒருவர் பிடிக்க மற்றவர்கள் ஒளிவது இந்த விளையாட்டாகும். பிடிப்பவர் யார் என்பதை 10, 20, 30, என எண்ணி 100 வருபவர்களைத் தவிர்த்து இறுதியாக உள்ளவர் பிடிப்பவர். முதலில் தொடுபடுபவர், அடுத்துப் பிடிப்பவராவர்.

ஒளித்துப்பிடித்து விளையாடுதல் மற்றும் கள்ளன் பொலிஸ் விளையாடுதல்

ஒருவர் பிடிக்க மற்றவர்கள் ஓடி ஒளிவது இந்த விளையாட்டாகும். பிடிப்பவர் யார் என்பதை 10, 20, 30, என எண்ணி 100 வருபவர்களைத் தவிர்த்து இறுதியாக உள்ளவர் பிடிப்பவர். முதலில் கண்டுபிடித்துத் தொடுபடுபவர், அடுத்துப் பிடிப்பவராவர். இதனைச் சிறுவர்கள் கள்வராகச் சிலரும் பொலிசாராகச் சிலரும் ஓடி, ஒளிந்து மறைந்து பிடித்து விளையாடுதல். இவ்விளையாட்டு ஓடிப்பிடித்து விளையாடுதல் போலவும், ஒளித்துப் பிடித்து விளையாடுதல் போலவும் அமையும்.

நொண்டி விளையாட்டு (நொண்டிப்பிடித்தல்)

ஒருவர் நொண்டி, நொண்டி, ஒற்றைக்காலில் சென்று மற்றவர்களைப் பிடிப்பார் அல்லது இரண்டு குழுவாகப்பிரிந்து ஒருகுழு நொண்டிநொண்டி ஒற்றைக்காலில் சென்று மற்றைய ஓடும் குழுவினைப் பிடிக்கும். இவ்விளையாட்டு எல்லைவகுத்து விளையாடப்படும். கையால் தொடுபட்டவர் ஆட்டமிழப்பார்.

சாண் அளத்தல் (டங்கா அடித்தல்)

இது நாணயத்தினைச் சுவரை நோக்கி எறிந்து அது சுவரில் பட்டுத் தெறித்து விழும் தூரத்தினைப் பொறுத்து இரண்டாமவர் தன் நாணயத்தினைச் சுவரை நோக்கி எறிந்து அது சுவரில் பட்டு முதலாவது நாணயத்துக்கு ஒரு சாண் தூரத்தில் தெறித்து விழுந்தால் முதல் எறிந்த நாணயம் இரண்டாமவருக்குச் சொந்தமாகும். இதுவும் ஒரு சூதாட்டமாகவே கொள்ளப்படுகிறது. இதனால் நாணயங்கள் உருவமழிந்து போவதையும் காணலாம்.

உப்பு விளையாட்டு

ஒருவர் பேசக்கூடிய குழந்தையை முதுகினில் சுமந்து "உப்பு, உப்பு, உப்பு" என கூவிச் செல்வார். அவர் அருகில், பக்கத்தில் போவோர் "ஒரு உப்பு தா" அல்லது "இரண்டு உப்பு தா" எனக் கூறுவர்.

குழந்தையைத் தூக்கியவர் குனிய, குழந்தை "இந்தா ஒரு உப்பு, இந்தா இரண்டு உப்பு" என்று ஏதாவது சத்தத்துடன் உப்பு வழங்கும்.

பட்டம் விடுதல்

மார்கழி விடுமுறையில் காற்றுக்காலத்தில் பெரிய பட்டங்களும் படலங்களும் செய்து விடுவர். பட்டம்விடும் போட்டிகளும், ஒருவரின் பட்டத்தினால் மற்றவரின் பட்டத்தினை அறுக்கும் செயல்களும் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன. கொக்குப் பட்டம், பருந்துப் பட்டம், மணிக்கூட்டுப் பட்டம், பாம்புப் பட்டம் எனப் பல்வேறு வடிவங்களும் பெயர்களும் வழங்கப்படுகின்றன. விண் செய்து பூட்டி படலங்களும் செய்து விடுவர். இதற்கான போட்டிகளும் தைப்பொங்கல் தினத்தில் அல்லது தைப்பொங்கல் தினத்துக்குப் பின்னர் வரும் ஒருநாளில் நடைபெறும்.

காற்றாடி விடல், பம்பரம் விடுதல், கப்பல்விடல், ஓடம் விடல்

பம்பரம் செய்து அதனைச் சுழற்றி விட்டு விளையாடுவர். யாருடைய பம்பரம் அதிகநேரம் நிமிர்ந்து சுற்றுகின்றதோ அவர் வென்றவராவார். காற்றாடி செய்து விளையாடுவர். இதுவும் பம்பரம் விடும் விளையாட்டுப் போன்றது. தென்னோலை, கடதாசி, பனையோலை போன்றவற்றில் காற்றாடி செய்து விளையாடுவர். காவடி விளையாட்டுப் போட்டிகளும் திருவிழாக்காலங்களில் நடைபெறும்.

கப்பல் விடல் விளையாட்டில் கடதாசியில் கப்பல் செய்து தண்ணீரில் அல்லது வாய்க்காலில் விட்டு விளையாடுவர். மழைக்காலத்தில் அதிகமாக விளையாடுவர்.

ஓடம் விடுதல்- கரையோரங்களில், வன்னிக்குளங்களில் விளையாடப்படும் விளையாட்டாகும். இந்த விளையாட்டில் ஓடம் விடும் போது பாடல்களும் பாடுவர். கட்டுமரம் செலுத்தல், துடுப்பு வலித்தல், நீந்துதல் போன்ற விளையாட்டுகளும் இடம்பெறும். இதற்கான போட்டிகளும் திருவிழாக்காலங்களில் நடைபெறும்.

கொக்கான் வெட்டுதல்

ஒன்றுக்கு மேற்பட்ட மகளீர் சேர்ந்து விளையாடும் விளையாட்டு. ஐந்து கற்கள் ஓரளவு உருண்டை வடிவமானது தேர்ந்தெடுக்கப்படும். ஒவ்வொருவரும் தமக்குரியதை தாமே தேர்ந்து எடுத்துக்கொள்வர். ஒருவர் விளையாடத் தொடங்குவார். அவர் தவறுசெய்தால் மற்றவர். இரண்டாமவர் தவறு செய்தால் மூன்றாமவர், பின் முதலாமவர் விட்ட இடத்திலிருந்து தொடர்வார். வீட்டுக்குள்ளேயே விளையாடும் விளையாட்டாகும்.

சங்கு விளையாட்டு

சிறுவர்கள், சிறுமிகள் சேர்ந்து இவ்விளையாட்டை உறவு முறைகள் சொல்லி தங்கள் கைகளைச் சங்கு வடிவில் பொத்தி ஒவ்வொருவர் கைகள் மேலும் மாறிமாறி வைக்க ஒருவர் மட்டும் ஒரு கையை சங்கடுக்கில் வைத்து மறுகையின் ஒரு விரலால் அடுக்கிய சங்கின் கீழிருந்து மேல் நோக்கி, அல்லது மேலிருந்து கீழ் நோக்கி "இது யாரு சங்கு இது யாரு சங்கு?" என்று கேட்க மற்றவர்கள் "இது அம்மா சங்கு," "இது அப்பா சங்கு," "இது அக்கா சங்கு"ஞ்ஞ்ஞ்"சங்கு" என்று கூற வெட்டவா? தீட்டவா என்று தலைவர் கேட்க ஒருவர் வெட்டு என்றவுடன்

தலைவர் இரண்டாக வெட்ட சிறுவர்கள் தங்களின் கைகளை வாயில் வைத்து சங்கூதுவது போல் ஊஞ்ஞ்..ஊஞ்ஞ்ஞ்ஊ என்று ஊதுவர். இது சங்கு விளையாட்ட்டாகும்.

சங்கிலி புங்கிலி

ஒருவர் புலி. ஒருவர் ஆடு. மற்றவர்கள் ஆட்டினைச்சுற்றி வட்டமாகக் கையைக் கோர்த்துக் கொண்டு நிற்பார்கள். மற்றவர்கள் அவர்களை காப்பாற்ற வட்டமாகக் கைகோர்த்து நிற்பர். புலி "சங்கிலி புங்கிலி கதவைத்திற" என பாடுவான். வட்டமாக நிற்பவர்கள், "நான் மாட்டேன் வேங்கைப் புலி" எனப் பாடுவர். புலி மீண்டும் 'ஆட்டுக்குட்டியை கண்டீர்களா' என்பான். 'கண்டோம்' என வட்டமாக நிற்போர் கூறுவர். 'வரலாமா? வரக் கூடாதா? எனப் புலி கேட்பான். 'வரக் கூடாது' என வட்டத்தில் உள்ளோர் கூறுவர். புலி யாராவது கை கோர்த்து இருப்போரில் ஓரிடத்தில் உடைத்துக் கொண்டு ஆட்டைத் தொட முயல்வான். தொட்டால் ஆடு விளையாட்டிலிருந்து நீக்கப்படுவார்.

பசுவும் புலியும்

கைகோர்த்து சுற்றி நிற்பர். பசு என்பவர் உள்ளே நிற்பார். சுற்றி நிற்பவர்களது கைகோர்வை உடைத்துக்கொண்டு புலி பசுவைப் பிடிக்கும். சுற்றி வேலியால் நிற்பவர்கள் புலியைத் தடுப்பர். புலி பசுவைப் பிடித்தும் ஆட்டம் முடியும்.

ஆடுபுலி

விளையாடுவோர் கோர்வையாக நிற்பர். ஆடு கோர்வையிலுள்ளோரை தாயாடு போய் காப்பாற்றும். புலி கோர்வையிலுள்ள அல்லது இறுதியிலுள்ளவரை பிடித்து இழுத்துச் செல்லும்.

முந்திரிக் காயும் நரியும்

வரிசையாகச் சிறுவர்கள் கையைப் பிடித்து நிற்பர். அநேகமாக இவர்கள் ஒரு வட்ட வடிவில் ஒன்று சேர்ந்து நிற்பர். இவர்கள் ஒன்று கூடி ஒருவரை முந்திரிக்காய் எனப் பெயரிடுவர். கையைப் பிடித்துக் கொண்டு வட்டமாக நிற்பவர்கள் பாட்டுப்பாடுவர். நரி சுற்றிச் சுற்றி வந்து சரியாக முந்திரிக்காய் என பெயரிட்டவரைத் தொடவேண்டும். "குலை குலையாய் முந்திரிக்காய், நரியே நரியே சுற்றி வா, கூட்டத்தில் இருக்கிறான் கண்டு பிடி" எனப் பாடி விளையாடுவர்.

உச்சரிப்பு விளையாட்டு

சில வாக்கியங்களை விரைவாக மீண்டும் மீண்டும் சொல்லல். ர,ற,ன,ண,ல,ள,ழ ஆகியன சரியாக உச்சரித்து பழக இது ஒரு சிறந்த விளையாட்டு. "கடற்கரையில் உரல் உருளுது." "ஓடுகிற நரியில் ஒரு நரி சிறுநரி, சிறுநரி முதுகில் ஒரு பிடி நரை மயிர்." "பருப்பு உருண்டை, கடல் அலையிலே, ஒரு உரல் உருளுது, புரளுது, தத்தளிக்குது, தாளம் போடுது" என்று (திரும்ப திரும்பச் சொல்லுதல்) விளையாடுவார்கள்.

கிளித்தட்டு

சிலர் உப்புக்கோடு, உப்புப்பாய்தல் எனவும் கூறுவர். ஓரே அளவு அகலமும் நீளமும் கொண்ட பெட்டிகளை வரைந்து பாத்திகள் போல் நடுக்கோடிட்டு வெளிகளில் விளையாடப்படும் விளையாட்டு இதுவாகும். விளையாடும் ஆட்களின் தொகைகளுக்கேற்ப ஒன்றுகுறைத்து பெட்டிகள் வரையப்படும். ஆடும்குழு சம எண்ணக்கையுள்ள குழுக்களாகப் பிரிக்கப்படும். இக்குழுக்களின் தலைவர் "கிளி" என அழைக்கப்படுவார். காசு ஒன்றினை சுண்டிப்பார்த்து (பூவா தலையா) எந்த அணி முதலில் கூட்டுக்குள் இறத்குவது, எந்த அணி முதலில் கூட்டினைக்காப்பது எனத்தீர்மானித்து, ஆட்டம் ஆரம்பிக்கப்படும். தனித்தனியாக கிளித்தட்டு பாய்ந்து இறுதியாக பழமாவார்கள். ஆரம்ப இடத்திலும், பழமான பின்னர் மீண்டும் ஆரம்ப இடத்துக்குத் திரும்பும் வரை எதிரணியினர் தடுத்து நிற்பர். "கிளி" நடுநெடுங்கோட்டிலும், வரம்புக்கோட்டிலும் கீழும் மேலும் ஓடி கிளித்தட்டு பாய்பவர்களை அடிக்கும். மறிப்பவர்கள் முதலில் புகும் பக்கம் ஒவ்வொரு தட்டிலும் நிற்பர். ஒன்று புகும் பக்கம். மற்றையது வெளியேறும் பக்கம். பக்கக்கோடு பாயும் போது தட்டுப் பட்டாலோ, "கிளி" அடித்தாலோ, முழுகுழுவும் தோற்றுவிடும்.

தும்பி விளையாட்டு

ஆண், பெண் இருபாலாரும், சேர்ந்தும் விளையாடுவர். வட்டமாக சுற்றியமர்ந்து கையை பின்புறம் ஒரு பொருளை பெறுவது போல் வைத்திருப்பர். தடிப்பான சீலையினை முறுக்கி எடுத்து விளையாடுவர். இதனையே தும்பி என்பர். தும்பியை எடுத்துக்கொண்டு வருபவர் அமர்ந்து இருப்பவர்களைச் சுற்றி வந்து கையினுள் வைப்பது போல் பாசாங்கு செய்து இறுதியில் யாராவது ஒருவரின் கையினுள் தும்பியினை வைப்பர். தும்பியை வைத்து விட்டு வட்டத்தில் ஓரிடத்தில் அமர்ந்து கொள்வார். தும்பியை வைக்கப்பட்டவர் 'தும்பி தும்பி' எனக் கூவியபடி அமர்ந்து இருப்பவர்களை மீண்டும் சுற்றி வந்து யாராவது ஒருவரின் கையினுள் தும்பியினை வைப்பர். அது மட்டுமல்லாது தும்பி சுற்றும் விளையாட்டு எனும் மகளிர் விளையாட்டும் காணப்படுகிறது. எதிர் எதிராக இருந்து கால்களை நெருக்கி கைகளைப் பெருக்கல் குறிபோல் பிடித்துப் பற்றிக்கொண்டு பாடல்களை பாடிக்கொண்டு பம்பரம் சுற்றுவது போல் சுற்றுதல். இதனைத் தும்பி சுற்றுதல் என்பர்.

கண்ணாமூச்சி (கண்ணாம்பூச்சி)

இதற்குக் குழுத்தலைவர் ஒருவர் இருப்பார். இவர் "தாச்சி" என அழைக்கப்படுவார். ஒரு சிறுவனைத் தெரிந்து "தாச்சி" அவன் கண்களை கட்டிவிடும். மற்றவர்கள் ஒளிந்து கொள்வார்கள். தாச்சி கண்ணைத் திறந்து விட்ட பின் அவன் தேடிச் சென்று யாரையாவது தொடவேண்டும். ஒளிந்தவர்கள் ஓடி வந்து தாச்சியைத் தொட்டால் இடைவேளை. தொடுபட்டவர்கள் அல்லது தட்டப்பட்டவர்கள் மீண்டும் கண்களைக் கட்டிக்கொள்ள வேண்டும்.

கண்ணாம்பொத்தி

ஒரு பிள்ளையின் கண்ணைப் பொத்திக்கொண்டு மற்ற சிறுவர்களைத் தேடுவதாகும்.

தெப்ப விளையாட்டு

நீந்துதல், அமிழுதல் என்பனவாகும். ஏதாவது ஒரு துண்டைத் தெப்பம் என தண்ணீருக்குள் போடுவர். தெப்பத்தினைத் தேடி எடுத்து வரவேண்டும்.

சுரைக்காய் இழுத்தல்

உறுதியான மரத்தை ஒருவர் இறுக்கிப் பிடிக்க அவரின் இடுப்பை ஒருவர் பின் ஒருவராகக் கட்டிப்பிடித்து இழுப்பர். ஒருவர் "சுரைக்காய் இருக்கோ, "சுரைக்காய் இருக்கோ" எனக் கேட்டு இறுதியாக உள்ளவரை இழுப்பார். ஒருவர் பின் ஒருவராகப் பிடித்திருப்போர் இழுப்பதில் ஏதோ ஓரிடத்தில் கைவிடுவர். அந்தக் கைவிட்ட இடத்திற்குப் பின் இருப்போர் ஆட்டமிழப்பர்.

முடிவுரை

மக்களது இயந்திரமயமான வாழ்க்கையில் கணினி மற்றும் தொலைக்காட்சி ஆகியவற்றின் முக்கியத்துவத்திற்கு மத்தியில் நாட்டார் விளையாட்டுகள் அருகிப் போய்விடுமோ என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது. சிறுவர் பாடல்கள், நாட்டார் பாடல்களுடனான இவ்விளையாட்டுகள் அருகிப் போவதனால் நாட்டார் பாடல்களும் பாவனையின்றிப் போய்விடலாம். இப்பண்பாட்டுக் கோலங்களையும், பழக்கவழக்கங்களையும், பாரம்பரிய மரபுமுறைகளையும், சிறுவர்கள் மத்தியில் எடுத்துச் செல்வது அவசியமாகும். இவ்விளையாட்டுகளைத் தனித்தனியாக ஆராய்ந்து நாட்டார் விளையாட்டுகள் மூலம் வளர்க்கப்படும் உளப்பாங்கு, உளவளர்ச்சி போன்றவற்றையும் ஆராய்ந்து எடுத்துரைப்பதோடு அவை நூலுருப் பெறவும் வேண்டும். இவற்றோடு இவ்விளையாட்டுக்கள் சார்ந்த பாடல்கள் சேகரிக்கப்பட்டு விளையாட்டுப்பாடல்கள் பகுதியில் ஆராயப்படவேண்டும். அப்போதுதான் ஈழத்துத் தமிழ்நாட்டாரியல் பூரணத்துவம் அடைய முடியும்.

துணைநூல்கள்

1. செங்கைப்பொதுவன் 2010, "சங்க இலக்கியங்களில் விளையாட்டுக்கலை",உலகத் தமிழ் செம்மொழி மாநாட்டுச் சிறப்புமலர், கோவை.

2. தேவநேயப்பாவாணர், .ஞா. 1957, தமிழ்நாட்டு விளையாட்டுகள். தமிழ்மண்பதிப்பகம், சென்னை.

3. அருணாச்சலம்,அ. 2002, தமிழர் வீரவிளையாட்டு, கழக வெளியீடு, சென்னை.

4. எதிர்மன்னசிங்கம், எஸ். 2012, "சிறுவர் இலக்கியத்தில் கிராமிய விளையாட்டுகளின் சிறப்பம்சங்கள் ஒரு கண்ணோட்டம், வீஸீ பூவல், கொழும்பு தமிழ்ச்சங்கம், கொழும்பு

கல்வெட்டில் காணப்படும் சித்தஆயுர்வேத மருத்துவம்

மருத்துவர் கணேஷ் ஸ்ரீதரன்
ஹேர்பல் கெல்த் கெயார் சென்ரர்
கொக்குவில், இலங்கை

திருமதி சி.அன்புச்செல்வி
சிரேஷ்டவிரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்பாணம் பல்கலைக்கழகம்

அறிமுகம்

இலங்கையில் பண்டைய காலம் மருத்துவக்கலை வளர்ச்சியடைந்து கொண்டிருந்தது என்பது இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுச் சான்றுகள், நூல்கள் என்பவற்றை ஆதாரமாகக் கொண்டு அறியக்கூடியதாக வுள்ளது. இலங்கையில் மருத்துவ வரலாற்றுக்கு மிகப்பயனுள்ள செய்திகளைத் தரும் சான்றாகக் கல்வெட்டுகள் அமைந்துள்ளன. இலங்கை எங்கும் கல்வெட்டுக்கள் முதலிய கற்சான்றுகளில், புராதன மன்னர்களும், மக்களும் வெளியிட்ட அறிக்கைகளும்,பிரகடனங்களும் கற்சான்றுகள், குகைகள், தட்டைப்பலகைகள் என்பவற்றில் காணப்படுவதால் பிற்காலச் சந்ததிகள் அவற்றால் பல நன்மைகள் அடைந்துள்ளனர். பல நூற்றாண்டுகளாக மழை, வெயிலினால் அழிபட்டும், அழியாது எஞ்சியிருக்கும் கல்வெட்டுக்கள் போன்றவை தேசிய அளவில் நம்முன்னோர்கள் கொடுத்த அருட்செயல்களாகக் கருதப்படுகின்றன.

ஆய்வின் குறிக்கோள்

இலங்கையில் கண்டுபிடிக்கப்பட்ட கல்வெட்டுக்களில் காணப்படும் மருத்துவக் குறிப்புகள், மருத்துவமனையின் அமைப்பு, நிர்வாகமுறை என்பவற்றை ஆராய்தல்.

ஆய்வியல்

ஆய்வில் தேவ நம்பிய தீசன் ஆட்சிக்காலத்தில் எழுதப்பட்ட கல்வெட்டுக்களை ஆராய்ந்து பார்க்கையில் இந்தியாவில் அசோகனுடைய ஆட்சிக்காலத்தில் இலங்கையில் தேவநம்பியதீசன் ஆட்சி செய்தான். அசோகனது கல்வெட்டுக்கள் பிரமி எழுத்துக்களில் எழுதப்பட்டு இருந்தன. இவ்வாறு பிரமி எழுத்தை ஒத்த எழுத்துக்கள் இலங்கையிலும் கண்டறியப்பட்டுள்ளன. இக்காலம் கி.பி. முதலாம் நூற்றாண்டு முதல் கி.பி. ஆறாம் நூற்றாண்டு வரையாகும். கிராமிய எழுத்துக் கல்வெட்டுக்கள் புத்த குருமார் வசித்த குகைகளில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளன. இவற்றில் மருத்துவம் சம்பந்தப்பட்டவை நான்கு கல்வெட்டுக்களே கிடைக்கப் பெற்றுள்ளன.

பிற்காலத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் சிங்கள எழுத்துக்களில் அமைந்துள்ளன. இவற்றுடன் தமிழ் மொழி, கிரந்த மொழிக் கல்வெட்டுக்கள்

சிலவும், கிராமியக் கல்வெட்டுக்களும் வரலாற்றுச் செய்திகளைத் தருகின்றன (Wanninayaka 1982). எழுத்துமுறை, எழுதியவர்களின் பெயர்கள் வேறுபாட்டின் படி இவற்றைக் கால முறையில் வகுக்கலாம். இவற்றில் பெறும் விபரங்களைக் கொண்டு புராதன வரலாற்றுநூல்கள், மகாவம்சம், பூஜாவலி, ராஜவலி முதலியவற்றின் விபரங்களைக் கொண்டும் ஆராய முடியும். இவற்றில் மருத்துவம் தொடர்பான செய்திகள் காணப்படுகின்றன. இங்கு முக்கியமாகக் காணப்படும் மருத்துவ மனைகளையே ஆராய்கின்றோம்.

1. மிகிந்தலை வைத்தியசாலை

இவ்வைத்தியசாலை கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்த நான்காம் மகிந்தன் எனும் அரசனால் கட்டப்பட்டுள்ளது என்பதற்கு கற்சான்று ஆதாரம் உள்ளது (Uragoda 1987). 1910 இல் பெல் உன்ற ஆங்கிலேயரால் தொல்அகழ்வு ஆராய்ச்சியில் ஈடுபட்டபோது மண்ணினால் மூடப்பட்டுக் கிடந்த இந்த வைத்தியசாலை கண்டுபிடிக்கப்பட்டது. இதில் மட்பாண்டங்களின் சிதைவுகளும், பாரசீகப் பளபளப்பான நீர்க்கூசாக்களின் பகுதிகளும் கிடைத்தன. வைத்தியசாலையின் வெளிமண்டபம், உள்மண்டபம் என இரு பகுதிகள் இருந்தன. பிரதான நுழைவாயிலில் பொருட்கள் சுமப்பவனின் இல்லமும் காணப்பட்டது. அதனைத் தொடர்ந்து சமையல்கூடம், வென்னீர்க் குளிப்பு அறையும், மருந்து செய்து களஞ்சியப்படுத்தும் பகுதியும், வெளிமண்டலப் பகுதியும் அமைந்திருந்தன. வெந்நீர்க் குளியல் அறையின் மத்தியில் பெரிய தொட்டி ஒன்றும் காணப்பட்டது. இதில் நோயாளர்களைக் குளிப்பாட்டும் வசதியும், அழுக்கு நீர் நிலத்தினூடாக வழிந்தோட வசதி செய்யப்பட்டிருந்தது. மருந்து செய்யும் அறையில் மருந்து அரைக்கும் வசதிகள், அம்மி, திருகை போன்ற உபகரணங்கள் காணப்பட்டன. மூலிகைகளை கசக்கிப் பிழியும் இயந்திரம், வித்துகளை அரைக்கும் உபகரணம் என்பனவும் காணப்பட்டன. உள்மண்டபத்தில் பல அறைகள், குருமார்கள் வசிக்கும் சிறு குகைகள் போன்ற அமைப்புக்கள் இருந்தன. சதுர வடிவில் அவ்வறைகள் வரிசையாக அமைக்கப்பட்டிருந்தன. நான்கு மூலைகளிலுமுள்ள அறைகள் மற்றைய அறைகளிலும் பார்க்கப் பெரிதாகக் காணப்பட்டன. சிறிய அறையில் நோயுற்ற குருமார்கள் இருக்க வசதிகள் செய்யப்பட்டிருந்தன. இவ் எல்லா அறைகளையும் சேர்த்து முன்னே பெரிய விறாந்தை ஒன்றும் காணப்பட்டது. மத்தியில் வழிபாட்டறையும் காணப்பட்டது. இது விறாந்தையில் இருந்து பார்க்கக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது. பெரிய அறைகளை எல்லோரும் பயன்படுத்தக்கூடிய வசதியாக இருந்தது.

வைத்தியசாலை அடிமட்டத்தில் இருந்திருக்கிறது. குருமார்கள் குகையின் உச்சியில் மலையடிவாரத்தில் வசித்துள்ளனர். மிகிந்தைலையில் கிடைத்த இரு கல்வெட்டுக்களில் வைத்தியசாலைக்குரிய குறிப்புகள் உள்ளன. நான்காம் மகிந்தன் அதனை எழுதுவித்துள்ளான்.

பின்வரும் விடயங்கள் அதில் குறிக்கப்பட்டிருந்தன.

1. குருமார்கள் நோயுற்ற போது மருத்துவர் ஆலோசனைப்படி குறித்தளவு உணவு கொடுக்கப்படவேண்டும்.

2. வேலையாட்களின் வேதனம் பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. எல்லா வகையான வேலையாட்களுக்கும் பணம், உணவுப்பொருட்கள், நிலம் ஆகியன சம்பளமாக வழங்கப்பட்டுள்ளன.

அட்டையைக் கடிக்கவிட்டு மருத்துவம் செய்பவர்களை வைத்தியரிலிருந்து வேறுபடுத்தி வைத்துள்ளனர். அவர்களுக்குச் சம்பளம் குறைவாக வழங்கப்பட்டுள்ளது. தற்காலக் கணிப்பின்படி உபமருத்துவர்களாகக் கருதப்படுவர்.

2. மெதிரிகிரிய வைத்தியசாலை

பொலநறுவ மாவட்டத்தில் மெதிரிகிரிய என்ற இடத்தில் அமைந்துள்ளது, இந்த வைத்தியசாலை. ஆறாம் மகிந்தன் காலத்தில் அமைக்கப்பட்டதாகக் கிடைக்கப் பெற்ற கல்வெட்டின் மூலம அறியக் கூடியதாகவுள்ளது (Uragoda1987). வைத்தியசாலையின் நிர்வாக அமைப்பு முறைகள் பற்றி மிக விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. நிர்வாகப் பொறுப்பு தனியான உத்தியோகத்தரிடமும், நோயாளியைப் பராமரிக்கும் பொறுப்பு வேறு பகுதியினரிடமும் கொடுக்கப்பட்டு இருந்தன. காரியாலய உத்தியோகத்தர் நோயாளர்களைப் பராமரிப்போருக்குக் கட்டளை வழங்கக்கூடாது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்குரிய நிர்வாகத்துக்குரிய செலவுகள் நிலவருமானத்தில் இருந்து பெறுவதற்கு வழி செய்யப்பட்டுள்ளது. வைத்தியசாலை நிலங்களைத் தமதாக்கும் பணியாளர்களுக்குத் வைத்தியரும், பிற நிர்வாகிகளும் கூடியிருக்கும் சபையால் விசாரணை செய்து உரிய தண்டப்பணம் பெறும் வழிமுறையும் செய்யப்பட்டிருந்தது. வைத்தியசாலை நிலத்தை உழுபவரிடம் கைக்கூலி பெறுவது தடை செய்யப்பட்டுள்ளது. நோயாளரிடம் இருந்து உபகாரம் ஏற்றுக் கொள்வது பற்றிக் குறிப்பு ஏதும் இல்லை. பிழை விட்டவர்களைப் பணியில் இருந்து நீக்கப்பட வழிசெய்யப்பட்டுள்ளது. அரண்மனை உத்தியோகத்தர் வருடந் தோறும் வந்து வைத்தியசாலையைப் பரிசோதிப்பது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. வைத்தியசாலைக்கு அப்பால் சத்தமிடவோ அல்லது பாடவோ அனுமதியில்லை. உள்ளே அமைதி பேணப்பட வேண்டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐந்தாம் காசியப்பன் எழுதுவித்த சிங்கள கல்தூண் கல்வெட்டில் குருமாரல்லாத பிறரும் மருத்துவச் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டதாகக் கூறப்பட்டுள்ளது (Wanninayaka 1982). மீன், இறைச்சி போன்றவை உணவில் கொடுக்கப்பட்டுள்ளதாகச் சான்றுகள் உள்ளன. மருத்துவ மனையிலுள்ள குளங்களில் மீன் பிடிப்பவர்களை நேரில் சென்று விசாரித்து மீனைப் பறிமுதல் செய்து வைத்தியசாலைத் தேவைக்கு எடுத்துக் கொள்ளவேண்டும் என கட்டளைக் உண்டு. இந்த வைத்தியசாலைக்கு அநுராதபுரத்திலிருந்து நிலமானியம் கொடுக்கப்பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுகள் உள்ளன.

3. பொலநறுவ வைத்தியசாலை

1972 இல் புதைபொருள் ஆய்வு நடத்திய போது "வன்கொத்" விகாரைக்குப் பக்கத்தில் அமைந்த இவ்வைத்தியசாலை கண்டுபிடிக்கப்பட்டது.

இவ்வைத்தியசாலையானது நீள்சதுரக் கட்டடமாகவும், சிற்றறைகளும், மத்தியப் பகுதியில் முற்றமும் காணப்படுகின்றன. மருந்து உபகரணங்கள், மருந்து இடிக்கும் உரல், கல்பம், கத்தரிக்கோல், வளைந்த கூராயுதங்கள், மண், வெண்களியினால் செய்யப்பட்ட பாத்திரம், மருந்துரைக்கும் பாத்திரம் என்பன காணப்பட்டன. முதலாம் பராக்கிரமபாகு இவ்வைத்தியசாலையைக் கட்டுவித்தான் என அறியப்பட்டுள்ளது.

முடிவுரை

இலங்கையில் மன்னர்கள் அரசாட்சி செய்த காலத்தில் மருத்துவம் மனித வாழ்வுக்கு இன்றியமையாதது என்ற காரணத்தால் வைத்தியசாலைகளை கட்டி வைத்திய சேவை வழங்கியதோடு, சிறந்த வைத்திய நிர்வாக அமைப்பையும் செயற்படுத்தியிருக்கிறார்கள் என்பது கல்வெட்டுச் சான்றுகள் மூலம் அறியக்கூடியதாகவுள்ளது. மேலும் இந்நாளில் மருத்துவமனைகள் எவ்விதம் செயற்படுகின்றனவோ அவ்வாறு அந்தக்காலத்திலும் செயற்பட்டு வந்ததை அறியமுடிகிறது. இங்கு மருந்து தயாரிக்கவும், மருந்து மூலிகைகள் சேகரிக்கவும், நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சையளிக்கவும், மருந்து எடுத்துச் சென்று உபயோகிக்ககூடியதுமான வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன. இங்கு உள்ள கல்வெட்டுக்களை ஆராய்ந்த போது அக்காலத்தில் மக்கள் மருத்துவ அறிவில் சிறப்புத் தேர்ச்சி பெற்றிருப்பது மிகத் தெளிவாகத் தெரிகிறது. அந்த அறிவின் முன்னேற்றகரமான வளர்ச்சியே இன்று நாம் அடைந்துள்ள வளர்ச்சிக்கும், முன்னேற்றத்திற்கும் அடிப்படையாக அமைந்துள்ளது என்று கூறலாம்.

துணைநூல்கள்

Wanninayaka, P.B, The Changing Role of the Ayurvedic Physician in the National Health Care System, 1982.

Uragoda, C.G, A History òf Medicine. in SriLanka from earliest times to 1948, Colombo, - 1987.

தொல்காப்பிய அகத்திணைக்கொள்கைகளும் கலித்தொகைப் பாடல்களும் - ஓர் ஒப்பாய்வு

திருமதி த. எழிலரசி
முனைவர்பட்ட ஆய்வாளர்
புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு
ஆராய்ச்சி நிறுவனம், புதுச்சேரி, இந்தியா

முன்னுரை

சங்க இலக்கியத்துக்கும் தொல்காப்பியத்துக்கும் இடையே கட்டப்பட்ட உறவு இருப்பதாக அன்றுமுதல் இன்றுவரை அறிஞர்கள் அனைவரும் கூறி வருகின்றனர். அதுமட்டுமன்றி, சங்க இலக்கியங்களுக்கு அன்றிலிருந்து உரை எழுதி வருகின்ற உரையாசிரியர்கள், தொல்காப்பியக் கூறுகளை அடியொற்றிய நிலையிலேயே உரை வகுத்து வருகின்றனர். இத்தகைய சங்க இலக்கிய உரைகளை உற்று நோக்கும்போது, சங்க இலக்கியமும், தொல்காப்பியமும் உண்மையிலேயே பிரிக்க முடியாத உறவினை உடையவைதாம் என்ற வினா நமக்குள் எழும். இவ்வினாவினை அடியொற்றிச் சங்க அக இலக்கியங்களுள் ஒன்றான கலித்தொகையின் 150 பாடல்களில் ஒரு பாடலை மட்டும் தொல்காப்பியரின் திணை மயக்கக் கோட்பாட்டிற்குள் பொருந்தாத தன்மை ஆராயப்பட உள்ளது.

தொல்காப்பியர் குறிப்பிடும் திணை பற்றிய கருத்தாக்கத்தில் மயங்கும் பொருள்களும் மயங்காப் பொருள்களும்

குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற ஐந்திணைகளில் உள்ள முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற முப்பொருட்களில் எவை மயக்கம் பெறும் என்பதையும் எவை மயக்கம் பெறா என்பதையும் மூன்று நூற்பாக்களின் வழி உணர்த்துகிறார் தொல்காப்பியர்.

"திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே
நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப
புலன் நன்கு ணர்ந்த புலமையோரே" (தொல். அகத். 14)

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" (தொல். அகத். 15)

"எந்நில மருங்கிற் பூவும் புல்லும்
அந்நிலப் பொழுதோடு வரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த வாகும்" (தொல். அகத். 21)

மேற்கூறிய மூன்று நூற்பாக்களுக்கும் உரையாசிரியர்கள் வெவ்வேறு பட்ட விளக்கங்களைத் தந்துள்ளனர் என்பது ஆய்வுக்கு உட்பட்டது.

'திணை மயக்குறுதலும்' என்று தொடங்கும் நூற்பாவில், திணை என்ற சொல்லிற்கு 'ஐந்திணைகள் தமக்குள் மயங்கும்' என்ற பொருளிலே, நூற்பாக்களைத் தொல்காப்பியர் அமைத்திருக்க வேண்டும் என்பது மேற்சொன்ன மூன்று நூற்பாக்களையும் ஆராயும்போது புலனாகிறது.

இந்நிலையில் திணை மயக்கம் பெற்றுச் சிறுபான்மை வரும் என்றும் அவை கடியப்படாமல் ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்பதையும் 'திணை மயக்குறுதலும் கடிநிலையிலவே' என்ற நூற்பாவின் முதலடி உணர்த்துகின்றது. அதாவது ஐந்திணைகளின் பொருட்களான முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றில் சில தத்தமக்குரிய திணையிலிருந்து மற்ற திணைகளுடன் பொருந்தி மயக்கம் பெற்றுச் சிறுபான்மை வரலாம். அவை கடியப்படாமல் ஏற்றுக்கொள்ளத் தக்கவை என்பதே முதலடியின் பொருளாகும். முதல் கரு உரிப்பொருள் என்ற மூன்றிலும் எவை மயக்கம் பெறும் எவை மயக்கம் பெறா என்பதைத் தொல்காப்பியர் பின்வரும் இரண்டு நூற்பாக்களின் வழி தெளிவு படுத்துகிறார்.

"நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப"

என்ற அடியில் தொல்காப்பியர் நிலம் மயக்கம் பெற்று வருவது எந்நிலையிலும் இல்லை என்று உறுதியாகக் கூறுகிறார். மூன்று பொருட்களில் முதற்பொருளின் தன்மையை முதலில் விளக்கிச் செல்கிறார். நிலம் பொழுது என்ற இரண்டும் அடங்கிய முதற்பொருளின் நிலம் மட்டும் மயங்காது என்று கூறும் தொல்காப்பியர் பொழுது மயக்கம் பெற்றும் வரும் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறார்.

அடுத்து உரிப்பொருட்களின் நிலையை அகத்திணையியல் பதினைந்தாம் நூற்பாவழி உணர்த்துகிறார்.

"உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே"

என்ற நூற்பா மூலம் முதற்பொருள், உரிப்பொருள், கருப்பொருள் என்ற மூன்றில் உரிப்பொருள் அல்லாத முதற்பொருளும் கருப்பொருளும் மயக்கம் பெறும் என்ற கருத்து நமக்குப் புலப்படுகிறது. ஆனால் முதற்பொருளின் நிலம் மயங்காது என்ற கருத்து நூற்பா பதினான்கின் மூலம் முன்னரே உணர்த்தப்பட்டு விட்டது. ஆக உரிப்பொருள் அல்லாத கருப்பொருளும், முதற் பொருளின் பொழுதும் மயங்கியும் வரலாம் என்ற கருத்தையே பதினைந்தாம் நூற்பா மூலம் தொல்காப்பியர் வழி உணர்த்தப் படுகிறது என்பது உறுதியான கருத்து என்பதில் எவ்வித ஐயப்பாடும் இல்லை.

மேற்கூறிய தொல்காப்பியக் கருத்தின் பொருட்டு, உரையாசிரியர்கள் வெவ்வேறு விளக்கத்தினை முன்வைக்கின்றனர். இவை ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை.

உரையாசிரியர்களின் விளக்கங்களும் விவாதங்களும்

நூற்பா பதினான்கிற்குத் தொல்காப்பிய உரையாசிரியர்களின் விளக்கம் வெவ்வேறு வகையில் அமைகிறது. 'திணை மயக்குறுதலும்' என்ற அடியில் திணை என்ற சொல்லிற்கு வேறுபட்ட விளக்க முறைகள் அமைவது ஆராய்ந்து

நோக்கத்தக்கது. இந்நூற்பாவில் வரும் 'திணை' என்ற சொல்லிற்கு இளம்பூரணர், அருணாசலம் பிள்ளை என்ற இருவரும் முதற்பொருள் என்று பொருள்புரிந்து உரைவிளக்கம் தருகின்றனர். 'திணை மயக்குறுதலும் கடிநிலை யிலவே' என்ற அடிக்கு இளம்பூரணர், "ஒரு திணைக்குரிய முதற்பொருள் மற்றொரு திணைக்குரிய முதற்பொருளோடு சேர நிற்றலும் கடியப்படாது." என்றும், அருணாசலம் பிள்ளை, "முதற்பொருளின் பகுதியாகிய நிலம் மயக்குறுதலும், காலம் மயக்குறுதலும் விலக்கப்படும் நிலைமை உடையன அல்ல" என்றும் முதலில் விளக்கம் தருகின்றனர்.

இதன்மூலம் இவர்கள் இருவருமே 'திணை' என்ற சொல்லிற்கு முதற்பொருள் என்ற நிலையில் பொருள் கொண்டு உரை வகுத்துள்ளனர் என்பது உறுதியாகிறது. அடுத்த நிலையில் நிலம் மயக்கம் பெறுதல் இல்லை என்பதையும், பொழுது மட்டும் மயங்கி வரும் என்பதையும் இவர்கள் இருவரும் ஏற்றுக் கொணடாலும், 'திணை' என்ற சொல்லிற்கு 'முதற்பொருள்' என்ற சொற்பொருள் விளக்கம் கொண்டது எவ்வகையில் ஏற்புடையதாகும்?

திணை என்ற சொல்லிற்குப் புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற ஐந்திணை ஒழுக்கங்கள் என்று பொருள் கொள்ளலாம். அல்லது முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றும் அடங்கிய ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்பவற்றில் ஒன்றாகப் பொருள் கொள்ளலாம். இவை இரண்டும் அல்லாமல் முதற்பொருள் என்று பொருள் கொள்வது எவ்வகையில் ஏற்புடையதாக அமையும்? இளம்பூரணர், அருணாசலம் பிள்ளையின் கருத்துப்படி திணை என்ற சொல்லிற்கு முதற்பொருள் என்று பொருள் கொண்டு, தொல்காப்பியர் நூற்பாக்களை அமைத்திருப்பின், அது பொருத்தமுடையது ஆகாது. ஏனெனில் முதற்பொருள் மயக்கம் பெறுதலும் உண்டு என்று முதலில் கூறி அதற்கடுத்த அடிகளில் முதற்பொருள் மயங்காது என்ற வகையில், 'நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிப' என்று கூறியிருக்க முடியாது. எனவே இவர்கள் இருவரின் விளக்கமும் இந்நூற்பாவிற்குப் பொருந்துவதாக இல்லை என்பது உறுதியாகிறது.

இதற்கடுத்த நிலையில் நச்சினார்க்கினியர், சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை போன்றோர் 'திணை' என்ற சொல்லிற்கு 'ஒழுக்கம்' என்று பொருள் கொண்டு உரை வகுக்கின்றனர். பொதுவாக திணை என்ற சொல் ஒழுக்கத்தைக் குறிப்பதாக இருப்பினும், நூற்பா பதினான்கில் ஒழுக்கத்தைக் குறித்து நிற்கவில்லை என்பது ஆழ்ந்து நோக்கும்பொழுது புலப்படுகிறது.

நச்சினார்க்கினியர், "ஒரு திணைக்குரிய ஒழுக்கம் அந்ததந்தத் திணைக்கே வராமல் வேறொரு திணையோடு பொருந்தி வந்தாலும் அவை கடியப்படாமல் ஏற்றுக்கொள்ளத் தக்கவை" என்று விளக்கம் தருகிறார். அதாவது ஓர் உரிப்பொருள் நிற்க வேண்டிய இடத்தில், மற்றொரு திணைக்குரிய உரிப்பொருள் வந்து நின்று, மயக்கம் பெறலாம் என்பது இவரின் கருத்து. இவரைப்போலவே சோமசுந்தர பாரதியார் நூற்பா பதினான்கில் குறிப்பிடப்படும் திணை என்ற சொல் ஒழுக்கத்தையே உணர்த்தி நிற்கிறது என்று விளக்கம் தருகிறார். "குறிஞ்சி முதலிய அன்பின் ஐந்திணைகளான புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்ற

ஐந்தொழுக்கங்களும் தத்தமக்குச் சிறப்புரிமை உடைய முறையே குறிஞ்சி, பாலை, முல்லை, நெய்தல், மருதம் என்ற நிலங்களில் நிகழ்வதுடன் அவ்வாறு சிறப்புரிமை அற்ற பிற நிலங்களில் வந்து கலத்தலும் விளக்கப்படா" என்று சோமசுந்தர பாரதியாரின் விளக்கம் அமைகிறது.

புலவர் குழந்தையின் கருத்தும் இத்தன்மைத்தே. இவரும் 'திணை மயக்குறுதல்' என்பது ஒழுக்க மயக்கத்தையே குறிக்கிறது என்கிறார். "ஒரொழுக்கம் அதற்குரியதல்லாத வேறு நிலத்தின் கண் நிகழ்தலும் நீக்கும் நிலைமை இல்லை" என்பது இவர் கருத்து.

எனவே நச்சினார்க்கினியர், சோமசுந்தர பாரதியார், புலவர் குழந்தை என்ற மூவரும் 'உரிப்பொருள் மயக்கம் பெறும்' என்று கூறுகின்றனர்.

பொதுவான நிலையில் திணை என்ற சொல் ஒழுக்கத்தை அல்லது உரிப்பொருளை உணர்த்தி நிற்பது அனைவரும் அறிந்ததாகும். எனினும் அகத். நூற்பா பதினான்கில் உள்ள திணை என்ற சொல்லிற்கு உரிப்பொருள் என்று பொருள் வைத்து, 'திணை மயக்குறுதலும் கடிநிலை யிலவே' என்ற அடிக்கு, உரிப்பொருள் மயக்கம் பெற்று வருவதை ஏற்கலாம் எனப் பொருள் கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது. ஒரு பாடலில் உரிப்பொருள் மயக்கம் என்பது எந்நிலையிலும் கிடையாது என்பதையே தொல்காப்பியம் உணர்த்துகிறது. நச்சினார்க்கினியர், சோமசுந்தர பாரதியார் போன்றோரின் கருத்துப்படி ஒழுக்க மயக்கத்தைத் தொல்காப்பியர் அகத். நூற்பா பதினான்கில் கூறியிருப்பதாக வைத்துக்கொண்டால் அகத். நூற்பா பதினைந்தில் 'உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே' என்ற நூற்பா வழி, உரிப்பொருள் மயங்காத் தன்மையை உறுதியாக அடுத்த நூற்பாவிலே கூறியிருக்க முடியாது. முந்தைய நூற்பாவில் உரிப்பொருள் மயக்கத்தினை முன்வைத்துப் பிந்தைய நூற்பாவில் உரிப்பொருள் மயங்காது என்று தொல்காப்பியர் எப்படி கூறியிருக்க முடியும்?

ஒரு செய்யுளில் உரிப்பொருளுக்கு இருக்கும் முக்கியத்துவத்தை உணர்ந்தே, தொல்காப்பியர் உரிப்பொருள் மயக்கம் இல்லை என்கிறார். உரிப்பொருள் மயக்கம் அடையும் என்று உரையாசிரியர்கள் கூறும் கருத்து ஏற்கத் தக்கது அல்ல.

'திணை மயக்குறுதலும் கடிநிலை யிலவே' என்ற அடிக்கு வெவ்வேறு விளக்கங்களை உரையாசிரியர்கள் தந்தாலும், 'நிலம் மயங்காது' என்ற கருத்தை அனைவரும் ஏற்றுக் கொள்கின்றனர். எனவே அகத். நூற்பா பதினான்கின் வழி, முதற்பொருளில் நிலம் மயங்காது என்றும், பொழுதுகள் மயங்கி வரும் என்பதும் தெளிவாகிறது.

அடுத்து அகத். நூற்பா பதினைந்தில் உரையாசிரியர்களின் விளக்க விவாதங்களைக் காண்போம். "உரிப்பொருள் அல்லன மயங்கவும் பெறுமே" இந்நூற்பாவிற்கும் உரையாசிரியர்கள் வெவ்வேறு விளக்கங்களைத் தருகின்றனர். இதற்கு இளம்பூரணர் தரும் விளக்கம் மட்டுமே ஏற்புடையதாக அமைகிறது. "உரிப்பொருள் அல்லாத முதற்பொருளும் கருப்பொருளும் மற்றொரு திணையோடு சேர நிற்கவும் பெறும்" என்ற இவரின் கருத்து மட்டுமே பொருந்தி

அமைகிறது. நச்சினார்க்கினியர், புலவர் குழந்தை, அருணாசலம் பிள்ளை போன்ற மூவரின் கருத்தும் இந்நூற்பாவிற்குப் பொருந்தவில்லை. இவர்கள் மூவரின் கருத்தும் ஒன்றே.

"உரிப்பொருள் என்று ஓதப்படும் ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும், பெருந்திணையும் நால்வகை நிலத்தும் மயங்கவும் பெறும்" என்று நச்சினார்க்கினியரும்,

"உரிப்பொருள் அல்லாதனவாகிய கைக்கிளையும் பெருந்திணையும் உரிப்பொருள் எனப்படும் அகன் ஐந்திணைகளுக்கு உரியவாகிய மேல் ஓதப்பட்ட நிலங்களிலும், காலங்களிலும் மயங்கிவரவும் பெறும்" என்று அருணாசலம் பிள்ளையும்,

"உரிப்பொருள் ஆகிய ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும், பெருந்திணையும், ஐந்திணைக்குக் கூறிய நிலம் பொழுதுகள் மயங்கி வரவும் பெறும்" என்று புலவர் குழந்தையும் விளக்கம் தருகின்றனர்.

அக ஒழுக்கங்கள் ஏழனுள் உரிப்பொருள் இருக்கின்ற ஐந்திணையும் அல்லாத கைக்கிளையும் பெருந்திணையும், நால்வகை நிலமான காடு மலை கடல் வயல் போன்றவற்றின் மயக்கம் பெற்று வரும் என்பது இவர்களின் கருத்து. தனக்கென நிலமும் ஒழுக்கமும் கூறப்படா நிலையில், கைக்கிளையும் பெருந்திணையும் எவ்வாறு நிலங்கள் கூறப்பட்ட ஐந்திணைகளில் மயங்கும்?

ஐந்திணைகளில் வந்து மயங்குதல் இல்லாமல், கைக்கிளையும், பெருந்திணையும் தத்தமக்கு உள்ளே மயக்கம் பெறும் என்று கூறுவதும் பொருத்தமற்ற கருத்தாகும். ஏனெனில் ஐந்திணைகளில் முதல், கரு, உரிப்பொருட்கள் இருப்பதைப்போல, கைக்கிளைப் பெருந்திணைகளுக்கு மூன்று பொருட் பிரிவுகள் இல்லை. ஆகவே இக்கருத்தும் பொருந்தாது.

மேலும் ஐந்திணைகளான குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை போன்றவற்றின் இலக்கணத்தை முதலில் கூறிப் பிறகு இவற்றின் மயங்கும் நிலையைக் கூறும் தொல்காப்பியர், கைக்கிளைப் பெருந்திணைகளின் இலக்கணம் கூறாமல் அவற்றின் மயக்க நிலையை இடையில் எப்படி கூறியிருக்க முடியும்?

ஆக உரிப்பொருள் மயக்கமே இல்லை என்பது தொல்காப்பியம் வழி உறுதியாகப் புலப்படுகிறது. உரிப்பொருளின் சிறப்பு நிலை கருதியே உரிப்பொருள் மயங்காது என்பதைத் தொல்காப்பியர் உறுதிபடுத்துகிறார். ஏனெனில் முதல் கருப்பொருட்கள் இன்றியும் பாடல்கள் அமையும், ஆனால் உரிப்பொருள் இன்றி பாடல் இயற்றுவது புலவரின் மரபல்ல.

மு. இராகவையங்கார் தம் தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சியில், "அகப்பொருள் பற்றிய பாடல்களின் உரிப்பொருளாகிய புணர்தல் பிரிதல் ஒழுக்கங்கள் இல்லாமல் பாடப்படுமாயின் பொருட்பயன் இல்லாததாகக் கருதப்படும்" என்று விளக்குவதன் மூலம் அகப்பாடல்களில் உரிப்பொருளின் இன்றியமையாமையினை வெளிப்படுத்துகின்றார். இறுதி நிலையில் கருப்பொருட்கள் மயக்கம் பெறுவதைத் தொல்காப்பியர் விளக்குகிறார்.

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலப் பொழுதோடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்"

கருப்பொருட்களின் மயக்க நிலையைப் பற்றித் தொல்காப்பிய உரையாசிரியர்கள் இடையே எவ்விதக் கருத்து மாறுபாடும் இல்லை. ஒரு நிலத்திற்குரிய கருப்பொருள் மற்றொரு திணைக்கு வந்தாலும், அது வந்த திணைக்குரிய கருப்பொருளாகவே கருதப்படும் என்ற கருத்தை அனைத்து உரையாசிரியர்களும் ஏற்றுக் கொள்கின்றனர் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

முடிவாக ஒரு செய்யுளில் முதற்பொருளில் நிலமும், உரிப்பொருளும் எப்பொழுதும் மயங்குதல் இல்லை என்பதும் முதற்பொருளின் பொழுதும், கருப்பொருளும் மயங்கி வரும் என்பதும் தொல்காப்பிய நூற்பாக்களின் வழி உறுதியாக உணர்த்தப்பட்டுள்ளது. தொல்காப்பியக் கருத்து இவ்வாறாக அமைந்து இருப்பதால், நிலம் உரிப்பொருளை வைத்தே ஒரு பாடலின் திணை பகுக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

மூன்று பொருட்களும் தத்தமக்குரிய நிலையில் சிறந்து நிற்றல்

ஒரு பாடலில் கூறப்பட்ட பொருளை நாடும்பொழுது, தொல்காப்பியர் கூறிய திணைக்கொள்கை. திணை மயக்கக் கொள்கை இவற்றைப் பொருந்திய நிலையில், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றும் தத்தமக்குக் கூறப்பட்ட முறையால் சிறந்து நிற்க வேண்டும். அப்பொழுதுதான் பாடலின் உண்மைப்பொருளை அறிய முடியும் என்ற கருத்தை,

"முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே
நுவலுங் காலை முறைசிறந் தனவே
பாடலுட் பயின்றவை நாடுங் காலை" (தொல்.அகத். நூ.3)

என்ற நூற்பா மூலம் தொல்காப்பியம் உணர்த்துகிறது. ஆனால் இளம்பூரணர் இந்நூற்பாவிற்கு வேறுபட்ட விளக்கம் தருகிறார். "சான்றோர் செய்யுளகத்துப் பயின்ற பொருளை ஆராயுங்கால், முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என்ற மூன்றுமே முறைமையாற் சிறந்தன" என்று விளக்கம் தருகிறார். அதாவது ஒரு பாடலில் கூறப்பட்ட திணையை அறிய, முதலில் முதற்பொருள் வழியாகக் கருப்பொருளுக்கும், கருப்பொருள் வழியாக உரிப்பொருளுக்கும் சென்று திணை அறியப்பட வேண்டும் என இளம்பூரணர் விளக்கம் அமைகிறது. நச்சினார்க்கினியர், சோமசுந்தர பாரதியாரும் இக்கருத்தையே தந்துள்ளனர்.

ஒரு செய்யுளுக்குரிய திணையை அடையாளம் காண்பது மயங்காப் பொருட்களை வைத்தே என்பது அனைவரும் அறிந்த ஒன்று. ஆகவே உரிப்பொருள், முதற்பொருளின் நிலம் இவற்றை முதன்மைபடுத்தி, அதன்வழி கருப்பொருளை அடைந்து திணை வகுக்கப்படவேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து. அப்படிப்பட்ட நிலையில் நூற்பா மூன்றிற்கு இளம்பூரணர் போன்றோரின் கருத்து எவ்வகையில் பொருந்தும்?

இளம்பூரணர் நச்சினார்க்கினியர் கருத்துப்படி முதலில் முதற்பொருளை ஆய்வது ஓரளவு பொருந்தும். ஏனெனில் முதற்பொருளில் ஒன்றான நிலம்

மயங்காத் தன்மை உடையது. ஆகவே அதன்வழி திணை அறியப்படலாம். அடுத்து முதற்பொருள் இல்லையேல், கருப்பொருள் வழியே திணையை நாம் அறியலாம் என்ற இளம்பூரணர் கருத்து எவ்வகையில் பொருந்தும்? கருப்பொருள் முழுவதுமே மயங்கும் தன்மை உடையன என்று தொல்காப்பியர் உறுதியகாக் கூறுகிறார். ஆக மயக்கம் அடையும் தன்மையை உடைய கருப்பொருள் திணையை எப்படி முடிவு செய்யும்?

உரிப்பொருள் மயங்காத் தன்மை உடையது என்று இலக்கணம் கூறிய தொல்காப்பியர், மயங்கும் தன்மை உடைய கருப்பொருளின் மயங்காத் தன்மை உடைய உரிப்பொருளுக்கு வந்து திணை அறியப்படலாம் என்ற கருத்தைக் கூறியிருப்பாரா? அவர் கூறியிருக்க மாட்டார். எனவே, நூற்பா மூன்றிற்கு இளம்பூரணர் தரும் விளக்கம் ஏற்க முடியாதது. முதல், கரு, உரிப்பொருள் என்ற மூன்றும் தத்தமக்குரிய சிறப்புடன் இருக்க வேண்டும், அதன் வழியிலே பாடலின் பொருள் உணரப்பட வேண்டும் என்ற கருத்தே இந்நூற்பா மூலம் தொல்காப்பியரால் கூறப்பட்டிருக்கும் என்பது உறுதியாகிறது.

மயக்கம் என்ற சொல்லிற்குத் தொல்காப்பியரின் புரிதல்:

பொதுவாக 'மயக்கம்' என்ற சொல்லிற்குப் பல வகையான விளக்கம் தரலாம். ஆனால் தொல்காப்பியர் 'மயக்கம்' என்ற சொல்லிற்கு எத்தகைய பொருளைக் கையாண்டார் என்பது,

"எந்நில மருங்கிற் பூவும் புள்ளும்
அந்நிலப் பொழுதோடு வாரா வாயினும்
வந்த நிலத்தின் பயத்த ஆகும்." (தொல்.அகத். நூ.21)

என்ற நூற்பாவழி புலனாகின்றது. அதாவது தொல்காப்பியர் ஐந்திணைகளின் மூன்று பொருட்களான முதல், கரு, உரிப்பொருட்களில், கருப்பொருளின் மயக்கத்தை மட்டுமே தெளிவாக விளக்கி நூற்பாவினை அமைத்துள்ளார்.

இந்த நூற்பா மூலமாக மட்டுமே தொல்காப்பியர் மயக்கத்திற்குத் தரும் விளக்கத்தை நாம் அறிய முடியும். நூற்பா 21-இல், ஒரு திணைக்கே உரிமை உடைய கருப்பொருட்கள், மற்ற திணைக்கு உரிமையாகச் செய்யுளில் வந்தால், அக் கருப்பொருட்கள் வந்த திணையின் கருப்பொருட்களாகவே கொள்ளப்படும் என்ற பொருள் தொல்காப்பிய உரைகளின் வழி நமக்குக் கிடைக்கிறது. இதுவே கருப்பொருள் மயக்கத்திற்குத் தொல்காப்பியரின் விளக்கமாகப் புலப்படுகிறது.

இந்தக் கருப்பொருள் மயக்கத்தை உணர்த்தும் நூற்பா மூலம் 'மயக்கம்' என்பதற்குத் தொல்காப்பியர் கருதிய பொருளை நாம் அறிய முடியும். குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்ற அன்பின் ஐந்திணைகளுக்கும் முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் மூன்றும் எந்தெந்த நிலைகளில் அமைய வேண்டுமென, தொல்காப்பியம் திணைக் கொள்கை வகுத்துள்ளது என்று இவ்வியலில் முன்பே குறித்தோம். அந்த வகையில் ஒரு திணைக்குரிய மூன்று பொருட்கள் உரிமையுடைய திணைக்கு வராமல் வேறொரு திணைக்குச் செய்யுளில் வந்தால் அதுவே மயக்கம் என்பது தொல்காப்பியரின் நூற்பா 21இல்

கருப்பொருள் மயக்கம் அடையும் நிலையை வைத்துப் பொருள் புரிய முடிகிறது. எனவே தொல்காப்பியர் வழி மயக்கம் என்பது ஒரு திணைக்குரிய கருப்பொருட்களும் முதற்பொருளில் பொழுதுகளும் மற்றொரு திணைக்கு விரவி வருவதே ஆகும் என்பது தெளிவாக அறிய முடிகிறது.

கலித்தொகை - தொல்காப்பிய திணைக்கொள்கை பொருந்தாத் தன்மை

முதற்பொருளில் நிலமும், உரிப்பொருளும் அக இலக்கியங்களில் மயக்கம் பெற்று வருவது எந்நிலையிலும் இல்லை என்பது தொல்காப்பியம் முன்வைக்கும் கருத்து. மேலும் கருப்பொருள் முழுவதும், முதற்பொருளில் பொழுதும் மயக்கம் பெறும் என்று தொல்காப்பியர் மறைமுகமாக முன்வைக்கிறார்.

இவ்வாறாகத் தொல்காப்பியம் கூறிய திணைக் கொள்கையானது கலித்தொகைப் பாடல்களுக்குப் பொருந்தி வருகிறதா? இல்லையா? என்பதைக் கலித்தொகை 70-ஆம் பாடல்வழி இக்கட்டுரையில் முன்நிறுத்தப்படுகிறது.

மருதமும், நெய்தலும் மயங்கிய தன்மை

மணிநிற மலர்ப்பொய்கை மகிழ்ந்தாடும் அன்னம், தன்
அணிமிகுசேவலை அகல்அடை மறைத்தெனக்,
கதுமெனக் காணாது கலங்கி, அம்மடப் பெடை
மதி நிழல் நீருள்கண்டு, அதுஎன உவந்து ஓடித்,
துன்னத் தன் எதிர் வரூஉம் துணைகண்டு, மிகநாணிப்
பன் மலரி டைப்பு கூஉம் பழனம்சேர் ஊர! கேள்:
நலம் நீப்பத் துறந்து எம்மை நல்காய் நீவிடுதலின்
பலநாளும் படாதகண் பாயல் கொண்டு இயைபவால்;
துணை மலர்க் கோதையார் வைகலும் பாராட்ட
மண மனைத் ததும்பும் நின்மண முழவந்து எடுப்புமே.
அகல நீ துறத்தலின், அழுது ஓவா உண்கண் எம்
புதல்வனை மெய்தீண்டப் பொருந்துதல் இயைபவால்;
நினக்குஒத்த நல்லாரை நெடுநகர்த் தந்து, நின்
தமர் பாடும் துணங்கையுள் அரவம்வந்து எடுப்புமே.
வாராய் நீ துறத்தலின், வருந்திய எமக்கு ஆங்கே
நீர் இதழ் புலராக் கண் இமைகூம்ப இயைபவால்;
நேர் இழை நல்லாரை நெடுநகர்த் தந்து நின்,
தேர்பூண்ட நெடுநன்மான் தெண்மணி வந்து எடுப்புமே.
எனவாங்கு,
மெல்லியான் செவிமுதல், மேல்வந்தான் காலை போல்
எல்லாம் துயிலோ எடுப்புக- நின் பெண்டிர்
இல்லின் எழீஇய யாழ் தழீஇ, கல்லாவாய்ப்
பாணன் புகுதராக் கால்.

(கலித்தொகை. 70)

இப்பாடலில் மருதத்திற்குரிய நில வர்ணனையும், நெய்தல் நிலத்திற்குரிய இரங்கல் ஒழுக்கமும் வந்து தொல்காப்பியர் வகுத்த திணைக்கொள்கையை மீறியுள்ளன. இப்பாடலில் முதல் ஆறு அடிகளில் வயல்வெளியின் இயல்பு தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அதாவது,

"பழனம்சேர் ஊர!"

என்ற அடி வந்து வயல்கள் நிறைந்த ஊரை உடைய தலைவன் என்ற பொருள் நமக்குப் புலப்படுத்துகிறது.

இப்பாடலானது 23 அடிகளை உடையது. முதல் ஆறு அடிகள் தவிர்த்து மற்றைய அடிகளில் தலைவியானவள் தலைவனைப் பிரிந்ததால் அதாவது, தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தால் இரங்கி நிற்கும் நிலையே தோழி கூற்றாக இப்பாடலில் இடம்பெறுகிறது. தலைவியின் இரங்கல் ஒழுக்கம் தோழி வாயிலாக இப்பாடலில் இடம்பெறுகிறது.

தலைவனின் பிரிவால் மிகுந்த துயருற்ற தலைவியானவள் தளர்ச்சி மிகுதியாகத் துயிலாத தன்னுடைய கண்களை வைத்து, சற்றே துயிலச் சென்றபொழுது, பரத்தையர்கள் தலைவனைப் பாராட்டுதலால் எழும் மணமுரசின் ஒலி தூக்கத்தைக் கலைத்துவிட்டதென்றும், தலைவனின் பிரிவால் துயருற்ற கண்கள், புதல்வன் மெய் தீண்டுதலால் உற்ற மெய்ம்மயக்கத்தால் துயிலச் சென்ற பொழுது அத்தூக்கத்தைப் பரத்தையரோடு தலைவன் ஆடும் துணங்கைக் கூத்தின் ஆரவாரம் கலைத்து விட்டதென்றும், தலைவனின் பிரிவால் துயருற்ற கண்கள், சற்றே துயில எண்ணிய பொழுது, தேரில் பூட்டிய குதிரைகளின் மணியோசை வந்து அவ்வுறக்கத்தைக் கலைத்து விட்டதென்றும் தலைவி வருந்திய நிலையில் அமைந்த அடிகளே பாடலில் பெரும்பான்மை அடிகளில் காணப்படுகின்றன.

மேலும், படைவலிமை இழந்து மிகவும் வருந்திய நிலையில் இருக்கும் மன்னனின் காதுகளில், பிறநாட்டுப் படை வந்து முற்றுகை இட்டுப் பாசறையில் எழுப்பும் ஒலியானது எழும்பி துன்புறுத்துவதைப் போல, தலைவிக்கு, மணமுரசு, துணங்கை ஒலி, குதிரை மணி போன்றவற்றின் ஒலிகள் துன்பப்படுத்தின என்று பாடல் கருத்தை முன்வைக்கிறது.

"மணமனைத் ததும்பும் நின்மணமுழவந்து எடுப்புமே
துணங்கையுள் அரவம்வந்து எடுப்புமே
தேர்பூண்ட நெடுநன்மான் தெண்மணி வந்து எடுப்புமே"

இவ்வாறாக முழுவதுமே தலைவனின் பிரிவால் தலைவி இரங்கி நிற்கும் நிலையே பாடலின் ஒழுக்கமாக வெளிப்படுகிறது. ஆனால், பாடலில் கூறப்பட்ட நில வர்ணனையானது மருதநிலத்திற்குரிய வயல்வெளியை முன்வைக்கிறது.

மேலும், பாடலின் இறுதிக் கருத்தும் தலைவியின் இரங்கலையே நமக்குக் காட்டுகிறது. யாழை மிடற்றும் தொழில் அன்றி வேறு எதையும் அறியாத பாணன், பரத்தையின் வீட்டில் வாசித்த யாழையே தன் தெருவிலும் மீட்டுகிறான். இவனுடைய இச்செயலானது மணமுரசு, குதிரைமணி, துணங்கை ஒலி இவற்றைவிட மிகுந்த துன்பத்தைத் தரும் வகையில் அமைந்துள்ளது. எனவே அப்பாணன், இங்கு வராமல் இருக்க வேண்டும் என்று தோழி, தலைவியின் மிகுந்த வருத்தத்தை முன்வைப்பதாகப் பாடல் முடிகிறது. எனவே, இத்தகைய கருத்தும் தலைவியின் மீளாத் துயரையே முன்வைக்கின்றது என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

"........................நின்பெண்டிர்
இல்லின் எழீஇய யாழ் தழீஇக், கல்லாவாய்ப்
பாணன் புகுதராக்கால்.."

தொல்காப்பியம், அகப்பாடலில், நிலத்திற்கேற்ற உரிப்பொருளும், உரிப்பொருளுக்கு ஏற்ற நில வர்ணனைகளும் அமைய வேண்டுமெனத் திணைக்கொள்கை வகுத்துள்ளது. அதன் அடிப்படையில் கலித்தொகையின் பாடல்கள் பெரும்பான்மை பொருந்தி வரவில்லை என்பதற்கு மேற்கூறிய பாடல் சிறந்த சான்றாக அமைகிறது.

முடிவுரை

இவ்வாறாகப் பல்வேறுபட்ட நிலைகளில் தொல்காப்பியம் வகுத்த அகக் கோட்பாடானது அக இலக்கியங்களில் மீறிய நிலையில் உள்ளது. இப்படிப்பட்ட நிலையில் தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் பிரிக்க முடியா நிலையில் அமையும் இலக்கண இலக்கியங்கள் என்று நோக்கும் நோக்கு தவறானது என்பதைச் சுட்டிக் காட்டுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

காலக்கணிப்பு - தமிழ்மரபும் ஐரோப்பியமரபும்

திருமதி க. நீலாம்பிகை
இலங்கை

மனித செயற்பாடுகளில் பருவகாலம் மிக முக்கியமான அம்சமாகும்.

*முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்
இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே*

எனும் சூத்திரத்தின் மூலம் தொல்காப்பியரும் முதற் பொருட்களில் ஒன்றாகப் பருவகாலத்தைக் குறிப்பிடுகின்றார்.

இவ்விதம் மனிதவாழ்வுடன் ஒன்றாகக் கலந்து அவனது வாழ்வில் ஆதிக்கம் செலுத்தும், அதேவேளை மனிதனால் எவ்விதத்திலும் கட்டுப்படுத்த இயலாத, பருவகாலம் தொடர்பான கணிப்பீடுகள் நாகரீகத்துக்கு நாகரீகம், காலத்திற்குக் காலம் அளவுவகுதிகள், ஒழுங்கு, எண்ணிக்கை என்பவற்றில் வேறுபட்டு வந்துள்ளன.

உரோம சாம்ராச்சியத்தின் ஆரம்பத்தில் (Romulus, 700 BC) மார்ச், ஏப்ரல், மே, யூன், குவாணன்டிலஸ், செக்ஸ்டிலஸ், செப்ரம்பர், ஒக்ரோபர், நவம்பர், டிசம்பர் எனும் பத்து மாதங்களே இருந்தன. முதல் நான்கு மாதங்களும் கிரேக்க, உரோம ?தெய்வங்களான Mars, Aphrodite, Maia, Juno வையும் 5வது மாதத்திலிருந்து 10வது மாதம் வரை ஒழுங்கு நிலையையும் குறிப்பிட்டன. அத்துடன் இப் பத்து மாதங்களும் மொத்தம் 304 நாள்களை மட்டுமே கொண்டிருந்தன.

நவீன எண்	இலத்தீன் மொழி	மாத ஒழுங்கு	மாதப் பெயர்
5	Quinque	5வது மாதம்	Quintilis
6	Sex	6வது மாதம்	Sextilis
7	Septem	7வது மாதம்	September
8	Octo	8 வது மாதம்	October
9	Novem	9 வது மாதம்	November
10	Decem	10 வது மாதம்	December

கி.மு. 713 ஆம் ஆண்டளவில் 2ஆம் உரோமச்சக்கரவர்த்தி Numa Pompilius? 11வது மாதமாக ஜனவரியையும் 12வது மாதமாகப் பெப்ரவரியையும் சேர்த்துக் கொண்டார். இப்பன்னிரண்டு மாதங்களும்கூட மொத்தம் 355 நாள்களை மட்டுமே கொண்டிருந்தன.

கி.மு. 1ஆம் நூற்றாண்டில் (கி.மு. 46) ஜூலியஸ் சீசரினால் (Julius Caesar) ஆண்டின் முதல் மாதம் மார்ச்சிலிருந்து ஜனவரிக்கு மாற்றப்பட்டது. அத்துடன்

இக்காலப்பகுதியில் Julius Caesar, Augustus Caesar ஆகியோரின் பெருமையை வெளிப்படுத்த 5வது மாதம் ஜூலை எனவும் 6வது மாதம் ஆகஸ்ட் எனவும் மாற்றப்பட்டது. இந்தக் காலண்டர் ஆண்டு 365 நாள்களைக் மட்டுமே கொண்டிருந்தது.

கி.பி. 1582 இல் 13வது போப்பாண்டவர் கிரகோரி (Pope Gregory XIII) என்பவரால் லீப் வருடம் (Leap Year) அறிமுகப்படுத்தப்பட்டது. இந்தக் ?கலண்டர் முறையே ஆண்டுக்கு 365.2425 நாட்களை கொண்டிருந்தது.

அதன் பின் ஜூலியன் கலண்டர் (Julian Calendar) குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவுமின்றி இன்றுவரை தொடர்கின்றது. சுருங்கக் கூறின் ஐரோப்பிய ஆண்டுக் கணிப்பு முறைமை சந்திரன் (Lunar) சார்ந்ததாகத் தொடங்கிப் பின்னர் படிப்படியான திருத்தங்கள் மூலம் சூரிய (Solar) முறையை ஒத்ததாக மாறியுள்ளது.

இதே சமயம் முற்றாகச் சூரிய (Solar) முறையிலான பழந்தமிழரின் காலக் கணிப்பீட்டைப் பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தின் மூலம் அறியலாம்.

காரும் மாலையும் முல்லை, குறிஞ்சி
கூதிர் யாமம் என்மர் புலவர்

இச் சூத்திரத்திற்கு நச்சினார்கினியர்

''காலவுரிமையெய்திய ஞாயிற்றுக்குரிய சிங்கவோரை முதலாகத் தண்மதிக்குரிய கடக வோரையீறாக வந்து முடிந்துணை ஓர் யாண்டாமாதலின், அதனை இம்முறையானே அறுவகைப்படுத்து இரண்டு திங்கள் ஒரு காலமாக்கினர்" என உரை எழுதியுள்ளார்.

அதாவது சூரியன் தனக்குரிய மனையாகிய சிம்மவோரையில் சஞ்சரிக்கும் கார்காலத் தொடக்கமாகிய ஆவணி மாதத்திலிருந்து சந்திரனின் மனையாகிய கடகவோரையில் சஞ்சரிக்கும் முதுவேனிற் கால இறுதியாகிய ஆடிமாதம் வரை ஓர் ஆண்டாகும். இங்கு இரு மாதங்கள் ஒரு காலமாக (பெரும்பொழுது) 12 மாதங்களும் ஆறு காலங்களாக வகுக்கப்பட்டுள்ளன.

ஓர் ஆண்டு ஆறு பெரும் பொழுதுகளாக வகுக்கப் பட்டிருப்பதைப் போல் ஒரு நாள் பத்து நாழிகைகளைக் கொண்ட (4 மணித்தியாலம்) காலை, நண்பகல், ஏற்பாடு, மாலை, யாமம், வைகறை எனும் ஆறு சிறு பொழுதுகளாகவும் வகுக்கப் பட்டுள்ளதாக நச்சினார்க்கினியர் கூறியுள்ளார்.

தொல்காப்பிய ஆறு பெரும் பொழுது ஒழுங்கு பின்வருமாறு:

காலம்	மாதம்
கார் காலம்	ஆவணி, புரட்டாசி
கூதிர் காலம்	ஐப்பசி, கார்த்திகை
முன்பனிக் காலம்	மார்கழி, தை
பின்பனிக் காலம்	மாசி, பங்குனி
இளவேனில் காலம்	சித்திரை, வைகாசி
முதுவேனில் காலம்	ஆனி, ஆடி

பின்னர் ஆண்டின் முதற்காலம் கார்காலத்திலிருந்து இளவேனிற் காலத்திற்கு மாறியமைக்கு ஆரியச் செல்வாக்கு காரணமாக இருந்திருக்கலாம். ஏனெனில் சங்க

இலக்கியங்களெல்லாம் காதலர் கூடும் காலமாகக் கார்காலத்தையே குறித்து நிற்கின்றன. பாலைக் கலி மாத்திரம் இளவேனிற் காலத்தில் காதலன் வரவை எதிர்நோக்கும் தலைவி பற்றியதாகும். இளவேனிலைக் காதலுக்குரியதாகப் போற்றும் மரபு வடமொழிக்குரியது என அறவாணன் (1976) குறிப்பிட்டுள்ளார். வசந்த ருதுவின் அழகைக் காளிதாசன் ருது சம்காரமாக வருணித்துள்ளதாகக் கூறப்பட்டள்ளது. எனினும் சிலப்பதிகாரத்தில் இளவேனிற் காலத்தில் வசந்தவிழா (இந்திரவிழா) நடைபெறுவதைக் குறிப்பிட்டுள்ளதால் சிலப்பதிகாரக் காலத்திற்கு முன்னரே ஆண்டுத் தொடக்கம் கார்காலத்திலிருந்து இளவேனிற் காலத்திற்கு மாற்றப்பட்டிருக்கலாம்.

ஞாயிற்று (சூரிய அல்லது Solar) முறையிலான தமிழரின் காலக்கணிப்பீட்டைக் கில்பேட் சிலேட்டரின் (Gilbert Slater, *1864-1938*) கருத்தும் உறுதிப்படுத்துகின்றது. அவர்

> "தமிழ் ஆண்டுத் தொகுப்பு முறை (பஞ்சாங்கங்கள்) ஆராய்ச்சிக்கு நல்ல தூண்டுதல் தரத்தக்கதாக உள்ளது. இம்முறையில் இரண்டு முறைகள் வழங்குகின்றன. ஒன்று சமயம் சார்ந்தது. மற்றொன்று வாழ்க்கைத்துறை சார்ந்தது. சமயம் சார்ந்த ஆண்டுத் தொகுப்பு முறை தெலுங்குப் பஞ்சாங்கம் உட்பட எல்லா ஆசியப் பஞ்சாங்கங்கள் போலவே மதிமுறை சார்ந்தது. இதுபற்றித் தனிப்படக்கூற எதுவுமில்லை. ஆனால் சமயஞ்சாராத ஆண்டுத் தொகுப்பு ஞாயிற்றுச் சார்பானது மட்டுமன்றி முழு நிறை முறையிலேயே ஞாயிற்று வழியால் அமைவது. அது மேனாட்டு முறைபோல் மதிய முறைப்படி முதலில் கணிக்கப்பட்ட மாதத்தை ஞாயிற்று முறைப்படி கணித்த ஆண்டுடன் பிற்காலத்தில் கொண்டு ஒட்டவைத்த முறையல்ல. சற்றும் மட்டுமழுப்பல் இல்லாமல் அது வியக்கத்தக்க வகையில் முனைத்த ஞாயிற்று முறையாய் உள்ளது. ஏனெனில் அது ஒரு மாதத்தை இத்தனை முழு நாட்கள் என்று கூட வகுப்பதில்லை. வான் மண்டலாம் 12 மனையகங்களாகப் பிரிக்கப்பட்டள்ளது. ஞாயிறு ஒரு மனையகத்தில் புகு நேரம் காலையாயினும் சரி நண்பகலாயினும் சரி இரவாகினும் சரி அந்தக் கணக்கிலேயே மாதம் பிறக்கின்றது. நாட்களும் ஞாயிற்று எழுச்சியுடன் தொடங்குகின்றன. உலகில் இத்தனியுயர் சிறப்பிற்குரிய ஆண்டுக்கணிப்புமுறை திராவிடர்க்கு எப்பொழுது ஏற்பட்டது என்று எவரேனும் காலவரையறை கண்டுணர்ந்ததாக எனக்குத் தெரியவில்லை"

எனக் குறிப்பிட்டுள்ளார்.

நடைமுறையில் சிலேட்டரின் கருத்து ஏற்கக்கூடியதாக உள்ளது. பிராமணியம் சார்ந்த நிகழ்வுகள் அனைத்தும் மதிசார்ந்தவைகளாக அமைந்துள்ளன. அமாவாசையிலிருந்து (பூர்வபட்ச) அல்லது பௌர்ணமியிலிருந்து (அமரபட்ச), பிரதமை, துதியை, திருதியை, சதுர்த்தி, பஞ்சமி, சஷ்டி, சப்தமி, அட்டமி, நவமி, தசமி, ஏகாதசி, துவாதசி, திரியோதசி, சதுர்த்தசி எனும் திதிகளிலேயே சமயம் சார்ந்த நிகழ்வுகள் நிகழ்கின்றன.

மேலும் தைப்பூசம், மாசிமகம், பங்குனி உத்தரம், சித்திரைச் சித்திரை என ஒவ்வொரு மாதமும் பௌர்ணமியுடன் தொடர்புபட்ட நிகழ்வுகளும் சிவராத்திரி, நவராத்திரி, தீபாவளி எனும் சமய நிகழ்வுகளும் மதி சார்ந்தவையே.

எனினும் தைப்பொங்கல், புதுவருடம், ஆடிக்கூழ் போன்ற வைபவங்கள் ஒவ்வொருவருடைய வீடுகளிலும் பிராமணியத் தொடர்பற்றுக் கொண்டாடப் படுகின்றன. இவை முற்று முழுதாகச் சூரிய முறையில் அமைந்தவையாகும்.

கார்காலம் ஆண்டின் தொடக்கமாக இருந்திருக்கலாம் என்பதைத் தமிழிலிருந்து பிரிந்த பண்டைய சேரநாட்டு (கேரளம்) காலக்கணிப்பீடு வெளிப்படுத்துகின்றது. மலையாள மக்கள் சூரிய முறையில் அமைந்த மாதங்களையே பிரயோகிக்கின்றனர். சூரியன் தனது வீடாகிய சிம்மவோரையில் சஞ்சரிக்கும் காலம் ஆண்டின் முதல் மாதமான சிம்மம் என அழைக்கப்படுகின்றது. அதேபோலத் தொடரும் ஓரைகள் மாதங்களின் பெயர்களைக் கொண்டுள்ளன. அதாவது சிம்மம், கன்னி, துலாம், விருச்சகம், தனு, மகரம், கும்பம், மீனம், மேடம், இடபம், மிதுனம், கடகம் என்பன மலையாள மாதங்களாகும். எனினும் மலையாள மக்களின் முக்கிய விழாவான ஓணம் பண்டிகை சிம்ம (ஆவணி) மாதத்தில் சந்திரனடிப்படையில் நிகழ்கின்றது. அம்மாதத்தில் வரும் அத்த நட்சத்திரத்தில் தொடங்கும் விழா சித்திரை, சுவாதி, விசாகம், அனுசம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம் எனத் தொடர்ந்து 10ஆம் நாள் விழா திருவோணம் நட்சத்திரத்தில் ஓணம் பண்டிகையாகக் கொண்டாடப்படும்.

மேலும் கார்காலம் என்பது ஆரியத் தொடர்புக்கு முந்தையது என்பதைப் பேராசிரியர் கைலாசபதியின் "ஒப்பியல் இலக்கியம்" எனும் நூலிலிருந்து அறியலாம். அவர் ஒப்பியல் ஆய்வு எங்ஙனம் அமையவேண்டும் என்பதை ஜோர்ஜ் எல். ஹார்ட் (George L.Hart) எனும் அமெரிக்க ஆய்வாளரின் "தமிழிலக்கியத்திலும் இந்தோ-ஆரிய இலக்கியத்திலும் கார்காலம்" எனும் ஒப்பியற் கட்டுரை மூலம் எடுத்துக்காட்டுகின்றார். தமிழ், பாகவதம், சமஸ்கிருதம் ஆகிய மொழிகளிற் காணப்படும் கார் காலத்தைப்பற்றிய அகப்பொருட்களை ஒப்புநோக்கி அவற்றின் ஒற்றுமை வேற்றுமைக்குக் காரணங்களைக் காட்டித் தமிழிலிருந்தே கார்காலம் பற்றிய கருத்து வடமொழிக்குச் சென்றிருக்கவேண்டும் எனத் தக்கபடி விளக்கியுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் சூரிய எழுச்சியுடன் ஒவ்வொரு தினமும் ஆரம்பிப்பதுடன், சூரியன் ஒரு மனையிற் பிரவேசிக்கும் போது மாதங்கள் பிறப்பதுவும் மட்டுமல்லாது, சனி (Saturn), ஞாயிறு (Sun), திங்கள் (Moon), செவ்வாய், புதன், வியாழன், வெள்ளி எனக் கிழமை நாள்களும் கிரகங்களின் பெயர்களாலேயே குறிப்பிடுவதும் தமிழரின் காலக்கணிப்பீட்டு முறைமையுள் அடங்கும். ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆரியபட்டாவே (Aryabhata) இந்திய நவீன சோதிடத்தின் தந்தையாகக் கருதப்படுகின்றார். ஆனால் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர், வேயுறுதோளிபங்கன் எனும் தேவாரத்தில் "ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி சனி பாம்பிரண்டு முடனே" எனக்

குறிப்பிட்டுள்ளார். இதிலிருந்து இரண்டு விடயங்களை ஊகிக்கலாம். முதலாவது, 6ஆம் நூற்றாண்டுக்கு முன் தமிழர் கிரகங்களைப்பற்றி அறிந்திருக்கலாம். இரண்டாவது, கெடுதலைக் கொடுக்கும் இராகு, கேது என்பன கிரகங்கள் அல்ல என்பதாகும். தற்போது தமிழர் பயன்படுத்தும் காலக்கணிப்பீடு கி.பி. 785ல் கனிஸ்கன் (Kanishka) அல்லது சாலிவாகனனால் (Shalivahana) உருவாக்கப்பட்டதாகக் கருதப்படுகின்றது. இது 60 ஆண்டு முறையாகும்.

இந்த 60 எனும் எண்ணக்கரு,

60 தற்பரை	=	1விநாடி
60 விநாடி	=	1நாடி [நாழிகை]
60 நாடி	=	1நாள்

எனும் தமிழரின் கணிப்பீட்டிலிருந்து பெறப்பட்டிருக்கலாம்.

எனவே மேற்கூறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பின்வரும் விடயங்களை ஊகிக்கலாம்.

1. ஐரோப்பியர் பத்து மாதங்களைப் பன்னிரண்டு மாதங்களாக மாற்றியமைக்கு தமிழ் ஆண்டுக் கணிப்புமுறை காரணமாயிருக்கலாம்.
2. ஐரோப்பியர் ஆண்டின் தொடக்கத்தை மார்ச் மாதத்திலிருந்து ஜனவரி மாதத்திற்கு முன் தள்ளியமைக்குத் தமிழர் கார்காலத்திலிந்து இளவேனிற் காலத்திற்கு முன் தள்ளியமை காரணமாயிருக்கலாம். (2 மாதம், 2 காலம்)
3. தொல்காப்பியக் காலம் 2ஆம் உரோமச் சக்கரவர்த்தியின் காலத்திற்கு முற்பட்டதாகும். அதாவது 2700 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகும்.
4. பண்டைய தமிழர் சூரிய முறையில் அமைந்த ஆண்டு முறையைக் கொண்டிருந்தனர் (Solar Calendar).
5. 12 மாதங்களை 12 ஓரைகள் எனக் குறிக்கும் வழக்கு தமிழிலிருந்து உலகம் அறிந்திருக்கலாம்.

தமிழ்மொழியின் முதல் அச்சு நூல்: தம்பிரான் வணக்கம் - ஒரு நோக்கு

திருமதி. றூபி வலன்ரீனா பிரான்சிஸ்
முதுநிலை விரிவுரையாளர்
மொழித்துறை
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

அறிமுகம்

போர்த்துக்கேயரின் வர்த்தக மற்றும் சமய நடவடிக்கைகள் பரவலாகிய 16ம் நூற்றாண்டில் இந்தியாவில் அச்சுக்கலையின் தோற்றமும் ஏற்பட்டது. விவிலியக் கருத்துக்களையும் செபங்களையும் அறியச் செய்யவும், கல்வியறிவைப் பெருக்கவும் அச்சுக்கருவிகள் இங்கு பயன்படுத்தப்பட்டன.

இந்தியாவில் கோவாவில் 1556இல் முதல் அச்சகம் ஏற்படுத்தப்பட்டது. அங்கு இலத்தீனிலும், போர்த்துக்கேய மொழியிலும் வெளியீடுகள் இடம்பெற்றன. கொல்லத்தில் தமிழ் அச்சு எழுத்துக்கள் உருவாக்கப்பட்டு 1578தொடக்கம் நூல்கள் அச்சிடப்பட்டன.

தமிழ் அச்சுத்துறையில் கிறிஸ்தவத் துறவிகளின் முன் முயற்சிகள் குறிப்பிடத்தக்கவை. இவ்வகையில் கார்த்திலா (1554), தம்பிரான் வணக்கம் (1578), கிறிஸ்தியானி வணக்கம் (1579) ஆகிய மூன்று நூல்கள் முக்கியம் பெறுகின்றன.

கார்திலா என்னும் நூல், (நூலின் பெயர் : Cartilha e lingoa Tamil e portugues கார்த்தீயா ஏங் லிங்குவா தமுல் ஏ போர்த்துக்கேஸ்-'தமிழ்மொழியிலும் போர்த்துக்கேயத்திலும் அமைந்த திருமறைச் சிற்றேடு' என்பது இதன் பொருளாகும்.) 38 பக்கங்களைக் கொண்டது.இந்நூல் 1554இல் இலிஸ்பனில் வெளியிடப்பட்டது. ஒரு கிறிஸ்தவன் தன் மீட்பிற்காக அறிய வேண்டுவனவற்றை இந்நூல் கூறுகின்றது. முத்துக்குளித்துறை என அக்காலத்தில் அழைக்கப்பட்ட தூத்துக்குடிப் பகுதியிலிருந்து வின்சன்ட் நசரேத், ஜோர்ஜ் காவல்கோ மற்றும் தாமஸ் குரூஸ் ஆகிய மூவரும் போர்த்துக்கல் மன்னனான 3ஆம் ஜோர்ஜ் மன்னனின் உத்தரவின்படி இலிஸ்பன் நகருக்கு அழைக்கப்பட்டதாகவும் அங்கு இந்நூல் இவர்களின் ஒத்துழைப்புடன் வெளியிடப்பட்டதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

கறுப்பு, சிவப்பு ஆகிய இரு வண்ணங்களில் அமைந்திருந்த இந்நூல் பற்றித் தமிழ்த்தூது என்னும் தமது நூலில் தனிநாயகம் அடிகள் வருமாறு கூறுகின்றார்.

"தமிழ் நூல்கள் பதினேழு பதினெட்டாம் நூற்றாண்டுகளிலேதான் அச்சேறின என்று பலர் நம்பி வருகின்றனர். ஆயினும் தமிழ்மொழிதான் இந்திய மொழியில் முதன்முதல் அச்சினைக் கண்ட மொழி. 1554இல் இலிஸ்பன் மாநகரில் இலத்தீன் மொழிகளைக் கொண்ட தமிழ்ச் செபங்களை ஒலி பெயர்த்த நூல் ஒன்றினை அச்சிட்டனர். அதில் ஒரு வரி தமிழ் ஒலி வடிவைக் காட்ட மற்றொரு வரி போர்த்துக்கீசிய மொழியின் பொருளைக் குறிக்க மூன்றாவது வரி தமிழ்ச் சொல்லிற்கு நேராகிய போர்த்துக்கீசியச் சொல்லைத் தருகின்றது. இவ்வாறு மும்மூன்று வரிகளாகவும் இரு நிறங்களிலும் அச்சிடப்பெற்றஅழகிய அந்நூல் ஐரோப்பிய அச்சுக் கலைக்கே அணியாய் விளங்குகின்றது".

இந்நூல், தமிழ் எழுத்துக்களைக் கொண்டு அச்சிடப்படாமல் தமிழ்ச்சொற்கள் போர்த்துக்கேய எழுத்துக்களில் ஒலிபெயர்த்து எழுதப்பட்டமை இங்குச் சுட்டத்தக்கது. (ஒலி வடிவம் தமிழ்: வரி வடிவம் போர்த்துக்கேயம்) 1554இல் அச்சிடப்பட்ட இந்நூலை 1954இல் அதாவது நான்கு நூற்றாண்டுகளுக்குப் பின்னர் போர்த்துக்கல் நாட்டின் இலிஸ்பன் நகரில் அடிகள் கண்டறிந்து வெளிப்படுத்தினார்.

அடுத்தது தம்பிரான் வணக்கம் என்னும் நூலாகும். Doctrina christam என்ற தலைப்பில் (கிறிஸ்துவப் படிப்பினை) மார்க்கோஸ் ஜோர்ஜ் அடிகள் போர்த்துக்கேய மொழியில் எழுதிய நூலை ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகளும் பீற்றர் மனுவேல் அடிகளும் இணைந்து மொழிபெயர்த்தனர். தம்பிரான் வணக்கம் என மொழிபெயர்ப்பாளர்களால் இது குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நூல் கேரளத்திலுள்ள கொல்லம் என்னும் ஊரில் 1578இல் அச்சிடப்பட்டது. இது 16 பக்கங்களையுடையது. இதன் ஒரேயொரு பிரதியாக அப்போது ஹவார்ட் பல்கலைக்கழக நூலகத்தில் பாதுகாக்கப்பட்டிருந்த பிரதியின் ஒளிப்படப்பிரதியைத் தனிநாயகம் அடிகள் பெற்று அது பற்றி கட்டுரைக் எழுதியபோதுதான் தமிழகம் இந் நூலைப் பற்றி அறிந்தது. இந்தியாவில் அச்சேறிய முதல் தமிழ் நூலாகக் (தமிழ் வரிவடிவம்) கிடைக்கப்பெற்றுள்ள இந்நூலை வெளிக் கொணர்ந்த பெருமை அடிகளையே சாரும்.

அடுத்தது கிறிஸ்தியானி வணக்கம் என்னும் நூலாகும். 1579 இல் கொச்சியில் ஹென்றிக் ஹென்றிக்கஸ் அடிகளால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு அச்சிடப்பட்ட இந்நூலின் ஆசிரியரும் மார்க்கஸ் ஜோர்ஜ் அடிகள் ஆவார். இதுவும் போர்த்துக்கேய மொழியிலேயே எழுதப்பட்டது. கிறிஸ்தவத்தின் அடிப்படை உண்மைகளை வினா விடை வடிவில் இது கூறுகின்றது. 122 பக்கங்களைக் கொண்ட இந்நூலின் பிரதி பிரான்சிலுள்ள சொர்போன் பல்கலைக்கழக நூலகத்திலிருந்து தொலைந்ததாகவும் ஏற்கெனவே எடுக்கப்பட்ட ஒளிப்படப்பிரதியினைத் தூத்துக்குடி ஆயர் ரோச் ஆண்டகையிடமிருந்து பெற்று எடுக்கப்பட்ட பிரதியினை ஹவார்ட் பல்கலைக்கழகத்திற்கு அடிகளே கொடுத்துப் பிரதிகள் எடுக்கச் செய்தார் எனவும் அறிய முடிகின்றது.

நோக்கம்

இந்திய மொழிகளில் முதலில் அச்சிடப்பட்டது தமிழ்மொழி நூல் என்பதை உலகிற்கு அறியச் செய்தவர் தனிநாயகம் அடிகள். அவரது நூற்றாண்டினை நினைவு கூரும் இவ்வாண்டில் அவரது முயற்சியின் பயனாக வெளிக் கொணரப்பட்ட தமிழ் அச்சு வடிவில் (வரிவடிவம்) வெளிவந்த முதன் நூலாகிய 'தம்பிரான் வணக்கம்' என்னும் நூலின் முக்கியத்துவத்தை வெளிக்கொணருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும். இதன் மூலம் தனிநாயகம் அடிகளின் அளப்பெரும் பணியின் சிறப்பையும்மதிப்பிட முடியும்.

தம்பிரான் வணக்கம்

தமிழில் நூல்களை அச்சிடும் பணியில் முன்னோடியாக இருந்தவர் ஹென்றிக் ஹென்றிக்கஸ்(போர்த்துக்கேய மொழியில் Antrique Andriquez என எழுதப்படும். தமிழில் அண்டிறிக் எனவும் இவர் குறிப்பிடப்படுவார்.) அடிகள் ஆவார். இவர் தமிழ்க் கற்றுக் கொண்ட முதல் ஐரோப்பியர் எனவும் முதல் தமிழ் அச்சகத்தை நிறுவியவர் எனவும் முதல் தமிழ் அச்சு நூலை மொழிபெயர்த்துடன் முதலில் பதிப்பித்தார் எனவும் சிறப்பிக்கப்படுபவர். 1556இல் போர்த்துக்கல்லிலிருந்து அச்சியந்திரம் இந்தியாவிற்கு அனுப்பட்டது. இதனைப் பயன்படுத்திக் கொல்லத்தில் சீனத்துத் தாளில் இந்நூல் 1578இல் அச்சிடப்பட்டது.

தம்பிரான் என்னும் சொல் பொதுவாகச் சைவ மடத்துத் துறவியைக் குறிக்கப் பயன்படுத்தப்படும் சொல்லாகும். கடவுள் அல்லது இறைவன் எனவும் இதற்குப் பொருளுண்டு. அரச மற்றும் பெரும் நிலக் கிழார்களையும் குறிக்கும் சொல்லாக இச்சொல் மலையாளத்தில் பயன்படுத்தப்படுவதாகக் கூறுவர். பெண்பால் தம்புராட்டி. கடவுள் என்ற பொருளிலேயே அண்டிறிக் அடிகள் பயன்படுத்தியுள்ளார்.

அடிகளாருக்குப் பின் 17ஆம் நூற்றாண்டில் தத்துவப் போதக (டி நொபிலி) சுவாமி தம்பிரான் என்ற சொல்லை நீக்கி விட்டுச் சர்வேஸ்வரன் என்ற சொல்லைப் பயன்படுத்தினார்.

அட்டைப்படம்

தம்பிரான் வணக்கத்தில் காணப்படும் அட்டை ஓவியம் 8ஓ10 செ.மீ அளவுடையது. கடவுள் பரலோகத்தில் வீற்றிருக்கின்றார். அவரது வலது பாகத்தில் அவரது குமாரனான இயேசுக் கிறிஸ்து. இவ்விருவருக்கும் மேலே நடுவில் புறா வடிவத்தில் தூய ஆவியானவர். கிறிஸ்தவத்தின் அடிப்படை விசுவாசமாகிய திரித்துவத்தின் வெளிப்பாடுகளாகப் பிதா, சுதன், தூய ஆவி ஆகிய மூவரையும் இதிற் காணலாம். பிதாவும், சுதனும் உலகின் மீது கருணையுள்ளவர்கள் என்பதைக் குறிப்பிடும் முகமாக அதன் மீது தம் கைகளை வைத்துள்ளனர். பூமியின் மேல் சிலுவைக் குறி. இது கிறிஸ்துவால் பூவுலகு மீட்கப்பட்டதன் குறியீடு.

தம்பிரான் வணக்கம்

கீழே பக்த அடியார்கள். அவர்கள் தம் கைகளில் குருத்தோலைகளை ஏந்தியிருக்கின்றார்கள். குருத்தோலை வெற்றியினதும் மகிழ்ச்சியினதும் கடவுளைப் போற்றுதலினதும் வெளிப்பாடுகளாக இன்றும் கிறிஸ்தவர்களால் எண்ணப்படும் சின்னமாகும். இயேசுக் கிறிஸ்து பாடுகள் படுவதற்கு முன் ஜெருசலேம் நகர வீதிகளில் இராஜாவாக நினைவுகூரப்பட்டு அந்நகர மக்களால் 'ஓசான்னா' பாடி வாழ்த்தி வரவேற்கப்பட்டு ஊர்வலமாக அழைத்து வரப் பட்டபோது குருத்தோலை களை (ஒலிவ மரக்கிளை) அவர்கள் ஏந்தியபடி வந்தமை விவிலியத்தில் குறிப்பிடப் படுகின்றது. (யோவான்: 12:13) உயிர்ப்பு ஞாயிற்றிற்கு முன் வரும் ஞாயிற்றுக் கிழமையைக் குருத்தோலை ஞாயிறாகக் கிறிஸ்தவர்கள் கொண்டாடுவது வழக்கம்.

இவை அட்டை ஓவியத்தின் விளக்கமாகும். இவ்வோவியம் அதற்கு முன் வெளியான நூல் எதனிலும் காணப்படாமையும் 1588இலும் 1590இலும் வெளியான இரு நூல்களில் பயன்படுத்தப் பட்டிருந்ததாகவும் குறிப்பிடப்படுகின்றது. இவ்வோவியத்திற்கு மேலேயுள்ள பகுதியில் நூலின்பெயர் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது.

Doctrina Chistam
En Lingua Malaur Tamul

இதுபோர்த்துக்கேய மொழியிலான தலைப்பாகும். டாக்றினா கிறிஸ்தம் - ஏ லிங்குவா மலபார் தமுழ் -ஓவியத்தின் கீழே நூலின் மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் கீழே வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளன.

கொம்பஞ்ஞிய தே சேசூ வகையில் அண்டிறிக் பாதிரியார் தமிழிலே பிறித்தெழுதின தம்பிரான் வணக்கம் (நூலில் மெய்யெழுத்துக்கள் புள்ளியிடப்

படாமல் எழுதப்பட்டுள்ளன.) கொம்பஞ்ஞிய என்பது அணி என்னும் பொருளைத் தருவது. இயேசு சபையைச் சேர்ந்த அண்டிறிக் பாதிரியாரால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட (பிறித்தெழுதின) தம்பிரான் வணக்கம் என இதனைக் கூறலாம்.

கொம்பஞ்ஞியோ (கொ என்னும் எழுத்திலுள்ள ஒற்றைக் கொம்பு ஸீ அலங்கார எழுத்தாகப் பெரிய அளவில் இடப்பட்டுள்ளது.

இந்நூலில் சில சொற்கள் அவை தமிழ் அல்லவென்று அறிவதற்கு வு என்னும் குறியீடு சொல்லின் முன்னும் பின்னுமாக இடப்பட்டிருக்கின்றது.

2ஆம் பக்கத்தில்போர்த்துக்கேய மொழியில் நூலின் விபரம் உள்ளது. நூல் அச்சான ஆண்டு கூ ரு ள எ ய அ என இடப்பட்டுள்ளது. லத்தீன் எண் அமைப்பில் அது கீழ் வருமாறு குறிப்பிடப்படும். ஆ னு டிஓஓ ஏஐஐஐ அதாவது ஆ ஸ்ரீ1000: னு ஸ்ரீ 500: டு- 50: ஓ 10 ஏஐஐஐ- 8 ஆகவே ஆண்டு வருமாறு அமையும் 1000+500+50+10+10+8 ஸ்ரீ 1578.

> 3ஆம் பக்கம் றிநடடழ குவீயெட என்னும் தலைப்போடு 'சுத்தமான குருசின் அடையாளத்தால் எங்கள் சத்துருக்கள் எங்கள் மேல் வராமல் காத்துக் கொள் எங்கள் தம்பிரானே பிதாமகன் சுத்தமான இசுபீரித்து நாமத்தினாலே - ஆமென்-' என்று தொடங்குகின்றது. இது தற்போது பின்வருமாறு செபிக்கப் படுகின்றது.
>
> 'அர்ச்சியஸ்ட சிலுவை அடையாளத்தினாலே எங்கள் சத்துருக் களிடத்தினின்றும் எங்களை இரட்சித்துக் கொள்ளும். எங்கள் சர்வேஸ்வரா பிதா சுதன் தூய ஆவியின் பெயராலே ஆமென்.

16 பக்கங்களுடைய இந்நூலில் 18 தலைப்புக்கள் இடம்பெற்றிருக்கின்றன.

உள்ளடக்கம்

விசுவாசப் பிரமாணம், பத்துக் கட்டளைகள், திருச்சபைக் கட்டளைகள், பரலோக மந்திரம், அருள்நிறை மந்திரம், பாவ மன்னிப்புச் செபம், விசுவாச சத்தியங்கள், திருச்சபையின் திருச்சடங்குகள், பெரும் பாவங்கள், பாவங்களுக்கு எதிரான நன்மைகள், இரக்கம் கொள்ளல், ஆத்தும நன்மைகள், ஐம்புலன்கள், இறையியல் ஒழுக்கம், ஆத்துமத்தின் பகைவர்கள், இறுதியானவை, பாக்கியங்கள் (எட்டுப் பேறுகள்) ஆகியன அடங்குகின்றன.

பதினாறாம் பக்கம் தமிழ் அச்செழுத்து அட்டவணை இடம்பெற்றுள்ளது. இது தமிழ் அச்செழுத்தின் வரலாற்றுத் தொடக்கத்தை வெளிப்படுத்துவதாகும். கோவாவில் உண்டாக்கின எழுத்து என முதல்வரி தமிழிலும் அடுத்த வரியில் அதே செய்தி போர்த்துக்கேய மொழியிலும் இடம்பெற்றுள்ளது. பத்தாம் வரியில் அதே செய்தி போர்த்துக்கேய மொழியில் கொல்லத்தில் உண்டாக்கின எழுத்து என்றும் பதினோராம் வரியில் அதே செய்தி தமிழிலும் எழுதப்பட்டுள்ளது. இருபத்து மூன்றாம் வரியில் தமிழ் எண் வரிசை க, உ, ங, ச, ரு, உ, ய, ள, என எழுதப்பட்டுள்ளது.(1, 2, 3,4, 5, 6, 7, 8, 9, 10, 100, 1000.)

இறுதிவரி (24ஆம்வரி) போர்த்துக்கேய மொழியில் ஆமென் என நிறைவுறுகின்றது. ஒவ்வொரு பக்கத்திலும் 24 வரிகள் இடம்பெற்றிருக்கின்றன.

அண்டிறிக் அடிகள் இம் மொழிபெயர்ப்பில் அரிய தமிழ்ச்சொற்களையும், பேச்சுத் தமிழ்ச் சொற்களையும் பயன்படுத்தியுள்ளார். அதேவேளை போர்த்துக்கேய சொற்களைத் தமிழ் ஒலியமைப்பிலும் பயன்படுத்தியுள்ளார்.

சில உதாரணங்களைப் பார்க்கலாம்.

அ) போர்த்துக்கேய சொற்கள்

சுத்தமான இகிரேசையின் சக்கிறமெந்துகளாவது ஏழு *(பக்: 10)*

முதலாவது வவுத்தீசுமு
இரண்டாவது கிரிசிமாரித்தல்
மூன்றாவதுசாந்துசக்கிறமேந்து
நாலாவதுகொம்பெசாரித்தல்
அஞ்சாவது எசித்திரேமவுஞ்சாம்
ஆறாவது ஓடுதேன்
ஏழாவது மத்திரிமோனியு

இங்கு அடையாளமிடப்பட்டவை போர்த்துக்கேய சொற்கள். இகிரேசை என்பது திருச்சபையையும் சக்கிறமெந்து என்பது அருள் அடையாளங்களையும் குறிக்கும். இவ்விடயம் தற்காலத்தில் கீழ்வருமாறு வழங்கும்.

திருச்சபையின் அருள் அடையாளங்கள் (தேவ திரவிய அனுமானங்கள் என முன்னர்க் குறிப்பிடப்பட்டது)

திருமுழுக்கு
உறுதி பூசுதல்
தேவ நற்கருணை
பாவ சங்கீர்த்தனம்
நோயில்பூசுதல்
குருத்துவம்
திருமணம்

ஆ) பேச்சுவழக்குச் சொற்கள்

கற்பனை - கட்டளை, ஆயித்து - ஆயுள், இலட்சிக்க - இரட்சிக்க, ஆற்புமம் - ஆத்துமம், காய்மகாரம் - பொறாமை, தெண்டித்தல் - முயற்சித்தல், தவனம் - தாகம்

இ) அரிதான தமிழ்ச் சொற்கள்

உடு கூறை - உடுக்கும் ஆடை
மறுமுக நோக்கு - மோக பாவம்

வடசொற்களையும் அவர் பயன்படுத்தியுள்ளார். உ-ம்: மோக்கிஷம், சம்பூரணம், இராச்சியம் ஆகியன. நூலில் மெய்ப்புள்ளிகள் அரிதாகவே

இடப்பெற்றுள்ளன. பெரும்பாலனவற்றிற்குப் புள்ளிகள் இடப்படவில்லை. முற்றுப் புள்ளி இடப்பட்டுள்ளது.சொற்களுக்கு இடையில் இடைவெளி விடப்படவில்லை. ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்ட முறைமையை ஒத்துள்ளது. அருள்நிறை மந்திரம் செபம்இவ்வாறு அமைந்துள்ளது.

கிறாசைநிறைநதமரியாளேதம்பிரானு
னனையிளடசிககரததாவுனனிடததி
லெபெண்சாதிகளிலசசுததமானவளநீயே
வுனனுடையவயிறறிலககனியாகியசெ
சூவுஞசுததமானமரியாளத
மபிரானுடையமாதாவெபிழையாளிக
ளாயிருககிறவெங்களுககுவெணடிய
பொதுமெஙகளவதிகாலததிலுமஇரநது
கொள- ஆமென-

கிறாசை நிறைந்த மரியாளே தம்பிரானுன்னை இலட்சிக்க. கர்த்தர் உன்னிடத்திலே. பெண் சாதிகளில் சுத்தானவள் நீயே. உன்னுடைய வயிற்றில் கனியாகிய இயேசுவுஞ்; சுத்தமானது. சுத்தமான மரியாள் தம்பிரானுடைய மாதாவே பிழையாளிகளாயிருக்கிற எங்களுக்கு வேண்டி இப்போதும் எங்கள் இறுதிக் காலத்திலும் இரந்து கொள் - ஆமென்.

இதன் தற்போதைய வடிவம்

அருள் நிறைந்த மரியே வாழ்க. ஆண்டவர் உம்முடனே. பெண்களுக்குள் ஆசீர்வதிக்கப்பட்டவள் நீரே. உம்முடைய திரு வயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசீர்வதிக்கப்ாட்டவரே. அர்ச்சிஸ்ட மரியாயே சர்வேஸ்வரனுடைய மாதாவே பாவிகளாயிருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் மரண வேளையிலும் வேண்டிக் கொள்ளும் - ஆமென்.

மதிப்பீடு

தம்பிரான் வணக்கம் என்னும் நூல் கி.பி. 16ஆம் நூற்றாண்டின் தமிழ் உரைநடைப் போக்கை அறிந்து கொள்வதற்கு ஆதாரமாக உதவுகின்றது; மொழி அமைப்பினை அறிய உதவுகின்றது, அச்சுக் கலையின் வரலாற்றை அறிய வழி செய்கின்றது, மொழி பெயர்ப்பின் வளர்ச்சி குறித்த அறிதலுக்குத் துணை செய்கின்றது கத்தோலிக்கச் சமயத்தின் புதிய கலைச் சொற்கள் பலவற்றை அறிமுகம் செய்துள்ளது. கிறிஸ்தவ சமய வழிபாட்டு முறைகளில் குருக்கள் கூறும் செபங்களுக்குப் பதில் செபங்களாகக் கிறிஸ்தவ அடியார்கள் சொல்ல வேண்டிய செபங்களைத் தமிழில் அச்சிட்டு வழங்கியதன் மூலம் இதுவரை இந்தியாவில் காணப்படாத புதிய வழிபாட்டு முறைக்கு இந்நூல் வழிகோலியது; பேச்சுவழக்குச் சொற்கள் மூலம் மொழியியல் ஆராய்ச்சிக்கு உதவுகின்றது. எல்லாவற்றிற்கும்

மேலாக 16ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த மக்களின் வாழ்வியலையும் கிறிஸ்தவம் இந்த நூற்றாண்டில் பரப்பப்பட்டபோது எதிர்கொண்ட சவால்களையும் புற நிலையில் நின்று தேடுவதற்கு ஊக்குவிக்கின்றது.

> "அவரது புத்தகங்கள் (அவர் இயற்றியனவும் மொழிபெயர்த்தனவுமான நூல்கள் இங்குக் குறிப்பிடப்படுகின்றன) கிறிஸ்தவர்களின் கைகளில் மட்டுமல்லாது உள்நாட்டு இந்துக்களின் கைகளிலும் உள்ளன. இவர்கள் இவற்றைக் கண்டு அவற்றின் அச்சுத் திறனை மட்டுமல்லாது அந்தப் புத்தகங்களில் உள்ள புதிய கருத்துக்களையும் அவற்றில் புதைந்துள்ள புதிர்களையும் எண்ணி வியக்கிறார்கள். அவற்றைக் கவிஞர்கள் உரைநடையில் விளக்கி எழுதுகிறார்கள்."

என அண்டிறிக் அடிகளின் மறைவின் பின்னர் (1600) அவர்குறித்து இயேசு சபை ஆண்டு மடலில் 1601 இல் எழுதப்பட்ட வாசகங்களை நோக்கும் போது இந்நூலின் முக்கியத்துவம் புலனாகும்.

இது சமய நூலாக இருப்பினும் அதற்கும் மேலாகத் தமிழ் உலகில் தமிழ் வரி வடிவத்தில் வெளிவந்த முதலாவது நூலாக அடையாளப்படுத்தப்படுவதும் இந்திய மொழிகளில் தமிழ்மொழியிலேயே முதல் நூல் அச்சிடப்பட்டது என்ற பெருமையைப் பெறுவதும் காலத்தால் அழியாத வரலாற்றுப் பதிவுகளாகும். இப் பதிவினைப் பெறுவதற்கு இந்நூலைக் கண்டு பிடித்து வெளிப்படுத்திய தனிநாயகம் அடிகள் காரணமாக இருந்தார் என்பது பெருமை சேர்க்கும் விடயமாகும்.

துணை நூல்கள்

- தமிழ்நாடன், தமிழ்மொழியின் முதல் அச்சுப் புத்தகம். 2001, செட்டியார் பதிப்பகம், சேலம்.
- சிவசுப்பிரமணியன், தமிழ் அச்சுத் தந்தை அண்ட்றிக் அடிகளார், 2003, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
- தனிநாயகம் அடிகள், தமிழ்த்தூது, 2001, தவத்திரு தனிநாயகம் அடிகள் தமிழ் மன்றம், நெடுந்தீவு, இலங்கை.
- தனிநாயக அடிகள், ஒன்றே உலகம், 1974, தே நொபிலி ஆராய்ச்சி நிலையம், சென்னை.

நாட்டுப்புற விளையாட்டுகளும் பண்பாடும்

முனைவர் ஆ. பாப்பா
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
டோக் பெருமாட்டி கல்லூரி
மதுரை , தமிழ்நாடு, இந்தியா

சிறுவர் முதல் பெரியவர் வரை அனைவரும் விரும்பியாடுவது விளையாட்டாகும். விளையாட்டாவது விரும்பியாடும் ஆட்டு என்கிறார் பாவாணர் (1962:5). மனிதனின் வெளிப்பாட்டு நடத்தைகளுள் விளையாட்டும் ஒன்று. இது மானுட உயிர்கள் எல்லாவற்றிற்கும் பொது. பண்பாடுகள் எல்லாவற்றிலும் வெளிப்படையாகவே நிகழ்வது அது. விளையாட்டுகள் பொதுவாக மகிழ்வுக்காக என்றே சொல்லப்பட்டு வருகிறதெனினும் அவை உள்ளார்ந்த பொருண்மையை உள்ளடக்கியவையாக அமைந்துள்ளன. அப்பொருண்மையில் தமிழ்ச் சமூகத்தின் பண்பாடும் அடக்கம். பண்பாட்டுக்கூறுகளை உள்ளடக்கியிருப்பது ஒருபுறமிருக்க விளையாடுவதன் மூலமாக ஒரு சிறுவன் அல்லது சிறுமி தன் பண்பாட்டை அறிந்தும், தெரிந்தும் கொண்டு அப்பண்பாட்டோடு இணைந்து வாழக் கற்றுக்கொள்கிறான்(ள்) என்பதும் கவனத்தில் கொள்ளவேண்டியதாக இருக்கிறது. அவ்வகையில் தமிழர் விளையாட்டுகள் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளையும் கற்றலையும் இணைந்து எடுத்துரைப்பதை இக்கட்டுரை நோக்கமாகக் கொண்டுள்ளது. இக்கட்டுரையின் மூலங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ள விளையாட்டுகளும் அவை தொடர்பான தகவல்களும் தமிழகத்தின் ஊர்ப்புறங்களில் களஆய்வின் மூலம் கட்டுரையாளரால் சேகரிக்கப்பட்டவையாகும்.

பண்பாடு - வரையறை

மானிடவியல் அறிஞரான ரூத்பெனடிக்ட் ஒரு குழந்தை பண்பாட்டைக் கற்றுக்கொள்ளுதல் குறித்துப் பின்வருமாறு வரையறை செய்கிறார்.

> “ஒரு பண்பாட்டுச் சூழலில் வாழும் மனிதனின் நடவடிக்கைகளிலும் சிந்தனைகளிலும் பண்பாட்டுக்கூறுகள் தேங்கியிருக்கும். குழந்தை பிறக்கின்றபொழுது பண்பாட்டுச் சார்பில்லாததாக விளங்கும். பின்னர்ச் சமூகத்தின் பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளைப் பெற்றோர்கள் குழந்தைக்கு உருவாக்கித் தருகிறார்கள். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ளவேண்டிய அவசியம் அக்குழந்தைக்கு ஏற்படுகிறது. விதிமுறைகளின் மூலமாகப் பெற்றோர்கள் குழந்தைகளைப் பயிற்றுவிப்பதும், பெரிய குழந்தை, சிறிய

> *குழந்தைகளை வழிநடத்துவதும், ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிப்பதும், தட்டிக் கொடுப்பதும் எனப் புதிய பரம்பரை உருவாக அவர்களுடைய சமூகத்தை நிலைநிறுத்துகிறார்கள்" (மொபின்னுதின் ராஸ் :1976,4)*

ரூத்பெனடிக்டின் வரையறையில் விதிமுறைகள் என்று பொதுவாகக் கூறியிருப்பதால் எத்தகைய விதிமுறைகள்? எந்தமாதிரியான சூழ்நிலையில்? எவ்வாறு? யாரால் கடைப்பிடிக்கப்படும்? என்பது போன்ற விளக்கங்கள் இல்லையெனினும் இவ்வரையறையை அடிப்படையாகக் கொண்டு நாட்டுப்புற விளையாட்டுக்களின் மூலமாகக் கற்றுக்கொள்ளப்படும் பண்பாட்டின் கூறுகளை விளக்கலாம். ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களைக் குழந்தை கற்றுக்கொள்வது அவசியம். அவற்றைக் கற்றுக்கொள்ளும் களங்களில் விளையாட்டுக்களும் அடங்கும். விளையாட்டுகளின் பண்பாட்டுக்கூறுகளை, அதன் அம்சங்களை வெளிப்படையாகப் பார்க்கமுடியாது. புதைபொருள் நிலையிலேயே பார்க்கமுடியும்.

உறவுமுறைத்திருமணம் (Cross Cousin marriage)

தமிழ்ப் பண்பாட்டில் உறவுமுறை அடிப்படையிலான திருமணம் மிகவும் முக்கியமாகக் கடைபிடிக்கப்பட்டு வருகின்ற பழக்கமாகும்.

> *"தமிழர் உள்ளிட்ட திராவிடச் சமூகங்களில் தாய்மாமன், தந்தையின் சகோதரி, (அத்தை) ஆகியோரின் மகள்களை, மகன்களை முறையே 'முறைப்பெண்கள்', 'முறைப்பையன்கள்' என்று உரிமை கொண்டாடி அவர்களை மணக்கும் 'முறைமணம்' ஓர் அடிப்படையான திருமணமுறையாகும். இம்மணமுறை கொண்டு - கொடுத்தலை அடிப்படையாகவும், பரஸ்பர உறவை மையமிட்டதாகவும், மணஉறவைக் காலந்தோறும் போற்றிப் பேணவேண்டியதையும் வலியுறுத்துகிறது"*

என்கிற பக்தவத்சல பாரதியின் வரிகள் தமிழரின் உறவுமுறை அடிப்படையிலான திருமணத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன (2008:78). பெரியவர்கள் குழந்தைப் பருவத்திலேயே உறவுமுறைத் திருமணம் பற்றிய அறிவைப் புகுத்திவிடுகின்றனர். இதுவே விளையாட்டாகவும் வெளிப்படுகிறது. அதாவது உறவுமுறை அடிப்படையிலான திருமணம், அதன் அவசியம், அத்தகைய உறவுமுறைக்குரியவரின் பெயர் ஆகியவற்றைக் குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே அறிந்துகொண்டு அத்தகையதொரு திருமணத்திற்குத் தங்களைத் தயார்படுத்திக் கொள்கின்றனர்.

சான்று : வெத்தலக்கட்டு பிடியாத - என்கிற விளையாட்டு

இந்த விளையாட்டினிறுதியில் ஓடுபவர்கள் ஒருவர் நிற்பவரின் கைகளுக்கிடையில் பிடிபட்டவுடன் அவரிடம் சிறுவனாக இருப்பின் 'உன் பெண்டாட்டி பேரென்ன' என்றும் சிறுமியாக இருப்பின் 'உன் புருஷன் பேரென்ன' என்று கேட்டு அவர் ஒரு பெயரைக் கூறிய பிறகே வெளியில் அனுப்பப்படுகிறார்.

இதே விளையாட்டு வலையபட்டி என்னும் ஊரில் விளையாடப்பட்டபொழுது கைகளுக்கிடையில் பிடிபட்டவரிடம் 'உன் முறைமைக்காரப் பெயரைச் சொல்லு' என்றே கேட்கப்பட்டது. கச்சைகட்டி என்னும் ஊரில் ஒரு சிறுவனுக்குத் திருமண உறவுடைய பெண்ணே இல்லை என்பதால் இந்தக் குறிப்பிட்ட விளையாட்டிற்கு மட்டும் அச்சிறுவன் சேர்த்துக்கொள்ளப்படவில்லை.

இச் சான்றுகளை விளையாட்டு என்று ஒரு பனுவலாக (Text) மட்டும் பார்த்தால் சாதாரணமாகத் தோன்றும். ஆனால் குழந்தை விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது சுற்றிநின்று பார்க்கின்ற பெரியவர்களின் தலையீடு களால் உறவுமுறை அடிப்படையிலான திருமணம் மக்களிடையே முக்கியத்துவம் பெற்றிருப்பதை உறுதிப்படுத்த முடிகிறது.

பெற்றோர்களும் பெரியவர்களும் குழந்தைகள் விளையாடும் விளையாட்டிற்கு முக்கியத்துவம் தருகின்றனர். அதாவது விளையாடுகின்றபோது குழந்தைகள் செய்யும் தவறுகளை அருகிலிருந்து திருத்துகின்றனர். குறிப்பாக வெத்தலகட்டு பிடியாத விளையாட்டு விளையாடப்படும்பொழுது பெரியவர்கள் அனைவரும் கூடிவிடுகின்றனர். சிறுவர்களால் கூறப்படும் உறவுமுறைப் பெயர்களைத் தெரிந்து கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். குழந்தைகள் பெயர் தெரியாமல் விழித்தால் உறவுமுறையுடையவரின் பெயரைச் சொல்லித் தருகின்றனர்.

வண்ணாம்பாறைப்பட்டி என்னும் ஊரில் ஒரே சாதியினர் மட்டும் வாழும் பகுதியில் இந்த விளையாட்டு சேகரிக்கப்பட்டபொழுது திருமண உறவுடையவரின் பெயரைக்கூறுவது முக்கியமானதாகக் கருதப்பட்டது. மற்றவர்கள் சிறுவர்கள் கூறப்போகும் பெயரை ஆர்வமுடன் எதிர்பார்த்திருந்தனர்.

மேற்குறிப்பிட்ட செய்திகளின் மூலம் பண்பாட்டில் வேரூன்றியிருக்கும் உறவுமுறை அடிப்படையிலான திருமணத்தின் முக்கியத்துவத்தையும் அது இன்றும் மாறாமலிருப்பதையும் அறியமுடிகிறது. பெரியவர்களின் ஈடுபாடே இதற்குக் காரணமாகின்றது. பெரியவர்கள் வீட்டில் வேலையாக இருந்தாலும் சில குறிப்பிட்ட விளையாட்டுகளுக்கும் சில விளையாட்டுகளின் குறிப்பிட்ட பகுதிகளுக்கும் முதனிலைப் பார்வையாளர்களாகிவிடுகின்றனர். சில நேரங்களில் இவை போன்ற விளையாட்டுகளை விளையாடச் சொல்லி வேடிக்கை பார்க்கின்றனர். எனவேதான் சில விளையாட்டுகள் இன்று வரை மாறுபாட்டிற்குட்படாமல் இருக்கின்றன. சிறுவர்கள் திருமண உறவுடையவரின் பெயரைக் கூறுகின்றபொழுது அடைகின்ற வெட்கமும் கூச்சமும் அவர்கள் திருமணம் பற்றிய முழுமையான அறிவைப் பெற்றிருக்கிறார்கள் என்பதைப் புரிந்துகொள்ள வைக்கிறது.

அகமணம் (Endogamy)

நமது பண்பாட்டின் திருமணம் குறித்த மற்றொரு இன்றியமையாத அம்சமாக இருப்பது அகமணம் என்பதாகும். அகமணம் என்பது ஒரு இனத்திற்குள்ளேயே திருமணம் செய்துகொள்ளுவதாகும். விளையாட்டுக்களில் இது புதைபொருள் நிலையில் காணப்படுகிறது.

சான்று

பூசணிக்காய் விளையாட்டு (விளையாடும் சிறுவர்கள் ஒருவர் பின் ஒருவராக வரிசையாக அமர்ந்துகொள்வர். முதலில் அமர்ந்திருப்பவர் பாட்டி என்றழைக்கப்படுகிறார். தனித்தனியே அரசன், வேலைக்காரன் நாய் என மூவர் நின்றுகொள்ள அரசன் வேலைக்காரன் மூலமாகப் பூசணிக்காய் கேட்பதாக விளையாட்டு தொடங்குகிறது. பாட்டியும் தண்ணீர்ப் பாய்ச்சு, முள் அடைத்துவிடு என்று பல வேலைகளைக் கூறியும், இப்பொழுதுதான் இலை வந்திருக்கிறது, காய் பருக்கவில்லை என்று பொய் சொல்லிய பிறகே பூசணிக்காய் தருகிறாள். பாட்டி பூசணிக்காய்களைப் பறித்துக் கொள்ளச் சொன்னதும் வரிசையாக அமர்ந்திருக்கும் சிறுவர்கள் ஒருவரையொருவர் இறுக்கமாகக் கட்டிக்கொள்கின்றனர். வேலைக்காரன் மிகவும் கஷ்டப்பட்டு, சிறுவர்களை இழுத்துக்கொண்டு செல்கிறான். இப்படியே பாட்டியைத்தவிர எல்லாச் சிறுவர்களையும் இழுத்துச்செல்வதுடன் விளையாட்டு நிறைவடைகிறது.)

இவ்விளையாட்டில் பூசணிக்காய்களைப் பெண்ணாகவும் பூசணிக் காய்களை வேண்டுகிற அரசனை மாப்பிள்ளையாகவும் கொண்டால் பூசணிக்காய்களும் பாட்டியும் ஓர் இனத்தைச் சேர்ந்தவர்கள். அரசன் வேறொரு இனத்தைச் சேர்ந்தவன். அவன் பலமுறை பூசணிக்காய் (பெண்) வேண்டியும் மறுக்கப்படுகிறது. பூசணிக்காய் வேண்டுவதைத் திருமணம் செய்துகொள்ளப் பெண்கேட்பதாகவும் மறுத்தல் என்பதை வேறு இனத்தைச் சேர்ந்தவனுக்குத் தனது பெண்ணைத் திருமணம் செய்து கொடுக்க மறுத்தல் என்பதாகவும் புரிந்துகொள்ள வேண்டும். பூசணிக்காய்களுக்கு முன்னால் அமர்ந்திருக்கும் பாட்டி, தோட்டக்காரன் ஆகிய இருவரும் பூசணிக்காய் (பெண்) கேட்கும் அரசனுக்குப் பலவகையில் சமாதானம் கூறியும் வேலைக்காரனுக்குப் பலவேலைகளையும் செய்யச்சொல்லியும் பூசணிக்காய் தருவதைப் பலநிலைகளில் தட்டிக் கழிக்கின்றனர். இவர்களிருவருமே தங்களது சொத்தைப் பாதுகாக்கப் பாடுபடுகின்றனர். இங்குச் சொத்தானது பாரம்பரியப் பழக்கமான அகமண முறையாகும். அதனால்தான் இவ்விளையாட்டின் அனைத்து வடிவங்களிலும் (Versions) பாட்டி, தோட்டக்காரன் ஆகிய இருவரைத் தவிர வேறு பாத்திரங்கள் இல்லை. இவையனைத்தையும் மீறிப் பூசணிக்காய்கள் பறிக்கப்படும்போது அவற்றைக் கொடியிலிருந்து பறிப்பதற்கு மிகுந்த பிரயத்தனப்பட வேண்டியிருக்கிறது. இங்குக் கொடி என்பதைக் குலம் (Clans) என்று புரிந்து கொள்ளவேண்டும். பூசணிக்காய்களான சிறுவர்கள் ஒருவருக்கொருவர் தங்களுக்குள் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு விடமறுப்பதைப் பெண்களும் பிறகுலத்தில் திருமணம் செய்துகொண்டு செல்வதற்கு விருப்பமில்லாதிருப்பதைக் குறிக்கிறது.

பூசணிக்காய்களைப் பறிக்கின்றபொழுது நாய் கடித்துவிடுகின்றது. நாய் நமது பண்பாட்டில் காவலுக்கான குறியீடாகும். இங்கும் பூசணிக்காய்களைக் காப்பதற்காகவே பயன்படுத்தப்படுகிறது. இங்ஙனம் பறிக்கப்பட்ட பூசணிக்காய்களை ஓரிடத்தில் வைத்துவிட்டு வேலைக்காரன் அரசனிடம் தெரிவித்து அரசனை அழைத்துச் செல்லும்போது பூசணிக்காய்கள் எரிந்து சாம்பலாகிவிட்டதாக விளையாட்டு அமைகிறது. இது வேறு இனத்தில் கட்டாயத்

திருமணம் நடத்தப்பெறும்போது அப்பெண் இறந்துபோவதையும் குறிக்கிறது. சாம்பல் என்பது முடிவைக் குறிக்கும் குறியீடாகும். மற்ற காய்களைவிடப் பூசணிக்காயைக் கொடியிலிருந்து பறிப்பது கடினம்.

வேறு இனத்தில் திருமணம் செய்வதால் அல்லது செய்யும்முன் அந்தப் பெண் தானாக இறந்துபோவதும், பெரியவர்களால் கொலை செய்யப்படுவதும் என்று அகமணத்தின் அவசியம் குறித்த கதைப்பாடல்கள், கதைகள் தமிழில் அதிகம் உள்ளன. முத்துப்பட்டன் கதை, காத்தவராயன் கதை போன்ற கதைப்பாடல்களும் தடாதகை அம்மன், சிக்கச்சி அம்மன் என்று இன்றைக்கும் காணப்படும் நாட்டுப்புறத் தெய்வங்கள் பலவற்றின் தோற்ற வரலாறுகளும் இதையே அடியொற்றியன. இதுபோலவே "ஒருகுடம் தண்ணீர் ஊற்றி ஒரு பூ பூத்தது என்கிற விளையாட்டும் வேறு இனத்தைச் சார்ந்தவருக்கு மணமுடித்துத்தரமறுக்கும் அகமணமுறையை வெளிப்படுத்தும் விளையாட்டுத்தான்" என்று வே. மாணிக்கம் கூறுகிறார் *(ஆய்வுக்கோவை:1987, 569-577)*.

அனைத்துப் பண்பாட்டிலும் திருமணம் என்பது இன்றியமையாத ஒன்று. திருமணத்தைச் செய்து கொள்வது யாருடன்? எவ்வாறு? என்பதில்தான் பண்பாட்டிற்குப் பண்பாடு வேறுபடுகிறது. நமது சமூகத்தில் அகமணமும், உறவுமுறைத்திருமணமும் காலந்தோறும் கடைப்பிடிக்கப்படுவது ஆகும். இதைக் குழந்தைகள் தெரிந்துகொள்வது அவசியம். நமது பண்பாடு அகமண முறையையும், உறவுமுறைத் திருமணத்தையும் அடிப்படையாகக் கொண்டது தான். நாமும் அதை மீறக்கூடாது என்பதை முதலில் விளையாட்டின் மூலமாகக் குழந்தைகள் புரிந்து கொள்கின்றனர். அடுத்ததாகக் குழந்தை தன்னுடைய இனத்தைவரை அதிலும் தனக்குத் திருமண உறவுடையவரை அறிந்து கொள்கிறது. யாரை எத்தகைய உறவுடையவரைத் திருமணம் செய்துகொள்ள வேண்டும், செய்துகொள்ளக்கூடாது என்பதையும் தெரிந்துகொள்கிறது. அதனையே வாழ்க்கையிலும் கடைபிடிக்கிறது.

வீரம்

தமிழ்ப்பண்பாட்டின் மற்றொரு அம்சமாகக் கருதப்படுவது வீரம் ஆகும். இது அக்காலத்தில் விளையாட்டில் மூலமே உறுதி செய்யப்பட்டது. வீர விளையாட்டுக்களின் மூலமாகத் திருமணங்கள் தீர்மானிக்கப்பட்டன. ஆரம்பக் காலத்தில் ஏறுதழுவுதல், சிலம்பம், மல்லாட்டம், வில்தெரித்தல் போன்றவை தமிழர்களுக்கேயுரிய விளையாட்டாக அவர்களின் வீரத்தை வெளிப்படுத்து வனவாக இருந்தன என்பது அனைவரும் அறிந்ததே. இன்றைக்கு இவை நிறுவனமயமாக்கப்பட்டு அவற்றின் நோக்கமும் மாறிவிட்டது. பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதற்காக நடத்தப்பட்ட ஏறுதழுவுதல் சல்லிக்கட்டாக மாறி இன்றைக்குப் பொழுதுபோக்காகிவிட்டது. அதாவது ஓடிவருகின்ற காளைகளை வேடிக்கை பார்ப்பதும், பலர் ஒன்று சேர்ந்து ஒருகாளையை அடக்குவதும் என்று இன்றைக்கு நோக்கம் மாறிக்கொண்டு வருகிறது. பிற வீர விளையாட்டுகளுமே நிறுவனமயமாக்கப்பட்டுவிட்டன. சிலம்ப விளையாட்டு ஓரிரு இடங்களில் மட்டும் காணப்படுகின்றது.

சிறுவன்கள் விளையாட்டுகளில் காணப்படும் வீரம், சிறுமியர் விளையாட்டில் இல்லை. சிறுவன்கள் விளையாட்டுகள் மட்டுமே உடல்வலிமையை வெளிப்படுத்துவதாக உள்ளன. இது சிறுவன்களின் வயது மற்றும் உடல்வலிமையைப் பொறுத்ததாக உள்ளது. இன்று ஊர்ப்புறங்களில் "இரயில் வண்டி விளையாட்டு" என்றொரு விளையாட்டு விளையாடப்படுகிறது. அணிநிலை விளையாட்டான இது வீரத்தின் அடையாளத்தை வெளிப்படுத்துவதாக இருக்கிறது.

1. இரயில்வண்டி விளையாட்டில் குனிந்த நிலையில் தன்னிருகைகளையும் கால்களின் மூட்டுகளில் தாங்கி ஓரணியின் ஒருவர் முதலில் குனிந்து நிற்க அவருக்குப் பின்னால் அவ்வணியின் மற்றவர்கள் அவரின் தோள்பட்டையைப் பிடித்துக்கொண்டு ஒருவர் பின் ஒருவராகக் குனிந்து நிற்கின்றனர். அவர்களின் மேல் எதிரணியினர் ஓடிவந்து விழுகின்றனர். அவ்வாறு விழுகின்றபோது அவர்களைத் தாங்கிநின்றவர்களின் உடலோ, உறுப்புக்களை அசைக்கக்கூடாது. இரு அணியினரும் விழுகின்ற அந்த ஒருகண நேரத்தில் மட்டுமே உடலுறுப்புக்களை அசைத்துக்கொள்ள முடியும். விழுகின்றவர் எந்தக் கோணத்தில் விழுந்தாலும் அப்படியேதான் கிடக்க வேண்டும். கை, கால்களைச் சரிசெய்துகொள்ள முடியாது. அதனால் விழுகின்றவர் ஓடிவந்து விழுந்தாலும் சரியாக விழவேண்டும் என்பதில் கவனமாக இருக்கிறார். சரியாக விழாமல் கீழே விழுந்தால் விளையாட்டை விட்டு வெளியேற்றப்படுகிறார். ஓர் அணியில் எத்தனை உறுப்பினர்கள் இருந்தாலும் அவர்களனைவரையும் எதிரணினர் தாங்கிக் கொள்ளவேண்டும். முதலில் விழுகின்ற அணியின் விழும் வேகம் பலமாக இருந்தால் அடுத்தமுறை எதிர் அணியின் விழும் வேகம் அதிகரிக்கிறது. இவ்வாறு வேகம் அதிகரித்துக் கொண்டேபோகிறது.

இங்ஙனம் இந்த விளையாட்டை விளையாடுகின்ற ஒவ்வொருவரும் அணியாக ஒன்றுபட்டு விளையாடினாலும் தனிப்பட்ட முறையில் தங்களது வலிமையையும் நிரூபிக்க வேண்டும். இங்கு வலிமை என்பது தன்மேல் விழுகின்ற நபர்களைத் தாங்கிக் கொள்ளுதலாகும். மேலும் வலிமை குறைந்த நபர் அதாவது அவரது கை, கால் அசைக்கப்பட்டு வெளியேற்றப்படும்போது அவ்வணியின் உறுப்பினர் எண்ணிக்கையும் வலிமையும் குறைந்து அவ்வணிக்குப் பெரிய இழப்பாக அமைந்து அவ்வணி தோல்வியடைய நேரிடுகிறது. அந்தத் தனிப்பட்ட நபரும் கேலிக்குள்ளாக்கப்படுகிறார். எனவே அணியின் வலிமை தனிப்பட்ட நபர் ஒவ்வொருவரின் வலிமையைப் பொறுத்ததாக இருக்கிறது.

2. கொட்டான் கொட்டான் என்கிற விளையாட்டும் சிறுவர்களுக்கேயுரிய விளையாட்டாகும். வலிமையை அடிப்படையாகக் கொண்டது. இவ்விளையாட்டில் ஒருவர் தலையில் மற்றவர் குட்டுவதே சிறப்பு அம்சமாக உள்ளது. அவ்வாறு குட்டும்போது தலையில் குட்டு வாங்கும் சிறுவன் அழுதால் மற்றவர்களால் கேலிக்குள்ளாக்கப்படுகின்றான். இதிலும் ஒருவருக்கொருவர் குட்டுகிற பலம் அதிகரித்துக்கொண்டே போகும். சிறுமிகள் தங்களையும் இவ்விளையாட்டில் சேர்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டபோது சிறுவன்களால் 'நாங்கள் குட்டுகிற குட்டைத் தாங்கமுடியாது நீங்க வேணாம்' என்று

தடுக்கப்பட்டனர். ஆக இவ்விளையாட்டு வீரத்தையும் உடல் வலிமையையும் வெளிக்காட்டுகிற விளையாட்டேயாம்.

இன்றைய நிலையில் வீரவிளையாட்டுகளின் நோக்கும் மாறிவிட்டாலும் வீரம் நிரூபிக்கப்படுதல் என்பது ஆண்களுக்கே உரிய ஒன்று என்கிற அம்சம் மட்டும் மாறவில்லை. வீரத்தை /உடல்வலிமையை அடிப்படையாகக் கொண்ட விளையாட்டுக்களை விளையாடுவதன் மூலமாகச் சிறுவர்கள் தங்கள் பண்பாட்டில் வீரம் என்பது ஆண்களுக்குரியது மட்டுமே என்பதைப் புரிந்து கொள்கிறார்கள். குடும்பத்திலும் தனக்கே பொறுப்பு அதிகம். ஆணுக்கும் குடும்பத்திற்குத் தேவையான ஊதிய உழைப்பும், பெண்ணுக்குக் குடும்பத்தினுள் உள் உழைப்பும் என்ற பிரிவினையைக் கொண்ட சமூகத்தில் தன்னுடைய வலிமையின் அவசியத்தை, ஆதாரத்தைப் புரிந்துகொள்வதற்கும் அதன்படி நடப்பதற்கும் இவ்விளையாட்டுக்கள் உதவுகின்றன.

நாட்டுப்புற விளையாட்டுகள் பண்பாட்டு அம்சங்களையும் கூறுகளையும் வெளிப்படுத்துவன என்பதற்குச் சான்றாகச் சிலவிளையாட்டுக்கள் பண்பாட்டின் வேர்களான சடங்குகளிலும் திருவிழாக்களிலும் முக்கியத்துவம் தரப்பட்டு விளையாடப்படுகின்றன. திருமணச்சடங்குகளின் ஒருபகுதியான நலுங்கு வைத்தலில் சில விளையாட்டுக்கள் விளையாடப்படுகின்றன.

1. பல்லாங்குழி விளையாட்டு : இவ்விளையாட்டின் ஒரு வடிவமான கல்யாணப்பாண்டி விளையாடப்படுகிறது.

2. பூப்பந்து எறிதல்: பூக்களால் செய்யப்பட்ட பந்தினை மணப்பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவர் மேல் ஒருவர் எறிந்துகொண்டு விளையாடுதல்.

3. தேங்காய் உருட்டுதல் : தேங்காய் வடிவிலமைந்த வெண்கலத்தினால் செய்யப்பட்ட தேங்காயை மணப்பெண்ணிற்கும் மாப்பிள்ளைக்கும் நடுவில் வைத்து இருவரும் ஒருவரிடமிருந்து ஒருவர் பறித்துக்கொள்ளுதல்

4. திருமணத்தன்று அல்லது மறுநாள் மஞ்சள் நீரினால் நிரப்பப்பட்ட அண்டா அல்லது குடத்தினுள் போடப்பட்டிருக்கும் மோதிரம்-கத்தி / சங்கு - பொம்மை போன்றவற்றை எடுத்தல். இதில் மோதிரமும் பொம்மையும் பெண்ணிற்குரியவை. கத்தியும் சங்கும் ஆணிற்குரியவை. நீரினுள்ளிருந்து பெண்ணுக்குரியதை ஆணோ ஆணுக்குரியதைப் பெண்ணோ மாற்றி எடுக்கக்கூடாது.

மேலும் பெண்ணின் திருமணத்திற்குச் சீராகக் கொடுக்கப்படும் பொருட்களில் பல்லாங்குழியும் முத்துக்களும் வெண்கலத்தினாலான தேங்காய் மற்றும் பொம்மை போன்றவையும் அடங்கும். பெண்கள் பூப்படைந்த நேரத்தில் பல்லாங்குழி, தாயம் போன்ற விளையாட்டுகள் விளையாடப்படுகின்றன.

பரமபதம் விளையாட்டு இறந்தவர்களின் வீடுகளில் விளையாடப்படுகிறது. வைணவர்களில் சிலர் தங்கள் வீடுகளில் இறந்துபோன

வயதானவர்களின் சடலம் இரவு முழுவதும் வீட்டில் வைக்கப்படவேண்டிய அவசியம் ஏற்படின் அன்றைய இரவு முழுவதும் இறந்தவரின் ஆன்மா சொர்க்கம் செல்லும் பொருட்டுப் பரமபதம் விளையாட்டு விளையாடுகின்றனர்.

சடங்குகள் தவிரத் திருவிழாக்களிலும் விளையாட்டுகள் விளையாடப் படுகின்றன. இவை நேர்த்திக்கடனாகவும் பொழுதுபோக்கு மற்றும் மகிழ்ச்சிக்காகவும் விளையாடப்படுகின்றன.

1. சிலம்பம், புலிவேடம், குரங்குவேடம், நாகவேடம் போன்ற வேடமிட்டுக் கொண்டு விளையாடுதல் விழாக்காலங்களில் நேர்த்திக்கடனாக விளையாடப்படுகிறது.

2. கிருஷ்ண ஜெயந்தியின்போது உரிமரம் ஏறுதல், உறிப்பானை விளையாட்டு போன்றவையும் விழாக்காலங்களில் பானை உடைத்தல், கார்த்திகைக் கூம்பு போன்றவையும் விளையாடப்படுகின்றன. பொங்கல் முடிந்த மறுநாள் மாலையில் மோடி விளையாட்டு விளையாடப்படுகிறது (நாட்டுப்புற விளையாட்டுக்கள் 1980:54-70)

3. மஞ்சள் நீர் தெளித்தல் என்பது திருமணத்தையும் திருமண உறவுக் குரியவரையும் அடிப்படையாகக் கொண்டதொரு விளையாட்டாகும். மஞ்சள் கரைத்த நீரினைப் பெரும் பானைகளிலிட்டு வீட்டின் வாசலில் வைத்திருப்பர். வீட்டை அல்லது தெருவினைக் கடந்து செல்லும் மணந்து கௌ்ளும் முறைமையுடையவர் அல்லது விரும்பி மணக்கப் போகும் காதலர் மீது பெண்கள் தெளித்து இன்புறுவர். இதுவே நீர் விளையாட்டாகப் பழந்தமிழரிடம் இருந்ததாகப் பரிபாடல் கூறுகிறது (நாட்டுப்புற விளையாட்டுக்கள் : 1980,106)

திருவிழாக்களும் சடங்குகளும் பண்பாட்டின் வேர்களாகும். இவை ஒரு பண்பாட்டின் தனித்தன்மையை வெளிப்படுத்துவனவாக உள்ளன. ஒருவன் தனது பண்பாட்டை, பண்பாட்டுப் பழக்க வழக்கங்களைப் பற்றித் தெரிந்து கொள்வதற்கு சடங்குகள், விழாக்கள் அப்போது கடைபிடிக்கப்படும் பழக்கவழக்கங்கள் அவை தொடர்பான நம்பிக்கைகள் ஆகியவை உதவுகின்றன. அதாவது திருமணச் சடங்கில் நடைபெறும் விளையாட்டுக்களில் பெண்ணே வெற்றி பெறவேண்டும் என்று விரும்பப்படுகிறது. ஏனெனில் விளையாட்டுக்களில் வெற்றிபெறுவதைப் போலவே வாழ்க்கையிலும் வெற்றிபெற்று அதாவது அதிக மக்கட்செல்வத்தைப் பெற்றுக் குடும்பத்திற்கு வளமையைத் தேடித்தருவாள் என்கிற நம்பிக்கை காணப்படுகிறது. இதனால் மணமகன் மணமகளுக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கிறது. இவற்றையெல்லாம் அருகிலிருந்து கவனிக்கும் சிறுவர்கள் இந்தச் சடங்கில், இந்த விழாவில் இன்னின்ன விளையாட்டுக்களையே விளையாடவேண்டும் அவற்றின் முடிவும் இப்படித்தான் இருக்கவேண்டும் என்று அறிந்துகொள்கிறார்கள். இதுவே மார்கரெட் மீட் கூறும் ஒரு குறிப்பிட்ட பண்பாட்டின் குறிப்பிட்ட பழக்கவழக்கங்களை அறிந்து கொள்வது என்பதாகும்.

துணைநூல்கள்

1. தாயம்மாள் அறவாணன்., பல்லாங்குழி, திராவிட - ஆப்பிரிக்க ஒப்பீடு, பாரி நிலையம், சென்னை, 1982

2. தேவநேயன். ஞா. தமிழ்நாட்டு விளையாட்டுக்கள், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை, 1962.

3. பக்தவத்சல பாரதி, சீ., பண்பாட்டு மானிடவியல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 1990

4. பக்தவத்சல பாரதி, தமிழர் மானிடவியல், அடையாளம், திருச்சி, 2008

5. பாலசுப்பிரமணியன். இரா. தமிழர் நாட்டு விளையாட்டுக்கள், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை 1980

6. மாணிக்கம். வே. நாட்டுப்புற விளையாட்டு ஒரு சமூகவியல் பார்வை, நாட்டுப்புறவியல் ஆய்வுக்கோவை தொகுதி - 1 இந்தியத் தமிழ் நாட்டுப்புறவியல் கழகம், அண்ணமலைநகர், 1987

7. Mobinnuddin Raz S., The Process of Socialization A Multiethnic Study, Ehetana Publications, New Delhi, 1976.

வள்ளலார் உணர்த்தும் ஆன்மீக மருத்துவம்

முனைவர் அரசு பரமேஸ்வரன்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அறிஞர் அண்ணா அரசுக் கலைக் கல்லூரி
நாமக்கல், தமிழ்நாடு, இந்தியா

மருத்துவம் என்பதற்கு வைத்தியம் என்பது பொருள். வைத்தீஸ்வரம் என்ற இடத்தில் குடிகொண்டிருக்கும் சிவபெருமான் மக்களின் உடலுக்கும் உள்ளத்திற்கும் ஏற்படும் துன்பங்களைத் தீர்ப்பதால் வைத்தீஸ்வரன் என்று அழைக்கப்படுகின்றார் என்ற கருத்து இங்குச் சிந்திக்கத்தக்கது. மக்களின் நோய்களைத் தீர்ப்பதற்கு வைத்தீஸ்வரனிடம் வள்ளலார் வேண்டிக் கொள்கின்ற நிலையில் வைத்தீஸ்வரன் பதிகம் என்ற பத்துப் பாடல்கள் அமைந்துள்ளன. மக்கள் ஆன்மீகத்தின் மூலம்தான் பிறவா இன்பப் பேரின்பம் அடைய முடியும்.

1. வள்ளலாரின் ஆன்மிக மருத்துவம்

வள்ளலாரை மிகச் சிறந்த ஆன்மீக மருத்துவர் என்று கூறலாம்.

> "உலகில் மக்கள் ஒரு துறையில் சிறப்புடையவர் இன்னொரு துறையில் சிறப்புடையவராக இருப்பதில்லை. ஆனால் வள்ளலார் ஒருவரே உரைநடை செய்தல், செய்யுள்நூல் இயற்றுதல், பாடஞ்சொல்லுதல், பதிப்பித்தல் என்னும் பல துறைகளிலும் வல்லவராய், மொழிப்புலமை மட்டுமின்றி மருத்துவம் முதலிய கலைப் புலமையிலும் வல்லராய், இவை அனைத்தினுக்கும் மேற்பட்ட அருட்புலமையும் முற்றினராய்ப் பன்முக ஞானத்தோடு ஒப்பாரும் மிக்காரும் இன்றி விளங்கினார். திரு அருட்பிரகாச வள்ளலார் என்ற பெயரில் இருந்தே அவர் அருள்ஞானி என்பது புலனாகிறது"[1]

பொதுவாக வள்ளலாரது மருத்துவம் மணிமந்திர ஔசதங்கள் என்னும் கொள்கையுடையது. அவற்றுள் ஔசதம், மூலிகை மருத்துவம் என்னும் பகுதியுள் அடங்கும். மணிமந்திரம் என்பது ஆன்மீக மருந்துள் அடங்கும் மருத்துவ முறையாகும். இவை மட்டும் அல்லாமல் நுண்பொருள் சார்ந்த (Meta Physical) ஆன்மீக மருத்துவத்தையும் மக்கள் நன்மைக்காக வள்ளலார் விட்டுச் சென்றுள்ளார்.

மக்களின் அஞ்ஞானத்தை நீக்கி மெய்ஞ்ஞானத்தை விளக்கிய வள்ளலாரை ஒரு சிறந்த ஆன்மீக மருத்துவர் என்று சொன்னால் அது மிகையாகாது. வள்ளலார் எந்தப் பள்ளியிலும் பயின்றதில்லை. எவ்வாசிரியரிடத்திலும் படித்ததில்லை. கற்க வேண்டுவனவற்றை இறைவனிடம் கற்றார். இதனை,

கற்றதுமற் றவ்வழியா சூததுஎன் றெண்ணாத்
தொண்டரெல்லாங் கற்கின்றார்பண்டுமின்றுங் காணார்
எற்றதும்பு மணிமன்றில் இன்பநடம் புரியும்
என்னுடைய துரையேநான் நின்றுடைய அருளால்
கற்றதுநின் னிடைத்தேபின் கேட்டதுநின் னிடத்தே
கண்டதுநின் னிடத்தே உட்கொண்டதுநின் னிடத்தே
பெற்றதுநின் னிடத்தேஇன் புற்றதுநின் னிடத்தே
பெரியதவம் புரிந்தேன்என் பெற்றிஅதி சயமே[2]

என்ற வள்ளலாரின் திருவருட்பாவால் அறியலாம்.

> "வள்ளலார் முற்பிறப்புகளிலேயே சரியை, கிரியை, யோகங்களை முடித்து இப்பிறப்பில் ஞானத்தில் நின்று சித்தி பெறுவதற்கென்றே பிறந்த சித்தராதலின் அடிகள் இளமையிலேயே ஓதாதுணரப் பெற்றவர்"[3].

இளமையிலேயே சித்தி பெற்ற வள்ளலார் மக்களின் மன, உடல் நோய்களைத் தீர்ப்பதற்கு ஆன்மீக மருத்துவ முறையையும் கையாண்டுள்ளார்.

2. மந்திரமும் மருத்துவமும்

சில எழுத்துக்களைப் பலமுறை மனதில் கூறும்போது ஏற்படும் கூட்டு ஒலிக்குத் தனி ஆற்றல் உண்டு. இதை மந்திரம் என்றும் சொல்லலாம். நீண்டகாலப் பயிற்சியினால் மக்கள் மந்திர முறையைப் பயன்படுத்தி, பொன், பொருள், புகழ், இன்பம், அதிகாரம் இவற்றை அடைந்தனர். மந்திரங்களினால் சில நோய்களைப் போக்கவும் ஆக்கவும் முடியும் என்பது நுண்பொருள் உண்மை.

3. வள்ளலாரின் மந்திரம்

வள்ளலார் சிவாயநம, சிவம், ஓம் என்ற பிரணவ மந்திரம் எனும் இவற்றைக் கூறியள்ளார். இவை தேகத்தை நீடிக்கச் செய்கின்றன. ஓம் சிவாயநம என்று சதா சிந்தித்துக் கொண்டிருத்தல் வேண்டாம். சிவக் கலப்பாய்க் கிடந்தாலும் மீளுதல், அருமை, மூடம் உண்டாகும் உண்மை என்று வள்ளலார் கூறியதிலிருந்து இறைவழிபாட்டில் கூட அளவும் முறையும் சரியாக இருந்தால் உடல் ஆரோக்கியமாக இருக்கும் என்பது புலனாகிறது.

4. சங்கல்பமும் பாவநீக்கமும்

உலகச் சிந்தனையில்லாமல் ஏதேனும் நன்மை தரத்தக்க செயலைப் பலமுறை எண்ணுவது சங்கல்பமாகும்.

> "சங்கல்பமாவது காரணம் யாதொன்றிலும் பற்றாமல் சுத்தமாயிருந்த காலத்தில் தோன்றிய அசைவே சங்கல்பம்"[4]

> "நடங்குங் காலத்திலும் நீராடும் காலத்திலும் சயன காலத்திலும் தனக்குத் தோன்றாமல் நேரிடும் பாவங்கள் யாவும் தினஞ் செய்யும் ஜபத்தாலும் பாராயணத்தாலும் ஸ்தோத்திரத்தாலும் விருந்து பரித்தலாலும் தெய்வம் பராவலாலும் நீங்கும்"[5]

என்று வள்ளலார் கூறுகிறார். திருமுகம் ஒன்றில் வள்ளலார் இரத்தின முதலியார்டம்,

> "நாம் பல சனனங்களையும் தப்பி மேலான இந்த மனிதப்பிறவி எடுத்து சிவத்தின் திருவருளைப் பெறுவதற்கே. எவ்வகைப் பிரயாசனத்திலாவது அந்த அருளை அடையவேண்டும். இது சத்தியம் ஆகவே இடைவிடாது நல்ல மனத்துடன் தியானிக்கவேண்டும்"[6]

என்று கூறுகின்றார். வள்ளலார்தெய்வம் பராவலலைப் பற்றி,

> "நான் செய்த புண்ணியம் பாதோ சிவாய நமவெனவே
> ஊன்செய்த நாவைக்கொண் டோதப்பெற் றேன்எனை ஒப்புவார்
> வான்செய்த நான்முகத் தோனும் திருநெடு மாலு மற்றைத்
> தேன்செய்த கற்பகத் தேவனும் தேவருஞ் செய்யரிதே"[7]

என்று பாடியிருப்பதிலிருந்து இறைவனைத் தினமும் தியானம் செய்வதால் மனதில் உள்ள ஊனங்கள் மறைவதோடு உடல் வலுப்பெறும் என்பது புலனாகிறது. திருஞானசம்பந்தரின் திருநீலகண்டர் பதிகம், கோளறு பதிகம் இங்கு நினைக்கத்தக்கன.

இன்றைய நாளில் மக்கள் காத்து, கருப்பு என்று கூறி வேப்பிலையால் உடலில் அடித்து மந்திரங்கள் உரைத்துப் பேய் ஓட்டி வருவதைக் காணமுடிகிறது. ஒருசில சொற்களை மீண்டும் மீண்டும் கூறும்போது ஒலி அலைகளின் அழுத்தம் அதிகமாகி, சக்தி அளிக்கிறது.

உணவு உண்ண இயலாதவர்கட்கு இன்றும் சில ஆன்மிகவாதிகள் உப்பில் சில மந்திரங்களை ஜெபித்து, உணவில் சேர்த்துச் சேர்த்து உண்ணும்படி கூறுகிறார்கள். அதுபோல நீர்அருந்த இயலாதவர்கட்கு நீரில் மந்திரம் ஜெபித்து நீர்அருந்தும்படி கொடுக்கிறார்கள். எனவே மந்திர மருத்துவமுறை இன்றும் பழக்கத்தில் இருந்து வருகிறது என்பது புலனாகிறது.

5. மருந்துண்ணலும் இறைச் சிந்தனையும்

மருந்து உண்ணும்போது சிவசிந்தனையுடன் உண்ணல் வேண்டும். வள்ளலார் பகல் போஜனஞ் செய்தபின் சற்று நேரங் கடவுளைத் தியானித்திருக்கவேண்டும் என்று கூறுகிறார்.

பகல் உணவிற்குப் பின்னர் சற்று உறங்கி, ஓய்வு எடுக்கும் பழக்கத்தைச் சிலர் வழக்கமாகச் செய்து வருகின்றனர். உணவை மருந்தாகவும் பயன்படுத்தி வருவதைக் காணமுடிகிறது.

'மருந்துண்ணும்போது

> "அலட்சியம் செய்யாது ஆசார்யன் திருவடியின் கண்ணே இலட்சியம் வைத்து உண்ணவேண்டும்"[8]

என்று வள்ளலார் கூறுகிறார்.

"கடினமான அவுசதங்களைக் கொள்ள வேண்டாம் என்றும் சூரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிட்டுக் கொண்டு வரவேண்டும் என்றும் 'சிவாயநம வென்று சிந்தித்திருப்பார்க்கபாய மொருநாளுமில்லை' என்பதைச் சத்தியமாகக் கடைப்பிடிக்க வேண்டும்"[9]

என்றும் வள்ளலார்கூறுகின்றார்.

"'மதிய மிதல்லாத வெல்லாம் விதியே மதியாய் விடும்' என்ற அவ்வையார் திருவாக்கு சத்தியம், சத்தியம், சத்தியம். ஆதலால் அதை இடைவிடாது சிந்தித்துக்கொண்டே வாருங்கள். தங்கள் பிணிகள் பறந்தோடிப்போம். தேசசாக்கிரதை மனோசாக்கிரதை முதலான சாக்கிரதையோடு அஞ்சாமல் இருக்கவேண்டும்"10

என்று வள்ளலார்கூறியுள்ளதை நோக்குமிடத்து மருந்துண்ணும்போது இறைச் சிந்தனையுடன் உண்ணவேண்டும் என்பது புலனாகின்றது.

மருத்துவக் கல்வி பெற்ற மருத்துவர்கள் வியாதியஸ்தர்களுக்கு மருந்து கொடுக்கும்போது உணவுக்கு முன்னர், உணவுக்குப் பின்னர், உறங்கும்முன்னர் மருந்து உண்ணவேண்டும் என்றுதான் கூறுகிறார்களே தவிர, இறைவனை வணங்கி மருந்துண்ண வேண்டும் எனக் கூறுவதில்லை. ஆனால் கிராமங்களில் வைத்தியர்கள் மருந்துகள் தரும்போது கிழக்குநோக்கி நின்று சாமி கும்பிட்டுவிட்டு மருந்து சாப்பிடச் சொல்வதைக் கண்கூடாகக் காணமுடிகின்றது.

6. திருநீறும் நோய்நீக்கலும்

வள்ளலார்நோயுற்ற பக்தர்களுக்குத் திருநீற்றில் மந்திரத்தை ஜெபித்துக் கொடுத்து நோய்களை நீக்கியுள்ளார்.

"கருங்குழி புருசோத்தம ரெட்டியாருடைய அம்மான் பாலு ரெட்டியாருக்குள்ள குஷ்டநோயை வள்ளலார் விபூதி கொடுத்துத் தீர்த்து அருளினார்"[11]

"முத்து ரெட்டியார்என்பவருக்கு நேர்ந்த கண் நோயை விபூதி கொடுத்துக் குணமாக்கினார்"[12]

7. திருநீற்றின் மகிமை

வாழை இலை ஒன்றிலிருந்த பாம்பு வள்ளலாரின் உச்சியில் தீண்டியது. அவர் திருநீற்றை வைத்துக் கடிவாயில் அப்பினார். சற்று நேரத்திற்குள் அந்தச் சர்ப்பம் இலைமீது மடிந்து கிடந்தது.

"சற்றும் வருத்தப் பாரா தென்னைத் தாங்கும் நேயனே
தான்நான் என்று பிரித்தற்குரிய தரத்து நேயனே
முற்றும் தனதை எனக்குக் கொடுத்து முயங்கும் நேயனே
முன்னே நான் செய்தவத்தில் எனக்குள் முளைத்த நேயனே"[13]

எனக்கும் உனக்கும் என வள்ளலார் பகன்றுள்ளதை நோக்குமிடத்து எந்தச் செயலும் பயிற்சியும் முயற்சியும் இல்லாவிட்டால் வெற்றி கிடைக்காது என்பதும், செயலுக்கேற்ற விளைவு உண்டு என்பதும் புலனாகின்றது.

8. உடல் வளத்திற்கு ஆன்மீகம்

ஒரு மனிதன் ஆன்மீக வழியில் நடந்தால், அவனது உடலும் உள்ளமும் வளமுடையதாக இருக்கும். வள்ளலார் நண்பர்களை அழைக்கும்போது, "உலகினிடத்தே பெறுவதற்கு மிகவும் அருமையாகிய மனிதநேயத்தைப் பெற்ற நண்பர்களே"[14] என்று கூறியுள்ளதை நோக்குமிடத்து நல்ல உடல் வளம் மிக அவசியமானது என்பது புலனாகிறது.

வள்ளலார் தேகத்தை, சுவர்ண தேகம், பிரணவ தேகம், ஞான தேகம் என மூவகையாகக் கூறுகின்றார். மற்றும் சுத்த சத்துவ ஆகாரங்களைப் புசித்து ஆயுள் விருத்தி செய்து கொள்வது சன்மார்க்க ஏற்பாடு என்று கூறுவது, ஆன்மீக வாழ்க்கைக்கு உடல் ஆயுளுடன் இருக்கவேண்டும் என்பது தெரிகின்றது.

சினம் தேகத்தைச் சீக்கிரம் நஷ்டம் பண்ணும், வெகுளி என்பது மீசை துடித்தல், கண் சிவத்தல், கை முதலிய உறுப்புகள் துடித்தல், வாய் குழறி மேல் விழுந்து கூவுதல், இது ஆயுளை நஷ்டம் பண்ணும் ஆகையால் எவ்வகையிலும் கோபத்தின் பூர்வோத்திரமாகிய சினம், வெகுளி என்னும் கூற்றை ஒழித்தல் அவசியம்.

இதுபோல் மற்ற கெடுதியாகிய காமக் குரோதாதி சம்பந்தங்களையும் நீக்குதல் வேண்டும். காரணமென்பது கரண சம்பந்தமுடையது. அங்கம் இலட்சணம் ஆதலால் இலட்சணம், இலட்சியம், அங்கம், காரணம், கரணம் முதலிய சம்பந்தங்களுமொன்றும் இல்லாது கெடுதியாகிய தத்துவங்களை அடக்கல் வேண்டும்.

மனித உடல் நிலம், நீர், காற்று, வெப்பம், விண் ஆகிய பஞ்சபூதங்களால் ஆனது. இப்பஞ்ச பூதங்களோடு நெருங்கிய தொடர்பு கொள்ளும்போதுதான் இம்மனித உடல் அழியாது நிலைபெறும்"[15].

வள்ளலாரின் கூற்றினை நோக்கும்பொழுது காம, குரோதங்களை அறவே ஒழித்தால்தான் ஒருவன் ஆன்மீக வாழ்க்கை வாழமுடியம் என்பது புலனாகிறது.

9. மருந்தே ஆன்மீகம்

நம் முன்னோர்கள் மருந்தினை ஆன்மீகத்தோடு இணைத்து மக்கட்குக் கொடுத்து வந்துள்ளனர். நம் புராணங்களும் இதிகாசங்களும் தொன்மைக் கதைகளும் உடல் வளத்திற்குரிய மருந்துகளை ஆன்மீகச் செயலோடு இணைத்துக் கூறியுள்ளன. அவற்றின் உண்மைப் பொருள் இன்றைய மனிதகுலத்திற்குத் தெரிவதில்லை. அத்தகைய மறைபொருளை எல்லாம் வள்ளலார் தம் நூலுள் வெளிப்படுத்திக் காட்டியுள்ளார்.

ஒப்பீட்டு நோக்கில் தாண்டவமும் , லாஷ்யமும்

திருமதி ஷோபனா தர்மேந்திரா
நாட்டியவியல் துறை
யாழ்ப்பாண பல்கலைக்கழகம், இலங்கை

வீரம் வெளிப்பட வீறுகொண்டு கம்பீரமாகத் தாள இலயங்கள் விளங்க ஆடும் நடனம் தாண்டவம் ஆகும். இது சிவனால் ஆடப்பட்டமையால் ஆண்களுக்குரிய நடனமாக விளங்குகிறது. மென்மையான கரண அங்ககாரங் களுடன் சிருங்காரத்தையோ கரணத்தையோ முக்கிய அவையாகக் கொண்டது. எனவே தாண்டவம் இலாஷ்யம் ஆகிய நடனங்களில் தாண்டவம் எனும் நடனம் பற்றி ஆராய்வோம்.

தாண்டவம் எனும் சொல்லுக்குத் தாண்டுதல், 'அகலக்கால் வைத்துக் குதித்தல்' எனும் பொருள்படத் தாண்டவம் எனும் சொல் தோன்றியிருக்கக்கூடும். நந்தியால் (தண்டு முனிவரால்) பரத முனிவருக்கு உபதேசம் செய்யப்பட்டதனால் தாண்டவம் என்றும் இன்னொரு பொருள் உண்டு என நூலாசிரியர் கூறியுள்ளார். தாண்டவத்தைச் சொக்கம், சுத்த நிருத்தம் என்றும் அழைப்பர். தண்டுதல் என்பது நிலைக்காது வேகத்துடன் ஆடுவது. தாண்டவத்தில் ஆங்கீக இயக்கங்கள் தம்முன் கடினமாகப் புணர்வுற்றுக் களிவெறி மீறித்துள்ளும். இந்த வகையில் சிவன் ஆடிய தாண்டவங்கள் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன பெருமானின் ஐந்தொழில்களாகும். அத்தொழில்களைப் புரிவதில் எம்பெருமானின் மனத்தில் பொங்கி எழும் ஆனந்த வெள்ளமே தாண்டவமாகத் தோன்றியது. சிவபெருமான் தம் ஐந்தொழில்களைத் தம் ஏழு வகைத் தாண்டவங்களில் வெளிப்படுத்துகின்றார். அவையாவன: ஆனந்தத் தாண்டவம்! உலகம் தோன்றுவதையும் அதற்குரிய அசைவுகளையும் வெளிப்படுத்தும் அபிநயம் இதில் காணப்படும். எனவே விளம்பித இலயையில் துவங்கும். முதன்முதலாகப் பரமனின் ஒளி வடிவமான பிரணவம் எனும் நாதம் தோன்றி ஆனந்தத்தால் தோன்றும் சைதன்யம் வெளிப்படும். பிறகு உயிரினங்கள் உயிர் பெற்றதற்கு அறிகுறிகளான அவற்றின் அசைவுகள் முதலியவற்றைப் பார்வை, புருவம், தலையால் செய்யும் அபிநயங்கள், ஹஸ்த முத்திரைகள், சாரி, கரணம் முதலான முறைகளை ஒட்டி உறுப்புக்களின் அபிநயம் இந்தத் தாண்டவத்தில் பிரயோகம் செய்யப்படும். சந்தியா தாண்டவம் என்பது விளம்பித இலயையில் தொடங்கி மத்திய இலயையில் முடிவு பெறும். இதில் உடல் உறுப்புக்களை அசைவுகளாக்கி அபிநயங்களே அன்றிக் காப்பியச் சுவையைத் தோற்றுவிக்கும் மெய்ப்பாடுகளும் நன்கு விளங்கும். அதாவது இரசானத்தத்தைத் தோற்றுவிப்பது. ஆனால் இவை ஒலியினாலேயே இதில் உள்ள இசையும், தாள இலயங்களுடன்

பாவத்தையும் புலப்படுத்துவதாக அமையும். இதில் அர்த்தநாரீஸ்வர ஜதி சிறப்பானது. மூன்றாவதாகக் கலிக தாண்டவம் என்பதில் வீரம், சினம், அச்சம் எனும் அவை நன்கு விளங்கும். ஒவ்வொரு அபிநயமும் அர்த்தநாரிஸ்வர நடனத்தைப் போல வலது கையால் அபிநயம் செய்யும் போது தாண்டவமுறையும் இடது கையால் செய்யும் போது இலாஷ்ய முறையையும் பின்பற்றிச் செய்யவேண்டும். அடுத்து விஜயதாண்டவம். இதில் முத்திரைகளுடன் அபிநயம் தொடங்கி, தொடர்ந்து அபிநயம் செய்யப்படும். விளம்பத்தில் தொடங்கித் துரித இலயையுடன் முடிவடையும். அரக்கனை (கஜுசுரன்) காலடியில் போட்டு மிதித்து வெற்றிவாகை சூடிய தாண்டவம்.நான்காவதாக ஊர்த்துவ தாண்டவம். இது தாண்டவம் இலாஷ்யம் இரண்டும் இணைந்ததாகும். பரமசிவன் ஒரு காலைத்தூக்கி உயர்த்தி, தலைமேல் வைத்துக் கொண்டு ஆடியதாக கூறுவர். உமாமஹேசுவரத் தாண்டவம் ஈஸ்வரனும், அம்பிகையும், மயானத்தில் இணைந்து நடனம் புரியும் போது நில உலகு தடுமாறி அசையும் வண்ணம் அவர்களுடைய நடனம் வீரம் மிக்கதாக விளங்குகிறது. பரமன் வீர பைரவர் எனும் பெயரிலும், அம்பிகை வீர பைரவி எனும் பெயரிலும் நடனம் புரிந்தனர். சம்காரத் தாண்டவம் உலகங்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிக் கொண்ட நிலையில் பரமசிவன் புரியும் பிரளயதாண்டவம் சம்ஹாரத் தாண்டவம் ஆகும்.

இந்த வகையில் சிவனுடைய ஏழு தாண்டவங்களும் மிளிர்கின்றன. இவை கரணங்களுடனும், அங்ககாரங்களுடனும் கூடிய நிருத்தம். சிவனுடைய நிருத்தம் - 108 கரணங்களுடன் கூடியது. அங்ககாரங்கள் முப்பத்திரண்டு. இவ் வகையான அங்ககாரங்களும் சில கரணங்களின் தொகுப்பாக அபிநயம் செய்யப்படும். அந்த கரணங்கள் 108 ஆகும். அவையாவன: நிருத்தத்தில் கைகால்களில் அசைவுகள் பொருத்தமாக அமைந்திருப்பது கரணங்கள் ஆகும். அதாவது தாளத்திற்கு ஏற்ப அடிகளை வைத்துக் கொண்டே அவற்றிற்கு இணையாகக் கைகளையும் அசைத்து அபிநயம் செய்தல் கரணங்களாகும். இவை நிருத்தத்திற்குத் தாய் போன்றவை. அதாவது கரணங்களால்தான் நிருத்தம் தோன்றியது எனப்பொருளாகும். மூன்று கரணங்கள் இடைவிடாமல் தொடர்ந்து அபிநயம் செய்வது கலாபகம் எனப்படும். நான்கு கரணங்களின் தொகுப்பு மண்டகம். ஐந்து கரணங்கள் ஸங்காதகம். ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது எனக் கரணங்கள் இணைந்திருப்பது அங்கஹாகரம் எனப்படும். இக் கரணங்களில் ஸ்நிதி (நிலை) கதி (நடை) என்ற இரண்டும் சிறப்பாகக் காணப்படுகின்றன. ஸ்நிதி என்பது அரங்கில் அழகாக நின்றிருக்கும் நிலையும், சீரான முறையில் அடிகளை அசைத்து நடந்து அபிநயம் செய்யும் முறையும் கூறப்பட்டுள்ளன. நிலையில் வைஷ்ணவ ஸ்தானகம் முதலியவையும் நடையில் (கதியில்)சாரிகள் பாகுபடுத்தப்பட்டுள்ளன. நடையில் இடுப்புக்கு மேல் உள்ள கை, கால், தலை, கழுத்து போன்ற உறுப்புக்களால் செய்யப்படும் அபிநயமும் அடங்கும். இந்தக் கரணங்கள் முதலியன தாள இலயங்களைச் சார்ந்த நிருத்தத்தில் அபிநயம் செய்யப்படுவது போலவே ஏதேனும் கருத்தை உணர்த்தும் நாட்டிய வகைகளிலும் பிரயோகம் செய்யப்படுகின்றன. இப்படியாகத் தாண்டவம் எனும் நடனம் கரண அங்ககாரங்களுடன் சிறப்புற்று விளங்குகிறது.

இனி இலாஷ்யம் பற்றி நாம் அலசுகையில் இலாஷ்யமானது பார்வதி தேவியால் ஆடப்பட்டது. (மென்மையான கரண அங்காரங்களுடன் கரணத்தையோ முக்கியச் சுவையாகக் கொண்டது) நாட்டிய மங்கை அவை நடுவில் நின்று கொண்டோ அமர்ந்தோ சுலோகங்கள், பதங்கள், விருத்தங்கள் முதலியவற்றிற்குச் சுவையையும் கருத்தையும் விளக்க அபிநயிப்பது இலாஷ்யம் ஆகும். நளினமும் மென்மையும் கொண்ட நிருத்தம் இலாஷ்யம் என்பதால் தலபுஷ்பபுட லீநநிதம்பங்கள் போன்ற நளினமும் மென்மையும் கொண்ட கரணங்கள் தேவியால் தோற்றுவிக்கப்பட்டவை. இலாஷ்யத்திற்குத் தக்கம் என்ற பெயரும் உண்டு. தக்கம் என்பது தணிந்தது என்ற பொருளில் நளினமான அபிநயம் நிறையத்தைக் குறிக்கும். வார்த்தைகளின் அர்த்த பாவங்களைக் கைகளால் அபிநயித்துக் காட்ட வேண்டியதே முக்கியமாகையால் பொதுவாக அங்க அசைவுகள் நிதானத்துடன் இலேசாக, தக்க கதியில் நடைபெறுவது இலாஷ்ய என்பதாகும்.

இலாஷ்யம் நான்கு வகைப்படும். அவையாவன: இலாஷ்யம், தாண்டவ இலாஷ்யம், குமாரஇலாஷ்யம், ஸூகுமார இலாஷ்யம் என்பனவாகும். இவற்றில் சுகுமார இலாஷ்யம் என்பது உட்கார்ந்து அபிநயித்தல் ஆகும்.இவை பற்றிய குறிப்பு பரதரின் நாட்டிய சாஷ்திரத்தில் உள்ளது. பரதார்நவம் எனும் நூலில் சாரியலங்கார நடனம் என்பது சாரிகளுடனும் அழகிய அசைவுகளுடன் கூடிய நர்த்தனங்கள் சப்த இலாஷ்யம் என்று விவரிக்கப்படுகின்றன. 13வது அத்தியாயத்தில் சுத்த நாட்டியம், தேசி நாட்டியம், பேருணி, ப்ரேங்கணி, குண்டலி, தண்டிகா, கலசம் என்பவை அவ் ஏழு நாட்டியங்களாகும். இவற்றுள் முதலாவதான சுத்த நாட்டியம் ஏழு வகை ப்ரமண தாண்டவங்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தாண்டவத் தோடும் ஒரு கதி, ஒரு சாரி போன்றவை சேர்க்கப்படுகின்றன. இரண்டாவதான தேசி நாட்டியம் ஐவகைத் தாண்டவங்களாகப் பிரிக்கப்படுகிறது. ஒவ்வொன்றோடும் ஒரு கதி, கரணம், சாரி போன்றன சேர்க்கப்பட்டி ருக்கின்றன. ஒவ்வொன்றிற்கும் அதற்கான தாளமும் சொல்லுக்கட்டும் கொடுக்கப் பட்டிருக்கின்றன. சுத்த நாட்டியம் சிவனாலும் தேசி நாட்டியம் பார்வதி தேவியாலும் ஆடிக்காட்டப் பட்டதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. முற்ற ஐந்து வகை நர்த்தனங்களில் பேருணி, ப்ரேங்கணி, குண்டலி என்பவை ஆதியில் முறையே பிரம்மா சரஷ்வதி, மகாவிஷ்ணு இவர்தளால் ஆடிக்காட்டப்பட்டன. தண்டிகா, கலசம், இரண்டையும் மஹாலக்சுமியே ஆடிக்காட்டினார். இச்சப்த இலாஷ்யங்களில் பேருணி ஐந்து உறுப்புக்களைக் கொண்டது. அவை பின்வருமாறு: 1. கர்கரா: பாதச்செயற்பாடு 2.விஷமம்: நர்த்தனம் குதித்து மெட்டோடு ஆரம்பித்தல் 3.பாவச்ரயம்: கோணங்கி நடனம் 4.கவிச்சாரகம்: உத்தமக் குணங்கள் வாய்ந்த நாயகனைப் பற்றிய வர்ணனை 5.கீதம்: குண்டலி நாட்டியத்திற்குச் சொல்லப்பட்டிருக்கும் சாலகசூட கீதமாகும். பாதங்களைக் கைகளின் முத்திரைக்குத் தகுந்தவாறும், சொல்லுக்கட்டுக்குத் தகுந்தவாறும் அசைக்க வேண்டும்.இந்த நாட்டியத்தில் நாராயண கரணமும் மத்தல்லிகா சாரியும் உபயோகப்படும்.அடுத்து ப்ரேங்கணி என்பது சுற்றுக்களோடு முடிகிற கரணங்களும்,அநேக வேகமான சாரிகளும், மண்டலங்களும் கூடியது.வாத்திய

இசையோடு ஆடப்படும். இதற்கு அடுத்ததாகத் தண்டஇலாஷ்யம். இது பெண்மணிகள் சேர்ந்து கையில் கோலாட்டக்கழி வைத்து அழகாகக் கோல்களை அடித்து ஆடுவதாகும். ப்ரம்மரி அசைவோடு கூடியது. இறுதியாகக் கலசம் என்ற நாட்டியத்திற்கு ஜய மங்கள தாளம் உபயோகப்படுத்தப்படும். கருட ப்லுத கரணமும், ஏடகா க்ரீடித சாரியும் உபயோகப்படுத்த வேண்டும். இவ்வாறு நந்திகேஸ்வரரின் அபிப்ராயப்படி சப்த இலாஷ்யங்கள் பரதரால் விவரிக்கப்பட்டன. இதுவரையில் தாண்டவம் இலாஷ்யம் பற்றிய விளக்கங்களையும் அவற்றின் வகைகளையும் அறிந்து கொள்ளமுடிந்தது. தொடர்ந்து தாண்டவ இலாஷ்ய கூறுகள் பரத நாட்டியத்தில் எவ்வாறு பயன்படுத்தப்படுகின்றன என்று நோக்குகையில் பரத நாட்டியத்திற்கு அடிப்படையாக விளங்குவது அடவுகள். இவை காலடி, தட்டு என்பவற்றுடன் ஒவ்வொரு விதமான கை,கால்களுடன் கூடிய அசைவுகளைக் கொண்டவை. அடைவுகளில் இலாஷ்ய அடைவுகள், தாண்டவ அடைவுகள் என இருவகை உண்டு. இவ்விரு வகைகளையும் ஸ்திரீ புருசர்கள் எல்லோரும் செய்யலாம் என்று சிலர் அபிப்பிராயப்படுகிறார்கள். இந்தப் பாகுபாடு அவசியமில்லை. ஊர்த்துவ தாண்டவம் ஒன்றைத் தவிர மீதி அனைத்தையும் பெண்களும் செய்யலாம். சிவன் பார்வதியைப் பணிக்க இலாஷ்ய அடைவுகள் பார்வதி தேவி மூலம் வெளிவந்தன. தான் ஆடி வந்த நடனமுறையைப் பரதரிஷிக்குக் கற்கும்படி தண்டுமுனிவருக்குகூற அடைவுகளை அவர்களிடமிருந்து கற்றுப் பிரபலப்படுத்தினார்கள். இலாஷ்ய அடைவுகள் ஐந்து பிரிவுகள் கொண்டவை. தட்டடவு, நட்டடைவு அல்லது நாட்டடைவு, குத்தடைவு, சறுக்கலடைவு, சுற்றலடைவு என்ற ஐந்துமாகும். தட்டடைவு என்பது இரு கால்களும் பூமியில் சமமாகப் படிதட்டி முன் படத்தால் சப்தத்தை எழுப்பச் செய்தல். நாட்டடைவு என்பது நின்ற நிலையில் செய்யும் கால் தட்டிற்கு நாட்டடைவு என்று பெயர். குதிக்கால் உயர்ந்த முன்பாதம் பந்தற்கால் போல் காணப்படுவதால் நாட்டடைவு என்ற சொல் பொருந்தும் குத்தடைவு என்பது குதிக்காலை ஊன்றிச் செய்யும் அடைவே. குத்தடைவு சறுக்கலடைவு என்று கீழே முழுமண்டலமாக உட்கார்ந்து ஒரு காலைப் பக்கவாட்டிலோ பின்புறமோ வேகமாகப் பிரித்து நீட்டலுக்கும் சறுக்கலடைவு என்பர். சுற்றலடைவு ஒரு காலைப் பூமியில் ஊன்றி மற்றொருகாலை முழங்கால் அளவிற்குத் தூக்கிச் சக்கரா காரமாகச் சுற்றிச் சமநிலையை அடைவது சுற்றலடைவு. இவையனைத்தும் இலாஷ்யம் சார்ந்தவை. தாண்டவ அடைவுகள் ஐந்து வகைப்படும். முதலாவதாக தத்தல், அடுத்து தாண்டல், மூன்றாவதாக துள்ளல், அடுத்து எகிறல், ஐந்தாவதாக உதறல் போன்ற அடைவுகள் தாண்டவத்தில் ஓர் வகை சார்ந்தவை. தத்தல் என்பது அவரவர் சாமர்த்தியத்துக்குத்தக்க ஏதேனும் ஒரு நிலையிலோ இரு பாதங்களையும் ஒரே நேரத்தில் எடுத்து வைத்தலாகும். தாண்டல் என்பது ஒரு காலையூன்றி மற்ற காலை மடக்கி முழங்கால் மேல் நோக்க முன்னோக்கிப் பாய்ந்து மடக்கிய காலை முன்வைத்து ஊன்றிய கால் அதன் பின்னோடு வந்து சமமாகச் செய்வது தாண்டலடைவு எனப் பெயர்பெறும் அடுத்து துள்ளல் என்பது ஒரு பாதம் மிதிக்கும் அதே நேரத்தில் மறு பாதத்தை மடக்கவோ நீட்டவோ செய்வதற்கு துள்ளலடைவு என்று பெயர். இரு குதிக்கால்களையும் ஜகனத்தில் படும்படி மடக்கி உயரே

கிளம்பி முன்நோக்கிக் குதித்தலுக்கு எகிறலடைவு என்று பெயர். உதறல் என்பதற்கு ஒரு பாதத்தை ஊன்றி, மறு பாதத்தை ஊன்றிய பாதத்தின் முழங்காலுக்கு நேராகத் தூக்கிப் புறங்காலால் பந்தை உதைப்பது போல் செய்வது உதறலடைவாகும். இவைகளைத் தவிர மூன்றுவித அடைவுகள் வழக்கத்தில் இருக்கின்றன. நிலைமண்டல அடைவு, இன்னொன்று தட்டுமெட்டடைவு, மற்றது மண்டியடைவு. இவற்றில் குதியைச் சேர்ந்த தட்டடைவும் நாட்டடைவும் கலந்திருக்கின்றன.

எனவே பரத நாட்டிய அடிப்படை அடைவுகளில் தாண்டவ, இலாஷ்ய அடிப்படை அசைவுகள் விரவிக் காணப்படுவதால் இது ஆண்களாலும் பெண்களாலும் ஆடக்கூடியதாகவே உள்ளது. தாண்டவமும் இலாஷ்யம் ஒருங்கே சேர்க்கை கொண்டது, பரதநாட்டியத்தில்தான் என்பதில் ஐயமில்லை. இதுவரையில் பரதநாட்டிய அடைவுகளில் தாண்டவ இலாஷ்ய அசைவுகள் இடம் பெற்றிருப்பதைக் கருத்தில் கொண்டு இனி பரதநாட்டிய உருப்படிகளில் தாண்டவம் இலாஷ்யம் எவ்வாறு செறிந்து விரவிக்கிடக்கிறது என்பதை நோக்குவோம்.

கூத்த நூலின் 43ஆம் சூத்திரத்தில் 'அல்லியம் உயிர்த்தது அடவுக் கூத்தே' என்ற குறிப்பு பின்வருமாறு விளங்குகிறது. தாண்டவங்களின் முதன்மையானது அடவுக் கூத்து. இதன்படி அடவுக் கூத்தானது விளம்பம், மத்யகம், துரிதம் என்று சொல்லுக் கட்டுக்களுக்கு ஏற்ப அடி, கால் இடை, கை, கூடல், பொதுவாக உடலின் அங்கங்கள் யாவும்; அசைவது. இந்தவகையில் நிருத்த உருப்படிகளில் அடவு என்பது சொக்கம்; இதில் அங்க ஷேஷ்டைகளும் காலடி தட்டுக்களுமே முக்கியமானவை. நடார்ணவத்தில் 'நிருத்தகர்மணி' என்றும் இதில் அடவே என்றும் கூறுவதால் இவை சொக்கமான சுத்த நிருத்த வகைகளையே குறிக்கும். இவை அலாரிப்பு, ஜதீஸ்வரம், போன்ற பரதநாட்டியத்தில் உருப்படிகளில் இடம்பெறுகின்றன. இரச பாவமில்லாது கை, கால் முதலிய உறுப்புக்களின் அசைவினால் இராக, தாளம் முதலியவற்றுடன் ஆடுவதாகும் பரதநாட்டியக் கச்சேரிகளில் ஆரம்பத்தில் இடம்பெறும் நடன உருப்படி அலாரிப்பு. ராகம் சேர்க்காமல், ஒரு தாளத்தில் 'தாம்திதா தெய்வதை' என்ற தத்த காரக் கொணிப்பு மட்டும் பல ஆவர்த்தனங்களில், விளம்ப மத்திய துரித காலங்களில் கடைசியில் ஒரு முத்தாய்வுடன் ஆடப்படும். இங்குப் பாவத்திற்கு இடமில்லை. அலாரிப்பில் அங்கங்கள், உபாங்கங்கள், பிரத்தியாங்கங்கள், பாதபேதங்கள் உபயோகப்படுத்தப்படுகின்றன. அடவுகளின் பற்பல பேதங்களையும் ஹஸ்தப் பிரயோகங்களையும் அங்க சுத்தத்தோடு ஆடப்படும். ஜதீஸ்வரம் இதுவும் நிருத்த உருப்படி வகை ஆகும். இராகத்தோடு நடனத்தை இணைத்திருப்பதைக் காணமுடியும். இராகத்தோடு கூடிய யதி ஆட்டமாகும். முதல் ஸ்வரப்பகுதியை எடுத்துப்பாடியதும் உடனே மேற்காலத்தில் ஒரு தீர்மானத்துடன் ஆடப்படுவது. இங்குத் தாளக்கணக்குகள், ஸ்வர அமைப்பு, அடைவுப்பிரயோகம், தீர்மானம், கரணபேதங்களை உபயோகித்தல் என்பன சேர்க்கப்பட்டுள்ளன. எனவே இங்கும் பாவப்பகுதி இடம் பெறுவதற்குச் சாத்தியமில்லையாதலால் இங்குச் சுத்த நிருத்தம் (தாண்டவ அசைவுகள்) உள்ளது என்பதில் ஐயமில்லை.

எதேனும் ஒரு பாட்டு, செய்யுள், ஸ்லோகம் போன்றவற்றின் கருத்தைப் புலப்படுத்தும் பாவத்தை அடிப்படையாகக் கொண்டு அபிநயிக்கப்படுவது நிருத்தியம் எனப்படும். பாவம், இராகம்,தாளம் மூன்றும் நிரம்பப்பெற்று அங்கம் பிரத்தியாங்கம் உபாங்கம் என்பவற்றால் அபிநயித்து ஆடுவது. இதில் நிருத்தமும் அபிநயமும் கலந்து காணப்படும். நிருத்தியம் இருவகைப்படும். ஒன்று 'பிருதகார்த்த' அதாவது ஆடப்படும் ஒவ்வொரு பாடலும் வெவ்வேறு பொருளை மையமாகக் கொண்டிருத்தல். இரண்டாவது 'ஏகார்த்த' நிருத்தயம். இங்கு காணப்படும் ஒவ்வொரு பாடலும் ஏதேனும் ஒரு மையப் பொருளையே கொண்டு விளங்குவதாக இருக்கும். இது ஒரு கதையைத் தழுவி இருந்தாலும் இருக்கலாம். அந்த வகையில் பரத நாட்டியத்தில் பயன்படுத்தப்படும் உருப்படிகள் இலாஷ்யம் சார்ந்தவை. ஸ்லோகம், கீர்த்தனம், பத வர்ணம், பதம், அஷ்டபதி, ஜாவளி போன்ற உருப்படிகள் பாவ இரசம் மிகுந்தவை.கீர்த்தனை பக்திச்சுவைக்கு அபிநயிப்பது. தெய்வம், நாடு, மொழி, நன்னெறி முதலான எல்லாப் பொருளிலும் கீர்த்தனைகள் இருப்பினும் தெய்வச் சிந்தனை தொடர்பான பக்திச் சுவைக்கு முதன்மை கொடுக்கும் கீர்த்தனைகள் அபிநயத்திற்கு உகந்தவை. பதம், பத வர்ணங்களில் தலைவனை முன்னிலைப்படுத்தியும், தோழியிடம் தன் ஆற்றாமையைச் சொல்லியும் தன் உள்ளத்து உணர்வுகளைத் தலைவி வெளிப்படுத்தும் அபிநய பாவங்கள் கொண்டது. ஜாவளிகள் பல் சுவைப்பட அபிநயிப்பது. பெண்கள் சுவைப்பட அபிநயிப்பதற்கு நிருத்திய உருப்படிகள் சிறந்ததாகக் காணப்படினும் ஆண்களும் உகந்த சாஹித்தியங்களுக்கேற்ப அபிநயிக்க முடிகிறது. இவ்வகை உருப்படிகளில் இலாஷ்யத்தின் இலாவகமும் கருத்துப்பொதிந்த பாவமும் புலப்படுகின்றன என்பது தெள்ளத் தெளிவாகிறது. எனவே இதுவரையில் பரத நாட்டிய அடவுகளிலும் நடன உருப்படிகளிலும் தாண்டவ, இலாஷ்யங்கள் எவ்வாறு சிறப்புக் கொண்டுள்ளது என்பதை அறிந்து கொள்ள முடிந்தது.இனித் தாண்டவ, இலாஷ்ய நடனங்களை ஒப்பீட்டு ரீதியில் ஆராய்வோம்.

'தக்கமும் சொக்கமும் தழுவுதல் கூத்தே' என்று கூத்த நூல் பகர்கின்றது. தண்டுவம் என்பது தாண்டவம். தழைவே என்பது இலாஷ்யம் ஆகும். சொக்கம் என்பது சுத்தநிருத்தம். தக்கம் என்பது தணிந்தது என்ற பொருளில் நளினமான அபிநயம் நிறைந்த இலாஷ்யத்தைக் குறிக்கும். தண்டுதல் என்பது தட்டில் நிலைக்காது வேகத்துடன் ஆடுவது. தாண்டவம் சிவனால் அருளப்பட்டு ஆண்களால் ஆடக்கூடியது. இலாஷ்யம் பார்வதிதேவியால் ஆடப்பட்டுப் பெண்களால் நளினமாக ஆடக்கூடியது. தாண்டவத்தில் ஆங்கிக இயக்கங்கள் தம்முள் கடினமாகப் புணர்வுற்றுக் களிவெறி மீறித் துள்ளும். இலாஷ்யம் இயக்க இயல்புகளின் இணைப்பு இழுமென விழுமிய வகையில் இழைத்திழைத்து நெளியும் இந்த வகையில் தாண்டவம் , இலாஷ்யம் என்ற இரண்டும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. சொக்கமாகிய தாண்டவத்தை அடவுக்கூத்து என்றும், தக்கமாகிய இலாஷ்யத்தை இசைக்கூத்து என்றும் அழைப்பர். இசைக்கூத்தில் யதி, ஸ்வர, வர்ண சொக்கமும் இசைப்பண்ணுக்கு ஏற்ற தக்கமும் அதிகமாகவும் வரும். இசைக்கூத்தில் யாப்பு வார்த்தைகளின் அர்த்த பாவங்களைங் கைகளால் அபிநயித்துக்காட்ட வேண்டியதே முக்கியமாகையால் பொதுவாக 'அங்க

அசைவுகள் நிதானத்துடன் தக்க கதியில் (நடையில்) நடைபெறும். இசைக்கூத்தில் தக்க கதியைச் சொக்கம் தழுவுகிறது. தாண்டவத்தின் சாரிகைக் கூத்தில் சொக்க கதியைத் தக்கம் தழுவுகிறது. இதனைக் கூத்தநூல் பின்வருமாறு கூறுகிறது: 'தக்கம் தழுவிய சொக்கம் சாரிகை'. ஆகவே அடவு சொக்கமும், அபிநயம் தக்கமுமாகும். நடனம் சிறப்பிக்க வேண்டுமாயின் அடவும், அபிநயமும் சேர வேண்டும். பெண்ணும் ஆணுமாய் தக்கமும் சொக்கமும் தம்முள் இணைந்து கொள்கின்றன. எனவே தாண்டவமும் இலாஷ்யமும் ஒன்றையொன்று சார்ந்துள்ளன. ஆகவே தாண்டவமும் இலாஷ்யமும் அசைவுகளில் வேறுபட்டு இருந்தாலும் ஒன்று இன்னொன்றினைத் தழுவி வருவதால் இரண்டும் நடனத்துக்கு முக்கியம். தாண்டவம் ஆண்களாலும் இலாஷ்யம் பெண்களாலும் ஆடப்பட்டு வந்தாலும் இரண்டையும் இருபாலார்களும் செய்யமுடியும்.

துணைநூல்கள்

1. நந்திகேஸ்வரர், பரதார்நவம் : சரஸ்வதி மகால் நூலகம், 1987

2. ஸ்ரீராமதேசிகன் எஸ்.என். (தமிழாக்கம்) , பரதநாட்டிய சாஸ்திரம், சென்னை, உலகத் தமிழராச்சி நிறுவனம், 2001.

3. சாத்தனார் , கூத்தநூல் : வேணுகோபாலப்பிள்ளைப் பதிப்பு, 1996.

சாமிநாதையர் உ.வே., மகாபாரதச் சூடாமணி, சென்னை :உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், 1994.

5. பாலசரஸ்வதி த. மற்றும் வே.ராகவன் , பரதநாட்டியம், சென்னை, ஒளவை நூலகம் , 1959.

6. மாங்குடி துரைராஜய்யர் , ஸ்வபோத பரத நவநீதம் , சென்னை : மூர்த்தி பிரசுராலயம் ,1997.

7. ஞானகுலேந்திரன், பரத இசை மரபு, தஞ்சாவூர், கிருஷ்ணி பதிப்பகம், 1994.

முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பௌதிகவளம் மற்றும் ஆசிரியவளம் தொடர்பான ஆய்வு (யாழ். மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்ட விடய ஆய்வு)

திருமதி. நிருபா அருந்தவம்
முனைவர் ஜெ. இராசநாயகம்
கல்வியியல் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

ஆய்வுச் சுருக்கம்

இவ்வாய்வானது முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பௌதிகவளம் மற்றும் ஆசிரியவளம் தொடர்பான பிரச்சினைகளை ஆராய்கின்றது. யாழ்ப்பாணத்தை அடிப்படையாகவைத்து ஆய்வு மேற்கொள்ளப்படினும் வலிகாமம் கிழக்குப் பிரதேச முன்பள்ளிகள் மாதிரியாகக் கொள்ளப்பட்டன. வலிகாமம் கிழக்குப் பிரதேசமானது, இலங்கையின் வடபால் அமைந்த யாழ். குடாநாட்டிலுள்ள பதினான்கு (14) பிரதேசச் செயலர் பிரிவில் ஒன்றாகவுள்ளது.

முன்பள்ளிகளின் பௌதிகவளத்தில், முன்பள்ளிகளின் சொந்தக் கட்டடம், விளையாட்டு மைதானம், குடிநீர் வசதி, கழிப்பிட வசதி, விளையாட்டுமுற்ற உபகரணங்கள், தளபாடவசதி, பூந்தோட்டம், நிழல்தரு மரங்கள் என்பன கருதப்பட்டன.

ஆசிரிய வளத்தில், ஆசிரியரின் கல்வித்தகைமை, மாதாந்த வேதனம், அவர்களது பொழுதுபோக்கு விடயங்கள், கற்பித்தல்முறை, அனுபவம், பயிற்சி என்பன ஆராயப்பட்டன.

முன்பள்ளிகளின் பௌதிகவள, ஆசிரியரவளப் பிரச்சினையை இனங்காணல், அதன் தன்மையை அளவிடல், அதில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காணல், முன்மொழிவைக் குறிப்பிடல் என்பவற்றை நோக்கமாகக் கொண்டு இவ்வாய்வு உருவாக்கப்பட்டது. இதற்காக 138 முன்பள்ளி ஆசிரியருக்கு வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. எளிய எழுமாற்று மாதிரி எடுத்தலில் தெரியப்பட்ட இருபத்தைந்து (25) முன்பள்ளிகள் உற்றுநோக்கலுக்கு உட்படுத்தப்பட்டன. இதன்போது பதினைந்து விடயங்கள் உள்ளடக்கிய முன்பள்ளியின் 'தரம்காணலின்குறி' என்ற படிவம் பயன்படுத்தப்பட்டது. அத்துடன் பெறப்பட்ட தரவுகளை உறுதிப்படுத்த குழுக்கலந்துரையாடல், நேர்காணல் என்பன பயன்பட்டன. குழுக்கலந்துரை யாடலில் 26 முன்பள்ளி ஆசிரியர்கள் அவர்களது அனுபவத்திற்கேற்ப நான்கு

குழுவாகப் பிரிக்கப்பட்டுத் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. நேர்காணலானது முன்பள்ளிகளுடன் தொடர்பான நான்கு அலுவலகர்களிடம் மேற்கொள்ளப்பட்டது.

தரவு பகுப்பாய்வானது நூற்றுவீதமுறையில் மேற்கொள்ளப்பட்டது. வினாக்கொத்து, உற்றுநோக்கலில் பெற்ற தரவுகள் நூற்றுவீதமுறையில் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன.

ஆய்வின் முடிவுகளை நோக்கின், 2+3+4+ மாணவர்களை ஒன்றாக இருத்திக் கற்பித்தல், முன்பள்ளிகளின் குடிநீர் பெறுவதில்இடர்ப்பாடுகள், பாவிக்கக்கூடிய கழிப்பறைகள் பற்றாக்குறை, ஆக்கத்திறனை ஏற்படுத்தக்கூடிய விளையாட்டு உபகரணப் பற்றாக்குறை, நெருக்கமான குடியிருப்புக்களின் மத்தியில் காணப்படும் முன்பள்ளிகள் சத்தத்தால் பாதிப்புறல், களஆய்வு போன்ற சூழலை அவதானிக்கும் செயற்பாட்டில் ஈடுபடுத்தாமை, தொடர்ந்து கதிரையில் இருத்தி வைத்திருத்தல், ஆசிரியருக்குத் தொழில் திருப்தியின்மை , வேதனப்பற்றாக்குறை, தொழில் நிரந்தரமின்மை போன்ற பிரச்சினைகள் கண்டறியப்பட்டன.

ஆய்வில் விதந்துரைகளாக முன்பள்ளிகளை அரசு பொறுப்பேற்பதுடன், தகுந்த மேற்பார்வையுடன் அரச பாடசாலைகளின் ஆரம்பப் பிரிவாக இதனை இணைக்கலாம், 3+4+ மாணவருக்குக் குறைந்தது ஒவ்வொரு ஆசிரியரையாவது நியமித்துத் தனித்தனியாகக் கற்பித்தலை மேற்கொள்ளல், கள ஆய்வு, பூந்தோட்ட வேலைகளில் மாணவர்களை ஈடுபடுத்துவதன்மூலம் சூழலை நேசிக்கவும், மரங்களைப் பாதுகாக்கவும் வழிப்படுத்தல் என்பன சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

அறிமுகம்

பிறந்த குழந்தையானது தனது தாயின் அரவணைப்பில்; ஆரம்பப் பிள்ளைப்பருவத்தை நிறைவேற்றுகிறது. அதன்பின் வருகின்ற முன்பிள்ளைப் பருவநிலையில் (3-5 வயது) முன்பள்ளியை நாடுகிறது. முன்பள்ளியானது முறைசார்கல்விக்கு ஆயத்தங்களை மேற்கொள்ள உதவும் நிறுவனமாகும். முன்பள்ளி என்றவுடன் இளம் பெண் ஆசிரியையைச் சூழப் பல சிறார்கள் மகிழ்ச்சியுடன் ஆடிப்பாடுவது மனக்கண்முன் தென்படும்.

இருபதாம் நூற்றாண்டின் மத்திய பகுதியில் வலுப்பெற்ற முன்பள்ளியானது பாலர்கல்வி நிலையம், முன்பள்ளிப்பருவ அபிவிருத்தி நிலையம், கிண்டர்கார்டன் (Kindergarden), நார்ஸரி (Nursery) போன்ற பதங்களாலும் அழைக்கப்படும்.

முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பௌதிகவளம் மற்றும் ஆசிரியவளம் தொடர்பான ஆய்வானது யாழ்ப்பாண மாவட்டத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. யாழ்ப்பாணமானது இலங்கையின் வடபகுதியிலுள்ள 1025 சதுரக்கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட இடமாகும். இது ஐந்து கல்வி வலயங்களையும், பதினான்கு பிரதேசச் செயலகப் பிரிவுகளையும் உடையது. யாழ்ப்பாணத்தில் 738 முன்பள்ளிகள் உள்ளன. (2013 வடக்கு மாகாணசபைத் தரவுகள்)

அண்மைக்காலத்தில் அந்தஸ்தை உயர்த்துவதற்காகவும், பொருளாதார நெருக்கடியைச் சீராக்குவதற்காகவும் பெண்கள் அதிகளவில் வேலைக்குச் செல்லும்நிலை அதிகரித்துக் காணப்படுகின்றது. கூட்டுக்குடும்பமுறை அருகிவந்துவிட்டது. எனவே வேலைக்குச் செல்லும் குழந்தைகளின் காப்பகமாக முன்பள்ளி மாறிவருகின்றது. அத்துடன் தற்போது பாடசாலைகளில் தரம் ஒன்று தெரிவுப்பரீட்சைக்குத் தற்போது அதிகளவு முக்கியத்துவம் கொடுக்கப்படுவதால் மாணவர்களைத் தயார்படுத்தலிலும் முன்பள்ளிகள் முக்கிய இடம் பெறுகின்றன.

இலங்கையைப் பொறுத்தவரையில் 1997இல் முன்பிள்ளைக் கல்வியின் முக்கியத்துவத்தை கொள்கையளவில் அரசு ஏற்றது. ஆனால் அரசானது பொறுப்பை ஏற்கவோ, நிறுவனமயப்படுத்தவோ, ஏற்ற ஆசிரிய வளம், ஆசிரியப் பயிற்சிபற்றிக் கவனம் செலுத்தவோ தயாராக இல்லை. எனவே தனியார் துறைகள் முன்பள்ளிகளில் கவனம் செலுத்தும்நிலை உருவாகியது. இதன் காரணமாகச் சகல முன்பள்ளிகளிலும் ஒரே நடைமுறை காணப்படவில்லை. முன்பள்ளியிடையே பாரிய வேறுபாடுகள் வெளிக்காட்டப்படுகின்றன. இதன் காரணமாக முன்பள்ளிகளின் தரம் உயர்த்த வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. முன்பள்ளி தொடர்பாகப் பல பிரச்சினைகள் காணப்படினும் பௌதிகவளம், ஆசிரியர் பிரச்சினைகள், சமூகப் பிரச்சினைகள் பாரிய பிரச்சினைகளாகக் காணப்படுகின்றன.

யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்பள்ளி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகச் சிலவாகும். அவற்றினைக் கருதின் பெரும்பாலான மக்கள் முன்பள்ளிகளின் முக்கியத்துவத்தை உணரவில்லை, பின்தங்கிய பிரதேசத்தில் போதிய முன்பள்ளிகள் இல்லை (தனபாலன்,பா. 2002) என்ற முடிவுகள் அறியப்பட்டன. மேலும் முன்பள்ளிக் கலைத்திட்டம் பொருத்தமற்றது என எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.(நவீனா, தே. 1992).

இவ்ஆய்வின் முக்கியத்துவத்தைக் கருதின் அண்மைக் காலமாக அரசு சார்பற்ற நிறுவனங்கள் பலவும் முன்பள்ளி தொடர்பாக அக்கறை கொள்ள ஆரம்பித்துள்ளன. இந்நிலையில் பின்தங்கிய முன்பள்ளிகள் நன்கு இனங் காணப்படாமையாலும், அவை எதிர் கொள்ளும் பிரச்சினைகள் வெளிக்கொணரப் படாமையாலும், அரசு சார்பற்ற நிறுவனங்களின் உதவிகள் சீரற்ற முறையில் சென்றடைகின்றன.

முன்பள்ளியைத் தொடங்க விரும்பும் தொழில் முனைவோர், முன்பள்ளி தொடர்பாகப் பௌதிகவளம், ஆசிரியர் பிரச்சினைகளைக் கண்காணிக்கும் மேற்பார்வையாளர் மற்றும் ஆலோசகர், பயிற்சி வழங்க விரும்பும் கல்வியலாளர்கள் கல்வி வழங்கும் நிறுவனங்கள், முன்பள்ளித் தரத்தை உயர்த்த புதிய கொள்கை அமைக்க விரும்புவோர் போன்றோருக்கு ஆய்வு முக்கியமானதாக அமையும்.

ஆய்வுமுறையியல்

யாழ்ப்பாண மாவட்டத்தில் 738 முன்பள்ளிகள் உள்ளன. அவை யாவற்றையும் ஆய்வில் கருதமுடியாதுள்ளமையால் யாழ்ப்பாண 14 பிரதேச செயலர் பிரிவில் ஒன்றாகிய வலிகாமம் கிழக்கு (102.2 சதுரக் கிலோமீற்றர்

பரப்பளவு) பிரதேசம் மாதிரியாகக் கொள்ளப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப் படுகிறது. இப்பிரதேசத்தில் 78 முன்பள்ளிகளும் 164 முன்பள்ளி ஆசிரியர்களும், மாணவர்களும் உள்ளனர்.

(அ) ஆய்வின் பொதுநோக்கம் : General Objective

தரமான முன்பள்ளித்திட்டம் உருவாக வலி. கிழக்குப் பிரதேச முன்பள்ளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை இனங்காணல் ஃ வெளிக்கொணரல்

(ஆ) சிறப்பு நோக்கங்கள் :- Specific Objectives

- வலிகாம கிழக்குப் பிரதேச முன்பள்ளிகளில் பௌதிகவள, ஆசிரியர்வள பிரச்சினைகளை இனங்காணல்.
- பௌதிகவளம், ஆசிரியவளம் தொடர்பாகக் கண்டறிந்த பிரச்சினையின் தன்மையை அளவிடல்.
- பிரச்சினையில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை இனங்காணல்.
- - தெரிந்த முன்பள்ளிகளில் பௌதிகவள, ஆசிரியர் தொடர்பாக இனங்கண்ட பிரச்சினையால் முன்பள்ளியின் முன்னேற்றத்தில் ஏற்படும் தாக்கவிளைவை மதிப்பிடல்.
- இனங்கண்ட பௌதிகவள, முன்பள்ளி ஆசிரியர் பிரச்சினைகளைக் கருதி முன்பள்ளிகளை முன்னேற்ற முன்மொழிவுகளைக் குறிப்பிடுதல்.

ஆய்வாளரால் ஆய்வுதொடர்பாகக் கருதப்பட்ட முக்கியப் பிரச்சினைகளின்கீழ் அடங்கும் விடயங்களாவன.

1. பௌதிகவளம் சார் பிரச்சினை

நிரந்தரக் கட்டடம், விளையாட்டு மைதானம், தளபாடவசதி, விளையாட்டுப் பொருட்கள்,

நீர், கழிப்பிட வசதி, 3+4+ற்குத் தனிவகுப்புக்கள், விளையாட்டு முற்ற உபகரணங்கள், நிழல்தரு மரங்கள் தொடர்பான விடயங்கள் அடங்கிய வினாக்கொத்து மூலமும், முன்பள்ளிகளின் தரங்காணலின் குறி எனும் அவதானிப்புப் பத்திரம் மூலமும் தரவுகள் பெறப்பட்டன.

2. ஆசிரியர் சார் பிரச்சினை

கற்பிக்கும் முறை, பொழுதுபோக்கு விடயங்கள், கல்வித்தகைமை, பயிற்சி, வேதனம், அனுபவம் என்பன அடங்கிய வினாக்கொத்து, உற்றுநோக்கல் படிவம் மற்றும் கலந்துரையாடல் மூலம் தகவல்கள் பெறப்பட்டன.

முன்பள்ளி தொடர்பான சமூக நலன் விரும்பிகளிடமும், முன்பள்ளிகளை நடாத்தும் நிர்வாகிகளிடமும் அமைப்பாக்கப்பட்ட வினாக்கள் உடைய நேர்காணல் மூலம் தரவுகள் பெறப்பட்டன.

வினாக்கொத்தானது வலிகாமம் கிழக்கிலுள்ள 164 முன்பள்ளி ஆசிரியருக்கும் நேரடியாகவும், அனுபவம் உள்ள உதவியாளர் மூலமும் வழங்கப்பட்டன. அவற்றில் 138 (84.1%) வினாக்கொத்துக்கள் மீளப்பெறப்பட்டன

வினாக்கொத்தின் உபபிரிவுகளைக் கருதும்போது முதலாவது வினாவானது முன்பள்ளி தொடர்பான தகவல்களைப் பெறும் நான்கு உபபிரிவுகளைக் கொண்டுள்ளது. இரண்டாவது வினாவானது முன்பள்ளி ஆசிரியர் தொடர்பான தகவல்களைப் பெறும் பதினொரு உப வினாக்களைக் கொண்டுள்ளது. மூன்றாவது வினாவானது முன்பள்ளி ஆசிரியரின் பொழுதுபோக்கு விடயங்கள் தொடர்பாக ஆறு உப வினாக்களைக் கொண்டுள்ளது. நான்காவது வினாவானது முன்பள்ளிகளின் பௌதிகவளம் தொடர்பான தகவல்களைப் பெறுவதற்காக பத்தொன்பது உப வினாக்களை கொண்டுள்ளது. ஐந்தாவது வினாவானது 3+ மாணவரின் அறிகைத்திறனை அறிவதற்கு நான்கு உப வினாக்களையும், 4+ மாணவர்களின் அறிகைத்திறனை அறிவதற்குப் பத்து உபவினாக்களையும் கொண்டுள்ளது. ஆறாவது வினாவானது ஆசிரியரது கற்பித்தல்முறை, கற்பித்தல் சாதனங்கள், மாணவரின் வரவு தொடர்பாக அறிவதற்கு ஏழு உப வினாக்களைக் கொண்டுள்ளது.

முன்பள்ளிகளின் தரங்காணலின் குறி எனும் அவதானிப்புப் பத்திரமானது (உற்றுநோக்கல்) சரியீட்டுப் பட்டியல்மூலம் மேற்கொள்ளப்பட்டது. இப்பட்டியலில் எட்டு வினாக்கள் பௌதிகவளம் சார்பாகவும், 7 வினாக்கள் ஆசிரியவளம் சார்பாகவும் உள்ளன. 78 முன்பள்ளிகளில் இருந்து 25 முன்பள்ளிகள் எளிய எழுமாற்று மாதிரிமுறையில் தெரியப்பட்டன.(அட்டவணை 1). ஆய்வாளர் 25 முன்பள்ளிகளுக்கு நேரடியாகச் சென்று 15 விடயங்கள் அவதானித்ததன் விளைவாகப் தரவுகள் பெறப்பட்டன.

வலி.கிழக்கு முன்பள்ளியைச் சேர்ந்த 26 ஆசிரியர்கள் 4 குழுவாக பிரிக்கப்பட்டுக் குழுக்கலந்துரையாடல் மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அனுபவம் கூடிய ஆசிரியர்கள், அனுபவம் குறைந்த ஆசிரியர்கள் என இரு தரமட்டத்தில் அவர்கள் பிரிக்கப்பட்டார்கள். இதன் மூலம் பெற்ற தகவல்கள், வினாக்கொத்து, உற்றுநோக்கலில் பெற்ற தரவுகளிற்கு வலுச்சேர்ப்பதாக அமைந்தது. அவ்வாறு 4 சமூகவிரும்பிகளிடம் பெறப்பட்ட நேர்காணலும் கருத்துக்களை உறுதிப்படுத்த உதவியது.

அட்டவணை 1

2012 ஏப்ரல் தரவின்படி வலிகாமம் கிழக்குப் பிரதேச முன்பள்ளிகள் 78 (ஆதாரம்: வலிகாமம் கிழக்குப் பிரதேசசபை)

பிரதேசம்	முன்பள்ளிகளின் மொத்தம்	எண்ணிக்கை ஆய்விற்கு	ஆசிரியர் எண்ணிக்கை
அச்சுவேலி	8	3	17
புத்தூர்ஃஆவரங்கால்	18	5	38
நீர்வேலிஃஅச்செழு	10	3	22
சிறுப்பிட்டி	6	2	10
கோப்பாய்	6	2	13
உரும்பராய்	12	4	34
ஊரெழு	5	2	12
இருபாலை	9	3	15
வாதரவத்தை	3	1	3
மொத்தம்	**78**	**25**	**164**

தரவுப்பகுப்பாய்வு

வினாக்கொத்து, உற்றுநோக்கலில் பெறப்பட்ட தரவுகள் நூற்றுவீதம் பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட்டன. முதலில் பௌதிகவளம் கருதப்படுகின்றது.

அட்டவணை 2

வினாக்கொத்தில் பெறப்பட்ட பௌதிகவளத் தகவல்கள்(138 ஆசிரியர்களை அடிப்படையாகக் கொண்டு)

இல.	விடயம்	ஆம் N	%
01	முன்பள்ளிக்குச் சொந்தமான கட்டடம் உள்ளதா?	44	31.9
02	முன்பள்ளிக் கட்டடத்தைச் சூழப் பாதுகாப்பு வேலிமதில் உண்டா?	50	36.2
03	3+ 4+ மாணவர்களுக்குத் தனி வகுப்பறை செயற்பாடு உள்ளதா?	59	43.1
04	முன்பள்ளிக் கட்டடத்தின் இடவசதி	102	75
05	விளையாட்டு மைதானம் உண்டா?	85	61.6
06	முன்பள்ளியைச் சூழ நிழல் மரங்கள் உள்ளதா?	68	49.3
07	முன்பள்ளிக்குச் செல்லும் பாதை சீரானதா?	97	70.3
08	நெருக்கமான குடியிருப்புக்களின் மத்தியில் காணப்படல்	47	34.1
09	விளையாட்டு முற்றத்தில் போதிய உபகரணங்கள் உள்ளனவா?	45	32.6
10	பூந்தோட்டம் உள்ளதா?	52	38.5
11	மின்சாரவசதி உள்ளதா?	53	38.5

N - ஆம் என விடையளித்த முன்பள்ளி ஆசிரியரின் எண்ணிக்கை; % - சதவீதம்

இவ்வட்டவணையை நோக்கின் சகல விடயங்களிலும் பிரச்சினைகள் உள்ளமை தெளிவாகின்றது.

அட்டவணை 3

உற்றுநோக்கல்மூலம் பெறப்பட்ட பௌதிகவளத் தகவல்கள் (25 முன்பள்ளிகள்)

இல.	விடயம்	ஆம் N	%
01	முன்பள்ளிக் கட்டட உள், வெளிப்புறம் சுத்தமாகப் பேணல்	14	56
02	கவர்ச்சிகரமான வகுப்பறை காணப்படல்	10	40
03	நீர், மணல் விளையாட்டுக்கு ஏற்ற இடம் இருத்தல்	13	52
04	புத்தகப்பை, தண்ணீர்ப்போத்தல் தொங்கவிட இடம் காணப்படல்	18	72
05	நீர் வசதி	14	56
06	கழிப்பிட வசதி	08	32
07	வாசிப்பு மூலைக்கான பொருட்கள் காணப்படல்	04	16
08	பிள்ளைகளின் பார்வை மட்டத்திற்கு அவர்களது செயற்பாடு காட்சிப்படுத்தல்	14	56

N - ஆம் என விடையளித்த முன்பள்ளி ஆசிரியரின் எண்ணிக்கை

இங்கும் சகல விடயங்களும் திருப்திகரமாக இல்லாவிடினும், குழந்தைகளில் வாசிப்பு ஆர்வத்தைத் தூண்டவேண்டிய வாசிப்பு மூலையானது நான்கு முன்பள்ளிகளில் மட்டும் காணப்பட்டன. அதுவும் கதைப்புத்தகங்களின்றிப் படங்கள், குழந்தைகளின் ஆக்கங்களைக் கொண் டிருந்தன.

அடுத்து ஆசிரிய வளத்தைக் கருதின், வினாக்கொத்தின் அடிப்படையில் பெற்ற தகவல்களின் படி:

- ஆசிரியர் வேதனம் - 90 முன்பள்ளி ஆசிரியர்கள் (65.2%) ரூபா 3000 இலும் குறைவாகப் பெறுகின்றனர்.
- அனுபவ ஆசிரியர் வெளியேறல் - 75% முன்பள்ளி ஆசிரியர்கள் இடைத்தங்கலாக முன்பள்ளிகளைக் கருதுகின்றனர். மேலும் 81.1% ஆசிரியர்கள் 35 வயதிற்கு உட்பட்ட பெண் ஆசிரியர்கள் என்பதால் திருமணத்தின் பொருட்டும் வெளியேறுகின்றனர்.
- ஆசிரியப் பயிற்சி - மூன்று புதிய ஆசிரியர்களைத் தவிரச் சகலரும் ஒரு சில நாள் பயிற்சியாவது பெற்றுள்ளனர்.
- கல்வித்தகைமை - க.பொ.த (சா.த) வரை மட்டுமே 72 ஆசிரியர்கள் (52.2%) கற்றுள்ளனர். 22.9.
- முன்பள்ளி ஆசிரியர்கள் மட்டுமே அடிப்படைக் கணினி அறிவைப் பெற்றுள்ளனர்.
- 47.1% ஆசிரியர்கள் நூலகம் சென்று வாசிக்கும் பழக்கம் அற்றவர்கள்.

வடக்கு மாகாண சபையின் முன்பள்ளிப் பணிப்பாளருடன் மேற்கொண்ட நேர்காணலின்மூலம், வடக்கு மாகாணத்திலுள்ள 2800 முன்பள்ளி ஆசிரியர்களில் 1010 பேர் அடிப்படைக் கல்வித்தகைமை அற்றவர்கள் என்பதை அறியமுடிந்தது. (க.பொ.த (சா.த) இல் மொழி, கணிதப் பாடச்சித்தி அடிப்படைக் கல்வித் தகைமையாகும்.)

அட்டவணை 4

உற்றுநோக்கல்மூலம் பெறப்பட்ட ஆசிரியவளத் தகவல்கள் (25 முன்பள்ளிகள்)

இல.	விடயம் ஆம்	N	%
01	சுதந்திரமாக மாணவர் செயற்பட விளையாட்டு உபகரணம் அனுமதிக்கப் படல்	0	0
02	ஆசிரியர் நட்புடனும் கனிவுடனும் மாணவருடன் உரையாடல்	21	84
03	ஆசிரியர் பிள்ளைகளின் பெயர் சொல்லிக் கூப்பிடல்	20	80
04	பூந்தோட்ட வேலையில் மாணவரை ஈடுபடுத்தல்	0	0
05	வகுப்பிற்கு வெளியில் அழைத்துச் சென்று கற்பித்தல்	12	48

06. ஆசிரியர் தமிழ், ஆங்கில எழுத்துக்கள் எழுதும்முறை அவதானிக்கப்பட்டது.
07. மாணவரது கொப்பிகள் அவதானிக்கப்பட்டன.

முடிவுரை

- 2+3+4+ மாணவர்களைச் சேர்த்து ஒரு வகுப்பில் வைத்துக் கற்பித்தலானது மாணவரது அடைவு மட்டத்தைப் பாதிக்கிறது.
- கல்விமான்கள் கூறியதன் அடிப்படையில் முன்பள்ளிச் செயற்பாட்டை மேற்கொள்வதற்கு, சகல முன்பள்ளிகளிலும் இடப்பற்றாக்குறை உள்ளது.
- நெருக்கமான குடியிருப்புகளுக்கு மத்தியிலுள்ள முன்பள்ளிகள் சத்தங்களாலும், சமூகப்பிரச்சினையாலும் பாதிக்கப்படுகின்றன.
- நவீனக் கற்பித்தல் சாதனப் பாவனையானது மின்சார வசதியால் மட்டுப்படுத்தப்படுகிறது.
- செயற்பாடுகளை மேற்கொள்வதற்குரிய தளபாட அமைப்பு காணப்படவில்லை.
- நீர்வசதி, கழிப்பிட வசதிகள் போதியதாக இல்லை.
- ஆசிரியர்களின் பயிற்சி, வேதனம், கல்வித்தகைமை, கற்பித்தல்முறை என்பன திருப்தியாக இல்லை.
- ஆக்கத்திறனை ஏற்படுத்தக்கூடிய விளையாட்டு உபகரணப் பற்றாக்குறை காணப்படுகிறது.

விதப்புரைகள்

- 3+4+ மாணவர்கள் தனித்தனி வகுப்புக்களில் தனித்தனி ஆசிரியர்களால் கற்பிக்கப்பட வேண்டும்.
- மாணவர்களை ஒரே இடத்தில் இருத்திக் கற்பிக்காது, சுறுசுறுப்பாக இயங்கும் இக்குழந்தைகள், அவர்கள் விரும்பும் செயற்பாட்டில் ஈடுபடவிட வேண்டும்.
- முன்பள்ளிகளை அரசு பொறுப்பேற்பதன்மூலம் அவையிடையே காணப்படும் ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க முடியும்.
- கள ஆய்வு வேலைகள், பூந்தோட்ட வேலைகளில் குழந்தைகளை ஈடுபடவிடுவதன்மூலம், சூழலை நேசிக்கவும், மரங்களைப்பாதுகாக்கவும் வேண்டிய மனநிலையைப் பெறுவர்.

பிரதான கலைச் சொற்கள்

3+ மாணவர்கள் - 3-4 வயதுக்கு உட்பட்டவர்கள்

4+ மாணவர்கள் - 4-5 வயதுக்குட்பட்டவர்கள்

துணை நூல்கள்

1. சந்தானம், எஸ். கணபதி,வி. (2003). **கல்விமனவியலும் குழந்தைக் கல்வியும்**, சென்னை: சாந்தா பப்ளிஷர்ஸ்.
2. ஹஸன், எம். எச். எம். (2006). **முன்பள்ளிக் கல்வி - கலைத்திட்டமும் வழிகாட்டலும்**, மாவனல்ல : ஆ.து.ஆ. பிரிண்டர்ஸ்.

3. ஜெயராசா. சபா. (2001), குழந்தைக்கல்விச் சிந்தனைகள், நல்லூர் : போஸ்கோ பதிப்பகம்.

4. பங்கஜம், பு. (2007), பள்ளி முன்பருவக் கல்வி, சென்னை : சாரதா பதிப்பகம்.

5. அருள்மொழி, செ. (2008), கல்வி ஆய்வுமுறைகள், மட்டக்களப்பு : சத்தியா அருள்மொழி.

6. விளையாட்டு அல்லாத விளையாட்டு, ஆரம்ப பிள்ளைப்பருவ வளர்ச்சி மத்திய நிலையங்களுக்கான வளவழிகாட்டி, (2007), சிறுவர் செயலகம், மகளிர் விவகார அமைச்சு.

7. முன்பள்ளிக்கான சுற்றாடல் கல்வி தொடர்பான ஆலோசனைகள், (2006), மத்திய சுற்றாடல் அதிகாரசபை, சுற்றாடல் அமைச்சு.

ஆய்வுக்கட்டுரைகள்

1. தனபாலன், பா.(2002). யாழ். மாவட்டத்தில் 1980 வரையான காலப்பகுதியில் முன்பள்ளிகளின் விரிவாக்கமும் முகாமைத்துவமும். யாழ்ப்பாணம்: யாழ்.பல்கலைக்கழகம்.

2. நவீனா, தே. (1992). யாழ் மாவட்டத்திலுள்ள முன்பள்ளி ஆசிரியர் கல்விக்குரிய கலைத்திட்டமொன்றை உருவாக்குதல். யாழ்ப்பாணம், யாழ்.பல்கலைக்கழகம்.

இணையத்தளங்கள்

1. Hatice zeynep.I . (2009). Preschool environments and classroom design – Department of Early childhood education. Turkey: Dumlupinar University. 02.09.2013. http://www.ozelacademy.com

2. Campbell, S.B. (1995). Behaviour Problems in Preschool Children. Journal of Child Psychology and Psychiatry. Wiley online library. 04.11.2012. http://onlinelibrary.wiley.com/journal/10.11.11/(ISSN)146-7610

வடமராட்சியின் சிறப்பு மொழி வழக்காறுகள்

முனைவர் சுபதினி ரமேஷ்
மொழியியல் ஆங்கிலத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

1.1 அறிமுகம்

இலங்கையில் யாழ்ப்பாணக் குடாநாடு எனச் சிறப்பாகக் கூறப்படும் பிரதேசத்தில் தனித்தன்மை வாய்ந்ததாக அமைவது வடமராட்சிப் பிரதேசமாகும். இந்த 'வடமராட்சி' என்ற பதம் குறிக்கப்படும் பிரதேசங்களில் சமூக - பண்பாட்டுக் கோலங்களோடு மொழியும் மிகச் சிறப்பு வாய்ந்ததாக அமைகின்றது. இப்பிரதேசத்தின் பெயராகிய வடமராட்சி என்பதைத் தொண்டை நாட்டின் வடபாகத்திலிருந்து வந்தவர்கள் குடிகொண்ட பகுதி வடமராட்சி எனப்பட்டதென்றும், அம்மக்கள் வழங்கினமொழி வடுகெனப்படுவதாகிய தெலுங்கு என்றும் துணிந்துரை கூறியுள்ளனர். (வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண வைபவகௌமுகி: 1918).

மேலும் யாழ்ப்பாண வைபவகௌமுகியில் கிழக்கு நாட்டிலே ஆதியில் குடிகொண்ட மக்கள் திராவிட மக்கள் என்றும், அவர்கள் மிராசி என்ற பதத்தைத் தம் குடியிருப்புகளுக்கு வழங்கியமையால் அதன் வடபாகம் வடமிராசி என்றும், தென்பாகம் தென்மிராசி என்றும் வழங்கினதாகக் கொள்வர். காலப்போக்கில் வடமிராச்சி தென்மிராச்சி என இப்பெயர்கள் திரிந்து வடமிராட்சி, தென்மிராட்சி என விளங்கலாயின. இதுவே பின்னர் வடமராட்சி என்ற பெயர் மாற்றம் பெற்று வழங்கலாயிற்று என்கிறார்கள்(கிருஷ்ணராஜா திருவுடையாள்: 2007).

இலங்கைத் தமிழ் பல கிளைமொழி வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும் யாழ்ப்பாணத் தமிழ் தராதரமானதும், பல சிறப்பியல்புகளைக் கொண்டதும் என அறிஞர்கள் ஏற்றுக்கொள்கிறார்கள். அதுமட்டுமல்லாமல் இலங்கையிலுள்ள ஏனைய கிளைமொழிகளிலிருந்தும் இது வேறுபடுவதற்குக் காரணம், தனக்கேயுரிய விசேடப் பண்புகளையும், புதுமைகளையும் கொண்டிருப்பதாகும். இங்குப் பேசப்படும் தமிழானது இடத்திற்கு இடம், சமுதாயத்திற்குச் சமுதாயம் வேறுபட்டாலும் பேச்சுத்தமிழைப் பொறுத்தவரை இக்கிளைமொழி வேறுபாடுகள் பிரதேசத்திற்குப் பிரதேசம் கூட வேறுபட்டு வழங்குவதை அவற்றின் கூறுகள் எமக்குப் புலப்படுத்துகின்றன. அவ்வகையில், வடமராட்சிப் பிரதேசத்தில் காணப்படும் மொழி வழக்காறுகளைப் பற்றி ஆய்வு செய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

1.2 மொழி வழக்கு

மொழி ஒரு முதன்மையான செய்திப் பரிமாற்றச் சாதனமாக இருந்தாலும் மொழியினை நாம் தனித்துப் பார்க்க முடியாது. ஏனெனில் மொழி மனிதனின் உள்மனத்தோடு எப்பொழுதுமே ஒன்றிச் செல்கிறது, செயல்படுகிறது என்பதாலேயே மொழி மனிதனின் உள்ளக் கிடக்கையைப் பேச்சு வடிவில் வெளிக்கொணர்ந்து அவன் எண்ணங்களை, உணர்ச்சிகளை, கொள்கைகளை, கோட்பாடுகளை வெளிப்படுத்துகிறது (கருணாகரன், சமுதாய மொழியியல்: 1975) எனக் கூறப்படுகிறது.

ஒரு பிரதேசத்தை மனத்தில் வைத்து இலக்கியம் எழுதப்படும்போது அப்பிரதேசத்தின் மொழி வழக்குகள் அவ்விலக்கிய உரையாடல்களில் காணப்படுவது இன்றியமையாததாகும். இவற்றைப் படிப்பதன் மூலம் பிரதேச மொழி வழக்குகளை ஏனைய பிரதேச மக்களும் அறிந்துகொள்ளும் ஆற்றலையும், புரிந்துகொள்ளும் மனோபக்குவத்தையும் பெற்று விடுகின்றனர். அதுமட்டுமல்லாமல் மக்களின் வாழ்க்கை முறைகளிற் காணப்படும் பிரதேச வேறுபாடுகள் கூட மொழி வழக்குகளில் பிரதிபலிப்பதை நாம் அவதானிக்கலாம். அவ்வகையில் வடமராட்சிப் பிரதேசமொழி வழக்காறுகளைப் பல நிலைகளில் ஆராயவேண்டிய தேவை இங்கு ஏற்படுகிறது.

மனிதனின் பரிணாம வளர்ச்சியிலே, அவனுடைய முதலாவது கருத்துப்-பரிமாற்ற ஊடகமான சைகையை அடுத்து மொழி என்ற வகையில் முதன்மை பெறுவது பேச்சுமொழியே. தான் கருதிய எண்ணங்கள் யாவற்றையும் வெளியே புலப்படுத்துவதற்கு மனிதன் வரிவடித்தைக் கைக்கொள்ளத் தொடங்கினான். எனவே மனித எண்ணங்களைப் பிரதிபலிப்பதற்குப் பேச்சுவழக்கிற்கு அடுத்த படியாகவே எழுத்துவழக்கு அமைந்து காணப்படுகிறது. இலக்கண நூலார் பலரும், சங்ககாலந்தொட்டு எழுத்து மொழிக்கே இலக்கணம் வகுத்து வந்துள்ளனர். பேச்சுமொழி எவ்வாறமைதல் வேண்டுமென யாருமே இலக்கணம் செய்ததில்லை. ஏனெனில் படிக்காத பாமரனது பேச்சுமொழியிலும் பச்சைக் குழந்தையின் பேச்சுமொழியிலுங் கூட அடிப்படைமொழி இலக்கணம் அமைந்து கிடக்கிறது. ஆகவே எழுத்துமொழிக்கு மட்டுமன்றிப் பேச்சுமொழிக்கும் இலக்கணம் உண்டு என்பதையும், அவ்விலக்கணமும் தொன்றுதொட்டு வரும் பேச்சுவழக்கை அடிப்படையாகக் கொண்டே அமைந்தது என்பதையும் மொழியியலாளர் அடித்துரைக்கின்றனர்.

1.3 சொல் நிலை

வடமராட்சி மொழி வழக்குகளை இங்குச் சொல்நிலையில் பார்க்கும்போது பாவனை முறைச் சொற்கள், உறவுமுறைச் சொற்கள், உணவு வகைச் சொற்கள், ஆடை ஆபரணச் சொற்கள், விளையாட்டுச் சொற்கள், நம்பிக்கைகள், வழிபாடுகள்-சடங்குச் சொற்கள், சிலேடைகள், பழமொழிகள் எனப் பலவாறாகப் பாகுபடுத்தலாம். இப்பிரதேசத்தில் உதித்த பலர் தம்மறிவிற்கேற்பத் தாம் வாழ்ந்த காலத்தில் சமூகத்திற்குச் செய்த அர்ப்பணிப்புகள் பலவாகும். இவற்றுள் இலக்கியரீதியாக நூல்களை இயற்றியவர்களும்,

வாய்மொழி இலக்கியங்களாகவும் பல வகையில் மொழியை ஊடகமாக்கித் தம் வாழ்வை வளம்படுத்தியுள்ளார்கள். அவ்வகையில் மிகவும் குறிப்பிடத்தக்கவர்களாக அமைபவர்கள் பேராசிரியர் கணபதிப்பிள்ளை, உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், பண்டிதர் வீரகத்தி தொடங்கி செ. கதிர்காமநாதன், புலோலியூர் சதாசிவம், தெணியான் முதல் பேராசிரியர் சிவலிங்கராஜா வரையான ஒரு பாரம்பரியம் தொடர்ந்து கொண்டே வருகிறது. இவர்கள் தங்கள் ஆக்கங்களில் வடமராட்சிப் பிரதேசச் சிறப்பு மொழி வழக்குகளைக் கையாண்டு வந்துள்ளமை, வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தின் கிராமிய வாழ்க்கை வெளிப்படுத்தும் மொழிக் கூறுகளைக் குறிப்பாக வடமராட்சிப் பிரதேச மொழி வழக்கில் காணலாம். பேராசிரியர் சுசீந்திரராஜா (1990 : 90) அவர்கள் தமிழ்மொழி சார்ந்து எழுதிய பலமொழியியல் கட்டுரைகளில் மொழியின் தனித்துவமிக்க சிறப்புக்கூறுகளைக் குறிப்பிடும்போது, பல கிளைமொழிகள் அவ்வப்பிரதேச மொழிக்கூறுகளைத் தெளிவாகப்புலப்படுத்துகின்றன என்கிறார். உதாரணமாக, பின்வரும் பந்தியைப் பார்க்கும்போது,

> *"என்னடி? அக்காத்தைப் பிள்ளை எங்களின்ரை சோமு சக்கட்டையே! செக்கலுக்கை கோக்காலிக்கு மேலை கிடந்து சக்குக் கட்டின புளுக்கொடியலை உமலோடை காவிக்கொண்டு சாமம் சாமமாய்ச் சந்தைக்கு வெளிக்கிட்டான். அங்கை போய் அதை வித்துப் போட்டு வித்த காசுக் கெணை நீத்துப் பெட்டியும், பறளையும், சருவமும், குடுவையும் ஒரு சத்தகமும் வேண்டி வந்தான். சந்தையாலை வந்த உடனும் படபடத்துக்கொண்டு அடுப்புக்கை கிடந்த சாம்பலை அள்ளிப்போட்டு பானையை வைச்சுக் குந்திலை கிடந்த காவோலையை முறிச்சு எரிச்சான். எப்பன் நேரத்தாலை காச்சின சோத்தைச் சம்பலோடை விழுங்கினான். திண்ட சட்டியைக் கழுவ எண்டு போகேக்கை தடுக்குத் தடக்கிச் சிதறுவான் பொத்தெண்டு விழுந்து போனான். பக்கத்திலை குஞ்சுக்கு வைச்ச முட்டையெல்லாம் குஞ்சுக்கடகத்தோடை சரிஞ்சு விழுந்து உடைஞ்சு போச்சு. நான் அந்தக் கோதாரி விழுவானை என்ன செய்ய?"*

மேற்கூறியவற்றுள் காணப்படும் ஒவ்வொரு சொற்களும் பிரதேசத்தில் மக்களின் உரையாடலின்போது வழங்கப்படுபவை. இவை சமூக மொழியியல் கூறுகளைப் புலப்படுத்துவனவாக அமைகின்றன. இது போன்றே மொழியின் வெவ்வேறு கூறுகளையும் அவை வழங்கும் ஒவ்வொரு அம்சங்களிலுமிருந்து அறிந்துகொள்ள முடியும்.

பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களின் பல ஆக்கங்கள் வடமராட்சிப் பிரதேசத்தின் தனிப்பண்புகளை, மொழியின் சிறப்புக் கூறுகளை, சமூக பொருளாதார, பண்பாட்டு அம்சங்களை வெளிக் கொணர்ந்துள்ளமை ஒப்பு நோக்கத்தக்கது. சிறப்பாகத் தம் நாடகங்கள் (நானாடகம், இரு நாடகம்) கட்டுரைகள், நாவல்கள், மொழிபெயர்ப்புகள், கவிதைகள் மூலமாகத் தம்

ஆற்றலைப் புலப்படுத்தியவர். நெடுங்கவிதைகள் பாடுவதிலும் மிகவும் வல்லவராகத் திகழ்ந்தார் என்பதற்கு "தூவுதும் மலரே" (1962) என்னும் நூலும் காதலியாற்றுப் படையும் (1940) மிகச் சிறந்த சான்றுகள் ஆகின்றன. பொதுவாகவே வடமராட்சிப் பிரதேசத்தின் கல்விப் பாரம்பரியம் பெரும்பாலும் பரம்பரைச் சொத்தாகவே காணப்படுகின்றது. இப்பகுதியில் 19ஆம் நூற்றாண்டு வரை பெரும் புலமை பெற்று விளங்கியவர்களின் பட்டியலையும், வரலாற்றையும் பார்க்கும்போது இந்த உண்மை புலனாகும்.

சாதாரணப் பேச்சு வழக்கிலும், உரையாடலிலும் இலக்கணச் சுத்தமான பல சொற்களைக் கையாளுவதை இப்பிரதேசத்தில் அவதானிக்கலாம். சிலர் செந்தமிழ்ப் பாரம்பரியம் மிக்கவர்களாகக் காணப்படுவதையும், அவர்கள் தூயதமிழ் சொற்களைக் குறிப்பிடும் போது மக்களைப் "பிள்ளைகாள்" என அழைப்பதையும் நோக்கலாம். அதுமட்டுமல்லாமல் இப்பிரதேசத்தில் கற்றவர்கள் அதிகமாக வாழ்ந்தமையால் அவர்களின் பேச்சுக்களில் சிலேடையாகப் பேசும் பண்பும் காணப்படுவதுண்டு. குறிப்பாகக் கந்த முருகேசனார், மன்னவன் கந்தப்பு, பண்டிதர் வீரகத்தி போன்றோர் அந்தந்தச் சந்தர்ப்பத்திற்கேற்பச் சிலேடைகளைப் பிரயோகிப்பதையும், பழமொழிகளைக் கையாளுவதையும் காணலாம். ?இப் பழமொழிகள் வடமராட்சிப் பிரதேசத்துக்கே உரிய தனித்துவம் வாய்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவை பற்றிய விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிகவும் அவசியமான ஒன்றாகும். அல்லாமல் வடமராட்சிக்குள்ளே கிராமங்களுக்குக் கிராமம் வேறுபாடான சொற்பிரயோகங்கள் கையாளப்படுவதையும் காணலாம். ஒலியமைப்பிலும், உருபன்நிலையிலும் அவை ?வேறுபட்டவையாகக் காணப்படுகின்றன. நல்ல தமிழ்ச்சொற்கள் நாகரிகம் கலவாத தாழ்த்தப்பட்டோர் எனக் கருதப்படுகின்ற மக்களிடையே அதிகமாகக் காணப்படுவதைக் காணலாம். (சிவலிங்கராஜா, 1984)

1.4 உறவுப்பெயர்களில் மொழிவழக்கு

சமுதாயத்தில் மக்கள் தமக்குள் உறவுகொள்ளும் முறைக்கேற்ப உறவுப் பெயர்களும், அவற்றின் எண்ணிக்கையும், பொருளும், அமைப்பும் கூடப் பிரதேசத்திற்குப் பிரதேசம் வேறுபடக் காணலாம். ஒரு மொழி பேசுவோர் மத்தியிலும் உறவுப்பெயர்கள் பலவாறு வேறுபடுவதுண்டு. இவ்வாறு வேறுபடினும் சில இயல்புகளில் தனி ஒப்புமை இருப்பதும் உண்டு. இவ் வேறுபாடு பொதுவாகப் பண்பாட்டு வேறுபாட்டினாற் தோன்றுகிறது எனலாம். ஒப்புமைக்குக் காரணம் அம்மொழி பேசுவோரிடமுள்ள ஒருமைப்பாடாகலாம். உதாரணமாக உடுப்பிட்டிப் பிரதேசத்தை எடுத்தால் அங்கு வழக்கிலிருக்கும் 'எடா', எடி போன்ற சொற்கள், ஆண்பால் பெண்பாலை மாற்றி அழைக்கப் பயன்படுகின்றன. அதாவது ஆண்பாலைச் சார்ந்தாரை 'எடி' எனவும், பெண்பாலினரை 'எடா' எனவும் அழைக்கின்றனர். ஆனால் இப்பிரயோகம் கரவெட்டிப் பிரதேசத்தில் மழலைப் பருவத்தினரிடம் மட்டும் அதாவது பெரியோர்களால் குழந்தைகளிடம் மட்டுமே கையாளப்படுகிறது. இது ஒரு மொழி பேசுவோராக இருந்தாலும் பிரதேசத்திற்குப் பிரதேசம் காணப்படும் மொழிவழக்கு வேறுப்பாடுகளைப் புலப்படுத்துகிறது.

சமூகத்தில் உறவுமுறையைப் புலப்படுத்தும் சொற்களின் சிறப்பை கீழேக் காணலாம்.

அப்பன்	-	கொப்பன்
ஐயா	-	கொய்யா
அப்பா	-	கொப்பா
ஆச்சி, ஆத்தை	-	கோத்தை
அம்மாத்தை	-	கொம்மாத்தை
அண்ணன்	-	கொண்ணன்
அக்கா	-	கொக்கா
அம்மான்	-	கொம்மான்
அத்தான்	-	கொத்தான்
அண்ணி	-	கொண்ணி

மேலே உள்ளவற்றில் உயிர்எழுத்தில் தொடங்கும் அனைத்து உறவுப் பெயர்களும் முன்னிலை வழக்கமைப்பைப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக:

அப்பா	-	உன் அப்பா	-	கொப்பா
அம்மான்	-	உன் அம்மான்	-	கொம்மான்

இவ்வாறே ஏனையவற்றையும் நோக்கலாம். மேற்கூறிய சொற்கள் யாழ்ப்பாணச் சமூகத்தினர்க்கே பொதுவானவையாகக் கூறப்பட்டாலும், வடமராட்சிக்கு என்று சிறப்பாக வழங்குபவையாகவும் அமைகின்றன. எனினும் காலப்போக்கில் சமூக மாற்றம், வெளி உலகத் தொடர்பு, பிறமொழிக்கல்வி முதலான பல்வேறு காரணிகளாலும் சில வழக்கொழிந்து போவதைக் காணலாம்.

இன்னொரு வகையில் தாயினுடைய தாயைப் பெத்தாச்சி, அம்மாச்சி, பெத்தாத்தை, பேத்தி போன்ற சொற்களால் அழைப்பது பெருவழக்காக இருப்பதை வடமராட்சிப் பிரதேசத்தில் காண லாம். அக்காலத்தில் சமூக அமைப்பில் பெண்கல்வி முக்கியம் பெறாவிட்டாலும் , மரபுவழிக் கல்வியில் புலமைபெற்ற பெண் பரம்பரையை முதன்முறைய ாக வடமராட்சிப் பி ரதேசத்திலேயே காணமுடிகின்றது. புலோலி, வ.கணபதிப்பிள்ளையவர்களின் சகோதரியாகிய பார்பதி அம்மையார் குறித்த ஒரு குடும்பத்தின் இரு பெண்கள் மதுரைத் தமிழ்ப் பண்டிதர் பரிட்சையில் சித்தியெய்தியமைக்குக் காரணமாக இருந்தமையால் அவரைப் 'பாறாச்சி' என மரியாதை வழக்கில் அழைத்தமையை இங்கு நோக்கலாம். முதிர்ப் பெண்டிர் ஆக விளங்கிய பெண்களை 'ஆச்சி' விகுதி சேர்த்து அழைப்பது இப்பகுதியின் வழக்கமாகும். மேலே குறிப்பிட்ட பெத்தாச்சி, அப்பாச்சி என உறவுமுறைப் பெண்பாற் சொற்களும், பெரியப்பு, சீனியப்பு, குஞ்சியப்பு, ஆசையப்பு, பெரியைய்யா, குஞ்சியைய்யா, சீனியைய்யா, ஆசையைய்யா, சீனியம்மான், மூத்தம்மான், பெரியம்மான், ஆசை அம்மான், குஞ்சியம்மான் போன்ற ஆண்பால் உறவுமுறைச் சொற்களும் இப்பகுதியின் மொழி வழக்காறுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டுக்களாக அமைகின்றன.

இவ்வாறான உறவுமுறைப் பெயர்களைவிட அரியாத்தை, பூதாத்தை, வேதாத்தை போன்ற பெண்பால் இடுகுறிப்புப் பெயர்களையும், அரியாத்தை வளவு, பூதாத்தை வளவு என்ற பெண்களின் பெயராக வளவுகளின் பெயர்கள்

வழங்குவதையும் காணலாம். இப்பெயர்கள் வடமராட்சியின் சில பகுதிகளுக்கும், வன்னிப் பிரதேசங்களுக்கும் உள்ள உறவின் காரணமாக எழுந்ததோ என எண்ணத் தோன்றுகிறது. இவை போன்றே சிலம்பன், சிலம்பியாவளவு, பூதன், பூதர்வளவு, பூதறாப்பிட்டி (ஓதறாப்பிட்டி) போன்ற பெயர்களையும் ஆண்களின் பெயர்களோடு சேர்த்து வழங்குவதையும் காணலாம். இத்தகைய பெயர்கள் கிராமங்களில் கல்வியறிவு மிகக்குறைந்த மக்களிடம், குறிப்பாகச் சில சாதி மக்கள் பேச்சில் வழங்கக் காணலாம். அவைமட்டுமன்றி இப் பெயர்கள் இழிவழக்கு என்னும் பொருள்பட்டு வழக்கொழிந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

1.5 இலக்கிய வளம்

வடமராட்சிப் பிரதேசக் கல்விப் பாரம்பரிய வரலாற்றை அடிப்படையாக வைத்துப் பார்க்கும்போது அது ஓர் உயர்ந்த இடத்தில் வைத்துப் பார்க்க வேண்டிய தேவை ஏற்படுகிறது(சிவலிங்கராஜா, 1984). இங்குப் பலர் ஒரு கட்டுக்கோப்பான பாடசாலைக் கல்விக்குள்ளால் வந்தவர்களாக இருப்பது குறிப்பிடத்தக்கது. அதனால் அவர்கள் தங்களின் கல்வியின் செல்வாக்கைக் கொண்டு பட்டப்பெயர்கள் முதல் பாவனைப் பொருட்கள் வரை கையாண்ட மொழிவழக்குகள் சொல்லுந் தரமன்று. இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டாக, சிரித்திரன் பத்திரிகையைக் குறிப்பிடலாம். திரு.சிவஞானசுந்தரம் அவர்களை ஆசிரியராகக் கொண்ட இப் பத்திரிகை வடமராட்சிப் பிரதேசத்திற்குரிய சிறந்த மொழிவழக்காறுகளைப் புலப்படுத்தியதில் முக்கியப் பங்காற்றியுள்ளது. தனியே நகைச்சுவையினூடாக வெளிப்பட்ட பல அம்சங்கள் பின்னர்ச் சிறுகதை, நாவல், கவிதை, புதுக்கவிதை, கேள்வி-பதில் நகைச்சுவைத் துணுக்குகளினூடாக வெளிப்படுத்தப்பட்டு வடமராட்சிப் பிரதேசத்திற்கு ஒரு முத்திரை பதித்தமை ஈண்டுநோக்கத்தக்கது. இதற்கு ஒரு சிறந்த உதாரணமாக, தினகரன் பத்திரிகையில் திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் தினமும் வெளியிட்ட 'சவாரித்தம்பர்' என்னும் கருத்தோவியம் நகைச்சுவையோடு சமூகச் சீர்திருத்தத்தையும், வடமராட்சியின் பழக்க-வழக்கங்களையும், மொழி நடையையும் வெளிக்கொணர்ந்தது. இவர் கையாண்ட மூடல், குட்டான், பனங்கழி, சவுக்கம், பெட்டகம், சத்தகம், சதிலலுப்பு, சாவார், சின்னமேளம், தைலாப்பெட்டி முதலிய சொற்கள் வடமராட்சியை இனங்காட்டுவன. இவை மட்டுமல்லாமல் மள்ளாக் கொட்டை, போக்கணம், அயத்து, இணல், பூழல், வெள்ளண, பீலிப்பட்டை, பச்சடி, கையில், பொட்டழி, சிலுவல், நாறல் போன்ற பல்லாயிரக்கணக்கான சொற்களும், சொற்பிரயோகங்களும் வடமராட்சியின் இலக்கிய வளத்தினைக் கணிசமானளவு பிரதிபலிக்கின்றமை வியப்புடையது.

1.6 உணவு முறைச் சொற்கள்

வடமராட்சிப் பிரதேச உணவுப் பழக்க வழக்கங்களிலே குறிப்பிடத்தக்க தனித்தன்மைகள் இருந்தன. இவற்றைக் குறிப்பிடும் சொற்களின் மூலம் அப்பிரதேச வழக்காறுகள் மொழியின் ஊடாகப் புலப்படும்பாங்கைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையவர்கள் கூறிச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. எடுத்துக்காட்டாக, இப்பகுதியில் வழங்கப்படும் அப்பம் என்னும் சொல்லை வெள்ளை அப்பம், பாலப்பம் எனக் குறிப்பிட்டாலும் இதனைத் தயாரிப்பதற்கு பாவிக்கப்படும் பனங்கள்ளினைக் கொண்டு வெள்ளை அப்பத்தை 'புளிச்சப்பம்' எனக் குறிப்பிட்டுள்ளமையை இங்கு நோக்கலாம். இச்சொற்பிரயோகம் அதிகமாக

வடமராட்சிப் பிரதேச மக்களிடையே மட்டுமே காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

இன்று 'பருத்தித்துறை வடை' என்று உலகமெல்லாம் பேசப்படும் வடைக்கு இப்பிரதேசத்தில் வழங்கிய பெயர் 'கள்ளுவடை' என்பதாகும். அதாவது கள்ளு, சாராயம் குடிக்கும்போது சுவைப்பதற்குப் பயன்படுத்தப்பட்டமையால் இது அப்பெயர் பெற்றிருந்தது. ஆனால் காலப்போக்கில் இது பிரதேசத்தின் பெயரையும் சேர்த்துப் 'பருத்தித்துறை வடை' எனவும், தட்டைவடை என ஏனைய பிரதேசத்தாரும் அழைக்கும் வகையாக மாறிவிட்டது. மேலும் பனங்காய்ப் பணியாரம், எள்ளுப்பா, பாணிப்பிணாட்டு, தடுக்கு, புழுக்கொடியல், மீன்முறி, ஒடியல் போன்றவை சிறப்பு வழக்குச் சொற்களாக வடமராட்சிப் பேச்சு வழக்கில் காணப்படுகின்றன.

1.7 உடை, ஆடை அணிகலச் சொற்கள்

உணவுப்பழக்கங்கள் போன்று உடைகள், ஆடை அணிகள், விளையாட்டுகள், வழிபாடுகள், சடங்குகள், நம்பிக்கைகளும் மொழியினூடாகப் புலப்படுத்தப்படுகின்றன. காதலியாற்றுப்படையில் பேராசிரியர் பின்வருமாறு சொல்லிச் சென்றுள்ளார்.

கந்தை உடையினர்
குறுக்குக் கட்டினர்
சிந்திடு வேர்வையர்
அசைந்த நடையினர் (பாடல் 760: காதலியாற்றுப்படை)

எனப் பெண்களின் உடை பற்றியும், ஆண்களின் உடைபற்றிக் குறிப்பிடுகையில்

மெய்யதி வழக்குற மேலுடை அணிந்து
கையதி லதற்கிணைக் கருங்குடைபிடித்துத்
தலையுது தண்ணிற் தலைப்பாத் தாங்கி

என்ற பாடலில் 'தலைப்பா', 'குறுக்குக்கட்டு' போன்ற சொற்பிரயோகங்கள் பிரதேச வழக்காறுகளுக்குச் சான்றாகின்றன. மேலும் அணிகலன்களின் பெயர்களைப் பின்வரும் பாடல்மூலம் குறிப்பிடுகையில்,

நன்னாட் பார்த்துப் பொன்னை உருக்கி
மணவினைக் கென்றே வரைந்திடு தணியும்
அட்டியல், பதக்கம், பிலாக்கு, மூக்குத்தி
பூரானட்டியல், கீச்சுக்கல் அட்டியல்
கடுகுமணிக் கொலிசு கவுத்தோர் காதுப்பூ
வாளி சிமிக்கி வளையல் தோடு
பட்டணங்காப்பு பீலிக்காப்பு
பாதசரமொடு சங்கிலி சிலம்பு
தூங்கு கடுக்கண் நட்டுவக் காலி (பாடல் 490: காதலியாற்றுப்படை)

என்பவற்றில் பல இன்று பயன்பாட்டில் இல்லையென்றே குறிப்பிடலாம். ஆனால் ஒரு காலக்கட்டத்திலே இவ் அணிகலன்கள் பயன்பாட்டில் இருந்தன என்பதைப்

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் வாய்மொழியூடாக அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது.

1.8 விளையாட்டுச் சொற்கள்

விளையாட்டுச் சொற்களைப் பார்க்கும்போது அவை வடமராட்சிப் பிரதேசத்திற்குரியவையெனக் குறிப்பிடுதல் பொருந்தாவிட்டாலும் சில விளையாட்டுச் சொற்களைக் குறிப்பாகக் கிந்தியடித்தல், கிட்டியடித்தல், சிற்றில் அமைத்துச் சிறுசோறு அட்டு விளையாடுதல், தென்னங்குரும்பையில் சிறு தேர் உருட்டுதல், பட்டமேற்றுதலை கொடிஏற்றுதல் என்றும் பல்வேறு வகையாக விளையாட்டுகளை அழைப்பர். மேலும் சில விளையாட்டுகளைப் பின்வரும் பாடலின்மூலம் வெளிப்படுத்துகின்றமையைக் கீழே காணலாம்.

'தரைமேற் கோடு தயவுடன் கீறித்
தாயக்கட்டை தாவி எறிந்தும்
சோகி யெடுத்துச் சோணாலு பாணா
லேன்றே யுறுக்கி யெறிந்து தானுருட்டியும்

(பாடல் 110: காதலியாற்றுப்படை)

போன்றவை சான்றாகும்.

1.9 சமயச் சடங்குகள், நம்பிக்கைகள் சார்ந்த சொற்கள்

இவைமட்டுமல்லாமல் சமயச் சடங்குகள், நம்பிக்கைகளுடன் கூடிய பல வழிபாட்டுச் சொற்களும் வடமராட்சிப் பிரதேச மொழி வழக்குகளுக்குச் சிறந்த எடுத்துக் காட்டுக்களாகக் காணப்படுகின்றன. இவை யாவும் மேலும் மேலும் ஆராய்வுக்குட்பட வேண்டிய விடயங்களாகும். கோவில்களில் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றும்போது காவடி எடுக்கும் நடைமுறை இருந்து வருகிறது. காவடி வகைகளைப் பற்றிய சொற்களைப் பார்க்கும்போது 'தூக்குக்காவடி', 'பறவைக்காவடி', 'ஆட்டக்காவடி' என வெவ்வேறு பெயரிட்டு அழைக்கும் வழக்கங்களையும், மேலும் பேய், பிசாசு போன்றவற்றில் நம்பிக்கை வைத்திருக்கும் வடமராட்சி மக்கள் 'முனி' என்பதிலும் நம்பிக்கை கொண்டு, அதற்குப் பயப்படுபவர்களாகவும் காணப்படுகிறார்கள். இம் முனி என்பதுடன் ஊர்ப்பெயரை அடையாகக் கொண்டு கோட்டைமுனி, புறாப்பொறுக்கி முனி என வழங்கும் வழக்கம் அங்கு இருந்தது.

வடமராட்சிப் பிரதேச மொழி வழக்குகளுள் குறிப்பிடத்தக்க இடம் பிடிப்பவை திட்டுக்கள். சிறப்பாகக் கிராமப் பகுதிகளிலே வயது வந்தவர்கள் இளையோரைத் திட்டும்போது பிரயோகிக்கப்படும் சொற்களோ, தொடர்களோ மிகவும் சுவாரஸ்யமானவையாகக் காணப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, 'கோதாரி' என்ற சொல் கொலரா என்ற நோயைக் குறிக்கப் பயன்படுத்தப் பட்டிருந்தாலும், நோய் வந்தவர்கள் இறப்புக்கு ஆளாகின்றமையால், அந்நோயின் பெயரைக் கொண்டே கோபமாகப் பேசும் வழக்கம் இங்குக் காணப்படுகின்றது.

கோதாரி விழுவானே விழுவாளே
கோதாரியிலை போவானே ஃ போவாளே

இன்னொருவகையில்

அறுவானே ஃ ளே
புரியனைத் தின்னி ஃ பெண்டிலைத் தின்னி

இங்குத் 'தின்னி' என்ற சொல் இறப்பை, மரணத்தைச் சுட்டுவதாக இருக்கின்றது. இங்கு 'தின்னி' இருபாலாருக்கும் பொதுவானதாகக் கொள்ளப்படும் வழக்கமாகும். மேலும் பிள்ளைகளைத் பேசும் போது திட்டும்போது 'கடுவனைத்தின்னி' என ஆண்பாலையும், 'பிள்ளையைத்தின்னி' எனப் பெண்பாலிலும் குறிப்பிடுதல் இங்கு நோக்கத்தக்கது. இங்கு திட்டுக்கள் பால் விகுதி பெற்று அமைவதைக் காணலாம்.

துலைஞ்சு போவானே /ளே
குறுக்காலை போவானே/ளே
பாடையிலை போவானே/ளே
பத்தி எரிவானே/ளே

இவையாவும் சந்தர்ப்பத்திற்கேற்பக் காரணங்களை அடிப்படையாகக் கொண்டு பேசப்படும் மொழி வழக்குகளாக அமைகின்றன. எனவே மேற்கூறிய வழக்குகள் யாவும் நாட்டார் வழக்காற்றியலினூடாகச் சமூகவியலாளர்களால் மேற்கொள்ளப் பட வேண்டிய ஆய்வாக அமைய வேண்டும்.

1.10 நாடகம் சார்ந்த சொற்கள்

நடைமுறையில் இலக்கிய வழக்கைவிடப் பேச்சு வழக்குகள் செல்வாக்குமிகுந்து சென்றுள்ளமையைப் பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் நானாடாகம் (1940), இருநாடகம் (1952) போன்றவற்றில் தெளிவாகக் காணலாம். ஆரம்பக்காலங்களில் நகைச்சுவையாக மட்டும் பயன்படுத்தப்பட்ட பேச்சு வழக்கு முறையானது காலப்போக்கில் அதனுடைய பயன்பாடு புலப்படும் வகையில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. பிரதேச மண்வாசனை ஊட்டவல்ல ஆற்றல் பேச்சு வழக்கிற்கே உண்டென்பது அனுபவப்பூர்வமாக உணரப்பட்ட ஒன்றாகும். ஈழத்து நாடகங்களிலே பிரதேசப் பேச்சுத் தமிழைப் பயன்படுத்த வேண்டும் என்ற முயற்சியின் முன்னோடியாக விளங்கியவர் பேராசிரியர் கணபதிப்பிள்ளை ஆவார். சில சொற்களை எடுத்துக் காட்டாக இங்கு நோக்கலாம்.

காத்தாலை	மோனை	பறைவளி
என்ரை	நாம்மானை	தலைக்கறுப்பு
இங்கினை	நயிந்தை	தரவளி

மேலும் தொடர்நிலையில் பார்க்கும் போது

கதையோடைகதை
அம்மாவெட்டை
ஓட்டமும் பாட்டமும்
நாயமாக்கிடக்கு

எனவும்,

ஊர்ப்பெயர்களை அடைகொடுத்து ஆட்பெயர்களைக் குறிப்பிடும்போது

மடத்தடிப் பிரக்கிறாசியார்
பொழுதுமுளைச்சான் பொன்னுத்துரை
வாக்குச் சாத்திரி
கொடுப்புச்சப்பி சண்முகம்
பனைவெட்டி ஆழ்வார் எனவும்

மொழி வழக்குகள் கையாளப்படுவதை இங்குக் காணலாம்.

இன்னொருவகையில் இவர் கையாண்ட மொழிநடையில் ஆங்கிலச் சொற்கள் தமிழ்மயப்படுத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டமையையும் நோக்கலாம்.

இறைவர் (driver)
கோச்சு (coach)
வசு (bus)

இம்மொழி வழக்காறுகள் யாழ்ப்பாணக் கிளைமொழிக்குள் வழங்கப் படினும், சிறப்பாக வடமராட்சிப் பிரதேசக் கூறுகளாக அமைவதைக் காணலாம்.

1.11 முடிவுரை

வடமராட்சிப் பிரதேசத்தில் தோன்றிய கல்விப் பாரம்பரியத்தின் பயன்தரு முயற்சிகளாக மேற்கொள்ளப்பட்ட இவ் மொழிசார் ஆய்வுகள் இத்துடன் நின்றுவிடவில்லை. இலக்கியம், நாடகம், மருத்துவம், கல்வி முதலான பல்வேறு துறைகளில் இப்பிரதேசத்தின் ஆளுமை வெளிப்படுத்தப்பட்டுள்ளமையை இப்பிரதேசத்தில் தோன்றிய புலவர்கள் முதல் இன்றைய அறிஞர்கள் வரை, அவர்களின் நூல்கள், வாய்மொழி இலக்கியங்கள், கவிதைகள், அகராதிகள் போன்ற நீண்டதோர் பாரம்பரியம் சான்றாக அமைகின்றது. மேலே தரப்பட்ட ஆய்வுகள் ஓரளவுக்குத்தான் இக்கட்டுரையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்கின்றன. இவ்வாய்வு மேலும் விரிவடையுமானால் வடமராட்சியின் கல்விப் பாரம்பரியம், இலக்கியவளம் யாவும் இப்பிரதேசத்தின் மொழி வழக்காறுகளை இன்னும் வளப்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

துணை நூல்கள்

1. கணபதிப்பிள்ளை. க (1950) காதலியாற்றுப்படை, திருமகள் அச்சகம், சுன்னாகம்.
2. ...., (1940) நானாடகம்.
3. ...., (1952) இருநாடகம்.
4. சண்முகதாஸ்., அ. (1976) நமது மொழியின் இயல்புகள், பாவலர் தெ. அ. துரையப்பாபிள்ளை நினைவுப் பேருரை - 2, மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பளை.

5. சண்முகதாஸ். அ. (1984) தமிழர் திருமண நடைமுறைகள், முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

6. சிவலிங்கராசா. எஸ். (1984) வடமராட்சியின் கல்விப் பாரம்பரியமும், இலக்கியவளமும், வடமராட்சி கல்வி வட்டம், பருத்தித்துறை.

7. ...., (2003) யாழ்ப்பாணத்து வாழ்வியற் கோலங்கள், குமரன் புத்தக இல்லம், கொழும்பு.

8. வன்னியகுலம். சி. (1986) ஈழத்துப் புனைகதைகளிற் பேச்சு- வழக்கு, முத்தமிழ் வெளியீட்டுக் கழகம், யாழ்ப்பாணம்.

9. வேலுப்பிள்ளை. க. (1918) யாழ்ப்பாண வைபவ கௌமுகி, ஜயஸ்ரீ சாரதா பீடேந்திரசாலை, வயாவிளான்.

10. Sanmugadas. A, (1974) "Some Aspects of the Tamil spoken in Sri Lanka," Proceedings of the Tamil. IVth International Tamil Conference/Seminar, Vol II.

11. Subathini.S. Ratnamalar.R, and Balasubramaniam, R. (1998) "Studies in Sri Lankan Tamil Linguistics and Culture," Professor Swaminathan Suseendrarajah Sixty Fifth Birthday Commemoration Volume.

மலேசியத் தமிழர்களிடையே பிறமொழிக் கலப்பு

திரு. இளங்குமரன் சிவநாதன்
சுல்தான் இட்ரிஸ்கல்வியியல் பல்கலைக்கழகம்
மலேசியமொழிபெயர்ப்பாளர் சங்கம்
மலேசியா

குமரிக்கண்டம் அழிந்த போது, பூமத்திய இரேகையின் சிதைந்த கிழக்குப் பகுதி தீவுக் கூட்டங்களில் மலாயா என்ற நாடு தீபகற்பமாக அமைந்து நிலைபெற்று ஏறக்குறைய இருபதாயிரம்ஆண்டுகளாகின்றன. ஆதித்தமிழரும் அவர்தம்தாய் மொழிமரபும் இங்கு வேர் கொண்டு பல காலங்கள் கடந்து விட்டன. பின்னர் கால வோட்டத்தில் பற்பல அரசியல் மாற்றங்களுக்குப் பிறகு மலாயா சுதந்திரம் பெற்று, பின்னர் மலேசியா ஆயிற்று.

உலகநாடுகளில்மலேசியா தனித்தன்மை வாய்ந்த நாடாகும். மலேசியா பலஇனத்தவரையும் பலமொழிகளையும்கொண்ட ஒருநாடாகத் திகழ்வதனை அதன் தனித்தன்மைகளுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். இங்குப் பெரும்பகுதியினர் மலாய்க்காரர்களாகவும், அதற்கடுத்தாற் போல் சீனர்களும் அதற்கு அடுத்த இடத்தில் இந்தியர்களும் (பெரும்பகுதிதமிழர்களாவர்) வசிக்கின்றனர். இப்பிரிவினர் அனைவரும் இனம், மதம், மொழி, கலை, பண்பாடு, நாகரிகம் இலக்கியம் ஆகியவற்றால் வேறுபட்டிருந்தாலும், அனைவரும் ஒற்றுமையாக வாழ்ந்து வருகின்றனர்.

இந்தியர்கள் இந்நாட்டுக்கு வந்துவிட்டகாலந்தொட்டே விரும்பியோ விரும்பாமலோ பல்லின மக்களோடு கலந்து பழகவும் உறவாடவும் வேண்டிய சூழலில், இருந்தனர். சில தலைமுறைகளாக இந்நிலை நீடித்துவருவதால் மலேசிய மண்ணில் வாழும் இந்தியர்கள் பிறமொழிகளைக் கற்றுக் கொள்ளும் சூழல் ஏற்பட்டது. குறிப்பாக மலாய்மொழியில் அவர்கள் ஓரளவு சிறப்பான தேர்ச்சியைக் கொண்டுள்ளனர். மலாய்மொழி மலேசியாவின் அதிகாரத்துவ ஆட்சிமொழியாக இருப்பதுவும் இதற்கு முக்கியக்காரணமாகும். மேலும், நாட்டின் தேசிய கல்வித்திட்டத்தில் எல்லாப்பள்ளிகளிலும் மலாய் மொழி கட்டாயப் பாடமாக இருப்பதனால் மிகுதியான இந்நாட்டுக் குடிமக்கள் அம்மொழியைப் பேசவும், படிக்கவும், எழுதவும் கற்றுள்ளனர். இதைத்தவிர, சீனர், மலாய்க்காரர்கள் இந்தியர்கள் ஆகியோருக்கிடையில்தொடர்புமொழியாகப் பயன்படுவது மலாய்மொழியே என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. ஒருமொழி பேசும் மக்கள், மற்றொரு மொழிபேசும் மக்களோடு அரசியல், சமயம், வாணிகம், கலை முதலானவற்றில் நெருங்கிப்பழகுவதால் மொழிகளிடையே கலப்பு ஏற்படவாய்ப்பு ஏற்படுகின்றது. மொழிக்கலப்பு என்பது ஒரு மொழியிலிருந்து சொற்களையும் இலக்கணக் கூறுகளையும் மற்றொரு மொழி கடன் வாங்கு

தலையும், அம்மொழி பேசுபவர்கள் பிற மொழிச் சொற்களைக் கடன் வாங்கி தங்களது பேச்சுவழக்கில் பயன்படுத்துதலும் ஆகும். இந்நிலை பெரும்பாலும்பல மொழிகளைப் பேசும்மக்களிடை யேசர்வசாதாரணமாக நிகழ்கின்றது என்றாலும், இம்மொழிக்கலப்பு ஏற்பட குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய பொறுப்பு மொழி பெயர்ப்பாளர்களைச் சார்ந்தது. ஒரு சிலவேளைகளில் மொழிபெயர்ப்பாளர்கள் சிரத்தையின்மை மற்றும் சோம்பலின் காரணமாக மூலமொழியில் இருக்கும் சொற்களுக்கு ஏற்ற சரியான சொற்களை மொழி பெயர்க்கப் போகும் மொழியில் தேடிப்பிடித்து ஆளாது அம்மொழியை அச்சொற்களை அப்படியே கடன் வாங்கிப் பயன்படுத்துதல் இந்நிலை பரவலாக ஏற்படக் காரணமாக அமைகின்றது. மலேசியத் தமிழ் மக்களிடையே அவ்வாறு புகுந்துவிட்ட ஒருசில மலாய் சொற்கள் கீழே கொடுக்கப் பட்டிருக்கின்றன.

மலாய்சொற்கள்	தமிழ்வடிவம்	பொருள்-விளக்கம்
Alur	அல்லூரு	கால்வாய்ஓடை
Atap	அத்தாப்பு	கூரைஅமைக்கப்பயன்படும்ஓலை
Belanja	பிளாஞ்சா	செலவு
Bomba	போம்பா	தீயணைப்புப்படை
Bomoh	போமோ	மந்திரவாதி
Campur	சம்போர்	கலத்தல்சேர்த்தல்
Cikgu	செகு	ஆசிரியர்
Cucur	சுச்சோர்	பலகாரம்
Ganti	கெந்தி	மாற்று
Kerani	கிராணி	அலுவலர்
Jaga	ஜாகா	காவலாளி
PajakGadai	பாசாக்கடை	அடகுக்கடை
Pagar	பாகார்	வேலி
Sewa	சேவா	வாடகை
Surat	சூரா	கடிதம்
Syiling	சில்லிங்	சில்லறைக்காசு

இதனைத் தொடர்ந்து ஆய்ந்து பார்க்கும் வேளையில், இவ்வகையாக மொழியைக் கடன்வாங்கும் போக்கை உன்னிப்பாகக் கவனிக்குங்காலை சில ஒருங்கு கடைபிடிக்கப்பட்டிருப்பதும் தெரியவருகின்றது.

அவற்றுள் தமிழில் இருக்கும் 'வ'கரம் மலாய் மொழியில் அப்படியே ஒலிக்கப்படாமல் 'பா' (BA) ஒலியாக மாற்றம் கண்டிருக்கின்றது.

எ.கா

வகை	பாகாய்	Bagai
வாடை	பாடாய்	Badai
வைடூரியம்	பாய்டூரி	Baiduri
வரிசை	பாரிஸ்	Baris
வாயு	பாயு	Bayu

தமிழில் இருக்கும் 'ப'கரம் மலாய் மொழியில் அப்படியே 'பா' (BA) ஒலியாக ஒலிக்கின்றது

பாஷை	பஹாசா	Bahasa
பக்தி	பக்தி	Bakti
பண்டம்	பண்டா	Benda
பூமி	பூமி	Bumi

தமிழில் இருக்கும் 'ச'கரம் மலாய் மொழியில் அப்படியே 'சா' (CA) ஒலியாக ஒலிக்கின்றது.

சக்கரம்	சக்ரா	Cakera
சதுரங்கம்	சாத்தோர்	Catur
சேதாரம்	செடெரா	Cedera
சந்தனம்	சென்டானா	Cendana
செட்டி	செட்டி	Cetti

தமிழில் இருக்கும் 'க'கரம் மலாய் மொழியில் அப்படியே 'கா' (KA) ஒலியாக ஒலிக்கின்றது.

கப்பல்	கப்பால்	Kapal
கபாலம்	கப்பாலா	Kepala
கஞ்சி	கஞ்சி	Kanji
கறி	கறி	Kari
காரணம்	கரானா	Kerana

இங்குக் கொடுக்கப்பட்டிருப்பவை வெறும் எடுத்துக்காட்டுகள் மட்டுமே. இன்னும் பலநூறு சொற்கள் இவ்வாறு வழங்கப்படுகின்றன.

இவற்றைப் போலவே சில சீனச் சொற்களும் இந்தியமக்களிடம் வழங்குகின்றன. அவற்றுள் சில:

சீனச்சொற்கள்	தமிழ்வடிவம்	பொருள்விளக்கம்
Pau	பாவ்	சீனர்கள் விரும்பி உண்ணும் பலகாரம்
Tauhu	தவ்வு	சோயாவால் தயாரிக்கப்படும் உணவு
Meehun	மீஹூன்	சேமியா போன்றிருக்கும் உணவு வகை
Cincai	சின்சாய்	அரைகுறையான வேலை
ngamngam	ஙம்ஙம்	போதுமானதாக, அதிகமாகவும் அல்லாமல் குறைவாகவும் அல்லாமல் மிகச்சரியாக இருப்பது.
AngPow	அங்பாவ்	பரிசுப் பொட்டலம்
FengShui	பெங்சூய்	வாஸ்து
The	தே	தேயிலை

இவ்வாறாக வழங்கும் சொற்கள் இந்தியர்கள் மட்டுமல்லாது பிற இன மக்களுக்குமே இப்படி உச்சரித்தால்தான் புரிகின்றது. அவற்றை மொழிபெயர்த்து, தத்தம் மொழிகளில் கூறினாலும் மிகச்சரியாகச் சொல்லவந்த பொருளை உணர்த்த இயலுவதில்லை. இன்னும் சொல்லப் போனால், சில மலாய் மற்றும் சீன வார்த்தைகள் இந்தியர்களால் சர்வசாதாரணமாகப் பயன்படுத்தப்பட்டு அவை பிற மொழிசொற்கள் அல்ல, மாறாக அவைதமிழ்ச்சொற்களே என்று எண்ணி பிரயோகப்படுத்துவோரும் உள்ளனர். இவை பெரும்பாலும் அடிப்படைக் கல்வியைத் தமிழ்மொழியில் பயிலாதவர்கள் மத்தியிலேயேதான் காணப்படுகின்றது.

டேவிட்நாஜி (2000) கூற்றுப்படி, மலேசியத் தமிழர்களிடையே மேற்கொண்ட ஆய்வில், இளைய மற்றும் நடுத்தர வயதினரிடையேயும் பெண்களிடையேயும் தமிழ்மொழிப் பயன்பாடு குறைந்து வருவதாகக் கண்டறிந்துள்ளனர். இளையவயதினரும், பெண்களும் பிறமொழிகளை (குறிப்பாக ஆங்கிலம்) அதிகமாகப் பயன்படுத்துவதோடு, ஆங்கிலம், மலாய், தமிழ் கலந்த மொழியையும் அதிகமாகப் பயன்படுத்துகின்றனர் என்பது கண்டறியப்பட்டுள்ளது. இதனை வைத்துப் பார்க்கும்போது இரண்டு அல்லது அதற்கும் மேற்பட்ட மொழிகள் ஒரே களத்தில் பயன்படுத்தப்படுவதற்குப் போட்டியிடும் வேளையில் இத்தகைய மொழித்தாவல் தவிர்க்கப்பட இயலாத ஒன்றாக ஆகிவிடுகின்றது (Romaine:2000:49) என்ற கூற்று மிகச்சரியானது எனப் புரியவருகின்றது.

இவ்வாறான நிலை பல மொழிகள் பேசப்படும் மக்களின் மத்தியில் மிக இயல்பாக ஏற்படக்கூடியவைதான் என்றபோதும், இந்நிலை கட்டுக்கடங்காது போகும்போது பிஜி, தென்ஆப்பிரிக்கா, மொரிசியஸ் போன்ற நாடுகளில் ஏற்பட்டுள்ளதுபோல் மொழி சிதைந்து உரு தெரியாமல் அழிந்துவிடவும் வாய்ப்பு இருக்கின்றது. ஆகையால், இந்நிலையை நன்குணர்ந்து செம்மொழியானநம் தமிழ்மொழியைக்காக்கப் பல்வேறு முயற்சிகள் எடுக்கப்படவேண்டிய சூழலில் நாம் இருப்பதை உணர்ந்து செயல்படுவது மிகமிக முக்கியமானதாகும்.

துணைநூல்கள்

1. David &Naji, I. (2000). Do Monorities have to abandon their language- A case study of Malaysian Tamil. International Scope Review 2(3), 1-15.
2. Romaine, S. (2000). Language in Society: An Introduction to Sociolinguistics. Oxford: Oxford University Press.

ஈழத்துச் சாசனங்களும் மொழியும்

முனைவர் செல்வரஞ்சிதம் சிவசுப்பிரமணியம்
முதுநிலை விரிவுரையாளர், தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

1. முகவுரை

சாசனம் என்பது வடமொழிச் சொல். அது தமிழில் கல்வெட்டு என்று அழைக்கப்படுகின்றது. கல்லிலே எழுதப்பட்டதனால் கல்வெட்டு என்று அழைக்கப்படுகின்றது. ஈழத்தில் 13 நூற்றாண்டுகளுக்கு முன்னர் இலக்கிய வரலாறு எழுதப்படவில்லை. இந்நிலையில் சாசனங்கள் பற்றிய ஆய்வு முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. ஈழத்தில் பல சாசனங்கள் மீளபடியெடுத்தும் வாசித்தும் ஆய்வுகள் முன்னெடுக்கப்படுகின்றன. ஆய்வாளர்கள் பலர் சாசனங்களைப் படியெடுத்துப் பதிப்பித்து வந்துள்ளனர். தொல்லியல் அருங்காட்சியகங்கள் சாசனங்களைப் பேணிப் பாதுகாத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மொழி வரலாறு, பண்பாட்டு வரலாறு என்பவற்றை அறிவதற்குச் சாசனங்கள் மூலாதாரமாக அமைகின்றன. இவ்வாய்வு ஈழத்துச் சாசனங்களும் மொழியும் பற்றியதாக அமைகின்றது.

2. ஒலி மாற்றம்

தமிழ்மொழி வரலாற்றில் எழுத்தொலி மாற்றங்கள் பெறும் இடம் முக்கியமானதாகும். இலக்கியங்களில் எழுத்தொலி மாற்றங்கள் சிலவே இடம் பெறுகின்றன. பேச்சு வழக்கில் இவ்வொலி மாற்றங்கள் பெருமளவில் இடம் பெறுகின்றன. பிரதேசத்திற்குப் பிரதேசம் எழுத்தொலிகள் வேறுபடுகின்றன. காலத்திற்குக் காலம் ஒலிமாற்றம் ஏற்படுகின்றது. ஒலிமாற்றம் பேச்சுவழக்கை அடியொற்றியும் கல்லில் எழுதுபவரின் தவறுதலாகவும் ஏற்படுகின்றது. எழுத்தொலி மாற்றங்களை வகைப்படுத்தி நோக்கினால் பேச்சுவழக்கில் ஏற்பட்ட ஒலிமாற்றத்தையும் எழுத்துப் பிழையினால் வரும் ஒலிமாற்றத்தையும் கண்டுகொள்ள முடியும்.

அகரம் எகரமாக ஒலித்தல். எடுத்துக்காட்டு: தெண்டம் (தண்டம்) (வீரமுனைச் செப்பேட்டுச் சாசனம் 14 - 15 வரி); தெரிசனை (தரிசனை) (வீரமுனைச் சேப்பேட்டுச் சானம் 14ம் வரி.) இது வடமொழிச் சொற்கள் தமிழில் வந்து கலந்தமையால் ஏற்பட்டதாகும். யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, பொலன்னறுவை போன்ற பிரதேசங்களில் இந்த ஒலி பயன்படுகின்றது. தென்னிந்திய சாசனங்களிலும் இந்நிலைமை இருந்திருக்கின்றதைக் காணலாம்.

ஆகாரம் அகரமாக ஒலித்தல் எடுத்துக்காட்டு: தீர்த்தம் அட்டுவிப்பதாக (ஆட்டுவிப்பதாக) (இராஜராஜசோழன் கல்வெட்டு, திருக்கேதீஸ்வரம் முகப்பு 2 வரி 22- 33 ப.9. Tam.In.Colo Na.musium) ஐகார ஒலி அகரமாக ஒலிக்கின்றது.

எடுத்துக்காட்டு "நெல்லுக்கு அரவாசி எல்லை" (14நூ. சித்திர வேலாயுதர் சுவாமி கல்வெட்டு.) அரவாசி - (அரைவாசி) தலமுறை -(தலைமுறை) (வீரமுனைச் சாசனம்.) மட்டக்களப்பு, திருக்கோணமலை குருநாகல் ஆகிய பிரதேசங்களில் ஐகார ஒலி அகரமாக ஒலிக்கின்றது. குருநாகலில் ஆலயம் என்ற சொல் ஆலையம் எனக்கூறப்படுகின்றது. மலையாளத்தில் இவ்வொலி பயன்படுகின்றது. மலையாளத்தின் செல்வாக்கும் இதற்கு ஒரு காரணமாகின்றது.

ஆகாரம் யகரமாக ஒலித்தல். எடுத்துக்காட்டு:-"சிறிபராக்கிரமவாகு தேவர்க்கு யாண்டு" (The Tamil Slab Inscription of Parakeramabahu in the National Museum Colombo, ப.39) யாண்டு- (ஆண்டு) என ஆகாரம் யகரமாக ஒலித்தது. தகரத்திற்குப் பதிலாகச் சகரம் ஒலிக்கின்றது. "வைச்ச திருவொந்தா விளக்கு" (இரவிகுலமாணிக்க ஈஸ்வரத் துச்சாசனம் பதவியா முதலாம் இராஜ இராஜசோழனது காலம் 12ஆம் வரி) வைச்ச - (வைத்த) எனத் தகரம் சகரமாக ஒலித்தது.

ஒகரத்திற்குப் பதிலாக உகரம் ஒலி கையாளப்படுகின்றது. "இறுப்பனவற்றில் குடுப்போன்னிடை" (திருக்கேதீஸ்வரக் கல்வெட்டு இராஜராஜ சோழர் காலம் முகப்பு 4 வரி 9 ப. 9 Tam.In. the Colombo National Museum). இது பேச்சு வழக்குச்சொல். ஈழத்திலும் தென்னிந்தியக் கல்வெட்டுக்களிலும் பொதுவாக இவ்வொலி பயன்படுகின்றது. குடுப்போன் - (கொடுப்போன்) என ஒகரத்துக்குப் பதிலாக உகரம் ஒலித்தது. ககர ஒலிக்குப் பதிலாக யகர ஒலி பயன்பட்டுள்ளது. எடுத்துக்காட்டு :- வைகாசி 20ஆம் தியதி. (The Tamil Pillar Inception of the reign of Vijayabahu VI At the Colombo Museum, ப.75, 4ம் வரி) தியதி - (திகதி) என ககரத்துக்குப் பதிலாக யகரம் ஒலித்தது. "காராம் பசுவைக் கொண்ண பேர்கள்," (நல்லூர்க் கைலாசநாதர் கோவில் கல்வெட்டு, நல்லூர் நூதனசாலை) (கொன்ற பேர்கள்), னகரத்திற்குப் பதிலாக ணகர ஒலி பயன்பட்டுள்ளது. றகரத்திற்குப் பதிலாக ணகர ஒலி பயன்பட்டுள்ளது. (இங்குக் கொண்ண பேர்கள் என்பது பேச்சு வழக்கு. பெயர்களுக்குப் பதிலாகப் பேர்கள் பயன்படுவது வழக்கம்.

ஏகாரம் எகரமாக ஒலித்தல், தெவற்கு - தேவற்கு, (The Temple of Vishnu at Anuradhapura Tamil In.Colombo National Museum, ப.32.) ஓகாரம் ஒகரமாக ஒலித்தல். எடுத்துக்காட்டு

திருக்கொயில் (திருக்கோயில்), (சித்திர வேலாயுதசுவாமி கோயில் கல்வெட்டு) எகரம், ஏகாரம், ஒகரம், ஓகாரம் என்பன ஒரே மாதிரித்தான் சாசனங்களில் எழுதப்படுகின்றன. புள்ளிகள் இடப்படுவதில்லை. அதனால் இவை ஒரேமாதிரி வாசிக்கப்படுகின்றன. வாசிப்பவர்கள் உரை எழுதுகின்றவர்கள் அதன் வேறுபாட்டை உணர்ந்து சொல்லவேண்டும்.

"மெய்யின் இயற்கை புள்ளியொடு நிலையல்"

தொல்காப்பியம் எழு. நூன்மரபு, ப.15.

"எகர ஏகரத்து இயற்கையும் அற்றே"

மாத்திரையில் குறைந்த எழுத்துக்கள் தொல்காப்பியர் காலத்தில் புள்ளிபெற்றன. மாத்திரையில் கூடிய எழுத்துக்கள் புள்ளி இல்லாமல் வழங்கின. இதனைச் சானனங்களில் காணமுடியும். எழுதுபவர் புள்ளி இடாமல் அல்லது புள்ளி இட்டது தெரியாமல் இருக்கும் இடங்களைச் சாசனங்களில் காணலாம். வீரமாமுனிவர்தான் இந்தப் புள்ளியை மாற்றி எகர ஒகரத்திற்கு முறையே காலையும் சுழியையும் ஏற்படுத்தினார். இதனைச் சாசனங்களில் உள்ள எழுத்துக்களின் ஒலி அமைப்புக் காட்டுகின்றது. சாசனங்களைப் படியெடுத்துப் பதிப்பிக்கின்ற பொழுது கல்வெட்டில் உள்ளபடியே எழுத்துக்களைக் கொடுக்க வேண்டும். அதற்கு உரை எழுதும் பொழுது கல்வெட்டு மூலத்தில் இவ்வாறு இருக்கின்றது. இவ்வாறு மாற்றி வாசிக்கலாம். மூலத்தை மாற்றினால் மொழிமாறும். வரலாறு மாறும்.

ழகரத்துக்குப் பதிலாக ளகரத்தைப் பயன்படுத்துவர். தை மாதம் 21ஆம் திகதி வெள்ளிக்கிளமை (கிழமை), 1905 ஆம் அண்டு மார்களி மாதம் 05ஆம் திகதி (மார்கழி) சித்திரவெலாயுத சுவாமி கோயில் கிளக்கு (கிழக்கு) (சித்திரவேலாயுத சுவாமி கோயில் கல்வெட்டு). இவை எழுத்துப் பிழையினால் ஏற்பட்டவை. றகரம் ரகரமாகப் பயன்படுதல் எடுத்துக்காட்டு, தெர்க்கு - தெற்கு "அடிப்புட்டி தெர்க்க ஏறு" (வீரமுனைச் சாசனம்) றகர ரகர வேறுபாடுகள் இந்தியப் பேச்சுவழக்கில் நிறையக் காணப்படுகின்றன. ணகரத்திற்குப் பதிலாக னகரம் பயன்படுகின்றது. நிசமாங் கொடுக்கவும் என்டு (எண்டு) (வீரமுனைச் சாசனம்).

இணுவில் கந்தசுவாமி கோவில் வாசல் படி கல்வெட்டு 1909 ஆம் ஆண்டு எழுதப்பட்டது. எகர ஏகாத்திற்கு உரிய வேறுபாடு தெரிகின்றது. "கோபுர வேலை உபயம்" (இணுவில் கந்தசுவாமி முகப்பு கல்வெட்டு) கல்வெட்டுக்களில் உள்ள ஒலி வடிவம், வரி வடிவம் என்பன இந்தக் கல்வெட்டு எந்தக்காலத்தது என்பதை உய்த்துணர வைக்கின்றன. கல்வெட்டுக்களின் காலத்தை உறுதி செய்ய உறுதுணை புரிகின்றன. காலவளர்ச்சியை இந்தக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

3. புணர்ச்சி

தமிழ்மொழியில் உயிர் எழுத்துக்கள் அருகருகே வரும்பொழுது உடம்படுத்தி எழுதுகின்ற மரபு காணப்படுகின்றது.

"எல்லா மொழிக்கும் உயிர்வரு வழியே
உடம்படு மெய்யின் உருபுகொளல் வரையார்"

(தொல்காப்பியம் எழு. புணரியில். சூ 38)

சாசனங்களில் உடம்படு மெய்யினை உடம்படுத்தாமலும் உடம்படுத்தியும் எழுதுவதைக் காணலாம். "இத்தனையும் இத்தேவர்க்கு இறைஇலி" (சோழர் காலத்து மாதோட்டத்துக் கல்வெட்டு 23ஆம் வரி ப.396. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்.) அரிசி திருவமிர்தம், அடுவிக்கும் மாணி இரண்டுக்கு, (சோழர்காலத்து மாதோட்டத்துக் கல்வெட்டு நான்காம் முகம் 19-21 ஆம் வரி ப.396. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்.) திருவமிர்தம் என்பதில் உடம்படு மெய் புணர்த்தியுள்ளது. மாணி இரண்டுக்கு என்பதில் உடம்படுமெய் புணர்த்தாமல் எழுதப்பட்டுள்ளது. "திசைவிளக்கு திசை ஆயிரவர் ஐஞ்நூற்றுவர்" என ஆயிரவர்

என உடம்படு மெய் புணராமல் வருகின்றது. திசை ஆயிரவர் (பொலன்னறுவை ஐஞ்நூற்றுவர் சாசனம், ப.404, வரி.2, இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்) அய்யத்துணைச் செட்டி இட்டது. (பதவியா கோயிற் சாசனம், வரி.3, ப.406. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்.) உயிர்முன் உயிர் வருகின்றது. உடம்படு மெய் புணரவில்லை. பெரும்பாலான சாசனங்களில் உடம்படுமெய் புணராமல் வருகின்றதை அவதானிக்கலாம்.

கிழக்குக் குழி எல்லை தெற்கெல்லை தெற்கு + எல்லை - தெற்கெல்லை. (நிலாவெளிக் கல்வெட்டு இலங்கைத் தமிழ்ச்சாசனம் வரி 8, ப.406.) உகரம் உயிர்வரும் பொழுது மெய்யை விட்டு நீங்கி உயிரேற இடம் கொடுத்து நிற்கின்றது. மரபு இலக்கணங்களான தொல்காப்பியம் இதனைக் குறிப்பிடும். அந்த மரபு கல்வெட்டுக்களில் பேணப்படுகின்றது. நிலைமொழியீற்றில் உகரம் வந்து வருமொழியில் யகரம் வந்தால் இகரமாக மாறும் என்பது தொல்காப்பியரின் கருத்தாகும். "ஸ்ரீ சோழ இலங்கேஸ்வர தேவற்கி யாண்டு" தேவற்கு + யாண்டு - தேவற்கியாண்டு (கந்தளாய்ச் சாசனம், திருக்கோணமலை மாவட்டம், வரி 2 - 3, ப.408.) எனக் குற்றியலிகரமாகப் புணர்ந்துள்ளது.

நிலைமொழியீற்றில் மகரம் வந்து வருமொழியில் வல்லினம் வந்தால் மகர ஈறு கெட்டு ஙகரம் தோன்றும் எனத் தொல்காப்பியம் குறிப்பிடும். புத்திரனுங் கவறையும் காத்திரிவனுங் (புத்திரனும் கவறையும்) (ஐந்நூற்றுவரின் வீரசாசனம்,) பதவியா, 12 நூ.வரி 9, ப.408. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்) என நிலை மொழியீற்றில் மகரம் வந்து வருமொழி முதலில் வல்லினம் வந்து மகரம் கெட்டு ஙகரம் தோன்றியுள்ளது. புணர்ச்சியில் மெல்லினம் புகுத்துதல் என்பது தெலுங்குமொழியின் செல்வாக்கு. இது திராவிட மொழிக்கும் பொருந்தும். இப்புணர்ச்சி விதிகள் பேணப்பட்டு வந்துள்ளமையைப் பார்க்கும்பொழுது உயர்ந்த இலக்கியத்தமிழ் கையாளப்பட்டதைக் காணலாம்.

4. பெயர்ச்சொல்

பெயர்ச்சொல் அடிச்சொற்களுடன் விகுதிகள் சேரும்பொழுது உருவாகின்றது. பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், அறுவகைப் பெயர்களுக்கும் பால் அறிகிளவிகளைச் சேர்க்கும் பொழுது பெயர்ச்சொல் உருவாகின்றது. பெயர் அடிச்சொல்லுடன் விகுதி சேர்ந்து பெயர் உண்டாகின்றது. எடுத்துக்காட்டு: மரக்கலம் தென்னவர், அம்பலம். வினையடிச் சொல்லுடன் விகுதி சேர்ந்து பெயர் உண்டாகின்றது. செய்வார்கள், எடுப்பார், உள்ளிட்டார் என வரும் உதாரணங்கள் வினையால் அணையும் பெயர்களாக உள்ளன.

5. வினைச்சொல்

வினையெச்சம் ,பெயரெச்சம் என்பன பரவலாகக் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. "ஆனை குதிரை கொடு (கொண்டு) வந்த மரக்கலம்" - வந்து என்பது பெயரெச்சம் (முதலாம் பராக்கிரமபாகுவின் நயினாதீவுக் கல்வெட்டு, வரி 11) "இட்டுக்குடுத்த இன்நிலம்" (உழகாயகித்தனின் தான சாசனம், மோறகஹவல, வரி 11-12 பக். 433, இலங்கைச் சாசனம்) இதில் குடுத்த என்பது பெயரெச்சம்.

"இட்ட காசு 35 பொன்" (நங்கை சாளியின் தான சாசனம், விஜயராஜ சதுர்வேதி மங்கலம், கந்தளாய், வரி 20 பக். 417, இலங்கைச் சாசனம்) மேற்குறிப்பிட்டவற்றில் வந்த, குடுத்த, இட்ட என்ற பெயரெச்சங்கள் சாசனங்களில் பயன்படுத்தப் பட்டுள்ளன.

"கல்லிலும் செம்பிலும் எழுத்து வெட்டிவித்து" (நயினாதீவுக் கல்வெட்டு, வரி 21 பக். 443, இலங்கைத் தமிழ்ச்சாசனம்) "திருவிளக்கெண்ணைக்கென்று வைத்துக் குடுத்தோம்" (நானாதேசிப் பட்டினத்து வீரசாசனம், குருநாகல் மாவட்டம், 12. நூற்றாண்டு, வரி 26-27 பக். 427, இலங்கைத் தமிழ்ச்சாசனம்) "வெள்ளித்தாலி செய்வித்துப் பதினெண்பூமி எறி வீரந்தானம்" (தன் மசாகரப்பட்டினத்து வீரசாசனம், மாத்தளை மாவட்டம், 12.நூற்றாண்டு, வரி.21, பக்.425, இலங்கைத் தமிழ்ச்சாசனம்) "அமைப்பித்துக் கொண்டு" (நான்கு நாட்டார் கல்வெட்டு, தமிழ்ப் பகுதியின் வாசகம், வரி 6, பக். 393, இலங்கைச் சாசனம்), என வைத்து, வெட்டுவித்து, செய்வித்து, அமைப்பித்து என்ற இறந்தகால வினையெச்சங்கள் சாசனங்களில் பயிலப்படுகின்றன. அமைப்பித்து என்ற எச்சம் முன்னைய காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் வழமையாகும். வெட்டுவித்து, செய்வித்து என வரும் வினையெச்சங்கள் பிந்திய காலத்தில் எழுந்த சாசனங்களில் வருகின்றன.

நன்னூல் வியங்கோள் வினைமுற்று விகுதிகளாக இய, இயர் என்பனவற்றைக் கூறுகின்றது. வீரசோழியம், வியங்கோள், வினைமுற்று விகுதியாகக் க என்பதைக் கூறுகிறது. "விளக்கு ஒன்றும் எரிக்கக் கடவார்களாக" (வானவன் மாதேவி ஈஸ்வரத்துச் சாசனங்கள், பொலன்னறுவை, வரி 21, பக். 400, இலங்கைச் சாசனங்கள்) "வீரக்கொடியோம் அறமறவற்க" க, கடவார் என்ற வியங்கோள் விகுதிகள் மேல்வரும் சாசனங்களில் வருவதைக் காணலம். கடவன் (செலுத்தக்கடவன்), கடவேன் (அளக்கக் கடவேன்), கடவோம் (இறுக்கக் கடவோம்), கடவார்கள் (அனுபவிக்கக் கடவார்கள்), கடவது (செல்லக் கடவது) என சாசனங்களில் கடவன், கடவர் என்ற விகுதிகள் வியங்கோள் வினைமுற்று விகுதியாக அமைகின்றன. இவற்றைத் துணைவினைகள் என்றும் நோக்கலாம். வியங்கோள்வினைமுற்றாக வந்த துணைவினைகள் எனக் கூறலாம்.

சாசனங்களில் கூட்டுவினை, துணைவினைகள், பெருமளவில் பயன்படுகின்றன. கூட்டுவினையின் இரண்டாம் உறுப்பு துணைவினை எனப்படும். இது கால இடைநிலை விகுதி பெற்று அமையும். முதலாவது உறுப்பு முதல்வினை எனப்படும். இது பெயராக அல்லது வினையாக அமையும். கால இடைநிலை பெறாது முதல்வினை அமையும், அகப்பட்ட, தண்டப்பட்டு, உட்பட என்ற கூட்டு வினையில் பட்ட, பட்டு, பட என வரும் சொற்கள் துணை வினைகளாகும்.

நிபந்தனைப் பொருளை உணர்த்தும் வினை வடிவங்கள் சாசனங்களில் வருகின்றன. இல், அகில், ஆயில், ஆகையால் என்ற விகுதிகள் சேரும் போது நிபந்தனை வினை உருவாகின்றது. குத்துக்காற்படில், சுருங்கில் (இல்), குடோமாகில் (ஆகில்), குடோமாயில் (ஆயில்), குடுக்கையால் (ஆகையால்) என்ற நிபந்தனை வினைகள் சாசனங்களில் காணப்படுகின்றன. சாசனங்களில் எதிர்மறை வடிவங்கள் காணப்படுகின்றன.

பெயரடை எனத் தமிழ் இலக்கணக்காரர் நேரடியாகக் கூறவில்லை. ஆனால் உரிச்சொற்கள் எனக் கூறப்பட்டவற்றுள் சில உரிச்சொற்கள் அடையாக உள்ளன. பெயரடைகள் திசைகளைக் குறிக்கும் அடைகளாகவும் அளவைக் குறிக்கும் அடைகளாகவும் வினைப்பகுதிகளைக் குறிக்கும் அடைகளாகவும் சிறப்பு அடைகள் எனப் பெயரடைகள் பலவாறு வருகின்றன.

பெருந்தெரு - (மாதோட்டக் கல்வெட்டு, இலங்கைச் தமிழ்ச்சாசனம். வரி 6, ப.396,) சிறுகுளம் (திருக்கேதீஸ்வரம், 1ஆம் இராஜேந்திரன் காலத்துத் தூண் கல்வெட்டு, வரி13, ப.398, இலங்கை தமிழ்ச் சாசனம்) மேல்வரும் உதாரணங்கள் அளவைக் குறிக்கும் பெயரடைகளாக உள்ளன. மாப்புகழ் - வானவன்மாதேவி ஈஸ்வரத்து சாசனம், பொலன்னறுவை, இலங்கைத் தமிழ்ச்சாசனம் வரி7 ப.399,) மாதவம் (நிசங்க மல்லன் காலத்துச் சாசனம், வரி 9-10,ப.444.) விளைநிலம், வருபுனல், குரைகடல் என்ற உதாரணங்களில் வினைப் பகுதிகள் பெயருக்கு அடையாக வந்துள்ளன. இவை பெயடைகள் எனப்பட்டன.

பெயர்ச்சொற்களின் சிறப்பு இலக்கணம் வேற்றுமை உருபு ஏற்றல், பெயர்ச்சொற்கள் வேற்றுமை உருபுகளை ஏற்றுவருவதைச் சாசனங்கள் காட்டுகின்றன.

எடுத்துக்காட்டு

ஆறுகழஞ்சு பொன்னால் முடியும், முக்கழஞ்சு பொன்னால் மாலையும் (நங்கை சாளியின் தான சாசனம், கந்தளாய், இலங்கைத் தமிழ்ச் சாசனம், வரி 10-11 ப. 417) மூன்றாம் வேற்றுமையின் உருபாக ஆல் விளங்குகின்றது. தொல்காப்பியர் ஆன் உருபைக் குறிப்பிட்டார். வீரசோழியம் ஆல் உருபைக் கூறுகின்றது. வீரசோழியம் குறிப்பிடும். ஆல் உருபு இங்குச் சாசனங்களில் பேசப்படுகின்றது. வன்பெருங்கோலால் ஐங்கோல் உட்பட (இலங்கைத் தமிழ்ச் சாசனம், வரி 1-2 ப.396). நெய்யும் தறிகளால் (இலங்கைத் தமிழ்ச் சாசனம், வரி 4-5 ப. 396). ஆல் உருபு சாசனங்களில் பெருமளவு கையாளப்படுகின்றது. "எண்ணை கொண்டு திருநொந்தா விளக்கு" (இலங்கைத் தமிழ்ச் சாசனம், வரி 15, ப. 399) கொண்டு என்பது மூன்றாம் வேற்றுமையின் சொல்லுருபாகப் பயன்படுகின்றது. இராஜராஜப் பெரும்பள்ளிக்கு வைத்து நொந்தா விளக்கு (ராஜராஜப் பெரும்பள்ளி பெரியகுளம் திருக்கோணமலை மாவட்டம்.)

நான்காம் வேற்றுமை உருபான கு கொடைப் பொருளில் வருகின்றது. "மாக்கோதைப் பள்ளியில் கம்மியருங்கூடி நின்று இத்தர்மம்" ஏழாம் வேற்றுமை இடப்பொருளில் இல் உருபு பயன்பட்டது. தொல்காப்பியம் ஏழாம் வேற்றுமையின் சொல் உருபுகளாக 28ஐக் குறிப்பிடும். (வீரசோழியம் பக்கல் (பக்கம்) என்பதை உருபாகக் கூறுகின்றது. சாசனங்களில் பக்கல் (பக்கம்) பயன்படுவதைக் காணலாம். கெழில் முடியும் முன்னவர் பக்கல் தென்னவர் (இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், வரி 21-22, பக். 397) "சாத்தன் பக்கல் வைச்ச திருநொந்தா விளக்கு" (வரி9-405) பக்கல் (பக்கம்) இடப்பொருளை

உணர்த்துகின்றது. ஐந்தாம் வேற்றுமையின் சொல்லுருபுகளான நின்று, இருந்து என்பனவும் சாசனங்களில் கையாளப்படுகின்றன.

ஒன்று, ஓர், ஒரு, இரு, ஈர், இரண்டு மூன்று, மு, மூ, நாலு, நான்கு, ஐந்து, ஐஞ்சு, அஞ்சு, அறு, ஆறு, ஏழ் ஏழு என வரும் எண்களை எண்ணும் பெயர்கள் என இலக்கண நூல்கள் குறிப்பிடும். இவ் எண்ணுப் பெயர்கள் ஈழத்துச் சாசனங்களில் காணப்படுகின்றன. ஒரு இரு என்பன மெய்யெழுத்துக்கு முன்னுக்கு அடையாக வரும், ஓர், ஈர் என்பன உயிர் எழுத்திற்கு முன்னால் வருவன. எடுத்துக்காட்டு :- ஓர் ஆடு ஒரு மாடு அறு நாளி அரிசி, இரு நாளி, ஏழு நாளும், மூன்று நாளைக்கு, நான்கு நாட்டோம், காசு நாலு நாலுக்கும், விளக்கு ஒன்று. எண்ணுப்பெயர் பெயருக்கு முன்னும் அடையாக வரும். சில வேளைகளில் பெயருக்குப் பின்னாலும் வரும். இதனை ஈழத்துச் சாசனங்களில் காணலம். இந்தியச் சாசனங்களிலும் இதனைக் காணலாம்.

6. இடைச்சொல்

ஈழத்துச் சாசனங்களில் ஏகாரம், உம் என்ற இடைச்சொற்கள் பெரிதும் பயன்படுவதைக் காணலாம். "நெய் மூவுழக்கே ஆழக்கு இது", "வாரியனும் கழுதையும்", "வீரமும் அத்திகோசமும்", "இரண்டு வட்டமும் பீடிலிகை வாரியும்", "இவனே மேல் இறுவதாகவும்" சாசனத் தமிழிலே தொகைநிலைத் தொடர்கள் காணப்படுகின்றன. வேற்றுமைத் தொகை, வினைத்தொகை, உம்மைத் தொகை என்ற தொகைகள் காணப்படுகின்றன. வேலிப்படல், வேலியது படல் - வேற்றுமைத் தொகை. எறிபடை, எறிமணி - வினைத்தொகை.

7. பேச்சு வழக்குச் சொற்கள்

எழுத்து வழக்குச் சொற்களும் பேச்சு வழக்குச் சொற்களும் கலந்தே சாசனங்களின் மொழிநடை அமைகின்றது. வைய்யாசி (வைகாசி), குடுத்த காசொன்றும், செய்விச்ச தறை, தேய்தி, தியதி, வைச்ச சந்தி விளக்கு, செட்டி இட்டது, குடுத்தோம், அட்டுவித்தல், கொண்ண பேர்கள் எனப் பேச்சு வழக்குச் சொற்கள் பல காணப்படுகின்றன. கிழக்கிலங்கைச் சொற்களுக்கும் யாழ்ப்பாணம், வன்னி, முல்லைத்தீவு போன்ற பிரதேசங்களில் உள்ள சொற்களுக்கும் இடையே ஒலி வேறுபாடுகள் காணப்படுகின்றன. அதற்குச் சமூகப் பண்பாட்டுக் கலப்பு காரணமாக அமைகின்றது எனலாம்.

8. முடிவுரை

சாசனங்களில் இலக்கிய வழக்குச் சொற்கள், பேச்சு வழக்குச் சொற்கள் என இருவகையில் சொற்கள் அமைகின்றன. பிரதேசத்திற்குப் பிரதேசம் சொற்கள் வேறுபட்டிருக்கின்றன. காலத்திற்கு ஏற்ப வரிவடிவம், ஒலிவடிவம் மாற்ற முற்றதைச் சாசனங்கள் காட்டுகின்றன. இந்தியச் சாசனங்கள் காட்டும் மொழியும் ஈழத்துச் சாசனங்கள் காட்டும் மொழியும் ஒன்றுபட்டும் வேறுபட்டும் இருப்பதைக் காணலாம்.

9. துணை நூல்கள்

1. இந்திரபாலா, கா., "யாழ்ப்பாணத்துக் கல்வெட்டுக்கள்", சிந்தனை, இதழ் 4, 1989.
2. இந்திரபாலா, கா., "அநுராதபுரத்திலுள்ள நான்கு நாட்டார் கல்வெட்டு", சிந்தனை 4, 1979.
3. வேலுப்பிள்ளை.ஆ., சாசனமும் தமிழும் பேராதனை, 1970.
4. புஸ்பரட்ணம், ப., தொல்லியல் நோக்கில் இலங்கைத் தமிழர் பண்பாடு, குமரன் பப்ளிஷர்ஸ், சென்னை, 2000.
5. பத்மநாதன், சி., இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள், இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம், கொழும்பு, 2006.
6. Velupillai.A., **Ceylon Tamil Inscriptions**, Part I, 1971.
7. Velupillai.A. Ibid, Pat II, 1972.
8. Sanmugadas,A, Some Aspects of the syntax of the inscriptional Tamil of Sri Lanka, James **Thevthasanratnam** Felicitation, Volume, Jaffna, Archacological Society, 1975.
9. Pathmanathan.S., **Tamil Inscriptions in the Colombo National Museum,** Department of National Museums, 2005.

பால்நிலையும் மொழியும்: ஒரு சமூகவியல் நோக்கு

திருமதி கவிதா சிவபாலன்
உதவி விரிவுரையாளர்
களனிப் பல்கலைக்கழகம்
இலங்கை

மொழி என்பது ஒரு தொடர்பாடல் ஊடகம். குறிப்பிட்டதொரு விடயத்தை வெளிப்படுத்தவும், தெரிவிக்கவும், பகிர்ந்துகொள்ளவும் மனிதனால் பயன் படுத்தப்படும் ஒரு கருவி. மொழி மனித தேவையிலிருந்து உருவாகின்றது. சமூகம், பண்பாடு, நடத்தை என்பவற்றுடன் தொடர்புடையது. ஒரு குறிப்பிட்ட மொழியானது அம்மொழியைப் பேசும் மக்கள் சமூகத்தின் சமூக, கலாசார நடத்தைகளைப் பிரதிபலிக்கின்றது. அதாவது மொழி அதனை உபயோகிப் பவர்களின் சிந்தனை, கருத்து, மனப்பாங்கு, கலாசாரம் என்பவற்றை வெளிப்படுத்தும் ஒரு பொது ஊடகம். எனினும், மொழியை ஒரு கருத்துப் பரிமாற்றக் கருவி என்றவகையில் அதனுடைய இயல்பைச் சுருக்கிவிடாமல், மொழியானது சமூகத்துடனும், மனிதகுல வரலாற்றுடனும், பண்பாட்டுடனும் பின்னிப்பிணைந்து சமூகத்தை இயங்கச்செய்யும் காரணிகளில் ஒன்று என்றுதான் கருதவேண்டும்.

பால்நிலை என்பது ஒரு சமூகக்கட்டமைப்பு. அதாவது, சமூகத்தினால் ஆணுக்கும் பெண்ணுக்கும் வழங்கப்பட்டுள்ள ஒரு வகிபங்குநிலையாகும். வேலைப் பொறுப்புகள், தீர்மானம் எடுத்தல், அரசியல், சமூக, பொருளாதார. பண்பாட்டு நடவடிக்கைகள், வர்க்கம், அதிகாரம், அந்தஸ்து என்பவற்றின் அடிப்படையில் வைத்து அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள சமூகவகிபங்கு பால்நிலை எனப்படும். ஒருவரின் உயிரியல் (பால்) தொடர்பாகச் சமூகம் தொடர்புபடுத்தும் பண்புகள், மனப்பாங்குகள், உணர்வுகள், நடத்தைகள் ஆகியவற்றை இது குறிக்கின்றது. இதன் அடிப்படையில் ஆண்மை - பெண்மை என்ற மரபுசார் சிந்தனைப்புலம் உருவாக்கப்பட்டு அவற்றின் தளத்தில்நின்று பால்நிலை, பால்நிலைக்கட்டமைப்பு, பால்நிலைவேறுபாடு என்பன பற்றிப் பேசப்படுகின்றன.

மொழிக்கும் பால்நிலைக்குமிடையே மிகநெருங்கிய தொடர்பு உள்ளது. ஏனெனில், சமூகத்தின் உருவாக்கமாகவே -கட்டமைப்பாகவே- மொழியும் பால்நிலையும் உள்ளது. இவையிரண்டும் பண்பாட்டு நடவடிக்கைகளுடன் தொடர்புடையது. மொழியானது சிந்தனை, கருத்து, உணர்வு, தகவல் என்பவற்றின் பரிமாற்றத்திற்கும், தொடர்பாடலிற்கும் ஊடகமாக மட்டுமே உள்ளதனால் மொழியில் பால்நிலைசார் பாகுபாட்டிற்கு இடமில்லை. இது ஒரு பொது ஊடகம் என்ற கருத்துகள் நிலவுகின்றன.

எனினும், இவ்விரு பரப்புக்களும் சமூகமொழியியலுடனும், பிரயோக மொழியியலுடனும் தொடர்புடையன. மேலைநாடுகளில் இவ்விருதுறைகள் தொடர்பாகப் பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குறிப்பாக கலிபோர்னியா பல்கலைக்கழகத்தின் மொழியியல்துறைப் பேராசிரியர் றொபின் லகோப் (Prof. Robin Lakoff) என்ற பெண் மொழியியலாளர் பால்நிலையும் மொழியும் தொடர்பாக *1975* இல் *"Language and Woman Place'* என்ற நூலை வெளியிட்டுள்ளார். பால்நிலையும் மொழியும் தொடர்பான ஆய்வுகள் *1970*களிலிருந்தே பாரியளவில் Deborah Cameron, Penelope Eckert, Janet Holmes, Deborah Tannen போன்ற பெண்மொழியியலாளர்களினால் முன்னெடுக்கப் பட்டுள்ளன. Deborah Cameron என்பவர் *The myth of Mars and Venus: Do Men and Women Really Speak Different languages?* என்ற நூலையும் Penelope Eckert என்பவர் *Linguistic Variation as Social Practice* என்ற நூலையும், இவர் McConnell-Ginet Sally என்பவருடன் இணைந்து *Language and Gender* என்ற நூலையும், Deborah Tannen என்பவர் *Conversational Style: Analyzing Talk Among Friends, Talking Voices: Repetition, Dialogue and Imagery in Conversational Discourse, Gender and Discourse* ஆகிய நூல்களையும் வெளியிட்டுள்ளனர்.

சமூக நியதிகளையும், கருத்தியல்களையும் உள்ளடக்கியே மொழியின் அசைவியக்கம் வெளிப்படும். சமூக உருவாக்கத்தின் பின்னரே மொழி உருவாகியது என்றபடியால் சமூகத்தின் இயல்புகளும் போக்குகளும் மொழியிலும் பிரதிபலித்துள்ளன. ஆண்-பெண் அசமத்துவநிலையின் பிரதிபலிப்பாக வெளிவந்த மொழிவழக்குகள் ஆண்-பெண் அசமத்துவத் தத்துவத்தை வெளிப்படுத்தியே தீரும் என்பதனால் இதனை மொழியின் தவறு என்று கூறிவிடமுடியாது. இந்தவகையில் மொழியின் வழக்குகளைச் சமூகச் சமத்துவம் கோரும் நோக்குடன் பால்நிலை நோக்கில் ஆய்வு செய்வது முதன்மையானது.

மனித வாழ்வில் பேச்சு என்பது தவிர்க்கமுடியாத அடிப்படை நிபந்தனையாகின்றது. இருப்பினும், மனிதக்குரலாய் வடிவெடுக்கும் பேச்சு உருவாகுவதற்கு முன்பே மனிதர்களிடையே தகவல் பரிமாற்றமானது முகபாவனைகள், சைகைகள், குறியீடுகள், போலச்செய்தல் என்பவற்றின் மூலம் நிகழ்ந்திருக்கின்றன என்பது மானிடவியலாளர்களின் ஆய்வுகள் மூலம் பெறப்படுகின்றன. இப்பரிமாற்ற நிகழ்வுகள் அர்த்தம் பெறும் வரைக்கும், பேச்சுத்தொனியாக வெளிப்படும் வரைக்கும் மனிதர்கள் எல்லோருக்குமிடையே ஒரு பொதுத்தன்மை காணப்பட்டது. அதாவது ஒரேவிதமான பரிமாற்றம் இடம் பெற்றிருந்தது. சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் என்று தனிப்பட்ட பண்பாடுகள் பேணப்பட்டு, போதிக்கப்பட்டு வந்ததன் அடிப்படையில் பேச்சு நடையானது மாறுபடத்தொடங்கியது. 'கூ' 'கூ' என்று கூவியழைக்கத் தொடங்கிய போதே ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மொழி வேறுபட்டமைந்தது. ஆண் உரத்தும் பெண் ஆணைவிடச் சற்றுக் குரலைத் தாழ்த்தியும் அழைக்கவேண்டும் என்பது எழுதப்படாத சட்டமாக்கப்பட்டது. இவ்வாறு தொனியில் தொடங்கிய வேறுபாடு குரல் அசைவு, உச்சரிப்பு, சொற்களின் பிரயோகம், பேசப்படும் பொருள், பேசப்படும் முறை, பேச்சுமொழி - எழுத்து மொழி இலக்கணம் என்று

பல்வேறு விடயங்கள் தொடர்பாகப் பால்நிலைசார் அடிப்படையில் மொழியைக் கையாளும் முறை வேறுபட்டமைந்துள்ளது.

'பெண்' என்ற உருவத்தின் ஒவ்வொரு பிம்பத்தினுடைய சிறு அசைவும் 'ஆணாதிக்கம்' என்ற கண்ணாடியில் பளிச்சென்று பிரதிபலிக்கப்படுகின்றது. அவளுடைய நடை, . உடை, பாவனை, பழக்கவழக்கம், பண்பாடு, பேச்சு, பெண்மை என்ற மென்மை அனைத்தும்; இவ்வாறுதான் இருக்கவேண்டும்; என்ற மரபுசார் சிந்தனைப்புலத்தில் அவள் கட்டமைக்கப்பட்டிருக்கின்றாள். அவளுடைய இயங்கியல்வெளி வரையறுக்கப்படுகின்றது. அவளுடைய அறிவு, சிந்தனை, கருத்து வெளிப்பாட்டுத்திறன், உணர்வுவெளிப்பாடு என்பன வரையறுக்கப் படுகின்றன முடக்கப்படுகின்றன குறுக்கப்படுகின்றன மறுதலிக்கப் படுகின்றன நிராகரிக்கப்படுகின்றன. இவ்வனைத்திற்கும் ஊடகமாக இருக்கின்ற அவளுடைய மொழி பறிக்கப்படுகின்றது. சில இடங்களில் தணிக்கை செய்யப்படுகின்றது. பெண் என்பவள் மொழியைச் சுயமாகப் பேசவில்லை; 'பெண் பேசும் மொழி' என்ற பண்பாட்டுப்பின்புலத்தில் நின்று அவள் பேசவைக்கப்படுகின்றாள்.

சமுதாய அமைப்பில் ஆணுக்கும் பெண்ணுக்கும் விதிக்கப்பட்டுள்ள மரபுசார் பண்பாடுகள், அவற்றின் இயல்புகள் என்பவற்றின் அடிப்படையில் ஏற்படுத்தப்படும் வேறுபாடுகள் அவள் பேசப்படும் மொழியிலும் வேறுபடுகின்றன. ஆண்குழந்தையும் பெண்குழந்தையும் மண்ணில் பிறக்கும் போது ஒரே விதமான தொனியில் அழுகின்றது. ஆனால் வளருகின்ற போது அதனுடைய மொழிப் பாவனை, சொற்கள், பேச்சுத்தொனி, உச்சரிப்பு என்பன வேறுபட்டு அமைகின்றன.

ஆணாதிக்கச் சிந்தனைப்புலத்தில் மொழியைக் கையாளும் அதிகாரம் ஆண்களிடமே இருப்பதனால் மொழியும் அவர்களது கண்ணோட்டத்தை ஒட்டியதாகவே வடிவமைக்கப்பட்டுள்ளது. இலக்கண, இலக்கிய வரலாற்றாசிரியர்கள் பெரும்பாலும் ஆண்களாக இருந்தபடியால் அதிகாரமும் ஆதிக்கமும் அவர்களுடைய கையில் இருந்துள்ளது. மொழியில் ஆணிலை நோக்கு ஒன்று மிக இலகுவில் புகுந்துவிட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இதன் காரணமாக, ஆணின் பேச்சில் ஆதிக்கமும், பெண்ணின் பேச்சில் கீழ்ப்படிதலும் வெளிப்படுகின்றன.

ஒரே மொழி பேசும் ஆணும் பெண்ணும் தம் கருத்துக்களையும் உணர்வுகளையும் ஒரே விதமாக வெளிப்படுத்தமுடியாது. மொழியும்கூடப் பால்நிலை வேறுபாட்டிற்கேற்ப ஆண் பேசும் மொழி, பெண் பேசும் மொழி என்று மறைமுகமாகச் சமூகத்தினால் பாகுபடுத்தப்பட்டுள்ளது. ஆண் மொழி அதிகாரமுடையது; வலுவுடையது. பெண் மொழி பண்பானது; பணிவானது. பெண்ணினுடைய மொழிக்கையாளுகை வரையறைக்குட்பட்டது; தணிக்கைக் குட்பட்டது. பெண் பேசும் மொழி பெரும்பாலும் உடல் மொழியாகவே உள்ளது. பெண் என்பவள் சைகை, குறியீடு என்பவற்றின் மூலம் தெரிந்தும் தெரியாமலும், அறிந்தும் அறியாமலும் தகவல் பரிமாற்றம் செய்யவேண்டியநிலையிலுள்ளாள்.

பெண் தன் கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்த மொழியை இயல்பாகப் பிரயோகிக்கமுடியவில்லை. இவ்வாறுதான் மொழியைப்

பிரயோகிக்கவேண்டும் என்ற கட்டளை அவள்மீது மறைமுகமாக விதிக்கப்பட்டிருப்பதனால் அவள் 'பெண்' என்ற இயல்பு நிலையிலிருந்து விலகிச் சமூகத்தினால் உருவாக்கப்பட்ட 'பண்பாட்டுப் பெண்' என்ற கட்டமைப்பு நிலைக்கு உள்ளாகின்றாள். பெண் 'பண்பாட்டுப் பெண்' என்ற பிம்பத்தைச் சமூகத்தில் பெறுகின்றாள். ஆண் என்பவன் சமூகத்தில் இயல்பாகவும், சுதந்திரமாகவும், யதார்த்தமாகவும் நடமாடும் போது பெண் என்பவள் உருவாக்கப்பட்ட பிம்பமாகச் சமூகத்தில் உலா வருகின்றாள். குறிப்பாக மொழிசார் பண்பாட்டிலும்கூட அவள் வடிவமைக்கப்படுகின்றாள்; கட்டமைக்கப்படுகின்றாள்.

பெண்ணின் குரல் மொழியினூடாக உரத்து ஒலிப்பதைத் தமிழ்ப் பண்பாடும் இலக்கியங்களும் ஏற்றுக்கொள்ளவில்லை. 'முந்நீர் வழக்கம் மகடுவோடில்லை', 'நாணும் மடனும் பெண்மையவாதலின்', 'மடலேறாப் பெண்ணில் பெருந்தக்கதில்', 'யானோக்கும் காலை நிலன் நோக்கும்' என்ற வரிகள் பெண் பேசவேண்டிய மொழி எத்தகையது என்பதைப் புலப்படுத்துகின்றது. நாணம், மடம், மௌனம், புன்னகை, கண்ணீர் என்று வாய்மொழிசாராத உடல்மொழிகள்தாம் அவளுக்குரிய மொழிகளாகும். இந்நிலையில் பெண் ஆணைப் போல தன் கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தினால் அது அவளுடைய பெண்மைக்கு இழுக்காகும் என்று கருதப்படுகின்றது. இவ்வாறு உணர்வுகளையும் கருத்துகளையும் வெளிப்படுத்தும் முறையிலும் பால்நிலை அடிப்படையில் ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையே மொழிசார் கருத்தேற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

பொதுவாக 'மனிதம்' என்ற பதத்தை மொழியினூடாக வெளிப்படுத்தும் போது ஆண் என்ற சிந்தனைப்புலத்தில்தான் அதன் கருத்து தொனிக்கின்றது. பெண் அங்கே ஒதுக்கப்படுகின்றாள். அவ்வாறே தொழில் முறைமைகளுக்கான மொழிப் பயன்பாட்டிலும் ஆண் - பெண் இருவரையும் வர்ணிக்கும் போதும் அவர்களுடைய அந்தஸ்து, தகுதி பால்நிலைசார்ந்து உள்ளது. உதாரணமாக, Nurse, Secretary, Teacher முதலிய சொற்கள் She என்ற பெண்சார் சிந்தனையையும் Doctor, Engineer, Accountant, Professor முதலிய சொற்கள் He என்ற ஆண்சார் சிந்தனையையும் மனதிலே பதிக்கின்றன. இங்குச் சமூகத்தில் உயர்நிலைத்தன்மை கொண்ட தொழில்முறைகள் ஆண்களுக்கென்ற தனித்துவத்தை விளக்குவதாகவும் சாதாரண நிலையிலுள்ள தொழில்முறைகள் பெண்களின் உணர்வை விளக்குவதாகவும் அமைகின்றது. மேலும், Prof. N. Nelson, Dr. N. Nelson என்று ஆண்களையும் Prof. (Mrs) K. Kumari, Dr.(Ms.) K. Kumudini என்று ஆண்களையும் எழுத்துவழக்கிலும் பேச்சுவழக்கிலும் குறிப்பிடுவது பால்நிலையடிப்படையில் மொழியின் பிரதிநிதித்துவத்தைக் காட்டுகின்றது.

ஆங்கிலத்தில் உள்ள He, She என்னும் சொற்கள் முறையே Male, Female என்பதை நேரடியாகவே குறிக்கின்றன. யப்பானிய மொழியில் Wa, Ze என்ற சொற்கள் மறைமுகமாக ஆணினுடைய குரலையும் பெண்ணினுடைய குரலையும் குறிக்கின்றன. ஆண்கள் மற்றவர்களுடைய பிரச்சினைகளைச் சந்திக்கும் போது அவர்களுடைய பேச்சில் தீர்மானம் எடுத்தல், ஆலோசனை சொல்லுதல்

என்பனவும் பெண்களுடைய பேச்சில் தம் பிரச்சினைகளையும் அனுபவங்களையும் மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளுதலும் பரிவிரக்கத்தை வழங்குதலும் (Offering sympathy) இருப்பதாக ஆராயப்பட்டுள்ளது. இந்தவகையில் பால்நிலை பேதத்தை அடிப்படையாகக் கொண்டு பல அர்த்தபேதச் சொற்கள் மொழிவழக்கில் உள்ளன.

மனவெழுச்சிகள், உணர்வுகள் என்பவற்றை வெளிப்படுத்தும் போது ஆண்பிள்ளை உரத்து அழலாம், சிரிக்கலாம். ஆனால் பெண்பிள்ளை உரத்து அழவோ, சிரிக்கவோ கூடாது. அவ்வாறே சில பரப்புகளைப் பெண்கள் வெளிப்படையாகத் தொட்டுச் செல்லாத தன்மை உள்ளது. குறிப்பாகப் பாலியல்சார் விடயங்களைப் பெண்கள் பகிரங்கமாகப் பேசினால் 'அனுபவம் பேசுகின்றது' என்ற மனப்பாங்கு எல்லோருடைய சிந்தனையிலும் உடனே பதிவாகின்றது. இதனால் பாலியலைப் பற்றிப் பேசவும், அது சம்பந்தமான சொற்களை எடுத்தாளவும், அதாவது கல்வி மற்றும் மருத்துவ நிமித்தமாகக்கூடவும் கூறுவதற்குத் தயங்குகின்றனர். பெண் தன் கணவனிடத்திலும் பாலியல் உணர்வுகளையும், விருப்பு வெறுப்புக்களையும், சந்தேகங்களையும்கூட மொழியைப் பயன்படுத்தி வெளிப்படுத்தமுடியாதநிலை உள்ளது.

சமூகச்செயற்பாடுகள் யாவும் ஆளும் வர்க்கத்தின் நேர்க்கோடுகளுக்குக் கீழ்ப்படிந்திருக்கவேண்டும் என்பதற்காகவே வலுவானதோர் அதிகாரச் செயற்பாட்டை ஆளும் வர்க்கம் மேற்கொள்வது இயல்பானது. இவ்வதிகாரச் செயற்பாடானது நேரிடையாகவோ, மறைமுகமாகவோ ஒவ்வொன்றையும் இருத்திவைப்பதில் கவனம் செலுத்துகின்றது. இதனடிப்படையில் மொழித் தளத்திலும் அதிகாரத்தின் செயற்பாடு புலப்படுவதனைக் காண முடிகின்றது.

இதற்கமையவே ஆதிக்கமுள்ள குழுவினர் ஆதிக்கமில்லாத மக்கள் குழுவினரின் கருத்தியல்களை உணர்த்தும் முகமாகப் பல்வேறு மொழிப் பதங்களை உருவாக்கியுள்ளனர். கீழ்நிலை, மேல்நிலைக்குரிய சொற்பதங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இரண்டாம்பட்ச நிலையிலுள்ள பெண்களை ஓரங்கட்டுவது, எள்ளிநகையாடுவது, தங்களிலிருந்து வேறுபட்டவர்கள் என்று விலக்குவது, ஒதுக்குவது, அவர்கள் மனதைப் புண்படுத்துவது போன்ற அநாகரிகச் செயல்களைச் செய்வதற்கு மொழியே பயன்படுத்தப்பட்டுள்ளது. பேதை, பெதும்பை, மடந்தை, பெண் புத்தி பின் புத்தி, பேதைமை என்பது பெண்ணுக்கு அணிகலன், கூந்தல் அழகி குடியைக் கெடுப்பாள் போன்ற சொற்கள் பெண்ணை உடல் உளரீதியாகக் கீழானவளாகக் காட்டுகின்றது. 'சாண் பிள்ளையானாலும் ஆண்பிள்ளை' என்ற தொடர் ஆணை முதன்மைப்படுத்துகின்றது. திருமணப் பேச்சிலும் கூடப் பெண்ணுக்குக் 'கட்டிக்கொடு' 'கட்டி வை' என்றும் ஆணுக்குத் 'தாலிக் கட்டு' 'பெண் எடு' என்றும் பால்நிலைப்பேத மனப்பாங்குகள் இங்கே அர்த்தம் பெறுகின்றன.

பெண் படைப்பிலக்கியங்களில் பாலியல்சார் நுகர்வோர் பண்டமாகவும் ஆயிழை, சேயிழை, பவளக்கொடி, பைந்தொடி, பொற்றொடி என்று உயிரற்ற பண்டமாகவும் காட்டப்படுகின்றாள். சுமங்கலி, குலமகள், குலவிளக்கு, திருமதி போன்ற சொற்கள் அவள் ஆணுடன் இணைந்து வாழும் போது பெறும் சிறப்பையும் வாழாவெட்டி, அறுதலி, கைம்பெண், வாழ்விழந்தவள் போன்ற

சொற்கள் ஆணின் துணையின்றி வாழாதபோது பெறும் இழிவையும் எழுத்துக் காட்டுகின்றன. அத்துடன் இச்சொற்கள் பெண்ணினுடைய மங்கலத்தையும் மறுவாழ்வையும்கூட மறுதலிக்கும் பொருளையும் தம்மகத்தே கொண்டிருக்கின்ற தனை அவதானிக்கலாம்.

மேலும், கணவன் மனைவியருக்கிடையே நிலவிய சமூக உறவு கடவுள், ஆண்டான் என்ற நிலையையும் எட்டியுள்ளன. 'கொழுநன் தொழுதெழுவாள்' என்று கணவன் தெய்வமாகவும் பதியாகவும் காட்சியளிக்கின்றான். சமுதாயத்தில் பெண்களை இழிவுபடுத்திக்கூறும் பரத்தை, வேசி, தாசி, விபச்சாரி போன்ற சொற்களுக்கு ஆண்பாற் பதங்கள் தோன்றவில்லை. அப்படி சில பதங்கள் இருந்தாலும் அவை அவற்றுக்குரிய அர்த்தத்தைப் பெறமாட்டா. மலடன் - மலடி என்ற சொற்களில் மலடி என்ற சொற் பிரயோகம் வழக்கிலிருக்க 'மலடன்' என்ற சொல் அதற்குரிய அர்த்தத்தில் இல்லாமல் வெறும் சொல்லாகவே உள்ளது. பொதுவாகப் பெண்ணைக் குறிப்பதற்குத் தமிழ் மரபில் 'கன்னி' என்றும் ஆணைக் குறிப்பதற்கு 'காளை' என்றும் அழைப்பர். இங்குக் கன்னி என்பது கற்புடையவள், திருமணமாகாதவள், புனிதமானவள் என்ற பொருளையும் காளை என்பது ஆண்மை, வீரம், அடங்காத்தன்மை, இளமைத்துடிப்பு போன்றவற்றின் குறியீடாகவும் உள்ளது.

வர்க்கம் அல்லது சாதியைப் புலப்படுத்தும் தமிழ் இலக்கியங்களில்கூடப் பால்நிலை வேறுபாடு மொழியினூடாகப் பிரதிபலிக்கப்படுகின்றது. உயர்வர்க்கத்துப் பெண்கள் மொழியைத் தயக்கமின்றிக் கையாளுகின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்குமிடையே மொழிரீதியாக ஓரளவு சமாந்தரக் கோடுகள் இழையோடுகின்றன. ஆனால் தாழ்ந்த வர்க்கத்துப் பெண்களும் மத்தியதர வர்க்கத்துப் பெண்களும் கையாளும் மொழிநடையில் பால்நிலைவேறுபாடு நிலவுவதனை அவதானிக்கலாம். அவர்களுடைய மொழியில் ஆண்களுக்குப் பயந்து, பணிந்து பேசும் தன்மையுள்ளது. மேலும், தமிழ்ச் சாதிய இலக்கியங்களில் உயர்த்தப்பட்ட சாதிப்பெண்களும், தாழ்த்தப்பட்ட சாதிப்பெண்களும் ஒரே மாதிரியாகவே நோக்கப்பட்டுள்ளனர். அவர்களுடைய சுயபெயர்களில் பார்வதி என்பது பரி என்றும் தெய்வயானை தெய்வி என்றும் அழைக்கப்பட்டாலும் அவர்களைச் சுட்டும் சாதிப் பெயர்களில் வெள்ளாடிச்சி, கரையாடிச்சி, கோவிச்சி, கமக்காரி, வண்ணாத்தி என்று பெண்பாற்பெயர்கள் சுட்டப்படுகின்றதனை அவதானிக்கலாம்.

ஆண்கள் பயன்படுத்தும் சொல், பேச்சுமுறை, விடயம் என்பவற்றிலிருந்து பெண்ணினுடைய பேச்சுமொழி வேறுபட்டமைகின்றது. ஆணைக்காட்டிலும் பெண் பயன்படுத்தும் சொற்றொகுதி (Vocabulary) குறைவு. சாதாரணக் குடும்பப் பெண்ணிடம் கல்வி, பொருளாதாரம், அரசியல், சமூகம் என்று வெளிவாரியான துறைகளைச் சந்திக்க வாய்ப்பிருக்காது. இவர்களுடைய பேச்சில் வீடு, சமையலறை, குழந்தைப் பராமரிப்பு என்ற விடயங்கள் தொடர்பாகவே இருக்கும். மேலும் பெண்கள் பண்பட்ட பேச்சுநடை உடையவர்களாகக் காணப்படுகின்றனர். ஆண்களுடைய பேச்சில் முரட்டுத்தனமும், அதிகாரத்தொனியும் தொனிப்பதனைக் காணலாம். ஆண்களின் பேச்சில் வேண்டுகோள்கள் மறைமுகமாகவே (Indirect

request) இருக்கின்றன. உதாரணமாக, Wow, I am so thirsty என்று கூறினால் அவர் உண்மையாகவே அருந்துவதற்கு ஏதாவது பானம் கேட்கின்றார் என்பதுதான் பொருள். அவ்வாறே ஆண்கள் எந்தவொரு விடயம் குறித்தும் மிகவும் சுருக்கமாகவே பேசுவார்கள். அவர்கள் குறித்த விடயம் தொடர்பாக விளக்குவதற்கு விரும்பமாட்டார்கள்.

ஆண்கள் சமூகத்தினால் விலக்கிவைக்கப்பட்டுள்ள சொற்களை (Taboo Language) தங்கள் பேச்சுக்களில் தயக்கமின்றி இயல்பாகப் பயன்படுத்துவது உண்டு. பொதுவாக, குடும்பப் பெண்கள் மற்றும் படித்த பெண்களிடம் இத்தகைய சொற்பயன்பாடு அறவே இல்லை. அத்துடன் பெண்களின் பேச்சுநடையில் நகைச்சுவை உணர்வு இருப்பதில்லை. பெண்கள் நகைச்சுவையாகப் பேசுவதைச் சமூகம் விரும்புவதில்லை. அவள் பொறுப்பில்லாதவள், நடத்தைகெட்டவள் என்ற கருத்துக்கள் தொனிக்கின்றன. நகைச்சுவைப் பேச்சிற்கு ஆண்கள் பொருத்தமானவர்கள் என்று சமூகம் அவர்களைத் தெரிந்தெடுத்துள்ளது. பெண்கள் நகைச்சுவையாகப் பேசுவதைச் சமூபெண்கள் தங்கள் பேச்சுக்களில் பழமொழிகளை அதிகம் பயன்படுத்துவார்கள். தமது பேச்சுக்கு அழுத்தம் தரவும், துணை சேர்க்கவும் இவ்வாறான மூத்தோர் வார்த்தைகளைப் பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் ஆண்கள் தங்கள் கருத்துக்களை நேரடியாக எந்தவித ஆதாரமுமின்றி நேரடியாகப் பயன்படுத்துவார்கள்.

பெண்கள் இலக்கணத்திற்கேற்பக்கூட மொழியைப் பயன்படுத்தமுடியாத நிலையுள்ளது. தமக்கு முன்னுக்கு இருப்போரைச் சுட்டும் 'நீங்கள்' என்ற சொல்லைப் பெண் அதிகளவில் பயன்படுத்தமாட்டாள். கணவனுடன் பேசும் போதும் 'என்னங்க, இஞ்சை பாருங்கோ' என்றும் தன்பிள்ளையின் பெயரைக் குறிப்பிட்டு 'பிள்ளையின் அப்பா' அல்லது 'அவர்' என்றும் தான் பயன்படுத்துவாள். ஆனால் ஆண்கள் 'அவன், அவள்' என்றும் அஃறிணைச் சொல்லான 'அது' என்ற சொல்லையும் பயன்படுத்திப் பேசுகின்றனர்.

மேலும், பெண்களுடைய பேச்சில் உணர்ச்சி வெளிப்பாடு மேலோங்கி நிற்பதனை அவதானிக்கலாம். ஆண், பெண் இவர்களது பேச்சு நடையை நோக்கும் போது, ஆணைக்காட்டிலும் பெண் தன் பேச்சில் அதிக வினாக்களைப் பயன்படுத்துகின்றாள். பொறுப்புக்களை நிறைவேற்றவேண்டும் என்ற நிலையிலும் பதிலை எதிர்பார்த்திருக்கவேண்டிய நிலையிலும் அவள் தனது பேச்சில் வினாக்களை அடுக்கிக்கொண்டேயிருப்பாள். பெண் ஆணிடமிருந்துதான் பதிலை, முடிவை எதிர்பார்க்கவேண்டும் என்பது அவளுடைய சார்ந்துவாழும் நிலையைக் காட்டுகின்றது. அவ்வாறேதான் பெண்கள் தமது பேச்சில் திட்பநுட்பமான சரியான செம்மையான தகவல்களைத் தருவதில்லை. சரியாகத் தெரிந்தாலும், தன் அனுமானத்தில் தவறு இருக்குமோ என்று கருதி அனுமான வாக்கியங்களையே அதிகம் பயன்படுத்துவாள். ஏனெனில், அவர்களுடைய பேச்சைச் சமூகம் சக்திவாய்ந்ததாகக் கருதுவதில்லை. ஆண்களுடைய பேச்சில் உறுதியும், தெளிவும், தீர்மானமும், முடிவும் தொனிக்கும். இது அவர்களுடைய பேச்சிற்குள்ள சமூக ஏற்புடைமையைக் காட்டுகின்றது.

இவ்வகையில் சொற்களும், சொற்றொடர்களும், பழமொழிகளும் பல கருத்தியல்களை, சமூகவழக்குகளை, அசமத்துவநிலைப்பாடுகளை நிலை நிறுத்துவதாகவும் நியாயப்படுத்துவதாகவும் உள்ளன. இப்பால்நிலைசார் பேதத்தைப் பிரதிபலிக்கும் சொற்கோவைகளுக்கு அளிக்கப்படும் சமூக, அரசியல் அந்தஸ்துதான் அவற்றைச் சமுதாயத்தில் நிலைநிறுத்துகின்றது. இதனால் சமுதாயத்தில் பால்நிலை வேறுபாட்டை நிலைநிறுத்துவதில் மொழியின் பங்களிப்பு பாரியளவில் செல்வாக்குச் செலுத்துகின்றது. மொழி பால்நிலை பேதத்தை வெளிப்படுத்தும், ஊடுகடத்தும் ஒரு சாதனமாகத் திகழ்கின்றது.

மொழிப் பிரயோகங்களில் பால்நிலையின் செல்வாக்கு எந்தளவு தூரம் வெளிப்படுத்தப்படுகின்றது என்பதை ஆராய்வதோடு, மொழியைக் கையாளும் போது பால்நிலை வேறுபாட்டுச் சிந்தனைகளைத் தவிர்க்கும் சில மொழிப் பிரதிநிதித்துவங்களையும் அடையாளம் காணவேண்டியதும் எதிர்காலத்தின் தேவையாகவுள்ளது. சில தொழில் முறைகளிலும், நிறுவனங்களிலும் பால் நிலைவேறுபாட்டைப் பிரதிபலிக்காதமுறையில் மொழி பிரயோகிக்கப் படுவதனையும் அவதானிக்கலாம். உதாரணமாக, Chairman என்ற சொல் ஆண் ஒருவரைக் குறிப்பதனால் சில நிறுவனங்களில் Men at Work என்று பாவிக்கப்படுகின்றது. இவ்வாறே Men at Work என்பது People at work என்றும் Police man என்பது Police Officer என்றும் பால்நிலை வேறுபாடுகளைச் சுட்டாமல் உபயோகிக்கப்படுகின்றன.

இருப்பினும், சிலர் மொழியில் பால்நிலைசார் மாற்றங்கள் மொழியின் இயல்பாகவே உள்ள சிறப்புக்கள் இழக்கப்படுவதாக வாதிடுகின்றனர். ஆயினும் மேற்கத்தேயச் சிந்தனைப் பின்புலத்தின் அறிவியல் புலமையானது நேர்மைத் திறனான சமுதாயம் உருவாக்கப்படுவதற்கு மொழிசார் பண்பாட்டிலும் பயன்பாட்டிலும் பால்நிலை என்னும் கருத்தேற்றம் தொடர்பாக நுணுக்கமாக ஆராயப்பட்டு மொழியியல் ரிதியாகப் பால்நிலைச் சமத்துவத்தை வலியுறுத்தும் வகையில் ஆய்வுகள் இடம்பெறுகின்றன. இத்தகைய ஆய்வுகள் குறிப்பாகத் தமிழ்மொழியிலும் இடம்பெறவேண்டும் என்ற வகையில் இவ் ஆய்வின் முக்கியத்துவம் வலியுறுத்தப்படுகின்றது.

படைப்பிலக்கியங்களில் ஆண்கள் மூலம் பெண்ணின் உணர்வுகளாகவும், கருத்துக்களாகவும். அனுபவங்களாகவும் வெளிப்படுத்தப்படுபவை மறைக்கப் பட்டும், மிகைப்படுத்தியும், யதார்த்தமின்றியும் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பெண் தன் கருத்துக்களையும் உணர்வுகளையும் தானே சுயமாகவும், யதார்த்தமாகவும், இயல்பாகவும் வெளிப்படுத்த வேண்டும். இதனால் பெண்மொழி குறித்த சிந்தனைகள் பெண்களின் படைப்புக்களில் வலுப் பெற்றுள்ளன. பெண்மொழி என்பது ஆணாதிக்கச் சிந்தனைக்கு எதிரான ஒரு கருத்தியலாக வளர்ச்சியடைந்துள்ளது. பெண் பேசும் மொழியின் கருத்தாக்கங்களையும் மதிப்பீடுகளையும் சிதைப்பதும் அவற்றிற்கு எதிராகக் குரல் எழுப்புவதும் தான் பெண்மொழியாக உள்ளது.

பெண்ணும் ஆணைப்போலவே எந்தவொரு விடயத்தையும் தொட்டுச் செல்லலாம். ஆண்கள் பெண்களின் உடல் உறுப்புக்களை வர்ணிப்பது போலவே

பெண்ணும் ஆணின் உடல் உறுப்புக்களை வர்ணனை செய்யலாம். பெண் தன் பாலியல் விருப்பு வெறுப்புக்களை வெளிப்படையாகவே மொழியினூடாக வெளிப்படுத்தலாம். இத்தகைய நவீனம்சார் சிந்தனைப்புலத்தில் மொழியின் பிரயோகம் எவ்வாறு உள்ளது என்பதும் இங்கு ஆய்விற்குட்படுத்தப்பட்டுள்ளது.

இந்தவகையில் பால்நிலையமைப்பில் மொழியின் உருவாக்கமும் பிரயோகமும், பெண்மொழியின் இயங்குதளம், பெண் தன் கருத்துக்களையும் உணர்வுகளையும் வெளிப்படுத்தப்படும் விதம், அவள் பேசும் பொருள், பெண் மொழி படைப்பின் வளர்ச்சிப் போக்கில் எந்நிலையிலுள்ளது. இத்தகைய படைப்புக்களின் சமூக ஏற்புடைமையும், பயன்பாடும் தொடர்பாகவும் நோக்கப்பட வேண்டியுள்ளது. முடிவாக ஆணோ, பெண்ணோ அவர்களின் மொழிநடையில் குறிப்பாகப் பேச்சுநடையில் அவர்களைப் பால்சார்ந்த பால்நிலையடிப்படையில் இனம்காட்டி நிற்கின்றது என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது. குழந்தைப் பருவம் முதல் குமரப் பருவம் வரை மொழியைக் கற்கும் ஆண் - பெண் இருபாலாரும் பெரும்பாலும் தங்கள் பாலினம் சார்ந்தே மொழியைப் பேசக் கற்றுக்கொள்கின்றளவிற்குத் தம் சூழலிலிருந்தே சமூகமயமாக்கத்திற்கு உட்படுகின்றனர். இதனால்தான் குழந்தைப்பிராயம் தொட்டு அவர்களின் மொழிநடையில் வேறுபாடுகள் காணக்கிடக்கின்றன. இத்தகைய மொழியியல் வேறுபாடுகளைக் குறைப்பதற்குச் சமூகத்தில் ஆணுக்கு இருக்கும் உயர்நிலையும் ஆதிக்கமும் மாறுகின்றபோதும், சமூகமனப்பாங்கு விருத்தியடையும் போதும் தான் மொழிநடையிலும் ஒரு சமத்துவம் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

ஆகவே, பால்நிலை ரீதியாக மொழிப்பிரயோகத்தில் பெண் எவ்வாறு ஒடுக்கப்படுகின்றாள், வேறுபடுத்தப்படுகின்றாள், மறுதலிக்கப்படுகின்றாள் என்பன தொடர்பான ஆய்வுகள் தொடர்ந்து வெளிவரும்போதுதான் மொழியில் பால்நிலையின் செல்வாக்கு, மொழிக்கும் பால்நிலைக்குமிடையே உள்ள தொடர்பு, மொழி மூலம் பால்நிலைச் சமத்துவத்தை எவ்வாறு உருவாக்கலாம் என்ற சிந்தனைகளுக்கு இடமளிக்கமுடியும்.

துணை நூல்கள்

1. சண்முகதாஸ், அ., (2006), **மொழியும் பிறதுறைகளும்**, சென்னை - கொழும்பு: குமரன் புத்தக இல்லம்.

2. செல்வி திருச்சந்திரன, (ஆ. இ), **மாற்றுச் சிந்தனையும் விரிபடுகளமும்**, கொழும்பு: பெண்கள் கல்வி ஆய்வு நிறுவனம்.

3. பிரேமா, இரா., (2001), **பெண் மரபிலும் இலக்கியத்திலும்**, சென்னை: தமிழ் புத்தகாலயம்.

4. மனோன்மணி, ச., இரகுநாதன். இ., (2006), **யாழ்ப்பாணம்: மொழியும் வாழ்வும் -ஓர் அறிமுகக் கையேடு**, யாழ்ப்பாணம்: கோகுலம் வெளியீடு 2.

5. மகாராசன், (2010), **பெண்மொழி இயங்கியல்**, சென்னை: தோழமை வெளியீடு.

6. **Language and gender**, From Wikipedia, the free Encyclopedia

உலக மொழிகளின் தாய் - தமிழே!

பேரா. முனைவர் கோ. விசயராகவன்
இயக்குநர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
தரமணி, சென்னை, தமிழ்நாடு, இந்தியா

தமிழ் - இனிமை

'தமிழ்' என்ற சொல்லின் பொருள் 'இனிமை' என்பதாகும்.[1] இதனாலேயே மகாகவி பாரதியார் 'இனிது' என்றும், புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் 'தமிழுக்கும் அமுதென்று பேர்' என்றும் பாடினர்.[2]

'தமிழ்' என்ற சொல்வடிவம் பிறமொழியாளர் சிலரால் மிகப் பழங்காலத்திலேயே பலவாறு திரித்து வழங்கப் பெற்றதற்கான சான்றுகளைக் கீழைநாட்டு, மேலைநாட்டு அறிஞர்கள் திரட்டியுள்ளனர்.[3] இவர்களில் ஸ்டென்கொனோவ் (Sten Konnov), ஏ.எல். பாஷம் (A.L.Basham) என்போர் குறிப்பிடத்தக்கவர்.

தமிழும் பிற திராவிடமொழிகளும் ஆரியமொழிகளிலிருந்து வேறானவை

"தமிழ் உட்பட்ட திராவிடமொழிக் குடும்ப மொழிகள், வடமொழி எனப்படும் சமற்கிருதம் இடம்பெறும் இந்தோ-ஆரியமொழிக் குடும்ப மொழிகளிலிருந்து வேறுபட்டதும், தனித்து இயங்கக் கூடியதுமாகும்"[4] எனப் பேராயர் டாக்டர் கால்டுவெல் பாதிரியார் குறிப்பிட்டுள்ளார். கால்டுவெல் பெருமகனார்க்கு முன்பாகவே அறிஞர் எல்லீஸ் என்பவர் இப்படியான கருத்தைக் கூறியிருந்தார்.

தமிழ் உட்பட்ட திராவிட மொழிகளில் பல சமற்கிருதத்தைவிட மூத்தவை என அறிஞர் கருதுகின்றனர். இதனால் வடமொழியிலிருந்து கிளைத்த இந்திய மொழிகளில் தமிழின் தாக்கம் உள்ளது[5] என அறிஞர் டெய்லர் (Mr.Taylor) கருதுகிறார்.

தமிழ் உலக மொழிகளில் பழமையானதும் பண்பட்டதுமாகும்

உலகமொழிகளில் காலத்தால் பழமையானவை எனக் கருதப்பெறும் கிரேக்கமொழி, இலத்தீன்மொழி, எபிரேயம், சமற்கிருதம், சீனம், அரேபியம், பாரசீகம் போன்ற மொழிகளை விடத் தமிழ் சிறந்ததும் தொன்மையானதும் ஆகும் என்பதற்கான சான்றுகளை அறிஞர் சிலர் ஆராய்ந்துள்ளனர். தமிழ் புளூடார்க் (Tamil Plutarch) எனும் நூலில் சைமன் காசி செட்டி எனும் அறிஞர் டெய்லரின் கூற்றைக் கீழ்க்காணுமாறு எடுத்தாண்டிருப்பதாகத் தமிழ்-ஆங்கில அகராதியில் டாக்டர் எம். வின்சுலோ குறிப்பிட்டுள்ளார்.[6]

> "... it is one of the most copious,
> refined and polished languages spoken by man..."

வின்சுலோ மேலும், தமிழ் அதன் தொல் செய்யுள் வடிவத்தில் கிரேக்க மொழியை விட, இலத்தீன் மொழியை விடப் பண்பட்டதும் துல்லியமானது மாகும் எனக் குறிப்பிடுகிறார்.

"... in its poetic form, the Tamil is more polished and exact than the Greek and in both dialects with its borrowed treasures, more copious than the Latin."[7]

'தமிழ்' என்பதன் பொருள் - தம் இல் மொழி - பாவாணர் கருத்து

இக்கட்டுரையின் மேற்சுட்டிய பகுதியில், தமிழின் பொருளும் அதன் சில சிறப்பியல்புகளும் குறிப்பிடப்பெற்றன. ஆனால் தமிழ்மொழி ஆய்வில் சிறப்பான ஆய்வுகளை நடத்திய மொழிஞாயிறு தேவநேயப் பாவாணர் 'தமிழ்' என்ற சொல்லின் வடிவம் தம் + இல் + மொழி என்றவாறு இருந்து பின்பு தமிழ் என ஒரு சொற்றன்மைப்பட்டிருக்க வேண்டும் என்கிறார்.[8] இதன்மூலம், தம் நாட்டு மொழியைத் தமிழர்கள் 'தமிழ்' என வழங்கினர் என அறிய முடிகின்றது.

தொல் பழங்காலத்தில் 'தம் இல் மொழி' என வழங்கப்பெற்ற தமிழின் சொல்லாட்சி அக்காலத்திய உலகப் பரவலின் போதும், அவ்வாறே பிற மொழியாளர்களின் பயன்பாட்டிலும் திரிந்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்.

இலத்தீன் மொழியில் 'நம்மவன்' என்பதற்கு 'நாஸ்திராசு' எனப் பெயர். அதன் அடிப்படையில் 'நமது மொழி' என்ற பொருளில் வழங்கப் பெற்ற வடிவத்திற்கு 'நாசுராதிக்ஸ்' (Nostratics) என்று பெயர் சூட்டினர். இப்பெயரை 1904இல் டென்மார்க் அறிஞர் ஹால்தெர் பெதர்சன் என்பவர் உருவாக்கினார். பின்பு 1960களுக்கு மேல் உருசிய அறிஞர் இலிச் சுவிதிச் என்பவர் 'நாசுதிராதிக்ஸ்' சில ஆய்வுகளை மேற்கொண்டார்.[9] அவ்ஆய்வுகளின் அடிப்படையில் தமிழின் சிறப்பை வெளிப்படுத்த இயலும். மிகப் பழங்காலத்தில் தமிழ்மொழி 'நம் மொழி' என்ற அடிப்படையில் பெயர்பெற்றிருக்க வேண்டும்.

உலக மொழிகளும் ஞாலமுதன்மொழியும் தமிழும்

உலகில் இன்று பேசப்படும் பல மொழிகள் சில மொழிக் குடும்பங்களைச் சார்ந்தவையாகக் குறிப்பிடப் பெற்றாலும் மிகமிகப் பழங்காலத்தில் அவை அனைத்தும் ஒரே ஒரு மொழிக் குடும்பத்தைச் சேர்ந்தவையாக இருந்திருக்க வேண்டும் என அறிஞர்கள் கருதுகின்றனர். இந்தப் பொது மொழிக்குடும்பத்தை "Macro family of Languages" எனக் குறிப்பிடுகின்றனர். இதையே, 'நாசுராதிக்' என்னும் ஞாலமுதன்மொழி ஆய்வாக அறிஞர்கள் செய்யத் தொடங்கினர். இவர்கள் உலக மொழிகளைச் சில மொழிக் குடும்பங்களாக வகைப்படுத்தி ஞால முதன்மொழியை வரையறுக்க முயன்றனர். பத்தொன்பதாம் நூற்றாண்டிலேயே திராவிட மொழிகளில் தமிழின் தொன்மையைச் சில அறிஞர்கள் உலகுக்கு உணர்த்தியிருந்தனர்.

நாசுதிராதிக் ஆய்வாளர்களும் ஞாலமுதன்மொழி ஆய்வாளர்களும் திராவிட மொழிகளிலிருந்து - குறிப்பாகத் தமிழிலிருந்து கிட்டும் ஒளியைப் பயன்படுத்தியிருப்பராயின் அவர்கள் ஆய்வு முடிவுகள் வலுப்பெற்றிருக்கும். கால்டுவெல் பெருமகன் 1856ஆம் ஆண்டிலேயே தமது "திராவிட அல்லது தென்னிந்திய மொழிகளின்

ஒப்பிலக்கணத்தில்" தமிழிய மொழிகளுக்கு இந்தோ-ஐரோப்பிய, உரால்-அல்தாயிக், எலாமைட், ஆஸ்திரேலியப் பழங்குடி மக்களின் மொழிகள், செமித்திய மொழிகள் ஆகியவற்றிற்கும் இடையே சொற்களிலும் இலக்கணத்திலும் வியத்தகு ஒற்றுமைகள் இருப்பதை விளக்கி, தமிழ், மாந்த இனத்தின் முதல் தாய்மொழிக்கு மிக நெருங்கியதாக இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.[10]

ஐரோப்பிய மொழிகளில் தமிழ் வேர்ச் சொற்கள்

இதுகாறும், பழந்திராவிட மொழிகள் இந்தோ-ஆரிய மொழிக் குடும்ப மொழிகளிலிருந்து வேறுபட்டவை என்றும் முந்தியவை என்றும் கண்டோம். இதைப் போன்றே, தமிழ் ஐரோப்பிய மொழிகளில் பழமையான சில மொழிகளை விடவும் முந்தியது என்பதற்கான சான்றாதாரங்கள் வேர்ச்சொல் ஆய்வுமூலம் கண்டறியப்பட்டுள்ளன.

ஞானகிரிநாடார் என்பவர் சுமார் 2200 தமிழ் வேர்ச் சொற்கள் ஐரோப்பிய மொழிகளில் இருப்பதாகவும் அவைகளில் 800 கிரேக்கமொழியிலும், 800 இத்தாலிய- செல்த்திக் மொழிகளிலும், 600 தியுத்தானிய (பழைய செருமானிய) மொழிகளிலும் இருப்பதாகவும் தம் ஆய்வு மூலம் விளக்கிக் காட்டியிருக்கிறார். Routledge and Kegan Paul Limited என்ற இங்கிலாந்தின் முக்கியப் பதிப்பகத்தின் தலைவரான Norman Franklin என்பவர் இவ்வேர்ச் சொற்கள் சமற்கிருதம் மற்றும் இந்தோ-ஐரோப்பிய மொழிகளைவிடப் பழமையான மொழிகளின் வேர்களுடன் தொடர்புடைய தாய் இருப்பதாக மிகவும் பாராட்டியிருக்கிறார்.

இவர் தமிழ்மொழியை ஆரிய மொழியான இத்தீத்து (Hittite) மொழியுடன் ஒப்பிட்டுப் பார்த்து இத்தீத்து மொழிச் சொற்களில் சில தமிழ்ச் சொற்களுடன் ஒத்திருப்பதாகக் கூறியிருக்கிறார்.[11]

மேலைநாட்டவருடன் பழங்கால வணிகத் தொடர்பு

Tamil Loan words in Greek என்ற நூலில் Legrand F. என்பவர் கிரேக்கர்கள் பழந்தமிழகத்துடன் வணிகம் செய்தபோது கடனாகப் பெற்ற சில சொற்களைப் பட்டியலிட்டுள்ளார். அவர் அம்மொழியில் சங்கத் தமிழ்ச் சொற்கள் போன்றவை வழங்கப் பெற்றன என்றும், அவை கிரேக்க நாட்டில் வசித்த தமிழ் பேசிய மக்கள் பயன்படுத்தியவை என்றும் பின்பு அவர்கள் கிரேக்கர்களுடன் கலந்ததால் அம்மொழியால் நிலைபெற்றுவிட்டன என்றும் எழுதியுள்ளார்.[12]

கி.மு. 5ஆம் நூற்றாண்டில் கிரேக்க நாட்டில் வசித்த ஏரோதோத் என்ற வரலாற்றாசிரியர் இந்தியாவின் தென்கோடியில் உள்ள குமரிநாட்டிலிருந்து குடியேறிய பினிசியர் முதலில் கிருத் தீவிலும் பின்னர்க் கிரேக்க நாட்டிலும் கி.மு. 3000 அளவில் குடியேறியதாகக் கூறுகிறார்.[13]

தமிழ் வணிகர்களே எகிப்தியர்களுக்கு எழுத்தறிவித்தனர்

எகிப்திய வரலாற்றைக் கூறும் ஐந்து தொகுதிகள் அடங்கிய நூலில், கீழைப் பகுதிகளில் உறுதியான மரத்தாலான கப்பல்களில் வந்தவர்களே எகிப்தியர்களுக்கு எழுத்து வடிவங்களைக் கற்றுக் கொடுத்தனர் எனக் குறிப்பிடப் பெற்றுள்ளது.

இவ்வெழுத்து வடிவங்கள் ஆப்பெழுத்துகள் எனப்பெறும் Hieroglyphs ஆகும். இவ்வெழுத்துகளுக்கு முன்னோடியான வடிவங்கள் பழந்தமிழகப் பகுதிகளில் பெருமுக்கல், குற்றாலம், எடக்கல் (சேரநாடு) எனும் பகுதிகளில் கண்டறியப் பட்டுள்ளன.[14]

யவனர்களோடும் எபிரேயர்களுடனும் பழங்காலத் தமிழ் வணிகர்கள் வணிகத் தொடர்புகளோடு இலக்கிய, அறிவியல் துறைகளிலும் பங்களிப்புகளை அளித்திருந்திருக்கிறார்கள் என்பதற்கான சான்றுகள் தற்போது வெளியில் வந்திருக்கின்றன. சான்றாக, கைம் ராபின் (Chaim Rabin) என்பார் இவ்வாறான சான்றாதாரங்களை வெளியிட்டிருக்கிறார் என்றும், விவிலியத்தின் பழைய ஏற்பாட்டிலுள்ள சாலமன் அரசனின் பாடல்கள் சங்கத் தமிழ் அகக் கவிதை மரபிற்குக் கடன்பட்டிருக்கின்றன என்றும் கைம் ராபினின் "The Song of Songs and Tamil poetry" எனும் தலைப்பிட்ட கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு எழுதப்பெற்ற தம் கட்டுரையில் அறிஞர் மருதநாயகம் குறிப்பிடுகிறார்.[15]

பண்பட்ட, பண்படாத உலக மொழிகளுடன் தமிழ்த் தொடர்பு

உலகில் பழங்காலத்திலேயே பண்பட்டு எழுத்துமொழியாகவும் பேச்சு மொழியாகவும் வழங்கிய பின் வழக்கொழிந்த இன்றும் வழக்கொழியாத மொழிகளில் தமிழின் செல்வாக்கை மேலே கண்டோம். இனி, பழங்கால முதல் பழகி வந்தனவும், இதுகாறும் அறிஞர்களால் இனங்காணப் பெறாதனவுமான மேலை மொழிகள் சிலவற்றில் தமிழின் செல்வாக்கை அறியலாம்.

ஸ்டென் கொனோவ் 1904இல் திராவிட மொழிகள் எஸ்த்ருக்சன் மொழியுடன் தொடர்புடையவை என்றார். 1906இல் H.B. Hubert இவை கொரிய மொழியுடன் ஒத்திருப்பதாகவும், J. Vinson, Lahovary *(1948)* போன்றவர்கள் இம்மொழிகள் பாஸ்க் மத்திய தரைக்கடல் நாட்டு மொழிகளுடன் ஒத்திருப்பதாகவும் கூறியிருக்கின்றனர். C.P. Brown 1930இல் மித்தன்னி மொழியுடனும், Vives J.Quintana (1944), H.S. David (1954), A. Sadasivam (1965) போன்றவர்கள் திராவிட மொழிகளைச் சுமேரிய மொழியுடனும் தொடர்புபடுத்தி யிருக்கின்றனர். K.O. Shamsuddin (1972) இவற்றைச் செமித்திக் மொழியுடன் ஒப்பிட்டுக் காட்டியிருக்கிறார். J.Mayer (1924), Tuttle (1932). L. Homburger (1950) போன்றவர்கள், இம்மொழிகளை ஆப்பிரிக்க, இலிபியா மொழிகளுடன் இணைத்துக் காட்டியிருக்கின்றனர்.[16] மேலும், பழைய எகிப்திய மொழியிலும், ஆப்பிரிக்க மொழிகளான பேல், சோமாலி, செனேகால் மொழிகளிலும் தமிழ்ச் சொற்கள் கலந்திருப்பதாகத் திரு. ப. சண்முகசுந்தரம் குறிப்பிட்டிருக்கிறார்.[17]

இந்தோ-ஐரோப்பிய மற்றும் பிறமொழிக் குடும்ப மொழிகளில் பல தமிழ்ச் சொற்கள் புகுந்துள்ளதை மொழி ஞாயிறு பாவாணர் சான்றுகளோடு பட்டியலிட்டுள்ளார்.[18]

எலாமைட் மொழிக்கும் திராவிடமொழிகளுக்கும் ஒலி, ஒலியன், உருபன், சொல், தொடர் போன்றவை உறவுத் தொடர்புகள் கொண்டிருப்பதை டேவிட் மக்அல்பின் (1974) என்பவர் மொழியியல் அடிப்படையில் ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளார். இக்கொள்கையைச் செக் நாட்டறிஞர் கமில் சுவலபிலும் ஆதரிக்கின்றார். இவர்களின் ஆய்வுகள் மூலம் கீழ்க்காணும் ஒப்புமைகள் பட்டியலிடப்படுகின்றன.[19]

தமிழ்	எலாமைட்
நீ	நீ
நுன்	நுன்
நீர் (நீம்)	நும்
அத்தன்	அத்தா
அம்மா	அம்(மா)
ஒன்று	ஒன்

எலாமைட் மொழி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக ஒரு பொதுமொழிக் குடும்பத்திலிருந்து பிரிந்தது எனக் கமில்சுவலபில் கருதுகிறார்.

பண்டைத் தமிழ் இலக்கிய, இலக்கணச் சிறப்புகள்

பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்கும் புதுமையாகவும் வழங்கி வருகின்ற தமிழின் சிறப்புகளைப் பன்னாட்டு அறிஞர்கள் வெளிப்படுத்தி வருகின்றனர்.

> தமிழ்மொழியிலுள்ள சொற்களின் வேர்களை உலகின் அனைத்துச் செம்மொழிகளிலும் காணலாம். இது, போர்த்திறம் கொண்ட புறப் பாடல்களையும், உயரிய காதல் கனிந்த அகப்பாடல்களையும் மற்றும் அறநூல்களையும் சிறந்த படைப்புகளாக (Masterpieces), இலக்கியத் தொகுப்பாகப் படைத்துள்ளது. சமயம் சாராத உலகளாவிய மனித நேயம் பற்றி இவ்விலக்கியங்கள் கூறுகின்றன.[20]

தொன்மைத் தமிழும் அதன் தொல்காப்பிய இலக்கணமும்

இதுவரை, தமிழின் உலகளாவிய பரவலைச் சான்றுகளுடன் அறிஞர்களின் கருத்துகளோடு ஆராய்ந்தோம். இந்நிலையில், தமிழ் வழக்கொழிந்த வடமொழிக்கும் முந்தையது என்றும், வடமொழி போன்று வழக்கொழிந்துபோன உலக மொழிகளில் பழமையானவற்றுள்ளும் அவற்றிலிருந்து கிளைத்த மொழிகளிலுள்ளும் தமிழின் செல்வாக்கு இருப்பதாலும், பழமை வாய்ந்த மேலை நாட்டு நகரங்களோடு வணிக உறவு, பண்பாட்டுறவு, மொழி உறவு கொண்டு அவற்றின் மொழிகளைத் திருந்தச் செய்துள்ளது என்றும், அந்நாடுகளின் அறிவியலுக்கும் தத்துவத்திற்கும் இலக்கண வளத்திற்கும் தமிழ் செறிவூட்டியது என்றும் அறிந்துகொள்ளலாம்.

தமிழ்மொழியின் திருந்திய பண்பு அதன் பண்டை இலக்கியங்கள் மூலமும் அவற்றுக்கு ஏற்பட்ட இலக்கணமான தொல்காப்பியத்தின் திட்பநுட்பங்களால் தெளியப்படும் என்றும் அறிந்து கொள்ளலாம்.

தொல்காப்பியத்தின் பெயரிலேயே அது மிகுந்த பழமையான இலக்கண நூல் என்பது தெளிவு. இந்த இலக்கண நூல் தொல் தமிழரின் மொழியையும், அதன் இலக்கிய அமைப்புகளையும் அவர்களின் அக-புற வாழ்வுகளையும், இன்னும் பலவாறான தொல்பழங்கால வரலாற்றினையும் தமிழ் மூலமாகவும் தமிழர் மூலமாகவும் உலகுக்கு எடுத்துச்சென்ற விதம் போற்றத்தக்கது. சான்றாக, ஒலியின் பிறப்பை அறிவியல்பூர்வமாகத் தொல்காப்பியம் எடுத்தோதியுள்ளது.

உந்தி முதலா முந்துவளி தோன்றி
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇ
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்பு உற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலை
பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல
திறப்படத் தெரியும் காட்சி யான[21]

உலக மொழிகளின் இயல்புகளை ஆராய்ந்த மொழியியல் அறிஞர்கள் தொல்காப்பியம் தமிழ் ஒலிகளின் பிறப்பை அறிவியல் அடிப்படையில் கூறியுள்ளதை அறிந்து வியந்ததோடன்றி, வேறு எந்த மொழியிலும் அம்மொழிகளின் ஒலிகளை அவ்வவ்மொழிகளின் இலக்கணங்கள் அறிவியலாகக் கூறவில்லை என்று கூறுவதையும் காணமுடிகிறது.

தொல்காப்பியம் மாந்தரின் மொழியை மட்டுமின்றி அவர்களின் வாழ்வியலை மட்டுமின்றி, இவ்வுலகத் தோற்றம், அதில் உயிரினங்களின் தோற்றம், உயிரினங்களுக்கு ஆதாரமாக விளங்கும் புல், பூண்டு, மரம், செடி, கொடிகள் போன்வற்றினையும் ஆராய்ந்து கூறியிருப்பது, தமிழ்மொழியின் சிறப்பையும் தமிழரின் அறிவியல் சிறப்பையும் தமிழ் உலகுக்கெல்லாம் தாய்மொழியாக அமைவதை உறுதி செய்வதாக உள்ளது. தொல்காப்பிய மரபியல் இதற்குச் சான்றாகும்.[22]

புல்லும் மரனும் ஓர்அறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே
நந்தும் முரளும் ஈர்அறி வினவே
. . . .
சிதலும் எறும்பும் மூஅறி வினவே
. . . .
நண்டும் தும்பியும் நான்கு அறிவினவே
. . . .
மாவும் மாக்களும் ஐஅறி வினவே
. . . .
மக்கள் தாமே ஆறறிவு உயிரே

குறிப்புகள்

1. பிங்கலந்தை (நிகண்டு), பகுதி 10, 'இனிமையும் நீர்மையும் தமிழெனலாகும்'
2. பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், தமிழ் வளர்ச்சி, இன்பத்தமிழ்.
3. ப. சண்முகசுந்தரம், உலக மொழிகளில் தமிழ்ச் சொற்களும் இலக்கணக் கூறுகளும், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2011, பக். 5-6.
4. டாக்டர் கால்டுவெல், திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம், சென்னை.

5. ப. சண்முகசுந்தரம், மேலது, பக். 34.

6. Miron Winslow, A Comprehensive Tamil and English Dictionary of High and Low Tamil, 1862, (Reprint - Asian Educational Services, New Delhi, 1980), p. vi.

7. Ibid, p. vii.

8. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு 1, தமிழ் மண் பதிப்பகம், 1967, பக். 38.

9. பி. இராமநாதன், நாசுராதிக் - ஞால முதன்மொழி ஆய்வுகளுக்குப் பாவாணர் தரும் ஒளி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், 2008, பக். 1.

10. மேலது, பக். 6.

11. ப. சண்முகசுந்தரம், மேலது, பக். 34.

12. மேலது, பக். 36.

13. மேலது.

14. Dr. A. Thasarathan, "Perumakkal Hieroglyphs", **Journal of the Institute of Asian Studies,** 1992.

15. ப. மருதநாயகம், "விவிலியத்தின் பழைய ஏற்பாட்டில் தமிழ் அகஇலக்கியச் செல்வாக்கு", **தமிழியல்,** (Journal of Tamil Studies). எண். 82, 2012, பக். 23-44

16. ப. சண்முகசுந்தரம், மேலது, பக். 40.

17. மேலது.

18. ஞா. தேவநேயப் பாவாணர், தமிழ் வரலாறு 1, 2, தமிழ்மண் பதிப்பகம், சென்னை.

19. பார்க்க: பி. இராமநாதன், மேலது.

20. **செம்மொழி வரலாற்றில் சில செப்பேடுகள்,** செம்மொழத் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2010.

21. **தொல்காப்பியம்,** எழுத்ததிகாரம், பிறப்பியல், நூற்பா 1.

22. மேலது, மரபியல், நூ. 28-33.

முகாமைத்துவமும் திருக்குறளும் - ஓர் ஒப்பீட்டாய்வு

முனைவர் தி.வேல்நம்பி
பேராசிரியர், வணிகத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை.

1. அறிமுகம்

இன்றைய உலகில் முகாமைத்துவமானது மருத்துவம், பொறியியல், தொழில்நுட்பம் மற்றும் கணக்கியல் போன்று ஒரு முக்கியமான துறையாகக் காணப்படுகின்றது. ஏனெனில் நிறுவனமொன்றின் வெற்றியானது வினைத் திறனான முகாமைத்துவத்திலேயே தங்கியுள்ளது. முகாமை பற்றிய எண்ணக்கருக்கள் கி.மு 3000 ஆண்டுகளுக்கு முன்பே காணப்பட்டிருப்பதைச் சரித்திரங்கள் வாயிலாக அறிந்துகொள்ள முடிகின்றது. (Varshney,2003). கி.மு. 2900 ஆண்டளவில் எகிப்து தேசத்தில் "சியோப்ஸ்" (Cheops) என்பவரால் பிரமிட் (Pyramid) கட்டப்பட்ட போது அதனைக் கட்டுவதற்கு 100000 ஊழியர்களும், 20 வருடக் காலமும் தேவைப்பட்டன. 481 அடி உயரத்தினைக் கொண்ட இப்பிரமிட்டைக் கட்ட சராசரி இரண்டரைத் தொன் எடையுள்ள 2.3 மில்லியன் சதுரக்கற்கள் தேவைப்பட்டன. இத்தகைய நினைவுச் சின்னத்தைக் (Monumental) கட்டும்போது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், வழிநடத்தல், தீர்மானமெடுத்தல் முதலான முக்கியக் கருமங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் என்பது புலனாகின்றது (Chandan:1997). அத்துடன் பைபிளின் யாத்திரயாகமம் 18ஆம் அதிகாரத்தில் மோசேக்குக்கும் (Moses) அவரது மாமனாருக்குமிடையிலான உரையாடலின்போது மாமனான யெத்திரோ (Jethro) "வேலையைப் பகிர்ந்து தனிப்பட்ட ஒவ்வொருவருக்கும் ஒரு செயற்பாட்டை ஒதுக்கும்படி ஆலோசனை கூறுகின்றார்". இவை முகாமையானது பண்டைக் காலத்திலிருந்தே காணப்படுகின்றது என்பதனைக் காட்டுகின்றது. ஆயினும் 18ஆம் 19ஆம் நூற்றாண்டுகளில் ஏற்பட்ட கைத்தொழில் புரட்சியானது முகாமை பற்றிய சிந்தனையைத் தூண்டியது எனலாம். எப்படியாயினும் முகாமைத்துவத்தின் முறைமையான கற்கையானது முற்றிலும் புதியதொரு எண்ணக்கருவாகும். உண்மையில் முகாமைத்துவப்பரப்பில் கல்விசார் கற்கையானது 19ஆம், 20ஆம் நூற்றாண்டின் ஓர் அம்சமாகவே காணப்படுகின்றது எனலாம். இக்காலக் கட்டத்தில் தான் முகாமைத்துவ சிந்தனைகள் பற்றிய அறிஞர்களின் பங்களிப்பு ஆரம்பமாகியது. இவ்வகையில் றொபேட் ஓவன் (Robert Owen, 1971 - 1858), சாள்ஸ் பபேஜ் (Charles Babbage, 1972 - 1871) என்பவர்களது கோட்பாடுகளும், பழமைவாய்ந்த அணுகுமுறை (Classical approach) நடத்தையியல் அணுகுமுறை

(Behavioral approach) கணியவியல் அணுகுமுறை (Quantitative approach) போன்ற கோட்பாடுகளும் குறிப்பிடத்தக்கன (Wren and hay, 1992).

இவ்வாறு கல்விசார் ரீதியாகவும் சொற்பதங்கள், எண்ணக்கருக்கள் வடிவிலும் 18 - 20ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளில் பிரபல்யம் பெற்றுள்ள முகாமைத்துவம் பற்றிய கருத்துக்கள் இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர்த் தோன்றிய திருக்குறளில் ஆங்காங்குப் பொதிந்திருப்பதைக் காண முடிகின்றது. இவ்வகையில் முகாமைத்துவமும், திருக்குறளும் ஒப்பாய்வானது முக்கியமானதொன்றாக மேற்கொள்ளப்படுகின்றது.

2.ஆய்வுப்பிரச்சினை

கி.பி. 3 - 6ஆம் நூற்றாண்டுக் காலப்பகுதிகளை உள்ளடக்கிய சங்கமருவிய காலப்பகுதியில் தோற்றம் பெற்ற பதினெண்கீழ்க்கணக்கு நூல்களுள் தலையாய அறநூலாகக் கருதப்படுவது திருக்குறளாகும். அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் மூன்று பிரிவுகளைக் கொண்டுள்ள இந்நூலானது பல்வேறு அறக்கருத்துக்களையும், வாழ்வியல் நெறிகளையும் நமக்கு வழங்குகின்றது. அதேநேரம் இதிலடங்கியுள்ள குறட்பாக்கள் நிர்வாக இயல் என்று சொல்லப்படும் முகாமைத்துவத் தத்துவங்களைப் (Management Principles) பிரதிபலிப்பதாகவும் இருக்கின்றன (இரவீந்திரன்: 2005). அத்துடன் இந்நூலானது நல்லதொரு தொழில் வாழ்வுக்கும் (Professional life), தொழில் திருப்தியுடன் கூடிய வாழ்வுக்கும் (Life with work satisfaction) இட்டுச் செல்கின்றது. (Thillainathan,2007). எனவே திருக்குறளானது வெறுமனே இலக்கியக் கருத்துக்களையும், சிந்தனைகளையும் மட்டுமன்றி இன்று பிரபல்யமாகியுள்ள வணிக, முகாமைத்துவ முறைகள், கருத்துக்கள் பற்றியும் தெளிவாக விளக்குகின்றது என்ற புதியதொரு பார்வையும் புலப்படுகின்றது. இவ்வகையில் திருக்குறளானது முகாமைத்துவக் கருத்துக்கள், தத்துவங்களை உள்ளடக்கியுள்ளதா? என்பதையும், திருவள்ளுவர் கூறிய இம்முகாமைத்துவக் கருத்துக்கள் இன்று பொருத்தமானதாக இருக்கின்றனவா? என்பதையும் கண்டறியும் நோக்குடன் இவ்வாய்வானது மேற்கொள்ளப் படுகின்றது.

3.ஆய்வின் முக்கியத்துவமும் இலக்கிய மீளாய்வும்

"முகாமைத்துவம்" என்பது ஒரு பரந்த சொற்பதமாகும். அது பயன் படுத்தப்படும் உள்ளடக்கத்தைப் பொறுத்துப் பல்வேறுபட்ட கருத்துக்களைக் கொண்டிருக்கின்றது. ஆயினும் ஒவ்வொரு வரையறையும் முகாமைத்துவத்தின் முக்கியமான அம்சங்களையும், தொழிற்பாடுகளையும் வெளிப்படுத்துவதாக அமைகின்றது. முகாமைத்துவம் என்பது கீழூழியர்கள் அல்லது உதவியாளர்களூடாக (Subordinates) கடமைகளைச் செய்து முடிக்கும் ஒரு கலை எனப்படுகின்றது (Appley). எனவே முகாமைத்துவமும் திருக்குறளைப் போன்று ஒரு கலையாகவே கொள்ளப்படுகின்றது என்பது இங்குக் குறிப்பிடத்தக்கது. E.F.L. Brech (1957) என்னும் முகாமை அறிஞர் "முகாமையானது ஒரு சமூகச் செய்முறை. இச்செய்முறையானது திட்டமிடல், கட்டுப்படுத்தல், ஒருங்கிணைத்தல், ஊக்கப்படுத்தல் ஆகிய கருமங்களை

உள்ளடக்கிய ஒரு செய்முறையாகும்" என வரையறை செய்துள்ளார். இவ்வாறே Koontz and O'Donnell, (1976) என்பவரின் கருத்துப்படி முகாமை செய்தல் எனப்படுவது முகாமைத் தொழிற்பாடுகளை ஆய்வு செய்வதன் மூலம் பிரித்தெடுக்கப்பட்ட ஒரு செயற்பாட்டு நடவடிக்கையாகும். இங்கு ஐந்து அவசியமான முகாமைச் செயற்பாடுகளாகத் திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் ஆகிய கருமங்கள் உள்ளடக்கப்படுகின்றன. எனவே முகாமை எனப்படுவது நிறுவனத்தின் குறிக்கோள் அல்லது இலக்கினை ஊழியர்களைக் கொண்டு அடைய முற்படும் ஒரு செய்முறை என்பது புலனாகும்.

நிறுவனமொன்று தன் வளங்களைச் சரியான முறையில் பயன்படுத்தித் தன் இலக்கினை அடைந்து கொள்வதற்கு முகாமைத்துவம் அவசியமானது. இவ்வாறே ஒருவன் தன் வாழ்க்கையில் ஒழுங்குமுறையாக அறநெறிகளைக் கடைப்பிடித்து வாழ்வதன் மூலம் முன்னேற்றமடைய முடியும் என்பதைத் திருக்குறள் எடுத்துக் கூறுகின்றது. இவ்வகையில், தனிநபர், குடும்பம், நிறுவனம் என்றவகையில் முகாமைசார் கருத்துக்களையும் இது கூறத்தவறவில்லை. இவ்வகையில் முகாமைத்துவத்தையும் திருக்குறளையும் ஒப்பீடு செய்வது சாலப் பொருத்தமானதே எனலாம்.

நீதி நூல்களிலெல்லாம் உலகப்புகழ் வாய்ந்த ஒப்பற்ற நூலாகத் திகழ்வது திருக்குறளேயாகும். தமிழகத்தில் இந்நூலைப் போற்றாத புலவரும் இல்லை. நூற்கருத்துக்களைக் கையாளாத நூலுமில்லை. திருக்குறளைப் புகழாத மேனாட்டு அறிஞரும் இல்லை. மொழிபெயர்க்காத மொழியுமில்லை என்று அடைக்கலசாமி (1963) அவர்கள் குறிப்பிடுவதிலிருந்து திருக்குறளின் முக்கியத்துவத்தையும்

"எல்லாப் பொருளும் இதன்பாலுள; இதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால்"

என்று மதுரைத் தமிழ் நாகனார் கூறுவதிலிருந்து திருக்குறளில் முகாமைக் கருத்துக்களும் இடம்பெற்றிருக்கும் என்பதும் புலப்படுகின்றது.

அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் முப்பெரும் பிரிவுகளையும், 133 அதிகாரங்களையும், அதிகாரத்துக்குப் பத்துப்பத்துப் பாக்களாக மொத்தம் 1330 குறட்பாக்களையும் கொண்ட இந்நூலானது அறநூல் (Ethical work), அறிவிலக்கியம் (Literature of Knowledge), உணர்ச்சி இலக்கியம் (Literature of Power) என்றெல்லாம் அழைக்கப்படுகின்றது. அத்துடன் இது இயற்கைநெறிக் காலமாகிய சங்ககால வாழ்க்கை முறையைக் கண்டனஞ் செய்ய எழுந்ததென்றும், அக்காலச் சமூகத்தில் காணப்பட்ட சீர்கேடுகளையும், குறைபாடுகளையும் களைவதற்காக எழுந்ததென்றும் கருதப்படுகின்றது. (வேலுப்பிள்ளை, 1985), திட்டமிடப்பட்ட விடயங்களுடன், உண்மை விளைவுகளை ஒப்பீடு செய்து தேவையான கட்டுப்பாட்டை மேற்கொண்டு நிறுவன இலக்கையடைய முற்படும் முகாமைத்துவம் போன்று திருக்குறளும் அறவொழுக்கக்கருத்துக்களைக் கூறி மனிதனைக் கட்டுப்படுத்தி வாழ்வின் இலக்கையடையத் துணை புரிகின்றது.

திருக்குறளை மையமாக வைத்துப் பல ஆய்வுகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன. எனினும் அதனை முகாமைத்துவத்தோடு ஒப்புநோக்கிப் பூரணமாக

இதுவரை எந்தவொரு ஆய்வும் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இந்த இடைவெளியை நிறைவு செய்யும் நோக்குடன் இவ்வாய்வானது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

4. தகவல் சேகரிப்பும், ஆய்வு முறையும்

இவ்வாய்வுக்கென இரண்டாந்தரத் தகவல்களே (Secondary data) பயன்படுத்தப்பட்டுள்ளன. இவ்வகையில் தேவையான தகவல்கள், புத்தகங்கள், ஆய்வுநூல்கள், பருவகால இதழ்கள் (Journals), மற்றும் கட்டுரைகளிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஆய்வு முறையைப் பொறுத்தவரை இவ்வாய்வானது ஒரு விபரணரீதியான (Descriptive) அல்லது விளக்கரீதியான (Exploratory) ஆய்வாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளது. முகாமைத்துவத் தத்துவங்கள், கோட்பாடுகள், தொழிற்பாடுகள் பற்றி முகாமையறிஞர்களால் சொல்லப்பட்ட கருத்துக்களையும், வள்ளுவரின் குறட்பாக்களையும் ஆழமாகப் படித்துப் பெற்ற அறிவனுபவத்தையும், அவதானிப்பையும் ஒப்புநோக்கிய வகையில் இவ்வாய்வு முறை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதற்கமையத் தேவையான இடத்தில் தக்க சான்றாதாரங்கள் காட்டப்பட்டுள்ளன.

5. ஆய்வின் நோக்கங்கள்

இவ்வாய்வானது பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

i) திருக்குறளில் முகாமைத்துவச் சிந்தனைகள் இடம்பெற்றுள்ளன என்பதனை வெளிக்கொண்டு வருதல்.

ii) முகாமைத்துவக் கருத்துக்களையும், தொழிற்பாடுகளையும் அறிந்து கொள்ளுதல்.

iii) திருக்குறள் பற்றிய அடிப்படை அறிவினைப் பெற்றுக் கொள்ளுதல்.

6. கருதுகோள்கள்

இவ்வாய்வுக்கெனப் பின்வரும் கருதுகோள்கள் எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

i) வள்ளுவருடைய குறட்பாக்களில் முகாமைத்துவக் கருத்துக்கள் இழையோடியுள்ளன.

ii) வள்ளுவரின் முகாமைத்துவம் பற்றிய கருத்துக்கள் தற்காலச் சமூகத்துக்கு ஏற்புடையதாக இருக்கின்றன.

7. பெறுபேறுகளும், விதந்துரைகளும்

எந்தவொரு நிறுவன அமைப்புக்கும் முகாமைத்துவம் அவசியமானது. இவ்வகையில் புதிய நிறுவனமொன்று ஆரம்பிக்கப்படும் பொழுது அல்லது நடைமுறையிலுள்ள நிறுவனமொன்று நாடோறும் தன் செயற்பாட்டுக்காகத் திறக்கப்படும் பொழுது இறைவனை நினைந்து வழிபட்டுக் கொள்வது வழமை. இவ்வாறே வள்ளுவரும் தம் நூலின் ஆரம்பத்தில் இறைவனை நினைத்து "கடவுள் வாழ்த்து" என்னும் அதிகாரத்தையே முன்வைத்துள்ளார். இதிலும் தொடக்கக் குறளான

"அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

முகாமைத்துவமானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் என்னும் தொழிற்பாடுகளை உள்ளடக்கியதென்றும், இத்தொழிற்பாடுகள் ஒன்றன்பின் ஒன்றாக நிகழ வேண்டியவை எனவும் கருதப்படுகின்றது. அதாவது திட்டமிடப்பட்ட செயற்பாட்டை அடைவதற்காகக் கிடைக்கக்கூடிய வளங்களை ஒழுங்கமைத்தலும், ஒழுங்கமைக்கப்பட்ட வளங்களைக் கையாள ஊழியர்களைச் சேர்த்துக் கொள்வதும், சேர்த்துக் கொள்ளப்பட்ட ஊழியர்களை இலக்கினை அடைவதன் பொருட்டு வழிநடத்துவதும், தேவையான இடங்களில் கட்டுப்பாட்டை மேற்கொள்வதும் அவசியமானதாகும். இவ்வாறே வள்ளுவரும் தம் அதிகாரங்களைக் காரணங்கருதி ஒன்றன்பின் ஒன்றாக அதிகார வைப்பு முறையைப் பின்பற்றி வைத்துள்ளார்.

முகாமைத்துவத்தின் பரிணாம வளர்ச்சி (Evolution of management thought) பற்றிய கோட்பாடுகளில் ஒன்று பழமைவாய்ந்த கோட்பாடு (Classical approach). இதன் கிளைகளில் ஒன்றான ஹென்றி ஃபயோலின் (Henry Fayol, 1941 - 1925) நிர்வாக முகாமைத்துவமானது (Administrative management) பதினான்கு முகாமைத் தத்துவங்களை முன்வைக்கின்றது. (Cuthbert et.al, 1970). இவற்றுள் ஒழுங்கு, நேர்மை போன்ற தத்துவங்களும் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது. ஒழுங்குமுறை (Discipline) என்பது நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்கள் சட்டம், விதிகள் என்பவற்றினை மதித்து அதற்கமைய நடந்து கொள்ள வேண்டும் என்பதையும் தவறின் பாதிப்பை அடைவர் என்பதையும் குறிக்கின்றது. இதனை வள்ளுவர்

"ஒழுக்கம் உடைமை குடிமை இழுக்கம்
இழந்த பிறப்பாய் விடும்"

என்ற குறட்பாவினூடாக விளக்கிக் காட்டியுள்ளார். இவ்வாறே நேர்மை என்னும் தத்துவமானது முகாமையாளர் தமக்குக் கீழ் பணிபுரியும் பணியாளர்கள் எல்லோரையும் ஒரேமாதிரியாகவும் அன்பாகவும் நடத்துதல் வேண்டும். அதாவது சகலரையும் நியாயமான முறையிலும், பாரபட்சமின்றியும் நடத்துதல் வேண்டும் என்பதைக் குறிக்கின்றது. இதனை வள்ளுவர் நடுவுநிலைமை என்னும் அதிகாரத்தினூடாகவும், அன்புடைமை என்னும் அதிகாரத்தினூடாகவும் மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்.

"சமன் செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்து ஒருபால்
கோடாமை சான்றோர்க் கணி"

"அன்பீனும் ஆர்வமுடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு"

போன்ற குறள்களை இதற்குச் சான்றாகக் குறிப்பிடலாம்.

முகாமைத்துவமானது திட்டமிடல், ஒழுங்கமைத்தல், ஊழியரிடல், வழிநடத்தல், கட்டுப்படுத்தல் என்னும் ஐந்து தொழிற்பாடுகளை உள்ளடக்கியுள்ளது. திட்டமிடல் என்பது எதிர்காலச் செயற்பாட்டு நடவடிக்கைகளை நிர்ணயித்துக் கொள்வதுடன் தொடர்புடைய ஒரு செய்முறையாகும். அதாவது எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய கருமங்களை அல்லது செயற்பாடுகளை முற்கூட்டியே தீர்மானித்துக் கொள்வதைக் குறிக்கும். (Terry, 1977; Peter Drucker, 1974), இதனைத் திருக்குறளின்

"எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவ மென்பது இழுக்கு"

என்ற பாடலடியின் மூலம் வெளிப்படுத்தியிருக்கின்றார். திட்டமிடலின் ஒரு பகுதியாகிய தீர்மானமெடுத்தல் (Decision making) எனப்படுவது பல்வேறு மாற்றுவழிகளிலிருந்து ஒரு மாற்று வழியைத் தெரிவு செய்தலைக் குறிக்கின்றது. இவ்வாறு முடிவு எடுத்ததும் அதனைக் காலதாமதமின்றி அமுல்படுத்துதல் அவசியமானது (Sivalingam; 2005). இது வினை செயல்வகை என்ற அதிகாரத்தில் வரும்.

"சூழ்ச்சி முடிவு துணிவெய்தல் அத்துணிவு
தாழ்ச்சியின் தங்குதல் தீது"

என்ற குறளினூடாக வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஒரு செயலைச் செய்ய ஆலோசனை செய்யும்போது அதன் எல்லையானது, இதை இனித் தைரியமாகச் செய்யலாம் என்று நிச்சயிப்பதே. அப்படி முடிவெடுத்தபின் அதனைச் செயற்படுத்தாமல் இருப்பது கெடுதலாய் முடியும் என்பது இதன் பொருள்.

அடுத்து ஒழுங்கமைத்தல், ஊழியரிடல் தொடர்பான கருமங்களில் முன்வைக்கப்படும் ஒரு முகாமைக்கருத்து "சரியான வேலைக்குச் சரியான நபரை அமர்த்துதல்" (Right man for the right job) ஆகும்.

"இதனை இதனால் இவன் முடிக்குமென் றாய்ந்து
அதனை அவன்கண் விடல்"

"வினைக்குரிமை நாடியபின்றை அவனை
அதற்குரியனாகச் செயல்"

போன்ற குறட்பாக்கள் மேற்படி எண்ணக்கருவை வலியுறுத்துவனவாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழிநடத்தல் (Directing) என்பது நிறுவன இலக்கினை அடைந்து கொள்வதற்காக ஊழியர்களை வழிப்படுத்துவதைக் குறிக்கும். இது தலைமைத்துவம், ஊக்கப்படுத்தல் (Leadership, and motivation) போன்ற தொழிற்பாடுகளையும் உள்ளடக்கும். கொடுக்கப்பட்ட ஒரு சூழ்நிலையில் நிறுவன இலக்கை அடைந்து கொள்வதற்காகத் தனிநபர் அல்லது குழுவினுடைய செயற்பாடுகளில் செல்வாக்குச் செலுத்தும் ஒரு செய்முறையே தலைமைத்துவமாகும் (Hersey, Paul and Ken Blanchard; 1982). இத்தகைய தலைவர்கள் குறித்த சில பண்புகளைக் கொண்டிருக்க வேண்டுமென்று முகாமைத்துவம் கூறுகின்றது. குறிப்பாக

மற்றையோர் நிலைக்குள்ளாகும் பண்பு (Empathy), தொடர்பாடல் திறன் (communication skill); ஆற்றலும் தகுதியும், பேச்சாற்றல் விமர்சனங்களை ஏற்கும் துணிவு போன்றவை முக்கியமானவை. இவற்றை வள்ளுவரின் குறட்பாக்களும் விட்டு வைக்கவில்லை.

"கேட்டார்ப் பிணிக்குந் தகையவாய்க் கேளாரும்
வேட்ப மொழிவதாஞ் சொல்"

சொல்லும்போது கேட்பவரைத் தன்வயப்படுத்தும் தன்மையுடையதாகவும், அதைக் கேட்காதவரும் கேட்க விரும்பும் படியும் கூறுவதுதான் ஒருவரின் சொல்லாண்மையாகும் என்ற பொருளைத்தரும் மேற்படி குறளானது பேச்சாற்றலின் அவசியம், மற்றையோர் நிலைக்குள்ளதால் போன்ற தலைவரின் பண்புகளுடன் ஒத்துப்போவதாக இருப்பதை அவதானிக்க முடிகின்றது.

தலைவன் ஒருவன் தான் சொல்ல வந்த கருத்தைத் தன் ஊழியர்கள் சரியாக விளங்கிக் கொள்ளக்கூடிய வகையிலும், ஊழியர்கள் சொல்லும் அல்லது சொல்லவரும் கருத்துக்களைச் சரியாகப் புரிந்து கொள்ளக்கூடியவராகவும் இருத்தல் வேண்டும். மனிதவள முகாமைத்துவத்தின் படியான மனித நடத்தைகளை விளங்கிக் கொள்ளும் ஆற்றலும் தலைவனுக்கு அவசியமாகும் என்பதை எந்த முகாமைத்துவ அல்லது மனிதவள முகாமைத்துவ நூல்களிலும் காணலாம். இதனை வள்ளுவர்,

"கூறாமை நோக்கிக் குறிப்பறிவான் எஞ்ஞான்றும்
மாறாநீர் வையக்கு அணி"

என்ற குறள் மூலம் மிகவும் அழகாக எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறே

"ஆற்றின் அளவறிந்து கற்க அவையஞ்சா
மாற்றம் கொடுத்தற் பொருட்டு"

என்ற குறட்பா தலைவனுக்கு வேண்டிய அறிவாற்றலையும், அஞ்சாத துணிவையும் சுட்டி நிற்கின்றது.

நிறுவனமொன்றில் பணிபுரியும் ஊழியர்களை ஊக்கப்படுத்துதல் அவசியமானதாகும். நிறுவனமொன்றின் இலக்கினை அடைந்து கொள்வதற்குக் கடுமையாக உழைக்கக்கூடிய வகையில் தூண்டக்கூடிய நிறுவன நிபந்தனைகளை உருவாக்கும் ஒரு செய்முறையே ஊக்கப்படுத்தலாகும் (Mamoria, 1996). இது ஊழியர்கள் நிறுவன இலக்கை அடைந்து கொள்வதற்குத் தமது உயர்ந்தளவான முயற்சியை வழங்குவதற்கான விருப்பத்தை வழங்கும். இதனைச் சுட்டுவதற்கு வள்ளுவர் "ஊக்கமுடமை" என்று ஓர் அதிகாரத்தையே வைத்துள்ளார்.

"உடையர் எனப்படுவ தூக்கமஃ தில்லார்
உடைய துடையரோ மற்று"

"வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம்
உள்ளத் தனைய துயர்வு"

முதலான ஊக்கமுடைமைக் குறட்பாக்களும்

"முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

என்ற "ஆள்வினை உடைமை" என்னும் அதிகாரத்தில் வரும் குறட்பாவும் ஊக்கப்படுத்தலின் அவசியத்தைக் காட்டுகின்றன. ஊக்கப்படுத்தல் வகைகளில் நேர்க்கணிய ஊக்கப்படுத்தல் (Positive motivation), எதிர்க்கணிய ஊக்கப்படுத்தல் (Negative motivation) என்னும் வகைகளும் குறிப்பிடத்தக்கன. நேர்க்கணிய ஊக்கப்படுத்தல் என்பது ஊழியர்களுக்கு வெகுமதிகளை (Rewards) வழங்கி வேலையைச் செய்யும் ஆர்வத்தைத் தூண்டுவதாகும். மாறாக எதிர்க்கணிய ஊக்கப்படுத்தல் என்பது ஊழியர்களுக்குத் தண்டனைகளை வழங்கி அச்சுறுத்தி வேலையைச் செய்ய வைத்தலாகும். இத்தகைய தூண்டல் தந்திரங்களை அல்லது முறைகளை வள்ளுவரின் குறட்பாக்களும் கையாண்டிருக்கின்றன. அதாவது வள்ளுவர் தாம் எடுத்துக்கொண்ட விடயத்தை மக்களைப் பின்பற்ற வைப்பதற்காகச் சிலவிடங்களில் ஆசை காட்டியும், சிலவிடங்களில் பயமுறுத்தியும் கையாளத் தூண்டுகின்றார். எடுத்துக்காட்டாக

"அன்புஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பு என்னும் நாடாச் சிறப்பு"

என்று அன்பினால் கிடைக்கும் பயன்களை வெகுமதிகளாகக் காட்டியும்

"என்பிலதனை வெயில் போலக் காயுமே
அன்பிலதனை அறம்"

என்று அன்பின்றேல் வரும் விளைவினைக் கூறிப் பயமுறுத்தியும் அன்பினைக் கடைப்பிடிக்கத் தூண்டுவதைக் குறிப்பிடலாம். ஒருவன் செய்யும் வேலைக்கேற்ப ஊதியம் நியாயப் பூர்வமாக வழங்கப்பட வேண்டும். அது நியாயமானதாகவும், சமத்துவமானதாகவும் (Fair and equitable) இருத்தல் வேண்டும். இதனை,

"தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்
மெய்வருத்தக் கூலி தரும்"

என்ற குறள் தெளிவாகக் காட்டி நிற்கின்றது.

இவ்வாறு முகாமைத்துவத்தின் பல்வேறு அம்சங்களையும் எடுத்துக்கூறிய திருக்குறள் முகாமைத்துவத்தில் உள்ள சமூக, அறக்கருத்துக்களையும் (Social and ethical issues in management) சிறப்பாகக் கூறியுள்ளது. சமூகப் பொறுப்பு என்பது தமது சுயவிருப்புடன் மொத்தத்தில் சமூக நலனை முன்னேற்றுவதும், பாதுகாப்பான செயற்பாடுகளை மேற்கொள்வதற்குமான தீர்மான மெடுப்பவர்களின் கடப்பாட்டினைக் குறிக்கின்றது. (Keith Davis and Robert Blomstrom;1975). இத்தகைய அறக்கருத்துக்கள் திருக்குறளில் இழையோடியிருக்கின்றன. இதனை மேற்படி குறளே சான்றாக்குகின்றது எனலாம்.

8. முடிவுரை

தமிழில் தோன்றிய நூல்களில் தனித்துவமானது திருக்குறள். வையத்தில் மனிதன் வாழ வேண்டிய முறையைக் கூறுவது. இது வெறுமனே ஒரு இலக்கியமாக

அல்லது அறத்தைச் சொல்லும் நூலாக மட்டுமன்றி முகாமைக் கருத்துக்களைக் கூறி வழிகாட்டும் முகாமை அல்லது நிர்வாக நூலாகவும் அமைந்திருக்கின்றது. சுருங்கச் சொல்லின் 18ஆம், 19ஆம், 20ஆம் நூற்றாண்டுகளில் முன்வைக்கப்பட்ட முகாமைசார் கருத்துக்களைத் தூர நோக்குடன் முற்கூட்டியே கூறியிருக்கின்றது. அதுமட்டுமன்றி இதில் அன்று சொல்லப்பட்ட முகாமைக்கருத்துக்கள் தற்காலச் சமூகத்துக்கு முற்றிலும் ஏற்புடையதாக அமைகின்றது. வருங்காலத்துக்கும் ஏற்புடையதாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே இந்த ஆய்வானது ஆய்வின் நோக்கங்களை நிறைவு செய்வதாகவும், "வள்ளுவருடைய குறட்பாக்களில் முகாமைக் கருத்துக்கள் இழையோடியுள்ளன," "வள்ளுவரின் முகாமைத்துவம் பற்றிய கருத்துக்கள் தற்கால சமூகத்துக்கு ஏற்புடையதாக இருக்கின்றன" என்ற இரண்டு கருதுகோள்களையும் ஏற்றுக் கொள்வதாகவும் அமைகின்றன. அறவொழுக்கக் கருத்துக்களைக் கூறி மனிதனைக் கட்டுப்படுத்தி வாழ்வின் இலக்கை அடையத் துணை புரியும் திருக்குறளானது திட்டமிடப்பட்ட விடயங்களுடன் உண்மை விளைவுகளை ஒப்பீடு செய்து, தேவையேற்படின் கட்டுப்பாட்டை மேற்கொண்டு இலக்கினை அடைய முற்படும் முகாமைத்துவத்துக்கு நிகராகக் கருதப்படுகின்றதெனலாம்.

துணை நூல்கள்

1. Varshney, K.G. (2003), Organisation and Management, S.Chand & company Ltd, New Delhi, P. 25.
2. Chandan, S.J (1997), Management, Theory and practice, Vikas publishing house pvt Ltd, New Delhi; P. 24.
3. Wren, Daniel, A, and Robert D. Hay, (1977), **Management Historians and Business Historians**: Differing perceptions of Pioneer contributors. Academy of Management Journal, PP. 470 - 476.
4. இரவீந்திரன், மு., (2005), **திருக்குறள் காட்டும் நிர்வாக இயல் - வணிக இயல்**, வானதி பதிப்பகம், சென்னை.
5. Thillainathan, M. (2007), Thirukural and Project management, The catalyst; quarterly Journal, Sports, welfare and Art & Literary Association, Bank of Ceylon, Jaffna, PP. 20 - 22.
6. Appley-Lawrence (-) Management in Action.
7. Brech, E. F. L. (1957), Principles and Practice of Management.
8. Koontz and O' donnell (1976), Principles of Management.

9) அடைக்கலசாமி, ஆர். ஏம். (1963), **தமிழ் இலக்கிய வரலாறு**, பால் நிலா பதிப்பகம், சென்னை, ப. 110.

10. வேலுப்பிள்ளை, ஆ. (1985), தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், மூன்றாம் பதிப்பு, பாரி புத்தகப்பண்ணை, ப. 51.

11. Cuthbert, Norman, Fayol, (1970), **Principles of organization in management thinking**, (eds) Tilloet, A, Kempner and Gills. G, Penguin books, P. 123.

12. Terry George, O. (1977), **Principles of Management**, Home wood, Richard D. Irwin.

13. Peter Drucker, (1974), In Chandan, S.J. (1997), **Management: Theory and practice**, Vikas publishing house pvt ltd, New Delhi, P. 58.

14. Hersey Paul and Ken Blanchard (1982), Management & organizational behaviour, Utilizing human resources, Prentice Hall, P. 83.

15. Mamoria, C.B. (1996), Personnel management, Himalaya Publishing house, Bombay, P. 11.

16. வரதராசன், மு. (1955), திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், பாரி நிலையம், சென்னை.

17. சண்முகதாஸ், அ. மனோன்மணி, ச. (2005), தமிழ்த்தோணி, கோகுலம் வெளியீடு.

18. திருக்குறள் மூலமும் பரிமேலழகர் உரையும், (1976), தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், சென்னை.

19. விசாகரூபன், கி. (2008), திருக்குறளும் பொருளியலும், வித்தியா, ப. 16- 19.

புவியியல் சார்ந்த கணினிப் பதிவும் அதன் பயன்பாடுகளும்- இலங்கை இந்தியா போன்ற கிழக்காசிய நாடுகளில் அதன் வளர்ச்சியின் தேவையும்

திரு. ஜீவகுமரன்
ஜி.ஐ.எஸ். அலுவலர்
டென்மார்க்

விஞ்ஞானத்தினதும் கணினியினதும் வளர்ச்சி எமது கற்பனைத் திறனையும் தாண்டி வளர்ந்து கொண்டிருக்கிறது. அதில் ஒரு நாட்டின், நகரத்தின், கிராமத்தின் திட்டமிடுதலுக்கு அல்லது புனருத்தானத்திற்கு முக்கியக் கைகொடுக்கும் துறையாக இந்தப் புவியியல் சார்ந்த கணினித்துறை(GIS- Geographic information system) இன்றியமையாததாய் இருக்கின்றது. அது மட்டுமில்லை. ஒரு நாட்டின் அழிவில் கூட இந்தத் துறையின் பங்களிப்பை இந்தக் கட்டுரையின் முடிவில் அறிந்து கொள்ளலாம்.

எமது பள்ளிக்காலங்களில் சதுரக்கோடு போட்ட கொப்பிகளில் ஓ அச்சும் லு அச்சும் போட்டுப் புள்ளிகளும் வரைபுகளும் போட்டுக் கற்றதன் அடிப்படைதான் இந்தப் புவியியல் சார்ந்த கணினிப் பதிவு எமக்குப் போட்ட பிள்ளையார் சுழி அல்லது நாங்கள் கற்றுக் கொண்ட அகர முதலெழுத்து.

அதன் அடுத்தகட்ட வளர்ச்சியாக நில அளவை, உலக வரைபடங்கள் என வளர்ந்து கொண்டு வரக்கணினித்துறையின் சாற்றலைச் சார்ந்த பூகோள நிலைகளைக் கண்டறியும் துறையின் GPS (Global Positioning System) அதிவேக வளர்ச்சியும் இதனுடன் கைகோர்த்துக் கொள்ள உலகத்தையே வியக்க வைக்கும் அல்லது உலகைத்தையே வழிகாட்டிக் கொண்டிருக்கும் ஒரு துறையாக இந்தப் புவியியல் சார்ந்தக் கணனித்துறை வளர்ந்துள்ளது.

காரில் ஏறி இருந்தால் வழிகாட்டும் GPS தொடக்கம் துப்பாக்கி படத்தில் விஜய் உடலினுள் செலுத்திக் கொண்டு வில்லனின் இருப்பிடத்தை நோக்கிச் செல்லும் சிம் காட்டின் பயன்பாடு வரை எமக்குத் தெரிந்தோ அல்லது தெரியாமலோ இந்தத் துறையுடன் பயணப்பட்டுக் கொண்டு இருக்கின்றோம்.

அண்மையில் வாசித்த ஒரு சிறுகதையில் திருவள்ளுவரைத் தன் வாழ்வின் வழிகாட்டியாக தன் காரில் வைத்துப் பூஜித்த கணவன், மனைவியின் நச்சரிப்பைத் தாங்கமுடியாது வழி தவறும் பொழுது காரினுள் இருந்த திருவள்ளுவரையும் தூக்கி எறிந்து விடுகின்றான். "வழி காட்டும்" என வைத்திருந்தீர்களே என மனைவி கேட்கக் கணவனோ அதுக்குத் தான் உனக்குப் புறிஞு வந்திட்டுதே" எனத் தனது கோபத்தை மிகச் சாந்தாமாக வெளிப்படுத்துகின்றான்.அந்த அளவு இந்த துறை எம்முடன் கலந்து விட்டது.

இதன் அடிப்படை எவ்வாறு கட்டமைக்கப்பட்டுள்ளது?



இதனை நன்கு விளங்கிக் கொள்வதற்கு நாம் இளமையில் விஞ்ஞானப் பாடத்தில் கற்ற உடலின் உள்ளும் புறமும் பகுதியை நினைவில் கொள்ள வேண்டும். முதலில் ஒரு மனிதனின் புற உருவத்தை வரைந்திருப்பார்கள்.

பின்பு அந்தப் புற உருவத்தை மாறாது வைத்துக் கொண்டு அதனுள் வரக் கூடிய எலும்புத் தொகுதி, குருதிச் சுற்றோட்டத் தொகுதி, உணவுத் தொகுதி, சுவாசத் தொகுதி, நரம்புத் தொகுதி, இனப்பெருக்குத் தொகுதி போன்றவற்றை வரைவார்கள். அதே போல் வெளித்தோற்றத்துடன் சம்மந்தப்பட்ட தசைத் தொகுதி மற்றும் வெளி அவயவங்களை வரைந்திருப்பார்கள்.

தனித் தனியாக வெள்ளைத்தாள்களில் வரையப்பட்ட இப் படங்களை ஒளிபுகக்கூடிய செலோபோன் (பிளாஸ்டிக்) தாள்களில் வரைந்திருந்தால் இதனை ஒன்றன் மேல் ஒன்றை வைத்துப் பார்த்தால் முழு அவயவங்களுக்கும் உள்ள தொடர்பாடுகள் மிகத் தெளிவாகத் தெரியும் அல்லவா? அதே தத்துவத்தைக் கணினியில் பாவிக்கும் போது உருவானதே இந்தப் புவியியல் சார்ந்த கணினித்துறையாகும்.

ஒரு பெண்ணுக்கு மார்பில் புற்றுநோய் வருகின்றது அல்லது ஒருவருக்கு விபத்தில் கால்களை அகற்ற வேண்டி வருகின்றது என வைத்துக் கொண்டால் அவற்றை அகற்றிய பின்பு இவரின் குருதிச் சுற்றோட்டம் எவ்வாறு இருக்கும் என இப் படங்களில் சில பகுதிகளை அகற்றுவதன் மூலம் கண்டுகொள்ளலாம். இப்பொழுது இந்த உதாரணத்தைச் சுட்டிக் காட்டுவதற்குக் காரணம் இந்தக் கட்டுரையின் பின் பகுதியில் "சில தளங்களை அணைத்தல்" என்ற சொல்லைப் பயன்படுத்தும் பொழுது அதற்கு இந்த உதாரணம் நன்கு உதவும் என்ற முன்கூட்டிய எண்ணமே.

இனிப் புவியியல் சார்ந்த கணினிக்குள் செல்வோம்

இந்தப் பதிவின் அடிப்டை இந்தக் கட்டுரையின் ஆரம்பத்தில் குறிப்பிடப்பட்ட X அச்சும் Y அச்சும் போட்டுப் புள்ளிகளும் அவற்றின் நிலைகளை (X, Y) என்ற நாம் எழுதும் முறையுமே.

இதில் ஒரு நகரத்தின் வரைபடத்தை எடுத்துக் கொண்டால் அங்கு உள்ள ஒரு காணியின் விலாசம் அல்லது அந்தக் காணிக்கு அரசாங்கத்தில் உள்ள பதிவு எண் இந்த இரண்டையுமே சுற்றி அனைத்துப் பதிவுகளும் நடைபெறும். காரணம் ஒரு வீட்டின் விலாசம் அல்லது அந்தக் காணியின் பதிவு எண் என்பது உலகத்தின் வேறு இடத்தில் இருக்காது. எனவே பதிவின் மூலத்துக்கு ஒரு நேர்கோட்டு அளவும் (X) நிலைக்கோட்டு அளவும் (Y) இருக்கும். இந்தப் புள்ளியைச் சுற்றியே அனைத்தும் பதியப்படுகின்றன.



உதாரணமாக, கஸ்தூரியார் வீதி 232 என்ற விலாசத்தை எடுத்துக் கொண்டால் அந்தக் காணியில் காணப்படும் வீடுகள் மரங்கள் கிணறுகள் என்பன ஒரு தளத்திலும், அதனைச் சுற்றியுள்ள வீதிகள் அனைத்தும் இன்னோர் தளத்திலும், அந்த வீட்டுக்கு நீர் வழங்கப்படும் குழாய்கள் ஒரு தளத்திலும், கழிவுநீரைச் சேர்க்கும் குழாய்கள் இன்னோர் தளத்திலும், இவ்வாறு மின்சாரம், அந்தக் காணியின் மேடான பள்ளமான புவியியல் உயர்-தாழ் கோடுகள் ஒரு தளத்திலும் மொத்தத்தில் வானத்தில் இருந்து எடுக்கப்படும் படங்கள் இன்னோர் தளத்திலும் எடுக்கப்பட்டு அனைத்தும் ஒன்றன் மேல் ஒன்றாக அடுக்கிப் (முதலில் கூறிய உடலியல் உதாரணம் போல) பார்க்கும் பொழுது அந்த வீட்டைப் பற்றிய அனைத்துத் தகவல்களையும் ஒன்று சேரப் பார்க்கலாம்.

அடுத்தது இதில் பதியப்படும் அல்லது வரையப்படும் ஒவ்வொரு பொருளுக்கும் அல்லது விடயத்துக்கும் 5 தனித்துவமான குணாதிசயங்கள் வரையறுக்கப்படுகின்றன.

இதனை நன்கு விளங்க ஒரு தென்னை மரத்தையும் பனைவடலியையும்; எடுத்துக் கொள்வோம்.

1. அதன் பெயர் தென்னை- வடலி
2. அதன் நிறம் மண்ணிறம்- கறுப்பு
3. அதன் அமைப்பு சீரானது - சீரற்றது
4. இதனை வரையப் பயன்படுத்திய கோட்டின் தடிப்பு மெல்லியது மெல்லியது

5. அதன் தளம் அல்லது பிரிவு இரண்டுமே மரங்கள் என்ற பொதுத்தளத்தில் இடம் பெறும்

இவ் விரண்டு மரங்களின் ஒன்றுமைகளையும் வேற்றுமைகளும் ஒரே நிலப்படம் என்னும் ஒரு தளத்தில் வரையப்பட்டும் பதியப்பட்டிருக்கும்.

அதில் குறிப்பிடப்படும் "வரையப்படும்", "பதியப்படும்" என்ற இரு சொல்களும் முக்கியம் பெறுகின்றன. "வரையப்படும்" என்னும் பொழுது அதனை கண்களால் பார்க்கும் போது எமக்கு தெரிவது. "பதியப்படும்" என்னும் பொழுது அதன் விபரங்களைக் கணினிப் பதிவில் பதிந்து வைப்பது. உதாரணமாக ஒரு கிராமத்தைத் தெரிவு செய்து அங்கே எத்தனை பனைவடலிகளும் எத்தனை தென்னை மரங்களும் உள்ளன என ஒரு நொடியில் சொல்லி விட முடியும்.

இப்பொழுது நிலத்தளத்தில் வரையப்படும் இரண்டு மரங்களைப் போல் ஆயிரம் ஆயிரம் விடயதானங்கள் பதிவு செய்யப்படும். இதில் எந்த எந்த விடயங்களைப் பார்க்க விரும்புகின்றோமோ அதனை மட்டும் கண்ணுக்குப் புலப்பட வைத்து மற்றவற்றைத் தற்காலிகமாக அணைத்து விட முடியும். உதாரணமாக ஒரு நகரத்தின் வீடுகள், வீதியில் உள்ள மின்கம்பங்கள், குடிநீர்க் குழாய்கள் என்ற மூன்றையும் தெரிவு செய்துவிட்டு மற்ற அனைத்தையும் தற்காலிகமாக அணைக்கும் பொழுது இவை மட்டுமே அந்த நகரத்தின் படத்தில் கண்ணுக்குத் தெரியும்.

இதே போலப் புவியியலில் பயன்படும் உயர், தாழ் வரைபுக் கோடுகள் இன்னோர் தளத்தில் இருக்கும். அதில் குறிப்பிட்ட உயரம் உள்ள வரைபுக் கோடுகளைப் (உதாரணத்திற்குக் கடல்மட்டத்தில் இருந்து 10 மீட்டர் உயரமான பிரதேசங்களை) பார்க்க முடியும்.

அவ்வாறே நிலத்தின் கீழ் உள்ள நீர், கழிவு நீர்க் குழாய்கள் இன்னோர் தளத்தில் இருக்கும். அதில் ஐம்பது வருடப் பழைய குழாய்களை மாற்ற வேண்டுமாயின் அவற்றை மட்டும் தெரிவு செய்து பார்க்க முடியும்.

இவ்வாறு பல தளங்களையும் ஒவ்வோர் தளத்தில் உள்ள பொருட்களைப் பதிவுசெய்தலும் நாம் விரும்பியவாறு காட்சிப்படுத்தலுமே இந்தப் புவியியல் சார்ந்த கணனிப் பதிவின் அடிப்படையாகும்.

பதிவின் பின்பு விரும்பியவற்றைக் காட்சிப் படுத்திப் பார்த்தலும் விரும்பாதவற்றைத் தற்காலிகமாக அணைத்து வைத்துப் பின் வேண்டிய வேளையில் பார்த்தலுமே இதன் பயன்பாடும் ஆகும்.

இத்தளங்களிலுள்ள விடயதானங்கள் எவ்வாறு பதிவு செய்யப்படுகின்றன?

இது இரண்டு வேலைத்திட்டங்களை மேற்கொள்வதன் மூலம் பதிவு செய்யப்படுகிறது.

மேலேயுள்ள படங்களில் காட்டியவாறு சாற்றலைட் எனப்படும் விண்கலங்களில் இருந்து அதி உயர் தூரத்தில் இருந்தும் பின்பு விமானத்தில்

இருந்தும் வெவ்வேறு உயர மட்டத்திலும் இருந்தும் புகைப்படங்கள் பிடிக்கப்படும். இப் படங்களின் துல்லியமானது எவ்வளவு தூரம் தாழப்பறந்து புகைப்படத்தைப் பிடிக்கின்றார்களோ அவ்வளவு தூரம் அது துல்லியமாக இருக்கும். அதற்கேற்ப அதன் பொருளாதாரச் செலவும் அதிகமாகும். காரணம் தாழப்பறக்கும் போது அதிகப் படங்கள் பிடிக்க வேண்டிவரும்.

இப்படங்களில் இருந்து கணினித் திரையில் பல விடயதானங்களை வரைந்து கொள்வார்கள். மரங்கள், வேலிகள் போன்றன. கட்டடங்களை வரையும் பொழுது கட்டடத்தின் கூரையையே கட்டடத்தின் சுவர் எனப்பல சந்தர்ப்பங்களில் பதிவார்கள். காரணம் மேல் இருந்துபார்க்கும் பொழுது கட்டடத்தின் கூரையே படத்தில் வரும் - சுவர் அல்ல.

நிலத்தளப்படம்



இந்தக் கட்டம் முடிந்த பின்பு இவ் வரைபடங்கள் நில அளவையாளர்களிடம் கையளிக்கப்படும். அவர் எந்தெந்த இடங்களைத் துல்லியமாக அளக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறாரோ அந்தந்த இடங்களை அதனின் ஒரு நேர்கோட்டு அளவையும் (X) நிலைக்கோட்டு அளவையும் (Y) கடல் மட்டத்தில் இருந்து அதன் உயரத்தையும் அளப்பார்கள். இந்த அளவைகளில் இருந்தே உயர்- தாழ் மட்டு வரைபுக் கோடுகளையும் அவர்கள் வரைவார்கள்.

உயர்- தாழ் நிலவரைபு தளப் படம்



பின்பு வானத்தில் இருந்து எடுத்த படங்களில் இருந்து வரைந்த கோட்டுப் படங்களையும் துல்லியமாக அளக்கப்பட்ட நில அளவையாளர்களின் அளவைகளின் படங்களையும் இணைத்து மிகவும் தரமான 99.9 வீதம் நம்பிக்கையான படங்களை உருவாக்குவார்கள். அல்லது ஒரு தளத்தை அளப்பார்கள். அவ்வாறே கழிவுநீர் ஓடும் குழாய்கள் என்ற ஒரு தளத்தை உருவாக்கும் போது வானத்தில் இருந்து எடுக்கப்பட்ட படங்களில் தெருவில் வட்டவடிமாக உள்ள இரும்பு அல்லது சீமெந்து

வளையங்களை மட்டும் குறிப்பிட்டு அவற்றை நில அளவையாளர்கள் அளப்பார்கள். அதே வேளை ஒரு நகரசபையில் உள்ள வரைபடங்களில் இருந்து நிலத்தின் கீழ் உள்ள குழாய்களின் அளவுகளையும் அது எவ்வகையிலான கனிமப் பொருளினால் ஆக்கப்பட்டுள்ளது போன்ற தகவல்களையும் பெற்றுக் கொள்வார்கள். அதிலிருந்து நிலத்தின் கீழ் உள்ள குழாய்கள் என்ற ஒரு களத்தை உருவாக்குவார்கள்.

கழிவுநீர்- மழைநீர் தளப்படம்



இவ்அனைத்துத் தளப்படங்களையும் மொத்தமாகக் கண்ணுக்குத் தெரிய வைப்பதில் உள்ள சிறப்பே ஒரு சிறந்த நிறுவனத்தின் பணியாகும். இந்தப் பணியில் பணமும் பெயரும் சம்பாதிப்பதற்கு உலகத்தில் பல நிறுவனங்கள் போட்டி போட்டுக் கொண்டு இருக்கின்றன. ஒரு நகரத்தை நிர்மாணிப்பதில் புவியியல் சார்ந்த கணினியின் பங்களிப்பு.

...தியா போன்ற நாடுகளில் சுனாமிப் பேரலை அழிவுகள் வந்தபோதும் முள்ளிவாய்க்கால் அழிவின் பின்பும் எங்கள் நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டிய தேவை வரும் பொழுதெல்லாம் உலகின் மற்றைய இடங்களில் இந்தப் புவியியல் சார்ந்த கணினி அறிவு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது - இதனை ஏன் நாங்கள் கிழக்காசியாவில் முறையாகப் பயன்படுத்தாமல் இருக்கின்றோம் என நினைத்துப் பார்ப்பதுண்டு. (கனடாவில் டொரன்டோவில் உள்ள வீதி அமைப்பைப் பார்க்கும் பொழுது முழுக்க முழுக்க ஒரு சதுரத்தாள் கொப்பியில் உள்ள கிடைக்கோடுகளும் நிலைக்குத்துக் கோடுகளும் போல அது அமைந்திருக்கும். நிச்சயமாக அவ் வீதிகளை அமைத்த பின்புதானோ நகரத்தை அமைந்திருக்க வேண்டும். அப்பொழுது ஆரம்பத் திட்டமிடுதலின் போதே இந்த அறிவு நிச்சயம் பயன்பட்டிருக்கிறது.

ஒரு நகரத்தை நிர்மாணிக்கும் போது முதலில் எது தாழ்வான பகுதி எது உயரமான பகுதி என்பதனை உயர்- தாழ் நிலவரைபு தளப் படத்தைப் பாவித்து விரைவாகக் கண்டு கொள்வார்கள். பின் அதில் இடம் வாகனப் போக்குவரத்து வீதிகளை அதிகச் செலவு செய்யாமல் (அதாவது நிலத்தை மட்டப்படுத்த அதிகச் செலவு செய்யாது) செய்ய முடியுமா என்றும் பின்பு வீதிகளில் ஓடும் மழைநீரும் பக்கத்தில் கட்டப்பட இருக்கும் வீடுகளில் இருந்து வரவுள்ள கழிவுநீர்க் குழாய்களில் கழிவு நீரும் புவியீர்ப்புச் சக்தியின் துணைமட்டும் கொண்டும் சுத்திகரிக்கும் இடங்களை நோக்கி ஓடுமா எனக் கணிப்பு செய்து அதனைக் கணினியில் வரைந்து கொள்வாகள். அதன் பின்பு காணிகள் பிரிக்கப்பட்டு வீடுகள் அடைக்கும் பணி ஆரம்பிக்கின்றது. அப்பொழுதும் தொடர்வது இதே தொழில்நுட்பமே.

திட்டமிடுதலின் போது வரையப்படம் இப் படங்களே, அதனை உருவாக்கும் காலக் கட்டத்திலும் பயன்படும். பின்பு திட்டம் பூரணப்படும் பொழுது இறுதிப் பதிவாக அது ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கும் அழியாது பதிவு செய்யப்படுகிறது.

இச் செயல்முறைகளைப் பார்க்கும் பொழுது எங்கள் நாடுகளில் எப்போது இச் செயல்முறைகளை நாம் செயல்படுத்தப் போகிறோம் என்ற ஏக்கங்கள் வந்து போவது இயல்பான ஒன்றாய்ப் போய்விட்டது.

GPS (Global Positioning System)

1956இல் ஆரம்பமான இந்த ஆராய்ச்சி 70களில் 24 விண்வெளி மைய நிலையங்களின் (சாற்றலைட்களின்) உதவியுடன் இந்தப் பூளோகத்தில் உள்ள எந்தப் புள்ளிக்கான ஒரு நேர்கோட்டு அளவையும் (ஓ) நிலைக்கோட்டு அளவையும் (லு)அளந்து கொள்வது அல்லது கண்டு கொள்வது அல்லது கணித்துக் கொள்வது என்ற விஞ்ஞானக் கண்டுபிடிப்பு உறுதி செய்யப்பட்டது. இன்று அதிநுட்பமான அளவீடுகளைப் பெறுவதற்காக இன்னும் பல சாற்றலைட்கள் விண்வெளியில் மிதந்து கொண்டிருக்கிறன.

மேலே விளங்கப்படுத்திய GPS செயல்பாட்டின் அதிதீவிர வளர்ச்சியும்,இன்று GPS (Global Positioning System) அழைக்கப்படும் பூகோளத்தில் ஒவ்வோர் புள்ளியையும் கண்டு கொள்ளும் துறையின் வளர்ச்சியும் ஒன்றுடன் ஒன்று கைகோர்த்துள்ளன. ஒரு இடத்தை; "தேடு பொருள்" (searching element) தேடிக்கண்டு பிடிப்பதில் புறிளு செயல்பாடு பயன்படுத்தப்படுகிறது. பின்பு அந்த இடத்தைக் கண்டு கொள்ளும் போது பாவனையாளர்களுக்கு எந்த விதமான விபரங்கள் பிரயோசப்படப்படுமோ அத் தளப்படங்கள் புஐளு செயல்பாட்டின் மூலம் இணைக்கப்படும்.

இந்தச் சொல்லின் வலிமை காரணமாக இன்று தெருக்களில் வழிகாட்டும் கருவிகளுக்கே புறிளு என்று பெயர் வந்தாகி விட்டது.அங்கும் இந்தப் புறிளு புஐளு இரண்டும் இணைந்தே செயல்பாட்டுகின்றது. உதாரணத்திற்கு நெடுஞ்சாலையில் பயணம் செய்யும் ஒருவருக்கு பெட்ரோல் நிரப்பும் இடங்கள், ஓய்வு இடங்கள், உணவு விடுதிகள் என்பனவற்றின் தகவல்கள் பிரயோசனப் படுவதால் அவை அதில் இணைக்கப்படும். அவ்வாறே அந்தப் பாவனையாளருக்கு எந்தத் தேவைகள் இருக்கின்றன என வழங்குவதற்கு இந்தக் கணினிப்பதிவும் வரைபுப் படங்களும் உதவுகின்றன.

ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்துக்குச் செல்ல வேண்டும் என்னும் பொழுது இந்தக் கருவிகள் முதலில் குறைந்த நேரத்தில் சென்றடையக் கூடிய பாதைகளின் தொடக்க, இறுதிப் புள்ளிகளுக்கு இடையே ஆன வீதிகளின் ஆரம்ப இறுதிப் புள்ளிகளைக் கண்டு கொள்ளும். பின்பு இடப்பக்கம் திரும்பு, வலப்பக்கம் திரும்பு, தூரங்கள், போன்ற அனைத்துத் தனித்தனியான விடயதானங்களுக்குரிய குரல்களும் கணினிமுறையில் இணைக்கப்படும். அதுவே நாம் பயணம் செய்யும் பொழுது எங்களுக்கு வழிகாட்டியாக வரும் பெண்ணின் குரலாக ஒலிப்பது.

நாம் குறிப்பிட்ட ஒரு பாதையில் பயணம் செய்ய விரும்பாது அல்லது ஒரு வீதி திருத்த வேலைகள் காரணமாக மறிக்கப்பட்டிருக்குமாயி அது தன் தேடலில் புதிய வழியைக் கண்டடையும்.

இலங்கை இந்தியா போன்ற கீழைத்தேய நாடுகளில் பொதுமக்களின் பாவனைக்கு இது வளர வேண்டிய தூரம் அதிகம் உண்டு. அவ்வாறு முழு வளர்ச்சி அடையும் போது டக்ஸிக்காரரும் ஆட்காரரும் மக்களை வீதிவீதியாகச் சுற்றுவது தவிர்க்கப்படும்.

GPS (Global Positioning System)இன் பிற பயன்பாடுகள்

நாம் நேரடியாக வாகனங்களில் பயன்படுத்தும் வசதியைத் தவிர இன்று எத்தனையோ வழிகளில் குறிப்பாக விஞ்ஞான ஆராய்ச்சிகள், துப்பறியும் துறைகளில் இது பயன்படுத்தப்படுகிறது. அண்மையில் வெளியாகிய துப்பாக்கி என்னும் திரைப்படத்தில் கதிர்வீசக்கூடிய ஒரு சிறிய உலோகத்தகட்டை உடலில் செலுத்திக் கொண்டு விஜய் பணயமாவார். பின் அவர் எங்கு எங்குச் சென்று கொண்டிருக்கின்றார் எனப் பொலிஸ்துறை பார்த்துக் கொண்டு இருக்கிறது. இது திரைப்படத்துக்காகப் புகுத்தப்பட்ட காட்சி ஆயினும் இது உண்மையில் பயன்படுத்தப்படும் ஒரு தொழில்நுட்பமே. இனிவரும் காலங்களில் திருட்டுப் போகக்கூடிய பொருட்களில் எல்லாம் இவ்வாறான ஒரு சிறிய கருவியைப் பொருத்துவது பற்றி மேற்குலகம் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. இதன் அடுத்தபடியாகப் பிறக்கும் குழந்தைகளுக்கும் இவ்வாறான தகடுகள் பொருட்படுத்தப்பட்டால் கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

இன்றைய போரின் பொழுது இந்தத் துறையின் சாதனை அல்லது அழிவுக்கு துணைபோகும் பயன்பாடுகள்.

ஒரு போரில் தரைவழித் தாக்குதலும் வான்வெளித் தாக்குதலும் மிக முக்கியமான அம்சங்கள்.

கண்ணுக்குத் தெரியும் இடத்தைக் குறிவைத்து தாக்கும் பொழுது அதற்கேற்றவாறு பீரங்கிகளின் அல்லது ஏவுகணைகளின் கோணங்களையும் திசைகளையும் மாற்றி மாற்றிக் குண்டுகளை வெடிப்பார்கள். இதை வீரபாண்டிய கட்டப்பொம்மன் திரைப்படக் காலங்களில் இருந்து நாம் பார்த்து கொண்டிருக்கின்றோம்.

அதன் அதி முன்னேறிய வளர்ச்சியாகக் குண்டு விழவுள்ள இடத்தினதும் குண்டுகள் எறியப்படும் இடத்தினதும் நிலைகள் சரியாக அளக்கப்பட்டு அந்தத் தூரத்தில் சரியாக விழக்கூடியவாறு பீரங்கியின் கோணங்களும், திசையும், வேகமும் கண்டிக்கப்பட்டு அதே இடத்தில் குண்டுகளை விழுத்தலாம். குறிப்பிட்ட ஒரு பதுங்கு குழியின் நிலை எதுவெனத் தெரிந்தால் பலமாகக் காற்று மட்டு வீசாது இருந்தால் அந்த இடத்தைச் "சொல்லியடிக்கும்" திறமைகள் கொண்ட கருவிகள் இன்று உள்ளன.

அடுத்து வான்வெளித் தாக்குதல். பொதுவாகத் தாக்குதல்கள் மறை விடங்களில் இருந்தே நடாத்தப்படுவன. அவ்வாறான தாக்குதலுக்கு மரங்களே கூரைகளாகப் போராளிகளைப் பாதுகாக்கும். அப்போது அதிநவீன விஞ்ஞானக் கருவிகள் கொண்ட அரச படைகள் இந்தப் பல தளம் கொண்ட படங்களைப் பயன்படுத்துவார்கள். அதில் முதலில் அவர்கள் அணைப்பது மரங்களையும் காடுகளையும்தான். அப்பொழுது துல்லியமாகக் கட்டடங்களும் சிறிய தகரக் கொட்டைகளும் மட்டுமன்றி எங்கிருந்து குண்டுகள் புறப்பட்டு வருகின்றன எனத் துல்லியமாகக் கணிக்க முடியும் பின்பு அப்புள்ளிகளை நோக்கித் தாக்குதலை நடத்தவும் நிலைகளைக் குலைக்கவோ ஏன் மேலாக விமானத்தில் மிகப் பதிவாகச் சென்று அந்த இடத்தைத் தாக்கவோ இந்தத் தொழில் நுட்பத்தைப் பெரிதும் பயன்படுத்துகின்றார்கள். பயன்படுத்தினார்கள்.

தமிழ் மொழியில் காணப்படும் (சிறிய) சொல்லமைப்பும் அவற்றின் இசைமைக் கட்டமைப்பும்

முனைவர் மோகன தாஸ் ராமசாமி
இந்திய ஆய்வியல் துறை
மலாயாப் பல்கலைக்கழகம், மலேசியா

முன்னுரை

மொழி, கிளவி, சொல், வார்த்தை, மாற்றம் நுவற்சி, செப்பு, உரை, கரை, நொடி, கூற்று, யாவும் பொருள் வழங்கும் எழுத்துக்கூட்டங்களை அடையாளம் காட்டும் முறையாகும்.

தமிழ்மொழியினைப் பொறுத்தமட்டிலும் சொற்களைப் பற்றியும், சொல்லமைப்பினைப் பற்றியும் பல குறிப்புகள் காணப்படுகின்றன. மரபிலக்கணம் தொட்டு, தற்கால மொழியியல் ஆய்வுகள் வரையிலுமான குறிப்புகள் மொழியின் சொல்லமைப்பின் அடிப்படையினைத் தெள்ளத் தெளிவாக விவரித்துப் போகின்றன. தமிழ் மொழியில் காணப்படும் மிகச் (சிறிய) சொற்களை அறிமுகம் செய்யும்போது அவை ஓரெழுத்து ஒரு மொழிகளின் எண்ணிக்கை 42 என்று விளக்கம் வழங்குகின்றது.

தமிழில் காணப்படும் சொற்கள் நால்வகைப் பகுப்புகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன; அவை, பெயர், வினை, இடை, உரி. இப்பகுப்பு ஆங்கில மொழி இதனையே மாறுபட்ட நிலையில் எட்டாகப் பிரித்துப் பார்க்கிறது. இது ஒருவகைப் பகுப்பு முறை. இக்கருத்தின் அடிப்படையில் பிரிக்கப்படும் சொற்களின் பின்னணியில் ஓர் கட்டமைப்பு அமைதி உள்ளது. ஒரு சொல்இ அது பெயர்ச்சொல்லாக, வினைச் சொல்லாக, இடைச்சொல்லாக, உரிச்சொல்லாக எத்தனை எழுத்துகளை வேண்டுமானாலும் கொண்டிருக்கலாம். எத்துணை எழுத்துகளைக் கொண்டு எத்துணை நீளமான சொல்லாக அமையப் பெற்றாலும் சரி வெளிப்படும் இச்சொல்லமைப்பின் பின்னணியில் செயல்படுவது சில குறிப்பிட்ட கட்டமைப்புகளே.

இதன் அடிப்படையில் தமிழ் மொழியில் காணப்படும் சொற்கள் அளவில் பலவகைகளாகப் பிரிந்திருக்கலாம்; ஆனால், அவை யாவும் அடிப்படையில் வரையறுக்கப்பட்ட அமைப்பினையே கொண்டு இயங்குகின்றன. அக்கட்டமைப்பினை இனங்கண்டு அதன் பின்புலத்தினை அறிமுகம் செய்வது இவ்வாய்வின் நோக்கமாகும்.

ஆய்வுச் சிக்கல்

இந்த ஆய்வேட்டில் சில முக்கியக் கேள்விகளுக்குப் பதில்கள் காண முயற்சிக்கப்பட்டுள்ளது. அவையாவன: ஒரு சொல் எப்பொழுது சொல் எனும் தகுதியினைப் பெறுகின்றது? ஒரு மொழியில் காணப்படும் சொல்லினை எவ்வாறு அடையாளம் காணலாம்? இவற்றுக்கான பதில்களை முறையே காண்போம்.

மரபிலக்கணம் எழுத்துகளின் எண்ணிக்கை அடிப்படையில் பார்ப்போமானால்

எழுத்தே தனித்தும் தொடர்ந்தும் பொருள்தரின்
பதமாம்: அதுபகாப் பதம்பகு பதமென
இருபா லாகி இயலும் என்ப -நன்னூல் 128

எனச் சொற்களை அறிமுகம் செய்கின்றது.

இதன்படி தமிழ் மொழியில் சொல்லெனப்படுவது ஓரெழுத்து அல்லது அதற்கும் மேற்பட்ட எழுத்துகளையோ கொண்டு உருவாக்கம் காணலாம் என உணர முடிந்தாலும் அவை பொருள் வழங்கும்போது மட்டுமே சொல்லெனும் தகுதியினைப் பெறுகின்றன. இதனையே எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்கிறது தொல்காப்பியப் பெயரியல் நூற்பா, 640, 'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'. (தொல்காப்பியப் பெயரியல் 640)

எனினும் தற்கால மொழியியல் உலகம் சொல்லின் அமைப்பினைச் சற்று மாறுபட்ட கண்ணோட்டத்தில் நோக்குகின்றது. மக்கார்த்தி சொல்லைப் பற்றி விவரிக்கும்போது அதன் சாரத்தை முன்னிருத்தி பின்வருமாறு கூறுகின்றார். சொல்லென்பது இரு மாத்திரையினையோ ஈரசையினையோ கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். (Words must be either bimoraic or disyllabic – McCarthy, 1986) சுருங்கக் கூறின், சொல் எனும் தகுதியினைப் பெறும் எழுத்துக்கூட்டமானது குறைந்தப்பட்சம் இரு மாத்திரையினையோ இரு அசைகளையோ பெற்றிருக்க வேண்டும். இது உலக மொழிகளுக்கான பொதுவிதியாகும்.

மேற்படி கருத்து தமிழ் மொழிக்கு மாறுபாட்ட கருத்தல்ல. இதன் அடிப்படையிலேயே தமிழ் மரபிலக்கணமும் ஒரு சொல்லின் எல்லையினை வரையறுத்துள்ளது. தமிழில் ஓரசைச் சொல் தனிச்சொல்லாக ஏற்றுக்கொள்ளப் படவில்லை. அவ்வகைச் சொற்களையே, அதாவது அகராதிப் பொருளினை வழங்காச் சொற்களை, உயிரொலிகள் என்றும் மெய்யொலிகள் என்றும் அடையாளம் காட்டியுள்ளது. அவற்றுள் சில இடைச்சொற்களாகவும் பெயரிடப்படுகின்றன. இவ்வகைச் சொற்கள் தனித்துப் பொருள் வழங்காச் சொற்கள் சார்புச்சொல் அல்லது சார்புருபன் என்றும் அழைக்கப்படுகின்றன.

பின்வரும் சில மாறுபட்ட சொற்களையும் அவற்றின் அமைப்பினையும் சற்று உற்று நோக்குவோமானால் தமிழ்ச் சொற்களின் பொது அமைப்புமுறை நன்கு தெளிவுபடும்.

கார்த்திகேயன் - பெயர்ப்பொருளை வழங்கும் ஒரு சொல்

மலேசியா - இடப்பொருளை வழங்கும் ஒரு சொல்

நன்மை - குணப்பொருளை வழங்கும் ஒரு சொல்

காலை - காலப்பொருளை வழங்கும் ஒரு சொல்

கை - சினைப்பொருளை வழங்கும் ஒரு சொல்

சால-உறு-தவ-நனி-கூர்-கழி , மிகுதிப் பொருளை வழங்கும் சார்புச்சொல்

கு - இலக்கணப் பொருளை வழங்கும் ஓர் இடைச்சொல்

ஐ - இலக்கணப் பொருளை வழங்கும் ஓர் இடைச்சொல்

மேலோட்டமாகக் காண்போமாயின் மேற்குறித்த எழுத்துக்கூட்டங்கள் அனைத்தும் சொற்களே என்பது தெளிவாகும். இப்பகுப்பு பொருண்மை அடிப்படையில் ஏற்புடையதே.

மேற்காணும் சொற்களுள் சில தனித்துப் பொருள் வழங்கவல்லன; ஆனால் மற்றும் சில அத்தன்மையினைப் பெறுவதில்லை. எனினும் இவ்விரு வகைச்சொற்களின் பின்புலத்தினை ஆராய்வோமானால் அவற்றின் ஆழ்நிலையில் ஓர் அமைப்பு ஒற்றுமை அமைந்துள்ளதைக் காணமுடிகின்றது.அதுவே சைமைக் கட்டமைப்பாகும்.

ஆய்வு நோக்கம்

இவ்வாறாகப் பல்வகை அமைப்புகளைக் கொண்டு உருவாக்கம் காணும் சொற்களின் அடிப்படை அமைப்பு அளவுதான் என்ன? இவ்வாய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இவ்வினாவிற்குப் பதில் கூற விளைகின்றது.

அ. தமிழ் மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் அமைப்பு எது என்பதனை அடையாளம் காணுதல்

ஆ. தமிழ் மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் கட்டமைப்பினை உறுதிப்படுத்துதல்

இந்நோக்கங்களை அடைவதற்காகத் தமிழ் மொழியில் காணப்படும் சில மிகச் சிறிய சொற்களை அடையாளம் கண்டு அச்சொற்களுக்கிடையே காணப்பட்ட அமைப்புமுறையினை உறுதி செய்து அவற்றின் மிகச் சிறிய கட்டமைப்பு உறுதிசெய்யப்பட்டுள்ளது. அதன் பின்னர் அக்கடமைப்பு இசைமைக் கோட்பாட்டின் அடிப்படையில் விவரிக்கப்பட்டுள்ளது.

இசைமைக் கோட்பாடும் மிகச் சிறிய சொற்களும்

தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் கட்டமைப்பினைக் காண்பதற்கு முன்பதாகஇ ஒரு சிறிய சொல்லின் கட்டமைப்பும் அதன் பின்புலத்தில் செயல்படும் இசைமைத் தத்துவத்தினையும் சொற்பகுப்பு அமைப்பினையும் கண்டுணர்ந்து கொள்வது நன்மை பயக்கும்.

4) இசைமைக் கோட்பாடும் மிகச் சிறிய சொற்களும் ஒரு சிறிய சொல்லின் கட்டமைப்பு



மேற்படி அட்டவணை தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொல்லோ அசையோ கொண்டிருக்க வேண்டிய அமைப்பினை விவரிக்கின்றது. சொல்லின் முதல் உறுப்பாக,

5) இசைமைப் படிநிலையின் முதலாவது படியில் அமைந்திருக்கும் வல்லின மெய்கள்: க்,ச்,த்,ப் (1),

6) இசைமைப்படிநிலையின் இரன்டாவது படியில் அமைந்திருக்கும் மெல்லின மெய்கள் ங்,ஞ்,ந்,ம் (2), அல்லது

7) இசைமைப்படி நிலையின் ஐந்தாவது படியில் அமைந்திருக்கும் அரைவுயிர்களான ய், வ் வருவதனையே தமிழ் மொழி வரவேற்கின்றது. ஆனால், மூடசையாக,

8) இசைமைப்படிநிலையின் இரண்டாவது படியில் அமைந்திருக்கும் மெல்லின மெய்கள் ங,ங்,ந்,ம் (2), அல்லது

9) இசைமைப் படிநிலையின் மூன்றாவது படியில் அமைந்திருக்கும் மருங்கொலி மெய்கள் ல்,ள், ழ் (3),

10) இசைமைப்படிநிலையின் மூன்றாவது படியில் அமைந்திருக்கும் மருங்கொலி மெய்கள் ர் (4),

11) இசைமைப்படிநிலையின் ஐந்தாவது படியில் அமைந்திருக்கும் அரைவுயிர்களான ய், வ் (5)

வருவதனையே தமிழ்மொழி வரவேற்கின்றது. ஆனால் உச்சம் மட்டும் உயிரொலிகளின் உரிமை இடமாய் வரையறுத்துள்ளது தமிழ் மொழி.

தொடர்ந்து, தமிழ் மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொல்லின் கட்டமைப்பினைத் தகுந்த எடுத்துக்காட்டுகளுடன் காண்போம். முன்னர்க் கண்ட மக்கார்த்தியின் கூற்றினை மீண்டும் காண்பது நன்மை தரும். 'சொல்லென்பது இரு மாத்திரையினையோ ஈரசையினையோ கொண்டிருக்க வேண்டும் என்று வலியுறுத்துகின்றார். (Words must be either bimoraic or disyllabic – McCarthy, 1986) அதாவது, சொல் எனும் தகுதியினைப் பெறும் எழுத்துக்கூட்டமானது குறைந்த பட்சம் இரு மாத்திரையினையோ இரு அசைகளையோ பெற்றிருக்க வேண்டும்.

உலக மொழிகளுக்கான இந்தப் பொதுவிதியின் அடிப்படையில் ஒரு சொல்லினைப் பகுக்க விளைவோமானால் நமக்குப் பின்வரும் அமைப்புகள் கிட்டும்.

12) அ) **ba.ba**

	σ			σ	
திறப்பசை	உச்சம்	மூடசை	திறப்பசை	உச்சம்	மூடசை
b	a	x	b	a	x

ஆ) **bab.a**

	σ			σ	
திறப்பசை	உச்சம்	மூடசை	திறப்பசை	உச்சம்	மூடசை
b	a	b	x	a	x

இ) அப். ப்ஆ (அப்பா)

	σ			σ	
திறப்பசை	உச்சம்	மூடசை	திறப்பசை	உச்சம்	மூடசை
x	அ	ப்	ப்	ஆ	x

ஈ) அ. ப்ப்ஆ (அப்பா)

	σ			σ	
திறப்பசை	உச்சம்	மூடசை	திறப்பசை	உச்சம்	மூடசை
x	அ	x	ப்ப்	ஆ	x

மேற்காணும் வரைபடங்கள் தெளிவிக்கும் உண்மை யாது? அவை தாம் தமிழ் மொழியில், அ. திறப்பசை ஒரு மெய்யினையோ உயிரொலியினையோ கொண்டு தொடங்கலாம். ஆ. அதுபோல, ஒரு மெய்யினை எல்லையாகக் கொண்டு முடிவுறுவது சிறப்புப் பயக்கும். குறிப்பாக, அப்பா எனும் சொல்லுக்கு வழங்கப்பட்டுள்ள அமைப்பினைக் காண்போமானால், தமிழ்ச்சொற்களின் ஈற்றெல்லையில் மெய்யெழுத்து அமைவது முக்கியம் என்பதனை உறுதி செய்கின்றது. இந்தச் சிந்தனையினை முன்னிறுத்தித் தொடர்ந்துவரும் செய்திகளைக் காண்போம்.

அடிப்படைச் சொல்லமைப்பு

தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் அமைப்பினை ஆராய்ந்து பார்ப்போமானால் பின்வரும் இருவகை அமைப்பினைக் காண முடிகின்றது. ஒன்று முழுமை பெறாத அமைப்பு; மற்றொன்று முழுமை பெற்ற அமைப்பு.

13) முழுமை பெறாத அமைப்பு



14) முழுமை பெற்ற அமைப்பு



இதன் அடிப்படையில் பார்ப்போமானால் சொற்கள் மெய்யெழுத்தில் தொடங்குவதும் மெய்யெழுத்தில் முடிவதும் சிறப்பு எனும் கருத்து மேலும் வலுப்படுகிறது.

ஆனால் இந்த அடிப்படை அமைப்பின்கீழ் மரபிலக்கணம் அறிமுகம் செய்யும் ஓரெழுத்து ஒரு மொழியினை ஆராய்வோமனால் இவ்விரண்டிற்கும் இடைநின்ற பின்வரும் ஓர் அமைப்புமுறை மட்டுமே கிட்டும்.

15) மற்றொன்று முழுமை பெற்ற அமைப்பு



'இதே அடிப்படையினை நீண்ட வடிவிலான சொல்லமைப்பில் நிறுத்தும்போது, மேற்குறிப்பிட்ட சிக்கல் எழுகிறது. எடுத்துக்காட்டாக, வாழ்க்கை, எனும் சொல்லினைக் காண்போம். உலக மொழிகளுக்கென வகுக்கப்பட்ட

சொல்லமைப்பு அடிப்படையில் காண்போமானால், வாழ்க்கை எனும் சொல் இரு அசைகளால் உருவாக்கம் கண்ட ஒரு சொல்லாகும்.

இந்த அடிப்படை அமைப்பு வடிவங்களை மட்டும் வைத்துக் கொண்டு தமிழ் மொழியில் காணப்படும் அடிப்படைச் சொற்களை அடையாளம் காண்பது முழுமைத் தன்மையினைத் தருவதில்லை. பின்வரும் எடுத்துக்காட்டுகள் இதனை உறுதிச் செய்கின்றன.

16)

உச்சம்		
திறப்பசை		மூடசை
வா	+ ஆ +	ழ் = வாழ்

உச்சம்		
திறப்பசை		மூடசை
க்	+ ஐ +	x =கை

மேற்கண்ட சிறுசொல்லமைப்பின் கட்டமைப்பின்படி, "வாழ்க்கை" எனும் சொல் பகுக்கப்பட்டுள்ளது. எனினும், வாழ்க்கை எனும் சொல்லினுள் இடம்பெற்றுள்ள 'க்' எனும் மெய் இப்பகுப்பில் இடம்பெறாமல் நிற்பதைக் கவனிக்க வேண்டும். இந்த மெய்யானது முதலாவது அசையினுள்ளும், இரண்டாம் அசையினுள்ளும் அங்கம் பெறவில்லை. இதே நிலைமைதான் இதே பண்பில் செயல்படும் ஏனைய சொற்களுக்கும் அடங்கும். எனவே, முறையான அசைப்பகுப்பு, கீழ்க்காணும் அமைப்பினில் அமைய வேண்டியது முக்கியம்.

17)

உச்சம்		
திறப்பசை		மூடசை
க்	+ ஐ +	x =கை

உச்சம்		
திறப்பசை		மூடசை
வா	+ ஆ +	ழ்க் = வாழ்க்

இதன் அடிப்படையில் நோக்குவோமானால், தமிழ் மொழியில் தனிக்குறிலினை அடுத்துவரும் மெய்யும், நெடிலினைச் சார்ந்த மெய்யும் கூட, மரபிலக்கணம் முன்வைக்கும் ஓரெழுத்து ஒரு மொழி அமைப்பினைப் போலவே செயல்படுவதை உணரலாம். எனவே, தமிழ் மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொல்லின் எல்லையினை, ஓர் உயிரெழுத்தோடு நிறுத்திவிட இயலாது, அதனைக் கடந்து தனிமெய்யோடு முடியும் மெய்யெழுத்துகளையும் அவற்றின் இணைகளையும் இணைத்த நீட்டித்த ஒன்றாகக் கருத வேண்டும், என்பதே நாம் உணரும் செய்தி.

தரவுகள்

மேற்படி நிறுவிய கருத்தின் அடிப்படையில் பார்ப்போமாயின், *(18)*-இல் காணப்படும் ஓரெழுத்து ஒரு மொழி போல, *(19)*-இல் காணப்படும் அனைத்துச் சொற்களையும் கூடத் தமிழ் மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்கள் என ஏற்றுக்கொள்ள வேண்டும்.

18)

ஆ	கோ	நை
ஈ	சா	பா
ஊ	சீ	பூ
ஏ	சே	பை
ஐ	சோ	போ
ஓ	தா	மா
கா	தீ	மீ
கூ	து	மூ
கை	நீ	

19)

ஆண்	கொல்	நார்
ஆல்	கொள்	நால்
ஆள்	கோண்	நாள்
இல்	கோல்	நான்
உண்	கோள்	நில்
உள்	கௌ	நீர்
உன்	சீர்	நீல்
ஊ	சூல்	நீள்
ஊர்	செல்	நெய்
ஊழ்	சொல்	பல்
எம்	ஞாண்	பாய்
எழ்	ஞாழ்	பார்
என்	தண்	பால்
ஏர்	தம்	பாழ்
ஏன்	தன்	பின்
ஏன்	தார்	பெண்
ஓம்	தாழ்	பேண்
ஓர்	தாள்	பேர்
கண்	தான்	பொய்
கண்	தூண்	பொல்
கல்	தூள்	போ
கள்	தெவ்	போர்
காய்	தேள்	போல்
கார்	தேன்	மண்
கால்	தோல்	மாண்
கீழ்	தோள்	மான்
கூர்	நம்	மின்
கூழ்	நாண்	மீன்
கூன்	நாம்	முள்
கை	நாய்	முன்
கொய்		

மேற்கண்ட சொற்களின் அமைப்பினை ஆராய்வோமானால் அவற்றின் பின்புலத்தில் கீழ்க்காணும் நால்வகை அமைப்பு முறையினையே காண முடிகின்றது.

20) தமிழ் மொழியில் காணப்படும் மிகச் (சிறிய) சொற்களும் அவற்றின் வகைகளும்

அ) மிகச் சிறிய சொல் - திறப்பிலாச் சொல்

a. V	அ	'அது'
b. V:	ஆ	'பசு'





ஆ) மிகச் சிறிய சொல் - மூடசைச் சொல்

C. VC	உள்	'உள்ளே'



இ) மிகச் சிறிய சொல் - திறப்புடைச் சொல்





ஈ) மிகச் சிறிய சொல் - திறப்புடை - மூடசைச் சொல்

a. CVC	பல்	'பல்'
b. CV:C	பால்	'திரவ உணவு'
d. V:C	ஆல்	'ஆலமரம்'







சுருங்கக் கூறின் தமிழ்மொழியில் காணப்படும் ஓரெழுத்து ஒரு மொழி ஒரு சொல்லின் எல்லை அல்ல; அது அகராதிப் பொருள்தரும் தனிச்சொல்லின் குறுகிய எல்லை. அகராதிப் பொருள் தரும் சொல்லின் எல்லையும் இயற்கையாகச் சொல்தகுதியினை உருவாக்கும் சொல்லமைப்பின் இயல்பினையும் ஒன்று என்று கருதுவது ஏற்புடையதல்ல.

முடிவுரை

இவ்வாய்வு தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் எல்லையினை இசைமைக் கட்டமைப்பின் அடிப்படையில் விவரித்துக் காட்டியுள்ளது. அதன் அடிப்படையில் காண்போமானால், மரபிலக்கணம் கூறும் ஓரெழுத்து ஒரு மொழி, தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் எல்லை என்பதனை ஏற்றுக் கொள்ள இயலவில்லை. தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் எல்லையும் ஓரெழுத்து ஒரு மொழி வழங்கும் எல்லையும் ஒன்றல்ல. அதன் எல்லை, அதனையும் தாண்டி விரிந்தும், சில வேளைகளில் சுருங்கியும் உள்ளது.

மக்கார்த்தி முன்வைக்கும் உலக மொழிகளின் பொதுமை அமைப்பின் சித்தாந்தத்தின் அடிப்படையில், அதாவது, சொல்லென்பது இரு மாத்திரையினையோ ஈரசையினைவோ கொண்டிருக்க வேண்டும் எனும் கூற்றின் அடிப்படையில் பார்ப்போமானால், தமிழ்மொழியில் காணப்படும் மிகச் சிறிய சொற்களின் சிற்றெல்லை, /அ/,/அல்/, எனவும் அதன் பேரெல்லை, /கல்/, /கால்/ஆகிய வாய்ப்பாடுகளின் அடிப்படையில் அமைந்த சொற்கூறுகளாக அமைய வேண்டும்.

துணைநூல்கள்

1. அகஸ்தியலிங்கம், ச, க. புஸ்பவல்லி. மொழியியல் II. அண்ணாமலைநகர்: அனைத்திந்திய தமிழ் மொழியியற் கழகம், 1977.

2. அகஸ்தியலிங்கம், ச. தமிழ் மொழி அமைப்பியல். சிதம்பரம். மெய்யப்பத் தமிழாய்வகம், 2002.

3. கருணாகரன், கி., கி.வ. ஜெயா. மொழியியல். சென்னை: கவிதா பிரசுரம், 1996. மாறுமுக நாவலர். நன்னூல் காண்டிகவுரை, எழுத்ததிகாரம். சென்னை: தென்னிந்திய சைவ சித்தாந்த கழகம், 1997.

4. சின்னசாமி, தி.பி. நன்னூல் தெளிவுரையும் பிழையின்றித் தமிழ் எழுதுதலும். சென்னை: சரசு பிரசுரம், 1996.

5. முத்துச்சண்முகம். இக்கால மொழியியல். மதுரை: மதுரை பப்ளிஷிங் ஹவுஸ், 1980.

6. மோகன தாஸ் ராமசாமி. அடிப்படைத் தமிழ் இலக்கணம். கோலாலம்பூர்: மலாயாப் பல்கலைக்கழகம், 2005.

7. Balasubramaniam, P. "**Descriptive Study of Malaysian Spoken Tamil.**" Unpublished. University of Malaya, 1989.

8. C.Yesodoss. "Vowel duration in Tamil." *Fifth Karuttarangku-Aayvukkoovai*.1 (1973): pp.607-11.

9. Christman, S. S., and R. A. Depaolis. "Sonority as a constraint on word identification processes." *Applied Psycholinguistics* 17.3 (1996): 273-91.

10. Dass, Ramasamy Mohana. *Topics in the Morphophonology if Standard Spoken Tamil,* Newcastle upon Tyne: Newcatle University, 2010.

11. Devaneyappaavanar, Nak., ed. *Moli aarayccik katturaikal*. Madras: Tamilman Publisher, 2001.

12. Ilakkuvanar. *Tolkaappiyam in English with critical studies*. 2nd ed. Chennai: Educational Publisher, 1994.

13. Kager, Ren. *Optimality theory*. Cambridge: Cambridge University Press, 1999.

14. McCarthy, John, and Alan Prince. "Prosodic morphology". Ms, University of Massachusetts, Amherst & Brandeis University, 1986.

பரத்தமை பிறன்மனை நயத்தல் அலி பிறப்பு

முனைவர் மு. அருணாசலம்
தமிழ் இணைப்பேராசிரியர்
பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி (த)
திருச்சி தமிழ்நாடு, இந்தியா

சமூகம் என்பது ஒழுக்க வரையறைகளால் கட்டமைக்கப்பட்டது தனிமனித ஒழுக்கமே சமூகத்தின் ஒழுக்கமாக மாறுகின்றது. ஆண்-பெண் உறவ நிலைகளில் நிலவும் கட்டற்ற போக்குகள் சமூகத்தையே வீழ்ச்சி அடைய செய்கின்றன. தமிழ்ச் சமூகத்தில் தொல்காப்பியர் காலத்திலும் சங்க காலத்திலும் பரத்தமை என்னும் சமூக இழிவு கண்டிக்கபடாமற் கொண்டாடப்பட்டு வந்தது பரத்தமையைத் தவறு என்றும், பிறன்மனை நயத்தல் கூடாதென்றும் சங்கப்புலவர்கள் கருதவில்லை. பரத்தமையையும், பிறன்மனை நயத்தலையும் சமூக அறத்திற்கு எதிரானது என்றும் பதிவு செய்யவில்லை. பெருகும் காமத்திற்கு ஆண்கள் வடிகால் தேடிக்கொள்ளப் பரத்தமையைத் தழுவிட எவ்வித கட்டுப்பாடும் விதிக்கவில்லை. சங்ககாலத்துப் பாணன் விறலி பரத்தமையோடு தலைவன் தொடர்பு கொள்ள வாயிலாக அல்லது ஊடகமாக அமைந்தான் இத்தகைய சமூக அறத்திற்கு எதிரான ஒழுக்கக்கேடான ஆண்-பெண் நடத்தைகளை நீதி இலக்கியங்களே முதன் முதலில் தீவிரமாகக் கடிந்துரைத்தன. அற இலக்கியங்களே பரத்தமையையும் பிறன்மனை நயத்தல் என்னும் தனிமனித ஒழுக்க வீழ்ச்சியையும் முறைப்படுத்தி ஒருவனுக்கு ஒருத்தி என்னும் எல்லைக்குள் கட்டமைத்தன. புத்த, சமணக் காப்பிய அற இலக்கியங்களும் திருக்குறளும் பிறன்மனை நயத்தல் ஒழுக்கத்தினைக் கடுமையாக எதிர்த்துக் குரல் எழுப்புகின்றன. அக்குரலே இன்று வரை தமிழ்ச்சமூகத்தின் அறக்குரலாக ஒழுக்கக் குரலாகப் பின்பற்றப்பட்டு வருகின்றது. அதனை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

பரத்தமை வெறுத்து ஒதுக்கப்படல்

காலத்தின் கோலத்தால் விலைமகளிரின் பெருக்கம் அதிகமாகச் சமூகத்தின் அறஒழுக்கம் சிதைவடையத் தொடங்கியது. அறநூல்கள் சமூக ஒழுங்கைக் காத்திடப் பரத்தமையை இழிவுபடுத்தி இயல்பான சமூகத்திலிருந்து விலக்கிடத் தூண்டின. அவ்வகையில் வள்ளுவரின் திருக்குறள் பங்களிப்பு அளப்பரியது. வள்ளுவர் பரத்தையரை 'அன்பின் விழையார்' என்றும் 'பொருள் விழையும் ஆய்தொடியார்' என்றும், 'பண்பின் மகளிர்' என்றும், 'பொருட் பெண்டிர்' எனவும், 'மாய மகளிர்' எனவும், 'வரைவிலா மாணிழையார்'' என்றும் இழித்தும் பழித்தும் உரைத்திடுகின்றார்.

பரத்தையரின் பேச்சு போலியாக இருப்பதுடன், பொருள் உள்ளவரையே உண்மையாக நேசித்திடுவர் என்கின்றார்.

"பயன்தூக்கிப் பண்புரைக்கும் பண்பின் மகளிர்
நயன்தூக்கி நள்ளா விடல்" (குறள் 912)

என்பது மூலம் விலைமகளிர் பொருள் பறிக்கும் வரையில்தான் இன்சொல் பேசும் நடிப்பினைத் தோலுரித்துக் காட்டுகின்றார். பரத்தையரான மாயமகளிர் முயக்கம் மோகினியின் முயக்கம் போன்று வேறுபாடு இல்லாதது என்கின்றார்.

"ஆயும் அறிவினர் அல்லார்க்கு அணங்கென்ப
மாய மகளிர் முயக்கு" (குறள் - 918)

என்னும் குறள் மூலம் மோகினியின் பிடியினின்று உடல்நலம், செல்வ நலம், வாழ்வு நலம் அழித்து விடுவர் என்கின்றார். வரைவின் மகளிர் மனத்தால் ஒருவனை நினைத்துக் கொண்டு உடலால் மற்றொருவனை 'மரப்பாவை'யினின்று புணர்ந்து மகிழ்வர் என்று இகழ்ந்தும் வள்ளுவர் உரைக்கின்றார்.

"நிறைநெஞ்சம் இல்லவர் தோய்வர் புறநெஞ்சிற்
பேணிப் புணர்பவர் தோள்'' (குறள் 917)

என்று புலப்படுத்துகின்றார்.

பரத்தையர்களின் செயலினை மாயக் குணமுள்ள பொருட்பெண்டிரை விலை கொடுத்துத் தழுவுவதும், இருட்டறையில் பிணத்தைத் தழுவுவதும் ஒன்றுதான் என்று சொல்லும் குறள் பரத்தமைக்கு எதிரான உச்சகட்டப் புரட்சிக் குரலாகும்.

"பொருட் பெண்டிர் பொய்ம்மை முயக்கம்இருட்டறையில்
ஏதில் பிணந்தழீஇ யற்று" (குறள் - 913)

பொருள் காரணமாக எக்குறைபாடு உடையோரையும் தழுவி அணைத்திடும் தன்மை உடையோர் பரத்தையர்கள் என்று கூறி அவர்களைச் சமூக ஒதுக்கம் செய்ய வேண்டுமென்கின்றார்.

மாதவி கணிகை காரணமாக எழுந்த சிலப்பதிகாரமும் பரத்தமையைக் கண்டிக்கின்றது. மணவாழ்விற்கு உரியவள் அல்ல. கணிகையர்கள் என்பது சிலம்பு முன்வைத்திடும் கருத்தாகும். இத்தகைய கணிகையர்கள் பொருளையே மனத்தில் நினைத்திடுவர். பொருள் இல்லாதவரை தூசி போன்று ஊதி வெளியேற்றி விடுவர் என்கின்றது. மாதவி கோவலனிடம் 1800 கழஞ்சு பொன் 'பரியமாக' தினந்தோறும் பெற்றுக்கொண்டு காமநுகர்தலை அளித்ததையும் சிலம்பு சுட்டுகின்றது. பொருள் உள்ளவரோடு மட்டுமே கணிகையர்கள் இன்பநுகர்வு நடத்திடுவர் என்பதும் சிலம்பு தெரியப்படுத்துகின்றது. ழிகுலீவலன் பிரிந்து சென்ற பிறகும் காமநோக்கத்தைப் பயன்படுத்தி மாதவி தன்பால் ஈர்த்திட கணிகை மரபு கற்றுத்தந்ததையும் சிலம்பு கூறுகின்றது. இத்தகைய கணிகையர் வாழ்வு பிணியான வாழ்வு என்பது மாதவியின் மனக்குரலான வயந்தமாலையிடம் கோவலன் உரையாடும் காடுகாண் காதையில் முன் வைக்கப்படுகின்றது.

"மேலோராயினும் நூலோராயினும்
பால்வகைத் தெரிந்த பகுதியோராயினும்
பிணியெனக் கொண்டு பிறக்கிட்டொழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்மென்''

(சிலம்பு - காடுகாண்காதை 180-184)

என்பது மூலம் கணிகையர்களை அறவழியில் நிற்போர் வெறுத்து ஒதுக்குவர். மேலும்இ இழிவான தொழிலைச் செய்பவர்கள் என்பது தெளிய வைக்கப்படுகின்றது.

சிலம்பின் தொடர்ச்சியான மணிமேகலைக் காப்பியமும் கணிகையர்கள் மலர் விட்டு மலர் தாவும் வண்டுகள் போன்று பொருள் உள்ளவரையே தழுவிக் கிடப்பர் என்கின்றது.

"வறும்புத் துறக்கும் வண்டு போல்குவம்"

(மணிமேகலை, உதய. அம்புலக்காதை - 20)

என்றுரைக்கின்றது. கணிகையின் வாழ்வின் இழிவினையும் பொய்மை முயக்கத்தையும் சாதுவன் வாயிலாக உணர்த்துகின்றது.

"கணிகை ய்ருத்தி கைத்தூ ணல்க
வட்டினுஞ் சூதினும் வான் பொருள் வழங்கி
கெட்ட பொருளின் கிளை கேடுறுதலிற்
பேணிய கணிகையும் பிறர்நலங் காட்டிக்
காண மிலியெனக் கையுதிர்க் கோடலும்''

(மணிமேகலை - ஆதிரை பிச்சையிட்ட காதை 6-10)

என்பது மூலம் பொன்னும், பொருளும் கொடுக்க இயலாதபோது கணிகையால் சாதுவன் கையுதிர்க்கப்படுகின்றான். பொருள் நாட்டம் உடைய கணிகையர் வாழ்வின் இழிவு இதன் மூலம் தெளிவாக்கப்படுகின்றது. கணிகையர் வாழ்வின் இழிவிலிருந்து தப்பிக்கவும் அறநெறிப்படி வாழவும் வலியுறுத்தும் புத்தச் சமயத்தைச் சிலப்பதிகார மாதவியும், அவளது மகள் மணிமேகலையும் தழுவிப் பிக்குணியாக மாறுவதன் மூலம் பரத்தமை மீட்சி பேசப்படுகின்றது.

"கோதைத் தாமம் குழலோடு களைந்து
போதித்தானம் புரிந்தறம் படுத்தினள்" (சிலம்பு - வரந்தருகாதை 27-28)

என்பது மூலம் கணிகையர்களின் மீட்சியினைப் புத்த சமயம் தொடங்கி வைக்கின்றது.

கணிகையர் வாழ்வின் இழிவினை எடுத்துரைக்கும் திருக்குறளும்இ அறக்காப்பியங்களும் அறநெறிப்படி சமூகம் சென்றிட வழியமைத்துக் கொடுத்தன. அவ்வழியினைக் கடைபிடித்ததால் தமிழ்ச் சமூகம் வீழ்ச்சி அடையாமற் தொடர்ந்து இயங்குகின்றது. காமக் களியாட்டத்தை விரும்பி நுகர்ந்த கிரேக்கச் சமூகம் வீழ்ச்சியடைந்த காட்சி நம்முன் நிற்கும் வரலாற்றுச் சான்றாகும். தமிழின் முதற்காப்பியங்கள் பரத்தமையின் இழிவினைச் சுட்டுவதுடன் அவர்களின் அவ்விழிவிலிருந்து மீட்சி பெறுவதற்கும் முதன்முதலாக வழியமைத்துக் கொடுத்துள்ளன.

பிறன்மனை நயத்தல்

பரத்தமையை அடுத்துப் பிறன்மனையை நயத்தலும், ஒருவனின் மனைவி பிரிதொரு ஆடவனை நாடி உறவு கொள்ளுதலும் அற இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் மீண்டும் மீண்டும் கண்டிக்கப்பட்டுத் தனிமனித ஒழுக்கநெறி கட்டமைக்கப்படுவதைக் காணமுடிகின்றது.

வள்ளுவரின் திருக்குறளின் 'பிறனில் விழையாமை' அதிகாரம் முழுவதும் பிறன்மனை நயத்தலைக் கண்டிக்கின்றது. ஒழுங்குபடுத்தப்பட்ட ஒழுக்கநெறிச் சமூகத்தில் இத்தவறுகள் திருத்தப்படல் வேண்டும் என்பது அறநூல்களின் உட்கிடக்கையாக அமைகின்றது.

"பிறன்பொருளான் வெட்டு ஒழுகும் பேதைமை ஞாலத்து
அறம்பொருள் கண்டர்கண் இல்" (குறள் 141)

என்பதன் மூலம் மற்றவனுக்கு உரிமை பூண்ட மனைவியைக் கூட விரும்புபவர்கள் அறநெறியினையும்இ பொருள்நெறியினையும் மதிக்காதவர்கள் என்கின்றார்.

"பகைபாவம் அச்சம் பழி என நான்கும்
இகவாவாம் இல்இறப்பான் கண்" (குறள் 146)

என்று பகை, பாவம், அச்சம், பழி என்னும் நான்கு குற்றங்களும் பிறர் மனைவியிடம் நெறிதவறி நடப்பவனை விட்டு விலகாது என்றுரைக்கின்றார்.

"பிறன்மனை நோக்காத பேராண்மை சான்றோர்க்கு
அறன் ஒன்றோ? ஆன்ற ஒழுக்கு" (குறள் 148)

மற்றவனின் மனைவியை மனத்தினாலும் தீண்டாத பெரிய ஆண்மையே சான்றோர்க்கு அறமும்இ மனம் நிறைவு தரும் ஒழுக்கமும் ஆகும்.

பிறன்மனையின் தோள்நலத்தைத் துய்க்க விரும்பாதவரே உலகில் உள்ள நன்மைகளை அடையத் தகுந்தவர். தீமையின் வழியில் ஒருவன் சென்றால்கூட அடுத்தவனின் மனைவி அவனை விரும்பி வந்தாலும் கூட விலகி நிற்பதே சிறந்த அறம் என்கின்றார் வள்ளுவர்.

"அறன் வரையான் அல்ல செயினும் பிறன்வரையாள்
பெண்மை நயவாமை நன்று" (குறள் 150)

என்பதன் மூலம் பிறன்மனை நயத்தல் தீமையிலும் தீமையானது என்கின்றார். வள்ளுவர் பரத்தமை ஒழுக்கத்தைக் கண்டித்துத் திருத்தியதுபோல் அறநெறிப்பட்ட வாழ்வு முறையில் பிறன்மனை நயத்தலும் இழிவான செயல் என்கின்றார்.

மணிமேகலைக் காப்பியத்தில் சாலினி என்னும் பார்ப்பனப் பெண் தன் கணவனைவிட்டு வேறு ஓர் ஆணுடன் உறவு கொண்டு கருத்தரித்துக் குழந்தை பெறுகின்றாள். முறையற்ற உறவினால் பிறந்த குழந்தையினைத் தண்டனைக்குப் பயந்து குமரிக்கடல் செல்லும் வழியில் தோட்டத்தில் விட்டுச் செல்கின்றாள். பசுவினால் பால் கொடுக்கப்பட்ட இளம்பூதி என்னும் பார்ப்பனரால் வளர்க்கப்பட்டவனே ஆபுத்திரன். பிறந்த வேள்வியில் பலி கொடுக்க

வைக்கப்பட்டு இருந்த பசுவினைக் காப்பாற்றியதால் இவன் பசுவின் மகன் என்று பார்ப்பனர்கள் கேவலமாகத் திட்டி அடித்து உதைக்கின்றனர். அப்போது இந்து சமூகத்துப் புராணங்களில் கூறப்பட்டுள்ள முறைகேடான பாலியல் உறவுகளை அம்பலப்படுத்துகின்றான்.

"அசலன் பசுவுக்குப் பிறந்தவன், சிருங்கி மானுக்குப் பிறந்தவன், கேசக் கம்பளன் நரிக்குப் பிறந்தவன். இவர்கள் முனிவர்கள் எனில் ஆபுத்திரன் என்பது என்ன தவறு என்கின்றான். "பார்ப்பனர் குலத்தின் ஆதித்தந்தையரான வசிட்டனும், அகத்தியனும் பிரமனுக்கும் பரத்தையாகிய திலோத்தமைக்கும் பிறந்தவர்கள் அல்லவா?" என்று கேள்வி எழுப்பி முறையற்ற பாலியல் உறவுகளைக் கண்டிக்கின்றான்.

பிறன்மனை நயத்தல் உறவும், கணவனை விட்டுப் பிற ஆடவனுடன் கொள்ளும் உறவும், விலங்குகளோடு கொள்ளும் உறவுகளும், பரத்தமையோடு கொள்ளும் உறவுகளும் சமூகத்தில் விலக்கப்படல் வேண்டும் என்பதையே திருக்குறள் மற்றும் மணிமேகலைக் காப்பியம் வலியுறுத்துகின்றன. முறைதவறிய பாலியல் உறவுகள் சமூக ஒழுங்குக் கட்டமைப்பைச் சீரழித்துவிடும் என்பதையே அறநூல்களும் அறக்காப்பியங்களும் தெளிவுறுத்துகின்றன.

பிறன்மனை நயத்தலும் அலி பிறப்பும்

பிறன்மனை நயத்தல் என்பதும் பிற ஆடவனோடு உறவு கொள்வது என்பதும் பாவகாரியமாகும். இதனால் அடுத்த பிறவியில் அலியாகப் பிறந்து துன்புற்று அலைந்திடல் நேரிடும் என்பதைத் தேரி காதை 'இசிதாசி' என்பவள் மூலம் கூறிடுகின்றது. இசிதாசி பல பிறவிகளுக்குப் பின்னர், இறுதிப் பிறவிக்கு முந்தைய ஏழாவது மறுபிறப்பில் அடிமைப் பெண்ணுக்கு அலியாகப் பிறந்து நரகவாசத்தினை அனுபவிக்கின்றார். இதற்குக் காரணம் முற்பிறவியில் எரக்கச்சா நகரில் செல்வமிக்க பொற்கொல்லனாய் இருந்தபோது பிறன்மனைவியரோடு உறவு கொண்டு ஒழுக்கத்தைச் சிதைத்ததே ஆகும். அன்று இசிதாசி இட்ட தீமையின் வித்து இன்றும் தொடர்வதாக வருந்துகின்றார்.

"நான் அன்று இட்ட வித்தின்
அறுவடையை - பலனை - இன்றும் அனுபவிக்கிறேன்
அதனை இப்போது உன்னிடம் சொல்வேன்
கவனம் சிதறாமல் என் கதையைக் கேட்பாய்
எரக்கச்சா நகரில் முன்பொருகாலம்
செல்வமிக்க பொற்கொல்லனாய் வாழ்ந்தேன் நான்
இளமைச் செருக்கில் நெறிபிறழ்ந்து
அயலார் மனைவியரின் ஒழுக்கத்தைச் சிதறடித்தேன்
வீட்டிமை
ஒருத்தியின் மகவாய் நடுத்தெருவில் பிறந்தேன்
ஆணும் பெண்ணுமற்ற பிறவியாய்ப் பிறந்தேன்
என் காமக் களியாட்டத்தின் பலன் அத்தகையது'''

என்று நரகத்தில் உழன்றதோடு பல்வேறு விலங்குகளாகப் பிறந்து துன்பங்களை அனுபவித்தபின் அலியாகப் பிறந்ததாகக் கூறுகின்றார். இதற்குக் காரணமாக அமைவது காமவிளைவின் மிகை நாட்டமாகப் பிறன்மனைவிகளை நயந்து உறவாடியதே ஆகும்.

சமணக் காப்பியத் தருக்க நூலான நீலகேசியும் பிறன்மனை நயப்பவர்கள் நரக உலகில் துன்புற்று உழல்வதோடு, அலியாகப் பிறந்து காதல் கூடச் செய்யமுடியாமற் வருந்திக் கிடப்பதைக் காட்டுகின்றது. 'நிகோதம்' என்பது இருளின் இருள், மிகுந்த புகை, சேறு, மணல், பரல், மணி ஆகிய ஏழு பரந்த பகுதிகளையும், எண்பத்துநான்கு நூறாயிரம் குழிகளையும் உடைய நரகமாகும். நரககதி வாழ் உயிர்கள் முப்பிறவியில் ஊன் உண்டு, உயிர்க்கொலை செய்து, பிறன்மனை நயந்ததன் விளைவாக 500 வில் உயரம் கொண்டு; அழியாத தன்மையைக் கொண்டு பிறப்பெடுப்பதனால் மேலே எழுந்தும், வீழ்ந்தும், வீரர்களால் மீண்டும் மீண்டும் துண்டுகளாக்கப்பட்டும், நெருப்பில் வாட்டி எடுக்கப்பட்டும், உருகிய செம்பினைக் காதுகளில் ஊற்றியும் தண்டனைகளுக்கு உள்ளாகின்றனர். புகை நிறைந்த உலகத்தில் வாழும் உயிர்களுக்கு அருந்துவதற்கு நீர் கூடத் தரப்படுவதில்லை. உயிர்களைக் கொல்லும் கொடிய நஞ்சே இவர்களுக்கு உணவாகத் தரப்படுகின்றது. மேலும், அலியாகப் பேடிமைத்தன்மை பெற்றிருப்பதால் தமக்குள் காதலால் கூடி இன்பநிலை அடைதல் முடியாது. நரகத்தின் தனிமையான கொடுமைத் துயரினை அவர்கள் அனுபவிக்கின்றனர்.

"கீழோர் அலிகண் முழச்செவி கிண்ணர்கள் எண்ணிகந்த
ஊழாம் பிறப்பு உவாவுதமல் லார் உரு ஒப்பினரே'' (நீலகேசி 76:3:4)

என்பதன் மூலம் பிறன்மனை நயத்தலால் நரகத்தில் கரியநிறத்திலான கண்களையும், காதுகளையும் உடைய அலிகளாகப் பிறந்து துன்பத் தண்டனைகளைப் பெறுவதாக நீலகேசி காப்பியம் சுட்டுகின்றது.

நீலகேசி காப்பியத்தில் அலி பிறப்பு கருத்தினை மற்றொரு சமண நீதிநூலான நாலடியார் வழிமொழிகின்றது. இல்லறவியலில் பிறன்மனை நயவாமை அதிகாரத்தில் முற்பிறவியில் பிறன்மனைவியரைக் கூடச்செய்வார்கள் இப்பிறவியில் அலியாகப் பிறப்பர் என்கின்றது.

"செம்மையோன் நின்றிச் சிறியார் இனத்தராய்க்
கொம்மை வரி முலையாள் தோள்மரிஇ - உம்மை
வலியால் பிறன்மனைமேல் கொன்றாரே - இம்மை
அலியாகி ஆடி உண்பார்" (நாலடியார் - பாடல் - 15)

என்னும் பாடல் இளமையான கோலம் வரைந்த மார்பை உடைய பிறர்க்குரிய பெண்களைத் தமக்குரிய செல்வம், வலிமை காரணமாக முற்பிறவியில் சேர்ந்தவர்கள் இப்பிறவியில் அலியாகப் பிறந்து கூத்தாடி வயிறு பிழைப்பர் என்கின்றது. பிறன்மனை நயத்தல்-அலி பிறப்பு-தண்டனையைப் பெற்றுத்தரும் என்பதே சமண அறநூல்களின் கருத்தாக அமைகின்றது.

தேரிகாதை, நீலகேசி, நாலடியார் என்றும் மூன்று அறம் உரைத்திடும் நூல்களும் முற்பிறவியில் பிறன்மனைவியோடு கொண்டிடும் உறவு அடுத்த

பிறவியில் அவர்களை அலிகளாகப் பிறக்கச் செய்திடும் தண்டனைகளைக் கொடுத்துவிடும் என்னும் அறக்கருத்தினை வைத்திடுகின்றன. பிறன்மனை நயவாமை விலக்கப்பட வேண்டிய சமூக அறமாகும். இக்கருத்தையே மேற்சுட்டிய சான்றுகள் மூலம் அறநூல்கள் தெளிவுடன் உரைத்திடுகின்றன. சமூக ஒழுங்கு அறத்தைக் காத்திடுகின்றன.

துணை நூல்கள்

1. மங்கை, அ. (தமிழில்), தேரிகாதை (பௌத்தப் பிக்குணிகளின் பாடல்), சந்தியா பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2007.

2. நடராசன், தி.சு. தமிழ் அழகியல், காலச்சுவடு பதிப்பகம், நாகர்கோயில், பதிப்பு - 2012.

3. முருகேசன், சி.எஸ். வரலாற்றில் தேவதாசிகள், குறிஞ்சி வெளியீடு, சென்னை, பதிப்பு - 2009.

4. இராமகிருட்டிணன், ஆ. (உரை), திருக்குறள் (உரைநயம்), குமரன் பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2011.

5. சரவணன், ப. (பதிப்பும் - உரையும்), சிலப்பதிகாரம், சந்தியா பதிப்பகம்,சென்னை, பதிப்பு - 2008.

6. வேங்கடசாமி நாட்டார், ந.மு. அவ்வை துரைசாமிப்பிள்ளை, சு. மணிமேகலை, சாரதா பதிப்பகம், சென்னை, பதிப்பு - 2009.

7. சக்கரவர்த்திநராயினார், அ. நீலகேசி (சமயத் திவாகர முனிவர் உரை), தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகம், நிழற்படப் பதிப்பு - 1984.

8. முருகேசபாண்டியன், ந. "மறுவாசிப்பில் மணிமேகலை'', உயிர்எழுத்து, ஜனவரி -2012.

9. வேதசகாய குமார், எம். விறலி, கணிகை, பரத்தமை, உயிர்எழுத்து, ஏப்ரல் - 2013.

10. அருணாசலம், மு. தமிழ் இலக்கியங்களில் அரவாணிகள், அருண் பதிப்பகம், கொம்பேறிப்பட்டி, திண்டுக்கல், பதிப்பு - 2011.

தமிழ் மாநாடுகள்
புலம்பெயர் நாடுகளில் ஏன் கூட்டப்பட வேண்டும்?

திருமதி தனபாக்கியம் குணபாலசிங்பம்
இலண்டன்

தமிழர்கள் ஏறக்குறைய 11,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் குமரிக்கண்டமெனும் கண்டத்தினையே ஆண்டிருந்தவர்கள் ஆவர். ஆனால் இன்று தமிழருக்கு இறைமைகொண்ட நாடு என அடையாளப்படுத்தக் கூடிய நாடு எதுவுமில்லை. அதனால் அடக்கு முறைக்குள்ளாகிய ஈழத்தமிழர்கள் உலகளாவிய அளவிற் புலம்பெயர்ந்து, அந்தந்த நாடுகளின் அரசியல், சமூக நீரோட்டங்களுடன் கலந்து வாழப்பழகிக் கொண்டதோடு, அந்தந்த நாட்டுமொழிகள் பிள்ளைகளுக்குத் தாய்மொழிகள் ஆகாவிடினும், பிள்ளைகளோ அம்மொழிகளையே தாய்மொழி போல் ஏற்றுக்கொள்ளவேண்டிய சூழ்நிலைகளுக்குள்ளாகியுள்ளார்கள். அதனோடு அதிகரித்துவரும் கலப்புத் திருமணங்களினால் தமிழ் இனம் மூலத்தையிழந்து, புதிய இனமாக உருவாகியுள்ள யூதரைப்போல், புதிய இன, மொழி, கலாச்சாரங்களை உருவாக்கவல்ல சூழல்களும் இவர்களைச் சூழ்ந்திருப்பது தவிர்க்க முடியாததாகும்.

உண்மையில் தமிழருக்குத்தான் நீண்டகால இலக்கியங்களும், இலக்கண நூல்களும் பெருமையுடன் இன்றுவரை திகழ்ந்து வருகின்றன. ஆனால் தம் வரலாறுகளைக் காலவரிசைப்படி எழுதிவைத்தார்களில்லை. அதனால் தம் மூதாதையர் பற்றி நினைவுகூர்கையில்

"கற்றோன்றி மண்டோன்றாக் காலத்தே வாளொடு முற்றோன்றி மூத்த குடி"
(புறப்பொருள் வெண்பா மாலை செய்.35)

என நம்பகமற்ற கற்பனைக் கதையொன்றினைக் கூறி மகிழ்ந்து கொள்வர். உண்மைநிலை அப்படியன்று. தம் சொந்த மண்ணிலே அடிமைப்படுத்தப் பட்டவர்களாக வாழ்ந்து வருகின்றார்கள் அன்றேல் ஒட்டுண்ணிகள் போல் ஒட்டி வாழ்ந்து வருகின்றார்கள். இந்நிலைகள் ஏன்? எவ்வாறு? ஏற்படலாயிற்று என்று சிந்தித்துப் பார்ப்பதில்லை. உண்மையில் இவர்கள்தாம் நாடுகளை வைத்து ஆண்டவர்கள். தமிழ்மொழிக் கெழுகூடல்கள் எனும் சங்கங்களை அமைத்துப் பல்துறைகளிலும் வளர்த்த ஆன்றோர் குடித்தோன்றல்கள் இவர்களே. இத்தகைய பெருமைகளைக் கொண்டிருந்த மக்களுக்கு இன்றைய நிலை ஏன் ஏற்பட்டது என்பதற்கு நாம் வரலாற்றினைப் பின்னோக்கிப் பார்த்தல் வேண்டும்.

1991 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை பூம்புகார்க் கடல்பகுதி மின்காந்தக் கருவிகள் மூலம் (side-scan sonar) அடையாளப் படுத்தபட்டன, ஐந்து

கிலோமீட்டர் தூரம் கொண்ட பகுதிகள் ஆய்வு செய்யப்பட்டிருந்தன. அப்பொழுது அரைவட்டவடிவிலான கட்டட அழிபாடுகள் 23 மீட்டர் ஆழத்தில் கண்டுபிடிக்கப்படலாயின. அதேசமயம் 2 மீட்டர் ஆழத்திலும் பல கட்டிட அழிபாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. இவை கி.மு 3. ஆம் நூற்றாண்டிற்குரியன என்பது உறுதிப்படுத்தப்பட்ட செய்தியாக இருந்தன. ஆனால் 23 மீட்டர் ஆழத்திலுள்ள அழிபாடுகளுக்குக் காரணம் உலகளாவிய அளவில் ஏறக்குறைய 11,000 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட வெள்ளப்பிரளயமும், கடல்கோள்களும் என்பது ஆராய்ந்து உணரப்பட்டது. அதனோடு இக்கடல் கோள்கள் பற்றிய பதிவுகளைச் சங்க இலக்கியங்களிலும் காணலாம். அதனோடு வழிவழி வந்த மரபுகள் குமரிக்கண்டத்தில் பாண்டியர்கள் ஆண்டிருந்த 49 நாடுகளையும், இவர்கள் தமிழை வளர்க்க ஏற்படுத்தியிருந்த தமிழ்கெழு கூடல்களையும். பேணிவந்துள்ளன.

செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க்கீத்த
முந்நீர் விழவி னெடியோன்
நன்னீர்ப் பஃறுளி மணலினும் பலவே (புறநானூறு, செய்யுள் 9)

எனப் பாடிய புலவர் நெட்டிமையாரும் பஃறுளி ஆறும் மூன்றாம் தமிழ்கெழுகூடல் அல்லது சங்ககாலத்தில் இருந்தாரில்லை என்பது உய்த்துணரத்தக்கது. ஏனெனில் இளங்கோவடிகள் தன்காலத்திற்கு முற்பட்ட கடல்கோளின் கொடுமைகளைப்

பஃறுளியாற்றுடன் பன்மலையடுக்கத்துக்
குமரிக்கோடும் கொடுங்கடல் கொள்ள
(சிலம்பு - காடுகாண்காதை வரி 18-19)

எனப் பதிவு செய்திருப்பதிலிருந்து உணரலாம். மேலும் தொல்காப்பியத்திற்கு உரையெழுதிய நச்சினார்க்கினியர் கடல்கொண்ட தமிழகத்து 49 நாடுகள் பற்றி விவரிப்பர். பாயிரம் எழுதிய இளம்பூரணரும் தெற்கேயிருந்த நிலப்பரப்பைக் கடல் கொண்டதனாலே தொல்காப்பியர் தென்னெல்லையைக் 'குமரி' என்றனர் என்பர். பேராசிரியர் கடல்கொண்ட தமிழகத்தைப் 'பலினநாடு' என்றனர். சிலப்பதிகாரத்திற்கு உரையெழுதிய அடியார்க்கு நல்லார் குமரியாற்றிற்கும், பஃறுளியாற்றுக்கும் இடையில் 49 நாடுகள் இருந்தன என்பர். அவையாவன: ஏழ்தெங்கநாடு ஏழ்குன்ற நாடு, ஏழ்முன்பாலைநாடு, ஏழ்குறும்பனைநாடு, ஏழ்பின்பாலைநாடு, ஏழ் மதுரைநாடு, ஏழ்குணகரைநாடு முதலியனவாம். இவற்றோடு குமரிமலை, கொல்லம் முதலான பன்மலைகளும், காடும், நதியும், பதியும், தடநீர்க்குமரியும் கடலுட்தாழ்ந்ததனாலே சிலப்பதிகாரத்தில் தென்னெல்லை 'தொடியோள் பௌவ' மெனப்படலாயிற்று. இவ்வாறு பாண்டிய நாடுகள் (தற்பொழுதுள்ள ஈழம், ஏழ்பனைநாடு, மாலத்தீவுக்கூட்டங்கள், இலட்சத்தீவுகள் நீங்கலாக) கடலுட் தாழவே பாண்டிய மன்னன் முடத்திருமாறன் வடக்கே புலம்பெயர்ந்து சேர, சோழ நாடுகளைப் பெற்றுத் தன்குடிமக்களை வடமதுரையில் குடியமர்த்தி ஆண்டதனால், அவனை நிலந்தருதிருவிற் பாண்டியன் எனவும் மக்கள் அழைத்திருந்தனர். இதனையே கலித்தொகை

மலிதிரை யூர்ந்துதன் மண்கடல் வெளவலின்
மெலிவின்றி மேற்சென்று மேவார்நா டிடம்படப்
புலியொடு வின்னீக்கிப் புகழ்பெரித்த கிளிலீகொண்ட
வலியினான் வணக்கிய வாடாச்சீர்த் தென்னவன் (செய்யுள் 104)

எனப் போற்றியிருந்தது. இனி 'இறையனாரகப்பொருள்' எனும் நூலிற்கு உரைகண்ட நக்கீரர் மூன்று தமிழ்கெழுகூடல்களையும் வைத்து ஆண்டிருந்த மன்னர்கள், அவற்றின் காலம், கழக உறுப்பினர்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தார். அதனோடு முதலாம் தமிழ்கெழுகூடல் மறைந்தமைக்கான காரணத்தை,

"அவர் தமிழாராய்ந்தது கடல் கொள்ளப்பட்ட மதுரை''

என்றும் இரண்டாம் தமிழ்கெழுகூடல் கடல் கொள்ளப்பட்டதனை

"....... சங்கமரீஇயனார் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த
முடத்திருமாறன்"

என்றும் குறிப்பிட்டிருந்தமையும் சீர்தூக்கத்தக்கன.

இவ்வாறு குடியமர்த்தப்பட்ட மக்கள் தவிர, பிறர் பலதிக்குகளிலும் புலம் பெயர்ந்திருந்தார்கள். ரைகிரிஸ்-யூபிரடிஸ் நதிகளுக்கிடைப்பட்ட பகுதியான சுமேரியா, தென் ஈராக் பகுதிகளில் செழியனின் ஊர் (Ur of the Chaldreams) ஏழாம், மற்றும் இந்துவெளிப்பகுதிகளில் 'மா எழுகா' 'எழுகா" முதலான பகுதிகளுக்கு இவர்கள் புலம் பெயர்ந்திருந்தனர் என்பதற்காகிய சான்றுகள் தொல்லியல், மானிடவியல், மொழியியல் மூலம் கிடைக்கப்பெற்றுள்ளன. அவற்றோடு விவிலியவேதத்தின் முதல் ஏற்பாடு தரும் செய்திகளின்படி யூதரின் தந்தையான ஆப்ரம், ஒரு தமிழனத் தொடர்புடையவன் என அடையாளப்படுத்த முடிவதும் (ஈசையா 43-1419) கருத்திற் கொள்ளத்தக்கது. முற்குறிப்பிட்ட குடியேற்றங்கள் அனைத்தும் பிரளயவெள்ளத்துடன் தொடர்பு கொண்ட சடுதியான குடியேற்றங்கள் ஆவன. ஆனால் இவர்கள் தாம் குடியமர்ந்த பகுதிகளில் சிகரக்கோவில்கள், கட்டடங்கள், கலைநுணுக்கங்கள் முதலானவற்றை மீண்டும் கட்டி யெழுப்பியதோடு, எழுத்தையும் உலக சமூகத்திற்கு அறிமுகம் செய்த மக்களாவர். இந்துவெளி நகரங்கள் மிகத்தரமான கட்டடக்கலைகளுடன் எழுத்து முறைகளையும் பேணியிருந்தமையினாலே, சுமேரியர்கள் இவர்களை 'மாவெழுகா' எழுத்துடைய நாட்டார் என அழைத்திருந்தனர். இருப்பினும் சுமேரியரது ஆப்பெழுத்துக்களே (cuneiform) மத்தியகிழக்கு நாடுகளுக்கு அறிமுகமாகிய எழுத்துக்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இவ்வாறே செழியனின் ஊரைப்பிறப்படமாகக் கொண்ட ஆப்ரமின் தலைமுறையினரின் மொழி தமிழாகவும், சமயம் சைவமாகவும் அறியக்கூடியதாக விவிலியவேதத்தின் முதல் ஏற்பாடு சான்றுகளைக் கொண்டிருக்கின்றது. எடுத்துக்காட்டாக யூதரின் முதல் மாதம் நிசான் (நிலவாகலாம்), இரண்டாம் மாதம் சிவன், மூன்றாம் மாதம் ஐயர், நான்காம் மாதம் தம்முழ் (tammuz) என அவர்களது பழமை தமிழ்த் தொடர்புடையதொன்றாகும். இன்றைய யூத இனம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு

மேலாக உலகளாவிப் புலம் பெயர்ந்து வாழ்ந்ததனாலும், புதிய இனங்களின் தொடர்புகளினால் ஏற்பட்ட மொழித்திரிபுகளாலும், அவர்களின் மூலம் முற்றாக அடையாளப்படுத்த முடியாத நிலையிலுள்ளது. இந்த உண்மையை அவர்கள் ஏற்றுக்கொள்ளவும் தயாராக இல்லை. ஆனால் உண்மை வரலாறு இவர்களும் குமரிக்கண்டத்திலிருந்து புலம்பெயர்ந்தோரே ஆவர். ஏனெனில் தொல்லியல் ஆய்வுகளில் கிடைக்கப்பெற்ற மனித உருவங்கள் ஊரிலும்சரி, இந்துவெளி அகழ்வு ஆய்வுகளிலும் சரி கறுப்பினச் சாயல்கொண்ட மக்களாகவே இவர்களை இனங்காட்டியுள்ளன. யூதரின் காலத்தால் பிற்பட்ட தொல்லியல்களில் ஒன்றான டெல் பிரேக்கிலும் (Tell-break) கிடைக்கப்பெற்ற மனித எச்சங்களின் மரபணுக்கள் இனக்கலப்புற்ற புதியதிராவிட இனத்தை அடையாளப்படுத்தும் அ20 எனத் தெரிகின்றது. ஆனால் இனத்தொடர்பினை ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில், இத்தொல்லியல் தரவுகள் திரைமறைவில் வைக்கப்பட்டுள்ளன என்பதும் இன்னோர் செய்தியாகும். எது எப்படியாயினும் நாம் எம் அடையாளத்தையே மதிக்கின்றோம். ஏனெனில் அதற்கு உலகத்தில் வேறெந்த இனத்திற்குமில்லாத அறிவுசார் பெருமைகள் (எழுத்து, இலக்கியம், கட்டடக்கலை, நடனக்கலை, கலைநுணுக்கம் கொண்ட அணிகலன்கள், கடற்பயணங்கள் என அனைத்து வழிகளிலும் அறிவாற்றல் கொண்டவர்கள் என்பதனை இவவகழ்வாய்வுகள் அனைத்தும் உறுதிசெய்துள்ளன) ஏறக்குறைய 11,000 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே வளர்த்திருந்த இனம் தமிழினம். இத்துறைகளை மத்தியகிழக்கு நாடுகளுக்கும், இந்துவெளிப்பகுதிக்கும் எடுத்துச் சென்று, இன்றைய ஆய்வாளர்களை வியக்க வைத்துள்ள இனமும் இத்தமிழினமே. நீண்ட வரலாறுகளினூடாகப் பெருமையுடன் வளர்ந்த மொழியாகையினாலே தமிழ்மொழி கலப்படையாமல் தன் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடிய வகையில் மூலத்தைப் பேணிவருவதும் இதன் சிறப்பியல்பாகும்.

ஆனால் எம்வேர்கள் அங்கும், இங்கும் பரவி வளர்ந்த நிலையிலும் தொடர்பு சாதனங்களற்ற நிலையில் அடையாளங்களை இழந்துவிடும் நிலை இருந்துள்ளது. ஆனால் இன்றைய நிலையோ அதிகத் தொடர்புச் சாதனங்களைக் கொண்ட சமூகமாக உலகளாவிய அளவில் தமிழர்கள் பரவி வாழ்ந்து வருகின்றனர். இன்றைய தமிழகத்தில் பல்வேறு காரணங்களுக்காகக் குடியமர்ந்த மக்கள் ஊடகமொழியாக ஆங்கிலத்தையே விரும்புகின்றார்கள். அதனோடு ஆங்கிலம் உலக ஊடகமொழியாகத் தன்னை நிலைநிறுத்தியிருக்கின்ற நிலையில் தமிழர்களும் ஆங்கிலத்தைத் தமிழுடன் கலந்து பேசும் நிலை சினிமாத் துறையிலும், அரசு நிறுவனங்களிலும் உருவாகியுள்ளது. அதனால் எழுத்துக்களிலும் ஆங்கிலம் ஊடுருவியிருப்பதனால், அங்குச் சேரநாட்டில் தமிழ் வடமொழியுடன் கலப்புற்று மலையாளமாக உருவாகியுள்ள நிலைபோல் தமிழும் தன் தனித்துவத்தினை, அழகினை இழந்து போகும் நிலையிலுள்ளது. ஈழத்தில் இதுவரை காலமும் தமிழ், தமிழாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றது. ஆனால் அங்கும் இறைமை கொண்ட ஆட்சியைத் தமிழ் பெற்றிருக்கவில்லை. அதனால் தமிழ் அழியும் என்பர் சிலர். அப்படியான நிலை தமிழுக்கு ஒரு போதும்

வருவதற்கில்லை. அதுவே முதன் முதலில் இறைவனால் வளர்த்தெடுக்கப்பட்ட மொழி. மூன்று தமிழ்கெழுகூடல்களிலும் சிவன், முருகன் ஆகிய சக்திகள் மூலம் திருவிளையாடல்கள் செய்து வளர்த்தமொழி. இன்று தமிழை உலகளாவப் பரவவிட்டதும் அவரது திருவிளையாடலேயன்றி வேறொன்றுமல்ல. இன்று புலம் பெயர் நாடுகளில் பல்வேறு வழிகளில் தமிழ் வளர்க்கப்படுகின்றது.

அவையாவன:

1. தமிழ்வீடுகளில் கொண்டாட்டங்கள், விருந்தோம்பல்கள் அனைத்தும் தமிழ்மொழியிலே நடைபெற்றுவருகின்றன.
2. தமிழர் விளையாட்டுத்திடல்களில் தமிழே ஒன்றுகூடி விளையாடுகின்றது.
3. இயலிசை நாடகங்களில் தமிழின் பாரம்பரியங்கள் மேலேங்கி நிற்கின்றன.
4. கணினியில் தமிழ் அனைத்து வேலைகளையும் செய்து வருகின்றது.
5. பல்வேறுபட்ட வியாபாரத் தலங்களிலும் தமிழ் தன் வீரியத்தைக் காட்டி வருகின்றது.
6. தொலைக்காட்சிகளில் தமிழின் சேவை அளப்பரியது.
7. வானொலிகளில் தமிழ் அலைவரிசைகளினூடாகப் பயணித்து அனைவரையும் மகிழ்வித்து வருகின்றது.
8. தமிழ் எழுத்தாளர்கள் தூயதமிழில் எழுதுவதிலே பெருமை காண்கின்றார்கள்.
9. ஓசியாய் வாசிக்க (கட்டணமற்ற) நாளேடுகள் பல உள.
10. மருத்துவர்கள் தமிழைத் தலையில் சுமந்து அதன் பெருமையை நிலைநாட்டத் தம் உழைப்பினை வாரிவழங்குவதில் பின் நிற்கமாட்டார்கள்.
11. பழம்பாரியங்களைப் பேணிப்பாதுகாக்கும் தமிழ்ச்சங்கங்கள் தனியார் நூலகங்கள் போற்றப்படும் வகையில் தமிழைக் கட்டிக் காக்கின்றன.
12. முதியோர்கள் தமிழைப் பேசுவதற்கே ஒன்றுகூடல்களைச் செய்து வருகின்றனர்.
13. பல்வேறு நாடுகளில் வாழும் தமிழர்களுக்கு அந்தந்த நாட்டு மொழிகளைத் தமிழில் மொழிபெயர்ப்பதென்பது ஒரு புதியதுறையாக வளர்ந்துள்ளது.
14. தமிழ்ப்பள்ளிகளே எதிர்காலத் தமிழ்த்தலைவர்களை வளர்க்கும் பணியில் தம்மை அர்ப்பணித்துள்ளன.
15. நன்றி நவிலல் முக்கிய அறமென வள்ளுவர் அறிவுறுத்தியுள்ளார். அதனால் உலகத்தமிழ்மாநாட்டினை முதன் முதலாக அடியெடுத்துத் தந்த தவத்திரு தனிநாயகம் அடிகளும், அவர் வழி வந்தோர்களும் தமிழ் தந்த மொழிப்பற்றாளர்கள், எம்மைத் தொடர்ந்தும் வழிநடாத்திக் கொண்டிருக்கிறார்கள் எனில் மிகையாகாது.

கீழைத்தேய மொழிகளை மையப்படுத்திய ஒப்பியலாய்வு முயற்சிகள் - தேவையும் பயனும்

திரு. ஈஸ்வரநாதபிள்ளை குமரன்
சிரேஷ்ட விரிவுரையாளர்
தமிழ்த்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
இலங்கை

அறிமுகம்

ஒப்புநோக்குவதும், ஒப்புநோக்கித் தான் கண்டறிந்தவற்றை விவரிக்கும் திறனும் மனித சமுதாயத்துக்குக் கிடைக்கப் பெற்ற பேராற்றல் என்றே குறிப்பிடலாம். இப் பேராற்றல் ஆய்வு வரன்முறைகளுக்கு உட்பட்ட ஒன்றாக வளர்ச்சி கண்டபோது ஒப்பியலாய்வு தோன்றியது. இன்று இலக்கியம், பண்பாடு, அரசியல், பொருளாதாரம் முதலான அனைத்துத் துறைகளையும் ஆக்கிரமித்துக் கொண்ட ஓர் ஆற்றல் மிக்க ஆய்வுச் செயற்பாடாக ஒப்பிலாய்வு முனைப்புப் பெற்றிருப்பதனைக் காணலாம். ஒன்றோடொன்று தொடர்புபட்டிராத இருவேறு மொழி இலக்கியங்களுக்கிடையிலான ஒற்றுமையினையும் தனித்துவங்களையும் ஒப்பிட்டு நோக்குவதே ஒப்பிலக்கிய ஆய்வாகும். இலக்கியங்களை ஒப்பிட்டுக் கருத்துரைக்கும் மரபு மிகப் பழமையானதெனினும் மிகப் பிற்பட்ட காலத்திலேயே அது அறிவியல் ரீதியான ஆய்வாக வளர்ச்சி பெற்றது.

கீழைத்தேசங்களில் ஒப்பியலாய்வின் தொடக்கம்

கீழைத்தேயங்களைப் பொறுத்தமட்டில் ஒப்பியலாய்வுகள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியிலேயே கால்கொள்ளத் தொடங்கின. ஆங்கிலேயர் ஆட்சிச் சூழலில் மிஷனரிமார்கள் உருவாக்கிய பாடசாலைகளும் அங்கு வழங்கப்பட்ட ஆங்கிலக் கல்வியறிவும் அதனூடாகப் பெற்றுக் கொள்ளப்பட்ட மேலைத்தேய இலக்கிய ஆய்வியல் அனுபவங்களும் ஒப்பியலாய்வுகள் தமிழில் வளர்வதற்கு ஏற்ற களத்தினை உருவாக்கித் தந்தன. ஆரம்பத்தில் ஒப்பியலாய்வுகளில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டவர்கள் கிறிஸ்தவ பாதிரிமார்களும் தொழில் நிமித்தமாகக் கீழைத்தேசங்களுக்கு வந்த ஆங்கிலேய அதிகாரிகளுமேயாவர். கீழைத்தேயங்களில் பணியாற்றிய காலங்களில் தமது தாய்மொழி இலக்கியங்களுக்கும் கீழைத்தேய இலக்கியங்களுக்கும் இடையில் இனங்கண்ட எதேச்சையான ஒற்றுமைகளை வியப்புடன் விபரிப்பனவாகவே அவர்களது ஒப்பியலாய்வுகள் அமைந்தன. இலக்கியங்களுக்கிடையிலான ஒற்றுமைகளை எடுத்துக் கூறல், அவற்றினை வியப்புத் தோன்ற விவரித்தல், தாம் பெற்ற இலக்கிய அனுபவத்தினைப் பகிர்ந்து கொள்ளுதல் என்பனவே அவர்களது ஆக்கங்களின் பிரதான நோக்கங்களாக அமைந்தன.

இவர்களது எழுத்துக்களைக் கற்ற, சுவைத்த சுதேச அறிஞர்களும் இந்தத் தளத்திலேயே தமது ஒப்பியல் ஆய்வுகளை நிகழ்த்தத் தொடங்கினர்.

ஆரம்பக்காலக்கட்ட ஆய்வுகள் ஒப்பியலாய்வு வரன்முறைகளை முழுமையாக உள்வாங்கி நிகழ்த்தப்பட்டன எனக் கூறமுடியாது. இலக்கியங்களுக் கிடையலான ஒற்றுமைகளை மேலெழுந்தவாரியாக விவரிக்கும் ஆய்வுகளாகவே அவை அமைந்தன. ஆயினும் காலப்போக்கில் குறிப்பாக இருபதாம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து மேலைத்தேய ஒப்பியல் இலக்கியக் கோட்பாடுகள் கீழைத்தேயங்களுக்கு அறிமுகமாகத் தொடங்கின. மேலைத்தேயத்தில் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை வளர்த்த பெருமை பிரெஞ்சு அறிஞர்களையும் அமெரிக்க அறிஞர்களையும் சாரும்.

ஆரம்பத்தில் பிரெஞ்சு அறிஞர்களே ஒப்பியலாய்வு தொடர்பாக ஆர்வங்காட்டி வந்தனர். பிரெஞ்சு ஒப்பிலக்கிய ஆய்வுகள் தொடர்புடைய மொழிகளை மையப்படுத்தியனவாகவே அவை பெரிதும் அமைந்தன. இவை அறிவியல் பூர்வமான ஆய்வு நெறிமுறைகளையும் இலக்கியங்களுக்கிடையிலான தாக்கங்களையும் முதன்மைப்படுத்துவனவாக அமைந்தன. இதற்கு மாறுபட்ட தளத்தில் அமெரிக்க அறிஞர்கள் தமது ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை முன்னிறுத்தினர். ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டிராத மொழிகளுக்கிடையிலான ஒப்பிலாய்வின் தேவையை அவர்கள் வலியுறுத்தினர் (பிச்சை, அ., 2003:11-12). அத்துடன் ஒப்பிலக்கிய ஆய்வில் அழகியல் ரீதியான பார்வையையும் இணைநிலைக் கோட்பாட்டு அடிப்படையிலான ஆய்வினையும் அவர்கள் அதிகம் கையாண்டு வந்துள்ளதைக் காணலாம். பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஒப்பிலக்கிய ஆய்வுக் கோட்பாடுகளே இற்றைவரைக்கும் சிற்சில மாற்றங்களுடன் பின்பற்றப்பட்டு வருகின்றன.

கீழைத்தேய ஒப்பியலாய்வின் பிரதான செல்நெறிகள்

அண்மைக்காலமாகக் கீழைத்தேயங்களில் நிகழ்ந்து வரும் ஒப்பிலக்கிய ஆய்வுகளில் சில முற்போக்கானதும் கனதியானதுமான மாற்றங்கள் அவதானிக்கப்பட்டு வருகின்றன. எனினும் காலனித்துவ ஆட்சிக்காலம் முதலாக இதுவரைகாலமும் நிகழ்ந்த ஒப்பியலாய்வின் பிரதானப் பண்புகளைப் பின்வருமாறு பட்டியல்படுத்த முடியும்.

1. கீழைத்தேயங்களில் ஒப்பிலக்கிய ஆய்வுகள் காலனித்துவ ஆட்சிக் காலத்திலேயே அறிமுகமாயின என்பதால் காலனித்துவ சிந்தனைகளும், செல்வாக்கும், அழுத்தங்களும் அதில் நிரம்பியிருப்பதாகக் குறை கூறப்பட்டு வருகின்றது. காலனித்துவ ஆட்சியாளர்களும் அவர்களுக்கு அடிவருடிகளாக விளங்கியவர்களும் தங்களது நோக்கங்களோடும், விருப்பங்களோடும் சமரசம் செய்து கொள்ளக் கூடிய அல்லது ஒத்துப் போகக் கூடியதான ஒப்பிலக்கிய ஆய்வுகளையே முதன்மைப்படுத்தினர். காலனித்துவ நலன்கள் துலாம்பரமாக வெளிப்பட்டு நிற்கத் தக்கதான ஆய்வுகளைத் தாங்கள் செய்ததோடு அமையாது அவ்வாறான ஆய்வுகளைப் புரிவதற்கும் வழிகாட்டினர். இவர்களது ஆய்வுகள்

அக்காலத்தில் முன்மாதிரியான எழுத்துக்களாகக் கற்பிதம் செய்யப்பட்டன இவற்றினை விமர்சனத்துக்குட்படுத்தாது அப்படியே பின்பற்றுவனவாகவே கீழைத்தேயத்தில் நிகழ்ந்த பல ஆய்வுகள் விளங்கியதைக் காணலாம். காலனித்துவ ஆட்சி கீழைத்தேயங்களில் நின்றும் முற்றாக நீங்கிய பின்னருங்கூடப் பல ஆண்டுகளாக இந்நோக்கிலான ஆய்வுகளே பெரிதும் முன்னெடுக்கப்பட்டு வந்ததை அவதானிக்க முடியும்.

2. பிரெஞ்சு மற்றும் அமெரிக்க ஒப்பியலாய்வுக் கோட்பாடுகளைப் பின்பற்றி நிகழ்த்தப்பட்டனவாகவே கீழைத்தேய ஒப்பியலாய்வுகள் விளங்குகின்றன. அவற்றுள்ளும் பெரும்பாலான ஆய்வுகள் இணைநிலைக் கோட்பாட்டினைப் பின்பற்றியே நிகழ்த்தப்பட்டிருத்தல் நோக்கத்தக்கதாகும். இணைநிலை என்பது எவ்விதத்திலும் தொடர்புபட்டிராத இருவேறு மொழி இலக்கியங்களிடையே கருத்து, உத்தி, உருவம் தொடர்பாகக் காணப்படும் ஒற்றுமைகளை ஒப்பிட்டுக் காண்பதாகும். இரசனை அனுபவத்தினை விளைவிக்க வல்ல இந்தக் கோட்பாடு இலக்கியங்களினூடாக வெளிப்படக் கூடிய கருத்தியல் தொடர்புகள், ஊடாட்டங்கள், செல்வாக்குகள் என்பவற்றைப் போதியளவு விளங்கிக் கொள்ளப் பயனற்றதாக உள்ளது. மேலும் மேலைத்தேய ஒப்பியலாய்வுக் கோட்பாடுகள் அவை தோன்றிய சமூக, மொழி, பண்பாட்டுப் பகைப்புலத்துக்கு மிகவும் ஒத்துப் போகும் வகையிலேயே உருவாக்கப் பட்டுள்ளன. அவற்றினை எந்தவிதமான விமர்சனமும் இன்றிக் கைக்கொள்கின்றவர்களாகவே பெரும்பாலான கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வாளர்கள் இருந்துள்ளனர். இது கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வுகள் மேலைத்தேய ஒப்பியல் கோட்பாடுகளுக்குக் கடன்பட்டவையாக அமையும் அபாயத்தையும் தோற்றுவித்துள்ளமை நோக்கத்தக்கதாகும்.

3. கீழைத்தேயத்தில் நிகழ்ந்த ஆய்வுகளுள் பல ஐரோப்பிய மையப்பார்வையை அதிகம் பிரதிபலிப்பனவாக உள்ளன. ஐரோப்பிய மையப்பார்வையானது கீழைத்தேய இலக்கியங்கள் குறித்த தவறுதலான அணுகுமுறைகளுக்குக் காரணமாக அமைந்தது. கீழைத்தேய இலக்கியங்களின் தோற்றம், காலம், மூலம் தொடர்பான பல தவறுதலான அபிப்பிராயங்கள் வளர்வதற்கு இது இடமளித்துள்ளது. ஐரோப்பிய இலக்கியங்களையும் படைப்பாளுமைகளையும் பலமடங்கு உயர்த்திப் பேசும் ஐரோப்பிய மையப் பார்வையாளர்கள் கீழைத்தேய இலக்கியங்களை, படைப்பாளர்களைக் குறைத்து மதிப்பிட விழைந்தனர் (ஆனந்தக்குமார், பக்.,2003:14-15). கீழைத்தேய இலக்கியங்களை ஐரோப்பிய இலக்கியங்களின் பிரதிகளாகவும் பார்க்க முற்பட்டனர். குறிப்பாகச் சொல்வதானால் ஐரோப்பிய இலக்கியத்துக்குக் கீழைத்தேய இலக்கியங்கள் கடன்பட்டுள்ளன எனக் கூறிக்கொள்வதில் அவர்கள் திருப்தியடைந்தனர். கீழைத்தேய இலக்கியங்களைத் தங்களது மொழிகளுக்கு மொழிபெயர்த்த அறிஞர்களிடம் கூட இவ்வாறான வக்கிரப் பார்வை காணப்பட்டமை நோக்கத்தக்கதாகும். உமர்கயாமின் ருபயாத்தை ஆங்கிலத்துக்கு மொழிபெயர்த்த பிட்ஜெரால்டும் கீழ்த்திசை இலக்கியங்கள் பற்றிய தாழ்வான

மனப்பதிவினைக் கொண்டிருந்ததாகச் சூசன் பாஸ்னெட் குறிப்பிடுகின்றார் (Susan Bassnett, *1998:18*). கீழைத்தேய இலக்கியங்களின் தனித்துவம், சிறப்பு, பெருமை, வளம் முதலானவை தொடர்ந்தும் இலைமறை காயாக இருப்பதற்கு இவ்வாறான ஆய்வுகளே வழிவகுத்தன. ஐரோப்பிய மையப்பார்வையானது மேலைநாட்டறிஞர்களில் மட்டுமல்லாது கீழைத்தேய ஆய்வாளர்கள் பலரிமும் காணப்பட்டமை விசனத்துக்குரியதொன்றாகும்.

4. இலக்கியங்களுக்கிடையிலான மேம்போக்கான உறவுகளை மட்டும் முதன்மைப்படுத்துவனவாகக் கீழைத்தேயத்தில் நிகழ்ந்த பெரும்பாலான ஆய்வுகள் அமைந்தன. கீழைத்தேய அறிஞர்கள் பெரிதும் பின்பற்றிய இணை நிலைக்கோட்பாடு மேம்போக்கான ஆய்வுகள் தொடர்ந்தும் நடைபெற வழிகோலிற்று. இணைநிலைக்கோட்பாட்டுக்கு அப்பால் தாக்க, அடிக்கருத்து, கூர்தலறக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஆய்வுகள் மிக அருந்தலாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதனால் கீழைத்தேய இலக்கியங்கள் குறித்த ஆழமான பார்வைகள் வெளிவரத் தவறிவிட்டன. கீழைத்தேய இலக்கியங்களின் பெருமை, சிறப்பு, அவற்றின் நாடுகடந்த செல்வாக்கு என்பன குறித்த காத்திரமான ஆய்வுகள் நிகழாமை ஐரோப்பிய மையக் கருத்துக்களுக்கு மேலும் உரங்கொடுப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக அடிக்கருத்து, தாக்கக் கோட்பாடுகளின் பின்புலத்தில் ஒப்பியலாய்வுகள் கீழைத்தேய இலக்கியங்களில் மேற்கொள்ளப்படுமிடத்து அவ்விலக்கியங்களின் தனித்துவங்கள் குறித்தும், பல மொழி இலக்கியங்களுக்கு மூலங்களாக விளங்கிய அவற்றின் சிறப்புப் பற்றியும் பல விடயங்கள் வெளிச்சத்திற்கு வருவதற்கான வாய்ப்புக்கள் பெருகும். மிக அண்மைக்காலமாக நிகழ்ந்து வரும் சில ஆய்வுகள் கீழைத்தேய இலக்கியங்கள் குறித்த வியக்கத்தக்க பல தரவுகளைத் தந்துள்ளமை இவ்விடத்தில் நோக்கத் தக்கதாகும்.

5. இலக்கியங்களின் தேசியப் பண்புகளை நிராகரித்த ஆய்வுகளாகக் கீழைத்தேய ஒப்பியலாய்வுகள் பல அமைந்துள்ளன. இலக்கியங்கள் இன, மொழி, நாடு, பண்பாட்டு எல்லைகளைக் கடந்து ஒற்றுமைகளை வெளிக்காட்டி நிற்பதை ஒப்பிலக்கிய ஆய்வு வெளிக்கொணர்ந்து காட்டுகின்றது. எனினும் இவற்றினை விஞ்சி அவ்விலக்கியங்கள் அவை தோன்றிய சமூக, பண்பாட்டு, இலக்கியச் சூழலையும் வெளிக்காட்டி நிற்பதை எவரும் மறுக்க முடியாது (திருமலை, ம. *2003:32*). ஒற்றுமைகளை விஞ்சி வேறுபட்டு நிற்கும் இப்பண்புகள் அவ்வவ் இலக்கியங்களின் தனித்துவங்கள் என விதந்துரைக்கப்படுகின்றன. இத் தனித்துவங்களை வடிவமைத்ததில் அல்லது கட்டிக்காத்ததில் அந்த இலக்கியங்களின் தேசியப்பண்புகளுக்கு முக்கிய இடமுண்டு. இத் தேசியப் பண்புகளையும் விளங்கிக் கொண்டு கருத்துக்களை முன்வைக்கும் போது தான் ஒப்பிலக்கிய ஆய்வுகள் கனதியும் காத்திரமும் பெறும். இல்லையேல் இலக்கியங்களை வேறொரு மொழி இலக்கியத்தின் பிரதியாகக் காண்கின்ற அபத்தமான முடிவுகளுக்கு ஆய்வாளர்கள் செல்வதற்கும் வாய்ப்புண்டு. ஆனால்

துரதிஸ்டவசமாகப் பல ஆண்டுகளாகக் கீழைத்தேய இலக்கியங்களில் நிகழ்ந்த ஆய்வுகள் தேசியப்பண்புகளை நிராகரித்தவையாகவே விளங்கி வந்துள்ளன. இதனால் கீழைத்தேய இலக்கியங்களின் தனித்துவம், படைப்பாளர்களின் ஆளுமை என்பன அறியப்படாமல் போய்விட்டன.

மாற்றத்தினை வேண்டும் கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வுகள்

கீழைத்தேய மொழிகளில் நிகழ்ந்த அல்லது நிகழ்ந்து வருகின்ற இவ்வாறான ஒப்பியலாய்வுகள் மாற்றத்தினை எதிர்கொள்ள வேண்டிய சூழல் இப்போது உருவாகியுள்ளது. குறிப்பாகப் பின்நவீனத்துவமும், பின்காலனித்துவமும் இலக்கிய உற்பத்தியிலும் திறனாய்விலும் செல்வாக்குச் செலுத்துகின்ற இச்சூழலில் நிகழ்ந்ததும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றதுமான ஒப்பிலக்கிய ஆய்வுகளினை மதிப்பீடு செய்வதும் எதிர்காலத்திற்கு ஏற்ற விதமான கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வுகள் குறித்ததுமான கருத்துக்களை முன்வைப்பதும் அவசியமாகின்றது. விளிம்பு நிலைப்படுத்தப்பட்டுள்ள கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வினைக் கட்டியெழுப்புவதற்கு இவ்வாறான முயற்சிகள் மிக அவசியமானவையாகும். இதற்கு,

1. கீழைத்தேய மொழிகளை மையப்படுத்திய ஒப்பிலக்கியப் பார்வையினை வளர்த்தெடுத்தல்.
2. ஒப்பிலக்கிய ஆய்வுகளில் தேசிய இலக்கியப் பண்புகளை முக்கியப்படுத்தல் அல்லது அவற்றில் அக்கறை செலுத்துதல்.
3. ஒரே ஒப்பிலக்கியக் கோட்பாட்டில் மட்டும் தங்கியிருக்காது வெவ்வேறு ஒப்பிலக்கியக் கோட்பாடுகளினடியாகவும் ஆய்வுகளை முன்னெடுத்தல்.
4. கீழைத்தேய மொழிகளுக்கிடையிலான ஒப்பியலாய்வுகளை வளர்த்தல்.
5. கீழைத்தேய மொழிகளுக்கிடையில் இலக்கிய மொழிபெயர்ப்புகளை ஊக்கப்படுத்தல்.

என்பன ஆரோக்கியமான விளைவுகளைப் பெற்றுத் தரும் எனக் குறிப்பிடலாம்.

ஐரோப்பிய மையப்பார்வையிலிருந்து மீட்டெடுத்தல்

இதுவரைகாலமும் ஒப்பிலக்கிய ஆய்வில் செல்வாக்குச் செலுத்திய ஐரோப்பிய மையப்பார்வையை அகற்றிக் கீழைத்தேய மொழிகளைக் கவனத்திற்கொண்ட ஆய்வினை முன்னெடுத்தல் என்பது வினைத்திறனான ஒப்பிலக்கிய ஆய்வுகளின் வளர்ச்சிக்கு அத்திவாரமாக அமையும் என நம்பப்படுகின்றது (Susan Bassnett, 1998:38). ஐரோப்பிய மையப்பார்வையால் ஏற்பட்ட பிரதிகூலங்களிலிருந்து ஒப்பியலாய்வினை விடுவிப்பதற்குரிய மிகச் சிறந்த வழியாக இது அமையும் எனலாம். ஐரோப்பிய மையப்பார்வையிலிருந்து ஒப்பிலக்கிய ஆய்வுகளை விடுவிப்பதற்குப் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றுவது அவசியமாகின்றது.

1. இதுவரைகாலமும் நிகழ்ந்த ஒப்பியல் ஆய்வுகளை விமர்சனத்துக்குட்படுத்துதல்

இதன் மூலம் கீழைத்தேய மொழிகளில் நிகழ்ந்த ஒப்பியலாய்வுகளிலுள்ள தவறுகளையும் போதாமைகளையும் வெற்றிடங்களையும் அடையாளங் காண்பதற்குரிய வாய்ப்புகள் ஏற்படும். இதனால் எதிர்காலத்தில் ஒப்பியலாய்வினை முன்னெடுக்க வேண்டிய திசைவழி துலாம்பரமாகும்.

2. ஐரோப்பிய ஒப்பிலக்கியக் கோட்பாடுகளில் முற்றாகத் தங்கியிருப்பதனை நீக்குதல்

பொதுவாகவே கீழைத்தேய ஆய்வாளர்கள் மேலைத்தேய விமர்சன, தத்துவ, ஒப்பிலக்கிய மற்றும் பிற கோட்பாடுகளில் விருப்பமுடையோராயும் அவற்றைப் பின்பற்றுவோராயும் உள்ளனர். அவற்றினைப் பின்பற்றுவது தமக்குப் பெருமை சேர்க்கும் விடயம் என அவர்கள் கருதுகின்றனர். மேலைத்தேய தத்துவவாதிகள் அல்லது கோட்பாட்டாளர்களின் கூற்றுக்களை மேற்கோள் காட்டுவதும், கீழைத்தேய படைப்புக்களை அவர்களின் கோட்பாடுகளோடு வலிந்து பொருத்தி நோக்குவதும், மேலைத்தேய கோட்பாடுகளைக் கீழைத்தேய சமூகத்தில் வலிந்து திணிக்க முற்படுவதும் பல ஆண்டுகளாக அவதானிக்கப்பட்டு வரும் பிற்போக்குத்தனம் எனக் குறிப்பிடாலாம்.

இதனால் மேலைத்தேயக் கோட்பாட்டுகள் கீழைத்தேயத்துக்குப் பொருந்தாதவை என்பதோ அல்லது அவற்றைக் கற்பதும் பிரயோகிப்பதும் தவறென்பதோ பொருளல்ல. ஆனால் மேலைத்தேயக் கோட்பாடுகளை ஆய்வுப் பூர்வமாக அணுகாது எழுந்தமானமாகக் கையாள்வதிலே தான் ஆபத்து காணப்படுகின்றது.

i. மேலைத்தேச தத்துவ, விமர்சன மற்றும் ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை விமர்சனப் பூர்வமாக அணுகுதல்

ii. கீழைத்தேய ஆய்வுகளுக்கு ஏற்ற வகையில் அவற்றினை மாற்றியமைத்தல்

என்பனவற்றுக்கூடாக மேலைத்தேயக் கோட்பாடுகளைக் கீழைத்தேயத்துக்கும் பொருத்தமுறச் செய்து கொள்ள முடியும். மேலைத்தேயக் கோட்பாடுகள் அவைதோன்றிய அரசியல், சமூக, பொருளாதார, பண்பாட்டுச் சூழலுக்குப் பொருத்தமான வகையிலேயே அமைந்துள்ளன. அவற்றினைக் கீழைத்தேய ஆய்வுகளுக்குப் பயன்படுத்த வேண்டும் எனின் அக்கோட்பாடுகள் குறித்த விமர்சன ரீதியான அணுகுமுறை அவசியமானதாகும். கீழைத்தேசத்திற்கு அவை பொருந்தும் வகை, அவற்றின் அரசியல், கோட்பாடுகளின் பின்னணியில் தொழிற்படும் அதிகாரம் குறித்த சரியான புரிதல்கள் ஏற்படும் பட்சத்தில்தான் அவற்றின் அடிப்படையில் நிகழ்த்தப்படும் ஆய்வுகளின் உண்மையான பயன்கிடைக்கும்.

அதேபோல ஐரோப்பியக் கோட்பாடுகளை அப்படியே உள்வாங்காது அவற்றினைக் கீழைத்தேய தேவைகள், நோக்கங்கள், எதிர்பார்ப்புகள்

என்பவற்றிற்கும் அரசியல், சமூகப் பண்பாட்டுச் சூழலுக்கு ஏற்ற வகையிலும் பொருத்தமுறக் கையாள்வது பயன்மிக்கதாக அமையும். அதற்கென மேலைத்தேயக் கோட்பாடுகளில் அவசியமான விடயங்களை உள்வாங்குதல், தேவைப்படின் சிற்சில மாற்றங்களை ஏற்படுத்துதல், கீழைத்தேயத்துக்குப் பொருந்தாத விடயங்களை நீக்கிவிடுதல் என்பனவற்றினை ஆய்வாளர்கள் அவசியம் பின்பற்ற வேண்டியுள்ளது. இதன் மூலம் ஐரோப்பிய மையப் பார்வையை அகற்றிக் கொள்வதுடன் கீழைத்தேய ஆய்வுகளின் அல்லது படைப்புக்களின் தனித்தன்மையையும் பாதுகாத்துக் கொள்வதற்கான வாய்ப்புகள் உருவாகின்றன.

3. கீழைத்தேய ஒப்பியலாய்வுக்கெனத் தனித்துவமான கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ளுதல்

அண்மைக்காலமாக இது பற்றிய பிரக்ஞை கீழைத்தேய மற்றும் கிழக்காசிய நாடுகளில் உருவாகத் தொடங்கியுள்ளமை வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். கீழைத்தேய ஆய்வுலகின் தேவைகளுக்கு நன்கு பொருத்தமானதும், அதன் எதிர்பார்ப்புகளோடு மிகவும் ஒத்துப்போகத் தக்கதும், கீழைத்தேய நலன்களுக்கு முதன்மை கொடுப்பதுமான ஒப்பியலாய்வுகள் மற்றும் கோட்பாடுகளின் வளர்ச்சி பல நிலையான முன்னேற்றங்களுக்கு வித்திடும் எனக் கருதப்படுகின்றது. இதற்கெனக் கீழைத்தேய ஆய்வாளர்கள் ஒன்றுபட்டு உழைக்க வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகியிருக்கின்றனர். தனித்தனித் தீவுகளாக உள்ள கீழைத்தேய அறிஞர்களது ஆளுமைகள் ஒருமையப் புள்ளியில் இணைகின்ற போதுதான் இதனைச் சாத்தியப்படுத்திக் கொள்ள முடியும். ஆனால் துரதிஸ்ட வசமாக இதுவரை கீழைத்தேய சிந்தனா சக்திகளை இணைக்கின்ற அல்லது இணைய வைக்கின்ற முயற்சிகள் போதியளவு முன்னெடுக்கப்படவில்லை என்பது விசனத்துக்குரியதொன்றாகும்.

தேசியப் பண்புகளைக் கருத்தில் கொள்ளல்

ஒப்பியலாய்வுகளில் தேசியப் பண்புகளைக் கருத்தில் கொள்வதும் மிக முக்கியமானதொரு விடயமாகும். கீழைத்தேய மொழிகளுள் பல, பழமையும் நீண்ட வரலாறும் உறுதியான பண்பாட்டுப் பகைப்புலமுங் கொண்டவை. எனவே அம்மொழி இலக்கியங்கள் குறித்த ஒப்பியலாய்வுகள் அவற்றின் தனித்துவத் தினைச் சிதைக்காத வகையில் அமைதல் வேண்டும். இலக்கியங்களிடையேயான ஒற்றுமைகளையும் விஞ்சி அவற்றில் காணப்படும் தனித்துவங்கள் குறிப்பிட்ட இலக்கியத்துக்கு மதிப்பினையும் பெருமையினையும் தனித்த அடையாளத்தையும் பெற்றுத் தருகின்றன. இத் தனித்துவங்களை அடையாளப்படுத்துவனவாகவும் அவற்றினூடாக அவ்விலக்கியம் தோன்றிய பண்பாட்டினைப் பற்றிக் கருத்துரைப் பதாகவும் ஒப்பியலாய்வுகள் அமையவேண்டும் என எதிர்பார்க்கப்படுகின்றது. அதாவது இலக்கியப் பிரதிகளைப் பண்பாட்டின் உற்பத்திகளாகக் காண வேண்டியதன் அவசியம் இங்கு வலியுறுத்தப்படுகின்றது (Susan Bassnett, *1998:47*). இதனால்தான் ஒப்பியலாய்வுகள் இன்று பண்பாட்டாய்வுகளாகவும் பரிணாமம்

பெற்றுள்ளன. ஒப்பிலக்கிய ஆய்வில் தேசியப் பண்புகள் முக்கியப்படுத்தப் படுவதால் நிலையான நன்மைகள் பல ஏற்படும் என நம்பப்படுகின்றது.

i. கீழைத்தேய மொழிகளின் தனித்துவமும் பெருமையும் கட்டிக்காக்கப் படுகின்றன
ii. மொழிகளிடையே பரஸ்பர மதிப்புணர்வு வளருகின்றது
iii. மொழிகளிடையேயான கொள்ளல் கொடுத்தல் அதாவது பரஸ்பர பரிமாற்றங்கள் அதிகரிக்கின்றன
iv. மொழிகளிடையேயான உறவுகள் மேலும் இறுக்கமடைகின்றன
v. மொழிகளிடையேயான ஆய்வுகள் மேலும் கூர்மையும் விரிவும் அடைகின்றன

என்பவற்றைப் பிரதானமான நன்மைகளாக இங்குச் சுட்டிக்காட்ட முடியும்.

புதிய கோட்பாடுகளினடியான ஆய்வுகள்

கீழைத்தேயத்தில் நிகழ்ந்த ஒப்பியலாய்வுகள் பெரும்பாலும் இணைநிலைக் கோட்பாட்டின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட்டுள்ளன என முன்னர்க் கூறப்பட்டது. ஒப்பிலக்கிய ஆய்வில் பயன்படுத்தத்தக்க பிற கோட்பாடுகளான அடிக்கருத்துக் கோட்பாடு, தாக்கக் கோட்பாடு, கூர்தலறக் கோட்பாடு என்பன மிக அருந்தலாகவே கீழைத்தேய ஆய்வாளர்களால் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. ஆனால் இக் கோட்பாடுகள் கனதியான ஒப்பிலக்கியப் பார்வையினை முன்னிறுத்தவல்லன. குறிப்பாகக் கீழைத்தேய மொழிகளை மையப்படுத்திய ஒப்பிலக்கிய ஆய்வுகளில் அடிக்கருத்து மற்றும் தாக்கக் கோட்பாடுகள் சிறந்த பலன்களைப் பெற்றுத் தரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரெஞ்சுக் கோட்பாட்டாளர்கள் நெருங்கிய உறவுடைய மொழி களிடையே நிகழ்த்தப்படும் ஆய்வுகளுக்கு இவ்வாறான கோட்பாடுகளையே அதிகம் பயன்படுத்தினர். கீழைத்தேய மொழிகள் தமக்குள் மிக நெருங்கிய உறவினைக் கொண்டிருத்தலால் இக் கோட்பாடுகள் அம்மொழி இலக்கியங்கள் குறித்ததான ஆய்வில் சாதகமான பலன்களைப் பெற்றுத் தரவல்லன. மேலோட்டமாக இலக்கியங்களிடையே புலப்பட்டு நிற்கும் ஒற்றுமைகளையும் தாண்டி அவ்வொற்றுமைகள் ஏற்படுவதற்கான காரணங்கள், பின்னணிகள், வாய்ப்புக்கள் என்பன குறித்த ஆழமான ஆய்வுப்பார்வையை வளர்க்க இக் கோட்பாடுகள் பயன்படுகின்றன. அடிக்கருத்தும் குறிப்புப் பொருளும் இலக்கியங்களிடையே பரவி நின்று வளர்ச்சியும் சுழற்சியும் பெறும் வகைகுறித்து மிக நுணுக்கமாக அடிக்கருத்துக் கோட்பாடு ஆராய்ந்து செல்கின்றது. குறிப்பிட்ட இலக்கியத் தாக்கம் எவ்வாறு பிற இலக்கியங்களில் காணப்படுகிறது என்பது பற்றியும் அத்தாக்கம் எந்தளவு தூரம் பரவியிருக்கிறது என்பது குறித்தும் தாக்கக் கோட்பாடு ஆழமாக ஆராய்கின்றது. தாக்கத்தின் தன்மை, அதன் வகை என்பன குறித்த ஆழமான பார்வைகள் தாக்கக் கோட்பாட்டில் முன்வைக்கப்படுகின்றன. இவ்வாறான கோட்பாடுகளினூடான ஒப்பிலக்கிய ஆய்வுகள் கீழைத்தேய மொழி

இலக்கியங்கள் குறித்த கனதியான தகவல்களை நிச்சயம் வெளிக்கொணரும் எனலாம்.

கீழைத்தேய மொழிகளிடையேயான ஒப்பிலக்கிய ஆய்வுகளும் மொழிபெயர்ப்பும்

கீழைத்தேய மொழிகளிடையேயான ஒப்பிலக்கிய ஆய்வுகளும் மொழிபெயர்ப்பும் மிக மந்தமான நிலையிலேயே நிகழ்ந்து வந்துள்ளன. பல ஆண்டுகளாக ஒப்பிலக்கிய ஆய்வுகளில் ஈடுபட்டோரும், மொழிபெயர்ப்புக்களில் ஆர்வங்காட்டியோரும் பெரிதும் மேலைத்தேய இலக்கியங்களையே தம் கவனப்பரப்புக்குள் கொணர்ந்தனர். மேலைத்தேய இலக்கியங்களை ஒப்பியலாய்வு செய்வதிலும் மொழிபெயர்ப்பதிலும் அவர்கள் காட்டிவந்த அக்கறையை கீழைத்தேய மொழி இலக்கியங்களை நோக்கித் திருப்பவில்லை. குறிப்பிட்ட மேலைத்தேய இலக்கியங்கள் கீழைத்தேய மொழிகளில் பல மொழிபெயர்ப்புக்களைப் பெற்றுள்ளன. உதாரணமாகத் தமிழில் மில்டனின் சுவர்க்க நீக்கம் (Paradise Lost), சேக்ஷ்பியரின் (Shakespeare) நாடகங்கள், தோமஸ் கிரேயின் (Thomas Gray) இரங்கற் பா (Elegy Written in the Country Churchyard)முதலானவை ஒன்றுக்கு மேற்பட்ட மொழிபெயர்ப்புக்களைப் பெற்றுள்ளன. ஆனால் கீழைத்தேயத்தில் ஒரு மொழியில் எழுந்த இலக்கியத்தை மற்றொரு கீழைத்தேய மொழிபேசும் மக்கட் கூட்டத்தினர் அறியாமலேயே போய்விடுகின்ற அபத்தநிலையே பெரிதும் நிலவி வருகின்றது. இதற்குப் புறநடைகள் உள்ளன என்பதையும் ஒப்புக்கொண்டேயாதல் வேண்டும். எனினும் பெரும்பாலான ஒப்பியலாய்வு முயற்சிகளும் மொழிபெயர்ப்புச் செயற்பாடுகளும் கீழைத்தேய மொழி இலக்கியங்களைப் பாராமுகப்படுத்திவிட்டதை மறுக்க முடியாது. ஆனால் தற்போது இந்நிலையில் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கியுள்ளன. பின்நவீனத்துவச் சிந்தனைகளும், பின்காலனித்துவக் கொள்கைகளும், ஆபிரிக்கப் படைப்பாளர்களின் கருத்துநிலைகளும் கீழைத்தேய அறிஞர்களைச் சிந்திக்க வைத்துள்ளன (ஆனந்தக்குமார், ப., 2003:28-29). இதனால் கீழைத்தேய மொழிகளுக்கிடையிலான மொழிபெயர்ப்புக்களும் ஒப்பிலக்கிய ஆய்வு முயற்சிகளும் இன்று ஓரளவு ஆரம்பித்துள்ளன. கீழைத்தேய இலக்கியங்களைக் கிழக்காசிய இலக்கியங்களுடன் ஒப்பிடும் முயற்சிகளும், மொழிபெயர்க்கும் முயற்சிகளும் ஆரம்பித்துள்ளன. இவ்வகையான முயற்சிகள் மேலும் துரிதமடைகின்றபோதே கீழைத்தேய இலக்கியங்களுக்கும் படைப்பாளர்களுக்கும் உலக அரங்கில் உரிய இடம் கிடைக்கும் எனலாம்.

முடிவுரை

கீழைத்தேய மொழிகளை மையப்படுத்திய ஒப்பியலாய்வுகள் முனைப் படைய வேண்டியதன் தேவை பற்றியும் அதனால் கிடைக்கக் கூடிய பலாபலன்கள் குறித்தும் இதுவரை நோக்கப்பட்டது. பல ஆண்டுகாலமாக எவ்வித மாற்றமோ அல்லது முன்னேற்றமோ இன்றி ஒரே கட்டமைப்பிலும் மரபு ரீதியான முறையியலைப் பின்பற்றியும் செய்யப்பட்டு வந்த ஆய்வுகள் உலக அரங்கில்

கீழைத்தேய இலக்கியங்களின் இடத்தினை நிச்சயிக்கத் தவறிவிட்டன. இதனால் கீழைத்தேய இலக்கியங்களின் சிறப்பும், பெருமையும், தனித்துவமும் இலைமறைகாயாகவே இருக்க வேண்டிய நிலை ஏற்பட்டு விட்டது. ஆனால் இன்று பிரபலம் பெற்றுவரும் பின்நவீனத்துவ மற்றும் பின்காலனித்துவக் கருத்துநிலைகள் மரபுரீதியான பார்வைகளை, காலனிய மனோபாவங்களை, ஐரோப்பிய மையக் கருத்துநிலைகளைச் சிதைப்பனவாக உள்ளன. இதனால் கீழைத்தேய ஒப்பிலக்கிய ஆய்வுகளில் புதிய அலை தோன்றியுள்ளது. கீழைத்தேய மொழிகளை மையப்படுத்திய ஆய்வின் தேவை, நோக்கம், பயன் என்பன குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டு வருவதோடு அவ்வாறான ஆய்வுகளைச் செய்வதிலும் அறிஞர்கள் ஈடுபாடுகாட்டி வருகின்றனர். இவ்வகையான ஆய்வுகள் முனைப்புப் பெறுகின்றபோதே கீழைத்தேய ஒப்பியல் ஆய்வுகள் மேலும் புத்தெழுச்சி பெறுவதோடு கீழைத்தேயம் தனக்கென ஒப்பிலக்கியக் கோட்பாடுகளை உருவாக்கிக் கொள்ள வாய்ப்புகளும் உருவாகும்.

துணை நூல்கள்

1. ஆனந்தக்குமார், ப., (2003), இந்திய ஒப்பிலக்கியம், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
2. திருமலை, ம., (2009), ஒப்பிலக்கியம் கொள்கைகளும் பயில்முறையும், மீனாட்சி புத்தக நிலையம், மதுரை.
3. பிச்சை, அ., (2003), ஒப்பியல் இந்திய இலக்கியம் ஓர் அறிமுகம், கபிலன் பதிப்பகம், திண்டுக்கல்.
4. Susan Bassnett, (1998), **Comparative Literature - A Critical Introduction**, Black Well, London.

மணிமேகலையில் பெயர்ச்சொற்கள்

முதுமுனைவர் பி. மஞ்சுளா
36/1, குட்டித் தெரு
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை

முன்னுரை

சிலம்பும் மணிமேகலையும் இரட்டைக்காப்பியங்கள் என்று போற்றப் படுகின்றன. மணிமேகலைக் காப்பியத்தினைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனார் இயற்றினார். மணிமேகலை காப்பியமானதுக் ஐம்பெரும் காப்பியங்களிலும் இரட்டைக்காப்பியங்களிலும் இரண்டாவது இடத்தினைப் பெற்றுள்ளது. இக்காப்பியத்திற்குப் பல சிறப்புகள் உள்ளன. அவை:

1. கணிகையர் குலத்து மாதவி மகளான மணிமேகலை இளமையிலேயே துறவு பூண்டதைக் கூறுவதால் மணிமேகலைத் துறவு என்றழைக்கப்படுகின்றது.
2. தமிழ்க் காப்பிய வகைமையில் முதன்முதலில் பௌத்த சமயக் கொள்கைகளை வலுவாக எடுத்துக் கூறி வலியுறுத்துவதால் முதல் சமயக் காப்பியமாகப் போற்றப்படுகின்றது.
3. எக்காலத்திற்கும் ஏற்ற அறங்களை எடுத்துக் கூறுவதால் அறக்காப்பியம் என்று சுட்டப்படுகின்றது.
4. பரத்தையர் ஒழிப்பு, மது ஒழிப்பு, சிறை ஒழிப்பு, சாதி ஒழிப்பு, பசி ஒழிப்பு, கொலை களவு ஒழிப்பு முதலான பல சமுதாயச் சீர்திருத்தங்களைப் பேசுவதால் சீர்திருத்தக் காப்பியம் என்று கூறப்படுகின்றது.
5. காலம், இடம், இனம் கடந்த சமுதாயக் குறிக்கோள்களை முன் எடுத்து வைப்பதால் குறிக்கோள் இலக்கியம் என்று போற்றப்படுகின்றது.
6. பரத்தையின் மகளை அறத்தின் நாயகியாகவும் பௌத்தத் துறவியாகவும் மாற்றிக் காட்டியுள்ளதால் புரட்சிக் காப்பியம் என்று புகழப்படுகின்றது.
7. பௌத்த சமயத்திற்கு உரிய வடமொழி, பாலிமொழிக் கலைச்சொற்களை இயன்றவரை தமிழாக்கம் செய்யும் பெருமுயற்சி காணப்படுவதால் சமய கலைச் சொல்லாக்கக் காப்பியம் என்று சுட்டப்படுகின்றது.
8. கிளைக்கதைகள் மிகுதியாகக் கூறுவதால் கதைக்களஞ்சியக் காப்பியம் என்று பேசப்படுகின்றது.
9. அமுதசுரபியினைக் கொண்டு அனைவரின் பசிப்பிணியையும் மணிமேகலை போக்கியதால் பசிப்பிணி மருத்துவக் காப்பியம் என்று கூறப்படுகின்றது.
10. பசுவின் பெருமைகளை ஆபுத்திரன்மூலம் எடுத்துக் காட்டுவதால் பசுபோற்றும் காப்பியம் என்று புகழப்படுகின்றது.

இவ்வாறு பலவிதங்களில் போற்றாப்படும் மணிமேகலைக் காப்பியத்தில் இடம்பெறுகின்ற 'பெயர்ச்செற்களை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெயர்ச்சொல்

"வாக்கியத்தில் எழுவாயாக வருவதும் வேற்றுமை உருபுகளை ஏற்பதுமான சொல் (வகை); ஹெரஸீ" என்று க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி *(ப. 1011)* கூறுகின்றது.

"இடுகுறியாகவும் காரணக்குறியா்கவும் வேற்றுமை உருபுகள் சார்ந்தற் கிடனாய் ஒன்றன் பெயரை விளக்கி நிற்கும் சொல்லினைப் பெயர்ச்சொல் என்று கௌரா தமிழ் அகராதி (ப. 525) எடுத்துரைக்கின்றது.

தொல்காப்பியர் சொற்களைப் பெயர், வினை, இடை, உரி என்று நான்காகக் கூறுகின்றார். அவற்றுள் பெயரும், வினையும் முதன்மைச் சொற்கள் என்கின்றார். இதனை,

சொல்எனப் படுவ பெயரே வினை என்று
ஆயிரண் டென்ப அறிந்திசி னோரே (தொல்.சொல்.பெயர்.158)

என்ற நூற்பாவில் விளக்கியுள்ளார். மேலும் அவர், பெயர், வினைச் சொற்களிலிருந்துதான் இடை, உரிச் சொற்கள் தோன்றுகின்றன என்பதனை,

இடைச்சொற் கிளவியும் உரிச்சொற் கிளவியும்
அவற்றுவழி மருங்கில் தோன்றும் என்ப (தொல்.சொல்.பெயர்.159)

நூற்பாவில் விளக்கியுள்ளார். பெயர்ச் சொல்லானது உயர் திணையாகவும் அஃறிணையாகவும் விரவுப்பெயராகவும் மூன்று வகைகளில் வரும் என்கிறார் தொல்காப்பியர். இதனை,

அவற்றுள்
பெயரெனப் படுபவை தெரியுங் காலை
உயர்திணைக்கு உரிமையும் அஃறிணைக்கு உரிமையும்
ஆயிரு திணைக்கும் ஓரன்ன உரிமையும்
அம்மூ வுருபின் தோன்ற லாறே (தொல்.சொல்.பெயர்.160)

என்பதன் மூலம் அறியலாம். மேலும், உயர்திணைப் பெயர்களானது,

1. நிலப்பெயர்
2. குடிப்பெயர்
3. குழுவின்பெயர்
4. வினைப்பெயர்
5. உடைப்பெயர்
6. பண்புகொள் பெயர்
7. பல்லோர் குறித்த முறைநிலைப் பெயர்
8. பல்லோர் குறித்த திணைநிலைப் பெயர்
9. ஆடியற் பெயர்
10. எண்ணியற் பெயர்

என்ற பிரிவுகளில் வரும் என்று வகைப்படுத்தியுள்ளார். அதேபோல் விரவுப் பெயரானது,

1. இயற்பெயர்
2. சினைப்பெயர்
3. சினைமுதற் பெயர்
4. முறைப்பெயர்

என்ற பிரிவுகளில் வகைப்படுத்திக் கூறியுள்ளார். ஆனால் நன்னூலாரோ பெயர்ச்சொல்லானது கீழ்க்கண்டவாறு வரும் என்று பெயர்ச்சொற்கள் வருகின்ற இடத்தினைத் தொகுத்துக் கூறியுள்ளார். அவை:

1. பெயர்ச்சொல்லானது இடுகுறியாகவும் காரணத்துடனும் வரும்.
2. புதிதாக உண்டாக்கப்படும் ஆக்கச் சொல்லாகவும் வரும்.
3. திணை, பால், எண் ஆகியவற்றைக் காட்டும்.
4. வேற்றுமை உருபினை ஏற்று வரும்.
5. காலம் காட்டாது வரும்.
6. வினையால் அணையும் பெயர் மட்டும் காலம் காட்டும்.

என்பவைகளாகும். இதனை,

இடுகுறி காரண மரபோடு ஆக்கம்
தொடர்ந்து தொழில்அல காலம் தோற்றா
வேற்றுமைக்கு இடனாய்த் திணைபால் இடத்து ஒன்று
ஏற்பவும் பொதுவும் ஆவன பெயரே (நன்னூல் - 275)

என்ற நூற்பா எடுத்துரைக்கின்றன.

மணிமேகலையில் பெயர்ச்சொற்கள்

தொல்காப்பியர் கூற்றுப்படி பெயர்ச்சொற்கள் உயர்திணைப் பெயர்ச் சொற்கள், அஃறிணைப் பெயர்ச்சொற்கள், விரவுப் பெயச்சொற்கள் ஆகிய மூன்றினை இங்குக் காணலாம்.

1. மணிமேகலையில் உயர்திணைப் பெயர்ச்சொற்கள்

திணை என்பது ஒழுக்கம். உலகிலுள்ள உயிர்களின் ஒழுக்கம் பற்றி உயர்திணை, அஃறிணை என இருபிரிவுகளாகப் பிரித்துள்ளனர்.

யார், யாவர், யாவன், யாவள் ஆகிய வினாவிற்கு விடையாக வருகின்ற பெயர்கள் அனைத்தும் உயர்திணைப் பெயர்களாகும். மக்கள், தேவர், நரகர் ஆகியோர் உயர்த்திணையினுள் அடங்குவர் என்பதனை நன்னூலார் பின்வருமாறு கூறியுள்ளார்.

மக்கள் தேவர் நரகர் உயர்திணை (நன்னூல் - 261)

ஆனால் தொல்காப்பியர்,

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே (தொல்.சொல்.கிளவி. 1:1)

என்று மக்களை மட்டும் உயர்திணையாகக் கூறியுள்ளார். இனி மணிமேகலையில் காணப்படும் உயர்திணைப் பெயர்களினைக் காணலாம்.

1. மணிமேகலை
2. மாதவி
3. சித்திராபதி
4. வயந்தமாலை
5. காயசண்டிகை
6. இந்திரன்
7. ஆபுத்திரன்
8. கோவலன்
9. விஞ்சையன்
10. அகத்தியன்

2. மணிமேகலையில் அஃறிணை பெயர்ச்சொற்கள்

உயிர், உயிரல்லாத பொருளகளெல்லாம் அஃறிணை எனப்படும். என்ன, எவை, எது, யாது, யாவை ஆகிய வினாவிற்கு விடையாக வரும் பெயர்ச்சொற்கள் அனைத்தும் அஃறிணைப் பெயர்ச்சொற்களாகும். இதனை நன்னூலார் பின்வருமாறு கூறியுள்ளார்.

மற்றுஉயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை (நன்னூல் - 261)

ஆனால் தொல்காப்பியர்,

அஃறிணை என்மனார் அவரல பிறவே (தொல்.சொல்.கிளவி. 1:2)

மக்கள் அல்லாத அனைத்தும் அஃறிணை என்று கூறியுள்ளார். இனி மணிமேகலையில் காணப்படும் அஃறிணைப் பெயர்களைக் காணலாம்.

1. காவிரி
2. கங்கை
3. செங்கதிர்
4. பூம்பொழில்
5. யானை
6. வாள்
7. சிறை
8. யாழ்
9. கரும்பு
10. முரசு

3. மணிமேகலையில் விரவுப் பெயர்ச்சொற்கள்

உயர்திணையும் அல்லாமல் அஃறிணையும் அல்லாமல் இரண்டினையும் குறிப்பது விரவுப் பெயர்ச்சொற்கள் எனப்படும்

1. மணிமேகலை வந்தாள் (பெண்ணைக்குறிக்கும்)
   மணிமேகலை வந்தது (தெய்வத்தினைக் குறிக்கும்)
2. ஆபுத்திரன் வந்தான் (ஆணைக் குறிக்கும்)
   ஆபுத்திரன் வந்தது (நாட்டினைக் குறிக்கும்)

4. சினைப் பெயர்ச்சொற்கள்

மனிதனது உறுப்புகள்இ மரத்தினது உறுப்புகள் ஆகியவற்றைக் கொண்டு வருவது சினைப் பெயர்ச்சொற்களாகும். மணிமேகலையில் காணப்படும் சினைப்பெயர்ச் சொற்கள்

1. நுதல்விழி
2. உண்கண்

5. முறைப்பெயர்ச் செற்கள்

மனிதனது உறவுமுறைச் சொற்களினை முறைப்பெயர்ச் சொற்கள் என்பர். மணிமேகலையில் காணப்படும் முறைப்பெயர்ச் சொற்கள்

1. தாய், தந்தை
2. அக்கா, தங்கை
3. கணவன், மனைவி
4. அண்ணன், தங்கை

1.இடுகுறிப் பெயர்ச் சொற்கள் (Arbitrary Noun)

எவ்விதக் காரணமும் இல்லாமல் முன்னோர்கள் இட்டு வழங்கி வருகின்ற பெயர் இடுகுறிப் பெயர் என்பர். இதனை இயற்பெயர் என்றும் கூறுவர். மணிமேகலையில் இப்பெயர்கள் அதிகம் காணப்படுகின்றது. அவற்றில் சிலவற்றை இங்கே காணாலாம்.

1. நிலம் 2. கடல்
3. நீர் 4. ஆகாயம்
5. உலகம் 6. மலர்
7. சூரியன் 8. மழை

2. காரணப்பெயர் (Derivative Noun)

ஏதேனும் ஒருகாரணம் கருதி வழங்கி வருகின்ற பெயர் காரணப்பெயர் எனப்படும். மணிமேகலையில் இத்தகைய காரணப்பெயர்கள் அதிகம் காணப்பட்டாலும் சிலவற்றை மட்டும் இங்கே காணலாம்.

1.	மணிமேகலை	-	மணிமேகலா தெய்வத்தின் நினைவாக வைக்கப் பட்ட பெயர்.
2.	ஆபுத்திரன்	-	பசுவினிடத்தில் பாலை உணவாக உண்டதால் ஏற்பட்டபெயர். பசுவிற்குத் தமிழில் 'ஆ' என்ற பெயருண்டு. ஆகவே ஆபூத்திரன் =ஆபுத்திரன் என்று அழைக்கப்பட்டான்.
3.	சம்பாபதி	-	சம்பு என்னும் தெய்வம் இருந்ததால் அவ்விடத் திற்குச் சம்பாபதி என்றழைக்கப்பட்டது.
4.	இந்திரவிழா	-	காவிரிப்பூம்பட்டினத்தில் ஒவ்வோர் ஆண்டும் இந்திரனை நினைத்து இருபத்தெட்டு நாட்கள் விழா நடைபெறுவதால் இப்பெயர் வழங்கப்பட்டது.
5.	அமுதசுரபி	-	அமுதம் (உணவு) சுரந்துக்கொண்டே வருவதால் இப்பெயர் பெற்றது.
6.	மன்னன்	-	நாட்டிலுள்ள மக்களை ஆள்வதால் இப்பெயர் பெற்றான்.

3. புதிதாக ஆக்கப்படும் ஆக்கச்சொல்

காலச் சூழழுக்கு ஏற்பச் சிலசொற்கள் புதிதாக உண்டாக்கப் படுவதுமுண்டு. அப்படி உண்டாக்கப்படும் சொற்கள் மணிமேகலையிலும் காணப்படுகின்றது.

1. சம்பாபதி - காவிரிப்பூம்பட்டினத்தின் மற்றொருபெயர். சம்பு என்ற தெய்வம் வாழ்ந்ததால் இப்பெயர் பெற்றது.
2. செங்கதிர் - கதிரவனிலிருந்துத் தோன்றக்கூடிய சிவப்பான கதிரினைச் செங்கதிர் என்றழைப்பர்.

4. பால் உணர்த்தும் பெயர்ச்சொற்கள்

பால் என்பது ஐந்து வகைப்படும். அவை,

1. ஆண்பால்
2. பெண்பால்
3. பலர்பால்
4. ஒன்றன்பால்
5. பலவின்பால்

மணிமேகலையில் இடம்பெற்றுள்ள பால் தொடர்பான பெயர்ச் சொற்களை இனி காணலாம்.

➢ ஆண்பால் பெயர்ச்சொற்கள்

ஆணை மட்டும் குறிக்கும் பெயர்ச்சொற்களை ஆண்பாற் பெயர்ச்சொற்கள் என்பர். மணிமேகலையில் இடம்பெறும் ஆண்பால் பெயர்ச்சொற்களைக் காணலாம்.

1. கோவலன்
2. விஞ்சையன்
3. காஞ்சனன்
4. உதயகுமாரன்
5. ஆபுத்திரன்
6. இராகுலன்

➢ பெண்பால் பெயர்ச்சொற்கள்

பெண்ணை மட்டும் குறிக்கும் பெயர்ச்சொற்களைப் பெண்பாற் பெயர்ச்சொற்கள் என்பர். மணிமேகலையில் இடம்பெறும் பெண்பால் பெயர்ச்சொற்களைக் காணலாம்.

1. மணிமேகலை
2. மாதவி
3. சுதமதி
4. வயந்தமாலை
5. இலக்குமி
6. காயசண்டிகை

➢ பலர்பால் பெயர்ச்சொற்கள்

ஆணையும் பெண்ணையும் பொதுவாகக் குறிக்கும் சொற்களைப் பலர்பால் பெயர்ச்சொற்கள் என்பர். மணிமேகலையில் இடம்பெறும் பலர்பால் பெயர்ச்சொற்களைக் காணலாம்.

1. புத்தத்துறவியர்
2. பாவையர்
3. அரசர்

➢ ஒன்றன்பால் பெயர்ச்சொற்கள்

அஃறிணையில் ஒன்றினைக் குறிப்பது ஒன்றன்பால் பெயர்ச்சொற்கள் என்பர். மணிமேகலையில் இடம்பெறும் ஒன்றன்பால் பெயர்ச்சொற்களைக் காணலாம்.

1. யானை 2. பசு
3. மலர் 4. முரசு

➢ பலவின்பால் பெயர்ச்சொற்கள்

அஃறிணையில் பலவற்றைக் குறிக்கும் பெயர்ச்சொற்களை பலவின்பால் பெயர்ச்சொற்கள் என்பர். மணிமேகலையில் இடம்பெறும் பலவின்பால் பெயர்ச்சொற்களைக் காணலாம்.

1. யானைகள் 2. பசுக்கள்
3. மலர்கள் 4. முரசுகள்

5. எண்ணுப் பெயர்ச்சொற்கள்

ஒருமை, பன்மை பெயர்களைக் குறிப்பது எண்ணுப்பெயர். மணிமேகலையில் காணப்படும் எண்ணுப்பெயர்ச்சொற்களைக் காணலாம்.

• ஒருமைப் பெயர்ச்சொற்கள்

ஒரு பொருளைக் குறிக்கும் பெயர்கள் ஒருமைப் பெயர்களாகும். மணிமேகலையில் காணப்படும் ஒருமைப் பெயர்ச்சொற்கள்

1. நான் 2. நீ
3. யானை 4. பசு

• பன்மைப் பெயர்ச்சொற்கள்

ஒன்றுக்கும் மேற்பட்ட பல பொருள்களைக் குறிப்பன பன்மைப் பெயர்களாகும். மணிமேகலையில் காணப்படும் பன்மைப் பெயர்ச்சொற்கள்

1. நாலேழ் 2. ஆறேழ்
3. ஈரைம்பது 4. ஐம்பேராயம்
5. எண்பேராயம் 6. ஆயிரங்கண்ணோன்

6. வேற்றுமைப் பெயர்ச்சொற்கள்

பெயர்ச்சொல்லானது வேற்றுமை உருபினை ஏற்றுவரும். மணிமேகலையில் இடம்பெறும் வேற்றுமைப் பெயர்ச்சொற்கள்

1. கோவலன் (எழுவாய் வேற்றுமை)
2. மணிமேகலயை (இரண்டாம் வேற்றுமை)

3. மாதவியால் (மூன்றாம் வேற்றுமை)
4. வயந்தமாலைக்கு (நான்காம் வேற்றுமை)
5. கண்ணகியின் (ஐந்தாம் வேற்றுமை)
6. வித்தியாதரனது (ஆறாம் வேற்றுமை)
7. சிந்தாதேவிகண் (ஏழாம் வேற்றுமை)

முடிவுரை

ஒருமொழியின் கூறுகளில் எளிதில் எடுத்தாளக் கூடியதும் மாற்றத்திற்கு உள்ளாகக்கூடியதும் சொல்லேயாகும். மொழியின் எளிமைக்கும் விளக்கத்திற்கும் சொல்லானது சிறந்தமுறையில் பயன்படுகின்றது. அதனால்தான் சொல்லாட்சி என்பது நடையமைப்பின் ஒரு பகுதியாகக் கருதப்படுகின்றது. இத்தகைய சொற்பயன்பாட்டில் முதன்மையிடம் பெறுவது பெயர்ச் சொல்லேயாகும். அப்படிப்பட்ட பெயர்ச்சொற்கள் மணிமேகலையில் சிறப்புற்றுக் காணப் படுவதனை இக்கட்டுரை நமக்கு எடுத்துரைக்கின்றது.

மிகெய்ல்பக்தின் நோக்கில் தொல்காப்பியமொழியியல்

முனைவர் கே.பழனிவேலு
தமிழ்இணைப்பேராசிரியர்
பெரியார்கலைக்கல்லூரி, கடலூர்.
தமிழ்நாடு, இந்தியா

தொல்காப்பியம் மொழியின் அமைப்பை விளக்குகின்ற இலக்கண நூலாகமட்டுமின்றி இலக்கியத்தின் அமைப்பை விளக்குகின்ற நூலாகவும் இருக்கின்றது. மேலும் தொல்காப்பியம் விதிமு றை இலக்கணநூலாக இல்லாமல் விளக்கமுறை இலக்கணநூலாக இருப்பதனால் தமிழ்மொழி தமிழ் இலக்கியங்கள் பற்றிய முந்தைய கருத்துகள் பலவற்றையும் தொகுத்துச் சொல்கின்றது. தொல்காப்பியத்தின் இத்தொகுத்துச் சொல்கின்ற முறையில் தொடர்ச்சியின்மையையும் ஏராளமான இடைவெளிகள் இருப்பதையும் எளிதில் காணலாம். குறிப்பாக மொழிபற்றிய கருத்துகளைவிட இலக்கியம் பற்றிய பகுதிகளில் இந்த இடைவெளிகள் மிகுதியாக இருப்பதைக் கவனிக்கலாம். தொல்காப்பியத்தில் காணப்படும் தமிழின் மொழியியல் கவிதையியல் நோக்குகளில் அன்று இந்திய அளவில் காணப்பட்ட பல பயில்துறைகளின் தாக்கங்கள் இருந்தாலும் அவற்றைத் தூய தமிழ்மரபில் உருவானவையாகவே கருதவேண்டியுள்ளது. அதேநேரத்தில் தொல்காப்பியத்தின் கவிதையியல் மொழியியல் கருத்துகள் இன்று உலக அளவில் உருவாகியுள்ள மொழி இலக்கியம் பற்றிய கருத்துகளுடன் எந்த அளவிற்குப் பொருந்திப் போகின்றன எனக்காண்பது செவ்வியல் பற்றிய ஆய்வுகள் மேலோங்கியுள்ள இன்றைய தமிழ்ச்சூழலில் முக்கியமானதாகும்.

தொல்காப்பியத்தின் மொழி பற்றிய கருத்துகளை மொழியியல் என்ற அறிவுப் புலத்தின் நோக்குடனும் பொருளதிகாரத்தின் இலக்கியம் பற்றிய நோக்குகளை இலக்கியவியல் அல்லது கவிதையியல் நோக்குடனும் பார்க்கின்ற பார்வைகள் இன்று உருவாகியுள்ளன. இந்தச்சூழலில் தொல்காப்பியம் சுட்டும் கருத்துகளைத் தொல்கா ப்பியர் என்ற ஒருவரின் கருத்தாகப்பார்க்காமல் பண்டைய தமிழகத்தில் மொழி இலக்கியப் புலம் சார்ந்து உருவாகியிருந்த ஒரு சிந்தனைப் பள்ளியின் கருத்துகளாகப் பார்க்க வேண்டியுள்ளது.இப்படி தொல்காப்பியத்தின் கருத்துகளை ஒருசிந்தனைப் பள்ளியின் கருத்துகளாகப் பார்க்கின்ற போதுதான் முந்தைய கருத்துகளின் தொடர்ச்சிகளைத் தமிழ் அறிவுப்புலத்தில் தேடவும் அக்கருத்துகள் தொடர்ந்துவராமல் மறைந்து போனதற்கான காரணங்களைத் தேடிக்கண்டடையவும் அவை பெற்றுள்ள மாற்றங்களை அடையாளங்காணவும் முடியும். தொல்காப்பியம் முன்வைத்த கருத்துகளின் தொடர்ச்சிகளைத் தமிழ் அறிவுப்புலத்தில் தேடுவதுடன் உலகளவிலான இலக்கிய ஆய்வில் செல்வாக்குச் செலுத்திவரும் மொழி இலக்கியம் சார்ந்த கருத்துகளைத் தொல்காப்பியத்துடன் இணைத்துக் காண்பதும் தேவையாக உள்ளது.

மேலை மொழி இலக்கியப் புலம் தந்த அறிவுப்பின்னணியில் தொல்காப்பியருடைய மொழியியல் கோட்பாடுகளை உருவாக்கவும் அவற்றை உலகளவில் முன்னிறுத்தவும் பல்வேறு அறிஞர்கள் உருவாக்கியுள்ள மொழி, கவிதையியல் சார்ந்த கருத்துகளுடன் ஒப்பிட்டு நோக்க வேண்டியது இன்றியமையாததாகும். மொழியியல்துறை சார்ந்து இப்பணிகள் தொடர்ந்து நிகழ்ந்து வருகின்றன. தொல்காப்பியம் முன்வைக்கும் கவிதையியல் சார்ந்த கருத்துகளை மேலை இலக்கியக் கல்விப்புலத்தின் கருத்துகளுடன் இணைத்துப் பார்க்கின்ற பார்வைகளும் தற்காலத்தில் உருவாகியுள்ளன. மொழியின் இயக்கம் பற்றிய கருத்துகளின் பின்னணியிலேயே அமைப்பியல்பின் அமைப்பியல் சார்ந்த கருத்துகள் உருவாக்கப்பட்டுள்ளன. இலக்கியவியலுடன் இணைந்து பல்வேறு புரிதல்களை வழங்கிக் கொண்டிருக்கின்ற மொழியியல் சார்ந்த கருத்துகளான அமைப்பியல் பின் அமைப்பியல் சிந்தனைகளைத் தமிழ்மொழியின் இயக்கம் பற்றிய கருத்துகளை வழங்கும் தொல்காப்பியத்துடன் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியுள்ளது. தொல்காப்பியம் அடிப்படையில் மொழியின், இலக்கியத்தின் அமைப்பைப் பற்றிப் பேசுவதனால் மேலைநாடுகளில் உருவாகியுள்ள சிந்தனைகளின் சில புள்ளிகளைக் கொண்டு திகழ்வதைக் காணமுடிகின்றது. அவற்றை இனங்காண்பதன் மூலம் தொல்காப்பியத்தையும் தொல்காப்பிய மரபைப்பின்பற்றிய தமிழிலக்கியங்களையும் புதியபார்வைகளுடன் வாசிக்க இயலும். தொல்காப்பியத்தின் கருத்துகளை இலக்கியவியல் சார்ந்த மொழியியல் கருத்துகளுடன் ஒப்பிட்டு நோக்குவதன் மூலம் இன்றைய மேலை இலக்கியத் திறனாய்வுச் சிந்தனைக்கான அடிப்படைகள் தொல்காப்பியத்திலேயே இருப்பதைக் காணமுடியும். இப்பின்னணியில் ரசியமொழியியல் அறிஞர் மிகெய்ல்பக்தின் வரலாற்று மொழியியல் சார்ந்து முன்வைத்த கூற்று பற்றிய கருத்துகளைத் தொல்காப்பியத்தின் கருத்துகளுடன் ஒப்பிட்டுப்பார்க்க இக்கட்டுரை முயல்கின்றது.

மொழியின் அமைப்புப் பற்றிய ஆய்வுக்கு மிகுந்த பங்களிப்பினைச் செய்த சுவிஸ்நாட்டு மொழியியல் அறிஞர் பெர்டினான்ட் டி சசூர் மொழிகளைக் குறிகளாகப் பார்த்தார். மொழி பல அலகுகளால் ஆனது; ஒவ்வோர் அலகும் ஒவ்வொரு விதத்தில் இன்னொன்றுடன் உறவு அல்லது தொடர்பு கொண்டுள்ளது. அவ் உறவுகள் மொத்த அமைப்பை உருவாக்குகின்றன எனச் சசூர் கூறினார். அவர் ஒருமொழியானது மொழி (Langue), பேச்சு (Parole) என அமைந்திருப்பதாகவும் இவை இரண்டும் எதிரெதிராக அமைந்திருப்பதாகவும் சுட்டினார். மொழி தன்னளவில் ஓர் ஒழுங்கமைப்புடன் திகழ்ந்து ஒவ்வொருவருக்குள்ளும் வெளிப்படாமல் மறைந்திருக்கின்றது. இந்த வெளிப்படாத மொழியிலிருந்து ஒரு தனிமனிதன் தனது விருப்பத்திற்கேற்பப் பேச்சினை உருவாக்கிக் கொள்கின்றான் என்றார் (2008:24-33). சசூருடைய கருத்துப்படி மொழி (Langue) சமூகம்சார்ந்த ஒன்றாக இருந்தாலும் தனிப்பட்ட ஒருவரின் பேச்சே (Parole) வெளிப்படுவதாக இருக்கின்றது. வெளிப்படுத்தப்படுவதே உண்மையான மொழி என்பதால் மொழிச்செயல்பாடு என்பதே உளவியல் நிகழ்வாகச் சசூரால் காட்டப்பட்டது என்பர். மொழிச் செயல்பாடு உளவியல் சார்ந்தது என்பதிலிருந்து மாறுபட்டவர்களாக உருஷ்யமொழியியல் அறிஞர்கள் இருந்தனர்.

அவர்களுடைய மார்க்சியப் பின்னணி மொழிச் செயல்பாட்டைச் சமூகம் சார்ந்ததாகப் பார்க்கச் செய்தது.

சசூருடைய மொழியின் அமைப்பு பற்றிய க ருத்துகளை மார்க் சியம் சார்ந்த உருஷ்யமொழியியல் அறிஞர்கள் மிகுந்த கேள்விக்கு உட்படுத்தியதுடன் மொழியை வரலாற்று அடிப்படையில்தான் பார்க்கவேண்டும் என வலியுறுத்தினர். இவர்களில் முக்கியமானவராக உருஷ்ய அறிஞர் வேலண்டின் ஒலொ'ஜீனோவ் (Valentin Voloshinov) என்பவர் காணப்படுகின்றார். அவர் தமது Marxism and the Philosophy of Language (1929) என்ற நூலில் கூற்றுக் கோட்பாடு (Theory of Utterance) பற்றிய கருத்துகளை வெளிப்படுத்தியுள்ளார். ஒலொ'ஜீனோவின் நூல் அடிப்படையில் பெர்டினான்ட் டி சசூர் அவர்களின் மொழி பற்றிய கருத்துகளுக்கான எதிர்வினையாக அமைக்கப்பட்டுள்ளது. வரலாற்றுக் கண்ணோட்டத்தில்தான் மொழியைப் பார்க்க வேண்டும் என்ற கருத்தை வெளிப்படுத்திய ஒலொ'ஜீனோவ் வெளிப்படுகின்ற பேச்சு (Parole) ஒரு குறிப்பிட்ட சமூக மொழியியல் உறவில்தான் உருவாகின்றது எனக்கூறினார். மனிதர்களால் பயன்படுத்தப்படும் மொழிக் குறிகள் சமூக அமைப்பினால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. சமூகம் மாறும்போது இம்மொழிக் குறிகளும் மாற்றம் கொள்கின்றன என்றார் (2008 : 251-253). சசூரை விமர்சிக்கும் வேலண்டின் ஒலொ'ஜீனோவின் கருத்துகளைப் மிகெய்ல்பக்தினின் கட்டுரைகளில் அப்படியே காணமுடிகிறது (2007:81). வேலண்டின் ஒலொ'ஜீனோவின் கூற்றுக் கோட்பாடு சார்ந்த பல கருத்துகளைப் பக்தின் Speech Genres & Other Late Essays என்ற நூலில்முன் வைக்கின்றார். தொல்காப்பியரின் மொழியின் அமைப்புப் பற்றிய சிந்தனைகளில் பக்தின் முன்வைத்த கூற்றுக் கோட்பாட்டின் அடிப்படைகள் இருப்பதைக் காணமுடியும்.

பக்தின் அடிப்படையில் மொழியின் உரையாடல் தன்மை (னுயைடழபளைஅ) பற்றி பேசுகின்றார். ஆனால் அவரது கருத்துகள் உரையாடலியம் என அழைக்கப்படுகின்றன. ஒருமொழி சொல் தொடர்களாக அன்றிப் பொருண்மைகளை முன்வைக்கும் கூற்றுகளாகவே இயங்குகின்றது; இந்தக் கூற்று முறையிலான இயக்கத்தினால்தான் மொழி உரையாடலுக்கானதாக இருக்கிறது என்கின்றார். பக்தின் சுட்டும் உரையாடலியத்தைத் தொல்காப்பியம் முன்வைக்கும் கவிதை இயலில் பொருத்திப் புரிந்து கொள்ள இயலும். மொழியின் அமைப்பைச் சுட்டும் சொல்லதிகாரத்தில் உரையாடலியத்தில் அடிப்படைகள் அமைந்திருப்பதைத் தேடிக் கண்டடையலாம்.

தொல்காப்பியச் சொல்லதிகாரம் அடிப்படையில் சொற்களின் அமைப்புப் பற்றிக் கூறுவதாக இருக்கின்றது. அதேநேரத்தில் சொற்களின் அமைப்பைத் தனித்தனிச் சொற்களாக அகராதியில் இடம் பெறும் சொல் போல விளக்காமல் தொடரின் இடையில் அமையும் சொல்லாகக் கருதியே விளக்க முயன்றுள்ளதைக் காணலாம். சொல்லதிகாரத்திற்கு விளக்கம் கூறும்சேனாவரையர் "சொல்லாவது எழுத்தொடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள்குறித்து வருவது" என்கிறார். அதாவது எழுத்தின் தொடர்ச்சியாகச் சொல்லைத் தொல்காப்பியம் விளக்கிச் சென்றாலும் சொல் பொருளுடனேயே இணைந்துசெல்கின்றது என்பதைச் சுட்டுகின்றார். மேலும், பொருள்குறித்து வாராமையின் அசைநிலை

சொல்லாகா எனின்; ஆவயின் ஆறும் முன்னிலையசைச் சொல் (சொல். 274) என்றும் வியங்கோளசைச் சொல்' (சொல்.273) என்றும் ஓதுதலான் அவையும் இடமுதலாகிய பொருள் குறித்து வந்தன என்க. "யாகா பிறபிறக்கு (சொல்.279) என்னும்தொடக்கத்தனவோ எனின் அவையும் மூன்றிடத்திற்கும் உரியவாய்க் கட்டுரைச் சுவைபட வருதலின் பொருள் குறித்தனவேயாம். இக்கருத்தே பற்றியன்றே ஆசிரியர் எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே"(சொல்.155) என்றோதுவாராயிற்றென்க (அழுத்தம்ஆய்வாளருடையது). எனச் சுட்டுகின்றார். சேனாவரையர் இடம் என எடுத்துரைப்பாளர்- கேட்பவர் நிலையையும் கட்டுரைச் சுவைபட வருதலின் எனமொழி நடையையும் நுணுக்கமாகச் சுட்டுகின்றார். இவை இரண்டும் ஓர் உரையாடல் அமைப்பில் முக்கியமானவையாகும். இதனால் தொல்காப்பிய வாசிப்பு உரையாடல் சார்ந்ததாகவே இருந்ததை உணரலாம். சொற்களைப் பற்றிப் பேசும் தொல்காப்பியம் உரையாடல் அமைப்பில் இயங்கும் மொழியைப் பற்றியே பேசுகின்றது. சொல்லை வெறும் சொல்நிலையில் வைத்து விளக்காமல் தொடரின் ஒரு கூறாக நிறுத்தி அதாவது பொருளுடன் இணைந்ததாகவே பார்க்கின்றது.தொல்காப்பியம் மொழியின் அமைப்பைப் பற்றிப்பேசும் போது எழுத்து சொல் என விளக்கினாலும் பொருண்மை நிலையில் இருந்தே மொழியின் செயல்பாட்டை விளக்க முயன்றுள்ளதைக் கிளவியாக்கத்திலேயே காணமுடிகின்றது.

பக்தினின் கருத்துப்படி எந்த ஒரு மொழியும் வார்த்தைகள் மற்றும் தொடர்களால் ஆனதன்று; அது கூற்று மற்றும் பேச்சு, எழுத்து வகைமைகளால் ஆனதாகும். மனிதர்கள் எவரும் வார்த்தைகளை அகராதியிலிருந்து எடுத்துப் பயன்படுத்துவதில்லை. மாறாகப் பல்வேறு சூழல்களில் பிறர் பயன்படுத்தும் வார்த்தைகளில் இருந்தே எடுக்கிறார்கள் எனப்பக்தின் சுட்டுகின்றார். அதனால் பேச்சுகளோ/கூற்றுகளோஅனைத்துமே மறைமுக அல்லது பிறர்வழிப் பேச்சுகளே என்கிறார். ஏனென்றால் ஒவ்வொருவரும் எப்பொழுதும் பிறர் மற்ற சூழல்களில் பயன்படுத்திய வார்த்தைகளையே பயன்படுத்துகிறார்கள். பொது வார்த்தை என்று ஒன்று கிடையாது. அதே போல எந்த வார்த்தையும் யாருக்கும் சொந்தமற்றது எனக்கூற முடியாது என்கின்றார்.

பொதுவாக, எழுத்துகள் சேர்ந்து சொற்களையும் சொற்கள் சேர்ந்து தொடர்களையும் உருவாக்குவதாகக் கருதப்படுகின்றது. ஆனால், இவ்வரிசைக்கு எதிர்நிலையிலேயே மொழி அமைந்துள்ளது. ஓர் உரையாடல் தொடர்பில் சொற்கள் சேர்ந்து தொடர்களை உண்டாக்குவதில்லை. மாறாகத் தொடர்களாகவே மொழி இயங்குகின்றது.இங்கு ஒரு வசதிக்காகத் தொடர் என்று சுட்டினாலும் தொடராக மொழி இயங்குவதாகச் சுட்டுவது அடிப்படையில் தவறாகும். ஒருவரால் முன்வைக்கப்படுகின்ற பொருண்மைகளே ஒரு தொடரை, அத்தொடரில் அமைகின்ற சொற்களை நிர்ணயிக்கின்றன. அதேநேரம் சொற்பொருண்மைகளின் அடிப்படையில் மட்டும் தொடர் பொருள் பெறுவதில்லை. ஒரு சொல்லின் இயக்கம் அது பிற சொற்களுடன் கொள்ளும் உறவில் அமைந்திருப்பதைப் போல் தோன்றுகின்றது. அதனாலேயே சொற்களின் இலக்கணப் பொருளை மொழியியல் கவனத்தில் கொள்கின்றது. ஆனால் தனியாக இருக்கும் சொற்கள் பிறசொற்களுடன் உறவு கொண்டு அதன்மூலம் ஒரு கருத்தை

வெளிப்படுத்துவதில்லை. மாறாக, ஒரு கருத்தினை வெளிப்படுத்துவதற்காகவே சில சொற்கள் ஒன்றிணைகின்றன. அதாவது உரையாடல் செயலின்போதே சொற்கள் இணைகின்றன. இந்த உரையாடல் நிலையிலேயே சொற்களுக்கான பொருள்களும் இலக்கணப் பொருள்களும் உருவாகின்றன. முதலில் ஒரு கருத்துப் பொருள் இரண்டாவதாக உரையாடல் அமைப்பு மூன்றாவதாக, பொருளை உணர்த்துவதற்காகச் சேர்ந்துள்ள சொற்களின் சொற்பொருள் மற்றும் இலக்கணப் பொருள் முதலியவை அமைகின்றன. மூன்றாவதான சொற்பொருள் வெறும் அகராதிப் பொருள்களே ஆகும். இந்த அகராதிப் பொருள் மட்டும் ஒரு தகவல் தொடர்பை நிகழ்த்துவதில்லை. கூற்றுதான் பொருண்மையைத் தகவல் தொடர்பை வெளிப்படுத்துகின்றது. ஒவ்வொரு கூற்றும் முந்தைய மற்றும் பிந்தைய கூற்றுகளுக்கிடையிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறது. ஒரு கூற்றில் இயங்கும் சொல் அந்தக் கூற்றைச் சார்ந்தே பொருள் பெறுகின்றது. பக்தின் முன்வைக்கும் இக்கருத்துகளை அப்படியே கொண்டிராமல் போனாலும் தொல்காப்பியம் மொழியின் உரையாடல் தன்மைகளைக் கவனத்தில் கொண்டே இலக்கணம் வகுத்துள்ளதைக் காண முடிகின்றது.

சொல்பவருக்கும் கேட்பவருக்கும் இடையிலான உரைத் தொடர்பில் வெவ்வேறு சொற்கள் வெளிப்படுத்தப்பட்டாலும்அவை பொருள் தொடர்பு சாத்தியங்களை எவ்வாறு தமக்குள் கொண்டிருக்கின்றன என்பதைத் தொல்காப்பியர் வெளிப்படுத்த முயன்றுள்ளார். பொருள் தொடர்பே உரையாடலில் முக்கியம் என்பதனால் பொருள் தொடர்பை ஏற்படுத்தக் கூடிய சொற்களைப் பற்றிப் பேசும் தொல்காப்பியம் கிளவியாக்கத்தில் வழுவமைதி பற்றியே மிகுதியாகப் பேசுகின்றது. திணை வழுவமைதி, பால்வழுவமைதி, இடவழுவமைதி, காலவழுவமைதி, செப்புவழுவமைதி, வினா வழுவமைதி, மரவுவழுவமைதி முதலியவைதொல்காப்பியக் கிளவியாக்கத்தில் முதன்மைப் படுத்தப்படுகின்றன. இவ்வழுவமைதிகள் சொல் நிலையில் இல்லாமல் உரைத் தொடர்பில் அமைவதை எளிதில் உணரலாம்.

உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன் சொல்லே (தொல். சொல். 1)

என்ற கிளவியாக்க முதற்நூற்பா உயர்திணை, அஃறிணை என்பவற்றைச் சுட்டிச் சொற்கள் இவ்விருதிணையிலும் அமையும் என்கின்றது. இந்நூற்பாவுக்கு விளக்கமளிக்கும் சேனாவரையர் " மக்களென்று கருதப்படும் பொருளை ஆசிரியர் உயர்திணையென்று சொல்லுவர்; மக்களென்று கருதப்படாத பிறபொருளை அஃறிணையென்று சொல்லுவார்; அவ்விருதிணை மேலும் சொற்கள் நிகழும் என்றவாறு. எனவே, உயர்திணைச் சொல்லும் அஃறிணைச் சொல்லும் எனச் சொல் இரண்டு என்றவாறாம்" என்கின்றார். இரண்டு திணைகளைச் சுட்டி அவற்றின் மேல் சொற்கள் நிகழும் எனத் தொல்காப்பிய நூற்பாவின் பொருளைச் சரியாகச் சுட்டி சேனாவரையர் ஏனோ சொல்லை உயர்திணைச் சொல் அஃறிணை சொல் என இரண்டாகப் பிரித்து விடுகின்றார். இதன் மூலம் சொல்லே இரண்டாக இருப்பது போன்ற தோற்றத்தை ஏற்படுத்தி விடுகின்றார். ஆனால், அடிப்படையில் எந்தச் சொல்லும் உயர்திணையாகவோ அஃறிணயாகவோ இருப்பதில்லை;

உயர்திணையைச் சுட்டுவதாகவும் அஃறிணையைச் சுட்டுவதாகவுமே இருக்கின்றது எனத் தொல்காப்பியர் சுட்டுகின்றார். மேலும் இவ்விரு திணைகளிலும் சொல் (ஒரே சொல்கூட) இசையும் என்கின்றார். இத்திணையைச் சுட்டும் பணியைச் சொற்கள் தனித்து அல்லாமல் உரைப்போக்கிலேயே மேற்கொள்ளுகின்றன. அதற்கு இலக்கணக்கூறுகள் அடிப்படையாக இருப்பதைக் காணலாம். உரையாசிரியர்கள்சுட்டுவதைப் போன்று மக்கள் என்பது உயர்திணை என்றால், சொல்அளிக்கும் பொருள் உயர்திணையாக இருக்கின்றது அல்லது வழக்கில் கருதப்படுகின்றது என்று பொருள். இப்பொருள் சொல்நிலையில் அல்லாமல் கருத்து நிலையிலேயே திணையைக் குறிக்கின்றது. ஆடுமாடுகளை மேய்க்கும் பணியைச் செய்யும் ஒருவர், தன்னுடைய நண்பரிடம் 'என்மக்களை ஓட்டிக்கொண்டு வருகின்றேன்' எனச் சொல்லலாம். இங்கு மக்கள் எனும் சொல் ஆடுமாடுகளையே அதாவது அஃறிணைகளைக் குறிக்கின்றது. அதே போல் ஒருவர் 'மக்களை ஓட்டிக் கொண்டு வருகின்றேன்' எனத் தன்குழந்தைகள் அல்லது நண்பர்களை அழைத்துக் கொண்டு வருவதைச் சுட்டலாம். ஓட்டு எனும் பிறவினைச் சொல் உயர்திணைக்கு ஆகிவருகின்றது. இதனால் சொல்லின் திணை பொருளில் இல்லாமல் உரைக்கோவையில் இசைக்கப்படும் தன்மையைச் சார்ந்தே அமைவதைப் புரிந்துகொள்ளலாம்.

தொல்காப்பிய நூற்பா சொல்லை ஒருமையாகவும் அது இசைக்கப்படும் தன்மையை உயர்திணை , அஃறிணை என இரண்டாகவும் சுட்டுகின்றது. இதன் மூலம் சொற்களின் இயக்கம் பன்மைத் தன்மையுடன் இருப்பதையும் சொற்கள் கொள்ளும் பொருள் அது அமைந்து வரும் உரையாடல் சூழலிலேயே இருப்பதையும் சுட்டுகின்றது. உரையமைப்பில் பொருண்மையை வெளிப்படுத்தும் மொழித் தொகுதியையே பக்தின் கூற்று என விளக்குகின்றார். "ஆயிருதிணையின் இசைக்குமன் சொல்லே" என்ற தொல்காப்பியரின் நூற்பா, சொல்லை விடச் சொல்லின் உரையாடல் அமைப்புக்கு முக்கியத்துவத்தை அளிக்கின்றது.

செப்பும் வினாவும் வழாஅல்ஓம்பல் (13) என்ற நூற்பாவைத் தொல்காப்பியர் முன்வைப்பதன் நோக்கம் செப்பாக இருந்தாலும் வினாவாக இருந்தாலும் உரையாடல் தொடர்பிலேயே பொருள் பெறுகின்றன என்பதே ஆகும். வழக்கத்தில் இருந்து மாறாமல் புரிந்து கொள்ளப்பட்டால் மட்டுமே உரையாடல் சாத்தியமாகும். வழக்கிற்கு மாறாக, சொல்லுக்குரிய பொருளை மட்டும் தனித்துப் புரிந்து கொண்டால் உரைத்தொடர்பில் இடையூறு ஏற்படும் என்பதையே தொல்காப்பிய ர் இந்நூற்பாவில் சுட்டுகின்றார். பக்தின், "இயல்பாக மொழி மனிதச் செயல்பாடுகளுக்கிடையிலேயே இயங்கிக் கொண்டிருக்கின்றது. அது(மொழி) வாய்மொழியாகவும் எழுத்து வடிவிலும் அமைந்த பல தனித்தன்மையுடைய பருண்மையான கூற்றுகளால் தான் உணரப்படுகின்றது. இக்கூற்றுகள் உள்ளடக்கத்தாலும் மொழியியல் நடையாலும் மொழியின் குறிப்பிட்ட நிலையை வெளிப்படுத்துகின்றன. இக்கூற்று கள்குறிப்பிட்ட நிலையை மட்டுமின்றி அந்த நிலையை மீறி அதை ஒத்த தளங்களையும் பல

நேரங்களில் பிரதிபலிக்கின்றன" எனச் (2007: 60) சுட்டுகின்றார். மேலும், இத்தகைய கூற்றுகளில் மட்டும் மொழி அடங்கிப் போவதில்லை என்றும் சொற்களின் தேர்வு, சொற் பயன்பாட்டுப் பாங்கு, மொழியின் இலக்கண வளங்கள் ஆகியவற்றைத் தாண்டி மொழி பல்வேறு உரையாடல் தளங்களுடன் ஓர்அமைப்பில் இயங்குகின்றது என்றும் சுட்டுகின்றார்.

சொற்களின் தேர்வு, சொற்பயன்பாட்டுப் பாங்கு, மொழியின் இலக்கண வளங்கள் ஆகியவற்றை ஒரு கூற்று கொண்டிருந்தாலும் அதற்குள் அமைந்திருக்கும் உள்ளடக்கக் கருத்து, மொழிநடை, உரையாடல் தளங்களின் அமைப்பு ஆகியவையும் முக்கியமானவை என்பதைப் பக்தின் சுட்டுகின்றார். இக்கூற்றுகள் தொடர்புறுத்தல் எல்லையின்குறிப்பிட்டஇயல் பினாலும் நிர்ணயிக்கப்படுகின்றன. ஒவ்வொரு கூற்றும் தனித்தன்மையானது. ஆனால், ஒவ்வொரு படிநிலையில் பயன்படுத்தப்படும் மொழியும் சுட்டும் இந்நிலைத்ததன்மை என்பது ஒப்பீட்டளவிலான நிலைத்ததன்மையாகும் (2007: 60) என்கிறார். இதன்மூலம் பக்தின், கூற்றுகள் நிலைத்த தன்மையுடையவை அல்ல என்பதைச் சுட்டுகின்றார். அதாவது ஒவ்வொரு கூற்றுக்கும் வரையறுக்கப்பட்டசொற்களோ, சொற்பயன்பாட்டுப் பாங்கோ, தனிப்பட்ட மொழிநடையோ ஏதும் இல்லை. கூற்றுகள் உள்ளடக்கக்கருத்து, மொழிநடை, உரையாடல் அமைப்பு ஆகியவற்றுடன் இணைந்திருந்தாலும் இம்மூன்றும் எப்பொழுதும் ஒரே நிலையில் அமைந்திருப்பதில்லை. இவை மாறக்கூடியவை என்பதனால், இம்மூன்றின் அடிப்படையில் ஒரு கூற்று நிலை கொண்டிருந்தாலும் இறுக்கமாக நிலைத்திருப்பதில்லை. உள்ளடக்கக் கருத்து, மொழிநடை, உரையாடல் அமைப்பு எனும் இம்மூன்றில் அடிப்படையாக அமைந்திருப்பது உள்ளடக்கக் கருத்தே ஆகும். இதனால் ஒரு கூற்றை அறிய உள்ளடக்கக் கருத்தை அடிப்படையாகக் கொள்ளலாம். ஒரு உள்ளடக்கக் கருத்து வெவ்வேறு மொழிநடையில் வெவ்வேறு உரையாடல் அமைப்பால் சுட்டப்படலாம். இந்த உரையாடல் அமைப்பின் மாறுபாட்டையே தொல்காப்பியம் செப்புவழுவமைதி வினாவழுவமைதியில் வெளிப்படுத்துகின்றது. வேறு அமைப்பில் உரையாடல் நிகழ்ந்தாலும் கூற்று ஒரு பொருண்மை சார்ந்ததாகவே அமைவதனால் தகவல்தொடர்பு சாத்தியப் படுகின்றது. இதுபோன்று தொகுதியாக இயங்குகின்ற ஒரு கருத்தைக் கூற்று என்று பக்தின் சுட்டுகின்றார். இக்கூற்றுகளே உள்ளடக்கக் கருத்து, மொழிநடை, உரையாடல் அமைப்பு ஆகியவற்றால் அமைகின்றன என்கின்றார். இவ்வாறு கருத்துகளை முன்வைக்கும் கூற்றுகளுக்குத் தமிழிலக்கியங்களிலிருந்து பல எடுத்துக்காட்டுகளை அளிக்க இயலும்.

விருந்தாகச் சென்ற இடத்தில், அவ்வீட்டில் உள்ளோர் எதைக் கொடுத்தாலும் மறுக்காமல் பெற்று உண்ண வேண்டும் என்பது தமிழ்மொழியில் வழங்கும் ஒரு நிலைத்த கூற்றாகும். இதனைச் சங்க இலக்கியங்கள் தொடங்கிப் பிற்கால அற இலக்கியங்கள் வரையிலான அனைத்து இலக்கியங்களும் சுட்டுகின்றன. கொடுக்கப்பட்டது வி'மென்று அறிந்தும் அதனை உட்கொள்ளும் பல பாத்திரங்களை நமது புனைவுகளில் காணலாம். கொடுக்கப்பட்டது விசமாக

இருந்தாலும் மறுக்காமல் ஏற்று உண்ண வேண்டும் என்ற இக்கூற்று தமிழில் பல்வேறு மொழிநடைகளாலும் உரையாடல் அமைப்புகளாலும் தொடர்ந்து வெளிப்படுத்தப் பட்டிருப்பதைக் காணலாம். இக்கருத்தை நற்றிணை, முந்தையிருந்து நட்டோர் கொடுப்பின் நஞ்சும் உண்பர் நனிநாகரிகர் (நற்.355:6,7) என்று சுட்டுகின்றது. இதே கருத்தைத் திருக்குறள், பெயக்கண்டும் நஞ்சுண்டமைவர் நயத்தக்க நாகரிகம் வேண்டுபவர் (குறள் 580) என்று சுட்டுகின்றது. இப்பாடல்களில் உள்ள உள்ளடக்கக் கருத்து ஒன்றுதான். ஆனால், மொழிநடையும் உரையாடல் அமைப்பும் வேறுபடுகின்றன. இவற்றில் மொழிநடை எழுத்தாளரின் நடைசார்ந்ததாகும். இங்கு நஞ்சு, விசம் என்ற சொற்கள் தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆனாலும் நஞ்சைக் குடிப்பதை இக்கூற்று வற்புறுத்தவில்லை. நாகரிகத்தின் உச்சத்தைக் குறிப்பதற்காகவே நஞ்சு என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. நஞ்சின் சொற்பொருளை உரையாடல் அமைப்பு மாற்றிவிடுகின்றது. இதனால் சொற்பொருளை மிகவும் இன்றியமையாத ஒன்றாகக் கருதவேண்டியதில்லை என்பதை உணரலாம். சொற்கள் பயின்று வரும் உரையாடல் அமைப்பே முக்கியமானதாகும். சுட்டப்படுகின்ற கருத்து எழுத்தாளரின் தனிப்பட்ட கருத்தாக அன்றிச் சமூகத்தின் கருத்தாக இருப்பதைக் கவனிக்கலாம். இக்கருத்தையே சமூகக் கூற்றாகப் பக்தின் சுட்டுகின்றார். மேலும், சொற்களின் பொருண்மைச் சூழல்களைச் சமூக, வரலாற்று நிலைகளே முடிவு செய்கின்றன. இவையே வழு, வழுவமைதிகளாகத் தொல்காப்பியர் உள்ளிட் ட இலக்கண ஆசிரியர்களால் சுட்டப்படுகின்றன.

நீண்ட உரைப் போக்கிற்கு இடையில் அவ்வுரை அமைப்புடன் இணைந்தே ஒரு கருத்து சுட்டப்படுகின்றது. மொழி அமைப்பில் இது போன்ற ஏராளமான கருத்துகள் அமைந்திருப்பதைக் காணலாம். திருக்குறள் சுட்டும் பல கருத்துகளை இந்த அடிப்படையில் விளக்கலாம். பக்தின் இவற்றைக் கருத்துகளாகப் பார்க்காமல் மொழித் தத்துவயியல் நோக்கில் கூற்றுகளாகப் பார்க்கின்றார். பக்தினின் கருத்துப்படி வெளிப்படுத்தப்படும் ஒரு கருத்து அல்லது கூற்று மொழியில் முன்பே இருக்கின்ற ஒரு கருத்து அல்லது கூற்றே ஆகும். இத்தகைய பல கூற்றுகளாலேயே ஒரு மொழி கட்டமைக்கப்பட்டிருக்கின்றது. தொல்காப்பியம் சுட்டும் வழுவமைதிகளில் சொற்பொருண்மைகளைத் தாண்டிய உரையாடல் அமைப்பிருப்பதைப் பார்க்கலாம். இக்கூற்றுகளை நாம் எடுத்துப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றோம். தொல்காப்பியக் கிளவியாக்கத்தில் சுட்டப்படும் பல கருத்துகள் மொழியில் அமைந்திருக்கின்ற நிலைத்த கூற்றுகளாகவே இருக்கின்றன.

தொல்காப்பியர் மொழித்தத்துவயியல் கூறுகளை உள்ளடக்கியே சொற்களை விளக்கிச் செல்கின்றார். அதனாலேயே, கிளவியாக்கத்தில் திணைப்பாகுபாடு, பால்பாகுபாடு, பால்ஈறுகள் II சொற்களில் அவற்றின் நிலை இபெயர்வினை இயைபு, வினா செப்புவாக்கிய அமைப்புகள், வழுவமைதிகள் மூவிடங்களுக்கும் உரியசொற்கள் என உரைப்போக்கிற்கு முதன்மை அளித்து விளக்கியுள்ளார். மேலும், சொற்கள் பயன்படுத்தப்படும் கருத்தெல்லையின் முக்கியத்துவத்தையும் தொல்காப்பியர் சுட்டியுள்ளார். இக் கருத்தெல்லையை நாம்

வகைமை எனப் புரிந்து கொள்ளலாம். வகைமைக் கேற்றாற் போல் சொற்கள் உரையமைப்பைப் பெறுவதைத் தொல்காப்பியர் விளக்கிச் செல்வதை,

இனச்சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க் கொடை
வழக்காறல்ல செய்யுளாறே (தொல். சொல்.18)

ஒருவரைக்கூறும்பன்மைக்கிளவியும்
ஒன்றனைக்கூறும்பன்மைக்கிளவியும்
வழக்கினாகியஉயர்சொற்கிளவி
இலக்கணமருங்கிற்சொல்லாறல்ல (தொல்.சொல்.27)

முற்படக்கிளத்தல்செய்யுளுள்உரித்தே (தொல்.சொல்.39)

என்ற நூற்பாக்களில் காணலாம். வழக்காறு, செய்யுள், இலக்கணம் எனச் சொற்கள் பயன்படுத்தப்படும் வகைமைகள் சுட்டப்படுகின்றன. இவ்வகைமைகள் சொற்களின் இயக்கத்தை நிர்ணயிப்பதாகத் தொல்காப்பியர் குறிப்பிடுகின்றார். தொல்காப்பியரைப் போலவே வகைமையைச் சார்ந்து கூற்றுகள் இயங்குவதை மிகெய்ல் பக்தின் பேச்சு வகைமைகள் (Speech Genres) பற்றிய தமது கட்டுரையில் விரிவாகப் பேசியுள்ளார். மிகெய்ல் பக்தினைப் போல் மொழித் தத்துவயியல் சார்ந்த கருத்துகளைத் தொல்காப்பியர் நேரடியாகச் சுட்டாது போனாலும் மொழியின் அமைப்பு பற்றிய கருத்துகளை மொழித்தத்துவயியல் பின்னணியிலேயே சொல்லிச் செல்கின்றார் என்பதைக் கிளவியாக்கத்திலேயே உணர்ந்து கொள்ளமுடிகின்றது. இதனால் தொல்காப்பிய மொழியியல் என்பது மொழித் தத்துவயிலையும் உள்ளடக்கியதே என்பதை உணர முடிகின்றது.

துணைநூல்கள்

1. தொல்காப்பியம்-சொல்லதிகாரம் (சேனாவரையம்),1989, அண்ணாமலை நகர்: அண்ணாமலைப் பல்கலைக்கழகம்.
2. தமிழவன், 2008, அமைப்பியலும் அதன் பிறகும், திருச்சி:அடையாளம்.
3. Morris. Pam (Ed.), 1994, ***The Bakhtin Reader: Selected Writings of Bakhtin***, Medvedev and Voloshinov, London: Arrnold.
4. Ramasamy. P., 1999, ***The Fiction of Philip Roth A Bakhtinian Study***, Pondicherry: Busy Bee Books.
5. Bakhtin. M.M., 2007, ***Speech Genres & Other Late Essays***, Vern W. MLGEE (Trans.), Austin: University of Texas Press.

நீதிநூல்களுள் தலையானது திருக்குறள்

முனைவர் வெ. திருவேணி
உதவிப் பேராசிரியர்
அழகப்பா பல்கலைக்கழகம்
காரைக்குடி, தமிழ்நாடு, இந்தியா

நீதி நூல்கள்

காதல், வீரம், கொடை முதலிய சிறந்த உணர்ச்சிகளிலும் இயற்கையின் இன்பத்திலும் ஈடுபட்டிருந்த புலவர்களின் உள்ளம் அடுத்த சில தலைமுறைகளில் நீதிகளைப் பாடும் நிலைக்கு மாறியது. அந்தக் காலத்தைச் சங்கம் மருவிய காலம் அல்லது நீதிநூல் காலம் என்பர். தமிழ்ப் புலவர்கள் காதலையும் வீரத்தையும் இருகண்களாகக் கருதினார்கள்; அறத்தை உயிராக மதித்தார்கள் எனவே அவர்கள், அறநெறி நில்லாக் காதலையும் வீரத்தையும் எதிர்த்தார்கள். சங்கப்புலவர்கள் தாம் பாடிய பாடல்களில் அறக்கருட்துக்களை வாய்ப்பு நேரும் போதெல்லாம் வலியுறுத்தினார்கள். இக்கருத்துக்களை விளக்கவே தனி அறநூல்கள் தோன்றின. இவை வாழ்வு நூல்களாகப் போற்றப் பெற்றன.

நீதிநூல்களுள் தலையானது திருக்குறள்

உலகில் இலக்கிய அரங்கில் தமிழனின் பெருமையை நிலைநாட்டும் உயர்வுடையது இந்நூல். இதனை உலகப் பொதுமறை என்றே அறிஞர்கள் குறித்தனர். உலகமொழிகள் பலவற்றிலும் இந்நூல் மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. மொழி இனம் சமயம் நாடு கடந்த இந்நூலின் பெருமை, காலம் பல கடந்தும் வளர்பிறை போல் வளர்ந்து வருகின்றது.

"வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" **- தேசியகவி பாரதியார்**

என உலகுக்கு உரிய நூலாகப் பாராட்டியுள்ளார். பல நூற்றாண்டுகளுக்கு முன் விளங்கிய ஒருவர், எல்லாச் சமயத்தாரும் போற்றக்கூடிய வகையில் எல்லார்க்கும் பொதுவான ஒருநூல் எழுதியிருப்பது பெரிய வியப்பாகும்.

அதனால் அவர்க்குப்பின்வந்த எல்லா நூல்களும் அவருடைய கருத்துகளையும் சொற்களையும் எடுத்தாளுகின்றன. வெவ்வெறு சமயத்தைச் சார்ந்தவர்கள் போரிட்டுக் கொண்டிருந்த காலங்களிலும் அவர்கள் எல்லோரும் திருக்குறளைப் போற்றிக் கொண்டிருந்தார்கள் அது

மட்டுமல்லாமல் தம் தம் சமயத்தைச் சார்ந்தவரே திருவள்ளுவர் என்று சான்றுகள் காட்டிக் கொண்டிருந்தார்கள்.

நூலின் சிறப்பு : உயிர் நூல்

திருக்குறள் கருத்துகள், தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் ஊடுருவி நிற்கின்றன. அவை மக்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டியாய் விளங்குகின்றன. இவ்வகையில் இது மக்களின் உயிர் நூலாய்த் திகழ்கிறது. எவ்வகைச் சார்பையும் கடந்து-கடந்து, மனித உள்ளத்தின் இயல்பைத் துருவித் துருவி ஆராய்ந்து, உண்மையை மட்டும் தெளிவாக எடுத்துரைத்திருப்பது நூலின் மற்றொரு சிறப்பாகும். சாதி வேறுபாடு தலையெடுத்த அக்காலத்தில் அவர் அஞ்சாமல் "எல்லாரும் பிறப்பால் ஒத்தவர்களே" என்னும் கருத்தை வலியுறுத்தினார். அறிஞர்கள் பலர் உரை எழுதுமாறு அவர்களின் அறிவைக் கவர்ந்த தமிழ்நூல் திருக்குறளே. பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பத்து உரையாசிரியர்கள் இதற்கு உரை எழுதியிருக்கிறார்கள். காந்தியடிகள் முதலான இக்காலத்துச் சான்றோர்கள் இந்த நூலின் உயர்வைப் புகழ்ந்துள்ளனர். ஆல்பர்ட் ஸ்வைட்சர் என்னும் ஜெர்மன் தத்துவஞானி - பல துறைப் பேரறிஞர் வாழ்வுக்கு உரிய அன்புநெறியைக் கூறும் உயர்ந்த நூல் என்றும், உயர்ந்த ஞானத்தைப் புகட்டும் செம்மொழிகளின் தொகுப்பு இதுபோல் உலக இலக்கியத்தில் வேறு எங்கும் இல்லை என்றும் கூறிப் போற்றியுள்ளார்.

வள்ளுவரின் சிறப்பு

மனத்துக்கண் மாசு இல்லாமல் இருப்பது அறம்; உலகத்தோடு ஒட்ட ஒழுகுவதே வாழ்க்கை; ஊடியும் கூடியும் மகிழ்ச்சி பெறுவதே இன்பம் என்பன வள்ளுவரின் உயிர்க் கொள்கைகள். வள்ளுவர் பல நூல்களைக் கற்றவர். இல்வாழ்க்கையைச் செம்மையாக நடத்தி மகிழ்ந்தவர். அரசியலில் தேர்ந்த அறிவுபெற்றவர், நீண்ட நாள் அமைதியாக வாழ்ந்தவர், பல சமயத்தாரோடும் பழகினாலும் பொதுமை நாட்டமே உடையவர். அறத்தில் அசையாத நம்பிக்கை உடையவர். சமய வேடங்களையும், மூடநம்பிக்கைகளையும் புறக்கணித்தவர் முதலான குறிப்புகள் அவருடைய நூலால் தெரிகின்றன.

1330 பாடல்களில் உயிர்க் கொள்கைகளை விளக்கும் போது கூட ஏனைய அறநூல்களைப்போல அறக்கோட்பாடுகளைக் கூறாமல் நடைமுறைக்கு ஏற்ற வகையில் இனிமையாகக் கூறுகின்றார். வள்ளுவருக்கு முன்னால் புலால் உண்ணல், கள்குடித்தல், பரத்தையரை விரும்பல் என்பன சமுதாய ஒழுக்கங்களாகவே இருந்தன. அறம் பாட வந்த வள்ளுவம் இவற்றைக் கண்டார். இவைகளை நீக்கினால் ஒழியச் சமுதாயம் உயராது என நினைத்தார். இம்மூன்றும் கூடாதன எனப் பாடினார். இத்தகைய சமுதாயப் புரட்சியைச் செய்த மூலவர் இவரே. இதுவே வள்ளுவரின் சிறப்பு.

நூலின் பாகுபாடு

அறம், பொருள், இன்பம், வீடு நான்கு பொருள்களுள் முதல் மூன்றையும் பற்றி 1330 குறட்பாக்களால் விளக்குவது திருக்குறள். நெறியோடு இந்த உலகத்தில் வாழ்ந்தால், தானாகவே அமைவது முக்தி என்பதும், சிந்தைக்கு எட்டாத அந்த முக்தியைப் பற்றிச் சொற்களால் விளக்கிக் கொண்டிருப்பது வீண் என்பதும் திருவள்ளுவரின் கருத்தாக இருக்கக்கூடும். பத்துப் பத்துக் குறளாகப் பகுத்து, ஒவ்வொரு பத்திலும் ஒவ்வொரு பண்பையோ கொள்கையையோ விளக்குகிறார். அறத்தை 380 குறளில் 38 அதிகாரங்களில் விளக்கியுள்ளார். அரசியல், அமைச்சர்கள், குடிமக்களின் பண்புகள் பற்றியும் இரண்டாம் பகுதி 700 குறளில் 70 அதிகாரங்களில் விளக்கியுள்ளார். முதல் பகுதியைக் கற்பவர் அங்கே புத்தர் போன்ற ஒரு சான்றோரின் மொழிகளைக் கேட்கலாம். இரண்டாம் பகுதியில் தேர்ந்த அரசியல் அறிஞரின் உரைகளைக் கற்கலாம். மூன்றாம் பகுதியில் உயர்ந்த காதலரின் காதல் பற்றிய கற்பனை 250 குறளில் 25 அதிகாரங்களில் விளக்கப்பட்டிருக்கிறது. இப்பகுதியில் திருவள்ளுவர் கற்பனைச் செல்வம் மிகுந்த ஒரு கவிஞராக விளக்கிக் காதலனையும் காதலியையும் பேசச் செய்கிறார்.

வாழவேண்டிய முறைப்படி வாழ வழிகாட்டும் நூல் :

வாழ்வு பல வகை. குறள் காட்டும் வாழ்வு ஒரு தனிவகை. அதை உலகுக்குக் காட்டியவர் திருவள்ளுவர். திருவள்ளுவர் தமிழகத்துச் சான்றோர்களுள் ஒருவர். மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் மக்களாகவே வாழவேண்டும் என்பது அவரது பேராசை அல்ல மிகப் பெரிய ஆசை. அதன் விளைவே திருக்குறள். அது காட்டும் வாழ்வே; வாழ்வாங்கு வாழ்தல்' ஆகும். இது வாழவேண்டிய முறைப்படி வாழ்தல் எனப் பொருள்படும். வாழ வேண்டிய முறை என்பது தனக்காகத் தன் குடும்பத்துக்காக என்று வாழாமல் பிறருக்காவும் வாழவேண்டும் என்பதாகும். இவ்வாழ்வு முறையைத் திருக்குறள் நமக்கு பல வகையில் காட்டுகிறது.

வானுறையும் தெய்வம்

வாழ வேண்டிய முறைப்படி வாழ்பவனே மனிதன் எனவும், அவன் மனிதனாயினும் மற்றவர்களால் தெய்வமாகக் கருதப்படுவான் எனவும், அவன் இம்மண்ணுலகில் வாழ்ந்தாலும் அது விண்ணுலகாகக் கருதப்படும் எனவும் குறள் கூறுகிறது. வள்ளுவர் காட்டும் குறள் இதோ:

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்" - என்பதாகும்.

குறள்காட்டும் எச்சரிக்கை

"குன்றின் அனையாரும் குன்றுவர் குன்றுவ
குன்றி அனைய செயின்"

திருக்குறளில் ஒரு சொல் குறள்கள் எனப் பல உள்ளன. அவற்றில் ஒன்று இது. இக்குறளில் நான்கு குன்றுகளைக் காணலாம். முதல் குன்று மலை. இரண்டாவது குன்று குறுகுதல். மூன்றாவது குன்று இழி செயல். நான்காவது குன்று குண்டுமணி. இதன்பொருள், மலை போன்று உயர்ந்திருக்கும் மக்களும் கூடப் பழிக்கத் தகுந்த இழிச் செயல்களைக் குண்டுமணி அளவு செய்தாலும் கூட குறுகிக் குன்றிப் போய் விடுவர் என்பது இதன் பொருள். நல்வாழ்வு வாழ விரும்புகிறவர்களுக்கு இக்குறள் காட்டும் எச்சரிக்கை மிகப் பெரியதாகும்.

நிமிர்ந்து வாழச் செய்யும் குறள்

"சிதைவிடத்து ஒல்கார் உரவோர் புதையம்பிற்
பட்டுப் பாடூன்றும் களிறு"

நற்செயல்கள் செய்து நல்வாழ்வு வாழ முன் வருபவருக்கு மிகுந்த ஆற்றல் வேண்டும். அதற்குச் சில இடையூறுகளும் வரும். சிலர் தூற்றுவர். சிலர் துன்புறுத்துவர். இவற்றைக் கண்டு கலங்கி விடக்கூடாது. காட்டில் வாழும் யானையானது தன் உடல் முழுவதும் வேடர்களின் அம்புகளால் தாக்கப்பட்டுக் குருதி ஒழுகிக் கொண்டிருந்த போதும் அஞ்சி நடுங்காமல், பீடுநடை நடந்து தன் பெருமையை நிலைநிறுத்தும். அதைப் போலவே 'மனஉரம் படைத்த மக்களும் துன்பம் வந்த காலத்துச் சோர்வு அடையமாட்டார்கள்' என்ற கருத்தை, 'புதையம்பிற் பட்டுப் பாடூன்றும் களிறு' எனக் காட்டானையைக் காட்டி நம்மை நிமிர்ந்து வாழச் செய்கிறார் வள்ளுவர்.

அறிந்து வாழ்வதே வாழ்வு

ஒருவன் மேலேயிருக்கிறான். நாம் பார்க்கிறோம். மற்றொருவன் கீழேயிருக்கிறான். குறள் இதை ஒப்புக் கொள்ளவில்லை. உள்ளபடியே மேலேயும் கீழேயும் பார்க்கின்ற நாம் இதை எப்படி நம்புவது. நம்பாத நம்மையும் நம்ப வைக்கிறது குறள். ஒரு தராசை எடுத்து, இடது தட்டில் ஒரு படிக்கல்லைப் போட்டுத் தராசைட் தூக்கிக் காட்டுகிறார் வள்ளுவர். ஒரு தட்டு தாழ்ந்தும் ஒரு தட்டு உயர்ந்தும் காணப்படுகிறது. வள்ளுவர் நம்மை நோக்கிக் கேட்கிறார். ஏன்? இந்தத் தட்டு உயரத்தில் இருக்கிறது? அதில் ஒன்றுமே இல்லை; அதனால் உயரத்தில் இருக்கிறது. இன்னொரு தட்டில் சரக்கிருக்கிறது. அதனால் தாழ்ந்து இருக்கிறது. இப்போது குறள் கேட்கிறது நம்மிடம், உயரத்தில் இருப்பதெல்லாம் உயர்ந்ததா? என்று. இக்கருத்தை,

"மேலிருந்தும் மேலல்லார் மேலல்லர் கீழிருந்தும்
கிழல்லார் கிழல் லவர்"

என்ற குறள் விளக்குகிறது. உலகிலுள்ள மக்களுள் அறிவில்லாத சிலரும் மேலே இருப்பர். அறிவுடைய சிலரும் கீழே இருப்பர் என அறிந்து வாழ்வதே வாழ்வு என அறிவுறுத்துகிறது.

நல்வாழ்வுக்கு வழி

நல்வாழ்வுக்கு வழி 'நற்செயல்களைச் செய்வது' என்பது திருக்குறளின் கருத்து. இதற்கு 120 குறள்களை 12 தலைப்புகளின்கீழ் கூறுகிறார் வள்ளுவர்.

அவை:

1. ஆள்வினையுடைமை
2. இடுக்கண் அழியாமை
3. ஊக்க முடைமை
4. இடமறிந்து செய்தல்
5. காலமறிந்து செய்தல்
6. வலியறிந்து செய்தல்
7. தெரிந்து செயல்வகை
8. தெரிந்து தெளிதல்
9. தெரிந்து வினையாடல்
10. வினை செயல் வகை
11. வினைத்திட்டம்
12. வினைத் தூய்மை

"இவை அனைத்தும் நல்லவற்றைச் செய்து நல்வாழ்வு வாழக் காட்டும் வழிகள். இதை அந்த அளவொடு அவர் விட்டுவிட வில்லை. செய்ய வேண்டியவற்றைச் செய்யா விடினும் வாழ்வு கெடும். செய்யத் தகாதவற்றைச் செய்தாலும் வாழ்வு கெடும் என எச்சரிக்கையும் செய்கின்றது வள்ளுவம்.

ஒழுக்கமே சிறந்தது

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி"

ஆடை, அணி, பொன், மணி, பட்டம் பதவி முதலியவற்றால் எவரும் மேன்மை அடைய முடியாது. ஒழுக்கம் ஒன்றினாலேயே அதை அடைய முடியும் என்பது ஒன்று. ஒழுக்கத்தினாலேயே உயர்ந்து விட்ட ஒருவன் பின் தெரிந்தோ தெரியாமலோ தவறு செய்ய நேர்ந்தாலும் உலகம் அதை நம்பாது. அப்போதும் அவன் மேன்மையே அடைவான் என்பது மற்றொன்று. ஒழுக்கத்தினால் உயர்ந்த ஒருவர் பின் வறுமையால் தாழ்ந்து போனாலும் கண்டோர் அவரை நன்றாக வாழ்ந்தவர் என்றே உயர்வாகக் கூறி மகிழ்வர்.

ஒழுக்கம் தவறியவன் எல்லோராலும் பழிக்கப்படுவான். ஒழுக்கம் தவறியவன் பின்பு திருந்தி நல்ல காரியங்களைச் செய்தாலும் உலகம் நம்பாது. அவன் முன் செய்த பாவங்களைப் போக்கவே இவற்றைச் செய்கிறான் எனக் கூறிப் பலரும் பழி தூற்றுவர். அவன் செய்யாத - பிறர் செய்த தவறுக்கும் பழி ஏற்க நேரிடும். இதனை நமக்குக் குறள் நன்கு விளக்குகிறது.

மகனின் கடமை

பெற்ற தாயின் வயிறு பசி காண்பது பிறந்த மகனுக்கு இழிவு. எப்பாடுபட்டாவது அத்தாயின் வயிற்றுப்பசியைப் போக்க வேண்டியது பெற்ற மகனின் கடமை. அவன் குடியிருந்த கோயில் என்றாலும், அந்த நிலையிலும் ஒருவன் தவறான வழியில் பொருளைத் தேடி வந்து தாயின் பசியைப் போக்க எண்ணுவது தவறு. அவ்வாறு எண்ணினால் அத்தகையவனைச் சான்றோர் பழித்து ஒதுக்கி விடுவர் என்கிறது குறள்.

மனஉறுதி ஒன்றே!

ஒரு நல்ல செயலைச் செய்வதற்கு வேண்டியது பொருளுதவி அல்ல... நண்பர்களின் துணை அல்ல, மனைவி மக்களின் ஒத்துழைப்பல்ல. அரசாங்கத்தின் ஆதரவு அல்ல. வேறு எதுவும் அல்ல. அவனுக்கு வேண்டியது 'மனஉறுதி ஒன்றே!' இதை 'வினைத்திட்பம்' என்ற குறள் காட்டுகிறது.

நல்வாழ்வு ஏற்றது நா நலமே!

நா நலம் என்னும் நலமுடைமை என்ற குறளில் நா நலம் என்பதே 'நலமுடைமை' என்பதுதான். அந்த நலம் வேறு எந்த நலத்திலும் இல்லை. அளவோடு பேசுதல், ஆராய்ந்து கூறுதல் சொன்னபடி நடத்தல், சொல்லியபடி இருத்தல், இனியவை கூறுதல், எவரையும் வையாதிருத்தல் ஆகியவை அனைத்தும் நா நலத்தின்பாற்பட்டவை என்று குறள் கூறுகிறது. இதையே ஔவையும்,

கண்டு ஒன்று சொல்லேல்! மிகைப்படச் சொல்லேல் வெட்டெனப் பேசேல், வாது முற்கூறேல், ஓரஞ்சொல்லேல் எனக் கூறுகிறார். இவற்றால் நல்வாழ்வுக்கு ஏற்றது நா நலமே என்கிறது குறள்.

பத்துக் கட்டளைகள்

1. பொய்யைச் சொல்லாதே!
2. புலால் உண்ணாதே!
3. கள்ளைக் குடிக்காதே!
4. களவை நினையாதே!
5. காமங் கொள்ளாதே!
6. கொலையைச் செய்யாதே!
7. சூதை விரும்பாதே!
8. புறங்கூறாதே!
9. பொறாமையடையாதே!
10. பேராசை கொள்ளாதே!

என்ற பத்துக் கட்டளைகளும் நல்வாழ்வு வாழக் குறள் இடும் கட்டளைகளாகும்.

இன்னா செய்தார்க்கும் இனியவை செய்க!

ஒருவரை அடித்துத் துன்புறுத்தி வாழ்வது விலங்கு வாழ்வு. தன்னலங்கொண்டு உயரப்பறப்பது பறவை வாழ்வு. தீமை செய்தவருக்குத் தீமை செய்து வாழ்வது தேள், பாம்புகளின் வாழ்வு, தீமை செய்யாதவர்க்கும் தீமை செய்வது பேய்களின் வாழ்வு. தீமை செய்தவர்களை மன்னித்து விடுவது மட்டுமன்று. அவர்களுக்கு நன்மையைச் செய்து வாழ்வதே மக்கள் வாழ்வு என மக்கள் வாழ்வைக் குறள் இவ்வாறு கூறுகிறது.

தலையாய அறங்கள்

நம் முன்னோர்களாகிய நூலோர்கள் தொகுத்துக் கூறியவற்றுள் எல்லாம் தலையாய அறங்கள் இரண்டு. அவை பகுத்து உண்ணல் ஒன்று. பல்லுயிர் ஓம்புதல் மற்றொன்று. ஆனால் வாழ்வாங்கு வாழ அவை இரண்டு மட்டும் போதாது. ஒழுக்கமாகவும் நடந்தாக வேண்டும் எனக் குறள் ஒரு புதுவழி காட்டுகிறது. இதைப் பழிக்கு அஞ்சி வாழ்தல் பகுத்து உண்! என்ற குறள் நமக்கு விளக்கிக் காட்டுகிறது.

ஒளிவீசும் வாழ்வு

அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பன வெறுத்து வாழக் கற்றுக் கொள். பிறரைக் கண்டு பொறாமைப்படாதே! பிறர் பொருளின் மீது ஆசை வைக்காதே! எவர் மீதும் சினம் கொள்ளாதே! எப்போதும் கடும் சொற்களைச் சொல்லாதே! இந்நான்கும் நம் வாழ்வுக்கு ஒளி வீசும் எனக் குறள் கூறுகிறது.

வாழ்வின் உயர்வுக்கு நட்பு

நட்பு நல் வாழ்வுக்குத் தேவை. ஆகவே, நட்பைக் கைக்கொள்! அதையும் ஆராய்ந்து கொள்! தீ நட்பு கொள்ளாதே! பழமையைத் தள்ளாதே! கூடா நட்பு கூடாதே! சிற்றினம் சேராதே! பெரியோரை வெறுக்காதே! என்ற ஏழு தலைப்புகளில் எழுபது குறள்களைக் கூறி வாழ்வுக்கு வழிகாட்டுகிறது குறள்.

பிறருக்கு வழங்கி வாழ் !

அன்புள்ளம் கொண்ட சான்றோர்கள் தம் குருதியை, நரம்பை, தோலைமட்டுமல்ல, தன் எலும்பையும் பிறருக்கு வழங்கி வாழ்வர் என்ற கருத்தை 'எலும்பும் உரியர் பிறர்க்கு' என்ற குறட் சொற்றொடர் கூறிக் கொண்டிருக்கிறது.

விரும்பிக் கைக்கொள்ள வேண்டியது!

நகை, ஈகை, இன்சொல், இகழாமை ஆகிய நான்கையும் விரும்பிக் கைக்கொள். அது உன் வாழ்வை வளமாக்கும் என்பதே குறள் காட்டு வாழ்வு. இந்த நான்கை வரிசைப்படுத்தி இருப்பதிலும் ஒரு அழகு தோன்றுகிறது. அவை நல்வாழ்வுக்கு எப்போதும் இனிய முகத்தோடு இருத்தல் வேண்டும். அது முடியாவிட்டால் இயன்றவரை ஏதாவது கொடுத்து அனுப்பி விடவேண்டும். அதுவும் முடியாவிடில் இனிய சொற்களையாவது சொல்லி அனுப்பிவிட வேண்டும் அதுவும் முடியாவிடில் அவர்களை இகழ்ந்து கூறாமலாவது இருக்க வேண்டும் என்பன குறள் காட்டு வழிகளாகும்.

செயற்கரிய செய்வர் பெரியார்!

பணக்காரர், நிலக்காரர், முதல்காரர் ஆகியவர்களைப் பெரியர் என நினைத்திருந்தோம். அடுத்து படித்தவர், பட்டம் பெற்றவர், பதவியிலிருப்பவர் பெரியர் என எண்ணினோம். இப்பொழுது எழுத்தர்களையும் பேச்சாளர்களையும் பெரியோர் என எண்ணுகிறோம் குறள் இவற்றை ஒப்பவில்லை. யார் பெரியர்? என்ற வினாவிற்கு - குறள் கூறும் விடை எழுத்தரல்ல, பேச்சரல்ல, 'செய்வர் பெரியர்.' என்பதே. இதிலிருந்து மலையளவு பேசுவதைவிடக் கடுகளவு செய்து வாழ்வதே நல்லது எனத் தெரிகிறது.

உள்ளம் உயர நாம் உயர்வோம்!

நல்வாழ்வு வாழ வேண்டுமானால் உள்ளத்தை உயர்த்தி வாழ். சிறியன சிந்தியாதே. எப்போதும் பெரியதையே எண்ணு. அப்படியே ஆவாய்! வெள்ளம் உயர உயர மலர் உயர்வது போல உன் உள்ளம் உயர உயர நீ உயர்வாய்! நல் வாழ்வு வாழ உள்ளத்தை உயர்த்து! எனக் கூறுகிறது குறள்!

கற்க! கசடற! கற்றபடிநில்!

படிக்க வேண்டியவற்றைப் படி! அதையும் பிழையறப் படி! மனதில் உள்ள கசடு அறும்படி படி! கற்றலின் ஆயினும் கேள்! கற்றவற்றையும் கேட்டவற்றையும் சிந்தித்து உணர்! அந்த அளவோடு விட்டுவிடாதே! அதன்படி நட! எனக் குறள் நல்வாழ்வு வழிவகுக்கிறது.

தோற்றத்தைக் கண்டு மயங்கி விடாதே!

கருப்பாக இருக்கிறது; கோணலாக இருக்கிறது; நாரும் நரம்புமாக இருக்கிறது என்று 'வெறுத்து விடாதே வீணையை. நீ இன்பத்தை இழந்து விடுவாய்! சிவப்பாக இருக்கிறது. அழகாக இருக்கிறது. நேராக ஒழுங்காக இருக்கிறது என்று நெஞ்சில் வைத்து விடாதே 'அம்பை'. அது உன்னைக் கொன்று விடும். இவை இரண்டு மட்டுமல்ல, வேறு எதனையும் தோற்றத்தைக் கண்டே மயங்கி விடாதே, வாழ்வு பாழாகி விடும் என எச்சரிக்கிறது குறள்.

உள்ளத்திற்கு சில உடைமைகள்

உடலுக்குச் சில உடைமைகளை அணிவது போல உள்ளத்திற்குச் சில உடைமைகளை அணிந்து வாழ்வதே குறள் காட்டும் வாழ்வாகும். அவை,

1. அன்புடைமை	2. அருளுடைமை
3. அடக்கமுடைமை	4. ஆள்வினையுடைமை
5. ஒழுக்கமுடைமை	6. ஊக்கமுடைமை
7. நாணமுடைமை	8. பொறையுடைமை
9. பண்புடைமை	10. அறிவுடைமை -

என்பன. இப்பத்து உடைமைகளையும் பத்து தலைப்புகளில் நூறு குறள்களாக்கி மக்களாகப் பிறந்த ஒவ்வொருவரும் இவற்றைத் தம் உள்ளத்தில் அணிந்து வாழ்ந்தாக வேண்டும் எனக் குறள் நல்வாழ்வுக்கு நம்மை அழைத்துச் செல்கிறது.

அன்பு என்னும் தாயின் குழந்தையே அருள்!

திருக்குறளில் அறத்துப் பாலை ஊன்றிக் கற்றால், வாழ்க்கையில் படிப்படியான வளர்ச்சியைக் கூறி முழுமையைக் காட்டுவதை உணரலாம். இல்லறம் வளர்ந்து பண்பட்டுத் துறவுள்ளத்தில் செம்மைப்பட்டு மெய்யுணர்வால் ஒளிபெற்று விளங்கும் முழு வாழ்வை அங்குக் காணலாம். இல்லறம் துறவறம் இரண்டும் தொடர்புப்பட்டு விளங்குவதை உணரலாம்.

அன்பான மனைவியுடன் வாழ்ந்து நல்ல மக்களைப் பெற்று வளர்ந்து விருந்தினர்களை அன்புடன் போற்றிப் பலர்க்கும் உதவியாக, ஒப்புரவாக வளரும் வாழ்க்கை, அன்பின் அடிப்படையிலிருந்து அருளின் நிறைவு பெற்று விளங்குதல் காண்கிறோம். அதனால் அன்பு என்னும் தாய் பெற்று வளர்க்கும் குழந்தையே அருள் என்கிறார். த்

திருவள்ளுவர் சில இடங்களில் சில உண்மைகளை எடுத்துரைக்கின்ற பொழுது, தாம் பல நூல்களை ஆராய்ந்து பெற்ற தெளிவு இது என்று கூறுகிறார். பகுத்துண்டு பல்லுயிர்களை ஓம்ப வேண்டும் என்கிறார். போக்குவரத்து குறைந்த அந்தக் காலத்தில் அவர் இந்திய நாட்டில் சில பகுதிகளை மட்டுமே கண்டிருக்கக்கூடும். ஆயினும் வள்ளுவரின் நெஞ்சம் பரந்த பெரிய உலகமெல்லாம் அளாவி நின்றது. திருவள்ளுவர் அறநெறியில் அழுத்தமான நம்பிக்கை உடையவர். மறந்தும் பிறர்க்குக் கெடுதியானவற்றை எண்ணக் கூடாது. அவ்வாறு எண்ணினால் எண்ணியவனுக்கே கெடுதி விளையும், அவ்வாறு கெடுதி விளையுமாறு அறமே செய்து விடும் என்கிறார்

இலங்கையில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பித்தல்

திருமதி கலாவல்லி சந்திரமோகன்
முதுநிலை ஆராய்ச்சியாளர்
மொழித் துறை
திறந்தநிலைப் பல்கலைக்கழகம், இலங்கை

போர்த்துக்கேயர், ஒல்லாந்தர் ஆகியோரின் குடியேற்றவாத ஆட்சியின் பின்னர், 1800களில் ஆசியாவின் பல நாடுகள் ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழ் வந்தன. அந்தவகையில் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளைக் குறிப்பிட்டுக் கூறலாம். அவ்வாறு ஆங்கிலேயரின் ஆட்சியின்கீழிருந்த இலங்கையில் கல்வி, நிர்வாகம் போன்ற பல துறைகளிலும் ஆங்கிலேயர் ஆங்கிலத்திற்கே முக்கியத்துவமளித்தனர். அதுமட்டுமன்றி இலங்கையின் ஆட்சிமொழியும் ஆங்கிலமாகவே காணப்பட்டது. ஆதலால் இலங்கைச் சுதேசிகளான தமிழர்களும் சிங்களவர்களும் கல்வி, தொழில் மற்றும் தம் சுயதேவைகள் காரணமாக ஆங்கில மொழியைக் கற்பதில் அதிக ஆர்வம் காட்டினர். அவ்வாறு ஆங்கிலம் கற்றவர்களுக்கு ஆங்கிலேயர் உயர் பதவிகளை வழங்கியமையால் அவர்கள் சமூகத்தில் உயர்ந்த அந்தஸ்தினைப் பெற்றனர். அதுமட்டுமன்றித் தமிழரும் சிங்களவரும் ஆங்கில மொழியில் கருத்துப் பரிமாற்றம் செய்தமையால் அவர்களுக்கிடையே சிறந்த புரிந்துணர்வும் சமூக ஒற்றுமையும் மேலோங்கியிருந்தன. ஆதலால் ஆங்கிலேயரின் ஆட்சிக் காலத்திலே இலங்கையில் தமிழ், சிங்கள மக்கள் எவ்வித இனப் பாகுபாடோ, முரண்பாடோ, காழ்ப்புணர்வோ இன்றி ஒற்றுமையோடு உறவாடினர்.

ஆயினும் 1948ஆம் ஆண்டு இலங்கைச் சுதந்திரமடைந்த பின்னர் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்தால் இலங்கையின் மொழிக் கொள்கையிலும் மாற்றம் ஏற்பட்டது. 1956ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த திரு. பண்டாரநாயக்கவால் சிங்கள மொழியே ஆட்சிமொழி என்ற மொழிக்கொள்கை முன்வைக்கப்பட்டு, அது அனைத்துத் தரப்பினராலும் ஏற்றுக் கொள்ளப்பட்டது. அத்தோடு தாய்மொழியில் உயர்கல்வி என்ற மொழிக்கொள்கையும் கட்டாயப்படுத்தப்பட்டமையால் அனைவரும் தமது தாய்மொழியில் உயர் கல்வியைப் பெற்றனரே தவிர, தமிழர் சிங்கள மொழியையோ அல்லது சிங்களவர் தமிழ் மொழியையோ இரண்டாம் மொழியாகக் கற்பதில் ஆர்வம் காட்டவில்லை. ஆதலால் தமிழ், சிங்கள மக்களுக்கிடையே கருத்துப் பரிமாற்றம் குறைவடைய, புரிந்துணர்வும் அற்றுப் போனது. மாறாக அவர்களுக்கிடையே காழ்ப்புணர்வும் முரண்பாடுகளும், இனவிரோத மனப்பான்மையும் மேலோங்கியதன் விளைவே இலங்கையைச் சீரழிவிற்குட்படுத்திய 30 வருடக்காலப் போரும் அதன் விளைவான பல இலட்ச

மனித உயிர்ப்படுகொலைகளுமாகும். ஆயினும் போர் முடிவிற்கு வந்ததன் பின்னரே அது ஏற்பட்டமைக்கான முக்கியமான காரணிகளுள் மொழியும் ஒன்று என்பதைத் தமிழரும் சிங்களவரும் உணர்ந்து கொண்டனர். அதன் பின்னரே தமிழர் சிங்கள மொழியையும் சிங்களவர் தமிழ்மொழியையும் இரண்டாம் மொழியாகக் கற்கும் முயற்சியில் அதிகமானவர்கள் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக இலங்கைவாழ் சிங்களவர்கள் தமிழ்மொழியைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகின்றமையை அவதாக்கக் கூடியதாகவுள்ளது.

அந்தவகையில் களனிப் பல்கலைக்கழகம், இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம் போன்ற பல பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வி நிறுவகம், அரசகரும மொழிகள் திணைக்களம் மற்றும் அரச பாடசாலைகள் போன்ற இலங்கை அரசு சார்ந்த நிறுவனங்களிலும் பல தனியார் நிறுவனங்களிலும் சிங்கள மாணவர்களுக்குத் தமிழ்மொழி இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகின்றது. அவற்றுள் அரசு பாடசாலைகள் தவிர்ந்த ஏனைய நிறுவனங்களில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும் போது ஏற்படும் சிக்கல்கள் இங்கு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. அச்சிக்கல்களை ஆசிரியர் சார்ந்த சிக்;கல்கள், மாணவர் சார்ந்த சிக்கல்கள், கலைத்திட்டம் சார்ந்த சிக்கல்கள், சமூகம் சார்ந்த சிக்கல்கள் என வரிசைப்படுத்திக்கொண்டே செல்லலாம். அவற்றுள் கலைத்திட்டம், ஆசிரியர்கள், மாணவர்கள், சமூகச்சூழல் சார்ந்த சிக்கல்கள் இங்கு ஆய்வுக்காக எடுத்துக்கொள்ளபட்டு, அவற்றுக்குரிய தீர்வுகள் முன்வைக்கப் படுகின்றன. அந்தவகையில் இவ்வாய்வானது இலங்கையில் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் ஏற்படும் சிக்கல்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும் முன்வைப்பதனை நோக்கமாகக்கொண்டு, விளக்க முறையியல் மற்றும் பகுப்பாய்வு முறையியல் போன்ற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆய்வு செய்யப்பட்டுள்ளதோடு, இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத்தில் ஆய்வாளரின் கற்பித்தல் அனுபவம் மற்றும் பங்கேற்றல், கலந்துரையாடல், வினாநிரல் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு ஆய்வுக்குரிய தகவல்கள், சேகரிக்கட்டுள்ளன.

முதலாவதாகக் கலைத்திட்டம் சார்ந்த சிக்கல்கள் இங்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. கலைத்திட்டத்துடன் தொடர்புடையனவாகப் பல்வேறு சிக்கல்கள் காணப்பட்டாலும் ஆய்வின் சுருக்கம் கருதி, கீழ்வரும் தலைப்புக்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் மட்டும் இங்கு முன்வைக்கப் பட்டுள்ளன.

அ. ஒலிகள்

ஆ. எழுத்துக்கள்

இ. தாய்மொழியின் செல்வாக்கு

தமிழ்மொழி கற்பிக்கின்றபொழுது ஒலிகள், எழுத்துக்கள், தாய்மொழியின் செல்வாக்குத் தொடர்பாக ஏற்படுகின்ற சிக்கல்களை உயிர், மெய், உயிர்மெய் என்றவாறு பகுத்து நோக்கலாம்.

உயிர் எழுத்துக்கள்

உயிர் எழுத்துக்களைக் கற்கும்போது அவ்வளவாகச் சிக்கல்கள் ஏற்படுவதில்லை. காரணம் தமிழிலுள்ள எல்லா எழுத்துக்களுக்கும் இணையான எழுத்துக்கள் சிங்கள மொழியில் உள்ளன. ஆயினும் தமிழ்மொழியில் இல்லாத இரண்டு உயிர் எழுத்துக்கள் சிங்கள மொழியிலுள்ளன. அவற்றுக்கு இணையான தமிழ் ஒலிகள் ரி, ரீ ஆகிய மெய்யொலிகள் ஆகும். மேலும் உயிர் எழுத்துக்களுள் உகரம் சொல்லுக்கு முதலில் வரும்போது ஒரு விதமாகவும் சொல்லுக்கு இறுதியில் வரும்போது வேறு விதமாகவும் உச்சரிக்கப்படுகின்றது. அவ்வாறு சொல் இறுதியில் வருகின்ற உகரத்தை உச்சரிப்பதில் குறிப்பிட்ட மாணவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக காடு, வீடு என்பதைச் சிங்கள மொழியில் உச்சரிக்கும்போது காடு (உ), வீடு(உ) என உச்சரிக்கின்றனர். சிங்கள மொழியில் உகரம் சொல்லின் முதலிலும் சொல்லின் இடையிலும் சொல்லின் இறுதியிலும் வரும்போது உகரமாகவே உச்சரிக்கப்படுவதாலேயே அம்மாணவர்களுக்கு இத்தகைய சிக்கல் ஏற்படுகின்றது. இது தாய்மொழியின் செல்வாக்கினால் தோன்றும் உச்சரிப்புச் சார்ந்த சிக்கல் ஆகும். அதேபோல் தமிழ்மொழியில் அ, ஆ, இ, ஈ, எ, ஏ ஆகிய எழுத்துக்களும் முறையே இரண்டு விதமான உச்சரிப்புக்களைக் கொண்டுள்ளன. இவ்வெழுத்துக்களை அடுத்து வருகின்ற எழுத்துக்களின் அடிப்படையிலேயே அத்தகைய உச்சரிப்பு வேறுபாடுகள் ஏற்படுகின்றன. ஆயினும் சிங்கள மொழியில் இவ்வாறான ஒலி வேறுபாடுகளின்மையால் குறிப்பிட்ட ஒலிகளை உச்சரிக்கின்றபொழுது மாணவர்கள் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

மெய் எழுத்துக்கள்

தமிழிலுள்ள அனைத்து மெய் எழுத்துக்களுக்கும் இணையான எழுத்துக்கள் சிங்கள மொழியில் உள்ளன. ஆனால் அவற்றை உச்சரிப்பதில் அம்மாணவர்களுக்குச் சிரமம் ஏற்படுகின்றது. குறிப்பாக ந், ன், ண், ழ், ள், ல், ற், ர் போன்ற எழுத்துக்களைக் குறிப்பிடலாம். சிங்கள மொழியிலும் இவ்வாறான ஒலி வேறுபாடுகள் உண்டு. அம்மொழியில் இத்தகைய வேறுபாடுகள் மூர்தஜ அல்ணயன்ன, தன்தஜ அல்நயன்ன சஞ்ஞக்க அல்லயன்ன, என மேலே குறிப்பிடப்பட்டுள்ள எழுத்துக்கள் பிரித்தறியப்படுகின்றன. ஆயினும் தமிழ் ஒலிகளையும் சிங்கள ஒலிகளையும் உச்சரிப்பதில் மிகுந்த வேறுபாடுகள் உள்ளன என்பது இங்குக் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

உயிர்மெய் எழுத்துக்கள்

குறிப்பாக உயிர்மெய் எழுத்துக்களைக் கற்கும்போதுதான் சிங்கள மாணவர்கள் பல்வேறு சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். காரணம் அவ்வெழுத்துக்களின் ஒலி வேறுபாடுகளும் உச்சரிப்பு முறையுமாகும். பொதுவாக உயிர்மெய் எழுத்துக்கள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூன்று வகையில் பிரித்துக் கற்பிக்கப்படுகின்றன.

வல்லினம் க

தமிழ் மொழியிலே 'க' என்ற எழுத்து, சொல்லின் முதலில் வரும்போது ஒருவிதமாகவும் (உதாரணம்: கண், கத்தி.) சொல்லின் இடையில் இரட்டித்து

வரும்போதும் ஒருவிதமாகவும் (உதாரணம்: அக்கா, பக்கம்.) அதேபோல் சொல்லின் இடையில் இரண்டு உயிர்களுக்கிடையில் வரும் போது வேறு விதமாகவும் (உதாரணம் : பகல், முகம்.) அதேபோல் ம் ய், ர், ல, ள், ழ் ஆகிய இடையின மெய்களை அடுத்து வரும்போது ஒரு விதமாகவும் (உதாரணம் : செய்கை, அவர்கள், கொள்கை, வாழ்க) என உச்சரிக்கப்படுகின்றன. அத்தோடு ஙகர மெய்யை அடுத்து வரும்போது சற்று அழுத்தமாக உச்சரிக்கப்படுகின்றது. (உதாரணம் : தேங்காய், தங்கம்). ஆனால் சிங்கள மொழியிலே இவ்வொவ்வொரு ஒலிக்கும் தனித்தனி எழுத்துக்களுள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

இதேபோல் ஏனைய வல்லெழுத்துக்களான ச, ப, த ஆகியவையும் சொல் முதல், சொல்லிடை, சொல்லிறுதி ஆகிய நிலைகளில் வெவ்வேறான உச்சரிப்புக்களைப் பெறுகின்றன. இவை மொழியியல் ரீதியில் ஒரு ஒலியனின் மாற்றொலியன்கள் எனக் குறிப்பிடப்படுகின்றன. இந்த ஒவ்வொரு எழுத்துக்கும் சிங்கள மொழியிலே முறையே ஐந்து எழுத்துக்கள் உள்ளன. ஆனால் அவை தமிழ்மொழியில் இருப்பதுபோன்ற விதிகள் ஏதுமின்றிச் சொல்லின் முதலிலும் இடையிலும் கடையிலும் என எல்லா நிலைகளிலும் வருகின்றமை இங்குக் குறிப்பிட்டுக்கூறக் கூடிய ஒரு விடயமாகும்.

ட

'ட' என்ற எழுத்துக்கு இணையாகச் சிங்கள மொழியிலே ஐந்து எழுத்துக்கள் உள்ளன. தமிழ்மொழியில் 'ட' என்ற எழுத்து சொல் முதலில் வருவதில்லை. ஆனால் பிறமொழிச் சொற்களில் வருகின்றது. டாக்கா, டீசல், டை, டுமீல் போன்ற சொற்களை உதாரணங்களாகக் குறிப்பிடலாம். அதேபோல் சிங்கள மொழியிலும் இவ்வெழுத்து சொல்லின் முதலில் வருவதில்லை. அங்கு 'டக்கய' என்ற சொல்லின் முதலில் மட்டுமே வருகின்றது. 'டக்கய' என்றால் 'தகரம்' என்று பொருள்படும். இது சிங்கள மொழிச் சொல் அன்று. ஒல்லாந்து அல்லது போர்த்துக்கீச மொழியாக இருத்தல் வேண்டும் என்பது ஆய்வாளர்களின் கருத்தாக உள்ளது. தமிழ்மொழியில் 'ட' என்பது சொல்லின் இடையில் (இரண்டு உயிர்களுக்கிடையில்) வரும் போது ஒரு விதமாகவும் (உதாரணம் : படம், குடம்). அதேபோல் சொல்லிடையில் இரட்டித்து வரும்போது வேறுவிதமாகவும் (உதாரணம் : பட்டம், முட்டாள்). ணகர மெய்யை அடுத்து வரும்போது சற்று அழுத்தமாகவும் உச்சரிக்கப்படுகின்றது. (உதாரணம் : சண்டை, மண்டபம்). ஆனால் இவ்வெழுத்தைக் குறிக்கும் சிங்கள எழுத்துகள் ஐந்தும் சொல்லின் இடையிலும் கடையிலும் வருவதோடு அவற்றின் ஒலிகளும் வேறுபடுகின்றன.

ற

றகரம் தமிழ்மொழியில் சொல்லின் முதலில் வருவதில்லை. ஆயினும் சில இடங்களில் வருகின்றபோது இகரம் பெற்று வருகின்றது. (உதாரணம் : இறப்பு, இறகு). பிறமொழிச் சொற்களிலும் இகரம் பெற்று வருகின்றது. (உதாரணம் : இறப்பர், இலாந்தர், இறாக்கை, இறம்புட்டான்). மேலும் இவ்வெழுத்து சொல்லிடையில் இரண்டு உயிர்களுக்கிடையில் வருகின்றபோது ஒரு விதமாகவும்

(உதாரணம் : அறம், கறுப்பு.) சொல்லிடையில் இரட்டித்து வரும்போது வேறு விதமாகவும் (உதாரணம் : வெற்றி, புற்று.) என உச்சரிக்கப்படுகின்றது. ஆனால் சிங்கள மொழியிலே இவ்வெழுத்துக்கு இணையாக இரண்டு எழுத்துக்கள் உள்ளன. அவை சொல் முதலிலும் இடையிலும் இறுதியிலும் வருகின்றன.

மெல்லின, இடையின எழுத்துக்கள்

மெல்லின எழுத்துக்களை உச்சரிப்பதில் சிங்கள மாணவர்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக ணகர னகர உச்சரிப்பு, லகர, ழகர, ளகர உச்சரிப்பு அம்மாணவர்களுக்குப் பெரும் சவாலாக உள்ளது. ஏனைய மெல்லின, இடையின எழுத்துக்களை உச்சரிப்பதில் அவர்களுக்குச் சிரமம் ஏற்படுவதில்லை. காரணம் அவை ஓர் ஒலியையே கொண்டுள்ளன என்பது மட்டுமன்றி அவற்றுக்கு இணையான எழுத்துக்களும் சிங்கள மொழியில் உள்ளன.

இவ்வாறு வல்லின, மெல்லின, இடையின எழுத்துக்களுள் சில சொல் முதலில், சொல்லிடையில், சொல்லிறுதியில் என இலக்கண விதிகளை அடிப்படையாகக் கொண்டும், உச்சரிப்பு முறைக்கேற்பவும் ஒலியியல் ரீதியில் வேறுபடுவதால் மாணவர்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். குறிப்பாக வளைநா ஒலிகள், பல்லண்ண ஒலிகள் போன்றவற்றை உச்சரிக்கின்ற பொழுது மாணவர்கள் பெறும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர். சிங்கள மொழியிலுள்ள ஒலிகளும் உச்சரிப்பு முறை, உச்சரிக்கும் இடம் என்றவகையில் அமைந்திருந்தபோதும் தமிழ் மொழி போன்று ஒரே எழுத்து பல்வேறு முறையில் ஒலிக்கப்படுவதில்லை. மாறாகப் பல்வேறு ஒலிகளுக்குமெனத் தனித்தனி எழுத்துக்கள் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர் சார்ந்த சிக்கல்கள்

ஆசிரியர் சார்ந்தச் சிக்கல்களுள் முதலிடம் பெறுவது சிங்கள மொழியில் நன்கு தேர்ச்சிபெற்ற ஆசிரியர்களை இனங்காண்பதாகும். இலங்கையைப் பொறுத்தளவில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்குக் கொடுக்கப்படுகின்ற முன்னுரிமை சிங்கள மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதற்குக் கொடுக்கப்படுவதில்லை என்பது அனைவரும் அறிந்த ஒரு விடயமாகும். தற்போது பாடசாலைகளில் தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளும் இரண்டாம் மொழினயாகக் கற்பிக்கப்படுகின்றன. ஆயினும் இவ்விரு மொழிகளையும் கற்பிக்கும் ஆசிரியர்களுள் சிறந்த முறையில் கற்றுத் தேர்ச்சி பெற்றவர்கள் விரல்விட்டு எண்ணக் கூடியவர்களே உள்ளனர். அவர்களும் பல்வேறு துறைகளில் தொழில் புரிவதனால் கற்பித்தற் செயற்பாட்டிற்கு ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் மிகவும் சிக்கல் வாய்ந்த விடயமாக உள்ளது. மேலும் சிங்கள மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட ஒருசிலரும் தமிழ்மொழியில் கற்றுத் தேர்ந்தவர்களாக உள்ளனர். ஆயினும் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் அம்மொழியைத் தமிழாசிரியர்கள் மூலம் கற்பதனையே பெரிதும் விரும்புகின்றனர். அதுவே அவர்களின் வேண்டுகோளாகவும் உள்ளமை கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய விடயமாகும்.

தமிழைத் தாய்மொழியாகக் கொண்டவர்களுள் தமிழர்கள் போலவே முஸ்லிம்களும் சிங்கள மொழியில் தேர்ச்சி பெற்றவர்களாக உள்ளனர். குறிப்பாக இலங்கையில் தமிழ் - சிங்கள மொழிகள் தொடர்பான மொழிபெயர்ப்புத் துறையிலும் கற்பித்தல் துறையிலும் அவர்களது பங்களிப்புக்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவையாக உள்ளன. ஆயினும் தமிழ்ப் பேச்சு வழக்கினைக் கற்பிக்கின்றபோது உச்சரிப்பு தொடர்பான பிரச்சினைகள் இவர்களுக்கு ஏற்படுகின்றன. பொதுவாகப் பேச்சுத் தமிழ் கற்பிக்கின்றபொழுது பிராந்தியம் சாராத ஒரு பொதுவான பேச்சு வழக்கே கற்பிக்கப்படல் வேண்டும். பேச்சு வழக்கினை நாம் இதுதான் உயர்ந்தது, இது தாழ்ந்தது என்றெல்லாம் பாகுபடுத்த முடியாது. ஆனால் அதனைக் கற்பிக்கின்ற பொழுது அது ஒரு பொதுவான, தரமான பேச்சு வழக்காக இருத்தல் கட்டாயமாகும். அத்தோடு அதனை கற்பிக்கின்ற ஆசிரியரும் தமக்குரிய பேச்சு வழக்கினை விடுத்து, பாடநூலில் தரப்பட்டுள்ள பேச்சு வழக்கினைப் பின்பற்றித் தம் கற்பித்தற் செயற்பாட்டினை அமைத்துக்கொள்ளல் அவசியமாகின்றது. அவ்வாறு கற்பிக்கின்றபொழுது குறிப்பிட்ட நாட்டில் ஒன்றுக்கும் மேற்பட்ட பிராந்தியப் பேச்சு வழக்குகள் வழங்கப்படுமாயின், பொதுப் பேச்சு வழக்கோடு அவற்றை ஒப்பீடு செய்து கற்பிக்கலாம். காரணம் பேச்சு வழக்கு என்பது மாணவர்கள் தம் அன்றாடத்தேவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்வதற்காகக் கற்றுக்கொள்வது. ஆகவே பொதுக் கிளைமொழியை, மாணவர் வாழும் நாட்டில் வழங்கப்படுகின்ற ஏனைய கிளைமொழிகளோடு தொடர்புபடுத்திக் கற்பிக்கின்றபொழுது அது அவர்களுக்குப் பன்மடங்கு பயனுடையதாக அமையும் என்பதற்கு மாற்றுக் கருத்து இருக்க முடியாது.

அதேபோல் சில ஆசிரியர்கள் தம் அனுபவத்தினை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தலில் ஈடுபடுகின்றனரேயன்றி நவீனத் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு கற்பிப்பதில் அக்கறையற்றவர்களாக உள்ளனர். இன்றைய நவீன யுகத்தில் மொழி கற்பித்தல் தொடர்பாகப் பல நவீனத் தொழில்நுட்பங்கள் பயன்படுத்தப்படுகின்றன. மாணவருக்குரிய பாடநெறிகள் கனணியை அடிப்படையாகக் கொண்டு வடிவமைக்கப்படுகின்றன. அவ்வாறான பாடநெறிகளைக் கற்பிக்கின்பொழுது அவை தொடர்பான அறிவு ஆசிரியருக்கு அத்தியாவசியமாகின்றது. ஆனால் அத்தகைய அறிவைப் பெறுவதில் ஆசிரியர்கள் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை. ஆனால் இளம் தலைமுறையைச் சார்ந்த ஆசிரியர்கள் நவீனத் தொழில்நுட்பத்தையும் கணினியையும் அடிப்படையாகக் கொண்டு கற்பிப்பதனையே பெரிதும் விரும்புகின்றனர். ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் அத்தகையவர்களின் எண்ணிக்கை மிகச்சொற்பமாகவே உள்ளமை தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பிப்பதில் பின்னடைவை ஏற்படுத்துகின்றது.

அடுத்து, குறிப்பிட்ட மொழிக் கற்பித்தலில் ஆசிரியன் மனப்பாங்கும் செல்வாக்குச் செலுத்துகின்றது. பொதுவாக ஆசிரியர் என்பார் பக்கச்சார் பற்றவராக இருத்தல் வேண்டும் என வலியுறுத்தப்படுகின்றது. ஆனால் இலங்கையைப் பொறுத்தளவில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்கள் சிறுபான்மை இனத்தைச் சார்ந்தவர்களாகவும் கற்கும் மாணவர்கள் பெரும்பான்மை இனத்தைச்

சார்ந்தவர்களாகவும் உள்ளனர். இந்நிலையில் நாட்டுச் சூழலும் கற்பித்தற் செயற்பாட்டில் தாக்கம் செலுத்துவதை அவதானிக்க முடிகின்றது. சில ஆசிரியர்களும் மாணவர்களும் வகுப்பறையில் முரண்பட்டுக்கொள்வதை அவதானிக்க முடிகின்றது. மேலும் சில ஆசிரியர்கள் மனதளவில் மாறுபட்ட மனப்பாங்குடன் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர். சில ஆசிரியர்கள் வெளிப்படையாகவும் சில ஆசிரியர்கள் மறைமுகமாகவும் தம் மாறுபட்ட மனப்பாங்கினை வெளிப்படுத்துகின்றனர். அவ்வாறான சந்தர்ப்பங்களிலே மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதேவேளை தமிழாசிரியர்கள் எவ்விதப் பாராபட்சமுமின்றி அர்ப்பணிப்புடன் சிங்கள மாணவர்களுக்காகத் தம் கற்பித்தற் செயற்பாட்டில் ஈடுபடுவதனையும் அம்மாணவர்கள் வாயிலாக அறிய முடிகின்றமை இவ்விடத்தில் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும்.

மாணவர்களின் மனப்பாங்கு

இலங்கையில் தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் தம் தாய்மொழியிலும் ஆங்கில மொழியிலும் சிறந்த ஆளுமையுடையவர்களாக உள்ளனர். ஆனால் தமிழ் அவர்களுக்கு அறிமுக மில்லாத ஒருமொழி. மேலும் அவர்கள் தம் தாய்மொழிக்கும் ஆங்கில மொழிக்கும் கொடுக்கும் முக்கியத்துவத்தினைத் தமிழ் மொழிக்குக் கொடுப்பதில்லை. தாய்மொழியையும் ஆங்கில மொழியையும் மிகுந்த ஈடுபாட்டுடனும் அக்கறையுடனும் ஆர்வத்தோடும் அறிவுக்காகக் கற்கின்றனர். ஆனால் அவர்கள் தமிழ்மொழியைக் கற்பதன் நோக்கம் பலவாறாக உள்ளது. சிலர் சான்றிதழுக்காகத் தமிழ் கற்கின்றனர். சிலர் சம்பள உயர்விற்காகக் கற்கின்றனர். சிலர் தமிழ் தமக்குத் தெரியாமல் இருப்பது ஒரு பெரிய குறைபாடு என்ற தாழ்வுச்சிக்கல் மனப்பான்மையினால் கற்கின்றனர். சிலர் தாய் தந்தையரின் வற்புறுத்தல் காரணமாகக் கற்கின்றனர். சிலர் பொழுது போக்கிற்காகக் கற்கின்றனர். மிகச் சிலரே அறிவுக்காக ஆர்வமுடன் தமிழ் மொழியைக் கற்கின்றனர். குறிப்பாகப் பாடசாலை மாணவர்களும் அவர்களது பெற்றோரும் தமிழ்மொழியை ஒரு சுமையாகவே கருதுகின்றனர்.

தமிழ் என்பது அதிக அளவில் எழுத்துக்களையுடைய ஒரு மொழி. எனவே அதனைத் தம்மால் மிக இலகுவாகக் கற்றுக்கொள்ள முடியாது என்ற எதிர்மறையான சிந்தனையுடனேயே மாணவர்கள் தமிழ் கற்க வருகின்றனர். அவர்கள் பாடநூலில் கொடுக்கப்பட்டுள்ள தமிழ் அரிச்சுவடியை கண்ட உடனேயே தமக்குத் தமிழ்மொழி கற்க முடியாது என்று எண்ணுகின்றனர். காரணம் அதிலுள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை ஆகும். ஆனால் சிங்கள மொழியும் தமிழ்மொழி போன்ற அதிகளவான எழுத்துக்களையும் கட்டமைப்பினையும் கொண்டே அமைந்துள்ளது. ஆயினும் மாணவர்கள் தமிழ்மொழியைக் கற்பதைப் பெரிய சுமையாக கருதுகின்றனர். மேலும் தமிழ் மொழியானது கடின நடையமைப்பைக் கொண்ட ஒரு சிக்கலான மொழி என்ற மனப்பாங்குடன் அவர்கள் வகுப்பறைக்கு வரும்பொழுது அவர்களால் கற்பித்தற் செயற்பாட்டில் முழுமையாக ஈடுபட முடியாது போகின்றது.

ஆசிரியர், சிங்கள மொழி, சிங்கள மக்கள், அவர்களது கலாசாரம், பண்பாடு தொடர்பாக எத்தகைய மனப்பாங்குடையவராக இருப்பார் என்ற மனக்குழப்பம் உடையவர்களாகச் சில மாணவர்கள் வகுப்பறையில் இருப்பார்கள். அவர்கள் ஆசிரியரைச் சரியான முறையில் புரிந்து கொள்ளாதவிடத்தும் ஆசிரியர்கள் குறிப்பட்ட மாணவர்களைச் சரியான முறையில் இனங்கண்டு கொள்ளாதவிடத்தும் அங்குக் கற்றல் -கற்பித்தற் செயற்பாடு இடம்பெறுவதற்கான சாத்தியப்பாடு நிச்சயமாக இல்லை. பல மாணவர்கள் இத்தகைய மனக்குழப்பத்துடன் தொடர்ந்து வகுப்பறையில் இருக்கின்றபொழுது அவர்கள், ஆசரியருடன் ஒரு சுமூகமான உறவினைக் கட்டியெழுப்பும் திறனற்றவர்களாக இருப்பார்கள். அது அவர்களின் கற்றல் செயற்பாட்டில் நிச்சயமாகப் பின்னடைவையே ஏற்படுத்தும்.

ஆசிரியர் தமிழ் இனத்தைச் சார்ந்தவர். நானோ சிங்கள மாணவர். எனக்கு இவர் சரியான முறையில் முழுமையாகத் தமிழ்மொழியைப் பயிற்றுவிப்பாரா? அல்லது வேறுபாடு காட்டுவாரா? போன்ற ஐயப்பாடுகளும் கற்றல் - கற்பித்தற் செயற்பாட்டில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இலங்கையில் கடந்த காலங்களில் நிலவிய போர்க்காலச் சூழலில் இத்தகைய சிக்கல்கள் தமிழ்மொழியை வெற்றிகரமாகக் கற்பிப்பதில் பெறும் தாக்கத்தினை ஏற்படுத்தின. மாணவர்கள், ஆசிரியர் பற்றிய எதிர்மறை எண்ணத்துடன் கற்றல் செயற்பாட்டில் ஈடுபடுகின்றபோது அது அவர்களது கற்றற் செயற்பாடுகளை மட்டுமன்றி ஆசிரியரின் கற்பித்தற் செயற்பாடுகளையும் வெகுவாகப் பாதிக்கின்றமையை அவதானிக்க முடிகின்றது.

தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாத மாணவர்கள், தமிழ்மொழி, அம்மொழியினைப் பயன்படுத்தும் மக்கள், அவர்களின் கலாசாரம், பண்பாடு போன்றவற்றில் நேர்த்தன்மையான எண்ணமும் நன்மதிப்பும் நற்சிந்தனையும் இல்லாது அம்மொழியைக்; கற்கும் போது அதனைச் செம்மையாகக் கற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுகின்றது. சில மாணவர்கள் தமிழ் மக்கள், அவர்களது பண்பாடு, கலாசாரம் போன்றவற்றில் எதிர்மறை எண்ணத்துடன் குறிப்பிட்ட மொழியைக் கற்க முயற்சி செய்கின்றபோது, அச்செயற்பாடு ஆசிரியரின் கற்பித்தற் செயற்பாட்டில் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்துவதனைக் காணலாம்.

பாடசாலையைத் தவிர்த்து ஏனைய அரசுசார், அரசுசாரா நிறுவனங்களில் . தமிழை இரண்டாம் மொழியாகக் கற்கும் மாணவர்கள் தொழில் புரிபவர்களாக உள்ளனர். அல்லது வேறு ஏதாவது ஒரு பாடநெறியைக் கற்பதில் ஈடுபட்டவர்களாக உள்ளனர். ஆகவே அவர்களுக்குத் தமிழ்மொழி ஒரு சுமையாகத் தோன்றுகின்றது. அதனால் அவர்கள் என்னால் இம்மொழியைச் சரியான முறையில் கற்றுக்கொள்ள முடியாது என்கின்ற மனப்பான்மையுடன் கற்கின்ற போது அது, அவர்களது கற்றலில் எதிர்மறையான தாக்கத்தினை ஏற்படுத்தி விடுகின்றது. மாணவர்களின் அத்தகைய மனப்பாங்கினை மாற்றியமைத்து வகுப்பறையை ஒரு சிறந்த கற்றல் - கற்பித்தல் சூழலாகவும் மாணவர்களுக்கு ஆர்வம் ஏற்படும் வகையிலும் அமைத்துக்கொள்ளல் ஆசிரயரது கடமையாகின்றது.

மாணவர்களின் சமூகச் சூழல்

இரண்டாம் மொழி கற்றலில் மாணவர்களின் சமூகச் சூழல் தொடர்பாகப் பல சிக்கல்கள் முன் நிற்கின்றன. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு அம்மொழியைப் பயன்படுத்துவதற்குப் பல சந்தர்ப்பங்கள் உள்ளன. காரணம் இலங்கையைப் பொறுத்தளவில் எங்கும் சிங்களம், எதிலும் சிங்களம் எல்லாம், சிங்களம் என்ற சூழ்நிலையே உள்ளது. அதனால் தமிழர்கள் மிக இலகுவாகச் சிங்கள மொழியை கற்று, அதனை நாள்தோறும் தம் அன்றாடத் தேவைகளுக்குப் பயன்படுத்துவதால் அம்மொழியில் ஆளுமையுடயவர்களாக உள்ளனர். அதாவது குறிப்பிட்ட மொழியைச் செவிமடுப்பதற்கும் பயன் படுத்துவதற்குமுரிய சூழல் அவர்களுக்கு இயல்பாகவே அமைந்துள்ளது. ஆனால் சிங்கள மாணவர்களுக்கு அத்தகைய சந்தர்ப்பம் மிக மிகக் குறைவாகவே அமைந்துள்ளது. சில மாணவர்களுக்கு வகுப்பறைச் சூழல் மட்டுமே தமிழ் மொழியைச் செவிமடுக்கும் மற்றும் பயன்படுத்தும் சூழலாக அமைந்து விடுகின்றது.

மேலும் தாம் கற்ற தமிழ்மொழியைத் தம் சமூகச் சூழலில் பயன்படுத்தும்போது தம் இனத்தவரால் தமக்கு அங்கீகாரம் கிடைக்காமையால் குறிப்பிட்ட மாணவர்கள் தாம் கற்ற மொழியைப் பயன்படுத்துவதில் சிக்கல்களை எதிர்நோக்குகின்றனர். உதாரணமாக மாணவனது சமூகம், தமிழ் இனத்தவர் மீது வெறுப்புக் கொண்ட ஒரு சமூகமெனில் மாணவனுக்கு உரிய அங்கீகாரம் கிடைக்காது. சில மாணவர்கள் இத்தகைய பாதிப்புக்களால் தமிழ் மொழியைக் கற்பதையே இடைநடுவில் நிறுத்தி விடும் அவலநிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

அதேபோல் சிங்கள மாணவர்கள் தமிழ்ச் சமூகத்தில் தாம் கற்ற தமிழ்மொழியைப் பயன்படுத்தும் போதும் அவர்கள் பல சவால்களை எதிர் நோக்குகின்றனர். குறிப்பிட்ட மாணவர்கள் தாம் கற்ற தமிழ்மொழியைச் சிங்கள எதிர்ப்புச் சமூகமொன்றில் பயன்படுத்துகின்றபோது அம்மாணவனுக்குரிய அங்கீகாரம் கிடைக்கமல் போகலாம். மேலும் இலங்கைவாழ் தமிழர்களுள் அநேகமானவர்கள் சிங்கள மொழியில் சிறந்த ஆளுமையுடையவர்களாக உள்ளனர். எனவே அவர்கள் சிங்களவர்களுடன் தமிழ்மொழியில் உரையாடுவதை விடச் சிங்கள மொழியில் உரையாடுவதையே பெரிதும் விரும்புகின்றனர். ஆதலால் சிங்கள மாணவர்களைப் பொறுத்தளவில் தமிழ் மொழியைப் பயன்படுத்துகின்ற சூழல் என்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

இவ்வாறு இலங்கையிலே தமிழ்மொழியை இரண்டாம் மொழியாகக் கற்பிக்கும்போது கலைத்திட்டம், ஆசிரியர், மாணவர்களின் மனப்பாங்கு, அவர்களின் சமூகச்சூழல் சார்ந்த சிக்கல்கள் தோற்றம் பெறுகின்றன. அத்தகைய சிக்கல்களைத் தீர்ப்பதற்குப் பின்வரும் தீர்வுகள் முன்வைக்கப்படுகின்றன.

தீர்வுகள்

மாணவர்கள் தமிழை இரண்டாம் மொழியாகக் கற்பதன் அவசியம், அதனால் அவர்கள் அடையும் பயன்கள், சமூகம் அடையும் பயன்கள் அதனால்

நாட்டுக்கு ஏற்படும் நன்மைகள் போன்றவற்றை அவர்களின் மனதில் ஆழமாகப் பதிய வைத்தல் ஆசிரியரின் கடமையாகும். வெறுமனே சம்பள உயர்வுக்காகவும் சான்றிதழ்களுக்காகவும் பொழுதுபோக்கிற்காகவும் தமிழ்மொழியைக் கற்காது, அறிவுக்காகக் கற்பதன் அவசியத்தை வலியுறுத்துவதோடு தமிழ்மொழி கற்பதில் ஆர்வத்தையும் ஏற்படுத்தி அவர்களது கற்றல் செயற்பாடுகளைத் தூண்டுவதன் மூலம் ஆசிரியர் தம் கற்பித்தற் செயற்பாட்டினையும் மாணவர்களது கற்றல் செயற்பாட்டினையும் சிறந்த முறையில் மாற்றியமைத்துக் கொள்ளலாம்.

தமிழ்மொழி கற்பதில் மாணவர்களின் தாய்மொழியின் தாக்கத்தினைத் தவிர்த்துக் கொள்வதற்கு, அவர்களுக்காக வடிவமைக்கப்படும் பாடநூல்கள் மொழியியல் ரீதியில் வடிவமைக்கப்படுமாயின் மாணவர்கள் மிக இலகுவாகத் தமிழைக் கற்றுக் கொள்வார்கள். தற்பொழுது இரண்டாம் மொழிக் கற்பித்தலில் மொழியியல் துறை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்குகின்றது. அகில உலக ஒலியியற் கழகத்தாரால் அமெரிக்க முறையிலமைந்த குறியீடுகளைக் கொண்ட நெடுங்கணக்கானது (International Phonetic Association) இன்று உலகளாவிய ரீதியில் வழக்கிலுள்ள அனைத்து மொழிகளுக்கும் பொருந்தக் கூடிய பொதுவான ஒன்றாக அமைந்துள்ளது. ஆகவே இரண்டாம் மொழி கற்பித்தலுக்குரிய பாடநூல்களை மேலே கூறப்பட்டுள்ள உலகப் பொது நெடுங்கணக்கிற்கு ஏற்ப வடிவமைக்கின்ற பொழுது இலங்கையில் தமிழைத் தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் மட்டுமன்றி உலகில் எந்தப் பிரதேசத்தில் வாழ்பவர்களாலும் எவ்விதச் சிரமமுமின்றி மிக இலகுவாகத் தமிழ்மொழியைக் கற்றுக்கொள்ளக்கூடிய சூழ்நிலை உருவாகும். ஆகவே இரண்டாம் மொழியாகத் தமிழ்க் கற்பித்தலில் மொழியியல் முக்கியப் பங்கு வகிக்கின்றது.

தாய் மொழியாகத் தமிழ் கற்பிப்பதற்குப் பயன்படுத்தப்படும் பொது இலக்கண விதிகளைக் கற்பிக்காது அவற்றைச் சற்று எளிமைப்படுத்தி, நவீனத் தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி மாணவர்களைக் கவரக் கூடிய விதத்தில் கணினியை அடிப்படையாகக் கொண்டு கற்பித்தால் மாணவர்கள் சிறந்த பயனைப் பெறுவார்கள். உதாரணமாக மொழி விளையாட்டுக்கள், ஒலி நாடாக்கள், காண்ஒலிக்காட்சிகள், பல்லூடகங்கள் போன்றவற்றினைக் குறிப்பிடலாம். அதேபோல் தமிழ் மொழியானது கடினமான ஒரு மொழியல்ல. அதனை முறைப்படி கற்றால் மிக இலகுவாகக் கற்றுக் கொள்ளலாம் என்ற மனப்பாங்கினை மாணவர் மனதில் பதியச் செய்தல் ஆசிரியரின் கடமையாகும். அத்தோடு தமிழ் மொழிக்கும் சிங்கள மொழிக்கு மிடையில் வேற்றுமைகளைவிட அதிகளவாக ஒற்றுமைகளே காணப்படுகின்றன என்பதை உறுதி செய்தல் வேண்டும். அதற்கு இரு மொழிகளையும் ஒப்பீடு செய்து கற்பிக்கலாம். குறிப்பாகத் தமிழ் பேச்சு வழக்கினைக் கற்பிக்கின்றபோது அதிலுள்ள பல பிராந்திய வழக்குகள் போல் சிங்கள வழக்கிலும் உள்ளமையைச் சுட்டிக்காட்டலாம். தமிழ் மொழியில் இருப்பது போலவே சிங்கள மொழியிலும் அதிகளவான எண்ணிக்கை களையுடைய எழுத்துக்கள் இருப்பதனை எடுத்துக் கூறலாம்.

ஆசிரியர்கள் தம் கற்பித்தல் அனுபவத்தில் மட்டும் தங்கியிராது நவீனத் தொழில்நுட்பங்களையும், கணினியையும் பயன்படுத்தித் தம் கற்பித்தற் செயற்பாடுகளில் ஈடுபடுவதில் ஆர்வமுடையவர்களாகத் தம்மை மாற்றியமைத்துக் கொள்வதோடு, பல புதிய விடயங்களையும் மாணவர்களுக்கு அறிமுகப்படுத்து மளவுக்குத் தம்மை உருவாக்கிக் கொள்ளல் இன்றைய நவீன யுகத்தில் அத்தியாவசியமான ஒரு செயற்பாடாக உள்ளது என்பதைப் புரிந்து கொண்டு, அதற்கேற்றவகையில் செயற்படல் வேண்டும்.

ஆசிரியர் வகுப்பறைக்குச் செல்லும் முதல்நாள் தாம் ஒரு பக்கச்சார்பற்ற நடுநிலையான ஆசிரியர் என்பதை மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதோடு, மாணவர்களது தாய்மொழி, அவர்களது இனம், கலாசாரம், பண்பாடு தொடர்பான தம் நேர்த்தன்மையான மனப்பாங்கு, நன்மதிப்பு, அறிவு, ஈடுபாடு போன்றவற்றைத் தெளிவாக எடுத்துரைத்தல் அவசியமாகும். அத்தோடு தம் சிங்கள மொழி ஆளுமையையும் வெளிப்படுத்தல் கட்டாயமாகும். அத்தோடு 'மாணவர்களின் மனப்பாங்கு சார்ந்த சிக்கல்கள்' என்ற தலைப்பில் கூறப்பட்டுள்ள விடயங்களை அப்படியே மாற்றியமைத்தால் ஆசிரியர் தம் கற்பித்தற் செயற்பாட்டில் வெற்றியடைவார். அதேபோல் தமிழ்மொழியானது வெறும் பொழுதுபோக்கிற்காகக் கற்கப்பட வேண்டிய ஒரு மொழியல்ல. அது தனித்தன்மை வாய்ந்த ஒரு மொழி. அதன் தொன்மை, சிறப்புத் தன்மை போன்றவை பற்றி அம்மாணவர்கள் மத்தியில் எடுத்துக் கூறல் அவசியமாகும். அத்தோடு அம்மொழியைக் கற்றுக்கொள்வதனால் அவர்களுக்கு ஏற்படும் பயன்பாடுகள் பற்றியும் தெளிவுபடுத்தல் அவசியமாகும். தமிழ்மொழி மட்டுமல்லாது தமிழர்கள், அவர்களது கலாசாரம், பண்பாடு பற்றிய விடயங்களையும் மாணவர்களுக்கு எடுத்துக் கூறுவதன் மூலம் மாணவர்களது எதிர்மறையான சிந்தனைகளை மாற்றி ஆசிரியர்கள் தம் கற்பித்தற் செயற்பாடுகளை வெற்றிகரமாக அமைத்துக் கொள்ள முடியும்.

முடிவுரை

இலங்கையில் இன்று இரண்டாம் மொழியாகத் தமிழ்மொழியைக் கற்பதில் மாணவர்கள் அதிக ஆர்வமுடையவர்களாக உள்ளனர். ஆனால் அதனைக் கற்பிக்கும்போது பல்வேறு சிக்கல்கள் தோற்றம் பெறுகின்றன. அவை கலைத்திட்டம், ஆசிரியர், மாணவர், சமூகச் சூழல் எனப் பலதரப்பட்டவையாகக் காணப்படுகின்றன. அச்சிக்கல்களைச் செவ்வனே தீர்த்துக் கொள்வதன் மூலம் இரண்டாம் மொழிக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளைச் செம்மையாக அமைத்துக்கொண்டு, இலங்கையர் அனைவரும் சிறந்த பலன்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மரபும் மொழியும்

திரு. வை. லோகநாதன்
உதவிப் பேராசியர்
ஸ்ரீஅரவிந்தர் கலை மற்றும்
அறிவியல் கல்லூரி, சேதராப்பட்டு
தமிழ்நாடு, இந்தியா

மொழியின் ஆளுமை மனிதனைப் புரட்டிப் போடுகிறது. மொழி நாளுக்குநாள் புதியபரிணாமத்தில் பரிணமித்துக் கொண்டிருக்கிறது. எண்ணக் கருத்துக்களை வெளியிட மொழியின் கூறுகளைப் பன்முகநோக்கில் ஆய்வு களாகவும், கட்டுரைகளாகவும், கருத்தரங்குகளாகவும் பல்வேறு பயிலரங்களில் விவாதங்கள் நடைபெற்றுகொண்டிருக்கின்றன. அவ்வகையில் மொழியின் கூறுகளைப் பற்றித் தொல்காப்பியர் மரபாக வகுத்துள்ள எச்சங்கள் தமிழிலக்கியங் களில் எவ்வாறு ஆளப்பட்டுள்ளன என்பதும்,அவைமுற்றா? எச்சமா? என ஆய்வுக்குட்படுத்தவேண்டிய காலச்சூழலில் நாம் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். இதற்குமுன் கே.என். சிவராஜபிள்ளை, வ.அய்.சுப்பிரமணியம் போன்றோர் வினையெச்ச வாய்பாடுகளுள் ஒன்றான செய்து என்பதினை வினைமுற்று என்றே குறிப்பிட்டுள்ளனர். இதற்குத் திராவிட மொழிகளின் உதவிகளையும் ஆய்வாளர்கள் நாடியுள்ளனர். குறிப்பாக மலையாளம்,கன்னடம்,தெலுங்கு, துளு போன்றவற்றில் இச்செய்து என்னும் வாய்பாடு முற்றாக செயல்படுவதாகக் குறிப்பிடுகின்றனர். இதனையே இரா. கோதண்டராமனும் வலியுறுத்துகின்றார். இச்சூழலில் தொல்காப்பிய எச்சங்களை அடியொற்றிச் சங்க இலக்கியப் பாடல்களின் இவ்வெச்ச வாய்பாடும்,பிற்கால இலக்கியங்களில் இவ்வெச்ச வாய்பாடுகள் பயின்றுவந்துள்ள முறையினைச் சுட்டிக்காட்டியும், அவைக் காலச் சூழலுக்கேற்றவாறு மாறி வந்துள்ளனவா? அல்லது தொல்காப்பியர் வகுத்துள்ள அடிப்படையிலேயே பயின்று வந்துள்ளனவா? என்பதைச் சுட்டுவதே இக்கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.

எச்சவியல் எச்சம்

தொல்காப்பியர் தாம் இயற்றிய தொல்காப்பியத்தில் பத்து வகையான எச்சங்களைக் குறிப்பிட்டுள்ளார். அவைபின்வருமாறு:

பிரிநிலைவினையேபெயரேஒழியிசை
எதிர்மறைஉம்மைஎனவேசொல்லே
குறிப்பே இசையேஆயீர் ஐந்தும்
நெறிப்படத் தோன்றும் எஞ்சுப்பொருட் கிளவி (தொல். 427)

மறைந்தோஅல்லது பிரிதொன்றைத் தழுவியோ நிற்பதை எச்சம் என்பர். அதனைச் சொல்லெச்சம், குறிப்பெச்சம் என இரண்டாகப் பாகுபடுத்துவர்.

வினையெச்சப் பாகுபாடு

வினைகொண்டு முடிவன எல்லாம் வினையெச்சம் என்று தெய்வச்சிலையார் கருதி 'அன்னமரபினாற்' கொள்ளப்படுவனவாக 'இனிக்கொண்டான்', 'நனிவாழ்ந்தான்' என்பவைகளைக் காட்டியதால் அவைகளையும் வினையெச்சம் என்று கருதுகிறார். இனி என்பது ஓர் இடைச்சொல், நனி என்பது உரிச்சொல். இவை போன்றே பெயரைக் கொண்டு முடிவன எல்லாம் பெயரெச்சம் என்று முடிவு செய்து விடக்கூடாது என்று ச.அகத்தியலிங்கம் குறிப்பிடுவார். எனவே, தொல்காப்பியர் கூறிய வாய்பாட்டில் வருபவைகளேஅல்லது வினையடியாகத் தோன்றிய அந்த வாய்பாட்டுச் சொற்களே வினையெச்சம் அல்லது பெயரெச்சம் எனக் கருதவேண்டும்

தொல்காப்பியர் வினையெச்சங்களை, அவை தரும்பொருளின் அடிப்படையில் நேரடியாகப் பகுக்காவிட்டாலும், அவைகளின் தொடரியல் பண்புகளை விளக்கும் போது செய்து, செய்யூ, செய்பு ஆகிய மூன்றும் தன்வினை ஏற்றுவரும் எனக் குறிப்பிட்டுள்ளார். மொழியியலாரும் இம்மூன்றும் வினையடையாகவும், இணைப்பானகாவும் செயல்படக் கூடியவை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

எச்சத் தொடர்

வினையெச்சத்தின் தொகை பற்றி வினையியலில் இரண்டு நூற்பாக்களும், அதன் வடிவவேறுபாடு குறித்து எச்சவியலில் ஒரு நூற்பாவும், அதன் தொடரியல் பண்புபற்றி வினையியலில் ஐந்து நூற்பாக்களும்,கருத்தாடல் நோக்கில் பொருண்மை பற்றி எட்டு நூற்பாக்களும் மேலும், வினையெச்சம், பெயரெச்சம் ஆகியவைகளின் எதிர்மறைபற்றிஒரு நூற்பாவும் கூறியுள்ளார் தொல்காப்பியர்.

வினையியலில் கூறப்படும் எச்சங்கள் வினையெச்சம் என்றும், பெயரெச்சம் என்றும் இருவகைப்படும். வினையைக் கொண்டு முடிவது வினையெச்சம், பெயரைக் கொண்டு முடிவது பெயரெச்சம்.

ஊதாரணமாக வந்த பையன் என்ற பெயரெச்சம், பெயரைக் கொண்டு முடிந்தாலும் வினைச்சொல்லை அடிப்படையாகக் கொண்டநிலையில் இதைவினையியலில் தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார்.

பொதுவாக எச்சங்கள் தமிழ்மொழி வாக்கிய உருவாக்கத்தில் மிக முக்கியமான இடத்தைப் பெறுகின்றன. கலவைவாக்கியங்களிலும், கூட்டு வாக்கியங்களிலும் இவற்றின் பங்கு மிக முக்கியமானதாகும். வினையெச்சத் தொடர்கள் வினைத்தொடரில் உள்ளடங்கி வந்து தலைமை வினையைச் சார்ந்து நிற்பது. சான்றாக,

செழியன் தன் தாய்க்குப் புடவை எடுத்துக் கொடுத்தான்

என்ற தொடரில் புடவை எடுத்து என்ற வினையெச்சத் தொடர் கொடுத்தான் என்னும் தலைமைவினையைச் சார்ந்து செயல்படுகிறது.

வினையெச்சத் தொடரின் செயல்பாட்டினைத் இருவகையாகப் பகுக்கலாம். அவை தொடரியல் செயற்பாடு,பொருளியல் செயறபாடு.

வினையெச்சங்களின் பல துணைவினைகள் தலைமை வினைகளாக வரக்கூடியன. அவர் கொடுத்தருளினார், பொம்மை உடைந்து விட்டது. பாத்திரம் நொறுங்கிப் போயிற்று ஆகியன இவற்றிற்கு உதாரணங்கள் ஆகும்.

அவன் விரைந்து சென்றான் என்ற தொடரில் வினையெச்சம் வினையடையாகச் செயல்படுகின்றது.

இதனை வினையெச்சத் தொடரியல் செயல்பாடுகள் எனக் கூறலாம். வாக்கியங்களில் வினையெச்சத் தொடர்கள் பல்வேறு பொருள்களை உணர்த்தி நிற்கின்றன (ச. அகத்தியலிங்கம். 1987: 24).

பாப்பா உண்டுஉறங்கினாள்

என்ற வாக்கியத்தில் வினையெச்சம் காட்டும் தொழிலும், தலைமை வினைகாட்டும் தொழிலும் ஒன்றன்பின் ஒன்றாக நடைபெற்றுத் தொடர்நிகழ்வுப் பொருளைஉணர்த்துகின்றன.

அவள் தேங்காய் உடைத்துத் தின்றாள்

என்றவாக்கியத்தில் வினையெச்சம் காட்டும் தொழில் தலைமை வினைத் தொழிலுக்குத் துணையாக நிற்பதைக் காணமுடிகிறது. இதனைத் துணைநிகழ்வுப் பொருள் என்றும் கூறலாம்.

அவர் கையை வீசி நடந்தார்

என்னும் தொடரில் வினையெச்சத் தொழிலும்,தலைமை வினைத் தொழிலும் உடன்நிகழ்ந்துஉடன்நிகழ்ச்சிப் பொருளைத் தருகின்றன.

அவன் அரவம் தீண்டி இறந்தான்

என்னும் வாக்கியத்தில் வினையெச்சம் காட்டும் தொழில் தலைமை வினை நிகழ்வதற்குக் காரணமாக அமைந்து காரணப் பொருளைக் காட்டுகிறது.

தாமரை பூத்து அல்லி மலர்ந்த குளம்

இதுபோன்ற தொடர்களில் வினையெச்சம் காட்டும் தொழில் நிகழ்ந்து நிலைபெற்ற ஒரு தன்மையினைக் காட்டுகின்றது. இதனை நிலைமைப்பொருள் என மொழியியலார் குறிப்பிடுவர். இவை பொருளியல் அடிப்படையில் தோன்றியவை ஆகும்.

முடிவுரை

மரபும்,மொழியும் என்னும் தலைப்பில் அமைந்த இக்கட்டுரையில் எச்சங்களின் செயற்பாட்டைச் சில வாய்பாடுகளின் மூலம் தொல்காப்பியரும், மொழியியலாரும் கூறிய விதத்தை ஆராய்ந்து மொழியில் எவ்வாறு புதுமை

காணமுடியும். மரபாக வந்த நிலையிலேயே எச்சங்கள் ஆளப்பட்டுள்ளனவா? அல்லது மொழிநூலார் கூறும் விருந்து என்னும் வனப்புக்குத் தகுந்த மாதிரி புதுமையாக கையாளப்பட்டுள்ளனவா? என்பதை விளக்கும் முகமாகவே இச்சிறிய கட்டுரையின் நோக்கமாகும்.

துணைநூற்பட்டியல்.

1. கோதண்டராமன், இரா. 2004. **தமிழெனப்படுவது**. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
2. சண்முகம், செ.வை. 2004. **தொல்காப்பியத்தொடரியல்**. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை
3. சுப்பிரமணியன், ச.வே.(பதி.)., 2007. **தமிழ் இலக்கண நூல்கள்**, மணிவாசகர் பதிப்பகம், சென்னை.

பெண்ணின் உணர்வு வெளிப்பாடும் மரபு அழுத்தமும் : மருதத்திணைப் பாடல்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு நோக்கு

திருமதி விஜிதா சிவபாலன் திவாகரன்
உதவி விரிவுரையாளர்
களனிப் பல்கலைக்கழகம்
கொழும்பு, இலங்கை

I

நில இயற்கைக்கும் மக்களின் வாழ்க்கை முறைக்கும் இடையே நெருக்கமான உறவு உண்டு என்ற கருத்துக்குச் சங்ககாலச் சமுதாயமும் உட்படுகின்றது. பண்டைத் தமிழ்ச் சமூகம் நில இயற்கையை ஒட்டி ஐந்து வகையான பண்பாட்டு ஒழுக்கங்களைக் கொண்டிருந்தது. இப்பண்பாட்டு ஒழுக்கங்கள் யாவும் அகத்திணை மரபில் 'உரிப்பொருள்' என்று அழைக்கப் படுகின்றன. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை எனப்படும் மக்களின் நில வாழ்வியல் முறைகளுக்கு ஏற்ற வகையில்,

"புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல்
ஊடல் இவற்றின் நிமித்தம் என்றிவை
தேருங்காலைத் திணைக்கு உரிப்பொருளே." (தொல். பொருள்-14)

என்று தொல்காப்பியர் வாழ்வியல் ஒழுக்கங்களை விளக்கியுள்ளார். இங்கு புணர்தல், பிரிதல், இருத்தல், இரங்கல், ஊடல் என்பன மக்களின் ஒழுக்கத்தைக் குறிக்கும் குறியீட்டுச் சொற்களாக அமைந்துள்ளன. இங்கு உரிப்பொருள் வைப்புமுறையில் கூட ஓர் ஒழுங்குமுறை உள்ளது. புணர்தல் என்பது இருவருக்கும் ஒப்ப நிகழ்தலால் அது முதலிலும் புணர்தல் இல்லாவிட்டாலும் புணர்ந்த பின்னும் பிரிவு ஏற்படலாம். தலைவனே பொருளீட்டல் முதலிய வினைவயின் காரணமாகப் பிரிதல் இடம்பெறுகின்றது. தலைவி தலைவனை விட்டுப் பிரிந்து சென்றதாகச் சங்க இலக்கியங்களில் காணமுடியவில்லை. தலைவனைப் பிரிந்த தலைவி அவனை நினைத்து ஆற்றியிருப்பது இருத்தலாகும். இருத்தலில் உள்ள தலைவி தலைவனை நினைத்துப் புலம்பி இரங்குவாள். இந்த நான்கு ஒழுக்கங்களுக்கும் பொதுவானதும் காதலுக்குச் சிறப்பானதும்தான் ஊடல் என்பதனால் இதனை கடைசியாகச் சொல்லப்படுகின்றது. பொதுவாக ஊடல் ஏனைய எல்லா ஒழுக்கங்களிலும் ஊடுருவக்கூடியது.

தமிழிலக்கிய மரபில் அகத்திணை என்பது மனதால் அனுபவித்து உணருவதாகும். அதைச் சொற்களால் வெளிப்படையாக விளம்ப முடியாது. உள்ளத்தால் தான் உணர முடியும். ஆண்-பெண் இருவரும் சேர்ந்து அனுபவித்தலை அது குறிக்கின்றது. இத்தகைய அகத்திணை மரபினூடாக வாழ்வின் உணர்வுகள்,

சமூகக்கட்டுமானங்கள், மரபுசார் விழுமியங்கள், அழுத்தங்கள் எவ்வாறு பேசப்படுகின்றன என்பதை நோக்குவதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும். சங்கப்பாடல்கள் ஆண் - பெண் உறவினூடாகச் சமூகக்கூறுகளையும், உளவியல் கூறுகளையும் உண்மை மாந்தர்களின் உணர்வு வெளிப்பாடாகக் காட்டுகின்றபோது, ஒப்பீட்டளவில் கூற்று நிகழ்த்துபவர்கள் பெருமளவில் பெண்களாகவே இருப்பதனால் பெண்ணின் கூற்றுகளாகவும் உணர்வுசார் வெளிப்பாடாகவும் அவை அமைகின்றன. ஒழுக்க நிலையிலே ஏற்படும் மாற்றங்களை நேரடியாகச் சுட்டிக் காட்டக் கூற்றுநிலைகள் வாய்ப்பாக இருந்துள்ளமை இங்குக் குறிப்பிடத்தக்கதாகும்.

தலைவியினுடைய உணர்வுநிலையை மையமாகக் கொண்டே ஐவகை ஒழுக்க நிலைகள் வகுக்கப்பட்டுள்ளன. இங்குப் பெண்ணின் உணர்வு நிலை மீள்பரிசீனைக்கு உட்படுத்தப்படுகின்றபோது, பெண் நேரடியாகத் தன் உணர்வு நிலைகளைக் கூறினாளா? அல்லது பெண்ணின் உணர்வு இவ்வாறு இருக்கும் என்று புலவர்கள் பாத்திரங்களின் வாயிலாகக் கூறினார்களா? என்ற வினாக்களை எழுப்பமுடிகின்றது. புலவர்கள் அக்காலச் சமூகக் கட்டுமானங்கள், மரபுசார் விழுமியங்கள், அழுத்தங்கள் என்பவற்றிற்கு ஏற்பப் பேசியுள்ளதனைச் சங்க இலக்கிய அகப்பாடல்கள் மூலம் அறியலாம். பெண்ணின் உணர்வு நிலையினை பெண் பாத்திரங்கள் மட்டுமன்றி, ஆண் பாத்திரங்களும் வெளிப்படுத்தி நிற்பதனை அறியலாம். சங்க இலக்கியங்களில் பெண்ணின் கூற்றுநிலையும் உணர்வு வெளிப்பாடும் பொதுவாக ஒப்பீட்டளவில் அதிகமாகக் காணப்படுகின்றன.

II

மருதத்திணையில் காட்டப்படும் ஊடல் ஒழுக்கப்பாடல்கள் மூலம் பெண்ணின் இருப்பும், சவால்களும், உணர்வுவெளிப்பாடும், உளச்சிக்கல்களும், திணிக்கப்படும் மரபுசார் அழுத்தங்களும் பற்றிய விடயங்கள் இக்கட்டுரையில் ஆராயப்படுகின்றன.

மருதநிலமானது வயலும் வயல்சார்ந்த நீர்ப்பாசனம் மிக்க செழிப்பான பகுதியாதலால் விவசாயமும் உற்பத்தித் தயாரிப்பும் தன்னிறைவுத் தன்மையுடையனவாக இருந்ததுடன், உற்பத்திக்கும் உபரி உற்பத்திக்குமான சூழமைவுகளையும் தன்னகத்தே கொண்டுள்ளது. ஏனைய நிலங்களில் வேளாண்மை பண்டமாற்றாகவும் ஆரம்பநிலையாகவுமே இருந்தபோது மருத நிலத்தில் வேளாண்மையின் வளர்ச்சியானது விரிவான தனி நிலவுடைமை வளர்ச்சிக்கு - நிலைத்த குடியிருப்புக்கு- அடிகோலியது.

இத்தகைய செழுமைமிக்க சமுதாய அமைப்பில் வீரயுகத்தின் விறலியர்கள் பரத்தையராக -கணிகையராக, விலைமாதராக - மாறியது வியப்பை அளிக்கும் செயலல்ல. சமூக இயங்குமுறைகளுக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் இடையே உள்ள தொடர்பு காரணமாகப் பரத்தமை ஒழுக்கம் உருவானது. மருதநிலத்தின் செல்வச்செழிப்பு மட்டுமல்ல, ஆண்களின் வருமானப்பற்றாக்குறையும், சங்ககாலப் போரினால் ஆடவர் இறப்பின் மிகுதியும், அதனால் இளம் விதவைகளினது அதிகரிப்பும், திருமணம் செய்து கொள்ள வாய்ப்பில்லாத

மகளிரும் தமது பாலியல் தேவைகளை நிறைவு செய்வதற்கும், குடும்பத்தின் தலைமைத்துவத்தையும் நிர்வாகத்தையும் பேணுவதற்காகத் தமது வாழ்க்கையில் ஆடலையும் பாடலையும் கருவிகளாகக் கொண்டு வாழ்ந்துள்ளமையே பரத்தமையின் தோற்றத்திற்குக் காரணங்களாகக் கூறப்படுகின்றன. இத்தகைய வாழ்க்கைமுறைக்கு அக்குலத்தில் பிறந்த அனைவருமே தொடராகப் பரத்தையராக மாறவேண்டிய சூழ்நிலை உருவானது.

மேலும், சங்ககாலத்தில் தலைவன் தலைவியருக்கிடையே நிகழ்ந்த காதல்நெறியில் ஏற்பட்டுள்ள ஏமாற்றங்களும் பிரிவுகளும் பெண்கள் விலைமாதராகக் காரணமாகலாம். சங்க அகத்திணைப்பாடல்கள் திருமணத்திற்கு முந்திய புணர்தல் (உடல் புணர்ச்சி, உள்ளப்புணர்ச்சி) ஒழுக்கத்தைக் களவுநெறி என்றும் திருமணத்திற்குப் பின்னர் நிகழும் புணர்தலைக் கற்புநெறி என்றும் வரையறுக்கின்றது. அவ்வகையில் தலைவன் - தலைவியரின் திருமணத்திற்கு முன்பதான களவொழுக்கம் பற்றிக் கூறும் பாடல்களில் உள்ளப்புணர்ச்சி மட்டுமன்றி, தலைவன் தலைவியின் உடலை வர்ணிப்பதைக்கொண்டு மெய்யுறுபுணர்ச்சியும் நிகழ்ந்துள்ளது என்று உய்த்துணரக்கூடியதாகவுள்ளது. இதற்குப் பகற்குறி, இரவுக்குறி பற்றிய செய்திகளும் சான்றாகவுள்ளன. இவ்வாறாகக் களவொழுக்கத்தில் ஒழுகிய தலைவன் - தலைவியர் திருமணம் செய்து வாழ்ந்துள்ளதையே பல பாடல்கள் காட்டி நிற்பினும், சில பாடல்கள் களவில் மட்டும் ஒழுகி பிரிந்து சென்ற நிலையையும் காட்டிநிற்கின்றன.

இவற்றினடியாக நோக்கும்போது, தலைவனால் கைவிடப்பட்டு ஏமாற்றப்பட்ட தலைவிக்குச் சமூக முத்திரை குத்தப்பட்டு ஒதுக்கப்பட்ட நிலையிலும், அவளைத் திருமணம் செய்ய வேறு ஆண்கள் முன்வராத நிலையிலும், அன்பு ஆதரவைத் தேடியும், பாலியல் தேவைகளை நிறைவு செய்வதற்காகவும், தனிமைநிலையைப் போக்குவதற்காகவும், பொருளாதார வசதிக்காகவும் அவள் பரத்தமையாகியிருக்கலாம். ஆண்கள் பரத்தையரை நாடியமைக்குக் கலைகள் மட்டும் காரணமல்ல, ஆண்களின் மனோபாவம், தலைவியின் மகப்பேற்றுக்காலம், புனலாடல், பொழிலாடல் முதலிய விடயங்களில் தலைவியை விடப் பரத்தையர் அதிகளவில் ஈடுபடுதல் என்பன காரணமாகத் தலைவன் பரத்தையரை நாடியிருக்க இடமுண்டு. திருமணத்திற்குப் பின்னர்த் தலைவி தலைவனுடன் புனல், பொழில் ஆடியமைக்குச் சான்றுகள் இல்லை. குழந்தைப் பராமரிப்பு உள்ளிட்ட அனைத்துக் குடும்பப் பொறுப்புக்களையும் சுமக்கவேண்டியிருந்ததனால் தலைவனுடன் நேரத்தைச் செலவிடத் தலைவிக்கு முடியாமல் போனதும் இன்னொரு காரணமாகலாம்.

III

பொதுவாக, உயிர்த்தொகுதியின் பெருக்கமும் நிலைபேறும் பாலுணர்ச்சியைச் சார்ந்துள்ளன என்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ள கருத்தாகும். இதனைத் தொல்காப்பியம்,

"எல்லா வுயிர்க்கும் இன்ப மென்பது
தானமர்ந்து வரூஉம் மேவற்றாகும்" (தொல். பொருள் . 27)

என்றும் 'காதல் அடைதல் உயிர் இயற்கை' (பாரதிதாசன் கவிதைகள்: தொகுதி) என்று பாரதிதாசனும் பாலுணர்ச்சியின் பொதுமைப் பண்பைச் சுட்டியுள்ளனர். பாலுணர்ச்சியை வரையறைக்குட்படுத்திச் சமுதாய நலனுக்கு உகந்த வகையில் மாற்றிக் கொண்டது மனித இனம் மட்டுமேயாகும். மனித இனம் குடும்பமாகவும் சமுதாயமாகவும் கூடி உறவுகொண்டு வாழ அடிப்படையாக அமைந்தது பாலுறவு. 'தமிழ்க்காதல்' என்ற நூலின் முன்னுரையில் வ.சுப. மாணிக்கம் 'காதல் என்பது உடற்பசி, உள்ளப்பசி, உயிர்ப்பசி, பிறவிப்பசி' என்கிறார். உளவியலாளர்கள் பாலின்பத்தை உணவு வேட்கை, நீர் வேட்கை ஆகிய அடிப்படைத் தேவைகளைப் போலவே கருதுகின்றனர்.

இந்நிலையில் இத்தேவையைப் பூர்த்தி செய்வதற்காகத் திருமணம் என்ற நிறுவன அமைப்பில் கட்டுப்பட்டுப் பாலியல் இன்பம் நுகரப்பட்டது. திருமணம் பெரும்பாலும் சமுதாயக்கோட்பாடு, குடும்ப வழிமுறை, சமயக்கட்டளை என்பவற்றுடன் நிறைவேற்றப்படுவதுடன் தேவலோகத்தில் நிச்சயிக்கப் படுவதாகவும் புனிதமானதாகவும் கருதப்படும் தமிழ்க்கலாசார மரபில் இவற்றையெல்லாம் தாண்டி இருவர் ஒன்றாக இருக்க விரும்பும்போது அது 'வேலி பாயும்' செயற்பாடாகவே - இல்லற வாழ்விற்கும், பண்பாட்டிற்கும், கற்புநெறிக்கும் புறம்பானதொரு செயற்பாடாகவே - கருதப்படும்.

இத்தகையதொரு இறுக்கமான கட்டமைப்பினுள் - மரபுசார் விழுமியம், பண்பாடு, கற்பு ஆகியவற்றைப் பேசும் கட்டமைப்பினுள் - பரத்தமை ஒழுக்கம் என்பது சமுதாயத்தில் இருப்புநிலை கொண்டதும் திருமண உறவுக்கு வெளியே இன்பம் காணும் வாசலாகவும் விளங்கியது. பொதுவாக, இன்னொருவருடன் தொடர்பு கொண்டு வாழுதல் என்பது தனது மனைவியிடம் அல்லது கணவனிடம் கிடைக்காத வித்தியாசமான அனுபவத்தைத் தேடும் ஆவலே என்று சொல்லப்படுகின்றது. அது தாம்பத்தியத்திற்கு அப்பால் உறவைத்தேடும் இன்ப நாட்டமாகும். சிலப்பதிகாரத்தில் வரும் மாதவி மகள் மணிமேகலையின் பிறப்பைத் தவிர, பரத்தமை ஒழுக்கத்தில் வாரிசு வேண்டி அல்லது வாரிசு பிறந்ததாகக் குறிப்புகள் இல்லாதபடியால் சொத்துரிமைக்கும் குடும்பப் பரம்பரை உரிமைக்கும் இடையூறு செய்யாத ஒரு தனியுரிமையாகவே இவ்வொழுக்கம் திகழ்ந்துள்ளது. இவ்வாறிருந்த போதிலும், இது ஒரு மனிதாபிமானச் சிக்கலாகவும் அறைகூவலாகவும் மனையில் வாழும் இல்லக் கிழத்திக்கு - குலமகளிருக்கு - இருந்தது. இது போன்ற உறவுமுறையில்தான் ஊடல் ஆதிக்கம் செலுத்துகின்றது. பண்பாடு - கற்பு என்ற பரப்பினுள் பரத்தமை என்ற விடயம் ஆண் தன் தேவைக்காக உருவாக்கப்பட்டுள்ளதும் கற்பு என்பது பெண்ணுக்கே உரியது என்றும் பரத்தமை என்பது பெண் சமூகத்தின் ஒழுக்கச் சீர்கேடாகவும் கருதப்படுகின்றது.

IV

ஒவ்வொரு சமூகமும் தன் பண்பாட்டு வளர்ச்சிக்கும் தேவைக்கும் ஏற்ப கணவன் - மனைவி உறவு பற்றிய கொள்கைகளை வகுத்துப் போற்றி வருகின்றது. பண்டைத் தமிழ் கலாசார மரபில் குடும்பப்பெண் தன் கணவனை வணக்கத்துக்குரியவனாக மதித்தாள். வரைந்து அமைத்ததை அமைதியுடன் ஏற்று வாழ்வதைத் தவிர கணவனுடைய சால்பை ஒருபோதும் அளந்தறியமாட்டாள்.

*"இன்னா செயினும் இனிது தலையளிப்பினும்
நின் வரைப்பினள்"* (குறுந்தொகை 397)

*"இம்மை மாறி மறுமை யாயினும்
நீயா கியரென் கணவன்"* (குறுந்தொகை 49)

"பிறன் வரையாள் பெண்மை" (குறள் 150)

ஆகிய பாடலடிகள் மூலம் திருமண வாழ்க்கையை வெறும் உடல்கூட்டத்திற்குரிய உறவெனக் கருதாது பிறவிதொறும் தொடர்ந்து செல்லும் புனித உறவாகப் போற்றி வாழும் பெண் என்பவள்தான் மனைவி, குலமகள், இல்லறத்தாள் என இலக்கியங்களில் போற்றப்படும் பாத்திரம் ஆகும்.

பெண் என்ற உயிரியல் சார்ந்த எண்ணக்கரு சமூக, பண்பாட்டு விழுமியங்களைக் கொண்டு அலங்கரிக்கப்பட்டதன் விளைவாகப் 'பெண்மை'யாகச் சமுதாய மக்கள் மத்தியில் மிளிர்கின்றது. பெண் என்பவள் எழுதப்படாத சமூகச் சட்டமான 'மரபு' எனும் பழைமை / தொன்மை என்ற கருத்தியலினுள் தோய்த்து எடுக்கப்பட்டவள். பாரம்பரிய மரபு என்பது, ஆணுக்கும் பெண்ணுக்கும் உரியதொன்றாகவும் ஒரு சமூகத்தினரின் பண்பாட்டைக் கட்டிக்காப்பதற்காகவும் அந்தந்தச் சமூகத்தினராலேயே தொன்மைக்காலத்தில் உருவாக்கப்பட்டு காலங்காலமாக நடைமுறையில் பேணப்பட்டு வருவதாகும். இம்மரபுசார் சிந்தனைகள் தலைமுறை தலைமுறையாக மக்களின் குருதியோடு இரண்டறக் கலந்து மனதில் ஆழமாகப் பதிந்துவிட்டதனால் இவை காலப் போக்கில் இயல்புகளாகவே மாறிவிட்டன. இவ்வாறு உருவாக்கப்பட்டு, பேணப்பட்டு வருகின்ற சட்டக்கருத்தியல்கள் சமூகத்தில் ஆணுக்கும் பெண்ணுக்கும் வேறுபட்டு அமைகின்றன.

இந்த மரபும் மரபுசார் பண்பாடும், பழக்கவழக்கங்களும் ஒவ்வொரு சமூகத்திலும் கட்டமைக்கப்பட்டுத் தனிநபர், குடும்பம், சமூகம் என்று கடத்தப்படுகின்றன. இதனடிப்படையில்தான் ஒருவருக்குரிய வகிபங்கு, அந்தஸ்து என்பன வரையறுக்கப்பட்டுள்ளன. இதுவே ஆண்களுக்குக் குடும்பரீதியாகவும் சமூகரீதியாகவும் உயர் அந்தஸ்தையும், பெண்களுக்கு இரண்டாம் நிலை அந்தஸ்தையும் வழங்கியுள்ளது. ஆண்களுக்கான வகிபங்கு நிலைகளும் அந்தஸ்தும் முரண்பாடின்றித் தனித்துவம் பெற்றதன் விளைவாக 'ஆணாதிக்கம்' என்ற சிந்தனை சமூகப் பின்புலத்தில் உருவானதுடன், பெண்களின் வகிபங்கு சார்புநிலையுடையதாகவும் இருந்தது.

இம்மரபு சார்ந்த பண்பாடானது, வகிபங்கு அந்தஸ்து என்பவற்றில் மட்டுமல்லாமல், பண்புசார் அடிப்படையிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது. ஆண் என்பவன் அறிவு, ஆற்றல், சக்தி, திறமை போன்ற பண்புகள் உள்ளனவாகவும் பெண் என்பவள் அமைதி, அறியாமை, கற்பு, போன்ற பண்புகள் உள்ளவளாகவும் உருவாக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் சமூகத்தில் ஆண் என்பவன் சமூகத்தைக் களமாகக் கொண்டு தன்னை முதன்மைப்படுத்தியும், பெண் என்பவள் இல்லத்தைத் தன் உரிமையாக்கிக் கொண்டும் வாழ்ந்துள்ளனர். இல்லம் அவளது உலகமாகக் கருதப்பட்டதனால் அவள் சார்புநிலையுடையவளாகவும் சார்ந்து வாழ்பவளாகவும் வாழத்தலைப்பட்டபோது அவளின் சுயாதீன இயக்கம்

கட்டுப்படுத்தப்பட்டது. பெண்ணானவள் பிறப்பு, வளர்ப்பு, உணவு, உடை, நடத்தை வெளிப்பாடு, உணர்வு வெளிப்பாடு, இயங்குவெளி, சுயசிந்தனை, விருப்பு மற்றும் தீர்மானம் எடுத்தல், திருமணம், குடும்ப வகிபங்குநிலை என்ற அனைத்திலும் மரபின் ஆட்சியில் -அழுத்தத்திற்குள்- சிறைப்பட்டிருக்கின்றாள். தொன்று தொட்டு நிலவிவந்த மரபுகள் மனிதர்களின் ஆரோக்கிய வாழ்வியல் சிந்தனையைத் துன்புறுத்தும் செயற்பாடாக அமையும் போது அது மரபழுத்தமாகக் கருதப்படுகின்றது. ஆண்களது தேவைக்காகப் பெண் அதிகளவு மரபழுத்தத்திற் குள்ளாக்கப்படுகின்றாள். பரத்தமை என்பது ஆணின் ஒரு பலவீனம். தனிமனித உரிமையின் பாற்பட்டது. கற்பு என்ற சமூகக்கோட்பாட்டில் பெண் சிக்குப்படும் போது, சமூக மரபு அழுத்தங்கள் அவளின் உணர்வுகளை மதிக்கின்றவை? அல்லது நொந்து போகச் செய்கின்றவை? என்பது ஆராய்ச்சிக்குரியது. இத்தகைய மரபுசார் சிந்தனைப்புலத்தில் வளர்ந்து, வாழ்ந்து கொண்டிருக்கும் பெண்கள் கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்று தன் கணவனையே இவ்வுலகில் நடமாடும் தெய்வமாகப் போற்றி வாழும் இல்லற வாழ்க்கையில் சங்க இலக்கியங்கள் கூறும் மருதத்திணை ஒழுக்கம் சற்று மாறுபட்டதாகவே உள்ளது.

V

ஊடல் ஒழுக்கம் மனவுணர்வுத் தொழிற்பாட்டுடன் தொடர்புடையது. அது அன்பு கலந்த பொய்க்கோபம், அன்புப்பூசல், மனமுரண்பாடு, கருத்துமுரண்பாடு என்று பலவாறு உள்ளது. இவ்வுணர்வு எவரிடத்திலும் ஏற்படலாம். ஊடலில் மேலோட்டமான கோபம் - ஆத்திரம் - இருக்குமே தவிர உண்மையானதொரு வெறுப்புநிலை இருக்காது. சங்க இலக்கியங்கள் காட்டும் தலைவன் - தலைவி உறவில் தலைவனின் நடத்தையினால் தலைவியிடமே அதிகமாக ஊடல் உணர்வு ஏற்படுகின்றது.

ஊடல் உணர்விற்குக் காரணங்களாகத் தலைவன் தலைவியர் கருத்தொருமித்து வாழும் இல்லற வாழ்க்கையில் இன்னொரு நபர் (ஆண் பெண்) குறுக்கிடுதல், ஒருவரையொருவர் பற்றிய சந்தேகம், அவநம்பிக்கை, புரிந்துணர் வின்மை, கருத்து முரண்பாடு, வெறுப்பும் சலிப்பும் சேர்ந்த உணர்வுநிலை என்பவற்றைக் குறிப்பிடலாம். ஊடலானது வெறுப்பையும் சலிப்பையும் கோபத்தையும் பிரிவையும் உருவாக்கும்.

தலைவன் தவறு செய்யாமல் விளையாட்டுக்காக ஒரு பெண்ணை வர்ணிக்கும் போதும் தலைவிக்கு ஊடல் ஏற்படும். சிலப்பதிகாரத்தில் கானல் வரியில் கங்கையை வர்ணித்துக் கோவலன் பாடும் போது மாதவிக்கு ஏற்படும் கோபமும் அவ்வாறே மாதவியும் விளையாட்டாகக் கற்பனையில் ஓர் ஆணை நினைத்துப் பாடும் போது கோவலனுக்கு ஏற்படும் கோபமும் சந்தேக உணர்வுநிலையில் ஊடலுக்கு வழிவகுத்தன. இங்கு உண்மை போலக் காட்சியளிக்கும் பொய்த் தோற்றமே ஊடலுக்கும் பிரிவுக்கும் காரணமாகின்றது.

"திங்கள் மாலை வெண்குடையான்
சென்னி செங்கோல் அதுவோச்சி
கங்கை தன்னைப் புணர்ந்தாலும்
புலவாய் வாழி காவேரி

... மங்கை மாதர் பெருங்கற்பென்று
அறிந்தேன் வாழி காவேரி" (சிலப்பதிகாரம், கானல்வரி: 2)

என்பதில் கோவலனின் மனதில் எழும் எண்ணம் எல்லாம் கண்ணகியின் பெருங்கற்பைப் பாராட்டியதாகவே உள்ளது என்று நினைத்து மாதவி ஊடல் கொண்டாள். அதற்கு அவளும்,

"நடந்த வெல்லாம் நின் கணவன்
திருந்த செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி"

என்றும் பின்,

"நம்மை மறந்தாரை நாம் மறக்கமாட்டோம்"
(சிலப்பதிகாரம், கானல்வரி: 26)

என்றும் இன்னொருவன் மேல் தான் காதல் கொண்டவளாகக் காட்டுகின்றாள். பெண்களிடமே அதிகளவில் ஏற்படும் ஊடல் உணர்வுகள் மரபு மாற்றத்திற்குட் பட்டு ஆண்களிடமும் ஏற்படுகின்ற நிலையும் உள்ளது. அது நிரந்தரப் பிரிவை ஏற்படுத்தியதைச் சிலப்பதிகாரத்தில் கோவலன் - மாதவி வாழ்க்கை காட்டுகின்றது.

தலைவியை ஊடல் கொள்ள வைப்பதற்காக தலைவன் பரத்தையிடம் செல்கின்றான் என்ற கருத்தும், அன்பு தேய்வடைந்து சலிப்பும் வெறுப்பும் ஏற்பட்ட வாழ்க்கையினை மீள்புத்தாக்கம் செய்வதற்கும் ஊடல் உணர்வு தேவைப் பட்டது. ஊடல் கூடினால் கூடல் சிறக்கும் என்பது பொது விதியாக அமைந்தாலும், பொதுவாக யதார்த்த வாழ்க்கையில் ஆண்களாயினும் சரி, பெண்களாயினும் சரி அவர்கள் இன்னொரு உறவை நாடிச் செல்வதை அறிகின்றபோது அவர்களை வரவேற்கும் மனப்பாங்கு இருக்குமா? என்பதும் பரத்தமையால் வரும் ஊடல் சிறந்த கூடலின்பத்தைத் தருமா? என்பதும் ஆராய்ச்சிக்கும் நடைமுறைக்கும் அப்பாற்பட்ட விடயமாகும். இதற்கு மாறாக மாதவியிடம் சென்று வந்த கோவலனைக் கண்ணகி இன்முகத்துடன் ஏற்றுக் கொள்கின்ற தன்மையை சிலப்பதிகாரம் காட்டுகின்றது.

"ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கு இன்பம்
கூடி முயங்கப் பெறின் (குறள் 1330)

என்ற குறளிலும் ஊடல் நீங்கி இருவரும் கருத்தொன்றிப் புணரப்பெறுதல் அப்புணர்ச்சியே அவ்வூடலுக்கு இன்பமாகும். ஊடலும் அன்புடையவரிடத்தில் மட்டுமே இனிதாகும். அன்பில்லாதவரிடத்தில் அது துன்பத்திற்கே ஏதுவாகும். நீரும் குளிர்ந்த இடத்தில்தான் இனிமையே தவிர வெயிலில் காய்ந்த நீர் இனிமை தராது.

VI

ஊடல் ஒழுக்கத்தில் தலைவி (ஊடல் கொள்பவள்), தோழி (தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தைப் பற்றித் தலைவிக்குத் தெரிவிப்பவளும், தலைவனுக்கு அவனது ஒழுக்க மாறுபாடுகளை இடித்துரைப்பவளும்), பரத்தை (ஊடலுக்குக்

காரணமானவள்) ஆகிய மூன்று வகையான பெண் பாத்திரங்களைக் காணலாம். தலைவி என்பவள் இல்லக் கிழத்தி. தலைவனுக்கே உரித்துடையவள் (உடலாலும், உள்ளத்தாலும், உணர்வாலும்). தலைவனுக்கு இல்லறத்தான் என்ற அந்தஸ்தையும், அவனது சொத்துக்குரிய வாரிசையும், இன்பத்தையும் கொடுப்பவள். தலைவனே கதி என்று நம்பி அவனிடம் மானசீகமாக அன்பும் நம்பிக்கையும் கொண்டவள். அடுத்து, தோழி என்பவள் தலைவியின் ஆருயிர் நண்பி. அவளின் சுகதுக்கங்களைக் கேட்டு ஆலோசனை கூறுபவள். வேண்டும் பொழுது தலைவனின் நடத்தை மாறுதல்களை அவனுக்கே நுணுக்கத்துடன் நேரடியாக எடுத்துரைப்பவள். தலைவியின் உணர்வை வெளியிடும் ஊடகமாகவும் உள்ளவள். இவர்கள் இருவரையும் தவிரத் தலைவனுக்குத் தலைவியை விட இன்பமளிப்பவளும் அவனிடம் பொருள் பெறும் நோக்குடனும் பழகுபவள் தான் பரத்தை எனப்படும் விலை மகள். பரத்தையர்களிலும் காதல் பரத்தை, சேரிப் பரத்தை என இருவகை உள்ளனர். ஒருவனையே தன் காதலனாகக் கொண்டு அவனுடன் வாழ நினைப்பவள் காதல் பரத்தையாகவும், எவரோடும் பொருள் பெற்றுக்கொண்டு அவர்களுடன் கூடிவாழ்பவள் சேரிப்பரத்தையாகவும் இருப்பாள்.

தலைவனின் பரத்தமை ஒழுக்கத்தினால் தலைவியிடம் மனவுடைவு, ஏமாற்றம், ஏக்கம், கோபம்;, தலைவன் மேல் அருவருப்பு, வெறுப்பு, தன்னழகு குறித்த தாழ்வுச்சிக்கல், முதுமை எண்ணம், ஊடலைத் தவிர்க்க ஆவல் கொள்ளும் தவிப்புநிலை, மௌனம் முதலிய உணர்வுகள் ஏற்படுகின்றன. கற்புடைய மனைவி தன் கணவன் தன்னை விட்டு வேறொரு பெண்ணுடன் அன்பு பாராட்டுவதைக் கண்டு பொறுக்கமாட்டாள் என்னும் பெண்ணின் உளவியலே மருதத்திணையின் தலைமைப் பொருளாகும்.

ஆண் என்பவன் பெண்ணின் உடல் வனப்பில் ஈடுபடுவது போலப் பெண் என்பவள் ஆடவனின் உடல் வனப்பில் மிகுதியாக ஈடுபாடு கொள்ளாது பண்பு நலன்களையே ஆணிடமிருந்து எதிர்பார்க்கின்றாள் என்று சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தலைவன் தன்னுடைய தலைவியின் கண்கள், கூந்தல், தோள், சொல்;லின் இனிமை முதலான பலவற்றிலும் தன்னை இழப்பவனாகக் காணப்படுகின்றான் என்று சங்க அகப்பாடல்களில் தலைவி பற்றிய அவனின் வர்ணனைகள் மூலம் அறியலாம். தலைவன் எப்போது தலைவியை விட்டு வேறு பெண்களை நாடிச்சென்றுள்ளான் என்று நோக்கும் போது, தலைவியின் மகப்பேற்றுக் காலக்கட்டத்தில்தான் என்பதைச் சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிகின்றோம். குழந்தைப்பேற்றின் பின்னர்த் தலைவி தன்னழகில் கவனம் செலுத்தாமல் விடுவதாலும் குழந்தை பிறந்த பின்னர்ப் பெண்களுக்கு ஏற்படும் உடல் உள மாற்றங்களும் காரணமாகத் தலைவன் - தலைவியின் உறவிலும் மாற்றங்கள் ஏற்படவாய்ப்புண்டு. ஒரு காலத்தில் வேப்பங்காயைக் கொடுத்தாலும் இனிமை என்று உண்டவன் இப்போது 'இனிய சுனை நீரும் உவர்ப்புடையது' என்கிறான். 'மிகுதியாக உண்டோர் வாயில் தேனும் புளிக்கும்' என்பதற்கு ஏற்பத் தலைவன் தலைவியிடம் கொண்ட அன்பும் புளித்ததனால்; தலைவிக்குத் தனது உடல் அழகு, இளமை, குறித்துக் கழிவிரக்கமும், தாழ்வுச் சிக்கலும் ஏற்பட்டு ஊடல் கொள்வாள். களவுக்காலத்திலும் திருமணத்தின் புதிதிலும் தான் வழங்கிய

இன்பத்தைத் தாயான பின்னால் தன்னால் வழங்க முடியவில்லையே என்று தனது முதுமையை எண்ணி வருந்துவாள். இத்தகைய சூழ்நிலையில் தலைவன் தலைவியை, 'புதல்வன் தாயே' என்று அழைக்கும் போது அவன் தனது முதுமையைத்தான் சுட்டுகின்றான் என்று தலைவி நினைப்பதாகச் சங்கவிலக்கியப்பாடல்கள் காட்டுகின்றன.

"நெருநல் ஆடினை புனலே இன்று வந்து
ஆக வனமுலை அரும்பிய அணங்கின்
மாசுஇல் கற்பின், புதல்வன்தாய் - என
மாயப் பொய்மொழி சாயினை பயிற்றி எம்
முதுமை எள்ளல்" (அகநானூறு 6)

"யான்நோக்கும் காலை நிலன் நோக்கும்" (குறள் 1094)

என்று தலைவிக்குரிய பண்பைச் சுட்டும் வாழ்க்கை மரபில் கணவனுடைய முகத்தையே நோக்கத் துணிவில்லாத தலைவிக்கு எப்படி அவனுடைய நடத்தையில் ஏற்படும் மாற்றங்களையும் அவன் குறைகளையும் நேரடியாக இடித்துக்கூறமுடியும்? அதனால் தான் ஊடல் என்ற மௌன உணர்வு மூலம் அவற்றை வெளிப்படுத்துகின்றாள். தலைவனது பரத்தமை ஒழுக்கத்தை தலைவி உள்ளிட்ட தொடர்புடையவர்கள் எல்லோரும் எடுத்துக் காட்டி ஊடுகின்ற போதும் கூட, அவனுடைய தகாத ஒழுக்கம் பிறர் செவிக்கு எட்டாதவாறு இருக்கவும் அவனது மனம் புண்படாதவாறு இருக்கவும் உள்ளுறுத்திக் கூறும் பண்புமுறை கையாளப்படுகின்றது. இதனால் தலைவனுடைய பரத்தமை ஒழுக்கம் வெளிப்படையாகப் பாடல்களில் பேசப்படுவதில்லை.

"கழு நீர் மேய்ந்த கருந்தாள் எருமை
பழனத் தாமரைப் பனிமரல் முனைத்
தண்டு சேர் மள்ளரினியவில் அல்லது
குன்று சேர் வெண்மணல் துஞ்சு ஊர!"

என்று தலைவன் தலைவியை விரும்பாமல் பரத்தையிடமும் பின்பு வேறிடங்களிலும் இன்பம் அனுபவித்து வருவான் என்பதையே இப்பாடல் சுட்டுகின்றது. தலைவிமார் தம்மைத் தலைவர்களிடம் இருந்து அந்நியப்படுத்திப் பரத்தையர்களையே மனைவிமாராகப் பேசுவதுடன் அவர்களின் அழகைச் சுட்டிக்காட்டுவார்கள். தலைவனை வாழ்த்துவது போல வைவார்கள். எனினும், தமது அகவழகுதான் உண்மையானது என்பதைத் தலைவனுக்கு ஞாபகப் படுத்துவார்கள்.

தலைவியின் பார்வையில் பரத்தை என்பவள் தலைவனுக்கு வேண்டிய காம இன்பத்தை வஞ்சனையோடும், பொய்யோடும், பொருள் பெறும் நோக்கோடும் கொடுத்து அவனை மயக்குபவளாகவும் கற்பு நெறிப் பெண்களுக்கிடையே ஒரு சாபக்கேடாகவும், குடும்பம் எனும் சமூகத் தளத்தைச் சீரழிப்பவளாகவும் உள்ளாள். குடும்ப வாழ்க்கையில் பரத்தைப் பெண்கள் மனைவியருக்குப் போட்டியாகவே வாழ்ந்துள்ளனர். மனைவியின் வீட்டுக்கு அடுத்ததாக வருவதும் தலைவனின் பிள்ளையைத் தழுவுவதுமாகிய அவர்களின்

செயல் தலைவன் பரத்தையிடம் கொண்ட இறுக்கத்தைக் காட்டுகின்றது. 'பெண்ணுக்குப் பெண்தான் எதிரி' என்ற மனப்பாங்கு நிலவும் சமூகத்தில் ஊடலிலும் தலைவிக்கு எதிரி பரத்தையே. தனக்குரித்துடையவனைத் தேடி உரிமையே இல்லாத ஒருத்தி வந்து விசாரிக்கும் போது ஆற்றாமையும் கோபமும் ஏற்பட்டுப் பின் நானும் இரங்கத்தக்கவள் என்றும் காட்டுகின்றாள். இனம் இனத்தைச் சேரும் என்பது போலப் பரத்தையும் தன்னைப் போலப் பெண்ணே என்று அவளுக்காகத் தலைவி இரங்குகின்ற சந்தர்ப்பங்களும் உண்டு.

பரத்தைமை ஒழுக்கம் பலராலும் வெறுக்கப்பட்டாலும் குறிப்பாகத் தலைவிமாரினால் முற்றிலும் வெறுக்கப்பட்ட ஒன்று. தலைவி தலைவன் மீது வெறுப்படையக் காரணம் நம்பிக்கைத் துரோகம், அவநம்பிக்கை என்பனவே தவிர அன்பறுந்த நிலை அல்ல. தலைவனின் நடத்தையை எடுத்துக்காட்டும் போது அவன் பிரிந்து சென்று விடுவானோ என்ற மன அச்சமும், பிரிவைத் தாங்கமுடியாத மனநிலையும் அவளுக்கு இருக்கும். இதற்கு அவள் வாழும் சமூகச்சூழல் காரணமாகும். தலைவனை வெறுத்துரைப்பதனால் எவ்விதப் பயனும் இல்லை. மனை வாழ்க்கையை விரும்பிய பெண்ணுக்கு இது பொருத்தமில்லை. அவர்கள் அறிவில்லாத பேதைகளாகக் கருதப்படுவார்கள். சமூகத்தில் நடைப்பிணம், வாழாவெட்டி என்று அவர்களுக்குப் பெயர்கள் சூட்டப்படும். ஒரு பெண் பூரணமடைகின்றாள் என்பது அவள் திருமணம் செய்து தன் கணவனுடன் வாழும் வாழ்க்கையின் மூலமே கிடைக்கின்றது.

"....... அவர் நமக்கு
அன்னையும் அத்தனும் அத்தனு மல்லரோ
புலவிய தேவனோ அன்பிலஞ்கடையே" (குறுந்தொகை 93)

பொதுவாக, சமூகத்தில் ஆண்கள் செய்யும் தவறுகள் பெரிதுபடுத்தப்படுவதில்லை. ஏனெனில் பொருளீட்டல், பாதுகாப்பு என்பவற்றுக்கு ஆணே பொறுப்பு. ஆண்களின் தவறுகளைப் பெண் பொறுத்து வாழவேண்டும் என்றும் திருமணம் செய்த பின் மீண்டும் பிறந்த வீட்டிற்குச் செல்லக் கூடாது என்ற மூதாதையரின் வாழ்த்துரைக்கும் ஏறப் பெண் பிரிந்து வாழ்தல் என்பது அவளுக்கு மட்டுமல்ல, தலைவனுக்கும் இழுக்காகும். தலைவனைப் பிரியும்போது பொருளாதாரப் பலவீனமும் பாதுகாப்பின்மையும் அவப்பெயரும் ஏற்படும் என்பதை அவள் நன்கறிவாள். தலைவனின் செயலால் தலைவிக்குத் துன்பம் ஏற்படுமானால் அவளைக் கொண்டுபோய் பிறந்த வீட்டிற்கு விடு என்று தோழியின் கூற்றுக்கள் இருந்தாலும் தலைவி பிறந்த வீட்டிற்குச் சென்றதாகப் பாடல்கள் இல்லை. தன்னை மறந்து வாழும் தலைவன் தன் மனம் நோகும் என்று சிந்திக்காத போது அவனுக்காக நான் நொந்து என்ன பயன்? அதனால் நான் அவனுக்காக இரங்கப் போவதில்லை எனற தீர்மானத்தை தலைவி சிலவேளைகளில் எடுத்தாலும்கூட அவள் தலைவனைப் பிரிந்து வாழவில்லை. தலைவியின் ஊடல் ஒருபோதும் குடும்பம் என்ற சமூக நிறுவனத்தைச் சிதைக்கவில்லை.

தலைவி பின் மனமுதிர்ச்சி பெற்றவளாகக் குடும்பக் கடமையில் தன் கவனத்தைச் செலுத்துவாள். நீ இன்னாதன செய்தாலும் உன்னை நீங்கிச் செல்லும் வல்லமை எமக்கில்லை என்று கூறும் தலைவியைக் குறுந்தொகையில் காணலாம்.

ஆண்டு தோறும் வேரோடு பறித்து எறிந்தாலும் மீண்டும் மீண்டும் கடிந்த வயலிலே பூக்கும் நெய்தல் பூப்போன்றோர்தான் மகளிர் என்று சங்கப்பாடல் கூறுகின்றது. கணவன் குறையுடைனவராயினும் அவனை ஏற்று வாழ்தலே குடும்பப் பெண்டிர் என்பதை,

"தகவுடைய மங்கையர் சான்றாண்மை சான்றார்
இகழினும் கேள்வரை ஏத்தி இறைஞ்சுவர்" (பரிபாடல் 20)

எனப்படுகின்றது.

பெண்களுக்கு கணவனின் அன்பு வேண்டுமானால் அவர்கள் தம் கணவரோடு, காதலரோடு தினையளவும் ஊடல் கொள்ளாமல் இருக்க வேண்டும் என்பதைக் கோட்பாடாகவே வள்ளுவர் கூறுகிறார்.

"தினைத்துணையும் ஊடாமை வேண்டும் பனைத் துணையும்
காமம் நிறைய வரின்" (குறள் 1282)

இங்குத் தலைவனுடைய பணிந்த மொழிகளைக் கேட்டுத் தன் சினத்தைத் தவிர்க்கும் போது குடும்ப வாழ்க்கை இடையூறின்றி நீடிக்கும். வாயில் மறுத்தலும் வாயில் நேர்தலும் முறையே மனைவியின் உரிமையும் வேறு வழியின்மையுமாகும். வாயில் நேர்தல் கணவனை ஏற்றுக்கொள்ளும் நிலையைக் குறிக்கின்றதே அன்றி, அவனுடைய பரத்தமையை ஏற்றுக்கொள்ளும் நிலையைக் குறிப்பதாகக் கொள்ளமுடியாது.

பரத்தையிடமிருந்து திரும்பி வரும் தலைவர்கள் பற்றிய செய்திகளை நோக்கும் போது, அவர்கள் மனைவியரிடத்துப் பேரன்புடையவர்கள். பரத்தையரிடத்தில் தொடர்பு கொண்டவர்களே எனினும் அவர்கள் தம் செயல் சரியானது என்று வாதிடுவோராக இல்லை. மாறாக தம் செயலுக்காக நாணு வோராகவும் மனைவிமாரிடத்தில் தம் தீய ஒழுக்கத்தை மறைத்தொழுகுவோராகவும் உள்ளனர். தலைவன் தன் மனையாளிடம் ஓர் ஏவலன் போல நடந்து கொள்ளக்கூடியளவிற்கு அவள் மீது அன்புடையவன் என்பதைப் பரத்தையின் கூற்றுவாயிலாக அறியலாம்.

"கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப்பாவை போல
மேவன செய்யும் தன் புதல்வன் தாய்க்கே" (குறுந்தொகை 8)

மேலும், பரத்தையரிடம் அன்பு கொண்ட தலைவன் பரத்தையரோடு நிரந்தரமாக வாழ விரும்பவில்லை. தன் மனைவியின் அன்பை இழக்கத் துணிவில்லாதவனாகவும் அவளின்றி வாழமுடியாதவனாகவும் அவளது கோபத்தை மாற்றி மீண்டும் கூடி வாழும் ஆர்வம் உடையவனாகவும் உள்ளான். இன்பத்திற்காகத் தலைவன் பரத்தையை நாடினாலும் அந்த இன்பம் விளையாட்டுத் தன்மையுடையது என்பதை அறிவான். மனைவியே மகப்பேறு தருபவள், தன்னைத் தட்டிக் கேட்கும் உரிமையுடையவள் என்று நினைத்து அவள் காலில் விழவும் தயங்கவில்லை. தலைவன் பரத்தை மேல் அன்பு கொள்வதற்கு மனைவி மீதுள்ள வெறுப்புத்தான் காரணம் என்பதற்கு ஆதாரங்கள் இல்லை. மனைவி மீதுள்ள அன்பு காரணமாகப் பரத்தையைக் கைவிட்ட சான்று உள்ளது.

மாறாக, பரத்தை மீதுள்ள அன்பு காரணமாக மனைவியைக் கைவிட்டமைக்குச் சான்றுகள் எதுவும் இல்லை.

எனவே, ஊடல் ஒழுக்கத்தின் மூலம் சில சிந்தனைகள் எம் மனதைத் தட்டிச் செல்கின்றன. ஆடவனின் காதல் எண்ணங்கள் எப்பொழுதும் அழகு பற்றிய நிலையானதோர் ஆழ்ந்த சிந்தனையாகவே உள்ளன. காதலர்கள் இருவரும் ஒரே ஆன்மாவின் இரு கூறுகள் என்றும் விலகிச் சென்ற கூறு மீண்டும் ஒன்று சேரத் துடிக்கின்றது என்றும் பிளேட்டோ கூற்றிற்கு இணங்க, காதல் வாழ்க்கை என்பது இரு உயிர்களின் கூட்டுறவு. ஒன்றின்றி மற்றொன்று வாழ முடியாது என்பதுதான் உண்மை. எனினும், ஊடல்கொள்ளும் அளவிற்கு அதனைத் தொடர்ந்து சாதிக்கமுடியாதவளாகவே சங்ககாலத் தலைவி மட்டுமல்ல, யதார்த்த உலகத்துப் பெண்களும் தம் மடமைக் குணத்தின் மூலம் வாழ்ந்துகொண்டிருக்கின்றனர்.

உசாத்துணை நூல்கள்:

1. அம்மன்கிளி முருகதாஸ்,. (2006), **சங்கக்கவிதையாக்கமும் மரபு மாற்றமும்**, குமரன் புத்தக இல்லம்,சென்னை - கொழும்பு.
2. இராகவையங்கார், மு. (1960) **தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி**, மூன்றாம் பதிப்பு,நாராயண ஐயங்கார், மதுரை.
3. இராமநாதன் செட்டியார்; (1958) **சங்ககாலத் தமிழர் வாழ்வு**, 2 ஆம் பதிப்பு, அண்ணாமலைப் பல்கலைக்கழகம், சென்னை.
4. இளம்பூரணர் (உரை) (1953) **தொல்காப்பியப்பொருளதிகாரம்**, திருநெல்வேலி தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை.
5. கடிகாசலம், ந., சிவகாமி.ச.(பதிப்பாசிரியர்), (1998), **சங்க இலக்கியம்: கவிதையியல் நோக்கு, சிந்தனைப் பின்புல மதிப்பீடு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
6. சிதம்பரனார், சாமி. (1957) **எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்**, ஸ்டார் பிரசுரம், சென்னை.
7. சிவத்தம்பி, கா.,(2009), **சங்க இலக்கியம்:கவிதையும் கருத்தும்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
8. ...., (2010), **பண்டைத் தமிழ்ச் சமூகம்: வரலாற்றுப் புரிதலை நோக்கி**, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை.
9. தட்சிணாமூர்த்தி, அ., (2001), **சங்க இலக்கியங்கள் உணர்த்தும் மனித உறவுகள்**, உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
10. மனோன்மணி, ச., (2000), **குறுந்தொகை - ஒரு நுண்ணாய்வு**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.
11. மாணிக்கம், வ.சுப. (1962) **தமிழ்க் காதல்**, பாரி நிலையம், சென்னை.
12. வாசுகி, சொ., (2003), **மருதத்திணை**, ஸ்ரீ சுப்பிரமணியப் புத்தகசாலை, யாழ்ப்பாணம்.

சீகன்பால்கின் எழுத்திலக்கணப் பார்வை

திரு. ப. ஜெயபால்
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, பாரதியார் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர், தமிழ்நாடு, இந்தியா

ஒவ்வொரு காலக்கட்ட சமூக, அரசியல், கல்வி மற்றும் மொழி மாற்றங்கள் சார்ந்த அழுத்தங்களின் வெளிப்பாடே இலக்கண நூல்களை உருப்பெறச் செய்கின்றது. இலக்கணம் சமூகத்தின் உற்பத்திப் பொருளாக உள்ளது. சமூகத்தின் அடையாளப்படுத்தும் தன்மை இதில் வெளிப்படும். இலக்கணம் புனிதமானது; மாறாதது என்னும் கருத்தாக்கத்தை யதார்த்த நிலையில் காணும் பொழுது கட்டுடைத்தலுக்கு உள்ளாகின்றது. தமிழ் இலக்கண மரபில் தோன்றிய **தொல்காப்பியம், வீரசோழியம், பிரயோக விவேகம்** போன்றவை அந்தந்த நூல்கள் எழுந்த காலக்கட்டத்தின் சமூக நிலையையே பிரதிபலிக்கின்றன. மரபை ஒட்டிய இலக்கணப் பெருக்கத்தில் ஐரோப்பியர் வருகையினால் உருப்பெற்ற இலக்கணங்கள் வேறொரு புரிதலுக்குள் கொண்டுசென்றன. இலக்கணநூல் உருவாக்கத்தில் எளிமையாக்கமும் புதுமையாக்கமும் செயல்படுத்தப்பட்டன. பதினெழு, பதினெட்டாம் நூற்றாண்டுகளில் மரபை அடிப்படையாக வைத்துக் கொண்டு தமிழ் இலக்கண நூல்கள் உருப்பெற்ற அதே காலக்கட்டத்தில் ஐரோப்பியரால் மரபை மீறிய இலக்கண நூல்கள் படைக்கப்பட்டன. ஐரோப்பிய சிந்தனையில் இலக்கணம் படைக்க விழைந்த கிறித்துவப் பாதிரிமார்களுக்கு தமிழின் நீண்ட இலக்கணமரபை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. தமிழ் இலக்கண மரபின் முன்னோடிகளான அகத்தியர், தொல்காப்பியர், பவணந்தியாரின் துணை தேவையாக இருந்துள்ளதை ஐரோப்பியர் இயற்றிய தமிழ் இலக்கண நூல்களின் முகவுரையின் வழி அறியலாகின்றது.

ஐரோப்பியர் வருகையும் இலக்கண உருவாக்கமும்

பதினெட்டு மற்றும் அதற்குப் பின்னான காலக்கட்டங்களில் ஐரோப்பியர் எழுதிய தமிழ் இலக்கணநூல்கள் நெடிய ஒரு வரலாற்றினைக் கொண்டுள்ளன. தமிழ் இலக்கண வரலாற்றினை எழுத முற்பட்ட இளவரசு (1965), இளங்குமரன் (1988) ஆகியோரின் நூல்களில் இந்நூல்கள் பற்றிய குறிப்பினைக் காணமுடியவில்லை. ஐரோப்பியரால் எழுதப்பட்ட ஆரம்பக்கால இலக்கண நூல்கள் போர்த்துகீசிய மொழியிலேயே எழுதப்பட்டுள்ளன. அதற்குப் பிறகான இலக்கணநூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. ஐரோப்பிய மொழியில் இயற்றப்பட்ட முதல் இலக்கண நூலாகச் சீகன்பால்குவின் Grammatica Damulica

(1716) என்னும் நூல் அடையாளப்படுத்தப்படுகிறது. ஆனால் இதற்கு முன்பே சில இலக்கணநூல்கள் உருப்பெற்றுள்ளன.

'அச்சுத் தமிழின் தந்தை' எனப் போற்றப் பெறும் ஹென்றிக் ஹென்றிக் குவிஸ் (Enrique Henriques) *(1520-1600)* அவர்களால் தமிழ் மொழி 'மலபார்' என்று குறித்த வழக்கினை அடிப்படையாகக் கொண்டு 'மலபார் இலக்கணம்' (Arte da Lingua Malabar) ஒன்று இயற்றப்பட்டுள்ளது. ஹென்றிக்குவிஸைத் தொடர்ந்து இரண்டாவது இலக்கண நூல் எழுதியதாக அறியப்படுபவர் தெகோஸ்ற்றா (Balthazar de Costa). இவர் எழுதிய தமிழ் இலக்கணநூல் 'Arte Tamilica' *(1679)*. தமிழ் இலக்கணம் எழுதியவராக அறியப்படும் மூன்றாமவர் பிலிப்பஸ் பால்தேயுயஸ் (Philippas Balclaeus) *(1632-1672)*. இவர் 1672 இல் கிழக்கிந்திய மலபார் கடற்கரையைப் பற்றியும், சோழ மண்டலக் கடற்கரையைப் பற்றியும் பயண குறிப்பு நூல் ஒன்றினை எழுதியுள்ளார். டச்சுமொழியில் எழுதப்பட்டுள்ள இந்நூல் அதே ஆண்டில் ஜெர்மனியில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. 1704 இல் ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்யப்பட்டுள்ளது. இந்நூலில் பிந்தைய நாளில் முழுமையான இலக்கணநூல் தொகுப்பதற்கான வேலையைப் பால்தேயுயஸ் செய்துள்ளார்.

தெகோஸ்ற்றாவின் இலக்கணநூலை அடிப்படையாக வைத்துக் கொண்டு சீகன்பால்குவின் Grammatica Damalica *(1716)* என்னும் பேச்சுத் தமிழை ஒட்டிய இலக்கணநூல் வெளிவந்துள்ளது.

சீகன்பால்குவின் கிராமட்டிகா தமுலிக்கா

பார்த்தொலோமியுஸ் சீகன்பால்கின் Grammatica Damulica எனும் இலக்கண நூல் 1716 இல் ஜெர்மனி நாட்டில் ஹாலே நகரில் வெளியிடப்பட்டது. இந்நூலின் முகவுரையில் "தமிழ் இலக்கணம், பல எடுத்துக்காட்டுகள், விதிகள், சொல் அடுக்கு வரிசை கொண்டது; தமிழ் என்ற மலபார் மொழியைச் சுலபமாகக் கற்கும் வழி. இம்மொழி கிழக்கிந்தியரிடையே பேசப்படுவது. இதுவரை ஐரோப்பாவில் அறியப்படாதது" என்று குறிப்பிட்டுள்ளது (ஞானசேகரன், 1981:2). சீகன்பால்கு கிரேக்க மற்றும் இலத்தீன் மொழிகளை முன்மாதிரியாக வைத்துக் கொண்டு தம் இலக்கணநூலை இலத்தீனில் படைத்துள்ளார். இந்நூலின் ஆங்கில மொழிபெயர்ப்பைச் சீகன்பால்கு பற்றிய விரிவான ஆய்வுடன் டேனியல் ஜெயராஜ் 'Tamil Language for Europeans:Ziegenbalg's Grammatica Damulica *(1716)*' எனும் தலைப்பில் 2010 இல் வெளியிட்டுள்ளார். இந்நூல் சீர்மை செய்யப்பட்டுத் திருத்தங்களுடன் மூலநூலில் சுட்டப்பட்டுள்ள சொற்களின் அடிக்குறிப்புடன் அமைந்துள்ளது. சீகன்பால்கு பயன்படுத்திய தமிழ்ச் சொற்களில் குறில் நெடில் பாகுபாடு இன்றியும் மெய்கள் புள்ளி பெறாமலும் அமைந்துள்ளன. இதனை டேனியல் ஜெயராஜ் மொழிபெயர்ப்பு செய்யும் பொழுது திருத்தம் செய்து நவீன எழுத்து மொழியில் கொடுத்துள்ளார்.

சீகன்பால்கு தாம் இலக்கணம் படைக்கும் முன்பு தமிழ் இலக்கண நூல்களான தொல்காப்பியம் மற்றும் நன்னூலைத் தம் ஆசிரியர் உதவியுடன் கற்றுக் கொண்டு அதன் பிறகு இலக்கணம் எழுத முனைந்துள்ளார். தென்னிந்தியா விற்கும்

ஐரோப்பாவிற்கும் பண்பாட்டுத் தொடர்பினை ஏற்படுத்தும் நோக்கில் ஹென்றிக்குவிஸ், தெகோஸற்றா, பால்தேயுயஸ் மற்றும் சீகன்பால்கு போன்ற அறிவாண்மையாளர்களின் பணி இருந்தது. இவர்கள் எழுதிய இலக்கண நூல்களே ஐரோப்பியர் தமிழ் இலக்கணம் படைப்பதற்கு முன்னோடியாக அமைந்திருந்தது. சீகன்பால்கு தாம் இலக்கணம் இயற்றுவதற்கு முன் மாதிரியாகத் தெகோஸ்ற்றா எழுதிய 'Arte Tamalica' எனும் நூலை வைத்துக் கொண்டு தம் நூலைப் படைத்துள்ளார். தெகோஸ்ற்றா பயன்படுத்திய உதாரணங்களை விடுத்து வேறு உதாரணங்களைப் பயன்படுத்தியுள்ளார். சில இடங்களில் அவரையே பின்பற்றியும் உள்ளார். சில எளிமைப்படுத்தும் வேலைகளை முன்னைய இலக்கண நூலிலிருந்து தம்முடைய நூலில் செய்துள்ளார். தெகோஸ்ற்றாவின் Arte Tamalica *(11.15)* நூலில் முன்னிலை ஒருமை 'நீய' என்று குறிப்பிட்டுள்ளது. அதனை 'நீ' என்று சீகன்பால்கு எளிமைப்படுத்தியுள்ளார். மேலும் சீகன்பால்கு ஒருமை *(*Singular*)*, பன்மை *(*Plural*)* இவற்றிற்குத் தனிவசனம் *(*Singular*)*, வெகுவசனம் *(*Plural*)* எனும் சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். இதுவும் தெகோஸ்ற்றாவால் கையாளப் பட்டுள்ளது *(*Daniel Jeyaraj, *2010:22)*. தெகோஸ்ற்றா இலக்கணநூலின் கட்டமைப்பிலிருந்து சில மாற்றங்களுடன் சீகன்பால்கு தனது நூலை அமைத்துக் கொண்டுள்ளார்.

சீகன்பால்குவின் Grammatica Damulica எட்டு இயல்களாகக் கட்டமைக்கப் பட்டுள்ளது. அதாவது 1. தமிழ் மொழியின் எழுத்துகள் *(*Letter*)*,2. எழுத்துகளின் உச்சரிப்பு, 3. பெயர்ச்சொல் மற்றும் அவற்றிற்கான நான்கு வேற்றுமைப் பாகுபாடுகள் *(*Declension*)*, 4. பண்படைகள் *(*Adjectives*)*, 5.பதிலீட்டுப்பெயர்கள் *(*Pronouns*)*, 6. வினைச்சொற்கள் *(*Verbs*)*, 7. ஒரு நிலைச் சொற்கள் *(*Particles*)*, 8.தொடரியல் *(*Syntax*)* என்னும் வரிசையில் அமைந்துள்ளன. அன்றைய எழுத்து மொழியினை விளக்கும் நோக்கில் எழுதப்பட்டுள்ள சில பேச்சு வடிவங்களோடு *(ஒண்ணு, மண்ணு. அஞ்சு, வேணும்)* அமைந்துள்ளது. சீகன்பால்குவின் இலக்கணம் சிறு எண்ணிக்கையிலான சொல் வடிவங்களை அடக்கிக் கொண்டு பேச்சு வழக்கில் அமைந்துள்ளது. எழுத்து, சொல், தொடர் இவற்றின் இலக்கணங்களை விளக்கும் நோக்கில் நவீன எழுத்து மொழியில் அமைக்கப் பட்டுள்ளது. சீகன்பால்கு தம் இலக்கண நூலில் *(*Grammatica Damulica*)* எழுத்ததிகாரத்தை விளக்கும் பொழுது எழுத்துகள் பற்றியும் அவற்றின் உச்சரிப்புப் பற்றியும் குறுகிய அளவிலே நிறுத்திக் கொள்கிறார்.

1. எழுத்துகள் *(*Letter*)*
2. உச்சரிப்பு *(*On the Reading and Prouniciation of this Language*)*

எழுத்திலக்கணம் எழுத்துகள் மற்றும் உச்சரிப்பு அளவிலே போதுமானது எனச் சீகன்பால்கு நினைத்திருக்கக்கூடும். எழுத்துகளுக்கிடையிலான புணர்ச்சி மாற்றம் பற்றி அவர் பேசவில்லை. சொற்களைத் தொகுத்துக் கொடுப்பதிலேயே தன்னளவில் நின்று விடுகிறார். இதற்கு இன்னுமொரு காரணம் சீகன்பால்கு தமக்கு முன்னோடி நூலாகத் தெகோஸ்ற்றாவின் நூலைக் கையாண்டதே. அதிலுள்ள பகுப்பின் அடிப்படையிலேயே தம் நூலைப் படைத்துள்ளார். சீகன்பால்கு தமிழ் மரபிலக்கணங்களைக் கற்றுள்ள போதிலும் அதிலிருப்பது போன்ற பகுப்பு முறையையோ அமைப்பு முறையையோ கைகொள்ளவில்லை.

நெடுங்கணக்கு

வேதக் கல்வியைப் பிழையறக் கற்பதில் மொழியாய்வு தொடங்கியது. வேதக் கல்வியை அடுத்த நிலைக்கு எடுத்துச் செல்வதற்கு ஓர் ஊடகமாக உருவாக்கபபட்டதே நெடுங்கணக்காகும். பிரதியை உருவாக்கித் தருவதில் நெடுங்கணக்கின் உருவாக்கம் என்பது மொழியில் அமைந்த பெரிய பண்பாட்டு மாற்றம் எனலாம். கிரேக்க இலக்கணக் கலைஞர்கள் நெடுங்கணக்கை உருவாக்கிப் பயன்படுத்தத் தொடங்கிய பின்னரே மொழியமைப்புப் பற்றிய சிந்தனைகளும் அவை தொடர்பான தத்துவார்த்த மற்றும் தருக்கவாதங்களும் தோன்றின என்பர் (சு.இராசாராம்,2010:70). கிரேக்கர்கள் போனீஸியர்களிடமிருந்து தம் மொழிக்கான நெடுங்கணக்கை உருவாக்கிக் கொண்டுள்ளனர். அதன் பிறகே இலக்கண உருவாக்கம் பற்றிச் சிந்திக்கத் தொடங்கியுள்ளனர். 'Grammar' என்னும் ஆங்கிலச் சொல், நெடுங்கணக்கின் எழுத்தைக் குறிக்கும் 'Grammaar' என்னும் கிரேக்கச் சொல்லிலிருந்து வருவிக்கப்பட்டுள்ளது (சு.இராசாராம், 2010:70). தமிழில் வாய்மொழி மரபுகள் எழுத்துவடிவம் பெற வேண்டும் எனும் அறிவார்ந்த சிந்தனைத் தோற்றம்பெற்ற காலந்தொட்டே எழுத்துருவாக்கம் தோற்றம்பெறத் தொடங்கியது. எழுத்துமொழி உருவாக்கம், குறிப்பாக இலக்கியமொழிப் பொதுநிலையாக்கம் (Standardization of Literary Language) இக்காலந்தொட்டுத் தொடங்கியதாக அனுமானிக்கலாம் (சு.இராசாராம், 2010:71).

ஐரோப்பியர் வருகைக்குப் பிறகு மரபிலக்கண நெடுங்கணக்கு முறையும், உரோமன் எழுத்துமுறையும் இணைந்த எழுத்துவடிவம் இடம்பெறத் தொடங்கியது. 1788 இல் வில்லியம் ஜோன்ஸ் எழுதிய 'உரோமன் எழுத்துக்களில் ஆசியச் சொற்களின் எழுத்தியல் குறித்த ஆய்வு என்னும் கட்டுரை இதனைப் பற்றிப் பேசியுள்ளது (இராம. சுந்தரம், 2007:98). இக்கட்டுரை ஐரோப்பிய மற்றும் இந்திய மொழிகளின் ஒலியியல் ஆய்வோடு தொடர்புடையதாக இருப்பினும் எழுத்துப் பெயர்ப்பை முதன்மைப்படுத்துவதாக உள்ளது. ஆசிய மொழிச் சொற்களை உரோமன் எழுத்துகளில் எழுதுவது பற்றி விரிவாகப் பேசுவதோடு சமஸ்கிருதச் சொற்களை வங்காள ஒலிப்புடன் எழுதியுள்ளதாகத் தெரிகிறது. சமஸ்கிருத-வங்காள மொழிகளின் உச்சரிப்பிலுள்ள வேறுபாடு காரணமாக, ஒலி பெயர்ப்புக்குப் பதில் எழுத்துப் பெயர்ப்புக்கு முன்னுரிமை தருகிறார். சமஸ்கிருதத்தின் தேவநாகிரி எழுத்துவடிவம் "பிற எல்லாவற்றையும் விட இயல்பாக அமைந்துள்ளது" என்கிறார் (இராம. சுந்தரம், 2007:98). ஜோன்ஸ் இந்த எழுத்துப் பெயர்ப்பில் ஆங்கில நிகரன்களைக் காட்டிலும் இத்தாலி நிகரன்கள் உகந்தாகக் கருதி அதனைப் பயன்படுத்தியுள்ளதை அவர் குறிப்பிலிருந்து அறிய முடிகின்றது. "உயிருக்கு இத்தாலியன், மெய்யிற்கு ஆங்கிலம்" என்கிற வாசகம் இவரது எழுத்துப் பெயர்ப்பு முறையை விளக்கும். "கூடுமானவரை மூல ஒலிக்கேற்ற மூல உரோமன் எழுத்துகளால் எழுதப்பட வேண்டும்" என்பது இவர் நோக்கமாக இருந்தது (இராம. சுந்தரம், 2007:98-99). ஜோன்ஸ் தந்தது எழுத்துப் பெயர்ப்பு முறைதான் என்ற போதிலும், உலகளாவிய ஒலியியல் முறைக்கு ஒரு முன்னோடியாக இது அமைந்தது. எழுத்து வடிவங்களை மையப்படுத்தாது ஒலிகளை நேரடியாகக் கொண்டு அமைந்த பன்னாட்டு ஒலிப்புமுறை

நெடுங்கணக்கு (International Phonetic Alphabet) அட்டவணை போன்றவற்றை இதற்குச் சான்றாகக் காட்டலாம் (இராம. சுந்தரம், 2007:99).

ஜோன்ஸ் செய்த இந்த முயற்சியைப் போன்று சீகன்பால்கின் இலக்கண நூலில் பார்க்க முடிகின்றது. தமிழ் நெடுங்கணக்கு வரிசையைக் குறிப்பிடும் பொழுது அதற்கு இணையாக உரோமன் எழுத்துப் பெயர்ப்பைப் பயன்படுத்தியுள்ளார். சீகன்பால்கு இத்தாலி நிகரன்களைக் கையாண்டுள்ளார். உதாரணமாக, ககரம் (Ka) பற்றிக் குறிப்பிடுகையில் ga, gi, gu, gai, go... என்றும் சகரம் (Ca) பற்றிக் குறிப்பிடுகையில் tscha என்றும் எழுத்துப் பெயர்ப்பை ஒலிப்பு அடிப்படையில் அமைத்துள்ளார்.

எழுத்து வடிவம்

தமிழ் நெடுங்கணக்கின் அச்சு வடிவம் என்பது பிரதி உருவாக்கத்தின் பெருமாற்றம். அச்சுருவாக்கம் எழுத்தின் நவீன வடிவங்களை உருப்பெறச் செய்திருந்தன. தமிழ் எழுத்து அச்சு உருவங்கள் ஐரோப்பாவில் 300 ஆண்டுகளுக்கு முன்பே கிடைத்திருந்தன. தமிழ் வரிவடிவம் அச்சில் 1577 ஆம் ஆண்டே பயன்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. ஹென்றிக்குவிஸ் (1520-1600) எழுதிய இலக்கணத்தில் மலபார் அகரவரிசை எழுத்துக்களோடு தமிழ் உதாரணங்கள் அனைத்தும் உரோமன் எழுத்துப்பெயர்ப்பில் இடம்பெற்றிருந்தன. பதினெட்டாம் நூற்றாண்டில் ஐரோப்பியரால் உருப்பெற்ற தமிழ் எழுத்துகளின் கையெழுத்து வடிவம் பற்றியும் அச்சுவடிவம் பற்றியும் அறிந்து கொள்ள ஏதுவாக உள்ளது. சீகன்பால்கு அவர் காலத்து எழுத்துகளை அப்படியே பதிவு செய்ய நினைத்துள்ளார். சீகன்பால்கு தரும் எழுத்துகளில் எகர ஒகர வேறுபாடின்றியும் மெய்கள் புள்ளி பெறாமலும் இடம்பெற்றுள்ளன. எழுத்துகள் முறையான வடிவங்களின்றிச் சிறிதும் பெரிதுமாக அமைந்துள்ளன. சீகன்பால்கு ஆய்த எழுத்திற்கான வடிவம் கொடுக்கையில் கூ (ak) என்று பயன்படுத்தியுள்ளார். இந்தக் 'கூ' என்பது உச்சரிப்பு அடிப்படையில் பேச்சு வழக்கிற்கான ஒரு வடிவமாக இருந்திருக்க வாய்ப்புண்டு. சீகன்பால்கு அச்செழுத்துகளின் ஆரம்ப வடிவைத் தருகின்றார். ஊகாரம் எழுதப்படும் பொழுது குறில் எழுத்தோடு ளகர உயிர்மெய் இணைந்து ஒரே எழுத்தாகவும் ஒளகாரத்தின் வடிவம் ஒகரத்தை அடுத்து ளகரம் தனியாகவும் எழுதப்பட்டுள்ளது. எகர எழுத்தின் நேர்க்கோட்டில் ஒரு பிறை வடிவம் சேர்த்து ஞகர மெய்யின் வடிவம் கொடுக்கப்பட்டுள்ளது. ரகரம் மற்றும் துணையெழுத்தின் வடிவம் (ா) ஒன்றாகவே உள்ளது. தனிமெய்கள் புள்ளி பெறாமலும், உயிர் மற்றும் உயிர் மெய்களில் குறில் நெடில் வடிவ வேறுபாடின்றியும் அமைந்துள்ளன.

ஒலிபெயர்ப்பு அடிப்படையில் எழுத்துகளின் வடிவங்களை அணுகியுள்ளது போன்று சொற்களின் வடிவங்களையும் இவ்வாறே அமைத்துள்ளார். அக்காலப் பேச்சு மொழியைப் பதிவு செய்ய வேண்டும் என்பதையே நோக்கமாகக் கொண்ட சீகன்பால்கு பேச்சு வழக்குச் சொற்களின் வடிவங்களையே தம் நூலில் வெளிப்படுத்தியுள்ளார். ஆனால் இங்குக் கவனிக்க வேண்டியது அவர் உதாரணங்களாகப் பயன்படுத்திய சொற்களின் தமிழ் வடிவங்கள் சில பேச்சு மொழியாகவும் சில இலக்கிய வழக்காகவும்

அமைந்துள்ளன. நன்னாக (நன்றாக), செலை (சிலை) போன்ற சொற்கள் பேச்சுவடிவிலே அமைந்துள்ளன. இலக்கிய வடிவாக அமைந்துள்ள சில சொற்களின் ஒலிபெயர்ப்பு பேச்சு வடிவாகவும் பெண் (Pon), வீடு (Wudu), சில இடங்களில் பேச்சுவழக்கு மொழி ஒலிபெயர்ப்பில் இலக்கிய வடிவாகவும் பிடவை (Pudawai), கேழ்வி (kelwi) அமைந்துள்ளன. சொற்களின் வடிவங்களை அமைத்துக் கொடுப்பதில் சீகன்பால்குவிற்கு இருவிதமான கண்ணோட்டம் இருந்தாலும் இவை மரபிலக்கணத்திலிருந்து மாறுபட்ட நவீன எழுத்து வடிவினைப் பிரதிபலிக்கின்றன.

> "தமிழ்ச் சொற்களின் வடிவம் சொற்களின் சொல்லெழுத்து வரலாற்று மாற்றங்களைப் புலப்படுத்துகிறது. சான்றாக ஒன்று என்பதை ஒண்ணு, மூன்று என்பது மூணு என்று சீகன்பால்கு எழுதியுள்ளதன் மூலம் ன்ற் என்பது குறிலுக்கு முன்னால் ண்ன் என்றும் நெடிலுக்கு முன்னால் ண் ஆகவும் மாறிவிட்டதைப் புலப்படுத்துகிறது" *(செ.வை.சண்முகம், 1993:38-39).*

சீகன்பால்கு காலத்தில் குறில், நெடில் எகர ஒகர வேறுபாடுகள் குறிப்பிடாத நிலையில் அவர் குறிப்பிடும் பேச்சுவழக்குச் சொற்களின் வடிவமும் ஒரு சில இடங்களில் மாற்றாகக் கொடுக்கப்படுகிறது. படித்தென், படிச்சென் எனும் பேச்சுமொழி வடிவம் மாற்று வடிவம் பெற்றுள்ளதைக் காணலாம்.

உச்சரிப்பு

ஐரோப்பியர் இயற்றிய தமிழ் இலக்கணங்கள் தமிழ்மொழியின் அச்சு வடிவத்தைப் பற்றிய நீண்டகால வரலாற்றைப் பிரதிபலிக்கின்றன. எழுத்துகள் உருவம் பெற்ற பிறகு அது எவ்வாறு உச்சரிக்கப்பட வேண்டும் என்பதே இவர்களின் அடுத்த கவனமாக இருந்தது. பேச்சுமொழி, எழுத்துமொழியின் உச்சரிப்பு வடிவங்களை இவர்களின் இலக்கணங்களில் பதிவு செய்கின்றனர். அ-ānna, ஆ- āvanna, க-kānnā, கா-kāvenna என்று பேச்சுமொழியில் நெடுங்கணக்கு உச்சரிக்கப்படும் முறையைக் குறிப்பிடுகின்றனர். அதே போன்று எழுத்து மொழியில் கரம் (gārām), காரம் (gārām) இணைந்து அகரம், ககரம், ஈகாரம், கீகாரம் என்று உச்சரிக்கப்படுவதையும் குறிப்பிட்டுள்ளார். உயிரெழுத்துகளில் குறில் ஒலிகளே பெரும்பாலும் மாற்று உச்சரிப்புகளைப் பெற்றுள்ளன.

சீகன்பால்கு உச்சரிப்பினைப் பற்றிக் குறிப்பிடுகையில் சொற்களில் உச்சரிப்பு அழுத்தம் பெறும் இடங்களை வைத்துக் கொண்டு முதல், இடை, கடையில் வரும் எழுத்துகள் பற்றிக் குறிப்பிடுகின்றார். இதனை இவர் உச்சரிப்பு அடிப்படையிலேயே பார்க்கின்றார். ஒரு சொல் உச்சரிக்கப்படும் பொழுது அது அழுத்தம் பெறும் இடத்தினைப் பொறுத்து அச்சொல்லின் உச்சரிப்பு முக்கியத்துவப்படுகிறது எனும் வரையறையை அமைத்துக் கொண்டுள்ளார்.

முதல் எழுத்து உச்சரிப்பு அழுத்தம் பெறும் பொழுது இறுதி எழுத்துகள் அதனைவிடக் குறைவாகவே உச்சரிப்புப் பெறுகின்றன. முதல் எழுத்தை உச்சரிக்க எடுத்துக் கொண்டதற்கான விருப்பம் இறுதி எழுத்துகளை உச்சரிப்பதில் அமைவதில்லை. (எ.டு. பிதா, மாதா, கிறுபை, ஆதி, பூமி, சாதி). முதலில்

அழுத்தம் பெறும் எழுத்துகளோடு சில மெய்கள் இணையும் பொழுது அவை உச்சரிப்பில் எங்ஙனம் முக்கியத்துவப்படுகின்றன என்று சொல்லின் இறுதியில் வரும் மெய்களைப் பட்டியலிடுகின்றார். (எ.டு. கண், மகன், தாகம், மனுஷன், பகல், கதிர்). அதே போன்று இடையில் சில மெய்கள் மட்டுமே வர அவை எங்ஙனம் உச்சரிப்பில் அழுத்தம் பெறுகின்றன எனக் காட்டுகின்றார் (எ.டு. உங்கள், பக்கம், இரக்கம், காற்று). சீகன்பால்கு உச்சரிப்பு அடிப்படையில் வகைப்படுத்தும் சொற்களைப் பேச்சுமொழி அடிப்படையிலேயே அமைத்துக் காட்டுகிறார். (காத்து-காற்று, கத்தன்-கர்த்தன்). பேச்சுமொழியில் சொல் எவ்வாறு உச்சரிக்கப்படுமோ அதனை அப்படியே எழுத்து மொழியில் தருகிறார். உச்சரிப்பு அடிப்படையில் சொற்கள் அடையும் மாற்றங்களையும் குறிப்பிடுகின்றார். சொல்லில் வரும் இகரம் உச்சரிப்பில் உகரம் மற்றும் ஒகரமாக மாற்றம் கொள்ளும் என்று உச்சரிப்பு அடிப்படையில் தம் எழுத்துப் பெயர்ப்பை சீகன்பால்கு அமைத்துக் கொண்டுள்ளார். (பிடவை-டீரனயஎநவீ, வீடு-ுரனர, பிள்ளை-டீரடடநவீ). சீகன்பால்கின் உச்சரிப்பு அனுபவம் என்பது எழுத்து மொழி சார்ந்தும் பேச்சுமொழி சார்ந்தும் அமைந்துள்ளதை அவர் தரும் உதாரணங்கள் எடுத்துக்காட்டுகின்றன.

தனியான சொற்களின் உச்சரிப்பினைத் தொடர்ந்து இரண்டு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட சொற்கள் இணையும் பொழுது அவை எவ்விதம் உச்சரிப்பு மாற்றம் கொள்கின்றன என்பதையும் விளக்குகின்றார். இரண்டு சொற்களின் இணைவில் (க, ச, த, ப) வலிமிகும் இடங்கள் (நன்னாகக்கேழ்கிறது (நன்றாகக் கேட்கிறது) -யேஸீபெய முநடமசையனர, ஆகாதவர்களாய்ப் போனோம்-யுபயனயறநசபயடயவீ றிழமெஅ) அழுத்தம் பெற்று உச்சரிக்கப்படும் என்பதை முன்னிலைப்படுத்துகிறார். இரண்டிற்கும் மேற்பட்ட சொற்கள் இணைந்து தொடராக வந்து உச்சரிக்கப்படும் பொழுது அவை முழுமையாக உச்சரிக்கப் படுவதில்லை. (நரகத்துக்குப் போற வழி (நரகத்துக்குப் போகிற வழி), சறுவத்துக்கும் வல்லவராமிருக்கிறச் சறுவேசுரன் (சருவத்துக்கும் வல்லவராயிருக்கிற சருவேசுரன்). சீகன்பால்கின் உச்சரிப்புப் பற்றிய புரிதல் எழுத்துவடிவம் கொள்ளும் பொழுது அவை அப்படியே பேச்சுவழக்கினைக் கொள்வதில்லை. நவீன எழுத்து வடிவினைப் பின்பற்றுகின்றன.

புணர்ச்சி

புணர்ச்சி என்பது சொல்லும் சொல்லும் இணைவு பெறல் என்பதைவிட எழுத்தும் எழுத்தும் என்பதே பொருத்தமாக இருக்கும். ஐரோப்பியர் தமிழ் இலக்கணம் படைக்கும் பொழுது புணர்ச்சி விதிகளை நேரடியாக விளக்காமல் சொற்சேர்க்கையினால் ஏற்படும் மாற்றங்களை விளக்கிச் செல்கின்றனர். தொல்காப்பியர் குறிப்பிடும் திரிதல், கெடுதல், மிகல் எனும் மூன்று மாற்றங்களின் அடிப்படையில் புணர்ச்சி அணுகப்பட்டுள்ளது. சீகன்பால்கு மரபிலக்கணங்களைச் சாராது பேச்சுமொழிக்கான இலக்கணம் படைக்கும் பொழுது அங்குப் புணர்ச்சியைப் பற்றிப் பேசுவதைத் தவிர்த்துள்ளார். இவர் சொற்களைத் தொடர்ந்து எழுதும் பொழுது சொற்களுக்கு இடையிலான இடைவெளியின்றி எழுதுகின்றார் (பரோகத்தினுடையபாக்கியம், நம்மைப்படைபித்தஆண்டவர்). சீகன்பால்கு எழுத்துவடிவம், எழுத்துமுறை என அனைத்தும் அவர் காலத்துத் தமிழ்

எழுத்துக்கள்/சொற்கள் அமைந்துள்ள விதத்திலேயே அமைந்துள்ளதால் சொற்களுக்கிடையிலான இடைவெளியின்றி எழுதுவதையும் அங்ஙனமே அமைத்துக் கொண்டுள்ளார். பெரும்பாலும் சொற்களை, தொடர்களைத் தொகுத்துத் தரும் முயற்சியாகவே இருந்துள்ளது. இது ஆரம்பக்கால அச்சுவடிவம் என்பது எகர ஒகர வேறுபாடின்றியும், மெய்கள் புள்ளி பெறாமலும் சொற்கள் இடைவெளியின்றியும் இருந்துள்ளதைக் காட்டுகின்றது.

சீகன்பால்கு தம் இலக்கணத்தைத் தமிழ் மரபிலக்கண அமைப்பிலிருந்து தனித்துவப்படுத்துகின்றார். ஒரு குறிப்பிட்ட நிலையினருக்கு மட்டுமான இலக்கணக் கல்வி என்பது சமூகத்தில் அதன் பயனை அறிந்திராத விளிம்புநிலை மக்களைச் சார்ந்து அமைகின்றது. செய்யுள் வழக்கிலும் உயர்ந்தோர் பேச்சு வழக்கிலும் எழுத்தப்பட்ட இலக்கணம் அந்நிலையிலிருந்து மாறிப் பேச்சு மொழிக்கான இலக்கணமாக உருப்பெற்றது. பேச்சுமொழிச் சொற்களைச் சேகரித்து உருவாக்கப்பட்ட சீகன்பால்கின் இலக்கண அணுகுமுறை என்பது கருத்துப் பரிமாற்றத்திற்கு ஈடுசெய்யும் வகையில் தொடரிலக்கணத்தை முன்னிறுத்துவதாக அமைகின்றது. அந்த அளவிலேயே தம் எழுத்திலக்கணத்தை அமைத்துக் கொண்டுள்ளார். தமிழ் நெடுங்கணக்கை அறிமுகப்படுத்தல், அவற்றின் வடிவம், உச்சரிப்பு மாற்றம் எனும் நிலைகளில் பயிற்சி முறையிலான இலக்கணத்தைத் தருகின்றார். பேச்சுமொழிக்கான இலக்கணம் படைக்கும் சீகன்பால்கின் நோக்கமானது அதுவரைக்குமான மரபைக் கட்டுடைத்து அவர்கால மொழியின் வழக்குநிலையைப் பதிவு செய்வதாக உள்ளது.

துணை நூல்கள்

1. Daniel Jeyaraj, 2010, **Tamil Language for Europeans:Ziegenbag's Grammatica Damulica** (1716), Harrassowite Verlag, Wiesbaden.
2. Ziegenbalg,B., 1716, **Grammatica Damulica Letters & Impensis, Orphanotrophei**, Hallee Savonum, German.
3. இராசாராம், சு. 2010, **இலக்கணவியல் மீக்கோட்பாடும் கோட்பாடுகளும்**, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில்.
4. சண்முகம்,செ.வை., 1993, **கிறித்துவ அறிஞர்களின் இலக்கணப்பணி**, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சி.ஐ.டி.வளாகம், தரமணி, சென்னை.
5. சண்முகதாஸ்,அ., 1997, **தமிழ்மொழி இலக்கண இயல்புகள்**, பூபாலசிங்கம் புத்தக சாலை, கொழும்பு.
6. தாமஸ் டிரவுட்மன் (தமிழில்:இராம.சுந்தரம்), 2007, **திராவிடச் சான்று, எல்லிஸும் திராவிட மொழிகளும்**, காலச்சுவடு பதிப்பகம், 669, கே.பி.சாலை, நாகர்கோவில்.
7. ஆசெர்,ஆர்.இ., (தமிழில்:பெரியசாமி, ஆர்.), 2009, **ஐரோப்பிய மொழிகளில் தமிழ் இலக்கண நூல்கள் (1500-1950)**, புதிய புத்தகம் பேசுது, தமிழ் புத்தக உலகம் (1800-2009), பக். 139-151, பாரதி புத்தகசாலை, 421, அண்ணாசாலை, சென்னை.

கைம்மை எனும் நோய்

திருமதி ஜெ. பாரதி
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

சங்க காலத்தினை அறியும் ஆதாரமான சங்க இலக்கியத்தின் தொகை நூல்களில் ஒன்றானது புறநானூறு. இந்நூல் வீரத்தை மட்டும் எடுத்தியம்பாமல் மக்களின் செம்மையான வாழ்க்கை முறைகளின் காரணிகளான கல்வி, கருணை, அன்பு, நன்றியுணர்வு, அறம், ஒழுக்க நெறிகள் போன்றவற்றையும் எடுத்தியம்புகிறது. மக்களின் வாழ்வியல் காரணிகளை எடுத்தியம்பிய புறநானூறு அவ்வாழ்க்கையில் ஈடுபடும் ஆணின் சரிபாதியான பெண்களின் நிலை பற்றியும் இயம்புகிறது.

சங்க காலப் பெண்களை நோக்குங்கால் அக்காலத்தில் அவர்களுக்குச் சில சமூகக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டிருந்தன. அங்ஙனம் விதிக்கப்பட்ட கட்டுப்பாடுகள் எழுதப்படாத சட்டமாகச் சில கூறப்பட்டிருந்தன. அவ்வாறு கூறப்பட்டுள்ளவைகளுள் கைம்மை நிலையும் ஒன்று. கட்டுப்பாடு எனும் பெயரில் பெண்களுக்கு இழைக்கப்பட்ட கைம்மை நிலை எவ்வாறு நோன்பாக நோக்கப்படுகிறது என்பதைப் புறநானூறு வழி இவ் ஆய்வுக் கட்டுரை ஆய்கிறது.

கைம்மை

சங்க காலப் பெண்கள் கணவன் இறந்த பின் ஏற்கும் கைம்மை நிலை ஒரு நோன்பாகவே பின்பற்றப்பட்டிருக்கின்றது. கணவனுடன் இருந்தபோது அவனுடன் கொண்ட காதல் வாழ்க்கையும் அவனைத்தவிர்த்து வேறு ஆடவரை நினைவாத் தன்மையும் கணவனின் இறப்பிற்குப்பின்னும் தொடர்கிறது. இந்நிலையே கைம்மை நிலை. இந்நிலையைத் தொல்காப்பியர் தாபத நிலை என்கிறார்,

ஒழிந்தோர் புலம்பிய கையறுநிலையும்
காதலி யிழந்த தபுதார நிலையும்
காதலனிழந்த தாபத நிலையும் **(79)(27-29)**

என்று காஞ்சித்திணையில் கூறுகிறார். இந்நூற்பாவில் சுட்டப்படும் காதலனிழந்த தாபத நிலை கைம்மை நிலையைக் குறிப்பிடுகிறது. காதலனுடன் வாழ்ந்த நாள்களில் தொடர்ந்த இன்பங்கள் அவன் இறப்பிற்குப்பின் துன்ப கீதம் இசைக்கின்றன. அவனைப் பிரிந்த தாபத்தில் அவள் மேற்கொள்ளும் செயல்கள் பல.

அவை,

- கணவன் இறந்தவுடன் தானும் உடன் இறத்தல்
- கணவன் இறந்து முதுகாட்டிற்குக் கொண்டு சென்று சிதைமூட்டும்போது அச்சிதையில் தானும் விழுந்து இறத்தல்; இதனை உடன்கட்டை ஏறல் என்பர்.
- கணவன் இறந்த பிறகும் அவனை நினைத்துக் கைம்மை நோன்பு நோற்று இருத்தல்.

இவ்வாறு கூறப்பட்டவைகளில் கணவன் இறந்தவுடன் தானும் உடன் உயிர் விடுதல், கணவனின் உடலை எரியூட்டி உடன் கட்டை ஏறுதல் போன்றவற்றை ஏற்காத பெண்களே கைம்மை நோன்பு நோக்கும் நிலை கொண்டனர். இந்நிலையையும் பெண்கள் விரும்பி ஏற்கவில்லை என்பது சில பாடல்கள் மூலம் தெளிவுறுகிறது.

கைம்மையின் கட்டுப்பாடுகள்

கணவனை இழந்த பெண்களைக் கைம்பெண்கள் என்பர் சங்கப் புலவர்கள். இப்பெண்களை ஆளில் பெண்டிர், கழிகல மகளிர், படிவ மகளிர், கயவள் பெண்டிர், பருத்திப்பெண்டிர் என்பர். இவர்களை இன்றைய சமூகத்தினர் விதவை' என்கின்றனர். இத்தகு பெண்கள் கணவன் மீது கொண்ட காதலின் வெளிப்பாடே கைம்மை நோன்பு. இதைக் கணவனை இழந்த பெண்கள் அவன் இறப்பிற்குப்பின் தனக்கென எந்த இன்பமும் கொள்ளா நிலை ஏற்கின்றனர். உளவியல் தன்மையில் நோக்கின் பெண்களின் முதல் இன்பமான அலங்காரங்கள், அணிகலன்கள், பூச்சூடல் இவற்றைத் துறப்பதே முதல் சடங்காகக் கொள்கின்றனர். இதை விளக்கும் ஒரு புறநானூற்றுப்பாடல்.

ஓர் இல் நெய்தல் கறங்க ஓர் இல்
ஈர்ந் தண் முழவின் பாணி ததும்பப்
புணர்ந்தோர் பூ அணி அணியப் பிரிந்தோர்
பைதல் உண்கண் பனி வார்ப்பு உறைப்பப்
படைத்தோன் மன்ற அப்பண்பிலாளன்!
இன்னாது அம்ம இவ் உலகம்;
இனையகாண்க இதன் இயல்பு உணர்ந்தோரோ (புறம். 194)

எனும் பக்குடுக்கை நன்கணியார் பாடல் மூலம் விளக்கப்படுகிறது. இப்பாடலின் கருவாகப் புலவர் ஓர் சமூகத்தின் நடப்பைக் கூறி வாழ்வின் யதார்த்த நிலையைக் காட்டுகிறார். ஓர் இல்லத்தில் இறப்பை அறிவிக்கும் சாக்காட்டுப்பறையும் மற்றோர் இல்லத்தில் திருமணத்திற்கான குளிர்ந்த முழவு ஓசையும் முழங்குகின்றன. சாக்காட்டுப்பறை ஒலித்த இல்லத்தில் உள்ள பெண் தன் கணவனைப் பிரிந்த வருத்தத்துடன் கண்கள் கண்ணீர் சொரிய நிற்பதைப் பிரிந்தோர் பைதல் உண்கண் பனி வார்பு உறைப்ப" என்றும் கணவருடன் கூடிய மகளிர் அணிகலன் அணிந்ததையும் கூறுகின்றன. இப்பாடலடிகள் மூலம் கணவனைக் கூடி இருப்போர் மட்டுமே பூவையும் அணிகலன்களையும் அணிகின்றனர் என்கின்றார் ஆசிரியர். மேலும் இப்பாடலின்மூலம் பெண்கள் கண்ட துன்ப நிலை

விளக்கப்பட்டுள்ளது. ஒன்று இன்பம்; மற்றொன்று துன்பம். திருமண வீட்டில் கண்ட நிகழ்வு இன்பம். இன்பத்தின் உச்சகட்ட நிலை திருமண அலங்காரம். துன்பத்தின் உச்ச நிலை இறப்பு. இறப்புக் கண்ட இல்லத்தில் இறந்தவனின் மனைவி இழக்கும் சுக போகங்கள் கணவனின் இழப்பை விட மேலாகத் தோன்றா. அவனை இழந்த துக்க நிலையில் தன் சுகங்களைத் தியாகம் செய்யும் நிலையே கைம்மை நிலை. இந்நோன்பை அவள் மனமுவந்து ஏற்றுக்கொள்வதில்லை. ஆண் ஆதிக்கச் சமூகம் இதைக் கணவனை இழந்த பெண்ணிடம் திணிக்கிறது. மேலும் அவள் எந்தெந்த நிலையிலெல்லாம் ஒடுக்கப்பட முடியுமோ அந்தந்த நிலையிலெல்லாம் ஒடுக்கப்பட்டவளாகிறாள். இந்த ஒடுக்கப்படும் நோக்கத்தின் விளைவே கைம்மை எனும் விதிமுறைகள்.

கணவனை இழந்த பெண்கள் சில குறியீடுகள் மூலம் சமுதாயத்திற்கு சுட்டப்பட்டுள்ளனர். அதாவது வளையல் நொறுக்குதல், கூந்தலைக் களைத்துத் தலை மழித்தல், உணவு மாறுபாடு, வண்ண ஆடை உடுத்தாமை ஆகிய சில குறியீடு நிகழ்வுகள் மூலம் சுட்டிக்காட்டப்படுகிறாள்.

கைம்மை நிலையில் கொடுஞ் சமூகக் கட்டுப்பாடுகளுடன் வாழ்வதைவிட இறப்பதே மேன்மையாகக் கருதிவிடுகிறாள் ஒரு பெண். மன்னன் பூதப்பாண்டியனின் துணைவி பெருங்கோப்பெண்டு பாடிய பாடலடிகளில் கைம்மை நோன்பிற்கு அஞ்சியவளாய்க் கணவனுடன் தீப்பாயச் சென்றவளைச் செல்லாது ஒழிக எனக்கூறியவரிடத்து உரைக்கப்பட்ட அடிகள் இவை.

செல்க எனச் சொல்லாது ஒழிக என விலக்கும்
.........................சான்றீரே! (புறம். 246:2-3)

எனத் தடுத்த சான்றோரைக் கூறுகிறாள்.

அணில் வரிக் கொடுங் காய் வாள் போழ்ந்திட்ட
காழ் போல் நல் விளர் நறு நெய் தீண்டாது
அடை யிடைக் கிடந்த கைபிழி பிண்டம்
வெள் எட் சாந்தொடு புளிப்பெய்து அட்ட
வேளை வெந்தை வல்சி ஆகப்
பரற்பெய் பள்ளிப்பாய் இன்று வதியும்
உயவல் பெண்டிரேம் அல்லேம் மாதோ (4-10)

இப்பாடலடிகள் கைம்மை நோன்பிற்கான கட்டுப்பாடுகளைக் கூறுகின்றன. கைம்மை மகளிருக்கு அளிக்கப்படும் சுகாதாரமற்ற, சுத்தமற்ற உணவினைப் பற்றிக் கூறுகின்றன. இம் மகளிருக்கு அளிக்கப்படும் சோற்றின் பருக்கையினைப் பற்றிக் கூறுகையில் அணில் மேலுள்ள வரிகளைப் போன்று வரிகளைக் கொண்ட வெள்ளரிக்காயின் விதைகள் போன்ற பருக்கை எனச் சுட்டிக் கூறப்படுகிறது. வெள்ளரியின் விதைபோன்ற பருக்கைகள் எளிதில் செறிக்காத் தன்மையவை. கைம்மை நோன்பு எனும் பெயரில் கணவனை இழந்தவள் இதை உட்கொள்ள நேர்கிறது. சுவையற்ற உணவை உண்ணும் போது அவளின் உணர்வுகள் அடக்கப் படுகின்றன. சுகாதாரமற்ற உணவு உண்ணப்படும்போது விரைவில் எளிதில் நோய்வாய்ப்பட நேரிடுகின்றது. இத்துன்பங்களையெல்லாம்

எதிர்கொண்டு வாழ்க்கையைப் போராடி வாழவேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகிறாள். "நறு நெய் தீண்டாது' எனும் அடிகள் அக்கடினமான சோற்றுப் பருக்கைகளின் மீது சுவைக்கான நெய் போன்ற எப்பொருளும் சேர்க்கப்படாததைக் கூறுகின்றன. புளி சேர்த்துச் சமைத்த வேளைக்கீரையுடன் எள்ளுத் துவையலுடன் உணவாக அளிக்கப்பட்டதும் இப்பாடலடிகள் மூலம் கூறப்பட்டுள்ளன. மேலும் இவர்களின் படுக்கைகள் பாயில்லாத படுக்கையாகின. பரல் கற்கள் மீதே படுத்துறங்கினர். இவற்றைப் பரற்பெய் பள்ளிப்பாய் இன்று உதியும் உயவல் பெண்டிரேம் எனும் அடிகள் கூறுகின்றன.

இவ்வாறான கைம்மை நோன்பு நோற்பதைவிட தீப்பாய்ந்து இறப்பதே மேல் என்றும் அது கைம்மை நோன்பைவிடக் கொடியதல்ல என்பதை 'பொய்கையும் தீயும் ஓரற்றே' எனும் அடிகள் மூலம் விளக்கப்படுகிறது. இவ்வாறு கைம்மை கொடுமை நோன்பு என்று நோக்கப்பட்டாலும் அதனைப் பெண்கள் விரும்பி ஏற்காதது இப்பாடலடிகள் மூலம் புலப்படுகிறது. இப்பாடலில் பூதப்பாண்டியன் இறப்பிற்குப் பின் அவனின் அரசி கைம்மை நோன்பு நோற்காமல் தீப்பாய்ந்தது புலப்படுகிறது. இவ்வாறாக வாழ்க்கையின் ஒவ்வொரு நிலையையும் போராடிச் சமூகத்தை எதிர்கொள்ளுங்கால் அவளின் கவனம் திசை திரும்பாமல் செல்கிறது. வேறு ஆடவனிடம் நாட்டம் கொள்ளாமல் இறந்தவனின் நினைவிலேயே வாழச்செய்கிறது.

மேலும் கைம்மை நிலையில் உள்ள பெண்களுக்கு உரிய நேரத்திற்கு உணவு உண்பது என்பதும் கிடையாது என்று புறநானூற்றின் மற்றொரு பாடலடி எடுத்தியம்புகிறது.

............கொழுநன் மாய்ந்தெனப் பொழுது மறுத்து
இன்னா வைகல் உண்ணும் அல்லிப் படூ உம் (புறம் . 248)

வேறு ஒரு பாடலில் கைம்பெண்ணிற்குத் தலை மழித்தல் என்பதும் நிகழ்த்தப்படும் ஓர் நிகழ்வாகக் கூறப்படுகிறது.

மண்ணுறு மழித் தலைத் தெண் நீர் வாரத்
தொன்று தாம் உடுத்த அம் பகைத் தெரியற்
சிறு- வெள் ஆம்பல் அல்லி உண்ணும்
கழி கல மகளிர் போல (புறம் . 280: 11-14)

புண்பட்டு இறக்கும் நிலையில் இருக்கும் தலைவனின் சிறப்புகளைக் கூறுகிறாள் தலைவி. அச்சிறப்புடைய தன் தலைவன் இறந்தால் தான் கைம்பெண் நோன்பு நோற்க வேண்டிய நிலைக்கு வருந்தித் தலைவி கூறும் பாடலடிகள் இவை. 'மண்ணுறு மழித்தலைத் தெண் நீர் வார' எனும் பாடலடிகள் முடிகளைந்த தலையைக் கழுவுதலைக் கூறுகின்றன. மேலும் இப்பாடலடிகளும் அல்லி அரிசியைக் கைம்பெண்ணின் உணவாகக் கூறுகிறது. கைம்மை மகளிர் அணிகலன் களைதலையும் கூறுகிறது. இவ்வாறாகப் பல பாடலடிகள் கைம்பெண்களுக்கு அல்லி அரிசியை உணவாக வலியுறுத்துவதன் மூலம் பெண்கள் விரும்பாமலேயே அல்லி அரிசி உணவு கட்டாய விதியாக்கப்படுவதும் நோக்கத்தக்கதாகிறது.

"கழி கல மகளிர்" எனும் அடிகள் கொண்டு கைம்பெண்ணிற்கு அணிகலன் களையவேண்டும் என்பதை இலை மறை காயாக உணர்த்துகின்றார். பெண்களுக்கு அழகு சேர்க்கும் ஆபரணங்களைக் களைதலையும் கைம்பெண் கோலம் பூண்ட பிற்பாடு மகளிர் கடைப்பிடிக்கவேண்டிய ஒன்றாவதை இப்பாடலடிகள் விளக்குகின்றன. மேலும் சில பாடலடிகளும் கூந்தல் களைதலைக் கூறுகிறது.

....................மகளிர் கைம்மை கூர
அவிர் அறல் கடுக்கும் அம் மென்
குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே (புறம் . 25, 12-14)

கைம்மையை மேற்கொள்ள வேண்டி அம்மகளிர் ஆற்றின் கரு மணலையொத்த மெல்லியதும் குவிந்ததுமான கரிய கூந்தலைக் கொய்தனர் எனக் கூறுகின்றன. இதில் கருத்தில் கொள்ளவேண்டிய செய்தி பெண்கள் தங்கள் கூந்தலை எந்த வயதிலும் நேசித்துப் பேணுவர். அவர்களின் அதிகப்படியான நேசிப்பு கூந்தலாகத்தான் இருக்கும். அத்தகைய நேசிப்பில் பேணப்பட்டதால் கருமையுடன் அடர்ந்து வளர்ந்திருக்கும் அக்கூந்தலும் அவளின் கைம்மை விதிக்காகப் பலியாவது தடுக்கமுடியாத ஒன்றாகிறது. பெண்களின் ஆசைகள் அங்குத் தடைசெய்யப்படுவது இப்பாடலடி மூலம் விளங்குகிறது.

போரில் இறந்துபட்ட வீரனின் மனைவி போர்க்களம் சென்று அவன் உடலைக்கண்டு புலம்பும் பாடலடிகள் இவை.

.... எழாநெல்
பைங்கழை பொதி களைந்தன்ன விளர்ப்பின் வளை இல் வறுங் கை ஓச்சி
(புறம் . 253)

பட்டை நீக்கிய வெளுத்த மூங்கிலினால் செய்யப்பட்ட வளையலை அணிந்த கைகள் அவனின் இறப்பிற்குப் பின்னால் வளையல் இல்லாத கைகளாயின. இவ்வாறு வளையல் இல்லாத கைகளைத் தலைமேல் வைத்துக்கொண்டு அவன் சுற்றத்தாருக்கு அவனின் இறப்புச் செய்தியை எவ்வாறு கூறுவேன் எனக் கதறுகிறாள். வளையல் இல்லாத கைகள் அன்று முதல் இன்று வரை அமங்கலமான கைகளாகக் கொள்ளப்படுகின்றன. அவ்வாறு வளையல் இல்லாத கைகள் கணவனை இழந்தவளின் பெறும் துக்கத்தைக் காட்டுகின்றன. அங்ஙனம் வளையல் இல்லாத கைகளைத் தலைக்குமேல் வைத்துத் தலைவனின் இறப்புச் செய்தியை உறவினர்க்குக் கூறத் தயங்குகிறாள் தலைவி.

மற்றொரு பாடலில் தன் காதல் கணவனைத் தலைவன் என்று கூறாமல் தன் புதல்வனின் தந்தை எனும் பெருமைப்படத் தன் தாய்மையை நிறைவடையச் செய்தனன் என்று இலைமறை காயாகக் கூறுகிறாள், ஒரு தலைவி

வான் சோறு கொண்டு தீம் பால் வேண்டும்
முனித்தலைப் புதல்வர் தந்தை (புறம் . 250, 7-8)

அவன் இடுகாடு சென்றதனைத் தனித்தலைப் பெருங்காடு முன்னிய பின்னே என்று கூறுகிறாள்.

அவளின் தலைவன் இரவலர்க்கு உதவிய புரவலனாக இருந்ததையும் அவனின் இறப்பு தனக்கு மட்டுமல்லாது இரவலர்க்கும் துன்பம் அளிப்பதையும் கூறுகிறாள். இரவலர் நிறைந்த வாயில் வள்ளல் இன்மையால் இன்று ஆரவாரமின்றி இருப்பதாகக் கூறும் அடிகள் இவை.

இரவலர்த் தடுத்த வாயில் புரவலர்
கண்ணீர்த் தடுத்த தண்நறும் பந்தர் (புறம்.250:2-3)

இவ்வாறான பெறுமைமிக்க தலைவன் இறந்துபட்டதும் கைம்மையுற்ற அவள் தன் நிலை கூறுகிறாள்.

கூந்தல் கொய்து குறுந்தொடி நீக்கி
அல்லி உணவின் மனைவியொடு இனியே (4-5)

கைம்மையுற்ற பெண்களின் கூந்தல் களைதலும் தொடி நீக்குதலும் அல்லியுணவு உட்கொள்ளலும் போன்றவை பழமையின் மரபாகின்றன. மேலும் கைம்மை நோன்பு ஏற்கும் பெண் ஒருத்தி அவன் இறப்பிற்குப் பின் அவனுக்குப் பிண்டம் வைக்க அவ்விடத்தைத் தன் கண்ணீர்கொண்டு மெழுகுகிறாள் என்று ஓர் பாடலடி கூறுகிறது.

அடங்கிய கற்பின் ஆய்நுதல் மடந்தை
உயர் நிலை உலகம் அவன் புக........வரி
நீறு ஆடுசுள கின் சீறிடம் நீக்கி
அழுதல் ஆனாக் கண்ணள்
மெழுகும் ஆப்பி கண்கலுழ் நீரானே (புறம் . 249,10-14)

நிரம்பக் கற்பினையுடைய பெண் தன் கணவன் உயர்நிலை உலகம் எனப்படும் விண்ணுலகம் புகுந்தபின் அவனுக்குப் பிண்டம் எனப்படும் சடங்கில் படையல் அளிக்க விரும்புகிறாள். இப்படையல் சடங்கை இறந்த தன் கணவனுக்கு அளிக்க எண்ணம் கொண்டு ஓர் இடத்தைச் சீர் செய்கிறாள் மனைவி. அதற்கு அவள் 'ஆடு அளகின் சீறிடம் நீக்கி' எனும் பாடலடிகளில் கூறப்படுதல் போல் முறத்தின் அளவான சிறு இடத்தை அவனுடன் வாழ்ந்த நாள்களையும் அவனையும் நினைந்து கண்ணீர் சிந்தி மெழுகுகிறாள். அவளின் கண்களில் இருந்து காதலுடன் வாழ்ந்த நாள்களை நினைத்துச் சிந்தும் கண்ணீரானது பசுஞ்சாணத்துடன் கலந்து அங்கு மெழுகப்பட்டு அந்த இடத்தில் கணவனுக்குப் பிண்டம் அளிக்கப்பட்டது காணலாகிறது. இந்தப் பாடல் மூலம் இறப்பவருக்குப் பிண்டம் வைக்கும் பழக்கமும் கைம்மை நோன்பில் இருந்தது காணத்தக்கது.

சங்க காலத்தில் பெண்களுக்கு விதிக்கப்பட்ட சட்டதிட்டங்களுள் இக்கைம்பெண் நோன்பு நிலை யாரால் எப்படி ஏற்படுத்தப்பட்டது என அறியப்படாவிட்டாலும் ஏதோ ஒரு காரணத்திற்காக மரபு நிலையில் பின்பற்றப் பட்டுள்ளது. கணவனை இழந்த பெண் உணர்வு நிலையிலும் உளவியல் நிலையிலும் இக்கட்டுப்பாட்டிற்குள் அடங்கிவிட்டவள் ஆகிறாள். தலை மழிக்கப்பட்டு, கூந்தல் வெட்டப்பட்டு, அணிகலன்கள் கலையப் பட்டு அவளின் அழகு அங்குக் குலைக்கப்படுகிறது; குறைக்கப்படுகிறது. கைம்பெண்ணான பிறகு

அவள் வேறு ஆடவனின் மனதில் எந்தவிதக் காம உணர்ச்சியையும் தூண்டக் கூடாத வகையில் முடக்கப்படுகிறாள். அதற்கு முதலில் அவளின் அழகு சின்னாபின்னாமாக்கப்படுகிறது. அடுத்தகட்டமாக உணவுக் கட்டுப்பாட்டிற்குள் அவளின் வாழ்க்கை முடக்கப்படுகிறது. சராசரி எதார்த்த உணவின் எந்தவிதச் சுவையும் அவளின் அடக்கப்பட்ட உணர்வுகளைத்தூண்டிவிடக்கூடாது என்பதில் சங்ககாலச் சமூகம் விழிப்புடன் இருந்திருக்கிறது. இவ்வகைக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுப் பெண்களின் பண்பாடு காக்கப்பட்டதா? அல்லது இவ்வகைக் கொடுமைகள் ஆணாதிக்கச் சமூகத்தின் அடக்குமுறையா? எனும் வினா மேலோங்குகிறது.

சங்ககாலம் முதல் நடப்புக் காலம் வரை பெண்களின் நிலை பல படிகளைத் தாண்டி வந்தாலும் அவர்கள் பல இன்னல்களை எதிர்கொள்ள வேண்டிய நிலையிலேயே உள்ளனர். இக்கொடுமைகளின் உச்சமான மனிதாபிமானமற்ற செயல்களான கைம்மை நிலை விதிகளை அவர்களின் வாழ்வில் புகுத்தியது. அவர்களின் முன்னேற்றமான விழிப்பிற்குத் தடைவிதித்தது தெளிவுறுகிறது. இவ்வகையான சடங்குகள் பெண்களால் விரும்பி ஏற்றுக்கொள்ளப்படவில்லை என்பது சில பாடல்கள் வழி புலனாகிறது. ஆண் வாழுங்காலத்தில் அவனுடன் அனைத்திலும் அனைத்துமான பெண்ணின் நிலை அவனின் இறப்பிற்குப்பின்னும் அவனுடன் வாழ்ந்ததற்கான சின்னமாகவே பதிக்கப்படுகிறது. அவள் அவனுக்காக அவனின் நினைவுடன் கைம்மை நோன்பு ஏற்றுத் தன் வாழ்வின் சுகங்களைத் தியாகம் செய்கிறாள். அவன் வாழ்ந்ததன் அடையாளமாக ஓர் அமங்கலச் சின்னத்தைத் தன்னுள் கொள்கிறாள்.

- ஒரு பெண் தன் பிறப்பின் உடன் வந்த ஆடை, அணிகலன்கள், அழகுக்கும் ஆரோக்கியத்திற்கும் இயற்கையால் அளிக்கப்பெற்ற கூந்தல், உயிர் வாழத்தேவையான சுகாதாரமான உணவு, இயற்கையின் இச்சையான காதல், காம உணர்வுகள் போன்றவற்றை இடையில் வந்த கணவனுக்காக விட்டுத்தருவது ஏன்?
- இங்குக் கணவனுடன் கொண்ட காதல் பெரிதாகத் தோன்றி அவனுக்காக அவள் வாழ்கிறாள் என்பது விளக்கமானால் பின்வரும் வினாவிற்கு விடை என்ன?
- பெண் இறந்தால் ஆணிற்கு ஒரு வருடத்திற்குள் திருமணம் எனும் பெயரில் மறுமணம். அது தவறினால் மூன்று வருடத்திற்குப்பிறகே திருமணம் என மனைவியை இழந்த ஆணின் உணர்வுகளுக்கு மட்டும் செவி மடுக்கும் இச்சமூகத்தின் நோக்கம் தான் என்ன?
- பெண்ணிற்குக் கூறப்பட்ட காதல் வாழ்க்கை இங்கு ஆணிற்கு எங்குப் போனது?
- காதல் கூட இரு வேறு பிரிவு கொள்ளுமா?

பெண் இறப்பு நிலையிலும் ஒழுக்கம் பேண வேண்டித் தன்னிலையைத் தானே மாற்றிக்கொள்கிறாள். இந்தச் சமூகம் மாற்றிக் கொள்ளச்செய்கிறது.

ஒருவனுக்காக மட்டுமே அவன் இறப்பிற்குப்பின்னும் அவன் நினைவால் கைம்மை நிலையையும் நோன்பு நோற்று வாழும் நிலை பெண்ணிற்கு மட்டும் ஏன்?

இவ்வாறான அவல நிலைகள் தற்காலத்தில் சிறிதே மாறுதல் அடைந்துள்ளன. கல்வியும் மறுமணமும் கைம்பெண்களின் வாழ்வில் நல்ல ஒரு முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளன. இம்முன்னேற்ற நிலைக்காகப் பாடுபட்ட தலைவர்களை நினைத்து நம் நெஞ்சம் ஒருமுறை நிமிர்ந்து பார்க்கத்தான் செய்கிறது.

ஆயினும் இச்சமூகச் சீர்கேடான நிலை, நாடு முன்னேற்றம் கண்ட இந்த நிலையிலும் தொடரத்தான் செய்கிறது. ஆணுக்குப் பெண் சரி நிகர் சமானமான போதிலும் தொடர்வது வருந்தத்தக்கதாகிறது. இளைஞர்கள் நாட்டின் கண்களான பெண்களின் இந்நிலை கண்டு விழிப்புணர்வு கொள்ள வேண்டிய கட்டாயத்திற்கு உந்தப்பட வேண்டும். அதனினும் மேலானது பெண்மை தன்னைத்தானே அவள் விழிப்புணர்வு கொள்ளாவிடில் எத்தனை பாரதி, எத்தனை பெரியார் வந்தாலும் இந்தச் சமுதாயம் விழிப்புணர்வு கொள்ளாது.

துணை நூல்

முனைவர் செ. ஞானேஸ்வரன், புறநானூறு மூலமும் உரையும், என்.சி.பி.எச், இலக்கியங்களில் மரபும் புதுமையும், *(ப. 859)*

புறநானூற்றில் கலையும் கலைக் கூறுகளும்

திரு. சி.கங்காதரன்
முனைவர் பட்ட ஆய்வாளர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை, தமிழ்நாடு, இந்தியா

புறநானூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றாகும். புறநானூற்றில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, தும்பை, வாகை, பாடாண், பொதுவியல், கைக்கிளை, பெருந்திணை என்னும் பதினொரு திணைக்குரிய பாடல்கள் உள்ளன. உழிஞைத் திணைக்குரிய பாடல்கள் இல்லை.

வெட்சி-5, கரந்தை-12, வஞ்சி-12, காஞ்சி-31, நொச்சி-6, தும்பை-27, வாகை-77, பாடாண்-143, பொதுவியல்-70, கைக்கிளை-3, பெருந்திணை-5 எனத் திணைகள் பாடல்களைப் பெற்றுள்ளன. 244, 282, 289, 323, 355, 361 ஆகிய பாடல்களுக்குத் திணைப் பெயர் இல்லை.

புறநானூற்றுப் பாடல்களை 157 புலவர்கள் பாடியுள்ளனர். இவர்கள் 386 பாட்டுக்களைப் பாடியுள்ளனர். 12 பாட்டுக்களைப் பாடியவர் பெயர் தெரியவில்லை. இவர்களில் 15 பேர் பெண்பாற் புலவர்கள் ஆவர். ஆண்பாற் புலவர்கள் 142 பேர் ஆவர்.

புறநானூற்றில் மட்டும் பாடிய புலவர்கள் 76 பேர். அவர்கள் பாடிய பாட்டுக்களின் எண்ணிக்கை 135. அகமும் புறமும் பாடிய புலவர்கள் 74 பேர். அவர்கள் 248 பாட்டுக்களைப் பாடியுள்ளனர்.

கலைகள்

கலை என்ற சொல் விரும்பிய விளைவை உண்டாக்கித் தருவது எனப் பொருள்படும். கலைப் படைப்புகளுக்கு உணர்ச்சி இன்றியமையாததாகும். இசை, சிற்பம், ஓவியம், நடனம் போன்ற கலைகள் உணர்ச்சிகளின் அடிப்படையில் உருவாகின்றன.

இயங்கு கலைகள், இயங்காக் கலைகள் எனக் கலைகள் இருவகைப்படும். சிற்பம், சித்திரம் போன்றவை இயங்காக் கலைகள். இசை, நடனம் போன்றவை இயங்கு கலைகள். உணர்ச்சிகளைக் குரலொலி வாயிலாக வெளிப்படுத்துவதற்காக இயல்பாக ஏற்படும் விருப்பத்தினால் தோன்றும் கலை இசையாகும். உணர்ச்சிகளை உடல் வாயிலாக அழகுற வெளிப்படுத்துவது நடனக்கலை. இத்தகைய உணர்ச்சிகளுக்கு எழிலுறக் கல்லிலும் கிழியிலும் உருவம் தருதலினின்றும் முறையே சிற்பம், ஓவியம் போன்ற கலைகள் தோற்றம் பெறுகின்றன.

எல்லாக் காலங்களிலும் கலை இருந்து வந்துள்ளது. அழிந்துபோன நாகரிகத்தையும் பண்பாட்டையும் அறிவதற்கும் அக்காலக் கலைகள்

முதன்மையாகப் பயன்படுகின்றன. அழகினால் கலை தோற்றுவிக்கப்பட்டதாக விளக்கப்படுகிறது.

கலைகள் புலனுணர்வுக்கு ஏற்றபடி அமைபவை. வண்ண ஓவியம், சிற்பக்கலை, கட்டடக்கலை என்னும் இவை காட்சிப் புலனுணர்வுக்கு உரியவையாகும்.

இசைக்கலை

இசை என்னும் சொல் இசைவிப்பது, தன் வயப்படுத்துவது எனப் பொருள்படும். இசை கல் மனத்தையும் கரைந்துருகச் செய்யும் தன்மை வாய்ந்தது. கற்றோரும் மற்றோரும் இசையின் வயப்பட்டே நிற்பர். அன்பைப் பெருக்கி ஆருயிரை வளர்ப்பது இசை ஆகும். இசையின் அருமையையும் பெருமையையும் அறிந்த தமிழர் இசைத்தமிழை முத்தமிழுள் நடுவில் வைத்துள்ளனர். தமிழ் இலக்கிய நூல்கள் இசைத் தமிழிலேயே இருக்கின்றன.

இசை உள்ளத்தின் மிக ஆழமான உணர்ச்சிகளை நேரடியாகவும், உடனடியாகவும் உணர்த்தும் வாயிலாகும். மாந்தனுடைய இன்பம், துன்பம், சினம், காதல், வியப்பு, அச்சம் ஆகிய இவை போன்ற உணர்ச்சிகளின் வெளிப்பாட்டால் தொன்மைக்கால இசை இயற்கையாக உருவானதாகும்.

இசை என்பது மக்கள் தொடர்புச் சாதனமாகும். குழந்தை விளையாட்டு முதல் சமயச் சடங்கு ஈறாகப் பல பண்பாட்டு நிலைகளிலும் இசை இடம் பெற்றுள்ளது. இசை பற்றி நன்கு கற்ற ஒருவரால் மட்டுமே பிறருடைய இசைப் புலமையை உணரமுடியும்.

தமிழிசையில் நூற்று மூன்று பண்கள் இருந்தனவாகக் கழக இலக்கியம் கூறுகிறது. குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை என்னும் இவ்வைந்துமே முதன்மையான பண்களாகும்.

இசையின் ஏற்றம் இன்புறுத்துவது, அனைத்து உயிர்களையும், ஆட்டி வைப்பது, தம்மையே மறக்கச் செய்வது, பகைமை துறக்கச் செய்வது, ஊனினை உருக்கி, உள்ளொளி பெருக்குவது, துன்பம் களைவது, கல்லார் கற்றார் எல்லோருக்கும் களிப்பூட்டுவது, இதயத்தைத் தூய்மைப்படுத்துவது, இரக்க உணர்வினை எழுப்புவது, பக்தியுணர்வைப் பிறக்கச் செய்வது, கல்லையும் உருகச் செய்வது, பாட்டின் பொருட்குறையையும் நிறைவு செய்து (பேரா.மது.ச.விமலானந்தம், தமிழ் இலக்கிய வரலாறு, ப.28) என்ற கருத்து நோக்குதற்குரியது.

புறநானூற்றில் இசை

பண்

பண்ணென்றது நரம்படைவால் நிறந்தோன்றப் பண்ணப்படா நின்ற பண்ணும் பண்ணியற்றிறமும் (சிலம்பு.3:46), அடியார்க்கு நல்லார்

'பண்ணுதல்' என்னும் வினையடியாகப் பிறந்தது 'பண்' என்றும், யாழின் வழி கொண்டு பண்ணப்படுதலால் 'பண்' என வழங்கலாயிற்று என்றும், பாக்களோடு இயைத்து உரைக்கப்பெற்ற இசையினை நெஞ்சு, மிடறு, நா, மூக்கு, அண்ணம், உதடு, பல், தலை என்னும் எட்டு இடங்களில் எடுத்தல், படுத்தல், நலிதல், கம்பதம், குடிலம், ஒலி, உருட்டு, தாக்கு என்னும் எண்வகைத் தொழிலால் ஒழுங்குறப் பண்ணிப் பாடப்பெறுவது 'பண்' எனப்பெறும் என்றும் இசைப் புலவர்கள் கூறுகிறார்கள்.

விளரிப்பண்

பருந்து சுழற்சிபோல வட்டமிட்டுப் பாடுவது விளரிப்பண் ஆகும். விளரிப்பண் என்பதற்கு இரங்கற்பண் எனப் பொருள்படும்.

படைத்தலைவன் ஒருவன் கரந்தைப் பூவைச் சூடிக்கொண்டு போருக்குச் சென்று தோற்று மார்பில் புண்பட்டு இறந்து விடுகிறான். தூய வெண்மையான ஆடையை உடைய கரியவனைக் காக்கை, கழுகு, பருந்து முதலிய பறவைகள் அவனைச் சூழ்ந்து ஆரவாரம் செய்து கொண்டிருந்தன. அக்காட்டில் குள்ளநரிகளும் ஊளையிட்டுக் கொண்டே இருந்தன. இக்காட்சியைக் கண்ட வீரனின் மனைவி சிறுவரையும் துடிப்பறை கொண்டு பாடுதலில் சிறந்த பாண் மக்களையும் அணுகித் தலைவனைப் பறவைகளிலிருந்து பாதுகாக்குமாறு வேண்டுகிறாள் என்பதை,

சிறாஅ அர் துடியர் பாடு வல் மகாஅ அர்
தூ வெள் அறுவை மாயோற் குறுகி
இரும் புட் பூசல் ஓம்புமின் யானும்
விளரிக் கொட்பின் வெள் நரி கடிகுவென் - புறம்.291:1-4

இப்பாடல் வழியாக அறியலாம். வீரனின் மனைவியும் விளரி என்னும் இரங்கற்பண்ணைப் பாடி அங்குள்ள நரிகளை விரட்டி விடுவதாக உரைக்கிறாள்.

படுமலைப்பண்

கைக்கிளை குரலாக நிறுத்திப் பாடுவது 'படுமலைப்பண்' எனப்படும். படுமலைப் பாலை என்றது பாலைப்பண் பன்னிரண்டனுள் ஒன்றாகும். கூத்தன் ஒருவன் விறலியுடன் வரிப்பாட்டைப் பாடியும் யாழில் படுமலைப்பண்ணை இசைத்தும் ஆய் அண்டிரனைக் காணச் சென்றான் என்பதனை,

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
வரி நவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்பப்
படுமலை நின்ற பயம் கெழு சீறியாழ் - புறம்.135:5-7

இதன் வழியாக உறையூர் ஏணிச்சேரி முடமோசியார் விளக்குகிறார். பாணர் யாழைக் கைக்கொண்டு நிலத்திற்கேற்ற பண்ணை வாசித்துச் செல்வர். ஐந்து திணைகளுக்கும் உரியனவாக ஐந்து யாழும் பண்களும் உளதாதலின், "வரி நவில் பனுவல் புலம் பெயர்ந்து இசைப்ப, படுமலை நின்ற பயம்கெழு சீறியாழ்" என்றார்.

வட்டப்பாலை

வட்டம் வரைந்து அதனுள் ஆரக்கால் போன்று இரண்டு விட்டம் வரைந்து சிறுதிசைக்கண் கோணத்திசைகளில் முறையாக இரண்டு கோடுகள் வரைந்தால் பன்னிரண்டு இடங்கள் கிடைக்கும். இப்பன்னிரண்டு இடங்களிலும் பன்னிரு இராசிகளும் நிற்கும். இம்முறையையே வட்டப்பாலை என்பர்.

பாலைப்பண், குறிஞ்சிப்பண், மருதப்பண், நெய்தற்பண் என்ற நான்கும் வட்டப்பாலையில் பிறக்கும் பண்களாகும்.

வட்டப்பாலையில் பிறக்கும் பாலையாழிலிருந்து படுமலைப்பண், செவ்வழிப்பண், விளரிப்பண் முதலியன பிறக்கும்.

பேகன் கண்ணகியை விட்டுப் பிரிந்து சென்று பரத்தையோடு இருந்து வந்தான். பரத்தையை விட்டு நீங்கிக் கண்ணகியை அடைந்து இல்லறம் நடத்தச் செய்யவேண்டும் என்று கருதிய பாணர்கள் சீறியாழில் இரங்கற்பண்ணாகிய செவ்வழிப்பண்ணைப் பாடினர். இதனை,

அருளாய் ஆகலோ கொடிதே இருள் வரச்
சீறியாழ் செவ்வழி பண்ணி யாழ நின்
கார் எதிர் கானம் பாடினேமாக - புறம்.144:1-3

அன்ன ஆக நின் அருங்கல வெறுக்கை
அவை பெறல் வேண்டேம் அடு போர்ப் பேக
சீறியாழ் செவ்வழி பண்ணி நின் வன் புல - புறம்.146:1-3

கல் முழை அருவிப் பல் மலை நீந்திச்
சீறியாழ் செவ்வழி பண்ணி வந்ததைக்
கார் வான் இன் னுறை தமியள் கேளா - புறம்.147:1-3

என்ற பாடல்கள் வழியாகக் காணலாம். மேலும், கண்டீரக்கோப்பெருநள்ளி பாணர்களுக்கு மிகுந்த பொருள்களைக் கொடுத்து அவர்கள் மகிழ்ச்சியடையுமாறு செய்தான். மகிழ்ச்சி மிகுதியால் அப்பாணர்கள் வரலாற்று முறையை மறந்து மருதப்பண்ணை மாலையிலும் செவ்வழிப்பண்ணைக் காலையிலும் வாசித்தனர் என்பதனை,

மாலை மருதம் பண்ணிக் காலைக்
கைவழி மருங்கின் செவ்வழி பண்ணி
வரவு எமர் மறந்தனர் அது நீ
புரவுக் கடன் பூண்ட வண்மை யானே - புறம்.149:2-5

இப்பாடல் வாயிலாக வன்பரணர் சுட்டிக்காட்டுகிறார்.

மாலையில் செவ்வழிப் பண்ணும் காலையில் மருதப்பண்ணும் வாசித்தல் வேண்டுமென்பது இசைநூல் மரபாகும்.

தண்ணுமை

தண்ணுமை என்பது மத்தளம் ஆகும். தண்ணுமை தோற்கருவிகளில் முதன்மையாகக் கருதப்படுகிறது. நாட்டியத்தின் சிறப்பிற்கு மற்ற இசைக் கருவிகளைவிட மத்தளம் மிக முக்கியத் தேவையாக உள்ளது. பாசறையில் புறத்திணைக்குரிய பூவைக் கொள்ளுதற்குத் தண்ணுமை முழங்கியதை,

..... கேட்டியோ வாழி பாண பாசறைப்
பூக்கோள் இன்று என்று அறையும்
மடி வாய்த் தண்ணுமை இழிசினன் குரலே - புறம்.289:8-11

இப்பாடல் வழியாகக் கழாத்தலையார் உறுதிப்படுத்துகிறார்.

பறை

துடி கொண்டு போர்த் தொடக்கத்தைத் தெரிவித்ததனை,

பாசறையீரே பாசறையீரே
துடியன் கையது வேலே அடி புணர் - புறம்.285:1-2

துடி எறியும் புலைய - புறம்.287:1

என்னும் வரிகளால் அறியலாம். மேலும், இறுக்கக் கட்டப்பட்ட புதிதாகப் போர்க்கப்பட்ட குற்றமில்லாத தடாரிப் பறையைப் போர்க்களம் பாடும் பொருநர்கள் வைத்திருந்தனர். இதனை,

தேய்வை வெண்காழ் புரையும் விசிபிணி
வேய்வை காணா விருந்தின் போர்வை
அரிக்குரல் தடாரி உருப்ப ஒற்றிப்
பாடி வந்திசின் பெரும பாடு ஆன்று புறம்.369:19-22

சிறுநனி பிறந்த பின்றைச் செறிபிணிச்
சிதாஅர் வள்பின்என் தெடாரி தழீஇப்
பாணர் ஆரும் அளவை யான்தன்
யாணர் நல்மனைக் கூட்டுமுதல் நின்றனென் - புறம்.376:3-6

என்ற பாடலடிகளால் அறிந்து கொள்ளலாம்.

முரசு

பண்டைக் காலத்திலிருந்தே தமிழகத்தில் இருந்துவரும் இசைக் கருவிகளுள் முரசும் ஒன்றாகும். முரசு வைக்கும் கட்டில் மிகவும் புனிதமானதாகப் போற்றப்பட்டதை,

நுரை முகந்தன்ன மென் பூஞ் சேக்கை
அறியாது ஏறிய என்னைத் தெறுவர
இரு பாற்படுக்கும் நின் வாள் வாய் ஒழித்ததை
அதூஉம் சாலும் நல் தமிழ் முழுது அறிதல் புறம்.50:7-10

இவ்வரிகள் சுட்டுகின்றன. இதனால் முரசுக்குள்ள சிறப்புத் தெளிவாகிறது.

யாழ்

பாணர்கள் வளைந்த கரிய கோட்டையும் இனிய நரம்புத் தொடையை யுமுடைய சிறிய யாழை வைத்திருந்தனர். பாணர் என்பதற்கு இசை பாடுவோர் அல்லது பண்பாடுவோர் என்பது பொருளாகும். பொற்கம்பியினை ஒத்த முறுக்கு அடங்கின நரம்பினையும், மின்னலை ஒத்த தோலினையும் மிஞிறு என்னும் வண்டுச் சாதியின் குரல் போன்ற ஓசையையுமுடைய சிறிய யாழைப் பாணர்கள் பெற்றிருந்தனர் என்ற சிறப்பினை,

பொன் வார்ந்தன்ன புரி அடங்கு நரம்பின்
மின்நேர் பச்சை மிஞிற்றுக் குரற் சீறியாழ்
நன்மை நிறைந்த நயவரு பாண - புறம்.308:1-3

இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. மேலும் களாப்பழம் போன்ற கரிய கோட்டையுடைய சிறிய யாழைக்கொண்டு பாணர்கள் பாடியதை (புறம்.127:1-2, 145:5-7) இப்பாடல்களில் அறியலாம்.

குரவைக்கூத்து

காதலையோ போர் வெற்றியையோ பொருளாகக் கொண்ட குரவைச் செய்யுட்களைப் பாடிக்கொண்டு எழுவரோ ஒன்பதின்மரோ வட்டமாக நின்று கைகோத்துக்கொண்டு ஆடுவது குரவைக் கூத்தாகும்.

புறநானூற்றில் பல பாட்டுக்களில் குரவைக் கூத்து இடம் பெற்றுள்ளது. மிக்க ஆரவாரத்தை உடைய அகன்ற இடத்தில் பொன்னால் செய்யப்பட்ட இதழையுடைய பசிய தும்பையுடன் பனந்தோட்டையும் செருகிச் சினத்தையுடைய வீரர் வெறியாடும் குரவைக் கூத்தொலி அலையையுடைய கடலினது ஒலியைப் போன்று ஆரவாரமுடையதாயிருந்தது என்ற நிலையை,

மிசை அலங்கு உளைய பனைப் போழ் செரீஇ
சின மாந்தர் வெளிக் குரவை
ஓத நீரின் பெயர்பு பொங்க - புறம்.22:21-23

இவ்வரிகள் உணர்த்துகின்றன. மேலும் பரதவர்கள் வெம்மையுடைய மதுவை உண்டு மெல்லிய குரவைக் கூத்திற்கு ஏற்ற தாளத்தோடு ஆடுவர் என்பதனை,

திண் திமில் வன் பரதவர்
வெப்பு உடைய மட்டு உண்டு
தண் குரவைச் சீர் தூங்குந்து - புறம்.24:4-6

என்ற வரிகள் உறுதிப்படுத்துகின்றன. குறமக்கள் வளைந்த மூங்கிற்குழாயின்கண் வார்த்திருந்த திரிந்த மதுவை உண்டு வேங்கை மரத்தை உடைய முற்றத்தின்கண் குரவைக் கூத்தாடியதை,

குறி இறைக் குரம்பைக் குறவர் மாக்கள்
வாங்கு அமைப் பழுனிய தேறல் மகிழ்ந்து
வேங்கை முன்றில் குரவை அயரும் - புறம்.129:1-3

இதன் வழியாக அறிந்துகொள்ள முடிகிறது.

மேலும், ஆய் அண்டிரனுடைய பொதியமலையை வலிமையுடைய வீரர்களால் பெறமுடியாது. ஆடிச்செல்லும் விறலியால்தான் பெற முடியும் என்ற கருத்தை,

கழல் தொடி ஆஅய் மழை தவழ் பொதியில்
ஆடுமகள் குறுகின் அல்லது
பீடு கெழு மன்னர் குறுகலோ அரிதே - புறம்.128:5-7

இப்பாடல் வரிகள் சுட்டிக்காட்டுகின்றன.

பொருநர்

வேறொருவர் போல வேடம் கொள்பவர் பொருநராவர். இவர்கள் மெய்ப்பாடு தோன்ற நடிக்கும் திறமுடையவர்கள். இவர்கள் வேறொருவர் போல வேடம் பூண்டு நடிப்பதோடு பாடும் திறமும் பெற்றிருந்தனர் என்பதனை,

நலங்கிள்ளி நசைப்பொருநரேம்
பிறர்ப்பாடிப் பெறல்வேண்டேம்
அவற்பாடுதும் அவன்தாள் வாழிய என - புறம்.382:5-7

இதன் வழி அறியலாம். மேலும் போர் வீரர்களும் பொருநர் எனப்படுவர். பிறர்போல வேடங்கொண்டு நடிப்பவரும் பொருநர் எனப்படுவர். இதனை,

அன்ன நல் நாட்டுப் பொருநம் யாமே
பொராஅப் பொருநரேம் - புறம்.386:18-19

என்ற பாடல் சுட்டுகிறது. பொருநர் பிறர்போல வேடம் பூண்டு நடிப்பவர் என்பதால் ஒப்பனைக் கலையும் சிறப்பெய்தி இருந்ததென்பது புலனாகிறது.

ஓவியக்கலை

உலகில் காணப்பெறும் உயிருள்ள, உயிரல்லாத எல்லாப் பொருள்களையும் கற்பனையால் காணப்பெறும் பொருள்களையும் அவ்வவற்றின் உருவங்கள் போலத் தோன்றும்படி ஓவியர்கள் ஓவியங்களாகத் தீட்டினர்.

நடன மகளிர் நடனக் கலைக்காகப் பல்வேறு கலைகளையும் கற்றனர். அவற்றுள் ஓவியக்கலை ஒன்றாகும்.

மாந்தனின் தொடக்கக் காலத்திலிருந்தே ஓவியம் தீட்டும் பழக்கம் இருந்தது என்பதும், கட்டடக்கலை, இசைக்கலை, ஆடற்கலை, ஒப்பனைக்கலை போன்ற நல்லாக் கலைகளுக்கும் முன்னரே ஓவியக்கலை தோன்றியது என்பதும் உண்மை.

மலையடிவாரத்தில் வாழ்ந்த மக்கள் சிலருடைய வீடுகள் மிக அழகாகத் தீட்டிய வண்ண ஓவியம் போலக் காட்சியளித்தன. இதனை,

ஓவத்து அன்ன இடனுடை வரைப்பில் -புறம்.251:1

என்ற வரி சுட்டுகிறது. அழகான அரண்மனைக்கு ஓவியம் உவமையாகக் கூறியிருப்பதினின்றும் ஓவியக்கலை பெருஞ்சிறப்பெய்தி இருந்தமை புலனாகிறது. இன்னும் நமக்குச் சித்தன்னவாசல் ஓவியங்களும், தஞ்சை ஓவியங்களும் சான்றுகளாக உள்ளன.

முடிவுரை

கலைஞர்களின் சீரிய அனுபவங்களின் வெளிப்பாடே கலையாகும். கலைஞர்கள் தம் உள்ளத்தை ஈர்க்கும் காட்சிகளிலோ நிகழ்ச்சிகளிலோ தம் சிந்தனை முழுமையையும் ஒருமுகப்படுத்தி அவற்றில் ஈடுபட்டுப் பெறும் உணர்ச்சிப்பெருக்கு கலை வடிவமாக உருப்பெறுகிறது. அக்கலையை நுகர்வோரும் உணர்ச்சிவயத்தராகின்றனர். இவ்வாறு பலவகை உணர்ச்சிவயப் படும் உள்ளம் நாளடைவில் தூய்மையுறுவதாகும்.

இசைக்கலை, ஆடற்கலை போன்றவற்றில் தேர்ந்த பழந்தமிழ்க் கலைஞர்களையும் அவற்றில் ஈடுபட்டுத் திளைத்த பழந்தமிழ்ப் பெருமக்களையும் குறிப்பிடுவதிலிருந்து அவர்கள் கலைகள் வழிபண்பாடெய்திய திறம் நன்கு தெளிவாகிறது.

துணை நூல்கள்

1. செ.பழனிச்சாமி, புறநானூற்றில் தமிழர் பண்பாடு, வாணி பதிப்பகம், 402, அளகேசன் சாலை, கோவை - 641 011, முதல் பதிப்பு: ஏப்ரல் 1989.

2. கு.வெ.பாலசுப்பிரமணியன் குழு, சங்க இலக்கியம் - புறநானூறு தொகுதி-1,2 , நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், 41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை - 600 098, மூன்றாம் பதிப்பு : பிப்ரவரி 2007.

மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் காட்டும் தமிழ்ச் சமூகம்

முனைவர் கிருஷ்ணன் மணியம்
இணைப்பேராசிரியர்
இந்திய ஆய்வியல் துறை
மலாயா பல்கலைக்கழகம், கோலாலம்பூர்

மலேசியத் தமிழ் இலக்கியப் படைப்புலகம் உண்மையில் தமிழகப் படைபுலகத்தின் ஒரு நீட்சியேன்றே சொல்ல வேண்டும். இதையே முனைவர் இரா. தண்டாயுதம், மலேசியாவில் தமிழ் இலக்கியத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் குறித்து வரையறை செய்யும் பொழுது ரோஜா செடியின் ஒரு கிளையாக இருந்து பின்னர்த் தனி ரோஜா செடியாவதுடன் இதனை ஒப்பிடலாம் என்று கூறுவார் *(1983 :111)*. அவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தென்னிந்தியாவிலிருந்து மலேசியாவிற்கு உழைப்பதற்காக இங்குக் குடியேறிய சமூகம் பல்வேறு தாய்மொழிச் சூழலைப் பெற்றிருந்தபோதும் யாவரும் தமிழ் மொழியைத் தங்களுக்கிடையிலான தொடர்பு மொழியாக ஏற்றுக் கொண்டு தமிழ்ப் பள்ளிகளை ஆங்கிலேய தோட்ட நிர்வாகத்தினரின் ஒத்துழைப்புடன் தோட்டங்கள் தோறும் நிறுவினர். மேலும், அக்காலப்பகுதியில் தமிழ்ப்பள்ளிகளில் தமிழ் மொழியுடன் தமிழ் இலக்கியத்தையும் ஏழாம் வகுப்பு வரையில் தமிழில் பயிற்றுவிக்கும் சூழல் அமைந்ததால் தமிழ்ப் பயிற்றுவிப்பாளரும் தமிழ்க் கற்போரும் எண்ணிக்கையில் பெருகத் தொடங்கினர். தமிழ் மொழியின் பயன்பாடு இங்குப் பரவலானதுடன் நாளிதழ்கள் மற்றும் இதழ்கள் அச்சிடுதல் வெளியீடு முதலான நடவடிக்கைகள் கால்கோளத் தொடங்கின. இத்தகையப் போக்கு புலம் பெயர் இடத்தில் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு நல்லதொரு சூழலை உருவாக்கியது என்பது கண்கூடு.

மலேசியப் படைப்புலகில் முதலில் தோன்றி வளர்ந்த இலக்கியம் கவிதையாகும். மரபுக் கவிதைகள் படைக்கும் ஆற்றல் மிக்க கவிஞர்கள் இங்கே பலர் உள்ளனர். மலேசிய நாட்டின் இயல்புகளுக்கேற்ப உள்நாட்டுக் கவிஞர்கள் கவிதைகளை இயற்றியுள்ளதை ஆய்வுகள் தெளிவுபடுத்துகின்றன. இது போன்றே, உரைநடை இலக்கியத்தில் முதலாவதாகத் தோன்றிய நாவல் இலக்கியம் மெதுவான வளர்ச்சியைப் பெற்று வந்தாலும் தனக்கென்ற தனித் தன்மையுடன் இயங்கி வருவதை மறுக்கவியலாது. நாவல் இலக்கியமும் புலம்பெயர் இலக்கியத்தின் தாக்கங்களைப் பெற்றுத் தமிழ்நாட்டு நாவலிலக்கியங்களின் பாணியிலிருந்து வேறுபட்டு மலேசியத் தமிழர்களின் வாழ்வியலைப் பேசும் இலக்கியமாக இன்று விளங்குவதைக் காண முடிகிறது. இந்நாவல்களும் ஆழமான ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும் பொழுது அவற்றினுடைய தாக்கங்களைத்

தெளிவாகக் காட்ட முடியும் என்பது திண்ணம். ஆனால், இங்கு மலேசியத் தமிழ் நாவல்களின் வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் சுருக்கமாக ஒரு பருந்து பார்வையில் மட்டுமே விளக்கப்பட்டுள்ளன.

மலேசியத் தமிழ் இலக்கிய உலகிற்கு செல்லப்பிள்ளையாக விளங்குவது சிறுகதையாகும். இது தோன்றிய காலத்திலிருந்து மிக வேகமான வளர்ச்சியைப் பெற்றது என்று சொன்னால் மிகையில்லை. தொடக்கக் காலத்திலேயே உள்நாட்டு எழுத்தாளர்களின் கவனத்தை ஈர்த்ததுடன் மலேசிய நாட்டின் தன்மைகளின் தாக்கத்தைப் பெற்று வெளிப்படுத்துவதில் வெற்றி பெற்றது என்பதை அவசியம் குறிப்பிடுதல் வேண்டும். மேலும், மலேசியத் தமிழர்கள் வாழ்வியலையும் வாழ்க்கையில் அவர்கள் பெற்ற தாக்கங்களையும் இயல்பாக வெளிப்படுத்துவதில் மிகப்பெரிய வெற்றியைச் சிறுகதைத் துறை சாத்தித்துள்ளது என்பது மறுக்கவியாலாத கூற்றாகும். எனவே, இங்கு, சிறுகதை வடிவம் பெற்றுள்ள தாக்கத்தைச் சற்று விரிவான நிலையிலே ஆராய்வோமானல் மலேசியத் தமிழ்ச் சமூகத்தின் வாழ்வியல் கூறுகளைக் காண இயலும் என்று துணிந்து கூறலாம். மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளைப் பொறுத்த வரையில் அவற்றினுடைய வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றியது நாளிதழ்கள் என்பதை மறுக்கவியலாது. அளவில் சிறியதாக இருக்கும் காரணத்தாலும் நாளிதழ்களின் பொறுப்பாசிரியர்களாக இருந்தவர்களின் தனிப்பட்ட ஆளுமையினாலும் சிறுகதையின் வளர்ச்சி நன்கு பேணப்பட்டது என்பது உண்மையாகும். அதே வேளையில், சிறுகதை வடிவத்திற்காக, நாளிதழ்களும் எழுத்தாளர் சங்கங்களும் சமூக அமைப்புகளும் பல்கலைக்கழக மாணவர் இயக்கங்களும் தனிநபர்களும் பல பரிசுப் போட்டிகளை நடத்தி எழுத்தாளர்களை ஊக்குவித்தது, சிறுகதை வளர்ச்சிக்கு ஆக்ககரமான நடவடிக்கைகளாக அமைந்தன என்றால் மிகையாகது.

சிறுகதைகளின் தொடக்கம்

மலேசியத் தமிழ்ச் சிறுகதை வரலாறு 1930களில் இருந்து தொடங்குகிறது. வெ. சின்னையாப் பிள்ளையின் ' நவரச கதா மஞ்சரி: இவை இனிய கற்பிதக் கதைகள் என்ற ஐந்து கதைகள் கொண்ட தொகுப்பாக வெளிவந்தன (கிருஷ்ணன் மணியம், 1993, 47). தொடர்ந்து நாளிதழ்களின் செல்லப்பிள்ளையான சிறுகதை வடிவத்தை நாளிதழ்கள் அரவணைத்துக் கொண்டன. தொடக்ககாலப் பகுதியில் நாவல்களைப் போலவே தமிழக மற்றும் இலங்கை எழுத்துப் படிவங்களின் தாக்கத்தில் சிறுகதைகள் வெளிவரத் துவங்கின. ஆனால் காலப்போக்கில் சமகால நிகழ்வுகள் எழுத்துகளில் பிரதிபலிக்கத் தொடங்கியதால் இத் தாக்கங்களிருந்து விடுபட்டு மலேசிய வாழ்க்கையைப் பிரதிபலிக்கத் தொடங்கின. தொடக்கக் காலத்திலேயே 1930களில் தோட்டப்புற வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் கதையாக 'மூக்கந்துரையைப் பாம்பு கடித்தது' என்ற தலைப்பில் கதை வெளிவந்தது. அது மட்டுமல்லாமல் முழுக்க முழுக்க மலாய்க்கார வாழ்க்கையைப் பிரதிபலிக்கும் வண்ணம் அமைந்த கதை 'வெல்வெட்டுக் குல்லாய்'. இக்கதையின் கரு கட்டாயக் கல்யாணம் ஆகும். அக்காலப்பகுதியில் மலாய் இலக்கியங்களில் பிரபலமாக இருந்ததும் இந்தக் கட்டாயக் கல்யாணம் என்ற கருவேயாகும். அதே வேளையில்

'பாத்திமாவின் தளுக்கு' என்ற கதை மாலாய்க்கார மாதுவை முக்கியப் பாத்திரமாகக் கொண்ட கதையாகும். 'கோலாலம்பூர் கோகுல விலாஸ்' போன்ற கதைகள் தமிழகத்திலிருந்து கடைகளில் வேலை செய்யும் கடைச் சிப்பந்திகளின் கண்ணீர்க் கதைகள் பற்றியதாகும். இதை ஒட்டியே இப்ராஹிம் 'கடைச்சிப்பந்திகளின் கண்ணீர்' என்ற சிறுகதைத் தொகுப்பினை வெளியிட்டார்.

1940களில் மலாயா ஜப்பானியர் ஆட்சியின்கீழ் இருந்தபோது, ஊடகங்கள் யாவும் முடக்கப்பட்டன. ஆனால், சுபாஷ் சந்திர போஸ் ஜப்பானியர்களுடன் கூட்டுச் சேர்ந்திருந்ததால் தமிழ் நாளேடுகள் பிரச்சாரத்திற்காகப் பயன்படும் என்றே எண்ணித் தமிழ்ப் பத்திரிகை மற்றும் இதழ்களுக்கு அனுமதி வழங்கினர். ஆனால் தமிழ் இதழாளர்கள் இந்தச் சூழலைத் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு சிறுகதைகளையும் வெளியிடலாயினர். 'சுதந்திர இந்தியா', 'சுதந்திர உதயம்' மற்றும் 'யுவபாரதம்' முதலான பத்திரிகைகள் குறைந்தது ஐம்பது சிறுகதைகளையாவது இக்காலப்பகுதியில் வெளியிட்டன. இக்காலப்பகுதியில் கதைப்பொருள்களாக அமைந்தவை இந்திய நாடு சுதந்திரம் பெறுவது, போர்ப்பின்னணியில் காதல், ஜப்பானியர் பிரச்சாரம் மற்றும் சமூகப் பிரச்சினைகளாகும். ஆனால் போருக்குப் பின்னர் இந்த இதழ்கள யாவும் நிறுத்தப்பட்டன.

ஐம்பதுகள் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளின் மிகுந்த எழுச்சிக்காலம் என்றே சொல்ல வேண்டும். முதல் நிகழ்வாக அமைவது 'கதை வகுப்பாகும்'. சுப.நாராயணனும் பைரோஜி நாராயணனும் சேர்ந்து தமிழ் நேசனில் நடத்திய இவ்வகுப்பின் வழி ஒரு எழுத்துப் பரம்பரையை உருவாக்க முடிந்தது. இதில் எழுதத் துவங்கிய மா.இராமையா இன்னும் எழுதிக் கொண்டிருக்கிறார். அதனைத் தொடர்ந்து. கு. அழகிரிசாமியின் வருகை. இவர் தமிழகத்திலிருந்து தமிழ் நேசனுக்குப் பணியாற்ற வந்தவர். இவரே ஒரு நல்ல சிறுகதை எழுத்தாளர். எனவே, 'நிலா வட்டம்' என்ற ஓர் இலக்கியக் கூடலை நிறுவி எழுத்தாளர்களை அழைத்துப் பயிற்சி கொடுத்து எழுதத் தூண்டினார். தன் நண்பர்களிடம் கூறிச் சிறுகதைப் போட்டிகளை நடத்துவதற்குப் பணித்தார். இவர் வழிகாட்டலில் இன்னொரு எழுத்துப் பரம்பரை உருவாகியது. பின்னர், கோ.சாரங்கபாணி 'மாணவர் மணிமன்றத்தை'த் தொடக்கி மாணவப் பருவத்திலேயே எழுதுவதற்கு ஊக்குவித்தார். இதன் பின்னர், முருகு சுப்பிரமணியம் தொடங்கிய பவுன் பரிசுப் போட்டியை அடுத்து ஒரு எழுத்துப் பரம்பரை உருவாகியது. இன்று, மலாயாப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேரவை நடத்தும் சிறுகதைப் போட்டியில் எழுதிப் பரிசு பெறும் எழுத்தாளர்கள் இன்று புதிய எழுத்துப் பரம்பரையாக உருவாகியுள்ளனர்.

சிறுதைகள் காட்டும் மலேசியத் தமிழ்ச்சமூகமும் தாக்கங்களும்

மலேசியநாடு சுதந்திரம் பெற்ற பிறகு தமிழ் இலக்கியப்படைப்புகள் சகஜ நிலைமைக்குத் திரும்பின. இக்காலப் பகுதியில் மலேசிய நாட்டுப் பிரஜைகள் ஆகிவிட்ட தமிழர்கள் ஏராளமான படைப்புகளைப் படைத்தனர். இவர்களுடைய படைப்புகளில் சமகாலப் பிரச்சினைகள் தெளிவாக அலசப்பட்டன. தொடக்கக்

காலத் துயரங்களான 'சஞ்சிக் கூலியாக' வந்து காடுகளான தோட்டப்புறங்களை வளமான பூமியாக்கிய நிகழ்வுகள் கதைகளில் பேசப்பட்டன. தொடர்ந்து, தோட்டப்புற வாழ்வியல் நிலைகள் விவாதிக்கப்பட்டன. குறைந்த அடிப்படை வசதிகள், குறைவான ஊதியம் என்ற நிலையில் அடக்குமுறைக்கு ஆளாகி ஒடுக்கப்பட்ட சமூகமாக வாழ்ந்த தமிழ்ச் சமூகத்தின் பிரச்சினைகளைத் தெளிவாகப் படைப்பாளர்கள் கதைகளுக்குள் கொண்டு வந்தனர். அதே வேளையில் ஜப்பானியரின் ஆட்சியில் பட்ட துயரங்களையும் அவலங்களையும் பேசியதுடன் சயாமிற்குச் சென்று இந்தியாவை இணைப்பதற்காக இரயில் தண்டவாளம் போடச் சென்றவர்களின் போராட்டங்களையும் படைப்பாளர்கள் முறையாகப் பதிவு செய்துள்ளனர்.

தொடர்ந்து அறுபதாம் ஆண்டுகளில் ஐரோப்பிய முதலாளிகள் பெரிய இரப்பர் தோட்டங்களை விற்று விட்டுத் தாயகம் திரும்பலாயினர். பெரிய தோட்டங்களை அப்படியே வாங்க முடியாத ஆசிய முதலாளிகள் தோட்டங்களைத் துண்டுப்போட்டு வாங்க முற்பட்டனர். இதனால் ஆயிரக்கணக்கான தமிழ்த் தொழிலாளர்கள் வேலையிழந்து வீடிழந்து வீதிக்கு வந்தனர். இது தமிழ்ச் சமூகத்திற்கு மிகப் பெரிய சமூகப் பிரச்சினையாக உருவெடுத்தது. இந்தச் சூழலையும் படைப்பாளர்கள் தங்களுடைய கதைகளில் பேசியுள்ளனர்.

பின்னர் எழுபதுகளில் சிவப்பு அடையாளக்கார்டு வைத்திருப்பவர்கள் மலேசியப்பிரஜைகள் அல்லர், எனவே அவர்கள் இந்நாட்டில் வேலை செய்யக் கூடாது என்று சட்டம் கொண்டு வரப்பட்டது. 'ஜுசோலி" (Jusoli) என்ற முறையில் சுலபமாகக் கொடுக்கப்பட்ட குடியுரிமையைப் பெற்றுக் கொள்ளாத தமிழ்ச்சமூகம் இந்தச் சட்டம் வந்ததும் பரிதவித்தது. சிலர் தாயகம் திரும்ப முற்பட்டனர். மலேசிய இந்திய காங்கிரஸ் கட்சியின் மூலம் போராட்டங்கள் நடத்தி தோட்டங்களில் மட்டும் வேலை செய்யும் அனுமதியைப் பெற்றனர். ஆனால் இது 'வேலை பெர்மிட்' பெற்ற பின்னரும் அதைப் புதுப்பித்த பின்னரும் மட்டுமே முடியும் என்ற நிலை வந்தது. இந்தச் சூழல் தோட்ட மேலாளர்கள் தொழிலாளர்களை வஞ்சிப்பதற்கும் சுரண்டுவதற்கும் மிகவும் வசதியாகப் போனது. இத்துயரங்களும் கதைகளில் தவறாமல் இடம் பெற்றுள்ளன.

எண்பதுகள் தொடக்கம் மலேசிய நாடு மேம்பாட்டுத்திட்டங்களில் மிக வேகமான வளர்ச்சியைப் பெற்றது. தோட்டங்கள் மேம்பாட்டுத் திட்டங்களினால் கையகப்படுத்தப்பட்டு மீண்டும் தமிழர்கள் வெளியே விரட்டப்பட்டனர். இம்முறை இவர்கள் புறநகர்களுக்கு இடம்பெயர வேண்டிய நிலை ஏற்பட்டது. புறம்போக்குக் குடியிருப்புவாசிகளாக மாறிப் போயினர். இக்குடியிருப்புகளும் மேம்பாட்டுத்திட்டங்களுக்காக எடுக்கப்படும் பொழுது நீண்ட வீடுகளில் தங்க வைக்கப்பட்டனர். அல்லது மலிவு விலை அடுக்குமாடி வீடுகளைக் குறைந்த விலையில் வாங்கப் பணிக்கப்பட்டனர். இந்த வாழ்க்கை பல்வேறு சமூகப் பிரச்சினைகளைத் தமிழ்ச் சமூகம் எதிர்நோக்க வழி வகுத்தது. போதைப் பொருள்

விநியோகம் மற்றும் குண்டர் கும்பல் ஈடுபாடு மற்றும் கொலை கொள்ளைகளில் ஈடுபடுதல் என்று பல்வேறு சமூகச் சிக்கல்களில் தமிழ்ச் சமூகம் இன்று சிக்கிக் கொண்டு அல்லாடி வருகிறது. இந்நிலையைக் கதையாசிரியர்கள் தங்களுடைய கதைகருக்களாகப் படைத்துச் சமகாலப் பிரச்சினைகளுக்கு அழுத்தம் கொடுத்துள்ளனர். அதே வேளையில் புதிய சூழலில் பெண்ணியக் கோட்பாடுகளிலும் சிறுகதைகளைப் படைத்து, இன்று பெண் என்பவள் எவ்வாறு பார்க்கப்படுகிறாள் என்பது பற்றிய பிம்பங்களையும் உருவாக்கியுள்ளனர்.

சஞ்சிக் கூலிகள்

தென்கிழக்காசியாவிற்குத் தமிழர்கள் பதினோராம் நூற்றாண்டிலேயே வந்த செய்திக் குறிப்புகள் இருந்தாலும் பெருமளவில் குடியேற்றம் ஏற்பட்ட காலப்பகுதி 1800கள் என்றே கூறலாம். இக்காலப்பகுதியில் மலாயாவில் இரப்பர் தோட்டங்களை உருவாக்கத் தமிழர்களை ஆங்கிலேயர்கள் தென்னிந்தியாவில் இருந்து கொண்டுவந்தனர். இவர்களைப் பல்வேறு முறைகளில் கொண்டு வந்தாலும் 'சஞ்சிக் கூலி' முறையே முதன்மையாக விளங்கியது. இந்த முறையிலே தொழிலாளர்கள் எவ்வாறு ஏமாற்றிக் கொண்டு வரப்பட்டனர் என்ற செய்தியைப் படைப்பாளர்கள் கதைகளில் பதிவு செய்துள்ளனர். சி. கமலநாதனின் 'சஞ்சிக் கூலி' என்ற கதையில் பின் வரும் வகையில் காட்டப்படுகிறது.

> "பெரியசாமிக் கங்காணியோ இல்லாத சொர்க்கத்தை எல்லாம் அந்த வாயில்லாத கிராமப் பூச்சிகளுக்குச் சொல்லித் தங்களுக்குத் தலைக்காசு என்ற மாதாந்திரப் போனசுக்காக, வெள்ளைக்காரத் துரைகளுக்குக் காட்டிக் கொடுத்த கருங்காலிக் கொடுமைகள், இன்றைக்கு நினைத்துக் கொண்டாலும் கர்ப்பம் கலங்கிவிடும். அந்த வழியில்தான் கிழவனை- அன்றைய பொடியனை- அவன் **தாய்மாமனுக்குத் தெரியாமல் சென்னைக்குக்** கொண்டு வந்து குடும்பத்தை இரண்டாகக் கலைத்துவிட்டு ஆவடியில் கிடைமடக்கி பின், நரகக் குழியான கப்பலில் ஏற்றிப் பின் பினாங்கு பிறை மலையில் தொழுவத்தில் இறக்கி விட்ட கொடுங்காட்சிகளோடு, தோட்டம் என்ற பெயரில் அழிக்கப்படாத பூச்சோங்காட்டில் கொண்டு வந்து இறக்கி விட்டு மலேரியாவுக்கும் காய்ச்சல் கட்டிக்கும் காலராவுக்கும் பலியானவர்கள் போக எஞ்சியவர்களின் கூட்டத்தில் ஒருவனாக இருக்கிறான் கிழவன்....."

இவ் வரிகள் மலேசியத் தமிழர்களின் தொடக்கக்காலச் சம்பவங்களை நிரல்படுத்தியதுடன் ஒரு பதிவாகவும் விளங்குகிறது. எங்கே போகிறோம், எப்படி வாழப்போகிறோம் என்ற சிந்தனையே இல்லாமல் 'உணவு' மட்டுமே தங்களின் இலட்சியம் என்ற ஏழைகளின் வாழ்க்கைப் போராட்டத்தை மட்டுமே முன் வைத்து வாழ்ந்த தோட்டப்புற மக்களின் வாழ்க்கையை இக்கதை ஆவணப்படுத்துகிறது. அன்று பொடியனாக இருந்தவன் கிழவனாகிப் போன பின்னும் வாழ்க்கையில் மாற்றங்களைப் பார்க்கவில்லை என்ற உண்மையையும் ஆசிரியர் காட்டியுள்ளார்

(பீர் முகமது, 2000இபக்.82). மலேசியத் தமிழர்கள் தோட்டப் புறங்களிலேயே சிறைப்பட்டுக்கிடக்க வேண்டிய சூழல் வெகு காலமாக நிலவி வந்ததற்கு மிக முக்கியக் காரணம் அவர்களைக் கொண்டு வந்து அடர்ந்த காடுகளில் முடக்கிப் போட்டதுமல்லாமல் அவர்களுடைய உழைப்பை முழுவதுமாக உறிஞ்சிச் சக்கைகளாக்கினர் ஆங்கிலேய முதலாளிமார்கள்.

இக்கொடுமையான வாழ்க்கை முறையினைத் தொடக்கத்தில் வந்தவர்கள் மட்டுமே அனுபவித்தார்கள் என்று கூறுவதற்கில்லை. இவர்களின் கட்டமைக்கப் பட்ட கட்டுப்படுத்தப்பட்ட வாழ்க்கையானது தொடர்ந்து வந்த தலை முறையையும் தொடர்ச்சியாகப் பாதிக்கச் செய்தது. தோட்டப்புறங்களில் தமிழர்கள் வாழ்கின்ற வாழ்க்கையைச் சி.வடிவேலுவின் 'இரட்டைப் பூட்டு' (சி.வடிவேல், 1967, பக்.24) என்ற கதையில் காண முடிகிறது. ஐந்து பிரிவுகளைக் கொண்ட விக்டோரியா மலைத் தோட்டத்தினை நிர்வாகி ஒன்றிணைக்கப் பார்க்கிறார். ஆனால் முடியவில்லை. எனவே, ஒவ்வொரு பிரிவிற்கும் தனித் தனி ஆயாக் கொட்டகை, தமிழ்ப் பள்ளிக்கூடம், மாரியம்மன் கோயில், ஆறாறு வீடுகள் கொண்ட இரண்டு 'ப்ளோக்கு' களுக்கு இடையே பொதுவாக ஒரு பீலி, மருந்து காமிரா (கிளினிக்) மூன்றாவது கிரேடில் தேர்ச்சியடைந்த மருத்துவ உதவியாளர், ஒரு கள்ளுக்கடை போன்றவற்றை ஏற்படுத்திக் கொடுத்துத் தமிழர்களைத் தங்களுடைய தேவைகளுக்காகச் சிந்திக்க விடவே இல்லை. தொடக்ககாலப் பதிவின் அடிப்படையிலேயே ஒரு சில இடங்களை இன்றும் காண நேரிடும் பொழுது படைப்பிலக்கியங்களின் சமகாலப் பதிவுகள் ஒரு வரலாற்று ஆவணமாக மாறி விடுவதை உணர முடிகிறது.

ஜப்பானியர் கொடுங்கோல் ஆட்சி

ஆங்கிலேயர் ஆட்சியிலே மிகுந்த துயரத்தை அனுபவித்து வந்த தமிழர்கள் ஜப்பானியர் வருகிறார்கள் என்று அறிந்தபோது மகிழ்ச்சியடைந்தனர். ஜப்பானியர்கள் தங்களுக்கு நன்மை செய்வார்கள் என்று உண்மையாகவே நம்பினார்கள். சி. வடிவேலுவின் கதையான 'இருண்ட உலகம்' இந்த நிலையை தெளிவுபடுத்துகிறது. இக்கதையில் வரும் முத்தாயி பாட்டி பின்வருமாறு கூறுகிறார்.

> "எங்கப்பன் சப்பாங்காரன் வந்த பொறவுதான் இந்தப் பெனாங்குச் சீமை செளிப்படையப் போவுது! அஞ்சி காசுக்கு விக்கிற சீனி மூனு காசுக்குக் கெடைக்கும். கந்தம் அரிசி பத்துக் காசுக்குக் கிடைக்கும். துணிமணியைக் கப்பல் கப்பலாகக் கொண்டாந்து எனாமா கொடுப்பான். ஆளுக சம்பளத்தை எல்லாம் ஒசத்திடுவான் பாருங்க......"

இவ்வாறாகத் தங்களுடைய வாழ்க்கையை ஜப்பானியர் மாற்றியமைப்பர் என்று அவர்கள் பெரிதும் நம்பினர். ஆனால், ஜப்பானியர் ஆட்சியில் நடந்ததோ வேறு. உண்மையில், அப்போது ஜப்பானியர் தமிழர்களிடம் நேசமாக நடந்து

கொள்ள வேண்டும் என்ற எண்ணம் வெகுவாக இருந்தது. காரணம், அப்பொழுது உருவாகியிருந்த அச்சு நாடுகளான ஜெர்மனி, இத்தாலி, ஜப்பான் முதலியவற்றோடு சுபாஷ் சந்திர போஸ் நட்புப் பாராட்டியதோடு ஆங்கிலேய எதிர்ப்பையும் காட்டியதை ஜப்பானியர் பெரிதும் வரவேற்றனர். அதன் அடிப்படையிலே 'இந்திய தேசிய இராணுவம்' மற்றும் 'இந்திய சுதந்திர முன்னணி' அமைப்புகளை நிறுவி ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தியாவை மீட்கும் முயற்சியில் ஈடுபட்டார். இதனால் ஜப்பானியர் சயாம் வழியாகப் பர்மாவிற்கு இரயில் தண்டவாளம் அமைக்கும் பணியை ஆரம்பித்தனர். இதற்காக ஏராளமான தமிழர்களைச் சயாமிற்குக் கொண்டு சென்றனர். இதில் ஈடுபடுத்தப்பட்ட தமிழர்கள் மிகுந்த வேதனையை அனுபவித்தனர். அச்சூழலைச் சி.வடிவேலுவின் 'முத்துசாமிக் கிழவன்' பின்வருமாறு விவரிக்கிறது.

> "குளிராலும் கொசுக்கடியாலும் அட்டைக்கடியாலும் வருந்துவர் ஒரு புறம்; சியாம்காரர்கள் காய்ச்சிக் கொண்டு வந்து விற்கும் ஒரு விதச் சாராயத்தைக் குடித்துவிட்டுக் குடல் வெந்து அவதிப்படுவர் ஒரு புறம்; சரியாக வேகாத கல்லும் மண்ணும் கலந்த சோற்றையும் குழம்பு என்ற பெயரில் மிளகாய்த் தூளாகக் கொட்டிக் கிளறியதையும் தின்று வயிற்றோட்டங்கண்டு அவதிப்படுவோர் ஒரு புறம்; ஜப்பானியரிடம் அடி உதை பட்டு நலிந்தவர்கள் ஒரு புறம்; மலாயாவில் விட்டு வந்த குடும்பத்தாரை எண்ணி ஏங்கி மெலிந்தவர்கள் ஒரு புறம்; சாலையில் சென்று கொண்டிருக்கும் போதே லோரியில் தூக்கிக் கொண்டு போய் இரயிலில் ஏற்றிச் சியாம் கொண்டு வந்து தள்ளியமையால், குடும்பத்தவரிடம் கூடச் சொல்லிக் கொள்ளாமல் வந்து தவித்தவர்கள் ஒரு புறம். எத்தனையோ ரகம். மலாயாத் தமிழர்களில் சுமார் ஒரு லட்சம் பேர் இந்தச் சோக மரண ரயில்வே குழியில் அகப்பட்டுத் தவித்தனர். தமிழர்களின் இரத்தம் வியர்வையாகவும் கண்ணீராகவும் சீழாகவும் ஓடியது....."

என்ற வரிகள் ஜப்பானியர் ஆட்சியில் தமிழர்கள் அனுபவித்த துயரங்களை வர்ணிக்கின்றன. ஜப்பானியர்கள் நன்மை செய்யப்போகிறார்கள் என்று காத்திருந்தவர்களுக்கு ஏமாற்றமே மிஞ்சியது. நேதாஜியின் முயற்சியும் அவருடைய அகால மரணத்துடன் கனவாகக் கலைந்து போனது. பஞ்சம், பசி, பட்டினி, நோய் மற்றும் போர் என்று அன்றைய காலக்கட்டத்தில் தமிழர்கள் துயரங்கள் நிறைந்த வாழ்க்கையைத்தான் அனுபவித்தார்கள். போர்க்காலம் தமிழர்களின் வாழ்க்கையைச் சிதைத்து மீண்டும் கட்டியெழுப்பப்பட வேண்டிய ஒரு சமுதாயமாக மாற்றிவிட்டது என்றே கூற வேண்டும்.

தோட்டத் துண்டாடல் கொடுமை

இரண்டாம் உலகப் போருக்குப் பின் ஆசிய நாடான ஜப்பான் ஆங்கிலக் காலனித்துவத்தை எதிர்த்த நிகழ்வானது ஆங்கில ஆட்சியையும் எதிர்த்துப் போராட

முடியும் என்ற தைரியத்தை ஏனைய நாடுகள் பெற்றன என்றே கூறுதல் வேண்டும். எனவே, ஆசிய நாடுகள் ஆங்கில அரசிடமிருந்து சுதந்திரம் கேட்டுப் போராடத் தயாராகின. காலப்போக்கில், ஆங்கில அரசும் இந்நாடுகளுக்குச் சுதந்திரம் கொடுத்தது. அவ்வகையில், 1957 இல் மலாயாவிற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டது. இதனால், பெரிய தோட்டங்களுக்கு முதலாளியாக இருந்த ஆங்கிலேய நிறுவனங்கள் உள்நாட்டு முதலாளிகளிடம் தோட்டங்களை விற்றனர். ஆனால், உள்நாட்டு முதலாளிகளால் பெரிய தோட்டங்களை வாங்க முடியாததால் தோட்டங்கள் துண்டாடப்பட்டு விற்கப்பட்டன. இதனால், அந்த தோட்டங்களில் வேலை செய்த தமிழர்கள் ஒரே நாளில் வேலை இழக்கும் நிலை ஏற்பட்டது. அது மட்டுமல்லாது, தோட்டங்கள் கைமாறும்போது தொழிலாளர் வெளியேறும் போது அவர்களுக்குக் குடியிருக்க ஒரு கூரையும் இல்லை, மேலும் அவர்களுடைய உடைமைப் பொருள்களையும் தோட்டங்களிலேயே விட்டு வர வேண்டிய நிலை ஏற்பட்டது. இச்சூழலை முரசு நெடுமாறனின் 'துண்டாடல் கொடுமை' என்ற கதையில் பின்வருமாறு விளக்குகிறார்.

> "ஐயா, நானும் எனது மனைவியும், ஐந்து பிள்ளைகளும் 'டெலோக்' தோட்டத்தில் வாழ்ந்து வந்தோம். ஆறு மாசத்துக்கு முன்னால் அந்தத் தோட்டத்தத் துண்டாக்கிட்டாங்க. நாங்க எல்லோரும் விரட்டப்பட்டோம். நாங்க ரத்த வேர்வை சிந்தி நட்ட ரப்பர் மரங்களையும், கண்ணு போலக் காப்பாத்தின செம்பனை மரங்களையும், எங்களுக்குச் சொந்தமான ஆடுகள் மாடுகள் எல்லாத்தையும் விட்டுவிட்டு நிர்க்கதியா வெளியேறினோம்....."

இவ்வரிகள் தமிழ்ச் சமுதாயம் சுதந்திர நாட்டில் அநாதையாக நின்ற சோகத்தைக் காட்டுகின்றது. 'எங்க தோட்டம்' என்று இதுநாள் வரையில் எண்ணியிருந்த தமிழ்ச் சமுதாயம் முதன்முறையாகத் தங்களுக்கு எதுவும் சொந்தமில்லை, தங்களுடைய உழைப்பை மட்டுமே முதலாளிகள் உறிஞ்சினார்களே தவிரத் தொழிலாளர்களுக்கு எந்த நன்மையும் இல்லை என்பதை உணர்ந்தனர்.

சிவப்பு அடையாள அட்டையும் வேலை 'பெர்மிட்'டும்

மலேசியத் தமிழ்ச் சமூகம் சுதந்திரத்திற்குப் பின்னால் சிக்கிக் கொண்ட இன்னொரு பிரச்சினை சிவப்பு அடையாள அட்டை மற்றும் வேலை 'பெர்மிட்' ஆகும். சிவப்பு அடையாள அட்டை உள்ளவர்கள் இந்த நாட்டின் பிரஜை அல்ல என்று அரசாங்கம் கூறிவிட்ட பிறகு, பெரும்பாலான தமிழர்கள் நாடற்றவர்களாக மாறிப் போயினர். இவர்கள் முதலில் தோட்டங்களில் கூட வேலை செய்ய முடியாது என்ற நிலைக்கு ஆளாகினர். பின்னர் இந்தச் சட்டம் தளர்த்தப்பட்டு, தோட்ட வேலை செய்யலாம் என்று கூறப்பட்டது. ஆனால், இதற்கு முதலாளி மார்களின் கையொப்பம் அவ்வப்போது தேவைப்பட்டது. இத்தகைய நிலை, அதிகார வர்க்கத்தின் அத்து மீறல்களைத் தமிழ்ச் சமூகம் அனுபவிக்க வேண்டிய சூழலுக்கு ஆளாகியது. 'இரைகள்' கதையில் சீ.முத்துசாமி, தன்மானத்துடன் வாழத் துணிந்த இளம் விதவை எவ்வாறு வேலை பெர்மிட் பெறுவதற்காக தன் மேலதிகாரியிடம் விலைபோவதைக் காட்டுகிறார்.

> 'வேலை பெர்மிட் கூட இந்த மாசத்தோட முடியரப்பல இருக்கே....
> 'ஆமாங்க.. ஐயாதான் கொஞ்சம் தயவு செய்து உதவனும்..'
> 'அதுக்கென்ன லட்சுமி.. ஒதவலாம். நான் சொன்னா மொதலாளி ஒன்னும் சொல்லப் போறதில்லை.. மொதலாளி சரின்னா பெர்மிட்ல சாப்பு தொடர்ந்து குத்திக்கலாம். இல்லைன்னா கஷ்டந்தான்.. கிருஷ்ணனோட சேர்ந்துக்க போறதா தோட்டத்துல பேசிக்கிறாங் களாமே ஏதோ இரு...நம்மளையும் கவனிச்சுக்க..' என்று கண்களை நாலு பக்கமும் சுழல விட்டுத் தொடர்ந்தார். 'சாயங்காலம் சும்மாதான இருப்ப.. அப்படியே பங்களா பக்கம் வந்துட்டு போயேன்..'

இவ்வரிகள் அதிகார வர்க்கம் தமிழ்ச் சமுதயத்தின் இயலாமையை எந்த அளவிற்கு பயன்படுத்திக் கொள்கிறார்கள் என்பதை உணர முடிகிறது. இந்தச் சிவப்பு அடையாள அட்டை பெற்றவர்களை அதிகாரவர்க்கத்தினர் தங்களுடைய உடைமைப் பொருளாகவே பார்க்கிறார்கள். ஆ.நாகப்பனின் படைப்பான 'இதுதான் வாழ்க்கை', ஒரு தந்தை தன் மகளின் வாழ்க்கையைச் சீரழித்த அதிகார வர்க்கத்தைச் சேர்ந்தவனைப் பழிக்குப் பழி வாங்க முடியாமல் இந்த வேலை பெர்மிட் மற்றும் சிவப்பு அடையாள அட்டை கட்டிப்போட்டதை விவரிக்கின்றது.

> 'இதுநாள் வரையில் மானம் கெடாது உண்டு உரமேறிய அவன் உடல் நடுங்கியது. 'இதோ வரேன்' சர்ரென வெளியேறினான். வாசலில் கொடியில் காய்ந்து கொண்டிருந்த மனைவியின் சிவப்பு நிறக் கையிலியை ஒதுக்கக் கையைத் தூக்கினான். சிவப்பு பாஸ்போர்ட் வேலை பெர்மிட், இன்னும் இரண்டு நாட்களுக்கே வேலை, நினைத்துக் கொண்டவனின் கால்கள் மரச்சட்டங்களாக விரைத்துப் போயின. நடக்கும் துணிவு கால்களுக்கு இல்லை..'

இவ் வரிகள் இயலாமையுடன் போராடிக் கொண்டிருக்கும் ஒரு சமுதாயத்தின் அவல நிலையையும் அச்சமுதாயத்தை தன் அதிகாரத்தால் சுரண்டி ஒடுக்கிச் சுகம் காணும் அதிகார வர்க்கத்தின் கொடூரத்தையும் காட்டுகின்றன.

விளிம்பு நிலை மனிதர்கள்

மைய நிலையிலிருந்து ஒதுக்கி வைக்கப்பட்ட சமூகமாகத்தான் ஒரு பெரிய தமிழ்ச்சமூகம் இயங்கி வருகிறது. இவர்கள் பொருளாதாரத்தில் தாழ்ந்த நிலையில் இருக்கும் சூழலில் வாழிடச் சூழலிலும் பின் தங்கிய நிலையில் இருக்கின்றனர். முன்னேற்றம் அடைந்த ஒரு நாட்டிலே விளிம்பு நிலை மனிதர்களாக வாழும் போது பல்வேறு தாக்கங்களை அச்சமூகக் கூட்டம் பெறும் என்பது உண்மை. இதை ரெ. கார்த்திகேசு தம்முடைய 'கொப்புளங்கள்' என்ற கதையில் பின் வருமாறு விவரிக்கிறார்.

> 'எனக்கு எத்தனை சூடு போட்டு வளத்தாரு தெரியுமா? அந்தச் சூடுகளின் பலன் என்ன என்று யாரும் அவனைக் கேட்கவில்லை. அத்தனை சூடுகள் போட்டு ஒழுக்கம் போதிக்கப்பட்ட இந்தக்

குடும்பத் தலைவன் படிப்பில்லாமல், காண்ட்ராக்டில் அன்றாடக் கூலி வேலை செய்து, புறம் போக்குப் பகுதியில் சட்ட விரோதக் குடிசையில் ராஜ்ஜியம் நடத்தி, மாலை வேளைகளில் பீர் போத்தல்களைச் சுற்றி உட்கார்ந்து நாலு நம்பர் கதைபேசுவதைத் தன் வாழ்க்கையின் உன்னத லட்சியமாக வரித்துக் கொண்டிருப்பதை, சூடு போட்டு ஒழுக்கம் போதித்த அவன் அப்பா பார்த்தால் உச்சி குளிர்ந்து போவானோ..'

என்ற வரிகள், இலட்சியங்கள் தொலைந்து போன இந்தச் சமூகம் தன் வாழ்க்கைப் பாதையை எவ்வாறு அமைத்துக் கொள்வது என்று தவிப்பதைக் காட்டுகின்றது. மலேசியத் தமிழ்ச் சமூகம் சூழ்நிலைக் கைதியாக நிற்பதைப் படைப்பாளர்கள் உணர்த்த முயல்கிறார்கள் என்பதை இக்கதைகளின் வழி அறிய முடிகின்றது.

மலேசியச் சிறுகதைகள் உண்மையில் மக்களின் வாழ்க்கையை அவர்கள் கடந்து வந்த பாதையின் அடிப்படையில் தெளிவாகக் காட்டியுள்ளன என்றால் அது மிகையன்று.

துணை நூல்கள்

1. தண்டாயுதம், இரா. (1973), தற்காலத் தமிழ் இலக்கியம், சென்னை: தமிழ்ப் புத்தகாலயம்.
2. கிருஷ்ணன் மணியம் (1993), மலாய்- தமிழ்ச் சிறுகதைகள் ஓர் ஒப்பாய்வு, கோலாலம்பூர், தேசிய மொழி வளர்ப்பு நிறுவனம்.
3. சை. பீர். முகமது (2000), வேரும் வாழ்வும், கோலாலம்பூர்: முகில் பிரசுரம்.

நாயக்கர் காலச் சிற்பக்கலையின் தனித்தன்மைகள் - சிறப்பாய்வு நோக்கில் மதுரை மீனாட்சி சுந்தரரேசுவரர் கோயிற் சிற்பங்கள்

முனைவர் லோ. மணிவண்ணன்
உதவிப்பேராசிரியர்,தமிழ்த்துறை
அரசு கலைக்கல்லூரி,மேலூர்
மதுரை, தமிழ்நாடு, இந்தியா

முன்னுரை

தமிழகத்தை ஆட்சி செய்த அரச பரம்பரைகளான பல்லவர், பாண்டியர், சோழர், விசயநகர நாயக்கர் ஆகிய ஒவ்வொரு அரச பரம்பரையினரும் தனித்த சிற்பக்கலைப் பாணிகளைக் கொண்டிருந்தனர். முதன் முதலாகப் பல்லவர். கல்லிலே சிற்பங்களைச் செய்யத் தொடங்கினர். அவர்களது சிற்பக்கலையினைப் பின்பற்றி அதில் சில மாற்றங்களுடன் முற்காலப் பாண்டியர் அக்கலையினை வளர்த்தனர். அதன் பின்னர்ச் சோழர்களும் அவர்களைத் தொடர்ந்து பிற்காலப் பாண்டியரும் சிற்பக்கலை மரபில் பல வளர்ச்சிக் கூறுகளை உள்ளடக்கியும் தமக்கெனத் தனித்தன்மைகள் கொண்டதாயும் சிற்பங்களை அமைத்தனர். இப்பேரரசர்களைத் தவிர இவர்களது காலத்தில் இவர்களின் அதிகாரத்திற்கு உட்பட்டு ஆட்சி செய்த சிற்றரசர்களான இருக்குவேளிர், பழுவேட்டரையர், முத்தரையர், வாணாதிராயர் முதலானோரும் கோயில்களைக் கட்டிச் சிற்பக் கலையினை வளர்த்திருப்பினும் அவரவர்தம் பேரரசர்களின் கலைக் கொள்கைகளைப் பின்பற்றியே சிற்பங்களை வடித்தனர்.

சோழர் காலத்திற்குப்பின் தமிழகத்தை ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் தமக்கெனத் தனித்த பாணியைச் சிற்பக்கலையில் புகுத்தினர். சோழரது சிற்பங்கள் குறைந்த ஆடை ஆபரணங்களைக் கொண்டு எளிமையாக விளங்க, நாயக்கரது சிற்பங்களோ அதிக அளவிலான ஆடை ஆபரணங்களைக் கொண்டு அழகூட்டப் பட்டனவாக அமைந்தன. மேலும் இவை அதிக உயரமுடையனவாகத் திரண்ட கண்களையும் பெரிய காதுகளையும் பருத்த மூக்கினையும் விரிந்த இதழ்களையும் கொண்டு விளங்கின. உடம்பே சதைப்பற்றுடன் கூடிய அமைப்பில் கை, கால்களின் விரல் நகங்கள் கூட நன்கு விளங்கும்படி செதுக்கப்பட்டன. முழங்கால் முட்டி, கணுக்கால் சதை, நன்கு தோன்றும்படி அமைந்த விதம் நாயக்கர் காலச் சிற்பங்களுக்கே உரிய தனித்தன்மைகளாகும். மேலும்உள்ளீடாகச் சில சிறப்புக் கூறுகளைக் கொண்டு சிற்பங்களைப் படைத்தனர். இக்கட்டுரை நாயக்கரது சிற்பக்கலையின் தனித்தன்மைகள் எவை? என்பது பற்றியும் அத்தனித்தன்மைகள்

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் எங்ஙனம் இடம்பெற்றுள்ளன என்பதையும் ஆய்வதாக அமைகிறது.

நாயக்கரது சிற்பக்கலையின் தனித்தன்மைகள்

நாயக்க மன்னர்கள் கல்லினால் ஆன சிற்பங்களைக் கல்யாண மண்டபம், வசந்த மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், கொடிக்கம்ப மண்டபம் முதலிய மண்டபங்களில் அமைத்தனர். இங்கு இடம் பெறும் சிற்பங்கள் ஏதேனும் ஒரு கருத்தமைதியைக் (Theem) கொண்டிருக்கும்.

நாயக்க மன்னர் தொடர்புடைய சிற்பங்களை அருகருகிலோ எதிரெதிராகவோ அமைத்தனர். இவ்வாறு அமைப்பதால் சிற்பங்களைப் பார்ப்பவர்கள் சிற்பங்களை அடையாளம் காண்பது எளிதாகிறது. மேலும் ஒரே கருத்தை விளக்கும் தொடர் சிற்பங்களாக அவை விளங்குவதால் கருத்தைப் புரிந்து இரசிக்க ஏதுவாக அமைகிறது (எடுத்துக்காட்டு: இரணியன் நரசிம்மர் சண்டையிடும் காட்சி ஒரு சிற்பமாகவும் இரணியவதை அடுத்தகாட்சிச் சிற்பமாகவும் அமைதல் - அழகர் கோவில் கல்யாண மண்டபம்).

சைவக் கோயிலாக இருப்பின் சைவ சமயம் தொடர்பான புராணக் கதைகளை விளக்கும் சிற்பங்களையும், வைணவைக் கோயிலாக இருப்பின் வைணவப் புராணக் கதைச் சிற்பங்களையும் படைத்தனர். இவை தவிர அவ்வக்கோயில் தலபுராணச் சிற்பங்களும் இடம்பெற்றன. இராமாயணம், மகாபாரதம் ஆகிய இதிகாசச் சிற்பங்கள் சைவ, வைணவ வேறுபாடு இன்றி இருவிதக் கோயில்களிலும் இடம்பெற்றன. நாட்டார் வழக்காற்றியல் தொடர்பான செய்திகளை விளக்கும் குறவன், குறத்தி, வேடன், வேட்டுவச்சி, நாடோடி, கொம்பூதும் வீரன் முதலான சிற்பங்களை நாயக்கர் காலத்துச் சிற்பங்களில்தான் காண இயலும்.

யாளிகளை மண்டபங்களில் இடம் பெறச் செய்வதும் மண்டபங்களின் முகப்பிலே குதிரைகள் முன்னங்கால்களைத் தூக்கிப் பாயும் நிலையில் வீரர்களுடன் அமைப்பதும் நாயக்கர் காலச் சிற்பக்கலைப் பாணியாகும்.

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிற் சிற்பங்கள்

மதுரை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிலில் வேட மண்டபம், இருட்டு மண்டபம் எனும் முதலிப் பிள்ளை மண்டபம், சங்கிலி மண்டபம், கம்பத்தடி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம், புதுமண்டபம் எனும் வசந்த மண்டம் ஆகிய மண்டபங்களில் நாயக்கர் காலச் சிற்பப் படைப்புகள் காணப்படுகின்றன. இச்சிற்பங்களை மண்டபச் சிற்பங்கள் எனும் விதத்தில் அணுகாமல் கருத்துக்களின் அடிப்படையில் இதிகாசச் சிற்பங்கள், சிவபுராணச் சிற்பங்கள், தல புராணமாகத் திகழும் திருவிளையாடற் புராணச் சிற்பங்கள், பெரிய புராணச் சிற்பங்கள், நாட்டார் வழக்காற்றியல் சிற்பங்கள், பிற சிற்பங்கள் எனும் தலைப்புக்களின் கீழ்க் காணலாம்.

இதிகாசச் சிற்பங்கள்

இக்கோயிலில் இராமாயணப் பாத்திரங்களான வாலி, சுக்கிரீவன் சிற்பங்களும் மகாபாரதப் பாத்திரங்களான அர்ச்சுனன், வீமன், புருஷாமிருகம், நகுலன், சகாதேவன் ஆகிய சிற்பங்களும் சங்கிலி மண்டபம் மற்றும் ஆயிரக்கால் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளன. இவை நாம் முன்னர்க் கண்டபடி எதிரெதிர்த் தூண்களில் பொருத்தமுடைய சிற்பங்களாக அமைக்கப்பட்டுள்ளன. அவ்விதத்தில் வாலிக்கு நேராக எதிர்வரிசையில் சுக்கிரீவன் சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பங்களில் வாலி சுக்கிரிவனை அடையாளப்படுத்தும் விதமாகச் சுக்கிரீவன் சிற்பத்தை விட வாலி சற்றுப் பெரிய உருவமாக அண்ணன் என்பதைக் காட்டும் விதத்தில் அமைந்துள்ளது. மேலும், வாலியின் சிற்பம் இராமன் விடுத்த அம்பை மார்பிலிருந்து அகற்றும் நிகழ்வை நினைவுபடுத்தும் விதத்தில் வலது கையை மர்பில் வைத்த நிலையிலும் அமைந்துள்ளது.

சங்கலி மண்டபத்தில் அர்ச்சுனன், கர்ணன் சிற்பங்கள் எதிரெதிர்த் தூண்களில் அமைந்துள்ளன. கர்ணன் சிற்பத்தை அச்சிற்பத்தின் வலக்கையில் உள்ள நாகக்கணையை வைத்தே அடையாளம் காண இயலும். அர்ச்சுனன் சிற்பம் பாசுபத அஸ்திரத்தைச் சிவனிடம் பெறுவதற்குத் தவம் செய்த நிகழ்வின் அடிப்படையில் மீசை, தாடியுடன் படைக்கப்பட்டுள்ளது. இரு சிற்பங்களும் கையில் வில்லுடன் காட்சியளிக்கின்றன. அருகில் எதிரெதிராக அமைந்துள்ள நகுல, சகாதேவ சிற்பங்களும் கையில் வில்லுடன் செதுக்கப்பட்டுள்ளன. வீமன் கையில் கதையினை ஓங்கியபடியும் அடுத்த தூணில் புருஷாமிருகச் சிற்பம் கதையை ஓங்கிய நிலையிலும் மகாபாரதக்கதையின் அடிப்படையில் இடம் பெற்றுள்ளன.

திருநங்கைச் சிற்பம்

திருநங்கைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் விதத்தில் இன்று பல சிந்தனைகள் எழுந்துள்ளன. ஆனால் பதினாறாம் நூற்றாண்டிலேயே ஆயிரக்கால் மண்டபத்தில் திருநங்கையின் சிற்பம் இடம்பெற்றுள்ளது. இத்திருநங்கையின் சிற்பம் ஏன் படைக்கப்பட்டுள்ளது? இச்சிற்பம் யாரைக் குறிக்கிறது? என ஆராயும் பொழுது சிற்பத்தை அடையாளம் காண மகாபாரதம் நமக்குத்துணை நிற்கிறது. இச்சிற்பம் ஊர்வசியின் சாபத்தால் திருநங்கை வடிவம் பெற்ற அர்ச்சுனன் சிற்பமாகும். இச்சிற்பத்தினைப் பிற கோயிலில் இடம் பெறும் இதே போன்ற சிற்பத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது இச்சிற்பம் அர்ச்சுனன் சிற்பம் என்பதை உணரலாம். அவ்வகையில் திருநெல்வேலிக்கருகில் உள்ள கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயிலில் உள்ள அர்ச்சுனன் சிற்பத்தின் பக்கவாட்டில் திருநங்கை நட்டுவனாராக அமர்ந்து இசைக்கப் பெண் நடனமாடும் காட்சி இடம் பெற்றுள்ளது. இந்நடனமாடும் பெண் விராடனது மகள் உத்தரை சிற்பமாகும். இக்காட்சியை ஒப்பிட்டுப் பார்க்கையில் திருநங்கை வடிவம் அர்ச்சுனன் வடிவமே என உணரலாம். உத்தரையின் சிற்பம் நடன நங்கையாக ஆயிரக்கால் மண்டபத்தில் அர்ச்சுனன் சிற்பத்தின் எதிரில் அமைந்துள்ளது.

சிவபுராணச் சிற்பங்கள்

இருட்டு மண்டபம் எனும் முதலிப்பிள்ளை மண்டபம், வேட மண்டபம், புது மண்டபம் ஆகிய மண்டபங்களில் சிவபுராணச் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. வேட மண்டபத்தில் மீனாட்சியும் சுந்தரேசுவரரும் முறையே வேட்டுவச்சி, வேடன் ஆகிய வடிவங்களில் சிற்பங்களாகச் செதுக்கப் பட்டுள்ளனர். இது திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறும் மாபாதகம் தீர்த்த படலக்கதையை (படலம் எண்.26, மதுரைக் காண்டம், திருவிளையாடற்புராணம்) அடிப்படையாகக் கொண்டு செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பங்கள் இறைவன், இறைவி வடிவங்கள் என்பதை உணர்த்த இறைவி உருவத்தின் தலைக்கு மேல் நாகம் செதுக்கப்பட்டுள்ளது.இதே போல் ஆயிரக்கால் மண்டபத்தில் பாணனாக வந்த சிவபெருமான் சிற்பத்தின் தலைக்குமேல் நாகம் இடம்பெற்றிருப்பது மேற்கண்ட கருத்திற்கு அணி சேர்ப்பதாய் அமைகிறது.

முதலிப் பிள்ளை மண்டத்தில் தாருகாவனத்து ரிசிகளின் ஆணவம் போக்கிய கதையை அடிப்படையாய்க் கொண்ட பிச்சாடணார், மோகினி, ரிசிகள், ரிசிகளது மனைவியர் சிற்பங்கள் எதிரெதிராகவும், அருகருகிலும் அழகிய வடிவில் செதுக்கப்பட்டுள்ளன. பிச்சாடணார் மோகினிச் சிற்பங்கள் ஆயிரக்கால் மண்டபத்திலும் காணப்படுகின்றன.

கம்பத்தடி மண்டபத்தில் தமிழகக் கோயில்களில் வேறு எங்கும் காணக்கிடைக்காத சிவபெருமானது இருபத்தைந்து முக்கிய வடிவச் சிற்பங்களை ஒரே இடத்தில் கொடி மரத்தைச் சுற்றி அமைந்துள்ள தூண்களில் இடம் பெறச் செய்துள்ளனர். இச்சிற்பங்களில் குறிப்பிட்டுச் சொல்லும்படி மீனாட்சி சுந்தரேசர் திருமணக் காட்சிச் சிற்பம், திரிபுராந்தகர் சிற்பம் ஆகியன அமைந்துள்ளன. மீனாட்சி திருக்கல்யாணக் சிற்பம் மதுரையை குறியீட்டு நிலையில் அடையாளப்படுத்தும் சிற்பமாகத் திகழ்கிறது.இச்சிற்பம் சிவபுராணத்தின்படி சிவன் பார்வதி திருமணத்தில் திருமால் தம் தங்கையைச்சிவபெருமானுக்குத் தாரை வார்த்துத் தரும் சிற்பமாகும். எனவேதான் சிவபுராண அடிப்படையில் சிவனது இருபத்தைந்து வடிவங்களுள் ஒன்றாக இங்கு இச்சிற்பத்தை இடம் பெறச் செய்துள்ளனர். ஆனால் திருவிளையாடற் புராண (தடாதகைத் திருமணம், மதுரைக்காண்டம், திருவிளையாடற் புராணம்) அடிப்படையில் இத்திருமணக் காட்சி மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கல்யாணச் சிற்பக் காட்சியாகவும் கொள்ளப்படுகிறது. இதே போன்ற திருக்கல்யாணச் சிற்பம் புதுமண்டபத்திலும் இடம் பெற்றுள்ளது. சிற்ப வடிவமைப்பில் இது முன்னதை விட அழகாகச் செதுக்கப்பட்டுள்ளது.

திரிபுராந்தகர்

திரிபுராந்தகர் சிற்பம் முப்புரங்களையும் சிவன் தன் நகைப்பால் அழித்த கதையின் அடிப்படையில் செதுக்கப்பட்டுள்ளது. இச்சிற்பத்தில் மேருமலையை வில்லாக்கி இடக்கரத்தில் பிடித்துள்ளார். அவ்வில்லில் வாசுகி எனும் பாம்பு நாணாக அமைந்திருக்கும் என்கிறது புராணம். ஆனால் சிற்பம் படைத்த சிற்பிக்குக்

கல்லிலே நாணினை அமைப்பது இயலாததாகையால் வில்லின் மேற்பகுதியில் நாகத்தைப் படைத்திருப்பதன் மூலம் குறியீட்டு நிலையில் நாணினைக் காட்டியுள்ளார் சிற்பி. கதையின்படி மகாவிஷ்ணுவே சிவனது கையில் உள்ள அம்பாக அமைகிறார். அதன்படி வலக்கரத்தில் பிடித்துள்ள அம்பில் சிறிய அளவில் மகாவிஷ்ணுவை மிக நேர்த்தியாகப் படைத்துள்ளார் சிற்பி. இத்திரிபுராந்தகர் சிற்பத்தின் முன்னுள்ள தூணில் தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி ஆகிய மூன்று அசுரர்கள் கைகளில் வில் அம்புடன் படைக்கப் பட்டிருப்பது பொருத்தமாக அமைகிறது. இதே போன்ற திரிபுராந்தகர் சிற்பத்தை ஆயிரக்கால் மண்டபத்திலும் காணலாம். ஆனால் அங்கு இவ்வசுரர்களது சிற்பங்கள் இடம் பெறவில்லை.

வீரபத்ரர்

தக்கனை வதை செய்யும் வீரபத்திரர் சிற்பம் ஆயிரக்கால் மண்டபத்தில் வாளினால் காலடியில் உள்ள தக்கனைக் வதம் செய்வதாகச் செதுக்கப்பட்டுள்ளது. கம்பத்தடி மண்டபத்தில் வீரபத்ரரின் உருவம் அக்னி வீரபத்திரர் (தீயினைத்தலைக்குப் பின் கொண்டவர் ஜூவாலகேசம்).அகோரவீரபத்திரர் (பார்ப்பதற்குப் பயத்தைத் தோற்றுவிக்கும் நிலை) என இருபெரும் சிற்ப வடிவங்களில் இடம் பெற்றுள்ளார்.

ஊர்த்துவ தாண்டவர்&காளி

சிவபுராணத்தின் அடிப்படையில் கம்பத்தடி மண்டபத்தில் ஊர்த்துவ தாண்டவர் மற்றும் காளியின் சிற்பம் பெரிய அளவில் காணப்படுகிறது. இவ்வூர்த்துவ தாண்டவரின் காலுக்கருகில் காரைக்காலம்மையாரின் பேயுருவம் செதுக்கப்பட்டுள்ளது. பெரியபுராணத்தின்படி சிவபெருமானிடம் அவர் பிறவாமை வேண்டும்; இனிப்பிறந்தால் உன்னை மறவாமை வேண்டும். அரவா நின் காலடியில் இருந்து நித்தம் உனது நடனத்தைக் காணும் வரம் வேண்டும் என்று கேட்ட வரத்தின் அடிப்படையில் இங்கு இச்சிற்பம் அமைந்துள்ளது பொருத்தமாகும். இதே போன்ற இணைச்சிற்பங்கள் புதுமண்டபத்தில் எதிரெதிராக அமைக்கப்பட்டுள்ளன. கஜசம்காரமூர்த்தி சிற்பம் புதுமண்டபத்தில் அமைந்துள்ளது. இச்சிற்பம் பெரிய வடிவில் அழகுற அமைந்துள்ளது.

இரதி, மன்மதன்

சிவபுராணத்தில் சிவனது தியானத்தைக் கலைப்பதற்காக மன்மதன் முயன்று சிவபெருமானால் எறிக்கப்பட்டுப் பின் இரதியின் வேண்டுகோளால் மீண்டும் உயிர்பெற்று எழுந்த கதை இடம் பெறுகிறது. நாயக்க மன்னர் தாம் படைத்த சைவ, வைணவக் கோயில்களில் இரதி மன்மதன் சிற்பங்களை இடம் பெறச் செய்வதை மரபாகப் பின்பற்றியுள்ளனர். ஆயிரக்கால் மண்டபத்தில் எதிரெதிராக இச்சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. இச்சிற்பங்கள் வைணவக் கோயில்களான திருமோகூர் காளமேகப் பெருமாள் கோயில், அழகர் கோயில் கள்ளழகர் கோயில், தாடிக் கொம்பு, சௌந்தரராசப்பெருமாள் கோயில், திருவில்லிபுத்தூர் ஆண்டாள்கோயில், கிருஷ்ணாபுரம் வெங்கடாசலபதி கோயில்,

திருக்குறுங்குடி நம்பிகோயில்........ எனப் பல கோயில்களில் இடம் பெறுகின்றன(லோ.மணிவண்ணன் பாண்டியநாட்டு வைணவக் கோயில்களில் கலையும் கட்டடக் கலையும், ப.129).

பெரிய புராணச் சிற்பம்

ஆயிரக்கால் மண்டபத்தின் முன் வரிசையில் கண்ணப்பர் சிற்பம் இடம் பெற்றுள்ளது. தன் கண்ணை கையில் உள்ள அம்பினால் தோண்ட முயற்சி செய்வது போல் அமைந்துள்ள கண்ணப்பர் சிற்பத்தில் சிவகோசரியார் ஒழிந்திருந்து இக்காட்சியைப் பார்க்கும் நிலையில் படைக்கப்பட்டுள்ளார்.

திருவிளையாடற் சிற்பங்கள்

மதுரையின் தலபுராணம், பரஞ்சோதி முனிவரால் இயற்றப்பட்ட திருவிளையாடற் புராணம். இப்புராணத்தின் தாக்கத்தை இக்கோயில் மண்டபச் சிற்பங்களிலும் தேர்ச் சிற்பங்களிலும் காணலாம்.

'ஆயிரக்கால் மண்டபத்தின் முன்வரிசையில் திருவிளையாடற் புராணம் கூடற்காண்டத்தில் இடம் பெறும் "அங்கம் வெட்டியது" (கதை எண்.27) கதையின் அடிப்படையில் சிவபெருமான் சித்தன் எனும் வாள் வீரனைக் கீழே தள்ளி அவனது ஒவ்வொரு அங்கத்தையும் வெட்டும் விதத்தில் செதுக்கப்பட்ட சிற்பம் இடம் பெற்றுள்ளது. மண்டபத்தின் உள்வரிசையில் இசைப்பாணன், இசைப்பாடினி (பாணபத்திரனது மனைவி) ஆகியோரது உருவங்கள் அருகருகே இடம் பெற்றுள்ளன. இவை திருவிளையாடலில் ''இசை வாது வென்ற படலத்தை" அடிப்படையாக வைத்து அமைக்கப்பட்டுள்ளது (A.V.Jeyachach andrun, Madurai Temple Complex, p.78) இச்சிற்பங்களில் பாணனது வடிவம் கொண்டு சிவபெருமான் பாணபத்திரரது மனைவிக்கும் இலங்கையிலிருந்து போட்டிக்காகப் பாண்டியன் அழைத்து வந்த பாடினிக்கும் நடக்கும் போட்டிக்கு நடுவராக வந்த கதைப்பகுதியின் அடிப்படையில் செதுக்கப்பட்டுள்ளது. பாணன் வடிவில் இருப்பவர் சிவபெருமானே என்பதை உணர்த்தவே தலைக்கு மேல் நாகம் செதுக்கப்பட்டுள்ளது. விறலி பாணபத்ரரது மனைவியாவாள், இச்சிற்பத்தை அருகில் உள்ள சரஸ்வதி எனக் கூறுவாரும் உள்ர்(Dhevakunjari, Madurai through the ages, p.230) சரஸ்வதியின் உருவமாக இருப்பின் நான்கு கரங்களுடன் படைக்கப்பட்டிருக்கும். எனவே இருகரங்களும் அவற்றில் இசைக்கருவிகளும் கொண்டு திகழ்வதால் இது பாண்மகளே எனக் கூறும் ஜெயச்சந்துருன் கருத்தே பொருத்தமாக அமைகிறது.

இசையுடன் தொடர்புடைய சிற்பங்களுக்கு அருகில் இசைத்தூண்கள் அமைக்கப்பட்டுள்ளதும் பொருத்தமாக அமைகிறது. ஆயிரக்கால் மண்டப நுழைவு வாயிலில் குதிரையின் மேல் அமர்ந்துள்ள சிற்பம் இருவேறு கருத்துக்களை வெளிப்படுத்தும் சிற்பமாகவும் அமைந்துள்ளது.

குதிரையின் மேல் அமர்ந்துள்ள சிற்பத்தை ஆயிரக்கால் மண்டபத்தைக் கட்டிய அரிய நாத முதலியாரது உருவம் என்பர். அச்சிற்பம் அமைந்துள்ள தூணின்

கீழ்ப்பகுதியில் இடம் பெறும் நரியுடன் மேலுள்ள சிற்பத்தை இணைத்துப் பார்க்கின்ற பொழுது இச்சிற்பம் நரிகளைப் பரிகளாக்கிய சொக்கராவுத்தர் எனும் பெயரில் மாணிக்க வாசகருக்காகப் பாண்டியனிடம் குதிரைகளைக் கொணர்ந்த சிவபெருமான் என்பதைச் சுட்டுவதாகவும் இச்சிற்பம் இருவேறு செய்திகளை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது.

புதுமண்டத்தில் மேற்குப்பக்கம் கரிக்குருவிக்கு உபதேசித்தது, இந்திரன் சாபம் தீர்த்தது ஆகிய கதைகளின் அடிப்படையிலும் கல்யானைக்குக் கரும்பு கொடுத்தது என்ற கதையின் அடிப்படையிலும் சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன.

மண்டபத்தின் கிழக்கே தடாதகை கதையின்படி மூன்று மார்பகங்கள் கொண்டவளாகச் சுந்தரேசப்பெருமானுடன் போருக்குச் செல்லும் காட்சியும் தடாதகையைச் சிவபெருமான் எதிர்த்து நிற்கும் காட்சியும் செதுக்கப்பட்டுள்ளன. இவை தவிரப் பன்றிக்குட்டிகளுக்குப் பால் கொடுத்தது, மந்திரிகளாக்கியது (கூடற்காண்டம் படலம் 45,46) ஆகிய படலங்களின் அடிப்படையில் இரு சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளன. இதில் சிவபெருமானே தாய்ப்பன்றியாக வந்து குட்டிகளுக்குப் பாலூட்டுகிறார் எனும் கருத்தை எடுத்துரைக்கும் விதமாகச் சிவனது பின் இரு கரங்களில் மழுவும் மானும் செதுக்கப்பட்டுள்ளன.

அருகில் சிவபெருமான் ஒரு கையில் பெண் புலியையும், மறுகையில் மான் குட்டியையும் வைத்துள்ளது போல் செதுக்கியுள்ளனர். இச்சிற்பம் உணர்த்தும் கதை பரஞ்சோதியார் எழுதிய திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறவில்லை. மாறாக, பெரும்பற்றப் புலியூர் நம்பி எழுதிய திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணத்தில் இடம் பெறும் "புலி முலைப் புல்வாய்க்கருளியது" எனும் கதையின் அடிப்படையில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கதை கி.பி.13ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. பரஞ்சோதியாரின் திருவிளையாடல் 17-ஆம் நூற்றாண்டைச் சார்ந்தது. இம்மண்டபத்தைக் கட்டிய திருமலைநாயக்கர் அவரது காலத்தில் எழுதப்பட்ட திருவிளையாடல் கதைகளின் அடிப்படையில் பல சிற்பங்களைப் படைத்திருப்பினும் பழைய திருவிளையாடலை மறவாமல் போற்றியுள்ளமை பாராட்டத்தக்கதாகும்.

நாட்டார் வழக்காற்றியல் சிற்பங்கள்

தமிழகத்துக் கோயில்களில் நாட்டார் வழக்காற்றியல் சிற்பங்களை முதன் முதலாக நாயக்க மன்னர்களே இடம் பெறச் செய்தனர். இத்தகு சிற்பங்களை மீனாட்சி சுந்தரேசுவரர் கோயில் சங்கிலி மண்டபம், ஆயிரக்கால் மண்டபம் ஆகிய இடங்களில் காணலாம்.

ஆயிரக்கால் மண்டபத்தின் முன்வரிசையில் குறவன், குறத்தி சிற்பங்கள் இடம் பெற்றுள்ளன. குறத்திக்கு மூன்று குழந்தைகள். கீழே நிற்கும் ஒரு குழந்தையின் ஒரு கையைப் பற்றிக் கொண்டு நிற்கும் குறத்தியின் தோளில் மற்றொரு குழந்தை அமர்ந்து குறத்தி தலையில் உள்ள பாத்திரத்தில் உணவை எடுத்து உண்பது போல் காட்டப்பட்டுள்ளமை குறவர்களின் இயல்பு வாழ்வைச்

சித்தரிப்பதாக அமைகிறது. மூன்றாவது குழந்தை மார்பை ஒட்டிய தூளியில் படுத்துப் பாலுண்ணும் நிலையில் படைக்கப்பட்டுள்ளது. குறத்தியின் கையில் உள்ள கூடை நாரினால் நன்கு முடையப்பட்ட கூடைபோலக் கல்லிலே செதுக்கப்பட்டுள்ளது. குறவன் குரங்கைப் பிடித்துக் கொண்டு மற்றொரு கையில் வலையைப் பிடித்துக் கொண்டிருப்பது அழகுடன் செதுக்கப்பட்டுள்ளது. இளவரசியைத் தூக்கிச் செல்லும் நாடோடிச் சிற்பம் மண்டபத்தின் உள்வரிசையில் அமைந்துள்ளது. இச்சிற்பம் எக்கதையின் அடிப்படையில் அமைந்துள்ளது எனத் தெரியவில்லை. ஆனால் இதுபோன்ற சிற்பமும் இளவரசனைத் தூக்கிச் செல்லும் நாடோடிப் பெண்ணின் சிற்பமும் கிருஷ்ணாபுரம், திருக்குறுங்குடி, திருமெய்யம், திருவரங்கம் முதலிய கோயில்களில் உள்ள நாயக்கர் காலத்து மண்டபங்களில் இடம் பெறுகின்றன. சங்கிலி மண்டபத்தில் கொம்பூதும் வீரனது சிற்பம் இடம் பெற்றுள்ளது.

பிற சிற்பங்கள்

குதிரைவீரர் சிற்பங்கள் புதுமண்டபத்தின் முகப்பில் நுழைவாயிலின் இருபுறமும் கம்பீரமாகக் காட்சியளிக்கின்றன. யாளியின் சிற்பங்கள் சங்கிலிமண்டபம், ஆயிரக்கால் மண்டபம் ஆகிய இடங்களில் சிறப்பாகச் செதுக்கப்பட்டுள்ளன.

நாயக்க மன்னர்களின் உருவங்களை அவர்கள் உருவாக்கிய மண்டபங்களில் இடம்பெறச் செய்வது வழக்கம். "பல்லவரது காலத்தில் தோன்றிய இவ்வழக்கம் சோழர் காலத்திலும் தொடர்ந்தது. பாண்டியர் காலத்தில் ஏனோ இவ்வழக்கம் பின்பற்றப்படவில்லை. நாயக்கர்கள் காலத்தில் மீண்டும் இவ்வழக்கம் பெருவழக்கமாய்ப் பெருகிற்று" என்பர். (கு.சேதுராமன் தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, ப.330) புதுமண்டபத்தைக் கட்டிய திருமலைநாயக்கர் மதுரையில் நாயக்கராட்சியைத் துவக்கிய விசுவநாத நாயக்கர் முதல் திருமலை நாயக்கர் காலம் வரை மதுரையை ஆட்சி செய்த நாயக்க மன்னர்களின் உருவங்களை (மொத்தம் பத்து உருவங்கள்) தூண்களில் சுமார் நான்கு அடி உயர பீடத்தில் நின்ற நிலையில் அவரவரது பட்டத்தரசிகளுடன் இடம் பெறச் செய்துள்ளார்.

நிறைவுரை

தமிழகம் முழுவதும் ஆட்சி செய்த நாயக்க மன்னர்கள் தங்கள் ஆட்சிக்காலத்தில் நிறுவிய மண்டபச் சிற்பங்களைத் தமக்கெனச் சில தனித்தன்மைகளுடன் படைத்துள்ளனர். இத்தனித்தன்மைகள் மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில் மண்டபங்களில் இடம்பெறும் சிற்பங்களில் பின்பற்றப்பட்டுள்ளன என்பதை இக்கட்டுரையின் வழி அறிய இயலுகிறது. குறிப்பாகத் தொடர்புடைய சிற்பங்களை அருகருகிலும் எதிர் வரிசையிலும் அமைத்துள்ளது அறியப்பட்டது. சைவக் கோயிலாதலால் சிவபுராணத்திற்கும், திருவிளையாடற்புராணத்திற்கும் முக்கியத்துவம் அளித்துப் பல சிற்பங்கள் செதுக்கப்பட்டுள்ளதுடன் இதிகாசங்கள் தொடர்பான சிற்பங்களையும் இடம்

பெறச் செய்யத் தவறவில்லை. இக்கோயிலுக்கே உரிய தேர்ச் சிற்பங்கள் தனித்த ஆய்வுக்குரிய அளவு செய்திகளைக் கொண்டவை. நாயக்க மன்னர்களது படைப்புக்களில் மீனாட்சி சுந்தரேசுவரர் கோயிற் சிற்பங்கள் நாயக்கர் காலத்துச் சிற்பக் கலையின் தனித்தன்மைகள் பல கொண்டு விளங்குகின்றன.

துணைநின்ற நூல்கள்

1. சேதுராமன், கு., தமிழ்நாட்டு சமுதாயப் பண்பாட்டுக் கலை வரலாறு, ஜே.ஜே.பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1999.
2. பரஞ்சோதியார், திருவிளையாடற்புராணம், சகுந்தலை நிலையம், சென்னை, 2002.
3. மணிவண்ணன், எல்., பாண்டியநாட்டு வைணவக் கோயில்களின் கலையும் கட்டடக்கலையும், ஜே.ஜே.பப்ளிகேஷன்ஸ், மதுரை, 1999.
4. மணிவண்ணன், எல்., கோயில் ஆய்வும் நெறிமுறைகளும், ஜே.ஜே. பப்ளிகேஷன்ஸ், மதுரை, 2000.
5. மணிவண்ணன், எல்., தமிழகக் கோயிற்கலை வரலாறு, ஜே.ஜே. பப்ளிகேஷன்ஸ், மதுரை, 2005.
6. மணிவண்ணன், எல்., பொற்றாமரை, ஏ.ஆர்.பதிப்பகம், மதுரை, 2010.
7. Devakunjari, D., Madurai through the ages, Society for Archaeological Historical and Epigraphical Research, Madras, 1979.
8. Jeyachandrun, A.V. **Madurai Temple Complex**, Madurai Kamaraj University, Madurai. 1985.



வெ.எண் : 787

உலகத் தமிழியில் ஆய்வுகள் - 1

விலை : ₹ 450.00

ISBN : 978-81-925359-0-6